அமெரிக்கப் பொருளாதார வரலாறு - I

(AMERICAN ECONOMIC HISTORY - I)

ஆசிரியர்
ஹெரால்ட் அண்டர்வுட் ஃபால்க்னர்,
வரலாற்றுத் துறையின் முன்னாள் பேராசிரியர்,
ஸ்மித் கல்லூரி.

தமிழாக்கம்
மு. க. சுப்பிரமணியம், எம்.ஏ.,
பொருளாதாரத்துறைப் பேராசிரியர்,
சிக்கய்யா நாயக்கர் மாசலக் கல்லூரி,
ஈரோடு.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—March, 1965

B.T.P. No. 60

American Economic History - I

HAROLD UNDERWOOD FAULKNER

Translation

M. K. SUBRAMANIAM

© Bureau of Tamil Publications

Price Rs. 11-00

American Economic History, Eighth Edition. Copyright (C) 1960 by Harold Underwood Faulkner.

This translation of American Economic History, Eighth Edition is published by arrangement with Harper & Brothers Publishers, Incorporated, New York, N.Y.

Printed by
Sudar Printers
MADRAS

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல் வேதியியல், உயிரியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுதான் 'அமெரிக்கப் பொருளாதார வரலாறு-I' என்ற இந்நூல். தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 60 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 95 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழ்நாட்டுக் கல்லூரிக் கல்வியாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ் அன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் இத்துணைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்

பதிப்பாசிரியர் முன்னுரை

நமது நாட்டின் இளமையைச் சூழ்ந்து படர்ந்து கிடந்த புகழ் மேகங்கள் மங்கத் தொடங்கிவிட்டன. நாம் நமது மூல வளங்களையும் மனித வளங்களையும் கணக்கிட்டுக் கொண்டுள்ளோம். முன்பு நாம் இவ்வாறு செய்ததில்லை. இப் பட்டியல் முழுதும் நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. எவ்வெப் பகுதிகளில் வீணும் விரயமும் ஏற்பட்டு, முன்னேற்றம் தடையுற்றது என்பதனைக் கண்டு தெளிய, அருகி வரும் நமது இயற்கை வளங்களையும், அரசியல் நிறுவனங்களையும், கல்வி முறையையும், சமூகத் தத்துவத்தையும் நாம் ஆராயவேண்டும். மனித சமுதாயம் இடர்ப்பாடுகள் நிறைந்த திருப்பு முனையத்தில் சிக்காமலிருக்கலாம்; என்றாலும் அது முன்னேறவேண்டிய பாதை, முற்காலத்தில் நிலவிய அகன்ற, மகிழ்ச்சியூட்டும் நெடுஞ்சாலையாக இல்லை என்பதை ஓரளவுக்கு உணர்ந்திருந்தது. ஒவ்வொரு கோணத்திலிருந்தும், குறிப்பாகவும் சிறப்பாகவும் பொருளாதார கோணத்திலிருந்தும், நமது தேசிய வரலாற்றை ஊன்றிப் பயிலவேண்டியது முந்தைய காலத்தைவிட தற்காலத்தில் மிகவும் அவசியமாகும். இத்தகைய பயிற்சிக்குத் தேவையான சாதனங்களில் இப் புத்தகம் மிகவும் பயனுள்ள சாதனம் என்று நான் கருதுகிறேன்.

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட காலத்தை அல்லது நாட்டைப் பற்றிய பொருளாதார வரலாற்றை எழுதும் ஆசிரியருக்கு அப் பணி எத்தகைய கடுமை வாய்ந்தது என்பதைக் குறிப்பிடுவது நலன் பயக்கும். ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார வரலாற்றை எழுதுவது மிகவும் கடுமையான பணியேயாகும். ஐரோப்பாவில் நிலவிய சமூகப் பழக்க வழக்கங்களும் ஏனைய பழம்பெரு நிறுவனங்களும் இயற்கைச் செல்வங்களைப் பயனுறச் செய்யும் காரியங்களுக்குப் பெருந் தடையாக இருந்தன. ஆனால், இயற்கையின் செழிப்பும் கொழிப்பும் பெருகி இருந்த ஐக்கிய அமெரிக்காவில் இயற்கைச் செல்வங்களைப் பயனுறச் செய்யும் காரியங்களுக்குப் பெருந் தடைகள் அவ்வளவாக ஏற்படவில்லை. இத்தகைய நாட்டைப்பற்றியே ஆசிரியர் ஆராய்கிறார். ஐக்கிய அமெரிக்காவில் முதல் முயற்சியாளர்களின் அரசியல் தனித்துவ உணர்விற்குக் கிடைத்த சுதந்திர வாய்ப்பினைப்போல மனித சமூக வரலாற்றில் வேறு எந்தக் காலத்திலும் எதனையும் தமதாக்கிக் கொள்ளும் மனக்கிளர்ச்சியுள்ள மக்களுக்குப் பெரு வாய்ப்புக்

கிடைத்ததில்லை. அழித்தொழிக்க முடியாத நாட்டில் வசிக்கிறோம் என்ற நம்பிக்கையும், பழைய நாடுகளில் கனிப் பொருள் வளமும், காட்டு வளமும், மண் வளமும் அழிந்ததுபோலத் தம் நாட்டில் அழியாது என்ற நம்பிக்கையும் உள்ளவர்களாக அமெரிக்க மக்கள் திகழ்ந்தனர். எனவே, வேறு எந்த நாட்டிலும் நிகழாத பெரு முற்னேற்றம் தமது நாட்டில் நிகழும் என்றே அவர்கள் கருதினர்கள். தங்களுடைய பாரம்பரிய கருத்துகள், செயற்படுத்த இயலாத இலட்சியங்கள் ஆகியவற்றிற்கும் தங்களுடைய பூகோளரீதியான சுற்றுப்புற இயற்கைச் சூழ்நிலைகளுக்குமிடையில் நடைபெறும் போராட்டமே புகழ்வாய்ந்த மக்களுடைய வரலாறும் நாடுகளின் வரலாறும் என்ற உண்மையை, 'பொருளதார வரலாறு' என்ற தலைப்பு உள்ளடக்கிய கோணத்திலிருந்து ஆராய்ச்சி செய்யும் ஒருவன் மிகவும் எளிதாக மறந்துவிடுகிறான் என்பது வியப்பிற்குரியதே. ஒருதலைப்பட்ட பருப்பொருட் கோட்பாட்டின் (materialism) தவறுகளைக் களைந்தெறிந்துவிட்டு, நமது பொருளாதார வரலாற்றினை ஆசிரியர் எழுதியுள்ளார் என்றே நான் கருதுகிறேன்.

இந்நூலின் தலைப்பு காட்டும் கோணத்திலிருந்தே எழுதப் பெற்றபோதிலும், இந்த நூல், அமெரிக்க வரலாற்றை முழுமையாகவும் திண்மையாகவும் காண்பதே இதன் வெற்றியாகும். அறிவியக் காவலரமைப்புப்பணியின் வெற்றியையும் குறைபாட்டினையும் வாசகர் படம்பிடித்துக் காட்டியுள்ளார். இந்நூல் விருப்பு வெறுப்பின்றியும், மிகைப்படுத்தும் பொருத்தமின்மையோ அல்லது வீண் ஆரவாரமோ இல்லாமல் எழுதப்பெற்றுள்ளது. இதைப் பயில்வோர் தங்களுடைய சொந்த முடிவுகளை வழங்க முடியும். முற்காலத்தைவிட, தற்காலத்தின் அடுத்த தலைமுறையில் மிகவும் சிக்கல் நிறைந்த சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் ஆற்றலுடைய பிரஜா உரிமைக்குத் தேவையான சாதனத்தை இந்நூலை நன்கு பயில்வோர் பெறுவர்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள உண்மைகள் பலவற்றைப் பொருளாதார வரலாற்று மாணவன் ஆழ்ந்து பயிலவேண்டும் என எச்சரிக்கை செய்கிறோம். புள்ளிவிவரங்களை நெஞ்சில் அழுத்தமாகப் பதியவைத்து மெய்ப்பொருள் காண்பது எளிதன்று. மாணாக்கப் பண்பு நிறைந்த எந்த மாணவனுக்கும் தேவையான சாதனங்களனைத்தையும் ஆசிரியர் திறனுடன் வழங்கியுள்ளார் என்றே நான் கருதுகிறேன். அட்டவணைகள், புள்ளிவிவரங்கள், வரைபடங்கள் முதலியவற்றின் சிறப்புள்ள பெருந்தொகுதிகளைச் சேகரித்துப் பொருத்தமாக இணைத்து, எத்தகைய தட்டுப்பாடுன்றி ஆசிரியர் வழங்கியுள்ளார். நுண்ணிய அறிவுடன் பயின்று,

புழைய முடிவுகளைப் பரிசோதிக்கவோ அல்லது புதிய முடிவுகளை உருவாக்கவோ மாணவன் வாய்ப்பினைப் பெறவேண்டும் என்ற கருத்தில் ஆசிரியர் மிகவும் பொறுமையுடன் இந்நூலை எழுதியுள்ளார். எந்த ஆசிரியருக்கும் இது கடினமான வேலையாகும், ஆனால், பொருளாதார வரலாற்றுசிரியருக்கு இத்தகைய முறையில் உழைப்பது மிகவும் அவசியமாகும். பதிப்பாசிரியர் எக்கருத்தையும் வழங்கவில்லை எனினும், படிப்புச் சொல்லித் தருவதற்கு ஏற்றமுறையில் புள்ளிவிவரங்களைப் பொருத்தமாக அமைத்து, இந்த நூலினை யாத்த ஆசிரியர் பெருமளவிற்கு வெற்றியடைந்துள்ளார் என்பதை நிரூபிக்கும் வகையிலும் வகுப்பறைகளில் இந்நூல் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கையை வளர்க்கும் வகையிலும் இந்நூல் அமைந்துள்ளது.

குறிப்பிட்ட ஒரு பாடத்தில் தேர்ச்சி பெற ஒரு நூலே போதும் என்று பயிற்சி தரும் ஆசிரியரும் நூலாசிரியரும் கருதமாட்டார்கள். இந்த நூலுக்குத் துணைநின்று, விளக்கம் தரும் நூற்பெயர்க் கோவையும் இதில் இடம்பெற்றுள்ளது. புலமைக்கு இத்தகைய சாதனம் தேவையென்பது ஆசிரியரின் முக்கிய கவலைகளில் ஒன்றாகும்.

கை ஸ்டான்டன் ஃபோர்டு

எட்டாம் பதிப்பிற்கு முகவுரை

இப் பதிப்புச் சில திருத்தங்களுடன் திரும்ப எழுதப்பட்ட போதிலும், இன்றுவரையில் பொருந்தும் உண்மைகளைத் தாங்கியே வெளிவருகிறது. மிக அண்மையில் வந்த அரசாங்க வெளியீட்டின்மூலமும் தனிப்பட்டோர் ஆராய்ச்சிமூலமும் கிடைக்கப்பெற்ற புதிய புள்ளிவிவரங்களைத் தாங்கியே இது வெளிவருகிறது. தொழிற்றுறையின் விரைந்த வளர்ச்சியும், பல்வகைப்பட்ட பொறிவழித் தொழில் மாற்றமும் பொருளாதாரப் படத்தையே மாற்றிவிட்டன. இப் புத்தகத்தின் பயன் புதிய புள்ளிவிவரத் தொகுப்பினுல் மேலும் மேம்பாடுறும் என நம்புகிறேன்.

ஹெரால்டு அண்டர்வுட் ஃபால்க்னர்

நார்த்தாம்டன்,
மெஸ்ஸாசுசெட்ஸ்,
ஏப்ரல் 14, 1959.

மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை

சென்னை அரசாங்கத்தின் தமிழ் வெளியீட்டுக் கழகத்தினரின் ஆதரவைப் பெற்று, இம் மொழிபெயர்ப்பு வேலையை எனது முதல் முயற்சியாக ஏற்றுக் கொண்டேன். அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

எனது முதல் முயற்சியில் சில குறைகளுமிருக்கலாம். நான் பெறும் தமிழாக்க அனுபவமும் இத்துறையில் சிறந்து விளங்கு வோரின் கருத்துரைகளும் எனக்குப் பெரிதும் துணை நிற்பதால், அடுத்த பதிப்புகளில் அக் குறைகள் களைந்தெறியப்படும் என்பது உறுதி.

மு. க. சுப்பிரமணியம்

உள்ளுறை

பதிப்பாசிரியர் முன்னுரை ... iv
எட்டாம் பதிப்பிற்கு முகவுரை ... vii
மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை ... viii
பூகோள வரைபடங்கள் xiv
வரைபடங்களும் விளக்கக் குறியீட்டுப் படங்களும் ... xvi
படங்களின்மூலம் எடுத்துக்காட்டுகள் ... xvii

பகுதி 1—தோற்றுவாய்

1. இயற்கைச் சூழல்களும் இயற்கை வளங்களும் ... 1

இயற்கைச் சூழலின் செல்வாக்குகள் — ஐக்கிய அமெரிக்காவின் பூகோளப்பிரிவுகள்—குடியேற்றத்தில் பூகோள அமைப்பின் பங்கு — தட்ப வெப்பநிலையும் மழையும்—மண்—ஆரம்பகாலக் குடியேறிகளின்மீது உள்நாட்டுப் பண்டங்கள் கொண்ட செல்வாக்கு விளைவுகள்—தொழில்கள்மீது பூகோளச் சூழ்நிலைகள் உண்டாக்கிய விளைவுகள்—பல்வேறு வளப்பொருள்கள்—காட்டு வளப்பொருள்கள் — விவசாய வளப்பொருள்கள்—தாதுப்பொருள் வளங்கள்—நீர்வளங்கள்—இயற்கை வளங்களைப்பற்றி மீண்டும் மதிப்பிடுதல்.

2. குடியேற்றத்திற்கான பொருளாதாரச் சூழ்நிலை ... 50

வாணிப முதலாளித்துவத்தின் எழுச்சி—கீழை நாடுகளுடன் வாணிபம்—இடைக்காலத்து வியாபாரப் பாதைகள் — வாணிகப் புரட்சி — அமெரிக்காவைக் கண்டுபிடித்தல் — அமெரிக்காவில் குடியேற்றத்திற்கான காரணங்கள்.

3. அமெரிக்கக் குடியேற்றம் ... 69

ஸ்பெயின் நாட்டுக் குடியேற்ற முறை—அமெரிக்காவில் ஃபிரான்ஸ்—அமெரிக்காவில் டச்சுக்காரர்கள்—துவக்ககால ஆங்கிலேயக் குடியேற்றம் — பிற்கால ஆங்கிலேயக் குடியேற்றம்—காலனிகளில் நிலவுரிமை முறை.

பகுதி 2—விவசாய சகாப்தம்

4. காலனி விவசாயமும் தொழிலாளரும் ... 93

முதல் இரண்டு நூற்றாண்டுகளின் பொருளாதாரச் சூழ்நிலை—ஐரோப்பியப் பின்னணி—அமெரிக்க இந்தியனின் விவசாய சாதனைகள்—நியூ இங்கிலாந்து விவசாயம்—மத்திய காலனிகளில் விவசாயம்—தென்னகத்து விவசாயம்—காலனி விவசாயத்தின் இயல்புகள்—காலனித் தொழிலாளர்கள்—காலனி நாடுகளில் அடிமைமுறை.

5. காலனி வர்த்தகமும் தொழிலும் ... 118

காலனி வர்த்தகத்தின் நிலைமைகள்—காலனி வர்த்தகத்தின் கோட்பாடு—காலனி வர்த்தகத்தின் பண்டங்களும் பாதைகளும்—காலனித் தொழிலின் நிலைமைகள்—காட்டுவழித் தொழில்கள்—கடல்வழித் தொழில்கள்—குடிசைத் தொழில்களும் பட்டறையும்—காலனித் தொழிலின் வளர்ச்சி.

6. புரட்சிக்கு முன் எல்லைப்புற முன்னேற்றம் ... 143

மேற்குத் திக்கில் முன்னேறியதன் முக்கியத்துவம்—மேற்கு நோக்கி முன்னேறியதில் பல கட்டங்கள்—மேல்திசைக் குடியேற்றத்தின் பாதைகள்—முதல் எல்லை—இந்தியர்களும் மேல்திசை நோக்கிய ஆரம்ப காலப் பெயர்ச்சியும்—பீட்மன்டினுள் நுழைவு—ஃபிரெஞ்சுத் தடை—ஸ்பானிஷ் எல்லைக்கோடு—ஆங்கிலேயர்களின் மேற்குப் பிரதேச திட்டம், 1763-1775.

7. புரட்சியின் பொருளாதாரக் காரணங்கள் ... 169

அமெரிக்கக் காலனிகளில் பிரிட்டிஷ் மெர்க்கன்டலிசம்—'பழைய காலனி முறை'யின் விளைவு—1763-க்குப் பின்னர் பிரிட்டிஷ் திட்டம்—மேல்திசை நிலப் பிரச்சினை—புரட்சிச் சூழ்நிலை.

8. புரட்சியின் பொருளாதாரக் கூறுகள் ... 201

வர்க்க, சமூகப் பிரிவுகள்—பொருளாதார, சமூக மாற்றங்கள்—புரட்சிக் காலத்தில் எல்லைப்புற முன்னேற்றம்—விவசாயத்தின்மீது போரால் ஏற்பட்ட

விளைவுகள்—தொழில் துறை வாழ்க்கையின் மீது போரால் ஏற்பட்ட விளைவுகள்—வர்த்தகமும் தனியார் கப்பற்படையும்—புரட்சியை நடத்த நிதி திரட்டுதல்—போருக்குப் பின்னர் பொருளாதாரச் சீரமைப்பு—மத்திய அரசாங்கத்தின் வலுவின்மையும் இராஜ்ஜியங்களிடையே பிளவும்—நாணயத்தில் குழப்பம்—'நெருக்கடியான காலம்' எவ்வளவு நெருக்கடியாக இருந்தது?—சட்டத்தின் மீது அரசியல் போராட்டம்.

9. நிதியும் சுங்கமும் 241

புதிய அரசாங்கத்தின் அரசிறைக் கைக்கோள்—ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாங்கு—பாங்குத் தொழிலும் நாணயமும் (1834-1862)—உலோக நாணயச் சுற்றறிக்கையும், 1837, 1857 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பீதிகளும்—உள்நாட்டுப்போர் ஏற்படும் வரையில் நாட்டின் சுங்கவரிக் கைக்கோள்.

10. புரட்சிக்காலம் முதல் உள்நாட்டுப் போர்க்காலம் வரையில் மேல்திசையில் வளர்ச்சி ... 271

புரட்சி மூடியுந்தறுவாயில் மேற்குப் பகுதியின் நிலை—அவசரச் சட்டம், 1787—குடியரசின் ஆரம்பகால நிலத்திட்டம்—பழைய தென்மேற்கில் குடியேற்றம்—பழைய வடமேற்கில் குடியேற்றம்—எல்லைப்புற வாழ்க்கை—1860 ஆம் ஆண்டிற்கு முன்னர் மிசிசிப்பியின் குறுக்கே முன்னேறிச் சென்றமை—மேற்குத் திசை முன்னேற்றத்தினுல் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட விளைவு—துவக்ககால அமெரிக்க அரசியலில் மேற்குப் பிரதேசத்தால் ஏற்பட்ட விளைவு.

11. விவசாய சகாப்தம் 317

அமெரிக்க விவசாயத்தின் மீது மேற்கத்திய முன்னேற்றத்தின் விளைவு—பருத்தி உற்பத்தி—பருத்தியின் ஏற்படுத்திய விளைவுகள்—தென்னாட்டு விவசாயத்தின் பிற கூறுகள்—பழைய வடமேற்குப் பகுதியில் விவசாய முன்னேற்றம்—மிசிசிப்பிக்கு அப்பால்—தொழிற் புரட்சியாலும் மேற்கத்திய விவசாயத்தாலும் கிழக்குப் பிரதேசத்தில் ஏற்பட்ட விளைவு—விவசாயத்தில் தொழில்நுட்பமான முன்னேற்றங்கள்—விஞ்ஞான முறைப்படி வேளாண்மை செய்தல்—விவசாயப் போக்குகள், 1788—1860.

12. வாணிபக் கடற்படையும் அயல்நாட்டு வர்த்தகமும் 852

போருக்குப் பின்னர் விரிவாந்த மறுமலர்ச்சி—1812ஆம் ஆண்டின் போர்—மறுமலர்ச்சியும் சரிவும்—திமிங்கில வேட்டையும் மீன் பிடித்தலும்—பண்டங்களும் செலுத்தினங்களும்.

பகுதி 3—தொழிற்சாலை அமைப்பின் தோற்றம்

13. தொழிற்சாலை அமைப்பு தோன்றுதல் ... 885

புதிய பொருளாதாரத்தின் வளர்ச்சி—ஐரோப்பாமீது பொருளாதாரச் சார்பு—ஐரோப்பியப் பின்னணி—இங்கிலாந்தில் தொழிற்புரட்சி—அமெரிக்கத் தொழிற்சாலை அமைப்பின் துவக்க நிலைகள்—நெசவாலைத் தொழில்—கனரகத் தொழில்கள்—விவசாயப் பண்டங்களின் படிப்படியான செய்முறைகள்—நாடெங்கும் தொழில் பரவிக்கிடத்தல்—பொறிவழித் தொழில் மீது போக்குவரத்தினுல் ஏற்பட்ட விளைவு.

14. 1860 வரையில் உள்நாட்டுச் சரக்குக் கடத்தலும் செய்திப் போக்குவரத்தும் ... 428

அமெரிக்காவில் சரக்குக் கடத்துதலின் பிரச்சினைகளும் அதன் முக்கியத்துவமும்—சுங்கச் சாவடியின் சகாப்தம்—பெடரல் அரசாங்கம் தொடர்பு கொண்டமை—நதிகளில் செல்லும் நீராவிப் படகு—கால்வாய் வெட்டுதலின் சகாப்தம்: ஈரி கால்வாய்—கிழக்குப் பிரதேசத்திலுள்ள மற்றக் கால்வாய்கள்—மத்திய மேற்கிலுள்ள கால்வாய்கள்—1887-ல் ஏற்பட்ட பீதியின் விளைவு—இருப்புப்பாதைகளின் சிறப்பு—அமெரிக்காவின் ஆரம்பகால இருப்புப்பாதைகள்—துவக்க காலத்தில் இருப்புப்பாதைகள் போடுவதில் உண்டாகும் பிரச்சினைகள்—துவக்ககால இருப்புப்பாதைகள் மீது செலவழிந்த நிதியளவு—தெரு ரெயில்வேக்கள்—மேற்கு மிசிசிப்பி பிரதேசத்தின் குறுக்கே போக்குவரத்து—விரைவுப் போக்குவரத்தின் வளர்ச்சி—தந்தி மூலம் செய்திப் போக்குவரத்து.

15. மக்கள் தொகையும் தொழிலாளரும் ... 470

மக்கள் தொகைப் பெருக்கமும் பல்வேறு பகுதிகளில் பிரிந்து கிடத்தலும்—1860ஆம் ஆண்டிற்கு முன்னர்

நிகழ்ந்த குடியேற்றம் — நகரத்து வாழ்க்கையில் ஏற் படும் மாற்றங்கள் — தொழிலாளர் நிலை — தொடக்க காலத் தொழிற் சங்கங்கள்—சீர்திருத்த இயக்கத்தில் தொழிலாளரும் தொழிற் சங்கங்களும்.

16. உள்நாட்டுப் போரின் பொருளாதாரக் காரணங்கள் 507

பிராந்திய மனப்பான்மையின் வளர்ச்சி — தென் பிராந்தியப் பொருளாதாரம்—அடிமை முறை வளர்த் தல்—தென் மண்டலத்தில் அடிமை முறை — அடிமை முறையின் பொருளாதார நன்மைகளும் தீமைகளும்— தென்னாட்டின் குழப்பம்.

17. உள்நாட்டுப் போர் 545

உள்நாட்டுப் போரின் முக்கியத்துவம்—1861 ஆம் ஆண்டின் பொருளாதார மந்தம்—மீண்டும் விவசாய செழிப்பு புத்துயிர் பெறுதல்—வடநாட்டில் பொறிவழித் தொழில் உற்பத்தி—தொழிலாளரும் வாழ்க்கைச் செலவும்—வடநாட்டு மூலதனம்—வடநாட்டின் சமூக நடவடிக்கைகள்—'பருத்தி மன்னன்'—தென்னாட்டின் மீது வாணிகத் தடை—தென்னாட்டில் பொறிவழித் தொழில்—விவசாய உற்பத்தியும் வாழ்க்கைச் செலவும் —கான்ஃபெடரசிக்கு வேண்டிய நிதி — உள்நாட்டுப் போரின் பொருளாதார விளைவுகள்.

18. இறுதி எல்லைப்பிரதேசம் 578

மிசிசிப்பிக்குக் குறுக்கே முன்னேற்றம்—சுரங்கத் தொழிலாளரின் எல்லைப்புறம்—கால்நடைப் பண்ணைக் காரர்களின் எல்லைப்புறம்—விவசாயிகளின் எல்லைப் புறம்—காற்றுடி இயந்திரங்களும் முட்கம்பிகளும்— எல்லைப்புறத்தின் முடிவு.

கலைச்சொல் அகராதி (ஆங்கிலம்—தமிழ்) ... 605

பொருளடக்க அகரவரிசை அட்டவணை ... 616

பூகோள வரைபடங்கள்

1.	சாதாரண ஆண்டு மழை	...	11
2.	ஒரு பிரதேசத்தின் பல்வேறு தொழில்கள்	...	22
3.	விவசாய நிலப் பகுதிகள்	...	32
4.	ஐக்கிய அமெரிக்காவில் உள்ள தொழிற் றுறைப் பகுதிகள்	...	41
5.	1760-ல் குடியேற்றத்தின் அளவைக் காட்டும் ஆங்கிலக் காலனிகள்	...	151
6.	வட அமெரிக்காவின் உரிமையாளர்களில் ஏற்பட்ட மாற்றங்கள், 1664 - 1783	...	165
7.	புரட்சி ஏற்படும் தறுவாயில் பிரிட்டிஷ் காலனிகள்	...	193
8.	மேற்கு, 1775 - 1782	...	211
9.	அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல்— வாக்குரிமை வழங்கப்பட்ட விதம் நியூ இங்கிலாந்து, 1787 - 1790	...	238
10.	அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல்— வாக்குரிமை வழங்கப்பட்ட விதம் மத்திய, தெற்கு இராச்சியங்கள், 1787-1788	...	239
11.	1816-ல் சுங்கத் தீர்வை வாக்கு	...	265
12.	1828-ல் சுங்கத் தீர்வை வாக்கு	...	265
13.	மக்கள்தொகை பரவியிருந்தமை—1790	...	284
14.	மக்கள்தொகை பரவியிருந்தமை—1800	...	284
15.	மக்கள்தொகை பரவியிருந்தமை—1820	...	292
16.	மக்கள்தொகை பரவியிருந்தமை—1840	...	292
17.	எல்லைக் கோட்டின் முன்னேற்றம்	...	302
18.	தூரமேற்கிற்கு நிலவழித் தடங்கள்	...	305
19.	மக்கள்தொகையின் பகுப்பு—1860	...	309
20.	அமெரிக்கக் கப்பல்களின் மூலம் ஏற்றிச் செல்லப்படும் ஏற்றுமதிகள் இறக்குமதிகள் ஆகியவற்றின் விகிதாசாரங்கள்	...	368
21.	தேசிய சுங்கச் சாவடிச்சாலை	...	433
22.	ஈரி கால்வாய்	...	441

23. 1860-ல் தோண்டப்பெற்ற முக்கியக் கால்வாய்கள் ... 447

24. இருப்புப்பாதைகள் (Rail Roads), 1860 ... 456

25. ஒவ்வோர் இராச்சியத்திலும் பண்ணைச் சொத்தின் சதவீத அதிகரிப்பு, 1860 - 1870 ... 549

26. ஜனத்தொகையின் மையம் மேற்கே நகர்தல் 597

வரைபடங்களும்
விளக்கக் குறியீட்டுப் படங்களும்

1. முக்கோண வர்த்தகப் பாதைகள் ... 128

2. பிரிட்டனுக்கும் அமெரிக்க நிலப் பெரும்பகுதி காலனிகளுக்கும் இடையில் வர்த்தகம், 1745-1776 ... 186

3. சுற்றுப்புறமமைந்த நகரமைப்பாகவும் பகுப்புகளாகவும் நிலத்தைப் பிரித்தல் ... 278

4. ஐக்கிய அமெரிக்காவில் குடியேற்றம், 1820-1860 479

5. மிட்லிங் அப்லண்ட்ஸ் — சராசரி ஆண்டு விகூ, 1790-1950 ... 564

படங்களின்மூலம் எடுத்துக்காட்டுகள்

அதிகாரம் 8-ன் முடிவில் உள்ள படங்களைக் காண்க.

1. கையாற்றல் உழைப்பு விவசாயம்--1790-ல் விவசாயக் கருவிகள்.
2. அறுவடை இயந்திரம் கண்டுபிடிக்கு முன்னர் கோதுமை அறுவடைமுறை.
3. ஸ்டாக்கிங் பிரேம் (Stocking Frame) — நூல்நூற்றலும் துணி நெய்தலும் (18ஆம் நூற்றாண்டு).
4. பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் விவசாயம்.
5. எல்லைப்புறத்தின் நான்கு கட்டங்கள்.
6. புகைவண்டிமூலம் முதல் முயற்சி.
7. புல்வெளிகளின்மீது மண்வீடு—பெருஞ் சமவெளியில். அநேக விவசாயிகளின் முதல் இல்லம்.
8. பாகுஷ்கா (Pawhuska), ஒக்லஹோமா (Oklahoma)—1880-களின் பிற்பகுதியில் ஓர் எல்லைப்புற நகர்.
9. வடடெக்கோட்டாவின் மாண்டன் (Mandan) இரயில்வே நிலையத்திலிருந்து பண்டங்களை ஏற்றிச்செல்லும் குடும்பமனையகத்தினர்.
10. 1860-களின் பிற்பகுதியில் மோன்டானா, ஹெலீனா ஆகிய இடங்களிலிருந்து வாகன்வண்டி கிளம்புதல்.
11. மாற்றுறுப்புகளைத் தயாரிக்கும் இயந்திரத்தையும் பருத்தி ஜின்னையும் கண்டுபிடித்த எலி விட்னே அவர்கள்.
12. ஐக்கிய அமெரிக்கத் தேசியக் கண்காட்சிசாலையில் வைக்கப்பட்டுள்ள விட்னே கண்டுபிடித்த பருத்தி ஜின் மாதிரி ஒன்று.
13. கிராமச் சந்தை.
14. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இயந்திரவழி விவசாயம்.

அதிகாரம் 15-ன் முடிவில் உள்ள படங்களைக் காண்க.

1. குதிரையாற்றல் காலத்தில் கதிரடித்தல்.
2. ஆரம்ப காலத்து மெக்கார்மிக் அறுவடை இயந்திரம்—அவரால் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது வகை.
3. கையுழைப்பு மூலமும் குதிரையாற்றல் மூலமும் போரடித்தல்.
4. உலைக்களனிடுதல் (Forging the Shaft).
5. கலிஃபோர்னியாவில் ஆரம்பகாலப் பொன் சுரங்கத் தொழில்.

6. வடமேற்குப் பென்சில்வேனியாவில் ஆரம்பகால எண்ணெய்க் கிணறுகள்.
7. ஆற்றில் செல்லும் நீராவிப் படகு.
8. ஜான் ஃபிச்(John Fitch) அவர்களுடைய முதல் நீராவிப் படகின் மாதிரி.
9. 1885-ல் நியூயார்க்கிலுள்ள தெற்குத் தெரு.
10. யு.எஸ்.எம். நீராவிக் கப்பல் 'அட்லான்டிக்'.
11. புதிதாகக் குடியேற வருவோர்.
12. நியூ இங்கிலாந்து தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பாட்டாளிகள்—'மணியோசை கேட்கும் நேரம்'.
13. கூவித்திரிந்து விற்பனை செய்யும் யாங்கீ—துவக்ககால அமெரிக்க வியாபாரத்தின் முக்கியக் கட்டம்.
14. லாக்போர்ட்டில்(Lockport) ஈரீ கால்வாயில் ஒன்றிணைந்த அணை அடைப்புகள்.
15. கால்வாய்ப் போக்குவரத்து.

அமெரிக்கப் பொருளாதார வரலாறு

(முதற் பாகம்)

பகுதி 1 – தோற்றுவாய்

1. இயற்கைச் சூழல்களும் இயற்கை வளங்களும்

இயற்கைச் சூழலின் செல்வாக்குகள்

ஒரு நாட்டின் வரலாற்றைப் பற்றிக் குறிப்பாக அதன் பொருளாதார வரலாற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமெனில், அந்நாட்டின் இயற்கை வளங்களைப் பற்றியும் நில அமைப்பைப் பற்றியும் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும். மனிதன் இயற்கையுடன் தொடர்ந்து போராடி, அதனை அடக்கி ஆள்வதைத்தான் நாகரிகம் என்று குறிப்பிடுகிறோம். மனிதன் இயற்கையுடன் போராடும் ஒவ்வொரு கட்டத்திலும், இயற்கை மனிதனைத் திருத்திப் பண்படுத்துவதும், மனிதன் இயற்கையை மாற்றிப் பயன்படுத்துவதும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. பக்கிள் (Buckle) 'மனிதன் இயற்கையை மாற்றுவதும், இயற்கை மனிதனைத் திருத்துவதும் கண்கூடு என்றும், ஒன்றையொன்று திருத்திச் செம்மைப்படுத்திக்கொள்வதன் விளைவாகவே எல்லா நிகழ்ச்சிகளும் தவிர்க்க முடியாத நிலையில் உருவாகின்றன.'[1] என்று கூறுகிறார்.

மனிதன் வசிப்பதற்குரிய இடமும், அவன் செய்யும் வேலையும், அவன் உற்பத்தி செய்யும் பொருள்களும், அவன் பயணத்திற்கு வேண்டிய பாதைகளும், பொருள்களை இடம் விட்டு இடம் நகர்த்தும் போக்குவரத்துச் சாதனங்களும், இன்ன பிற யாவும் நில அமைப்புச் சூழ்நிலையைப் பொறுத்தனவாகும். அச்சூழ்நிலை,

1 Henry T. Buckle, 'History of Civilization in England' (1862), 1, 51.

அவனுடைய பொருளாதார வாழ்க்கையை உருவாக்கியது. போலவே, அவனுடைய சமூக, அரசியற் கருத்துக்களையும், பழக்க வழக்கங்களையும், விருப்பங்களையும், இன்னும் அவனுடைய உடலமைப்பையும் உருவாக்குகிறது.[2]

மனித வாழ்க்கைக்கு ஏற்றதாக ஒரு பெருநிலக்கண்டத்தை எப்படிப் பக்குவப்படுத்தி உரிமையாக்கிக் கொள்ளுவதென்பதை விளக்குவதுதான், ஐக்கிய அமெரிக்காவின் (United States) வரலாறு. கடற்கரையின் அமைப்பே ஆரம்பகாலக் குடியேற்றங்களை நிர்ணயித்தது. ஆற்று வெளிகளும் மலைகளின் கணவாய்களும் மேல்திசை நோக்கிச் செல்லக் காரணமாயின. நிலமும் அதன் விளைபொருள்களும் புதிய நாட்டில் குடியேறியவர்களுடைய தொழிலை வகுத்துதவின.

ஐக்கிய அமெரிக்காவின் பூகோளப் பிரிவுகள்

வடஅமெரிக்கா ஏறக்குறைய ஒரு முக்கோண வடிவத்தில் அமைந்துள்ளது. அது வடதிசையில் கிட்டத்தட்ட 8,000 மைல்கள் நீண்டுள்ளது. வடக்கே போகப்போக அதன் அகலம் குறுகிப் பனாமாப் பூசந்தியில் (Isthmus of Panama) மிகக் குறைந்த மைல்களைக் கொண்ட பரப்பளவிற்குள் குறுகிவிடுகிறது. அதன் மூன்று புறங்களிலும் மூன்று சமுத்திரங்கள் பரந்துகிடந்து, ஒவ்வொன்றும் அக்கண்டத்தின் பல்வேறு இயல்புகட்குக் காரணமாயுள்ளது. மேற்குக் கடற்கரையில், பசிபிக் மகாசமுத்திரத்தின் (The Pacific) வெப்பமான நீரோட்டம் மக்கள் வசிப்பதற்கு உகந்தது எனினும், கார்டில்லராஸ் மலைத்தொடர் (Cordilleras) தடையாக அமைந்ததால், அந்நீரோட்டத்தின் பயனைக் கடற்கரை ஓரப்பகுதிகள் மட்டும் பெறுகின்றன. அட்லான்டிக் மகாசமுத்திரத்தின் வளைகுடா நீரோட்டம் (The Gulf Stream of the Atlantic) கீழ் மிசிசிப்பி நாடுகளுக்கும் (Lower Mississippi States), வளைகுடா நாடுகளுக்கும் (Gulf States) மழையை வழங்குகிறது. இந்நீரோட்டத்தின் பயன் வடக்கே நியூ இங்கிலாந்து வரையிலும் உள்ள நிலப்பகுதிகள்தாம் அடைகின்றன. ஆர்டிக் மகாசமுத்திரத்திற்குப் (The Arctic) பசிபிக் மகாசமுத்திரத்தின் நீரோட்டமோ, அட்லான்டிக் மகாசமுத்திரத்தின் நீரோட்டமோ பாய்வதில்லை. அதனால் அச்சமுத்திரம் பனி மூடிக்கிடக்கிறது. எனவே, அக்கண்டத்தின் வடபகுதியில் யாரும்

[2] See Franz Boas. "Changes in Bodily Form of Descendants of Immigrants" (1912). Compiled from U. S. Immigration Commission Reports.

வசிக்க இயலாது. அதன் மேற்குப் பகுதியில் அலாஸ்காவி லிருந்து (Alaska) பனமாவரையில் (Panama)) கார்டில்லராஸ் மலைத்தொடர் செல்கிறது. நாற்பதாவது அட்ச ரேகையில் இந்த மலைத்தொடர் 1000 மைல் அகன்றுள்ளது; மேலும், 14,000 அடி உயரமுள்ள மலைச்சிகரங்களையும் இது பெற்றுள்ளது. கிழக்கே கடற்கரை ஓரமாக அப்பலாச்சியன் மலைத்தொடர் Appalachian system) உள்ளது. செழிப்பான பள்ளத்தாக்குப் பரப்புகளைக் கொண்ட இப்பகுதி நியூபவுண்லாண்டிலிருந்து (Newfoundland) அலபாமா (Alabama) வரை விரிந்துகிடக் கிறது. ஏழாயிரம் அடி உயரத்திற்குக்கூட இதில் மலைச் சிகரங்கள் இல்லை. இவ்விரு மலைத்தொடர்களுக்கிடையில் பரந்து விரிந்து கிடக்கும் சமவெளிப் பிரதேசம், மெக்சிகோ வளைகுடா விலிருந்து (Gulf of Mexico) ஆர்டிக் வரையில் உள்ளது. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தாழ்ந்த மலைகள் சில உள. இச்சமவெளியில் மூன்று வடிகால்கள் உள்ளன; (1) மிசிசிப்பி நதியும் அதன் கிளைநதிகளாகிய மிசௌரி (Missouri), ஓகியோ (Ohio), ஆர்க்கன்சாஸ் (Arkansas), ரெட் (Red) முதலியனவும் மெச்சிகோ வளைகுடாவில் சென்று கலக்கின்றன; (2) செயிண்ட் லாரன்சிலும் (St. Lowrance) அட்லான்டிக் மகாசமுத்திரத்திலும் சென்று கலந்துவிடும் பெரும் ஏரிகள் (Great Lakes); (3) மாக்கென்சியும் (MacKenzie) பல சிற்றாறுகளும் ஹட்சன் விரிகுடா வில் (Hudson Bay) பாய்கின்றன.

அலாஸ்கா நீங்கலாக இக்கண்டத்தில் 25ஆவது அட்ச ரேகைக்கும் 49ஆவது அட்சரேகைக்கும் இடையில் ஐக்கிய அமெரிக்கா (United States of America) அமைந்துள்ளது. இந் நாடு 3,026,789 சதுர மைல்கள் பரப்பளவு கொண்டதாகும்: ஐரோப்பாவைவிட மூன்றில் இரண்டு பங்கு மிகுதியான பரப்பள வைக் கொண்டுள்ள இந்த நாட்டைப் பூகோள முறையில் ஏழு தனித்தனிப் பகுதிகளாகப் பிரிக்கலாம்.

(1) அப்பலாச்சியன் மலைத்தொடருக்கும் கடற்கரைக்கும் இடையில் பரவிக்கிடக்கும் கடற்கரை வெளி அல்லது கீழ்த் திசைத் தாழ் நிலங்கள் இந்த நாட்டின் முதல் பிரிவாகும். இது அட்லான்டிக் மகா சமுத்திரத்தை நோக்கி நிற்கும் இராஜ்ஜியங் களின் கிழக்கு எல்லைப்புறங்களை உள்ளடக்கிய பகுதியாகும். தொலைவில் உள்ள மேற்குப் பகுதியின் மண்வளம் இப்பகுதியில் இல்லை எனினும், சாதாரணமாக காய்கறித் தோட்டம் போடவும், கோதுமை, தானியம் வகைகள், புகையிலை முதலியவற்றைப் பயிரிடவும் ஏற்ற நிலமாகும். இப்பகுதியில் முதலில் குடியேறிய

வர்கள் தங்களுக்குத் தேவையான தானியத்தையும், ஏற்றுமதிக்குரிய புகையிலையையும் பயிரிட்டனர். விவசாய மையம் மேற்கு நோக்கி நகர்ந்துவிட்டதால், கடற்கரை வெளியின் எதிர்காலம் பொறிவழித் தொழிலுடனும் வாணிகத்துடனும் கட்டுண்டது. நீர்வீழ்ச்சிப் பகுதிகளிலிருந்து சிறந்த நீராற்றல் (water power) கிடைத்தமையால் பொறிவழித் தொழில் ஏற்பட்டது. கடற்கரையில் அருமையான துறைமுகங்கள் அமைந்தமையால் இயந்திரத் தொழிலும் கடல் கடந்த வாணிகமும் வளர்ந்தன. கடற்கரை வெளியின் கிழக்கு மேற்கு எல்லைக் கோடுகளின் மீது இரு வரிசைகளாக நகரங்கள் தோன்றின. மேற்கே மான்ட் காமரி (Montgomery), அகஸ்டா (Augusta), மேக்கன் (Macon), கொலம்பியா (Columbia), ராலே (Raleigh), ரிச்மான்ட் (Richmond), டிரென்டன் (Trenton), ஹார்ட்ஃபோர்டு (Hartford) என்ற நீர் வீழ்ச்சி நகரங்கள் வரிசையாக அமைந்தன. கிழக்கே, சாவன்னா (Savannah) சார்லஸ்டன் (Charleston), நார்ஃபோக் (Norfolk) பிலடெல்பியா (Philadelphia), பால்டிமோர் (Paltimore), நியூயார்க் (New Yark), போஸ்டன் (Boston) என்னும் கடற்கரைத் துறைமுகங்கள் வரிசையாக ஏற்பட்டன.

(2) புளு ரிட்ஜ் (Blue Ridge), அலிகனிஸ் (Alleghenies) போன்ற இணைவரையான மலைத்தொடர்களை உள்ளடக்கிய அப்பலாச்சியன் பகுதி இரண்டாவது பிரிவாகும். அப்பலாச்சியன் மலைத் தொடர்கள் நியூபவுண்லாண்டிலிருந்து அலபாமா வரையில் பரந்துகிடக்கின்றன. வட கரோலினுவில் உள்ள கறுப்பு மலைகளும் (Black Mountains of North Carolina) நியூஹாம்ப்ஷையரில் உள்ள வெள்ளை மலைகளும் ((White Mountains of New Hampshire) 6,000 அடிகள் உயர்ந்தவை. இத்தகைய மலைத் தொடர்களுக்கிடையே, நியூஜெர்சியிலிருந்து (New Jersey) ஜார்ஜியா (Georgia) வரையில் 600 மைல்கள் நீளமுள்ள பகுதியில் வளம் நிறைந்த பள்ளத்தாக்குகள் பலவற்றைக் காணலாம். மலை அமைப்புக்களின் இரு புறங்களிலும், குறிப்பாக மேற்குப்புறத்தில் அகன்ற மேட்டுச் சமவெளிகள் உள. அவை இறுதியில் சமவெளியுடன் இணைந்துவிடுகின்றன. இப்பகுதி, 3,00,000 சதுர மைல்கள் கொண்டதாகும். இப்பரப்பளவில் 12,000 சதுர மைல்கள் உள்ள இடம் உழுவதற்கு ஏற்றதன்று. எஞ்சியுள்ள பகுதியில் வளம் கொழிக்கும் பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. அமெரிக்காவிலேயே மிகச் சிறந்த விவசாயப் பண்ணைகளைக் கொண்ட ஷினன்டோவா (Shenandoah), கம்பர்லாண்டு (Cumberland), டென்னசி (Tennessee) முதலியன இப்பகுதியில்தான் உள்ளன. இயற்கை வளங்கள் நிறைந்த

இப்பகுதி தொழில் குவிப்பிற்கு (Localization of Industries) ஏற்ற தாக உள்ளது. நியூ இங்கிலாந்தில் கடற்கரைக்கு அருகிலேயே மலைகள் இருப்பதனால் நீர்வீழ்ச்சிகள் மிகுந்துள்ளன. எனவே, நீராற்றல் நிறையக் கிடைக்கின்றது. ஆகவே, நியூ இங்கிலாந்து நீராற்றலை நன்கு பயன்படுத்திக்கொண்டு பொறிசெய் தொழிலின் மையமாயிற்று. தென் அப்பலாச்சியன் மாநிலங்களிலும், பென்சில் வேனியாவிலும் நிலக்கரி, இரும்பு ஆகியவற்றின் வண்டல்கள் கிடைத்தமையால், பிட்ஸ்பர்க் (Pittsburgh), பர்மிங்ஹாம் (Birmingham) போன்ற இரும்பு-எஃகு நகரங்கள் ஏற்பட்டன. சிக்காக்கோ (Chicago), காரி (Gary), கிலீவ்லாண்டு (Cleveland), போன்ற நகரங்களிலும் மற்ற நகரங்களிலும் உள்ள எஃகு தொழிற் சாலைகளுக்குத் தேவையான இரும்பில் 90 சதவீதம் வழங்குவ தற்கு மினசோட்டா (Minnesota) பகுதியைச் சார்ந்த வியக்கத் தக்க மெசாபித் தொடர் (Mesabi Range) களஞ்சியமாயிற்று.

(3) வகைகுடா மாநிலங்களின் தாழ்நிலங்கள் மூன்றாவது பிரிவாகும். அது ஃபுளோரிடா (Florida), தென் ஜார்ஜியா, அலபாமா, மிசிசிப்பி, லூசியானா (Lousiana), கிழக்கு டெக் சாஸ் (Eastern Texas) ஆகியவற்றைக் கொண்ட பகுதியாகும் அது. ஆற்று வண்டல் வளம் நிறைந்த கருமையான பூமியும் வெப்ப நிலையும் உடைய பகுதியாகும். எனவே, அப்பகுதியில் முக்கியமான தானிய வகைகளும், பருத்தியும், காய்கறி வகை களும், மித வெப்ப நிலையில் விளையும் பழவகைகளும் விளை கின்றன. இப்பகுதியில் உள்ள விவசாயத்தில் இவ்விளை பொருள் களே முக்கியமானவை. லூசியானாவிலும் கிழக்கு டெக்சாசிலும் இயற்கை வாயு (Natrural gas), எண்ணெய் வகைகள், பலவகை யான இரசாயனப் பொருள்கள் (Chemicals)) கிடைக்கின்றன.

(4) மிசிசிப்பி பள்ளத்தாக்கின் பெருஞ் சமவெளி நான்கா வது பிரிவாகும். மிசிசிப்பி பள்ளத்தாக்கில், 20,000 முதல் 30,000 சதுர மைல்கள் கொண்ட, வண்டல்மண் நிறைந்த சிறிய ஆற்றுக் கழிமுகம் உள்ளது; இன்னும், அப்பலாச்சியன்ஸ், ராக்கீஸ் (Rockies) இவற்றைச் சார்ந்த பெரும் மேட்டுச் சமவெளிக ளும் உள்ளன. பசுமையான புல்வெளிகளும் ஆற்றுப் படுகைகளும் நிறைந்திருப்பதால் இப்பகுதியை வடஅமெரிக்காவில் விவசாய உயிர்நிலை (Agricultural heart of North America) எனக் குறிப்பிட லாம். இப்பகுதியில்தான் கோதுமையும், மற்றத் தானிய வகை களும் பெருவாரியான அளவில் உற்பத்தியாகின்றன. வகைகுடா மாநிலங்களைப்போலவே, மிசிசிப்பி ஆற்றுக் கழிமுகத்தில் விளையும் பொருள்களில் பஞ்சும் பருத்தியுமே முக்கியமானவை. 'நீர்வளத்தின்

தந்தை'யாகிய ('Father of Waters') மிசிசிப்பியும், அதன் கிளை நதிகளாகிய ஓகியோ, மிசௌரி முதலியனவும் அருமையான போக்குவரத்து வசதிகளை இயற்கையாகவே ஏற்படுத்திக் தந்துள்ளன. வடபகுதியில் உள்ள பெரும் ஏரிகளாலும், அவற்றோடு தொடர்புடைய உப்பங்கழிகளாலும் இத்தகைய போக்குவரத்து வசதிகள் இன்னும் பெருகியுள்ளன.

(5) கார்டில்லரா பகுதி ஐந்தாவது பிரிவாகும். செழிப்புள்ள பள்ளத்தாக்குகள் இங்குத் தென்பட்ட போதிலும், நீர்ப்பாசனத்தின் மூலமாகச் செயற்கை முறையில் வேளாண்மையைச் சிலதுண்டு நிலங்களில் செய்தபோதிலும், இருபதில் பத்தொன்பது பங்குள்ள பெரும் பகுதி விவசாயத்திற்கு ஏற்றதன்று. செம்பு, இரும்பு, வெள்ளி, தங்கம் ஆகிய தாதுப் பொருள்களின் வண்டல்கள் இங்குக் கிடைத்தமையால், இப்பகுதி முக்கியத்துவம் உடையதாக இருந்தது. மாபெரும் மக்கள் தொகையை வைத்துக் காப்பாற்றக் கூடிய சக்தி மிசிசிப்பி பள்ளத்தாக்கிற்கு உண்டு. ஆனால், கார்டில்லரா பகுதியில் மக்களின் எண்ணிக்கை பெருகவே பெருகாது; மேலும், அங்குத் தாதுப்பொருள்கள் தீர்ந்தவுடன் மக்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிடும் எனலாம். ஆயினும், நிரந்தர செழிப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நீர்ப்பாசன வசதிகளும் உலர் பண்ணை முறையும் (Dry Farming) அங்கு நடைபெறுகின்றன. பௌல்டர் அணைக்கட்டு (Boulder Dam), கிராண்ட் கூலி (Grand Coulee), இன்னபிற நீர்த்தேக்கத் திட்டங்கள் நீர்ப்பாசன வசதியையும், நீர் மின்னியக்க ஆற்றலையும் (Hydroelectric power) வழங்குகின்றன. எதிர்காலத்தில் எளிய தொழில்கள் ஏற்பட இவை துணைபுரியும்.

(6) மேற்குக் கடற்கரையின் ஒரு கோடியில் உள்ள தாழ்ந்த மலைகளைக் கொண்ட ஒரு குறுகிய நிலப்பகுதி ஆறாவது பிரிவாகும். வளமும், மிதமானதும், பொருத்தமானதும் ஆகிய தட்ப வெப்ப நிலையும் கொண்ட இந்நிலப்பகுதியில் பழவகைகளும் காய்கறி வகைகளும் பயிராகின்றன. இயற்கையான துறைமுகங்கள் சில வற்றை மட்டுமே பசிபிக் கடற்கரை பெற்றுள்ளது. எனினும், கோல்டன் கேட் (Golden Gate), பியூகெட் சவுண்ட் (Puget Sound), கொலம்பியா ஆறு, லாஸ் ஆன்ஜலிஸில் உள்ள செயற்கைத் துறைமுகம் ஆகியவை மிகவும் பயன்படுகின்றன. இவற்றுல் விளைந்த பயன்களைப் பனுமாக் கால்வாயும் தூரக்கிழக்கின் வர்த்தக முக்கியத்துவமும் நன்கு விளங்குகின்றன. கலிபோர்னியாவில் பொன் நிறையக் கிடைத்ததால் ஆங்கிலம் பேசும் மக்கள் அங்கு வந்து குடியேறினர்கள். ஆனால், அதன் எதிர்காலச்

செல்வங்கள் எண்ணெய், பழம், காங்கறிகள் ஆகியவையே ஆகும்.

(7) 1867-ல் ரஷ்யாவிடமிருந்து வாங்கப்பட்டு, 1958-ல் யூனியனுடன் சேர்க்கப்பட்ட அலாஸ்கா, நாட்டின் மிகப்பெரிய அரசியல் பிரிவாகும். அத் தீபகற்பத்தில் நேரிடும் கடும் தட்பவெப்ப நிலையினால் மழைக்காலத்தில் வேலை தடைப் படுகிறது. என்றாலும், புதிய மாநிலத்தின் இயற்கைச் செல்வங்கள் வளமானவைகளாகவும், பல்வேறு வகைகளைச் சார்ந்தவைக ளாகவும் உள்ளன. காடுகளும், மீன் பண்ணைகளும், தாதுப் பொருள்களும், தோல் வகைகளும், மற்றப் பண்டங்களும் அங்கே கிடைக்கின்றன.

இதுவரையில் பூகோளப் பிரிவுகளைப் பற்றி விரித்துரைத் தோம். அதே நேரத்தில், மனித வாழ்வில் அவை எந்த அளவிற்குப் பயன்படுகின்றன என்பதைக் காண அவற்றின் பொருளாதார முக்கியத்துவத்தையும் விளக்க முயன்றோம். பூகோள முறையில் ஒவ்வொரு நிலப்பகுதியைப்பற்றியும் பயில் வதால் தெரிந்துகொள்ளும் செய்திகளைவிடத் தேவையான முழுச் செய்திகளையும் தெரிந்துகொள்வதற்கு, மனிதவாழ்வுப் பயன்க ளுடன் ஒவ்வொரு நிலப்பகுதியையும் தொடர்புபடுத்திப் பயின்றால் நல்லது என்று பொருளாதார வரலாற்றாசிரியர்கள் எண்ணு கின்றனர்.[3] இயற்கைச் சூழலுக்கும் (Phisiography), மனித வாழ்வுப் பயனுக்கும் (Human use) நெருங்கிய தொடர்பு உண்டு. அவற்றை ஒன்றாக இணைத்து அறிவதே நன்று. அரசி யல் வரலாறு சில பகுதிகளில் குழப்பத்தைத் தருவதற்குக் கார ணம் உண்டு. அரசியல் எல்லைக் கோடுகள் செயற்கையானவை; அவற்றிற்கும் பொருளாதார எல்லைக் கோடுகளுக்கும் தொடர்பே இருப்பதில்லை. டர்னர் (Turner) குறிப்பிட்டதுபோல,[4] ஐக்கிய அமெரிக்கா இராஜ்ஜியங்களின் கூட்டு அன்று. அவை மாறுபட் பொருளாதார, கலாசார வகுப்புகளின் கூட்டாகும். ஒன்றுக் கொன்று முரண்பாடுடைய பல்வேறு பொருளாதார வகுப்பு களின் சிக்கல்களை ஆய்ந்து பார்ப்பதன் மூலமே, நாட்டின் பொரு ளாதார, அரசியல் வரலாற்றைப் புரிந்துகொள்ள முடியும்.

குடியேற்றத்தில் பூகோள அமைப்பின் பங்கு

மேற்குக் கரையோரமாக அமெரிக்கக் கண்டத்தை அணுக லாம். பூர்வ பழங்குடிகளின் முன்னோர்கள், ஆசியாவிலிருந்து

[3] J. R. Smith and M. O. Phillip, "North America", PP. 38-39.
[4] F. J. Turner, "Significance of Section in American History".

அமெரிக்காவினுள் நுழைந்தனர். ஆனால், நல்வினையின் காரணமாக வெள்ளையர்கள் கிழக்குப்புறமாக அமெரிக்காவிற்கு வந்தார்கள். ஆனால், கிழக்குப்புறமல்லாமல் மேற்குப்புறத்திலிருந்து அமெரிக்காவினுள் நுழைந்திருந்தால், அமெரிக்காவின் சரித்திரமே மாறியிருக்கும். ஏனென்றால், கரடுமுரடான கார்டில்லராஸ் தொடர்களே முதல் முயற்சியாளருக்குப் (Pioneers) பெருந்தடையாக இருந்திருக்கும். பெருநிலக் கண்டங்களை எளிதில் அணுகிப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமெனில், அவற்றின் நதிகள் போக்குவரத்துக்கு ஏற்றனவாக இருக்கவேண்டும். இந்த வகையில், அமெரிக்கக் கண்டத்தின் கிழக்குப்பகுதி ஏற்றதாக அமைந்திருந்தது. பெருந்தடையாக விளங்கும் அட்லான்டிக் மகாசமுத்திரத்தைக் கடந்த பின்னர், அமெரிக்காவினுள் எளிதாக நுழையும் வழியை அமெரிக்கர் கண்டுபிடித்தனர். பெரும் ஏரிகளுடன் தொடர்புடைய செயின்ட் லாரன்சுப் பள்ளத்தாக்கும், அப்பலாச்சியன் மலைத் தொடர்களினின்று வழிந்தோடிவரும் ஹட்ஸன், மொகாக் (Mohawk), நதிகளும், மிசிசிப்பி நதியும், அதன் கிளை நதிகளும அமெரிக்கக் கண்டத்தின் இதயத்தைத் துளைத்துக்கொண்டு செல்கின்றமையினால், உள்நாட்டிற்குள் நுழைந்து விரைவில் குடியேற்றத்தை ஏற்படுத்த முடிந்தது. தென்னட்டைப் பொறுத்தவரையில் இது உண்மையாகும். தெற்கில்தான் எண்ணற்ற சிறிய ஆறுகள் கடலோநோக்கி ஓடுகின்றன. இத்தகைய ஆறுகள் தற்காலத்திலுள்ள மிகப்பெரும் கப்பல்களுக்கு ஏற்றவை அல்ல என்றாலும், 17ஆம் நூற்றாண்டின் சிறு கப்பல்களுக்கு ஏற்றவை எனலாம். வடக்கே டிலாவேர் (Delaware), ஹட்சன், கனெடிகட் நதிகள் கடற்கரைச் சமவெளியின் குறுக்கே பாய்ந்தோடி அப்பலாச்சியன் தொடர்வரைச் செல்வதால், ஆரம்பகாலக் குடியேற்றக்காரர்களுக்குப் பயன்படும் வகையில் இயற்கையான பெரு வழிகள் ஆயின.

இந்த நதிகளின் அருகிலேயே குடியேற்றங்கள் ஏற்பட்டன. குடியேற்ற நாடுகளுடன் ஐரோப்பிய சந்தைகளைத் தொடர்புபடுத்திய இரண்டு பண்டங்களாகிய தோல் வகைகளும் புகையிலையும் இந்த நதிகளின் வழியாகவே கொண்டுசெல்லப்பட்டன. போக்குவரத்திற்குரிய நதிகளின் மொத்த நீளம் 26,000 மைல்களுக்கு மேலாகும் என்று கணக்கிட்டுள்ளனர். இந்தக் கணக்கில், பெரும் ஏரிகளின் 2,760 மைல்கள் நீளம் சேர்க்கப்படவில்லை (இவற்றின் கரையோரமாகச் சுற்றிச் செல்லும் நீளம் 4,329 மைல்களாகும்). உடைபட்ட கடற்கரை ஓரங்களையும் சேர்த்து, இரு சமுத்திரங்களிலும் உள்ள கடற்கரை ஓரம் (coast line) 64,000 மைல்களுக்கு மேல் நீளம் உடையதாகும். இந்த நீளத்தில், மூன்றில் இரண்டு

பங்கு உள்ள கடற்கரை ஓரம், அட்லான்டிக் சமுத்திரத்தின் வழியாகவும், மெக்சிகோ வளைகுடா வழியாகவும் ஐரோப்பாவை அடைவதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. எண்ணற்ற ஆறுகளும் உடைபட்ட கடற்கரையும் இருப்பதால், நல்ல துறைமுகங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம். அட்லான்டிக் மாநிலங்களிலும், வளைகுடா மாநிலங்களிலும் பல்வேறு வகையான துறைமுகங்கள் ஏற்பட்டன. அழுந்திய பள்ளத்தாக்கில் நியூயார்க், பால்டிமோர் துறைமுகங்கள் ஏற்பட்டன. கால்வெஸ்டன் (Galveston), பிராவின்ஸ்டவுன் (Provincetown) என்னும் துறைமுகங்களும், கரோலினா, ஃப்ளாரிடா, நியூஜெர்சி கடற்கரைகளின் அநேக சிறு துறைமுகங்களும் கடற்பாறைத் தொடர்களினால் ஏற்பட்டவை ஆகும். நியூ ஆர்லியன்சு (New Orleans), ஃபிலடெல்பியா ஆகிய நதித் துறைமுகங்களும் உண்டாயின. ஏற்றுமதிக்கான மூலப்பொருள்களைச் சேகரித்து வைக்கவும், தாயகத்திலிருந்து வரும் பொறிசெய் பொருள்களைப் பெற்று உள்நாட்டுச் சந்தைகளுக்கு அனுப்பவும் ஏற்ற வகையில் இத்தகைய எண்ணற்ற இயற்கைத் துறைமுகங்களும் நதியைச் சார்ந்த நகரங்களும் அமைந்தன.

தட்பவெப்ப நிலையும் மழையும்

ஐக்கிய அமெரிக்காவை இன்று தழுவிக்கொண்டிருக்கும் பிரதேசம், அன்று ஐரோப்பிய இனங்கள் அமெரிக்கக் கண்டத்தை வென்று, குடியேறுவதற்கு ஏற்றதாக இருந்தது. அலாஸ்கா நீங்கலாக, ஐக்கிய அமெரிக்காவில் சராசரி ஆண்டுத் தட்ப வெப்ப நிலை 40 முதல் 70 டிகிரிகளுக்குள்ளாகவே இருந்தது. நிறைந்த ஆற்றல் உடைய நாகரிக இனங்களைப் படைத்த ஐரோப்பியப் பகுதிகளிலும் இதே தட்பவெப்ப நிலைதான் இருந்தது. நாகரிகத்திற்கும் தட்பவெப்ப நிலைமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்றும், உடலுழைப்பு மூளையுழைப்பு இவற்றிற்கும், தட்பவெப்ப நிலைமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்றும் எல்ஸ்வர்த் ஹண்டிங்டன் (Ellsworth Huntington) அவர்களும், மற்ற நிபுணர்களும் கண்டறிந்துள்ளனர்.[5] நீண்ட கோடைகாலத்தில் மனிதன்

5 ஹண்டிங்டன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "பாரமானியின் (Barometer) மாற்றங்களால் ஒரு விளைவும் ஏற்படாது. ஆனால், ஈரக்கசிவு ஓரளவு முக்கியம் வாய்ந்ததுதான். எனினும், தட்பவெப்ப நிலையே மிகவும் முக்கியமாகும். இங்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மக்கள் (தொழிற்சாலைகளில் வேலைசெய்வோரும் கல்லூரி மாணவர்களும்) 60 முதல் 65 டிகிரிகளுக்கு உள்ளாகத் தட்பவெப்ப நிலை இருந்தால், அதாவது, நண்பகலில் 70 டிகிரிகளுக்கு அல்லது அதற்கு மேலாகத் தட்பவெப்பம் ஏறினாலும் சுறுசுறுப்புடன் வேலைசெய்வார்கள். நம்மில் பலர் எதிர்பார்ப்பதைவிட இஃது அதிகமே. வெளியில் சராசரி வெப்பம் 88 டிகிரிகள் இருந்தாலும் அல்லது

நிறைய உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்வான்; நடுக்கம் தரும் குளிர்காலம் இருப்பின், மழைக்காலத்திற்குத் தேவைப்படும் உணவுப் பண்டங்களையும் சேர்த்து உற்பத்தி செய்வான்; உடல்நலம் பேணுவதற்குரிய நல்ல சூழ்நிலைகளும் அமைதல் வேண்டும். ஆக நீண்ட கோடைகாலமும் நல்ல குளிர்காலமும், உடல் நலத்திற்குரிய சூழ்நிலைகளும் கொண்ட தட்பவெப்ப நிலை அமைந்தால் மனித சமூக வளர்ச்சி துரிதப்படும் எனலாம். இன்றைய ஐக்கிய அமெரிக்காவில் அன்று குடியேறியவர்கள் இத்தகைய தட்பவெப்ப நிலையைக் கண்டனர்.

மழையின் அளவுகூட மக்களுடைய நலனை அடிப்படையிலேயே பாதிக்கும். ஓர் ஆண்டில் 10 அங்குலத்திற்குக் குறைவாகவோ அல்லது 45 அங்குலத்திற்குக் கூடுதலாகவோ மழை பெய்தால், மனிதனுக்கு மிகத் தேவையான உணவாகிய கோதுமையைப் பயிரிட முடியாது. ஐக்கிய அமெரிக்காவில் சராசரி ஆண்டு மழை 26·6 அங்குலங்களே ஆகும். தென் யுட்டாவில் (Utah) ஐந்து அங்குலம் மழை பெய்கிறது. வட கரோலினாவின் மேற்குப் பள்ளத்தாக்கு, வாஷிங்டன், ஓரிகன், கலிபோர்னியாக் கடற்கரை ஆகிய பிரதேசங்களில் 60 அங்குலங்களுக்கு மேலாக மழை பொழிகிறது. பசிபிக் கரையில் ஈரக் கசிவுள்ள, தனித் தட்பவெப்ப நிலையே உண்டு. மலைத்தொடரை அணுக அணுக ஈரக் கசிவு காய்ந்து உலர்ந்துவிடும். வறண்ட மேட்டுச் சமவெளியை நெருங்க நெருங்க நீர்க்கசிவு முழுதும் குறைந்துவிடும். மெக்சிகோ வளைகுடாவையும், அட்லான்டிக் சமுத்திரத்தையும் நெருங்க நெருங்க, மழை கொஞ்சங் கொஞ்சமாக அதிகரிக்கும். அப்பலாச்சியன் மலைத்தொடருக்குக் கிழக்கே ஆண்டொன்றுக்குச் சராசரியாக 30 முதல் 50 அங்குலங்கள் மழை கொட்டும். விவசாயத்திற்கு 20 அங்குலங்கள் மழை தேவையாகும். மண்ணில் ஈரக்கசிவு ஏற்படுவதற்கு 30 முதல் 50 அங்குலங்கள் மழை வேண்டும். இந்த வாய்ப்பு அப்பலாச்சியனின் கிழக்குப் பிரதேசத்தில் உள்ளதால், விவசாயத்திற்கு ஏற்ற பிரதேசம் அதுவே ஆகும். தட்ப வெப்ப நிலையிலும் மழையைப் பொறுத்த வரையிலும் மாற்றங்கள் ஐரோப்பாவைவிட அமெரிக்காவில்

இரவில் மென்மையான உறைபனி ஏற்பட்டிருந்தாலும் மூன்று உழைப்பு உச்ச நிலையை அடையும். முதல் நாளில் இருந்த வெப்பம் அடுத்த நாளில் மாறுவது முக்கியமான ஒரு நிலையாகும். வெப்பம் ஒரே நிலையில் இருந்தால் மக்கள் நன்றாக வேலை செய்யமாட்டார்கள். ஆனால், பெரிய மாற்றங்களும் விரும்பத்தக்கவை அல்ல. இடை இடையில் குளிர்ந்த காற்று உள்ள மிதமான மாற்றங்களே விரும்பத்தக்கன." Ellsworth Huntington Civilization and Climate, 1925' P. 8. இவ்வாராய்ச்சியின் சில பகுதிகளைப் பொறுத்த வரையில் கருத்து வேற்றுமை நிலவுகிறது.

சாதாரண ஆண்டு மழை

(அங்குலங்களில்)



(From H. H. McCarty, 'The Geographic Basis of American Economic Life,' Harper and Brothers.)

மிகுதி என்றாலும், இவ்விரு கண்டங்களிலும் தட்ப வெப்ப நிலை ஒரே மாதிரியாகவே உள்ளது.[6]

அமெரிக்கப் பொருளாதார வரலாற்றில் மழை ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. ஐக்கிய அமெரிக்கா (பசிபிக் கரையின் சில பகுதிகளைத் தவிர்த்து) இரண்டு பகுதிகளாகப் பிரிந்துள்ளது. ஒன்று, நூறாவது தீர்க்க ரேகைக்குக் கிழக்கேயுள்ள பகுதியாகும். அங்கு, ஆண்டொன்றுக்குச் சராசரியாக 20 அங்குல மழை பெய்யும். மற்றொன்று, தீர்க்க ரேகைக்கு மேற்கே உள்ள பகுதியாகும். அங்கு ஆண்டொன்றுக்குச் சராசரி மழை 20 அங்குலத்திற்கும் குறைவாகும். தீர்க்கரேகைக்குக் கிழக்கே, விவசாயம் நல்ல முறையில் இருக்கும். அங்குப் பருவம் முழுவதும் வறட்சி இருப்பதில்லை; எல்லா இடங்களிலும் பரவி இருப்பதும் இல்லை. 100 டிகிரி தீர்க்கரேகைக்கு மேற்கே நிலைமை சரியில்லை. மக்காச் சோளத்திற்கு அல்லது கோதுமைக்குத் தேவையான மழை பொழியும் பருவங்களும் உண்டு. ஆனால், இப்பருவங்களைத் தொடர்ந்து, வறட்சி ஏற்பட்டுத் தானியங்கள் அழிவதும், காற்று, உலர்ந்து பொடியான மண்ணை வாரி இறைப்பதும், நிலத்தை அழிப்பதும், மக்களை ஓடச் செய்வதும் கண்கூடாகும். பெரும் சமவெளியில் (Great Plains) போதுமான அளவுக்கு மழையின்மையால், அதனுடைய பொருளாதார வரலாறு வேறு விதமாக உள்ளது. நாணயம், வங்கி முறை, போக்கு வரத்து, மற்றப் பொருளாதாரத் துறைகள் இவற்றைப் பற்றிய தேசீயத் திட்டத்தை அறிந்துகொள்ள அச்சமவெளியின் மழையின்மை பயன்படுகிறது.[7]

அமெரிக்கத் தட்ப வெப்ப நிலைக்கும், மற்றச் சூழ்நிலைக்கும் தக்கவாறு ஐரோப்பியர்கள் குடியேற்றத்தை அமைத்துக் கொண்டனர் என்பது உறுதி. டியூடன்களும் (Teutons), கெல்டுகளும் (Celts) இருநூறு ஆண்டுகளாகத் தங்கியும் வாழ்ந்தும் எதையும் இழக்காமல் இருந்தனர் என்ற உண்மையே, அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்ததன் காரணமாக ஐரோப்பியர்கள் எந்த

6 நிலவமைப்புச் சூழ்நிலைக்கும், செல்வம், தொழில், வருமானம், அறிவுக் கூர்மை, கல்வி முதலியவற்றிற்கும் உள்ள தொடர்பினை வரைபடங்கள் மூலம் ஹன்டிங்டன் விளக்கியுள்ளார். (Jerone Davis and H. E. Barnes (eds) "An Introduction to Sociologys" (1931), Book II, PP. 191-304.)

7 J. R. Smith and M. O. Phillips, op. cit, PP. 7-8. & Chap 23. இதில் மழையின் முக்கியத்துவத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம். O. E. Baker, "Economic Geography" (1925). P. 499; and J. R. Smith and M. O. Phillips. op. cit. P. 366. n. இவற்றில், மழை எவ்வாறு தானியம் விளையும் பகுதியை மட்டும் கட்டுப்படுத்தியுள்ளது என்பதைக் காணலாம்.

வகையிலும் தொல்லைப்படவில்லை என்பதை நிரூபிக்கிறது. ஐரோப்பிய உற்றார் உறவினர்களைப் போலவே, அமெரிக்காவிற்கு இடம் பெயர்ந்து சென்ற ஐரோப்பியர்களும் உருவத்தில் குறுகி விடவில்லை; சுறுசுறுப்பை இழந்துவிடவில்லை; எவ்விதக் கவைப் பையும் தாங்கும் ஆற்றலை இழந்துவிடவில்லை; நெடு நாட்கள் உயிருடன் இருந்து வாழவும் தவறவில்லை. அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் விடாமுயற்சியுடனும், படைப்பு ஆற்றல்களைப் பயன்படுத்தியும் ஒரு பெரு நிலக்கண்டத்தையே பக்குவப்படுத்தித் தங்கள் ஆட்சியில் கொண்டுவர அரும்பாடு பட்டனர். எனவே, அமெரிக்காவில் வலிமையும் சலியாத உழைப்பும் கொண்ட ஓர் இனம் உருவாகி வந்தது. ஐரோப்பிய நாகரிகத்தை அப்படியே அமெரிக்காவில் புகுத்தியதால், பல புதிய நோய்கள் பரவின. ஐரோப்பியர்களுக்கு மஞ்சள் காய்ச்சல் புதிதாகும். ஆப்பிரிக்க நீக்ரோ அடிமைகள் இக்காய்ச்சலை அமெரிக்காவிற்குக் கொண்டுவந்தனர். தென் ஐரோப்பாவைத் தவிர வேறு எங்கும் மலேரியா அடிக்கடி வருவதில்லை. அமெரிக்காவிலுள்ள குடியேறிகளை இந்நோய்கள் தொத்திக்கொள்ளவே அவை புதிய குடியேற்ற நாடுகளிலும் பழைய உலகத்திலும் பெரும் சேதத்தை விளைத்தன[8]. நல்வினையின் பயனைப் இந்தக் கொள்ளை நோய்கள், வெப்பம் நிறைந்த அமெரிக்கப் பகுதியையும், மிதவெப்பமான அமெரிக்கப் பகுதியையும் மட்டுமே பற்றின. தற்காலத்து ஐக்கிய அமெரிக்கப் பிரதேசத்தினுள்ளும் செல்வதற்கு அக்கொள்ளை நோய்கள் தயங்கவில்லை. வெள்ளைக்காரக் குடியேறிகள் எதிர்த்து நிற்கவேண்டிய நோய்களில் மிகப்பெரிய சாபக்கேடாக அமைந்தது மலேரியா ஒன்றுதான். தொடர்ந்து தாக்குகின்ற ஒரே ஒரு எல்லைப்புறநோய் அதுவாயிற்று. மட்டத்திலுள்ள நிலங்களிலும், மழையின் காரணமாக அட்லான்டிக் கரையோரச் சமவெளிகளிலும், வளைகுடா கடற்கரைச் சமவெளிகளிலும் தண்ணீர் தேங்கிக் கிடந்தது. நீர் தேங்கிய குட்டைகள் கொசுக்களின் பெருக்கத்திற்கு ஏற்றவாயின. தொடக்க

[8] P. M. Ashburu, "The Ranks of Death," pp. 99-140. தென்னாட்டின் சாபக்கேடாகிய கொக்கிப் புழுவை (Hookworm) அடிமைகள் ஆப்பிரிக்காவிலிருந்து அமெரிக்காவிற்குக் கொண்டுவந்தார்கள். ஒட்டுவாரொட்டி (parasite) மேற்கத்திய நாடுகளைச் சார்ந்தது என்று கூறமுடியாது எனத் தற்காலத்து ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். புது உலகத்திலிருந்து பழைய உலகத்திற்குக் கிடைத்த பரிசுதான் மேகநோய் (Syphilis) என்னும் ஒரு கருத்து இருக்கிறது. ஆனால், தொன்மைக் காலத்திலிருந்தே இங்கொன்றும் அங்கொன்றுமாக மேகநோய் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் இருந்துள்ளது என்று புகழ் வாய்ந்த ஜெர்மானிய வைத்திய வரலாற்றாசிரியர் கார்ல் சுடாஃப் (Karl Sudhoff) (ஆஷ்பர்னைப் பின் பற்றி) என்பார் குறிப்பிட்டுள்ளார். 15, 16ஆம் நூற்றாண்டுகளிலே மேக நோய் ஐரோப்பாவை அலைக்கழித்துவிட்டது. எனவேதான் அது அமெரிக்காவிலிருந்து வந்திருக்கவேண்டும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

காலத்தில் குடியேறியவர்களை இந்த நோய் பத்துக்கு ஒருவர் வீதம் பலிகொண்டது எனலாம். ஏனைய கூட்டத்தினருடன் இவர்களைச் சேரவிடாதவாறு இந்த நோய் தடுத்து நின்றது.

பழைய உலகத்திலிருந்து சில நோய்கள் அமெரிக்காவுக்கு வந்தன என்று கண்டோம். தீவினையின் பயனுய் பழங்குடி மக்கள் அந்நோய்களுக்குப் பலியாயினர். ஒரு தடவை அவை சிவப்பு இந்தியர்களைப் பற்றினுல் போதும். காப்பு வசதிகள் இல்லாத காரணத்தால், அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். சிறிய அம்மையையும் பெரிய அம்மையையும் பொறுத்தவரையில் இது உண்மையாகும். உடலுருக்கி நோயும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இந்தியர்களைப் பற்றியது. துவக்கத்தில் இந்த நோய் பெருவாரியான அளவில் உயிர்களைக் கொள்ளையிடவில்லை. நாகரிகத்துடன் இந்தியர்கள் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளும்வரையில் இந்த நோய் மிகுதியாகப் பரவவில்லை. ஆப்பிரிக்க நோய்களில் சில, நீக்ரோக்களைப் பாதிப்பதில்லை. ஆனுல், அவை வெள்ளையர்களையும் இந்தியர்களையும் மிகவும் பாதித்தன. எனவே, நீக்ரோ அடிமை முறை மேலும் முக்கியத்துவம் அடைந்தது. அமெரிக்க அடிமை முறையைப்பற்றி மதிப்பிடுகையில் ஆப்பிரிக்க நீக்ரோக்களால் கொண்டுவரப்பட்ட நோய்களையும் கணக்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

மண்

வேளாண்மைக்குரிய நிலத்தையும், தாதுப் பொருள்களையும், நீர்வழிப் போக்குவரத்து சாதனங்களையும் பெற்று மத்திய, வட அமெரிக்கா உலகிலேயே தலைசிறந்து விளங்குகிறது. நாற்பது சதவீத நிலந்தான் உழுவதற்கு ஏற்றது. பல்வேறு வகை மண்ணும், தட்ப வெப்ப நிலையில் மாறுபாடுகளும் இருப்பதால் பல்வேறு தானிய வகைகள் உற்பத்தியாகின்றன. இப்பகுதி விரிந்தும் பரந்தும் கிடப்பதால், உணவுப் பற்றுக்குறை ஏற்படுவதில்லை. நமது சரித்திரத்தில் மண்ணமைப்பின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பொதுவாகவே வரலாற்றுசிரியர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை ஒரு நிலப்பரப்பிலுள்ள மண்ணின் இயல்புகட்கும், அந்நிலத்தின் செழிப்பிற்கும் உள்ள தொடர்பினை எந்தச் சரித்திர மாணவனும் புரிந்துகொள்ள முடியும். அலபாமா போன்ற சிறுநிலப்பகுதிகளில் நடத்திய ஆழ்ந்த ஆராய்ச்சிகள், மண் வளத்திற்கும், தானியங்களின் செழுமை, இனங்கள், பண்பாடு ஆகியவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டென விளக்கியுள்ளன[9]. பலப்பல கல்லூரிகளையும் பழம்பெரும் நூல் வெளியீட்டு நிலையங்களையும்

புகழ்வாய்ந்த செய்தித் தாள்களையும், வளமான ஊர்களையும் கிராமங்களையும் உடைய கனெக்டிகட் பள்ளத்தாக்கு, நியூ இங்கிலாந்திலேயே மிகவும் செழிப்பான நிலப்பகுதியை உடையதாகும்.

மண் வகைகள் அமைவதைப்பற்றியும், அவை எவ்வாறு மாறி மாறிப் புதுப்புது நிலைகளை அடைகின்றன என்பதைப் பற்றியும் ஆராயத் தொடங்குவதுதான் பொருளாதார வரலாறு ஆகும்.[10] வெள்ளைக்காரர்கள் அமெரிக்காவிற்கு வருவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே வடஅமெரிக்காவில் பனிக்கட்டிகள் உறைந்துகிடந்தன. பனிக்கட்டிகளைப்பற்றிய குறிப்புகளும் இத்தகைய ஆராய்ச்சியில் இடம்பெறவேண்டும். ஒவ்வொரு தடவையும் கண்டத்தின் வடபகுதியில் ஒரு மைல் நீளத்திற்கு அல்லது அதற்கு மேலும் பனிக்கட்டிகள் மூடித் தடத்தையே மறைத்துவிடுவதும் உண்டு. இவ்வாறு பனிப்படலம் சூழ்வதன் காரணமாக, மனித சமுதாயத்தின் எதிர்காலத்தில் நன்மையும் தீமையும் விரவித் தோன்றும். பனிக்கட்டிகள் தென்னகத்தை நோக்கி நகரத்தொடங்கவே, அவை பழம்பெரும் மலைத்தொடர்களை மட்டப்படுத்தின; குப்பை கூளங்களைக்கொண்டு பள்ளத்தாக்கை நிரப்பின; பெரும் ஏரிகளையும் (Great Lakes) ஏனைய ஆயிரக்கணக்கான ஏரிகளையும் குடைந்து தோண்டி எறிந்தன; நதிகளின் போக்கை மாற்றி அமைத்தன; வறண்ட குன்றுகள் வெளியே தெரியும் வகையிலும், மேய்ச்சல் வெளியின் சில இடங்களில் கற்பாறைகள் வெளியே தெரியும் வகையிலும், எதிர்கால விவசாயத்திற்குத் தேவையான வண்டல்கள் வெளியே தென்படும் வகையிலும் அப்பனிக்கட்டிகள் நிலங்களின்மீதுள்ள மேல்மட்ட மண்ணை வழித்தெறிந்துவிட்டன. கண்டத்தின் பனிக்கட்டித் தகடுகள் ஆறு தடவை முன்னேறிப் பின்னர், தானிய நிலப்பகுதியின் குறுக்கே பின்வாங்கிச் சென்றன. இப்பனிக்கட்டித் தகடுகள் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு நகர்ந்து கொண்டே இருந்தமையால், நிலத்தின்மேல் மட்டமண்ணும், அடிமட்ட மண்ணும் ஒன்றுகக் கலந்தன. விவசாய உற்பத்தி உச்சநிலையை அடையக்கூடிய வளமான சுண்ணும்புக்கற் பிரதேசங்கள் ஏற்பட்டன. இப் பனிக்கட்டித் தகடுகள் சில இடங்களில் சதுப்பு நிலம் ஏற்படக் காரணமாயிருந்தன. நியூ இங்கி

[9] E. Huntington and F.E. Williams, "Business Geography," Chap. 5.

[10] C.E. Kellogg, "The Soils That Support Us" (1941). தாவரங்கள். காற்று, நீர், வானிலையால் பாதிக்கப்பட்ட குன்றுகள், இவைகள் ஒன்றை ஒன்று இயக்கிக்கொள்ளுவதைப் பற்றிய கதையை அருமையாக மேற்குறிப் பிட்ட நூலில் கெல்லாக் விளக்கியுள்ளார். மேலும் படிக்க F. A. Shannon, "The Farmer's Last Frontier", chap. 1,

லாந்து, ஏரிக்கரை மாநிலங்கள், வட டெக்கோட்டாவின் பெரும்பகுதி (North Dakota), மோன்டானாவின் (Montanna) சில பகுதிகள் ஆகிய நிலப்பரப்பு முழுதும் இப் பனிக்கட்டித் தகடுகள் ஏதோ ஒருகாலத்தில் பரவிக்கிடந்தன.[11] விஸ்கான்சின் (Wisconsin), மின்னசோட்டா (Minnesota), அயோவா (Iowa), இல்லினாய்ஸ் (Illinois) ஆகிய சில பகுதிகளில் பனிக்கட்டிகள் இல்லை. பனிக்கட்டிகள் உறைந்த நிலப்பகுதிகளின் நாகரிகத்திற்கும் பனிச்சறுக்கலற்ற பிரதேசத்தின் நாகரிகத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்தால், நில வமைப்புச் சரித்திரத்திற்கும் (geologic history) பொருளாதாரம், பண்பாடு, ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பு நன்கு விளங்கும். இந்த உண்மையை வரலாற்று மாணவன் நன்கு ஆராய வேண்டும். கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் அழித்தலையும் ஆக்கலையும் மேற்கொண்ட பனிப்பாறைகள் மனித வாழ்க்கையின் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றன.

ஆரம்ப காலக் குடியேறிகளின்மீது உள்நாட்டுப் பண்டங்கள் கொண்ட செல்வாக்கு விளைவுகள்

இடவிவர இயல், பயணத்திற்குரிய இயற்கைப் பாதைகள், தட்ப வெப்பநிலை இவற்றை அடுத்துக் காய்கறி வகைகளின் தன்மையும் வெவ்வேறு நிலங்களுக்கு ஏற்றவாறு அவற்றைப் பிரித்துப் பயிரிட்டமையும் நமது வரலாற்றைப் பாதித்துள்ளன எனலாம். காடுகளின் செழிப்பு, மண்ணின் தன்மை முதலிய காரணங்களைப் பொறுத்துக் குடிசையை எங்கே அமைப்பது என்பதைப் பற்றியும், தன்னைக் காத்துக்கொள்ள எந்த முறையைப் பின்பற்றுவது என்பது பற்றியும் முதலில் குடியேறுபவன் சிந்தித்துப் பார்ப்பான். தட்ப வெப்ப நிலையிலும் மண்வகைகளிலும் பெருத்த வேற்றுமைகள் இருப்பதால்தான், நமது நாட்டின் சில பகுதிகளில் உள்நாட்டைச் சார்ந்த, அல்லது இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு முக்கிய உணவுப் பண்டத்தையும் நடைமுறையில் உற்பத்தி செய்ய முடிகிறது. உண்மையில், உயர்ந்த பொருளாதார மதிப்புடைய பெரும்பாலான தாவரங்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவையே.

குடியேறிகளின் மிக முக்கியமான உடனடித் தேவை உணவன்றே? பொன்னையும் வெள்ளியையும் கண்டு பிடிப்பதே குடியேற்றத்தின் உள்நோக்கம் என்றாலும், அவற்றைக் கண்டு

11 தேசப்படம் வேண்டுமெனில், Kellogg, op. cit., P. 28 and Shannon, op. cit., PP. 10 and 12 பார்க்கவும்.

பிடிக்கும் வரையில் வாழ்வதற்கு வசதி செய்துகொள்ள வேண்டுமே என்ற நடைமுறைச் சிக்கலும் எழுந்தது. உணவுப் பண்டங்களே முதல் தேவை என்று அவர்கள் உணரத் தயங்கியதால், ஜேம்ஸ்டவுனில் குடியேறியவர்கள் பலவாண்டுகள் தொல்லையுற்றுப் பலர் உயிர்களை இழந்தனர். வெர்ஜீனியாவில் தொடக்கத்தில் போதுமான அளவுக்குத் தேவையான ஊட்டம் இல்லாததால், மரணங்கள் அதிகமாயின. உணவு உற்பத்திக்கேற்ற வளமான பகுதியில் இத்தகைய சாக்காடுகள் ஏற்படுவது விவரிக்கப்பட முடியாத உண்மையாகும். எண்ணற்ற மான்களும், உண்பதற்கேற்ற விலங்கினங்களும் காடுகளில் நிறைய உலாவின. காடுகளிலும், விரிகுடாப்பகுதிகளிலும், சதுப்பு நிலங்களிலும் ஆங்கிலேயர்களுக்குத் தெரிந்த பறவையினங்கள் நிறைய இருந்தன. உப்பு நீரிலும் தூய நீரிலும் கிடைக்கும் மீன் வகைகளும் ஏராளமாகக் கிடைத்தன. பெருவாரியான அளவில் உணவுப் பண்ட வகைகள் கிடைத்தபோது, வெர்ஜீனியா பஞ்சத்திலுல் தவிப்பதற்குக் காரணங்கள் உண்டு. உள்நாட்டில் உணவுப் பற்றுக் குறையினுல் ஏற்பட்ட 'பஞ்ச காலம்' அன்று அது. வெர்ஜீனியாவில் குடியேறியவர்கள் வேட்டைக்காரர்களாகவோ, மீனவர்களாகவோ, விவசாயிகளாகவோ இருந்தவர்கள் அல்லர். எனவே, உள்நாட்டுப் பண்டங்களை ஒன்றுசேர்த்துப் பயன்படுத்தும் அனுபவமும் அறிவும்அவர்களுக்கில்லை. மேலும், குறுக்கு வழிகளில் நிறையப் பொருள் திரட்டலாம் என்ற ஆசையின் காரணமாக உணவுப் பண்டங்களை அவர்கள் உற்பத்தி செய்யவில்லை.

பழங்கால நாகரிகத்தில் மனிதன் வாழ்வதற்கு மரம் மிகவும் இன்றியமையாததாகும். மரம், மனிதனுக்குப் பாதுகாக்கும் வீட்டினையும், அடுப்பிற்கு வேண்டிய விறகினையும், நிலவழி, நீர்வழிப் பயணத்திற்குரிய சாதனங்களையும், இன்னும் கூறப்புகின், உணவையும் வழங்குகிறது. அட்லான்டிக் பகுதிக்கு முதலில் வந்தவர்கள் நெருக்கமாக வளர்ந்துள்ள காடுகளையே கண்டனர். காட்டினைக் களைந்து, மரங்களை அகற்றிப் புதர்களை நீக்கி, விவசாயத்திற்கு ஏற்றவாறு பக்குவப்படுத்தவேண்டிய வேலை இருந்ததால், அவர்களுக்கு இது ஒன்றும் அடையவொண்ணு அருட்பேறு ஆகாது. உணவை வழங்கக்கூடிய வாய்ப்பு காட்டிற்குண்டு. பசுமரவகையிலிருந்து (maple) சர்க்கரை கிடைத்தது. காட்டில் கிடைக்கும் தேனைத் தவிர, இது ஒன்றே இனிப்புடைய பொருளாகும். இக் காடுகளில், பீச் மரவகை (beech), நெசல் மரவகை (hazel), ஹிக்காரி கொட்டைகள் (hickory nuts), செஸ்ட்நட்ஸ் (chestnuts), வால்நட்ஸ் (walnuts), பட்டர்நட்ஸ் (buttornuts)

முதலியன கிடைக்கும். பழமரவகைகள் பல இறக்குமதி செய்யப் பட்டன. அட்லான்டிக் கரையின் சில பகுதிகளில், பிளம் (plum), செர்ரி (cherry), பர்சிம்மன் (persimmon), மல்பெர்ரி (mulberry) முதலியன வளர்கின்றன.

உணவாகப் பயன்படக்கூடிய செடியினங்கள் வளர்ந்து மண்டிக் கிடந்தன. வெள்ளைக்காரர்கள் குடியேறிய பின்னர், இந்தியர்கள் அவற்றைப் பயிர் செய்தனர். மக்காச் சோளம், இந்தியத் தானியம், பூசணிக்காய், [பாம்பியன்ஸ் (pompions) என்று முதலில் கூறிவந்தனர்], ஸ்குவாஷ் (squash), பீன்ஸ் (beans), அரிசி, தக்காளி, பீநட்ஸ் (peanuts), ஜெருசலம் ஆர்டி சோக் (Jerusalem artichoke), பிளாகு வகைகள், அமெரிக்கக் கற் ருழை (American aloe), இனிப்பு உருளைக் கிழங்கு வகைகள், நீர்முலாம்பழம் (watermelons), ஹக்கிள் பெர்ரிஸ் (huckle berries), பிளாக் பெர்ரீஸ் (blackberries), ஸ்டிரா பெர்ரிஸ் (straw-berries), பிளாக் ராஸ்ப் பெர்ரிஸ் (black raspberries), கிரேன், பெர்ரிஸ் (cranberries), கூஸ் பெர்ரிஸ் (gooseberries), திராட்சை வகைகள் முதலியவற்றையும் பயிரிட்டனர். காய் கறி களும், உணவாகப் பயன்படும் செடி கொடிகளும் இறக்குமதி செய்யப்பட்டன. இவ்வாறு இறக்குமதியானவற்றில் சில வெளி நாட்டைச் சேர்ந்தவை; மற்றவை ஐரோப்பிய வகைகளைச் சார்ந் தவை; இவை அமெரிக்காவையும் சார்ந்தவைகளே.[12]

அமெரிக்கக் கண்டத்தில் வாழும் விலங்கினங்களின் வாழ்க்கை, இந்தியர்களுக்கும் முதலில்குடியேறியவர்களுக்கும் மிக வும் முக்கியமானதாகத் தென்பட்டது. விலங்கினங்கள் எப்பொழு தும் உணவாகவே பயன்பட்டன என்பதோடல்லாமல், அவை உடை, உறையுள், ஏனைய அடிப்படைத் தேவைகள் ஆகியவற்றை யும் வழங்கின எனலாம். மிசிசிப்பி நதிக்குக் கிழக்கே உள்ள மானும், மேற்குச் சமவெளிகளில் மேய்ந்து கொண்டிருந்த எருமை மாடுகளும் மட்டுமே பழங்குடிகளுக்கு மிகவும் தேவையான மிரு கங்களாக இருந்தன. இப்பொழுது அந்த மிருகங்களுக்குப் பொரு ளாதாரச் சிறப்புக் கிடையாது, வெள்ளைக்காரர்கள் குடியேறித் தோல் வாணிகம் பெருகிய பின்னர்தான், மிகச் சிறிய விலங் கினங்களைச் சார்ந்த வீசல் (weasel) எனும் கீரியின் உயிர்வகை, சாபில் (sable) எனும் மற்றொரு கீரியின் உயிர்வகை, பேட்ஜர் (badger) எனும் கரடிவகை, ஸ்கங் (skunk) எனும் கீரிவகை, உல்வரைன் (wolverine), மிங் (mink), ஓட்டர் (otter) எனும் நீர்

[12] Lyman Carrier, 'The Beginning of Agriculture in America,' p. 41.

நாய் வகைகள் முதலியன முக்கியத்துவம் அடைந்தன. அணில், முயல், மஸ்க்ராட் (muskrat) எனும் மூஞ்சூறுவகை, பீவர் எனும் நீர்நாய் வகை ஆகிய கொறிக்கும் உயிரினங்களின் தோல்களும் தேவைப்பட்டன. தென் அமெரிக்காவில் உள்ள இலமா (llama), அல்பேகா(alpaca) எனும் ஆட்டு வகைகளை சுமைதூக்கும் மிருகங்களாகப் பயன்படுத்தினர்; நாயையும் பயன்படுத்தினர்; ஆனால், உள்நாட்டிலுள்ள வேறு எந்த உயிரினத் தொகுதியையும் அவர்கள் வசப்படுத்திப் பயன்படுத்தவில்லை. அநேகமாக, ஆரம்ப காலத்திலிருந்தே, குதிரைகள், கால்நடைகள், செம்மறியாடுகள், பன்றி வகைகள் போன்ற பண்ணைத் தொழிலுக்குத் தேவையான மிருகங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. தட்பவெப்பநிலை ஐரோப்பிய கால்நடைகளுக்கு ஏற்றவாறு இருந்தது. பரந்த மேய்ச்சல் வெளிகளும் எளிய முறையில் உற்பத்தியாகும் உணவும் இருந்ததால், கால்நடைகளின் எண்ணிக்கை பெருகின. ஐரோப்பாவிலிருந்து கோழி வகைகள் கொண்டு வரப்பட்டன. அமெரிக்கக் காடுகளுக்கு அடிக்கடி பறந்துவரும் எண்ணற்ற பறவைகளில் டர்க்கி (Turkey) எனும் வான்கோழியும் ஒன்றாகும். டர்க்கியை ஐரோப்பாவிற்குக் கொண்டுவந்து, நன்கு பழக்கி, மீண்டும் அமெரிக்காவிற்கு எடுத்துச் சென்றனர். ஐரோப்பாவின் கோழிப் பண்ணைக்கு அமெரிக்கா வான்கோழியைப் பரிசாகத் தந்து உதவியது. ஆனால், அமெரிக்காவில் உள்ள வான்கோழி ஐரோப்பிய பண்ணைகளில் காணப்படும் வான்கோழியைவிடப் பெரிதாகும். அமெரிக்க வான்கோழி 30 முதல் 40 பவுண்டுகள் எடை இருக்கும். இத்தகைய உயர்ந்த பறவைகளை ஒரு ஷில்லிங்குக்கு விற்றனர். பொறுப்பற்ற முறையில் இப் பறவைகளை அழித்தமையால், ஒரு நூற்றாண்டிலேயே அமெரிக்காவின் குடியேற்றப் பகுதிகளிலெல்லாம் அவை மறைந்துவிட்டன.

குடியேறியவர்களுக்கு மட்டுமன்றி ஐரோப்பா முழுவதற்குமே தேவைப்படும் அளவுக்கு மீன்களைப் புதுஉலகம் வழங்கமுடியும். நியூ இங்கிலாந்து கடற்கரையிலே 200-க்கு மேற்பட்ட மீன் வகைகள் பிடிபட்டன என்று ஜோசிலின் (Josselyn) என்பார் தம்முடைய 'நியூ இங்கிலாந்து அருமைகள்' (New England Rarities, 1672) எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். காட் (Cod) எனும் மீன்வகை தம்முடைய கப்பல்களை வந்து வந்து மோதின என்று 1602-ல் கோஸ்னுட்டு (Gosnold) குறிப்பிட்டுள்ளார். சமுத்திரத்திலும் விரிகுடாக்களிலும் மட்டுமன்றி, ஆறுகளிலும், ஏரிகளிலும், ஓடைகளிலும் மீன்கள் நிறைய இருந்தன. இவற்றைக் கம்பால் அடித்துக்கொன்று தட்டிவிட்டுப் பொரியல் செய்து சுவைத்து உண்பர். மீன்கள் உணவாகவும் பயன்பட்டன;

ஏற்றுமதியும் செய்யப்பட்டன ; இன்னும், ஆரம்ப காலத்தில் குடியேறியவர்கள் மீன்களை எருவாகவும் பயன்படுத்தினர். ஆகவே, நியூ இங்கிலாந்தின் வர்த்தக வாழ்க்கையில் மீன் பிடிக்குந் தொழில் ஒரு பொருளாதார முக்கியத்துவத்தைப் பெற்றது.

தொழில்கள் மீது பூகோளச் சூழ்நிலைகள் உண்டாக்கிய விளைவுகள்

ஆறுகளும், துறைமுகங்களும், உடைபட்ட நீண்ட கடற்கரையும், குடியேற்றம் எளிதாகவும் விரைவாகவும் நிகழ்வதற்குத் துணைபுரிந்தன. மேலும், புகையிலை, சோளம் ஆகிய இரண்டு பண்டங்களையும் அமெரிக்கா உலகத்திற்கு வழங்கியுள்ளது. மற்ற தானியங்களைவிட இரண்டு மடங்கு கூடுதலாகச் சோளம் ஓர் ஏக்கர் நிலத்தில் விளைந்தது. பருவகாலங்களை எதிர்நோக்கிச் சோளத்தைப் பயிரிடவேண்டிய கட்டாயமும் இல்லை. நிலத்தை உழாமலேயே சோளத்தைப் பயிரிடலாம் ; கரடுமுரடான கருவிகளைக்கொண்டு, குறைந்த எண்ணிக்கையில் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி, ஒரு நிலத்தில் சோளத்தைப் பயிரிடமுடியும். சோளம், ஒரு புதிய, மலிவான உணவுப் பண்டமாகும். மற்ற தானியங்களின் காம்புகளைவிடச் சோளத்தின் காம்புகள் கால்நடைகளுக்கு நல்ல சத்துள்ள தீனியாகப் பயன்பட்டன. வட அமெரிக்காவில் தொடக்ககாலக் குடியேற்றங்கள் நிகழ்வதற்கு இச் சோளப் பயிரே காரணமாகும். சோளத்தைப் போலவே புகையிலை குடியேற்றத்திற்குக் காரணமாக அமையவில்லை என்றாலும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் செல்வத்திற்கு அடிப்படையாகப் புகையிலை அமைந்ததால், ஐரோப்பிய இனங்கள் அமெரிக்காவிற்கு இடம் பெயர்ந்து வரப் புகையிலையும் காரணமாயிற்று எனலாம்.

பிற்காலத்தில், சில பண்டங்கள் சில பிரதேசங்களின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு ஒத்திருந்ததைப் பொறுத்தே, நமது வரலாறு அமைந்தது. பருத்தி உற்பத்திக்கு ஏற்றவாறு தென்னகத்து மாநிலங்கள் அமைந்திருந்தன. காட்டன் ஜின் (cotton gin) எனும் பருத்தி விதையைப் பிரித்தெடுக்கும் கருவியைக் கண்டுபிடித்த பின்னர், பருத்தி தென்னாட்டின் முக்கிய விளைபயிராயிற்று. மேலும், தென்னாட்டில் அடிமை முறையும் செல்வாக்குற்றது. அடிமை முறை வலுப்பெறத் தொடங்கவே, உள்நாட்டுப்போர் ஏற்படும் சூழ்நிலைகள் உருவாகின. மேல் மிசிசிப்பி பள்ளத்தாக்கு, வளனும் நல்ல தட்பவெப்ப நிலையும் உடையதாகவிருந்ததால், தானிய உற்பத்திக்கு ஏற்றதாகவும், குடியேற்றத்தைத் துரிதப்படுத்துவதாகவும் அப் பள்ளத்தாக்கு அமைந்

தது. தாதுப்பொருள்கள் கிடைத்த இடங்களிலெல்லாம் பொருளாதார வாழ்வு மலர்ந்தது. பென்சில்வேனியாவின் வாமிங் பள்ளத்தாக்கிலும் (Wyoming Valley), ராக்கிகளிலும் (Rockies), எண்ணெய்க் கிணறுகள் உள்ள பிராந்தியங்களிலும், தாதுப் பொருள்களைச் சுற்றியே சமூகங்கள் அமைந்தன.

கிழக்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களும், ஆறுகளும் குடியேற்றத்திற்குத் தூண்டுதலாக அமைந்ததோடல்லாமல், மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய தொழில்களையும் நிர்ணயித்தன. நியூ இங்கிலாந்தின் தரிசு நிலங்களைக் கண்ட குடியேறிகள், உழவுத் தொழிலைவிட, எளிதான, வேறு தொழில்களில் நாட்டம் செலுத்தினர். குடியேற்ற காலத்தைச் சார்ந்த 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நியூ இங்கிலாந்துவாசி ஒருவனைக் கடல் வாழ்க்கையை மேற்கொள்ளுமாறு, மீன் பிடிக்குந் தொழில் தூண்டியது. குடியேற்ற நாட்டின் கப்பல் தொழிலின் மையமாக நியூ இங்கிலாந்து மாறியது; பிற்காலத்தில், அமெரிக்க வர்த்தகக் கடற்படை உச்ச நிலையில் இருந்தபோது, நியூ இங்கிலாந்து தன்னுடைய செல்வாக்கை நிலையாக்கிக் கொண்டது. கப்பல் கட்டும் தொழில் மங்கத் தொடங்கியவுடன், நியூ இங்கிலாந்துவாசிகள் நீராற்றலைப் பெருமளவுக்குப் பயன்படுத்திப் பொறிவழித்தொழிலைத் துவக்கினர். செழிப்புள்ள பண்ணை நிலங்களும், நல்ல துறைமுகங்களும், ஆறுகளும், நீராற்றலும் ஒருங்கே கிடைத்த மத்திய அட்லான்டிக் மாநிலங்களில், மக்களின் நடவடிக்கைகள் பல்வேறு துறைகளிலும் படிந்ததால் அநேக முக்கியமான தொழில்கள் தோன்றின.

சூழ்நிலையின் காரணமாகத் தொழில்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை இன்னும் சற்று விளக்குவோம். ஓஹையோ, (Ohio), இந்தியானா (Indiana), இல்லினாய் (Illinois), மிச்சிகன் (Michigan), விஸ்கான்சின் (Wisconsin) முதலிய பகுதிகளைக் கொண்ட பழைய வடமேற்குப் பிரதேசத்தில் முதலில் குடியேறியவர்கள் விவசாயிகளே ஆவர்; மற்றவர்கள் யாவரும் விவசாயிகளுக்குத் தேவையானவற்றை வழங்கும் வணிகர்களும், மீனவர்களும், ஏனையோருமே. அப் பிரதேசம் மண்வளம் நிறைந்து தானியங்களைப் பயிரிடுவதற்கு ஏற்றதாக அமைந்திருப்பதால், பெரும் நிலப்பகுதிகள் விவசாயத்திற்கு ஏற்றனவாக உள்ளன. வளமான நிலத்தோடல்லாமல், மற்றச் செல்வங்களும் பழைய வடமேற்குப்பிரதேசத்தில் உள்ளன. இப்பிரதேசத்தில் எல்லா மாநிலங்களும் மென்மையான நிலக்கரியைக் கொண்டுள்ளன. ஓஹையோவில் எண்ணெய், வாயு, களிமண் முதலியனவும், இந்தியானா

வில் சுண்ணும்புக்கல்லும், வேறு பல தாதுப்பொருள்களும் இந்தப் பிரதேசம் முழுதும் சிதறிக்கிடக்கின்றன. இவ்வளவு செல்வங்கள் கொழிக்கும் இப் பிரதேசத்தில் மக்கள் சுரங்க வேலையில் ஈடுபட்டனர்; தாதுப்பொருள்களைப் பயன்படுத்திப் பொறிவழிப் பண்டங்

ஒரு பிரதேசத்தின் பல்வேறு தொழில்கள்



(From H. U. Faulkner, Tyler Kepner, & E. H. Merrill, History of the American Way, McGraw-Hill.)

களை உற்பத்தி செய்தனர். கிழக்கு ஓஹையோவும் (Ohio), எரி (Erie), ஹியூரன் (Huron), சுப்பீரியர் (Superior) என்னும் ஏரிகளின் கரையோரங்களில் அமைந்த நிலப்பகுதியும் நாட்டின் பொறிவழித் தொழில்களின் மையமாக அமைந்தன. யங்ஸ்டவுன் (Youngstown), கிலீவ்லாண்டு ((Cleveland), ஓஹையோ (Ohio), காரி (Gary),

இந்தியானு (Indiana), சிக்காகோ (Chicago), இல்லினுய் (Illinois) ஆகிய நகரங்களிலும், ஏனைய நகரங்களிலும் பெரிய வார்ப்புத் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. அவை இரும்பை எஃகாக்கித் தந்தன. மற்றத் தொழிற்சாலைகள் எஃகை ஆயிரக்கணக்கான பண்டங்களாக மாற்றின. டெட்ராய்ட்டை (Detroit) மையமாகக் கொண்டு, இந்தப் பிரதேசத்தில் அமெரிக்கக் கார்கள் அனைத்தும் செய்யப்படுகின்றன. கார்களுக்குத் தேவையான ரப்பர்கள் ஓஹையோவில் உள்ள அக்ரோனில் (Akron) பக்குவப்படுத்தப் படுகின்றன. இப் பிரதேசத்தில் விவசாயப் பண்டங்கள்கூடப் பக்குவப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, இறைச்சிகளை டப் பாக்களில் அடைத்து அனுப்புவதில் உலகப் புகழ்பெற்ற சிக்காகோ (Chicago), கான்சாஸ் (Kansas) நகரம் முதலியவற்றில் விவசாயப் பண்டங்கள் பக்குவப்படுத்தப்படுகின்றன.

பல்வேறு வளப்பொருள்கள்

முற்காலத்தைப் போலவே தற்காலத்திலும் பூகோள அமைப்பு முறையினுல் சில விளைவுகள் ஏற்படுகின்றன. மேலும், அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் நமது எதிர் காலத்தைத் தற்பொழுதுள்ள மூலப்பொருள்களும், பயன்படுத்தப் படாத வளப்பொருள்களும் நிர்ணயம் செய்யும். ஐக்கிய அமெரிக் காவின் மூலப்பொருள்களைப் பற்றியும், இயற்கை வளங்களைப்பற்றி யும் சுருக்கமாக ஆராய்வோம்.

பல்வேறு வகையான இயற்கை வளங்களைப் பொறுத்தவரை யில், எந்த ஐரோப்பிய நாட்டையும்விட அமெரிக்கா மேலோங் கியே நிற்கிறது. அநேக நாடுகளில் இரண்டு அல்லது மூன்று இயற்கை வளங்கள்தாம் இருக்கும்; ஆனுல், அமெரிக்கா பல வளங்களைப் பெற்று உலகில் தலைசிறந்து விளங்குகிறது. பெரிய நிலப்பரப்பையும், நிறைய மாறுபாடுகள் கொண்ட தட்ப வெப்ப நிலையையும், நில உருவக் கூறுபாடுகளையும் உடைய அமெரிக் காவில், விலங்கினத்தையும், தாவர வர்க்கத்தையும், மண்ணில் தோண்டி எடுக்கப்படும் தாதுப் பொருள்களினத்தையும் கொண்ட இயற்கை வளங்கள் நிறைய உள்ளன. எடுத்துக்காட்டாகத் தேவையான அளவுக்குப் போதுமான நிலக்கரியும், இரும்பும் பிரிட் டனில் கிடைக்கின்றன. எனினும், அதன் பொருளாதார நட வடிக்கைகளுக்குத் தேவையான தானியங்கள், இறைச்சி வகை கள், தோல் வகைகள், பருத்தி, சில தாதுப்பொருள்கள், எண் ணெய் ஆகியவற்றைப் பிரிட்டன் இறக்குமதி செய்யவேண்டிய அவசியமிருக்கிறது. மேலும், அதன் தொழில்களுக்குத் தேவை

யான கச்சாப் பொருள்களையும், மக்கள் உயிருடன் வாழ்வதற்குத் தேவையான உணவுப் பொருள்களையும் பிரிட்டன் இறக்குமதி செய்கிறது. இத்தாலியிலும் நார்வேயிலும், நீராற்றலும் உணவுப் பண்டங்களும் நிறைய உண்டெனினும், இரும்பையும் நிலக்கரியையும் இறக்குமதி செய்தே தீரவேண்டும். பல்வேறுவகையான இயற்கை வளங்களையும் மாறுபாடுகள் உடைய தட்ப வெப்ப நிலையையும் பெற்றிருந்த போதிலும், ஃபிரான்ஸ் பெட்ரோலியம், செம்பு, மூலப் பருத்தி போன்ற அநேக இன்றியமையாத பொருள்களைப் பொறுத்தவரையில், தன்னுடைய தேவைகளைத் தானே நிரப்பிக்கொள்ளும் வசதியைப் பெறவில்லை.

ஆனால், ஐக்கிய அமெரிக்காவின் நிலையே வேறுகும். குரோம் (chrome), வெள்ளீயம் (tin) போன்ற அநேகத் தாதுப் பொருள்களையும், இயற்கையான ரப்பரையும், காப்பியையும் தவிர்த்து, உள் நாட்டுத் துய்ப்பிற்கும், பொறிவழித் தொழிலுக்கும் தேவையான பண்டங்களனைத்தையும் 1920ஆம் ஆண்டிற்குப் பிறகு நடப்பில் ஐக்கிய அமெரிக்கா உற்பத்தி செய்ததோடல்லாமல் ஏற்றுமதியும் செய்தது. ஐக்கிய அமெரிக்காவில் எல்லாவிதமான அடிப்படை உணவுப் பண்டங்களும் நிறைந்திருந்தன; அங்குள்ள மக்கள்தொகையைவிட மிகுந்த எண்ணிக்கை உள்ள மக்கள் கூட்டத்திற்கும் போதுமான அளவுக்கு உணவுப் பண்டங்கள் உற்பத்தியாயின; இந்த உண்மை, இரண்டு உலகப் போர்களிலும் வெளிப்பட்டது; செறிந்த வேளாண்மை (intensive methods of cultivation) நிறைந்த பயனைத் தரும் என்ற உண்மையினாலும் இது வெளிப்பட்டது. உலகத்தின் பல பகுதிகளுக்கு ஐக்கிய அமெரிக்கா உணவுப் பண்டங்களை ஏற்றுமதி செய்கிறது. காப்பி, தேயிலை, சர்க்கரை, வெப்பப் பிரதேசங்களின் பழவகைகள் ஆகிய உணவு வகைகளை ஐக்கிய அமெரிக்கா இறக்குமதி செய்தபோதிலும், இவ்விறக்குமதிகளெல்லாம் போகப்பொருள்களாகுமேயன்றி, இன்றியமையாத் தேவைகளாகமாட்டா. 1920-களின் பிற்பகுதியில், பொருளாதார வீக்கம் (boom) ஏற்பட்டபொழுது, உலக உற்பத்தியில் 70 சதவீதம் எண்ணெயையும், கிட்டத்தட்ட 50 சதவீதம் செம்பையும், 38 சதவீதம் ஈயத்தையும், 42 சதவீதம் துத்தநாகத்தையும், 42 சதவீதம் நிலக்கரியையும், 46 சதவீதம் இரும்பையும், 54 சதவீதம் பருத்தியையும், 62 சதவீதம் தானியத்தையும் ஐக்கிய அமெரிக்கா உற்பத்தி செய்தது. உலகத்தின் குதிரை ஆற்றல் அளவில் (horsepower) 36 சதவீதம் நாம் பெற்றிருந்தோம். இருந்தபோதிலும், உலக மக்கள் தொகையிலும்

உலக நிலப்பரப்பிலும் 6 சதவீதத்தையே ஐக்கிய அமெரிக்கா பெற்றிருந்தது[13].

காட்டு வளப் பொருள்கள்

தற்பொழுது 400,000,000 ஏக்கர்கள் கொண்ட காடுகளை உடைய ஐக்கிய அமெரிக்கா உலகில் கிடைக்கும் மரத்துண்டுகளில் பாதியை உற்பத்தி செய்து, பயன்படுத்துகிறது. ஹட்சன் விரிகுடாவின் (Hudson Bay) மேற்குக்கரையிலிருந்து தெற்கே டெக்சாஸ் (Texas) வரையில், ஒரு கோட்டினை வரைந்தால் அதற்குக் கிழக்கே யுள்ள பிரதேசமும், ராக்கி மலைகளின் (Rocky Mountains) உயர்ந்த பகுதிகளில் உள்ள பரந்த நிலப்பரப்பும், சீரா நிவேதா (Sierra Nevada) வில் உள்ள பசிபிக் காடும், கடற்கரைத் தொடர்களும் அமெரிக்கக் கண்டத்தின் காட்டுப் பிரதேசங்கள் ஆகும். மரங்கள் நிறைந்த இப் பிரதேசங்களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்: (1) வட கிழக்கில் மிக முக்கியமான கோனிஃபர்ஸ் (Conifers) என்னும் மென்மையான மரவகை உண்டு. வெள்ளை தேவதாரு மரவகையைச் சார்ந்த ஒயிட் பைனும் (White Pine), ஸ்புரூஸ் (Spruce) என்ற மரவகையும், ஹெம்லாக் (Hemlock) என்னும் பூண்டு வகையும் இப் பகுதியில் வளர்ந்து கிடக்கின்றன. மேலும், ஹிக்காரி (Hickory), ஓக் (Oak), மேப்பிள் (Maple) முதலிய வகைகளும் காணப்படுகின்றன. (2) தென்னடு, உயரத்திற் கேற்றவாறு நான்கு விதமான மரங்களைப் பெற்றுள்ளது. சதுப்பு நிலங்களிலும், அட்லான்டிக் ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் கீழ்ப் பகுதிகளிலும், வளைகுடா மாநிலங்களிலும் சைப்பிரஸ் (Cypress) என்னும் மர வகையும் மற்ற வலுவான மர வகைகளும் உள்ளன. வெர்ஜீனியாவிலிருந்து டெக்சாஸ் வரையிலுள்ள கடற்கரையின் மற்றப் பகுதிகளில் மஞ்சள் பைன் மரம் உள்ளது. அப்பலாச்சியன் மலைத்தொடரின் கீழ்ச் சரிவுகளில் வலுவான மரங்களும் மேற்சரிவுகளில் கோனிஃபர்ஸ் மர வகைகளும் வளர்கின்றன. (3) பெரிய

[13] Commerce Yearbook, 1930, Vol. II, Part II, 'Comparative World Statistics.' பல ஆண்டுகளுக்குக் குறிப்பாக 1925-1929-ல் சராசரிகளிலிருந்து சதவீதங்கள் கணக்கிடப்பட்டன. மேலே குறிப்பிட்ட பண்டங்களின் உற்பத்தியிலும், ஓட்ஸ், பார்லி, புகையிலை, பன்றி இறைச்சி ஆகியவைகளின் உற்பத்தியிலும் உலகத்திலேயே ஐக்கிய அமெரிக்கா தலை சிறந்து விளங்குகிறது. இந்த சதவீதக் கணக்குகள் ஆண்டுக்கு ஆண்டு வேறுபடும்; பொருளாதாரச் சூழ்நிலைக்குத் தக்கவாறும் வேறுபடும். பொருளாதார மந்தம் ஏற்பட்ட ஆண்டுகளில், இச் சதவீதங்கள் குறையலாயின. உதாரணமாக, 1936-ல் உலக உற்பத்தியில், ஐக்கிய அமெரிக்கா 61 சதவீதம் எண்ணெயும், 23 சதவீதம் செம்பும், 24 சதவீதம் ஈயமும், 40 சதவீதம் நிலக்கரியும், 34 சதவீதம் வார்ப்பிரும்பும், 30 சதவீதம் துத்தநாகமும், 41 சதவீதம் பருத்தியும், 51 சதவீதம் தானியமும் உற்பத்தி செய்தது.

ஏரியின் வட பகுதியில், பைன் (Pine), தமாரக் (Tamarack), சிதார் (Cedar), ஹெம்லாக் (Hemlock) முதலிய மர வகைகள் வளர்கின்றன. தென் பகுதியில் வலுவான மரவகைகள் உண்டு. (4) ராக்கி மலையில் (Rocky Mountain) மஞ்சள் பைன் மரங்களும், லாஜ்போல் பைன் (Lodgepole pine) வகைகளும் வளர்கின்றன. (5) பசிபிக் கடற்கரையில் டக்ளஸ் ஃபர் (Douglas Fir), ஹெம்லாக், பைன், சிதார், ரெட்வுட் (Redwood) போன்ற மென்மையான மர வகைகளே காணப்படுகின்றன. பியூஜட் சவுண்ட் (Puget Sound) பகுதியில் 200 முதல் 300 அடி உயரத்திற்கு டக்ளஸ் ஃபர் ஓங்கி வளருகிறது.

நிலத்தைச் செப்பனிடுவதில் ஏற்படுகின்ற கால விரயத்தினாலும், காட்டுத் தீ பரவிப் பெருங் காடுகளை அழித்துவிடுவதாலும் பல நிலப் பகுதிகளில் மரத் தொழில் முக்கியத்துவத்தை இழந்து விட்டது. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், மரத்தின் மொத்த உற்பத்தியில் ஒரு பாதிக்குமேல் வடகிழக்கு மாநிலங்கள் உற்பத்தி செய்தன; ஆனால், இப்பொழுது மொத்தத்தில் பத்தில் ஒரு பங்குதான் உற்பத்தி செய்கின்றன. 1880ஆம் ஆண்டுக்குப் பிறகு நடப்பில் மிச்சிகன், விஸ்கன்சின் பகுதிகளைச் சார்ந்த பைன் மரக் காடுகள் மூன்றில் இரண்டு பங்குகளுக்குமேல் மரத்தினை உற்பத்தி செய்தன; ஆனால், பின்னர் அக் காடுகளின் வளமும் குன்றியது. மர உற்பத்தியில் பசிபிக் மாநிலங்கள்தாம் முதல் வரிசையில் நின்றன; தென் மாநிலங்கள் இரண்டாவது வரிசையில் வருகின்றன. பெரும்பாலான மரங்கள் ஓரிகன், வாஷிங்டன், வட கரோலினு, அலபாமா, மிசிசிப்பி ஆகிய பகுதிகளிலிருந்து கிடைக்கின்றன. ஓக், மஞ்சள் பாப்லர் (Yellow Poplar), ரெட்கம் (Red gum), மாப்பிள் (Maple) போன்ற சில முக்கியமான வலுவுள்ள மரங்களும் வளர்ந்து கிடக்கின்றன. மொத்த உற்பத்தியில் நான்கில் மூன்று பங்குகளுக்குமேல் டக்ளஸ் ஃபர் (Douglas Fir), மஞ்சள் பைன், பாண்டிரோசா பைன் (Ponderosa pine), ஹெம்லாக் போன்ற மென்மையான மரங்கள் உள்ளன. மேலே குறிப்பிட்ட மரங்களின் மதிப்பும் வரிசைப்படியே அமைந்துள்ளது. சந்தையில் விற்பதற்குரிய 5,200,000,000,000 சதுர அடிகள் கொண்ட மரத்துண்டுகளை வழங்கும் அமெரிக்கக் காடுகள் 822,000,000 ஏக்கர்கள் பரப்பளவை உடையன என்று கணக்கிட்டுள்ளனர்; 1920-களின் முதற் பகுதியில் காடுகள் 461,000,000 ஏக்கர்களாகக்குறைந்தன; மர உற்பத்தியும் 2,215,000,000,000 சதுர அடிகளாகக் குறைந்தன. ஆர்.எஸ். கெல்லாக்(R. S. Kellogg)குறிப்பிட்டதுபோல, வேறு முறையில் சொல்லவேண்டுமானால், ஐக்கிய அமெரிக்காவில் வியாபாரத்திற்கென்று அறுக்கப்பட்ட மரத்தில்,

60 சதவீதம் பயன்படுத்தப்பட்டன அல்லது அழிந்துபோயின. கடந்த ஐம்பது ஆண்டுகளில் அம் மரங்களின் பெரும்பகுதி தீர்ந்து போய்விட்டன.[14] தற்பொழுது இன்னும் குறைந்துள்ளன. இயற்கையான வளர்ச்சியில் உற்பத்தியாகும் மரங்களைவிட இரண்டு மடங்கு அதிகமான மரங்களையே நாம் பயன்படுத்து கிறோம் என்று நிதானமான முறையில் கணக்கிட்டுள்ளனர். கடுமையான நடவடிக்கைகள்மூலம் காடுகளைப் பாதுகாத்தா லன்றி, ஐக்கிய அமெரிக்கா அதன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள இறக்குமதியையே நம்பி இருக்கவேண்டி வரும் என்பது தெளிவு. அமெரிக்க மர உற்பத்தி 1909-ல் 44,000,000,000 அடிகளாக உயர்ந்தது; 1954-ல் 36,000,000,000 அடி களுக்குக் குறைந்தது. இப்பொழுது கனடாவிலிருந்து நிறைய மரங்களை இறக்குமதி செய்கிறோம். விஞ்ஞான முறையில் காடு களைப் பேணி, அழிக்கப்படும் காடுகளின் அளவுக்கு இணையாகப் புதிய காடுகளை உண்டாக்க வேண்டும். மேலும், இருக்கின்ற காடுகளையும் நல்ல முறையில் பேணவேண்டும். இவற்றைப் பொறுத்தே மர உற்பத்தியின் எதிர்காலமும் உள்ளது. காட்டுப் பிரதேசங்களில் நான்கில் மூன்று பகுதிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டபோதிலும், காட்டுத் தீயினால் பாதிக்கப்படும் மரங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகும். 1957-ல் அலாஸ்காவைத் தவிர்த்து, மற்றக் காட்டுப் பிரதேசங்களில் 83,292 தடவைகள் காட்டுத் தீ பற்றியது. ஒரு நாளுக்குச் சராசரியாக 228 தடவைகள் காட்டுத் தீ ஏற்பட்டது. காட்டுத் தீக்கு இரையான நிலப்பரப்பு 3,409,000 ஏக்கர்களாகும். மரங்களை வெட்டும்பொழுதும், சந்தைக்கு அனுப்பும்பொழுதும் ஏற்படுகின்ற விரயத்தைக் குறைப்பதன் மூலமும் காடுகளைப் பாதுகாக்க முடியும். காடுகளில் வெட்டப்படும் மரங்களில் பாதிக் கும் குறைவாகவே, விற்பனைக்கு ஏற்ற முறையில், சில்லறை வியாபாரிகளிடம் வருகின்றன.

விவசாய வளப் பொருள்கள்

விவசாயப் பொருள்களைவிடப் பொறிசெய் பொருள்களின் மதிப்பு உயர்ந்தது என்றாலும், விவசாயமே ஐக்கிய அமெரிக்கா வின் முக்கியமான தொழிலாகும். நமது நாட்டில் உள்ள மிக முக்கியமான தொழில்கள் விவசாயப் பொருள்களையே ஆதார மாகக் கொண்டுள்ளன. நமது நாட்டிலுள்ள தொழிலாளர்களில்

14 R. S. Kellogg, Pulpwood and Wood Pulp in America (1923). p. 148.

எட்டில் ஒரு பகுதியினர் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளனர். தானியம், உலர்ந்த புல், பருத்தி, கோதுமை, புகையிலை, ஓட்ஸ் (Oats), சோயாபீன்ஸ் (Soybeans), உருளைக் கிழங்குகள் ஆகிய முக்கியமான பயிர்கள் 1954-ல் விளைந்தன. காய்கறி வகைகளைச் சார்ந்த உணவுப் பண்டங்களில் கூல வகைகளே (cereals) மிகவும் முக்கியமானவை; இவற்றில் இந்தியத் தானியமாகிய மக்காச்சோளமே முதலிடம் பெறுகிறது. 1957-ல் 3,400,000,000 புஷல்களுக்கு (Bushels) மேல் மக்காச்சோளம் உற்பத்தியாயிற்று; இஃது உலக உற்பத்தியில் 50 சதவீதத்திற்கு மேலாகும். தென்னகத்துப் பருத்தி விளையும் பகுதியில் தானியங்கள் பெருவாரியான அளவில் பயிரிடப்படுகின்றன; ஆனால், நமது மொத்த உற்பத்தியில் நான்கில் மூன்று பங்கு, மேல் மிசிசிப்பி பள்ளத்தாக்கின் தானியப் பகுதியிலிருந்தே கிடைக்கின்றது. இல்லினாய்ஸ், அயோவா (Iowa), ஓஹையோ, இந்தியானா, மிசௌரி ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய பகுதிதான் மேல் மிசிசிப்பிப் பள்ளத்தாக்காகும். தானியப் பயிர்கள் விளைவதற்கேற்ற நல்ல சூழ்நிலைகள் இப் பகுதியில் அமைந்துள்ளன. நல்ல மழையும் கதிரவனின் ஒளியும் மாறிமாறி வரும்; பூமியும் எளிதில் உலர்ந்துவிடும்; ஆனால், மண் கெட்டியாகி விடுவதில்லை.

தானியத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலப் பரப்பளவில் சற்றேறக் குறைய பாதிதான் கோதுமைக்கு ஒதுக்கப்பட்டது. உற்பத்தியான தானியத்தின் மதிப்பில் பாதிக்கும் குறைவான மதிப்புடைய அளவுக்குதான் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டது. மனித சமுதாயத்திற்குத் தேவையான முக்கிய உணவுப் பண்டங்களில் கோதுமையும் ஒன்று என்பதால், மக்காச்சோளத்தைவிடச் சில வகைகளில் அது முக்கியமானதாகும். ஆரம்ப காலத்தில் குடியேறியவர்கள் கோதுமையைப் பழைய உலகத்திலிருந்து புது உலகத்திற்குக் கொண்டு வந்தனர். 1930ஆம் ஆண்டிற்கு முன்னர், கோதுமை சில ஆண்டுகளிலேயே பல பிரதேசங்களில் பயிரிடப்பட்டது. எனவே, கோதுமை உற்பத்தியில் நாம் முன்னணியில் நின்றோம்.[15] 1915-ல் போர்க்காலத் தேவையின் தூண்டுதலின் காரணமாகக் கோதுமை உற்பத்தி ஒரு பில்லியன் (billion) புஷல்களுக்கும் மிகுதியாகப் பெருகியது. நமது சரித்திரத்திலேயே கோதுமை உற்பத்தி முதல் தடவையாக உச்சநிலை அடைந்துள்ளது. ஆனால், மற்ற தானியங்களைப் போலவே,

15 1930ஆம் ஆண்டிற்குப் பின்னர், கோதுமை உற்பத்தியில் ரஷியா தான் முன்னணியில் நிற்கிறது என்று அண்மைக் காலத்துப் புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன.

கோதுமை உற்பத்தியும் குறையத் தொடங்கியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், மீண்டும் உற்பத்திப் பெருகியது. உற்பத்தியான தானியத்தில் ஐந்தில் நான்கு பகுதியைப் பண்ணையிலேயே பயன்படுத்திவிட்டு எஞ்சியுள்ள ஒரு பகுதியை மட்டும் விற்பனைக்கு அனுப்புவர். ஆனால், உற்பத்தியான கோதுமை முழுவதையும் விவசாயிகள் சந்தைகளில் விற்றுவிடுவர். அதனைப் பின்னர் மாவாக அறைத்து விடுவர். 41 மாநிலங்களில் கோதுமை உற்பத்தியாகிறது. 1957-ல் வட டக்கோட்டா (North Dakota), கான்சாஸ் (Kansas) மாநிலங்களில் கோதுமை உற்பத்தி, தலை சிறந்து விளங்கியது. மொத்த உற்பத்தியில், இம் மாநிலங்கள் முன்னணியில் நின்றபோதிலும், வாஷிங்டனில் ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு மடங்கு கோதுமை உற்பத்தியாகியது.

மக்காச்சோளம், கோதுமை முதலியவற்றில் மட்டுமல்லாமல், ஓட்ஸைப் பொறுத்தவரையிலும் ஐக்கிய அமெரிக்கா உலகத்திற்கு வழிகாட்டியாக உள்ளது. ஆண்டொன்றுக்கு உற்பத்தியாகும் ஓட்ஸ் 1,000,000,000 புஷல்கள் ஆகும். இவற்றில், நான்கில் மூன்று பகுதி வடதிசை மத்திய மாநிலங்களில் விளைகின்றன. ஐந்தில் நான்கு மடங்கு பார்லியையும், நான்கில் மூன்று மடங்கு ரையையும் (Rye) இந்த மாநிலங்கள் பயிரிடுகின்றன.

ஐக்கிய அமெரிக்காவில் விளையும் மனித வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பண்டங்களில் அரிசி, சர்க்கரை, வெள்ளை உருளைக்கிழங்கு, இனிப்புருளைக்கிழங்கு ஆகியவற்றைப் பற்றியும் குறிப்பிடவேண்டும். அமெரிக்காவின் அரிசி உற்பத்தி மையம் டெக்சாஸ் (Texas) ஆகும். லூசியானா, அர்க்கான்சாஸ், கலிஃபோர்னியா ஆகிய பகுதிகளிலும் அரிசி விளைந்தது. ஐக்கிய அமெரிக்காவில் கிடைக்கும் கரும்புகள் அனைத்தும் லூசியானாவில் உற்பத்தியாவதே. ஆனால், நாட்டில் பயனாகும் சர்க்கரையின் ஒருசிறு பகுதிதான் லூசியானாக் கரும்பிலிருந்து கிடைக்கிறது. எனவே, கியூபா (Cuba), பியூர்டோ ரிகோ (Puerto Rico), ஹாவாய் (Hawaii), பிலிப்பைன்ஸ் (Philippines) ஆகிய இடங்களிலிருந்து சர்க்கரை இறக்குமதியாகிறது. கடந்த சில ஆண்டுகளில் சர்க்கரைக் கிழங்கு உற்பத்தி பெருகியுள்ளது.[16] ஐக்கிய அமெரிக்காவின் ஒவ்வொரு மாநிலத்திலும் வெள்ளை உருளைக் கிழங்கு பயிரிடப்பட்டது. 1954-ல் அக் கிழங்கு உற்பத்தியின் மொத்த மதிப்பு $441,000,000 ஆகும். அக் கிழங்குகள்

16 சர்க்கரைக் கிழங்கின் மொத்த உலக உற்பத்தியில் ஐக்கிய அமெரிக்கா பத்தில் ஒரு பங்கு உற்பத்தி செய்கிறது. இக் கிழங்கு உற்பத்தியில் உலக நாடுகளுக்கிடையே அமெரிக்கா மூன்றும் இடம் வகிக்கிறது.

விளைவதற்கு ஏற்ற இடங்கள் வடக்கு வடகிழக்குப் பிரதேசங்களேயாகும். தென் மாநிலங்களில் இனிப்பு உருளைக்கிழங்குகள் விளைந்தன.

கால்நடையின ஆற்றலுக்குப் (animal power) பதிலாக மோட்டார் ஆற்றலைப் (motor power) பயன்படுத்திய போதிலும், கால்நடைகளுக்குத் தேவையான புல் உற்பத்தி 1919-ல் இருந்ததைவிட 15,000,000 டன்கள் அதிகமாகவே 1939-ல் இருந்தது எனலாம். இது வியப்பிற்குரியதாகும். எனினும், கூடுதலான புல் உற்பத்திக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒவ்வொரு கால்நடைத் தொகுதிக்கும் கூடுதலான புல் தேவைப்படலாம்; வேறு பண்ணைப் பயிர்களின் உற்பத்தி குறைந்துவிடுவதால், புல் உற்பத்தி பெருகி இருக்கலாம்; மாற்றுப் பயிர் முறையின் மூலம் நிலத்தின் வளத்தைப் பெருக்குவதற்காகப் பருப்பு வகையைச் சார்ந்த புல்லினை உற்பத்தி செய்திருக்கலாம்.[17] புல் உற்பத்தியின் மதிப்பு, 1954-ல் மக்காச்சோள உற்பத்தியின் மதிப்பிற்கும் குறைவே. வளர்ச்சியுற்ற பண்ணை நிலத்தில் 15 சதவீத நிலம் புல் உற்பத்திக்குப் பயன்பட்டது.

அமெரிக்கப் பயிர்வகைகளிலேயே (1954) மதிப்பளவில் பருத்தி மூன்றாவது இடம் வகிக்கிறது. தென்னூட்டின் பயிர் வகைகள் அனைத்திலும் பருத்தியே தலைசிறந்ததாகும். ஏற்றுமதியிலும் (1957) பருத்தியே முன் நிற்கிறது. 1954-ல், 15,419,000 பேல்கள் (bales) பருத்தி உற்பத்தியாயிற்று; அதன் மதிப்பு $2,187,000,000 ஆகும். 1957-ல் உலக உற்பத்தியில் இது ஐந்தில் இரண்டு மடங்காகும். இந்தியாவும், சைனாவும் மூறையே இரண்டாவது, மூன்றாவது இடத்தைப் பெறுகின்றன. 37ஆவது அக்ஷரேகைக்குத் தெற்கே, 1450 மைல்கள் நீளமும் 500 மைல்கள் அகலமும் கொண்ட, வட கரோலினாவிலிருந்து டெக்ஸாஸ், கலிஃபோர்னியா வரையிலுள்ள தென் மாநிலங்கள் அனைத்தும் பருத்தி விளையும் பிராந்தியங்கள் ஆகும். 1940-ல் ஏறக்குறைய 23 மில்லியன் ஏக்கர்கள் கொண்ட நிலத்தைப் புதிதாகப் பருத்தி பயிரிடுவதற்குப் பயன்படுத்தினர். தென் கரோலினாவின் கடல் தீவுகளிலும், ஜார்ஜியா, பிளோரிடா முதலியவற்றின் கவுன்டிகளிலும் (counties), கடல் தீவுப் பருத்தி (Sea Island Cotton) எனும் உயர்தர வகையைச் சார்ந்த பருத்தி விளைந்தது. இப் பருத்தி மொத்த உற்பத்தியில் ஒரே ஒரு சதவீதமேயாகும். முதல் உலகப் போருக்கு முன்னர், பருத்தி உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு ஏற்றுமதி செய்யப்பட்டது;

[17] Yearbook of Agriculture, 1930, pp. 308-310.

ஆனால், இப்பொழுது உற்பத்தியில் பாதி உள்நாட்டிலேயே செலவழிந்து விடுகிறது.

மிசிசிப்பி நதிக்குக் கிழக்கே, பதினேழு அல்லது அதற்கும் கூடுதலான மாநிலங்களில் புகையிலை பயிராகிறது. முக்கியமாக, கிழக்குக் கடற்கரைவெளியிலும், அப்பலாச்சியன் மலைப்பகுதியிலும், மிசிசிப்பி பள்ளத்தாக்கு வெளிகளிலும் புகையிலை பயிராகிறது. 1957-ல் மொத்த உற்பத்தி 1,680,000,000 பவுண்டுகளாகும். வடகரோலினு, தென்கரோலினு, கென்டக்கி (Kentucky), வெர்ஜீனியா ஆகிய பகுதிகளே உற்பத்தி மையங்களாகும். புகையிலை உற்பத்தியில் ஐக்கிய அமெரிக்கா உலகத்திற்கு வழிகாட்டியாக இருந்தபோதிலும், தீவுகளின் புகையிலை உற்பத்தியையும் சேர்த்து உலக உற்பத்தியில் நான்கில் ஒரு பகுதி ஐக்கிய அமெரிக்காவைச் சார்ந்ததாக இருந்த போதிலும், மதிப்பிடுதலைப் பொறுத்தவரையில், விவசாயப் பண்டங்களில் புகையிலை ஐக்கிய அமெரிக்காவினுள் ஐந்தாவது இடத்தையே வகிக்கிறது. விளைச்சலில் ஐந்தில் மூன்று பாகத்தை உள்நாட்டிலேயே பயன்படுத்துகின்றனர்.

ஆரம்ப காலத்தில் குடியேறியவர்களுக்கும் முதல் முயற்சியாளருக்கும் அமெரிக்கக் கண்டத்திலுள்ள விலங்கினங்களின் வாழ்க்கை எவ்வாறு பயன்பட்டது என்பதை முன்னரே விளக்கினேம். மிதமான தட்ப வெப்ப நிலையும் விசாலமான மேய்ச்சல் வெளியும் அமெரிக்காவில் இருப்பதால், விலங்கினங்களைச் சார்ந்த பண்டங்கள் (animal products) உற்பத்தி செய்வதில் அமெரிக்கா தலைசிறந்து விளங்கியது. பன்றிகள் உற்பத்தியில் முதல் இடத்தையும், கால்நடை உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும், செம்மறியாடுகளின் பெருக்கத்தில் மூன்றுவது இடத்தையும் அமெரிக்கா பெற்றுள்ளது. பெரிய சமவெளிகளிலும் (Great Plains), பாறைமலை மேட்டுச் சமவெளிகளிலும் (Rocky Mountain tablelands), அவற்றின் கிழக்குச் சரிவுகளிலும் கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் வெளிகள் உள்ளன. விஸ்கான்சின், நியூயார்க், கலிஃபோர்னியா, பென்சில்வேனியா ஆகிய மாநிலங்களில் கால்நடைப் பண்ணைகளும், பண்ணைக்குரிய பண்டங்களும் கிடைக்கின்றன. பெரும் நகரங்களின் அருகிலேயே பால் பண்ணைகள் உள்ளன. டெக்சாசைத் தவிர்த்து, பன்றி வளர்ப்பு நாடானது தானிய உற்பத்தி பெருகியுள்ள பகுதிகளுடன் ஒத்துள்ளது. யூனியனின் ஒவ்வொரு மாநிலத்திலும் செம்மறியாடுகள் வளர்க்கப்படுகின்றன என்றாலும், டெக்சாசும் தொலைவில் உள்ள மேற்கு மாநிலங்களுமே முக்கியமான கம்பளி உற்பத்தியாகும் மையங்

களாகும். குதிரைக்கும் கோவேறு கழுதைகளுக்கும் மிக முக்கியமான சந்தைகளாகக் கிழக்கு செயின்ட் லூயிசும் (East St. Louis), கன்சாஸ் நகரமும் (Kansas City) அமைந்தன. இவ் விரு இடங்களும் குதிரை வளர்ப்புப் பிரதேசத்தின் மையத்திலேயே உள்ளன. மிக வெப்பமான சீதோஷ்ண நிலையைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றலும், எவ்வளவு கடினமான உழைப்பிற்கும் சலிக்காத ஆற்றலும் கோவேறு கழுதைகளுக்கு இருப்பதால், தென்மாநிலங்களில் குதிரைகளைவிடக் கோவேறு கழுதைகளையே எண்ணிக்கையில் அதிகமாகக் காணலாம். கோழி வளர்ப்பில் தானியமே மிக முக்கியமான உணவாகப் பயன்படுவதால், வட திசையில் உள்ள மத்திய மாநிலங்களே கோழிப் பண்ணையின் மையங்களாக அமைந்தன. ஆண்டொன்றுக்கு மூன்று பில்லியன் டாலர் மதிப்புள்ள முட்டைகளும் கோழிகளும் கிடைக்கின்றனவென்றால், அவற்றில் பாதிக்குமேல், 1957-ல், இம் மாநிலங்களின் கோழிப் பண்ணைகளிலிருந்து கிடைத்தன.

விவசாய நிலப்பகுதிகள்



(From H. U. Faulkner, Tyler Kepner, and Hall Bartlett The American Way of Life, Harper & Bros.)

குடியேற்ற நாளிலும், ஆரம்ப தேசீய காலத்திலும் (Early National Period) கடல் வளப் பொருள்கள் நமது பொருளாதார வாழ்க்கையில் பெற்றிருந்த முக்கியத்துவம் இப்பொழுது கிடையாது. என்றாலும், கடல் வளப் பொருள்களின் காரணமாக, 1,55,000 தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டுள்ளனர்; ஒவ்வோர் ஆண்டும் (1957) $351,000,000 மதிப்புள்ள

உணவுப் பொருள்கள் கடல்களிலிருந்து கிடைத்தன. இந்தத் தொழில் துறையில் ஐக்கிய அமெரிக்காவும் அலாஸ்காவும் சேர்ந்து உலகத்திலேயே இரண்டாவது இடத்தை வகிக்கின்றன. நியுபவுண்ட்லாந்திலிருந்து செசாபீக்(Chesapeake)வரையில்உள்ள மேற்கு அட்லான்டிக் பகுதி உலகிலேயே மீன் பிடிக்கும் முக்கிய மான இரண்டு பகுதிகளில் ஒன்றாகும். அலாஸ்காவையும் சேர்த்து ஐக்கிய அமெரிக்காவில் ஆண்டொன்றுக்குப் பிடிக்கப்படும் மீன் களின் மதிப்பில் பாதிஅளவு மீன்கள் அட்லான்டிக் கடற்கரையில் பிடிக்கப்படுகின்றன. அட்லான்டிக் கரையில் பிடிபடும் மீன்கள் ஹேடாக் (heddock), மாக்கீரல் (mackerel), காட் (cod), ஹெர்ரிங் (herring), ஹாலிபட் (halibut), டியூனு (tuna), கிளஞ்சல் வகை கள் (oysters) ஆகியவைகளாகும். பசிபிக் கரையில் மீன் பிடிக்கும் தொழிலில் மிக முக்கியமான கட்டம் எதுவென்றால், அலாஸ் காவிலும் மேற்குக் கரையிலும் சால்மன் (salmon) மீன் வகை யைப் பிடிப்பதுதான். 1956-ல் பிடித்த மீன் களின் மதிப்பு $3,77,89,000 ஆகும். பெரிய ஏரிகளில் ஹெர்ரிங், வெண்மீன், டிரவுட் (trout), மஞ்சள் மீன்வகை (yellow perch) இன்னும் மற்ற மீன்வகைகளும் கிடைத்தன. இவ்வாறு பெரிய ஏரிகளில் பிடிபட்ட மீன்களின் மதிப்பு $1,01,64,000 ஆகும்.

காடுகளில் உள்ள மரங்களும் மற்ற வளப்பொருள்களும் வீணுக்கப்படுவது போலவே, மீன் பிடிக்கும் தொழிலிலும் வேதனை யூட்டக்கூடிய முறையில் மீன்கள் வீணுக்கப்படுவதும், எதிர் காலத்தைப்பற்றிச் சிறிதும் கவலையின்றி அத்தொழிலில் ஈடுபட் டிருப்பதும் கண்கூடாகும். மேற்குக்கரையில் சால்மன் என்னும் மீனைப் பிடிப்பதை நோக்கின், இந்த உண்மை புலனாகும். உடனடி இலாபம் ஈட்டவேண்டும் என்ற ஆசையின்காரணமாகச் சில தவறான வழிகளில் சால்மன் மீனைப் பிடிப்பதால், பிடிபடும் சால்மன் மீன்வகையின் எண்ணிக்கை குறைந்துவிடுவதோடு மட்டுமல்லாமல், அம் மீன் கூட்டம் வடக்கே வெகுதூரம் சென்று பாதுகாப்பைத் தேடிக்கொள்கின்றது.

தாதுப்பொருள் வளங்கள்

1860-ல் உலோகத் தொடர்புடைய சுரங்கங்களிலிருந்தும், உலோகத் தொடர்பில்லாத சுரங்கங்களிலிருந்தும் வெட்டி எடுக்கப்பட்ட பொருள்களின் மதிப்பு $9,00,00,000 ஆகும்; 1956-ல் $17,34,60,00,000 ஆக அவற்றின் மதிப்பு உயர்ந் தது. உலோகத் தொடர்புடைய அல்லது உலோகத் தொடர்பற்ற தாதுப்பொருள்களில் பெட்ரோலியம் முதலிடம்வகித்தது(1956);

அதன் மதிப்பு $7,26,29,25,000 ஆகும்; எல்லாவிதத் தாதுப்பொருள்களின் மொத்த மதிப்பில் கிட்டத்தட்ட ஐந்தில் இரண்டு பங்கு பெட்ரோலியத்தின் மதிப்பாகும். ஆரம் பத்தில் விளக்கேற்றுவதற்கே எண்ணெயைப் பயன்படுத்தினர். பின்னர், அதன் பயன் பலதுறைகளிலும் பெருகியது. ஆகவே வடிகட்டும் முறைப்படியும், மற்ற முறைகளின்படியும் வர்த்தகப் பொருள்களாகிய மண்ணெண்ணெய், பென்சைன் (benzine), காசோலின் (gasoline), நாப்தா (naphtha), இறுகி வழ வழப் பாயுள்ள எண்ணெய் வகைகள் (heavy and lubricating oils), பாரஃபின் (paraffin) என்னும் மெழுகுவகை, அஸ்ஃபால்ட் (asphalt) முதலியன உற்பத்தியாயின. காசோலின் மோட்டார்கள் உற் பத்தி பெருகிக்கொண்டே சென்றதாலும், எண்ணெயில் ஓடு கின்ற என்ஜின்களின் (oil-burning engines) உற்பத்தி பெருகி வளர்ந்துகொண்டே சென்றதாலும் தொழில் துறையில் பெட் ரோலியத்தின் மதிப்பு தொடர்ந்து ஏறிக்கொண்டே சென்றது. நியூயார்க்கிலிருந்து டென்னசி வரையில் பரந்துள்ள அப்பலாச்சி யன் பிரதேசத்தில்தான் முதன்முதலில் எண்ணெய் கண்டுபிடிக் கப்பட்டது. ஆரம்பத்தில் தேவையான எண்ணெய் முழுதும் இப் பிரதேசத்திலிருந்துதான் கிடைத்தது. பல இடங்களில் கிடைத் தாலும், மூன்று முக்கியப் பகுதிகளில்தாம் எண்ணெய் இன்று எடுக் கப்படுகிறது; (1) மேற்கு மிசௌரி, கான்சாஸ், ஒக்லாஹோமா (Oklahoma) ஆகிய இடங்களைக் கொண்ட மத்திய கண்டப் பகுதி கள்; (2) கலிஃபோர்னியா பகுதி; (3) டெக்சாஸ், லூயிசியானா ஆகியவற்றின் கடற்கரைச் சமவெளிகளைக் கொண்ட வளை குடாப் பிரதேசம். கடைசியில் குறிப்பிடப்பட்ட இரண்டு பகுதி களில், கடற்கரைகளுக்கு அப்பால் நீரின் அடியில் எண்ணெய் இருப்பதைக் கண்டு அதனை எடுக்கிறார்கள். உலக உற்பத்தியில் கிட்டத்தட்ட ஒரு பாதியை ஐக்கிய அமெரிக்கா உற்பத்தி செய்த போதிலும், வெனிசூலா (Venezuela) விலிருந்தும், ஏனைய பகுதி களிலிருந்தும் எண்ணெயை அந்நாடு இறக்குமதி செய்கிறது. எண்ணெய் வளத்தினை மிக விரைவில் செலவழித்துக்கொண்டி ருக்கும் இந்த நாட்டினைக் கண்ட மண்ணூல் அறிஞர்கள் (Geologists), எண்ணெய் உற்பத்தி உச்சநிலை அடைந்துவிட் டது என்று எச்சரிக்கை செய்துள்ளனர். கடந்த இருபதாண்டு களில் மத்திய கிழக்கிலும் வெனிசூலாவிலும் நல்வினையின் பயனாய் புதிய, முக்கியமான எண்ணெய் ஊற்றுகள் தோண்டப்பட் டுள்ளன.

பெட்ரோலியத்தை அடுத்து, மதிப்பைப் பொறுத்தவரை யில், தாதுப் பொருள்களிலேயே நிலக்கரி மிக முக்கியமான

தாகும்.[18] ஐக்கிய அமெரிக்காவின் ஆந்திரசைட் வண்டல்கள் (Anthracite deposits) வட கிழக்குப் பென்சில்வேனியாவில் முக்கியமாகக் காணப்படும் ; உலகிலேயே அவ் வண்டல்கள் தரத்திலும் அளவிலும் மிகஉயர்ந்தவையாகும். அலபாமாவிலிருந்து பென்சில்வேனியா வரையிலும் உள்ள அப்பலாச்சியன் மலைத்தொடரில் மிகமுக்கியமான பிடுமினஸ் (bituminous) கிடைக்கும் பகுதிகள் உள்ளன. என்றாலும், மிக உயர்ந்த பிடுமினஸ் வண்டல்கள் மிசிசிப்பி பள்ளத்தாக்கில் உள்ள மாநிலங்கள் பலவற்றிலும் மற்ற இடங்களிலும் கிடைக்கின்றன. இந்த நாட்டில் நிலக்கரி கிடைக்கும் பிரதேசங்களின் மொத்தப் பரப்பளவு 5,00,000 சதுரமைல்களாகும். அல்லது நாட்டின் மொத்தப் பரப்பளவில் ஏறக்குறைய 13 சதவீதமாகும்.[19] நிலக்கரி உள்ள பகுதிகள், பரவலாக வியாபித்துள்ளன. எனவே, இது முக்கியத்துவம் நிறைந்த உண்மையாகும். ஏனெனில், தொழில் வளர்ச்சிக்கும், வர்த்தக வளர்ச்சிக்கும் மிகவும் தேவைப்படும் நிலக்கரியின் கடத்துச் செலவு (expense of transportation) மிக முக்கியமான பெரும் செலவாகும். நியூயார்க், ஃபிலடெல்பியா போன்ற துறைமுகங்களுக்கு நிலக்கரியை ஒருசில மணி நேரத்தில் எடுத்துச் செல்லும் வகையில் நிலக்கரி கிடைக்கும் பகுதிகள் அமைந்துள்ளன என்பதும் ஒரு முக்கியமான உண்மையாகும். ஆனால், தென்னியூ இங்கிலாந்தில் உள்ள தொழிற்சாலைகள் நிறைந்த மாநிலங்களிலிருந்து நிலக்கரி கிடைக்கும் பகுதிகள் வெகு தொலைவில் உள்ளன. இதற்கு மாறுன நிலைமை இருந்திருந்தால், தொழில் புரட்சிக்குப் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியின் வரலாறு முற்றிலும் மாறுக இருந்திருக்கும். பழைய வடமேற்குப் பகுதியில் நிறைய நிலக்கரி வண்டல்கள் கிடைத்தமையால், அப்பகுதி பொறிவிழித் தொழிலின் மையமாயிற்று. ஆனால், இந்த அடிப்படையான தாதுப்பொருளின் உற்பத்தியிலும், அதனைப் பயன்படுத்தும் முறையிலும் நிறைய நிலக்கரி பாழாக்கப்படுகின்றது என்பது

[18] 1956-ல் ஆந்திரசைட் (anthracite) உற்பத்தியின் மதிப்பு $23,67,85,000 ஆகும் ; பிடுமினஸ் (bituminous) உற்பத்தியின் மதிப்பு $2,41,20,04,000 ஆகும்.

[19] இந்த எரிபொருள் வளங்களுடன் (fuel resources) அநேகமாக முழுதும் புறக்கணிக்கப்பட்ட முற்று நிலக்கரியையும் எதிர்கால வரலாற்றாசிரியர் சேர்த்துக்கொள்வர். மின்னசோட்டாவில் (Minnesota) மட்டும் முற்றுத நிலக்கரியை உடைய நிலப்பரப்பு ஏழு மில்லியன் ஏக்கர்கள் உள்ளன. See E. K. Soper, The Peat Deposits of Minnesota, Bulletin 16, Minnesota Geological Survey (1919).

வருந்தத்தக்கதே[20]. இரண்டு உலகப்போர்களுக்கு இடையில், நிலக்கரிச் சுரங்கம் விரிவுபடுத்தப்பட்ட காலத்திலிருந்தே, இத் தொழில் அளவுமீறிய உற்பத்தியினாலும், குழப்பம் நிறைந்த தொழிலாளர் சந்தையினாலும் மிகவும் பாதிக்கப்பட்டது. நிலக்கரிக்குப் பதிலாக எண்ணெயையும் வாயுவையும் பயன்படுத்துவதாலும், நீர்மின்னியக்க ஆற்றலின் வளர்ச்சியினாலும், நிலக்கரியையே நீராவியாகவும் மின்னியக்க ஆற்றலாகவும் மாற்றியதாலும் நிலக்கரியின் தேவை உலகில் குறைந்துவிட்டது. இத்தகைய மாற்றங்களுக்கு ஏற்றவாறு தன்னையும் மாற்றிக்கொள்வதில் நிலக்கரித் தொழில் சற்று நிதானமாகவே நடந்துகொண்டது. இத்தொழில் விஞ்ஞான முறைக்கு முற்றிலும் மாறுன உற்பத்தி முறைக்குத் தகுந்த எடுத்துக் காட்டாகும். எனினும், கடந்த கால்நூற்றாண்டில், பிடுமினஸ் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைசெய்யும் தொழிலாளி ஒரு மணி நேரத்தில் 50 சதவீதத்திற்கும் மிகுதியாகவே நிலக்கரியைத் தோண்டி எடுத்தான். சுரங்க ஆராய்ச்சியில் மிகவும் குறைந்த தொகையைச் செலவு செய்தபோதிலும், சுரங்கத் தொழிலாளி 50 சதவீதத்திற்கும் அதிகமாகவே நிலக்கரியை வெட்டி எடுத்தான்.

நிலக்கரிக்கும் பெட்ரோலியத்திற்கும் அடுத்தாற்போல், உயர்ந்த மதிப்புள்ள உலோகத் தொடர்பற்ற சுரங்கப் பொருள்கள் சிமெண்டும் இயற்கையான வாயுவும் ஆகும். 1956-ல் வாயுவின் மதிப்பு $1,08,88,12,000 ஆகும் என்று கணக்கிட்டுள்ளனர். 1870 ஆம் ஆண்டிற்கு முன்னர், வாயுவினை விளக்கேற்றுவதற்கு மட்டுமே பயன்படுத்தினர்; அதன் பெரும் பகுதியைப் பாழாக்கினர். 1870-க்குப் பின்னரே, வெப்பம், சக்தி (power) இவற்றை உண்டாக்குவதற்கு வாயு மிகவும் பயன்பட்டது. எனவே, இப்பொழுது கூடுமான அளவுக்கு வாயு பாதுகாக்கப்படுகிறது. மக்கள் நெருக்கடி மிகுந்த வடகிழக்குப் பகுதிகளுக்கும், வடக்கிலுள்ள மத்திய மாநிலங்களுக்கும் இயற்கையான வாயுவினைக் குழாய்கள் மூலம் எடுத்துச் செல்கின்றனர். 1950-ஆம் ஆண்டிலிருந்து வாயுவின் உற்பத்தி இரண்டு மடங்கிற்கு அதிகமாகவே பெருகியுள்ளது. வாயுவைப் பொறுத்தவரையிலும், மண்ணூல் அறிஞர்கள் சிலவாண்டுகளில் அது தீர்ந்துவிடும் என்று எச்சரிக்கை செய்துள்ளனர். ஐந்தில் ஒரு பங்கு வாயுவைத்தான் உள்நாட்டில் விளக்கிற்கும் வெப்பத்திற்கும் பயன்

20 சுரங்கத்திலிருந்து ஏறக்குறைய 50 சதவீதம் மட்டுமே பிடுமினஸ் நிலக்கரி தோண்டி எடுக்கப்படுவதாகக் கணக்கிட்டுள்ளனர். அதனைத் தபாரித்துச் சந்தைக்கு அனுப்புவதில் மேலும் ஒரு 10 சதவீதம் ஷீணிக்கப்படுவதாகவும் கணக்கிட்டுள்ளனர். துய்ப்பின்போது எவ்வளவு பாழாகிறது என்ற கணக்கு இங்குக் கொடுக்கப்படவில்லை.

படுத்துகின்றனர். மிகுந்தவற்றைத் தொழில் துறையில் பயன் படுத்துகின்றனர். சூடாக்கும் வேலைகளுக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் இயற்கையான வாயுவிலிருந்து காசோலின் எடுக்கும் முறையைக் கண்டுபிடித்தனர். இது ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

ஐக்கிய அமெரிக்காவில் கிடைக்கும் உலோகங்களிலேயே, மிகக் குறைந்த விலையில் மிக உயர்ந்த மதிப்புடன் பெருவாரியாகப் பரவியுள்ள உலோகம் இரும்பு ஒன்றுதான். இயந்திரங்களைச் செய்வதற்கும், கருவிகளைப் படைப்பதற்கும், கட்டடங்களை எழுப்புவதற்கும் மிகவும் தேவைப்படும் உலோகம் இரும்பாகும். இரும்பு-எஃகு காலத்தில், முக்கியப் பங்கு வகிக்கும் தொழில் துறைகளுக்குத் தேவையான சாமான்களையும் கருவிகளையும் செய்ய இரும்பு பெரிதும் பயன்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் இரும்பு கிடைத்தது. ஆனாலும், இரும்புக் கனிகளின் பெரும்பகுதி சுப்பீரியர் ஏரி மாவட்டத்திலும், மின்னசோட்டா, மிச்சிகன், விஸ்கான்சின் பகுதிகளிலும் தோண்டி எடுக்கப்பட்டன. அலபாமா, யுட்டா (Utah) பகுதிகளைச் சார்ந்த பர்மிங்காமிலும் இரும்பு கிடைக்கும். பத்தில் ஒன்பது பங்குள்ள உள்நாட்டு இரும்புக் கனிகளைச் சுப்பீரியர் ஏரிப் பகுதி வழங்குகிறது. கிடைக்கக் கூடிய வண்டல்களில் நான்கில் மூன்று பங்கு சுப்பீரியர் ஏரிப் பகுதியிலேயே கிடைக்கிறது. அப்பலாச்சியன் மலைப் பகுதியிலும் ராக்கீஸ் மலைப் பகுதியிலும் கிடைக்கும் இரும்புக் கனியைவிடத் தரத்தில் உயர்ந்த இரும்புக் கனி சுப்பீரியர் ஏரிப் பகுதியில் கிடைத்தது. நிலக்கரியும் இரும்பும் ஒருங்கே கிடைத்தமையால், இரும்பு-எஃகு தொழிற்சாலை பிட்ஸ்பர்க், பர்மிங்காம் என்னும் பகுதிகளில் முதலில் ஏற்பட்டது. பின்னர், சுப்பீரியர் ஏரியில் பெருமளவில் இரும்புக் கனிகள் கிடைத்தமையால், இரும்பு-எஃகு தொழிற்சாலையின் மையம், பஃப்ஃபலோ ((Buffalo), கிலீவ்லாண்டு (Cleveland), சிக்காக்கோ, காரி (Gary) முதலிய ஏரிக் கரைப் பகுதிகளுக்கு நகர்ந்து சென்றது. நல்வினையின் பயனாய் அமெரிக்காவில் நிறைய இரும்பு கிடைக்கிறது. உலகத்தின் மற்றப் பகுதிகளில் கிடைக்கும் இரும்பின் அளவுக்கு ஏறக்குறைய சமமாக அமெரிக்காவிலும் இரும்பு கிடைக்கிறது. எனினும், உயர்தர இரும்புக் கனிகள் குறைந்துவிட்டமையால், வெனிசூலாவிலிருந்தும் கனடாவிலிருந்தும் மற்றப் பகுதிகளிலிருந்தும் ஐக்கிய அமெரிக்கா இரும்பை இறக்குமதி செய்தது. மேலும், மாங்கனீஸ் (manganese), நிக்கல் (nickel), வனடியம் (vanadium), குரோம் (chrome), டங்ஸ்டன் (tungsten) போன்ற இரும்பு உலோகக் கலவைகளும் இப்பகுதியில் சிறிய அளவில் கிடைத்தன. சில

இடங்களில் அறவே கிடைக்கவில்லை. இத்தகைய உலோகக் கலவைகள் தொழில் துறையைச் சார்ந்த வாழ்க்கையில் மிகவும் பயன்பட்டன.

பழங்காலத்தில் இரும்புக்கு முன்னர்ச் செம்பையே பயன் படுத்தினர். செம்பினைக் கம்பியாக இழுத்து எளிதில் பயன் படுத்த முடியும். எனவே, தொன்மைக்கால உலகில் பல்வேறு நிலையில் செம்பினைப் பயன்படுத்தினர். தந்தியும் தொலைபேசியும் கண்டுபிடிக்கப்பட்டு, மனித வாழ்க்கையில் மின்னியக்கம் பெரி தும் பயன்படத் தொடங்கிய காலம் முதற்கொண்டு, மின்னூடு கடத்தியாகப் (conductor) பயன்படுவதற்குரிய எல்லாவித இயல்பு களையும் செம்பு பெற்றிருந்ததால், அதற்கு ஒரு புதிய முக்கியத்வம் ஏற்பட்டது. செம்பினைத் துத்தநாகத்துடன் கலந்து பித்தளையை யும், வெள்ளீயத்துடன் கலந்து வெண்கலத்தையும் உருவாக்குவ தால், செம்பின் பயன் இன்னும் பெருகியது. செம்பினைத் தோண்டி எடுப்பதில் ஏற்பட்ட முன்னேற்றங்களினாலும், அத னுடைய தேவை பெருகியதாலும், ஆண்டொன்றுக்கு உலகத்தில் அதனுடைய உற்பத்தி 1801-ல் 9,000 டன்களாக இருந்து, 1957-இல் 38,70,000 டன்களாக உயர்ந்துள்ளது. மொத்த உலக உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கினை ஐக்கிய அமெரிக்கா உற்பத்தி செய்கிறது.[21] மொத்த அமெரிக்க உற்பத்தியில், நான்கில் மூன்று பங்கினை அரிசோனா, யுட்டா, மான்டானா, நிவாடா, நியூ மெக்சிகோ ஆகிய மாநிலங்கள் உற்பத்தி செய் கின்றன. வேறு எந்த நாட்டிலும் உற்பத்தியாகும் செம்பைவிட அதிகமாகவே அரிசோனாமட்டும் ஓர் ஆண்டில் உற்பத்தி செய் கிறது. பனிக்கட்டிகள் நிறைந்த மேல் மிச்சிகன் மாவட்டங் களில்தாம் தூய்மையான செம்பு வண்டல்கள் கிடைக்கின்றன. ஆனால், அமெரிக்கச் செம்பு உற்பத்தியில் பாதி அளவு அரிசோனா வில் கிடைக்கிறது. மான்டானா, நிவேதா, யுட்டா பகுதிகளில் செம்பு வண்டல்கள் நிறையக் கிடைத்தமையின், மான்டானாவில் புட்டே (Butte), ஆனகொண்டா (Anaconda) என்னும் நகரங்களும், யுட்டாவில் பிங்கம் (Bingham) என்னும் நகரமும், அரிசோனா வில் பிஸ்பி (Bisbee), மொரன்சி (Morenci), குளோப் (Globe), ஜிரோமி (Gerome) என்னும் நான்கு ஊர்களும் ஏற்பட்டன.

21 செம்பு உற்பத்தியில் மட்டுமன்றிச் செம்புக் கனிகளைச் செப்பமுறத் தூய்மைப்படுத்துவதிலும் ஐக்கிய அமெரிக்கா தலைசிறந்து விளங்கியது. மற்ற நாடுகளிலிருந்து நிறையச் செம்புக் கனிகளையும் இறக்குமதி செய்தது. சிலி (Chile), செம்புக் கனிகளைப் பெருத்த அளவில் உற்பத்தி செய்வதில் இரண்டா வது இடம் வகிக்கிறது.

ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்த நாட்டில் புதிதாக ஏற்பட்ட தொழில் துத்தநாக உற்பத்தியாகும். 1873-ல்தான் முதன்முதலில் துத்தநாகம் உற்பத்தி செய்யப்பட்டது. துத்த நாகத்தை அளிப்பதில் ஐக்கிய அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய இரு நாடுகளுமே தலைசிறந்து விளங்குகின்றன. செம்பு, வெள் ளீயம் ஆகியவற்றில் உலோகக் கலவையாகத் துத்தநாகம் பயன் படுகிறது; மேலும், வர்ணம் பூசும் தொழிலிலும் அது பயன்படுகி றது. இரும்பும் எஃகும் துருப்பிடிக்காமல் இருப்பதற்காகவும் துத்த நாகம் பூசப்படுகிறது. துத்தநாகம் கலந்த உலோகக் கனிகளை 19 மாநிலங்கள் வெட்டி எடுத்தபோதிலும், அக்கனிகளின் ஐந் தில் இரண்டு பங்கு, இடாஹோ (Idaho), கொலராடோ (Colorado), மான்டானு, நியூயார்க், டென்னசி, யுட்டா ஆகிய பகுதிகளி லிருந்தே வெட்டி எடுக்கப்படுகின்றன.[22]

ஈய உற்பத்தியிலும் ஐக்கிய அமெரிக்கா தலைசிறந்து விளங்கு கிறது. மொத்த உலக உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கினை ஐக்கிய அமெரிக்கா உற்பத்தி செய்கிறது. ஈயத்தை 22 மாநிலங்கள் உற்பத்தி செய்கின்றன. பெரும்பாலான மாநிலங்களின் உற்பத்தி மிகக் குறைவே. ஈய வார்ப்பு உற்பத்தியில் நான்கில் மூன்று பங்கு மிசௌரி, இடாஹோ, யுட்டா, கொலராடோ பகுதிகளி லிருந்து கிடைக்கின்றன. தொழில் மயமாக்குதலின் காரணமாக, ஈயத்தின் தேவை பெருகியது; அதன் எண்ணற்ற உலோகக் கலவைகளின் தேவையும் பெருகியது. மற்ற உலோகங்களைப் போலவே, முதல் உலகப் போரிலும் இரண்டாம் உலகப் போரிலும் ஈய உற்பத்தி பெருகியது. சமாதான காலத்தில் ஈயத்தின் மூன்றில் ஒரு பகுதி வர்ணத்திற்குரிய வெள்ளீயமாக (white lead) ஆகிறது. தொழில் வளர்ச்சிக்குரிய மற்றத் தாதுப் பொருள்களைப் போலவே, உற்பத்திப் பெருக்கம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. 1860-ல் 15,600 டன்களாகவிருந்து 1957-ல் 5,38,500 டன்களாக உயர்ந்துள்ளது.

எஞ்சியுள்ள உலோகங்களில் அலுமினியம் மிகவும் முக்கிய மானது. அலுமினியத்திற்கு உறுதியான அமைப்பும் வலுவும் உண்டு; அதே நேரத்தில் பளுக் குறைந்து மெல்லியதாகவும் துருப்பிடிக்காத தன்மை உடையதாகவும் உள்ளது. எனவே, மற்ற உலோகங்களைவிட அலுமினியம் சிறந்ததாகும். குறிப்பாகச் சமையலுக்குரிய பாத்திரங்கள் செய்வதற்கும் ஆகாய விமானங்கள்

[22] துத்தநாகத்தை வார்த்தெடுக்கும் உற்பத்தி முறை மூலம், 1956-ல் 9,84,000 டன்கள் உற்பத்தியாயின. இதன் மதிப்பு ஏறத்தாழ $27,00,00,000 ஆகும்.

செய்வதற்கும் இது பயன்படும். அலுமினியம் தயாரிப்பதற்குரிய உலோகக் கனியாகிய பாக்சைட் (bauxite), அர்கான்சஸ், ஜார்ஜியா, அலபாமா, டென்னசி ஆகிய இடங்களிலுள்ள சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுக்கப்படுகின்றது. ஆனால், சாதாரண நாட்களில், ஆங்கிலேயக் கயானு, டச்சுக் கயானு, பிரிட்டிஷ் ஜமைக்கா முதலிய இடங்களிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றது. தொலைவிலுள்ள இடங்களுக்கெல்லாம் பாக்சைட் கப்பல் மூலம் அனுப்பப்பட்டது; அலுமினா (Alumina) என்னும் வெள்ளைத் தூளாக மாற்றப்பட்டது. பின்னர் அலுமினாவை மின்சாரம் மலிவாகக் கிடைக்கக்கூடிய இடத்திலுள்ள அலுமினியத் தொழிற்சாலைக்கு அனுப்புகின்றனர். இரண்டாம் உலகப் போரின்போது பாக்சைட் நிறைய வெட்டி எடுக்கப்பட்டது; அலுமினியமும் நிறைய உற்பத்தி செய்யப்பட்டது. டென்னசி, கொலம்பியா நதிகளிலும் மற்ற நதிகளிலும் புதிய நீர் மின்சாரத் திட்டங்கள் ஏற்பட்டமையினால், பாக்சைட் உற்பத்தியும் அலுமினிய உற்பத்தியும் பெருகலாயின.

விலை மதிக்கொணாத உலோகங்களாகிய பொன்னும் வெள்ளியும் நம்முடைய தொழில் துறையைச் சார்ந்த வாழ்க்கையில் அவ்வளவு முக்கியத்துவத்தைப் பெறவில்லையென்றாலும், நமது மக்களுடைய குடிபெயர்ப்பு, புதிய காமன்வெல்த்துகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றை விளக்கும் நம்முடைய பொருளாதாரச் சமூக வரலாற்றில் அப் பொன்னும் வெள்ளியும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.[28] 1848-க்கு முன்னர் ஐக்கிய அமெரிக்காவில் வெட்டி எடுக்கப்பட்ட பொன் மிகக் குறைவுதான். (1792 முதல் 1847 வரையில் கிடைத்த பொன் 11,87,170 அவுன்சுகள் உள்ள தூய பொன்னே.) 1848-ல் கலிஃபோர்னியாவில் பொன் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எனவே, 1852-ல் உலகத்தில் பொன் உற்பத்தி நான்கு மடங்காகியது. தென் ஆஃப்ரிக்கா 1898-ல் முன்னணிக்கு வரும்வரையில் ஐக்கிய அமெரிக்காதான் பொன் உற்பத்தியில் முன்னணியில் நின்றது. 1860-களில் கலிஃபோர்னியாவில் பொன் உற்பத்தி குறையத் தொடங்கியது. எனினும், 1859-ல் நிவாடாவில் உள்ள காம்ஸ்டாக் லோடு (Comstock Lode) என்னும் இடத்தில் தங்கச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டமையின், ஐக்கிய அமெரிக்காவின் தங்க உற்பத்தி குறைந்துவிடவில்லை. காம்ஸ்டாக் லோடில் (1859-1869) தங்க உற்பத்தி உச்சகட்டத்தில் இருந்தபோது, ஆண்டு உற்பத்தி சராசரி மூன்று மில்லியன் தூய அவுன்சு

[28] 10, 18 அதிகாரங்களைக் காண்க.



ஐக்கிய அமெரிக்காவில் உள்ள தொழில் துறைப் பகுதிகள்

களாக இருந்தன. இந்த உற்பத்தி எழுபதுகளில் (seventies) குறைந்தது; அலாஸ்காவில் தொண்ணூறுகளில் (nineties) பொன் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்படும் வரையில், பொன் உற்பத்தி பழைய உச்ச நிலைக்கு வரவில்லை. இந்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில், ஆண்டு உற்பத்தி நான்கு மில்லியன் தூய அவுன்சுகளுக்கும் மிகுதியாகவே இருந்தது. பின்னர் 1930-ல் உற்பத்தி இரண்டு மில்லியன்களுக்கும் சிறிது குறைவாகவே இருந்தது. நாணயச் சீர்திருத்தக் காலத்தில் புதுத் தீர்வுச் (New Deal) சட்டத்தின் மூலம் தங்கத்தின் விலையைச் செயற்கை முறையில் அதிகப்படுத்தினர். இதன் காரணமாக, 1940-ல் உற்பத்தி ஐந்து மில்லியன் தூய அவுன்சுகளாகப் பெருகியது. 1957-ல் 18,00,000 தூய அவுன்சுகளாக உற்பத்தி பெருகியது. தென் டெகோட்டா (South Dakota), யுட்டா, அலாஸ்கா, கலிஃபோர்னியா, அரிசோனு ஆகிய பகுதிகளே தங்கம் நிறைந்த பகுதிகளாகும். இவ்வுலோகத்தில் மூன்றில் இரண்டு பகுதியைப் பணமாக உபயோகப்படுத்துகின்றனர்; அல்லது பணத்தின் மதிப்பைக் காக்கும் நிதியாகப் பயன்படுத்துகின்றனர். மிகுந்த பொன்னைப் பல்வேறு வர்த்தகக் காரியங்களுக்குப் பயன்படுத்துகின்றனர்.

உலக வெள்ளி உற்பத்தியில் ஐக்கிய அமெரிக்கா இரண்டாம் இடம் வகிக்கிறது. காம்ஸ்டாக் லோடில் வெள்ளிச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், இந்த நாட்டின் வெள்ளி உற்பத்தி மிகவும் பெருகியது வெள்ளிக்குரிய வர்த்தகப் பயன்கள் பெருகிய போதிலும், அதனைப் பரிமாற்றச் சாதனமாகப் பயன்படுத்துதல் குறையத் தொடங்கவே, தொண்ணூற்றுக்குமேல் அதன் விலை படிப்படியாக விழத்தொடங்கியது. 1850 முதல் 1860 முடிய உள்ள பத்தாண்டுகளில் வெள்ளி உற்பத்தி ஏறக்குறைய 5,03,000 தூய அவுன்சுகளாகும். 1920-ல் ஆண்டு உற்பத்தி 5,30,000 அவுன்சுகளிலிருந்து 7,30,00,000 அவுன்சுகள் முடிய இருக்கும். பொன்னைப் போலவே, வெள்ளிக்கும் செயற்கை முறையில் அதிகமான விலையை அரசாங்கம் நிர்ணயித்து, அதன் உற்பத்தியை மூப்பதுகளின் பின் பகுதியில் பெருக்கியது.[24] நடைமுறையில் வெள்ளியை விலை மதிக்கொணாத உலோகமாகக் கருத முடியாது.

ஏழு வெள்ளி மாநிலங்களின் செனட்டர்கள், முக்கியத்துவம் குறைந்த வெள்ளியின் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும், அதன்

[24] 1956-ல் உற்பத்தி கிட்டத்தட்ட 8,89,48,000 அவுன்சுகளாகும். இதன் மதிப்பு $8,52,50,000 ஆகும்.

விலை இறங்கிவிடாமல் பாதுகாக்கவும் காங்கிரசில் வீற்றிருப்பதனால்தான், வெள்ளியின் விலை அதிகமாக உள்ளது. அவர்கள் காங்கிரசில் இல்லையெனில், வெள்ளியின் விலை இறங்குவதோடன்றித் தொழில் துறையில் அதன் பொருளாதாரப் பயன் மிகுந்து நாட்டிற்கு நலன் ஏற்பட்டிருக்கும்.

நீர்வளங்கள்

தம்முடைய பொருளாதார வரலாற்றிலும் இன்றையப் பொருளாதார வாழ்க்கையிலும் நீரின் சிறப்பினை வலியுறுத்தத் தேவையில்லை. தானியங்களை உற்பத்தி செய்ய நீர் பயன்படுகிறது; மீன்களும், பயன்படும் தோலினை உடைய மிருகங்களும் வாழ்வதற்கு நீர் நிறைந்த இடம் பயன்படுகிறது; வர்த்தகப் போக்குவரத்துக்கு ஏற்ற, மலிவான சாதனமாகவும் பயன்படுகிறது; கணக்கிலடங்காப் பல்வேறு மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மின்சாரத்தை வழங்கும் சாதனமாகவும் பயன்படுகிறது. மின்சார உற்பத்திக்கு மட்டுமன்றிப் பல்வேறு வகையான பொறிவழித் தொழில்களுக்கும் நிறைய நீர் தேவைப்படுகிறது. குளிர்ச்சிப் படுத்தலுக்குமட்டும் குறைந்தபட்சம் 75 சதவீதம் நீர் தேவைப்படுகிறது. ஒரு பீப்பாய் எண்ணெய் தயாரிக்கப் பதின்மூன்று பீப்பாய்களுக்குமேல் நீர் தேவைப்படுகிறது. ஒரு டன் எஃகு தயாரிக்க 65,500 காலன்கள் நீர் வேண்டும். 67,000 காலன்கள் நீர் இருந்தால்தான் ஒரு டன் சல்ஃபேட் காகிதம் (sulfate paper) செய்ய முடியும். நீர் அளவுக்கு மீறிக் கிடைக்கக்கூடியதுமன்று; தீர்ந்துபோய்விடக் கூடியதுமன்று. மக்கள் தொகை பெருகியதாலும், தொழிற்சாலைகள் வளர்ந்ததாலும் நீரைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாயிற்று. குறிப்பாகக் கடற்கரையின் அருகிலுள்ள உலர்ந்த பூமிகளில் நீரிலிருந்து உப்பை அகற்றும் சோதனைகள் வெற்றி பெற்றன. உப்பை அகற்றும் இந்த முறைக்கு அதிகச் செலவு செய்யவேண்டி இருந்ததால், இம்முறையினைப் பெரிய அளவில் பயன்படுத்த முடியவில்லை; என்றாலும், எதிர்காலத்தில் நீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க இந்த முறை உதவும்.

குடியேற்ற நாளில் உள்நாட்டு வர்த்தகப் போக்குவரத்திற்கு நதிகளே முக்கியமாகப் பெரிதும் பயன்பட்டன. ரயில்பாதைகளும் பெரும் சாலைகளும் ஏற்படும் வரையில், போக்குவரத்திற்கு நதிகளே தொடர்ந்து உதவியாக இருந்தன. தொழிற் புரட்சியின் துவக்க காலத்தில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான முக்கிய இயக்கு சக்தியினை (motive power) நீரே வழங்கியது. ஆனால்,

எண்பதுகளில் நீராற்றலைவிட நீராவிமூலம் கிடைக்கும் ஆற்றலே அதிகமாகப் பயன்பட்டது. 1900-ல் பொறிவழித் தொழிற் சாலைகளில் பயன்பட்ட சக்தியில் நான்கில் மூன்று பங்குக்கு மேல் நீராவியிலிருந்து உண்டாகியது. இதற்குக் காரணம் நிலக்கரி வளங்கள் பெருகியதே யாகும். முக்கியமான பல இடங் களில் தொழிற்சாலைகள் ஏற்பட நிலக்கரி வளங்கள் பெருகியதே காரணமாகும். கடந்த ஐம்பது ஆண்டுகளில் இச் சூழ்நிலை மிகவும் மாறியுள்ளது. மின்சார உற்பத்தி விரைவில் பெருகி வளர்ந்ததாலும், மின்சார சக்தியை எல்லா இடங்களுக்கும் வழங்க முடிந்தமையாலும் மின்சார உற்பத்திக்கு அடிப்படையாய் உள்ள நீருக்கு மீண்டும் முக்கியத்துவம் ஏற்பட்டது.

மின்சாரத்தின் பெரும்பகுதி உற்பத்தியாவதற்கு நீராற்றல் காரணமன்று; நிலக்கரி அல்லது வாயுதான் காரணமாயிற்று. இருந்தபோதிலும், மின்சார உற்பத்தியில் நீராற்றல் பெரிதும் பயன் பட்டது. தொண்ணூறுகளின் (1890) பிற்பகுதியில் நயாகரா (Niagara) நீர்வீழ்ச்சியின் ஆற்றலைப் பயன்படுத்தத் தொடங்கினர். அம்முயற்சியில் வெற்றிபெறவே, வேறு மிகப்பெருந் திட்டங் களைச் செயல்படுத்த முனைந்தனர். ஆகவே, மிகவும் நெருக்க மாகக் குடியேறிய பகுதிகளிலெல்லாங்கூட மிகப்பெரிய மின் சாரக் கம்பிகளின் பின்னலைக் காணலாம். நீர் மின்சார வளர்ச்சி, குறிப்பாக நான்கு பகுதிகளில் முன்னேறியுள்ளது: மெர்ரிமாக் (Merrimac), கனெக்டிகட் (Connecticut), ஹட்சன் நதிகளின் மீதுள்ள வடஅட்லான்டிக் பகுதி; பெரும் ஏரிகளில் கலக்கும் நயாகரா நதிமீதும், மற்ற நதிகளின் மீதும் உள்ள செயின்ட் லாரன்சு பகுதி; கரோலினு பிட்மான்டில் (Carolina Piedmont) உள்ள காட்டாபா (Catawba) நதி மீதும் மற்ற நதிகளின்மீதும் உள்ள பகுதிகள், வடபசிபிக்கில் உள்ள நதிகளின் அருகேயுள்ள பகுதிகள், 1935-ல், மொத்த உலக உற்பத்தியில் கிட்டத்தட்ட பாதியளவு உள்ள 2,50,00,000 குதிரையாற்றலை இந்த நாடு உற்பத்தி செய்தது. நீராற்றலைப் பயன்படுத்தும் வழிவகைகளைப் பொறுத்தவரையில், இந்த நாடு குழந்தைப் பருவத்திலேயே இருந்தது. கொலராடோ நதியின் மீதுள்ள பவுல்டர் அணைக்கட் டும், கொலம்பியா நதிமீதுள்ள பொன்னிவில் (Bonneville), கிராண்ட் கூலி (Grand Coulee) அணைக்கட்டுகளும், டென்னசி யின் பல பகுதிகளில் உள்ள அணைக்கட்டுகளும் புதிய, பெரிய மின்சாரத் திட்டங்களை உருவாக்கின. இந்த நாட்டில் மின்சார சக்தி மிகப்பெரும் அளவில் பயன்படக்கூடும் என்பதையே இத் தகைய உண்மைகள் விளக்குகின்றன. செயின்ட் லாரன்சு ஏரி மீது எழுப்பியுள்ள பார்ன்ஹார்ட் ஐலண்டு மின்னியக்க அணைக்

கட்டுதான் (Barnhart Island Power Dam) 1959-ல் மிகவும் முக்கியமான நீர்மின்சார அணைக்கட்டுத் திட்டமாகும். எனவே, இவ்வணைக்கட்டுப் பகுதியிலுள்ள அன்டாரியோ (Ontario) நியூயார்க் மாநிலங்களில் இருபத்திரண்டு ஜெனரேட்டர்கள் (Generators) ஏற்பட்டுள்ளன. கிடைக்கக்கூடிய 'நீராற்றலில் ஒரு பாதிக்கும் குறைவாகவே இந்த நாட்டில் பயன்படுத்தியுள்ளனர் என்று கருத இடமுண்டு.

இயற்கை வளங்களைப் பற்றி மீண்டும் மதிப்பிடுதல்

வரலாற்றிலேயே ஐக்கிய அமெரிக்காவைப் போல இயற்கை வளங்களை நிறையப்பெற்ற நாடு வேறு கிடையாது. தொழில் மயமாகும் ஒரு நாட்டிற்குத் தேவையான எல்லாவிதமான தாதுப்பொருள்களையும் ஐக்கிய அமெரிக்கா நிரம்பப் பெற்றிருந்தது. தணிந்த வெப்பமுள்ள பகுதிகளில் விளையக்கூடிய உணவுப் பண்ட வகைகளைச் செழிப்புள்ள பள்ளத்தாக்குகளிலும் அகன்ற சமவெளிகளிலும் உற்பத்தி செய்து, தற்பொழுதுள்ள மக்கள் தொகையைவிட அதிகமான மக்கள் கூட்டத்தையும் வாழ்விப்பதற்கு ஐக்கிய அமெரிக்காவினால் முடியும். நிலக்கரி, பெட்ரோலியம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் ஆற்றல் வளங்களுடன், நீராற்றல் வளமும் அந்த நாட்டில் பெருகிக் கிடக்கிறது. மூன்று நூற்றாண்டுகளுக்குத் தனித்தியங்கும் பொருளாதார உலகமாக ஐக்கிய அமெரிக்கா திகழ்ந்தது. இன்று உலகிலேயே மிகவும் செல்வமும் செழிப்பும் கொழிக்கும் நாடாக ஐக்கிய அமெரிக்கா தலை நிமிர்ந்து நிற்கிறது. எந்த நாடும் வழங்காத உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைத் தன் மக்களுக்கு வழங்கியுள்ளது; உணவு, விறகு, உறையுள், துணிமணிகள் இவற்றைப் பொறுத்தவரையில் மற்ற நாடுகளைவிட அதிகமான உண்மைக் கூலியைத் (real wages) தன் தொழிலாளர்களுக்கு அளித்துள்ளது.

மூலப்பொருள்களின் அடிப்படையில்தான் ஐக்கிய அமெரிக்காவில் செல்வமும் செழிப்பும் ஏற்பட்டன. இந்த அடிப்படை விரைவில் தகர்ந்துகொண்டிருந்தது. மூலப்பொருள்கள் ஏராளமாகக் கிடைத்ததால், பயன்படுத்தும்பொழுது அவற்றை மிகவும் பாழ்படுத்தினர். பூமியின் வளத்தை அழித்தனர்; காடுகளைப் பொறுப்பற்ற முறையில் வெட்டிச் சாய்த்தனர்; தாதுப்பொருள்களை வீணாக்கினர். இயற்கை வளங்களின் சத்துப் பகுதிகள் அனைத்தும் வெகுகாலத்திற்கு முன்னரே வாரி வழித்து எறியப்பட்டன. நமது நாட்டுப் பொருளாதாரம் இயற்கை வளங்களின் அளவிற்கு வளர்ந்திருந்தது. பல முக்கியமான வகைகளில்,

அவ் வளங்களின் அளவையும் மீறிற்று. இயற்கை வளங்களில் உபரிநாடாக இருந்த நாம் பற்றுக்குறை நாடாக இறுதியில் மாறி னேம். ஒரு காலத்தில் செம்பு, ஈயம், துத்தநாகம் ஆகிய உலோகங்களைப் பெருமளவில் ஏற்றுமதி செய்தோம். ஆனால், இப் பொழுது அவ் வுலோகங்களைப் பெருமளவில் இறக்குமதி செய் கிறோம். ஒரு காலத்தில் இரும்பு, பெட்ரோலியம் இவற்றைப் பொறுத்தவரையில் தன்னிறைவு பெற்றிருந்தோம்; ஆனால், இன்று நம்முடைய தேவையின் பெரும்பகுதியைப் பூர்த்தி செய்து கொள்ள வெளி நாடுகளை எதிர்பார்த்து நிற்கிறோம். இன்று மெக்னீஷியம் (magnesium), மோலிப்டினம் (molybdenum) ஆகிய உலோகங்களைத் தவிர மற்ற உலோகங்கள் அனைத்திற்கும் வெளி நாடுகளை ஓரளவிற்கு எதிர்பார்த்துக் கிடக்கிறோம். மர ஏற்றுமதி நாடாகவிருந்து, இன்று மர இறக்குமதி நாடாக மாறியுள்ளோம். ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் மூலப்பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் ஏற்றுமதி செய்தோம்; இன்று அவற்றை இறக்கு மதி செய்கிறோம். 1820-ல் நம் முடைய ஏற்றுமதிகளில் 60 சதவீதத்திற்குமேல் கரடு முரடான சாமான்களாகும். 1940-ன் பிற்பகுதியில் 15 சதவீதமேயாகும்; 1820-ல் ஏற்றுமதியான முற்றுப்பெற்ற பொறிவழிப் பண்டங்கள் 6 சத வீதமாகும். ஆனால், இன்று 50 சதவீதத்திற்கு மேலாகும். இறக்குமதிகளில் எதிர்மாறான திருப்பம் ஏற்பட்டது.

எதிர்காலம் எவ்வாறு அமையும்? பல ஆண்டுகளுக்குப் பெருகிவரும் மக்கள் கூட்டத்தின் சாதாரணத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உணவுப் பண்டங்கள் நிறையக் கிடைக்கும்; மின்சார வளங்கள், குறிப்பாக நிலக்கரி மூலமும், நீர் மூலமும் உண்டாகும் மின்சார வளங்கள் நிறையக் கிடைக்கும். மேலும், அநேகத் தொழில் துறைத் தேவைகள், குறிப்பாக விவ சாயப் பண்டங்களின் அடிப்படையில் அமைந்த தொழில் துறைத் தேவைகள் நிறைவுறும். இவ்வளவுங்கூட, விஞ்ஞான முறையில் இயற்கை வளங்களைக் காத்து நல்ல முறையில் பயன்படுத்து வதைப் பொறுத்ததாகும். பலவிதத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவும், சில மூலப்பொருள்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தவிர்க்கவும் கலப்புமுறைப் பண்டங்களை (synthetic products) உற்பத்தி செய்வது நலம். ஆரம்பகாலத் தன்னிறைவின் சிறந்த சின்னங்களாகத் திகழும் பெட்ரோலியம், இரும்பு ஆகிய உலோகங்கள் உட்பட எல்லாவித தாதுப் பொருள்களைப் பொறுத்தவரையிலும், நமக்குத் தேவையான சில மூலப்பொருள்களின் சில பகுதிகளைப் பெறுவதற்கு வெளி நாடுகளை நாம் எதிர்பார்த்தே இருக்கவேண்டும். முழுத் தன்னிறைவு

காலம் முடிவுற்றது. உலகத்தின் மற்றப் பகுதிகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருக்கவேண்டிய நிலையையே எதிர்காலம் காட்டுகிறது.

புள்ளிவிவரக் கணக்கைப்பற்றிய குறிப்பு

பொருளாதாரத்தை ஆய்கின்ற எந்த நூலிலும் புள்ளியியலைப் பெரிதும் பயன்படுத்தியே தீரவேண்டும். எனவே, புள்ளியியலின் தன்மையை நன்கு புரிந்துகொள்ளவேண்டும். புள்ளியியல் முறையின் அடிப்படைக் கூறுகள் (Elements of Statistical Method, p. 22) என்னும் நூலில் டபிள்யூ. ஐ. கிங் (W. I. King) என்பார் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார் : 'நிறைந்த உண்மைகள் கொண்ட பெருந்தொகுதியை ஒரு பொதுநிலையிலிருந்து நோக்கி, எண்ணிக்கையில் பெருகியும் குழம்பியும் உள்ள தனித்தனி நிகழ்ச்சிகளின் வரிசைகளை எளிமைப்படுத்திச் சாமான்யர்களும் புரிந்துகொள்ளும் வகையில் சுருக்கி, ஓர் அமைப்பில் தருவது புள்ளியியலின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.' இதனை நிறைவேற்றக் கணக்கியலின் துணைகொண்டு பொருளாதாரச் சூத்திரங்களையும் (formulas), விஞ்ஞான முறையிலமைந்த புள்ளியியலையும் வளர்க்கவேண்டும். இவற்றின் துணைகொண்டு மக்கள் தொகைக் கணிப்பு (census) நிறுவனமும், மற்ற நிறுவனங்களும் சேகரிக்கும் வருணனைப் புள்ளியியலைப் (descriptive statistics) புரிந்துகொள்ள முயலவேண்டும்.

புள்ளிவிவரத் திட்ட நுட்பத்தைப்பற்றி ஒன்று சொல்லவேண்டும். நாம் ஆராயும் பொருளில் முழுத் திட்பநுட்பத்தைக் காண இயலாது. ஆனால், இந்தத் துறையில் கூடுமானவரையில் செய்தியைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே நோக்கமாதலால், முழுத் திட்பநுட்பத்தைப் பெறமுடியாது எனினும், ஒப்பிட்ட திட்ப நுட்பத்தையேனும் (relative accuracy) அடைய முயலவேண்டும். புள்ளிவிவரங்கள் வெறும் மதிப்பீட்டுப் பட்டியல்களேயன்றித் துல்லியமான முறையில் சேகரிக்கப்பட்ட கணக்கீடுகள் அல்ல. உதாரணமாக, எவ்வளவு புஷல்கள் கோதுமை உற்பத்தியாயின என்பதைப் பற்றிச் சுமாரான மதிப்பளவுதான் கிடைக்கும். மேலும், பல்வேறு வகையான புள்ளிவிவரங்கள் இருத்தலினால் ஒவ்வொன்றையும் ஒவ்வோர் அளவுக்குத்தான் ஏற்றுக்கொள்ள முடியும். சட்டம் வலியுறுத்துவதால், சாவுகளைப் பற்றி வெளிவரும் எண்ணிக்கை சரியாக இருக்கும். ஆனால், சாவுகளுக்கான காரணங்களைப்பற்றிய பட்டியல் சரியாக இருக்காது. புள்ளிவிவரச் சேகரிப்பில், பின்னங்களாக வந்து முடியும்

எண்களைவிட முழு எண்கள் துல்லியமாக விளங்குவதுபோல் அமையும். குறிப்பாகச் சில செய்திகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, வெறும் இலக்கங்களையே கவனித்துக்கொண்டிருந்தால் முக்கியமான பகுதியை நழுவவிட்டுவிடுவோம்.

இவற்றிற்கு எல்லாம் மேலாக, இன்று நிதிபற்றிய புள்ளி விவரங்களைப் பரிசீலனை செய்து பயன்படுத்தும்பொழுது, குறிப்பாக மாணவர்கள் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும். உதாரணமாக, விலைவாசி நிலைமைகளுடன் தொடர்புபடுத்தாமல் 1935ஆம் ஆண்டின் கூலிகளை அல்லது சம்பளங்களை 1955ஆம் ஆண்டின் கூலிகளுடன் அல்லது சம்பளங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது என்பது பொருளற்றதாகும். எல்லாவித மான பண்டங்களையும் பொறுத்தவரையில் கடந்த இருபதாண்டு களில் வாழ்க்கைச் செலவு 100 சதவீதம் பெருகியுள்ளது. வாழ்க் கைத்தரம் போன்ற பிரச்சினைகளில் ஒன்றையொன்று ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது பணவீக்கப் பிரச்சினை ஆர்வமுள்ள மாணவர் களைக் குழப்பிவிடும்.

புள்ளிவிவர ஆராய்ச்சிக்குச் செய்திகளை எவ்வாறு தேர்ந் தெடுப்பது என்பது பற்றிச் சுருக்கமாகப் 'பொருளாதாரப்புள்ளியிய லின் ஆய்வுரை', (செப்டம்பர், 1920-ஜனவரி, 1921) என்னும் நூலில் (The Review of Economic Statistics Sep., 1920—Jan., 1921) விளக்கப்பட்டுள்ளது. பின்பற்றிய வழிவகைகளைப்பற்றியும் தகவல்களைச் சேகரிக்க உதவும் மூலங்களைப்பற்றியும் முன்னுரை யில் காணலாம். வில்ஃபர்ட் ஐ. கிங் (Willford I. King) எழுதிய 'புள்ளிவிவர முறையின் கூறுகள்' என்னும் நூலில் [Elements of Statistical Method (1913), Parts I & II] புள்ளியியலின் தன்மையைப் பற்றித் தெளிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. டபிள்யூ. எப். அக்பர்ன் (W. F. Ogburn), அலெக்சாண்டர் கோல்டன் வீசர் (Alexander Golden Weiser) ஆகியோர் எழுதிய 'சமூக விஞ்ஞா னங்களும், அவற்றின் உள் தொடர்புகளும்' (The Social Sciences and Their Interrelations, 1927) என்னும் நூலில், பொருளாதாரம், சரித்திரம், அரசியல், சமூகவியல் ஆகியவற்றைச் சார்ந்த புள்ளி யியலின் பங்கைப்பற்றிக் கருத்து நிறைந்த கட்டுரைகள் உள்ளன

இப் புத்தகத்திலுள்ள புள்ளிவிவரங்களின் பெரும்பகுதி அரசாங்க மூலங்களிலிருந்தே சேகரித்துள்ளோம். விளக்கமான அறிக்கைகளைத் தயாரிக்கும் புள்ளிவிவரப் பிரிவுகளைக் கொண்ட பெடரல் (Federal) இலாக்காக்கள் உள்ளன. தகவல்களைச் சேக ரிக்கும் நிரந்தர அலுவலர்களைக் கொண்ட மக்கள் தொகைக்

கணிப்புக் கழகமும் (Bureau of Census) உள்ளது. வர்த்தக இலாக்காவைச் சார்ந்த சென்சஸ் கழகம் ஆண்டுதோறும் வெளியிடும் 'ஐக்கிய அமெரிக்காவின் புள்ளிவிவரப் பொழிப்பில்' (The Statistical Abstract of the United States) வேண்டிய அளவுக்குப் புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன. ஐக்கிய அமெரிக்காவின் சரித்திர வகையைச் சார்ந்த புள்ளிவிவரங்கள் (Historical Statistics of the United States, 1789-1945 (1949), '1952 வரையில் சரித்திர வகையைச் சார்ந்த புள்ளிவிவரங்களின் தொடர்ச்சி' (Continuation to 1952 of Historical Statistics) ஆகியவற்றை சென்சஸ் கழகம் தயாரித்து வரலாற்றுசிரியர்களுக்கு உதவியுள்ளது. 'தொழிலதிபர்களின் சென்சஸ் சுருக்கமும்' (The Abstract of the Census of Manufacturers), 'சென்சசின் சுருக்கமும்' (The Abstract of the Census) 'சென்சசை' (The Census) விடச் சிறியவைகள்தாம்; ஆனால், முக்கியமான தகவல்களைச் சுருக்கமாகத் தந்துள்ளன.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

மெக்கார்டி, ஹெச். ஹெச். (McCarty, H. H.), 'The Geographic Basis of American Economic Life', Chap. I.

செம்பிள், ஈ. சி. (Semple, E. C.), and Jones, C. F., 'American History and its Geographic Conditions', Chaps. 1—3.

ஹல்பர்ட், ஏ. பி. (Hulbert, A. B.), 'Soil and Its Influence on the History of the United States'.

கெல்லாக், சி. ஈ. (Kellogg, C. E.), 'The Soils that Support Us', Chaps. 1—3, 9, 16, 18.

ஹன்டிங்டன், ஈ. (Huntington, E.), and Williams, F. E., 'Business Geography', Chap. 5.

ஸ்மித், ஜே. ஆர். (Smith, J. R.), and Phillips, M. O., 'North America', Chap. I.

2. குடியேற்றத்திற்கான பொருளாதாரச் சூழ்நிலை

வாணிப முதலாளித்துவத்தின் எழுச்சி

ஐரோப்பிய வரலாற்றில் பல நூற்றாண்டுகளாகவே உருவாகிய தொடர்ந்த நிகழ்ச்சிகளும் சூழ்நிலைகளும் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்குக் காரணங்களாய் அமைந்தன. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது. இக் கண்டுபிடிப்பு உலக வரலாற்றில் ஒரு திருப்பமாக அமைந்தது. அறிவுத்துறை, அரசியல், பொருளாதாரத்துறை முதலியவற்றில் ஏற்பட்ட மாறுதல்களே அதற்குக் காரணங்களாயின. பதினைந்தாம் நூற்றாண்டும், பதினாறும் நூற்றாண்டின் துவக்கமும் மறுமலர்ச்சிக் கொள்கை உச்ச நிலையில் இருந்த காலமாகும். 'ஏன்' என்ற கேள்வியை எழுப்பி எதையும் ஆராய்ந்து பார்த்து உண்மையை உணரவேண்டும் என்று மக்கள் அறிவு பெற்ற காலம்; பழைமையை வெறுத்தொதுக்கிய காலமுமது. அரசியல் துறையில் நிலமான்ய படைமான்ய முறைகள் ஒழிந்தன. தற்காலத்துப் புதிய இராஜ்ஜிய முறை தோன்றியது. நாட்டுணர்ச்சி மேலோங்கி நின்றதால், இடைக்காலத்துப் போர்முறை ஒழிந்தது. தனிப்பட்ட முறையில் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டி அதனால் ஏற்பட்டசண்டைகள் நின்றன.வழிப்போக்கர்களுக்கும் வணிகர்களுக்கும் பாதுகாப்பு ஏற்பட்டது. வழிச்சுங்கங்களும் குறைந்தன. நாட்டில் அமைதி நிலவியது. வியாபாரமும் வாணிபமும் வளர்ந்தன. பொருளாதார வாழ்வு செம்மையுறவே, மேலும் புதிய நாடுகளையும் நிலப்பரப்புகளையும் கண்டுபிடிக்கவேண்டும் என்ற ஆர்வத்தை மக்கள் பெற்றனர். புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிக்குத் திசை காட்டும் கருவியும் (compass) உயரம் கணக்கிடும் கருவியும் (astrolabe) பெரிதும் துணை புரிந்தன. விளக்கக் குறியீட்டுப் படங்களும் நிலப்படங்களும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டமையால், அவைகளும் உதவியாய் இருந்தன.

15ஆம் நூற்றாண்டின் இடையில் கண்டுபிடிக்கப்பட்ட அச்சு இயந்திரங்கள், விஞ்ஞானத்துறையிலும் வாணிகத் துறையிலும் நிகழ்ந்த வளர்ச்சியினைக் குறிக்கும் செய்திகளை அச்சிட்டுப் பரப்பின.

ஐரோப்பிய வளர்ச்சிக்கு மேலே குறிப்பிட்டவைகளெல்லாம் துணையாயிருந்தன என்றாலும், குடியேற்றத்திற்கும் அயல்நாட்டு வாணிகத்திற்கும் தூண்டுதலாக அமைந்து, படைமான்ய நிலமான்ய முறைக்குப் பதிலாக முதலாளித்துவப் பொருளாதார முறையை உருவாக்கிய, வாணிப முதலாளித்துவத்தின் வளர்ச்சியைப்பற்றி ஆராய்வோம். கூடுதலான வட்டிக்குப் பணத்தைக் கடன் கொடுக்கும் முறையைக் கிறித்துவ மதம் எதிர்த்தது; எனினும், இடைக்காலத்தின் பிற்பகுதியில் கடன்கொடுக்கும் முறை பெருகிவிட்டது. தனிப்பட்ட பாங்கர்களாகிய (Private Bankers) பிளாரன்சு நகரத்து மெடிசியும் (Medici of Florence), ஆக்ஸ்பர்க்கின் ஃபக்கர்களும் (Fuggers of Augsburg) வாணிபத்தின் மூலம் நிறையப் பணம் சேர்த்து, அதிக வட்டிக்குக் கடன் கொடுத்தனர். 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் பண்டங்களையும் கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் பங்குகளையும் வாங்கி விற்கும் நிலையத்தினை (Exchange) ஆண்ட்வெர்ப்பில் (Antwerp) ஃபிளமிஷ் ஊக வாணிகர்கள் (Flemish Speculators) ஏற்படுத்தினர். நிலமான்யப் பிரபுக்களை (Feudal Lords) அடக்கி நாட்டை வல்லரசாக்கும் பணியில் அரசர்கள் ஈடுபட்ட பொழுதெல்லாம், இவ் வாணிகர்களும் வங்கியினரும் அவ்வரசர்களுக்குப் பொருளுதவி செய்தனர். நாட்டில் செல்வம் பெருகிக் கொழிக்கும் வாய்ப்பு இவ் வாணிகர்களாலும் வங்கியினராலும் ஏற்பட்டது. இடைக்காலத்தில் தொழிலும் வியாபாரமும் செழித்தன. இந்தச் சூழ்நிலையில்தான் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது.

படைமான்யச் சமூக அமைப்பு தகர்ந்தது. கோனுட்சி நாடுகள் தலையெடுத்தன. வாணிப முதலாளித்துவ வளர்ச்சிக்கும் வியாபாரப் பெருக்கத்திற்கும் கோனுட்சி முறை தூண்டுதலாக அமைந்தது. ஐரோப்பிய நாடுகளில் அமைதி நிலவிற்று. வியாபாரப் பெருக்கத்திற்கும் தொழில் வளர்ச்சிக்கும் உள்நாட்டு அமைதி பெரிதும் உதவிற்று. உள்நாட்டில் தங்கள் ஆட்சியை வலுப்படுத்திக்கொள்ளவும், வெளிநாட்டில் செல்வாக்குப் பெறவும் இம் மன்னர்களுக்குப் பணம் தேவைப்பட்டது. எனவே, நாட்டில் ஆலைகள் பெருகித் தொழில்வளர மன்னர்கள் ஆதரவு தந்தனர்; வெளிநாட்டு வர்த்தகத்தில் துணிந்து ஈடுபடுவோருக்கு ஏகபோக உரிமைகளும் வழங்கினர். பழைய நிலமான்யப்

பிரபுக்களுடைய மதிப்புக் குறைந்து புதிய வாணிகர்களுக்குச் செல்வாக்கு ஏற்பட்டது. கத்தோலிக்க மதம் கூடுதலான வட்டி பெறும் முறையையும் அளவுக்கு மீறி இலாபம் ஈட்டும் முறையையும் எதிர்த்தது; நியாய விலையை வலியுறுத்தியது; மேலுலகிற்கு அதுவே வழி என்றும் போதித்தது. ஆனால், பிராடெஸ்டண்டு எழுச்சியானது (Protestant Revolt) கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கை ஓரள்வு குறைத்துவிட்டது.[1] எனவே, எல்லா வகைகளிலும் ஒரு பெரும் மாறுதல் ஏற்படக்கூடிய சூழ்நிலை அமைந்தது.

கீழை நாடுகளுடன் வாணிபம்

கிழக்கு நாடுகளுக்குக் குறைந்த பணச்செலவில் விரைந்து செல்லக்கூடிய கடற்பாதையைக் காணும் ஆர்வம் ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டது. அதுவே அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு உடனடித் தூண்டுதலாக்கும். வாணிபம் துவங்கிய காலத்திலிருந்தே தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கும், போகப் பொருள்களை வாங்குவதற்கும் ஐரோப்பாக் கண்டம் ஆசியாவை நம்பி இருந்தது. இடைக்காலத்தில் வாசனைத் திரவியங்கள் மிகவும் தேவைப்பட்டன. இறைச்சியை எப்பொழுதும் பயன்படுத்தும் வகையில் பாதுகாப்பதற்குரிய தற்காலத்திய குளிர் முறைப் பாதுகாப்பு (cold storage) இடைக்காலத்தில் கிடையாது. மேலும் அந்தக் காலத்தில் உணவு ஒரே வகையானதாகவும், நன்கு பக்குவம் பெருததாகவும் இருந்ததால் வாசனைத் திரவியங்கள் தேவைப்பட்டன. எனவே, ஒருநாட்டு மன்னன் வேறொரு நாட்டு மன்னனுக்கு வாசனைத் திரவியங்களையே அன்புக் காணிக்கையாக அனுப்புவது உண்டு. இடைக்காலத்தில் ஐரோப்பா வாசனைத் திரவியங்களைப் பெருமளவில் இறக்குமதி செய்தது. மலையாளத்திலிருந்து மிளகும், மொலுக்கசிலிருந்து (Moluccas) இலவங்கப்பட்டையும் சாதிக்காயும், அரேபியாவிலிருந்தும் பெர்சியாவிலிருந்தும் சர்க்கரையும் ஐரோப்பாவிற்குச் சென்றன. இப்பண்டங்கள் விலையுயர்ந்தவை; குறைந்த அளவில் உபயோகிக்கப்பட்டன; எனினும், தேவை அதிகமாக இருந்தது. மேலும், ஆசியாவிலிருந்து சூடம், நறுமணப்பிசின் வகைகள் முதலிய மருந்துச் சரக்குகளும் ஏற்றுமதியாயின. ஐரோப்பாவின் மேல் வர்க்கத்தினர் அணியும் விலையுயர்ந்த கற்களின் பெரும்பகுதி கிழக்கேயிருந்து வந்தவைதாம்.

1 R. H. Tawney, Religion and the Rise of Capitalism (1926). இப்புத்தகத்தில் இச்செய்தி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

கீழை நாடுகளிலிருந்து போகப் பொருள்களாகிய வாசனைத் திரவியங்கள், மருந்துச் சரக்குகள் விலையுயர்ந்த கற்கள் இவை களை மட்டும் ஐரோப்பா இறக்குமதி செய்யவில்லை. ஆலைத் தொழில்களுக்குத் தேவைப்படும் வண்ண மை வகைகளும் (dyestuffs) கீழை நாடுகளில்தாம் கிடைத்தன. பாக்தாதி லிருந்து (Bagdad) இண்டிகோவும் (Indigo), இந்தியாவிலிருந்து சிகப்புச் சாயத்தைக் கொடுக்கும் பிரேசில் மரமும் (brazilwood) கிடைத்தன. குறிப்பிட்ட வண்ணத்தைத் தரும் ஆலம் (Alum) லெவான்ட் வியாபாரத்தில் (Levant trade) முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆலம் ஆசியா மைனரில் (Asia Minor) கிடைக் கிறது. கைவேலைப்பாட்டுத் திறனிலும், மூலப்பொருளின் தன் மையிலும், மற்ற வகையிலும் சிறந்த பொறிசெய் பொருள்கள் கிழக்கு நாடுகளிலிருந்துதான் வந்தன. டமாஸ்கஸ் (Damascus), சாமர்க்கண்டு (Samarkand), பாக்தாத் முதலிய இடங்களிலிருந்து கண்ணாடியும் இரும்புத் தொழிற்கருவிகளும் வந்தன. சைனா விலிருந்து பீங்கான் சாமான்களும், இந்தியா, சைனா, பெர்சியா, ஆசியா மைனர் முதலிய பகுதிகளிலிருந்து பல்வேறு பருத்தி நூலாடைகளும் பட்டாடைகளும் வந்தன. பெர்சியன் சமுக்காளமும், காஷ்மீர் சால்வையும், டபேட்டா சில்க்கும் (taffeta silk, டமாஸ்கு லினனும் (damask linen) ஜப்பானியப் பண்டங்களும் கிழக்கு நாடுகளில் கிடைக்கும் பொருள்களாகும்.

கிழக்கிலிருந்து இவ்வளவு பண்டங்களையும் பொருள்களையும் பெற்றுக்கொண்ட ஐரோப்பா, கிழக்கு நாடுகளுக்குக் கம்பளி ஆடைகளையும், ஆர்சனிக் (arsenic), ஆன்டிமனி (antimony), பாதரசம், தகரம், செம்பு, ஈயம் போன்ற சில உலோகங்களையும் கனிப் பொருள்களையுமே வழங்க முடிந்தது. இப்பொருள்களுக்குக் கிழக்கே மதிப்பு இருந்தபோதிலும், இவை பளுவாகவும், பருமனாகவும் இருந்தனவாகையால் ஓர் இடத்திலிருந்து இன்னோரிடத் திற்கு இவற்றை எடுத்துச் செல்வது எளிதாயில்லை. தங்கமும், வெள்ளியும் எளிதாக எடுத்துச் செல்லக்கூடியவை யாகையால் அவற்றையே பயன்படுத்தினர். அந்தக் காலத்தில் பணப்பொரு ளாதார அமைப்பு சரியான முழு உருவம் பெறுததால், ஐரோப்பா தங்கத்தையும் வெள்ளியையும் ஆசியாவுக்கு ஏற்றுமதி செய்தது. ஐரோப்பாவில் விலையுயர்ந்த உலோகங்களைப் பொறுத்தவரையில் தட்டுப்பாடு ஏற்பட்டது. எனினும், மெக்சிகோ (Mexico) பெரு (Peru) முதலிய பகுதிகளில் வெட்டி எடுக்கப்பட்ட தங்கச் சுரங்கங்களும் வெள்ளிச் சுரங்கங்களும் அத் தட்டுப்பாட்டினை சமாளித்தன.

இடைக்காலத்தில் மக்களுடைய பொருளாதார வாழ்வில், அருகே யிருக்கும் கிழக்கு நாடுகளுடனும் தூரக்கிழக்கு நாடுகளுடனும் ஏற்பட்ட வியாபாரத் தொடர்பு முக்கிய இடம் பெற்றது. ஆனால், ஐரோப்பியர்களுக்கு ஆசியாவைப்பற்றியோ, ஆசியாவிற்குச் செல்வதற்குரிய பாதைகளைப்பற்றியோ ஒன்றும் தெரியாது. இத்தகைய வியாபாரத் தொடர்புகள் பண்டையக் காலத்தில் செழிப்புற்று இருந்தன. ஆனால், 5ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட காட்டுமிராண்டிகளுடைய படையெடுப்புகளும், பின்னர் தொடர்ந்து நிகழ்ந்த போர்களும் இத்தகைய வியாபாரத் தொடர்புகளைத் துண்டித்துவிட்டன. 11ஆம் நூற்றாண்டில் பொருளாதார வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு பொது விழிப்புணர்ச்சி, இடையிலே மங்கிப்போன கீழைநாடுகளின் வியாபாரத் தொடர்பை மீண்டும் புதிய வலிவுடனும் பொலிவுடனும் புதுப்பித்தது. சிலுவைப் போர்களும் (Crusades : 1095-1270) மங்கிப்போன வியாபாரத் தொடர்புகளை மீண்டும் புதுப்பிப்பதற்கு அடிகோலினவெனில் மிகையாகாது. சிலுவைப் போர்களின் காரணமாக ஆசியாவின் பண்டங்களையும் அறிவுச் செல்வத்தையும் பெறும் வாய்ப்பு ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டதால் அவர்களுடைய அறிவும் அனுபவமும் விரிந்து பக்குவப்படும் நிலைமை உண்டாகியது. மேலும், இத்தகைய வியாபாரத் தொடர்பினால் இத்தாலியர்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியும் செழிப்பும் நிறைந்தன. இத்தாலிய தீபகற்பத்தின் தெற்கு முனையில் இருந்த நகரங்களுக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக, நேப்பிள்ஸ் விரிகுடாவில் (Bay of Naples) உள்ள அமால்பீ (Amalfi), டைரீனியன் கடல் (Tyrrhenian Sea) உச்சியில் உள்ள ஜினோவா, எட்ரியாடிக் கடலின் (Adriatic Sea) உச்சியில் உள்ள வெனீஸ் (Venice) ஆகிய நகரங்களைக் குறிப்பிடலாம்.

இடைக்காலத்து வியாபாரப் பாதைகள்

கிழக்கு நாடுகளின் பண்டங்கள் மூன்று முக்கிய வியாபாரப் பாதைகளின்மூலம் ஐரோப்பாவிற்கு வந்து சேர்ந்தன. இடைக்காலத்தில் பெரும்பாலும் மத்திய பாதைதான் மிகப் பழையது; அஃது இன்றியமையாததுங்கூடவாகும். இந்தியாவிலிருந்தும் தூரக்கிழக்கு நாடுகளிலிருந்தும் வாணிகப் பண்டங்கள் சேகரிக்கப்பெற்றுப் பெர்சியன் வளைகுடாவின் வாயிலில் உள்ள ஆர்மசுக்குக் (Ormuz) கொண்டுவரப்பெற்றுப் பின்னர் டைகிரிசு நதி வாயிலில் உள்ள போஸ்ராவுக்கும் (Bozra), பள்ளத்தாக்கைக் கடந்து பாக்தாதிற்கும் அவை எடுத்துச் செல்லப்பட்டன. பாக்தாதிலிருந்து பாதைகள் விசிறிபோல் பிரிந்து செல்கின்றன. அப்

பாதைகள் வடக்கில் உள்ள டேபிரிசுக்கும் (Tabriz) மேற்கில் உள்ள டெமாஸ்கஸ், ஆன்டியோக் (Antioch), ஜாஃபா (Jaffa) முதலிய பகுதிகளுக்கும், மேற்குத் திசைக்கும், தெற்கே அலெக்சாண்டிரியாவுக்கும் (Alexandria) பிரிந்து செல்கின்றன. இந்தியாவிலிருந்து அரேபியக் கடலைக்கடந்து செங்கடலுக்குச் செல்லும் கடற்பாதை தென்திசைப் பாதையாகும். மேற்குக் கடற்கரையில் இறக்கப்படும் கப்பற் சரக்குகளை ஒட்டகங்கள்மீது ஏற்றி நைல் நதிக்குச் சென்று, அங்கிருந்து அச் சரக்குகளைக் கெய்ரோவிற்கு ஏற்றிச் செல்வர். இக்கடற்பாதை தொல்லை நிறைந்தது எனினும், இடைக்காலத்தில் இப் பாதையே குறைந்த செலவில் விரைவில் செல்லக்கூடிய மிக முக்கியமானதாகும். வடக்குப்பாதை, பல பாதைகளைக்கொண்ட ஓர் அமைப்பாகும். சைனா, இந்தியா முதலிய நாடுகளிலிருந்து காஸ்பியன் கடலுக்கும் (Caspian Sea), அங்கிருந்து வால்கா நதி வழியாக மத்திய ரஷ்யாவிற்கும், பால்டிக் கடலுக்கும், கருங்கடலுக்கும் சென்று, பின்னர் ஐரோப்பாவிற்குச் செல்லும் பாதை இது.

கீழைநாடுகளின் வர்த்தகம் கருங்கடலருகில் உள்ள டிரபிசாண்டு (Trebizond), பாஸ்போரஸ் (Bosphorus) அருகில் உள்ள கான்ஸ்டான்டி நோபில் (Constantinople), சிரியன் கரையில் உள்ள (Syrian Coast) ஆன்டியோக் (Antioch), பீரட் (Beirut), டிரிபோலி (Tripoli), லாவோடிசியா (Laodicea), ஜாஃபா (Jaffa), நைல் நதிக் கரையில் உள்ள அலெக்ஸாண்டிரியா முதலான நகரங்களுடன் முடிந்துவிடுகிறது. இம்முறையில் வரும் சரக்குகளை வாங்கும் நோக்கத்துடன் ஸ்பெயின், பிரான்சு, இத்தாலி நாடுகளின் வியாபாரிகள் மேற்குறிப்பிட்ட நகரங்களுக்கும், இன்னும் டமாஸ்கஸ், அலெப்போ (Aleppo) பகுதிகளுக்கும் வந்து, கடற் கொள்ளைக் காரர்களிடமிருந்து தப்பிக் கெடாது நல்ல முறையில் இருக்கும் சரக்குகளை வாங்கிச் செல்வர். கி. பி. 1000 முதல் 1500 முடிய, லெவான்டு வர்த்தகத்தின் (Levant Trade) பெரும் பகுதி இத்தாலியர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. வெனிஸ், ஜினேவா, பைசா ஆகிய மூன்று நகரங்களும் இவ்வர்த்தகத்தில் முதன்மைபெற முயன்றன. பிளாரன்சு நகரம் வங்கிமுறை (Banking), தொழில் துறை இவற்றில் சிறந்து விளங்கியது. இத்தாலிய நகரங்களிலிருந்து கீழைநாடுகளின் வாணிகச் சரக்குகள் வட ஐரோப்பாவிற்கும், மத்திய ஐரோப்பாவிற்கும் இரண்டு பாதைகளின் மூலம் செல்கின்றன. வாணிகச்சரக்குகளை வெனிசிலிருந்தும், ஜினேவாவிலிருந்தும் நிலப்பகுதிகளின்மூலம் ஐரோப்பாவிற்கு ஏற்றிச்செல்லும் பொறுப்பை ஜெர்மானிய வியாபாரிகள் ஏற்றுக்கொண்டனர். செயின்டு கோதார்டு கணவாய் (St. Gothard Pass) வழியாகப் பேசல் (Basel),

கான்ஸ்டன்சு (Constance), ஸ்டிராஸ்பர்க்(Strasbourg) வந்து' ரைன் நதி வழியே அல்லது பிரன்னர்க் கணவாயைக் (Brenner Pass) கடந்து, மியூனிச் (Munich), நியூரம்பர்க் (Nuremburg), அல்லது ஃபிராங்குபோர்ட் (Frankfort) நகரத்தை வந்தடைவதுதான் மேலே குறிப்பிட்ட நில வழியாகும். ஆல்ப்ஸ் (Alps) மலை வழியாகச் செல்லும் நிலவழிகளைத் தவிர கடல் வழியாகவும் லிஸ்பன் (Lisbon), புருஜெஸ் (Bruges), லண்டன் (London) முதலிய நகரங்களுடனும் வர்த்தகம் நடைபெற்றது. வட ஐரோப்பாவைப் பொறுத்தவரையில், ஆன்ட்வெர்ப், புருஜெஸ், கென்டு (Ghent) இன்னும் வேறு சில நகரங்களுடன் மட்டுமே இடைக்கால வணிகம் நடைபெற்றது. இந்நகரங்களுக்கு மத்தியதரைக்கடல் நாடுகளிலிருந்தும், பால்டிக் கடல் நாடுகளிலிருந்தும் பண்டங்கள் சென்றன; அப்பண்டங்கள் இங்கிலாந்திலும் விற்பனையாயின.

வாணிகப் புரட்சி

இடைக்காலக் ஐரோப்பாவிற்குக் கீழைநாடுகளின் வாணிகத் தொடர்பின் இன்றியமையாத் தன்மையையும்,[2] ஐரோப்பாவின் இடைக்கால வாணிகத்திற்கு மத்தியதரைக்கடல் பகுதிகள்தாம் மையமாக விளங்கின என்ற உண்மையையும் இதுவரையில் விளக்கினேம். மத்தியதரைக்கடற் பகுதியிலிருந்து அட்லான்டிக் பகுதிக்கு எவ்வாறு இந்த வர்த்தக மையம் மாறி ஒரு வர்த்தகப் புரட்சிக்கு அடிகோலியது என்பதை இனி ஆராய்வோம். இந்த ஆராய்ச்சியில், கீழைநாடுகளுக்குப் புதிய வர்த்தகப் பாதைகளையும் அமெரிக்கக் கண்டங்களையும் கண்டுபிடித்த கதைகள் அடங்கும்.

ஆசியப் பொருள்களின்மீது ஐரோப்பாவிற்கு நாட்டம் உண்டு. ஆனால், அப்பொருள்களைக் கொண்டுவரும் பாதைகள் தாம் தொல்லை நிறைந்தனவாயும், செலவு மிக்கனவாயும் இருந்தன. எனவே, குறைந்த செலவில் விரைந்து செல்லக்கூடிய

[2] கீழைநாடுகளுடன் வர்த்தகத் தொடர்பைப் பலப்படுத்த நல்ல பாதைகள் தேவை என்பது இன்றளவும் உண்மையே. சூயஸ்கால்வாய் வராற்றையும், பெர்லின்–பாக்தாத் ரெயில்வே ஒன்றைக் கட்டுவதற்கு ஜெர்மனி செய்த முயற்சியையும் படித்தவர்களுக்கு இந்த உண்மை தெற்றென விளங்கும். முதல் உலகப் போரிலும் இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை யாரும் மறந்துவிடவில்லை. ஏனெனில், பாலஸ்தீனத்திலும் யூஃப்பிரடிஸ் பள்ளத்தாக்கிலும் (Euphrates Valley) ஏற்பட்ட கொந்தளிப்பும், 20 ஆண்டுகளுக்குப் பின்னர் மத்தியதரைக்கடல் பகுதியில் தன் ஆதிக்கத்தை நிலை நாட்ட எண்ணி, ஜிப்ரால்டர் (Gibralter), எகிப்து (Egypt), சூயஸ்கால்வாய் (Suez Canal) ஆகிய பகுதிகளில் ஊன்றியிருந்த பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகவே இரண்டாவது உலகப் போரில் கலந்துகொண்ட இத்தாலிய எழுச்சியும் மேலே குறிப்பிட்ட உண்மையைத் தெளிவுறுத்தும்.

பாதைகளைக் கண்டுபிடித்தல் அவசியமாயிற்று. 1453-ல் ஆட்டமான் துருக்கியர்கள் (Ottoman Turks) கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றி, சிரியாவிலும் (Syria) எகிப்திலும் தங்க ளுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிப் பழைய பாதைகளையும் தடைப்படுத்தும்வகையில் தொல்லைகள் தந்தமையால்தான், புதிய பாதைகளைக் கண்டுபிடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மையில், கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்துக் கால் நூற்றாண்டு கழிந்த பின்னரே ஆட்டமான் துருக்கியர்கள் சிரியா, எகிப்து வழியாகச் செல்லும் பாதைகளைக் கைப்பற்றினர். ஆனால், வெளி நாட்டு வியாபாரிகளிடமிருந்து துருக்கியர்கள் சுங்கவரிகளைக் கூடு தலாக வசூலித்தனர் என்பது என்னவோ உண்மைதான். எனி னும், வெனிஸ் போன்ற இத்தாலிய நகரங்கள் 16ஆம் நூற் றாண்டு முழுமையும் செழித்தோங்கியே நின்றன. மேலும், பேராசி ரியர் லிபியர் (Professor Lybyer) அவர்களுடைய ஆய்வுப்படி, துருக்கியர்கள் வெற்றிக்குப் பின்னரும் கீழை நாடுகளின் வியா பாரம் நசித்துவிடவில்லை. அந்த நாடுகளின் பண்டங்களின் விலை ஐரோப்பாவில் உயர்ந்துவிடவுமில்லை. இதற்கு மாறாக, லிபியர் குறிப்பிடுவதுபோல்ப் புதிய நிலங்களைக் கண்டுபிடிக்கும் ஆர்வம் மிக்கோரும், அவர்களின் ஆதரவாளர்களும், மதம், சிலுவைப் போர், வெற்றி, நாடோடி வீரவாழ்வு போன்றவைகளில் அதிக ஆர்வம் செலுத்தினரே யன்றி, வாசனைத் திரவியங்களைச் சேகரிப் பதில் அவ்வளவாக ஈடுபாடு கொள்ளவில்லை. இந்த விளக்கத் தைப்பற்றி இன்னும் தெளிவுபடத் தெரிந்துகொள்ளலாம்.[3] துருக்கியர்கள் தொல்லைகள் தரவில்லை என்று ஒப்புக்கொண் டால் பழைய வர்த்தகப் பாதைகளில் ஏற்பட்ட தொல்லைகளே, 15ஆம் நூற்றாண்டிலும் 16ஆம் நூற்றாண்டிலும் புதிய பாதை களைக் கண்டுபிடிக்க தூண்டுகோலாக அமைந்தன என்ற முடி விற்கு வரலாம்.

கார்பினி (Carpini) போன்ற இத்தாலியப் பயணர்களும், மூன்று போலோக்களும் (Polos) ஆசியாவைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளை நிறைய வழங்கினர். திருந்திய முறையில் சரியான நிலப்படங்களை வரைந்துதவியவர்களும் இத்தாலிய வரைபட நிபுணர்களே. எனினும், போர்ச்சுகீசியர் களே கீழை நாடுகளுக்குப் புதிய பாதையைக் கண்டுபிடித்தனர். போர்ச்சுகல் எப்பொழுதுமே கடற் பயணத்தில் ஈடுபாடுள்ள

[3] A. H. Lybyer, 'The Influence of the Ottoman Turks upon the Routes of Oriental Trade.' in the Annual Report for 1914 of the American Historical Association, I, 125-133.

நாடாகும். வடஆப்பிரிக்காவின் கடற்கரை, போர்ச்சுகீசியர் களுக்குத் தெரியாததன்று. போர்ச்சுகீசிய ஆளும் பரம்பரையைச் சேர்ந்த அரசகுமாரர் ஹென்றி 'மாலுமி' (Henry 'the Navigator') என்ற அடைமொழியால் அன்பாக அழைக்கப்படுபவர்; அவர் புதிய நிலங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற துடிப்பும், மதப் பிரசாரகர்களுக்கு உள்ளது போன்ற கடமை யுணர்வும், ஆர்வமும் மிக்கவர். இத்தகைய ஆற்றலுள்ள ஹென்றி தனக்கே உரித்தான முறையில் வியாபாரத்திறனும் பெற்றிருந்தார். அவருடைய ஆர்வம் போர்ச்சுகீசியர்களுக்குத் தூண்டுகோலாய் அமைந்தது. ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையைக் கண்டுபிடிக்கப் புதுநிலம் காணும் குழுக்களை ஒன்றன்பின் ஒன்றாக ஹென்றி அனுப்பினார். 1487-ல்தான் பார்த்தலோமியு டயஸ் என்பார் (Bartholomew Diaz) தாம் கண்ட பகுதியைப் புயல்முனை (Cape of Storms) என்று அழைத்தார். அதனையே பின்னர் போர்ச்சுகல் அரசர் இரண்டாம் ஜான் (John II) நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope) என்று அழைத்தார். பத்து ஆண்டுகளுக்குப் பின் வாஸ்கோட காமா அம்முனையைச் சுற்றிக் கிழக்குக் கடற்கரை வழியாக இந்தியாவை 1498-ல் வந்தடைந்தார். இந்தியாவை அடையும் புதிய கடற்பாதை முழுமை பெற்றது. வியாபாரத்தொடர்பு விரைவில் ஏற்பட்டது. ஐரோப்பாக் கண்டத்தில் பூகோள அமைப்பின்படி போர்ச்சுகல் அமைந்திருந்த இடம் வியாபாரப் பெருக்கத்திற்கு வசதி உடையதாகும். மேலும், பண்டங்கள் புதிய பாதையின் வழியே அனுப்பப்படுவதால், போக்குவரத்துச் செலவு குறைந்தது. எனவே, கீழை நாடுகளின் வர்த்தக ஆதிக்கம் போர்ச்சுகீசியர்கள் கைக்கு வந்தது. அந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் கிழக்கு சாம்ராஜ்ஜியத்திற்கு அடிகோலினர். ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகளின் மணி மகுடங்கள் ஒன்றுகி ஒரே அரசு ஏற்படும் வரையில் போர்ச்சுகீசியரே அச் சாம்ராஜ்ஜியத்தை ஆண்டனர். புதிய கடற்பாதை கண்ட பின்னர், மத்தியதரைக் கடல் பகுதியிலிருந்து அட்லான்டிக் பகுதிக்கு உலக வர்த்தகத்தின் கேந்திரம் மாறியது. எனினும், மேலும் ஒரு நூற்றாண்டிற்கு, வெனிஸ் கப்பல் தொழிலில் சிறந்தே விளங்கிற்று. ஆனால், கீழை நாடுகளுடன் ஏற்பட்டிருந்த வர்த்தகத் தொடர்பு நின்றுவிட்டது. வெனிசுக்கு அது ஒரு பெரும் இழப்பாயிற்று. கீழை நாட்டுப் பண்டங்களை விற்று வந்த வியாபாரிகளும் ரியால்டோ (Rialto) துறைமுகத்தை விட்டு விட்டு லிஸ்பன் (Lisbon) நகரத்தின் ஆரவாரமான துறைமுகத்தைப் பயன்படுத்தத் துவங்கினர். வெனிஸ் மாநகரத்திற்கு இருந்த பெருமை மங்கியது; அட்லான்டிக் பகுதியில் உள்ள துறைமுகங்கள் புகழ்பெற்றன.

அமெரிக்காவைக் கண்டுபிடித்தல்

கிழக்கிந்தியத் தீவுகளுக்குச் செல்ல விரைவான பாதைகளைக் கண்டு பொருள் திரட்டவேண்டும் என்று கனவு கண்ட மக்கள் போர்ச்சுகல் நாட்டில் மாத்திரம் இல்லை. வாஸ்கோடகாமா இந்தியாவை அடைவதற்குக் கடற்பயணம் துவங்கு முன்னரே, மூர் (Moors) கூட்டத்தை வென்று வாகை சூடிய ஸ்பெயின் தேசத்து பெர்டினண்டும் (Ferdinand) இசபெல்லாவும் (Isabella) ஒரு பெரும் ஸ்பெயின் இராஜ்ஜியத்தை உருவாக்கும் முயற்சியைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, மேற்குத் திசையில் கடற் பயணத்தைத் துவக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த இத்தாலிய நாட்டு மாலுமியாகிய கொலம்பசுக்கு உதவ முன்வந்தனர். கற்றுத் தேர்ந்த வானநூல் ஆராய்ச்சி யாளர்களும் தத்துவ ஞானிகளும் நம்பியது போலவே கொலம்பசும் பூமி உருண்டை வடிவமானது என்றே நம்பினர். மேற்குத் திசையில் செல்வதன் மூலமாகக் கிழக்கிந்தியத் தீவுகளை அடையமுடியும் என்றும் எண்ணினர். அவர் குறிப்பிட்டார் : 'நிலமும் நீரும் சூழ்ந்த உலகம் உருண்டை வடிவமானது என்று நான் படித்திருக்கிறேன். டாலமியும் (Ptolemy) மற்றவர்களும் இந்த உண்மையை ஆராய்ச்சியின்மூலம் நிலைநிறுத்தியுள்ளார்கள், சந்திர கிரணங்களின் மூலமும், கீழ்த்திசையிலிருந்து மேல் திசை வரையில் நிகழ்த்திய காட்சி அறிவின் (observation) மூலமும், வடதிசையிலிருந்து தென்திசை வரையில் உயர்ந்துகொண்டேவரும் துருவத்தின் மூலமும் இவ்வுண்மையை நிலைநாட்டியுள்ளனர்.' கொலம்பசின் கொள்கை சரியானதுதான் ; ஆனால், புதியது அன்று. அவர் செய்த தவறெல்லாம் உலகத்தை மிகச்சிறிய கோளமாகக் கருதியதுதான். கொலம்பசின் உயர்வுக்கும் பெருமைக்கும் காரணம் அவரே உருவாக்கிக் கொண்ட எண்ணமன்று; ஒன்றுமே புரியாத கடலில் துணிவாகப் பயணத்தைத் துவக்கியதும், தான் மேற் கொண்ட காரியத்தை முடிக்கவேண்டும் என்ற பிடிவாதமுமே அவரது சிறப்பாகும். 1492-ல் மூன்று சிறிய கப்பல்களுடன் மேற்குத் திசை நோக்கி அவர் கிளம்பினர்; முடிவில் பாஹாமா தீவுகளில் (Bahamas) ஒன்றை அடைந்தார்; கிழக்கிந்தியத் தீவுகளில் சிலவற்றையே அடைந்துவிட்டதாக நம்பினர்; மூன்று தடவைகள் திரும்பிவந்தார்; இந்தியாவினுள் நுழையவேண்டும் என்ற குறிக்கோள் நிறைவேறுமையால் மனம் நொந்தார்.

இங்கிலாந்து அரசர் ஏழாம் ஹென்றியிடம் வேலையில் இருந்த இத்தாலிய நாட்டு மாலுமி ஜான் கேபட் (John Cabot) கொலம்பசின் முறையைப் பின்பற்றினர். அவர் சிபாங்கோவைக்-

(Cipango) கண்டு பிடிக்க மேற்கு திசையில் சென்று லெப்ராடர் (Labrador) கரையினைச் சேர்ந்தார். மேற்குத் திக்கில் உள்ள சமுத்திரத்தைப் பால்போ (Balboa) 1513-ல் கண்டுபிடித்த பிறகும், மெகல்லன் (Magellan) அவர்க ளுடைய கப்பல் 'விக்டோரியா,' பூமியையே சுற்றி வந்த பிறகும் (1519-1522), அமெரிக்காவைச் சுற்றியோ அல்லது அமெரிக்கா மூலமாகவோ ஆசியாவை அடைவதற்கு ஏதே னும் வழி உண்டா என்ற ஆராய்ச்சியில் ஒரு நூற்றாண் டுக்குப் புது நிலம் காண விழைவோர் முயன்றனர். இம்முயற் சியின் விளைவாக வெரசேனே (Verrazano), கார்ட்டியர் (Cartier, 1534), ஃபிரோபிஷர் (Frobisher, 1576-'78), டேவிஸ் (Davis, 1585-'87), ஹட்சன் (Hudson, 1609) முதலானவை கண்டு பிடிக்கப் பட்டன. அமெரிக்கக் கண்டங்கள் வழியே கதே (Cathey) செல் லக்கூடிய இயற்கையான மார்க்கங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை யெனினும், இத்தகைய கடற்பயணங்கள் ஐக்கிய அமெரிக் காவின் கடற்கரையைப் பற்றியும், கிழக்குக் கடற்கரையில் உள்ள செயின்ட் லாரன்ஸ் (St. Lawrence), ஹட்சன் (Hudson) என்னும் இருபெரும் நதிகளைப்பற்றியும் சரியான தகவல்களைச் சேகரித்து ஐரோப்பியர்களுக்கு வழங்கின.

அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டமையாலும், வர்த்தகப் புரட் சியாலும் பொருளாதார வரலாற்றில் எண்ணிப் பார்க்க முடியாத விளைவுகள் ஏற்பட்டன. முக்கியமான சில விளைவுகளை மட்டுமே இங்கு விளக்குவோம். கடல்மூலம் பண்டங்களைக் கடத்துதலி னால் செலவு குறைந்தது, எனவே, கீழ்நாட்டுப் பண்டங்களை நிறைய வாங்கினர். நீண்ட கடற்பயணங்கள் வலிவுடன் கூடிய உயரமான கப்பல்களைக் கட்டக் காரணமாயின. இத்தகைய கப்பல்கள் தேயிலை, காப்பி, இந்தியாவில் விளையும் தானியங்கள், புகையிலை முதலிய பருமனுள்ள பண்டங்களை ஐரோப் பாவிற்கு ஏற்றிச் செல்ல வசதிஉடையனவாய் இருந்தன. வர்த்தக முதலாளித்துவமும் பொருளாதார ஏகாதிபத்தியமும் இத்தகைய சூழ்நிலையில் நன்கு வளர்ந்தன; வியாபாரம் செழிப்புற்றது. வர்த் தகத்தில் சிறந்த முறைகள் கையாளப்பட்டன; புதுத் தொழிற் சாலைகள் தோன்றின; இயந்திரம் மூலம் உற்பத்தி பெருகியது. இவற்றின் விளைவால் கில்டுமுறை (Guild system) ஒழிந்தது. விவசாயமும் முன்னேறியது. மக்கள் தொகை பெருகியது; அதனைக் காக்க வர்த்தக நடவடிக்கைகள் பெருகின. புது உலகத் தில் உள்ள பண்ணைகளில் வேலை செய்யக் கூலியாட்கள் தேவைப்பட்டனராகையால் அடிமை வியாபாரத்திற்குப் புத்

துயிர் அளிக்கப்பட்டது. மெக்சிகோ (Mexico), பெரு (Peru) முதலிய பகுதிகள் சுரண்டப்பட்டன. புது உலகத்திலிருந்து கிடைத்த தங்கமும் வெள்ளியும் ஐரோப்பாவில் பணப் பொருளாதாரம் ஏற்படவும், வர்த்தக முதலாளித்துவம் இன்னும் வாழவும் காரணமாயின. ஐரோப்பாவில் பணப்புழக்கம் ஏற்படவே, தூரக்கிழக்குடன் நடந்துவந்த வியாபாரம் புத்துயிர் பெற்று செழுமை அடைந்தது. விலை மதிக்கொணு உலோகங்கள் திடீரெனப் பெருகவே விலைவாசிகள் உயர்ந்தன. கூலி, குத்தகை வாரம் முதலியன உயராமையால்[4] வாணிகர்கள், தொழில் அதிபர்கள், இன்னும் மற்ற வியாபாரிகள் கொழுத்த இலாபவேட்டை ஆடினர். இலாபம் பெருகப்பெருக வர்த்தகமும் தொழிலும் வளர்ந்தன. சமூகப் பொருளாதார வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மேலே குறிப்பிட்ட விளைவுகள் ஊடுருவிப் பாய்ந்துள்ளன.

வர்த்தகப் புரட்சியினாலும் புது உலகங்களைக் கண்டுபிடித்தமையாலும் ஏற்பட்ட விளைவுகளைப்பற்றி ஒரு பொது விளக்கம் வலியுறுத்தப்படுகிறது.[5] மேற்கு ஐரோப்பாவிற்கு ஒரு புதிய எல்லைக்கோடு ஏற்பட்டது. புதிய பண்டங்களும், புதிய செல்வமும், புதிய ஆளுல், பெரிய வர்த்தகத் தொடர்பும் ஐரோப்பாவிற்குக் கிட்டின. வெளிச் சந்தைகளில் தங்கள் பண்டங்களை விற்கவும் தம் மக்கள் வெளியிடங்களுக்குச் சென்று குடியேறவுமாகிய வாய்ப்பு ஐரோப்பாவிற்குக் கிடைத்தது. தற்கால நிலையோடு பொருளாதார ரீதியாக ஒப்பிட்டுப் பார்த்தால், ஐரோப்பா 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு தேங்கிய நாகரிகத்தின் நிலைக்களனுயிற்று. அதனுடைய நிலப்பகுதியில் பண்டங்களின் உற்பத்திக்கென அமைந்த பகுதியைவிட அதிகமான பகுதியைத்தான் மக்கள் நிரப்பியுள்ளனர். உழைப்பாளிப் பெருக்கம் உண்டாயிற்று. மக்கள் தொகை பெருகியிருந்ததால் உற்பத்தியான உணவு போதவில்லை. வாழ்க்கைத்தரமும் குறைந்திருந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் அமெரிக்கக் கண்டங்களும், தென்னுப் பிரிக்காவும், ஆஸ்திரேலியாவும், நியூசீலண்டும் கண்டுபிடிக்கப்பட்டன. அப்பகுதிகளில் பிற்போக்கான நிலையில் வசித்த பழங்

4 1776-ல் ஆடம் ஸ்மித் வலியுறுத்தி எழுதுகிறார்: 'அமெரிக்காவில் நிறையச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால், 1570-லிருந்து 1640 வரையில், தானியத்தின் மதிப்பைவிட வெள்ளியின் மதிப்பு மிகுதியாகக் குறைந்துவிட்டது.' Wealth of Nations (Cannan ed., Lonon, 1904), I, 191.

5. வால்டர் பிரஸ்காட் வெப் (Walter Prescott Webb), The Great Frontier.

குடி மக்கள் சிறுபான்மையினராய் இருந்தனர். ஐரோப்பாவி லிருந்து வந்து குடியேறியவர்களுக்கு அப்பழங்குடி மக்களை ஒதுக்கிவைப்பது எளிதாயிற்று. இந்தச் சூழ்நிலை ஒரு பொருளா தாரச் சமுதாய அறிவுப் புரட்சி ஐரோப்பியத் தலைநகரங்களில் ஏற்படச் சாதகமாயிற்று. 400 ஆண்டுகளுக்கு ஐரோப்பாவில் செழுமை கொழித்தது. இதிலிருந்து தற்கால வரலாற்றின் பல செய்திகளைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம். இன்று உலகம் நீண்ட காலப் பொருளாதார வீக்கத்தின் வால்முனையில் வாழ்ந்துகொண் டிருக்கிறது; அதன் பல சிக்கல்கள் இந்த உண்மையின் அடிப் படையில்தான் உருவாயின.

அரசியல் - ஏகாதிபத்திய வரலாற்றைப்பற்றி ஒன்று சொல்ல வேண்டும். வர்த்தகப் புரட்சி ஐரோப்பாவின் ஒரு வர்க்கத்தார் மீது மிகப் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. மன்னர்களும் கனவான்களும் குடியேற்றப் பேரரசுகளை ஏற்படுத்தவேண்டிப் போரிட்ட வேளையில், நடுத்தர வகுப்பினரும் (Bourgeoisie), பூர்ஷ் வாக்களும், நகரவாசிகளும் எல்லா விளைவுகளையும் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு நாட்டிலும் வியாபாரிகளின் எண் ணிக்கை பெருகியது. நிலச்சுவான்தார்களின் பெருமை மங்கவே, அரசியல் - பொருளாதார ரீதியாக மத்தியதர வகுப்பினர் ஒரு செல்வாக்கைப் பெற்றனர். ஏகாதிபத்திய அரசியல் வட்டாரத் தில், குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றவும், வர்த்தகத் தலைமையை ஏற்கவும் நாடுகள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக்கொண்டன. வர்த்தகப் புரட்சியே இச்சண்டைகளைத் துவக்கிவைத்தது என லாம். கடல் வர்த்தகத் தலைமை போர்ச்சுகல்லிடமிருந்து ஸ்பெயினுக்கும், டச்சுப் புரட்சிக்குப் பின்னர் ஹாலண்டிற்கும் மாறியது. ஆனால், இங்கிலாந்தும் ஃபிரான்சும் தேசீய உணர்ச்சி யிலும் கடற்பலத்திலும் வளர்ந்தன. இவ்விரு நாடுகளும் செல் வம் கொழிக்கின்ற, ஆனால், மிகச் சிறிய குடியரசாகிய ஹாலண் டுடன் போர்தொடுத்து அதனை முடமாக்கிவிட்டன. ஹாலண்டு ஒழிந்ததும் ஒரே மூச்சில் இங்கிலாந்தும் பிரான்சும் 1689-லிருந்து நெப்போலியன் அழிவுக்காலம் வரையில், ஏழு பெரும் போர்களில் ஈடுபட்டன. ஃபிரான்சும் பலவீனமாகவே, இங்கிலாந்து கடல் தலைமையையும் ஏற்றுக் குடியேற்றப் பேரரசையும் நிறுவியது. கடல்தலைமையை இழந்த மற்ற நாடுகளெல்லாம் தாங்கள் நிறுவிய காலனி சாம்ராஜ்ஜியத்தின் சில பகுதிகளையேனும் தங்கள் மேற் பார்வையில் வைத்துக்கொண்டன.

அமெரிக்காவில் குடியேற்றத்திற்கான காரணங்கள்

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதி கிழக்கிந்திய தீவுகள் அல்ல. இருபெரும் கண்டங்கள் என்ற உண்மை ஐரோப்பியர்களுக்குத் தெரியவே, புதிய சாம்ராஜ்ஜியங்களை நிறுவவேண்டும் என்று இராஜதந்திரிகள் கனவு கண்டனர். பொருள் திரட்ட வழிவகைகள் இருக்குமோ என்று வர்த்தகர்கள் கனவு கண்டனர்; ஆனால், பழைய உலகத்தில் நிலவிய மதப் பிடிப்பிலிருந்தும், அரசியல் கெடுபிடியிலிருந்தும், பொருளாதாரச் சீர்குலைவிலிருந்தும் விடுதலை பெற வேண்டிக் கடல்கடந்து செல்லின் அமைதியாக வாழ வழி இருக்குமா என்று பாமரமக்கள் சிந்திக்கத் தொடங்கினர். குடியேற்றத்தின் உள்நோக்கங்கள் பலப்பல. மத, அரசியல், பொருளாதார நோக்கங்கள் ஒன்றையொன்று பின்னிக் கிடந்தன.

சீர்திருத்தக் காலத்தில் மத உணர்வே மேலோங்கி நின்றது. கிழக்கிந்தியத் தீவுகளைக் கண்டுபிடிப்பதற்கு மாத்திரமன்றிச் செவி வழிச் செய்தியான பிரஸ்டர் ஜான் (Prester John) அவர்களுடைய கிறித்துவ இராஜ்ஜியத்தையும் கண்டுபிடிக்கவே அரச குமாரர் ஹென்றி கப்பல்களை அனுப்பினார். 'கிறித்துவர்களையும் வாசனைத் திரவியங்களையும் தேடியே இங்கு வந்துள்ளோம்' என்று வாஸ்கோடகாமா குறிப்பிடுகிறார். ஸ்பானிய வீரர்கள், புதிய நிலம் தேடக் கிளம்பிய தீரர்கள் ஆகியோரின் நெஞ்சத்திலே தங்கத்தைச் சேகரிக்கவேண்டும் என்ற மனவெழுச்சி சிலுவைப் போர் உணர்ச்சியுடன் பின்னிக் கிடந்தது. கொலம்பஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்; 'தங்கம் மிகவும் நேர்த்தியானது; அது ஒரு கருவூலம்; அதைப் பெற்றவன் தான் நினைத்த காரியத்தைச் சாதிப்பான்; சுவர்க்கத்திற்கு ஆத்மாக்கள் செல்ல அவனால் உதவ முடியும்.'[6] தோல் வியாபாரிகள் துவங்கமுன்னரே, ஃபிரெஞ்சு ஜெசூட்டுப் பாதிரிகள் ஏரிகளையும் நதிகளையும் அளந்து கணக்கெடுத்தபடியே சென்று, வழியெல்லாம் மதப் பிரசாரம் செய்து, மதமாற்றம் செய்தார்கள். இத்தகைய மத உணர்ச்சி பொது நோக்குடன் நடந்துகொள்ளும் இங்கிலீஷ் காரர்களைக்கூட இந்தத் துறையில் ஊக்குவித்தது. டிரேக்கும் (Drake), ஹாக்கின்சும் (Hawkins), ஸ்பானிஷ் மெயினில் (Spanish

[6] Fourth Voyage. Letter to Ferdinand & Isabella, Written July 7, 1503. Original Narratives of Early American History Series, The Northmen, Columbus and Cabot. p. 412.

Main)[7] புகுந்து விளையாடினர்கள்; கத்தோலிக்கரைத் துன்புறுத்தினர்; கொள்ளையடித்தனர். வர்ஜீனியா கம்பெனி தலைமை யதிகாரிகளும் மற்றும் பலரும், குடியேற்றத்தின் முதல் நோக்கமே, கிறித்துவ மதத்தைப் பிரசாரம் செய்து மதமாற்றம் நிகழ்த்துவது; தவிர்க்க முடியாத அறியாமையில் சாகும்வரையில் உழன்று தவிக்கும் எண்ணற்ற, பரிதாபத்திற்குரிய, ஏழ்மையான ஆத்மாக்களைச் சைத்தானின் பிடியினின்றும் விடுவிப்பதற்காக விவிலியத் திருமந்திரத்தைப் (Gospel) பிரசாரம் செய்வது என்று கருதினர்.[8]

குடியேறுபவர்களுக்குப் பாதைகளை நன்கு செப்பனிட்டுத் தரும் பணியை ஏற்றுக்கொண்ட பாதிரிமார்களின் முயற்சியைக் குறைத்து மதிப்பிடக்கூடாது; எனினும், தாயகத்தில் அனுபவித்த மதக்கொடுமைகளினின்றும் விடுதலை பெறவேண்டும் என்ற விருப்பமே குடியேற்றத்திற்கு மிக முக்கியமான காரணமாகும். மதப் பிரிவினையாளர்களும் (Separatists) மதத் தூய்மையாளர்களும் (Puritans), மத உரிமையை நாடி, நியூ இங்கிலாந்தைக் (New England) கண்டனர். எனினும், தூய்மையாளரிடமும் சகிப்புத்தன்மை இல்லாமற் போகவே, ரோஜர் வில்லியம்சும் (Roger Williams) அவரைப் பின்பற்றுவோரும் ரோடு ஐலண்டுக்குச் (Rhode Island) சென்று குடியேறினர். ஆன் ஹட்சின்சனும் (Anne Hutchinson) நாடுகடத்தப்பட்டார். கவெலியர்களை (Cavaliers) வர்ஜீனியாவிற்கும், இங்கிலீஷ் கத்தோலிக்கர்களை மேரிலாண்டிற்கும் (Maryland) தூய்மைக்கொள்கை விரட்டியது. பிரான்சு நாட்டுப் பிராடெஸ்டண்டுகள் கரோலினுக்களில் (Carolinas) சென்று குடியேறினர். குவேக்கர்களும் (Quackers), மென்னோனைட்டுகளும் (Mennonites), மொரேவியன்களும் (Moravians), மற்ற உட்பிரிவினர்களும் பென்சில்வேனியா (Pennsylvania) நியூ ஜெர்ஸி (New Jersey) போன்ற இடங்களில் குடியேறினர்.

அரசியல் உள் நோக்கங்களும் தலைதூக்கின. புதிய நிலங்களை ஒவ்வொரு நாடும் முடிந்தவரையில் ஆக்கிரமிக்கத் தொடங்கியது. வட திசையில் ஸ்பானியர்கள் படையெடுப்பைத் தவிர்க்

[7] ஸ்பானிஷ் மெயின் என்றால் கரிபியன் கடலோரக் கரைகளையே குறிக்கும் எனினும், கரிபியனையே (The Caribbean) சில சமயங்களில் குறிப்பது முண்டு.

[8] 'குடியேற்றத்தின் நோக்கங்கள், குறிக்கோள்கள்பற்றிய உண்மையும் நேர்மையும் நிறைந்த பிரகடனப் ஒன்று வர்ஜினியாவில் முதலில் வெளியிடப் பெற்றது.....அக்குடியேற்றத்திற்கு ஏற்படுத்தப்பெற்ற கவர்னர்களும் கவுன்சிலர்களும் அதிகாரபூர்வமாக அதனை அங்கீகரித்தனர்,' இத்தகவலைத் தந்தவர்: அலெக்சாண்டர் பிரவுன் (Alexander Brown), 'Genesis of the United States (1890), I, 339.

கவும், தென்திசையிலும் கீழ்த்திசையிலும் ஃபிரெஞ்சின் முன்னேற்றத்தைத் தடுக்கவும், 13 காலனிகளிலும் குடியேற்றத்தைத் துரிதப்படுத்தினர். 16, 17ஆம் நூற்றாண்டுகளில் ஸ்பெயின், பிரான்சு, இங்கிலாந்து, ஹாலண்டு நாடுகளின் நான்குமுனைச் சாம்ராஜ்ஜியப் போட்டியின் விளைவாக, அமெரிக்கக் குடியேற்றம் விரைவுற்றது. சமயக் கோட்பாடுகளில் உள்ள வேற்றுமை, அரசியல் கருத்துகளில் பிளவுண்டாக்கிற்று. அதன் விளைவால் புதிய உலகத்தில் மக்கள் குடியேற்றம் தீவிரமாயிற்று.

மதக் கருத்துகள், அரசியல் உள்நோக்கங்கள் ஆகியவற்றை விட முக்கியமான பங்கினைப் பொருளாதார நோக்கங்கள் பெற்றிருந்தன. தூரக்கிழக்கிற்குப் புதுப்பாதைகளைத் தேடியலைந்ததன் விளைவாக அமெரிக்கா கண்டுபிடிக்கப்பெற்றது. அதற்கு அடுத்த நூற்றாண்டில், அக்கண்டத்தினுள் ஊடுருவிச் செல்ல வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு, கார்ட்டியரும், பிரோபிஷரும், டேவிசும் தங்கள் முயற்சியை ஆரம்பித்தனர். மெக்சிகோவில் கார்டெசும் (Cortez, 1519), பெரு என்னுமிடத்தில் பிசாரோவும் (Pizarro, 1531) தங்கத்தையும் வெள்ளியையும் கண்டெடுத்த பின்னர், இச் செல்வத்தைச் சுரண்ட வேண்டும் என்ற துடிப்பு ஸ்பெயினுக்கு ஏற்பட்டது. ஆரம்ப காலத்தில் இவ் விலை மதிக்கொணாத உலோகங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்பதனால்தான் நியூ ஸ்பெயின் (New Spain) உருவாகியது, இங்கிலீஷ் காரர்களுக்கும் இதே ஆசை இருந்தது. ஸ்பானியர்களின் செல்வப் பெருக்கைக் கண்ட இங்கிலீஷ்காரர்களுக்குத் தங்கம் சேர்க்கும் பசி மிகுதியாயிற்று.

அமெரிக்காவிலிருந்து தங்கம் மட்டுமின்றி வேறு மதிப்புள்ள பொருள்களும் கிடைக்கும் என்பதை ஐரோப்பா உணர்ந்தது. கொலம்பசின் கண்டுபிடிப்பிற்கு முன்பே இங்கிலாந்து, பிரான்சு முதலான நாடுகளிலிருந்து மீன் கப்பல்கள் மேல் திசையில் சென்று மீன் பிடித்துள்ளன. 15ஆம் நூற்றாண்டில் பல்வேறு நாடுகளின் மீன் கப்பல்கள் நிறையப் பொருள் ஈட்டியுள்ளன. தோல் வியாபாரம், தங்கத்துடன் சரிசமமாகப் போட்டியிட்டது. மூலப் பொருள்கள் நிறைந்த அமெரிக்கக் கண்டங்களில், சர்க்கரை, புகையிலை, கோகோ, தேக்கு, கப்பல் தொழில்களுக்குரிய பொருள்கள் (தார், கீல், குங்கிலியம், கயிறு, பாய்மரம், தேக்குத் துண்டுகள்), இன்னும் பல கிடைத்தன. ஏகாதிபத்தியத் தாய்நாடுகளின் பட்டறைகளிலும் தறிகளிலும் உருவான முற்றுப்பெற்ற பண்டங்களுக்குக் குடியேற்ற நாடுகள் விற்பனைச் சந்தைகளாயின: இக் குடியேற்ற நாடுகளால் இங்கிலாந்து அடையும் நலன்களைப்பற்றி,

சர் ஜார்ஜ் பெக்கம் (Sir George Peckham) குறிப்பிடுகையில், 'அழிந்த நகரங்களைச் செப்பனிடுவதோடன்றி,[9] கம்பளி எடுப்போர், பஞ்சு கோதுவோர், நூல் நூற்போர், துணி நெய்வோர், சலவைத் தொழிலாளர், ஆட்டு மயிர் அரிவோர், சாயத் தொழிலாளர், துணிவணிகர், குல்லாய், தொப்பி வியாபாரிகள் ஆகியவர்களின் வாணிபமும் வளர வகை செய்துள்ளது அமெரிக்கக் குடியேற்றம்' என்று எழுதியுள்ளார். 1606 ஆம் ஆண்டுக்கு முன்னர், 'வர்ஜீனியாவில் உள்ள ஒரு காலனியை ஆதரிக்கும் முக்தான் நிதி திரட்டவேண்டிய காரணங்கள்' என்ற சிறு வெளியீடு ஒன்று எழுதியவர் ஐரோப்பியப் பண்டங்களுக்குச் சரியான சந்தை அது என்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.[10]

இதுவரையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார நோக்கங்கள் தனியார்துறை, அரசாங்கத்துறை ஆகிய இரு துறையினரின் நலங்களையும் உள்ளடக்கியனவாகும். வேறு பொருளாதாரத் தூண்டுதல்கள் (impulses) தனிப்பட்டோரை இன்னும் நேரிடையாக இயக்கின. அரசாங்க கில்டு (guild) கட்டுப்பாடுகள் நிறைந்த பொருளாதாரத் தடைகளினின்றும் தப்பித்துக்கொள்ளும் ஆசையுடனும், எளிதில் நிலத்தை வாங்கி நிறையப் பொருளீட்டலாம் என்ற நம்பிக்கையுடனும், நிலச்சுவான்தாரர்களால் கசக்கிப் பிழியப்பட்ட உழைப்பின் பலனைத் தானே நுகரலாம் என்ற எண்ணத்துடனும் ஏழை ஐரோப்பியன் குடியேற்றத்தில் நாட்டம் கொண்டான். மேல் வர்க்கத்தைச் சார்ந்த இளைஞர்களும், ஏழ்மை நிலை அடைந்துவிட்ட கனவான்களும் புதிய உலகத்தில் நம்பிக்கை கொண்டனர். அவ்வுலகத்தின் மூலம் வாழ்க்கை மலரும் என்று எதிர்பார்த்தனர்.

16, 17 ஆம் நூற்றாண்டுகளில், இங்கிலாந்தில் மக்கள் தொகை கட்டுக்கடங்காது பெருகிவிட்டது என்ற எண்ணம் இருந்தது. அது உண்மைதான். குடியேற்ற நாடுகள், இம்மக்களை ஏற்றுக்கொண்டு இச்சிக்கலுக்குத் தீர்வுகாணும் என்றும் நம்பினர். மிதமிஞ்சிய மக்கள் தொகையும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஆபத்தானவை என்று தற்காலத்து ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். நோவா பிரிட்டானியாவின் (Nova Britannia) ஆசிரியர் கீழ்க்

9 Sir George Peckham, A True Report of the Late Discoveries..... .....of the Newfound Lands, a rare pamphlet published in 1583, reprinted in Magazine of History with Notes & Queries, Extra No. 68 in Vol. XVII, Extra Numbers (1920), p. 43.

10 E. D. Neill, Virginia Vetusta, p. 30.

கண்டவாறு எழுதுகிறார் : 'தங்களுடைய துயரத்தை துடைப்பதற்கு வழியின்றிப் பிழைப்புக்கு எந்த வேலையும் கிடைக்காததால், சோம்பேறிகளாகி இம்மக்கள் இந்த நாட்டை மொய்த்துக் கொண்டு இருக்கிறார்கள். காமவெறியினால் தூண்டப்பெற்று கேட்ட காரியங்களில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிநாடுகளிலேனும் பிழைப்புக்கு வழிசெய்து தராவிடின், அவர்களை நல்வழிப்படுத்த சிறைச்சாலைகளைக் கட்டவேண்டும். வறுமை, கொள்ளைநோய் இவற்றிற்கு ஆளாகி, பிளேக் போன்ற தொத்து நோயைவிடக் கொடுமையான கெட்ட நடத்தையும் போக்கிரித்தனமும்கொண்ட இம்மக்கள் இவற்றைப் பிறருக்கும் பரப்பி இந்த நாட்டைப் பாழ்படுத்தும் வகையில் மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை ஒதுக்கிவிடுவதே நாட்டிற்கு நலமாகும்.'[11] அரைநூற்றாண்டிற்கு முன் ஏற்பட்ட ஒரு முன்மாதிரியைப் பின்பற்றி, 1572ஆம் ஆண்டு எழுதப்பட்ட சட்டம் ஒன்று, 'காலிகளும், ஊர்சுற்றிகளும், திமிர்கொண்ட பிச்சைக்காரர்களும்' இங்கிலாந்தில் உள்ளனர் என்று முறையிட்டிருக்கிறது.[12] எலிசபெத் இராணியின் ஆட்சிக்காலத்தில்மட்டும் பத்தாயிரம் போக்கிரிகள் இருந்தனர் என்றும், ஒவ்வோர் ஆண்டும் நூற்றுக்கணக்கானவர்கள் தூக்கிலிடப்பட்டனர் என்றும், இன்னும் பலர் கடுந் தண்டனைக்குள்ளாயினர் என்றும் ஒரு செய்தி தெரிவிக்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் நீண்டகாலம் நிலவியதற்குப் பல காரணங்கள் உண்டு. ஏழாம் ஹென்றி காலத்தில் படைமான்ய முறையில் இருந்த சிப்பாய்களைக் கலைத்தமை, இடைக்காலத்தில் நிலச்சுவான்தார் பண்ணைமுறை கொஞ்சங் கொஞ்சமாக அழிந்தமை, மடங்கள் மூடப்பட்டமை, மடங்கள் கொடுத்துதவிய நன்கொடைகள் நின்றமை, விளைச்சல் நிலங்களை ஆடுமாடுகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலங்களாக மாற்றி வேலியிட்டமை, எலிசபெத் இராணி காலத்துப் போர்கள் நின்றமை, இவ்வளவும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணங்களாகும். வழக்கமாகச் செய்துவந்த தொழில்கள் நசித்துவிட்டமையால், அத்தொழில்களைமட்டும் செய்துவந்தவர்கள் வேறு வழியின்றி ஆறலைக்கள்வராகவும், பிச்சைக்காரர்களாகவும் சமூகத்திற்குப் பாரமாகவும் மாறிவிட்டார்கள். ஆதரவற்ற இத்தகை

11 Nova Britannia (1609), reprinted in American Colonial Tracts, Vol. I, No. 6.

12 14 Eliz., Chap. 5. Extract given in George W. Prothero, Select Statutes, pp. 67-69.

யோருக்கு அமெரிக்கா நம்பிக்கை ஊட்டிற்று. அதிகாரத்தில் உள்ளோரும் இவர்களை இழப்பதற்காக வருந்தவில்லை.[13]

அமெரிக்கக் குடியேற்றத்திற்குக் காரணமாய் இருந்தவற்றைச் சரியான முறையில் ஆராய்ந்து பார்க்கத் தற்பொழுது கிடைத்துள்ள ஆதாரங்களை அலசிப் பார்ப்பது அவ்வளவு எளிதன்று. நோக்கங்கள் ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றன. ஒரு காலத்தில் முக்கியமாக எடுத்துச் சொல்லப்பட்ட காரணங்கள் பிறிதொரு காலத்தில் செல்வாக்கற்றுப்போகின்றன. குடியேற்றத்தைப் பிரசாரம் செய்த எண்ணற்ற துண்டுப் பிரசுரங்கள் எல்லா மக்களுக்கும் ஏற்றதான காரணங்களை வெளியிட்டன. முடிவில், அரசராக இருந்தாலும் சரி, கனவானுக இருந்தாலும் சரி, பாமரனுக இருந்தாலும் சரி, பெரும்பாலான மக்களுக்கு அமெரிக்காமீது ஏற்பட்ட காதல் பொருளாதாரக் காரணங்களால் ஏற்பட்டதாகும். வியாபாரிக்கு இலாபநோக்கும் குடியேறுவோனுக்குப் புது உலகத்தில் நல்ல வாழ்க்கை வாழ வழி யுண்டு என்ற நம்பிக்கையும் குடியேற்றம் நிகழ அடிப்படைக் காரணங்களாகும்.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

செய்னி, ஈ. பி. (Cheyney, E. P.), 'European Background of American History,' Chaps. 1-4, 7, 8.

பேக்கர்டு, எல். பி. (Packard, L. B.) The Commercial Revolution.

நெட்டல்ஸ், கர்டிஸ் (Nettels, Curtis), The Roots of American Civilization, Chaps. 1-5.

ஹேக்கர், எல். எம். (Hacker, L. M.), The Triumph of American Capitalism, Chaps. 1-7.

வெப், டபிள்யூ. பி. (Webb, W. P.), The Great Frontier Chap. 1.

[13] See Frederick W. Tickner, Social and Industrial History of England (1915), & Henry D. Traill (ed.), Social England (1910), Vol. III, Index under 'Beggars'.

3. அமெரிக்கக் குடியேற்றம்

ஸ்பெயின் நாட்டுக் குடியேற்ற முறை

வட அமெரிக்கக் கண்டத்தில் ஆதிக்கம் செலுத்த ஸ்பெயின், ஃபிரான்சு, ஹாலண்டு, இங்கிலாந்து ஆகிய நான்கு நாடுகளும் போட்டியிட்டன. இன்றைய ஐக்கிய அமெரிக்காவில் அன்று மேற்குறிப்பிட்ட நான்கு நாடுகளும் காலனிகளைப் பெற்றிருந்தன. ஒவ்வொரு நாடும் அமெரிக்க மண்ணில் தன்னுட்டு உருவத்தையே படைக்க விரும்பியது. ஸ்பெயின் ஒரு புதிய ஸ்பெயினையும், ஃபிரான்சு ஒரு புதிய ஃபிரான்சையும், ஹாலண்டு ஒரு புதிய நெதர்லண்ட்சையும், இங்கிலாந்து ஒரு புதிய இங்கிலாந்தையும் சிருஷ்டிக்க விரும்பின. எனவே, ஒவ்வொரு நாட்டின் நாகரிக முத்திரையை அங்குக் காணலாம். குடியேற்ற நாடுகளின் பொருளாதார வாழ்க்கையை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என்று நான்கு நாடுகளின் ராஜதந்திரிகளும் விரும்பினர்கள். எனினும், இந்த முயற்சியில் மிகத் தீவிரமாக இறங்கிய ஸ்பானிஷ் தாயக அரசாங்கம் தன்னுடைய குடியேற்ற நாடுகளை மிகவும் கட்டுப்படுத்திவிட்டன. 1503லிருந்து 1717 வரையில் தாய்நாட்டிற்கும், குடியேற்ற நாடுகளுக்கும் இடையில் வாணிகம் செவில் (Seville) நகரம் மூலமே நிகழ்ந்தது. ஏற்றுமதியான பண்டங்கள் அமெரிக்காவை அடைந்ததும், மெக்சிகன் கரையிலுள்ள வீரா குரூஸ் (Vera Cruz), பனமா பூசந்தியிலுள்ள போர்டோ பெல்லோ (Porto Bello) ஆகிய துறைமுகங்கள் மூலம் தான் இறக்குமதியாகவேண்டும். வீரா குரூஸ் மெக்சிகோவிற்குத் தேவையான பண்டங்களை இறக்கும்; போர்டோ பெல்லோ தென் அமெரிக்காவிற்கு வேண்டுவனவற்றை இறக்கிக்கொள்ளும்.

1561ல் ஸ்பானிஷ் மெயின் பகுதியில் கடற்கொள்ளை மிக்கிருந்ததால், ஸ்பெயின் அரசாங்கம் ஆண்டுப் போர்க்கப்பல் முறையை ஏற்படுத்தியது. இந்த முறை கிட்டத்தட்ட 200

ஆண்டுகளுக்கு நீடித்தது. ஆண்டுக்கொருமுறை சண்டைக் கப்பல்களின் துணையுடன் இரண்டு கப்பல் தொகுதிகள் மேற்கிந்தியத் தீவுகளை அடைந்து, அங்கு இரண்டாகப் பிரிந்து, ஒன்று வீரா குரூஸ் துறைமுகத்தையும் மற்றொன்று போர்டோபெல்லோ வையும் அடையும். போர்டோபெல்லோவில் கப்பற் கூட்டம் வந்து சேர்ந்தவுடன் ஆண்டுச் சந்தை கூடும். அங்கே பெருவியன் சுரங்கங்களிலிருந்து பெயர்த்து எடுக்கப்பெற்ற வெள்ளிக் கட்டிகள் யாதொரு அச்சமுமின்றித் தொலைந்துவிடுமோ என்ற சந்தேகமுமின்றித் தெருக்களிலே கற்குவியல்கள் போல் கிடக்கும். இவ்வெள்ளிக் கட்டிகளைக் கொடுத்து ஸ்பெயின் நாட்டிலிருந்து இறக்குமதியாகியுள்ள திராட்சை ரசம், அத்திப்பழம், ஆலிவ் எண்ணெய், துணி, இரும்பு, பாதரசம், போகப் பொருள்கள் முதலியவற்றை வாங்கிக்கொள்வார்கள். ஸ்பெயினுக்குத் திரும்பிச் செல்லும் கப்பல்களில் தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் மாத்திரமன்றி, கோக்கினியல் (Cochineal), சர்க்கரை, தோல், மருந்துச் சரக்குகள் முதலியவற்றையும் ஏற்றிச் செல்வார்கள்.

துப்பாக்கி வெடி மருந்து, உப்பு, புகையிலை, பாதரசம் முதலியவற்றில் சர்வாதீனம் வழங்கியும், பண்டங்களுக்கு விற்பனை வரி விதித்தும், சராசரி 15 சதவீதத்திற்கு ஏற்றுமதி-இறக்குமதி வரிகள் விதித்தும், சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் தங்கம், வெள்ளி இவற்றில் ஐந்தில் ஒரு பங்கை ஆதாயப் பங்காக அரசனுக்கு வழங்கியும், வர்த்தகத்தை அரசாங்கம் கட்டுப்படுத்திவிட்டது. ஆலிவ் மரங்கள், திராட்சை, புகையிலை, சணல் முதலியவற்றைப் பயிரிடக் கூடாதென குடியேற்ற நாடுகளுக்குத் தடை விதிக்கப்பெற்றது. குடியேற்ற நாடுகளுக்கிடையிலும் வர்த்தகம் குறைக்கப் பெற்றது. இந்த முழு அமைப்பும் செயற்கையானது. இதன் விளைவாக, இங்கிலீஷ்காரர்களும் டச்சுக்காரர்களும் மேற்கிந்தியத் தீவுகளில் அடியெடுத்து வைத்த பின்னர் வெளிப்படையான கள்ளக்கடத்தல் மூலம் இந்த அமைப்பை உடைக்க முற்பட்டனர். ஸ்பானிஷ் அமெரிக்காவுடன் ஆப்பிரிக்க அடிமை வியாபாரத்தை நடத்த, சர்வாதீன உரிமைகளை இங்கிலாந்து பெற்றது.

ஸ்பானிஷ் அமெரிக்கப் பொருளாதார வாழ்க்கையில் தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களின் பங்கை ஏறுமாறான முறையில் வலியுறுத்துவது எளிது.[1] ஏற்றுமதிச் சரக்குகளில் அவை

[1] தங்கமும் வெள்ளியும் ஐரோப்பாவில் உண்டாக்கிய திருப்பம் மகத்தானது. லத்தீன் அமெரிக்காவிலிருந்தும், மற்றப் புதிய இடங்களிலிருந்தும் அவ்வுலோகங்கள் ஐரோப்பாவினுள் நுழைந்ததால், அவை விலைக்கட்டுமானத்தில் ஒரு புரட்சியை உண்டாக்கியதோடல்லாமல், பொருளாதார

முக்கியமானவை என்றாலும், ஸ்பானிஷ் அரசாங்கம் விவசாயக் குடியேற்ற நாடுகளை நிறுவுவதில் சிலக்கவில்லை; காலனிஸ்டுகளும் அவ் விடமதிக்கொணா உலோகங்களைத் தோண்டி எடுக்கும் தொழிலோடு நின்றுவிடவில்லை, பெரும்பாலான மக்கள் உழவுத் தொழிலையும் கால்நடைப் பண்ணைத் தொழிலையும் மேற்கொண்டனர். இத்தொழில்களினின்று உண்டாகும் கற்றுழை, சர்க்கரை, கோகோ, வேனில்லா (Vanilla), கோசினியல், தோல், தானியம் முதலியன தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களைவிட மதிப்பு உடையவை. சுரங்கத்தொழில், விவசாயம் ஆகிய இவ்விரண்டு அடிப்படைத் தொழில்களைச் சுற்றியே செழிப்பும் செல்வக் கொழிப்பும் கொண்ட நாகரிகம் மலர்ந்தது. ஆனால், வடபகுதியில் இருந்த இங்கிலிஷ்காரர்களும், ஃபிரெஞ்சுக்காரர்களும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் ஊசலாடிக் கொண்டிருந்தனர்.

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நிலத்தினை வழங்கி, அதில் உழைக்க இந்தியர்கள் ஒரு சிலரையும் வழங்கி, விவசாயத்தை நடத்தும் ஒரு பொருளாதார அமைப்புக்குப் பெயர் என்கோமியண்டா (Encomienda) ஆகும். இந்த முறை தொடக்கத்தில் ஸ்பானிஷ் அமெரிக்காவில் நிலவியது. மேற்கிந்தியத் தீவுகளில் கொலம்பசால் ஆரம்பிக்கப்பட்ட என்கோமியண்டா, பின்னர் அமெரிக்கா முழுவதும் பரவியது. இவ்வமைப்பின்கீழ், ஸ்பானிஷ் எஜமானர்களுக்கு உல்லாசவாழ்வு அளிக்கவேண்டி, இந்தியர்கள் நிலத்தை உழுது, ஆடு மாடுகளை மேய்த்து, சுரங்கங்களில் உழன்று சேவை செய்ய வேண்டும். இது கட்டாய உழைப்பாகும். என்கோமியண்டா அமைப்பை ஒரு காலவரம்பிற்குள் கட்டுப்படுத்தவும், இந்தியர்களை நல்ல முறையில் நடத்தவேண்டும் என்று விளக்கமான சட்டங்கள் வகுக்கவும், அவர்களை அடிமைகளாக நடத்தாமல் கிறித்துவ மதத்திற்கு மாற்றவேண்டியும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும், இந்த அமைப்பின் கீழ், அப்பழங்குடி மக்கள் கொடுமைக்குப் பலியாகி, அடிமைகளாகவும் மாறுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். பின் தங்கிய பழங்குடி மக்கள் நிரம்பிய ஒரு பெரும் கண்டத்தை

வளர்ச்சியைப் பலவகைகளில் துரிதப்படுத்தின. மகத்தான எல்லைப்புறம் (The Great Frontier, p. 19) என்னும் நூலில் வெப் (Webb), தங்கம், வெள்ளி இவற்றின் உற்பத்தியின் (1493-1940) மதிப்பு 47,382,316,252 டாலர்கள் என்று கணக்கிட்டிருக்கிறார். 1701 வரையில் உற்பத்தியான தங்கத்தின் மதிப்பை அவுன்ஸ் ஒன்றுக்கு 20.67 டாலர்கள் என்றும் வெள்ளி அவுன்ஸ் ஒன்றுக்கு 1.38 டாலர்கள் என்றும் கணக்கிட்டு, மேலே குறிப்பிட்ட மொத்த மதிப்பைத் தந்துள்ளார். 1701 முதல் 1934 வரையில் சந்தை மதிப்பையும், அவ்வாண்டுக்குப் பின்னர் தங்கம் அவுன்ஸ் 35 டாலர்கள், வெள்ளி 0.8958 டாலர் என்றும் குறிப்பிடுகிறார்.

நாடோடி வீரவாழ்க்கையை மேற்கொண்டு, பொருள் திரட்டும் நோக்கத்துடன் வந்த சிப்பாய்கள் ஒரு சிலர் வென்றார்கள் என்றால். அவர்களுக்குத் தெரிந்த ஐரோப்பிய படைமான்ய அரசு முறையைத்தான் புதிய உலகத்திற்கும் வழங்குவார்கள் என்பது வெள்ளிடைமலை.

இங்கிலிஷ்காரர்கள் இந்தியர்களை அழித்தது போலவோ அல்லது விரட்டியடித்தது போலவோ நடந்துகொள்ளாமல், ஸ்பானிஷ்காரர்கள் அவர்களை அடிமைகளாக்கினர். இந்தியத் தீவுகளின் கவுன்சிலின் சரித்திர ஆசிரியர் வெலாஸ்கோவின் (Velasco) கருத்துப்படி, 1574-ல் புதுஉலகத்தில் 200 ஸ்பானிஷ் நகரங்களும், ஊர்களும், சுரங்கக் குடியேற்றங்களும் இருந்தன. 1,60,000 ஸ்பானிஷ்காரர்கள் இருந்தனர்; அவர்களில் 4,000 பேர் என்கோமெண்டரோஸ் (encomenderos) ஆவர். இந்திய அடிமைகளின் ஆண்டைகள் ஆவர்; மற்றவர்கள் யாவரும் குடியேறியவர்களாகவோ சுரங்கத் தொழிலாளர்களாகவோ, வியாபாரிகளாகவோ, சிப்பாய்களாகவோ இருப்பர். 8,000 அல்லது 9,000 கிராமங்களில் வாழும் இந்திய மக்களின் எண்ணிக்கை 50,00,000 ஆகும். பிளிமவுத் (Plymouth) ஏற்படுவதற்கு அரை நூற்றாண்டிற்கு முன்னர் இதுவே நிலைமை. ஸ்பானிஷ்காரர்களும் இந்தியர்களும் அருகருகே குடியேறியதால், இரு இனங்களும் கலந்து ஸ்பானிஷ்-அமெரிக்க மக்கள் உருவாயினர்.

லத்தீன் அமெரிக்காவில்தான் ஸ்பானிஷ் நாகரிகத்தின் முழுச் சாயலும் படிந்தது. எனினும், இன்றைய ஐக்கிய அமெரிக்காவிலும் ஸ்பானிஷ் நாகரிக அம்சங்களைப் பார்க்கலாம். சிட்ரஸ் பழங்களை புளோரிடா (Florida), கலிஃபோர்னியா (California) பகுதிகளில் விளையச் செய்தவர்கள் ஸ்பானிஷ்காரர்களே. மேற்கிந்தியத் தீவுகளில் சர்க்கரை உற்பத்தி செய்தவர்களும் அவர்களே. தென் மேற்குப் பிரதேசத்தில் கால்நடைப் பண்ணையும் ஆட்டுப் பண்ணையும் நடத்தியவர்கள் அவர்களே. சட்டமும் கட்டடக்கலையும் அவர்களால் மெருகேறியது என்றால் மிகையாகாது. ஸ்பானிஷ் கலாசாரத்தின் தூதுவர்களாக வந்த மத பிரசாரகர்களுடைய பங்கு உன்னதமானது எனலாம். நிரந்தரமான முதல் வெள்ளையர்கள் குடியேற்றத்தை ஏற்படுத்திய நாடு ஸ்பெயின். அமெரிக்காவில் முதன் முதலில் புதுநிலம் தேடும் முயற்சியில் ஈடுபட்ட நாடும் ஸ்பெயின்தான்.

அமெரிக்காவில் ஃபிரான்சு

வெராசனே கடல் பயணத்திற்குப் பின்னர் ஒரு நூற்றாண்டு உருண்டோடி மறைந்தது. 1608-ல் நிரந்தரமான முதல் பிரெஞ்சுக்

குடியேற்றம் கியூபெக்கில் (Quebec) ஏற்பட்டது. புது நிலம் காணும் ஆவலில் பிரெஞ்சுக்காரர்களின் திறமையும் குடியேற்ற நாடுகளை நிர்வகிக்கும் திறமையும் போகப் போக வெளியாயின. நாட்டுணர்ச்சி, விடாமுயற்சி, தங்கள் நாட்டு வியாபாரிகளுக்குப் புதிய சந்தைகளைப் பெறவேண்டும் என்ற வேணவா இவற்றால் உந்தப்பட்டு, ஃபிரெஞ்சுப் பாதிரிமார்களும் மற்ற வீரர்களும் செயின்ட் லாரன்ஸ், பெரும் ஏரிகள், மிசிசிப்பி நதி முதலியவற்றினுள் நுழைந்தும், ஊடுருவிச் சென்றும் ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்டினர். 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஃபிரெஞ்சு ஆதிக்கம் மிசிசிப்பியின் வாயிலில் உள்ள நியூ ஆர்லியன்சிலிருந்து (New Orleans) லேக் சுப்பீரியரின் (Lake Superior) மேல் கரையிலுள்ள ரேடிசன் கோட்டை (Fort Radisson) வரையிலும், கிழக்கே நோவா ஸ்கோஷியோ (Nova Scotio) வரையிலும் பரவியது.

புதிய நிலங்களைக் கண்டுபிடிப்பதில் ஏற்பட்ட வெற்றிகூடக் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தி நிர்வகிப்பதில் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கிடைக்கவில்லை. பிரெஞ்சுக்காரர்கள் குடியேற்றத்தைப் பற்றி அக்கறை காட்டவில்லை. குடியேற்றத்தில் திறமையுள்ள பிராடெஸ்டெண்டுகளை உள்ளே அனுமதிக்கவில்லை. குடியேற்றத்தில் வெற்றி காணுததற்குக் காரணம் பொருட் செல்வம்தான். நியூபிரான்சின் பொருளாதார முதுகெலும்பே ஆட்டுமுடி (fur) வியாபாரம்தான். செயின்ட் லாரன்ஸ் பள்ளத்தாக்கின் வெப்பமான சீதோஷ்ண நிலையும், முரட்டுத்தனமான பூமியும் துடிப்புள்ள பிரெஞ்சுக்காரனைக்கூட வசீகரிக்க முடியவில்லை. உள்நாட்டுப் பகுதிகளில் ஆட்டுமுடி நிறையக் கிடைக்கும். அதைச் சேகரிக்க உள்நாட்டினுள் நுழையும் பிரெஞ்சுக்காரன், இந்தியர்களுடைய பழக்க வழக்கங்களையும் உடையையும் மாற்றிப் போர்ப்பாதையில் அவர்களை இழுத்துச் சென்று, அவர்கள் கூடவே வாழ்ந்து, அவர்களுடன் திருமண உறவும் ஏற்படுத்திக்கொள்வான். இதனால், ஆட்டு உரோம வியாபாரத்தின் பெரும்பகுதி அவன் கைக்கு வந்து விட்டது. இரோகோயிஸ் (Iroquois) என்ற இனத்தாரைத் தவிர மற்ற எல்லா இந்தியர்களும் பிரெஞ்சுக்காரனிடம் அன்புடன் பழகினர். ஆட்டு உரோம வியாபாரம் ஒன்றுதான் நியூஃபிரான்சின் வளத்தைப் பெருக்கும். எனவே, மேல்வர்க்கத்தாரும் விவசாயியும் உரோம வியாபாரத்தில் ஈடுபட்டனர். இந்த வியாபாரத்தில் குறைந்த பட்சம், மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் ஈடுபட்டனர்.

உரோம வியாபாரம் ஒன்றுதான் முக்கியமானதாகக் கருதப்பட்டதால், அதுவே குடியேற்ற நாட்டின்பலவீனத்திற்கும் காரண

மாயிற்று. பதப்படுத்தாத தோல் வியாபாரத்திலேயே நிறைய இலாபம் கிடைத்தமையால், குடியேறிய மக்களுக்கு விவசாயத்தில் ஊக்கம் ஏற்படவில்லை. ஆகவே, நிரந்தரமான காலனி ஏற்படப் பாதுகாப்பான அடிப்படை அமையவில்லை. 1754-ல் இங்கிலிஷ் குடியேற்ற நாடுகளில் 1,80,000 பேர் வசித்தனர்; பத்தில் ஒன்பது பாகத்தினர் விவசாயத்தில் ஈடுபட்டனர். அவர்கள் கடற்கரையோரமான பகுதிகளில் ஒன்றுசேர்ந்து பாதுகாப்புடன் வாழ்ந்தனர். ஆனால், பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளில் 80,000 பேர்களே இருந்தனர்; மிசிசிப்பியிலிருந்து நோவா ஸ்கோஷியா வரையில் உள்ள நதி ஓரங்களிலும், பெரும் ஏரிக்கரைகளிலும் அவர்கள் பிரிந்துகிடந்தனர். அடிப்படைத் தேவைகளுக்கு மட்டும் வழிசெய்துகொண்டு விவசாயத்தைப் புறக்கணித்து விட்டனர். மீன் தொழிலில் கொஞ்சம் நாட்டம் கொண்டனர்; நியூ பிரான்சில் ஒரு தொழிற்சாலையும் கிடையாது; எல்லாத் தொழிலும் வீட்டோடு நின்றுவிட்டன.

1600-லிருந்து 1663 வரையில், பிரெஞ்சுக் குடியேற்றமும் அமெரிக்காவைப் பயன்படுத்துதற்கான முயற்சிகளும் வர்த்தகக் கம்பெனிகள் கையில் இருந்தன. அக் கம்பெனிகளில் மிகப் புகழ் வாய்ந்தது 'நூற்றுறுப்பினர் குழு' (Hundred Associates) ஆகும். அவ்வாண்டிற்குப் பின்னர், காலனிகளின் நிருவாகத்தை பிரெஞ்சு அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அதிகாரக் குவிப்பும் வரம் பின்மையும் உடைய ஒரு வலுவான மத்திய ஆட்சியும் நிறுவப்பட்டது. மேற்குறிப்பிட்ட கம்பெனியின் உரிமைப் பத்திரத்தில் பெரு மக்கள் குடிமுறை (order of nobility) ஒன்றினை ரிச்சிலு (Richelieu) வகுத்தார். பிரான்சு நாட்டின் தன்மூன்பாட்சியின் மறுபதிப்பு குடியேற்ற நாடுகளில் முழுதும் உருவாகியது. பெருமக்கள் குடியினைச் சார்ந்தோரை அமெரிக்காவில் குடியேறத் தூண்டும் வகையில், ஏரிக்கரை ஓரமாகவும் ஆற்றோரமாகவும் அவர்களுக்குப் பெருநிலக்கிழமை (Seigniories) வழங்கினர். பெருநிலக்கிழமை ஏற்பட்டதால், குடியேறிய விவசாய மக்கள் ஆறு, ஏரிகளிலிருந்து அரை மைல் பின்தள்ளி தெருவோரங்களில் வசிக்கலாயினர். அவர்களுடைய நிலங்கள் ஒரு புறத்தில் நீர்த்தேக்கத்தினாலும், மறு புறத்தில் காடுகளினாலும் பாதிக்கப்பட்டன. இத்தகைய நிலமான்யங்கள் நீர்ப்பகுதியில் வழக்கமாக 4 ஆர்ப்பென்சும் (arpents), ஆழத்தில் 10 ஆர்ப்பென்சும் ஆகும். பிரெஞ்சுக்காரர்களுக்கே ஏற்ற முறையில், நிலப்பகுதிகள் நீண்டும் குறுகியும் உள்ளன. அதற்கு இரு காரணங்கள் உண்டு. இந்தியர்களுடன் சுமுக உறவு இருந்ததால், அரண் செய்யப்பட்டு பாதுகாப்பான கிராமக் கோட்டைகள் அமைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் பிரெஞ்சுக்

காரர்களுக்கு இல்லை. மேலும், மனம் விட்டுப் பழகும் பண்பாடு அவர்களுக்கு இருந்ததால் எல்லோரும் நெருங்கியவாறு சேர்ந்தே வாழ்ந்தனர்.

பிரெஞ்சுக் காலனிகளில் பெருநிலக்கிழமை ஏற்பட்ட மூச்சோடு, படைமான்ய முறையும் முழு உருவில் தலையெடுத்தது. குடியானவன், உற்பத்தியிலிருந்து ஒரு சிறு பகுதியைக் குத்தகை-வாரமாகப் (rent) பெருநிலக்கிழாருக்குச் செலுத்த வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு சில நாட்கள் பெருநிலக்கிழாரின் நிலத்தில் வேலை செய்யவேண்டும்; அவருடைய மாவு ஆலையையே பயன் படுத்தவேண்டும்; 11 மீன்கள் பிடித்தால் ஒன்றை அவருக்குக் காணிக்கையாக வழங்கவேண்டும்;மற்றப் பொறுப்புகளும் கடமைகளும் உண்டு. இங்கிலிஷ்காரர்கள் ஆதிக்கம் ஏற்பட்ட பின்னருங்கூட, ஓர் அரை நூற்றாண்டிற்கு படைமான்ய முறையின் எஞ்சிய பல பகுதிகள் நின்று நிலவின என்பது உண்மைதான். எனினும், ஸ்பானிஷ் அமெரிக்காவுடன் நியூபிரான்சை ஒத்துப் பார்க்குமிடத்து, படைமான்ய முறை நிலைத்து நிற்கும் என்று சொல்ல முடியாது. காலி நிலங்கள் நிறைய இருந்தமையாலும், ஆட்டு உரோம வியாபாரம் தலைதூக்கி நின்றமையாலும் படைமான்ய முறை பலக்காது. பெருநிலக்கிழார்களுக்கு விவசாயிகள் ஆற்றவேண்டிய பணிகள் வெறும் பெயரளவில்தான் இருந்தன. மேலும், குடியானவர்களைவிடச் செழிப்பான வாழ்க்கை நிலக்கிழார்களுக்குக் கிட்டியதாகவும் கூறமுடியாது. எனவே, அவர்களே தங்கள் நிலங்களை உழவேண்டிய கட்டாய நிலையும் இருந்தது; அல்லது, ஆட்டு உரோம வியாபாரத்தில் ஈடுபடவேண்டிய அவசியமும் உண்டு. ஃபிரெஞ்சுக் குடியேற்றங்களிலே, பெருநிலக்கிழமை, தன்முனைப்பாட்சி, தந்தையம் எனும் தந்தை சார்புக் கொள்கை (Paternalism) மூன்றும். நிலவின. குடியேறிய மக்கள் தங்கள் சொந்தக் கால்களிலே ஊன்றி நிற்கும் நெஞ்சுறுதியைப் பெருமையால், அவர்கள் அடிக்கடி தாயக அரசாங்கத்திடமிருந்து உதவியை எதிர்பார்த்தனர். எனவே, அவர்கள் காலனிப் பொருளாதாரப் பிரச்சினைகளில் ஊக்கம் காட்டவில்லை, அரசாங்கத்தின் சர்வாதீனத்திலும், வர்த்தகம் கட்டுப்படுத்தப்பட்டமையாலும், தனியார்துறை வளர்ச்சியுறவில்லை. ஆக ஃபிரான்சின் ஆதிக்கத்தில் இருந்த கனடா (Canada) என்றும் செழிப்படைந்ததில்லை. இந்தப் பொருளாதாரச் சூழ்நிலைதான் நியூஃபிரான்சை இங்கிலிஷ்காரர்கள் முடிவில் வெற்றிகொள்வதற்குக் காரணமாய் இருந்தது.

அமெரிக்காவில் டச்சுக்காரர்கள்

அமெரிக்க வர்த்தகத்தில் இலாபம் ஈட்டக் கருதி டச்சுக் காரர்கள் ஹட்சன் பள்ளத்தாக்கில் குடியேறினர். 1609-ல் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு உதவும் நோக்கத்துடன், ஹென்றி ஹட்சன் என்பவர் தம் பெயரால் அழைக்கப்படும் ஹட்சன் நதியைத் துருவி ஆராய்ந்து வெற்றி கண்டார். 1614-ல் புது ஆம்ஸ்டர்டாம் (New Amsterdam) நகரில் அந்நகரத்து வியா பாரிகள் ஒரு வர்த்தக நிலையத்தை ஏற்படுத்தினர். 1621-ல் தனி யார் துறையைச் சார்ந்த டச்சு மேற்கிந்தியக் கம்பெனி அமெரிக் காவில் டச்சுக்காரர்கள்நலனைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டது. ஹாலண்டு நாட்டு ஸ்டேட்ஸ் ஜெனரல் (States General) அக்கம்பெனிக்கு வாணிப சர்வாதீனத்தை வழங்கிற்று. அதன்படி, அமெரிக்கக் கடற்கரைப் பகுதியிலும் ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதியிலும், அக்கம்பெனிக்கு வியாபார சர்வாதீனம் கிடைத்தது. அக்கம்பெனி தங்கம், அடிமைகள், வெப்ப மண்ட லப் பொருள்கள் இவற்றில் வியாபாரம் நடத்தியது; கப்பற் படையும் காலாட்படையும் வைத்திருந்தது. ஸ்பெயின் போர்ச் சுகல் மீது போர் தொடுத்தது; கணக்கற்ற தொழில்களில் ஒன்ருக ஆட்டு உரோம வியாபாரத்தையும் நடத்தியது. எனவே, அதன் டைரக்டர்கள் இப்பள்ளத்தாக்கில் ஆர்வம் காட்டவில்லை. இதை விளக்க, ஸ்பெயினுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டதை எதிர்த்து ஸ்டேட்ஸ் ஜெனரலிடம் அக்கம்பெனி யார் கீழ்க்கண்டவாறு வாதிட்டதையே இங்குக் குறிப்பிடலாம்: 'இந்தியர்களோடு வியாபாரமோ, வசிக்க முடியாத இடங்களில் விவசாயமோ செய்வதல்ல எங்கள் குறிக்கோள். மாருக, ஸ்பெ யின் நாட்டு அரசர், அவர்தம் பிரஜைகள் ஆகியவர்களுடைய கப்பல்களையும், சொத்தையும் சூறையாடுவதுதான் எங்கள் திட்டம்.'[2]

ஹட்சன் பள்ளத்தாக்கில் கம்பெனிக்கு ஊக்கம் ஏற்படவில்லை என்ருலும், வர்த்தகத்தையும் குடியேற்றத்தையும் பொறுத்த வரையில் சில காரியங்கள் நடைபெற்றன. 1622-ல் இன்றைய ஆல்பனி (Albany) பகுதியில் போர்ட் ஆரஞ்சு (Fort Orange) கட்டப்பெற்றது. 1628-ல் மேன்ஹாட்டன் தீவில் (Manhattan Island) ஒரு கிராமம் உருவாகியது; ஹட்சன் பள்ளத்தாக்கில் மாத்திரமன்றி மொஹாக் பள்ளத்தாக்கிலும் (Mohawk Valley), லாங் ஐலண்டிலும் (Long Island), டிலாவேர் விரிகுடாவிலும்

[2] ஜே. ஆர். பிராட்ஹெட் (J. R. Broadhead), Collection of Documents, I, 62.

(Delaware Bay) குடியேற்றங்கள் ஏற்பட்டன. இருந்தபோதிலும், மேற்கிந்தியக் கம்பெனி இலாபப் பங்கீடுகளில்தான் நாட்டம் செலுத்திற்று; குடியேற்ற வேலைகளில் கவனம்கொள்ளவில்லை. ஆட்டு உரோம வியாபாரத்தில்தான் பெருமளவில் இலாபம் கிடைத்தது. எனவே, அந்தத் துறையில் மட்டுமே கம்பெனி முழு நேரம் உழைத்தது. பின்னர், கப்பல் தொழிலும் துவங்கியது. முடிவில் செழிப்பான விவசாய வர்க்கம் தலையெடுத்தது.

நியூ நெதர்லண்ட்சில் முதலில் விவசாயத்தைக் குடியான வர்கள் துவக்கவில்லை. கம்பெனியின் பணியாட்கள்தாம் துவக்கினர். வியாபார நிலையங்கள் ஏற்பட்டபின்னர், கம்பெனியார் குடியேற்ற வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டனர். 1629-ல் நில உடைமையாளர்கள் திட்டம் உருவாகியது. சொந்தச் செலவில் 50 பேர்களைக் கொண்டுவரும் ஒவ்வொரு கம்பெனி உறுப்பினருக்கும் ஆற்றின் ஒரு கரையில் 16 மைல் நீளத்திற்கு ஒரு நிலப்பகுதி வழங்கப்பெறும்; அல்லது, ஒரு பாதி ஒரு கரையிலும் மறுபாதி எதிர்க் கரையிலும் வழங்கப்பெறும். அகலத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதக் கட்டுப்பாடும் கிடையாது. இந்தத் தூண்டுதலால், ஆம்ஸ்டர்டாம் நகை வியாபாரி கில்லியன் வான் ரென்சுலேயர் (Killian Van Rensselaer) உட்பட பல பணக்கார டச்சுக்காரர்கள், ஹட்சன் பள்ளத்தாக்கில் பெரிய அளவில் எஸ்டேட்டுகளை உருவாக்கிக்கொண்டனர். இந்த நிலப் பிரபுக்களுக்கு நிலவுடைமை உரிமைகள் வழங்கப்பெற்றன; கீழடங்கிய அதிகாரவரம்பும் வரையறுக்கப்பெற்றது. இவர்கள் நிலச்சுவான் நீதி மன்றங்கள் நடத்தலாம். அம்மன்றங்களில் நீதி கிடைக்காவிடில், கம்பெனிக்கு அப்பீல் செய்துகொள்ளும் உரிமை குடியானவர்களுக்கு வழங்கப்பெற்றது. நகரங்களை ஏற்படுத்தி அதிகாரிகளை நியமனம் செய்யும் உரிமை நிலப் பிரபுக்களுக்கு அளிக்கப்பெற்றது. இன்னும், தங்கள் எஸ்டேட்டுகளில் நெசவுத் தொழில்களுக்கான சர்வாதீனமும் வியாபாரத் தனிச் சலுகைகள் சிலவற்றையும் பெற்றனர். பிரெஞ்சுக்காரர்களையும் ஸ்பானிஷ்காரர்களையும் போலவே இவர்களும் ஐரோப்பாவின் படைமான்ய அமைப்பைப் புது உலகத்தில் ஓட்டவைக்க முயன்றனர். இந்த முறையின்கீழ் ஹட்சன் பள்ளத்தாக்கில் மிகச் சிறந்த நிலங்களைச் சில செல்வாக்கு மிக்க கம்பெனி உறுப்பினர்கள் கைப்பற்றினர். 19ஆம் நூற்றாண்டு வரையில் நியூயார்க்கில் இருந்த மிகப்பெரிய எஸ்டேட்டுகள் ஏற்படக் காரணம் இதுதான். நியூயார்க் மாநிலத்தின் பொருளாதார வல்லாற்றலிலிருந்து, பெரும் எஸ்டேட்டுகளை உடைய நிலப் பிரபுக்களின் செல்வாக்கினை நன்கு உணர முடியும். 1830ஆம் ஆண்டிலிருந்து 1850ஆம் ஆண்டு வரையில்

அவ்வப்பொழுது கிளம்பிய குத்தகை வார எதிர்ப்புப் போர்கள் நிலப்பிரபுக்களின் ஆதிக்க வெறியின் தன்மையை நன்கு படம் பிடித்துக் காட்டும்.

படைமான்ய அமைப்பு முழுமையையும் டச்சுக்காரர்கள் எப்பொழுதும் ஏற்றுக்கொண்டதில்லை. எனவே, கம்பெனியும் நிலப் பிரபுக்களும் வகுக்கும் சட்ட திட்டங்கள் அவர்களுக்கு ஒத்து வரவில்லை; அடிக்கடி மோதல் ஏற்பட்டது. துவக்கத்திலிருந்து இந்த அமைப்புக்குச் செல்வாக்கில்லை. 1940-ல் இந்த அமைப்பைக் கம்பெனி சிறிது திருத்தியது. அதன்படி, சொந்தச் செலவில் 5 பேரைக் கொண்டுவரும் ஒவ்வொருவருக்கும் 200 ஏக்கர்கள் கொண்ட நிலம் வழங்கப்படும். இந்த முறையின்படி, கம்பெனி ஒரு சிறிய நில உடைமையாளர் வர்க்கத்தைப் படைக்க விரும்பியது. மீண்டும் 1650-ல் சிறு விவசாயிகளின் எண்ணிக்கையைப் பெருக்க முயற்சி எடுக்கப்பெற்றது. குடியேறும் ஒவ்வொரு வருக்கும், நிலத்துடன் உழவுக் கருவிகளும், ஒருசில பண்ணை மாடுகளும் வழங்கப்பெற்றன. அதற்கு மாறுக அவர் ஒரு குறிப்பிட்ட குத்தகை வாரம் தந்துவிடவேண்டும். இவ்வாறு வழங்கப்பட்ட பண்ணை மாடுகளை எல்லாம் 6 ஆண்டுகளுக்குப் பின்னர் திருப்பித் தந்துவிடவேண்டும். பொதுவாக, நியூ இங்கிலாந்தில் இருந்ததுபோலவேதான் விவசாயப் பண்டங்களும் வாழ்க்கையும் அமைந்திருந்தன. ஹட்சன், டிலேவர் விரிகுடாப் பகுதிகளில் இருந்த பெரும் எஸ்டேட்டுகளில் எல்லாம் புகையிலைதான் அதிக மாக விளைந்தன. எனவே, அப்பகுதியிலுள்ள குடியேற்றங்கள் வர்ஜினியாவை ஒத்திருந்தன.

சுயேச்சையான அதிகார வரம்பைப் பெற்றிருந்த நிலமான்ய முறையைப் புகுத்திய பின்னரே, 1629-க்கு முன் இருந்த நியூ நெதர்லாண்ட்சின் அதிகாரங்கள் குவிந்த தன்முனைப்பாட்சியின் அரசாங்கத்தில் சில திருத்தங்கள் ஏற்பட்டன. ஆனால், டச்சு ஆதிக்கத்தின் கடைசிக் காலம் வரையில் அங்குப் பிரதிநிதித்துவ ஆட்சிமுறை ஏற்படவில்லை. அதே நேரத்தில் திறமைக் குறைவும், முழுமைபெருத படைமான்ய முறையின் ஆதிக்கமும், அக் குடியேற்ற நாட்டைப் பல வெளிநாட்டுப் படையெடுப்புகளுக்கு இரையாக்கின. நியூ இங்கிலாந்தில் உள்ள இங்கிலிஷ் குடியேற்ற நாடுகளுக்கும் தென் பகுதிக்கும் இடையில் மாட்டிக்கொண்ட ஆப்புபோல் நியூ நெதர்லண்ட்ஸ் அமைந்திருந்ததால் ஆங்கிலேயர்கள் அதன்மீது ஒரு கண் வைத்திருந்தார்கள். டச்சுக்காரர்கள் மத சகிப்புத்தன்மை உடையவர்கள்; அமெரிக்காவில் அச் சகிப்புத் தன்மையைப் போற்றி முதன் முதலில் மத சுதந்திரம் வழங்

கியவர்கள் அவர்களே. எனவே, கிழக்கிலிருந்து வந்து குடியேறிய ஆங்கிலேயர்கள், ரோடு ஐலண்டைத் தவிர நியூ இங்கிலாந்தின் வேறு எந்தப் பகுதியிலும் மத உரிமையுடன் குடியேற வாய்ப்பில்லாததால், டச்சுக் குடியேற்ற நாடுகளினுள் நுழைந்தனர். ஆங்கிலேயர் நுழைவு, தாயகத்துக் கம்பெனியின் ஆர்வமின்மை, காலனியின் ஊழல்மிகுந்த கொடுங்கோலாட்சி, வளர்ந்துவரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கடற்பலம் முதலிய சக்திகள் ஒன்றுசேர்ந்து 1664-ல் டச்சு ஆதிக்கத்தை வீழ்த்திவிட்டன. டச்சுக் காலனிகள் ஆங்கிலேயர்கள் கைக்கு மாறின. நியூ நெதர்லாண்ட்சை ஆங்கிலேயர்கள் கைப்பற்றியபொழுது, ஸ்டுய்வெசன்டு (Stuyvesant) கணக்குப்படி, அப்பகுதியில் 10,000 பேர்களே இருந்தனர். புது ஆம்ஸ்டர்டாமில் 19 மொழிகள் வழக்கில் இருந்தன. எனவே, அந்நகரம் பரந்த நோக்கங்கள் கொண்ட பண்பாட்டின் நிலைக்களனாயிற்று.

துவக்ககால ஆங்கிலேயக் குடியேற்றம்

குடியேற்றத்திற்கும், புதுநிலம்காணும் முயற்சிக்கும் எலிசபெத் இராணி (Queen Elizabeth) காலத்திய இங்கிலாந்து நல்ல பக்குவம் பெற்றிருந்தது. பலம்பொருந்திய டியூடர் கோனுட்சி (Tudor Monarchy) படைமான்ய பிரபுத்துவத்தை அழித்து, மதத்தினுடைய அரசியல்-பொருளாதார ஆதிக்கத்தை உடைத்து, வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்குச் செல்வாக்கை வழங்கியது. நாட்டு ஆட்சி வலுப்பெற்று, பொருளாதார வாழ்க்கை வளம் பெற்று வருகையில், சுயேச்சையாகத் தன் காலிலேயே ஊன்றி நிற்கும் ஒரு மக்கள் கூட்டம் கிளம்பியது. இங்கிலாந்தினுடைய எதிர்காலத்தில் நம்பிக்கையுடன், ஸ்பெயின் நாட்டுக் கடலாதிக்கத்திற்குச் சவாலிட்டு, வியாபார வளர்ச்சியிலே பங்குகொள்ள அக்கூட்டம் துடிதுடித்தது. தங்கள் எதிரிகளைப் புறமுதுகிடச் செய்யவும், ஸ்பானியர்களைத் தாக்கி அவர்களது தங்கம், வெள்ளிப் பாளங்களை அபகரிக்கவும், அவர்கள் நகரங்களை அழிக்கவும் சர் ஜான் ஹாக்கின்ஸ் (Sir John Hawkins), சர் பிரான்சிஸ் டிரேக் (Sir Francis Drake) முதலியவர்கள் ஸ்பெயின் நாட்டுக் கடற்கரையில் அலைந்து திரிந்தார்கள். அதேநேரத்தில் மிகவும் பொறுப்புமிக்க ஏகாதிபத்தியவாதிகள் மேற்கத்திய சூன்யத்திலே குடியேற்றங்களை உண்டாக்கக் கனவு கண்டுகொண்டிருந்தனர். வில்லியம் ஹாக்லூயிட் (William Hakluyt) போன்றவர்கள் ஆங்கிலேய மாலுமிகளுடைய கடற்பயணங்களைப்பற்றிய செய்திகளைத் திரட்டி, வெளிநாட்டுக் குடியேற்றங்கள் எவ்வாறு இங்கிலாந்தினுடைய சமூக—பொருளாதார—அரசியல் மேம்பாட்டிற்கு வழிகோலும

என்பதை விளக்கித் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டனர். அவ் வெளியீடுகளின் மூலம் புது உலகத்தில் நல்வாழ்வும் பொருளும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏழை, பணக்காரர் என்னும் இரு சாராரிடையிலும் கொளுத்திவிட்டனர்.

ஆங்கிலேயர்களின் முன்னேற்றத்திற்குத் தனிப்பட்டவர் களே முயற்சி எடுத்ததுபோல, ஆங்கிலேயக் குடியேற்றத்திற்கும் தனிப்பட்டோரின் தூண்டுதலே காரணமாய் இருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் எந்த விதமான உதவியும் செய்யவில்லை. டியூடர்கள், ஏழாம் ஹென்றி, எலிசபெத் இராணி முதலியவர்கள் குடியேற்றத் தைச் சொல்லளவில் ஆதரித்தார்களேயன்றி, வேறு எந்த வித உதவியும் செய்யவில்லை. விக்டோரியாவின் காலத்தில் ஆட்சி புரிந்த ஸ்டுவர்ட்டுகளும் (Stuarts), முதலாம் ஜேம்சும் (James I), முதலாம் சார்லசும் (Charles I) எப்பொழுதும் பணத் தட்டுப்பாட் டிற்கு இலக்காயிருந்தனர். எனவே, அவர்கள் வரிவிதிக்கும் திட்டத்தில் பாராளுமன்றத்துடன் தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தார்கள். எந்தச் செலவும் ஏற்படாமல் இருந்தால் குடியேற்றத்தில் அவர்கள் ஊக்கம் காட்டுவார்கள். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிகளிலும் குடியேறிய பகுதிகளிலும் ஆட்சிப் பொறுப்பும், அரசியல் அதிகார வரம்பும் தங்களையே சாரும் என்று ஆங்கிலேய அரசர்கள் கருதினர்கள். இவ்வுரிமை களைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கத்துடனும், குடியேற் றத்தை ஆதரிக்கும் நோக்கத்துடனும், அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகளாக உள்ள பெருமக்களுக்கு, புது நிலங்களை ஊடுருவிச் சென்று குடியேற்றங்களை ஏற்படுத்தும் உரிமைப் பத்திரங்களை மன்னர்கள் வழங்கினர்கள். இந்த ஏற்பாடு அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்தது; அவர்களுடைய அதிகாரத்தைப் பலப்படுத்தியது; அவர்களுடைய செல்வத்தையும் நாட்டின் செல்வத்தையும் பெருக்கிற்று. ஆனால்; அதே நேரத்தில் அரசாங் கத்திற்கோ அல்லது அரசருக்கோ எந்தவிதச் செலவும் ஏற்பட வில்லை.

1496-ல் முதல் உரிமைப் பத்திரம் ஜான் காபட் (John Cabot) அவர்களுக்கு வழங்கப்பட்டது. 1682-ல் பென்சில்வேனியா குடியேற்றம் ஏற்பட்டது. இதற்கிடையில் அரசாங்கத் திட்டத் தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. காபட்டின் கடற்பய ணங்கள் (1497-1498) வடஅமெரிக்காவில் இங்கிலாந்தின் ஆதிக்கம் ஏற்பட அடிகோலியது. அவருடைய முயற்சிக்கு பிரிஸ்டல், லண்டன் ஆகிய நகரங்களின் வியாபாரிகள் பொரு ளுதவி செய்தனர். தாங்கள் கண்டுபிடித்த நிலப்பகுதிகளில் எந்த

வியாபாரத்தையும் நடத்தும் சர்வாதீனத்தை காபட்டிற்கும், அவருடைய குழந்தைகளுக்கும், சந்ததிகளுக்கும் அரசாங்கம் வழங்கியது. ஆனல், இலாபத்தில் ஐந்தில் ஒரு பங்கை மன்னருக்குத் தரவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பெற்றது. ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் 1578-ல் மீண்டும் ஆங்கிலேயர்கள் குடியேற்ற முயற்சியில் ஈடுபட்டபொழுது, எலிசபெத் ராணி திருவீர விருது பெற்ற சர் ஹம்ப்ரே கில்பர்ட்(Sir Humphrey Gilbert)அவர்களுக்கு ஒரு தனித்தஉரிமையை வழங்கினர்.அதன்படி, எந்தக் கிறிஸ்துவ அரசனின் ஆதிக்கத்திலும் இல்லாததும், வேற்று மதங்களைச் சார்ந்ததும், தொலைவில் உள்ளதும் ஆகிய எந்த நிலப்பகுதியையும் கில்பர்ட் கைப்பற்றித் தன்வசம் வைத்துக்கொள்ளலாம். ஆனல், அப்பகுதிகளில் கிடைக்கும் தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்களில் ஐந்தில் ஒரு பகுதியை ராணிக்குக் காணிக்கையாகச் செலுத்திவிடவேண்டும். கில்பர்ட் இரண்டு கடற்பயணங்களை மேற்கொண்டார்; அவருடைய முதல் பயணத்தைப் புயல் தகர்த்துவிட்டது; அவருடைய இரண்டாவது பயணம் (1583) நியூ பவுண்டுலாந்து (New foundland) பகுதியில் ஒரு சிறு காலனியை ஏற்படுத்தியது. அக்காலனியும் விரைவில் மறைந்து விட்டது.

1584-ல் எலிசபெத்ராணி, கில்பர்ட்டின்தந்தைவழிச் சகோதரனுகிய சர் வால்டர் ராலே (Sir Walter Raleigh) அவர்களுக்கு உரிமைப் பத்திரம் ஒன்றை வழங்கினர். ராலே ஐந்து தடவைகள் நிலந்தேடும் குழுவினை அமெரிக்காவிற்கு அனுப்பினர்; £40,000 செலவு செய்தும் ஒரு பயனும் விளையவில்லை. 1587-ல் சென்ற மூன்றாவது குழு, வர்ஜீனியா கரையிலிருந்து தொலைவில் இருந்த ரோனோக் தீவில் (Roanoke Island) ஒரு காலனியை ஏற்படுத்தியது. இச்சிறு முயற்சியை இங்கிலாந்து புறக்கணித்ததால் இக்காலனியும் மறைந்தது. என்றாலும், ராலேயின் முயற்சிகள் வீணுகிவிடவில்லை; சொந்தப் பணத்தைச் செலவுசெய்து குடியேற்றத்தை ஆரம்பிப்பது இயலாத காரியம் என்பதை அவரது முயற்சி நிரூபித்துவிட்டது

ராலேயின் முயற்சி தோல்வியடையவே, ஒருசில முதலாளிகள் ஒன்றுசேர்ந்து கூட்டுப் பங்குக் கம்பெனி மூலமாக மீண்டும் முயன்றனர். கிழக்கிந்திய வர்த்தகத்தின் வெற்றியைக் கண்ட இவர்கள், அமெரிக்காவிலும் எல்லைப்புறத் தளம் அமைத்து, வர்த்தகர்களும், தங்க உலோக வேட்டையாளர்களும் இந்தியாவில் கொள்ளை யடித்ததுபோல் தாங்களும் பொருள் சேர்க்கலாம் என்று கனக்கண்டார்கள். வர்ஜீனியா உரிமைப் பத்திரம் (1606)

இரண்டு கம்பெனிகளைப் படைத்தது; லண்டனையும், மற்றப் பகுதி களையும் சேர்ந்த 'திருவீரர்கள், கனவான்கள், வியாபாரிகள், மற் றும் சில நாடோடி வீரவாழ்வினர் இவர்களைக் கொண்ட கம்பெனி ஒன்று; பிரிஸ்டல், எக்சீட்டர் (Exeter), பிளைமவுத் முதலிய நகரங் களைச் சேர்ந்த 'திருவீரர்கள், கனவான்கள், வியாபாரிகள், மற்றும் சில நாடோடி வீரவாழ்வினர்' இவர்களைக் கொண்ட மற்றொரு கம்பெனி; இவ்விரு பங்குதாரர் குழுக்களை, லண்டன் கம்பெனி, பிளைமவுத் கம்பெனி என்பர். இன்றைய ஐக்கிய அமெரிக்காவின் கடற்கரையை வியாபார நிமித்தம் இவ்விரு கம்பெனிகளுக்கும் மன்னர் வழங்கினர். 34 முதல் 41 ஆவது அட்சரேகைவரையில் உள்ள பகுதியை லண்டன் கம்பெனிக்கும், 38 முதல் 45 ஆவது அட்சரேகைவரையில் உள்ள பகுதியை பிளைமவுத் கம்பெனிக்கும் வழங்கினர். ஒரு கம்பெனிக்கும் மற்றொன்றுக்கும் இடையில் 100 மைல் இடைவெளி இருக்கவேண்டும என்ற நிபந்தனையின் பேரில் 38 முதல் 41-வது அட்சரேகைவரையில் உள்ள பகுதியை எந்தக் கம்பெனியும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் உத்தரவு போட்டார். மெயினில் (Maine) உள்ள கென்னிபெக் நதி (Kennebec River) ஓரத்தில் பிளைமவுத் கம்பெனி ஏற்படுத்திய காலனி திருப்திகரமாக இல்லை. 1607-ல் ஜேம்ஸ் நதிக்கு 30 மைலுக்கு மேல் லண்டன் கம்பெனி ஏற்படுத்திய காலனி சிறந்த முறையில் நிரந்தரமாக அமைந்தது. வியாபாரச் சர்வாதீனங்களையும், குடி யேற்றச் சலுகைகளையும், அரசாங்கம் ஏற்படுத்தும் உரிமையையும் ஐரோப்பிய மன்னர்களிடமிருந்து முதன் முதலில் பெற்ற கம்பெனிகள் லண்டன், பிளைமவுத் கம்பெனிகள் தாம் என்று சொல்ல முடியாது. 1554-ல் மஸ்கோவி கம்பெனியும் ((Muscovy Company), 1600-ல் கிழக்கிந்தியக் கம்பெனியுமாக ஏழு கம்பெனிகள் இச்சலு கைகளைப் பெற்றன. இவ்வேழு கம்பெனிகளும் இங்கிலாந்தில் மட்டுமே ஏற்பட்டவை. தனியார் துறைக் கம்பெனிகளுக்குச் சர்வா தீனங்களை வழங்கி, நிதிபற்றிய இடர்ப்பாடுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதே, வடமேற்கு ஐரோப்பாவைச் சார்ந்த மன்னர்களு டைய பழக்கமாகும்.

நிதி நிலைமை மங்கியதாலும், வர்த்தகம் செழிக்காததாலும், தங்கம் கிடைக்காததாலும் ஜேம்ஸ் டவுனில் குடியேறியவர்கள் தொல்லைப்பட்டனர். 1609-ல் வழங்கப்பெற்ற புது உரிமைப் பத்தி ரம் லண்டன், பிளைமவுத் கம்பெனிகளைத் தனித்தனியாகப் பிரித்து, வர்ஜீனியா தொழில் துணிவை ஓர் உண்மையான கூட்டுப் பங் குக் கம்பெனியாக மாற்றியதால், நிதிபற்றிய தொல்லை ஒழிந்தது. ஒரு பங்கின் மாற்று மதிப்பு 12 பவுன் 10 ஷில்லிங்கு ஆகும். இம் மாற்று மதிப்பு ஓர் ஆளை அழைத்துச் சென்று குடியேற்றுவதற்கு

ஆகும்செலவை ஈடுகட்டும். எல்லாப்பங்குதாரர்களுக்கும் ஊதியப் பங்கும் நிலக்கொடையும் உண்டு. பங்குகள் மூலம் சேர்க்கப்பட்ட முதலைக் கொண்டு கம்பெனி அமெரிக்காவில் மக்களைக் குடியேறச் செய்யும். குடியேறும் மக்கள் கம்பெனிக்கு 7 ஆண்டுகள் உழைக்க வேண்டும்; இக்காலவரம்பு முடிந்தவுடன், பண்படுத்தப்பட்ட நிலத்திலிருந்து பங்குதாரர்களுக்குப் பங்கு ஒன்றுக்கு 100 ஏக்கர் வீதம் நிலம் வழங்கப்பெறும்.

அதே நேரத்தில் கம்பெனியின் உரிமைகள் தெளிவாக வரையறுக்கப்பெற்றன. நாட்டின் இயற்கை வளங்கள் கம்பெனியின் ஆதிக்கத்தில்தான் இருக்கும். குறிப்பிட்ட அளவுக்கு ஏற்றுமதி இறக்குமதி வரிகளைப் போடும் உரிமையையும் கம்பெனி பெற்றது. இருபது ஆண்டுகளுக்கு வர்ஜீனியாவில் இறக்குமதியாகும் சரக்குகளுக்குக் கம்பெனி வரி செலுத்தவேண்டியதில்லை. ஆனால், இங்கிலாந்தில் இறக்குமதி செய்யும் பண்டங்களுக்குக் கம்பெனி 5 சதவீதம் வரி செலுத்தவேண்டும். இதற்கு ஈடாக நாட்டில் குடியேற்றம் செய்வது கம்பெனியின் பொறுப்பாகும். கிடைக்கும் தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களில் ஐந்தில் ஒரு பங்கைக் கம்பெனி அரசனுக்குச் செலுத்தவேண்டும். இத்தகைய கவர்ச்சிகளும் போதுமான அளவுக்கு முதலை உண்டாக்கவில்லை. எனவே, 1612-ல், குலுக்குச் சீட்டின் மூலம் முதல் சேகரிக்கும் உரிமையை அரசன் கம்பெனிக்கு வழங்கினன். முடிவில், சொந்தச் செலவில் புத்துலகம் வந்து குடியேறுபவர்களுக்கும், குடியேற்றத்தைப் பெருக்குபவர்களுக்கும் வர்ஜீனியாக் கம்பெனி நிலக்கொடை வழங்கியது. இந்த முறையில் குடியேற்றம் பெருகியது.

1624-ல் உரிமைப் பத்திரத்தை இழந்து, கம்பெனி திவாலாகும்வரையில், குடியேற்றங்களில் பெரும்பாலானோர் பணியாட்களே. அவர்கள் குடியேற்றத்திற்காகிய செலவினையும் கம்பெனியே ஏற்றுக்கொண்டது. உருவாக்கிய காலனி ஓர் உண்மையான குடியேற்றமாகும். வர்ஜீனியா குடியேற்றத்தை உருவாக்க ஏற்பட்ட செலவில் ஒரு சிறு பகுதியைத்தான் கம்பெனி, லம்பர் (lumber), மற்றக் காட்டுப் பொருள்களைக் கப்பல் கப்பலாக இங்கிலாந்தில் இறக்கியதிலிருந்து பெற்றது. வர்ஜீனியா கம்பெனியின் பங்குதாரர்களுக்கு அக்கம்பெனி ஒரு பெரிய நிதி இழப்பாகத்தான் தோற்றமளித்தது. எனினும், உலக வரலாற்றில் அதன் பங்கு மகத்தானது. ஆங்கிலேய உலக வல்லரசையும், அமெரிக்க நாட்டையும் படைத்த பெருமை அதற்குண்டு.

பிளிமவுத் மதப் பிரிவாளர்கள் (Separatists) புத்துலகில் கண்ட குடியேற்றமே நிரந்தரமான இரண்டாம் குடியேற்றமாகும். பொருளாதார மேம்பாட்டிற்கும், தங்கள் மனச்சாட்சிக்கு ஒத்த ஆண்டவனைத் தொழுவதற்கும் அமெரிக்காவில் வாய்ப்பு இருக்கும் என்ற நம்பிக்கையில், அவர்கள் குடியேற்றத்திற்கு வர்ஜீனியா கவுன்சிலின் ஒத்துழைப்பை நாடினர். வர்ஜீனியா கம்பெனியும் அவர்களுக்கு ஓர் உரிமைப் பத்திரம் வழங்கியது. அப்பத்திரம் தற்பொழுது சர் எட்வின் சாண்டிஸ் (Sir Edwin Sandys), மதத் தூய்மையாளர்கள் ஆகிய இவர்கள் கையில் உள்ளது. அப்பத்திரத்தின்படி, பிளிமவுத் மதப்பிரிவாளர்கள் இங்கிலாந்தில் உருவாக்கிக்கொண்ட சட்டதிட்டங்களின்படி குடியேற்றத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம். குடியேற்றத்திற்காகும் செலவை அவர்களே கவனித்துக்கொள்ள வேண்டும். கடைசியில், அம்முயற்சிக்குத் தேவையான £7,000-ஐ எழுபது லண்டன் வியாபாரிகள் வழங்கினர்கள். பிளிமவுத் குடியேற்ற ஒப்பந்த ஷரத்துகளின்படி (Articles of Agreement of Plymouth Plantation), ஒவ்வொரு பங்கின் மதிப்பும் £10 ஆகும். தானே குடியேறச்செல்லும் ஒவ்வொரு வீரனுக்கும் ஒரு பங்கு உண்டு; அதற்குமேல் எவ்வளவு பங்குகள் வேண்டுமானாலும் அவன் வாங்கலாம். ஏழாண்டுகளுக்குக் காலனிஸ்டுகள் உற்பத்தி செய்யும் எல்லாப் பொருள்களும் பொதுவில் வைக்கப்படும். அதிலிருந்தும், லண்டன் வியாபாரிகள் அனுப்பும் பண்டங்களிலிருந்தும் காலனிஸ்டுகளுக்கு உணவு, உடை, மற்றத் தேவைகள் வழங்கப்படும். ஏழாண்டுகள் முற்றுப்பெற்றதும், முதலாகவும் இலாபங்களாகவும்குவிந்தவீடுகள், நிலங்கள், பண்டங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் முதலியவை குடியேற்றவாதிகளுக்கும், நாடோடி வீரவாழ்வினருக்கும் (Adventurers) இடையே பகிர்ந்து அளிக்கப்படும். ஒவ்வொருவனும் மற்றவனுக்குக் கடனாளியாகாமல் இருக்கும் உரிமை கிடைத்தது.[3] ஏழாண்டுகள் கழிவதற்கு முன்னர் காலனிக்கு வந்து சேர்ந்தவர்கள், தாங்கள் செலவழித்த காலவிகிதாசாரத்தில் பொருள்களில் பங்கு பெறுவர். வர்ஜீனியா கம்பெனியின் செலவில் குடியேறியவர்கள், கம்பெனியின் பணியாட்கள் ஆவர்; அன்னோர் ஏழாண்டுகளுக்குப் பின்னர் உரிமை மட்டுமே பெறுவர். ஆனால், பிளிமவுத் காலனிஸ்டுகள் அனைவரும் ஒரு கம்பெனியின் பங்குதாரர்கள் ஆவர்; அக்கம்பெனிக்காக அனைவரும் உழைத்துக் கிடைக்கும் இலாபத்தில் அவர்கள் பங்கு பெறுவர். மேலும், பிளிமவுத் கம்பெனியின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும்அதிகாரிகள், இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட

[3] William Bradford, 'History of Plymouth Foundation' (Commonwealth of Massachusetts edition), pp. 56-58.

பிரதிநிதிகள் அல்லர்: மாறுக, கம்பெனியாராலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இந்தநிலை வர்ஜீனியா கம்பெனிக்குக் கிடையாது. பிளிமவுத் கம்பெனி ஒரு பொதுப்படையான ஏற்பாட்டை வகுத்துக் கொண்டதுபோல், வர்ஜீனியா கம்பெனி வகுத்துக்கொள்ளவில்லை. எனவே, வர்ஜீனியா கம்பெனி அடிநாட்களில் தொல்லைப்பட்டதைப்போல், பிளிமவுத் கம்பெனி தொல்லைப்படவில்லை.

பிளிமவுத் காலனிஸ்டுகளிடமிருந்து உடனடியாகப் பெருமளவு இலாபத்தை வியாபாரிகள் எதிர்பார்த்தனர். காலனிஸ்டுகள் தங்கள் முழு நேரத்தையும் செலவழித்துங்கூட, கரடுமுரடான பூமியிலிருந்து பிழைப்பதற்குத் தேவையான பொருள்களைக்கூட உற்பத்திசெய்ய முடியவில்லை. ஆட்டு ரோம வியாபாரத்தின் மூலமாகவும், மீன்தொழில் மூலமாகவும் கொஞ்சம் இலாபம் கிடைத்தது உண்மைதான். ஆனால், பங்குதாரர்களுக்கு ஊதியப் பங்கு தருமளவுக்கு இலாபம் பெருகவில்லை. காலனிஸ்டுகள் நிலை இதுவெனில், லண்டன் பங்குதாரர்கள் நிலையும் சரியில்லை. புதிதாகச் சென்று குடியேறியவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அவர்களால் பண்டங்கள் அனுப்ப இயலவில்லை. வர்ஜீனியாவைப்போலவே பிளிமவுத்திலும் கூட்டுறவுத் தொழில் திட்டமும், பொதுக்கிடங்கும் (common store) முன்னேற்றப் பாதையில் குறுக்கிட்ட தடைகள் ஆயின. மூன்றும் ஆண்டில் பஞ்சம் ஏற்பட்டவுடன், விவசாயத்தைப் பொறுத்தவரையில் இந்த முறை ஒழிந்தது ; ஒவ்வோர் ஆளுக்கும் நிலம் தற்காலிகமாக வழங்கப் பெற்றது. லண்டன் வியாபாரிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் 1627-ல் முடிவுற்றது. அதே ஆண்டில் காலனியும் ஆழ ஊன்றி விட்டது. லண்டன் வியாபாரிகளுடன் ஏற்பட்ட தொடர்பைத் துண்டித்துக்கொள்ள விரும்பி, அவர்களுடைய பங்குகளுக்கு £1,800 தருவதாகக் கம்பெனி வாக்குறுதி தந்தது. அதன்படி 9 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்குத் தவணையாக £200 தருவதாக வாக்களித்தது. அதற்கீடாகக் காலனியின்மீதுள்ள எல்லாவித உரிமைகளையும் வியாபாரிகள் விட்டுக்கொடுத்தனர்.

மெசாசுசெட்ஸ் விரிகுடா கம்பெனி (Massachusetts Bay Company) 1629-ல் வியாபார உரிமைப் பத்திரம் பெற்று, பிளிமவுத்தைத் தனதாக்கிக்கொண்டது. அதன் பங்குதாரர்கள் பியூரிடன் வியாபாரிகள் ஆவர். முதலாம் சார்லஸ் 1629-ல் துவக்கிய உயர் திருச்சபைக் கொள்கையும் (High Church Tendency), கொடுங்கோலாட்சியும் பாராளுமன்றத்தையே கலைக்கும் அளவுக்குச் சென்றுவிட்டன. மேலும், சார்லஸ் தமது திட்டங்களை எதிர்ப்பவர்களைச் சிறையிலடைத்தார். இச்சூழ்நிலை கம்பெனியின்

முயற்சிகளில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. மன்னனின் கொடுங்கோன்மையினின்றும் தப்பி மெசாசுசெட்சுக்குச் செல்லப் பல முக்கியமான பியூரிட்டன்கள் விழைந்தனர். அவர்கள் ஆளும் வர்க்கத்தைச் சார்ந்தவர்களாகையால், கம்பெனியின் பணியாட்களாகச் செல்ல விரும்பவில்லை. எனவே, அவர்கள் மெசாசுசெட்ஸ் கம்பெனியையே விலைக்கு வாங்கி, உரிமைப் பத்திரத்துடன் புதிய உலகை நோக்கி விரைந்தனர். ஆகக் கம்பெனியின் நிருவாக உறுப்பினர்களே மெசாசுசெட்ஸில் குடியேறினர். அவர்கள் ஏற்படுத்திய அரசாங்க அமைப்பு தற்காலத்துக் கார்ப்பரேஷனை ஒத்திருந்தது. ஒரு கார்ப்பரேஷனில் கவர்னர், துணைக் கவர்னர், 18 உதவியாளர்கள், உறுப்பினர்கள் இருப்பதுபோலவே, அக் கம்பெனியிலும் பிரசிடென்ட், துணைப்பிரசிடென்ட், டைரக்டர் குழு, பங்குதாரர்கள் இருந்தார்கள். உரிமைப் பத்திரத்தில் கூடுமிடம் குறிப்பிடப்படாததால், கார்ப்பரேஷனையே அமெரிக்காவுக்கு மாற்றுவது எளிதாயிற்று. இவ்வாறு, 1630-'40-ல் 20,000 பேர்கள் அமெரிக்காவில் குடியேறினர். இது மிகப் பெரிய குடியேற்றமாகும். இங்கிலாந்து நாட்டின் தலைசிறந்த சான்றோர்களும் இக்குடியேற்றக் குழுவில் இருந்தனர். இக்குடியேற்றம், அமெரிக்க வாழ்க்கையின் அரசியல்-சமூக- பொருளாதார அமைப்பில் ஓர் அழுத்தமான செல்வாக்கினைப் பெற்றது.

பிற்கால ஆங்கிலேயக் குடியேற்றம்

வர்ஜீனியா, பிளைமவுத் குடியேற்றங்கள் வியாபாரக் கம்பெனிகளால் ஏற்பட்டன. இங்கிலாந்திலிருந்து வெகு தொலைவில் உள்ள நிலப்பகுதிகளில் குடியேறும் தொல்லையை அக்கம்பெனிகள் சகித்துக்கொண்டன. காப்டன் ஸ்மித்தினுடைய (Captain Smith), கம்பெனிகளும், யாத்திரிகத் தந்தைகளும் (Pilgrim Fathers) சுமந்த தொல்லைகளைப் பின்வந்த ஆங்கிலேயக் காலனிஸ்டுகள் அனுபவிக்கவில்லை. பரிதாபத்திற்குரிய முன்னோர்கள் செய்த தவறுகளிலிருந்தும்—அனுபவித்த தொல்லைகளிலிருந்தும் பின்னுல் வந்த காலனிஸ்டுகள் நல்ல பாடம் கற்றனர். தனிப்பட்டோர் குடியேற்றம் மேற்கொண்டு எளிதாயிற்று. உரிமைப் பத்திரம் பெற்ற கம்பெனிகளும், வேறு இரண்டு ஏஜென்சிகளும் பிற்கால ஆங்கிலேயக்குடியேற்றங்களுக்கு அடிகோலின. அவ்விரண்டு ஏஜென்சிகளும் பின்வருமாறு : (1) அமைந்திருக்கும் காலனிகளிலிருந்து வேறு பகுதிகளுக்குக் குடியேறிய கூட்டத்தினர்; (2) செல்வம் கொழிக்கும் புரப்பரைட்டர்கள் (Proprietors), கனக்டிகெட் (Connecticut), ரோட் ஐலண்டு (Rhode Island), நியூ ஹாம்ப்ஷைர், (New Hampshire), மெயின் (Maine) பகுதிகள் மேற்குறிப்பிட்ட முதல் ஏஜென்சியைச் சார்ந்தவை.

மெயின், நியூ ஹாம்ப்ஷயர் என்னும் பகுதிகளில் மீன் தொழில் நிறைந்த குடியேற்றங்களுக்கு இரண்டு குழுவினர் காரணமாயினர். சாசன உரிமைபெற்ற சர் ஃபெர்னான்டோ கார்ஜெஸ் (Sir Fernando Gorges), காப்டன் ஜான் மேசன் (Captain John Mason) ஆகியவர்களின் ஆதரவில் இங்கிலாந்திலிருந்து வந்து குடியேறியவர்கள் ஒரு குழுவினர்; மற்றொரு குழுவினர், மெசாசுசெட்ஸ் விரிகுடாவில் வசித்தவர்கள். இவ்விரண்டாம் குழுவினர் தங்களுடைய அரசாங்க அமைப்பை மேற்குறிப்பிட்ட பகுதிகளில் புகுத்தினர். ரோட் ஐலண்டு, கனக்டிகெட் காலனிகள் 'மெசாசுசெட்ஸ் விரிகுடா'வின் கிளைகளாகும். சமயக் காரணங்களால் நாடுகடத்தப்பட்டவர்கள் ரோட் ஐலண்டிலும், வளம் மிகுந்த நிலத்தைத் தேடிவந்த குடியானவர், முதல் முயற்சியாளர்கள் கனக்டிகெட்டிலும் குடியேறினர். 1636-ல் இந்தியர்களிடமிருந்து வாங்கிய பகுதிகளில் ரோஜர் வில்லியம்சு (Roger Williams) ஒரு ஜனநாயக காமன்வெல்த்தை நிறுவினர். அமெரிக்காவிலேயே முதன்முதலில் அக்காமன்வெல்த்தில்தான் மத சுதந்திரம் வழங்கப்பெற்றது. மெசாசுசெட்ஸிலிருந்து அதிருப்தியுடன் வெளியேறிய குழுவினர் 1635-ல் விண்சர் (Windsor), கனக்டிகெட் பகுதிகளிலும், அதைத் தொடர்ந்த ஆண்டில் ஹார்ட்ஃபோர்டு (Hartford) பகுதியிலும் குடியேறினர். ஆங்கிலேயச் சட்டப்படி, ரோட் ஐலண்டு, கனக்டிகெட் பகுதிகளில் குடியேறியவர்களுக்கு உரிமை கிடையாதெனினும், பின்னர் உரிமைப் பத்திரத்தைப் பெற்றனர். நிலவுடைமை அமைப்பின் (proprietary system) கீழ் ஒரு தனி மனிதன் (அல்லது கரோலினஸ் பகுதியில் உள்ளதுபோல் ஒரு குழு), அரசனுக்குக்கீழ் நிலப்பிரபு என்னும் அந்தஸ்துடன் நிறைய அதிகாரங்களையும் உரிமைகளையும் பெற்று, அமெரிக்காவில் எஸ்டேட்டுகளை அமைத்துக் குடியேறலாம்; ஆனால், அப்பகுதி மக்களின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே, அவன் தனக்குரிய சட்டங்களை இயற்றிக்கொள்ளலாம். இந்த முறையில் கார்ஜெஸ், மேசன் போன்ற பலருக்கு நிலம் கிடைத்தது. பென்சில்வேனியாவில் வில்லியம் பென் (William Penn), மேரிலாந்தில் (Maryland) கால்வெர்ட்டுகள் (Calverts) ஆகியவர்களுடைய முயற்சிகள் கருதற்பாலன. டச்சுக்காரர்கள் மீண்டும் கைப்பற்றிய காலம் (1673-74) நீங்கலாக, 1665-லிருந்து 1685 முடிய நியூயார்க், டியூக் ஆஃப் யார்க் (Duke of York) என்பாரின் நிலவுடைமைக் காலனியாகவே இருந்தது. அவர் நியூ ஜெர்சியை சர் ஜார்ஜ் கார்ட்டெரட் (Sir George Carteret), சர் ஜான் பெர்க்கிலி (Sir John Berkeley) என்னும் தம் நண்பர்களுக்குக் கொடுத்துவிட்டார். கடைசியில் குறிப்பிட்ட மாநிலம், குவேக்கர்கள் (Quakers) கைக்கு

வந்து, பின்னர் 1702-ல் கிரௌன் காலனி (Crown Colony) ஆயிற்று. தாராளமான உள்ளம் படைத்த நில அதிகாரிகளால் கவரப்பட்ட மக்கள், அருகாமையிலுள்ள பகுதிகளிலிருந்து இக் காலனிக்கு வந்து குடியேறினர். வர்ஜீனியாவின் எல்லைப்புறத்து மக்கள் அல்லது இங்கிலாந்தைவிட்டு வந்த மக்கள், கரோலினஸ் (Carolinas) பகுதிகளில் குடியேறினர். இரண்டாம் சார்லஸ் 1663-ல் அப் பகுதிகளை எட்டு நிலவுடைமையாளர்களுக்கு வழங்கினர். அவர்களில் தலைசிறந்தவர் அந்தோணி ஆஷ்லே கூப்பர் (Anthony Ashley Cooper) என்பவர். இவரே பின்னர் எர்ல் ஆஃப் ஷாஃப்ட்ஸ்பரி (Earl of Shaftesbury) ஆக உயர்ந்தார். அன்னாரது பழைய ஆசிரியர் ஜான் லாக் (Jhon Locke) என்பார் படைமானியப் படிமுறையைக் (feudal hierarchy) கொண்ட, சிறப் பும் தெளிவும் கொண்ட நாட்டிற்கான ஓர் இலட்சியத் திட்டத்தை வகுத்துதவினர். ஆனால், சூழ்நிலையை ஒட்டி அமையாததால் அத்திட்டம் கைவிடப்பெற்றது. கரோலினஸ் நிலவுடைமை ஆட்சி 1729-ல் மறைந்தது. 13 காலனிகளில் கடைசியான ஜார்ஜியா, 1733-ல் ஏற்பட்டது. ஃபிளோரிடா(Florida)வில் உள்ள ஸ்பானிஷ் ஆதிக்கத்திற்கு எதிராக ஓர் இடைப்படு நாடு (buffer state) அமையவேண்டும் என ஆங்கிலேய அரசாங்கம் விரும்பிய தாலும், ஆங்கிலேயக் கடனாளிகள் வாழ்க்கையைப் புதிதாகத் துவக்கட்டும் என்ற பொதுநல விருப்பத்தாலும், ஜார்ஜியா தோற்றுவிக்கப்பட்டது. இக்காரணங்களுக்காகவே 1732-ல் தர்மகர்த்தாக்களின் குழு ஒன்றை ஏற்படுத்தி, அதற்குச் சாசன உரிமையும் தந்து, 21 ஆண்டுகள் அக்காலனியைக் கண்காணிக் கும் திட்டம் உருவாயிற்று. எனினும், அக்காலனி வளரவில்லை; மக்கள்தொகையும் பெருகவில்லை.

காலனிகளில் நிலவுரிமை முறை

குடியேற்றத்தின் கதையில் நிலவுரிமை முறையின் (land tenure) பிரச்சினைகளும் அடங்கும். இந்தியர்கள் தொன்று தொட்டு வசித்தபோதிலும், நிலம் தங்களுக்குத்தான் சொந்தம் என்று ஐரோப்பிய மன்னர்கள் கருதினர்கள். எனவே, சில நிபந் தனைகளின்பேரில் அம்மன்னர்கள் கூட்டுப் பங்குக் கம்பெனி களுக்கும், தனிப்பட்ட நிலவுடைமையாளர்களுக்கும் கரோலி னஸ் போன்ற பகுதிகளில் நிலவுடைமைக் குழுக்களுக்கும், ஜார்ஜியாபோன்ற பகுதிகளில் தர்மகர்த்தா குழுக்களுக்கும் நிலங்களை வழங்கினர். நியூ நெதர்லண்ட்ஸ், நியூஃபிரான்சு, நியூ ஸ்பெயின் இவைகளில் நிகழ்ந்தனபோல், படைமானிய முறையை அமெரிக்காவில் புகுத்தும் முயற்சிகள் தவிர்க்கப்பட

முடியாது என்பது தெளிவாயிற்று. ஐரோப்பாவில் நிலவிய நில முறைமட்டும்தான் காலனிஸ்டுகளுக்குத் தெரியும். புதிய குடியேற்றங்களில் இம்முறை காலப்போக்கில் தகர்ந்துவிடும் என்பதும் தேற்றமாயிற்று. அமெரிக்கக் கண்டம் மிகப் பரந்தது. நில வுடைமையைக் கட்டுப்படுத்தும் எந்த முறையும் அக்கண்டத்தில் வெற்றிபெறவில்லை. ஏனெனில், அங்கே காலியிடங்கள் நிறைய உள்ளன ; யார் வேண்டுமானாலும் அவற்றை எளிதாகப் பயன்படுத்தலாம். குடியேறியவர்கள் பரந்த நிலப்பரப்பில் சிதறிக் கிடந்தமையால், திறமையான வகையில் கட்டுப்பாட்டினை வற்புறுத்த முடியவில்லை. தொலைவில் உள்ள அரசனின் அதிகாரமோ அல்லது நிலவுடைமையாளன் அதிகாரமோ கட்டுப்பாட்டை நிலைநிறுத்த இயலாமற்போயிற்று. அவ்வதிகாரமும் வலுவற்றதாக இருந்தது. மேலும், நிலவுடைமையாளர்களுக்குள்ளாகவே மக்களைக் குடியேற்றும் முயற்சியில் பலத்த போட்டி இருந்தது. ஆகவே, படைமானிய முறையைத் திறமையுடன் புகுத்த இயலவில்லை. இன்னும், இடர்ப்பாடுகள் நிறைந்த எல்லைப்புற வாழ்க்கையை மேற்கொண்டவர்களும் நிலவுடைமையைக் கோரினர். இதன் விளைவாக நிலவுடைமையாளர்கள் நில (மனை) 'வரி'யையும் (quit rent) சரியாக வசூலிக்க முடியவில்லை. தனிப்பட்ட ஒருவன் இவ்வளவு நிலம்தான் வைத்துக் கொள்ளலாம் என்ற சட்டத்திலிருந்தும் அவர்கள் தப்பித்துக் கொள்ள முயன்றனர்.

வர்ஜீனியாவிலும் மெசாசுசெட்ஸிலும் கூட்டுறவு விவசாயம் தோல்வியடைந்தவுடன், அதனைத் தொடர்ந்து நிலம் பிரித்துக்கொடுக்கப்பட்டது. முடிவில் வர்ஜீனியாவில் ஒவ்வொரு பங்குதாரருக்கும் பங்கு ஒன்றுக்கு 100 ஏக்கர்கள் வீதம் நிலம், முதல்நிலையில் முழு உடைமையாக்கப்பட்டது. அடுத்த நிலையில் குடியேற்றம் முற்றுப்பெற்றவுடன், பங்கொன்றுக்கு 100 ஏக்கர்கள் வழங்கப்பெற்றன. குடியேறுகின்ற நபர் ஒருவருக்கு 50 ஏக்கர்கள் தலா உரிமையாகப் (head right) பங்குதாரருக்கு வழங்கப்பெற்றன. அங்குக் குடியிருப்பவர்கள் அனைவருக்கும் இச்சலுகை அளிக்கப்பெற்றது. 1705ஆம் ஆண்டிற்குப் பின்னர், மூன்று ஆண்டுகளில் ஒரு வீட்டைக் கட்டி, 3 ஏக்கர் நிலத்தை உழவேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் அரசாங்கம் 5 ஷில்லிங்கிற்கு 50 ஏக்கர் நிலம் என்ற கணக்கில் விற்றது. மிகச் சிறப்பு வாய்ந்த தொண்டு செய்தோருக்கும், தனிச் சலுகை பெற்றவர்களுக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் கொடுக்கப்பெற்றன. வர்ஜீனியா சட்டத்தை எளிதாக உடைத்துவிட்ட காரணத்தால், 1700-ல் 700 ஏக்கர்களே உழப்பட்டன. மெசாசுசெட்ஸ்

விரிகுடாப் பகுதியில், குடியேறுகிற ஒவ்வொருவனுக்கும் தானே செலவு செய்ததனாலோ அல்லது தானே குடியேறியதனாலோ ஒவ்வொரு நாடோடி வீரவாழ்வினருக்கும் (adventurer) 50 ஏக்கர்கள் வழங்கப்பெற்றன. ஒரு குழுத் திட்டத்தின் அடிப்படையில் குடியேறுவதுதான் நியூ இங்கிலாந்தின் வழக்கமான முறையாயிற்று. அதன்படி, 36 சதுர மைல் உள்ள நிலத்தைப் பொது நீதிமன்றத்தின் (General Court) மூலம் குடியேறுபவர்கள் பெற்று, அங்கு கிராமத்தையும், வசிப்பதற்குரிய வீடுகளையும், தோட்டங்களையும் உண்டாக்கியபின்னர், மிகுந்தவற்றை மேய்ச்சல்வெளி என்றும், நஞ்சைநிலம் என்றும் பிரித்தார்கள். பொதுவில் உடைமையாக்கப்பெற்ற நிலத்தைத் தவிர, தனிப்பட்டோரின் முழு உடைமையிலும் நிலம் இருந்தது.

பொதுநல உணர்ச்சி மிக்க பென் (Penn), பால்டிமோர் (Baltimore) போன்றவர்கள் மிகக் குறைந்த மனவரி (Quit rent) வசூலித்தார்கள். குடியேற்றப் போட்டியின் காரணமாகவும் மனவரி குறைவாக இருந்தது. உடலுழைப்பிற்குப் பதிலாகப் பணமாக வழங்கிவிடுவதைத்தான் நிலவரி என்பர்; இது ஐரோப்பாவில் தோன்றியதாகும். இதனை ஒரு நன்கொடையாகவும் கருதினர். அமெரிக்காவில் இதனை வெறுக்கப்பட்ட ஓர் அமைப்பின் தாழ்வுற்ற பழஞ்சின்னமாகக் கருதினர். தன் குடும்பத்தைப் புத்துலகத்தில் குடியேற்றுபவர்களுக்கு 500 ஏக்கர்கள் வழங்குவதாகப் பென் (Penn) குறிப்பிட்டார். மேலும், £100க்கு 5,000 ஏக்கர் நிலமும், கொண்டுவரப்படும் ஒவ்வொரு வேலைக்காரனுக்கும் 50 ஏக்கர் நிலமும் தருவதாகவும் பென் வாக்களித்தார். ஆனால், 100 ஏக்கருக்கு ஒரு ஷில்லிங்கு வீதம் மனவரி வசூலிக்கும் உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை. மேரிலாந்தில் குடியேறியவனுக்கு 100 ஏக்கரும், அவனுடைய மனைவிக்கு 100 ஏக்கரும், ஒவ்வொரு பணியாளுக்கும் 100 ஏக்கரும், குழந்தை ஒவ்வொன்றுக்கும் 50 ஏக்கரும் தரப்பட்டன. இவை வரியிலா நிலக் கொடைகளாகும் (freehold grant); 50 ஏக்கருக்கு 10 பவுண்டு கோதுமையைக் குத்தகை வாரமாகச் (rent) செலுத்தினால்போதும். ஐந்து பேருக்குமேல் கொணர்ந்து குடியேற்றுபவர்களுக்கு 1,000 ஏக்கர்கள் வழங்கப்படும். ஆனால், ஆண்டொன்றுக்கு 20 ஷில்லிங்குகளை மனவரியாகத் தரவேண்டும். இன்னும் மிகுதியான பேர்களைக் குடியேற்றுவோருக்கு மிகுதியான கொடைநிலம் வழங்கப்படும்; அதனைப் பிரித்து நிலச்சுவான் பண்ணை முறைப்படி மற்றவர்களுக்குக் குத்தகை விடலாம். துப்பாக்கியையும், ஆறு மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் சேகரித்து வைத்திருப்பவனுக்கு 150 ஏக்கர் நிலம் நியூ ஜெர்சியில்

வழங்கப்படும்; கொண்டுவரப்படும் ஒவ்வொரு பணியாளுக்கும் அடிமைக்கும் அதே அளவு நிலமும், ஒவ்வொரு பெண்ணிற்கும் 75 ஏக்கர் நிலமும் வழங்கப்படும். இவை எளிமையான நிபந்தனைகளாய் இருந்தமையின், அருகேயுள்ள காலனிகளிலிருந்துகூட மக்கள்வந்து குடியேறினர். மற்றக் காலனிகளிலும் இவைபோன்ற சலுகைகள் வழங்கப்பட்டன.

படைமானியமுறையில் குறைபாடுகள் இருந்தபோதிலும், நிலம் வழங்கும் முறையில் தட்டுப்பாடு ஏற்படவில்லை; உழுதற்குரிய நிலத்தின் வளர்ச்சியிலும் குந்தகம் ஏற்படவில்லை; நிலத்தின் பெரும்பகுதியை மக்கள் உடைமையாக்கிக்கொள்ளும் வேலைக்கும் தடை ஏற்படவில்லை. எனினும், அதிருப்தியும் மனத்தாங்கலும் ஏற்பட்டன என்பது உண்மைதான். புரட்சி ஏற்படும் தருவாயில், அரசருக்கும் நிலவுடைமையாளருக்கும் ஆண்டொன்றுக்கு வந்து சேரவேண்டிய குத்தகை வாரத்தின் மதிப்பு மட்டும் £37,500 ஆக இருந்தது. அதில் பாதித்தொகை நிச்சயமாக வசூலிக்கப்பெற்றது. படைமானிய நிலவுரிமை முறையில் உள்ள தொல்லைகளால் மனத்தாங்கலும் சச்சரவுகளும் ஏற்பட்டு, அவை புரட்சிக்கு வித்து ஊன்றின. அநேக காலனிகளில் நிலவிய படைமானிய முறையின் தலைமூப்புரிமை (primogeniture), மரபுரிமையில் கட்டுப்பட்ட உடைமை (entails), மனைவரி இன்னோரன்னவை புரட்சி ஏற்பட்டபொழுது அல்லது அதற்குப் பின்னர் ஒழிக்கப்பட்டன.

காலனி நிலமுறையின் குறைபாடு எதுவென்றால், பெரிய எஸ்டேட்டுகளை உருவாக்கி ஆதரித்ததுதான். ஜனநாயக முறையில் அது தோற்றமளித்தாலும், உண்மை அதுவன்று. முதலில் குடியேறியவர்கள் வளமான நிலங்களைப் பெற்றனர்; பின்னால் வந்தவர்களுக்கு நல்ல நிலங்கள் கிடைக்கவில்லை. நியூ இங்கிலாந்தில், பாராளுமன்றத்தின் சலுகை பெற்ற செல்வாக்குள்ள பெரிய மனிதர்கள், எந்தவிதமான முயற்சியும் செய்யாமல், செலவும் செய்யாமல் மிக வளமான நிலங்களைப் பெற்றனர். அது ஒரு நில ஊகவாணிக காலம்; அரசாங்கத்தின் செல்வப் பிள்ளைகளாகவும் செல்வம் கொழிப்பவர்களாகவும் இருப்பின், அவர்கள் விரும்பிய வகையில் நிலத்தைப் பெறலாம். தென்பகுதியில் நிலமுறையின் கேடுகள் மிக்கிருந்தன. அப்பகுதியில் சமூக ஏற்றத்தாழ்வுகளும், அரசியல் ஊழல்களும் மலிந்திருந்தன; அதே நேரத்தில், மேற்கே முன்னேறும் குடியேற்றமும் தடைப்பட்டது. நிலவுடைமை பரவலாக வியாபித்திருந்தது; ஆனால், உடைமையில் ஏற்றத்

தாழ்வு அழுத்தமாகப் பதிந்திருந்ததால், வர்க்க சமூகம் துவக்கத் திலிருந்தே உருவாகிவிட்டது.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

நெட்டில்ஸ், கர்ட்டிஸ் (Nettels, Curtis), 'The Roots of American Civilization,' Chaps. 6, 8.

போர்ன், ஈ. ஜி. (Bourne, E. G.), 'Spain in America,' chaps. 14-20.

மன்ரோ, டபிள்யூ. பி. (Munro, W. B.), 'Crusaders of New France,' chaps. 8-11.

வீடன், டபிள்யூ. பி. (Weeden, W. B.), 'Economic and Social History of New England,' Vol. I, chaps. 1-5.

புரூஸ், பி. ஏ. (Bruce, P. A.), 'Economic History of Virginia in the Seventeenth Century,' Vol. I, chap. I.

பகுதி 2— விவசாய சகாப்தம்

4. காலனி விவசாயமும் தொழிலாளரும்

முதல் இரண்டு நூற்றாண்டுகளின் பொருளாதாரச் சூழ்நிலை

ஆங்கிலேயக் காலனிஸ்டுகள் அமெரிக்காவில் குடியேறிய பின்னர், இரண்டு நூற்றாண்டுகள் வரையில் பொருளாதார வாழ்க்கை முக்கியமாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்தியர்களிடமிருந்து பெற்ற சில அனுபவக் கூறுகளையும், ஐரோப்பாவிலிருந்து கொண்டுவரப்பட்ட சாதாரணமான தொழில்நுண்ணியலையும் (technology) அடிப்படையாகக்கொண்டு விவசாயம் அமைந்திருந்தது. குறிப்பாகத் தென்பகுதியில், சில பெரிய தோட்டங்களில் தவிர, விவசாயம் சிறிய பண்ணையளவில் தான் நடைபெற்றது. விவசாயப் பண்ணைகள் தன்னிறைவு பெறும் நிலையில் இல்லை. வர்த்தக விவசாயப் பண்டங்கள் சில விற்பனையானதைத் தவிர உள்நாட்டுச் சந்தைகள் பெரியன்வாக இல்லை. போதிய அளவு தொழிலாளர்களும் முதலும் கிடைக்கவில்லை. இத்தகைய மிகச் சாதாரணமான விவசாய நாகரிகத்தில், காலனிகளுக்கிடையில் வர்த்தகமும் குறைவு; குடிசைத் தொழிலையும், சிறிய கடையையும் தவிர, வேறு தொழிலே இல்லை எனலாம். ஆனால், உலக வாணிபம் பெருமளவில் நிலவியது. கடலையும் காட்டையும் சார்ந்த பண்டங்கள் நியூ இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதியாயின. மத்திய அட்லான்டிக் காலனிகளிலிருந்து மாவு, கோதுமை, மற்றும் பண்ணையில் விளைந்த உணவுப் பொருள்கள் ஏற்றுமதியாயின. தென்பகுதியிலிருந்து புகையிலையும், சில வர்த்தகத் தானியங்களும் ஏற்றுமதியாயின. இப்பொருள்களுக்கெல்லாம் ஐரோப்பிய சந்தை கிடைத்தது. நகரங்கள் சிறியனவாகவும், எண்ணிக்கையில் குறைவாகவும் இருந்தன. மக்கள் எண்ணிக்கையில் பத்துக்கு ஒன்பது பங்குக்குமேல் பண்ணைகளில்

வேலைசெய்து வாழ்ந்தனர். பணமுறை சரியாக அமையாததாலும், போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாமையாலும், உள்நாட்டு வர்த்தகமும் பொருளாதார வாழ்க்கையும் கட்டுப்படுத்தப்பெற்றன.

வருமானப் பங்கீட்டிலும், செல்வப் பங்கீட்டிலும் நிறைய வேறுபாடுகள் இருந்தன. பெரும்பாலோரின் வாழ்க்கைத்தரம் மிகவும் குறைந்திருந்தது. துய்ப்பு வகைகளும் சிக்கனமாயிருந்தன. ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த சில பணம் படைத்த வியாபாரிகளைத் தவிரத் துணிந்து முதலீடு செய்ய யாரும் முன்வரவில்லை. கல்வி பெருகவில்லை. வேலைநேரம் குறையவில்லை. புரட்சி ஏற்படும் தருவாயில், காலனிகளில் 2,500,000 பேர்கள் இருந்தனர். அவர்கள் பெரிய நிலப்பரப்பில் சிதறிக் கிடந்தனர். தற்கால நிலையுடன் ஒத்திட்டுப் பார்த்தால், அது ஒரு பூர்வீக நாகரிக மாகும்.

ஐரோப்பியப் பின்னணி

காலனிஸ்டுகள் ஐரோப்பாவிலிருந்து அறிவையும் வழிமுறைகளையும் கொணர்ந்து, அமெரிக்கச் சூழ்நிலைக்கேற்ப அவற்றைத் திருத்திச் செப்பனிட்டனர். அவற்றின் அடிப்படையில் அமெரிக்க வாழ்க்கையின் மற்ற அம்சங்களைப்போலவே காலனி விவசாயமும் அமைந்தது. 17 ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய விவசாயம் மிகவும் பூர்வீகமானது. விவசாயக் கருவிகளும் குறைவு; கரடுமுரடான வையுங்கூட எனலாம். கலப்பை, பரம்பு (harrow), மண்வெட்டி, ரேக் (rake), மண்கொத்தி, அரிவாள், கைவண்டி ஆகியவை தாம் பணவசதி படைத்த விவசாயியின் தளவாடங்கள். கால்நடை வளர்ப்புப் பற்றிய செய்தியே இல்லை. ஆடுமாடுகளை ஒரே மேய்ச்சல்வெளியில் மேயவிடுவதுதான் வழக்கமாயிருந்தது. மழைக்காலத்தில் ஆடுமாடுகளுக்குத் தேவையான உணவு குறைவாக இருந்தமையால், பெரும்பாலானவற்றை இலையுதிர் காலத்தில் கொன்றுவிடுவர். போதிய அறிவும் கவலையும் கொள்ளாததால், இன்று இருப்பதைவிட அன்று கால்நடைகளும் ஆடுகளும் குறைவாக இருந்தன.

நிலத்தைப் பூர்வீக முறையிலேயே பயன்படுத்தினர். கொஞ்சம் முன்னேறிய விவசாயிகள், இரண்டு அல்லது மூன்று வயல் முறையைக் கொண்ட (Two or Three Field System) மாற்றுப் பயிர் முறையைப் (rotation of crops) பின்பற்றினர். அதன்படி, கோதுமை, ரை (rye) அல்லது வேறெருரு பயிரினை ஒரு வயலில் இலையுதிர் காலத்தில் விதைத்து, இளவேனிற் காலத்தில் அறுவடை செய்வார்கள். இரண்டாவது வயலில் ஓட்ஸ (oats), பார்லி

(barley), பயறு (peas) அல்லது வேறு ஒரு பயிரினை இளவேனிற் காலத்தில் பயிரிட்டுக் கோடை அல்லது இலையுதிர் காலத்தில் அறுவடை செய்வர். மூன்றாவது வயலை, இழந்த வளத்தை மீட்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் தரிசாகப் போடுவர். அறுவடைக்குப் பின்னர் எருவடித்து முடிந்தவுடனேயே கால்நடைகளை வயல்களில் மேயவிடுவர்.

18ஆம் நூற்றாண்டுவரையில் பழங்கால முறைகளையே பின்பற்றி வந்தனர். அந்த நூற்றாண்டில்தான் இங்கிலாந்தில் முக்கியமான விவசாய முன்னேற்றங்கள் ஏற்பட்டன. நிலத்தைத் தரிசாகப்போடுவதைவிட மணப்புல் (clover) போன்ற பயிர்களைப் பயிரிட்டால், இழந்த வளத்தை நிலம் மீண்டும் பெறும் என்று ஜெத்ரோ டல்லும் (Jethro Tull), சார்லஸ் டவுன்ஷெண்டும் (Charles Townshend) விளக்கினார்கள். டர்னிப் கிழங்குகள் கால்நடைகளுக்குத் தேவையான மழைக்கால உணவாயிற்று. எனவே, குளிர்காலங்களிலும் கால்நடைகளைப் போற்றி வளர்க்க முடிந்தது. ராபர்ட் பேக்வெல் (Robert Bakewell) என்னும் தலைசிறந்த விவசாயி கால்நடை வளர்ப்பைப் பேணி, ஆடுகளின் பருமனை இரட்டிப்பாக்கினார்.

18ஆம் நூற்றாண்டின் அமெரிக்க விவசாயிகளுக்கு இங்கிலாந்தில் நிகழ்ந்த விவசாய முன்னேற்றங்களைப்பற்றிய செய்திகளனைத்தும் தெரியும். ஆனால், அவற்றை மெதுவாகவே பயன்படுத்தினர். அவற்றைப் பயன்படுத்தத் தூண்டும் சூழ்நிலையும் அமெரிக்காவில் இல்லை. வற்றாத அளிப்பு (supply) உள்ள, கலப்பை படாத வளமான பூமி, விஞ்ஞான முறை விவசாயத்தைத் தூண்டாது. எருவின் முக்கியத்துவம் உணரப்படவில்லை. மாற்றுப் பயிர்முறை இன்னும் செல்வாக்கடையவில்லை. நிலக்கொலை (land butchery) வழக்கமாக நிகழ்ந்தது. புது நிலத்தை மட்டும் தேர்ந்தெடுத்து உழுவதுதான் காலனி விவசாயியின் குறிக்கோளாக இருந்தது என்று ஓர் அறிஞர் குறிப்பிடுகிறார். அவர் மேலும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'பழைய நிலத்தை எவ்வளவு விரைவில் வளங்குன்றச் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் செய்து, பின்னர் புதுவளம் புகுத்தும் வகையில் எருவும் அடிக்காமல், மீண்டும் புதிய நிலத்தைத் தேர்ந்தெடுத்து உழுவதே அவர்கள் வேலை.'[1]

துவக்க காலத்தில் சூழ்நிலையைப் பரீட்சித்துப் பார்ப்பதில் விவசாயிகள் கவனம் செலுத்தினர். பெரும்பாலான பயிர் வகை

[1] American Husbandry, 1, 144.

களும், காய்கறிகளும், வடமேற்கு ஐரோப்பாவின் பழவகைகளும், மற்றும் உழவுக்குரிய கால்நடைகளும் அமெரிக்க மண்ணிற்கும், தட்பவெப்ப நிலைக்கும் ஏற்றனவாய் இருந்தன. ஆனால், மிதவெப்ப மண்டலத்தைச் சார்ந்த மத்தியதரைக் கடல் நாடுகளின் பழவகைகளை அமெரிக்காவில் பயிரிட முடியவில்லை. அது போலவே பட்டுப் புழுக்களை வளர்த்துப் பட்டினை உற்பத்தி செய்யத் திரும்பத்திரும்ப எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீராயின. இத்தகைய ஆரம்பகால முயற்சிகள் தோற்றமைக்குக் காரணம், ஒவ்வாத தட்பவெப்ப நிலை மட்டுமன்று; உற்பத்தியைத் தடைப்படுத்தும் வகையில் அமைந்திருந்த பிரதியான உழைப்புச் செலவும், உழைப்புக் கிடைப்பருமையும் (scarcity of labour) ஆகும். சில ஆண்டுகளுக்குப் பின்னர் பயிர்வளர்ப்பு முறை, விஞ்ஞான முறை விவசாயம் இவற்றில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் ஓரளவுக்கு வெற்றி கிட்டியது.

அமெரிக்க இந்தியனின் விவசாய சாதனைகள்

அமெரிக்க இந்தியன் ஒரு நாடோடி; சொந்தமான நிரந்தர வீடு இல்லாத வக்கற்றவன்; வேட்டையாடுவதிலும் போரிடுவதிலுமே காலங்கழிப்பவன் என்று படம்பிடித்துக் காட்டுவது தவறு. முதல் அமெரிக்க விவசாயி அவனே. அவன் இனத்தின் பொருளாதார வாழ்க்கையில் விவசாயம் ஒரு பிரதான இடத்தைப் பெற்றுவிட்டது. கார்ட்டியரும் (Cartier), சேம்பிளெயினும் (Champlain) செயின்டு லாரன்ஸ் (St. Lawrence) நதிக்கரைகளிலும், மிஸ்ஸிசிப்பியின் கரையில் உள்ள டீ சோட்டோவிலும் (De Soto), தென்மேற்கில் கொரநாடோவிலும் (Coronado) பயிர் விளையும் நிலங்களைக் கண்டனர். ஓகியோ (Ohio) பள்ளத்தாக்கில் முதன்முதலில் குடியேறியவர்கள் ஆற்றோரமாகப் பல மைல்களுக்கு விளைநிலம் கண்டனர். கனடாவிலிருந்து ஃபிளோரிடா (Florida) வரையில் பரவிக் கிடந்த விளைநிலங்களைப்போல் அமெரிக்காவின் வேறு எந்தப் பகுதியிலும் தாம் காணவில்லை என்று 1794-ல் ஜெனரல் வேனி (General Wayne) கூறிப்போந்தார். வேட்டையாடுவதும், போர்ப்பாதையும் அவனை எங்கு அழைத்துச் சென்றாலும், அமெரிக்க வீரன் நாற்று நடும் காலத்திலும், அறுவடைக் காலத்திலும் தன் வயலை நோக்கி விரைந்து வருவான். வயல்களுக்கு அருகில் எழுந்த கிராமங்கள் ஊன்றி நிலைபெற்றன என்பது உண்மை.

எந்த அளவுக்கு விவசாயத்தில் இந்தியர்கள் ஈடுபட்டனர் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட முடியாது. இனத்திற்கினம், இடத்திற்கிடம் அது வேறுபட்டது. அப்பாச்சீஸ் (Apaches) போன்ற இனத்தினர் விவசாயத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஈடுபட்டனர். தென்மேற்கு இந்தியர்கள் நீர்த்தேக்கங்களையும், பாசனங்களையும், நிரந்தர நகரங்களையும் கட்டினர்; வேட்டையாடுவதில் அதிகக் காலத்தை விரயம் செய்யவில்லை. மெயினிலிருந்து ஃபிளோரிடா வரையிலுள்ள அட்லான்டிக் கரை இந்தியர்கள் விவசாயிகளாகவும் வேட்டைக்காரர்களாகவும் இருந்தார்கள். இவ்விந்தியர்களைத்தாம் முதன்முதலில் ஆங்கிலேயர்கள் கண்டனர். ஆரம்ப காலத்தில் இவ்விந்தியர்கள் விளைவித்த உணவுப் பண்டங்களைக் கொண்டுதான் காலனிஸ்டுகள் உயிர் வாழ முடிந்தது. தங்கள் பிழைப்பிற்கு நிலத்திலிருந்து கிடைக்கும் இத்தானியங்களையே இந்தியர்கள் நம்பியிருந்தனர் என்றும் புது நிலம் தேடும் முயற்சியில் ஈடுபட்டவர்களெல்லாம் குறிப்பிட்டுள்ளனர்.

தானிய வகைகள், புகையிலை இவற்றைச் சுற்றியே இந்திய விவசாயம் அமைந்தது. மரங்களையெல்லாம் அழித்துவிட்டு, நிலத்தைப் பயிரிடுவதற்கு ஏற்ற வகையில் பக்குவப்படுத்தினர். கம்பாலும் கரடுமுரடான கருவிகளாலும் அமெரிக்க விவசாயி மூன்று அல்லது நான்கு அடிகளுக்கு ஒரு குழி வெட்டித் தானியங்களையும் பீன்ஸ்களையும் அதனுள் விதைத்துவிடுவான். குன்றுகளுக்கிடையில் பூசணிக்காய், ஸ்குவேஷ் (squash) முதலியவற்றையும் பயிரிடுவான். பயிர் வெளிக்கிளம்பியதும், அதனைக் குன்றின்மீது நடுவான். அறுவடைக்குப் பின்னர் தானியத்தை உலர்த்திக் குழிகளிலேனும் அல்லது குகைப் பொந்துகளிலேனும் அல்லது களஞ்சியங்களிலேனும் சேமித்து வைப்பான். பூச்சிகளினாலும், காளான்களினாலும் பாழாகாமல் இருப்பதற்குத்தான் மேற்குறிப்பிட்ட முறையில் அவன் சேமித்துவைக்கிறான். இந்தியர்கள் பயிரிடும் முறைகளில் எந்தவித மாற்றத்தையும் சமீபகாலத்து விவசாய முன்னேற்றங்கள் ஏற்படுத்தவில்லை. மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து கனடாவரையில், தானியத்தைப் போலவே புகையிலையையும் இந்தியர்கள் பயன்படுத்துகிறார்கள். தனித்தனி நிலங்களில் புகையிலை பயிராகிறது. அட்லான்டிக் கரையின் சமவெளிப் பகுதி முழுதும் புகையிலை பயிராகிறது. இன்று கிடைக்கும் புகையிலையுடன் ஒத்திட்டுப் பார்த்தால் இந்தியப் புகையிலை அவ்வளவு சிறப்புடையதன்று. இருந்தபோதிலும், வெள்ளைக்காரன் இந்தியப் பயிரிடும் முறையையும், கதிரவனின் வெப்பத்

தாலோ நெருப்பாலோ உலர்த்தும் இந்திய முறையையுமே பின் பற்றினான்.

உலகத்தின் மிக உயர்ந்த நான்கு உணவுகள் கோதுமை, மக்காச் சோளம், அரிசி, வெள்ளை உருளைக்கிழங்கு என்பன ஆகும். உலகச் செல்வாக்கைப் பெறவிருக்கின்ற மூன்றும் அமெரிக்கச் செடி, நான்கு உணவுகளில் (four foods) ஒன்றுகிய வெள்ளை உருளைக் கிழங்காகும். வெள்ளை உருளைக் கிழங்கு முதலில் எங்குத் தோன்றியது என்பதைப்பற்றி அறுதியிட்டுக் கூறமுடியாது. 'பெரு'வில் (Peru) அல்லது சிலியில் (Chile) தோன்றியிருக்கலாம். இங்கிலாந்துக்குக் கொண்டுவரப்பட்டதும், அதனை வர்ஜீனிய உருளைக் கிழங்கு என்று அழைத்தனர். அந்தக் காலத்துக் கருத்தற்ற சொல் வழக்கின் காரணமாக [பெரிய அமெரிக்கப் பறவையை 'டர்க்கி' (Turkey) என்று குறிப்பிடுவதுபோல] வர்ஜீனியாதான் அக்கிழங்கின் பிறப்பிடம் என்று தவருகக் கருதப்பட்டது. ஐரோப்பாவின் பல பகுதிகளில் இக்கிழங்கு பயிராகியது. ஐரிஷ் மக்களிடத்தில்தான் அது புகழடைந்தது. எனவே, 'ஐரிஷ் உருளைக் கிழங்குகள்' என்று பாமர வழக்கும் ஏற்பட்டுவிட்டது. இக்கிழங்கைப் புதிய உலகத்திற்குத் திருப்பி எடுத்துச் சென்றனர். நியூ இங்கிலாந்தில் அது செல்வாக்கடையவில்லை. நியூ ஹாம்ஷையரில் குடியேறிய ஐரிஷ்காரர்களே அக்கிழங்கைப் பயிரிடுவதில் ஆர்வம் காட்டினர். தென்பகுதியில் உற்பத்தியாகும் இனிப்பு உருளைக்கிழங்கை ஆங்கிலேயக் குடியேறிகள் பல வகைகளில் சமைத்து உட்கொண்டனர். புரட்சிக்கு முன்னர், வெள்ளை உருளைக் கிழங்குகள் குறைந்த அளவில் பயிராகிய போதிலும், ஆரம்பத்திலிருந்து தென்பகுதியில் இனிப்பு உருளைக் கிழங்குகள் தாம் பயிராகின்றன.

இந்தியர்களுடைய விவசாயக் கருவிகள் கரடுமுரடானவை; மான்கொம்பினுலாய வாள் அலகும், தோல்வாரினுல் கம்புடன் இணைத்துக் கட்டப்பட்ட தட்டையான கல் துண்டும், உறையும், கம்புமே உழவுக்குரிய கருவிகளாகும். முதியோர்களும் பெண்களும் குழந்தைகளுமே வயலில் வேலை செய்வார்கள். நாற்று நடும்பொழுதும், அறுவடைக் காலத்திலும் இளைஞர்கள் வயலில் இறங்கி வேலை செய்வர். இக் காலங்களில் கூட்டுறவு முறையிலேயே வேலை செய்வர்; சடங்குகளும் கேளிக்கைகளும் விழாக்களும் நிகழும்.

வெள்ளைக்காரனுக்கு இந்தியன் கொடுத்த செல்வம் விவசாயமே. நாயைமட்டுமே வீட்டுக்குரியதாகப் பழக்கியிருப்பதால்

இந்தியன் அதிகமாக முன்னேற்றம் காணமுடியவில்லை. சிறந்த விதைகளைப் பொறுக்கி நல்ல செடி கொடிகளை வளர்க்கும் கலையில் அவன் தேர்ந்திருந்தான். நல்ல முறையில் எருவிட்டு நிலத்தை வளப்படுத்துவதிலும் சிறந்து விளங்கினான். பல தானியங்கள் பயிரிடும் முறையையும் அவன் பின்பற்றினான். உணவுப் பண்டங்களைப் பக்குவமாகப் பாதுகாப்பதிலும் கைதேர்ந்திருந்தான். பெரீஸ் (berries), பழங்கள், காய்கறிகள், இறைச்சி இவற்றை செயற்கை முறையிலோ அல்லது கதிரவனின் ஒளிமூலமோ உலர்த்திப் பக்குவப்படுத்தினான். நியூ இங்கிலாந்து வயலில், வரிசை வரிசையாகத் தானியக் கதிர்களும் பீன்ஸ் கொடிகளும் ஒன்றை யொன்று பின்னியவாறு கிடக்கும்; இடையிடையே பூசணிக் காயும் மற்றக் காய்கறி வகைகளும் தட்டுப்படும். இவையனைத்தையும் வயல்நடுவில் நிறுத்தப்படும் புள்ளோட்டும் பொம்மை பாதுகாக்கும். நியூ இங்கிலாந்தின் வயல் இந்திய வயலின் மறுபதிப்பேயாகும். வெள்ளைக்காரனுக்கு முக்கிய உணவையும் ஏற்றுமதியையும் வழங்கிப் பின்னர்ப் பயிரிடும் முறையையும் இந்தியன் கற்றுக்கொடுத்தான்.

நியூ இங்கிலாந்து விவசாயம்

முதலில் குடியேறியவர்கள் இங்கிலாந்திலிருந்து வரும் பண்டங்களைத்தான் நம்பியிருந்தார்கள். தானியம், பூசணிக் காய், பீன்ஸ் முதலியவற்றைப் பயிரிட இந்தியர்களிடமிருந்து கற்றுத் தேர்ந்தனர். பீஸ் (peas), பார்ஸ்னிப் கிழங்கு வகைகள் (parsnips), டர்னிப் கிழங்குகள், காரட்டுகள் (carrots) முதலியவற்றையும் பயிரிட்டனர். இங்கிலாந்திலிருந்து கொண்டுவந்த கோதுமை வெற்றிபெறவில்லை; ரை (rye), பக்கோதுமை (buck-wheat) முதலியன வெற்றியடைந்தன. ஐரோப்பாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பார்லி, ஓட்ஸ் முதலியனவும் நியூ இங்கிலாந்தில் விளைந்தன. கிரான்பெர்ரீஸ் (cranberries), ஹக்கிள்பெர்ரீஸ் (huckleberries), கரும் பெர்ரீஸ் (blackberries), ராஸ்ப் பெர்ரீஸ் (raspberries), இன்னும் பழ வகைகள் முதலியன நியூ இங்கிலாந்தில் விளைந்தன. செர்ரி, ப்ளம் மரங்களும் வளர்ந்தன. நியூ இங்கிலாந்திலும் மத்தியக் காலனிகளிலும் ஆப்பிள் மரங்கள் வளர்ந்தன. ஆப்பிள்கள், பேர்கள் (pears), டார்ட்டுகள் (tarts), முதலியவற்றைப் பூசணிக்காய், பைஸ் (pies) இவற்றிற்குப் பதிலாக விளைத்தனர் என்று தம் நூலில் (Wonder-working Providence)[2] ஜான்ஸன் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு வயலிலும் பழத்தோட்

[2] Edward Jhonson, 'Wonder - working Providence of Sion's Saviour in New England 1628 - 1651'. Original Narratives Series, P. 210.

டங்கள் இருந்தன. மற்றப் பழங்களைப்போலவே, ஆப்பிள் பயிரும் இலாபகரமான தொழிலாயிற்று.

நாயைத் தவிரப் பழக்கப்படுத்தப்பட்ட வேறு மிருகங்களை இந்தியர்கள் வளர்க்காததால், மற்ற மிருகங்கள் இறக்குமதியாயின; அவை எண்ணிக்கையிலும் பெருகின. 1624-ல் கால்நடை மந்தைகள் பெருகின; பால் பண்ணைகள் ஏற்பட்டன. நியூ இங்கிலாந்தில் பன்றிகள் வளர்க்கப்பட்டன. பீப்பாவில் அடைக்கப்பெற்ற பன்றி இறைச்சிகள் ஏற்றுமதியாயின. கொழுத்த குதிரைகள் ரோட் ஐலண்டில் வளர்ந்தன; மேற்கிந்தியத் தீவுகளுக்கு அவை பெருமளவில் ஏற்றுமதியாயின. ரோட் ஐலண்டிலும் மெசாசுசெட்ஸிலும் வளர்ந்த செம்மறியாடுகள் வீட்டு காலனிகளுக்கு ஏற்றுமதியாயின. எந்தவிதச் சூழ்நிலையையும் சகித்துக்கொள்ளும் ஆற்றல் உடையனவென்றாலும், இவ் ஆடுகளுக்கு நியூ இங்கிலாந்து சூழ்நிலை முதலில் ஒத்துக்கொள்ளவில்லை. ஆட்டு வளர்ப்பைத் தூண்டும் சட்டம் தேவையாயிற்று. பொது மேய்ச்சல்வெளிகளில்தாம் ஆடுகள் மேய்ந்தன. ஆடு மேய்ப்பவனுக்குக் கூலியும் கிடைத்தது.

காலனி காலத்து நியூ இங்கிலாந்து விவசாயி கடினமாக உழைத்து வாழ்க்கையை நடத்தினான்; ஓரளவுக்கு நல்ல வாழ்க்கையும் வாழ்ந்தான். ஆனால், அவனுடைய விவசாய முறை பிற்போக்கானது; பூர்வீகமானது. டர்னிப்புகள், குளோவர், நல்லவகைப் புற்கள் இவற்றைப் பயிரிடுவதும், விஞ்ஞானரீதியில் அமைந்த மாற்றுப் பயிர் முறையும், மூன்று வயல் முறையை ஒழித்தமையும், ஆங்கிலேய விவசாயத்தின் வளர்ச்சியைக் குறிக்கும். 18-ஆம் நூற்றாண்டு வரையில் இம் முறைகளுக்கு நியூ இங்கிலாந்தில் செல்வாக்கு ஏற்படவில்லை. புதிய உலகெங்கும் பரந்துகிடக்கும் கலப்பை படாத பூமியைப் பார்க்கும் ஒருவன், விஞ்ஞானரீதியான விவசாய முன்னேற்றத்திற்குரிய வழிகளைப் பற்றிக் கவலையுற மாட்டான். பரம்பு, மண்கொத்தி, ஃபோர்க், மரத்தால் செய்த கருவிகள் ஆகியவைகளே அவனுடைய தளவாடங்கள் ஆகும். அக்காலத்தில் ஒரு சிலரே கலப்பையை விலைக்கு வாங்க முடியும். கலப்பையை வாங்கி நல்ல முறையில் வைத்திருப்போருக்கு நகரம் பரிசு வழங்கும். யாத்திரீகர்கள் வந்திறங்கிப் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்தும், பிளைமவுத்தில் கலப்பைகள் கிடையாது. 1637-ல் மெசாசுசெட்ஸில் 37 கலப்பைகள் இருந்தன. ஒரு கலப்பையைக்கொண்டே பெரிய நிலப்பகுதியை உழுவர்.

விஞ்ஞான முறையில் பயிரிடும் வழக்கமும் இல்லை; மாற்றுப் பயிர் முறையும் இல்லை. முழு வளத்தையும் இழக்கும் வரையில் நிலத்தைப் பயிரிடுவர். அதற்குப் பின்னர், அந்நிலத்தைத் தரிசாகப் போடுவர். அந் நிலத்தில் இயற்கையாகவே புற்பூண்டுகள் வளரும். இழந்த வளத்தை அந் நிலம் மீண்டும் பெறும். வயல்கள் சிறியனவாய் இருந்தமையாலும், கிராமப்புறங்களில் குடியேற்றங்கள் நிகழ்ந்தமையாலும் தென்பகுதியில் நடந்த அளவுக்கு நியூ இங்கிலாந்தில் 'நிலக்கொலை' நிகழவில்லை. அந்தக் காலத்திலேயே வாழ்ந்து ஆராய்ச்சி செய்தவர் குறிப்பிடுவதுபோல, நியூ இங்கிலாந்தில் பயிர்த்தொழில் தன்கு நடைபெறவில்லை; ஆனாலும். உழுதல் அவ்வளவு மோசமாக இல்லை. விவசாயிகள் ஓரளவுக்கு உழுது பயிரிட்டு வெற்றியும் கண்டனர். உழவுமுறை மோசமாக விருந்தாலும், புதுக் குடியேற்றங்களில் காடுகளின் செழிப்பு நல்ல விளைச்சலைத் தந்தது.[3]

கால்நடைகளையும் சரியாகக் கண்காணிக்கவில்லை. கால்நடைகளைப் பொறுத்தவரையில், நியூ இங்கிலாந்து விவசாயிகள் பொறுப்பும் கவலையும் எடுத்துக்கொள்ளவில்லை. உலகத்திலேயே வேறு எந்த நாட்டிலும் கால்நடைகள் இவ்வளவு மோசமான நிலையில் இல்லை. சிறந்த குதிரைகளையும் கடினமான வேலையில் ஈடுபடுத்தினர். நிலத்தை உழுவதற்கும், வண்டியில் பூட்டி ஓட்டுவதற்கும், சவாரி செய்வதற்கும் குதிரைகளைப் பழக்கினர். குதிரைகளுக்குச் சரியான உணவும் கிடையாது. கொஞ்சம் கொஞ்சமாக அவை செத்துக்கொண்டிருந்தன. கடின உழைப்பிற்குப் பின், தண்டுகளையும் களைகளையும் மட்டுமேகொண்ட மேய்ச்சல் காடுகளில் அவைகளை அவிழ்த்துவிட்டனர். வைக்கோல் போர் எடுத்த பின்னர், புற்பூண்டுகளில் ஒரு பகுதியைத்தான் குதிரைகளுக்கு உணவாகத் தந்தனர்.[4] உணவுப் பற்றுக்குறையின் காரணமாக அம்மிருகங்களுக்குத் தானிய உணவு தரப்படுவதைத் தடுக்கும் சட்டமும் நிறைவேறியது.

சில டாலர்கள்மட்டுமே மதிப்புள்ள உப்பும் இரும்பும் படைத்தவர் நீங்கலாக நியூ இங்கிலாந்து விவசாயிகள் பலர் தன்னிறைவு பெற்றிருந்தனர். வயலிலிருந்து தானியங்களும், தோட்டத்திலிருந்து பழங்களும், மேய்ச்சல் தரையிலிருந்து இறைச்சியும் பால் பண்ணைப் பொருள்களும் அவனுக்குக் கிடைத்தன. வயலிலிருந்து கிடைத்த சணலையும், செம்மறியாடுகளிலிருந்து கிடைத்த

[3] American Husbandry, I, 81.

[4] Ibid., I, 80.

கம்பளியையும் அவன் மனைவியும் பெண்களும் நூற்று ஆடை நெய்தனர். கிடைத்த தேனும் மேப்பிள் மரச் சாறும் (maple sap) அவனது உணவை இனிப்பாக்கின. தானிய விஸ்கியும் ஸிடர் (cider) என்னும் குடிவகையும் அவனுக்குக் குடிக்கப் பயன்பட்டன. ஒவ்வொரு விவசாயியும் எல்லாத் தொழிலும் தெரிந்த ஜாக் (Jack-of-all-trades) என விளங்கினன். அவனுடைய துணைவியும் எந்தத் தொழிலையும் செய்யும் திறமையுடன் விளங்கினள். நியூ இங்கிலாந்து விவசாயியின் தன்னிறைவு விருப்பத்தால் விளைந்ததன்று. மேற்கிந்தியச் சந்தைக்கென, முடிந்தவரையில் கூடுதலாகவே, விவசாயிகள் உற்பத்தி செய்தனர். நியூ இங்கிலாந்து நிலங்கள் செழிப்பானவை அல்ல எனினும், ஆழமாக உழுவதற்கு ஏற்றவையே. தொழிலிலும் வியாபாரத்திலும் பணம் திரட்டலாம் என்ற உணர்வுதான் நியூ இங்கிலாந்துக்காரர்களை அத் துறைகள் கவர்ந்தன.

நியூ இங்கிலாந்தில் ஆரம்பகாலத்தில் குடியேறியவர்களும் பங்குதாரர்களும் ஒப்பந்தத்தின்படி சில நிலங்களைப் பெற்றிருந்தனர். கடற்கரையில் காலி நிலங்கள் குறைவாக இருந்தமையால், பொது நீதிமன்றத்தின் உத்தரவுடன் பல்வேறு குழுக்கள் நிலமான்யங்களைப் பெற்றன; நகரங்களையும் ஏற்படுத்தின. இக் குழுக்கள் 36 சதுர மைல்கள்கொண்ட மான்யங்களைத் தங்களுக்குள்ளாகவே பகிர்ந்துகொண்டன. நகரத்தின் மத்தியில் கூட்டம் நடத்துதற்குரிய வீடு எழும்பியது; அங்கிருந்து அகன்ற தெருக்கள் எழுந்தன; தெருக்களின் இரு மருங்கிலும் ஆறு ஏக்கர்கள் கொண்ட தோட்டத்துடன்கூடிய வீடுகள் எழுந்தன. மிகுந்தவற்றை, மேட்டு நிலத்தில் இவ்வளவு பகுதியென்றும், சதுப்பு நிலத்தில் இவ்வளவென்றும், புல்வெளிப் பகுதியில் இவ்வளவென்றும், மேய்ச்சல்வெளியில் இவ்வளவென்றும் தங்களுக்குள்ளாகவே பகிர்ந்துகொண்டனர். பாறை நிறைந்த பகுதிகளையும் கொடிய தட்ப வெப்ப நிலையையும் சந்ததிகளுக்குப் பகிர்ந்து அளிக்கவேண்டும் என்ற நிலச்சட்டங்களையுங்கொண்ட ஓர் அமைப்பில், பெரிய எஸ்டேட்டுகள் தோன்ற வழியில்லை. நியூ இங்கிலாந்தின் பண்ணைமுறை சிறிய அளவில் நடை பெற்ற ஒன்றாகும். நியூ இங்கிலாந்துக்காரர்களும் கிராமப்புறங்களில் குடியிருந்தனர்; தங்கள் கைகளாலேயே நிலத்தை உழுதனர்.

நியூ இங்கிலாந்துக் கிராமங்களில் வீடுகளும் தோட்டங்களும் ஒழுங்குற அமைந்திருந்தன; கிராமப் பொது மேய்ச்சல் நிலங்கள் போக எஞ்சியவற்றில் மக்கள் உரிமைகள் பெற்றிருந்தனர். எனவே, அக் கிராமங்கள் ஆங்கிலேய நிலச்சுவான் முறையை

நிலவுடைமை. நிலத்தின் பெரும்பகுதி பொதுவில் இருந்தது. ஆனால், பயிர்த்தொழில் தனித்தனியே நடந்தது. நகரக் கூட்டத்தில் திட்டங்களை வகுத்தனர். மாடு மேய்ப்பவர்கள், பன்றி மேய்ப்பவர்கள், மற்றும் கிராமச் சொத்தை நிர்வகிக்கப் பல அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வமைப்பு தாற்காலிகமானதே. நகரங்கள் வளர்ந்தன; இந்தியர்களிடமிருந்து கிளம்பிய தொல்லைகள் குறைந்தன; தொழிலாளர்கள் பல்வேறு தொழில்துறைகளில் நுழைந்தனர். எனவே, சிதறிக்கிடந்த துண்டு நிலங்களை மக்கள் விற்க முனைந்தனர். அதன் விளைவாக, நிலமும் வீடும் சேர்ந்திருக்கும் பண்ணைகள் தோன்றின. ஆக, அன்று உருவான நியூ இங்கிலாந்து இன்றைய கிராமாந்தர நியூ இங்கிலாந்தை ஒத்திருந்தது. புது நிலம் எளிதாகக் கிடைத்தமையாலும், சுதந்திர வாழ்க்கை அமைந்தமையாலும் பலவாண்டுகளுக்கு நிலமற்ற தொழிலாளர் வர்க்கம் என ஒன்று உருவாகவில்லை. விவசாயிகளிடத்தில் கூட்டுறவு ஏற்படும் கட்டாயநிலை உருவாகியது. வீடுகள் எழுந்தன; வேலிகள் எழும்பின; தானியங்களின் உமி அகற்றப்பெற்றது; நிலங்கள் உழப்பட்டன. இவை அனைத்தும் கூட்டுறவு முயற்சியினால் நிகழ்ந்தன. அறுவடை முடிவுற்றவுடன் கேளிக்கைகள் நடைபெற்றன.

மத்திய காலனிகளில் விவசாயம்

மத்திய காலனிகளில் ஹட்சன் பள்ளத்தாக்கில் மட்டுந்தான் டச்சுக்காரர்கள் துவங்கி, ஆங்கிலேயர்கள் தொடர்ந்த நிலப்பிரபுத்துவமுறை இயங்கியது. மற்றப்பகுதிகளில் நியூ இங்கிலாந்தைப் போலவே சிறு பண்ணை முறைகளே நிலவின. மேரிலாண்டின் செசாபீக் (Chesapeake) கரையில் பெருந்தோட்டங்கள் இருந்தன வென்றாலும் அடிப்படையில் ஒன்றும் மாற்றமில்லை. நியூ இங்கிலாந்தில் இருந்ததைவிட ஹட்சனுக்கும் போடோமாக்கிற்கும் (Potomac) இடையிலுள்ள பகுதியின் மண்ணும், தட்பவெட்பமும் விவசாய நிலையும் தாயகமாகிய இங்கிலாந்துடன் ஒத்திருந்தன. நியூஜெர்ஸியின் மண் வளமுடையதாக விருந்தமையால், அங்குக் குடியேறியவர்கள் பொறுப்பற்றவேளாளர்களாக இருந்தனர் என்று 1749-ல் ஸ்வீடன் நாட்டு யாத்திரீகர் பீட்டர் காம் (Peter Kalm) குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'காடுகளை வெட்டிக்குவித்து, பழுத்த இலைகளை அப்புறப்படுத்தினால் போதும்; நிலத்தை உழுவதற்குத் தொடங்கிவிடலாம். பக்குவமான நிலமாக இருப்பதால் உழுவதும் எளிதே. விதை விதைத்து விட்டால், விவசாயிகள் பெருமளவில் அறுவடையை எதிர்பார்க்கலாம். எளிய முறையில் பெருத்த அளவிற்கு விளைச்சல் இருந்த

மையால், ஆங்கிலேயர்களும் ஐரோப்பியர்களும் இந்தியர்களு டைய விவசாய முறையையே பின்பற்றினர். எரு இடாமல், புது நிலம் எவ்வளவு காலத்திற்குப் பலன் தருமோ அவ்வளவு காலத் திற்கு அதில் விதையிட்டுப் பின்னர் மேய்ச்சல் வெளியாக்கினர். படைப்புக் காலத்திலிருந்து தீக்கிரையாகாமலும், திருட்டுக் கைக் கோடரிக்குப் பலியாகாமலும் தப்பித்துக்கொண்ட காட்டுப் பகுதி யிலுள்ள புது நிலங்களையெல்லாம் அவர்கள் உழுது பயன்படுத்தி னர்.'[5] செழிப்பான பூமியில் கோதுமையும் பார்லியும் ஆறு அல்லது ஏழு அடி உயரத்திற்கு வளர்ந்தன. எனினும், அவற்றின் உச்சிகளில் கதிர்கள் மிகக் குறைவாகவே இருந்தன. ஒரே வயலில் பதினேழு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து கோதுமை பயிரிடப்பட்ட தையும், ஒரே பண்ணையில் ஒன்பது ஆண்டுகளுக்குத் தொடர்ந் தாற்போல் எரு இடப்படாததையும் தாம் நேரில் கண்டதாக மொகாக் பள்ளத்தாக்கைச் (Mohawk Valley) சார்ந்த ஒருவர் 1665-ல் குறிப்பிடுகிறார். பென்சில்வேனியா புல்வெளியில் உள்ள நீர்ப்பாசனத்தைப்பற்றியும் அவரே குறிப்பிட்டுள்ளார்.

நியூ இங்கிலாந்தில் பத்தில் ஒன்பதின்மர் வேளாளர்களெனி னும், மத்திய காலனிகளில் இருந்தவர்களே விவசாயத்தில் மிகுதி யான ஈடுபாடுடையவர்கள். தோல்வகைகளையும் மரத்துண்டு களையும் தவிர, ஏற்றுமதியான பெரும்பாலானவை, விவசாயப் பொருள்களே. ஏற்றுமதிப் புள்ளிவிவரப்படி[6] கோதுமைதான் முக்கியமான ஏற்றுமதிப் பொருளாகவிருந்தது. ஒரு சராசரி ஏக்கர் நிலத்தில் இருபது முதல் முப்பது புஷல்கள் (bushels) கோதுமை விளைந்தது. இங்கிலாந்தில் விளைவதைவிட இது அதிக மாகும். எல்லா மாநிலங்களிலும் தானியங்கள் விளைந்தன; கால் நடைகளுக்குத் தேவையான மழைக்கால உணவும் கிடைத்தது. ரை, பார்லி, பக்கோதுமை (buckwheat), ஓட்ஸ் முதலியனவும் விளைந்தன: ஓட்ஸ் மிகுதியாகவே விளைந்தது. குளிர்ந்த பிர தேசங்களுக்கேற்ற பழங்களும் விளைந்தன. நியூயார்க்கில் ஆப்பிள் பழங்களும், முலாம் பழமும் பீச் பழமும் (peach) நியூ ஜெர்சியிலும் டிலாவேரிலும் விளைந்தன. 'அமெரிக்க உழவுத் தொழில்' என்னும் நூலின் (American Husbandry) ஆசிரியர் கீழ்க்கண்டவாறு குறிப் பிடுகிறார்: 'மணம் கமழும் பீச் பழங்கள் நிறைய விளைந்துள் ளன. வயலில் மேயும் பன்றிக் கூட்டம் அப் பழங்களை வேண்டு மளவிற்குத் தின்கின்றன. என்றாலும், மரங்களின் அடியில் அப்

5 Adolph B. Benson (ed.), Peter Kalm's Travels in North America, I, 308.

6. See below, Chap.5.

பழங்கள் வீணே இறைந்துகிடப்பது வியப்பைத் தருகிறது..... நீர்முலாம் பழங்களும் நிறையக் கிடைக்கின்றன. விவசாயிகள் யாவரும் முலாம் பழத்தைப் பயிரிடுகின்றனர்'[7]. லாங் ஐலண்டு (Long Island), நியூ ஜெர்ஸி, இன்னும் மற்றப் பகுதிகளின் கடற்கரைத் தாழ்நிலங்களில் கால்நடைகள் புல் மேய்கின்றன. எண்ணற்ற பன்றிகள் காடுகளில் ஓடித்திரிகின்றன. பென்ஸில்வேனியாவில் ஏராளமான செம்மறியாடுகள் உள்ளன.

பல்வேறுபட்ட மக்களால் மத்திய காலனிகளின் விவசாயம் தாழ்வுற்றது. ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், ஸ்வீடன் நாட்டவர், இன்னும் வேறு நாட்டவர்களும் அங்குக் குடியேறியுள்ளனர். தங்களுடைய நாட்டுக் கால்நடைகளையும், பயிர்த்தொழில் முறைகளையும், பயிர் வகைகளையும் மத்திய காலனிகளில் அவர்கள் புகுத்தியுள்ளனர். பிற்போக்கான விவசாய முறைகளைப் பின்பற்றியபோதிலும் பெருமிதமான விளைச்சலே ஏற்பட்டது. ஐரோப்பிய விவசாயிக்கு அப்பகுதி நம்பிக்கையின் இருப்பிடமாயிற்று.

தென்னகத்து விவசாயம்

வர்ஜீனியாவின் மண் மிக்க வளமுடையதாகவும், மிக்க வெப்ப முடையதாகவும் இருந்தமையால், இங்கிலாந்திலிருந்து கொண்டு வந்த கோதுமைக்கு அப்பகுதி ஏற்றதாக இல்லை. வர்ஜீனியா, புகையிலைக்கே ஏற்றதாக இருந்தது. புகையிலைக்கு நல்ல சந்தையும் உண்டு. பிற்காலத்தில் விலைகள் இறங்கினாலும், புகையிலை உற்பத்தி இலாபகரமான தொழிலாகவே இருந்தது. 1790-ல் 18,00,00,000 பவுண்டுகள் புகையிலை உற்பத்தியாயின. ஏற்று மதிக்காகவே உற்பத்தி செய்யப்பட்டதால், புகையிலைத் தோட்டம் நதிக்கரைகளிலேயே அமையவேண்டும். அப்பொழுதுதான் வேளாளனின் நாவாய்க் குறட்டிலிருந்து, காலனிக் காலத்து சிறிய கப்பல்களில் சரக்கை ஏற்றித் துறைமுகத்திற்கு அனுப்ப முடியும். வர்ஜீனிய நதிகளின் கரையோரங்களிலும் செசாபீக் உட்குடாவிலும் (Chesapeake inlets) வட கரோலினாவின் ஆல்பர்மார்ல் (Albermarle), பாம்லிக்கோ (Pamlico) மாவட்டங்களிலும் புகையிலைத் தோட்டங்கள் உருவாயின. நதிகளின் கரையோரங்களிலெல்லாம் தோட்டங்கள் ஏற்பட்டு முற்றுப் பெற்றமையால், நதித்தோட்டங்களுக்குப் பின்பக்கமாகவே புதிய புகையிலைத் தோட்டங்களின் வரிசைகளை, காலம் கடந்த நிலையில் குடியேறியவர்கள் ஏற்படுத்

7. American Husbandry, I, 139

தினர்கள்; உற்பத்தியான புகையிலையை ஏற்றுமதி செய்யும் நோக்குடன் அருகிலுள்ள வேளாளர்களின் நாவாய்க் குறட்டிற்கு உடனுக்குடன் அனுப்பிவைத்தனர்.

செழிப்பான பூமியின் வளத்தை விரைவாக உறிஞ்சும் ஆற்றல் புகையிலைக்கு உண்டு. புகையிலை உற்பத்தி செய்வதில் மூன்று ஆண்டுகளுக்குத்தான் ஒரு நிலத்தைப் பயன்படுத்தலாம். பின்னர் அந்நிலத்தை வேறு பயிர்களுக்குத்தான் பயன்படுத்தமுடியும். வெள்ளாத் தொழிலாளர்கள் நிறையப்பேர் கிடைக்கவில்லை; அவர்கள் கூலியும் அதிகம் கேட்டனர். எனவே, நீக்ரோ தொழிலாளர்களை வேலைக்கமர்தினர். அடிமைத் தொழிலைக் கண்காணிப்பது அவசியமாயிற்று. இருபது நீக்ரோக்களுக்கு ஒரு கண்காணிப்பாளர் வீதம் நியமித்தால்தான் செலவு குறையும். இச் சூழ்நிலைதான் பெரும் தோட்டங்கள் ஏற்படக் காரணமாய் அமைந்தது. 1,000 ஏக்கர்கள்கொண்ட பெரும்புகையிலைத் தோட்டங்களும் தோன்றின. மற்றப் பயிர்களுக்குரிய நிலங்களும், கால்நடைகளுக்குரிய இடமும் காடும் ஏற்பட்டிருந்தன. அநேக வர்ஜீனியப் புகையிலைத் தோட்டங்கள், 5,000 ஏக்கரும் அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையும் கொண்டவைகளே. மேற்குறிப்பிட்ட உண்மைகளும், எளிதாகப் புதுநிலம் கிடைத்தமையுமே தெற்கில் பெரும் பண்ணைகள் ஏற்படக்காரணமாயின. ஒருசிறு கட்டணத்தையோ, மனை வரியையோ செலுத்தி நிலத்தில் குடியிருக்கத் துவங்கிவிட்டால், அந் நிலம் அவனுக்குச் சொந்தமாகிவிடும். குடியேறுபவர்களை இறக்குமதி செய்வோருக்கு வழங்கும் நிலமான்யமாகிய தலா உரிமைகளும், சிறந்த தொண்டிற்கு வழங்கும் மான்யங்களும், தனிப்பட்டோருக்கு வழங்கும் மான்யங்களுமே பெரும் எஸ்டேட்டுகள் பெருகுவதற்குக் காரணமாயின.

நிலத்தைச் சொந்தமாக்கிக்கொள்வது எளிதான செயலாக இருந்ததால், தொழிலாளர்கள் வேண்டிய அளவுக்குக் கிடைக்கவில்லை; பெரும் எஸ்டேட்டுகளின் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைந்தது. நியூ இங்கிலாந்தின் பண்ணையைவிடப் பெரிதான தென்னகத்துப் பண்ணை அளவில் சிறியதுதான். தென்னாட்டின் சராசரி வெள்ளைக்காரன் ஒரு சிறிய விவசாயியே. விவசாய முறைகளும் புகையிலை உற்பத்தியின் அவசியமும் தென்பகுதியின் பூகோள அமைப்பும் அப்பகுதியில் நகரங்கள் ஏற்படாமைக்குக் காரணங்களாயின. ஆனால், சிதறிக்கிடக்கும் தோட்டங்களைக் கொண்ட கிராமாந்தர வாழ்க்கை ஏற்படக் காரணமாயின். தென்னகத்துச் சூழ்நிலைக்கு முற்றிலும் புறம்பான சூழ்நிலையே

நியூ இங்கிலாந்தில் இருந்தது. அங்கே நகரம் தோன்றிய பின்னரே தொழில் உருவாயிற்று.

தென்னூட்டு வர்த்தக விவசாயத்தின் அடிப்படையான புகையிலைத் தோட்டத்திற்கு அடுத்தபடியாக வைத்து எண்ணத் தக்கது கால்நடை வளர்ப்பாகும். விளைச்சல் பூமி மாறிக் கொண்டே இருந்ததாலும், அவை பெரிய தோட்டங்களாக அமைந்துவிட்டமையாலும கால்நடைகளுக்கென வேலியிடும் திட்டம் (enclosure) பலனளிக்கவில்லை. காலி இடங்களையே அவற்றிற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று. மாடுகளும், குதிரைகளும், பன்றிகளும் மந்தைமந்தையாக மேய்ந்தன; வேர்களையும் இலைதழைகளையும் தின்றன. சிக்கிய மிருகங்களைச் சூடிட்டுக் குறியிட்டனர்; காட்டு மிருகங்களைப்போலவே அவற்றை வேட்டையாடினர். குடியேறிய ஒவ்வொருவனுக்கும் காடுகளிலே உரிமை உண்டு. எனவே, குறியிடப்படாத கால்நடைகளிலும் பங்குண்டு. ஸ்பானிஷ்காரர்களிடமிருந்தே கால்நடைப் பண்ணைமுறையினை மேல்நாட்டினர் கற்றனர். ஆரம்பகாலத்து வர்ஜீனியா, கரோலினு பகுதிகளில் விளங்கிய கால்நடைப் பண்ணைமுறையின் மறுபதிப்பே மேல்நாட்டுப் பண்ணைமுறையாகப் பெருமளவில் முகிழ்த்தது. வடபகுதியில் உள்ளதைப் போலல்லாமல், தென் பகுதியில் கால்நடையின் பராமரிப்பு விஞ்ஞான முறையில் அமையவில்லை. மழைக்காலத்தில் பசுக்கள் தங்களைக் கொன்றுவிடும் எனத் தென்பகுதியினர் நம்பினர்!

மேரிலாண்டிலிருந்தும் வர்ஜீனியாவிலிருந்தும் தெற்கே வந்தால், கரோலினு பகுதிகளில் முற்றிலும் மாறுன சூழ்நிலைகளைக் காணலாம். வடக்கு, தெற்குக் கரோலினுக்களில் கால்நடைப் பண்ணைகள் உண்டெனினும், வட கரோலினுவில் சிறிய பண்ணைகளே உண்டு; பல்வேறு பொருள்கள் உற்பத்தியாயின. தென் கரோலினுத் தோட்டங்களில் அரிசியும், இண்டிகோவும் பெருமளவில் விளைந்தன. வட கரோலினுவின் விவசாயிகள் வர்ஜீனியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் ஏழைகள், முன்னுள் ஒப்பந்தக் கூலியாட்கள் அல்லது கடனுளிகள் ஆவர். அவர்கள் புகையிலையையும் தானியங்களையும் சிறு பண்ணைகளில் பயிரிட்டனர்.

16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென் கரோலினுவில் அரிசி பயிரிடமுடியுமா என்று பரீட்சை செய்து பார்த்தனர். வெப்பமும் சேறும் நிறைந்த கடற்கரைப் பகுதியில் உழைக்கும் தெம்புடைய நீக்ரோ அடிமைகள் இறக்குமதியான பின்னரே, அரிசி உற்பத்தி இலாபகரமானதாயிற்று. புரட்சி ஏற்படும் தருவாயில் சார்லஸ்டன் (Charleston) ஆண்டொன்றுக்கு 1,25,000

பீப்பாய்கள் நிறைய அரிசியை ஏற்றுமதி செய்தார். பவுண்டு ஒன்றுக்கு ஆறு பென்ஸ் அரசாங்க நன்கொடை பாராளுமன்றத்தின் ஒப்புதலின் பேரில் இண்டிகோவிற்குக் கிடைத்த பின்னரே. இண்டிகோ விற்பனையின்மூலம் நிறைய வருவாய் கிடைத்தது. புரட்சிக்குப் பின்னர், இண்டிகோவின் இடத்தைத் துணி பிடித்துக்கொண்டது.

காலனி விவசாயத்தின் இயல்புகள்

1607-லிருந்து 1781 வரையில் உள்ள காலத்தின் விவசாய இயல்புகளைச் சரியான வகையில் விவரிக்க இயலாதெனினும், சில பொது உண்மைகளையாவது குறிப்பிடலாம். காலனிப் பொருளாதாரம் முக்கியமாக விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டது. மீனும் கப்பற் தொழில் சரக்குகளும் முக்கியமான ஏற்றுமதிப் பொருள்கள்தாம் என்றாலும், விவசாயப் பண்டங்கள் அவற்றைவிட முக்கியமான ஏற்றுமதிப் பொருள்களாகும். பெருமளவு நிலக்கொடைகள், அடிமைத் தொழிலாளர்கள், புகையிலை, அரிசி, இண்டிகோ இவற்றின் ஏற்றுமதி இவற்றைச் சுற்றியே தென்னகத்தில் பொருளாதார வாழ்க்கை அமைந்திருந்தது. தோட்டப் பொருளாதாரம்தான் தென்னாட்டைக் கட்டிக் காக்கிறது என்றாலும், தோட்ட முதலாளிகள்தாம் அரசாங்கத்தை ஆட்டிப்படைக்கின்றனர் என்றாலும், எண்ணிக்கையில் அவர்களைச் சிறிய விவசாயிகள் மிஞ்சிவிட்டனர். 'தென்னகத்து நிலச் சொந்தக்காரர்களில் பத்தில் ஒன்பதின்மர் இச் சிறிய நில உடைமையாளர்கள்' என்று தகுசிறந்த தென்னாட்டு வரலாற்றறிஞர் குறிப்பிட்டுள்ளார்.[8] இவர்களின் வெற்றியும் தோல்வியும் ஒரு தானியத்தைமட்டும் பொறுத்திருப்பதாலும், வெளி நாட்டுச் சந்தையின் ஏற்ற இறக்கங்களைப் பொறுத்திருப்பதாலும் காலனி சட்டமன்றங்களிலே உணவுப் பண்டங்களின் உற்பத்தி பெருக வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர். இந்த இயக்கத்தில் சிறிய வேளாளன் பெரும்பங்கு ஏற்றுக்கொண்டான். ஆகவே, 1736-ல் உணவுப் பண்டங்களும் சணலும், உள்நாட்டுத் தேவைக்கும் ஏற்றுமதிக்கும் போதுமான அளவுக்கு உற்பத்தி செய்யப்பெற்றன. 1760-ல் உள்நாட்டுத் துய்ப்புக்கு வேண்டிய அளவு கால்நடைகள் வளர்க்கப்பெற்றன. தென்னாட்டிற்கு நேர்மாறான முறையில், வடநாட்டு விவசாயம் குறிப்பிட்ட அளவு நிலக்கொடைகள், தன்னிச்சைத் தொழிலாளர்கள், உள்நாட்டுச் சந்தைக்குத் தேவையான உணவுப் பண்டங்களை

8. டபிள்யூ. ஈ. டாட். (W. E. Dodd.) The South in the Building of the Nation, V, 74.

உற்பத்தி செய்தல் ஆகிய அடிப்படைகளில் அமைந்திருந்தது. ஓரளவுக்கு உணவுப் பொருள்களும் ஏற்றுமதியாயின என்பது உண்மைதான்.

காலனி விவசாயத்தைப்பற்றியோ அல்லது காலனிப் பொருளாதார வாழ்க்கையின் கூறுகளைப் பற்றியோ தெரிந்துகொள்ள வேண்டுமெனில், மெர்க்கன்டலிஸ்டு சித்தாந்தத்தால் இயக்கப்படும் உலகத்தைப்பற்றியே நாம் ஆராய்கிறோம் என்று தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். 17, 18ஆம் நூற்றாண்டுகளின் ஆட்சியாளருக்கு லேஸஸ் ஃபேர் (Laissez faire) என்னும் தலையிடாக்கொள்கையைப்பற்றி ஒன்றும் தெரியாது. அமெரிக்கப் பண்டங்கள் ஏகாதிபத்தியத் தாயக நாடுகளுக்குப் பயன்படும் வகையில் துணைநிற்றல் வேண்டுமேயன்றி அந்நாடுகளுடன் போட்டிபோடக்கூடாது. சில விவசாயப் பொருள்களைக் குறிப்பாக உணவுப் பண்டங்களை இங்கிலாந்தில் விற்கக்கூடாதென்று சுங்க விதிகள் விதிக்கப்பட்டன. சர்க்கரை, துணி, கம்பளி, புகையிலை, இண்டிகோ முதலியனவும் வேறு சில பொருள்களும் இங்கிலாந்திற்கே ஏற்றுமதியாக வேண்டும் என சட்டங்கள் நிறைவேறின. காலனிஸ்டுகளுக்கு இங்கிலாந்து நாட்டுச் சந்தையில் சர்வாதீனம் கிடைக்கும் என்றாலும், இச் சட்டங்களால் அவர்கள் மற்ற வெளி நாட்டுச் சந்தைகளை இழந்தனர். அதே நேரத்தில், ஆங்கில அரசும் காலனி அரசும் அரசாங்கக் கொடையின்மூலம், புகையிலை, சணல் வகைகள், இண்டிகோ, வேறு பல தானியங்கள் ஆகியவற்றின் உற்பத்தியைத் தூண்டின. காலனி விவசாயத்தின் வளர்ச்சியை எண்ணற்ற சட்ட திட்டங்களின்மூலம் கட்டுப்படுத்தியோ ஊக்குவித்தோ வந்த காலமது.

அமெரிக்கப் பண்ணை முறையின் தன்னிறைவுத் தன்மையையும், தனிப்படுத்திக்கொள்ளும் தன்மையையும் அளவுமீறி வலியுறுத்துவது மிக எளிது. போக்குவரத்துச் சாதனங்கள் போதுமளவிற்கு இல்லை. சிறிய விவசாயிக்குத் தேவையான பொழுது பணம் கிடைப்பதில்லை. அதே நேரத்தில் அவனுக்கு இரும்பு, உப்பு, வெடிமருந்துகள் முதலியனவும், இன்னும் எண்ணற்ற பண்டங்களும் தேவைப்பட்டன. வரிகள், அடமானச் செலவுகள், வேறு பல செலவுகள் இருந்தன. எல்லைப்புற விவசாயியும் கூட மிகுதியான அளவில் உற்பத்தி செய்தால்தான் வாழமுடியும் என்ற நிலைமையும் இருந்தது. அதே சமயத்தில் ஏற்றுமதிக்குரிய தானியங்களைமட்டும் உற்பத்தி செய்யும் தோட்ட முதலாளிகளும் தென்னாட்டில் இருந்தனர். தொழிற் புரட்சிக்குப்

பின்னர் சிறிய விவசாயி தன்னிறைவு பெற்றிருந்தான் என்பது உண்மைதான்.

காலனித் தொழிலாளர்கள்

17, 18ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தொழிலாளர்கள் நிறைய இருந்தனர். ஆனால், இயற்கை வளங்கள் மிகக் குறைவு. அமெரிக்காவின் நிலை இதற்கு நேர்மாறானது. வட அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள், மூலப்பொருள்கள் நிறைந்திருந்தும் இன்னும் சுரண்டப்படாத நிலையில் தூய்மையுடன் விளங்கும் கண்டத்தைக் கண்டனர். போதிய அளவுக்கு தொழிலுழைப்பும் கிடைக்கவில்லை; முதலும் கிடைக்கவில்லை. உழைப்பின் மேன்மையும் சோம்பேரித்தனத்தின்மீதுள்ள வெறுப்பும் அமெரிக்கத் தத்துவக் கோட்பாடாக மிளிர்ந்து, காலனிச் சட்டங்களிலே இடம் பெற்றுள்ளன எனில், அதற்கு மேற்குறிப்பிட்ட சூழ்நிலையே காரணம் எனலாம். பூர்வீகக் குடிகளிடமிருந்து உழைப்பு அளிப்பு மிகக் குறைவு எனலாம். இன்றைய ஐக்கிய அமெரிக்க நாட்டின் பகுதியில் அன்று இருந்த இந்தியர்கள் புராதன வாழ்க்கையை விரும்பினர்கள்; வெள்ளைக் காரனுக்குப் பணிந்துபோக விரும்பவில்லை. புதிய உலகத்தில் ஊன்றி நிற்கும் ஐரோப்பியர்களும் மற்றவர்களுடைய அதிகாரத்திற்குக் கட்டுப்படுபவர்கள் அல்லர்; தன்னிச்சைப்படி நில உடைமையாளர்களாக இருக்கவே விழைந்தனர். தென்னூட்டில் தொழிலாளர்கள் நிறையத் தேவைப்பட்டனர். ஏனெனில், அங்கே அத்தியாவசியமான பயிர்கள் பெரும் தோட்டங்களில் விளைந்தன. சிறிய பண்ணைகளை நடத்திய விவசாயிகள் நிறைந்த வட பகுதியில் தொழிலாளர்கள் அவ்வளவாகத் தேவைப்படவில்லை. எனினும், எல்லாப் பகுதிகளிலும் தொழிலாளர்கள் நிறைய்த் தேவைப்பட்டனர் என்பது உண்மையே.

வடக்கே தொழிலளிப்பின் கிடைப்பருமையைக் (scarcity of labour) கூட்டுறவின்மூலம் சமாளித்தனர். வீடு கட்டுவது, கப்பல் கட்டுவதுபோன்ற வேலைகளில் அருகிலிருப்பவர்களின் ஒத்துழைப்பும் கிட்டியது. வடக்கேயுள்ள தொழிலாளர்கள், சுதந்திரம் உள்ளவர்கள், சுதந்திரம் அற்றவர்கள் என்ற இரு வகையினர் ஆவர். திறமையுள்ள தொழிலாளிகள் நிலத்தைச் சொந்தமாக்கிக்கொண்டு சுதந்திரமாக வாழலாம். ஆனால், இத்தகையோர் எண்ணிக்கை மிகக் குறைவு.

சுதந்திரம் பெறுத தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூலிகள்,[9] அடிமைகள் என இருவகையினர். ஒப்பந்தக் கூலிகளிலும் இரு வகையினர் உண்டு; தாங்களாகவே முன்வந்து கூலி களானவர்களென்றும், சூழ்நிலையின் காரணமாக கூலிகளாகக் கட்டாயப்படுத்தப்பட்டவர்கள் என்றும் இரு வகையினர் உண்டு. விரும்பி முன்வந்த ஒப்பந்தக் கூலி[10] சுதந்திர ஒப்பந்தத்தின்படி அடிமையானவன். அமெரிக்காவிலே புது வாழ்க்கையைத் தொடங்கலாம் என்ற ஆவல் மிகுதியினால் உந் தப்பட்டு, கப்பல் தலைவர்களிடத்திலிருந்தும் குடியேற்றத் தரகர்களிடமிருந்தும் அமெரிக்கா செல்வதற்காகும் செலவினைப் பெற்றுக்கொண்டு, தங்களையே மூன்று முதல் ஏழு ஆண்டு களுக்கு விற்றுவிட்டனர். அமெரிக்கா செல்வதற்காகும் செலவின் ஒரு பகுதியைத் தானே ஏற்றுக்கொள்வதைப் பொறுத் தும், தனக்குச் சாதகமான ஒப்பந்தத்தைப் பெறுவதைத் பொறுத் துந்தான், அவனது அடிமைத் தொழிலின் காலம் அமையும். மொழியைப் பயிலவும், வாழ்க்கையை நிதி பெற்று நல்ல முறையில் துவங்கவுமே சில ஜெர்மானியர்களும் மற்றவர்களும் தாங்களாகவே முன்வந்து ஒப்பந்தக் கூலியாயினர். கப்பலி லேயே தன்னை விலை பேசி வாங்கக்கூடியவர்கள் யாரேனும் உண்டோ என்று தேடுவதற்குத் தானே முன்வந்த சுதந்திரக் கூலிக்கு இரண்டு வார காலம் தரப்படுகிறது. அவன் கப்பலை விட்டு இறங்க முடியாதாதலால், வாங்குவோரைக் கண்டு பேரம் பேசும் இந்த உரிமை ஓர் அளவிற்குட்பட்டதாதும்.

ஒப்பந்தக் கூலிகளில் இரண்டாவது வகையினராகிய கட்டாயக் கூலிகள், கடனாளிகளாகவும், ஊர்சுற்றிகளாகவும், குற்றவாளிகளாகவும் இருந்தவர்களே. எலிசபெத் ராணி காலத்தி லிருந்தே, இங்கிலாந்தில் ஊர்சுற்றிகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் கொடிய உருவை எடுத்திருந்தன. ஒரு பாரிஷி லிருந்து இன்னொரு பாரிஷுக்குத் தொழிலாளர்கள் போகக் கூடாது என்றும் சட்டங்கள் இயற்றப்பட்டன. ஏனெனில், வறியவர்களைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு தங்கள் தலைமேல் விழும் என்று ஒவ்வொரு பாரிஷும் பயந்தது. கடனாளியாவது

[9] Intentured servants. ஒப்பந்தத்திற்குரிய இரு நகல்களை ஒரு பெரிய தாளில் எழுதி, அவ்விரு நகல்களைப் பிரிக்கவேண்டி அத் தாளின் நடுவே அலைபோன்று அல்லது பற்களின் வரிசைபோன்று வெட்டுவதைத்தான் இன்டென்ட் (Indent) என்கிறோம். இதுவே, இன்டென்ட்சர் (Indenture) என்ற சொல் தோன்றிற்று.

[10] 'Commonly called Kids,' says Hugh Jones, The Present State of Virginia (1724), Reprint by Sabin (1865), P. 53.

எளிது; அதற்குக் கிடைக்கும் தண்டனை சிறைச்சாலையே. 17ஆம் நூற்றாண்டின் இங்கிலாந்தில் 300 பேர்களுக்குமேல் தூக்குத் தண்டனை பெறவேண்டியவர்களாகவிருந்தனர். வறியவர்களும், ஊர்சுற்றிகளும், கடனாளிகளும், சிறு குற்றவாளிகளும் சிறைச்சாலைகளை நிரப்பிவிட்டனர்; சிறைச்சாலைகளில் இடம் இல்லை. எனவே, இத்தகைய குற்றவாளிகளைக் கப்பலேற்றிப் புதிய உலகத்திற்கு அனுப்புவதுதான் மனிதாபிமானத்திற்கும் நடைமுறைக்கும் ஏற்ற செயலாகும். இவ்வாறு செய்தால், இங்கிலாந்தின் பொறுப்பும் குறையும். அமெரிக்காவிற்குத் தேவையான அளவுக்குத் தொழிலாளர்களும் கிடைப்பர். இக்கைதிகள், அமெரிக்கா செல்வதற்காகும் செலவினைத் தாங்களே ஏற்றுக்கொண்டால், அவர்களுக்குச் சுதந்திரம் உண்டு; இல்லையெனில், ஏழு ஆண்டுகள் முதல் பத்து ஆண்டுகளுக்கு அவர்கள் விற்கப்படுவார்கள். தொழிலுழைப்பின் கிடைப்பருமை இருந்தபோதிலும், காலனிஸ்டுகள் 'மேன்மைதங்கிய மன்னர்பிரானின் ஏழாண்டுப் பிரயாணிகளை' முழு மனத்துடன் வரவேற்கவில்லை. காலனிஸ்டுகளுக்குக் கம்பெனி வளர்ச்சியைவிடத் தங்களுடைய இடத்தைப்பற்றித்தான் அதிகக் கவலையிருந்தது.[11] குற்றவாளிகளை அமெரிக்காவில் கொண்டுவந்து மந்தை மந்தையாகத் தள்ளும் முறையினைக் காலனிஸ்டுகள் எதிர்த்தனரெனினும், எதிர்ப்பு தீவிரமாக இல்லை.

ஆயிரக்கணக்கான குழந்தைகளையும், இளைஞர்களையும் ஒப்பந்தக் கூலிகளாக்கிக் காலனி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள கப்பல் தலைவர்களிடம் தரகர்கள் விற்றுவிடுவார்கள். 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குழந்தைகளைத் திருடும் தொழில் பெருகி இருந்தமையால், அதனைத் தடுக்கவேண்டிப் பாராளுமன்றம் சட்டமியற்றியது. ஆனால், காலனிகளில் தொழிலாளர்கள் மிகவும் தேவைப்பட்டதால் - பிரிட்டன் ஒரு பெரும் வர்த்தக - தொழில் நாடாக மாறியதால் - 17ஆம் நூற்றாண்டில் மேற்குறிப்பிட்ட சூழ்நிலை மாறியது. குற்றவாளிகள் புதிய உலகத்திற்கு அனுப்பப்பட்டனர்; ஆனால், தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களை பிரிட்டன் அனுப்பவில்லை. 1765-ல் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் புதிய உலகத்தில் குடியேறுவதைப் பாராளுமன்றம் சட்டத்தின்மூலம் தடைப்படுத்தியது.

கூலிகளின் உரிமைகள் ஓரளவு பாதுகாக்கப்பட்டன. உணவு, உடை, உறையுள், நோயுற்ற காலத்தில் மருத்துவ

11 Ibid.

உதவி, சொத்து சேர்க்கும் உரிமை முதலியன அவர்களுக்குக் கிடைத்தன. அவர்களுடைய உழைப்பின் காலம் முடிவுற்ற வுடன், துணிமணிகளும் 50 ஏக்கர் நிலமும் அவர்களுக்குக் கிடைத்தன. நியாயமற்ற கொடுமைகளின்றும் காப்பாற்றச் சட்டங்கள் உண்டெனினும், அந்தக் காலத்தில் ஒப்பந்தக் கூலியாள், அதிலும் குறிப்பாகக் கட்டாயக் கூலியாள் மிகவும் தொல்லைப்பட்டான். அவனுடைய பரிதாபநிலை பொருமைப்படத் தக்கதன்று. ஒருபுறம் வேண்டிய அளவுக்குத் தொழிலாளர்கள் கிடைக்காமையாலும், அவர்களுக்குத் தரும் கூலி மிகுதியாக இருப்பதாலும், அவர்களை அன்புடன் நடத்தவேண்டிய கட்டாயம் இருந்தது. மறுபுறம் ஒப்பந்தத்தில் கண்டுள்ள காலவரம் பிற்குள் அத் தொழிலாளர்களின் உழைப்பை எந்த அளவுக்குக் கசக்கிப் பிழிய முடியுமோ அந்த அளவுக்குக் கசக்கிப் பிழியும் வகையில் வேலை வாங்குகின்ற கொடுமையும் நிலவியது. ஒப்பந்தக் கூலியின் பரிதாபநிலை அடிமைத் தொழிலாளிக்குக் கிடையாது. ஏனெனில், அடிமைகள் தேர்ச்சிபெற்ற தொழிலாளிகளாக இருந்தமையால், அவர்களை அன்புடன் நடத்தவேண்டியது அவசியமாயிற்று. 17ஆம் நூற்றாண்டில் தென்னுட்டைப்போலவே வடக்கிலும் ஒப்பந்தக் கூலிகளே பெருமளவில் நியமனமாயினர். ஏனென்றால், துவக்க காலத்தில் அடிமைகள்மீது வெறுப்பேற் பட்டிருந்தது. அடிமை முறையும் மெல்லமெல்ல வளர்ந்தது. 1681-ல் வர்ஜீனியாவில் 6,000 வெள்ளைக்காரக் கூலிகளும், 2,000 அடிமைகளுமே இருந்தனர். 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆயிரக் கணக்கான சுதந்திரக் கூலிகள் கிடைத்தனர்; அவர்கள் எண்ணிக்கையும் குறைந்துகொண்டே வந்தது; புரட்சிக் காலத்தில் அவர்களுடைய குடியேற்றம் நின்றுவிட்டது எனலாம்.

காலனி நாட்களில் காலனிகளுக்கு வந்துற்ற வெள்ளைக்காரர் களில் பாதிப்பேர் ஒப்பந்தக் கூலிகளே. பென்சில்வேனியா, மேரிலாந்து, வர்ஜீனியா ஆகிய பகுதிகளில் குடியேறிய வெள்ளைக்காரர்களில் நான்கில் மூன்று பகுதியினர் ஒப்பந்தக் கூலிக்ளேயாவர். இது புரட்சிக் காலத்துச் சூழ்நிலையாகும். காலனி காலத்திய மக்கள் எண்ணிக்கையின் பெருக்கும், குடியேற்றத்தினால் ஏற்பட்டதைவிட அதிகமான அளவில் இயற்கையாகவே ஏற்பட்டதாகும். ஒப்பந்தக் கூலிகளும், அவர்களுடைய சந்ததிகளும் அமெரிக்காவின் ஆரம்ப காலத்து மக்கள்தொகையில் முக்கியமான ஒரு பெரும்பகுதியினர் ஆவர்.

ஒப்பந்தக்கூலி முறை இரண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டது. வாய்ப்புகள் நிறைந்த புத்துலகத்தில் புது வாழ்க்

கையைத் துவக்கலாம் என்ற நம்பிக்கையுடன் ஐரோப்பாவை விட்டு ஏழைகள் வெளியேறினர். மேலும், அமெரிக்காவிற்குத் தேவையான தொழிலாளர்களை இவ்வொப்பந்தக் கூலி முறை வழங்கியது. சராசரி ஐரோப்பியத் தொழிலாளிக்குத் தன் சொந்தச் செலவில் அமெரிக்கா செல்வது இயலாத ஒன்றாகும். அமெரிக்காவிற்குச் செல்ல £6 முதல் £10 வரையில் செலவாகும். பணக் கூலிக் கணக்குப்படி பார்த்தால், இந்தத் தொகை வருந்தத்தக்க வகையில் மிகக் குறைந்த கூலியைப் பெற்ற ஆங்கிலேய தொழிலாளியின் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளின் வருமானத்திற்கு இணையாகும். ஐரோப்பாவில் நிலவிய கூலிக்கணக்கை ஆதாரமாகக்கொண்டு நோக்கின், அமெரிக்காவில் ஒப்பந்தக் கூலி தன் உழைப்பைத் தகுந்த விலைக்கே விற்றிருக்கிறான் என்பது புலனாகும். அமெரிக்காவின் சுதந்திரத் தொழிலாளிகள் இங்கிலாந்தைவிட 80 சதவீதம்முதல் 100 சதவீதத்திற்கு மிஞ்சிய வகையிலேயே கூலி பெற்றிருக்கிறான். ஒப்பந்தக் கூலி முறை கொடுமையானதெனினும், அதற்கு ஆதரவாளர்களுமுண்டு. ஒப்பந்தக் கூலியாக இருந்த ஜார்ஜ் அல்சப் (George Alsop) பின்வருமாறு எழுதுகிறார்: 'இங்கிலாந்து நாட்டில் நீண்ட நாக்கும், வாயும், தாடையும் படைத்த நாகரிகமற்ற கூட்டத்தினர் மேரிலாந்து மாநிலத்தை அடிமைகள்மூலம் கறைப்படுத்தியுள்ளனர்; எனினும், அம் மாநிலத்தைச் சார்ந்த தொழிலாளர்கள், லண்டன் மாநகரத்து இயந்திரப் பயிற்சித் தொழிலாளர்களைவிடச் சுதந்திரமாகவே வாழ்கின்றனர்; அவர்களுக்குத் தேவையானது, வசதியானது என ஒன்றும் கிடையாது. அவர்களுடைய திறமைகளுக்கு ஏற்பத் தொழிலும் மரியாதையும் உண்டு.[10] நம்பிக்கை ஊட்டாததும், தாங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடியதல்லாததும் ஆகிய சூழ்நிலையிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சியெடுத்துக்கொண்ட, சகிப்புத்தன்மை நிறைந்த ஆண்களும் பெண்களுமே ஒப்பந்தக் கூலிகளாக விரும்பிச் சேர்ந்தனர் என்பது எண்ணற்பாலது. அமெரிக்கச் சோதனைப் புயலில் சிக்கித் தவித்துத் தப்பித்த ஒரு பெரும்பகுதியினர் நல்வாழ்வும், சமூகத்தில் மதிப்பும், செல்வாக்கும் பெற்றனர்.

ஐரோப்பாவிலிருந்து வந்த ஒப்பந்தக் கூலிகளும், ஆப்பிரிக்காவின் அடிமைகளுமே காலனித் தொழிலாளர்கள் ஆயினர் என்பதல்ல; வேறு பலரும் தொழிலாளர்களாயினர். காலனிகளில் உள்ள பெருங் குடும்பங்களிலிருந்து குழந்தைகளும் வேலைக்கு வந்தனர்; முடிந்தவரையில் குழந்தைகளையும் உழைக்கச் செய்த

10 George Alsop, 'A Character of the Province of Maryland,' p. 94.

னர். கடனுளிகளைச் சிறையில் தள்ளும் ஐரோப்பிய வழக்கம் காலனிகளில் கிடையாது. தொழிலாளர்கள் மிகக் குறைவாக இருந்தமையால், தாங்கள் வாங்கிய கடன் தொகைக்கீடாகக் கடனுளிகள் கடன் கொடுத்தவர்களிடத்தில் வேலை செய்தனர். சட்டத்தை மீறியவர்களும் ஒப்பந்தக் கூலி முறையில் வேலை செய்து தண்டப் பணத்தைக் (fines) கழிக்கலாம். வியாபாரத்தைக் கற்றுக்கொள்ளவும், கல்வி வசதி பெறவும் 18 அல்லது 21 வயது வரையில் இளைஞர்கள் பயிற்சித் தொழிலாளர்களாக ஒரு முதலாளியுடன் வசித்து வேலைபார்க்கும் முறையும் நடைமுறையில் இருந்தது.

காலனி நாடுகளில் அடிமைமுறை

முதலீட்டுத் தொகையையும், தொழிலுழைப்பு அளிப்பையும் (labour supplies) ஒன்றுபடுத்தியே தற்காலத்துப் பொருளாதார வளர்ச்சி நிகழ்கிறது. இத்தகைய முதல் வடஅமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உண்டு. மலிவான தொழிலுழைப்புமட்டுமே ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், தெற்கு-மத்திய அமெரிக்காக்களிலும் கிடைக்கும். நிலமும் மூலப்பொருள்களும் நிறைந்த இயற்கை வளங்களுடைய நம் முன்னோர்களுக்குத் தொழிலாளர்கள் நிறையத் தேவைப்பட்டனர். அடிமை முறை இப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வுகண்டது. ஒப்பந்தக் கூலிகளுக்குப் பதிலாக அடிமைகளை வேலைக்கமர்த்துவதில் அமெரிக்க விவசாயிகள், குறிப்பாகத் தோட்ட முதலாளிகள் ஆர்வங் காட்டியமைக்குக் காரணம், அடிமைகள் மலிவான விலையில் கிடைத்தனர் என்பதே. ஆண்டொன்றுக்குச் சராசரி £ 2 முதல் £ 4 வரையில் ஒப்பந்தக் கூலியின்மேல் முதலீடு செய்யவேண்டும். ஆனால், தேர்ச்சி பெற்ற அடிமையை £ 18 முதல் £ 30 வரையில் விலை கொடுத்து வாங்கிவிடலாம். இக்குறைந்த விலையில் வாங்கப்பட்ட அடிமை, வாழ்நாள் முழுதும் முதலாளிக்கு உழைக்கவேண்டும். அவனுடைய குடும்பம் பெருகினால், அது முதலாளிக்கு இலாபமானதே.

ஆப்பிரிக்க மேற்குக் கரையில், வடக்கே கேப் வர்டு (Cape Verde) பகுதியிலிருந்து தெற்கே கேப் செயின்டு மார்த்தா (Cape St. Martha) வரையில் பரவியுள்ள அடிமைக் கரையிலிருந்து நீக்கிரோக்களைக் கொண்டுவந்து ஐரோப்பாவில் போர்ச்சுகீசியர்கள் 15ஆம் நூற்றாண்டில் இறக்குமதி செய்தனர். 1482-ல் முதன்முதலில் போர்ச்சுகீசியர்கள் ஆப்பிரிக்காவில் குடியேறியதிலிருந்து 400 ஆண்டுகளுக்கு அங்கு அடிமைப் போக்குவரத்து

சிரமாக அமைந்தது. ஆப்பிரிக்க உட்பகுதியில் உள்ள பழங்குடி மக்களிடமிருந்து நீக்கிரோக்களை விலைக்கு வாங்கி, கடற்கரை நகரங்களில் உள்ள தரகர்கள் போர்ச்சுகீசிய வியாபாரிகளிடம் விற்றுவிடுவார்கள். துப்பாக்கியும் வெடிமருந்தும் கொண்டு நீக்கிரோக்களைக் கைதாக்கி, கடற்கரைப் பகுதிகளிலுள்ள அடிமைப் பட்டிகளிலே அடைத்துவைத்துக் கப்பல்களிலே ஏற்றுமதி செய்வர்.

ஒரு டச்சுக்காரரால் 1619-ல் முதன்முதலில் நீக்கிரோ அடிமைகள் அமெரிக்காவில் ஜேம்ஸ் டவுனில் விற்கப்பட்டனர். சில ஆண்டுகளிலேயே எல்லாக் காலனிகளிலும் அடிமைகள் பெருகினர். தொழிலாளர்கள் பலர் கிடைக்கவில்லை என்றாலும், அடிமைகள்மீதுமுதலாளிகளுக்கு முதலில் நாட்டம்ஏற்படவில்லை. எனவே அவர்கள் எண்ணிக்கை பெருகி வளரவில்லை. அரை நூற்றாண்டிற்குப் பின்னரே மக்கள்தொகையில் அவர்கள்பகுதி பெருகலாயிற்று. 18ஆம் நூற்றாண்டில் அடிமை வியாபாரத்தில் டச்சுக்காரர்களுக்கே சர்வாதீனமிருந்தது; 18ஆம் நூற்றாண்டில் அவர்களுடைய ஆதிக்கம் அழியும்வரையில் அதுவே நிலைமை எனலாம். அதற்குப் பின்னர், 1698 வரையில் இங்கிலாந்து நாட்டின் ராயல் ஆப்பிரிக்கக் கம்பெனி அடிமை வியாபாரத்தை ஆட்கொண்டது. அதற்குப் பின்னர் அடிமை வியாபாரம் எல்லோருக்கும் பொதுவாயிற்று. எனவே, அவ்வியாபாரம் வளர்ச்சியுற்றது. 1714-ல் அமெரிக்கக் காலனிகளில் 59,000 அடிமைகளும், 1754-ல் 2,63,000 அடிமைகளும் இருந்ததாக பேன்கிராப்ட் (Bancroft) கணக்கிடுகிறார். முதல் சென்சஸ்படி (1790), 6,97.000 அடிமைகள் இருந்தனர். அப்பொழுது தென்னாட்டு மக்கள்தொகையின் மொத்தத்தில் ஐந்தில் இரு பகுதியினர் அடிமைகளாயிருந்தனர். மேரிலாந்திலும், வடகரோலினாவிலும் மொத்தத் தொகையில் சிறு சதவீத அளவே அடிமைகள் இருந்தனர். தென்கரோலினாவில் வெள்ளைக்காரர்களின் எண்ணிக்கையைவிட இருமடங்கு அதிகமாக அடிமைகள் இருந்தனர்.

ஆங்கிலேயக் காலனிகளில் நடைபெற்ற அடிமை வியாபாரத்தின் முழு ஆதிக்கமும் ஆங்கிலேயக் கப்பல்களுக்கும், அமெரிக்கக் கப்பல்களுக்கும் கிடைத்தன. அமெரிக்கக் கப்பல் வியாபாரம் திறமையாக நடைபெற்றது. நியூ இங்கிலாந்திலிருந்து ரம் (rum) போன்ற பல்வேறு சரக்குகளை ஏற்றிக்கொண்டு அடிமைக் கரைக்குச் சென்று, அங்கு இப்பண்டங்களுக்கு ஈடாக அடிமைகளை வாங்கி, அவ்வடிமைகளை மேற்கிந்தியத் தீவுகளிலும், அமெரிக்காவிலும் விற்றுவிட்டு, சர்க்கரை, மொலாஸஸ், புகையிலை

இவற்றை ஏற்றிச்சென்று வடபகுதியில் விலையாக்குவதே யாங்கீ அடிமை வியாபாரியின் (yankee slaver) வழக்கமான முறையாகும். ஆப்பிரிக்காவுக்கும், மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையில் நடைபெறும் கடற் பயணத்தை 'மத்திய பாதை' (Middle passage) என்பர். இந்தக் கடற் பயணம் அடிமை வியாபாரத்தின் இருண்ட தன்மையையும் அடிமை வியாபாரத்தின் கொடுமையையும் தன்கு படமெடுத்துக் காட்டுகிறது. கப்பல்களிலே விலங்கிடப் பட்டு மிகச் சிறிய இடத்தில் புழுப்பூச்சிகள்போல் நெருக்குண்டு, நசுக்குண்டு, அட்லான்டிக் பாதையில் கப்பல்கள் மெல்லமெல்ல ஊர்ந்து செல்லும் வாரங்களில், இவ்வடிமைகள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களும் வேதனைகளும் நம்மையெல்லாம் மெய்சிலிர்க்கச் செய்கின்றன.

வேண்டிய தொழிலாளர்களை எளிதாகப் பெறும் வழியாகத் தென்னுட்டுப் புகையிலைத் தோட்டங்களில் அடிமைகள் வேலைக் கமர்த்தப்பட்டனர். வெப்பம் நிறைந்த நெல் வயல்களிலே வேலை செய்யும் ஆற்றல் அடிமைகளுக்குமட்டுமே உண்டாகையால், அவர்களையே தென்கரோலினாவின் நெல் வயல்களில் வேலைக்கமர்த்தினர். இதனையே அடிமைப் பொருளாதாரம் என்னலாம். ஒரு பொருளாதாரத் தேவையை அடிமைமுறை பூர்த்திசெய்தது; அத்தேவையைப் பூர்த்திசெய்து கொண்டிருக் கும் வரையில் அடிமை முறை வாழும். புரட்சிக் காலத்தில் புகையிலைத் தோட்டங்கள் வளங்குன்றவே, அடிமை முறை மங்கத் தொடங்கியது. எனினும், பருத்தி விதையைப் பிரித்தெடுக் கும் கருவியாகிய காட்டன் ஜின் (cotton gin) கண்டுபிடிக்கப்பட்ட வுடன், அடிமைமுறை மீண்டும் தலையெடுத்தது.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

கிரே, எல். சி. (Gray, L. C.), 'History of Agriculture in the Southern United States to 1860,' Chap. I, 14-16,

கேரியர், லிமேன் (Carrier, Lyman), 'The Beginnings of American Agriculture,' Chaps. 3-7, 9, 10-25.

பிட்வெல், பி. டபிள்யூ., ஃபால்க்னர், ஜே. ஐ. (Bidwell, P. W. & Falconer, J. I.) 'History of Agriculture in the Northern United States Before 1860,' Chaps. 1-10.

வெர்டன்பேக்கர், டி. ஜே. (Wertenbaker, T. J.), 'The First Americans', Chap. 3.

பிலிப்ஸ், யூ. பி. (Phillips, U. B.), 'American Negro Slavery', Chaps. 1-7.

போகார்ட், ஈ. எல்., தாம்ப்ஸன், சி. எம். (Bogart, E. L. & Thompson, C. M.), 'Readings in the Economic History of the United States', pp. 28-40, 82-95.

5. காலனி வர்த்தகமும் தொழிலும்

காலனி வர்த்தகத்தின் நிலைமைகள்

நீண்ட நாட்கள் நீடித்து நிற்கக்கூடிய ஒரு பெருவர்த்தகத்தை அடிநாள் தொட்டு வளர்ப்பதையே அமெரிக்கக் காலனிகள் நோக்கமாகக் கொண்டிருந்தன. ஏகாதிபத்தியத் தாயக நாட்டிற்கு மூலப்பொருள்களை வழங்கிவிட்டு, அதற்குப் பதிலாகத் தாயகத்தின் பொறிசெய் பொருள்களையும், முற்றுப்பெற்ற பொருள்களையும் இறக்குமதி செய்துகொள்வதையே காலனிகள் கடமையாகக் கொள்ளவேண்டுமென்பது மெர்க்கண்டலிசப் பொருளாதாரத்தின் கோட்பாடாகும். இந்தச் சூழ்நிலை, விறு விறுப்பான வியாபாரத் தொடர்புகள் ஏற்பட வழிவகுத்தது. காட்டுப் பொருள்களும், பண்ணைப் பொருள்களும் இங்கிலாந்திற்குத் தேவைப்பட்டன. காலனிஸ்டுகள், முன்னேறிய நாடுகளின் பொறிசெய் பொருள்களை நாடினர். சில சமயங்களில் உணவுப் பண்டங்களையும், மற்றக் காலனிப் பொருள்களையும் சுங்கச் சட்டங்களின்மூலம் பிரிட்டிஷ் அரசாங்கம் தடைப்படுத்தியபொழுதெல்லாம், ஆங்கிலேய நாட்டுப் பொறிசெய் பொருள்களை விலை கொடுத்து வாங்கவேண்டிய கட்டாயத் தேவையின் காரணமாக, காலனிஸ்டுகள் தங்கள் பண்டங்களுக்கு வேறு சந்தைகளைத் தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே, காலனி வர்த்தகமும் செழிப்புற்றது.

வர்த்தக வளர்ச்சியில், அமெரிக்கக் காலனிஸ்டுகளுக்கு நிலவுருவச் சூழ்நிலைகள் சாதகமாயிருந்தன. நியூ இங்கிலாந்து, மத்திய காலனிகள் இவற்றின் கரைகளில் அருமையான துறைமுகங்கள் அமைந்திருந்தன. கடற்கரை விரிகுடாக்களும், ஓர வெட்டுகளும் (indentations) மத்திய, தென் காலனிகளில் உள்ள ஆறுகளும் வர்த்தகத்தை எளிதாக்கின. 'நதிகளின் போக்கு வரத்து வசதிகளின் காரணமாக அக் கண்டங்கள் நெருங்கிய

தொடர்பு கொண்டனவாய் உள்ளன'[1] என்று கூறப்படுகிறது. புதிய குடியேற்றப் பகுதிகளில் இது முற்றிலும் உண்மையாகும். தோட்ட முதலாளிகளின் நாவாய்க் குறட்டிற்கே சிறு கப்பல்கள் நேரிடையாகச் செல்வதற்கு ஏற்றவாறு தென்னூட்டின் எண்ணற்ற ஆறுகள் அமைந்திருந்தன. 1686-ல் வர்ஜீனியாவில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒரு பிரெஞ்சுக்காரர் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்: 'தொலைவில் உள்ள தோட்ட வீடுகள் கூட 'கிரிக்'கிலிருந்து (crik) 100 அல்லது 150 அடிக் குள்ளேயே இருந்தன. மக்கள் தங்கள் படகுகளிலேயே பல இடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு இருந்தது; மேலும், சரக்கு களையும் ஏற்றிச்செல்லும் வாய்ப்பு இருந்தது.'[2]

ரயில் வண்டியும் மோட்டார் வண்டியும் கண்டுபிடிக்கப்படும் வரையில், நிலவழி வர்த்தகத்தைவிட நீர்வழி வர்த்தகமே எளிதாயிருந்தது. புத்துலகத்தில் சாலைகள் குறைவாக இருந்தன. அவை போக்குவரத்துக்கு ஏற்றவைகளும் அல்ல. 18ஆம் நூற்றாண்டின் மூன்றும் பகுதியில்தான் சில குறிப்பிட்ட இடங் களுக்கிடையில் 'கோச்' வண்டி பிரயாணத்திற்கான சில வசதிகள் செய்யப்பட்டன. 1771-ல் புகழ்பெற்ற 'பறக்கும் இயந்திரம்' (flying machine) பிலடெல்ஃபியாவிற்கும் (Philadelphia) நியூயார்க்கிற்கும் இடையில் சென்றுவரும் காலத்தை ஒன்றரை நாட்களுக்குச் சற்று மிகுதியான அளவுக்குக் குறைத்து விட்டது. 1794-ல் போஸ்டனிலிருந்து நியூயார்க்கிற்கு வசதி யுடன் சென்றுவர ஒரு வாரம் ஆகும்.[3]

இச்சூழ்நிலைகளில் நீர்வழிப் போக்குவரத்தே காலனி வர்த்தகத்திற்கு ஏற்றது. தற்காலத்து மாலுமிகள்கூட அக்காலத்துச் சூழ்நிலைகளினால் அயர்ந்துபோய்விடுவார்கள். படகுகள் சிறியன வாய் இருந்தன; காற்று, வானிலை இவற்றுக்கு ஏற்றவாறு இயங் கின. அவை அட்லான்டிக் மகா சமுத்திரத்தைக் கடக்க எடுத்துக் கொள்ளும் காலம், எல்லைமீறிய சலிப்பையும் அருவருப்பையும் தரும். இங்கிலாந்திற்கும், கேப் காட் (Cape Cod) டிற்கும் இடை யில் கடல்மீது பிரயாணிகள் இரண்டு மாதங்களுக்குமேல் கழிக்க வேண்டும். 'கிரேவ்சென்டிலிருந்து (Gravesend) பிலடெல்ஃபியா

[1] ஈ. சி. செம்பிள் (E. C. Semple), 'American History and its Geographic Conditions,' p. 20.

[2] டியூரான்டு (Durand), 'A Frenchman in Virginia' (1923), p. 23.

[3] எட்மண்டு குயின்சி (Edmund Quincy), 'Life of Josiah Quincy,' PP. 47-48, Chap. 14-ல் காலனி போக்குவரத்து நன்கு விளக்கப்பட் டுள்ளது.

வருவதற்குக் குளிர்காலத்தில் 14, 19 அல்லது இன்னும் அதிக மான வாரங்களுக்குக் கடல்மீது வாழவேண்டும்' என்று ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் பீட்டர் காம் (Peter Kalm) எழுதி யுள்ளார்[4]. இப்பயணத்தில் ஏற்படக்கூடிய கஷ்டங்களையும், ஒரே வகையான உணவை உண்பதால் ஏற்படும் வெறுப்பையும், கப்பலில் ஆட்டு மந்தைகளைப்போல் நெருக்குண்டு கிடப்பதால் ஏற்படும் சோர்வையும், கரப்பான் நோய்போன்ற தொத்துநோய் களுக்கு இரையாவதையும் நாம் எளிதாகக் கற்பனை செய்து பார்க்க முடியும். கடற்பயணத்திலுள்ள ஆபத்துகளை மீறிச் செல்லலாம் எனினும், கடலின் அடியிலுள்ள மண்மேடுகளும் பாறைகளும் புதிய இடையூறுகளை விளைவிக்கின்றன. புரட்சிக்கு முன்னிருந்த கலங்கரை விளக்குகள் நல்ல முறையில் பயனளிக்க வில்லை.

வேறு சில காரணங்களாலும் காலனி வர்த்தகம் நலிவுற்றது. காலனிகளுக்குச் சரியான பரிவர்த்தனைச் சாதனம் (medium of exchange) அமையவில்லை. இங்கிலாந்துக்கும் காலனிகளுக்கும் இடையில் ஏற்பட்ட வாணிபக் கொடுக்கல்நிலை (balance of trade) காலனிகளுக்குப் பாதகமாகவே அமைந்திருந்தது. எனவே, பிரிட்டிஷ் வட அமெரிக்காவிற்கு வரும் ஒருசில செலாவணிகளும் உடனுக்குடன் வெளியேறிவிடுகின்றன. ஸ்பானிஷ் பிரெஞ்சுக் காலனிகளுடன் நடத்திய வியாபாரத்தினாலும், கடற் கொள்ளை யினாலும், தனியார் முயற்சியினாலுமே செலாவணிகள் அவ்வப் பொழுது கிடைத்தன. அப்பொழுது இருந்த ஓர் அறிஞர் கூறியதுபோல, 'ஐரோப்பாவிற்குச் செல்வதற்குமுன், மேற்கிந்தி யத் தீவுகளிலுள்ள பணம் ஆறு மாதங்கள் கூடத் தொடர்ந்து அங்குத் தங்குவதில்லை.'

தோன்றுவனபோல், நிலைமைகள் அவ்வளவு மோசமாக இல்லை. உலக வாணிபம், மாற்று உண்டியல்கள் (bills of exchange) மூலமும், டிராஃப்டுகள் (drafts) மூலமும் நடைபெற் றன. உள்நாட்டு வாணிபம், நீர்நாய்த் தோல், மக்காச் சோளம், கோதுமைபோன்ற நிலையான பொருள்களைக் கொண்டு பண்ட மாற்று முறையில் நடைபெற்றது. டிவே (Dewey) பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'ஹார்வார்டு கல்லூரியின் மாணவர்கள், விளை பொருள்களையும், கால்நடைகளையும், இறைச்சியையும், சில வேளைகளில் மாணவக் கடனாளிகளுடைய அறைகளிலிருந்து எடுக்கப்பட்ட பண்டங்களையும் கொண்டே பண்ட மாற்று முறை

[4] Adolph B. Benson (ed.), 'Peter Kalm's Travels in North America,' I, 14.

யில் தங்கள் கணக்கைத் தீர்த்துக்கொள்வர். கல்லூரிப் பேரவை யின் தலைவராக இருந்த ஒரு மாணவர், 1649-ல் வயதான ஒரு பசுவைக் கொடுத்துத் தன் கடனைத் தீர்த்துக்கொண்டுள்ளார். கல்லூரியின் முதல் கட்டடம் கட்டப்பட்டபொழுது வைக்கப் பட்ட கணக்குக் குறிப்பேட்டில், '30 ஷில்லிங்கு மதிப்புள்ள வாட் டர் டவுன் (Water Town) தோட்டத்திற்கு இணையான ஒரு வெள் ளாடு கிடைத்தது; அது செத்துவிட்டது' என்ற குறிப்பு காணப் படுகிறது[5].

பண்டமாற்றிற்கும், உலோக நாணயத்திற்கும் பதிலாகக் காகிதப் பணத்தைப் பயன்படுத்த காலனிஸ்டுகள் முயன்றனர். வர்ஜீனியாவிலும் மேரிலாந்திலும் புகையிலை வியாபாரத்தில், பண்டகசாலை ரசீதுகள் வழங்கப்பட்டன. 1690-ல் போர்ட் ராயல் (Port Royal), கியூபெக் பகுதிகளில் நுழைந்து ஆராயும் வேலையில் ஈடுபட்டிருந்த சிப்பாய்களுக்கு மெசாசுசெட்ஸ் கடன் உண்டியல்களை (Bills of credit) வழங்கிற்று. காகிதப் பணத்தில் நடைபெற்ற இப்பரீட்சையினை எல்லாக் காலனிகளும் பின்பற்றின. காகிதப் பணம் வர்த்தக வாழ்க்கையில் முக்கிய இடம் பெற்றது. வரிகள் செலுத்துவதில் வெள்ளிக்குப் பதிலாகத் தவணை முறையில் காகிதப் பணமே செலுத்தப்பட்டது; தவணை முறையில் இப்பணத்தைச் செலுத்துவதற்கும் நாள் குறிப்பிடப் பட்டது. ஆரம்ப காலத்தில் காகிதப் பணமுறை நல்ல முறையில் இயங்கியது. காகிதப் பணத்தின் புழக்கம் பெருகவே, சில குறை பாடுகள் தென்படலாயின. அளவுக்குமீறிக் காகிதப் பணம் பெரு கியதால், பணத்தின் மதிப்புக் குறையலாயிற்று; வியாபாரமும் சுணங்கியது. எஸ்டேட்டுகள்மீதும், சொந்த மதிப்பின்மீதும், வர்த்தகப் பொருள்களின்மீதும் கடன் உண்டியல்களை மெசாசு செட்ஸ், பென்ஸில்வேனியா முதலிய பகுதிகளில் கடன் பாங்குகள் (Loan Banks) வழங்கின. ஆனால், அக்கடன் பாங்குகள் இயங்கிய விதத்தைப்பற்றி ஒரு குறிப்பும் இல்லை. இக்காகிதப் பணங்களை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, 1751-ல் நியூ இங்கிலாந்தில் இனிமேல் கடன் உண்டியல்களைச் சட்டமுறைப் பணமாக (legal tender) ஏற்கக்கூடாதென்று பாராளுமன்றம் சட்டமியற்றியது. 1764-ல் இத்தடைச்சட்டம் மற்றக் காலனி களிலும் அமலுக்கு வந்தது. இச்சட்டம் சரியான முறையில் செயற்படுத்தப்படவில்லை. புரட்சிக் காலத்தில் $2,20,00,000 மதிப்புள்ள காகிதப் பணம் புழக்கத்தில் இருந்தது என்று கணக் கிட்டுள்ளனர்.

5 டி. ஆர். டிவே (D. R. Dewey) 'Financial History of the United States', p. 19.

கடற்கொள்ளையாலும், அரசியலாதரவு பெற்ற தனி மனிதர் போர்க்கப்பலாலும் காலனி வர்த்தகம் தொல்லையுற்றது. 17, 18ஆம் நூற்றாண்டுகளிலே போர்கள் சாதாரணமாக நடைபெற்றன. 1689-ல் இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் இடையில் 'இரண்டாம் நூற்றாண்டுகள் யுத்தம்' துவங்கிய பின்னர், சண்டைகள் அடிக்கடி நடைபெற்றன. கடற்கொள்ளைக்காரனுக்கும், எதிரியை முறியடிக்க அரசாங்கஆதரவுடன் போர்க்கப்பலை இயக்குகின்ற தனி மனிதனுக்கும் (privateers) இடையில் கொள்கையளவில் நிரம்ப வேற்றுமைகள் உண்டு; ஆனால், செயல்முறையில் அவ்வளவு வேற்றுமைகள் இல்லை. புகழ்பெற்ற கேப்டன் கிட் (Captain Kidd) போர்க்கப்பல் தலைவனைத் தோன்றிக் கடற்கொள்ளைக்காரனாக மாறினான். கடற்கொள்ளைக்காரர்களாலும், போர்க்கப்பல் தலைவர்களாலும் காலனிஸ்டுகளுக்குப் பெருத்த இழப்பு ஏற்பட்டுவிடவில்லை. அவர்கள் அடித்த கொள்ளைகளைக் காலனிகளில் கள்ளத்தனமாகக் கொண்டுவந்து குறைந்த விலைக்கு விற்றனர். செல்வாக்குள்ள வியாபாரிகளும், அரசாங்க அதிகாரிகளும் இக்கள்ளக் கடத்தலில் பங்கு பெற்றனர். ரோடு ஐலண்டைச் சார்ந்தவர்களுக்கும் இதுவே தொழிலாயிற்று. 1736-ல் வர்த்தகக் குழுவிடம் (Board of Trade) தரப்பட்ட அறிக்கை ஒன்று கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது: 'பிரிட்டிஷ் வல்லரசின் ஆதிக்கத்தின் கீழ் ரோடு ஐலண்டைக் கொண்டுவரும் வரையில், கள்ளக் கடத்தல் நிகழ்ந்துகொண்டுதானிருக்கும். புக்கானர்கள் (Bucanners) படையெடுத்தபொழுது, பகாமா தீவுகள் (Bahama Islands) பிரிட்டிஷ் அரசாங்கத்தில் எந்த இடம் வகித்திருந்ததோ அந்த இடத்தைத்தான் ரோடு ஐலண்டும் இன்று பெற்றிருக்கிறது.'[6] தவறான முறையில் கொள்ளையடிப்பது நிகழ்ந்த வண்ணமே இருந்தது. நியூயார்க்குமட்டுமே பல ஆண்டுகளுக்குச் சராசரி ஆண்டொன்றுக்கு £10,000 வீதம் இம்முறையில் பொருள் சேர்த்தது. காலனிகளனைத்தும் 1700ஆம் ஆண்டு முடிய இந்த முறையிலேயே நிறைய செல்வத்தைக் குவித்தன.

காலனி வர்த்தகத்தின் கோட்பாடு

காலனி வர்த்தகத்தின் குறிக்கோளையும் விளைவையும் இங்கு ஆராய்வோம். முன்பே குறிப்பிட்டதுபோல, தாயகத்தின் அரசியல், பொருளாதார நல்வாழ்விற்குக் காலனிகளை அடிமைப்படுத்துவதுதான் மெர்க்கன்டலிசத் திட்டத்தின் கோட்பாடாகும். இருநூற்றாண்டுகளுக்குத் தொடர்ந்து விடாப்பிடியாக இத்திட்டம்

[6] Quoted by M. W. Jermegan, 'The American Colonies, 1492-1750' p. 380.

நிறைவேற்றப்பட்டது என்னலாம். முதல் ஷெஃபீல்டு துரைமகனார் (Lord Sheffield) குறிப்பிட்டதுபோல, 'அமெரிக்கக் காலனிகள் அல்லது மேற்கிந்தியத் தீவுகள் இவற்றுல் விளைந்த நன்மை எது வெனில், அக்காலனி மக்களுடைய துய்ப்பின்மீது சர்வாதினத்தை ஏற்படுத்தி, அவர்களுடைய மூலப்பொருள்களைக் கவர்ந்துசெல்வதுதான்.' 1726-ல் வர்த்தகக் குழுவின் உறுப்பினரொருவர் இதனைத் தெளிவாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'தாயகத்தின் சலுகைகளையும் பாதுகாப்பினையும் பெற்று இயங்குகின்ற ஒவ்வொரு மாநில அரசாங்கமும், தாயக நல்வாழ்விற்காகத் தன்னுடைய நலத்தினை விட்டுக்கொடுக்கவேண்டும். எனவே, தாயகத்தின் சுபீட்சத்திற்கு மாருகக் காலனிகளுக்கு வர்த்தகப் பெருக்கமோ, நன்மையளிக்கும் திட்டமோ உருவானுல், அவை சட்டத்திற்குப் புறம்பானவை என்றும், செயற்படுத்தக்கூடாதவை என்றும் கொள்ளப்படும். ஏனென்ருல், அவை எந்தக் குறிக்கோளுக்காகக் காலனிகள் ஏற்படுத்தப்பட்டனவோ அந்தக் குறிக்கோளுக்கு மாருனவையாகும். மேலும், அவை, காலனிகளுக்கு எந்த அடிப்படையில் சலுகைகளும் பாதுகாப்பும் வழங்கப்பட்டனவோ அந்த அடிப்படைக்குப் புறம்பானவையாகும்.....இவ்வடிப்படையில் காலனிகள் இயங்கவில்லை எனில், அவை தாயகத்திற்குத் தேவையில்லை.'

இதைவிடத் தெளிவான விளக்கம் தேவைப்படுமா! ஒரு வல்லரசினுடைய பயன்தான் என்ன? தாயகத்திற்கு முழுப் பயன் ஏற்படும் வகையில் எவ்வாறு காலனிகளை மாற்றுவது என்பதுதான் ஒரே பிரச்சினையாகும். காலனிப் பிரச்சினைகளை நிருவகிக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குழுக்கள் [வர்த்தக லார்டுகள் (Lords of Trade), வர்த்தகம், தோட்டங்கள் இவற்றின் கமிஷனர்கள் (Commissioners of Trade and Plantations)] காலனிகளைத் தாயகத்திற்குப் பயன்படுத்தும் காரியத்தைப்பற்றிய சில கொள்கைகளைத் தெளிவாகப் பெற்றுள்ளன. இங்கிலாந்திற்குத் தேவையான காலனிப் பண்டங்களுக்கு அரசாங்க நன்கொடையை வழங்கினர்; தாயகச் சந்தையின் சர்வாதினத்தையும் வழங்கினர். இங்கிலாந்தில் உற்பத்தியாகும் பண்டங்களுடன் காலனியில் உற்பத்தியாகும் பண்டங்கள் போட்டியிட்டால், அப்போட்டியினைத் தகர்க்கும் விதத்தில் சுங்கச் சுவர்களையும் எழுப்பினர். ஆங்கிலப் பண்டங்களுடன் போட்டியிடும் வாய்ப்பினைப் பெற்ற காலனிகளின் பொறிசெய் பொருள்களைத் தடைசெய்தனர். காகிதப் பணத்தின்மூலம், காலனிகளில் நிதிமுறையை வலுப்படுத்தியிருந்தனர்; அதன் விளைவாக அதிக விலை கொடுத்துப்

பண்டங்களை வாங்கும் நிலைமையும், குறைந்த விலையில் பண்டங்களை விற்கும் நிலைமையும் காலனிஸ்டுகளுக்கு ஏற்பட்டன. இந்த நிலை ஆங்கிலேய நாட்டின் நல்வாழ்விற்கு ஏற்றதல்ல என்பதால், காகிதப் பணப்பெருக்கத்தையும் தடைசெய்தனர். ஆங்கிலேயர்களுக்கு இலாபமாக அமைந்த அடிமை வியாபாரத்தைத் தடைப்படுத்தும் காலனிச் சட்டங்களை நீக்கினர். காலனி வர்த்தகம் தாயகத்துடன் கட்டுண்டது. பண்டங்களை ஏற்றிச் செல்லும் வர்த்தகத்தின் மூலமும், இன்சூரன்ஸ் மூலமும், தரகர்களின் கழிவுகளின் மூலமும் ஆங்கிலேயர் முதல் நிறைய இலாபம் ஈட்டியது.

பிரிட்டிஷ் மெர்க்கன்டலிசம் காலனிப் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுத்தி, அமெரிக்கப் புரட்சிக்கு வழிகோலியது என்றாலும், காலனி வர்த்தகத்தை அது அழித்துவிடவில்லை. இதற்கு மூன்று காரணங்கள் உண்டு. முதலில் காலனிகளில் நிறைய நிலமும் இயற்கைவளங்களும் இருந்தன; ஆனால், போதிய அளவிற்குத் தொழிலாளர்கள் கிடைக்கவில்லை. எனவே, மூலப் பொருள்களையும், முற்றுப்பெறுத பொருள்களையும் அவை உற்பத்தி செய்தன. ஏகாதிபத்திய முறைக்கு ஏற்ற வகையில் காலனிகள் அமைந்திருந்தன. காலனிகள் மூலப்பொருள்களைத் தாயகத்திற்கு அளித்து, தாயகத்திடமிருந்து பொறிசெய் பொருள்களைப் பெற்றன. இரண்டாவதாகக் கிரேட் பிரிட்டனில் (Great Britain) உற்பத்தியாகும் பொருள்களுடன் போட்டியிடும் தகுதியைப் பெற்ற காலனிகளின் பண்டங்களுக்கு மேற்கிந்தியத் தீவுகளிலும் தென்-ஐரோப்பாவிலும் சந்தைகள் இருந்தமையால், அச் சந்தைகளில் விற்றுக் கிடைத்த இலாபத்தைக்கொண்டு இங்கிலாந்தில் உற்பத்தியாகும் பொறிசெய் பண்டங்களை வாங்கும் வாய்ப்பு காலனிகளுக்கு ஏற்பட்டது. கடைசியாக, பிரிட்டிஷ் சட்டங்களுக்கும் காலனி நலன்களுக்கும் இடையில் பிளவுகள் ஏற்படின், அச்சட்டங்கள் மீறப்பட்டன. ஆங்கிலக் கப்பற்படைக்குக் கடலாதிக்கம் இருந்தபோதிலும், கள்ளக் கடத்தல் தீவிரமாக நடைபெற்றே வந்தது; பிரிட்டிஷ் சட்டத்தால் தடைப்படுத்தப்பட்ட நாடுகளுடன் வியாபாரம் செழித்தோங்கியது.

காலனி வர்த்தகத்தின் பண்டங்களும் பாதைகளும்

காலனிப் பண்டங்களுக்கு இங்கிலாந்தும், மேற்கிந்தியத் தீவுகளும், தென்-ஐரோப்பாவுமே முக்கியச் சந்தைகளாக அமைந்தன. 1660-ல் நிறைவேறிய சட்டத்தின்படி, புகையிலை, துணி, கம்பளி, இண்டிகோ ஆகிய காலனிப் பொருள்கள் 'விலக்கப்

பட்ட' பொருள்கள் என அழைக்கப்பட்டன. இப்பொருள்களை (enumerated commodities) இங்கிலாந்திற்குமட்டுமே அனுப்ப வேண்டும். விலக்கப்பட்ட பொருள்களின் பட்டியலில், கப்பல் தொழில் பொருள்களாகிய தார், கீல், டர்பன்டைன், சணல், பாய் மரம், பாய்மரத்திற்குரிய சட்டங்கள் ஆகியவைகளும் அரிசி, செம்பு, இருப்பு, மரத்துண்டுகள், தோல், முத்துகள் ஆகியவை களும் இடம்பெற்றன. தென்காலனிகளின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களான புகையிலை, அரிசி, இண்டிகோ முதலியனவும், ஓரளவுக்கு முக்கிய ஏற்றுமதிகளாகிய கப்பல் தொழில் பொருள்கள், தோல் முதலியனவும் இங்கிலாந்திற்கே நேரடியாக அனுப்பப் பட்டன. இவற்றிற்குப் பதிலாகக் காலனிகள் உலர்ந்த பொருள் களையும், இரும்புச் சாமான்களையும், தட்டுமுட்டுச் சாமான்களை யும், பொறிசெய் பொருள்களையும் பெற்றன.

நியூ இங்கிலாந்திலும் மத்திய காலனிகளிலும் சூழ்நிலை மாறுக இருந்தது. தாயகத்திற்குத் தேவையான கப்பல் தொழில் பொருள்கள், மரத்துண்டுகள், தோல் வகைகள், உலோகங்கள் முதலியவற்றை இக்காலனிகள் உற்பத்தி செய்தன. ஆனால், இக் காலனிகளின் முக்கியப் பொருள்களாகிய மீன், மக்காச் சோளம், உணவுப் பொருள்கள் முதலியன இங்கிலாந்திற்குச் செல்லாத வாறு சுங்கச் சுவர்கள் மூலம் தடைப்படுத்தப்பட்டன. இங்கி லாந்துடன் இக்காலனிகளுக்கு ஏற்பட்டிருந்த ஏற்றுமதி வர்த் தகம் மிகக் குறைந்த அளவில் நடைபெற்றது. எனவே, வேறு சந்தைகளைத் தேடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேற்கிந் தியத் தீவுகளும் தென்-ஐரோப்பாவுமே சந்தைகளாயின. இச் சந்தைகளுக்கு நியூ இங்கிலாந்து கருவாட்டினையும், பக்குவப் படுத்தப்பட்ட மீன், மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, குதிரை இறைச்சி ஏனைய மிருகங்களின் இறைச்சி ஆகியவைகளையும், கட்டட வேலைக்கான சாமான்களையுமே அனுப்பிவைத்தன. நியூ யார்க்கு, பென்சில்வேனியா பகுதிகளிலிருந்து இச் சந்தைகளுக்கு மாவு, கோதுமை முதலியன ஏற்றுமதியாயின. 18ஆம் நூற்றாண் டின் துவக்கத்தில், மேற்கிந்தியத் தீவுகளில் சர்க்கரை, புகை யிலைத் தோட்டங்கள் பெருகின. எனவே, அடிமைகளுக்கென மலி வான உணவுப் பண்டங்களும், வீடுகள் கட்டவும் சர்க்கரை, மொலாஸஸ், புகையிலை இவற்றை மரப்பெட்டிகளில் அடைத்து ஏற்றுமதி செய்யவும் பெருமளவில் தேவைப்படும் மரத்துண்டு களும் இத் தீவுகளில் இறக்குமதியாயின. காலனிகள் மொலாஸஸி லிருந்து ரம் (rum) தயாரித்தன. மீன்பிடிக்கும் தொழிலிலும், அடிமை வியாபாரத்திலும், உள்நாட்டிலும் 'ரம்' செலவழிந்தது. இக்காலனிகளில் பல பண்டங்கள் கிடைத்தன. அவற்றைக்

கொண்டு பிரிட்டனின் பொறிசெய் பொருள்களைக் காலனிகள் வாங்கின. வர்த்தகத்தின் வளர்ச்சியை அக்காலத்துச் கணக்கெடுப்புகளின்மூலம் தெரிந்துகொள்ளலாம். நியூ இங்கிலாந்திலிருந்து ஆண்டொன்றுக்கு ஏற்றுமதியான சரக்குகளின் மதிப்பு (1768-'66) £4,85,000 ஆகும்; இம்மதிப்பில் பாதிக்குமேல் கடலிலிருந்து கிடைத்த பொருள்களை விற்றதால் ஏற்பட்டதாகும். நியூயார்க்கின் ஏற்றுமதி மதிப்பு £ 5,26,000 ஆகும். பென்சில்வேனியாவின் ஏற்றுமதி மதிப்பு £ 7,05,500 ஆகும். நியூயார்க்கிலும் பென்சில்வேனியாவிலும் ஏற்றுமதி மதிப்பில் பாதிக்குமேல் மாவு, கோதுமை இவற்றிலிருந்து கிடைத்தவையாகும்.[7]

உலக வாணிபத்திலும் அயல் நாட்டுக் கொடுக்கல் நிலையிலும் (Balance of payments) காலனி வர்த்தகத்தின் போக்கு ஆராய்வதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. மெர்க்கன்டலிசக் கட்டுப்பாடுகளுக்கிடையில் காலனிப் பண்டங்களுக்கு ஏற்ற சந்தைகளை வெளிநாடுகளில் தேடிப்பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள காலனி வியாபாரி, கப்பல் தலைவன் இவர்களுடைய திறமையும் நமது பாராட்டுதலுக்கு உரியதாகும். காலனிகளுக்கிடையிலும், காலனிகளுக்கும் இங்கிலாந்திற்குமிடையிலும், காலனிகளுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையிலும் வர்த்தகங்கள் பெருகி வளர்ந்தன. இவற்றோடல்லாமல் புகழ்பெற்ற முக்கோண வர்த்தகமும் (triangular trade) வளர்ந்தது. பிரிட்டனிலிருந்து நியூ இங்கிலாந்திற்கும், மத்திய காலனிகளுக்கும் இறக்குமதியான சரக்குகள், சில ஆண்டுகளில், அவற்றின் ஏற்றுமதிகளைவிட எட்டு மடங்கு அல்லது அதற்கு மேலாகப் பெருகியிருந்தன. இந்த வர்த்தகம் பல வழிகளில் நடைபெற்றது. நியூ இங்கிலாந்தும் மத்திய காலனிகளும் தானியம், இறைச்சி, மீன், மரத்துண்டுகள் இவற்றைத் தென்-ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்துவிட்டு, திராட்சை ரசம், பழம், இன்னும் பல பண்டங்களை இங்கிலாந்தில் விற்றுவிட்டு, அங்கிருந்து பொறிசெய் பொருள்களை வாங்கிச் சென்றன. இது ஒரு முக்கோண வர்த்தகமாகும். மற்றொரு முக்கோண வர்த்தகம் கீழ்க்கண்டவாறு நடைபெற்றது: நியூ இங்கிலாந்து, மத்திய காலனிகள் இவற்றின் பண்டங்கள் மேற்கிந்தியத் தீவுகளிலே விற்கப்படும்; அத்தீவுகளிலிருந்து சர்க்கரை, மொலாஸஸ் இன்னும் பல பண்டங்களை விலைக்கு வாங்கி, அவற்றை இங்கிலாந்தில் விற்று, அவற்றிற்குப் பதிலாகப் பொறிசெய் பொருள்களை நியூ இங்கிலாந்தும் மத்திய காலனிகளும் வாங்கிக்கொள்ளும். இப்பொருள்கள் வட காலனிகளுக்கும்

7 American Husbandry, I, 59, 124, 181.

கொண்டுவரப்படும். வடகாலனிகளுக்கும், மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையில் நடைபெற்ற வர்த்தகத்தின்மூலம் லண்டன் மீது கிடைத்த மாற்று உண்டியல்களைக் கொடுத்தோ அல்லது காசுகளைக் கொடுத்தோ இங்கிலாந்தின் பொறிசெய் பொருள்கள் வாங்கப்படும். லண்டன்மீது மாற்று உண்டியல்கள் கிடைப்பதற்குக் காரணம், மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து கிரேட் பிரிட்டனுக்கு ஏற்றுமதியான சரக்குகள் இறக்குமதிகளைவிட மூன்று மடங்கு அதிகமாக இருந்தமைதான்.

இந்த உண்மையை 1766-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கமிட்டியின் முன்னால், பென்சில்வேனியாவின் ஏஜெண்டு என்ற முறையில் பென்ஜமின் ஃபிராங்கிலின் (Benjamin Franklin) அவர்கள் விளக்கியுள்ளார். பிரிட்டனிலிருந்து £5,00,000 மதிப்புள்ள பண்டங்களை இறக்குமதி செய்து, பிரிட்டனுக்கு £40,000 மதிப்புள்ள பண்டங்களைமட்டுமே ஏற்றுமதி செய்த பென்சில்வேனியா எவ்வாறு இக்கடனை அடைத்தது என்ற கேள்வி கேட்கப்பட்டது.

இக் கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் ஃபிராங்கிலின் குறிப்பிட்டதாவது: 'மேற்கிந்தியத் தீவுகளிலும், மற்றுமுள்ள சொந்தத் தீவுகளிலும் ஃப்ரான்சு, ஸ்பெயின், டென்மார்க்கு, ஹாலந்து முதலிய நாடுகளிலும் பண்டங்களை விற்றுப் பெற்ற இலாபத்தைக்கொண்டு இக் கடன் அடைக்கப்பட்டது. மேலும், நியூ இங்கிலாந்து, நோவாஸ்கோஷியோ, நியூ ஃபவுண்ட்லாந்து, கரோலினு, ஜார்ஜியா ஆகிய வட அமெரிக்கக் காலனிகளில் விற்றுப்பெற்ற இலாபத்தைக்கொண்டும், ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி முதலிய நாடுகளில் கிடைத்த இலாபத்தைக்கொண்டும் இக் கடன் அடைக்கப்பட்டது. இப் பகுதிகளில் பணமோ, மாற்று உண்டியல்களோ, பிரிட்டனுக்குத் தேவையான பண்டங்களோ கிடைத்தன. இன்னும், பென்சில்வேனியாவின் வியாபாரிகள், மாலுமிகள் ஆகியவர்களுடைய தொழில்கள்மூலம் கிடைத்த இலாபமும், கப்பற் பயணத்தில் கிடைத்த கட்டணங்களும் இக் கடனை அடைக்கப் பயன்பட்டன.'

மூக்கோண வர்த்தகத்தின் மற்றொரு வகை, 17 ஆம் நூற்றாண்டிலே வளர்ந்த ஆட்பிரிக்க அடிமை முறையாகும். காரணங்கள் வருமாறு: (1) தீவுகளிலும் நிலப்பெரும் பகுதிகளிலும் உள்ள தோட்டங்களுக்கு மலிவான தொழிலுழைப்பு தேவைப்பட்டது. வடகாலனிகளில் பணியாட்கள் தேவைப்பட்டனர். (2) காலனியைச் சார்ந்த கப்பல் சொந்தக்காரர்கள்மூலமாகவும், இங்கிலாந்

துடன் நடைபெற்ற வர்த்தகத்தின்மூலமாகவும் மிகுந்த இலாபம் கிடைத்தது. நியூ இங்கிலாந்தின் கப்பல் முதலாளிகளும், நீக்கி ரோக்களை விலைக்கு வாங்கப் பயன்படும் 'ரம்' உற்பத்தியாளர் களும் அடிமை வியாபாரத்தில் ஈடுபட்டனர். புரட்சி ஏற்படும் வரையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு நீக்கிரோக்கள் கொண்டு வரப்பட்டனர். அங்கிருந்து நீக்கிரோக்கள் நிலப்பெரும் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இத்தீவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 25,000 முதல் 30,000 அடிமைகள்வரை கொண்டுவரப்பட்ட னர்; ஆண்டொன்றுக்கு 10,000 அடிமைகள் காலனிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

முக்கோண வர்த்தகம்—I



முக்கோண வர்த்தகம்—II



அமெரிக்கா பிற்போக்கான பூர்வீக நிலையில் இருந்தது; அங்குப் போக்குவரத்துவசதிகள் இல்லை; ரொக்க முதலும் இல்லை; வேறு சில வசதிகளும் இல்லை. எனினும், காலனி காலத்தில் அமெரிக்காவின் வெளிநாட்டு வர்த்தகம் செழித்தோங்கி யிருந்தது. அவ் வர்த்தகம், உயர்ந்த தலா மதிப்பையும் சுட்டிக் காட்டிற்று. 1760 முதல் 1769 வரை வர்த்தகம் உச்ச நிலையை அடைந்தது. புள்ளிவிவரங்களை முழுதும் நம்புவதற்

கில்லையெனினும், சில ஆண்டுகளின் கணக்கைப் பார்த்தால், இவ் வர்த்தகத்தின் அளவும் போக்கும் நன்கு விளங்கும். வட நாட்டு வர்த்தகம் தென்னாட்டு வர்த்தகத்தைவிடச் சீராகப் பரவி இருந்தது. பென்சில்வேனியாவிற்குத் தெற்கிலுள்ள காலனிகள் இங்கிலாந்துடன் மட்டுமே வர்த்தகம் நடத்தின. இவ் வர்த்தகத்தில் ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதிகளுக்கு மிடையில் நிறைய வேற்றுமைகள் இருந்தன. ஃபிராங்கிலின் கூற்றுப்படி, தாயகத்துடன் ஏற்பட்டிருந்த பாதக வாணிபக் கொடுப்பல்நிலை சரிசெய்யப்பட்டது. வடநாட்டுக் காலனி வியாபாரிகளுக்குச் சொந்தத்தில் கப்பல்கள் இருந்தன. கப்பல் சரக்கேற்று வியாபாரத்தின்மூலம் (carrying trade) மட்டுமே கிடைக்கும் இலாபத்தைக்கொண்டு பாதக வாணிபக் கொடுப்பல் நிலையைச் சரிக்கட்டலாம். தென்ஐரோப்பாவுடன் நடைபெற்ற வர்த்தகம், சமநிலையை நிலைபெறச் செய்வதில் சிறந்து விளங்கியது. 1769-ல் தென்னாடு பெற்ற சாதக வாணிபக் கொடுப்பல் நிலை வெறும் மயக்கமே. ஏனெனில், ஆங்கிலேயத் தரகர்களும் கப்பல் சொந்தக்காரர்களும் ஈட்டிய இலாபம், வாணிபக் கொடுப்பலில் தென்னாட்டிற்கிருந்த சாதக நிலையை அகற்றித் தோட்ட முதலாளிகளைக் கடனாளிகளாக மாற்றியது.

காலனித் தொழிலின் நிலைமைகள்

காலனிப் பொருளாதாரத்தில் விவசாயத்தின் சிறப்புப் பங்கு அடிக்கடி வலியுறுத்தப்பட்டது. மூலப்பொருள்களைச் சேகரித்துக் குடிசைவாழ் தொழிலாளர்களிடம் கொடுத்து, முற்றுப்பெற்ற பொருளாக மாற்றி விற்பனை செய்யும் முதலாளிகளின் ஏற்பாடாகிய 'கொடுத்துச் சேகரிப்பு' முறை ('putting out' system) குறைந்த அளவிலேயே நடைபெற்றது. எனினும், ஒருவகையான செப்பமற்ற பூர்விகத் தொழிலும் பெருவாரியான அளவில் நடைபெற்றது. முதலில், குடிசைத் தொழில் நடைபெற்றது. ஒரு சராசரிப் பண்ணையில், வீட்டுத் தலைவி கம்பளி, சணல், பஞ்சு இவற்றை நூற்றுத் துணியாக நெய்தாள்; இறைச்சிக்கு உப்பிட்டுக் காயவைத்துப் பாதுகாத்தாள்; பழங்களையும், காய்கறிகளையும் உலர்த்திப் பாதுகாத்தாள்; சோப்பும், மெழுகுவர்த்தியும், பீரும் (beer) தயாரித்தாள். காலணிகள், கையுறைகள், வேலைசெய்வதற்குரிய துணிகள் இவற்றைத் தயாரிக்கும் தோலை உற்பத்தி செய்து, அதனைப் பக்குவப்படுத்தும் வேலையும் பண்ணையில் நடைபெற்றது. தனக்குரிய காட்டுப் பகுதியிலிருந்து மரத்தினைக் கொணர்ந்து, வீடு, கருவிகள், தட்டுமுட்டுச் சாமான்கள், மரப்பெட்டிகள் முதலியவற்றை விவசாயி செய்துகொண்டான்.

காலனி ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும்

(பவுண்டு ஸ்டர்லிங்கில்)

ஏற்றுமதி செய்யும் நாடுகள்	இறக்குமதி செய்யும் நாடுகள்				
	கிரேட் பிரிட்டன்	தென் ஐரோப்பா	மேற்கிந்தியத் தீவுகள்	ஆப்பிரிக்கா	மொத்தம்
வடக்கு	284,269	335,810	555,612	19,584	1,195,275
தெற்கு	1,247,245	216,923	192,292	690	1,657,150
மொத்தம் ...	1,531,514	552,733	747,904	20,274	2,852,425

இறக்குமதி செய்யும் நாடுகள்	ஏற்றுமதி செய்யும் நாடுகள்				
	கிரேட் பிரிட்டன்	தென் ஐரோப்பா	மேற்கிந்தியத் தீவுகள்	ஆப்பிரிக்கா	மொத்தம்
வடக்கு	504,614	54,909	594,421	877	1,154,821
தெற்கு	1,100,367	21,770	195,326	151,120	1,468,583
மொத்தம் ...	1,604,981	76,679	789,747	151,997	2,623,404

Figures from E. R. Johnson et al., History of Domestic & Foreign Commerce of the United States, I, 92 and F. A. Shannon, America's Economic Growth, p. 32. இந்த அட்டவணையில் காணும் 'வடக்கு' மேரிலாந்தின் வடக்கேயுள்ள காலனிகளைக் குறிக்கும்.

வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளை உற்பத்தி செய்வதில் செலவழித்த உழைப்பு, அவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதன்று. தற்காலத்து விவசாயியைப்போலவே காலனி விவசாயியும் பொறிசெய் பொருள்களைப் பெறுவதற்கு, தான் உற்பத்தி செய்த பொருள்களில் எஞ்சியவற்றையே பயன்படுத்த விரும்புவான். ஆனால், காலனி காலத்திய பண்ணை மிகச் சிறியது; மிகுதியான உற்பத்தியும் கிடையாது; போக்குவரத்துச் சாதனங்கள் மிகவும் மட்டமாகவே இருந்தன. எனவே, பண்ணைக் குடும்பங்கள் தங்களுக்குத் தேவையான பொறிசெய் பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்ள வேண்டியது கட்டாயமாயிற்று.

மற்றொரு வகையான குடிசைத் தொழிலும் இருந்தது. இத் தொழில்மூலம், வெளிநாட்டுச் சந்தைக்கான பண்டங்கள் உற்பத்தியாயின. மழைக்காலங்களில் ஓய்வுகாலத்தில் அநேக விவசாயிகள் ஆணிகள், கூரைவேய உதவும் பலகைகள், பீப்பாய்க்குரிய வளைந்த பலகைகள், மரப்பெட்டிகள் முதலிய வற்றைச் செய்தனர். இச் சாமான்கள் மேற்கிந்தியத் தீவுகளின் வர்த்தகத்திலும் உள்நாட்டு மீன், ரம் தொழில்களிலும் பயன் பட்டன. உண்மையில், காலனிக் காலம் முடியுந்தறுவாயில், இத் தொழில் சிறு கடைகளாகப் பெருகியது. விவசாயத்தையும் வர்த்தகத்தையும் தழுவி அவற்றிற்குத் துணையாக இத் தொழில் அமைந்தது. இத் தொழில், காலனி பொறிசெய் பொருள் உற்பத்தியின் மாதிரிப் படிவமாக அமைந்தது. பண்ணைக்கு வேண்டிய கருவிகளும், வர்த்தகத்திற்கு வேண்டிய கப்பல்களும், கப்பல் தொழில் சாமான்களும், மரப்பெட்டிகளும், புகையிலை, ரம், மொலாஸஸ், மீன் முதலியவற்றை அடைக்கும் பெட்டிகளும் உற்பத்தியாயின. தாயகத்திற்குத் தேவையான பண்டங்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் உதவிக்கொடையும் அளித்தது.

சமூகங்கள் பெருகி வளரவே, கிராமத் தொழில்களும் உருவாயின. மரத்துண்டுகள் தயாரிக்கும் அறுவை ஆலையும், மக்காச் சோளம் அல்லது கோதுமையை அரைக்கும் மாவாலையும், நெய்த துணியில் சாயமேற்றி உறுதிப்படுத்தும் ஆலையும் ஏற்பட்டன.

பெரிய அளவில் இச் சமூகங்கள் அமைந்திருப்பின், செருப்புத் தொழிலாளர்களையும், தையற்காரரையும், பெட்டிகள் செய்வோரையும், நாம் விரும்பிய வகையில் பண்டங்களைப் படைத்துத்தரும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களையும் இச் சமூகங்கள் ஆதரிக்கும்.

பொது வர்த்தகத்திலும் ஏற்றுமதிக்குரிய காலனிப் பொறிசெய் பொருள்களின் உற்பத்தியிலும் ஏற்படும் தாமதம், இயற்கை வளங்கள் இல்லாமையால் விளைந்ததன்று; இப் பொருள்களைப் பெருவாரியான அளவில் உற்பத்திசெய்யக்கூடும். இத் தாமதம், முதல் கிடைக்காமையால் ஏற்பட்டதும் அன்று. இங்கிலாந்திலிருந்தும், வசதிபடைத்த வியாபாரிகளிடமிருந்தும், குறிப்பாகக்காலனிக் காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்த வியாபாரிகளிடமிருந்தும் வேண்டிய அளவிற்கு முதல் கிடைக்கும். போதுமான அளவுக்குத் தொழிலுழைப்பு கிடைக்கவில்லையென்றாலும், மேற்குறிப்பிட்ட தாமதம் இதனால் விளைந்ததுமன்று. 1776-ல் இங்கிலாந்தில் வாழ்ந்த மக்கள் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கினர் காலனிகளில் வாழ்ந்தனர். கிழக்கில் வளமான நிலங்கள் கிடைக்காமையால், புதிதாகக் குடியேறியவர்கள் பொறிசெய் தொழில்களில் புகுந்தனர்; இன்னும் இத் தொழில்களுக்கு ஒப்பந்தக் கூலிகளும் அடிமைகளும் கிடைத்தனர். விவசாயம், வர்த்தகம், நில ஊகவாணிபம் இவற்றின்மூலம்தான் அதிகமான இலாபத்தைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையும், வேறு சில காரணங்களுமே பொறிசெய் தொழில்களின் வளர்ச்சியைத் தடைப்படுத்தியும் தாமதப்படுத்தியும்விட்டன. மேலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் எதிர்ப்பும் இத் தாமதத்திற்குக் காரணமாகும். மூலப்பொருள்களின் சுரங்கமாகவும், பொறிசெய் பொருள்களின் சந்தையாகவும் இக்காலனிகள் பிரிட்டிஷ் மெர்க்கண்டலிசத்தினுல் வருணிக்கப்பட்டன. காலனிகளிலேயும் உலக வாணிபத்திலும் பிரிட்டிஷ் பொருள்களுடன் போட்டியிடும் காலனி பொறிசெய் பொருள்களும் தடைப்படுத்தப்பட்டன. அதே வேளையில், பிரிட்டிஷ் மெர்க்கண்டலிசத்துடன் இறுகிப் பிணைக்கப்படும் காலனிகளின் பொருளாதார அமைப்பு ஊக்குவிக்கப்பெற்றது.

அமெரிக்கப் புரட்சிக்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்னர், பிரிட்டிஷ் அரசாங்கத்தினுல் நியமிக்கப்பெற்ற வர்த்தகக் குழு, மற்றக் குழுக்கள், அமெரிக்காவில் உள்ள பிரதிநிதிகள் ஆகியவர்களுடைய நடவடிக்கைகளை மேலெழுந்தவாரியாக நோக்கினுல், இவ் வுண்மை தெற்றென விளங்கும். காலனிகளின் கம்பளி, இரும்பு ஆகியவற்றின் தொழிற்சாலைகளின் வளர்ச்சியை ஒழிக்கும் நோக்கத்துடன் இயற்றப்பெற்ற சட்டங்களே இத் திட்டத்திற்குச் சான்றுகளாகும். காலனிஸ்டுகளும் கம்பளி ஆடைகளை ஏற்றுமதி செய்கின்றனரே என்று ஆங்கிலேய ஆலை முதலாளிகள் முறையிடவே, காலனிகள் வேறு நாடுகளுக்குக் கம்பளி, கம்பளி ஆடை இவற்றை ஏற்றுமதி செய்யக்கூடாதென 1699-ல் சட்டமியற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் தடைசெய்தது. 1732-ல் தொப்பிகளின்

ஏற்றுமதியைத் தடைசெய்தது. 1750ஆம் ஆண்டில் இயற்றிய சட்டப்படி, இங்கிலாந்தில் இறக்குமதியான இரும்புக் கம்பிகள் தடைப்படுத்தப்படவில்லை; ஆனால், காலனிகள் ஸ்லிட்டிங் அல்லது ரோலிங் மில்களையும் (slitting or rolling mills), இரும்பு உலைகளையும், மற்ற உலைக்களங்களையும் கட்டக்கூடாது. வார்ப்பு உலைகள் தடைப்படுத்தப்படாமையால், காலனிஸ்டுகள் பீரங்கிகள், கெட்டில்கள் (kettles), உப்புத் தட்டுகள், இன்னும் மற்றப் பாத்திரங்களை உரிமையுடன் செய்யலாம். அமெரிக்காவிற்குக் கொண்டுவரப்படும் பிரிட்டிஷ் பண்டங்களுக்கு வரி விதிக்கக் கூடாதென்று காலனி கவர்னர்களுக்கு உத்தரவிடப்பட்டது; மேலும், காலனி பொறிசெய் பொருள்களுக்குத் தரப்பட்ட சலுகைகள், பிரிட்டிஷ் பண்டங்களின் விற்பனைக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடாதென்றும் தெரிவிக்கப்பட்டது. உள்நாட்டுப் பொறிசெய் தொழில்களை ஊக்குவிக்கும் எண்ணத்தில் இயற்றிய காலனிச் சட்டதிட்டங்களும் நிராகரிக்கப்பெற்றன. தென்மண்டலங்களில் அடிமை வியாபாரத்தைத் தடைப்படுத்தும் நோக்கத்துடனியற்றப்பட்ட சட்டங்களும் நீக்கப்பட்டன. அடிமை முறையின் அடிப்படையில் தோட்ட முதலாளித்துவம் காலனிகளில் நிலவினுல்தான், தாயகத்தின் வர்த்தகமும் கப்பல் தொழிலும் சிறப்புடன் விளங்கும் என்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவாகும். பியர்ட்ஸ் (Beards) குறிப்பிடுவதுபோல, இத்தகைய சட்டங்களும், கட்டளைகளும், மறுப்பாணைகளும், 'மெர்கண்டலிசக் கோட்பாட்டினைப் பின்பற்றும் ஓர் அரசாங்கத்தின் முதிர்ந்த பழங்களாகும் அரசியல் விளைவுகளல்ல; இவ் வரசாங்கத்தின் தலைநகரிலே வாழும் மக்களுக்குக் காலனி வர்த்தகம் சொந்த சொத்தாகும்; இம் மக்கள் இச் சொத்தின்மீது ஆதிக்கம் செலுத்தித் தங்கள் சொந்த நலன்களைப் பேணிக்கொள்ளும் உரிமை பெற்றவர்களாவார்கள்.'[8]

காட்டுவழித் தொழில்கள்

அமெரிக்காவின் காடுகளை அழித்துப் பண்ணைகளை உருவாக்குவதுதான் முதல் வேலையாகவும், உடனடியாகச் செய்யவேண்டிய வேலையாகவும் முதல் முயற்சியில் ஈடுபட்ட விவசாயி கருதினான். காடுகளிலும் வர்த்தகத்திற்குரிய மதிப்புள்ள பண்டங்கள் உண்டு என்பதை விவசாயி பின்னர்தான் உணர்ந்தான். காட்டைச் சார்ந்து நான்கு தொழில்கள் இருந்தன—மரங்களைத் துண்டாக்கும் தொழில்; கப்பல் கட்டும் தொழில்; கப்பல் சாமான்களைப் பொறிவழி உற்பத்தி செய்யும் தொழில்; பொட்டாஷ் செய்யும்

[8] C. and M. Beard, 'Rise of American Civilization,' p. 193.

தொழில். இவற்றுக்குமேல், நல்ல வருமானம் உள்ள தோல் வியாபாரமும் உண்டு. வடகாலனிகளில் மரத்துண்டுத் தொழிலும், கப்பல்கட்டும் தொழிலும் சிறந்து விளங்கின; அக் காலனிகளில் ஆறுகள் காடுகளினுள் சென்ற காரணத்தினாலும், நீராற்றலைக் (water power) கொண்டு அறுவை ஆலைகளை இயக்கமுடியும் என்ற காரணத்தினாலும், இத் தொழில்கள் சிறந்து விளங்கின. மேற்கிந்தியத் தீவுகளிலும், தென்ஐரோப்பாவிலும் நிலையான சந்தைகள், இலாபந்தரும் வகையில் அமைந்திருந்தன. சந்தைக்கு வேண்டிய மரங்களையும் மரத்துண்டுகளையும் செய்து விவசாயிகள் பொருள் ஈட்டினர்.

கப்பல் கட்டும் தொழிலுக்குத் தேவையான வெள்ளைத் தேவதாரு மரங்களும், கீல், தார், டர்ப்பன்டைன் வகைகளும் ஏராளமாகக் கிடைத்தன. மூலப்பொருள்கள் மலிவாக இருந்ததால், தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய உயர்ந்த கூலி அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை. கப்பல்கள் மிகுதியாகத் தேவைப்பட்டதால், அத் தொழில் வளர்ச்சியுற்றது. கப்பல் கட்டும் தொழில், நியூ இங்கிலாந்தை மையமாகக் கொண்டிருந்தது. அங்குக் கப்பல் கட்டும் செலவு ஐரோப்பாவைவிட 30 முதல் 50 சதவீதம் வரையில் குறைவாக இருந்தது. 1760-ல் ஆண்டொன்றுக்கு 300 முதல் 400 படகுகளைக் காலனிகள் கட்டின. ஆங்கிலக் கொடியின்கீழ் ஏற்றிச் செல்லப்படும் மொத்தச் சரக்கின் பளுவில் மூன்றில் ஒரு பங்கு, அமெரிக்காவில் கட்டப்பட்ட கப்பல்களின்மூலம் செல்கிறது. மரத்துண்டுகள், மரங்கள்மட்டுமல்லாமல், நியூ இங்கிலாந்து கப்பல் துறை சாமான்களையும், தார், கீல், ரோசின் (rosin), டர்ப்பன்டைன், ஈரப்பசையுள்ள சணல் முதலியவற்றையும் உற்பத்தி செய்தது. இப் பண்டங்கள், ஆங்கிலேயக் கப்பற்படைக்கும் வியாபாரக் கப்பல் குழுக்களுக்கும் தேவைப்பட்டன. ஸ்வீடன், போலந்து, ரஷியா முதலிய நாடுகளிலிருந்து இவை இறக்குமதியாயின. 1705-க்குப் பின்னர், பிரிட்டிஷ் அரசாங்கக் கொடையின் மூலம், கரோலினா பகுதிகளில் இவற்றின் உற்பத்தி தூண்டப்பட்டது.

காலனிக் காலம் முழுதும், தோல் வர்த்தகம் ஒரு முக்கியமான காட்டுவழித் தொழிலாகும்; எல்லாக் காலனிகளுக்கும் பெருத்த வருமானத்தை அளிக்கும் தொழிலாகும். பலவகைக்கான தோல்கள் கிடைத்தன. வடக்கே பதப்படுத்தாத நாய்த்தோலும், தெற்கே மான் தோலும் கிடைத்தன. காலனிஸ்டுகள் துப்பாக்கிகள், ரம், கத்திகள், கோடரிகள், துணி, கெட்டில்கள்,

இன்னும் பல பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து வியாபாரம் நடத்தினர். பல காலனிகளில், துப்பாக்கி, ரம் இவற்றின் விற்பனை தடுக்கப்பட்டது. எனினும், இவற்றில் நல்ல வியாபாரம் நிலவியதால், தடை மீறப்பட்டது. இந்தியர்கள் புத்திசாலிகளாக மாறியதாலும், காலனி வியாபாரிகள் ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ் வியாபாரிகளுடன் போட்டியிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாலும் ஆரம்பகாலத்தில் இலாபப் பெருக்கம் குறையலாயிற்று. காலனிக் காலம் முடியுந்தறுவாயில், பிரிட்டிஷ் நிலப் பெரும்பகுதி காலனிகளிலிருந்து ஆண்டொன்றுக்கு ஏற்றுமதியான தோலின் மதிப்பு £200,000-க்கு அதிகமாகவே இருந்தது.

தோல் வியாபாரம், அமெரிக்க வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளது. காடுகளில் விலங்குகளின் எண்ணிக்கை குறையவே, தோல் வியாபாரி மதப்பிரச்சாரகர்களுக்கும் குடியேறிகளுக்கும் மேற்குத் திக்கினை நோக்கிச் செல்ல வழிகாட்டினான். மேற்கு நோக்கிச் செல்லும் பாதைகளைக் காட்டிச் செழுமைக்கு வழிகோலியபோதிலும், சிவப்பு மனிதர்களைக் கொடுமைப் படுத்தியமையால், கோரங்களும் அழிவுகளும் நிறைந்த இந்தியப் போர்கள் மூண்டன. மேலும், ஃபிரெஞ்சுத் தோல் வியாபாரிகளுடனும் தொடர்ந்து போட்டிகள் எழுந்தன. ஃபிரெஞ்சுத் தோல் வியாபாரிகள் இந்தியர்களுடன் சுமுக உறவு கொண்டிருந்தனர். என்றாலும், அவர்கள் விற்கும் தோலின் விலை மிகுதியாக இருந்தது. கீழ்க்கடற்கரையில் தோல் வியாபாரம் குன்றவே, வியாபாரிகள் அலிகெனிஸ் (Alleghenies) பகுதிக்கு மேற்கே முன்னேறினர்; அவ்வாறு முன்னேறும்பொழுது, வியாபாரப் போட்டி சூடுபிடித்தது. மேலும், 1770-ல் ஹட்சன் விரிகுடா கம்பெனி (Hudson's Bay Company) ஆங்கிலேய மன்னரின் ஆதரவுடன் ஹட்சன் விரிகுடாப் பகுதிகளில் வியாபாரத்தைத் துவங்கியதால், ஃபிரான்சின் அரசியல்-பொருளாதார தலன்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. அதுமுதல், காலனிச் சண்டைகளிலெல்லாம் தோல்வியாபாரம் முக்கியப்பங்கு பெற்றது. அமெரிக்கக் கண்டத்திலே, பிரிட்டனுடைய ஆதிக்கம் நிலைபெற வேண்டுமா அல்லது ஃபிரான்சினுடைய ஆதிக்கம் நிலைபெற வேண்டுமா என்ற பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும் தோல் வியாபாரம் முக்கியப் பங்கு ஏற்றது.

கடல்வழித் தொழில்கள்

மீனவர்கள் மீன்பிடிக்கும் நோக்குடன் ஐரோப்பாவின் மேற்குத் திசையில் வெகு தூரம் சென்றனர்; அதற்குக் காரணம்,

இடைக்காலத்தில் ஐரோப்பா பசிக் கொடுமைக்குப் பலியான தாகவுமிருக்கலாம்; அல்லது, ஐரோப்பாவின் மேற்குக் கடற் கரையை விட்டுவிட்டு உணவுக்குரிய மீன்கள் வேறு பகுதி களுக்குச் சென்றமையும் காரணமாக இருக்கலாம். 1300-ல் மீனவர்கள் ஐஸ்லாந்தை (Iceland) அடைந்தார்கள். நியூ இங்கிலாந்தில் ஆங்கிலேயக் குடியேற்றம் ஏற்படுவதற்கு நூருண்டுகளுக்கு முன்னரே, ஐரோப்பிய மீனவர்கள் மீன் திட்டுகளை (fishing banks) நோக்கிப் படகுகளைச் செலுத்தி யுள்ளனர். 1500-ல் ஆழ்கடல் மீன்பிடிப்புத் தொழில் முழு வேகத்தில் நடைபெற்றது. நியூஃபவுண்டுலாந்து நீர்ப்பரப்பில், இங்கிலாந்து, ஃபிரான்சு, ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடு களின் கப்பல்கள் அடிக்கடி தென்பட்டன. கரைக்குத் திரும்பும் நீண்ட பயணத்தின்போது, பிடித்த மீன்களை உப்பிட்டு உலர்த்த வேண்டும். அதற்காக வேண்டி கரையை அடைந்து, மீன் குவியலை நிலத்தில் பரப்பி, வெய்யிலில் காயவைக்கவேண்டும்; மீன்களின்மீதுள்ள ஈரப்பசை உலர்ந்து, உப்புமட்டும் தங்கும். கரையை நோக்கித் திரும்புகையில், மீன் குவியல்களின் பெரும் பகுதியைக் கள்ளத்தனமாகக் கொண்டுவருதலின் காரணமாக, மீன் திட்டுகளை நோக்கிச் சென்ற ஆரம்பகாலக் கடற்பயணங் களில் ஓர் இரகசியம் தொக்கு நிற்கிறது. இந்த இரகசியத்தின் காரணமாக, ஐரோப்பியர்கள் எப்பொழுது கடற்கரையின் பல பகுதிகளில் மீன்களை உலர்த்துவதற்காக இறங்கினர்கள் என்பது புலப்படவில்லை. அமெரிக்க நீர்ப்பரப்பிலே போர்ச்சுகீசியர்கள் மட்டும் 1550-ல் 400 மீன் கப்பல்களை வைத்திருந்தனர். 1610-ல் மிஞ்சிப்போன மீன்களை விற்றதன்மூலம் இங்கிலாந் திற்கு $ 10,000,000 கிடைத்தன. எனவே, 17ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், ஐரோப்பிய அரசாங்கங்கள் மீன் பாங்குகளுக்கருகில் உள்ள நிலப் பகுதிகளைக் கவருவதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தன. இந்தக் கட்டாயத்தின் விளைவாக, வட அமெரிக்க நிலத்தினைத் தேடும் முயற்சிக்கு ஊக்க மேற்பட்டது; மீன் திட்டுகளுக்கருகிலுள்ள நிலங்களைக் குறித்துப் போர்கள் தொடர்ந்து இன்றும் நடைபெறுகின்றன.

ஐரோப்பாவில், குறிப்பாகக் கத்தோலிக்க நாடுகளில், மீன் தேவை பெருகியது. நியூ இங்கிலாந்து மீன்பிடிக்கும் பகுதிக்கு அருகில் இருந்தது; கப்பல் கட்டும் பொருள்களும் அங்கு அதிக மாகக் கிடைத்தன; எனவே, இலாபமும் பெருகியது. 1650-க்குப் பின்னர், நியூ இங்கிலாந்தின் செழிப்பு மீன்பிடிக்கும் தொழிலுடன் இணைக்கப்பட்டது. 1675-ல் 4,000 மீனவர்களைக் கொண்ட 600 கப்பல்கள் அங்கே காட் (cod) எனும் மீனைப் பிடிப்பதில்

ஈடுபட்டிருந்தன. காலனிக் காலம் முடியுந்தறுவாயில், ஆண்டொன்றுக்கு $225,000 மதிப்புள்ள தொழிலாக மீன் தொழில் விளங்கிற்று. மீன் விற்பனைக்குரிய சந்தை வளரவே, நியூ இங்கிலாந்து மக்கள் தங்களுடைய மீன் மூன்று வகைகளாகப் பிரித்தனர். பெரிதாகவும் கொழுத்தும் இருக்கின்ற மீன்கள் முதல் வகையைச் சாரும்; இம் மீன்களை உப்பிட்டு உலர்த்துவது கடினம்; எனவே, உள்நாட்டுத் துய்ப்புக்கு அவை பயன்படும். இரண்டாம் வகையைச் சார்ந்த மீன்கள் சிறியவை; எளிதாக உப்பிட்டு உலர்த்தப்படுவதால், இவற்றை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்தனர். மூன்றும் வகையைச் சார்ந்த மீன்கள் மிகவும் சிறியனவாய் இருந்ததால், ஐரோப்பியச் சந்தைகளுக்கும் அமெரிக்கச் சந்தைகளுக்கும் ஏற்றவையல்ல. ஆகவே, மேற்கிந்தியத் தீவுகளில் அடிமைகளுக்கு உணவாக அவை விற்கப்பட்டன; அதற்குப் பதிலாக மொலாஸஸைப் பெற்று, ரம் ஆக்கினர். மீன் தொழிலின் விளைவுதான் ரம் உற்பத்தியாகும். இதைத் தவிர, உப்பின் தேவை பெருகியது. கரையோரங்களில் உப்பளங்கள் கட்டப்பட்டன; அவற்றில் கடல்நீர் ஆவியாக்கப்பட்டது. மீன், மொலாஸஸ், ரம், உப்பு இவையெல்லாம் மரச் சாமான் தொழில் (cooperage industry) காலனிகளில் வளருவதற்குத் தூண்டுதலாய் அமைந்தன.

காலனிக் காலத்தின் கடைசி 100 ஆண்டுகளில், மீன் பிடிக்கும் தொழிலைப்போலவே திமிங்கில வேட்டைத் தொழிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஸ்பெர்மாஸெட்டி (Spermaceti), ஸ்பெர்ம் எண்ணை (Sperm oil), திமிங்கில எலும்பு, ஆம்பர்கிரிஸ் (Ambergris) முதலியன மிகவும் தேவைப்பட்டன. நியூ இங்கிலாந்து கடற்கரைப் பகுதிகளில் திமிங்கிலங்கள் ஏராளமாக உண்டு; அவை மூச்சுவிடுவதற்காக மேல் எழும்பி வரும் பொழுது வேட்டைக்காரர்கள் ஈட்டிகளை எறிந்து கொன்று விடுவார்கள். திமிங்கிலங்கள் கரையைவிட்டுத் தப்பித்துச் சென்றால், வேட்டைக்காரர்கள் அவற்றைப் பின்தொடர்ந்து செல்வார்கள். 1732-க்குப் பின்னர், திமிங்கில வேட்டையில் ஈடுபட்டிருந்த 200 டன்களும், அதற்கு மேலும் எடையுள்ள கப்பல்களுக்கு ஆண்டொன்றுக்கு டன் ஒன்றுக்கு 20 ஷில்லிங்குகள் அரசாங்கக் கொடை (1747-ல் இது இரட்டிப்பாயிற்று) வழங்கப்பட்டது. இதன் விளைவாகத் திமிங்கிலப் பொருள்களின் மதிப்பு உயர்ந்தது. வேட்டைக்காரர்களுக்கும் ஊக்கமேற்பட்டது. மிகவும் திறமை படைத்த திமிங்கில வேட்டைக்காரர்கள் நியூ இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களேயாவர். அப்பகுதியே இவ் வியாபாரத்திலும் ஆதிக்கம் செலுத்தியது. புரட்சி

ஏற்பட்டபொழுது, 300 கப்பல்களும் 400 மாலுமிகளும் இவ் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். நான்டக்கட் (Nantucket), நியூ பெட்ஃபோர்டு (New Bedford), மார்பிள்ஹெட் (Marblehead), பிராவின்ஸ்டவுன் (Provincetown) முதலிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே அவர்கள். ஸ்பெர்மாஸிடியை அடிப்படையாகக் கொண்டு, ஓரளவுக்கு முக்கியத்துவம் உடைய மெழுகு செய்யும் தொழில் வளர்ந்தது.

குடிசைத் தொழில்களும் பட்டறையும்

குடிசைத் தொழில்களைப்பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளோம். மீண்டும் ஒரு முறை அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவோம். எல்லா வீடுகளிலும் நூல்நூற்கும் உருளையும் (spinning wheel), கைத்தறியும் இருந்தன. காலனிகளில் பயன்பட்ட பெரும்பாலான துணிகள் குடிசைகளில் உற்பத்தியானவையே. இத் துணிகளின் பெரும்பகுதி, கம்பளியாகவோ லினனாகவோ அல்லது இரண்டும் கலந்தனவாகவோ இருக்கும். இக் காலங்களில், பண்ணைகளில் மிகச் சாதாரணமாக ஆடுகள் வளர்க்கப்பட்டன. சணலும் நிறைய உற்பத்தியாயிற்று. பல்வேறு தரங்களில் லினன் துணி நெய்யப்பட்டது. காலனியில் உற்பத்தியான துணி வகைகளில் லினனே முதலிடம் வகிக்கிறது. இன்று பருத்தியாலான துணியை எவ்வாறு உபயோகிக்கிறோமோ, அவ்வாறே லினன் அன்று உபயோகிக்கப்பட்டது. தங்களுடைய கம்பளி ஆடைகளுடன் போட்டியிட்ட காலனிகளின் கம்பளி ஆடைகளைப் பிரிட்டிஷ் அரசாங்கம் தடைப்படுத்திற்று. ஆனால், காலனிகளில் உற்பத்தியான சணல் வளர்ச்சி ஊக்குவிக்கப் பெற்றது. அநேக காலனி சட்டமன்றங்கள் சணல் உற்பத்திக்கு அரசாங்க நன்கொடைகளை வழங்கின. 1790-ஆம் ஆண்டுகளுக்குப் பின்னரே, பெருநிலப் பகுதி காலனிகளில் பருத்தியை உற்பத்தி செய்தனர். பருத்தியை ஓரளவுக்கு வெளியிலிருந்தும் இறக்குமதி செய்தனர். இப் பருத்தி நூலிழையில் வேலை செய்வது கடினமாதலால், பருத்தியை லினன் அல்லது கம்பளியுடன் கலந்தபின்னரே நூற்கத் தொடங்குவர். நூல்நூற்பதும், துணி நெய்வதும்மட்டுமே குடிசைத் தொழில்களாக இருக்கவில்லை. புரட்சி ஏற்படுந்தறுவாயில், நெசவு இயந்திரங்களை யெல்லாம் ஒரே கூரையின்கீழ்க் கொண்டுவரும் வகையில் தொழிற்சாலை அமைப்பு மெல்லமெல்ல ஏற்பட்டது. பிலடெல்பியா, லங்காஸ்டர் போன்ற பெருநகரங்களில் இத்தகைய தொழிற்சாலைகள் தோன்றின.

அநேக பண்ணைகளில் இரும்புச் சாமான்கள் செய்ய முடியாது. அவற்றை இறக்குமதி செய்தால், செலவு அதிக

ஆகும். எனவே, 1640-ஆம் ஆண்டுகளில் லின் (Lynn), டான்டன் (Taunton) பகுதிகளையுடைய மெஸ்ஸாசுசெட்ஸ் நிலப் பரப்பில் கிடைத்த பாக் இரும்பைக் (bog iron) கொண்டு, இரும்புத் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. 18ஆம் நூற்றாண்டில் இத் தொழிற்சாலைகள், இரும்புக் கனி வகைகள் நிறைய கிடைக்கும் மேட்டுநிலங்களாகிய நியூஜெர்ஸி, பென்ஸில்வேனியா ஆகிய இடங்களுக்கு நகர்ந்தன. கனக்டிகட், நியூயார்க்கு, நியூஜெர்ஸி பகுதிகளில் செம்பு கிடைத்தது.

இரும்புச் சுரங்கங்களைக் கண்டுபிடித்ததன் நோக்கம், காலனிஸ்டுகளுக்குத் தேவையான பாரமேற்றும் ரயில்வண்டிகள், பனிக்கட்டிமீது செல்லும் வண்டிகள் ஆகியவற்றின் சக்கரங்களைச் சுற்றியுள்ள இரும்புக் கட்டுகளையும், எடைகளையும், நங்கூரம், பீரங்கி, பாளைகள், கெட்டில்கள், மணிகள், சங்கிலிகள், துப்பாக்கிகள், நூற்கும் கதிர் ஆகியவற்றையும் வழங்குதற்கே யாகும். இச் சுரங்கங்களுடன் உருக்கு வேலைகளும், வார்ப்பு வேலைகளும் நடைபெற்றன. கீறும் ஆலைகள் இரும்புக் கம்பிகளை உற்பத்தி செய்தன; அக் கம்பிகளிலிருந்து ஆணிகள் செய்யப் பட்டன. காலனிகளிலிருந்த உருக்கு உலைகள் மிகவும் சிறியன வாய் இருந்தன. அவ் வுலைகளிலிருந்து வாரம் ஒன்றுக்கு 12 முதல் 20 டன்கள் வரையில் இரும்பு உருக்கப்பட்டது.

வார்ப்படத் தொழிற்சாலைகளின் வளர்ச்சியை ஆங்கி லேயர்கள் விரும்பவில்லை. காலனிகளில் பிக் இரும்பு (pig iron) என்னும் வார்ப்பு இரும்புகள் உற்பத்தியாகலாம்; ஆனால், தாயக உற்பத்தியாளர்களுடன் போட்டியிடக் கூடாது. 1750-ல் இரும்பு வார்க்கும் தொழில் நன்கு வளர்ச்சியடைந்துவிட்டது. ஆகவே, பாராளுமன்றம், கீறும் ஆலைகளையும் (slitting mills), ரோலிங் ஆலைகளையும் (rolling mills), தகடுகளுக்கு முலாம் பூசுதலையும் (plating), உலைக்களத்தையும், இரும்பு உலையையும் தடைப்படுத்திற்று. இத் தடையை மீறினால் £200 தண்டம் செலுத்தவேண்டும் என்று விதிக்கப்பட்டபோதிலும், இரும்புக் கம்பிகளையும் வார்ப்பு இரும்பினையும் தயாரிக்க உரிமையளிக்கப் பெற்றது. 1757-க்குப் பின்னர், அவற்றை லண்டன் துறை முகத்திற்கு எந்த வரியும் செலுத்தாமல் அனுப்பும் சலுகையும் வழங்கப்பெற்றது. இத் தூண்டுதலின் காரணமாக, டன் £20 மதிப்புள்ள 7,525 டன்கள் 1771-ல் ஏற்றுமதியாயின.

வீட்டுக்குரிய பாத்திரங்களும், தட்டுமுட்டுச் சாமான்களும் கடைகளில் காலனிப் பொருள்கள் எனும் முத்திரையுடன் விற்கப் பட்டன. இத்தகைய பொருள்கள்தாம் காலனிகளில் உற்பத்தி

யாயின என்ற எண்ணமும் இக் கடைகளைப் பார்க்கும்பொழுது ஏற்பட்டது. இத்தகைய பொருள்களை விற்கும் பழைய கடைகள் புரட்சிக் காலத்திலிருந்தே விளங்கிவந்தன. வீட்டுக்குரிய தட்டு முட்டுச் சாமான்கள் குடிசைகளிலேயே செய்யப்பட்டன எனலாம். மரப்பெட்டி செய்வோர்களும் இத்தகைய சாமான்களை மக்கள் விரும்பியவாறு செய்து வழங்கினர். இச் சாமான்கள் உள்நாட்டிலேயே ஒரு கரையிலிருந்து மற்றொரு கரையிலுள்ள பகுதிகளுக்கு ஏற்றிச் செல்லப்பட்டன. இச் சாமான்கள் நியூ இங்கிலாந்து கப்பல்களில் ஏற்றப்பட்டுத் தென்காலனிகளிலும், மேற்கிந்தியத் தீவுகளிலும் இறக்கப்பட்டன. சில கண்ணாடி வகைகளும் உற்பத்தியாயின. புகழ்படைத்த பேரன் ஸ்டீகல் (Baron Stiegel), கண்ணாடித் தொழிற்சாலையையும், நிலப்பிரபுத்துவ எஸ்டேட்டையும் மான்ஹீமில் (Mannheim) நிறுவினர். அவர் உற்பத்தி செய்த கண்ணாடிச் சாமான்கள் அதிகமாக விலைபோகவில்லை.

பலவகையான குடிவகைகளைக் காய்ச்சுதல் வீட்டிலும் வெளியிலும் செய்யப்படும் ஒரு பொதுவான தொழிலாகவே இருந்தது. குறிப்பாக, அடிமை வாணிபத்திற்கும் மீன்பிடித்தல் தொழிலுக்கும் பயன்படும் வகையில், மேற்கு இந்திய வெல்லப் பாகு (West Indian molasses) 'ரம்' (Rum) ஆக வடித்தெடுக்கப்படும் தொழில், புதிய இங்கிலாந்தின் கடற்கரைப் பகுதி நகரங்களில் சிறப்பாக வளம் பெற்றிருந்தது. ஒரு சமயம் 'நியூ போர்ட்டில்' (New-Port) மட்டும் இருபது வடிகட்டிகள் (Distilleries) இத் தொழிலில் ஈடுபட்டிருந்தன. 'ரம்' மட்டுமல்ல; பீர், ஏல், சிடர்போன்ற குடிவகைகளும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன; எனினும், இந்த மதுபானத் தயாரிப்புத் தொழில் முழுமையும் ஏற்றுமதி செய்வதற்காகவே செய்யப்பட்டது என்று நினைத்து விடக்கூடாது. நம்முடைய முன்னோர்கள் பெருங் குடிப்பிரியர்களாக இருந்தார்கள் ஆகலின், மது வகையில் பெரும்பகுதி வீடுகளிலேயே பயன்படுத்தப்பட்டது.

காலனித் தொழிலின் வளர்ச்சி

பல்வேறு காலங்களில் காலனித் தொழில் எவ்வாறு வளர்ந்து பரவியிருந்தது என்பது ஊகித்து உணரவேண்டிய ஒன்றாகும். தாயகத்து அரசாங்கத்தின் சந்தேகங்களைப் போக்குவதற்காகவும், புதிதாகக் குடியேறுபவர்களை ஊக்குவிப்பதற்காகவும் அந்தக் காலத்தில் வெளியிடப்பட்ட தகவல்கள் மிகைப்படுத்தப்பட்டிருந்தன; அல்லது அத் தகவல்கள் போதுமான அளவுக்குத் தெளிவாக அமையவில்லை. முத்திரைச் சட்டம் (Stamp Act)

இயற்றிய காலத்தில், காலனிஸ்டுகள் ஆங்கிலேயத் தொழிலின் பிடிப்பிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள முயன்றனர். அதன் விளைவாக 1766, 1768ஆம் ஆண்டுகளிலே, பொறிசெய் தொழில்களின் வளர்ச்சியைப்பற்றிக் காலனி கவர்னர்கள் ஆண்டு அறிக்கை வெளியிட வேண்டும் என்று வர்த்தக பிரபுக்கள் (Lords of Trade) உத்தரவு பிறப்பித்தனர். இவ் வறிக்கைகள் முழு உண்மைகளையும் விளக்கவில்லை என்றாலும், சில தகவல்கள் பயன்படத்தக்க வகையில் உள்ளன.[9] பொதுவாக இவ் வறிக்கைகளில், காலனித் தொழில் வளர்ச்சியைப்பற்றிக் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன; மேலும், காலனிஸ்டுகள் இங்கிலாந்தைச் சார்ந்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், பணம் படைத்த வர்க்கத்தினர் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான பண்டங்களையே விலைக்கு வாங்கினர் என்றும், நிலத்தின்மீதுள்ள பற்று, இயந்திரத் தேர்ச்சிபெற்ற தொழிலாளியையும் விவசாயி யாக மாற்றியது என்றும், இக் காரணங்களால் இயந்திரத் தொழில் வளர்ச்சி தடையுற்றது என்றும் அவ் வறிக்கைகளில் ஆணித்தர மாக எழுதப்பட்டுள்ளன. 'பொறிசெய் தொழில் கணிசமான அளவுக்கு வளராததால், ஆண்டறிக்கை தரவேண்டிய அவசியமே இல்லை' என்ற அளவுக்கு மெஸாசுசெட்ஸின் கவர்னர் பெர்னர்டு குறிப்பிட்டுள்ளார். பொருளாதாரச் சுதந்திரம் காலனிஸ்டுகளுக்கு ஏற்பட வாய்ப்பே இல்லை என்பதை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இவ்வறிக்கைகள் வலியுறுத்த முற்பட்டமையால், காலனி பொறிசெய் தொழில்களின் உண்மையான நிலை குறைத்து மதிப்பிடப்பட்டது. ஆனால், உண்மையான நிலை யினை 1774-ல் ஓர் ஆங்கில எழுத்தாளர் தெளிவாகக் கீழ்க்கண்ட வாறு விளக்கியுள்ளார்:

இங்கிலாந்தில் வெளியாகும் பொறிசெய் பொருள்களைத் தவிர்த்து வேறு எல்லா வகையான பொருள்களையும் காலனி வாசிகள் உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்கின்றனர். பிரிட்டிஷ் தீவுகளிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் பருத்தியை இறக்குமதி செய்து, நூலாக நூற்று, லினன் நூலுடன் கலந்து, மாஞ்செஸ்டரில் நெய்வதுபோல் நியூ இங்கிலாந்து மக்கள் துணி நெய்கின்றனர். அத் துணியைத் தாங்களும் பயன்படுத்தி மற்றவர்களுக்கும் விற்கின்றனர். கரோலினா, பென்சில்வேனியா, இன்னும் மற்றக் காலனிகளில் தொப்பிகள் செய்யப்படுகின்றன. வட காலனி களில் சோப்பு, மெழுகு, மரச்சாமான்கள் முதலியவற்றைச்செய்து, தென்காலனிகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். மேலும், கோச்சு

[9] A summary of these letters is given in Victor S. Clark's, 'History of Manufactures in the United States, 1670-1860.' pp. 207 ff.

வண்டிகள், இரதங்கள், உல்லாச வண்டிகள், நாற்காலிகள் மூதலியவற்றையும் செய்து தென்காலனிகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இன்னும் குதிரைச் சேணங்களும், மற்றத் தோல் சாமான்களும் உற்பத்தி செய்து, தென்காலனிகளுக்கே அனுப்பினர். இன்னும் வடகாலனிகளிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செருப்புகள் ஏராளமாக அனுப்பப்பட்டன. பென்சில்வேனியாவில் லினனும், மற்றப் பகுதிகளில் சணல் உற்பத்தியும் பெருகியிருந்தன. வார்ப்படத் தொழிற்சாலைக்குரிய சாமான்களும், கோடாரிகளும், மற்ற இரும்புக் கருவிகளும், பாத்திரங்களும் வடகாலனிகளிலிருந்து தென்காலனிக்குச் சென்றன.'[10]

வசதிப்படும்பொழுதெல்லாம் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உயர்தரப் பொறிசெய் பண்டங்களையே காலனிவாசிவாங்கினான். எனினும், அடிப்படைத் தேவைகளைத் தன் சொந்தக் காலனிகளிலேயே அவன் பெற முடியும். கிரேட் பிரிட்டனிடமிருந்து எதையும் எதிர்பார்க்காமல், அடிப்படைத் தேவைகளைத் தானே நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்ற காலனிவாசிகளின் நம்பிக்கையைப் புரட்சிக்கு முன்னர், தொடர்பின்மை ஒப்பந்தங்களின்மூலம் (Non-intercourse Agreements) பிராங்கிலின் விளக்கியுள்ளார். காலனிப் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், காலனிகள் தந்நிறைவு அடைவது இயலாத காரியம் என்பது உண்மைதான்.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

ஹக்கர், எல். எம். (Hacker, L. M.), The Triumph of American Capitalism, pp. 136-158.

நெட்டில்ஸ், கர்டிஸ், (Nettels, Curtis.), The Roots of American Civilization, Chaps. 9, 10.

ஜான்சன், ஈ. ஆர். (Johnson, E. R.), et al., History of Domestic and Foreign Commerce of the United States, Vol. I, Chaps. 1-6, 9-11.

டிவே, டி. ஆர். (Dewey, D. R.), Financial History of the United States, Chap. I.

டிரையன், ஆர். எம். (Tryon, R. M.), Household Manufacture in the United States, 1640-1860, Chaps. 1-6.

கிளார்க், வி. எஸ். (Clark, V. S.), History of Manufactures in the United States, 1607-1860, Chaps. 1-9.

போகார்ட், ஈ. எல். (Bogart, E. L.) and Thompson, C. M., Readings in the Economic History of the United States, pp. 42-80, 96-105.

[10] Interest of the Merchants and Manufacturers of Great Britain in the Present Contest with the Colonies Stated and Considered (London, 1774; reprinted in Boston), p. 12.

6. புரட்சிக்குமுன் எல்லைப்புற முன்னேற்றம்

மேற்குத் திக்கில் முன்னேறியதன் முக்கியத்துவம்

முன்னுக்குப்பின் முரணான பல சக்திகள் அமெரிக்கப் பண்பாடும் இலட்சியங்களும் உருவாவதற்கு அடிப்படையாக அமைந்தன. ஒரு பக்கத்தில் ஐரோப்பியர் தொடர்பும், சமுத்திரக் கரையை ஒட்டிய வாழ்க்கையும், தனித்த ஓர் அமெரிக்க நாகரிகம் உருவாவதற்குரிய வாய்ப்பினைத் தடுத்து நிறுத்தின. மறுபக்கத்தில் எல்லைப்புற வாழ்க்கையும், மேற்கு நோக்கிய முன்னேற்றமும் ஐரோப்பியத் தொடர்பின் விளைவுகளை மங்கச்செய்து, ஒரு புதிய நாடு எழுச்சிபெறத் தூண்டுகோலாக அமைந்தன. 19ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலம் வரையில், அப்பலாச்சியன் மலைத்தொடரின் தடையும், போக்குவரத்து வசதிகள் பற்றாமையும், அம் மலைகளுக்குக் கிழக்குப்புறத்தில் பெரும்பாலான மக்களைத் தேங்கச் செய்துவிட்டன. 1830ஆம் ஆண்டிலுங்கூட, அட்லான்டிக் கரையோரத்தில்தான் மக்கள்தொகையின் மையமே அமைந்தது. எனினும், அவ்வாண்டிற்கு முன்னரும் பின்னரும், மக்களின் வாழ்க்கையிலும் வரலாற்றிலும் மேல்திசை நோக்கித் தொடர்ந்து முன்னேறிய கதைதான் முக்கியப் பங்கு பெற்றுள்ளது. முதல் குடியேற்றங்கள் முடிந்தவுடனேயே, உள்நாட்டினை நோக்கி மக்கள் முன்னேறத் தொடங்கினர். 1890 வரையில் இம் முன்னேற்றங்கள் நடைபெற்றன. மேற்கிலும் கிழக்கிலும் எல்லைப்புறக் கோடுகள் சந்திக்கும்வரையில் மக்கள் முன்னேறிச் சென்றுகொண்டிருந்தனர். 1893-ல் பேராசிரியர் டர்னர் (Turner) குறிப்பிட்டதுபோல, "நம் காலம் வரையில், உயர்ந்த மேற்குப் பிரதேசங்களின் குடியேற்ற வரலாறே அமெரிக்க வரலாறாகும். காலி நிலங்களும், அவை பின்தள்ளிக் கொண்டே செல்லும் நிலையும், மேற்குத் திக்கு நோக்கி அமெரிக்கர்கள் முன்னேறிச் சென்ற போக்கும் அமெரிக்க வளர்ச்சியைக் குறிப்பனவாகும்."[1]

1 F. J. Turner, The Frontier in American History, p. 1.

டர்னரின் கருத்தில் பொதிந்துள்ள உண்மையைப்பற்றியும், மேற்குத் திசை நோக்கிச் சென்ற முன்னேற்றத்தின் விளைவுகளைப் பற்றியும் பின்னர் ஆராய்வோம். டர்னர் குறிப்பிட்டுள்ள இம் முன்னேற்றத்தின் விளைவுகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். குடியேற்றத்தின் முன்னோடிகளாக இருந்தவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடிகள், அவர்களைப் புதிய சூழ்நிலைக்கு ஏற்றவர்களாக மாற்றின. அவர்கள் இளமையில் கிடைத்த பயிற்சியையும் கொள்கைகளையும் காற்றில் பறக்கவிடாமல் பயன்படுத்திக்கொண்டனர் என்ற போதிலும், அவர்கள்மீதிருந்த ஐரோப்பியப் பண்பாட்டுச் சூழ்நிலையின் பிடிப்பு கொஞ்சங் கொஞ்சமாகத் தளர்ந்தது. பல இனங்களைச் சார்ந்தவர்கள் ஒரே பகுதியில் ஒன்றுகவே குடியேறியதன் விளைவாகப் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளையுடைய அமெரிக்கன் உருவானான். இயற்கையின் ஆற்றல்களையும், வெறுப்பினையே கக்கும் இந்தியர்களையும், கொடிய காட்டு விலங்குகளையும் தொடர்ந்து எப்பொழுதும் எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்த அமெரிக்கர்கள், தன்னம்பிக்கையும், துணிந்து நிற்கும் ஆற்றலும், தனித் தன்மையும், அடக்கியாள முனையும் சக்திகள்மீது வெறுப்பும், தன் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த முயலும் ஆதிக்க சக்திகள் மீது அருவறுப்பும் கொண்டவர்களாக விளங்கினர்கள். பர்க்கு (Burke) குறிப்பிட்டதுபோல, அமெரிக்கர்களின் இவ்வுணர்ச்சி 'சுதந்திரத்தின் உத்வேக உணர்ச்சி' ஆகும். பழைய உலகத்தில் இருந்ததைவிடப் புதிய உலக சமூகத்தில் பொருளாதார சமத்துவம் சீராக இருந்தது. இப் புது சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் தன் சொந்தக் கால்களிலேயே ஊன்றி நின்றான். எனவே, பழைய உலகத்தின் செயற்கையான சம்பிரதாயங்களைப் புதிய உலக மக்கள் காலப்போக்கில் மறந்தனர். மேலும், அவர்கள் ஒரு ஜனநாயக மனப்பாங்கினையும் பெற்றனர். அமெரிக்காவின் மேற்குப் பகுதிதான் ஜனநாயக உணர்வில் தலைசிறந்து விளங்கியது. எனவே, ஜனநாயக எல்லைப்புறவாசிகளுக்கும், கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த பழமைப் பற்றாளர்களுக்கும் இடையில் அடிக்கடி நிகழ்ந்த சண்டைகளின் தொகுப்பை அமெரிக்க வரலாற்றில் காணலாம். மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளினால் அமைந்த எல்லைப்புற வாழ்க்கை, அறிவுமுறையில் ஒரு வகையான அமெரிக்கர்களை உருவாக்கிற்று. அவ் அமெரிக்கர்கள் அமைதியற்றும், சுறுசுறுப்புடனும், நடைமுறைக்கு ஒத்தும், துடிதுடிப்புடனும், எதிர்காலத்தில் நம்பிக்கையுடனும் இருந்தனர்.

மேற்குப் பகுதிகளில் வகுப்புணர்ச்சி (sectionalism) தலை தூக்கியது. உள்நாட்டு வளர்ச்சி, காலநிலம், பணப்பெருக்கம்

இவற்றின் அடிப்படையில் மேற்குப் பகுதிகளில் வாழும் மக்களின் சொந்த நலன்கள் பெருகவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அரசியல் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் இவற்றையே மேற்கின் வளர்ச்சியாகக் கொண்டனர். மேற்கில் வாழ்ந்த அமெரிக்கனுக்கு அநேக பொருள்கள் தேவைப்பட்டன. அப் பொருள்களைத் தேசிய அரசாங்கமே வழங்க முடியும். எனவே, நாட்டுணர்ச்சி பெருக வழி ஏற்பட்டது. அரசாங்க அமைப்பு முறையைப் பொறுத்தவரையில் ஐக்கிய அமெரிக்க நாட்டின் செனட்டர்களின் நேரடித் தேர்தல், பெண்களுக்கு வாக்குரிமை, தொடக்க உரிமை (initiative), குடியொப்பம் (referendum), திரும்பப் பெறுதல் (recall) ஆகிய ஜனநாயக உரிமைகளை மேற்குப் பகுதிகள் கடைப்பிடித்தன. பொருளாதார முறைப்படி பார்த்தால், வகுப்புவழி சிறப்புப் பயிற்சியுடன்(sectional specialisation) தொழில் சுதந்திரமும் மேற்கில் ஏற்பட்டது எனலாம்.

மேற்கு நோக்கி முன்னேறியதில் பல கட்டங்கள்

காலனி காலத்திலேயே மேற்கு நோக்கி முன்னேறியமைக்கு அறிகுறிகள் தென்பட்டன. வேட்டைக்காரர்களும், வர்த்தகர்களும், மதப்பிரசாரகர்களுமே முதலில் மேற்கே செல்லத் தொடங்கினர். டேனியல் பூன் (Daniel Boone), ஜெடிடியா ஸ்மித் (Jedediah Smith) போன்ற வர்த்தகர்களும் கண்ணிவைத்து விலங்கினைப் பிடிப்போரும், ஃபாதர் மார்க்குவெட் (Father Marquette) மார்க்கஸ் விட்மன் (Marcus Whitman) போன்ற பாதிரிகளும் மேற்கு நோக்கிய பாதைகளுக்கு வழிகாட்டினர். காட்டு விலங்கினையும் இந்தியனையும் மோப்பம் பிடித்துக்கொண்டே வேட்டைக்காரன் மேற்கு நோக்கி முன்னேறினான். அவ்வாறு அவன் முன்னேற்றிச்சென்ற பாதை நாகரிகத்தின் பெருஞ்சாலையாயிற்று. வழியெல்லாம் வர்த்தக நிலையங்கள் ஏற்பட்டன. ஆல்பனி (Albany), பிட்ஸ்பர்க் (Pittsburgh), சிக்காகோ (Chicago), செயின்ட் லூயிஸ் (Saint Louis) ஆகிய நகரங்கள் எழுந்தன. வர்த்தகர்களையும், கண்ணிவைத்து விலங்குகளைப் பிடிப்போரையும் தொடர்ந்து பண்ணைக்காரர்கள் வந்தனர். அவர்கள், ஆடுமாடுகளுக்குப் புல்வெளிகளைப் பயன்படுத்தவேண்டி நிலங்களை உடைமையாக்கிக்கொண்டனர். கால்நடைகளை மிகவும் எளிதாக மேற்குத் திக்கில் ஓட்டிச் சென்றனர். 17ஆம் நூற்றாண்டில் வர்ஜீனியாவிலும் கரோலினாப் பகுதிகளிலும் பசுமாடுகளின் கொட்டில்கள் இருந்தன. தற்காலத்தில் மேல்திசைப் புல்வெளிகளில் பெரும் கால்நடைப் பண்ணைகள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலை எல்லைப்புற பண்ணைக்காரர்கள் எவ்வாறு

மேற்கு நோக்கி முன்னேறியுள்ளனர் என்பதை நன்கு விளக்குகிறது.

கால்நடைப் பண்ணைகள் நடத்துவோரை அடுத்து விவசாயிகள் வந்தனர். விவசாயிகளின் முதல் அலை குடியேறிய சமூகங்களாகச் சிதறுண்டது. விவசாயிகள் வீணாக நிலத்தில் பாடுபட்டனர். வேளாண்மையின் ஆரம்ப கட்டமாகிய இதனைத் தொடர்ந்து நெருக்கமான குடியேற்றங்கள் ஏற்பட்டுள்ள பகுதிகளில் ஓரளவு செறிந்த வேளாண்மை (intensive caltivation) நடைபெற்றது. சாதகமான சூழ்நிலைகள் நிலவிய இடங்களில் வேளாண்மை கைவிடப்பெற்றுப் பொறிசெய் தொழிலும் வர்த்தக நடவடிக்கைகளும் நிரம்பிய நகர வாழ்க்கை மேற்கொள்ளப்பெற்றது.

நமது நாட்டின் வளர்ச்சியில் வேட்டையாடுதல், கால்நடைப் பண்ணைகளை நடத்துதல், வேளாண்மை, தொழிற் சாலைகளை நிறுவுதல் ஆகிய நான்கு கட்டங்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மூன்று நூற்றாண்டுகளாக நமது நாகரிகமும் வரலாறும் இந்நான்கு கட்டங்களைச் சார்ந்தேயுள்ளன. இந்நான்கு கட்டங்களும் அமெரிக்க வாழ்க்கையில் முறையாகவே நிகழவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. சில வேளைகளில் இந்நான்கு நிலைகளிலும் ஈடுபட்டவர்கள் ஒரே நிலப்பகுதியில் தாறுமாறான வகையில் கலந்துகொண்டு அப்பகுதியின் வளர்ச்சிக்குப் பணிபுரிந்திருக்கிறார்கள்.[2] பேராசிரியர் டர்னர் அவர்கள் படம் பிடித்துக் காட்டிய, திரும்பத் திரும்ப வரும் இந்நான்கு கட்டங்களும் நமது பொருளாதார முன்னேற்றத்தின் தலைசிறந்த காலங்களாகும்.

'அட்லான்டிக் எல்லையில் மீனவர்களும் தோல் வியாபாரியும் சுரங்கத் தொழிலாளியும் கால்நடைப் பராமரிப்பாளரும் வேளாளரும் வாழ்ந்தனர். மீனவர்களைத் தவிர, தவிர்க்கமுடியாத கவர்ச்சியினால் உந்தப்பட்டு மற்றவர்களும் மேற்குத் திசையில் நடைபோட்டனர். அமெரிக்கக் கண்டத்தின் குறுக்கே அலை அலையாகச் சென்றனர். கம்பர்லாண்டு இடைவெளியில் (Cumberland Gap) நின்று நாகரிகத்தின் ஊர்வலத்தை நோக்குக. எருமை மாடுகள் நீர் ஊற்றுக்களை நோக்கிச் செல்வதையும், ஒருவர்பின் ஒருவராக இந்தியர்களும், தோல் வியாபாரிகளும், வேட்டைக்காரர்களும், கால்நடைப் பராமரிப்பாளர்களும், வேளாண்மையின் முன்னோடிகளும் மேற்கு நோக்கிச் செல்லும்

[2] சி. டபிள்யூ. ஆல்வொர்டு (C. W. Alvord), in the Mississippi Valley Historical Review, VII, 403-407 (March, 1921.)

காட்சியினைக் காண்க. ஒரு நூற்றாண்டுகள் கழித்து ராக்கீஸில் (Rockies) உள்ள தெற்குக் கணவாயில் (South Pass) நின்று, அதே நாகரிக ஊர்வலக் கூட்டத்தினர் விட்டுவிட்டுச் செல்லும் காட்சியினைக் காண்க. வர்த்தகர் எல்லை என்றும், பண்ணையாளர் எல்லை என்றும், சுரங்கத் தொழிலாளர் எல்லை என்றும், விவசாயிகள் எல்லை என்றும் எல்லையைப் பிரித்துப் பார்க்கலாம். வர்த்தகரின் பொதிச்சுமை வண்டிகள் மணியோசை எழுப்பிக்கொண்டே அலிகெனிஸின் (Alleghenies) குறுக்கே செல்வதையும் காணலாம். ஆங்கில வர்த்தகரின் பிரம்புப் படகுகளைக் கண்டு பீதியுற்ற பிரெஞ்சுக்காரர்கள் பெரிய ஏரிகளில் உள்ள தங்கள் கோட்டைகளைப் பலப்படுத்தும் காட்சியையும் காணலாம். கண்ணிவைத்து விலங்குகளைப் பிடிக்கும் குழுவினர் ராக்கீஸில் ஏறும் காலத்தில் மிசௌரி நதி வாயிலில்தான் விவசாயிகள் காணப்பட்டனர்.[2]

மேல்திசைக் குடியேற்றத்தின் பாதைகள்

கப்பலைச் செலுத்துதற்குரிய நீரோட்டங்களே மேற்குத் திசை நோக்கிச் செல்லுதற்குரிய பாதைகளாக அமைந்தன. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதிகளில் பாதைகள் அமைத்து, கதேயிலுள்ள (Cathay) செல்வங்களைப் பெறலாம் என்ற நம்பிக்கையும் பலருக்கு இருந்தது. இந்த நம்பிக்கையின் விளைவாகத் தங்கள் படகுகள் மூலம் எண்ணற்ற நதிகளையும் கழிமுகங்களையும் ஆராயத் தொடங்கினர். பின்னர்த் தோல் வியாபாரிகள் நதிகளிலும் ஏரிகளிலும் சென்று உள்நாட்டுப் பகுதிகளில் வசிக்கத் தொடங்கினர். எனவே, மக்கள் அப்பகுதிகளில் குடியேறுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோல் வியாபாரிகள் அங்கு நல்ல பாதைகளை அமைத்துவிட்டனர். மான்ஹாட்டன் தீவினை டச்சுக்காரர்கள் வாங்குவதற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தோல் வியாபாரிகள் ஆல்பனியில் வர்த்தக நிலையத்தை ஏற்படுத்திவிட்டார்கள். 1627-ல் மேல் பொட்டோமாக் (Upper Potomac), சஸ்கியூ ஹானு (Susquehanna) பகுதிகளிலுள்ள இந்தியர்களுடன் ஜேம்ஸ் டவுனிலுள்ள வியாபாரிகள் வாணிடம் நடத்தினர். உள்நாட்டுப் பகுதிக்குச் செல்ல எளிய பாதையைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று ஃபிரெஞ்சுக்காரர்கள் தடுமாறிக்கொண்டிருந்தனர். சூழ்நிலையின் காரணமாக அவர்கள் தோல் வியாபாரத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று. 18ஆம் நூற்றாண்டு தொடங்குவதற்கு வெகுகாலத்திற்கு முன்பே மிஸிஸிப்பிக்கும் பெரிய ஏரிகளுக்குமிடையில் அருமையான பாதைகளை அவர்கள் கண்டு அமைத்தனர். பண்டங்களை ஓர்

[2] F. J. Turner, op. cit., P. 12.

ஆற்றின் கரையிலிருந்து மற்றோர் ஆற்றின் கரைக்கு எடுத்துச் செல்லும் முறையை இந்தியர்களிடமிருந்து அவர்கள் தெரிந்து கொண்டு பின்பற்றினர்.

செயின்ட் லாரன்சுக்குத் தெற்கே அப்பலாச்சியன் மலையினூடே செல்லும் நான்கு தலைசிறந்த பாதைகள் உள்ளன. ஹட்சன், மோகாக் வழியாக ஏரிகளுக்குச் செல்லும் பாதை வடதிசையில் உள்ளது. அது மிகவும் சிறந்த பாதையாகும். தொடக்கத்தில் குடியேறியவர்களுக்குப் பயன்படாதவகையில் அப்பாதை மூடப்பட்டது. தென்திசையில், மோகாக்கிலிருந்து மேல் அலிகெனிக்குச் செல்லும் பாதை இரண்டாவதாகும். தென் பென்சில் வேனியாவிலிருந்து மோனன்கஹீலா (Monongahela) விற்கும் பின்னர் ஓகியோவிற்கும் செல்லும் பாதை மூன்றுவதாகும். இதனைத் தொடர்ந்துதான் கம்பர்லண்டு சாலை செல்கிறது. நான்காவது பாதை, அப்பலாச்சியன் பள்ளத்தாக்கின்கீழ் தென் திசையிலேயே சென்று சம்பர்லண்டு இடைவெளி வழியாகவோ - அல்லது டென்னசி பள்ளத்தாக்கின் (Tennessee Valley) வழியாகவோ செல்லும் இப்பாதை, புரட்சிக்கு முன் குடியேறியவர்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். அப்பலாச்சியன் மலைத்தொடர்களின் தென் பகுதியைச் சுற்றியமையக்கூடிய பாதையைத் தடுத்துவிட்டனர். புரட்சிக்கு முன்னரே இப்பாதைகளைத் தோல் வியாபாரிகள் அறிந்திருந்தனர் எனினும், 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குப் பின்னரே இப்பாதைகளைக் குடியேறச் சென்றவர்கள் பயன்படுத்தத் தொடங்கினர். அதற்கு முன்னர், ஐரோப்பியச் சந்தையுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டிய கட்டாயம் இருந்ததால், வெள்ளைக்காரர்கள் நதிகளின் அருகிலேயே வசித்தனர். அப்பலாச்சியன் மலைத்தொடருக்குக் கிழக்கே குடியேற்றங்கள் பெருகாமைக்குக் காரணம், வெறுப்பைக் கக்கும் பிரெஞ்சுக்காரர்களும் இந்தியர்களும் இயற்கையான மலைத்தொடரின் தடைகளுமே ஆகும்.

முதல் எல்லை

முதலில் குறிப்பிட்டதுபோல், வர்ஜீனியாவின் முதல் எல்லையில் நிறையப் பண்ணைகளும் தோட்டங்களும் எண்ணற்ற நதிகளின் கரையோரங்களில் அமைந்திருந்தன. புகையிலை அங்கிருந்துதான் கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆறுகளின் அருகில் உள்ள நிலங்கள் அனைத்தும் விலையாகிவிட்ட காரணத்தால், உள்நாட்டுப் பகுதியைச் சார்ந்த நிலங்களை வாங்க முற்பட்டனர். எனினும், ஆறுகளின் அருகிலேயே

வசிக்கவேண்டும் என்று மக்கள் விரும்பியதால், தொடக்க கால வர்ஜீனியா தீபகற்பங்களின் கூட்டாட்சிபோல் தென்பட்டது. எல்லைப்புற இயக்கத்தினைத் தடுக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் ஆறுகள் மலை உச்சிகளிலிருந்து முதலில் விழுகின்ற பகுதிகளிலெல்லாம் எல்லைப்புற மக்களை ஒன்றுசேர்த்து நகரங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இம்முயற்சியை மீறியும், இப்பகுதிகளில் கிராமப்புற குழ்நிலையே உருவாகியது. வர்ஜீனியாவின் எல்லை தெற்கேயும் மேற்கேயும் முன்னேறியது. 1700-ல் ஆல்பிமார்ல் சவுண்ட்டிற்கு (Albemarle Sound) வடக்கேயும் சவான்நதிக்குக் (Chowan River) கிழக்கேயும் உள்ள கரோலினைப் பகுதிகளிலும் மக்கள் குடியேறினர்.

ஒருவிதத் திட்டமுமின்றி வர்ஜீயக் காலனிவாசிகள் மேற்கு நோக்கிக் குடிபெயர்ந்தனர். ஆனால், நியூ இங்கிலாந்தின் காலனி அரசாங்கங்கள் நகர்களை அமைத்தவாறும், நகர்எல்லைகளை வகுத்தவாறும் மேற்கு நோக்கிச் சென்றன. வர்ஜீனியாவில் ஏற்பட்ட குடிப்பெயர்ச்சி தனிப்பட்டவர்களால் ஏற்பட்டதாகும். ஆனால், நியூ இங்கிலாந்தில் பல குழுவினரும் நகரங்களுமே குடிப்பெயர்ச்சிக்குக் காரணங்களாகும். குடிப்பெயர்ச்சியைப் பற்றிய கட்டுப்பாடுகளும் தலைதூக்கின. பெரும்பாலான மாஜிஸ்டிரேட்டுகளின் அனுமதியின்றி யாரும் புதுத் தோட்டங்களில் குடியேறக்கூடாது என்று 1636-ல் மெசாசுசெட்ஸின் பொது நீதிமன்றம் (Massachusettes General Court) ஓர் உத்தரவு பிறப்பித்தது. எனினும், இவ்வுத்தரவு மீறப்பட்டது. பிரெஞ்சுக் காரரும் இந்தியர்களும் பிரிட்டிஷ் வியாபார நிலையங்களைத் தாக்குவர் என்ற அச்சம் பொது நீதிமன்றத்திற்கு எழுந்தது. எனவே, அம்மன்றம் 1694-ல் ஒரு கட்டளை பிறப்பித்தது. அதன்படி விலக்கப்பட்ட சில எல்லைப்புற நகரங்களைத் தவிர்த்து, மற்ற நிலையங்களையும் நகரங்களையும் யாரும் புறக்கணித்து வெளியேறக்கூடாது. மீறி வெளியேறினால் வெளியேறுபவர்களுக்குச் சிறைத் தண்டனை கிடைக்கும். அவர்களுடைய சொத்துப் பறிமுதல் செய்யப்படும். நியூ இங்கிலாந்து எல்லை பழைய குடியேற்றங்களுக்கு அருகில் இருந்ததாலும், எதிரிகளின் தாக்குதலுக்கு என்றும் பலியாக நேரிடும் என்ற அச்சத்தின் காரணமாகவும் எல்லைப்புற நகரங்களின் நிலைமையும் அந்தஸ்தும் எப்பொழுதும் கவனிக்கப்பட்டே வந்தன. நியூ இங்கிலாந்தின் மற்றக் காலனிகளும் இதே முறையைப் பின்பற்றின.

திறமையுள்ள குழுவினர் நகரங்களை அமைத்துக் குடியேற்றங்கள் பெருக வழி செய்தனர். இந்தியர்களின் தாக்குதல்களி

லிருந்து தப்புவதற்கு இத்தகைய குடியேற்றங்களும் நகர அமைப்புகளும் பயன்பட்டன. எனினும், நிலக்கொடை பெற்ற நில உடைமையாளர்களுக்கும், பொது நிலங்களிலோ அல்லது பிரிக்கப்படாத நிலங்களிலோ எவ்வித நில உரிமைகளையும் பெருதவர்களுக்குமிடையில் மனக்கசப்பும் புகைச்சலும் வளர்ந்தன. நில உடைமை பெருதவர்களின் எண்ணிக்கை பெரிதாகையால், நகராட்சி மன்றங்கள் அவர்கள் கைகளில் சிக்கின எனவே, மனக்கசப்புகளும் புகைச்சல்களும் வளர்ந்தன.

டிலேவேர் நதிமீதுள்ள வர்த்தக நிலையங்களும் ஹட்சன் நதி வாயிலிலும் மேற்பகுதிகளிலும் ஏற்பட்ட நிலையங்களும் டச்சுக் குடியேற்றத்தின் ஆரம்ப காலத்தில் ஏற்பட்டவைகளாகும். மொகாக் நதி வேகமாகச் செல்லும் பகுதியில், சினெக்டாடி (Schenectady) 1661-ல் ஏற்பட்டது. பின்னர், அவ்விரு நதிகளுக்குமிடையில் உள்ள பகுதியில் நிலப்பிரபுத்துவ முறை (Patroon system) ஏற்பட்டது. அங்கு நியூ ஆம்ஸ்டர்டாம் அதிகாரிகளால் குத்தகைக்கரர்களுக்கு நிலம் வழங்கப்பட்டது. நியூ ஜெர்ஸி, பென்சில்வேனியா, டிலாவேர், மேரிலாந்து, ஆகிய பகுதிகளில் நிலக்கொடை மூலமாகவோ—நிலத்தை விற்பதன் மூலமாகவோ குடியேற்றங்கள் நிகழ்ந்தன. குடியேறுபவர்கள் மேற்கே விரைந்து சென்றபோதிலும், அவர்களுக்கு முன்பாகவே அங்கெல்லாம் கிராமங்களும் நகரங்களும் ஏற்பட்டுவிட்டன. கரோலினுப் பகுதியினர் தாங்கள் 1700-ல் ஏற்படுத்தியுள்ள இரண்டு குடியேற்றங்களைப்பற்றிப் பெருமையடித்துக்கொள்கின்றனர். ஒன்று, வர்ஜீனியாவின் தொடர்ச்சியான அல்பிமார்ல் சவுண்டைச் சுற்றியுள்ள வடபகுதியாகும். பிறிதொன்று, சாந்தி நதியின் (Santee river) தென்பகுதியிலிருந்து தொடர்ந்து சார்லஸ்டன்னை (Charleston) மையமாகக் கொண்ட தென்பகுதி யாகும். 1670-ல் தென்காலனி எட்டு நில உடைமையாளர்களால் ஏற்படுத்தப்பட்டது. இக்காலனி மேற்கிந்தியத் தீவுகளுடன் வர்த்தக முறையில் கட்டுண்டது. இக்காலனியில் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து குடியேறியவர்கள் பெரும்பாலோர் ஆவர் செயற்கையான அரசாங்கமுறை ஒன்றை—ஜான் லாக்கின் (John Locke) 'உயர்ந்த மாதிரியை' (Grand Model)—ஏற்படுத்த முயன்றமையால் இக் குடியேற்றம் முதலில் தடைப்பட்டது. இத்திட்டம் கைவிடப்பட்டபின்னர், நதியின் மேற்பகுதி நோக்கிக் குடியேற்றம் காண விழைவோர் விரைந்து செல்லலாயினர். இங்கு மக்கள் தொகை பெருக ஸ்காட்ச்—ஐரிஷ்காரர்கள் காரணமாயிருந்தனர். நந்திஸ் ஆணையை (Edict of Nantes) நீக்கிய பிறகு, பிரான்சைவிட்டு வெளியேறிய ஹியூஜினோக்கள்



1760-ல் குடியேற்றத்தின் அளவைக் காட்டும்
ஆங்கிலக் காலனிகள்

சாந்தி நதியின் கரையோரப் பகுதிகளில் 50,000 ஏக்கர்கள் வாங்கினர்கள்.

ஆரம்ப காலக் குடியேற்றங்களை ஆய்ந்துபார்த்தால், அமெரிக்க மக்கள் 1700-ல் பல்வேறு பண்பாடுகளையுடையவர்களாகத் திகழ்ந்து இன்றுவரையில் மணங்கமழ்கின்றனர் எனலாம். 17ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்து குடியேறியவர்களே மிகுதியாகவிருந்தனர். ஏனைய பிரிட்டிஷ் தீவுகளிலிருந்தும் வந்து பலர் குடியேறினர். மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் பலர் வந்து கலந்தனர். 18ஆம் நூற்றாண்டில் அயர்லாண்டிலிருந்தும் ஜர்மனியிலிருந்தும் பலர் வந்து சேரவே, இவ்வினக் கலப்பு இன்னும் வெளிப்படையாயிற்று. உண்மையில், 17ஆம் நூற்றாண்டின் குடியேற்றம் பெரிய அளவில் நிகழவில்லை. ஆங்கிலேய நிலப்பெரும் பகுதிக் காலனிகளில் 1700-ல் 2,50,000 பேருக்கு மேல் கிடையாது. இத்தொகையில் 80,000 பேர்கள் மட்டுமே நியூ இங்கிலாந்தில் இருந்தனர். வர்ஜீனியாவில் 60,000 பேர்களும் மேரிலாண்டில் 30,000 பேர்களுமே இருந்தனர். எஞ்சியவர்கள் கரோலினாப் பகுதிகளிலும் ஹட்சன், டிலேவேர் நதிகளுக்கருகிலும உறைந்தனர். மக்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தமையால், கடற்கரை வெளிகளும், ஆறுகள் மலை உச்சிகளிலிருந்து விழும் பகுதிகளும் குடியேற்றத்திற்குப் போதுமானவைகளாகவிருத்தன. 18ஆம் நூற்றாண்டில்தான் வசிப்பதற்குரிய இடங்கள் அப்பலாச்சியன் மலைத்தொடரின் அடித்தளங்கள் அளவுக்கு விரிந்துபெருகின.

இந்தியர்களும் மேல்திசை நோக்கிய ஆரம்பகாலப் பெயர்ச்சியும்

அமெரிக்க வரலாற்றில் இந்தியர்களுடைய பங்கைக் குறைத்து மதிப்பிடுவது எளிதாகும். ஏனெனில், இன்று ஐக்கிய அமெரிக்காவில் எண்ணிக்கையையும் அரசியலதிகாரப் பிடிப்பையும் பொறுத்தவரையில், எந்த இந்தியனுக்கும் செல்வாக்கோ, முக்கியத்துவமோ கிடையாது என்றே சொல்லலாம்.[4] ஆனால், ஒருவகையில் ஐரோப்பியனுக்கு இந்தியனே குடியேற்றத்தில் வழிகாட்டினன் என்று ஒத்துக்கொள்ளவேண்டும். அடிநாட்களில்

4. F. E. Leupp, The Indian and His Problem (1910), p. 350, 1492-ல் ஐக்கிய அமெரிக்கா என்னும் கண்டப் பகுதியில் இந்தியர்களுடைய எண்ணிக்கை 8 லட்சம் முதல் 9 லட்சமே யாகும். ஜேம்ஸ்மூனி (James Mooney) என்னும் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் அறிஞர் புதிய உலகக் கலைக்களஞ்சியத்தில் (New International Encyclopedia) "இந்தியர்கள்" என்னும் கட்டுரையில் பின்வருமாறு எழுதுகிறார்: 'மெக்ஸிகோவிற்கு வடக்கில் உள்ள கண்டத்தில் 11,15,000 இந்தியர்கள் இருந்தனர். 1950-ல் ஐக்கிய அமெரிக்காவில் இந்தியர்கள் எண்ணிக்கை 4,00,000 பேர்களே'.

இந்தியர்கள் ஏற்படுத்திய சுவடுகளையே வெள்ளைக்காரர்கள் பின்பற்றிப் பாதைகளையும் தற்காலத்து இருப்புப் பாதைகளையும் போட்டனர் என்றுல் மிகையாகாது. வேளாண்மைக்கென முதன்முதலில் இந்தியர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் விவசாய முறைகளையுமே, முதலில் புதிதாகக் குடியேறிய வெள்ளைக்காரர்கள் பின்பற்றினர். தோல் வியாபாரிக்குகந்த சூழ்நிலையை உருவாக்கிய இந்தியர்களே வெள்ளையர்களின் முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாயினர். வளங் கொழிக்கும் மேல் திசை நிலங்களைப் பற்றிய சுவைமிக்க கதைகளைத் தோல் வியாபாரிகள் பரப்பவே, நிலப்பசி மிக்க வெள்ளையர்கள் மேல்திசை நோக்கி விரைந்தனர்.

முன்னூறு ஆண்டுகளாக எல்லைப் புறங்களில் தொல்லைகள் மிகுதியாக இருந்தன. ஒவ்வோர் எல்லையிலும் இந்தியர்களுடைய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. நிலத்தினை விலை கொடுத்து வாங்கியோ, போரிட்டுத் துரத்தியோ செவ்விந்தியர்களையும் சமாளிக்கவேண்டியிருந்தது. மேற்கே முன்னேறும் வெள்ளையர்களைத் தடுத்து நிறுத்தும் வகையில், இராணுவ முக்கியத்துவம் நிறைந்த கணவாய்களையும் மலை இடுக்குகளையும் இந்தியர்கள் கண்காணித்து வந்தனர். வெள்ளைக்காரர்களுடைய வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் இந்தியத் தடைகளால் ஏற்பட்ட விளைவுகளை நோக்கவேண்டும். எல்லைப்புற வாழ்க்கை, இந்தியர்களால் ஏற்படும் தொல்லைகளைச் சமாளிக்கும் அளவிற்குத் துணிவும் தன்னம்பிக்கையும் நிறைந்தனவாயும் அமைந்தது. இந்தியர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எல்லைப்புற வீரர்களைச் சார்ந்ததாகும். ஆகவே, இவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவது மக்கள் எண்ணிக்கை பெருகியுள்ள கிழக்குப் பகுதிகளைச் சார்ந்ததாகும். இச் சூழ்நிலையால்தான் தேசிய உணர்ச்சி உருவாகியது. இந்திய அபாயங்களிலிருந்து தப்பி வாழ வேண்டிய கட்டாயத்தால் ஒரு சிறந்த சமூக வாழ்க்கையும், சிதறிப் போகாமல் கூடிவாழும் வகையில் குடியேற்றங்களும் வெள்ளையர்களுக்கு அமைந்தன.

17ஆம் நூற்றுண்டின் இறுதியில் பல பகுதிகளிலிருந்து இந்தியர்கள் விரட்டப்பட்டனர். விரட்டப்பட்ட இந்தியர்கள் பீட்மன்ட் (Piedmont) பகுதியில் சென்று தங்கினர்[5]. போரிட்டுத் தொல்லைகள் பல அனுபவித்த பின்னரே வெள்ளையர்கள் ஒரு

5. 'பீட்மன்ட்' என்னும் சொல், மலையடிவாரத்தையே குறிக்கும் எனினும், அமெரிக்க நிலஉருவ நூற்படி, கீழ்க்கடற்கரைப் பகுதிக்கும் அப்பலாச்சியன் மலைத் தொடரின் உயர்நிலப் பகுதிக்கும் இடைப்பட்ட அட்லான்டிக் சமுத்திரக் கரை வெளியையே குறிக்கும் என்க.

பகுதியில் கால் ஊன்ற முடிந்தது. பென்காலனிகளில் இந்தியர்கள் நன்கு நடத்தப்பட்டமையால், வெள்ளையர்களுக்கு அவர்களால் தொல்லை ஏதும் ஏற்படவில்லை. ஆனால், செவ்விந்தியர்களுடன் மோதல் அடிக்கடி ஏற்பட்டது. 17ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற சண்டைகளிலேயே மிகவும் கொடுமையான ஒன்று 1675-ல் பீக்கட்டுகளுக்கும் (Pequots) நியூ இங்கிலாந்தில் வாழ்ந்தோருக்கும் இடையில் ஏற்பட்டதாகும். வரலாற்றிலேயே இரத்தக் கறைபடிந்த இந்தியப் போர்களில் இதுவும் ஒன்றாகும். நியூ இங்கிலாந்தில் உள்ள இந்தியர்களுடைய வலிமையை ஃபிலிப் அரசர் யுத்தம் (King Philip's War) உடைத்தது. வடக்கே விரட்டப்பட்ட அவர்களுடைய சந்ததியினர் பிற்காலத்தில் பிரெஞ்சுக்காரர்களைப் பயன்படுத்திக்கொண்டு எல்லைப்புறக் குடியேற்றங்களைத் தாக்க முனைந்தனர். இந்திய அபாயத்தின் விளைவாகக் குடியேறிய மக்களிடையே தேசீய உணர்வும் ஒற்றுமையும் ஏற்பட்டன. 1643-ல் கூடிய நியூ இங்கிலாந்து கான்ஃபெடரேஷனில் (New England Confederation) இராணுவப் பாதுகாப்பினை முன்னிறுத்தி பிளைமவுத், மெசாசுசெட்ஸ், கனெக்டிகட், நியூஹேவன் முதலிய மாநிலங்கள் ஒன்றுசேர்ந்தன. 1754-ல் இந்தியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன், ஒன்றுபட்ட நடவடிக்கை எடுக்கக் காலனிகள் ஒன்றுசேர வேண்டும் என்று அல்பனி காங்கிரஸ் முயற்சி எடுத்தது. நியூ இங்கிலாந்து கான்ஃபெடரேஷன் புகழ்பெற்ற ஆல்பனி காங்கிரசின் முன்னோடியாகும்.

பீட்மன்டினுள் நுழைவு

கடற்கரையோரக் குடியேற்றங்கள் வேரூன்றிய பின்னர், மலையினின்று நீர் விழுகின்ற பகுதிக்கும், அலிகெனிஸ் பகுதிக்கும் இடையிலுள்ள நிலங்களை அடையும் நோக்குடன் காலனிவாசிகள் பீட்மன்டினுள் ஊடுருவிச் சென்றனர். 1700ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சு இந்தியப் போர்கள் முடிவுற்ற ஆண்டாகிய 1763 வரையில் அவர்கள் இத்தகைய குடியேற்றத்திலேயே ஈடுபட்டிருந்தனர். நியூ இங்கிலாந்தில் குறிப்பிட்ட சிலருக்குப் பழைய முறையில் நகர அமைப்புக் கொடை முதலில் வழங்கப்பட்டது. பின்னர், இம்முறைக்குப் பதிலாக வேறொரு புதிய முறை நடைமுறைக்கு வந்தது. இப் புதிய முறைப்படி குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னரே நகரங்களை ஏற்படுத்தி அவற்றை நிலவுக வணிகருக்கு ஏலத்திற்குவிடும் திட்டம் அமலுக்கு வந்தது. ஆகவே, குடியேற்றம் சற்றுத் துரிதப்படுத்தப் பெற்றது. இவ்வாண்டுகளில் ஹவுசாடோனிக் (Housatonic) பகுதிக்கும் கனெக்டிகட்டிற்கும்

இடையிலுள்ள பகுதிகளில் குடியேற்றம் ஏற்பட்டது. 1737-ல் கனெக்டிகட் தேவையற்ற நிலங்களை நீக்கிவிட்டது. நியூஹாம்ஷைரில் குடியேற்றம் மெரிமாக் (Merrimac), கனெக்டிகட் வரையிலும் சென்றது. வெர்மன்ட் (Vermont) அமைந்திருந்த கனெக்டிகட்டின் மேற்பகுதியில் 121 நகரங்களை கவர்னர் வென்ட்வர்த் கொடையாக வழங்கினர். இக்காலத்தில் நியூ இங்கிலாந்தின் முன்னேற்றம் வடக்குத் திசை நோக்கி அமைந்திருந்தபோதிலும், மேற்குத் திசை நோக்கி முன்னேறுவதன் முக்கியமான அம்சங்களனைத்தையும் அது பெற்றிருந்தது.

வட அயர்லாண்டிலிருந்து வந்துள்ள 'ஸ்காட்ச்-ஐரிஷ்'[6] என்னும் இனத்தினருக்கு எல்லைப்புற முனனேற்றத்தில் முக்கியப் பங்குண்டு. இவ்வினத்தினர் போரிடும் இந்திய வீரர்களுடைய தொல்லைகளையும், முதல் முயற்சியாளர்களுடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய இன்னல்களையும் தாங்கும் ஆற்றல் படைத்தவர்களாவர். அல்ஸ்டரிலிருந்து ஐரிஷ் கம்பளியை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று தடைப்படுத்திய 1699ஆம் ஆண்டுச் சட்டமும், ஆங்கிலிகன் சர்ச்சுக்கு (Anglican Church) டைத்ஸ் (tithes) என்ற வரி செலுத்தவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டமையும், முதலில் குடியேறியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட குத்தகை 1714-லிலிருந்து 1718-க்குள் முடிவுற்றமையுமே, 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்காட்ச்-ஐரிஷ் மக்கள் அமெரிக்கா சென்று குடியேறியமைக்குக் காரணங்களாகும். நியூ இங்கிலாந்துக்கு வந்தவர்களின் எண்ணிக்கை கடிதில் பெருகவே, ஆட்சியாளர் புதிதாக வந்தவர்களை எல்லைப் புறங்களுக்கு அனுப்பிவைத்தனர். அவர்கள் ஊர்ஸ்டரில் (Worcester) குடியேறினர்கள். கனெக்டிகட் பள்ளத்தாக்கிற்குச் சென்று, அங்கிருந்து நதியின் வடபுறமாகவே நடந்து, வெர்மன்டிலுள்ள வின்ட்சர் (Windsor), ஆரஞ்சு (Orange), கலிடோனியா (Caledonia) முதலிய கவுன்டிகளில் (Counties) தங்கினர்.

மேற்குப் புறத்தில் காட்ஸ்கில்களினால் (Catskills) சுற்றி வளைக்கப்பட்டமையாலும், உள்ளே மொகாக் கணவாய், இரோகியுஸ்ஸினால் (Iroquois) தடைப்பட்டமையாலும் நியூயார்க் மேலும் விரிந்து வளரக்கூடிய வாய்ப்பினை இழந்துவிட்டது. நியூயார்க்கில் வளமான நிலமிருந்தபோதிலும், இரு நதிகள் ஓரமாகச் செல்லும்

[6] ஐரிஷ் அல்லாத மக்கள் இங்கிலாந்திலிருந்தும் ஸ்காட்லாண்டிலிருந்தும் வந்து வட அயர்லாண்டின் அல்ஸ்டரிலும், வேறு பல பகுதிகளிலும் குடியேறினர். ஸ்காட்லாண்டிலிருந்து வந்த பெரும்பாலானவர்கள் கீழ் நில ஸ்காட்ஸ்களாவர். இவர்கள் ஸ்காட்ஸை விட ஆங்கிலேயர்களுடைய குருதியை அதிகமாக உடையவர்கள்.

குறுகலான நிலத்தில் வேளாண்மை குறைந்த அளவிலேயே நடைபெற்றது. இதற்குக் காரணம், டச்சுக்காரர்களின் பெரும் நிலச்சுவான் கொடை முறையை ஆங்கில அரசும் பின்பற்றியதே யாகும். வளம் கொழிக்கும் இலட்சக்கணக்கான நிலங்களை உடைய ஒரு சிறு குழுவினர், தங்கள் நிலங்களில் குத்தகை விவசாயிகளையே குடியேற்ற முற்பட்டனர். இதன் விளைவாக, இடப்பெயர்ச்சியின் வேகம் வேறு பக்கமாகத் திரும்பியதில் வியப்பில்லை. ஜர்மனியிலிருந்தும் ஸ்விட்சர்லாந்திலிருந்தும் வந்த முதல் மக்கள் பகுதியினர் நியூயார்க்கை அடைந்தனர். இவர்கள் 1683-ல் ஆரம்பித்து 18ஆம் நூற்றாண்டின் முதல் பகுதி வரையில் நியூயார்க்கில் குடியேறுவதில் முனைந்தனர். ரைன் பள்ளத்தாக்கின் மேற்பகுதியிலிருந்தும் ஸ்விட்சர்லாண்டி லிருந்தும் வந்த மக்கள் கூட்டமே நியூயார்க்கில் குடியேறியது. ஐரோப்பாக் கண்டத்தில் நடைபெற்ற போர்களின் காரணமாக பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட சீர்குலைவும், அரசியல் அதிருப்தியும், மதக் கொடுமையும் இத்தகைய குடியேற்றத் திற்குக் காரணங்களாகும். இவர்கள் நியூயார்க்கில் மொகாக் பள்ளத்தாக்கில், ஃபோர்ட் ஹண்டருக்கும் (Fort Hunter) பாலடைன் பாலத்திற்கும் (Palatine Bridge) இடையிலுள்ள பகுதி களில் குடியேறினர். நியூ இங்கிலாந்திலிருந்து கிளம்பிய ஸ்காட்ச்—ஐரிஷ் மக்கள் மொகாக் பகுதியில் டச்சுக்காரர்களுடன் கலந்த பின்னர் 1738-ல் செர்ரி பள்ளத்தாக்கை (Cherry Valley) வந்தடைந்தனர்.

பெருந்தன்மையான பென் (Penn) ஆட்சியின்கீழ், மதக் கொடுமைக்குப் பலியானவர்கள் பென்சில்வேனியாவில் நிரந்தர மாகக் குடியேறினர். 1700ஆம் ஆண்டிலிருந்து புரட்சிக் காலம் வரையில், பாலடினேட் (Palatinate) பகுதியிலிருந்தும், ஏனைய சுற்றுவட்டாரங்களிலிருந்தும் 1,00,000 ஜர்மானியர்கள் அங்குக் குடியேறினர்கள். தற்பொழுதுள்ள 'பென்சில்வேனியா டச்சுக்காரர்களின்' முன்னோர்கள்தாம் இந்த ஜர்மனியர்கள் ஆவர். மேலும், 1,00,000 ஜர்மானியர்கள் மொகாக்கிலிருந்து ஜார்ஜியாவரையில் உள்ள மற்றக் காலனிகளின் எல்லைப்புறங்களில் வந்து வாழ்க்கையைத் தொடங்கினர். 1730-லிருந்து 1770 வரையில் 6 லட்சம் ஸ்காட்ச்-ஐரிஷ் மக்கள் பென்சில்வேனியா எல்லைப் புறத்தை மையமாகக் கொண்டு வாழத் தலைப்பட்டனர். புரட்சிக் காலத்தில் பென்சில்வேனியாவின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் ரைன்லாந்திலிருந்து வந்த ஜர்மா னியர்கள் ஆவர்; மற்றொரு மூன்றில் ஒரு பகுதியினர் வட அயர் லாண்டிலிருந்து வந்தவர்கள் ஆவர். 1719-ல் பென்சில்

வேனியாவில் நிலத்தின் விலை 100 ஏக்கருக்கு 10 பவுன்களாகும்; மூன்வரியும் இரண்டு ஷில்லிங்குகளே. 1732-ல் நிலத்தின் விலை 15 பவுனுகவும், மூன்வரி ஏக்கர் ஒன்றுக்கு ½ பென்னியாகவும் உயர்ந்தன. குடியேற்றம் பெருகப் பெருக, நில நிருவாகம் குழப்ப மடைந்தது. எனவே, நிலத்தின் பெரும் பகுதியின்மீது உரிமை இல்லாதவர்களெல்லாம் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். 'திமிருடனும் ஒழுங்கற்ற முறையிலும்' ஜரிஷ்காரர்கள் குடியேறி யுள்ளனர் என்றும், 'தாங்களே உழைத்து தங்கள் உணவை உற்பத்தி செய்து கொள்ளவேண்டும் என்றும் விழைகின்ற அநேக கிறித்துவர்கள் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது, நிலம் பயிரிடப்படாமல் வீணுகக் கிடப்பது கடவுளின் சட்டதிட்டங் களுக்கும், இயற்கையின் சட்ட திட்டங்களுக்கும் புறம்பான தாகும்' என்றும் பென் குடும்பத்தாரின் ஏஜெண்ட் ஜேம்ஸ் லோகன் (James Logan) முறையிட்டுள்ளார்.[7] ஜர்மானியர்கள் கிழக்குபென்சில் வேனியாவில் பரவினர். பின்னுல் வந்த ஸ்காட்ச்-ஜரிஷ் கூட்டத்தினர் கம்பர்லாண்டு, ஜூனியாடா (Juniata), சஸ்கியூஹன்னு (Susquehanna) பள்ளத்தாக்குகளில் எல்லைப்புறத் தளங்களை அமைத்தனர்.

மேரிலாண்டிலிருந்து ஜார்ஜியா வரையில் பீட்மன்டின் குடியேற்றக் கதை ஒரே வகையானதே. மக்கள் எண்ணிக்கை பெருகப் பெருக, வளம் கொழிக்கும் எல்லா நிலங்களும் தீர்ந்து விட்டன. மேலும் மேலும் கிடைத்த நிலங்கள் பயன்பட்டன. ஏழைவர்க்கத்தைச் சார்ந்தவர்கள் தலை உரிமைப்படி நில உரிமை கோரி பீட்மன்டை வந்தடைந்தார்கள். பெரிய எஸ்டேட்டு களைக் கவரும் நோக்கத்துடன் பணம் படைத்த நில ஊக வணிகர்கள் பீட்மன்டில் குடியேற்றுவதற்கு மக்களைக் கொண்டு வந்து நிரப்பினர். வரி செலுத்துவதிலிருந்து விலக்குரிமையும் வழங்கி, மலிவாகவும் இனமாகவும் நிலத்தினையும் வழங்கிப் புதிதாகக் குடியேறுபவர்களை எல்லைப் புறத்திற்கு அனுப்பி வாழ வைக்கும் முயற்சிகளை ஒவ்வொரு காலனியும் மேற்கொண்டது. எல்லைப்புறப் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டே இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; இதே காரணத்திற்காகப் பெரிய எஸ்டேட்டுகள் உருவாவதைத் தடுத்தும் சமுதாய வாழ்க்கை யைத் தூண்டியும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. இம்முயற்சிகள் ஓரளவுக்குத்தான் வெற்றியடைந்தன. ஏனெனில், பீட்மன்டில் சிறிய விவசாயிகளுடன் பெரிய தோட்ட முதலாளிகளும் வாழ்ந்த னர். 1730-ல் கடற்கரையில் குடியேறியவர்கள் வர்ஜீனிய

7. Quoted by H. J. Ford, The Scotch-Irish in America, pp. 271-272; also by C. A. Hanna, the Scotch-Irish, p. 63.

பீட்மன்டினுள் 30 முதல் 50 மைல் தூரத்திற்கு நுழைந்துவிட்டனர். கரோலினுப் பகுதிகளிலும் ஜார்ஜியாவிலும் அவர்கள் மலையடிவாரத்தையே எட்டிப்பார்க்கவில்லை.

1730ஆம் ஆண்டிற்குப் பின்னர் வடகிழக்குப் பகுதியிலிருந்து வந்த ஜர்மானியர்களும் ஸ்காட்ச்-ஐரிஷ் மக்களும் மேற்குத்திசை நோக்கிச் செல்லும் இயக்கத்தில் ஈடுபட்டனர். இவ்வியக்கத்திற்குத் தடையாக வர்ஜீனியாவிலுள்ள புளூரிஜ் மலைகளும் (Blue Ridge Mountains), கரோலினுப் பகுதிகளிலுள்ள பைன் மரங்களும் அமைந்தன. இத்தடைகளுக்கப்பால், அப்பலாச்சியன் மலைப் பகுதிகளிலுள்ள பெரும் பள்ளத்தாக்குகளில் வளமான நிலங்கள் உள்ளன. பென்சில்வேனியாவிலுள்ள அருமையான நிலங்களைப் பயன்படுத்தினர்; மேரிலாண்டில் குறைந்த விலைக்கு நிலம் கிடைத்தது; வர்ஜீனியாவில் இலவசமாகவே கிடைத்தது; இவையெல்லாம் மேற்கே முன்னேறத் தூண்டுதல்களாக அமைந்தன. இம்முறையில், முதல் முயற்சியாளர்கள் கம்பர்லாண்டு, ஹேகர்ஸ்டவுன் (Hagerstown), ஷெனன்டோ (Shenandoah) பள்ளத்தாக்குகளில் தவழ்ந்து, பெரும் மலைப்பள்ளங்களில் நுழைந்து, இறுதியில் கணவாய்களின் வழியே கிழக்கு நோக்கி வட கரோலினுவையும் மேற்குத் திசையையும் அடைந்து, சில ஆண்டுகளுக்குப் பின்னர் கென்டகி (Kentucky), டென்னசி (Tennessee) பகுதிகளைச் சேர்ந்தனர். 1760ஆம் ஆண்டு ஜார்ஜியாவின் மேட்டு நிலங்களை வந்தடைந்தனர். மேற்குறிப்பிட்ட இவ்விரு குழுவினரும் பீட்மன்டில் இரண்டறக் கலந்தனர். இவர்களின் முன்னேடிகளாக முரட்டுத்தனமும் துணிவு மிக்க ஸ்காட்ச்-ஐரிஷ் மக்கள் திகழ்ந்தனர்.

கடலலைப் பகுதிகளில் அமைந்த சமுதாயத்திற்குப் புறம்பான வகையில் உள்நாட்டுப் பகுதிகளில் சமுதாயம் அமைந்து வளர்ந்தது. பீட்மன்டில் வாழ்ந்த மக்கள் சிறு விவசாயிகளும், கண்ணி வைத்து விலங்கினங்களைப் பிடிப்பவர்களுமேயாவர். இவர்கள் செல்வம் படைத்தவர்களல்லர். ஆனால், நெஞ்சுறுதியும் துடிதுடிப்பும் உடையவர்கள். இவர்கள் ஜனநாயக உணர்வில் திளைத்தவர்களாகவும், தனித்தன்மையைப் பேணிக் காப்பவர்களாகவும் இருந்ததால், கடற்கரைப் பகுதியைச் சார்ந்த சிறுபான்மையினரிடத்தில் தங்கள் அரசியல் சுதந்திரத்தையும் பொருளாதார நலன்களையும் அடகுவைக்கத் தயாராக இல்லை. மேற்கு நோக்கி யாத்திரை துவங்கிய காலத்திலிருந்து உள்நாட்டில் வாழ்ந்த இவர்களுக்கும் கடற்கரையில் வாழ்வோ

ருக்கும் இடையில் பகைமை வளர்ந்துவந்தது. பீட்மன்டைச் சார்ந்த சிறிய விவசாயிகளுக்கும் வர்ஜீனியத் தோட்ட முதலாளிகளுக்குமிடையில் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டன. பென்சில்வேனியாவைச் சார்ந்த காட்டுவாசிகளுக்கும், கிழக்கே வாழ்ந்த பணம்படைத்த குவேக்கர்களுக்கு (Quakers) மிடையே வேற்றுமைகள் நிலவின. இவ்வாறே, நியூ இங்கிலாந்தைச் சார்ந்த எல்லைப்புற மக்களுக்கும் கடற்கரை நகர்வாழ் உயர்குடியினருக்கும் இடையில் புகைச்சல் ஏற்பட்டது. மேலும், உள்நாட்டுக் கடனாளி வர்க்கத்தினருக்கும், கடற்கரையைச் சார்ந்த சொத்து படைத்த வர்க்கத்தினருக்கும் இடையில் போட்டிகள் தலை தூக்கின. எல்லைப்புற மக்கள், பிரதிநிதித்துவம் கொண்ட ஜனநாயக அரசே தழைக்கவேண்டும் என்று முழக்கமிட்டனர். ஊழல் நிறைந்த அரசாங்கமும் சட்டமும் உள்நாட்டினை மிகவும் பாதித்ததால் அதிருப்தி ஏற்பட்டது. இத்தகைய காரணங்களால் இவ்விரு பிரதேசங்களுக்கிடையில் பகைமையும், வெறுப்பும், போட்டியும், புகைச்சலும் வேரூன்றின. எனவே, இவ்விரு பிரதேசங்களுக்குமிடையில் ஒழுக்கத்தையும், பண்பாட்டையும், அறிவையும் பொறுத்தவரையில், மாறுபட்ட இலட்சியங்களே உருவாயின.

தலத்திலில்லா நிலக்கிழார் முறை (absentee landlordism), தொடக்க நிலையில் மேற்குப் பிரதேசத்தின் தீவினையாகும். மேற்கே நிலங்களின்மூலம் பொருள் சேர்க்கலாம் என்ற பேராசையினால் உந்தப்பட்டுப் பலர் பொருள்வசதியின் காரணமாகவும் நில ஊகவாணிபத்தில் ஈடுபட்டனர். 1678ஆம் நூற்றாண்டின் டீர்ஃபீல்டு மனுவில் (Deerfield petition) கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது:

'எட்டு அல்லது ஒன்பது நில உடைமையாளர்கள் வளமான நிலங்களில் பாதிக்குமேல் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துள்ளனர் என்பதைக் காண உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். இந்நிலங்களில் நாங்கள் குடியேற முடியாது. இச் சூழ்நிலையை மாற்றி அமைக்காவிடின் எதிர்காலம் இருண்டுவிடும்.'[8] குடியேறியவர்கள் காடு கழனிந்து, நிலம் திருத்தி, இந்தியப் போர்களின் கடுமையைத் தாங்கி வாழ்ந்த வேளையில், கடலோரப் பகுதிகளில் நில உடைமையாளர்கள் நிறைய இலாபம் ஈட்டினர். எல்லைப்புற மக்கள் கடனாளிகளாக இருந்தமையாலும், வேண்டிய அளவுக்குப் பணம் காசு உருவத்தில் கிடைக்காமையாலும் அவர்கள் காகிதப்

[8] ஜார்ஜ் ஷெல்டன், (George Sheldon), History of Deerfield Massachusetts (2 vols., 1896), I, 189-190.

பணத்தையே நாடினர்; பண்டங்களை வரிகளுக்குப் பதிலாகச் செலுத்துவதையே கோரினர். பழைய சமூகத்தினர் அவர்களுடைய கோரிக்கைகளை எதிர்த்து நிராகரித்தனர். காலனியின் பாதுகாப்பிற்குத் தானே பெரிதும் பயன்படுவதால், எல்லைப்புற வாசி வரிச்சுமையிலிருந்து விலக்குரிமை வேண்டும் என்று கோரினான். சொத்துடைமைத் தகுதியின்மையைக் காட்டியும், பிரதிநிதித்துவ முறையைக் கட்டுப்படுத்தியும் எல்லைப்புற வாசிகளின் அரசியல் உரிமைகளையும் சலுகைகளையும் புறக்கணித்தனர்.

புரட்சிக்காலம் வரையில் கடற்கரையோர நகர்வாழ் உயர் குடியினர் அரசாங்கத்தைத் தங்கள் கைகளிலேயே வைத்திருந்தனர். செஸ்டர், பக்ஸ், ஃபிலடெல்பியா ஆகிய கவுன்டிகளிலிருந்து பென்சில்வேனியா சட்டசபைக்கு 26 பிரதிநிதிகள் அனுப்பப்பட்டனர். ஆனால், ஐந்து எல்லைப்புற கவுன்டிகளிலிருந்து 10 பேர்கள் மட்டுமே அனுப்பப்பட்டனர். நீர்வீழ்ச்சிப் பகுதிகளிலிருந்த 19,000 பேர்கள், வேறு பகுதிகளிலுள்ள 30,000 பேர்களுக்குச் சட்டமியற்றும் அதிகாரத்தினையும், முக்கிய நிருவாக அதிகாரிகளையும், நீதிபதிகளையும் நியமிக்கும் உரிமையையும் பெற்றிருந்தனர் என்று ஜெஃப்பர்சன் (Jefferson) குற்றஞ் சாட்டினர். கிழக்கின் ஆதிக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்கத்துடன் ஃபிராங்க்லின், வெர்மன்ட் என்ற புதிய இராச்சியங்களை ஏற்படுத்தும் வேலைகளில் உள்நாட்டினர் ஈடுபட்டனர். அரசாங்க நிருவாகத்தின்மீது அதிருப்தி ஏற்பட்டது. அதிகாரிகளிடம் ஊழல்கள் மலிந்துகிடந்தன. நீதி ஏழைகளுக்குக் கிட்டாததாயிற்று. நீதி நிருவாக இயந்திரம் மெல்ல மெல்ல ஊர்ந்தது. ஏனெனில், கவுன்டிகள் அளவில் பெரியனவாய் இருந்தன. நீதிமன்றங்களுக்குச் செல்லவேண்டுமெனில், நீண்ட தூரம் பயணம் செய்யவேண்டியதாயிருந்தது. போர்க்காலத்தில் உதவி கிடைக்கும் என்று உறுதியாக நினைக்க முடிவதில்லை. அறிவுவழி நோக்கும் மாறுபட்டே இருந்தது. மத விஷயங்களில் எல்லைப்புறத்து மனிதன் மாறுபட்ட கருத்துடையோனாகவே இருந்தான். அவன் வாழ்ந்த சமுதாயச் சூழ்நிலையும் பொருளாதாரச் சூழ்நிலையும் அவனிடத்தில் ஜனநாயக உணர்வையே ஊட்டிற்று. அவன் அடிமை முறையை எதிர்த்தான். இத்தகைய கருத்துவேறுபாடுகள்தாம் இவ்விரு கூட்டத்தாரிடையேயும் வெறுப்பை வளர்த்தன.

இவ்விரு கூட்டத்தாரிடையே நிலவிவந்த வெறுப்புணர்ச்சி துப்பாக்கி எடுத்துப் போரிட்டுக்கொள்ளும் அளவுக்குச் சென்று

விட்டது. புரட்சிக்கு முன்னர், இரண்டு தடவைகள் அவர்கள் சண்டையில் ஈடுபட்டனர். வர்ஜீனியக் கவர்னர் பர்க்கிலி இந்தியர் களை அடக்கமுடியாமற்போனவுடன், நதேனியல் பேக்கன் (Nathaniel Bacon) தலைமையில் எல்லைப்புற மக்கள் ஒன்றுதிரண்டு இந்தியர்களை எதிர்க்கும் முயற்சியில் இறங்கினர். உடனே பேக்கனும் அவருடைய தொண்டர்களும் கிளர்ச்சிக்காரர்கள் என்று குற்றஞ்சாட்டி, கவர்னர் பர்க்கிலி (1676) அவர்களைச் சிறையிலிட முயன்றார். பேக்கனுக்கு ஆதரவாகக் காட்டுவாசி களும், சிறுதோட்டச் சொந்தக்காரர்களும் ஒன்றுதிரண்டு பர்க்கிலி யைப் பணியவைத்தனர். அவர்களுக்கு எல்லாவிதச் சலுகை களையும் வழங்குமாறு பர்க்கிலி கட்டாயப்படுத்தப்பட்டார். எல்லைப்புறவாசிகள் சட்டசபையைத் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்து, அநேக ஜனநாயக சீர்திருத்தச் சட்டங்களை இயற்றினர். வெற்றியின் உச்சகட்டத்தில் பேக்கன் மரண மடைந்தார்; கிளர்ச்சியும் அடங்கிற்று. உடனே, கடலோர மேட்டுக்குடியினரின் ஆதரவுடன் பர்க்கிலி ஜனநாயக சீர் திருத்தச் சட்டங்களனைத்தையும் அகற்றிவிட்டு, எல்லைப்புற மக்கள்மீது கொடுமையாகப் பழிதீர்த்துக்கொண்டார். ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் (1769) தென்-கரோலினாவில் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ஒழுங்காளர்கள் (Regulators) என்ற பெயரில் காட்டுவாசிகள் சீர்திருத்தங்களைப் புகுத்த விரும்பி, சட்டத்தையே தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டனர். சலூடாவில் (Saluda) அரசாங்கக் கட்சியின் படையினரைச் சந் தித்துப் போரிட்டனர் என்றாலும், அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டமையால் போர் நின்றது. இரண்டு ஆண்டு களுக்குப் பின்னர், வட-கரோலினாவின் ஒழுங்காளர்களும் கவர்னர் டிரையானுடைய (Governor Tryon) படையினரும் அலமான்ஸ் (Alamance) போர்க்களத்தில் சந்தித்தனர்; எல்லைப் புற மக்கள் தோற்றனர். அரசாங்கம் பழைமையாளர்கள் கைக்கு வந்தது. பின்னர் 1776-ல் வரையப்பட்ட அரசியல் சட்டம் தான் உள்நாட்டினரின் உரிமைகளை ஏற்றுக்கொண்டது. அலமான்ஸ் போர்க்களத்தில் ஏற்பட்ட தோல்வியே முதல் முயற்சியாளர்கள் அலிகெனிஸின் குறுக்கே செல்வதற்குக் காரண மாயிற்று.

ஃபிரெஞ்சுத் தடை

1604-லிலிருந்து புத்துலகத்தில் நிரந்தரக் குடியேற்றங்களை ஃபிரெஞ்சுக்காரர்கள் பெற்றிருந்தனர். 17ஆம் நூற்றாண்டில் செயின்டு லாரன்ஸ், பெரும் ஏரிகள், மிஸிஸிப்பி பகுதிகள்

ஆகியவை தங்களுக்கே சொந்தம் என ஃபிரெஞ்சுக்காரர்கள் உரிமை பாராட்டினர். ஹட்சன் விரிகுடா யாருக்குச் சொந்தம் என்பதில் பிரிட்டிஷ் தோல்வியாபாரிகளும் ஃபிரெஞ்சுக்காரர்களும் சண்டையிட்டுக்கொண்டனர். இவ்விருநாடுகளின் தோல் வியாபாரிகளுக்கிடையில் மொகாக் பள்ளத்தாக்கிலும், ஓகியோ, மிஸிஸிப்பி பகுதிகளிலும் போட்டிகள் ஏற்பட்டன. அமெரிக்காவின் நிலப்பரப்பு மிகப் பெரிதாகையால், முதலில் நிலம் குறித்துப் போட்டி எழவில்லை. பின்னர் 17ஆம் நூற்றாண்டில் அப் போட்டி முனைத்தது. கருவிகள் எடுத்துப் போரிடும்பொழுதெல்லாம் இந்தியர்களும் கலந்துகொண்டனர்.

1689-ல் ஃபிரான்சுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் நூறாண்டுப் போர் தொடங்கிச் சில குறுகிய இடைவேளைகளைத் தவிரத் தொடர்ந்து 1815 வரை நடைபெற்றது. மொத்தத்தில் 60 ஆண்டுகள் உண்மையான யுத்தமே நடைபெற்றது. ஏழில் ஆறு யுத்தங்கள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நடைபெற்றன. வர்த்தக ஆதிக்கமும் காலனி ஆதிக்கமுமே அடிப்படைக் காரணங்களாகும். அமெரிக்கர்களுக்குப் பொருளாதார நலன்கள் நிலத்தையும், உரோம வாணிபத்தையும் சார்ந்தவை. எனவே, ஓகியோ, மிஸிஸிப்பி, செயின்டு லாரன்ஸ் பள்ளத்தாக்குகளைக் கைப்பற்றும் நோக்கத்துடன்தான் போர் மூண்டது.

ஃபிரெஞ்சுப் போரும் இந்தியப் போரும் (1754—1763) உச்சகட்டத்தை அடைந்த வேளையில், எண்ணிக்கை குறைவாக இருந்தமையால் ஃபிரெஞ்சுக்காரர்கள் பாதிக்கப்பட்டனர். நியூ பிரான்சைச் சார்ந்த 80,000 பேர்களை எதிர்த்து 13,00,000 ஆங்கிலேயர்கள் போரிட்டனர். மேலும், ஃபிரெஞ்சுக்காரர்கள் ஒரே பகுதியில் குவியலாக இல்லாமல் பெரும் பிரதேசத்தில் சிதறிக் கிடந்தனர். இத்தகைய குறைபாடுகளுக்கு இடையில் ஃபிரெஞ்சுக்காரர்களுக்குச் சாதகமான சில சூழ்நிலைகளும் இருந்தன. அவர்களிடத்தில் அதிகாரங்கள் குவிந்து கிடக்கும் பலம் பொருந்திய மத்திய அரசாங்கம் இருந்தது; இவ்வரசு போர்க் காலத்தில் மிகவும் திறமையுடன் இயங்கியது. ஆனால், ஒன்றுக் கொன்று தொடர்பில்லாமல் இயங்கிய ஆங்கிலேயக் காலனிகள், போர்க் காலத்தில் ஒன்றுபட்டுச் செயலாற்ற இயலவில்லை. ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு இன்னொரு வசதியும் இருந்தது. எப்பிரதேசங்களைக் குறித்துப் போர் மூண்டிருந்ததோ, அப்பிரதேசத்தின் முக்கியமான பகுதி அவர்கள் கைகளில் இருந்தது. எனினும், ஆங்கிலேயக் காலனிகளின் பொருளாதார பலம், கிரேட் பிரிட்டனின் கப்பற்படையின் ஆற்றல், மூத்த பிட் (Elder Pitt)

அவர்களுடைய பிடிவாதமான ஆற்றல் படைத்த தலைமை, அம்ஹெர்ஸ்டு (Amherst), உல்ஃப் (Wolfe) எனும் பிரிட்டிஷ் தளபதிகளின் வீரம் இவையனைத்தும் ஆங்கிலேயருக்கு வெற்றியைத் தேடித்தந்தன. ஃபிரான்சின் காலனிப் பேரரசு இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்டது. 1763-ல் பாரிஸ் உடன்படிக்கையின்படி கனடா, மிஸிஸிப்பியின் கிழக்குப் பக்கமுள்ள நிலங்கள் ஆகியவற்றை ஃபிரான்சு இங்கிலாந்திற்குக் கொடுத்து விட்டது. நியூஃபவுண்டுலாந்து கரைக்குத் தொலைவிலுள்ள செயின்டு பியரி (St. Pierre), மிக்குலன் (Miquelon) எனும் தீவுகளின் மீன் உலர்த்துவதற்கென்று ஃபிரெஞ்சுக்காரர்கள் தாங்களே வைத்துக்கொண்டனர். மார்டினிக் (Martinique), காடிலூப் (Guadeloupe), செயின்டு லூசியா (St. Lucia) ஆகிய சர்க்கரைத் தீவுகளையும் தாங்களே வைத்துக்கொண்டனர். பெரிய அமெரிக்க வல்லரசை ஏற்படுத்திய ஃபிரான்சுக்கு மிஞ்சியவை இவ்வளவே. ஸ்பெயினிடமிருந்து ஃபிளோரிடாவை (Florida) இங்கிலாந்து பெற்றது. மிஸிஸிப்பியின் மேற்குப் பகுதியையும், நியூ ஆர்லியன்ஸையும் (New Orleans) ஃபிரான்சு ஸ்பெயினிடம் ஒப்படைத்தது.

ஸ்பானிஷ் எல்லைக்கோடு

ஃபிரான்ஸ் ஒழிந்தபிறகு இன்றைய ஐக்கிய அமெரிக்காவின் குடியேற்றத்தில் ஸ்பெயினுக்கும் ஒரு பங்கு உண்டு. ஸ்பானிஷ் எல்லை வடக்கு நோக்கி மெல்ல மெல்ல முன்னேறவே, இங்கிலாந்து, ஃபிரான்சு, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் ஒன்றன்பின் ஒன்றுக ஸ்பெயின் சண்டையிட நேரிட்டது. 1565-ல் இன்றைய ஐக்கிய அமெரிக்க நாட்டுப் பகுதியில் ஃபிளோரிடாவைச் சார்ந்த செயின்டு அகஸ்டைனில் ஸ்பானிஷ் காரர்கள் முதல் வெள்ளைக்காரக் குடியேற்றத்தை நிரந்தரமாக ஏற்படுத்தினர்கள். 50 மைல்களுக்கு அப்பால் வடக்கே இருந்த ஒரு ஃபிரெஞ்சுக் காலனியை ஒழித்தபின்னரே, ஸ்பானிஷ் காரர்கள் இக் குடியேற்றத்தை ஏற்படுத்தினர். கரோலினு பகுதிகளில் குடியேற ஃபிரெஞ்சுக்காரர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் தடைப்பட்டன. 1733-ல் ஆங்கிலேயர்கள் ஜார்ஜியாவில் குடியேறினர். இதன்பின்னரே, ஸ்பானிஷ்காரர்கள் ஃபிளோரிடாவில் வடதிசை நோக்கி முன்னேற முனைந்தனர். ஜார்ஜ் அரசர் போரில் மோதுதல்கள் ஏற்பட்டன. ஏ-லா—சேப்பல் சமாதான உடன்படிக்கை (Peace of Aixe-la-Chapelle) ஜார்ஜியா-ஃபிளோரிடா எல்லையில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. ஃபிரெஞ்சுப் போரும் இந்தியப் போரும் முடிவுற்றவுடன் ஏற்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின்படி ஃபிளோரிடா

பிரிட்டனின் கைக்கு மாறிற்று, 1783-ல் பிரிட்டன் ஃபிளோரிடாவை ஸ்பெயினுக்குத் திருப்பித் தந்தது.

இதற்கிடையில் மெக்சிகோவிலிருந்து ஸ்பானிஷ் எல்லை வடக்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. இதற்குக் காரணம் பொருள் நிறையக்குவிக்கலாம் என்ற ஆசையும் கிறிஸ்துவ மதத்தைப் பரப்பலாம் என்ற நம்பிக்கையும் ஸ்பானிஷ்காரர்களுக்கு ஏற்பட்டதேயாகும்; வடக்கே செல்வதில் மத பிரசாரகர்களும், போர்வீரர்களும், தோல் வியாபாரிகளுமே வழிகாட்டினர். 1598-ல் நியூ மெக்சிகோவில் ஜுவான் டீ ஓனெட் (Juan de Onate) குடியேறினர். 1609-ல் ஏற்படுத்தப்பட்ட சாந்தா ஃபீ (Santa Fe) புதுக் காலனியின் தலைநகராயிற்று. இக் காலனியில் பிரான்ஸிஸ்கன்களும் (Franciscans) ஜெசூட்டுகளும் (Jesuits), இந்தியர்களுக்கு மத அறிவு ஊட்டும் நோக்குடன் கிறிஸ்துவ மடங்களை ஏற்படுத்தினர். ஆகவே, இக் காலனியின் எல்லை விரிந்தது. இக் காலனியில் 1680-ல் 2,500-க்கு மேற்பட்ட ஸ்பானிஷ்காரர்கள் இருந்தனர். 17ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் இந்தியர்களை முழுதும் அடக்கிவிட்டனர்.

தற்காலிகக் குடியேற்றமுடைய கிழக்கு டெக்சாஸை (Eastern Texas, 1690—1693) ஸ்பானிஷ்காரர்கள் 1716-ல் வந்தடைந்து, சான் அன்டோனியோவை (San Antonio) உருவாக்கினர்கள். லூயிசியானை (Louisiana) விலிருந்து மேற்கே வர்த்தகத் தொடர்பினையும், அர்க்கன்சாஸ் (Arkansas) டெக்ஸாஸ் பகுதிகளிலுள்ள இந்தியர்களுடன் வர்த்தகத் தொடர்பினையும் ஃபிரெஞ்சுக்காரர்கள் ஏற்படுத்தியிருந்தார்கள். இத்தொடர்பினைத்துண்டித்துவிடும் நோக்கத்துடனேதான் ஸ்பானிஷ்காரர்கள் டெக்ஸாஸுக்கு வந்து குடியேறினர். ஃபிரான்சுக்கும் ஸ்பெயினுக்குமிடையில் 1719-ல் யுத்தம் ஆரம்பமாயிற்று. இந்த யுத்தம் காலனிகளிலும் பரவிற்று. பென்சகோலாவிலிருந்து (Pensacola) பிளேட் நதி (Platte River) வரையில் உள்ள எல்லை முழுதும் போர் நடைபெற்றது.

டெக்ஸாஸில் குடியேறியதால் (1720-22), இப் புது மாநிலத்தில் ஸ்பெயினுடைய பிடி இறுகியது. டிரினிடி (Trinity) யிலிருந்து மிஸிஸிப்பிவரையில் உள்ள பகுதிகளைப் பொறுத்த வரையில், ஃபிரான்சுக்கும் ஸ்பெயினுக்குமிடையில் தகராறு இருந்தது. 1700-ல் ஸ்பானிஷ் கால்நடைப் பண்ணைகள் அரிசோனாவில் (Arizona) ஏற்பட்டன. கலிஃபோர்னியாவினுள் இன்னும் ஸ்பானிஷ்காரர்கள் நுழையவில்லை. போர்டோலா (Portola) யாத்திரை, 1769-ல் ஸான் டீகோ (San Diego) ஏற்படக் காரணமாயிற்று. அடுத்த ஆண்டு மாண்டரியில்



வட அமெரிக்காவின் உரிமையாளர்களில் ஏற்பட்ட மாற்றங்கள்
1664 — 1783

(Monterey) ஒரு வியாபார நிலையம் ஏற்பட்டது. சுதந்திரப் பிரகடனம் வெளியான ஆண்டில், சான்பிரான்ஸிஸ்கோ (San Francisco) உருவாகத் தொடங்கியது. 1777-ல் சான் ஜோசும் (San Jose), 1779-ல் லாஸ் ஏஞ்ஜல்சும் (Los Angeles) ஏற்பட்டன. புரட்சி முடிவுற்ற வேளையில், ஐக்கிய அமெரிக்காவின் இன்றைய நிலப்பகுதி, இளம் அமெரிக்கக் குடியரசு, ஸ்பெயின் ஆகிய இரு நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்தது. அதே நேரத்தில் வட எல்லைக்கோட்டைப் பொறுத்தவரையில், கிரேட் பிரிட்டனும் ரஷியாவும் தகராறு செய்துகொண்டன.

ஆங்கிலேயர்களின் மேற்குப் பிரதேசத் திட்டம், 1763—1775

காலனிகளுக்கிடையில் நடைபெற்ற போர்கள் அனைத்திலும் இந்தியர்கள் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கே துணைபுரிந்தனர். இதற்குத் தகுந்த காரணமும் உண்டு. ஃபிரெஞ்சுக்காரர்களுக்குத்தோல் வியாபாரமே குறிக்கோளாக இருந்ததால், இந்தியர்கள் தாங்கள் வேட்டையாடிச் சேகரித்த தோலை ஃபிரெஞ்சுக்காரர்களிடம் எளிதாக விற்று வாழ்ந்தனர். ஆனால், ஆங்கிலேயர்கள் நிலத்தையே பெரிதாக நினைத்துக் குடியேறியதால், தோல் உற்பத்தி தடைப்பட்டுவிட்டது. 'இங்கிலாந்து அரசருக்கும், ஃபிரான்சு நாட்டு அரசருக்கும் உள்ள வேற்றுமை உங்களுக்குத் தெரியாதா?' என்ற கேள்வியை எழுப்பிவிட்டு, இரோகியூசின் டியூஸ்னே (Duquesne of the Iroquois) தானே பதிலையும் கீழ்க் கண்டவாறு தருகிறார்: 'நமது மன்னரின் கோட்டைகளைச் சென்று பார்த்தால், மதிற்சுவர்களின்மேலே இன்னும் வேட்டையாடத் தோன்றும். இதற்கு மாறுக, ஆங்கிலேயர்கள் ஓர் இடத்தைப் பிடித்தவுடனேயே வேட்டையாடுதலுக்கு அங்கு வேலை இல்லாமற் போய்விடும். அவர்கள் முன்னேறுகின்ற பாதைகளிலுள்ள காடுகளை அழித்துவிடுவர்; நிலத்தினைத் திருத்தி, இரவு நேரத்தில் தங்குவதற்குக்கூட இடமில்லாமல் செய்துவிடுவர்'.[9] இந்தியனுக்கு இவ்வேற்றுமை தெரியும். பிரெஞ்சுப் போர்களும் இந்தியப் போர்களும் முடிவுற்றபின்னர், ஃபிரெஞ்சுக்காரர்களுடைய நண்பனும் இந்தியப் போர்வீரர்களிலேயே தலை சிறந்தவனும் ஒட்டாவாக்களின் தலைவனும் ஆகிய போன்டியாக் (Pontiac), 1763-'64-ல் வடமேற்கில் பழங்குடி மக்களின் கான்ஃபெடரேஷனை நிறுவி, வர்ஜீனியா, பென்சில்வேனியா எல்லைகளையும் மலைகளின் மேற்கிலுள்ள ஆங்கிலேயக் கோட்டைகளையும் தாக்கினான்.

9. Quoted by F. J. Turner, op., cit.' p. 14.

இந்தியர்களுடைய பிரச்சினைகளைக் காலனிகள் திறமையுடன் நிருவகிக்காததால், தாயக அரசு ஒரு திட்டம் தயாரித்தது. அத் திட்டத்தின்படி, வெள்ளைக்காரர்கள் குடியேறுகின்ற நிலத்திற்கும் இந்தியர்களுடைய நிலத்திற்குமிடையில் ஒரு தெளிவான எல்லைக்கோடு வரையப்பட வேண்டும். இத் திட்டத்தை அமலாக்க 1763-ல் ஒரு பிரகடனம் வெளிவந்தது. அட்லான்டிக் சமுத்திரத்தை மேற்கிலிருந்தும் வடமேற்கிலிருந்தும் சென்று அடைகிற நதிகளின் ஆரம்பப் பகுதிகளுக்கு அப்பாலுள்ள நிலங்களில் கவர்னர்கள் தலையிடக்கூடாது. அவை இந்தியர்களிடமே இருக்கவேண்டும். மன்னரின் பெயரில், கவர்னர் அல்லது படைத்தளபதியின் முன்னிலையில், இந்தியர்களுடைய பொதுக் கூட்டத்தின்போது அந் நிலங்களை வாங்கினலன்றி, மற்ற வேளைகளில் அந்நிலங்களை இந்தியர்கள்மட்டுமே பயன்படுத்துவர். நடைமுறையில் உள்ள சூழ்நிலையோடு ஒத்திட்டுப் பார்த்தால், இத்தகைய எல்லைக்கோடு நிர்ணயம் பயனுடையதாகத் தெரியவில்லை. பின்னர் இவ்வெல்லைக்கோடே மாற்றப்பட்டது எனலாம். இராகுயிஸுடன் ஃபோர்ட் ஸ்டான்விக்ஸில் (Fort Stanwix) ஏற்பட்ட உடன்படிக்கைகளாலும் (1768), தெற்கில் இந்தியர்களுடன் லோச்சபார் கோட்டையில் (Fort Lochabar) 1770-ல் ஏற்பட்ட உடன்படிக்கையாலும் எல்லைக்கோடு மாறியது எனலாம். குடியேற்றத்திற்குரிய இடங்கள் பெருகின.[10]

வெள்ளைக்காரனுக்கும் இந்தியனுக்கும் இடையில் பொருளாதார நலன்களைப் பொறுத்தவரையில் ஏற்பட்டுள்ள தீர்வு காணமுடியாத வேற்றுமைகளை இத் திட்டத்தின்மூலம் அகற்ற முடியாது. மன்னரின் இப் பிரகடனம், மேற்கு நோக்கிச் செல்லும் இயக்கத்தை நடைமுறையில் தாமதப்படுத்தவில்லை என்றாலும், காலனிகளில் அதிருப்தி நிலவ இது காரணமாயிற்று. காலனிஸ்டுகள் ஒரே பகுதியில் வசித்தால்தான் தாயகம் அவர்களை ஆட்சிசெய்ய முடியும் என்றும், தாயக வியாபாரமும் வர்த்தகமும் செழிப்புறும் என்றும் கருதியே 1763-ல் இப் பிரகடனம் வெளியிடப்பட்டது என்று அநேக காலனிஸ்டுகள் நம்பினர்கள். மேல் திசையிலுள்ள நிலங்கள் மிகுதியான பலனை விரைவாகத் தரும் என்று நம்பி வாழ்ந்த நில ஊக வணிகர்கள் இப்பிரகடனத்தை வெறுத்தனர். எது எப்படி இருந்தபோதிலும், 1763 ஆம் ஆண்டு வெளிவந்த இப் பிரகடனம் அதிருப்தியை உண்டாக்கிப் புரட்சிக்கு அடிகோலியது.

10. See R. A. Billington, 'Westward Expansion.'

மேலும் படிக்கவேண்டிய நூல்கள் :

டர்னர், எப். ஜே. (Turner, F. J.), The Frontier in American History, chaps. 1-4.

பில்லிங்டன், ஆர். ஏ. (Billington, R. A.), Westward Expansion, Chaps. 3-7.

அகாகி, ஆர். ஹெச். (Akagi, R. H.), The Town Proprietors of the New England Colonies, chaps. 1-7.

செம்பிள், ஈ. சி. (Semple, E. C.), American History and its Geographic Conditions, chaps. 4-6.

மாத்தியூ, எல். கே. (Mathews, L. k.), The Expansion of New England, chaps. 1-5.

7. புரட்சியின் பொருளாதாரக் காரணங்கள்

அமெரிக்கக் காலனிகளில் பிரிட்டிஷ் மெர்க்கன்டலிசம்

எல்லாப் புரட்சிகளையும்போலவே, பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து நடைபெற்ற அமெரிக்கக் கிளர்ச்சியையும் ஓர் எளிய சூத்திரத்தின்மூலம் விளக்கிவிட முடியாது. பொருளாதார, அரசியல், சமுதாய சக்திகள் ஒன்றுகூடியமையால் விளைந்ததே அக்கிளர்ச்சியாகும். அநேக புரட்சிகளைப்போலவே அமெரிக்கப் புரட்சியும் இருவேறு கூட்டத்தாருக்கிடையில் பொருளாதார நலன்களால் ஏற்பட்ட போட்டியே ஆகும். பிரிட்டனுக்கும் அதனுடைய நிலப்பெரும் பகுதி காலனிகளுக்கும் இடையில் ஏற்பட்ட பொருளாதாரப் போட்டிமட்டுமே அமெரிக்கப் புரட்சிக்குக் காரணம் என்று எண்ணிவிடக்கூடாது. பலவகைகளில் அமெரிக்கச் சூழ்நிலைக்குப் பொருந்தாத சமூக, அரசியல் அமைப்பினை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்ததைத்தான் அமெரிக்கப் புரட்சி எனலாம்.

பதினாறு, பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் செல்வாக்குள்ள மெர்க்கன்டலிசம் என்ற பொதுப் பொருளாதாரக் கோட்பாடே இத்தகைய பொருளாதாரப் போட்டிக்குக் காரணமாயிற்று. அக்காலத்திய எல்லாக் காலனி வல்லரசுகளும் அக்கோட்பாட்டினையே பின்பற்றின. அப் பொருளாதாரக் கோட்பாட்டினை நடைமுறைக்குக் கொண்டுவந்த பதினான்காம் லூயி மன்னரின் நிதியமைச்சர் ஜீன் பாப்டிஸ்ட் கோல்பெர்ட் (Jean Baptiste Colbert, 1619—1683) அவர்களது பெயராலேயே அக்கோட்பாடு கால்பர்ட்டிசம் (Colbertism) என்று வழங்கப்பட்டது. சாதக வாணிபக் கொடுப்பல் நிலையையும் பொருளாதாரச் சுதந்திரத்தையும் வளர்த்து, வலிவுள்ள, செல்வப் பெருக்குள்ள சுதந்திர தேசீய இராஜ்யங்களை உருவாக்குவதே மெர்க்கன்டலிசத் திட்டமாகும். இதுவே மெர்க்கன்டலிசத்தின் சாரமுமாகும்.

மெர்க்கன்டலிச ஆதரவாளர்கள் இப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றப் பல வழிகளைக் குறிப்பிட்டனர். முதலில் சொந்த நாட்டுக்கப்பல் தொழிலை வளர்க்கவேண்டும். சரக்குகளை வெளிநாட்டுக் கப்பல்களில் அனுப்பக்கூடாது. இதன் விளைவாகத் திறமையான கப்பற்படையும், போர்க்காலத்தில் பயனுறும் வகையில் தேர்ச்சி பெற்ற மாலுமிகளும் நிறையக் கிடைப்பர். சொந்த நாட்டுக் கப்பல் தொழில் வளர்ந்தால், பண்டங்களை ஏற்றிச் செல்லும் வியாபாரத்தில் கிடைக்கும் இலாபமெல்லாம் சொந்த நாட்டிலேயே தங்கும். இரண்டாவதாக, தொழில்துறையில் தன்னிறைவு ஏற்படுவதற்காக மெர்க்கன்டலிஸ்டுகள் தாயகத் தொழிலுக்குப் பாதுகாப்பளித்து ஊக்குவித்தனர். இதனால் மக்களுக்கு வேலை வாய்ப்பும் பெருகும். மூன்றாவதாக, பொறி வழித் தொழிலுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் விவசாயம்மூலமே பெறமுடியுமாதலால், தாயக விவசாயத்திற்கு உதவியும் பாதுகாப்பும் வழங்கினர். இறுதியில், மெர்க்கன்டலிஸ்டுகள் சாதக வாணிபக் கொடுப்பல் நிலையை ஏற்படுத்திக், கூடுமான அளவுக்கு உலோக நாணயங்களைப் பிற நாடுகளிலிருந்து பண்டங்களுக்கு மாற்றுகப் பெற்று, நாட்டை விலைமதிக்கொணா உலோகங்களால் நிரப்ப முற்பட்டனர். எந்த நாட்டில் தங்கமும் வெள்ளியும் மலிந்து கிடக்கின்றனவோ, அந்த நாடே வலிவும் பொலிவும் வசதியும் உடைய நாடாகும். மெர்க்கன்டலிஸ்டுகளுக்கும் செல்வத்தின் மற்ற வகைகள் தெரியுமென்றாலும், அவர்கள் விலைமதிக்கொணாத உலோகங்களை நாடுவதற்குக் காரணம், இவற்றைக்கொண்டு விரும்பும் பண்டம் எதனையும் எந்த இடத்திலிருந்தும் விலை கொடுத்து வாங்குவதற்கு முடியும் என்பதேதான்.

அதனுடைய காலத்திலேயே மெர்க்கன்டலிசத்திற்கு ஆதரவாளர்கள் இருந்தனர்; இன்றும் அதனைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் உள்ளனர். மற்றப் பொருளாதாரக் கோட்பாடுகளைப் போலவே மெர்க்கன்டலிசமும் தான் செல்வாக்குடன் நிலவிய காலத்தையே பிரதிபலிக்கிறது. இடைக் காலத்தின் குழப்பத்திலிருந்தும் ஒழுங்கின்மையிலிருந்துமே மெர்க்கன்டலிசம் பிறந்தது. வர்த்தகப் புரட்சி, பணப் பொருளாதாரம் மீண்டும் புத்துயிர் பெற்றமை, தேசிய அரசின் எழுச்சி ஆகிய இவற்றின் இயற்கையான விளைவே மெர்க்கன்டலிசமாகும். எனினும், இப் பொருளாதாரக் கோட்பாட்டில் சில குறைகளும் உண்டு. மற்றப் பண்டங்களைவிட விலைமதிக்கொணாத உலோகங்களின் மேன்மையையும் சிறப்பையும் அளவுக்கு மீறி மெர்க்கன்டலிசம் வலியுறுத்துகிறது. இக் கோட்பாடு, விவசாயம், தொழில் ஆகியவற்றைவிட வர்த்த

கத்தின் உயர்வினை மிகைப்படுத்திக் காட்டுகிறது. சாதக வாணிபக் கொடுப்பல்நிலை நீண்ட நாளில் பயன் உடையதாக இருக்கும் என்று நம்புவது தவருகும். ஒரு நாட்டின் இலாபம் பிறிதொரு நாட்டிற்கேற்படும் இழப்பாகும் என்று கருதுவதும் தவறே.

மெர்க்கன்டலிசத் திட்டம், தாயக நாட்டின் நலனையே முக்கியமாகக் கருத்தில் வைத்திருக்க வேண்டும். தாய்கத்தின் பொருளாதார வாழ்க்கையை வளப்படுத்துவதே காலனிகளின் கடமையாகும். தாயகத்தில் கிடைக்காத மூலப்பொருள்களைப் போன்ற பண்டங்களை உற்பத்திசெய்து, தாயகத்தின் பொறிசெய் பண்டங்களை வாங்கிப் பயன்படுத்துவதே காலனிகளுடைய பொறுப்பாகும். பெரும் கடல்வழி வியாபாரம் வளரவும், பண்டங் களை ஏற்றிச் செல்லும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள கப்பல் முத லாளிகளின் இலாபம் பெருகவும், இறக்குமதியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் செல்வம் சேரவும், முதலீடு செய்யவும் காலனிகள் வாய்ப்புகளையும் வசதிகளையும் உருவாக்கித்தர வேண்டும். சுருங்கச் சொல்லின், தாயகத்தின் நலத்திற்கெனத் தங்களுடைய நலத்தைத் தியாகம் செய்யக் காலனிகள் முன்வர வேண்டும். இவ்வாறு காலனிகள் இயங்கும்பொழுது காலனி களின் நலனும் பாதுகாக்கப்பட்டால் மிகவும் நல்லது. வேறுபாடு தோன்றினால், தாயகத்தின் நலனையே முக்கியமாகக் கொள்ள வேண்டும். எந்தவிதமான சூழ்நிலையிலும் காலனிகள் தாயகத் துடன் போட்டியிடக்கூடாது.

பதினாறும் நூற்றாண்டிலேயே பிரிட்டிஷ் மெர்க்கன்டலிசத்தின் வேர்கள் ஊன்றப்பட்டனவென்றாலும், கிராம்வெல் (Cromwell) காலத்திற்குப் பின்னர்தான் இக் கோட்பாட்டிற்குச் சாதகமான சட்டங்கள் நிறைவேறின. அக் காலத்தில் இங்கிலாந்து கப்பற் படைத் தலைமையைப் பெற்ற முக்கிய நாடாயிற்று; காலனி சாம்ராஜ்ஜியத்தினையும் ஏற்படுத்த முனைந்து நின்றது. 1651-ல் இயற்றப்பெற்ற கடற்கடவுச் சட்டங்களின் முக்கிய அம்சங்கள் வருமாறு: (1) ஆசியா, ஆப்பிரிக்கா அல்லது அமெரிக்காவி லிருந்து நிலத்தில் விளைந்த பண்டங்களையோ, பொறிசெய் பண்டங்களையோ இங்கிலாந்திற்கு அல்லது அதன் குடியேற்ற உரிமை நாடுகளுக்கு அனுப்பும்பொழுது, சொந்தக்காரனும், கப்பலைச் செலுத்தும் தலைவனும், மாலுமிகளில் பெரும்பாலானவர் களும் ஆங்கிலேயர்களாக உள்ள கப்பல்களிலேயே அப் பண்டங் களை ஏற்றி அனுப்பவேண்டும். (2) ஐரோப்பாவில் விளைந்த பண்டங்களையும், பொறிவழிப் பண்டங்களையும் இங்கிலாந்தி லேயோ அல்லது அதன் குடியேற்ற உரிமை நாடுகளிலேயோ

இறக்குமதி செய்யும்பொழுது, ஆங்கிலேயக் கப்பல்களைத்தாம் பயன்படுத்தவேண்டும்; அல்லது பண்டங்கள் எந்த நாட்டிலிருந்து உற்பத்தியாகிப் பொறிவழிப்படுத்தப்பட்டுவருகின்றனவோ அந்த நாட்டுக் கப்பல்களைப் பயன்படுத்தலாம். (3) வெளிநாட்டில் விளைந்த பண்டங்களையும் பொறிவழிப்படுத்தப்பட்ட பண்டங்களையும் இங்கிலாந்தில் இறக்குமதி செய்யும் பொழுது, இப் பண்டங்கள் எந்த நாட்டில் உற்பத்தியாயினவோ அந்த நாட்டிலிருந்தே நேரடியாகக் கொண்டுவரப்பட வேண்டும்; அல்லது வழக்கமாக எத் துறைமுகங்களில் கப்பலில் ஏற்றப்படுமோ அத் துறைமுகங்களிலிருந்தே வரவேண்டும்; அல்லது பண்டங்கள் போக்குவரத்துச் சாதனங்களின்மூலம் எந்தத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டனவோ, அந்தத் துறைமுகத்திலிருந்தே வரவேண்டும். இச் சட்டத்தின் உட்கருத்து என்னவெனில், ஆங்கிலேயருக்கு அல்லது காலனியிலுள்ள கப்பல் சொந்தக்காரருக்குப் பண்டங்களை ஏற்றிச்செல்லும் வியாபாரத்தில் சர்வாதீனத்தை வழங்குவதேயாகும்.

1660-ல் இந்தச் சட்டம் மேலும் வலுவுற்றது. கப்பல் தொழிலையும் கடற் கடவையும் ஊக்குவிக்கும் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி, இங்கிலாந்திற்குக் கொண்டுவரப்படும் பண்டங்களும் இங்கிலாந்திலிருந்து எடுத்துச் செல்லப்படும் பண்டங்களும் ஆங்கிலேயர்கள் இயக்குகின்ற கப்பல்களில் மாத்திரமன்றி, ஆங்கிலேயர்கள் அல்லது ஆங்கிலக் காலனிகள் கட்டிய கப்பல்களிலும் ஏற்றப்படவேண்டும். மேலும், இச் சட்டம் கப்பல் தொழிலையும், வர்த்தகக் கப்பல் தொழிலையும் வளர்ப்பதோடன்றி, காலனிகளின் வர்த்தகத்தையும் ஒழுங்குபடுத்திக் காலனி வர்த்தகமும் சந்தைகளும் கடற்கடவின் சர்வாதீனத்தின்கீழ் இருக்கும் வகையில் வழிகோலியது. அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களில் உள்ள ஆங்கிலேயத் தோட்டங்களில் விளைகின்ற, பொறிவழிப்படுத்திய பொருள்களாகிய சர்க்கரை, புகையிலை, பருத்திக்கம்பளி, இண்டிகோ, இஞ்சி, முரட்டுத் துணி, சாயக் கட்டைகள், இவையெல்லாம் இங்கிலாந்திற்கே அனுப்பப்படவேண்டும். கப்பல்துறைச் சரக்குகளாகிய தார், கீல், டர்பன்டைன், சணல், பாய்மரம், மரச் சட்டங்கள் ஆகியவற்றை 1706-ல் இப் பட்டியலில் சேர்த்தனர். 1705-1730-ல் இப் பட்டியலில் அரிசி இடம்பெற்றது; 1721-ல் செம்பு, தோல் வகைகள் இடம்பெற்றன; 1733-ல் மொலாசசும், 1764-ல் இரும்பு, மரத்துண்டு, பட்டு, முத்துச் சாம்பல்கள், திமிங்கிலத் துடுப்புகள், தோல் வகைகள் ஆகியவைகளும் இடம் பெற்றன. 1766 வரையில் விலக்கப்படாத பண்டங்

களாகிய மீன், தானியம், ரம் ஆகியவற்றை எங்கு வேண்டு மானலும் ஏற்றுமதி செய்யலாம். 1766-க்குப் பின்னர், கேப் ஃபினிஸ்டெருக்குத் (Cape Finisterre) தெற்கேயுள்ள நாடுகளுக்கு மட்டுமே அவற்றை ஏற்றுமதி செய்யலாம் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. வட ஐரோப்பாவில் இங்கிலாந்தைத் தவிர வேறு எந்த நாட்டுடனும் காலனிகள் நேரடியாக ஏற்றுமதி வியாபாரம் நடத்தமுடியாது.

காலனி ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்தியது போலவே, 1663-ல் ஒரு சட்டத்தின்படி காலனிகளின் இறக்குமதிகளையும் இங்கிலாந்து கட்டுப்படுத்திற்று. இச் சட்டப்படி ஐரோப்பியப் பண்டங்கள் காலனிகளுக்கு இங்கிலாந்து வழியே செல்ல வேண்டும்; இங்கிலாந்திலோ அல்லது காலனிகளிலோ கட்டப் பெற்ற கப்பல்களில்—இவர்களே செலுத்தும் கப்பல்களில்தான் பண்டங்கள் காலனிகளுக்குச் செல்லவேண்டும். ஐரோப்பியப் பண்டங்கள் அமெரிக்காவுக்குச் செல்லுமுன்னரே இங்கிலாந்து வரிகளையும் கழிவுகளையும் வசூலித்துவிடும். இப் பண்டங்களிலிருந்து காலனிகளிலுள்ள வியாபாரிகளுக்குக் கிடைக்கும் இலாபமும் கட்டுப்படுத்தப்பட்டது. நியூ இங்கிலாந்து மீன் தொழிலுக்கு ஸ்பெயினிலிருந்து இறக்குமதியான உப்பு, மதிரா (Madeira), அசோரஸ் (Azores) பகுதிகளிலிருந்து கிடைத்த திராட்சை ரசம், அயர்லாந்து, ஸ்காட்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வந்த குதிரைகள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றிற்கு இச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டன. 1660–1663ஆம் ஆண்டுகளின் சட்டங்கள் மீறப்பட்டன. சர்க்கரை, புகையிலை போன்ற விலக்கப்பட்ட பண்டங்களை வேறு காலனிக்கு ஏற்றுமதி செய்யப்போவதாகப் பொய்யுரை வழங்கி, இங்கிலாந்து வழியாக அனுப்பாமல், ஐரோப்பியத் துறைமுகங்கள் வழியாக அனுப்பினர். இந்த முறையில் 1660ஆம் ஆண்டுச் சட்டம் மீறப்பட்டது. இம் முறையினை இலாபமற்றதாக ஆக்கும் நோக்கத்தில் 1673-ல் ஒரு சட்டத்தினைப் பாராளுமன்றம் இயற்றியது. இச் சட்டம் 1696-ல் நல்ல முறையில் விளக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டது. இச் சட்டத்தின்படி இங்கிலாந்தில் விலக்கப்பட்ட பண்டங்களுக்கு எவ்வளவு இறக்குமதி வரிகள் போடப்பட்டனவோ, அவ்வளவு வரிகளை ஒரு காலனிவிட்டு மறு காலனிக்குச் செல்லும் அப் பண்டங்கள்மீது விதிக்கப்பட்டன.

பண்டங்களைக் கப்பல்களில் ஏற்றிச் செல்லும் வர்த்தகத்தையும், இறக்குமதிகளையும், ஏற்றுமதிகளையும் கட்டுப்படுத்தியது போலவே, பிரிட்டிஷ் மெர்க்கன்டலிசத் திட்டம் காலனிகளிலுள்ள பொறிவழித் தொழில்துறைகளையும் கட்டுப்படுத்திற்று.

தாயகத் தொழிலுடன் காலனித் தொழில்கள் போட்டியிடுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் காலனிகளிலுள்ள பொறிவழித் தொழில்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், அவற்றைப் பற்றிய முழு விவரங்களையும் குறித்து அனுப்பவேண்டும் என்றும் காலனி கவர்னர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பெற்றது. மன்னர் பிரானின் பிரதிநிதிகள் ஆங்கில அரசின் போக்கை நன்கு உணர்ந்திருந்தனர் என்பதோடல்லாமல், அப் போக்கை அனுதாபத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதற்குச் சான்றுக வர்த்தகக் குழுவிற்கு 1702-1708-ல் நியூயார்க்கு கவர்னர் கார்ன்பரி பிரபு (Lord Cornbury) எழுதியனுப்பியதைக் கீழே காணலாம்:

'லாங் ஐலண்டிலும் (Long Island), கனக்டிகட்டிலும் (Connecticut) கம்பளித் தொழிலை ஆரம்பித்துள்ளனர் என்ற செய்திகள் எனக்குக் கிடைத்துள்ளன. லாங் ஐலண்டில் கம்பளி ஆடையை நெய்து யாவரும் உடுத்திக்கொண்டிருப்பதை நானே கண்டிருக்கிறேன். இப்பொழுது கம்பளி ஆடையை நெய்பவர்கள் நாளை அருமையான ஆடைகளையும் உற்பத்தி செய்துவிடுவார்கள். உலகத்தின் மற்றப் பகுதிகளிலும் இருப்பதுபோலவே, இந்த மாநிலத்திலும் பல பண்டங்கள் இருக்கின்றன. எவ்வளவு தூரம் இவை இங்கிலாந்திற்குப் பயனளிக்கும் என்பதை நீங்களே முடிவு கட்டிக்கொள்ளுங்கள். எனினும், என்னுடைய சொந்தக் கருத்துகளைக் குறிப்பிட்டுவிடுகிறேன்; அதற்காக என்னை மன்னித்து விடுங்கள். இக்காலனிகள் இங்கிலாந்து எனும் முக்கிய மரத்தின் கிளைகளாகும். இவை எப்பொழுதும் இங்கிலாந்திற்கு அடங்கிப் பணிந்து கிடக்கவேண்டும். காலனி மக்களை அவர்கள் விருப்பத்திற்கே விட்டுவிட்டால், அவர்கள் தங்களை ஆங்கிலேயர்கள் என்று நினைத்துக்கொண்டு இங்கிலாந்தில் உள்ளதுபோலவே பொறிவழித் தொழில்களை யெல்லாம் தொடங்கிவிடுவார்கள். தாங்களே உற்பத்தி செய்து துணிகளை நல்ல முறையிலும், இன்னும் அழகாகவும் உடுத்தத் தொடங்கிவிட்டால், இக்காலனி மக்கள், இங்கிலாந்தின் உதவி தேவை இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடுவார்கள். மேலும், நெடுங்காலமாகத் தங்கள் உள்ளத்தில் கற்பனை செய்துகொண்டுள்ள செயல்களிலெல்லாம் ஈடுபடத் தொடங்குவர். இந்த நாட்டில் எத்தகைய மக்கள் வசிக்கின்றனர் என்பதைத் தாங்கள் புரிந்துகொள்வீர்களானால், என்னுடைய கருத்துகள் உங்களுக்கு வேடிக்கையாகவும் விந்தையாகவும் தென்படா.....'[1]

1. Letter to Secretary Hedges in 1705, in E. B. O' Callaghan (ed.), 'Documents Relating to the Colonial History of New York,' IV, 115.

நடைமுறையில் ஆங்கில அரசாங்கமோ காலனி அரசாங்கமோ குடிசைத் தொழில்களையோ சிறு கடைகளையோ கூடக் கட்டுப்படுத்த முடியாது. வட காலனிகளிலிருந்து மீனையும் விவசாயப் பண்டங்களையும் கிரேட் பிரிட்டன் இறக்குமதி செய்ய விரும்பியிருந்தால், அக் காலனிகளுக்குத் தம்முடைய பொறி வழிப் பொருள்களை அனுப்பியிருக்கக்கூடும். பிரிட்டன் அதற்குத் தயாராக இல்லாததால், காலனிகளில் பொறிவழித் தொழில் வளரத் தொடங்கிற்று.

பிரிட்டன் இரண்டு தொழில்களைக் கண்ணுங்கருத்துமாகக் காத்து வந்தது; அவை, கம்பளியும் இரும்பும் ஆகும். இங்கிலாந்து கம்பளித் தொழிலில் முன்னணியில் நின்றது. காலனிகளுக்கு ஏற்றுமதியாகும் சரக்குகளில் ஒரு பாதி ஆங்கிலக் கம்பளி வகைகளேயாம். தாயகப் பொறிவழித் தொழிலதிபர்கள் கம்பளித் தொழிலில் காலனிகளிடமிருந்து ஏற்படும் போட்டியினைக் கண்டு கொதிப்படைந்தனர். எனவே, 1699-ல் கம்பளிச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி, காலனிகளிலிருந்து கம்பளி வகைகளை ஏற்றுமதி செய்யக்கூடாது; ஒரு காலனியிலிருந்து பிறிதொரு காலனிக்கும் ஏற்றுமதி செய்யக் கூடாது. 1670-ல் இங்கிலாந்திலிருந்து காலனிகளில் இறக்குமதியான கம்பளி வகைகள்மீதுள்ள வரிகள் அகற்றப்பட்டன. இதன் விளைவாகக் காலனிகளிலேயே உற்பத்தியான துணியின் விற்பனை தடைப்பட்டது. அமெரிக்க வர்த்தகர்களின்மீது ஆங்கிலேயக் கம்பளி வியாபாரிகளின் பிடிப்பு ஒரு நூற்றாண்டுக்கு நீடித்தது. நீர்நாய்த்தோல் நிறையக் கிடைத்தமையால், காலனிஸ்டுகள் அத்தோலினைக்கொண்டு தொப்பிகள் செய்தனர். தொப்பி செய்வோர் சங்கம் 1731-ல் அரசாங்கத்திடம் ஒரு மனுவைத் தாக்கல் செய்தது. அதன் விளைவாகப், பாராளுமன்றம் அப் பிரச்சினை குறித்து ஆராய்ச்சி செய்ய முனைந்தது. நியூ இங்கிலாந்து, நியூயார்க்கு ஆகிய பகுதிகளில் ஆண்டொன்றுக்கு 10,000 தொப்பிகள் செய்யப்படுகின்றன என்ற உண்மை வெளி வந்தது. உடனே, கீழ்க்கண்ட அம்சங்களைக்கொண்ட ஒரு சட்டம் நிறைவேறியது: (1) 1732-க்குப் பின்னர்த் தொப்பிகள் இங்கிலாந்திற்கும் ஏற்றுமதி செய்யப்படக்கூடாது; காலனிகளுக்கு இடையிலும் விற்பனை செய்யப்படக்கூடாது; (2) ஏழாண்டுகளுக்குப் பயிற்சி பெற்றுலன்றி, யாரும் உரோமத் தொப்பிகளைச் (felt hats) செய்யக்கூடாது. எந்தத் தொப்பி உற்பத்தியாளனும் இரண்டு பயிற்சித் தொழிலாளர்களுக்குமேல் வைத்துக்கொள்ளக்கூடாது. அப் பயிற்சித் தொழிலாளர்கள் ஏழாண்டுகளுக்குப் பயிற்சி பெற்றே தீரவேண்டும். அவர்கள்

நீக்கிரோக்களாக இருக்கக்கூடாது. இச் சட்டத்தை மீறுபவருக்கு £ 500 அபராதம் விதிக்கப்படும்.

இரும்புத் தொழில் 1648-ல் தொடங்கியது. லின் (Lynn) பகுதிக்கருகே ஜான் வின்திராப் (John Winthrop) உருக்கு உலையை நிறுவினர். 1750-ல் இரும்புத் தொழில் நன்கு வளர்ந்து விட்டது. இங்கிலாந்திற்கு இரும்பு நிறையத் தேவைப்பட்டது. 1750-வரையில் இப் பிரச்சினை குறித்து இங்கிலாந்தில் போட்டிகள் நிகழ்ந்தன. 1750-ல் காலனிகளில் மூலப் பொருள்களை உற்பத்தி செய்யவும், இரும்புச் சாமான்கள் உற்பத்தியைத் தடுக்கவும் ஒரு சட்டம் இயற்றப்பெற்றது. அச் சட்டத்தின் படி, (1) இரும்புக் கம்பிகளை லண்டன் துறைமுகத்தில் வரி செலுத்தாமல் இறக்குமதி செய்யலாம்; வார்ப்பிரும்பினை இங்கிலாந்தின் எந்தத் துறைமுகத்திலும் இறக்குமதி செய்யலாம்; (2) காலனிகளில் இரும்பாலை ஏற்படுத்தக்கூடாது; இரும்புத் தகடுகளைச் சுருட்டவும் பிளந்து கீறவும் என்ஜின்களை நிறுவக்கூடாது; இரும்புத் தகடுகளைப் பதிக்கும் உலைக்களன்களையும் சாய்வுச் சம்மட்டிகளையும் ஏற்படுத்தவோ செய்யவோ கூடாது; எஃகு கருவிகளைச் செய்யும் உலைக்களன்களையும் ஏற்படுத்தக்கூடாது. 1757-ல் இரும்புக் கம்பிகளை எந்த பிரிட்டிஷ் துறைமுகத்திலும் வரி செலுத்தாமல் இறக்குமதி செய்யலாம்.

காலனிகளின் பொறிவழித் தொழில்களைக் கட்டுப்படுத்திய காரணத்தால், அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்படவில்லை. எனினும், காலனி மக்களைப்பற்றிக் கவலை சிறிதுமின்றித், தாயக மக்களுடைய நலன்களில்மட்டும் உடனுக்குடன் இங்கிலாந்து கருத்தைச்செலுத்துகிறது என்பதை யாவரும் உணர்ந்தே இருந்தனர். 1765-ல் போஸ்டன் தினத்தாள் ஒன்று கீழ்க்கண்டவாறு புகார் செய்தது: 'காலனிஸ்டுகளுக்கு பித்தாளையோ, செருப்பையோ, செருப்பாணியையோ செய்ய உரிமையில்லை. ஆனால், பிரிட்டனைச் சார்ந்த சில புகைக்கரி படிந்த இரும்பு உற்பத்தியாளர்களும் பித்தான் உற்பத்தியாளர்களும், தங்களுடைய மதிப்பையும் வியாபாரத்தையும் அமெரிக்கக் குடியரசுவாதிகள் வீணுக்கிவிட்டனர் என்றும், ஏமாற்றித் திருடி விட்டனர் என்றும் உரக்கக் கூச்சலிட்டுக் கத்துகின்றனர்'[2] பிரிட்டிஷ் அரசாங்கம் இத்தகைய வறட்டுக் கூச்சலுக்கும் கூப்பாட்டிற்கும் செவிசாய்த்தமை கண்டு காலனிஸ்டுகள் வெதும்பினர்.

2. Boston Gazette, April 29, 1765. Quoted by C. and M. Beard, 'Rise of American Civilization,' I, 195.

பிரிட்டனுக்கும் அதனுடைய காலனிகளுக்குமிடையில் ஏற்பட்ட பொருளாதாரச் சச்சரவுகளில், நாணயத் திட்டம் (currency policy) பற்றியதும் ஒன்றாகும். காலனிகளில் அவ்வப் பொழுது தோன்றிய உலோக நாணயங்கள்—ஆங்கிலேய நாணயமானாலும் சரி, போர்ச்சுகீசிய நாணயமானாலும் சரி, அல்லது ஸ்பானிஷ் நாணயமானாலும் சரி—உடனுக்குடன் மறைந்து இங்கிலாந்திற்குச் சென்றுவிடும்; அதற்குக் காரணம், வாணிபக் கொடுப்பல்நிலை காலனிகளுக்குப் பாதகமாகவும் இங்கிலாந்திற்குச் சாதகமாகவும் இருந்தமைதான். வர்த்தகத்தின் சாதாரணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, காலனிஸ்டுகள் வாம்பம் (wampum) என்று சொல்லப்படும் சிப்பி மணிகளையும், கிடங்கு ரசீதுகளையும், மற்றக் கருவிகளையும் பணமாகப் பயன் படுத்தினர். இறுதியில், பலவகைத்தாய காகிதப் பணங்களைப் புழக்கத்திற்குக் கொண்டுவருவது தவிர்க்க முடியாததாயிற்று. 1690-ல் மெஸ்ஸாசுசெட்ஸ் காகிதப் பணமுறையை ஆரம்பித்து வைத்தது; காகிதப் பணத்தை வெளியிடுகையில் எந்தவித உலோகப் பாதுகாப்பையும் ஏற்படுத்தவில்லை. கியூபெக்கிலிருந்து வெற்றிபெறுது திரும்பிவந்த சிப்பாய்களுக்குச் சம்பளமாக இக் காகிதப் பணம் வழங்கப்பெற்றது. இதுவே அமெரிக்காவில் காகிதப் பணம் தோன்றியதற்குக் காரணமாகும். காசுமூலம் வரி செலுத்துவதற்குப் பதிலாக, காகிதப் பணத்தை 5 சதவீதம் கூடுதலாகத் தந்து வரி செலுத்தப்பட்டது. காகிதப் பணத்தின் மதிப்பும் காசின் மதிப்பும் கிட்டத்தட்ட சமநிலையில் (par) இருக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. இது வெற்றி பெறவே, மீண்டுமொரு முறை 1709-ல் காகிதப் பணம் வெளியிடப்பட்டது. கனெக்டிகட், நியூஹாம்ஷைர், ரோடு ஐலண்டு, நியூயார்க், நியூ ஜெர்ஸி முதலியன 1711-க்கு முன்பே காகிதப் பணத்தை வெளியிட்டன; மற்றக் காலனிகள் அவற்றைப் பின்தொடர்ந்தன. பொன் விலைக்கேற்ப அமைந்திருந்த உள் நாட்டுப் பணத் தேவையையும் மீறி (in excess of the domestic monetary demand at gold prices) காகிதப் பணம் வெளியிடப் பட்டதால் மதிப்பிறக்கம் ஏற்பட்டது. இதற்கிடையில் அடமானங்கள்மீதும் எஸ்டேட்டுகள்மீதும் காகிதப் பணத்தைத் தரும் 'கடன் பாங்குகள்' மெஸ்ஸாசுசெட்ஸில் 1704-ல் ஏற்பட்டன. இத்தகைய திட்டங்கள் நிறைவேறுவதற்கு முன்னரே, 1741-ல் பாராளுமன்றம் குறுக்கிட்டு, 1720-ல் இயற்றப்பட்ட பப்பிள் சட்டத்தைப் (Bubble Act) பயன்படுத்திக் கடன் பாங்குகளை ஒழித்துக்கட்டியது. கடன் உண்டியல்களைச் சட்டமுறைப் பணமாக நியூ இங்கிலாந்தில் வழங்கக் கூடாதென

பாராளுமன்றம் தடை விதித்தது. இத் தடை 1764-ல் எல்லாக் காலனிகளிலும் அமுலுக்கு வந்தது.[3]

ஆங்கிலேயக் கடன் ஈவோர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டிய பிரிட்டிஷ் பாராளுமன்றம், காகிதப் பணம் வெளியிடும் உரிமையைக் காலனிகளிடமிருந்து பறிக்கும் சட்டங்களை இயற்றியது. அமெரிக்கக் கடனாளிகளுக்கு ஏற்பட்டுள்ள கடன்களுக்காக அவர்களுடைய நிலங்கள், குடியிருப்பு மனைகள், அடிமைகள் ஆகியவற்றின்மீது இங்கிலாந்து வரி போடுவதற்கென 1752-ல் ஒரு சட்டம் இயற்றியது. ஆங்கிலேயக் கடனீவோனுக்குக் கிடைத்த பாதுகாப்பினைவிடக் காகித நாணயப் பிரச்சினையிலுள்ள சிக்கல்கள் அமெரிக்காவில் முற்றிப்போயிருந்தன. பணவீக்கத்தினால் ஏற்பட்ட நாணயத்தைக் (inflationary currency) கொண்டு தங்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்கலாம் என்று சிறு கடனாளி விவசாயியும், சிறு தோட்ட முதலாளியும் கருதினர். இக் கூட்டத்தினர் காகிதப் பணத்தையே நாடினர். ஆனால், நகரங்களைச் சார்ந்த, பணம் படைத்த, கடன் ஈயும் வியாபாரிகள் காகிதப் பணத்தை எதிர்த்தனர். பணம் படைத்த காலனிஸ்டுகள், பிரிட்டிஷ் வியாபாரிகள்[4] ஆகியவர்கள் செய்துகொண்ட மனுக்களின்மீதே அமெரிக்கக் காகிதப் பணத்தைத் தடுக்கும் சட்டங்களைப் பிரிட்டன் நிறைவேற்றியது. இத் தடைச் சட்டங்களின் காரணமாகச் சிறு விவசாயிகளும், கடனாளிகளாயிருந்த தென்னாட்டுத் தோட்டச் சொந்தக்காரர்களும் பிரிட்டனை வெறுத்தனர். இங்கிலாந்தின் இந்தப் போக்கின் காரணமாக, அதிருப்தி விதைகள் ஊன்றப்பட்டன.

'பழைய காலனி முறை'யின் விளைவு

மெர்க்கன்டலிசத் திட்டம் தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்; இத் திட்டத்தின்கீழ் தாயக நாட்டிற்காகக் காலனிஸ்டுகள் தங்கள் நலன்களை விட்டுக்கொடுக்க வேண்டும். பிரிட்டிஷ் பெருநிலப் பகுதி காலனிகளில் இத்திட்டம் 1650-லிருந்து 1763வரையில் நிலவியபோதிலும், விளைவுகள் மிகவும்

[3] டியுயி குறிப்பிடுகிறார்: 'இத் தடைச் சட்டங்கள், காலனிகளின் காகிதப் பணத்தை முழுதும் நீக்கிவிடவில்லை. தற்காலிக கருவூல நோட்டுகளும் (treasury notes) கடன்பாங்கு நோட்டுகளும் புழக்கத்தில் இருந்தன. 1774-ல் $12,000,000 பயன்படுத்தப்பட்டன.' Financial History of the United States (8th ed., 1922), p. 30. Harlow (American Historical Review, XXXV. 47 Oct. 1929), puts the figure probably more accurately at $22,000,000.

[4] Curtis Nettels, 'The Roots of American Civilization,' pp. 530-537.

மோசமாக இல்லை. மொத்தத்தில் பார்க்கப்போனால், 18ஆம் நூற்றாண்டில் வழக்கத்தில் இல்லாத அளவுக்கு, அமெரிக்கக் காலனிஸ்டுகள் பொருளாதார சுபீட்சத்தையும், அரசியல் உரிமையையும் நன்கு அனுபவித்தனர். ஆடம் ஸ்மித் தெளிவாக உரைத்ததுபோல, பிரிட்டிஷ் ஆட்சி, 'எந்த ஐரோப்பிய நாட்டையும்விடத் தாராள மனப்பான்மையுடனும், கொடுமைகள் குறைந்ததாயும் இருந்தது.'

இச் செழிப்பிற்குக் காரணம், மூன்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. முதலில், காலனிஸ்டுகளின் நலன்களும், தாயகநாட்டின் நலன்களும் இணைந்தே சென்றன. காலனிஸ்டுகள், விளைவுபற்றித் தொழில்களை (extractive industries) வளர்ப்பதில் காலத்தைச் செலவிடுவது அடிப்படையில் சிறந்ததே. இரண்டாவதாக, பல பண்டங்களுக்கு இங்கிலாந்து அரசாங்கக் கொடைகள் வழங்கியதால் செயற்கையான சூழ்நிலைகளே உருவாயின என்றாலும், இவை ஒழுங்கான வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், காலனிஸ்டுகள் பொருளீட்டும் முயற்சிக்கு ஆதரவாகவும் அமைந்திருந்தன. கப்பல் தொழில் சரக்குகள், இண்டிகோ ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட அரசாங்கக் கொடைகள் சிறந்தவையாகும். புகையிலை, மரத்துண்டு, இரும்பு, திமிங்கில எண்ணெய், பாசி, முத்து ஆகியவற்றிற்கு இங்கிலாந்து சுங்கச் சலுகைகள் வழங்கிற்று. இங்கிலாந்து வழியே காலனிகளுக்குச் செல்லும் பண்டங்களின்மீது போடப்பட்ட வரி திருப்பிக் கொடுக்கப்பட்டதால், ஆங்கிலேயர்களைவிடக் காலனிஸ்டுகள் இப் பண்டங்களை மலிவான விலையில் வாங்கமுடியும்.

மூன்றாவதாக, பிரிட்டிஷ் மெர்க்கன்டலிசத் திட்டத்தைக் காலனிஸ்டுகள் எளிதாகப் புறக்கணித்துவிடுவதாலும், அத் திட்டத்தைச் செயற்படுத்துவது கடினமாதலாலும், அத் திட்டத்தை இங்கிலாந்து தீவிரப்படுத்தவில்லை. 18ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில், 'தூங்குகிற நாய்கள் தூங்கட்டும்' என்ற ராபர்ட் வால்போலின் (Robert Walpole) கொள்கையை இங்கிலாந்து கடைப்பிடித்தது. இத்தகைய 'நலன் பயக்கும் புறக்கணிப்பை' இங்கிலாந்து மேற்கொண்ட காலத்தில்தான், மேற்கிந்திய வர்த்தகம் உச்சநிலையை அடைந்தது. காலனிகளில் இறக்குமதியாகும் ஐரோப்பியப் பண்டங்கள் இங்கிலாந்து வழியே செல்ல வேண்டும் என்ற 1663ஆம் ஆண்டுச் சட்டம் மீறப்பட்டது. காலனி வியாபாரிகளும் இச் சட்டத்தை மீறினர். விலக்கப்பட்ட பண்டங்களைக் கப்பலில் ஏற்றி, பிரிட்டனில் இறக்காமல், நுழைவுரிமைத் துறைமுகங்களை (ports of entry) விட்டுவிட்டு வேறு

துறைமுகங்களில் இறக்கியும் ஏற்றியும், எதிரிகளான பிரிட்டிஷ் சுங்கத் தீர்வை அதிகாரிகளுடன் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டும், இச் சட்டத்தை உடைத்தனர். போஸ்டன் வர்த்தகத்தின் ஒரு பாதி சட்டத்திற்குப் புறம்பான வகையில் நடைபெறுகிறது என்று 1700-ல் கணக்கிடப்பட்டது. 1760 ஆம் ஆண்டுகள்வரையில் சட்டத்தை மக்கள் மீறி வந்தனர். 1733-ல் இயற்றப்பட்ட மொலாசஸ் சட்டமும் இதற்கு விதிவிலக்கல்ல. முன்பே குறிப்பிட்டதுபோல, மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து காசு, மொலாசஸ் முதலியவற்றை இறக்குமதி செய்து, மொலாசஸிலிருந்து ரம் உற்பத்தி செய்து, 'ரம்'மைப் பயன்படுத்தித் தோல் வியாபாரத்தையும், அடிமை வியாபாரத்தையும், மீன் தொழிலையும் பெருக்கி, நியூ இங்கிலாந்து வளங்களும் நலன்களும் பெருகிய பகுதியாயிற்று. பிரிட்டிஷ் தீவுகளைவிட ஃபிரெஞ்சு, டச்சு, ஸ்பானிஷ் தீவுகளிலிருந்து மலிவான விலையில் மொலாசஸை நியூ இங்கிலாந்து மக்கள் வாங்கமுடியும். மேற்கிந்தியத் தீவுகளில் வாழ்ந்த பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகளின் விருப்பத்திற்கிணங்க, 1733-ல் பாராளுமன்றம் வெளிநாட்டுத் தோட்டங்களிலிருந்து காலனிகளுக்கு இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்கு வரி விதித்தது. நியூ இங்கிலாந்து வர்த்தகத்திற்கு எதிராக பிரிட்டிஷ் சர்க்கரை உற்பத்தியாளர்களைக் காக்கவேண்டி அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி, 1763 வரையில் பயனளிக்கவில்லை.[5]

இத்தகைய காரணங்களினால் 1763 வரையில் 'பழைய காலனி முறையி'னால் காலனிஸ்டுகள் எந்தத் தொல்லையையும் அனுபவிக்கவில்லை. இதற்கு மாறாக, காலனிகளின் மக்கள் தொகையும் செல்வமும் பெருகின. இருந்தபோதிலும், மெர்க்கன்டலிச முறையில் உள்ள அம்சங்களும், திட்டங்களும் காலனிப் பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்யக்கூடியவை என்பதை நெஞ்சில் நிறுத்திக்கொள்ள வேண்டும். மெர்க்கன்டலிசத்தால் காலனிஸ்டுகளுக்கு ஏற்படக்கூடிய நலிவுகள்

5 'அமெரிக்க வர்த்தகக் கப்பற்படை' (American Merchant Marine) என்ற தலைப்பில் லாலரின் அரசியல் அறிவுக் கலைக்களஞ்சியத்தில் (Lalor's Cyclopaedia of Political Science) பின்வருமாறு எழுதுகிறார்: 'காலனி வர்த்தகர்களில் பத்தில் ஒன்பதின்மர் கள்ளக் கடத்தல்காரர்களே. சுதந்திரப் பிரகடனத்தில் கையெழுத்திட்டவர்களில் நான்கில் ஒரு பங்கினர், கப்பல்களைச் சொந்தமாக வைத்துக்கொண்டு வியாபாரத்தில் ஈடுபட்டுக் கள்ள வாணிபம் நடத்தினர். ஹான்காக் (Hancock), டிரம்பல் (Trumbull—சகோதரர் ஜோனதன்—Brother Jonathan), ஹாமில்டன் (Hamilton) ஆகியோர் கள்ளச் சரக்கில் வாணிபம் நடத்தியவரே. ஜான் ஹான்காக் கள்ள வாணிபத்தில் மன்னனுவான். கள்ள வாணிபம் செய்ததால் $ 500.000 தண்டவரி செலுத்த வேண்டுமென போஸ்டனிலுள்ள அட்மிராலிடி கோர்ட்டின்முன் ஜான்ஹாக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். ஹான்காக்கும் தன்னுடைய வழக்கறிஞர் ஜான் ஆடம்ஸ் அவர்களுடன் கோர்ட்டிற்கு வந்தான்.

பின்வருமாறு: (1) பண்டங்களைக் கப்பலில் கடத்திச் செல்லும் வர்த்தகத்தின் சர்வாதீனம் ஆங்கிலக் கப்பல் முதலாளிகளிடமும், காலனி கப்பல் அதிபர்களிடமும் இருந்ததால், கப்பல் சரக்கேற்று கூலி வீதம் அதிகமாகவே இருக்கும். (2) பெரும்பாலான காலனிப் பண்டங்கள் ஆங்கிலேய வியாபாரியின் கிடங்குகளில் தங்கியே செல்வதால், ஒரு தரகனுக்குக் கிடைக்க வேண்டிய இலாபம் ஆங்கிலேய வியாபாரிக்குக் கிடைத்து விடுகிறது. (3) ஆங்கிலேயப் பொறிவழித் தொழிலதிபருக்கு வேண்டிய மூலப்பொருள்களைக் காலனிகளிலிருந்து பெற்று, காலனிகளுக்கு முற்றுப்பெற்ற பொருள்களை வழங்குவதுதான் மெர்க்கன்டலிச முறையாக இருந்தது. (4) தங்கள் கையிலுள்ள பொன், வெள்ளி ஆகிய உலோகங்களைனத்தையும் கொடுத்து பிரிட்டிஷ் பண்டங்களைக் காலனிஸ்டுகள் வாங்கியதால், தங்கமும் வெள்ளியும் இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாகிக்கொண்டே இருந்தன. இருந்தபோதிலும், ஸ்பானிஷ், டச்சு, ஃபிரெஞ்சு மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து கிடைக்கும் பொன் காலனிகளுக்குச் செல்லாதவாறு பிரிட்டன் தடுத்துவிட்டது. (5) நாணயத்தையும், கடன் நிலைமையையும் சீர்திருத்துவதற்கெனக் காலனிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகளையெல்லாம் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்க மறுத்தது.

1763-க்குப் பின்னர் பிரிட்டிஷ் திட்டம்

பிரிட்டிஷ் முதலாளித்துவத்திற்கும், அமெரிக்க வியாபாரிகள், தோட்ட முதலாளிகள், விவசாயிகள் ஆகியவர்களுடைய பொருளாதார நலன்களின் வளர்ச்சிக்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவுகளைப்பற்றிப் போதுமான அளவு விளக்கியாகிவிட்டது. காலனிகளின் தொடக்க நிலையில், சட்டங்கள் மீறப்பட்ட பொழுது, பிரிட்டிஷ் மெர்க்கன்டலிசம் மிகவும் வலியுறுத்தப்படவில்லை. கிராம்வெல்லின் கடற்கடவுச் சட்டம் முதன்முதலில் இயற்றப்பட்டு ஒரு நூற்றாண்டு முடிவுற்றது. 1763ஆம் ஆண்டில் மக்கள்தொகையிலும், செல்வப் பெருக்கிலும் காலனிகள் முன்னணியில் நின்றன. பிரிட்டிஷ் காலனி முறையின் குறைபாடுகள் காலனிகளை மிகவும் அழுத்தின. ஓரளவுக்கு இக் குறைபாடுகளுக்கு ஏற்றவாறு காலனிப் பொருளாதார வாழ்க்கையும் மாறியது. எனினும், இக் குறைபாடுகள் பெருகிக்கொண்டேபோனால், தொல்லைகள் உறுதியாக ஏற்படும். 1763ஆம் ஆண்டிற்குப் பின்னர், குறைபாடுகள் பெருகின; தாயகத்திற்கும் காலனிகளுக்கு மிடையில் சச்சரவுகள் பெருகின; புரட்சிக்கு வேண்டிய சூழ்நிலைகள் உருவாகின.

அடிப்படையில் நோக்கினால், 1763-க்குப் பின்னர், ஒரு நூற்றாண்டில் நிலவிய பழைய மெர்க்கன்டலிசத் திட்டத்தையே தான் பிரிட்டன் வலியுறுத்திற்று. பிரிட்டனின் திட்டம், பிரிட்டிஷ் நலன்களைப் பாதுகாத்து, காலனிகளுடைய பொருளாதார நிலையை பிரிட்டனுக்குக் கட்டுப்படுத்திப் பணிய வைப்பதே யாகும். 1763-ல் ஃபிரான்சு தோற்றபின்னர், ஆங்கில நாட்டின் பெரிய இராஜதந்திரியான வில்லியம் பிட், பிரிட்டிஷ் பேரரசினைப் பலப்படுத்தினர். பிரிட்டிஷ் வர்த்தக முதலாளித்துவத்தின் நலன்களை இப் பேரரசு எவ்வாறு முதலில் பாதுகாத்ததோ, அவ்வாறே தான் 1763-க்குப் பின்னரும் பாதுகாத்தது. வில்லியம் பிட் ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்தைப் படைக்கவேண்டும் என்ற கனவில் ஆழ்ந்துபோய்விடவில்லை. பிரிட்டனின் சர்க்கரைத் தொழிலைப் பாதுகாக்கவேண்டும் என்றுதான் அவர் விழைந்தார். எனவே, ஃபிரஞ்சுப் போரும், இந்தியப் போரும் முடிந்தவுடன், காடிலூப் (Guadeloupe), மார்டினிக்(Martinique),செயின்டு லூசியா (St. Lucia) ஆகிய ஃபிரெஞ்சுத் தீவுகளை விரும்பாமல் கனடாவை விரும்பிப் பெற்றார். பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகளுக்கும், வட காலனிகளுக்குமிடையில் சர்க்கரைத் தொழில் குறித்து ஏற்பட்ட போட்டிகளும், பூசல்களுமே புரட்சிக்குக் காரணங்களாயின.

18ஆம் நூற்றாண்டில் காலனி வர்த்தகத்தில், சர்க்கரை முக்கியப் பங்கு வகித்தது. ஜமைக்கா (Jamaica), பார்பதோஸ் (Barbados), இன்னும் மற்ற சர்க்கரைத் தீவுகளில் £60,000,000ஐ பிரிட்டன் முதலீடு செய்த்து. இந்தத் தொகை பெருநிலப் பகுதி காலனிகளில் பிரிட்டன் முடக்கியுள்ள முதலீட்டைவிட ஆறு மடங்கு அதிகமாகும். சர்க்கரைத் தொழிலின் நலனைப் பாதுகாக்க பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எழுபது 'சர்க்கரைப் பிரபுக்கள்' (Sugar Lords) வீற்றிருந்தனர். தலத்திலில்லா உடைமையும் (absentee ownership), வளம் குன்றிய நிலமும், திறமையற்ற நிருவாகமும், தீவுத் துறைமுகங்களில் போடப்பட்ட உயர்ந்த ஏற்றுமதி வரியும், ஆங்கிலேய சர்க்கரை உற்பத்தியாளருக்குச் சில வசதிக் குறைவுகளை ஏற்படுத்தின. ஃபிரெஞ்சுத் தீவுகளிலிருந்த உற்பத்தியாளருக்கு இவ்வளவு வசதிக்குறைவுகள் ஏற்படவில்லை. காலனி இறக்குமதியாளர்கள் ஃபிரெஞ்சிடமிருந்து 25 முதல் 40 சதவீதம் குறைவான விலையிலேயே சர்க்கரையையும் மொலாஸசையும் வாங்கினர். பெருநிலப் பகுதி காலனிஸ்டுகளின் தேவைகளில் எட்டில் ஒரு பங்கைத்தான் பிரிட்டிஷ் தீவுகள் வழங்கின. ஃபிரெஞ்சுப் போரும் இந்தியப் போரும் நடந்த காலத்திலேயே ஃபிரெஞ்சுக்குச் சாதகமாக, பெருநிலப்பகுதி காலனிகளுக்கும் ஃபிரெஞ்சு தீவுகளுக்கு

மிடையில் வர்த்தகம் நடைபெறுவதைக் கண்டு கோபித்துக் பிட் (Pitt), வெளிநாட்டு மேற்கிந்திய வர்த்தகத்தில் நடைபெறும் கள்ளக் கடத்தலை அழித்தொழிக்குமாறு 1761-ல் கப்பற்படைக்கு ஆணையிட்டார். அதே ஆண்டில், கள்ளக் கடத்தல் வணிகரைக் கைதுசெய்வதற்குரிய உத்தரவினை இடுமாறு காலனி நீதிமன்றங்களுக்கு ஆணை பிறந்தது. இத்தகைய முறைகளினால் காலனிக்களைக் கட்டுப்படுத்தும் பிரிட்டிஷ் திட்டத்தைப் பற்றி காலனிஸ்டுகள் நன்கு புரிந்துகொண்டனர். நீதிமன்றத்தின் இத்தகைய உத்தரவுகளை எதிர்த்து ஜேம்ஸ் ஓடிஸ் (James Otis) முழக்கமிட்டார். இப் பேச்சு முழக்கத்தினைப் பின்னர் ஜான் ஆடம்ஸ் என்பவர் 'புரட்சியின் முதல் துப்பாக்கி' என்று வருணித்தார்.

போர் முடிந்தவுடனேயே, புதிய பிரதம மந்திரியாகிய கிரென்வில் (Grenville), வர்த்தகக்குழுவின் தலைவர் டவுன்ஷெண்டு (Townshend) ஆகிய இருவரும் மூன்றாம் ஜார்ஜ் மன்னருடைய ஆதரவின்பேரில் 'நலன்பயக்கும் புறக்கணிப்பு' த் திட்டத்தைக் கைவிட்டனர். அமெரிக்கக் காலனிகளைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் இன்னும் வலுவாகப் பிணைக்கவேண்டும் என்றும், காலனிஸ்டுகள் அவர்களுடைய பாதுகாப்பிற்காகும் போர்க்கடன்களை அடைக்கப் பணம் தரவேண்டும் என்றும் பிரதம மந்திரியும் மற்றவர்களும் விரும்பினர்கள். இந்த விருப்பத்தின் காரணமாக வர்த்தகச் சட்டங்களை இன்னும் தீவிரமாகச் செயற்படுத்தினர்கள்; மொலாசஸ் சட்டத்தின்மூலம் காலனிகளிலிருந்து கிடைக்கும் வருவாயைப் பெருக்கினர்கள். புதிய ஏகாதிபத்தியத்தையும் பழைய வர்த்தகத் திட்டத்தையும் செயற்படுத்த முற்பட்டதால், புரட்சி ஏற்பட்டது. புரட்சி ஏற்படக் காரணமாக அமைந்தவைகளில் இது தலைசிறந்த, முக்கியக் காரணமாகும். இங்கிலாந்தின் திட்டம், இப்பொழுது ஓர் உண்மையான துயரச் சம்பவமாயிற்று. இத் திட்டம் வர்த்தக நலன்களைப் பாதிக்கும் திட்டமாகும். எனவே, எதிர்ப்பு உடனேயே தீவிரமாயிற்று.

புதிய ஆட்சியின் முதல் நடவடிக்கை, 1764-ல் காலனிகளின் பாதுகாப்புச் செலவினை ஈடுகட்டும் நோக்குடன் நிறைவேற்றிய சர்க்கரைச் சட்டமாகும். இதன்மூலம், 1733-ல் இயற்றப்பட்ட மொலாசஸ் சட்டத்தின்படி விதிக்கப்பெற்ற வரிகள், பாதியாகக் குறைக்கப்பெற்றன. அத்துமீறிய வரிகளைக் குறைத்தால் வியாபாரிகள் நேர்மையுடன் நடந்துகொள்வர் என்றும், ஓரளவுக்கு வரி வசூல்மூலம் வருமானமும் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. வெளிநாட்டு மொலாசஸின்மீது விதிக்கப்பெற்ற இறக்குமதி வரிகளைக் காலன் (gallon) ஒன்றுக்கு

ஆறு பென்சிலிருந்து மூன்று பென்சாகக் குறைத்தமையால், இச் சட்டம் 1733ஆம் ஆண்டில் இயற்றப்பெற்ற சட்டத்தைவிட உயர்ந்தது என்று தோன்றக்கூடும். ஆனால், இப் புதுச் சட்டத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் முழு மூச்சுடன் செயற்படுத்த விரும்புகிறது என்பதையும் உணரவேண்டும். பிரிட்டிஷ் கப்பற் படை அதிகாரிகள், சுங்கத் தீர்வையை வசூலிக்கவேண்டும். கள்ளக் கடத்தல் வணிகர்களை ஆங்கில அட்மிரால்டி கோர்ட்டு களே விசாரணை நடத்தித் தண்டிக்கும். இவற்றோடல்லாமல், சர்க்கரை, இண்டிகோ, காப்பி, திராட்சை ரசம், பட்டு வகைகள், காலிக்கோக்கள் ஆகிய பொருள்களின்மீதும் வரிகள் விதிக்கப் பெற்றன. அதே நேரத்தில் விலக்கப்பட்ட பண்டங்களின் பட்டியலும் விரிந்தது. நியூ இங்கிலாந்திலும், மத்திய காலனி களிலும் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. தென்காலனிகளின் இம் மந்தத்தின் விளைவுகள் உணரப்படலாயின.

சர்க்கரைச் சட்டத்தைத் தொடர்ந்து அதற்குத் துணையாக 1765ஆம் ஆண்டில் முத்திரைச் சட்டம் (Stamp Act) அமுலுக்கு வந்தது. இச் சட்டத்தின்படி, லைசென்சுகள், ஒப்பந்தங்கள், உயில்கள், செய்திப் பத்திரிகைகள், துண்டு வெளி யீடுகள், ஆண்டுக் குறிப்பேடுகள் இன்னும் மற்றத் தாள் களுக்கும் அரைப் பென்னியிலிருந்து 10 பவுன்வரையில் மதிப் புள்ள முத்திரைத் தகைகளை வாங்கி ஒட்டவேண்டும். சர்க்கரைச் சட்டத்தை அடுத்து வந்த முத்திரைச் சட்டம் காலனிகளில் அதுவரையில் கண்டிராத ஒரு பரபரப்பினை ஏற்படுத்திவிட்டது. இச் சட்டத்தினை எதிர்த்துக் கொடுக்கப்பட்ட மனுக்களும், நடத்தப்பட்ட மறியல்களும் வெற்றியடையவில்லை. எனவே, ஆங்கிலப் பண்டங்களை இறக்குமதி செய்வதில்லை என்று வியா பாரிகள் முடிவுகட்டினர்; இச் சட்டத்தை நீக்கும் பரையில் ஆங்கிலப் பொருள்கள் பகிஷ்கரிக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டது. இங்கிலாந்தில் வியாபாரிகளும் பொறிவழித் தொழி லதிபர்களும் மிகவும் பாதிக்கப்பட்டதால், முத்திரைச் சட்டம் 1766-ல் அகற்றப்பட்டது; சர்க்கரைச் சட்டத்தின்மூலம் விதிக்கப் பட்ட வரிகளும் குறைந்தன. இவ்வளவு சலுகைகள் வழங்கிய போதிலும், பாராளுமன்றம் காலனிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டம் இயற்றும் உரிமை யுடையது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் பிரகடனச் சட்டம் (Declaratory Act) ஒன்றை வெளியிட்டது.

முத்திரைச் சட்டம் நீக்கப்பட்டவுடன், எங்கும் மகிழ்ச்சி தாண்டவமாடிற்று. குறிப்பிட்ட சில மாவட்டங்களில் நிறுத்தப் படும் கோட்டைப் பாதுகாப்புப் படைக்கு வேண்டிய விளக்கு,

தங்குமிடம், விறகு முதலியவற்றைக் காலனிஸ்டுகளே வாங்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற குவார்ட்டரிங் சட்டத்தை (Quartering Act) 1765-ல் ஏகாதிபத்திய அரசாங்கம் கொண்டுவந்தது. எனவே, பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் காலனிஸ்டுகள் மீண்டும் எதிர்க்கத் தொடங்கினர். மந்திரி சபையில் முக்கிய இடம் வகித்த டவுன்ஷெண்டு பிரபு 1767-ல் டவுன்ஷெண்டு சட்டங்கள் பலவற்றைப் பாராளுமன்றத்தின்மூலம் நிறைவேற்றினர். கண்ணாடி, தாள், ஓவியத்திற்குரிய வண்ணங்கள், சிவப்பீயம், வெள்ளீயம், தேயிலை ஆகியவற்றின்மீது வரி விதிக்கும் சட்டமும் இயற்றப்பட்டது. நிறைய வரிகள் போடவில்லை எனினும், பொதுமக்களின் துய்ப்புக்குரிய பண்டங்களின்மீது இத்தகைய வரிகள் விழுந்ததால், வாழ்க்கைச் செலவு உயர்ந்தது. டவுன்ஷெண்டு சட்டங்களில் வரிவிதிப்புப் பகுதியை விடத் தீங்கிழைக்கக்கூடிய வேறு பகுதிகள் இருந்தன. இச் சட்டங்களின்படி, சுங்கத் தீர்வை நிருவாகம் திருத்தியமைக்கப் படவேண்டும்; கள்ளக் கடத்தலை ஒழித்துக்கட்டவேண்டி காலனிகளிலேயே அட்மிரால்டி கோர்ட்டுகள் ஏற்படவேண்டும்; வரி மூலம் வசூலிக்கப்பட்ட பணத்தைக்கொண்டே காலனிகள் சிவில் அரசாங்கத்தை நடத்தவேண்டும். சட்டத்தின் இக் கடைசிப் பகுதிதான் மிகவும் வெறுக்கத்தக்கதாகும். ஏனெனில், இப் பகுதி, ஆங்கிலேய அதிகாரிகளை எதிர்க்கக் காலனிஸ்டுகள் பயன்படுத்திய முக்கியக் கருவியினை அவர்கள் கையிலிருந்தே தட்டிப் பறித்துவிட்டது. 1765ஆம் ஆண்டின் சட்டப்படி, கோட்டைப் பாதுகாப்புப் படையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய கடமையை நியூயார்க்கு சட்டசபை சரிவரச் செய்யாததால், அச் சட்டசபையின் நடவடிக்கைகள் தடைப்படுத்தப்பட்டன. இச் சட்டங்களொன்றில் கள்ளக் கடத்தலில் ஈடுபடும் வணிகரைக் கைதுசெய்யும் உத்தரவு சட்டபூர்வ உரிமையாக்கப்பட்டது; இப் பகுதியினையும் காலனிஸ்டுகள் வெறுத்தனர்.

டவுன்ஷெண்டு சட்டங்கள் நிறைவேறியவுடனேயே, காலனிஸ்டுகள் தங்களுடைய பழைய தொடர்பின்மைத் திட்டத்தை மீண்டும் அழுலுக்குக் கொண்டுவந்தனர். 1768-1769ஆம் ஆண்டுகளில் பகிஷ்கார இயக்கம் தொடங்கியது; இவ்வியக்கம் தன்னிச்சையானது மட்டுமல்லாமல் அரசியல் கட்சிகளின் ஆதரவையும் பெற்ற ஒன்றுகும். முத்திரைச் சட்டத்தை எதிர்த்துக் கிளம்பிய இறக்குமதி மறுப்பியக்கத்தை விட பகிஷ்கார இயக்கம் எல்லாவற்றையும் உள்ளடக்கிய நிறைவும் முழுமையும் பெற்றதாகும். நியூ இங்கிலாந்து, மத்திய காலனிகள் ஆகியவற்றில் இறக்குமதியாகும் ஆங்கிலப் பண்டங்

களின் மதிப்பு 1768-ல் £ 1,868,000 ஆக இருந்தது; 1769-ல் £ 504,000 ஆகக் குறைந்தது. தெற்குக் காலனிகளின் இறக்குமதி சற்று அதிகரித்திருந்தபோதிலும், அமெரிக்கா முழுமைக்கும் குறைந்துபோன இறக்குமதி மதிப்பு £ 500,000 ஆகும். இச் சூழ்நிலை, இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் ஒரு பொருளாதாரச்சோர்வினை ஏற்படுத்திவிட்டது. எனவே 1770-ல் டவுன்ஷெண்டு சட்டங்கள் ஓரளவுக்கு நீக்கப்பட்டன.



(From E. R. Johnson et al., History of Domestic and Foreign Commerce of the United States, I, 120.)

பிரிட்டனுக்கும் அமெரிக்க நிலப் பெரும்பகுதி காலனிகளுக்குமிடையில் வர்த்தகம், 1745-1776

காலனிகள் மீதுள்ள பிரிட்டிஷ் அரசாங்க ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் காட்டுவதற்கெனத் தேயிலைமீதுள்ள 3 பென்சு வரி நீக்கப்படவில்லை. ஆனால், இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாகும் தேயிலைக்கு 12 பென்சு திருப்பிக் கொடுக்கப் பட்டதால், இங்கிலாந்தைவிட அமெரிக்காவில் தேயிலை விலை குறைவாக இருந்தது. டவுன்ஷெண்டு சட்டங்களில் தேயிலை வரி

போன்ற கொடுமையான வையும் மறுக்கப்பட வேண்டியவையு மான அம்சங்கள் இருந்தபோதிலும், 1770-க்குப் பின்னர் பிரிட்டிஷ் திட்டத்திற்கு எதிராக எழுந்த எதிர்ப்புகள் மங்கின; இறக்குமதி தவிர்ப்பியக்கம் ஒழிந்தது; வர்த்தகம் மீண்டும் துவங்கியது; வளம் ஏற்பட்டது. 1,604,000 பவுனுக இருந்த இறக்குமதியின் மதிப்பு, 4,200,000 பவுனுக 1771-ல் உயர்ந்தது. இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டபோதிலும், பொருளீட்டும் வாய்ப்பினைப் பெற்ற வளங்கொழிக்கும் வியாபாரிகள், புரட்சி செய்யும் அரசியல் தலைவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை; பிரிட்டிஷ் திட்டத்திற்கு எதிராக எந்த அரசியல் தலைவர்களையும் பொதுமக்களையும் பயன்படுத்தினார்களோ, அவர்களையே இவ்வியாபாரிகள் புறக்கணித்தனர். மேலும், கிளர்ச்சிகள் இனி ஏற்படக்கூடாது என்றும் இவ்வியாபாரிகள் விரும்பினார்கள்.

அமெரிக்காவிலுள்ள கிளர்ச்சிக்காரர்கள், காலனி ஏஜென்டுகள் ஆகியவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஏற்படக்கூடிய சுமுக உறவுக்குத் தடையாக இருந்தனர். மேலும், பிரிட்டனின் பழைய காலனித் திட்டம் சுமுக உறவுக்குத் தடையாக அமைந்தது. மெஸ்ஸாசுசெட்ஸில் புரட்சியுணர்வு மங்கிவிடக்கூடாது என்பதற்காகவே சாமுவேல் ஆடம்ஸ், கவர்னரை எதிர்த்துத் தொடர்ந்து போரிட்டுக்கொண்டிருந்தார். பேட்ரிக் ஹென்றியைப் (Patrick Henry) போலவும், தாமஸ் ஜெஃப்பர்சனைப் (Thomas Jefferson) போலவும், ஆடம்ஸ் கருத்துகளையும், செய்திகளையும் பரிமாறிக்கொள்வதற்கெனக் காலனிகள் முழுதும் கடிதப் போக்குவரத்துக் கமிட்டிகளை அமைத்தார். முடிவில், சுமுக உறவு ஏற்பட வழியில்லாமற்போனதற்குக் காரணம், பிரிட்டிஷ் ஆட்சியேயாகும். திவாலாகவிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியைக் காப்பாற்ற அரசாங்கம் எடுத்த முயற்சிதான் பிரிட்டனிடமிருந்து அமெரிக்கா உறவினைத் துண்டித்துக்கொள்ளக் காரணமாயிருந்தது. இந்திய வளங்களைச் சுரண்டி மேன்மையுற்ற கிழக்கிந்தியக் கம்பெனி, தவருன நிர்வாகத்தினாலும் ஊதாரித்தனத்தினாலும் திவாலாகும் நிலைக்கு வந்துவிட்டது. இந்த நிலை, ஆங்கிலேய அரசியல்வாதிகளுக்கும் முதலாளிகளுக்கும் பெருத்த இழப்பாகுமாதலால், இக்கம்பெனியைத் திவாலாகும் நிலையினின்றும் பாதுகாக்கவேண்டியது அவசியமாயிற்று. கம்பெனியின் கிடங்குகளிலே 17,000,000 பவுண்டு தேயிலை வீணுகக் கிடந்தது. இங்கிலாந்து வழியே செல்லும் தேயிலை இறக்குமதி மீதுள்ள வரிகளை நீக்கி, அமெரிக்காவில் நேரடியாகவே தேயிலையை விற்கும் உரிமையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் கம்பெனிக்கு வழங்கியது. இந்த ஏற்பாடு கம்பெனிக்கு

வேண்டிய சந்தையைக் கொடுத்து அமெரிக்கருக்கு மிகவும் மலிவான விலையில் தேயிலை கிடைக்கும்படியும் செய்தது. 1773-ல் இயற்றப்பட்ட தேயிலைச் சட்டத்திற்கு முன்னர், காலனிஸ்டுகள், கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், ஆங்கிலேயத் தரகனுக்கும், அமெரிக்கத் தரகனுக்கும் (அல்லது இறக்குமதியாளனுக்கும்), உள்நாட்டுக் கடைக்காரனுக்குமாக 'நான்கு இலாபங்களை'த் தரவேண்டியிருந்தது. காலனிகளுக்கு நேரடியாகத் தேயிலையை இறக்குமதி செய்யக் கம்பெனிக்கு உரிமை வழங்கப்பட்டதால், இடையிலே ஏற்பட்டிருந்த இரண்டு தரகர் கூட்டங்களும் இரண்டு இலாபங்களும் ஒழிந்தன. இந்த ஏற்பாடு, காலனிகளுக்கு நேரிடையாகத் தேயிலையை இறக்குமதி செய்வதில் கம்பெனிக்கு ஒரு சர்வாதீனத்தை வழங்கும் என்பது உறுதி. கம்பெனிக்குத் தேயிலையில் சர்வாதீனம் வழங்கப்பட்டால், இந்தியாவிலிருந்து அது கொண்டுவரும் மற்றப் பண்டங்களிலும் ஏன் சர்வாதீனம் வழங்கக்கூடாது? கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தேயிலையில் சர்வாதீனம் வழங்கப்பட்டது போலவே, மற்றக் கம்பெனிகளுக்கும் மற்றப் பண்டங்களில் இதுபோன்ற சர்வாதீனம் வழங்கப்படலாம். உண்மையாகவே, வரிமட்டுமல்லாமல் மற்ற சில கோட்பாடுகளும் இதில் அடங்கியிருந்தன. கடல் துறைமுகப் பட்டினங்களில் வசித்த சக்தி படைத்த வர்க்கத்தினரின் உணர்வு தூண்டப்பட்டது. ஹான்காக் போன்ற வியாபாரிகளெல்லாம் தேயிலையை இறக்குமதி செய்துகொண்டே வரியும் செலுத்திவந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் தேயிலைச் சட்டத்தை எதிர்த்தார்கள். புரட்சிகரமான அரசியல்வாதிகளின் கிளர்ச்சிகளும் அத்துமீறின; கிரேட் பிரிட்டனிலிருந்து அமெரிக்கா பிரியும் நிலையும் ஏற்பட்டுவிட்டது.

அமெரிக்கத் துறைமுகங்களுக்கு வந்த தேயிலையைக் கண்காணிப்புக் கமிட்டிகள் இறக்கவிடாமல் தடுத்தும், அழித்தும் ஆர்ப்பாட்டங்கள் செய்தன. போஸ்டனில் இந்தியர்களைப் போல் வேடமிட்டுக்கொண்டு பலர் கப்பல்களில் நுழைந்து, 342 பெட்டிகளில் அடைக்கப்பட்டிருந்த தேயிலையைக் கடலில் கொட்டிவிட்டனர். இந்த 'போஸ்டன் தேயிலை விருந்து' பிரிட்டிஷ் ஆட்சிக்கு விடப்பட்ட அறைகூவலாயிற்று. பாராளுமன்றமும் 'தாங்கொணாச் சட்டங்கள்' என்று அழைக்கப்படும் நான்கு ஒழுங்குமுறைச் சட்டங்களை இயற்றியது. இச் சட்டங்களின் விளைவால், கடலில் எறியப்பட்ட தேயிலைக்குரிய கிரயத்தை மக்கள் கொடுக்கும்வரையில் போஸ்டன் துறைமுகம் மூடியே கிடக்கும்; தாராள மனப்பான்மையைக் காட்டும் சில பகுதிகளை நீக்கி, மெஸ்ஸாசூசெட்ஸ் சாசனம் திருத்தி வெளியிடப்

பட்டது; கடமையை நிறைவேற்றுகையில் வன்முறையைக் கையாண்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் காலனி ஏஜென்டுகள் இங்கிலாந்திலேயே விசாரிக்கப்படுவர்; மெஸ்ஸாசுசெட்ஸில் சிப்பாய்களை நிறுத்திவைப்பதற்காக 1765ஆம் ஆண்டு இயற்றப்பட்ட குவார்ட்டரிங் சட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவந்தனர். கனடாவின் நிருவாகப் பிரச்சினை குறித்து நெடுநாட்களாக ஆய்ந்த பின்னர், ஒரு சட்டமியற்றப்பட்டது. அச் சட்டத்திற்கும் போஸ்டன் நிகழ்ச்சிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அச் சட்டத்தின்படி ஓகியோவிற்கும் பெரும் ஏரிகளுக்குமிடையில் உள்ள நிலப்பகுதியை கியூபெக் மாநிலத்துடன் இணைத்தனர். அச் சட்டத்தினைப் பழிக்குப் பழி வாங்கும் உணர்ச்சியில் அரசாங்கம் இயற்றவில்லை. கியூபெக்குடன் இணைக்கப்பட்ட நிலப்பகுதியின்மீது வர்ஜீனியா, நியூயார்க்கு, கனெக்டிகட், மெஸ்ஸாசுசெட்ஸ் ஆகிய மாநிலங்களுக்கு உரிமையுண்டென்றும், அந்த உரிமையைப் பறிக்கும் விதத்தில்தான் அச் சட்டம் இயற்றப்பட்டது என்றும் காலனிஸ்டுகள் கருதினர். மேலும், சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ரோமன் கத்தோலிக்க மதத்தின் எதேச்சாதிகார ஆட்சியின்கீழ் அப்பகுதி இருக்கும் என்றும் எண்ணினர்.

இத்தகைய சட்டங்கள் இயற்றப்பட்ட பின்னர், புரட்சியை எதிர்பார்த்து ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து நிகழ்ச்சிகள் பல நிகழத் தொடங்கின. 1774ஆம் ஆண்டு டிசம்பர் முதல் தேதி பல்வேறு காலனி சட்டசபைகளும், அமெரிக்கக் கண்டத்து காங்கிரசும் ஒன்று சேர்ந்து மூன்றாவது பகிஷ்காரத்தை ஆரம்பித்தன. வாணிகத் தடையினாலும் இறக்குமதித் தவிர்ப்பியக்கத்தினாலும் பல இழப்புகளுக்கு ஆளாகி அனுபவம் பெற்ற காலனி வியாபாரிகள், வியாபாரிகளல்லாத புரட்சிக்காரர்களின் கைகளைப் பலப்படுத்தத் தயாராக இல்லை. ஆனால், பகிஷ்காரத்திற்கு மக்களின் முழு ஆதரவும் இருந்தது. மற்ற இரண்டையும்விட இந்த மூன்றாவது பகிஷ்காரத்தை இன்னும் நல்ல முறையில் செயற்படுத்தினர். காலனிகளில் ஆங்கிலேய இறக்குமதி 1774-ல் £2,590,000 ஆக இருந்தது. 1775-ல் £201,000 ஆக விழுந்தது. தொழிற் புரட்சி ஏற்படும் தருவாயில் பிரிட்டனின் ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஆங்கிலேய ஆலை நகரங்களுக்கும் கடல் துறைமுகங்களுக்கும் ஏற்பட்ட பலத்த அடியாகும். பாராளுமன்றத்தில் மனுக்கள் வந்து குவிந்தன. மன்னரும் மந்திரிகளும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. 1775ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில், மெஸ்ஸாசுசெட்ஸில் கிளர்ச்சி உருவாகியது. நியூ இங்கிலாந்து

மீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி கிடைக்கவில்லை. நியூ இங்கிலாந்து காலனிகளுக்கும் கிரேட் பிரிட்டன், அயர்லாந்து, பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகள் தவிர்த்த மற்ற நாடுகளுக் கிடையிலும் நடைபெற்ற வர்த்தகத்தைத் தடை செய்தனர். ஏப்ரலில் இத்தடை மற்றக் காலனிகளிலும் அமுலுக்கு வந்தது. ஒன்பது மாதங்கள் கழிந்து, காலனிகளுடன் ஏற்பட்ட எல்லாவிதத் தொடர்புகளும் தடையாயின.

இதுவரையில் குறிப்பிடப்பட்டவைகளிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், கிரேட் பிரிட்டனுடைய வர்த்தகத் திட்டங்களிலிருந்து முகிழ்த்த புரட்சிக்கு அடிப்படையான பொருளாதாரக் காரணங்கள், 'வாதப்பிரதிவாதச் சூட்டில் கிளம்பிய அரசியல் நிகழ்ச்சிகளால்' உருவானவை அல்ல என்பதுதான். காலனி வர்த்தகம் தாயகத் தலைநகர மக்களின் சர்வாதீனத்திற்கு உட்பட்ட சொத்தாகும். இவ் வர்த்தகம் இம் மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். இதுவே மெர்க்கன்டலிசக் கோட்பாடாகும். இக் கோட்பாட்டின் முதிர்ந்த விளைவுகள்தாம் மேலே குறிப்பிட்ட புரட்சியைத் தூண்டும் பொருளாதாரக் காரணங்களாகும்.[6] பியூரிடன்களும் (Puritans), கவெலியரும் (Cavalier), ஸ்டுவர்ட்டும் (Stuart), ஹனோவரியனும் (Hanoverian), விக்கும் (Whig), டோரியும் (Tory) இத் திட்டத்தைத் தொடர்ந்து பின்பற்றியுள்ளனர். மெர்க்கன்டலிசம் ஒரு தவறான கோட்பாடு. அதனைச் செயல்படுத்தும்பொழுது பல தீங்குகள் ஏற்படலாம். இத்தகைய கோட்பாடு ஐரோப்பாவில் ஆட்சி செலுத்தியது. அமெரிக்காவிலிருந்த ஆங்கிலேய நிலப் பெரும்பகுதிக் காலனிகள் இக் கோட்பாட்டிற்கு முதலடி கொடுத்தன.

மேல்திசை நிலப் பிரச்சினை

பிரிட்டனுக்கும், அதன் காலனிகளுக்கும் இடையில் பூசல்கள் ஏற்படக் காரணமாக இருந்தவற்றுள், மேல்திசை நிலத்தைப் பொறுத்தவரையில் 1763-க்குப் பின்னர் பிரிட்டன் அடிக்கடி திட்டத்தை மாற்றிக்கொண்டிருந்ததும் ஒன்றாகும். அதுவரையில், பேராசிரியர் நெட்டல்ஸ் தெளிவுறுத்தியுள்ளதுபோல், ஆங்கிலேய வர்த்தக முதலாளித்துவத்திற்கு ஏற்றவாறு ஒரு நிலத்திட்டத்தை பிரிட்டன் பின்பற்றியது.[7] நிலத்தை விற்பது மூலமாகவும், மனைவரி மூலமாகவும் அரசாங்கத்திற்கு வருமானம் தேடித்

6 C. and M. Beard, op. cit., I, 103.

7 Curtis Nettels, op. cit., p. 602.

தருவதன்று அதன் குறிக்கோள். ஆங்கிலப் பண்டங்களுக்குச் சந்தைகளையும், ஆங்கில வியாபாரிகளுக்கு இலாபத்தினையும் தேடித்தருவதற்குக் குடியேற்றத்தினை ஏற்படுத்துவதுதான் அதன் குறிக்கோளாகும். உண்மையாகவே குடியேறுபவர்களுக்கு சிறுநிலப் பகுதிகளும், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட குடும்பங்களைக் குடியேற்றுவதாக வாக்குறுதியளிக்கும் நில ஊக வணிகருக்குப் பெரிய நிலக்கொடைகளும் வழங்கப்படும். எல்லைப் புறக் குடியேற்றத்தைத் துரிதப்படுத்தி, ஃபிரெஞ்சுக்காரர்களுடைய தொல்லைகளிலிருந்தும், ஸ்பானிஷ் மக்களுடைய ஆபத்துகளிலிருந்தும் தப்பித்துக் கொள்வதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். மேலும், தோல் வியாபாரத்தைப் பெருக்கும் நோக்குடனும் எல்லைப்புறக் குடியேற்றம் விரைவுபடுத்தப்பட்டது.

1763-ல் ஃபிரெஞ்சுத் தொல்லை ஒழிந்தவுடன், எல்லைப்புறக் குடியேற்றத்திற்கான அவசியம் குறைந்தது. அதே ஆண்டில் போன்டியாக் (Pontiac) தலைமையில் இந்தியர்கள் கிளர்ந்தெழுந்து வர்ஜீனியா, பென்சில்வேனியா எல்லைப்புறங்களை அழித்து விட்டனர். என்வே, எல்லைப்புறக் கொள்கையில் மாற்றம் ஏற்பட வேண்டும். பிரிட்டிஷ் திட்டத்தை உருவாக்குகையில் பல பிரச்சினைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. கனடாவின் தோல் வியாபாரம் பிரிட்டனுடைய கைக்கு வந்த பின்னர், மேற்கு எல்லைப்புறக் குடியேற்றத்தைச் சற்று நிறுத்தி வைக்கலாம் என்று பலர் கருதினர்கள். ஏனெனில், எல்லைப்புறக் குடியேற்றம் பெருகிக்கொண்டே போனால், மிகு வருவாய் உடைய தோல் வியாபாரம் அழிந்துவிடும் என்ற அச்சம் ஏற்பட்டது. எல்லையை மேற்கே தள்ளிக்கொண்டே போனால், மலைத்தொடர்களைக் கடக்க அப்பால் வெகு தொலைவிற்குச் செல்ல நேரிடும்; இதனால் எல்லைமீது பிடிப்பு தளர்ந்துவிடும் என்றெல்லாம் ஆங்கிலேய வியாபாரிகளே கருதினர்கள். மேலும், எல்லையை நகர்த்திக்கொண்டே சென்றால் கிழக்கில் குடியேறிய மக்களும் மேற்கு நோக்கி முன்னேறுவர். அதனால், பிரிட்டிஷ் முதலாளிகள் நிறைய முதலீடு செய்துவைத்திருக்கும் கடற்கரைப் பிரதேசத்தில் பாதுகாப்பு இல்லாமற் போய்விடும். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரடிப் பார்வையில்தான் அலெகனிப்பகுதியை வளர்க்க முடியும்; பிரிட்டிஷ் நில ஊக வணிகரும் நிறைய இலாபம் திரட்ட முடியும். 1763-க்குப் பின்னர், இங்கிலாந்தில் காலனி ஊக வாணிபத்தில் மீண்டுமொருமுறை மக்களுக்கு ஊக்கம் ஏற்பட்டது. நில விற்பனை மூலமும் மனைவரி மூலமும் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்பதையும் பிரிட்டிஷ் அரசாங்கம் மறந்துவிடவில்லை. இவற்றைக்கொண்டு காலனி

நிருவாகத்திற்காகும் செலவினை சமாளிக்க முடியும்; ஆங்கில மக்கள்மீது விழும் வரிச்சுமை குறையும்; அதே சமயத்தில் நிதிபற்றிய அரசாங்கக் கொடைகளுக்கெல்லாம் காலனி சட்ட சபைகளை நம்பிக்கிடக்கவேண்டிய அவசியம் ஆங்கிலேயக் காலனி அதிகாரிகளுக்கு இல்லை.

மேற்கிலிருந்தும் வடமேற்கிலிருந்தும் அட்லான்டிக் சமுத்திரத்தை நோக்கி ஓடிவரும் ஆறுகளின் தலைவாயிலுக்கப்பால் உள்ள நிலங்களில் உரிமையையோ, மற்றவற்றையோ வழங்கக் கூடாதென காலனி கவர்னர்களுக்கு 1763-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் உத்தரவிட்டது. அதன் உடனடிக் காரணம், இந்தியர்களைத் திருப்தியுறச் செய்வதாக இருக்கலாம். எனினும், மேலே குறிப்பிட்ட காரணங்களும் பிரிட்டிஷ் அரசாங்க உத்தரவுக்கு அடிப்படையாய் அமைந்தன எனலாம். காலனிஸ்டுகளுக்கு இது புதிதாகும். அமெரிக்க நலன்களை பிரிட்டிஷ் வர்த்தக முதலாளித்துவத்திற்கு அடிமைப்படுத்தும் பிரிட்டிஷ் காலனிக் கொள்கையாகுமிது.

உள்நோக்கம் எதுவாக இருந்தபோதிலும், 1763ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பிரகடனத்தை அமெரிக்கா மிகவும் வெறுத்தது. பழைய காலனிகளில் கொடையாக வழங்கப்படாத நிலங்களைக் குறித்தும், மேல்திசை நிலங்களைக் குறித்தும் 1774-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் விதித்த புதுக் கட்டுப்பாடுகளையும் அமெரிக்கா வெறுத்தது. புதிய நிலக்கொடைமீது விதிக்கப்படும் மானவரி இரட்டிப்பாயிற்று. கவர்னர்கள் இனிமேல் நிலங்களை இனாமாக வழங்கமுடியாது. ஏக்கர் ஒன்றுக்கு ஆறு பென்சுக்குக் குறையாமல் எல்லா நிலங்களையும் ஏலத்திற்கு விடவேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் புதிய பிரகடனமும் புதிய விதிகளும் அமெரிக்காவில் இரண்டு கூட்டத்தினரைப் பாதித்தன. உண்மையான எல்லைப்புறவாசியும் நில ஊக வணிகரும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஆங்கில அரசு ஏற்படுத்திய பல்வேறு கட்டுப்பாடுகளின் காரணமாக, அமெரிக்க வர்த்தக முதலாளிகள் முதலீடு செய்யும் வாய்ப்புகளை இழந்தனர். எனவே, நில ஊக வாணிபமே எளிதில் செய்யக்கூடிய வியாபாரமாயிற்று. இயற்கையாகவும் எளிதாகவும் பணம் திரட்டுவதற்கு ஏற்ற வழியாகவே நில ஊக வாணிபம் இருந்தது. பணம் படைத்தவர்களெல்லாம் அதில் ஈடுபட்டனர். மேல்திசையில் நிலங்களைப் பெறுத காலனிகளில் வாழும் நில ஊக வணிகர், காலனி அரசாங்கங்களைவிட பிரிட்டிஷ் அரசாங்கம் தங்களுடைய வாணிபத்தில் தலையிட்டு மேற்பார்வை செய்வதைக்கண்டு அவ்வளவாக வெறுப்படையவில்லை; என்றாலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின்

புதிய விதிகள் அமெரிக்க நலன்களை மிகவும் பாதிக்கும் என்ற உணர்ச்சி பரவியிருந்தது. தென் பகுதித் தோட்ட முதலாளிகளிடத்தில் இவ்வுணர்ச்சி மிகுதியாகவிருந்தது. மெர்க்கன்டலிச


HUDSON BAY
HUDSON BAY COMPANY
James Bay
Albany R.
Lake of the Woods
L. Nipigon
Lake Superior
Sault Ste. Marie
L. Huron
Lake Michigan
L. Erie
L. Ontario
Detroit
Sandusky
Ottawa R.
Montreal
Quebec
Kingston
Crown Pt.
Ticonderoga
Albany
New York
Boston
Portsmouth
Providence
Hartford
Philadelphia
Baltimore
Annapolis
Halifax
Cape Sable
Louisbourg
Gulf of St. Lawrence
NOVA SCOTIA
Bay of Fundy
Anticosti I.
PROCLAMATION LINE 1763
QUEBEC
PENNSYLVANIA
NEW JERSEY
VIRGINIA
Norfolk
Richmond
NORTH CAROLINA
Cape Hatteras
SOUTH CAROLINA
Wilmington
Cape Fear
Charleston
GEORGIA
Savannah
Altamaha R.
WEST FLORIDA
EAST FLORIDA
St. Augustine
Pensacola
Mobile
New Orleans
GULF OF MEXICO
BAHAMA ISLANDS
CUBA
ATLANTIC OCEAN
Mississippi R.
Tennessee R.
Cumberland R.
Kentucky R.
Ohio R.
Wabash R.
Illinois R.
Kaskaskia
Vincennes
Natchez
Natchez Trace
Tombigbee R.
Chattahoochee R.
Apalachicola R.
Savannah R.
Roanoke
Susquehanna R.
Delaware R.
Hudson R.
Connecticut R.
Kennebec R.
Penobscot R.
Androscoggin R.
Merrimack R.
Piscataqua R.
Lake Champlain
Lake George
Mohawk R.
Genesee R.
Niagara R.
Oswego
Fort Stanwix
Fort Pitt
Fort Chartres
Fort Massac
Fort Toulouse
Fort Bute
Fort Panmure
Fort Dartmouth
Fort Edward Augustus
Fort Frederick
Fort Howe
Fort Cumberland
Fort Gage
Fort Chiswell
Fort Loudoun
Fort Prince George
Fort Charlotte
Fort Dunmore
Fort Pitt
Fort Gower
Fort Jefferson
Fort Nelson
Fort Patrick Henry
Fort Stanwix
Fort Ticonderoga
Fort Crown Pt.
Fort Edward
Fort Howard
Fort Niagara
Fort Oswego
Fort Pownall
Fort Richmond
Fort Shirley
Fort Stanwix
Fort Toulouse
Fort Wilkins
Fort Wilkinson
Fort Wilkinson
Fort Wilkinson

தப்புவதற்கு அமைந்த ஒரே வழி மேல்திசை நிலங்களில் முதலீடு செய்வதும், ஊக வாணிபம் நடத்துவதுமேயாகும். இந்த வழியும் தடைப்படுத்தப்பட்டமையால், புரட்சிக்குப் பலர் தயாராயினர். தென்னகத்துத் தோட்ட முதலாளிகள் தேசப்பற்றுக்கொண்டு புரட்சிக்கு ஆதரவு அளித்ததற்கு இதுவே காரணமாகும். அதே வேளையில், வடக்கில் இருந்த பெரும்பாலன பணக்காரர்கள் டோரிகளாக (Tories) இருந்தனர்.

புரட்சிச் சூழ்நிலை

கப்பல் தொழில், வர்த்தகம், பொறிவழித் தொழில், நாணயம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்திய மெர்க்கன்டலிசத்தைப்பற்றியும், மேல்திசை நிலப் பிரச்சினைபற்றியும் இதுவரை விரிவாக ஆராய்ந்தோம். புரட்சிக்குத் தூண்டுதலாக அமைந்த பொருளாதார, சமூகக் காரணங்களைப்பற்றிய முழுப் படத்தினை அவை விளக்கிக் காட்டவில்லை. தொடக்க காலத்து வரலாற்றுசிரியர்கள் வரி எதிர்ப்பையும், 'பிரதிநிதித்துவம் இல்லையெனில் வரி கொடுக்க மாட்டோம்' என்ற கூச்சலையும் பெரிதுபடுத்திக் காட்டி விட்டார்கள். இதனை மிகைப்படுத்திவிட்டனர் என்பதை நாம் உணர்வோம். அரசியல் முறைப்படி நோக்கின், குடியேற்றக் காலத்திலிருந்தே காலனிகள் வரி செலுத்தியபோதிலும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடையாது என்பது தெளிவாகும். மேலும், 1763ஆம் ஆண்டுக்குப் பின்னர் விதித்த வரிகளெல்லாம் (தேயிலைமீது விதிக்கப்பட்ட சாதாரண வரியைத் தவிர) உடனுக்குடன் நீக்கப்பட்டன; காலனிகளில் எதிர்ப்புத் தோன்றிய உடனேயே வரிகள் நீங்கின.

காலனி வரி விதிப்பாயினும் சரி, ஏகாதிபத்திய வரி விதிப்பாயினும் சரி, மன உணர்வுப்படி மக்கள் அதனை வெறுத்தனர். இத்தகைய வெறுப்பு புரட்சிக்குக் காரணமாக இருந்தது என்பது உண்மைதான். வரி விதிப்பைப் பொறுத்த வரையில் அமெரிக்கருடைய மனப்பாங்கு எவ்வாறு இருந்தது என்பதை காலெண்டரைப் (Callender) போல் வேறு யாரும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டவில்லை. அவர் பின் வருமாறு குறிப்பிட்டார்: 'காலனிகளின் சமூகச் சூழ் நிலையின் காரணமாக உள்நாட்டுத் தேவைகளுக்காகப் போடப்பட்ட வரிகளைத் தவிர மற்ற வரிகள் எல்லாம் செல்வாக்கிழந்தன. ஒழுங்குமுறை இல்லாமல் சிதறிக் கிடக்கின்ற சமூக அமைப்பினைக் கொண்ட காலனிகளில் வரி விதிப்புக்குக் காரணமான அநேக அரசாங்கச் செலவுகளுக்கும், பொதுமக்கள் நலன்களுக்கும் உள்ள தொடர்பினைப் புரிந்து

கொள்ள முடியாது. அமெரிக்கக் கண்டத்தை விட்டு ஃபிரெஞ்சுக் காரர்களை வெளியேற்றிய பின்னர் வரிகள் சுமையாகக் கருதப் பட்டன; தேவையைக் காரணம் காட்டி வரிகளை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. காலனிகளனைத்திலும் மக்களுக்கு வரி செலுத்த விருப்பம் இல்லை என்பது தெளிவு. இங்கிலாந்திலிருந்து பிரிந்து நெடுநாட்களுக்குப் பின்னரும் அமெரிக்க மக்களிடத்தில் குறிப்பிடத்தக்க அம்சங்களில் வரி எதிர்ப்பும் ஒன்றாகவே இருந்தது. உள்நாட்டுப் போர் நிகழும்வரையில், அமெரிக்க ராஜதந்திரிகள் சமாளிக்கவேண்டிய தொல்லைகளில் மக்களின் வரி எதிர்ப்பும் ஒன்றாகும். அமெரிக்க கான்ஃபெடரேஷன் மோதி நொறுங்குவதற்குரிய பாறையாக மக்களுடைய வரி எதிர்ப்பு மனப்பான்மை அமைந்திருந்தது. புதிய அரசாங்கத்தை நிறுவும்பொழுது தீர்வுகாணவேண்டிய முக்கியப் பிரச்சினையாக இதனை ஹாமில்டன் கருதினார். உள்நாட்டுப் போர் ஏற்படும் வரையில் கூட்டாட்சி நிதித்துறையிலும் மாநில நிதித்துறை யிலும் வருவாய்க்குரிய வரிமுறையை ஏற்படுத்துவது எளிதாக இல்லை. வரிப் பளுவைத் தாங்கும் விருப்பம் இல்லாத காரணத் தினால்தான் ஒன்பது மாநிலங்கள் 1840 முதல் 1845 வரை அரசாங்கக் கடன்மீதுள்ள வட்டியினைக் கட்ட முற்படவில்லை. அவற்றில் ஒரு மாநிலம் கடனையே மறுத்துவிட்டது. இவற்றால் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாக, உள்நாட்டுப் போர் நடை பெற்ற காலத்தில் அரசாங்கத்திற்குத் தேவையான வரிகளை விதிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. காலனிகள்மீது இங்கிலாந்து விதித்த சாதாரண வரிகளை வேண்டுமென்றே எதிர்த்தனர். இப்பொழுது நமக்கே புரியாத வகையில் அவ் வெதிர்ப்பு இருந்தது. இதற்குரிய விளக்கமே இங்கு விரிவாகத் தரப்பட்டுள்ளது.[8]

புரட்சிக்கு முன் ஏற்பட்ட பொருளாதார மந்தமே பிரிவினைக் குக் காரணம் என்று நிச்சயமாகக் கூறலாம். ஃபிரெஞ்சுப் போரி னாலும் இந்தியப் போரினாலும் செயற்கையாக ஏற்பட்ட செழிப்பு ஓரளவுக்கு மந்தம் ஏற்படக் காரணமாயிற்று. 1763-1765-ல் இயற்றப்பட்ட வர்த்தக, நிதிபற்றிய சட்டங்களும், இவற்றை அடுத்து ஏற்பட்ட பொருளாதாரச் சுணக்கும் (economic dislocation) இம் மந்தந்திற்கு ஓரளவு காரணமாக அமைந்தன. இப் பொருளாதார மந்தம் ஏற்படுவதற்கு வேறு காரணங்களும் உண்டு. இக் காரணங்கள் காலனிகளைப் பொறுத்தவை மாத்திர மல்ல. இங்கிலாந்திலே தொழிற் புரட்சியும் விவசாயப் புரட்சியும்

[8] G. S. Callender, 'Selections from the Economic History of the United States'. 1765-1860.

ஏற்பட்ட காலமது; அமைதியின்மையும் நிலையில்லாமையும் நிலவிய காலமது. தொழிற்சாலை முறையும் தொழில் முதலாளித்துவமும் பெருமளவில் உருவாகிய உடனே, பொருளாதாரத்தில் பெருஞ்சுழல், ஏற்ற இறக்கங்கள் (cyclical fluctuations) ஏற்பட்டன. தற்பொழுது இவை சாதாரணமாக அடிக்கடி நிகழ்கின்றன. 1766-1774ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் தானிய உற்பத்தி குறைவாக இருந்தமையால் பொருளாதார மந்தம் இன்னும் ஆழமாக ஊன்றியது.

இங்கிலாந்தின் கொடுமையான நாட்களில் ஏற்பட்ட வேதனை அமெரிக்காவைத் தாக்கியது. நியூ இங்கிலாந்திலும் மத்திய காலனிகளிலும் தனியார் இலாபம் ஈட்டும் வகையில் வர்த்தகம் அமைந்திருந்தது. எனவே, இங்கிலாந்தில் மக்கள் வாங்கும் சக்தி குறைந்ததாலும், மெர்க்கன்டலிசம் செயற்படுத்தப்பட்டதாலும் அக் காலனிகளின் வணிகர்கள் செய்யும் வர்த்தகத்திற்கு ஆபத்து வந்தது. மொலாசஸ் சட்டத்தைத் திருத்தி அமலுக்குக் கொண்டுவந்ததால், வியாபாரிகளுக்கும் கப்பல்தொழில் முதலாளிகளுக்கும் தொல்லைகள் ஏற்பட்டன. அவர்களுடைய தீவினை தென் காலனிகளையும் தாக்கிற்று. பத்து ஆண்டுகளில் (1765–1775) நியூ இங்கிலாந்தின் ஏற்றுமதிகள், 1765ஆம் ஆண்டின் மொத்த ஏற்றுமதியையே 1768, 1771-ல்தான் அடைந்தன. 1765ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஐந்து ஆண்டுகளில் இறக்குமதிகள், 1765ஆம் ஆண்டின் இறக்குமதி அளவைக்கூட எட்டிப்பிடிக்க முடியவில்லை. இருந்தபோதிலும், 1770-க்குப் பின்னர் இறக்குமதிகள் அதிகமாயின. புரட்சி முடிவதற்கு முன்னர் நியூயார்க்கிற்கு இங்கிலாந்திலிருந்து வந்த இறக்குமதிகள், 1764ஆம் ஆண்டு இறக்குமதி அளவை ஒரே ஒரு தடவைதான் (1771) நெருங்க முடிந்தது. வர்ஜீனியா, மேரிலாண்டு ஆகிய பகுதிகளின் ஏற்றுமதிகள் 1775ஆம் ஆண்டுவரையில் 1763ஆம் ஆண்டு இறக்குமதி அளவைக்கூட எட்டிப்பிடிக்க முடியவில்லை. வடபகுதியைப்போல தென்பகுதி, பொருளாதாரப் பின்னிறக்கத்தை (economic recesion) நன்கு உணரவில்லை. எனினும், வர்த்தகத்திலுள்ள ஏற்ற இறக்கங்கள் பொருளாதார நிலையின்மையையே குறிக்கும்.

பொளாதார மந்தம் வியாபாரிகளைமட்டுமன்றி விவசாயிகளையும் தாக்கியது. ஒன்றரை நூற்றாண்டுகளாகப் பாழாக்கும் முறைகளைப் பின்பற்றிப் புகையிலை உற்பத்தி செய்தமையால், நிலங்கள் வளங்குன்றின என்பதை புகையிலைத் தோட்ட முதலாளிகள் உணரத் தலைப்பட்டனர். 1758ஆம் ஆண்டிலும்

பின்னரும் புகையிலை உற்பத்தி குறைந்தது; ஏற்றுமதியும் வீழ்ந்தது. வார்ப்பு இரும்பு, இரும்புக் கம்பிகள் ஆகியவற்றின் ஏற்றுமதி காலனி காலத்தில், குறிப்பாக 1771-ல் உச்ச நிலையில் இருந்தது; பின்னர் ஏற்றுமதி குறைந்தது. இம்மாதிரியே மற்றப் பண்டங்களைப் பொறுத்தவரையிலும் ஏற்றுமதி குறைந்துவிட்டது. அரசாங்கக் கொடையின் காரணமாகச் சணல்போன்ற சில பண்டங்களின் ஏற்றுமதி பாதிக்கப்படவில்லை. தொடர்பின்மை முறைப்படி பிரிட்டனை வழிக்குக் கொண்டுவர மூன்று தடவை முயற்சிகள் எடுக்கப்பட்டன. இம் முயற்சிகளின் விளைவால் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் வியாபாரத் துறையில் அமைதியின்மையும் மந்தமும் ஆழ வேரூன்றின. அத்தியாவசியப் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட டவுன்ஷெண்டு வரிகள், போஸ்டன் துறைமுகத்தை மூடியது, நியூ இங்கிலாந்து மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமையைத் தடுக்கும் விதத்தில் கிராண்ட் பாங்குகளை (Grand Banks) மூடியமை ஆகிய ஏகாதிபத்தியத் தவறுகள் காலனிகளில் கிளர்ச்சிகள் ஏற்படக் காரணமாயின. கொடுமையான காலங்களில் நமது நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டே தீரும். காலனி வரலாற்றிலே, பேக்கனின் கிளர்ச்சி ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. புரட்சிக்கு முந்தைய மந்தமும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

தென்பகுதித் தோட்ட முதலாளிகளும், வடபகுதி வியாபாரிகளும் இப் புரட்சியை ஆதரித்தபோதிலும், அமெரிக்கப் புரட்சியில் வர்க்க உணர்வுகளும் வட்டார உணர்வுகளும் தலைதூக்கின. பழைய சமூகத்தைச் சார்ந்த உயர்குடிப் பிறப்பினர் காலனி சட்ட மன்றங்களை ஆட்டிப்படைக்கின்றனர் என்றும், அவர்கள் இங்கிலாந்திடம் விசுவாசம் உள்ளவர்கள் என்றும், எங்கும் அநீதி தாண்டவமாடுகிறது என்றும் எல்லைப்புற வாசிகள் குற்றம் சாட்டினர். கிழக்குப் பகுதியிலுள்ள டோரிகளை எதிர்த்து எல்லைப் புறவாசிகள் கிளர்ந்தெழுந்ததை ஓரளவுக்குக் குறிப்பிடுவதுதான் இப் புரட்சியாகும். எல்லைப்புறத்திலும் கடலோரப் பகுதிகளிலும் வாழ்ந்த ஏழை மக்களும், கீழ்மட்ட, மத்தியதர வர்க்கத்தினரும் அரசில் வாக்குரிமையற்று வாழ்ந்தனர்; அவர்கள் உயர்குடி வர்க்கத்தினரைப் பாதுகாக்கும் வகையில் தலைமூப்புரிமை, நில உடைமைக் கட்டுப்பாடு (entail) ஆகியவற்றை உள்ளடக்கிய நிலச்சட்டங்களை எதிர்த்தனர்; பணக்கார நில ஊக வணிகருக்கு வசதியளிக்கும் நில அமைப்பு முறையைக் கண்டு உள்ளம் வெதும்பினர்; தங்களை அழுத்திவைக்கும் சமூக, பொருளாதார அமைப்பினைக் கண்டு மனம் கூசினர். வாக்குரிமையற்றவர்களும், சலுகைகள் பெறுதவர்களும் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்க

வேண்டியது போலவே உள்நாட்டு உயர்குடி வர்க்கத்தினரின் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் ஒழிக்க வேண்டும் என்று விரும்பினர். ஒரு வரலாற்றுசிரியர் பொருத்தமாகக் குறிப்பிட்டுள்ளதுபோல, 'தாயக ஆட்சியை ஒழிப்பதோடு உள்நாட்டில் எத்தகைய ஆட்சியை ஏற்படுத்துவது என்பதைப்பற்றியும் முடிவு எடுப்பதே புரட்சியின் நோக்கமாகும்.'[9]

பல வாரங்கள் மிகவும் சோர்வுடன் கப்பலில் பயணஞ்செய்து, 3,000 மைல்களுக்கு அப்பாலுள்ள அமெரிக்கக் கண்டத்தை முதல் ஆங்கிலேயன் அடைந்தபின்னர், 150 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இச் சூழ்நிலைகளில், தொல்லைகள் பெருகினால், ஒரு தலைமுறைக்குப் பின்னர் தாயகத்தின்மீதுள்ள விசுவாசம் குறையாமல் இருக்கும் என்று சொல்ல முடியாது. மக்கள் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கினர் ஹாலண்டு, ஜெர்மனி, ஸ்வீடன், அல்ஸ்டர், தென் அயர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் கிரேட் பிரிட்டனை வெறுப்பவர்கள் ஆவர். நியூ இங்கிலாந்து மக்களில் பெரும்பாலோர் ஆங்கிலேயர்களின் வழிவந்தவர்கள் தாம்; என்றாலும், அக்காலத்து வரலாற்றுசிரியர் குறிப்பிட்டது போல, 'அவர்களுக்குத் தாயகத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது; தாயகம் தொலைவில் உள்ள ஓர் அரசாங்கம் என்றும், சென்ற நூற்றாண்டில் தாயக ஆட்சியாளர், தங்களுடைய முன்னோர்களைத் தொல்லைப்படுத்தி நாடு கடத்திவிட்டனர் என்றும், வெளியேறியவர்கள் அமெரிக்கக் காடுகளிலேயே தஞ்சம் புகுந்தனர் என்றும் மட்டுமே அவர்களுக்குத் தெரியும்.'[10] புது சமூகத்தினரிடம் போர்க்குணமும் தன்னிச்சையாக வாழவேண்டும் என்ற துடிப்பும் இருந்தன. இவற்றுடன் மேலே குறிப்பிட்ட காரணங்களும் சேரவே, ஆங்கிலேயர்களுடைய ஆதரவு தங்களுக்குத் தேவையில்லை என்று அவர்கள் கருதினார்கள். ஆங்கிலேயருக்கும் அமெரிக்கருக்கும் இடையில் உள்ள தொடர்பு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது. தன்னிச்சை சமுதாய விழிப்புணர்வு அமெரிக்கரிடத்தில் ஏற்பட்டது. இங்கிலாந்து நாட்டின் திருச்சபைக்குக் காலனிகளிலும் அதிகாரம் உண்டு என்ற நிலை ஏற்படுவதுபோல் தெரிந்த உடனேயே, காலனிகளில் எதிர்ப்புப் புயல் உருவாகிவிட்டது. காலனி அரசாங்கங்களுடைய அதிகாரங்களை கிரேட் பிரிட்டன் வரையறுக்க

9 கார்ல் பீச்சர், (Carl Becker), in 'American Historical Review,' Vol. XXIX, No. 2, P. 345.

10 டேவிட் ராம்சே, (David Ramsay), 'History of the American Revolution' (1811, ed.), I, 43-44.

முயற்சித்த உடனேயே காலனி மக்களுடைய சுதந்திரத்தையும் உரிமைகளையும் பறிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் சூழ்ச்சி செய்கிறது என்பதாகக் கூச்சலிட்டனர். புரட்சிக் காலம் வரையில் அமெரிக்காவில் குடியேறியவர்கள் யாருடைய துணையுமின்றி, அயலாருடைய குறுக்கீடுமின்றித் தங்களுடைய தலைவிதியைத் தாங்களே நிர்ணயித்துக்கொண்டனர். இதே முறையில் இருப்பதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு; இச் சூழ்நிலையை மாற்றிக் கொள்ளவும் அவர்கள் விரும்பவில்லை.

இதுவரையில் விளக்கப்பட்ட செய்திகளினின்றும் தெரிவது என்னவென்றால், ஆங்கில நாட்டுக் கொடுங்கோல் மன்னன், தான் இழந்த அதிகாரத்தை மீண்டுமடைய முயற்சித்த காரணத்தால்தான் புரட்சி ஏற்பட்டது என்ற பழைய கொள்கையும், பிரதிநிதித்துவம் இல்லையேல், வரி கொடுக்க முடியாது என்று மக்கள் முழக்கமிட்டுக் கிளர்ச்சி செய்ததால்தான் புரட்சி ஏற்பட்டது என்ற விளக்கமும் சரியல்ல என்பதுதான்.[11] ஆழமாகப் பதிந்துள்ள சில அடிப்படைக் காரணங்களும் உண்டு. பியர்ட்ஸ் (Beards) பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்; '100 ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து வந்துள்ள ஆங்கில நாட்டு சாசனங்களையும் மாநில சாசனங்களையும் படித்துப் பார்த்தால், தாயகத் தலைநகருக்கும் மாநிலங்களுக்கும் இடையில் ஏற்பட்ட எண்ணற்ற சச்சரவுகள் விளக்கும் அதிகாரபூர்வமான பத்திரங்களைக் கவனித்தால், அமெரிக்கப் புரட்சிக்குக் காரணம் பிடிவாதக்கார மன்னனும், பல்லை இளிக்கின்ற மந்திரிகளும்தாம் என்று ஒரு கருத்து நிலவுவது ஒரு சிறிய வேடிக்கையாகும். மூன்றும் ஜார்ஜ் பட்டத்திற்கு வருவதற்கு முன்னரே, கிரென்வில் தலைமையை எடுத்துக்கொள்வதற்கு முன்னரே, ஆயிரக் கணக்கான அமெரிக்கர்கள் ஆங்கிலேயப் பொருளாதார ஏகாதிபத்தியத்துடன் மோதிப் பார்த்திருக்கிறார்கள். 18ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்திலேயே ஃபிராங்க்ளின் போன்ற தீர்க்கதரிசனம் உடைய மக்கள், இச் சண்டையினுடைய சாரம் எது என்பதைக் கண்டுபிடித்துள்ளனர். சுதந்திரம் விரும்பத் தக்கதுதான் என்ற உணர்வைத் தரும் மனப்பக்குவ வளர்ச்சி, ஒரு நீண்ட காலப் படிமுறையில் (process) உருவாக்குவதுதான்.

11 காலனிகளில் வளர்ந்துவரும் வர்த்தக முதலாளித்துவத்தைத் தடுக்க பிரிட்டிஷ் அரசாங்கம் மெர்க்கன்டலிசக் கட்டுப்பாடுகளைப்புகுத்தியதால்தான் புரட்சி ஏற்பட்டது என்று ஓர் அருமையான கட்டுரையில் லூயி ஹேக்கர் (Louis Hacker) விளக்கியுள்ளார். இத் திட்டம் 17ஆம் நூற்றாண்டில் கொஞ்சம் அருவருப்பைத் தந்தது; 18ஆம் நூற்றாண்டில் வளர்ந்து, நிலப்பெரும்பகுதி காலனிகளில் உள்ள செழிப்பினை அழித்துவிடும் நிலைமைக்கு முன்னேறியது. L. M. Hocker, 'The First American Revolution,' Columbia University Quarterly, XXVII. 259—295 (1935)

பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஜான் ஆடம்ஸ் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டதுபோல, 'போர் ஆரம்பமாவதற்கு முன்பே புரட்சி ஏற்பட்டுவிட்டது;' புரட்சி 'மக்களுடை கருத்துகளிலும் நெஞ்சங்களிலும் ஆட்சி புரிந்தது.'[12]

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

பியர்டு, சி. & எம். (Beard, C. and M.), 'Rise of American Civilization', Chap. 5.

நெட்டில்ஸ், கர்டிஸ். (Nettels, Curtis), 'The Roots of American Civilization,' Chaps. 22-24.

ஹேக்கர், லூயிஸ் (Hacker, Louis), 'The Triumph of American Copitalism,' Chaps. 11-12.

வான்டைன், சி. ஹெச். (Van Tyne, C. H-), 'The Causes of The War of Independence', Chaps. 1, 3, 5, 7, 10, 11.

பீர், ஜி. எல். (Beer, G. L.) 'British Colonial Policy 1754—1765', Introduction, and Chaps. 1, 13-15.

ஜான்சன், ஈ. ஆர். (Johnson. E. R., et al.), History of Domestic and Foreign trs Commerce the United States, Vol. I, Chap. 3.

[12] Works, X. 282.

8. புரட்சியின் பொருளாதாரக் கூறுகள்

வர்க்க, சமூகப் பிரிவுகள்

தாயக அரசாங்கத்திற்கும் காலனிஸ்டுகளுக்கும் அடிப்படை வேற்றுமைகளும், நீண்ட நாட்களாக மோதலும் இருந்தபோதிலும் அமெரிக்கர்களனைவரும் ஒன்றுகூடி ஒருமித்த நிலையில் சுதந்திரத்தைக் கோரவில்லை. போர் தொடங்கியவுடன், அரசாங்கத் திட்டத்தை ஆதரிக்கும் டோரிகளில் பெரும்பாலோர் புரட்சிக்கு ஆதரவாயிருந்தனர். 1776-க்குப் பின்னர், அவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. காலனிஸ்டுகளில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கினர் கிரேட் பிரிட்டனிடம் விசுவாசம் உள்ளவர்கள் என்று ஜான் ஆடம்ஸ் கருதுகிறார். பொதுவாகக் கூறுமிடத்து, டோரிகளைச் சார்ந்த குழுக்கள் பின்வருமாறு:— (1) ராயல் கவர்னர்களுடைய நண்பர்களும், கவர்னர்களுடைய அரசியலையும் வியாபாரத்தையும் பின்பற்றுபவர்களும், கவர்னர்களது தயவில் வாழ்பவர்களுமாவர்; (2) ஆங்கிலச் சட்டத்திற்குப் புறம்பான வழியில் செல்லாமலேயே இலாபத்தைத் தரக்கூடிய வர்த்தகத்தில் ஈடுபட்டும், கள்ளக் கடத்தலில் ஈடுபடாமலும் இருந்த நியூ இங்கிலாந்து, மத்திய காலனிகள் ஆகிய பகுதிகளைச்சார்ந்த வர்த்தகர்கள்; (3) தென் னூட்டுக் காலனிகளைச் சார்ந்த தோட்ட முதலாளிகளில் பலர்; (4) இங்கிலாந்தின் திருச்சபையைச் சார்ந்த மதகுருக்களும், வடபகுதிகளில் அதே மதப் பிரிவைச் சார்ந்த தொண்டர்களுமாவர்; (5) தொழில்களில் ஈடுபட்டுள்ள வர்க்கத்தினரில் பசையுடன் வாழும் பலர். இத்துடன் இருக்கும் சூழ்நிலையை அப்படியே ஏற்றுக்கொண்டு, மாற்றம் விழையாத இயற்கையான பழமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் மக்கள் பெருவாரியான அளவில் இருந்தனர். போஸ்டனிலிருந்து சார்லஸ்டன் கரோலினா வரையில் பரவியுள்ள கடற்கரைப் பட்டினங்களில்

பண்பாடும், செல்வாக்கும், பணமும் படைத்த பெருமக்கள் வாழ்ந்தனர். அப் பெருமக்களும் லாயலிஸ்டுகள் (Loyalists) ஆவர்.

ஹான்காக் போன்ற பணக்கார வியாபாரிகளும், மாரிஸ் போன்ற பாங்கு முதலாளிகளும், வாஷிங்டன் போன்ற உயர்குடி வர்க்கத் தோட்ட முதலாளிகளும் விக்குகளே (Whigs) அல்லது தேசபக்தர்களேத் (Patriots) தலைமை வகித்து நடத்தியபோதிலும், உயர்குடியைச் சாராத மத்தியதர வர்க்கத்தினரும் ஏழை மக்களும் ஆகிய சாமான்ய மக்கள்தாம்[1] புரட்சியின் முழு பலத்திற்கே காரணமாவார்கள். 'ஆங்கில அரசாங்கத்திற்கும் காலனிகளுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடுவதைவிட அட்லான்டிக் சமுத்திரத்தின் இரு பக்கங்களிலுமுள்ள ஆங்கில மக்களின் பிரிவினைகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள சண்டையின் ஒரு கூறுதான்', இப் புரட்சி என்று ஆராய்ச்சியாளர்கள் சிலர் கருதுகின்றனர். 'உண்மையில், உலகம் முழுவதும் சமூக வர்க்கத்தினரிடையே நடைபெற்று வரும் சண்டைகளின் வகையைச் சார்ந்ததே'[2] இப் புரட்சி என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். எல்லோப்புற மக்களில் பெரும்பாலோர் இப் புரட்சிக்கு முழு ஆதரவு தந்துள்ளனர். மங்கிவரும் நிலப்பிரபுத்துவத்தையும் வளர்ந்துவரும் முதலாளித்துவத்தையும் எதிர்த்து விவசாய வாழ்வை மேற்கொண்டுள்ள எல்லோப்புற மக்கள் அறைகூவலிடுகின்றனர். புரட்சிகரமான மேல்நாட்டு இலட்சியங்கள்தாம் பிரிவினையைத் தூண்டிவிட்டுள்ளன.[3] தம்முடைய நிலையை நன்கு புரிந்துகொண்டு, பிரச்சாரத்திலே தீவிரமாக ஈடுபட்டுச் சுதந்திரத்தை வாங்கித் தந்தவர்கள் சாமான்யமான சிறுபான்மையினரே ஆவர். ராம்சே (Ramsay) குறிப்பிடுவது போல, 'காங்கிரசின் நண்பர்களிடத்தில் ஓர் எழுச்சி இருக்கிறது'. மன்னராட்சியை வலியுறுத்துபவர்களிடத்தில் அவ்வெழுச்சி கிடையாது.'[4]

புரட்சியினுடைய வரலாற்றேட்டிலேயே மிக வருந்தத்தக்க பகுதி எதுவெனில், அருகிலிருப்பவர்கள் தங்களுக்குள்ளாகவே

[1] ஜே. எப். ஜேம்சன் (J. F. Jameson), 'The American Revolution Considered as a Social Movement', p. 25.

[2] எ. எம். சைமன்ஸ் (A. M. Simons), 'Social Forces in American History', p. 70.

[3] பெட்ரிக் ஹென்ரியின் (Patrick Henry) வாழ்க்கையும் தத்துவமும் உள்நாட்டு நலன்களுக்கும் கடற்கரைப் பகுதி நலன்களுக்கும் உள்ள வேற்றுமைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன (W. W. Henry, 'Petrick Henry: Life, Correspondence and Speeches' (3 Vols. 1891).

[4] டேவிட் ராம்சே. (David Ramsay), History of South Carolina from its first Settlement in 1670 to the Year 1808,'(2 Vols. in one, 1858), I, 147.

அடித்துக்கொள்ளும் விதத்தில் நடைபெற்ற உள்நாட்டுப் போர் தான். பிரிட்டிஷ் காலாட்படையிலும் கப்பற்படையிலும் 30,000 முதல் 50,000 வரையில் டோரிகள் சேர்ந்து பணியாற்றினர். நியூயார்க்கைச் சேர்ந்தவர்கள் மட்டும் 15,000 பேர்கள் இருந்தனர். ஒழுங்காக நிரந்தரப் படைகளில் சேர விரும்பாதவர்கள், மன்னனின் ஆணைபெற்று நாட்டுப் படைகளை ஏற்படுத்தினர். இப் படைகள் இந்தியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுமையான, பயனற்ற சண்டைகளில் ஈடுபட்டன. வியோமிங் (Wyoming), சொரி பள்ளத்தாக்கு ஆகிய இடங்களில் நடந்த படுகொலைகள் இந்த வகையைச் சார்ந்தவையே. இவை போன்ற காரியங்களில் ஈடுபடும் தேசபக்தர்களுடைய போக்குக்குச் சமமாகவே நியூயார்க்கை மையமாக்கிக்கொண்ட, மன்னரிடத்தில் விசுவாசம் உடைய லாயலிஸ்டுகளும் நடந்துகொண்டனர். 1779ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கனெக்டிகட்டிலுள்ள கடற்கரைப் பட்டினங்கள்மீது கவர்னர் டிரையன் (Governor Tryan) படையெடுத்து ஃபேர்ஃபீல்டு (Fairfield), நார்வாக் (Norwalk) பகுதிகளைத் தீக்கிரையாக்கினர். டோரிகள் நடத்திய போர்களிலேயே இது மிகவும் கொடுமையானதாகும். தேசபக்தர்களும் டோரிகளும் சந்தித்த இடங்களிலெல்லாம் நடத்திய போர்கள் உக்கிரமானவைகளாகும்.

பிரிட்டிஷ் படையின் பாதுகாப்பு இல்லாதபொழுதெல்லாம் டோரிகள் மிகவும் தொல்லைப்பட்டனர்; அவர்களுக்குப் பிரஜா உரிமை கிடையாது என்று புதிய மாநில அரசியல் சட்டங்கள் தெரிவித்தன; தங்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைந்தெறிய சட்டபூர்வமான பாதுகாப்பில்லை; தாங்கள் வெறுத்தொதுக்கிய இலட்சியத்திற்கு அவ்வப்பொழுது அவர்கள் பணம் வழங்க வேண்டும் என்று சட்டங்கள் அறிவித்தன; அதே நேரத்தில் பேச்சுரிமையும், எழுத்துரிமையும் அவர்களுக்குக் கிடையாது. தேசபக்தி இல்லை என்று யாரேனும் சந்தேகிக்கப்பட்டால், அவரைத் தார் பூசியோ, சிறையிலிட்டோ, நாட்டை விட்டு விரட்டியோ, சொத்துகளைப் பறிமுதல் செய்தோ, மரண தண்டனை விதித்தோ பழிவாங்கலாம். பிரிட்டிஷ் படைக்கு ஆதரவு தந்துவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக லாயலிஸ்டுகள் எனும் மன்னரின் விசுவாசிகளைத் தேசபக்தர்கள் உள்நாட்டுப் பகுதிகளுக்குத் துரத்திவிட்டனர். 11,000 டோரி அகதிகள் 1776, மார்ச் மாதம் ஹாலிஃபாக்ஸ் (Halifox) பகுதிக்குச் சென்றனர். 1778-ல் 3,000 டோரிகள் ஃபிலடெல்பியாவை விட்டு வெளியேறினர். குறைந்தபட்சம் 35,000 டோரிகள் (1,00,000 பேர்கள் என்று சிலர் நம்பு

கிருர்கள்) கனடாவிற்குச் சென்று ஒரு புதிய ஆங்கிலேய காமன்வெல்த்தை நிறுவினர்கள். போர்க்காலத்தில் பதின்மூன்று காலனிகளோவிட்டு வெளியேறிய டோரிகள்தாம் பிரிட்டிஷ் கனடாவைப் படைத்தார்கள்.

இவ்வளவு உணர்ச்சி பேதங்களுக்கிடையில் போரினைத் திறமையுடன் நடத்துவது கடினமே. இங்கிலாந்தைவிட்டு விலகப் பிரிவினை தேவை என்பதிலும் ஒருமித்த கருத்துக் கிடையாது; காலனிகளுக்கிடையில் ஒற்றுமையும் கிடையாது. பதின்மூன்று மாநிலங்களும் ஒன்றை ஒன்று பார்த்துப் பொருமைகொண்டன; ஒவ்வொரு மாநிலமும் சுயநலத்திலேயே நாட்டம் கொண்டிருந்தது. எனவே, இம் மாநிலங்களுக்கிடையில் புரட்சியை நடத்தப் போதுமான அதிகாரங்களோக்கொண்ட அமைப்பினை உருவாக்கவோ அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டவோ முடியவில்லை. பொதுவான இலட்சியமும் பொது எதிரியும் தெளிவாகக் கண்களுக்குத் தென்பட்டமையால், போர்க்களத்திலேயே, படையை நிறுத்திப் போரிட முடிந்தது. போரை நடத்தும் கடமையை அமெரிக்கக் கண்டத்துக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்ட போதிலும், அக் கடமையைச் செயல்படுத்தும் அளவுக்கு அதிகாரத்தைப் பெறவில்லை. காங்கிரஸ் வரி விதிக்க முடியாது; இவ்வளவு வரி தேவை என்று மாநிலங்களுக்குக் கூறி, மாநிலங்களிடமிருந்து பணத்தைப் பெறும் வாய்ப்புதான் காங்கிரசுக்கு உண்டு. ஒன்றுபட்ட அரசாங்கத்தை நிறுவி, முழு அதிகாரத்தையும் ஒரு மத்திய அமைப்பிற்கு அளித்துவிடுவதை அடிப்படையாகக் கொண்டு திட்டம் வகுத்த முயற்சிகள் யாவும் 1781 வரை வெற்றி பெறவில்லை. பணம் தேவை எனக் கோரும் காங்கிரசின் வேண்டுகோளை மாநிலங்கள் புறக்கணித்தன; அல்லது சில சமயங்களில் தங்களால் முடிந்தவற்றைச் செய்தன. அதே வேளையில், தங்களுடைய பாதுகாப்பிற்காகப் படையினை வைத்துக் கொள்ள அனேக மாநிலங்கள் விரும்பின. போரின் வெற்றி அமெரிக்கக் கண்டத்துப் படையைப் பொறுத்தது என்றாலும், போதுமான அதிகாரங்கள் பெறுத மாநிலப் பிரதிநிதிகளால் சிப்பாய்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொருளாதார, சமூக மாற்றங்கள்

அமெரிக்கப் புரட்சி, பொருளாதாரப் புரட்சியாகவும் அரசியல் புரட்சியாகவும் வடிவெடுத்தது. 1789ஆம் ஆண்டு நடைபெற்ற ஃபிரெஞ்சுப் புரட்சியும், 1917ஆம் ஆண்டு நடைபெற்ற ரஷ்யப் புரட்சியும் பெரிய எஸ்டேட்டுகளை உடைத்து, விவசாயப் பொருளாதாரத்தில் பெரும் மாறுதலை விளைவித்தன. அவ்வாறே,

பதின்மூன்று காலனிகளும் 1775—1781-ல் நிலவமைப்பு முறையில் உண்மையான மாறுதலை உண்டாக்கின. நாட்டுக்குப் பொருந்தாத எந்த அமைப்பும் புரட்சி ஏற்படின் ஒழிந்துபோய் விடும் என்பது உண்மையாகும். ஒன்றரை நூற்றாண்டுகளாக, அமெரிக்காவில் பழைய உலகத்தின் நிலப்பிரபுத்துவ முறையைப் புகுத்தவேண்டும் என்று ஐரோப்பியர்கள் முயன்றனர். பெரும்பாலான காலனிகளில் பெரிய எஸ்டேட்டுகள் ஏற்பட்டன. 1769-ல் வெஸ்ட் செஸ்டர் (Westchester), நியூயார்க் பகுதிகளில் வாழ்ந்த மக்களில் ஆறில் ஐந்து பகுதியினர் நிலச்சுவான்தார் பண்ணைகளில் வசித்தனர். டோரிகள் வெளியேறியமையால், நாட்டில் பழமையாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது; நகரசபைகள் புதுக் கொள்கைகள் உடையவர்கள் கைகளுக்கு மாறின; பெரும் நில உடைமைகள் துண்டுகள் ஆக்கப்பட்டன. லாயலிஸ்டுகளின் சொத்துகளைப் பறிமுதல்செய்து விற்றுக் கிடைத்த பணத்தை மாநிலங்கள் கண்டத்துக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யவேண்டுமென 1777, நவம்பரில் காங்கிரஸ் கோரியது. கவர்னர் வென்ட்வர்த் அவர்களுடைய எஸ்டேட்டையும் சேர்த்து 28 எஸ்டேட்டுகளை நியூ ஹாம்ஷைர் கைப்பற்றியது. கடற்கரையில் முப்பது மைல்கள் பரப்புள்ள பெப்பெரல் (Pepperell) எஸ்டேட்டையும், இங்கிலாந்துக்கு ஆதரவாகப் போரில் கலந்துகொண்டவர்களுடைய நிலங்களையும் மெஸ்ஸாசுசெட்ஸ் பறிமுதல் செய்தது. நியூயார்க் மாநிலத்தில் சர் ஜான் ஜான்சனுடைய 50,000 ஏக்கர்கள் உள்ள நிலப்பிரபுத்துவப் பண்ணையையும், 300 சதுரமைல் பரப்புள்ள பிலிப்ஸ் நிலப்பிரபுத்துவப் பண்ணையையும், மாரிஸ் எஸ்டேட்டையும், வேறு அநேக நிலங்களையும் பறித்துத் துண்டாக்கி விற்றனர். சாதாரணமாக 500 ஏக்கர்களுக்குள் அடங்குமாறு நிலத்தைத் துண்டிட்டனர். எல்லா இடங்களிலும் மன்னருடைய சொத்துகளையும் நில உடைமையாளர்களுடைய சொத்துகளையும் கைப்பற்றினர். பென்சில்வேனியா எடுத்துக்கொண்ட பென் எஸ்டேட் மட்டுமே ஒரு மில்லியன் பவுன் ஸ்டர்லிங் பெறுமானம் உடையது.[5] இழந்துவிட்ட எஸ்டேட்டிற்கு 31,60,000 ஸ்பானிஷ் டாலர்களை நியூயார்க் மாநிலம் அடைந்தது. ஃபிரான்சில் புரட்சிக் காலத்தில், 'ஒரு காலத்தில் பெருமையுடன் இருந்த உயர்குடி வர்க்கத்தினரின் இடங்களை வழக்கறிஞர்களும் பணம்படைத்த வியாபாரிகளும் பிடித்துக்கொண்டதுபோலவே, ஐக்கிய அமெரிக்காவில் புரட்சிக் காலத்திலும் அதன் பின்னரும், கணக்கங்களிலும் விவசாயத்

5 பின்னர், நஷ்டஈடாகப் பென் குடும்பத்தாருக்குப் பென்சில்வேனியா £1,80,000 கொடுத்தது.

திலும் ஈடுபட்டிருந்த சாதாரண மக்கள், ஜெஸ்ஸப்ஸ் (Jessups), டி லேன்சீஸ் (De Lanceys), மாரீஸ் (Morris) போன்ற பெருமக்களுடைய இடங்களைப் பிடித்துக்கொண்டனர்.'[6]

மன்னர்களுடைய எஸ்டேட்டுகளையும், டோரிகளுடைய எஸ்டேட்டுகளையும் பறிமுதல் செய்து துண்டாக்கியபோதிலும், பெரும் எஸ்டேட்டுகள் முழுதும் அழிந்துவிடவில்லை; புரட்சிக்கு முன் பரவியிருந்த நில ஊக வாணிபமும் மறைந்துவிடவில்லை. கிழக்குப் பகுதிகளிலும் மேற்குப் பிரதேசங்களிலும் நில ஊக வாணிபம் நிலவியது உண்மைதான். மேற்கே நிலங்களை உடைய மாநிலங்கள் சிப்பாய்களுக்கு நிலம் வழங்கின. சிப்பாய்களிடமிருந்து இந் நிலங்களை மீண்டும் வாங்கி, ஒன்று சேர்த்து பெரும் நிலங்களாக்கினர். போராட்ட காலத்தில் மாநிலக் கடன்களை அடைக்கவேண்டி, வர்ஜீனியா தரிசு நிலங்களை விற்றது; நில ஊக வாணிபத்தையும் ஊக்குவித்தது. நெஸ்டெல்ஸ் குறிப்பிடுவதுபோலத் தங்களுடைய நலனுக்கு ஏற்றவாறு மாநிலச் சட்டங்களை வளைத்துக்கொண்டு, 'இடம்பெயர்ந்து செல்ல விரும்பாத அல்லது செல்லமுடியாத சிப்பாய்களின் நிலக்கொடை உத்தரவாதங்களை (bounty warrants) ஊகவணிகர் கழிவு நீக்கிக் குறைந்த விலைக்கு வாங்கினர். நிலத்தைத் தாங்களே முதலில் வாங்கும் உரிமையினைப் பெறுவதற்காகப் பணியாட்களை அனுப்பிவைத்தனர். மதிப்பிறங்கிய நாணயத்தில் மதிப்பிடப்பட்ட மாநிலக் கடன் பத்திரங்களை நில உரிமைகளாக மாற்றிக்கொண்டனர். 1,40,000 ஏக்கர்களைக் கொண்ட எஸ்டேட்டுகள் ஏற்பட்டன.'[7] அலகெனிகளுக்கு அப்பால் உள்ள எல்லா நிலங்களும் விலைபோயின; எனவே, மேற்கு நோக்கி முன்னேறி வருபவர்களுக்கு எளிதாக நிலம் கிடைக்கவில்லை.

நிலங்கள் பறிமுதலாகிச் சிறுசிறு துண்டுகளாக வெட்டுண்டு விவசாயப் புரட்சி ஏற்பட்டது போலவே, ஜனநாயக அடிப்படையில் நில உரிமை முறை ஏற்படும் வகையில் சமுதாயப் புரட்சியும் உருவாகியது. மன்னர் வரிகள் முதலில் ஒழிந்தன. 1786-ல் இரண்டு மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களிலெல்லாம் நில உடைமைக் கட்டுப்பாடு (entail) அறவே நீங்கிற்று;

[6] C. & M. Beard, 'Rise of American Civilization', I, 294. தாங்கள் $4,00,00,000-ஐ இழந்துவிட்டதாக டோரிகள் குறிப்பிட்டனர்; பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களுக்கு $1,50,00,000 வழங்கியது.

[7] கர்டிஸ் நெட்டில்ஸ் (Curtis Nettels), 'The Roots of American Civilization', p. 684.

1800-ல் தலைமுப்புரிமையும் ஒழிந்தது ; சமத்துவமும் சொத்துப் பேறும் (inheritance) சட்டங்களாக முகிழ்த்தன. 1776-ல் இயற்றப்பெற்ற ஜெஃப்பர்சனின் சட்டப்படி, வர்ஜீனியாவில் அரை அல்லது முக்கால்பங்கு நிலங்கள் தயார் செய்யப்பட்டன.[8] ஜனநாயக சமுதாயத்தைப் படைப்பதில் இச் சட்டங்களுக்குள்ள முக்கியத்துவத்தை யாவரும் உணர முடியும். போர் முடிந்த பிறகுதான் இத்தகைய காரியங்கள் நடைபெற்றன என்பதையும் உணரவேண்டும். போர் முடிந்துமிருக்கலாம் ; ஆனால், புரட்சி அப்பொழுதுதான் தொடங்கியது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொடுங்கோன்மை நிறைந்த வழி முறைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில்தான் கிளர்ச்சி கிளம்பிற்று. எனவே, மாநிலத்தில் உருவான புதிய அரசியல் சட்டங்களிலெல்லாம் 'மனிதனுடைய இயற்கையான உரிமை' களை வலியுறுத்தும் உணர்ச்சிகள் பிரதிபலித்தன ; நல்வாழ்க்கை, சுதந்திரம், இன்பம் தேடி அடைதல், பேச்சுரிமை, பத்திரிகை உரிமை, மத உரிமை, ஆளப்படுபவரின் இசைவு பெருவிடின் வரி விதிக்கக்கூடாது என்ற கொள்கை, ஜூரி வழக்கு விசாரணை முறை, இன்ன பிற மனித இயற்கை உரிமைகளை எல்லாம் அவ் வரசியல் சட்டங்கள் ஏற்றுக்கொண்டன. கொள்கையைப் பொறுத்த அளவில் ஜனநாயகம் முன்னேறியது. ஆனால், நடை முறையில் வேறுவிதமாகத்தான் இருந்தது. ஜனநாயகத்தின் தீவிரமான போக்கைக் கட்டுப்படுத்தக்கூடிய அநேக வழி முறைகள் வழக்கில் இருந்தன. நிலச் சொந்தக்காரர்களுக்கும், வரி போடுவதற்குரிய சொத்துகளை உடையவர்களுக்குமட்டுமே வாக்குரிமையும் அதிகாரத்தில் அமரும் வாய்ப்பும் உண்டு. ஐந்து பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில்கூட வாக்குரிமை அமைய வில்லை. புதிய அரசியல் சட்டங்களில் தாராள மனப்பான்மை குறைந்த ஷரத்துகள் அடங்கியிருந்தபோதிலும், சமூகம் முன்னேறிக்கொண்டிருந்தது என்பது தெளிவு. டோரிகள் வெளி யேறிய பின்னர், பழைமையாளர்களின் வலிமை குன்றி, ஜெஃப் பர்சன் போன்ற புரட்சிக்காரர்களின் கை ஓங்கிற்று. போர்க் காலத்தில் அடிமைமுறை எதிர்ப்பு இயக்கம் வளர்ந்தது. அந்த

8 1818ஆம் ஆண்டு, அக்டோபர் 28-ல் வர்ஜீனியாவில் உள்ள மான்டி செல்லோவில் இருந்து ஜான் ஆடம்சுக்கு ஜெஃப்பர்சன் எழுதிய கடிதத்தில், 'நில உடைமைக் கட்டுப்பாட்டையும் தலைமுப்புரிமையையும் ஒழிக்கும் சட்டங்களை நான் இயற்றினேன். அவை போல் உயர்குடிப்பிறப்பின் வேரினை வெட்டிவிட்டன' என்று குறிப்பிடுகிறார். 'Paul Leicester Ford (ed.), Writings of Thomas Jefferson' (1898), IX, 427.

நூற்றாண்டு முடியும் தருணத்தில் அடிமை இறக்குமதியைப் பெரும் பாலான மாநிலங்கள் தடைசெய்தன. நியூயார்க்கும் பென்சில் வேனியாவும் சேர்ந்த நியூ இங்கிலாந்து மாநிலங்களெல்லாம், அடிமை முறையை ஒழித்துக்கட்டவும் அடிமைகளை மெல்லமெல்ல சுதந்திரமுடைவர்களாக ஆக்கவும் பாடுபட்டன. மதத்துறையிலும் புரட்சி ஏற்பட்டது. 1770-ல் அநேக காலனிகளில் திருச்சபைகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. போர்க்காலத்திலும் அதற்குப் பின்னரும் திருச்சபைகள் நீக்கப்பட்டன; என்றாலும் அதிகாரிகளிடமிருந்தும் சட்டசபை உறுப்பினர்களிடமிருந்தும் பல்வேறு மதச் சோதனைகள் பெறப்பட்டன.

புரட்சிக் காலத்தில் எல்லைப்புற முன்னேற்றம்

புரட்சியைச் சார்ந்த இராணுவ நிகழ்ச்சிகள் ஒரே காலத்தில் நிகழ்ந்த எல்லைப்புற முன்னேற்றக் கதையைப் பின்னுக்குத் தள்ளி மங்கச் செய்துவிட்டன. 1763ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பிரகடனம் அலெகனிஸ் தொடருக்கு மேற்கே குடியேற்றங்கள் ஏற்படாதவாறு தடுத்துவிட்டபோதிலும், நிலப்பசி உடைய மக்கள் கிழக்குக் கவுன்டிகளின் கட்டுப்பாடுகளை உடைத்துவிட்டு மேற்கே முன்னேறத் தொடங்கினர். பிரகடன ஆண்டில், முதல் குடியேற்றக்காரர்கள் மேலும் முன்னேறி மேல்யாட்கினில் (Upper Yadkin) வந்து தங்கினர். ஆறு ஆண்டுகள் கழித்து, ஜேம்ஸ் ராபர்ட்சனும் ஜான் செவியரும் வாடகா பள்ளத்தாக்கிற்கு (Watauga Valley) வர்ஜீனிய எல்லைப்புறவாசிகளை அழைத்துச் சென்றனர். மலைகளுக்கு மேற்கே அவர்கள் முதல் அரசியல் சட்டத்தை எழுதவும், அவ்வாறு எழுதப்பட்ட அரசியல் சட்டத்தை அமெரிக்க மண்ணில் பிறந்த எல்லைப்புற வாசிகள் அப்படியே ஏற்றுக்கொண்டனர். 1778-ல் வட கரோலினாவின் ஒரு பகுதியாகும் வரையில் வாடகா ஒரு சுதந்திர அரசியல் சமூகமாகவே இருந்தது.

டேனியல் பூன் (Daniel Boone) அவர்களும் மற்றவர்களும் செய்த பயணங்கள் கென்டக்கி (Kentucky) நாட்டின் வித்தைகளை உலகத்திற்குத் தெரியப்படுத்தின. 1769-க்குப் பின்னர் குடியேறிகள் உள்ளே நுழையத் தொடங்கினர்; 1774ஆம் ஆண்டு நடந்த இந்தியத் தாக்குதல்களினால் அவர்கள் வெளியேறினர். அதற்கடுத்த ஆண்டு, ரிச்சர்ட் ஹெண்டர்சன் எனும் நீதிபதி டிரான்சில்வேனியா கம்பெனியை ஸ்தாபித்தார்.

கென்டக்கி, கம்பர்லாந்து ஆறுகளுக்கிடையிலுள்ள நிலத்தை இந்தியர்களிடமிருந்து அக் கம்பெனி விலைக்கு வாங்கியது. அப்பகுதிக்கு முதல் குடியேறிகளை பூன் அழைத்துச் சென்றார். டிரான்சில்வேனியாவின் முதல் முயற்சியாளர்கள் ஒரு ஜனநாயக அரசியல் சட்டத்தை வகுத்து, இராஜ்ஜிய அந்தஸ்தைப் பெறுவதற்கு காங்கிரசிடம் மனுச்செய்துகொண்டனர். அவர்களுக்குச் சுதந்திரம் வழங்க வர்ஜீனியா மறுத்தது; அவர்களது மனுவை காங்கிரஸ் மறுத்தது. 1779-ல் வரடகாவில் குடியேறி இருந்தவர்களில் அமைதியை இழந்து துடித்துக்கொண்டிருந்தவர்களை ராபர்ட்சன் டென்னசிக்கு அழைத்துச் சென்றார்; கம்பர்லாந்தின் வளைவில் நாஷ்போரோவில் (Nashboro) காலனி ஒன்றை அமைத்தார். ஓகியோ நதியின் தலைவாயிலைச் சுற்றி வசித்த எல்லைப்புற மக்கள் வெஸ்ட்சில்வேனியா (Westsylvania) என்னும் சுதந்திர இராஜ்ஜியத்தைக் கண்டனர்; இராஜ்ஜிய அந்தஸ்தைப் பெறுவதற்குக் காங்கிரசிடம் மனுச்செய்துகொண்டதில் தோல்வியே கண்டனர். இராஜ்ஜியங்களைப் படைப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளிலிருந்து தெரிவது என்னவெனில், எல்லைப்புறவாசிகளுக்கும் கிழக்கே வாழ்பவர்களுக்கும் இடையில் அன்பும் அனுதாபமும் இல்லை என்பதுதான். வாடகா, புனேஷ்போரோ, நாஷ்போரோ ஆகிய இடங்களில் உள்ள காட்டுவாசிகளின் சங்கங்கள் அவர்களுடைய சமூக ஒற்றுமையையும் சமூக ஒப்பந்தத்தையும் நன்கு விளக்குகின்றன. அதே வேளையில், ஜனநாயகப் பண்புகளுக்கு மாறான வகையில் இராஜ்ஜிய அரசியல் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்பதையும் கவனித்தால், காட்டுவாசிகளின் சங்கங்களுக்கும் இவ்வரசியல் சட்டங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் விளங்கும்.

மிஸிஸிப்பி, வாபாஷ் (Wabas) நதிகளின் மீதிருந்த பழைய ஃபிரெஞ்சு நிலையங்களிலிருந்து ஆங்கிலேயர்களை விரட்டிப் 'பழைய வடமேற்கினை' ஜார்ஜ் ரோஜர்ஸ் கிளார்க் வெற்றி கொண்டதற்கும், போரின் இறுதியில் இந்த நிலத்தை அடைந்ததற்கும்[9] ஒரு தொடர்பும் இல்லை என்றாலும், புரட்சி எல்லைப் புறத்தைச் சார்ந்த ஒரு நிகழ்ச்சியேயாகும் என்பது தெளிவு. புரட்சியின் போக்கையும் தலைவிதியையும் நிர்ணயிக்கக்கூடியவர்கள் எல்லைப்புற மக்களாக விருந்தார்கள். வெர்மண்டில் ஈத்தன்

[9] வடமேற்கைக் கைக்கொள்வதில் கிளர்க்கின் வெற்றி முக்கிய காரணமாக அமையவில்லை. உடன்படிக்கைகளை ஏற்பாடு செய்த அமெரிக்கர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இது நன்கு தெரியும். See Letter from Sarge to Franklin, edited by Lowis J. Carey, in the 'Mississippi Valley Review', XXI, 375—378 (Dec., 1934). இது ஒரு ராஜதந்திரப் பிரச்சினையாகும். இதில் கிரேட் பிரிட்டன் ஃபிரான்சையும் ஸ்பெயினையும் ஆதரிக்காமல் யுனைடெட் ஸ்டேட்சை ஆதரித்தது.

ஆலனும் (Ethan Allan), நியூயார்க்கில் கேட்சும் (Gates) ஹெர்கிமிரும் (Herkimer), கரோலினுப் பகுதிகளில் மேரியனும் (Marion) சும்டரும் (Sumter) புரட்சிக்குத் தலைமை வகித்து நடத்தினர். இவர்கள் ஆங்கிலேயர்கள் அல்லர்; ஸ்காட்ச், ஐரிஷ், ஜெர்மன், வெல்ஷ் (Welsh) வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் ஆவர். மேட்டுநில நாட்டின் செல்வாக்குப் பெருகவே, இராஜ்ஜியத் தலை நகரங்கள் மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தன ; போர் முடிந்து சில ஆண்டுகளுக்குத் தொடர்ந்து தலைநகரங்கள் மேற்கு நோக்கி நகர்ந்த வண்ணம் இருந்தன. வர்ஜீனியாவில் வில்லியம்ஸ்பர்க்கி லிருந்து (Williamsburg) ரிச்மாண்டிற்கும் (Richmond), தென் கரோலினுல் சார்லஸ் டன்னிலிருந்து (Charleston) கொலம்பியா விற்கும் (Columbia); வட கரோலினுவில் ஈடன்டன்னிலிருந்து (Edenton) ராலேவுக்கும் (Raleigh), ஜார்ஜியாவில் சாவன்னுவி லிருந்து (Savannah) லூயிவில்லிற்கும் (Louisville), பின்னர் மில்லட் கெவில்லாவிற்கும், உள்நாட்டுப் போருக்குப் பின்னர் அட்லன்டா விற்கும் (Atlanta), நியூஜெர்ஸியில் பர்லிங்டன்னிலிருந்து (Burlington) டிரென்டனுக்கும் (Trenton), நியூயார்க்கில் நியூயார்க் நகரத்தி லிருந்து ஆல்பெனிக்கும், பென்சில்வேனியாவில் ஃபிலடெல் பியாவிலிருந்து லங்காஸ்டருக்கும் (Lancaster), பின்னர் ஹாரிஸ்பர்க் கிற்கும் (Harrisburg), நியூஹாம்ஷையில் போர்ட்ஸ்மவுத்திலிருந்து (Portsmouth) எக்சீடருக்கும் (Exeter) தலைநகரங்கள் மாறின. மெஸ்ஸாசுசெட்சின் தலைநகர் மேற்கே நகரவேண்டும் என்ற கோரிக்கையை ஷாயீஸ்களின் கிளர்ச்சி (Shays's Rebellion) கிளப்பிற்று. எல்லேப்புறமானது, 'புரட்சியின் முன்னணியாகவும் குடியேற்றத்தின் முன்னேறிச் செல்லும் காவற் படையாகவும் இருந்தது' என்று பேராசிரியர் டர்னர்குறிப்பிடுகிறர்.

விவசாயத்தின்மீது போரால் ஏற்பட்ட விளைவுகள்

புரட்சி தோன்றியபொழுது ஐக்கிய அமெரிக்காவில் ஏறக் குறைய 27,50,000 பேர்களே இருந்தனர். 18-க்கும் 60-க்கும் இடைப்பட்ட வயதினை உடையவர்கள் 7,00,000 பேர்களே இருந்தனர். இவர்களில் எட்டில் ஒருவரே காலனிப் படைகளில் போர்க்காலத்தில் கலந்திருந்தனர். போர்க்காலம் முழுவதும் பதினறில் ஒருவருக்குமேல் இப் படைகளில் சேரவில்லை எனலாம். போரைப் பொறுத்தவரையில், மக்கள் உணர்ச்சியற்ற அசடான நிலையில் இருந்தனர். மக்களுடைய அன்றுட விவசாய வாழ்க் கையும், தொழில்துறை வாழ்க்கையும் எவ்வித மாற்றமுமின்றி எப்பொழுதும் போலவே நடந்துவந்தன. கடற்கரையில் அவ்வப் பொழுது சிறு தாக்குதல்கள் ஏற்பட்டபோதிலும், நியூபோர்ட்டு



மேற்கு 1775—1782

பிடிபட்டபோதிலும், ஆங்கிலேயர்களின் தாக்குதலுக்கு ஆளாகாமல் நியூ இங்கிலாந்து தனித்தே இருந்தது. விவசாயத்திற்கும் கேடு ஏற்படவில்லை. நியூயார்க்கு, நியூஜெர்ஸி, பென்சில்வேனியா ஆகிய பகுதிகளில் ஆங்கிலேயப் படையினரும் ஃபிரெஞ்சுப் படையினரும் கொள்ளையடித்தனர். என்றாலும், தங்களுடைய அதிகாரத்திற்கு ஈடாக விவசாயிகளுடைய பண்டங்களை நிறையப் பொன் கொடுத்து விலைக்கு வாங்கினர்கள். ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஹொவேவிற்கும் (Howe) தங்களுடைய பண்டங்களை அதிக விலையில் விற்பதில் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். அதே வேளையில், வாஷிங்டனில் உள்ளவர்கள் போர்ஜ் பள்ளத்தாக்கில் (Valley Forge) நடுக்கத்தால் துவண்டு, பசிக்கொடுமைக்குப் பலியானார்கள். காலனிகளில் நிறைய இலாப வேட்டைக்காரர்களும், 'சூரிய வெளிச்ச தேசபக்தர்களும்' (Sunshine patriots) இருக்கிறார்கள் என்பதை ஜார்ஜ் வாஷிங்டன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'பொதுநலத் தொண்டு உணர்ச்சியும் ஒழுக்கமும் இன்றி, எதை எடுத்தாலும் தன்னலக் கண்ணுடன் கணக்குப் பார்த்து, ஏதோ ஒரு வசதியையும் வாய்ப்பையும் பெறுவதற்காக எந்த விதக் கீழ்த்தரமான செயல்களிலும் ஈடுபடும் திறமையாளர்களை .....இதற்கு முன் நான் பார்த்ததில்லை; இனியும் பார்க்க விரும்பக் கூடாது என்று ஆண்டவனை வேண்டுகின்றேன்.....இவ்வளவு கேவலமான பணத்தாசை அனைவரையும் பிடித்தாட்டுவதால் எந்தத் தீங்கு விளைந்தாலும் வியப்படைய வேண்டியதில்லை.'[10]

வாணிபத் தடையை மீறுபவர்கள் (blockade runners) ஐரோப்பியச் சந்தைக்கு வர்ஜீனியத் தோட்டங்களிலிருந்து புகையிலையை எடுத்துச் செல்வார்கள். அந்த நூற்றாண்டின் கடைசியில் வரும் இருபது ஆண்டுகளும் புகையிலையின் பொற்காலம் எனலாம். ஏனெனில், புகையிலைதான் தென்னாட்டில் சிறந்து விளங்கும் பொருளாகும். புகையிலை உற்பத்தி 10,18,00,000 பவுண்டுகளிலிருந்து (1774) 13,00,00,000 பவுண்டுகளாக (1790) உயர்ந்தது. 1790-ல் புகையிலைத் தொழிலிலும், அதைச் சார்ந்தும் தென்னாட்டு மக்களில் பாதிப் பேருக்குமேல் வாழ்ந்தனர். கரோலினாப் பகுதிகளில் அரிசி உற்பத்தியும் ஏற்றுமதியும் எப்பொழுதும்போல் எந்த இடையூறுமின்றி நடந்தன. 1778-ல் அரிசியைத் தூய்மைப்படுத்திச் சந்தைக்குத் தயார்ப்படுத்தும் நீர்ஆலை (Water Mill) ஒன்று முதன்முதலில் சாந்தி நதிமீது எழுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவ்வாலையை

[10] ஜார்ஜ் வாஷிங்டன் (George Washington) Writings (Ford ed.), III. 246, 247.

முன்மாதிரியாகக்கொண்டு பல திருத்தங்கள் செய்யப்பட்டன. தென்னூட்டு விவசாயத்தின் பல பகுதிகள் போரினால் அடிப்படையில் பாதிக்கப்படவில்லை யென்றாலும், ஆங்கிலேயரின் தாக்குதல்களினால் தேசபக்தி மிக்க தோட்ட முதலாளிகள் பாதிக்கப்பட்டனர் என்பதையும், அவர்களுடைய அடிமைகள் கைப்பற்றப்பட்டனர் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அது போலவே, ஆங்கிலேய அரசாங்கக் கொடை நிறுத்தப்பட்டதால், இண்டிகோ தொழில் நசிவுறத் தொடங்கியது.

இறக்குமதித் தவிர்ப்பு ஒப்பந்தங்கள் வர்த்தகத்தில் குறுக்கிட்டதாலும், போர் நடந்துகொண்டிருந்த காரணத்தினாலும் காலனிகளில் கம்பளி உற்பத்தி பெருகியது. அதுபோல்வே, தென்னூட்டில் பருத்தி உற்பத்தி பெருகியது. விவசாயிகள் பருத்தி உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று மேரிலாந்து, வர்ஜீனியா, தென்கரோலினா ஆகிய மாநிலங்கள் சட்டமியற்றின. 1775ஆம் ஆண்டில் ஹாமில்டன் பின்வருமாறு குறிப்பிட்டார் :

அநேக தென்காலனிகள் பருத்தி உற்பத்திக்கு ஆதரவு காட்டின. இரண்டே ஆண்டுகளில் அமெரிக்கக் கண்டம் முழுமையும் தேவைப்படும் துணியை அளிக்கும் ஆற்றல் அக்காலனிகளுக்கு ஏற்பட்டுவிடும்.'[11] பூர்வீக முறைகளையே கையாளும் அமெரிக்க விவசாயம், போரால் பாதிக்கப்படுவதற்கு மாறாக வளரத் தொடங்கியது. ஐரோப்பிய வளர்ச்சிகளின் அனுபவ அறிவைப் போரின் காரணமாக அமெரிக்காவிற்கு வந்த வெளிநாட்டினரே பரப்பினர்.

தொழில்துறை வாழ்க்கையின்மீது போரால் ஏற்பட்ட விளைவுகள்

அமெரிக்க விவசாயத்தைவிட அமெரிக்கப் பொறிவழித் தொழில் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டது. காலனிகள் மூலப்பொருள்களை மட்டுமே உற்பத்தி செய்யவேண்டும் என்ற கருத்தில் மெர்க்கன்டலிஸ முறையைப் பயன்படுத்தி எல்லாவிதக் கட்டுப்பாடுகளையும் ஆங்கிலப் பாராளுமன்றம் காலனிகளின் மீது புகுத்தியது. புரட்சியின் காரணமாக அமெரிக்கத் தொழில் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தகர்ந்தன. காலனிஸ்டுகள் ஆங்கிலப் பண்டங்களைப் பகிஷ்கரித்தனர். அதுவரையில் இறக்குமதி செய்யப்பட்டுவந்த கம்பளி வகைகளையும் லினனையும் நிறுத்திவிட்டு, அவற்றைக் காலனிகளிலேயே உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. பெரும்பாலான மக்கள்

[11] H. C. Lodge (ed.), Works of Alexander Hamilton (1885), I, 153.

ஆட்டிறைச்சியை உண்ண மறுத்தனர். அதைக் கசாப்புக் கடைகளில் வாங்க மறுத்தனர். காரணம், ஆடைக்குத் தேவையான கம்பளியைப் பெருவாரியான அளவில் உற்பத்தி செய்யவேண்டும் என்று மக்கள் விரும்பினர். எல்லா வர்க்கத்தையும் சேர்ந்த பெண்கள் துணி நெய்வதைக் குடிசைத் தொழிலாக மேற்கொண்டனர். தென்னூட்டுத் தோட்டமுதலாளிகள் நூல் நூற்பதிலும், துணி நெய்வதிலும் அருகிலுள்ள ஏழை மக்களான வெள்ளைக்காரர்களை ஈடுபடுத்தினர். தாங்களே தறி இல்லங்களை (loom houses) ஏற்படுத்தினர்; அடிமைகளுக்கு இத்துறையில் பயிற்சி அளித்தனர். பெரும் பணக்காரர்கள்கூட வீட்டில் நெய்த துணியை உடுத்தினர். கம்பளி நூலைக் கோதிவிடும் பொறிகள் நிறையத் தேவைப்பட்டதால், அப் பொறிகளில் உள்ள பல்சக்கரங்களுக்கு வேண்டிய கம்பிகளைத் தயாரிப்பதற்காக, நார்விக்கைச் (Norwich) சார்ந்த நதானியல் நைல்ஸ் (Nathaniel Niles) என்பவரிடம் நான்கு ஆண்டுகளுக்கு £ 800-ஐ கனெக்டிகட்டு வழங்கியது. அமெரிக்க இராஜ்ஜியங்களில் கிடைக்கும் இரும்பைக்கொண்டு மெஸ்ஸாசுசெட்ஸிலேயே உள்ள நீர் ஆற்றல் ஆலையில் 'வியாபாரத்திற்குரிய நல்ல பல்சக்கரக் கம்பிகளை'த் தயாரிப்பவருக்கு முதல் 1,000 பவுண்டுகள் எடையுள்ள கம்பிகளுக்கு £ 100 அரசாங்கக் கொடை கொடுக்க மெஸ்ஸாசுசெட்சு 1777-ல் முன்வந்தது. போரின் தொடக்க காலத்தில் செழித்து வளர்ந்த நூல் நூற்பும் துணி நெய்தலும், காலப்போக்கில் போர்க்கப்பலை இயக்குகின்ற தனியார் கப்பல் சரக்குகளைக் கவர்ந்து கொணர்ந்து சந்தைகளை நிரப்பியமையாலும், இறக்குமதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமையாலும் துவண்டுவிட்டன.

போருக்குத் தேவையான வெடிமருந்துகளும், மற்றப் பண்டங்களும் உற்பத்தியாயின. காலனிகளில் வாழும் ஒவ்வொருவரும் வேட்டைக்காரராக இருந்ததால், துப்பாக்கி விசை தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றவர்கள் (locksmiths) நிறைய இருந்தனர். மெஸ்ஸாசுசெட்ஸிலும், கனெக்டிகட்டிலும், ரோடு ஐலண்டிலும் துப்பாக்கித் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. ஒவ்வொரு துப்பாக்கி விசை செய்வதற்கும் கனெக்டிகட்டு 1775-ல் ஒரு ஷில்லிங்கு ஆறு பென்சு அரசாங்கக் கொடை வழங்கியது. 3,000 கருவிகள் உள்ள ஒரு முழுப் படைக்கருவித் தொகுதிக்கு ஐந்து ஷில்லிங்கு வழங்கியது. 1778-ல் ஸ்பிரிங்ஃபீல்டில் (Springfield) பீரங்கி வார்ப்புத்தொழிலைக் காங்கிரஸ் ஏற்படுத்தியது. அங்கே 1794ஆம் ஆண்டுப் போர்க்கருவிகள் சேமிப்பு நிலையம் ஒன்று ஏற்பட்டது. அந்த நிலையம் தற்பொழுதுள்ள நிலையத்தின் முன்னோடியாகும். பென்சில்வேனியாவிலும், ஹட்சன்மீதும் துப்பாக்கிகளை வார்த்து

எடுக்கும் தொழிலும், கூடாரக் கெட்டில்கள் (Camp kettles) செய்யும் தொழிலும் நடைபெற்றன. நியூ இங்கிலாந்திலும், மத்திய காலனிகளிலும் புதிய உலோக்கூடங்கள் ஏற்பட்டன. ரோடு ஐலண்டும், மெயினும் எஃகுதொழிற்சாலைகள் ஏற்பட உதவின.[12] உலகத்திலேயே முதன்முதலில் காய்ச்சாத இரும்பிலிருந்து வெட்டப்படும் ஆணிகளை (cold cut nails) 1777-ல் கம்பர்லாந்தைச் சார்ந்த ஜெர்மினியா வில்கின்சன் (Jeremiah Wilkinson) தயாரித்ததாகக் கூறப்படுகிறது. கந்தகம் எடுப்போருக்கு அரசாங்கக் கொடைகளை மெஸ்ஸாசுசெட்ஸ் வழங்கிற்று. கந்தகத் தூள் தயாரிப்போருக்கு ரோடுஐலண்டு உதவியது. கனெக்டிகட்டு, செஸ்வெல் (Cheswell), வர்ஜீனியா பகுதிகளில் ஈயத்தைச் சுரங்கங்களிலிருந்து எடுத்துப் பக்குவப்படுத்தும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து வருவிக்கப்பட்ட ஈயத்தையும், ஈயக்கூரைகளையும், ஈயம் சேர்ந்த மற்றப்பண்டங்களையும், உருக்கியெடுக்கப்பட்ட ஈயத்தையுமே பெரிதும் பயன்படுத்தினர்.

1777 ஆம் ஆண்டுவரையில் அநேக அத்தியாவசியப் பொருள்களில் பற்றுக்குறை இருந்தது. பின்னர் அது நீக்கப்பட்டது. போர்க்காலத்தில் செய்தித் தாள்கள் முப்பத்தேழிலிருந்து நூறுக உயர்ந்தது. எனவே, காகித ஆலைகள் பெருகின. இறக்குமதியாகிக்கொண்டிருந்த பல பண்டங்களை உள்நாட்டிலேயே உற்பத்திசெய்வதற்குச் சிறு தொழிற்சாலைகள் ஏற்பட்டன. கடற்கடவுச் சட்டங்களினால் ஊக்குவிக்கப்பட்ட கப்பல் கட்டும் தொழில் போர்க்காலத்தில் முன்னேற இயலவில்லை. இருந்த போதிலும், அது கணிசமான அளவுக்கு வளர்ந்தது. காலனி காலத்தில் வேண்டிய அளவுக்குத் தொழிலாளர்கள் கிடைக்கவில்லை; அவர்களுக்கு அதிகக் கூலி கொடுக்கவேண்டியதாயிற்று. போர்க்காலத்தில் நிலைமை இன்னும் மோசமாகியது. இராணுவப் படையில் பலர் சேர்ந்தனர்; தனியார் கப்பற் படையில் பலர் சேர்ந்தனர்; தங்களுடைய பணியாட்களுடன் லாயலிஸ்டுகள் வெளியேறிவிட்டனர். எனவே, தொழிலாளர்கள் எண்ணிக்கையில் குறைந்தனர்; தொழில் அளிப்பு குறைந்தது. தொழிலாளர் கிடைப்பருமையாலும் (scarcity of labour), வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிட்டதாலும், பணப்புழக்கம் பெருகிவிட்டதாலும் 1774-லிலிருந்து 1784-வரையில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் கூலியும், தேர்ச்சியற்ற தொழிலாளர் கூலியும் உயர்ந்துவிட்டன.

[12] Rhode Island Colony Records, VIII, 240. Also see Victor S. Clark, 'History of Manufactures in the United States', II., 219-232

வர்த்தகமும் தனியார் கப்பற்படையும்

கடல் சார்ந்த இருவகையான முயற்சிகளைப் புரட்சி ஊக்குவித்தது. முதலில், காலனித் துறைமுகங்கள் உலக வாணிபத்தில் சுறுசுறுப்பாக ஈடுபட்டன. இரண்டாவதாக, தனியார் கப்பற்படை செல்வாக்கு அடைந்தது. போருக்கு முன்னால் நிலவிய இறக்குமதித் தவிர்ப்பு ஒப்பந்தங்களின் காரணமாக, அமெரிக்கச் சந்தையில் ஆங்கிலப் பண்டங்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டன. அதன் விளைவாக ஸ்பெயின், ஹாலண்டு, ஃபிரான்சு ஆகிய நாடுகளின் வியாபாரிகள் புதிய சந்தைகளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். பிரிட்டிஷ் போர்க்கப்பல்களையும், தனியார் கப்பற்படைகளையும் ஏமாற்றித் தப்பித்துக்கொள்ளும் வழிகளையும் அவர்கள் தெரிந்து வைத்திருந்தனர். எனவே, வெளிநாட்டு வாணிபச் சரக்குகள் அமெரிக்காவில் வந்து குவிந்தன. இறக்குமதியாகும் சரக்குகளின் பட்டியல்கள் முழுமையிலும் போகப்பொருள்களே நிறைந்திருந்தன. காப்பி, தேயிலை, வாசனைத் திரவியங்கள், திராட்சை ரச வகைகள், வெல்வெட்டு, லினன், பட்டுபோன்ற உயர்தரத் துணி வகைகள், அகலமான துணி வகைகள்போன்ற போகப் பொருள்களே இறக்குமதியாயின. ஆங்கிலேயர்களின் மேற்பார்வையில் இருந்த துறைமுகங்களின் வழியே ஆங்கிலப் பண்டங்கள் இறக்குமதியாயின ஓரளவுக்கு அவை நியூயார்க்கு வழியாகவும் இறக்குமதியாயின. மாவு, புகையிலை, அரிசி ஆகிய பண்டங்களை ஏற்றுமதி செய்து, மேலே குறிப்பிட்ட போகப் பொருள்களை அவர்கள் வாங்கினர். மேலும், வெளிநாட்டுக் கடன்களைப் பயன்படுத்தியும் அப்பொருள்களை வாங்கினர். ஆங்கிலக் கப்பற்படை அதிகாரிகளிடமிருந்து கிடைக்கும் பணத்தைக் கொண்டும் இறக்குமதிகள் வாங்கப்பட்டன. ஏற்றுமதியாகும் பொருள்கள் பிரிட்டிஷ் கப்பற்படை, தனியார் போர்க்கப்பல்கள் அகியவற்றின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டும். 1776-லிருந்து 1779-வரையில் 570 கப்பல்களைப் பிடித்துவிட்டதாகப்பிரிட்டிஷ் கப்பற்படைத் தலைவர்கள் கூறியபோதிலும், போர்க்காலம் முழுவதும் ஏற்றுமதிகள் குறையவில்லை. 1777 — 1778-ல் ஆங்கிலேய சுங்க இலாகா அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளதுபோல, 24 மில்லியன் பவுண்டு எடையுள்ள புகையிலை ஏற்றுமதியாகியுள்ளது. பொதுத்துப்புக்குத் தேவையானவற்றில் மூன்றில் ஒரு பகுதி நடுநிலைத் துறைமுகங்களிலிருந்து வந்ததாகக் கூறப்படும். ஏனெனில், டச்சுக்காரர்களின் தீவாகிய செயின்டு. யூஸ்டேஷியஸ் (St. Eustatius), ஃபிரெஞ்சுத் தீவாகிய மார்டினிகே (Martinique) ஆகிய துறைமுகங்களில் கப்பல் சரக்குகளை ஏற்றியும் இறக்கியும் அவற்றை நடுநிலைமைத் துறைமுகங்களாக்கியுள்ளனர்.

போர்க்காலத்தில் எந்த அளவுக்கு வர்த்தகம் நடைபெற்றதோ, அந்த அளவுக்குத் தனியார் கப்பற்படையின் நடவடிக்கைகளும் இருந்தன. 2,000 தனியார் போர்க்கப்பல்கள் அனுமதிக்கப்பட்டன ; பெரும்பாலானவை மெஸ்ஸாசுசெட்சைச் சார்ந்தவை.[13] போருக்கு முன்னர் மீன்பிடிக்கும் பட்டினமாகத் திகழ்ந்த சேலம் (Salem), 1781–ல் 4,000 பேர்களைக் கொண்ட 59 தனியார் போர்க்கப்பல்களைக் கொண்டிருந்தது ; போர்க் காலத்தில் 180 போர்க்கப்பல்களைக் கொண்டிருந்தது எனலாம். ரோடு ஐலண்டில் ஏறக்குறைய 200 தனியார் போர்க்கப்பல் களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. தனியார் போர்க்கப்பற்படை மிகவும் செல்வாக்கு அடைந்துவிட்டதால், அதனை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டி ரோடு ஐலண்டு சில சட்டங்களை இயற் றியது. அச்சட்டங்களின்படி, கப்பலோட்டிகளின் தொகுதியின் (crew) அளவு குறைக்கப்பட்டது. நியூபரிபோர்ட்டு (Newburyport) இருபத்திரண்டு போர்க்கப்பல்களை அனுப்பிற்று. நியூலண்டன், ஹார்ட்ஃபோர்டு (Hartford), நியூ ஹேவன் (New Haven) போன்ற கனெக்டிகட்டிலுள்ள பட்டினங்கள், நிறைய வருவாய் உடைய இவ்வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தன. பிரிட்டிஷ் கப்பற்படை, இத்தகைய தனியார் போர்க்கப்பல்களை நெருங்கிக் கவனித்த படியே இருந்தது. நியூ இங்கிலாந்தைச் சார்ந்த பட்டினங்களி லிருந்து இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனெனில், நியூயார்க்கு, போஸ்டன், பிலடெல்ஃபியா, நியூ போர்ட்டு, சார்லஸ்டன் ஆகியவை பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்தன.

வழக்கமான கடற் பயணம் தடைபட்டமையால், தனியார் போர்க்கப்பல் முறையில் அமெரிக்கக் கப்பலோட்டிக்கு உற்சாகம் ஏற்பட்டது. தனியார் போர்க்கப்பலை நடத்தத் துணிவு மிகவும் தேவை அத்துறையில் ஆபத்தும் நிரம்ப உண்டு. இருந்த போதிலும், செயல்வேட்டமும் (adventure), இலாபம் நிறைய அடையவேண்டும் என்ற விருப்பமும் உள்ளவர்கள் இத்துறையில் ஈடுபட்டனர். தரத்திற்குத் தக்கவாறு, கப்பலோட்டிகளுக் கிடையில் பாதிக்குப் பாதி என்ற விகிதத்தில் இலாபத்தைப் பங்குபோடுவது கப்பல் சொந்தக்காரர்களுடைய வழக்கமாகும். தாங்கள் கைப்பற்றிய பரிசுகளை ஐரோப்பியத் துறைமுகங்களில் இறக்கி விற்று, விற்ற பணத்தைக்கொண்டு வர்த்தகச் சரக்குகளை வாங்கித், தங்கள் நாட்டிற்குத் திரும்பினர். அல்லது இப்பரிசுகளை

13. 'அமெரிக்கக் கண்டத்துக் காங்கிரஸ், 627 போர்க்கப்பல்களைப் பயன் படுத்த மெஸ்ஸாசுசெட்சுக்கு அனுமதி வழங்கியது. பொது நீதிமன்றம் (General Court) மேலும், சில ஆயிரம் கப்பல்களுக்கு அனுமதி வழங்கிற்று'. S. E. Morison Maritime History of Massachusetts, P. 29.

அமெரிக்கக் கடற்கரையிலிருந்து சிறு தொலைவில் அவர்கள் கைப்பற்றியிருந்தால், அவற்றை அமெரிக்காவிற்கே கொண்டு வந்துவிடுவார்கள். சேலம் கப்பற்படை மட்டும் 445-க்கு மேற்பட்ட பரிசுகளைக் கைப்பற்றியது. சேலத்தின் தலைசிறந்த கப்பல் முதலாளியும், திறமை மிக்கவருமான எலியஸ் ஹேஸ்பட் டர்பி (Elias Haspet Derby) 1799-ல் மரணமடைந்தார். அவர் இறக்குந் தறுவாயில், தனியார் போர்க்கப்பல் மூலமாக $10,00,000 இலாபம் சேர்த்துவைத்திருந்தார். அந்தக் காலத்தில் இது மிகப் பெரிய தொகையாகும். 1776ஆம் ஆண்டில்மட்டும் 250 ஆங்கில மேற்கிந்தியர்கள் கைப்பற்றப் பட்டனர். இதனால் ஏற்பட்ட இழப்பு £ 18,00,000 ஆகும். மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்ட இன்சூரன்சு கட்டணங்கள் 23 சதவீதம் உயர்ந்தன. ஜேம்சன் (Jameson) கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்: 'இத்தகைய தனியார் கப்பற்படைகளிலும், கடற்பயணங்களிலும் 90,000 அமெரிக்கர்கள் ஈடுபட்டிருந்தனர். இராணுவத்தில் தொண்டாற்றும் சிப்பாய்களின் எண்ணிக்கை அளவுக்கு மேற்குறிப்பிட்ட துறையிலும் அமெரிக்கர்கள் வேலை செய்தனர். மேலும், இத்துறையில் புகுந்தவர்களின் எண்ணிக்கை, எந்த ஓர் ஆண்டிலேனும் இராணுவத்தில் பணிபுரிந்தவர்களின் எண்ணிக்கையை விட அதிகமேயாகும்.' [14]

1777-ல் ராபர்ட் மாரிஸ் (Robert Morris) என்பவருக்கு சைலாஸ் டீன் (Silas Deane) கீழ்க்கண்டவாறு எழுதினார்: 'தனி மனிதரின் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் அயர்லாந்தைச் சுற்றிலும் மிதந்து சென்று, 17 அல்லது 18 கப்பல்களைக் கைப்பற்றி அழித்தன. இத்தகைய நிகழ்ச்சிகளால் இங்கிலாந்து அயர்ந்துவிட்டது. செஸ்டரில் (Chester) நடக்கவேண்டிய பெரிய சந்தை தடைப்பட்டது. இன்சூரன்சு உயர்ந்தது. ஆங்கில வியாபாரிகள்கூட ஆங்கிலக் கப்பல்களில் தங்கள் பண்டங்களை அனுப்பத் தயங்கினர். எனவே, சில வாரங்களிலேயே நாற்பது ஃபிரெஞ்சுக் கப்பல்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. தேம்ஸ் நதியில் ஃபிரெஞ்சுக் கப்பல்கள் மிதந்து செல்வது புதுமையாக இருந்தது.' [15] மேலும், அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

[14] ஜே. எப். ஜேம்சன், (J. F. Jameson), op. cit., p. 103.

[15] The Deane papers, II, 108, New York Historical Society Publications. 1777ஆம் ஆண்டு, ஆகஸ்டு, 28ஆம்நாளில் பாரிஸ் என்று முத்திரை யிடப்பட்டு ராபர்ட் மாரிசுக்கு எழுதப்பட்ட கடிதம் இது. ராபர்ட் மாரிஸ் காங்கிரஸ் இரகசியக் கமிட்டியின் உறுப்பினராவர். அமெரிக்காவைச் சார்ந்த தனி மனிதர்களுடைய போர்க்கப்பல்களும் அரசாங்கப் போர்க்கப்பல்களும் எத்தகைய செயல்களில் ஈடுபட்டன என்பதை இக்கடிதம் அழகுற விளக்குகின்றது.

'டோவரிலிருந்து (Dover) கலே (Calais) செல்லும் அஞ்சல் படகுகளுக்குக்கூட (packet boats) இன்சூரன்சு செய்யப்பட்டது.' 1778-ல் ஒரு தனித்த பாராளுமன்ற ஆய்வுக் குழுவினிடம் ஒரு சான்றுரையாளர் குறிப்பிட்டதுபோல, அமெரிக்கப் போர்க் கப்பல்களால் ஆங்கில வியாபாரிகளுக்கு ஏற்பட்ட இழப்பு '22,00,000 பவுன்களுக்குமேல் ஆகும்' எனலாம். தனி மனிதரின் போர்க் கப்பல்கள் எதிரியைத் தாக்கிப் பயமுறுத்தின; கடற் பயணத்தில் கவர்ச்சியை உண்டாக்கின; கப்பல் தொழிலுக்குத் தேவைப்பட்ட மூலதனத்தை வழங்கின. மேலும், தனியாரின் கப்பற்படை முறையால் இங்கிலாந்தில் போர் செல்வாக்கிழந்தது.

புரட்சியை நடத்த நிதி திரட்டல்

போரினை நடத்தத் தேவைப்படும் நிதியினை எப்படித் திரட்டுவது என்று காங்கிரசு தீவிரமாகச் சிந்தித்தது. நிதி திரட்டுவது என்பது மிகவும் தொல்லையான வேலையாகும். காங்கிரசுக்கு வரிகள் விதிக்கும் அதிகாரம் கிடையாது. அத்தகைய அதிகாரம் இருந்தாலும், நடைமுறையில் வரி விதிப்புச் சட்டம் இயற்றக் காங்கிரசால் முடியாது. ஏனெனில், காலனிஸ்டுகள் வரி விதிப்பை முழுதும் வெறுப்பவர்கள் ஆவர். போருக்கான முழுச் செலவையும் தங்கத்தில் கணக்கிட்டுப்பார்த்தால் $ 10,40,00,000 தான் ஆகும். இத் தொகையை மிகவும் எளிதாகத் திரட்டலாம். வரிகளுக்குப் பதிலாக வழங்கப்பட்ட காகிதப் பணத்தில் மதிப்பிறக்கம் (depreciation) ஏற்பட்டுவிட்டதால், போருக்கான மொத்தச் செலவில் பாதியைப் போர்க்காலத்தில் சண்டையில் ஈடுபட்ட தலைமுறையே ஏற்றுக்கொண்டது. இத்தகைய சூழ்நிலைகளில் காகிதப் பணத்தில் நம்பிக்கை ஏற்படுவது இயற்கையே. நாணயத்தின்மீது இங்கிலாந்திற்கு ஏற்பட்டிருந்த ஆதிக்கத்தைக் கண்டு வியந்து குமுறிய காலனிஸ்டுகள், தாயகத்தினுடைய ஆதிக்கக்கை அகன்றவுடன், ஆணைச் செலாவணி (fiat money) உடனடியாக வழக்கத்திற்கு வரும் என்று நம்பினர்.

போர் தொடங்கியவுடனேயே காங்கிரஸ் 1775ஆம் ஆண்டு, ஜூன் 22ஆம் நாள் 20,00,000 டாலர்களுக்குக் கடன் பத்திரங்களை வழங்கின. ஒவ்வோர் இரஜ்ஜியமும் தன்னுடைய மக்கள் தொகைக்குத் தக்கவாறு ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட கால வரம்பிற்குள்ளாக ஸ்பானிஷ் டாலர் நாணயங்களைக் கொண்டு கடனை அடைக்கவேண்டும் என்ற விதியும் போடப்பட்டது. நாற்பத்திரண்டு தடவை காங்கிரஸ் காகிதப் பணத்தை அச்சிட்டு வெளியிட்டது. ஆக, 1779ஆம் ஆண்டு, நவம்பர்

29 வரையில் வெளியிடப்பட்ட காகிதப் பணத்தின் மதிப்பு $19,15,52,380 ஆகும். இச் சூழ்நிலையைக் குழப்புகின்ற முறையில் இராஜ்ஜியங்களும் காகிதப் பணத்தை வெளியிடத் தொடங்கின. 1783-ல் $ 24,68,66,741 மதிப்புள்ள காகிதப் பணத்தை பதினேர் இராஜ்ஜியங்கள் வெளியிட்டுள்ளன.[16] ஒரு புதிய நாட்டிற்குத் தேவைப்படுவதைவிட அதிகமான அளவில் காகிதப் பணம் வழங்கப்பட்டுள்ளது எனலாம். போராட்டத்தில் ஏற்படும் வெற்றியைப் பொறுத்தும் காகிதப் பணத்தை மீட்டுக் கொள்வதில் இராஜ்ஜியங்களுக்கு உள்ள விருப்பத்தைப் பொறுத்துமே காகிதப் பணத்தின் மதிப்பு அமையும் என்பது தெளிவு. எனவே, காகித நாணயத்தைப் பொறுத்தவரையில், மதிப்பிறக்கம் ஏற்பட்டது இயற்கையே ஆகும். ஜே (Jay) போன்றவர்கள் வர்த்தகத்தில் காகிதப் பணத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று நாட்டு மக்களுக்கு தேசபக்தியின் பெயரால் வேண்டுகோள் விடுத்து முழக்கினர். தேசபக்தர்கள் வீறுகொண்டெழுந்தனர். காகிதப் பணத்தை வாங்கிக்கொள்ளும்படி டோரிகள் வற்புறுத்தப்பட்டனர். ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ் உதவிக்கொடைகளின் (subsidies) காரணமாக டாலரின் மதிப்பு நிலைத்து நின்றது. 1777 ஆம் ஆண்டு, செப்டம்பரிலிருந்து டாலரின் மதிப்புக் குறையத் தொடங்கியது. 1780 ஆம் ஆண்டு, மார்ச்சு மாதத்தில் அமெரிக்கக் கண்டத்து டாலரின் மதிப்பு 2·45 சென்டுகளாகக் (cents) குறைந்தது. போர் முடியும் வரையில் இதே மதிப்பு நிலவியது. 1781 ஆம் ஆண்டில் காகிதப் பணத்தில் $ 100 கொடுத்தால்தான் ஒரு ஜோடி செருப்பு வாங்க முடியும்; $ 40 கொடுத்தால்தான் ஒரு புஷல் (bushel) தானியம் கிடைக்கும்; $ 90 கொடுத்தால்தான் ஒரு பவுண்டுத் தேயிலை கிடைக்கும்; ஒரு பீப்பாய் நிறைய மாவு வாங்க $ 1,575 கொடுக்கவேண்டும். காகிதப் பணத்தின் மதிப்பிறக்கத்தினால், நிலையான வருவாய் உடையவர்கள் மிகவும் தொல்லைப்பட்டனர். ஆனால், ஊகவணிகருக்கும் கடனாளிகளுக்கும் இது நல்ல காலமாயிற்று.

புரட்சிக்காலத்தில் நாணயமுறை குழப்ப நிலையில் இருந்த போதிலும், இதனால் பொருளாதார வாழ்க்கையில் ஏற்பட்ட விளைவுகளை மிகைப்படுத்திவிடக்கூடாது. பண்டமாற்று வழக்கிலிருந்த பூர்வீகத் தன்னிறைவுச் சமூகத்தில் ஆணைச் செலாவணியால் ஏற்படும் தீமைகள் மிகுதி என்றாலும், அமெரிக்காவில் அச் செலாவணியைப் பயன்படுத்துபவர்களின் தொகை மிகவும் குறை

16 ஆர். வி. ஹார்லோ (R. V. Harlow), "Aspects of Revolutionary Finance" American Historical Review, XXXV, 46-68 (Oct. 1928). இதிலுள்ள அட்டவணைகளைப் பயன்படுத்திப் பேராசிரியர், லீவிஸ் ஜே. கரே (Lewis J. Carey) என்பவர் இக் கணக்கைத் தருகிறார்.

வாதலால், அங்கு தீமை அவ்வளவாக ஏற்படவில்லை. மேலும் மதிப்பிறக்கம் திடீரென்று ஏற்படாததால், மதிப்பிறக்கத்தால் விளையும் இழப்பு எல்லோரையுமே பாதித்தது எனலாம். போர்க் காலத்தில் ஐரோப்பாவிலிருந்து நிறையப் பொன் அமெரிக்காவில் வந்து இறங்கியது. எனவே, காலனிகளுக்குத் தெரிந்ததைவிட மிகுதியாகவே உலோக நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தன. பொன் அமெரிக்காவில் நீண்டகாலம் தங்கவில்லை என்றாலும் காகிதப்பணத்தின் மதிப்பிறக்கத்தினால் ஏற்பட்ட சூழ்நிலையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியது எனலாம். போருக்குத் தேவைப்படும் நிதியினைத் திரட்டக் காகிதப்பணம் வெளியீடுதான் ஒரே வழியாகத் தென்பட்டது எனலாம்.

காகிதப்பண வெளியீடு மாத்திரமன்றி, வேறு வழிவகைகளையும் கையாண்டு நிதி திரட்டினர். தங்களுக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்காகக் கப்பற்படை அதிகாரிகள் கடன் பத்திரங்களை வழங்கினர்கள். முதலில் 4 சதவீத வட்டியிலும் பின்னர் 6 சதவீத வட்டியிலும் உள்நாட்டுக் கடன்கள் சேர்க்கப்பட்டன. ஆனால், இவை முழு வெற்றி தரவில்லை. இராஜ்ஜியங்கள்மூலம் கடன் சேர்க்க முயன்ற முயற்சிளும் முழு வெற்றிபெறவில்லை. தங்களுடைய பிரஜைகள்மீது வரி விதிக்க விருப்பம் இல்லாததாலும், தங்களுடைய சகோதர காமன்வெல்த்துகள்மீது நம்பிக்கையின்மையும் பொருமையும் ஏற்பட்டதாலும் கண்டத்துக் காங்கிரசின் தேவைகளைப் பூர்த்திசெய்ய இராஜ்ஜியங்களால் முடியவில்லை. குலுக்குச் சீட்டு முறைகளும் (lottaries) ஏற்படுத்தப்பட்டன. அரசாங்கப் போர்க்கப்பல்கள் கைப்பற்றியவற்றை விற்பதன்மூலம் கிடைத்த பரிசுப் பணமும் குவிந்தது. வெளி நாடுகளிலிருந்து தனி மனிதர்களின் நன்கொடையும், வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்து கடன்களும் நன்கொடைகளும் கிடைத்தன. இராஜ்ஜியங்களின் இராணுவத்திற்காகும் செலவுகளையும் சேர்த்துப் புரட்சிக்கான செலவைத் தங்கத்தில் (முழு எண்ணில்) பேராசிரியர் செலிக்மேன் (Professor Seligman) கீழ்க்கண்டபடி மதிப்பிட்டுள்ளார்:

காகிதப் பணம்	$ 4,10,00,000 (ஏறக்குறைய)
கடன் பத்திரங்கள் (certificates of indebtedness)	1,67,08,000
கடன்-அலுவலகப் பத்திரங்கள் (loan-office certificates)	1,15,85,000
வெளிநாட்டுக் கடன்கள்	78,30,000
வரிகள் (இராஜ்ஜியங்களிடமிருந்து கேட்கப்பட்டது)	57,95,000
சில்லறையான வரவுகள் (Miscellaneous receipt)	8,56,000
இராஜ்ஜியக் கடன்கள்	1,82,72,000
	$ 10,40,42,000

போருக்குப் பின்னர்ப் பொருளாதாரச் சீரமைப்பு

ஒரு போருக்குப் பின் வழக்கப்படி என்ன என்ன காரியங்கள் நடைபெறுமோ அவையெல்லாம் அமெரிக்கப் புரட்சிக்குப் பின்னர் நடைபெற்றன. குழப்பமும், நிலையின்மையும், தொல்லைகளும் நிறைந்த காலத்தில், பொருளாதாரச் சீரமைப்பு வேலைகள் மேற் கொள்ளப்பட்டன. விவசாயத்திலிருந்தும், பொறிவழித் தொழிலி லிருந்தும், தனியார் கப்பற்படைத் துறையிலிருந்தும் தொழிலா ளர்கள் வெளியேறி வேறு துறைகளை நாடிச் சென்றனர். அவ் வாறே முதலீடும் வேறு துறைகளை நோக்கி விரைந்தன. தாங்கள் பழகி அனுபவம் பெருத தொழில்களில் மக்கள் ஈடுபட்டனர். இத்தகைய தொழில்களும் போர் முடிந்த உடனேயே மறைந்து விட்டன. போர் முடிந்த உடனேயே ஐரோப்பாவிலிருந்து மலி வான விலையில் பொறிசெய் பண்டங்கள் இறக்குமதியாயின. போர்க்காலத் தேவைகளும் மறைந்துவிட்டன. எனவே, விலை வாசிகள் இறங்கின. இதன் விளைவாகப் போர்க்காலத்தில் தோன்றிய இளம் தொழிற்சாலைகள் விரைவாகப் பாதிக்கப் பட்டன. கலைக்கப்பட்ட படையினரைப் புதிய வேலைகளில் ஈடு படுத்திப் பொருளாதார வாழ்க்கையில் மீண்டும் நுழைப்பதற்குச் சிறிது காலம் தேவைப்படும். வெளியேறிய ஆங்கிலேயர்களும் லாயலிஸ்டுகளும் தங்களுடன் ஆயிரக்கணக்கான நீக்ரோக்களை அழைத்துச் சென்றுவிட்டதால், தென்னாட்டில் அடிமைத் தொழி லாளர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. அந்த இடத்தை நிரப்புவதற்கும் நிறையக் காலம் தேவைப்பட்டது. போர் முடிந்து சில ஆண்டுகளுக்குப் பின்னர் தென்கரோலினாவும் வர்ஜீனியா வும் போரின் கொடுமைகளை உணரத் தலைப்பட்டன. தன்னு டைய மீன்பிடிக்குந் தொழிலும், மேற்கிந்திய வர்த்தகமும் அழி வதை நியூ இங்கிலாந்து கண்டுணர்ந்தது. வியாபாரம் தேங்கி விட்டதையும் நிலைமைகள் மோசமாகிவிட்டதையும் மற்ற இராஜ் ஜியங்கள் உணர்ந்தன.

பிரிட்டிஷ் கடற்கடவுச் சட்டங்கள் நிலைமையை இன்னும் மோசமாக்கிவிட்டன. வர்த்தக சுதந்திரத்திற்காகவும், காலனி களைக் கட்டுப்படுத்துவதற்கென கிரேட் பிரிட்டன் வகுத்த முழுப் பொருளாதாரத் திட்டத்தினை மறுப்பதற்காகவும் அமெரிக்கப் புரட்சி ஏற்பட்டது. நிலைமையைச் சீர்படுத்துவதற்கு மாறாக இப் போரானது நிலைமையை இன்னும் சீர்குலையச் செய்து விட்டது. சமாதான உடன்படிக்கையில் (1783) வர்த்தகத்தைக் குறிக்கும் ஷரத்தின்படி, மிஸிஸிப்பியின் கப்பற் போக்குவரத்தில் ஐக்கிய அமெரிக்காவிற்கு உரிமை கிடைத்தது. கிரேட் பிரிட்ட

னிடமிருந்து பரிமாற்ற வர்த்தகக் காப்பு வாசகங்களைப் (Reciprocal Trade Provisons) பெறுவதற்காக ஜே முயற்சித்துத் தோல்வி அடைந்தார். பிரிட்டிஷ் காலனிகளுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் வர்த்தக சுதந்திரத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 1783-ல் பிட், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தை இயற்ற முனைந்தார். இச் சட்டத்திற்குப் பதிலாகப் பாராளுமன்றம் பிரிட்டிஷ் கடற்கடவுச் சட்டத்தை (1783) இயற்றிவிட்டது. இச் சட்டத்தின்படி, ஆங்கிலேயர்கள் கட்டி இயக்குகின்ற கப்பல்கள்தாம் மேற்கிந்தியத் தீவுகளின் துறைமுகங்களுக்குச் செல்ல முடியும்; மற்ற பிரிட்டிஷ் துறைமுகங்களுக்கு வரும் அமெரிக்கக் கப்பல்களுக்கு ஏடைவரி போட்டப்படும். இச் சட்டத்தை தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் 1786-ல் வேறொரு சட்டம் உருவாகியது. அதன்படி அமெரிக்கக் கப்பல்களைப் பதிவு செய்வதில் பின்பற்றுகின்ற ஏமாற்று வேலை தடைப்படுத்தப் பட்டது. வெளித் தீவுகளிலிருந்து அமெரிக்கப் பண்டங்கள் இறக்குமதியாவதைத் தடுக்கும் சட்டம் 1787-ல் இயற்றப் பட்டது.

பழைய கடற்கடவுச் சட்டங்களில் இடம்பெற்ற சார்வான பகுதிகளின்படி, காலனிப் பண்டங்களுக்கு உதவித் தொகையும், அவற்றில் சிலவற்றிற்கு ஆங்கிலச் சந்தையும் கிடைத்தன. ஆனால், அத்தகைய சார்வான பகுதிகள் நீங்கலாக மற்றப் பகுதிகள் மட்டுமே புதிய சட்டங்களில் இடம் பெற்றன. 1783 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரிட்டனில் பொருளாதார மந்தம் ஏற்பட்ட காரணத்தினால் காலனிப்பண்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரிட்டிஷ் சந்தைகள் குறையலாயின. வர்த்தகத் தொடர்பில் 'முழு சமத்துவமும் பரிமாற்றமும்' ('perfect equality and reciprocity') வழங்க பிரெஞ்சு உடன்படிக்கை(1778)உறுதியளித்த போதிலும், இந்த அடிப்படையில் வர்த்தக உடன்படிக்கையைத் தயாரிக்க முடியவில்லை. மிஸிஸிப்பி நதியில் கப்பற் போக்குவரத்து உரிமையை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு ஐக்கிய அமெரிக்கா முழுதும் விட்டுக்கொடுத்தால் பரிமாற்ற வர்த்தகத் தொடர்பினை வைத்துக்கொள்ள ஸ்பெயின் முற்படும். இதற்கு நியூ இங்கிலாந்தைச் சார்ந்த வியாபாரிகள் தயாராகவே இருந்தனர். பிரான்சும் (1778), ஹாலண்டும் (1782) உடன்படிக்கைகள் செய்துகொண்டபோதிலும், அவை சமநிலையில் நின்று செய்த பேரங்களின் அடிப்படையில் நிகழவில்லை. நம்முடைய வர்த்தக விருப்பங்களை போர்ச்சுகல் ஏற்றுக் கொள்ளவில்லை. ஸ்வீடனும் (1783) பிரஷ்யாவும் (1785) மட்டுமே பரிமாற்ற வர்த்தகச் சலுகைகளை வழங்கி உடன்படிக்கைகள் செய்துகொண்டன.

நிலைமையை இன்னும் மோசமாக்கும் வகையில், அமெரிக்கர்கள் நீண்டகாலப் பழக்கத்தின் காரணமாக ஐரோப்பியப் பண்டங்களைக் குறிப்பாக இங்கிலாந்தில் தயாரிக்கப்படும் பொறி செய் பண்டங்களையே நாடினர். எனவே, 1784ஆம் ஆண்டு. கிட்டத்தட்ட £ 37,00,000 மதிப்புள்ள ஐரோப்பியப் பண்டங்கள் இறக்குமதியாயின. இவற்றிற்குப் பதிலாக £7,50,000 மதிப்புள்ள உள்நாட்டுப் பண்டங்கள் அனுப்பப் பட்டன. கொடுக்கவேண்டிய மீதியைச் சரிக்கட்டுவதற்காகப் பொன் நாணயத்தைக் கொடுக்க வேண்டும்; அல்லது உள் நாட்டில் வாங்குவோருக்கு வெளி நாட்டினர் கொடுத்த கடன்களைப் பயன்படுத்த வேண்டும். 1785ஆம் ஆண்டு ஜான் ஆடம்ஸ் இங்கிலாந்திற்குச் சென்று மூன்றாண்டுகள் தங்கி ஒரு பொருளாதார உடன்படிக்கையை ஏற்பாடு செய்ய முனைந்து தோல்வியடைந்தார். 'இங்கிலாந்தின் நலத்திற்காக அமெரிக்காவுடன் வர்த்தக உறவு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும், இதற்கு மாறான திட்டத்தை இங்கிலாந்து கடைப் பிடித்தால், அமெரிக்கா மற்ற நாடுகளுடன் வியாபாரம் நடத்தவோ அல்லது சொந்தமாகத் தொழிற்சாலைகளை நிறுவவோ முற்படும்' என்று விவாதித்துப் பார்த்தும் அவரால் வெற்றிபெற முடியவில்லை. ஆடம்ஸ் அவர்களின் கருத்தில் பொதிந்துகிடந்த உண்மையைப் பலர் கிரேட் பிரிட்டனில் புரிந்துகொண்டனர். எனினும், செல்வாக்குமிக்க வர்த்தகக் கூட்டத்தினர் சலுகைகள் வழங்கத் தயாராக இல்லை. விசுவாசமுள்ள காலனிகளின் நலன்களைப் பாதுகாக்க வேண்டுமென்றும், பழைய கடற்கட்டுச் சட்டங்கள் நிலவியபோதிலும், அமெரிக்க வர்த்தகத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும் லார்டு ஷெஃப்பீல்டு (Lord Sheffield)[17] தலைமையின்கீழ் பிரிட்டிஷ் அரசாங்கங்கள் முடிவு கட்டின.

கான்பெடரேஷன் விதிகளின்படி காங்கிரசிற்குக் குறைவான அதிகாரங்களே வழங்கப்பட்டிருந்ததால், மத்தியஅரசாங்கத்தால் வர்த்தகத் துறையில் எதிர்த்தாக்கு முறையைப் (retaliation) பின்பற்ற இயலவில்லை. வர்த்தகத்தை ஒழுங்குறச் செய்யும் அதிகாரத்தை மத்திய அரசாங்கத்திற்கு வழங்க இராஜ்ஜியங்கள் மறுத்துவிட்டன. காங்கிரஸ் ஏற்பாடு செய்யக்கூடிய வர்த்தக உடன்படிக்கைகளையெல்லாம் நடைமுறையில் செயல்படுத்த வேண்டிய வாய்ப்பும் உரிமையும் இராஜ்ஜியங்களுக்கே உண்டு. இறுதியில், இராஜ்ஜியங்களே வர்த்தக எதிர்த்தாக்கு முறையைத் தொடங்கின. 1783—1788ஆம் ஆண்டுகளிலே பிரிட்டிஷ்

[17] 'Observations on the Commerce of the American States (1784) என்னும் அவரது நூலில் இதைப்பற்றிய வாத எதிர்வாதம் நன்கு விளக்கப் பட்டுள்ளது.

கப்பல்கள்மீது எடை வரிகளையும் பிரிட்டிஷ் பண்டங்கள்மீது பேதங்காட்டும் சுங்கவரிகளையும் (discriminatory tariffs) இராஜ்ஜியங்கள் விதித்தன. வரிகள் ஒரே மாதிரியாக அமையாத காரணத்தால், இத்தகைய முயற்சிகள் எந்த விளைவை ஏற்படுத்த வேண்டுமோ அந்த விளைவை முழுதும் ஏற்படுத்த வில்லை. சில இராஜ்ஜியங்களில் வரிகளே இல்லை; சில வற்றில் 100 சதவீதம் சுங்க வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக வரிவிதிக்கப்படாத அல்லது வரிவிதிப்புக் குறைவாக உள்ள துறைமுகங்களில் பிரிட்டிஷ் கப்பல்கள் பண்டங்களை இறக்கின. இவ்வாறு அமெரிக்கச் சந்தையில் பிரிட்டிஷ் பண்டங்கள் வெள்ளம்போல் வந்து குவிந்தன. வாஷிங்டன் லாஃபயட்டு (Lafayette) அவர்களுக்கு 1788-ல் எழுதியதுபோல, 'நாம் வர்த்தகக் கட்டுப்பாடுகளைப் புகுத்த முடியும் என்று நினைப்பது தவறு. சில பண்டங்களைத் தடுத்து ஒரு மாநிலம் சட்டமியற்றுகிறது; மற்றொரு மாநிலம் துறைமுகத்தை முழுதும் திறந்துவிடுகிறது. ஓர் அமைப்பு முறையை ஒரு சட்டசபை உருவாக்குகிறது; மற்றொரு சட்டசபை அதனை உடைத்தெறிகிறது.'[18]

மத்திய அரசாங்கத்தின் வலுவின்மையும் இராஜ்ஜியங்களிடையே பிளவும்

பலமிக்க மத்திய அரசாங்கம் அமையாததால், வெளிநாடுகளுடன் பரிமாற்ற வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்த ஆடம்ஸ், ஜே ஆகியவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. மேலும், இங்கிலாந்துக்கு எதிராகப் பழிவாங்கும் நடவடிக்கைகளை சில மாநிலங்கள் மேற்கொண்டால் அச்செயல்களுக்கு முற்றிலும் மாறுனவற்றை மற்ற மாநிலங்கள் மேற்கொண்டன. கான்பெடரேஷனின் விதிகளின்படி (1781-1789), ஒவ்வோர் இராஜ்ஜியத்திற்கும் இறைமை, உரிமை, சுதந்திரம் உண்டு என்பது தெளிவு. வெளிநாட்டு விவகாரங்களைக் கண்காணிக்கும் உரிமை, போரினைப் பிரகடனப்படுத்தும் உரிமை, இராணுவத்தையும் கப்பற் படையினையும் ஏற்படுத்தும் உரிமை, கடன் வாங்கும் உரிமை, கடன் பத்திரங்கள் வழங்கும் உரிமை ஆகிய இன்னபிற உரிமைகளைத் தனித்தனியே இராஜ்ஜியங்கள் செயல்படுத்த முடியாத காரணத்தினால் அவை காங்கிரசுக்கு வழங்கப்பட்டன. வரி விதிக்கும் உரிமை காங்கிரசுக்குக் கிடையாது. வரி விதிக்கலாம் என்று இராஜ்ஜியங்களுக்கு காங்கிரஸ் வேண்டு

[18] ஜார்ஜ் வாஷிங்டன், op. cit., IX, 254.

கோள் விடலாம். காங்கிரசின் யோசனையை இராஜ்ஜியங்கள் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது தள்ளிவிடலாம். வரிவிதிக்கும் அதிகாரம் இல்லாத ஓர் அரசாங்கத்திற்கு, உடன்படிக்கைகளை அமல்படுத்துவதற்கு வேண்டிய நிலையான படையை வைத்துக் காப்பாற்ற வேண்டிய அதிகாரமும் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, கான்பெடரேஷனின் விதிகளின்கீழ் அமைந்த அரசாங்கத்திற்கு உள்நாட்டில் அதிகாரமும் இல்லை; வெளிநாடுகளில் மதிப்பும் இல்லை. 1788ஆம் ஆண்டின் உடன்படிக்கையின்படி வடமேற்கு வர்த்தக நிலையங்களை இங்கிலாந்து விட்டுக்கொடுக்க மறுத்தது. ஐக்கிய அமெரிக்காவிற்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டும் முயற்சியில் ஸ்பெயின் மேற்கெல்லை மக்களுடன் கூட்டுச் சேர்ந்தது. பார்பரி (Barbary) கடற்கொள்ளைக்காரர்கள் அமெரிக்க வியாபாரக் கப்பல்களை அச்சுறுத்திக் கொள்ளையடித்தனர்.

உள்நாட்டில் புரட்சியினால் ஏற்பட்ட ஒற்றுமை விரைவாக உடைந்துகொண்டிருந்தது. ஒரே நாடாகவிருந்து ஐக்கிய முன்னணி அமைப்பதற்குப் பதிலாக சுயநலப் பிரச்சினைகளையும் இலட்சியங்களையும் முன்னிறுத்தித் தங்களுடைய பழையதன்னல மாநில உணர்ச்சியினால் கட்டுண்டு, ஒன்றையொன்று தூற்றிப் போரிடும் பதின்மூன்று இராஜ்ஜியங்களாக அமெரிக்கா பிரிந்து கிடந்தது. இந்தியர்களுடைய போர்க்குழுவினைச் சேர்ந்தவர்கள் போல் நினைத்துக்கொண்டு வியாமிங் பள்ளத்தாக்கில் (Wyoming Valley) உள்ள கனெக்டிகட் குடியேற்றக்காரர்களை பென்சில்வேனியா தாக்கியது. வெர்மன்ட் பகுதி குறித்துக் கனெக்டிகட்டும் நியூயார்க்கும் சண்டையிட்டுக்கொண்டன. இராஜ்ஜியங்களுக்கு இடையில் வர்த்தகத் தொடர்பில் ஏற்படும் பகைமையை விளக்கும் உயிர்த்துடிப்புள்ள எடுத்துக்காட்டுகளே இத்தகைய எல்லைக்கோட்டுத் தகராறுகளாகும். நியூயார்க் நகரச் சந்தைக்குப் பண்ணைப்பண்டங்களை நியூஜெர்சியும் கனெக்டிகட்டும் இதுநாள் வரையில் வழங்கிவந்தன. இதனைத் தடுக்கும் நோக்குடன் இறக்குமதி வரிகளை நியூயார்க் விதித்தது. இந்த நிகழ்ச்சி 1787ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. இத்தகைய வர்த்தகப் போர்களை விளக்க இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். துறைமுகப் பாதுகாப்பிற்குத் தேவைப்பட்ட சாண்டி ஹூக் கலங்கரை விளக்கத்தை (Sandy Hook Lighthouse) நியூயார்க் விலைக்கு வாங்கியது. நியூஜெர்சி அக் கலங்கரை விளக்கத்தின்மீது ஓர் ஆண்டுக்கு $1,800 என்ற கணக்கில் வரி விதித்தது. நியூ லண்டனில் உள்ள வியாபாரிகள் ஒரு பொதுக்கூட்டம் நடத்தி, அதில் பன்னிரண்டு மாதங்களுக்கு நியூயார்க்கிற்கு எந்தவிதப் பண்டங்களையும் அனுப்பக்கூடாதென்றும், அப்படித் தவறி

அனுப்பினுல் $ 250 அபராதம் செலுத்தவேண்டும் என்றும் முடிவு எடுத்தனர்.

இத்தகைய வர்த்தகப் போர்கள் சில சமயங்களில் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தபோதிலும், இவற்றின் முக்கியத் துவத்தை மிகைபடுத்திவிடக்கூடாது. இராஜ்ஜியங்களுக் கிடையில் உள்ள பொருமையும் கழுத்தறுப்பு வர்த்தகச் சட்டங் களும் எத்தவிதத்திலும் வர்த்தக மீட்சியைப் பின்தள்ளித் தாமதப் படுத்தவில்லை என்று அண்மையில் பயின்ற மாணவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.[19] 1783ஆம் ஆண்டிற்குப் பின்னர் பேதங்காட்டும் வரிவிதிப்பு விதிவிலக்காயிற்று. இறக்குமதி வரிகளிலிருந்து அமெரிக்க இராஜ்ஜியங்களின் பண்டங்களை விதிவிலக்கு செய்து, வெளிநாட்டுக் கப்பல்களைவிட அமெரிக் கருக்குச் சொந்தமான கப்பல்களுக்கு எடைவரி விதிப்பில் சலுகைகள் வழங்கிவந்தனர்.

நாணயத்தில் குழப்பம்

வெளிநாட்டு வர்த்தகத்தடைகள், வலுவற்ற மத்திய அரசாங்கம், இராஜ்ஜியங்களுக்கிடையில் பகைமை ஆகிய வற்றினுல் பொருளாதார வாழ்க்கைக்கு ஏற்படும் அழிவைவிட மிகுதியான அழிவு, நாணயத்தில் உள்ள குழப்பத்தினுல் ஏற்பட்டது. போர்க் காலத்தில் காங்கிரசும் அநேக இராஜ்ஜியங் களும் $43,79,19,321 மதிப்புள்ள காகிதப் பணத்தை வெளி யிட்டன. இன்னும், கள்ள நோட்டு அச்சடித்தலும் மிகுதியாக விருந்தது. இராஜ்ஜியங்களுடைய காகிதப் பணத்தின் மதிப்பு பலவாறு விழுந்தது. 'கான்டினென்டல் பேப்பர்' (Continental paper) என்று சொல்லப்படும் காகிதப் பணத்தைக் காங்கிரசு வெளியிட்டது. நடைமுறையில் அதன் மதிப்பும் கீழே விழுந்தது. அதனை ஊகவணிகர் ஒரு பண்டமாகவே பயன்படுத்தினர். இத்தகைய காகிதப் பணங்கள் மதிப்பிழந்து புழக்கத்தைவிட்டு நீங்கினமையினுல், ஆங்கிலக் காசுகளும், பிரெஞ்சுக் காசுகளும், ஸ்பானிஷ் காசுகளும், போர்ச்சுகீசியக் காசுகளும் வியாபாரத் திற்குத் தேவைப்பட்டன. காகிதப் பணத்தின் எண்ணற்ற வகைகள் புழக்கத்தில் இருந்தமையால், பண்டமாற்று எளிதாக வில்லை. வெளிநாட்டுக் காசுகள் கிடைத்தன என்றுலும், நிலைமை சீர்படவில்லை. ஏனென்றுல், இறக்குமதிகளை வாங்கு வதற்கே அக்காசுகள் பயன்பட்டன. நாணயக் கிடைப்பருமை

19 ஆர். எ. ஈஸ்ட், (R. A. East), Business Enterprise in the American Revolutionary Era, pp. 259—240.

யுடன் இரண்டாண்டுகளின் கொடிய சோதனையும் சேரவே பொருளாதார மந்தம் நிலவிய 1785-1786ஆம் ஆண்டுகளில் காகிதப் பணக் கோரிக்கையை மீண்டும் உயிர்ப்பித்தனர். விவசாய வர்க்கத்தினரும், கடனாளிகளும், ஏழைகளுமே பொதுவாக இக்கோரிக்கையை எழுப்பினர்.

மிகுதியான காகிதப் பணத்தால் வர்த்தகத்தில் எத்தகைய விளைவு ஏற்படும் என்பதை நன்குணர்ந்த வியாபாரக் குழுவினர் காகிதப்பணத் தேவையை எதிர்த்தனர். கடற்கரைப் பட்டினங்களைச் சார்ந்த பணக்கார வியாபாரிகள் அல்லது பெரும் தோட்ட முதலாளிகள் கைகளில் சட்டசபைகள் சிக்கினமையினால், நியூ ஹாம்ஷைர், கனெக்டிகட், டிலாவேர், மேரிலாண்டு, வர்ஜீனியா ஆகிய மாநிலங்கள் கடுமையான போராட்டத்திற்குப் பின்னரே காகிதப் பணத்திலிருந்து தப்பின. காகிதப் பணத்தை வழங்கு என்று கூச்சலிட்டுக்கொண்டு வந்த ஒரு கும்பல், நியூ ஹாம்ஷைரில் எக்சீடரில் (Exeter) கூடியிருந்த சட்டசபை உறுப்பினர்களைக் கொன்றுவிடுவதாக அச்சுறுத்திற்று. இராணுவப் பட்டாளத்தின் துணைகொண்டு அந்தக் கும்பலைக் கலையச் செய்தனர். மத்திய, மேற்கு மெசாசுசெட்ஸ் பகுதி களைச் சார்ந்த விவசாயிகள் காகிதப் பணத்தை ஆதரித்தனர். 1780-ல் பழைமைக் கொள்கைவழி அரசியல் சட்டத்தைப் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றிய போஸ்டனைச் சார்ந்த உயர் வர்க்கத்தினரை அந்த விவசாயிகள் கடுமையாக எதிர்த்தனர். டேனியல் ஷாயிஸ் (Daniel Shays) தலைமையின்கீழ் கிளர்ச்சியும் செய்தனர். எனினும், கவர்னர் பௌதாயின் (Bowdoin) அனுப்பிய பெரும் இராணுவம் அவ் விவசாயிகளை அடக்கியது. மற்ற ஏழு இராஜ்ஜியங்களும் காகிதப் பணத் தேவையை ஏற்றுக் கொண்டன. என்றாலும், பயமுறுத்தலோ மெய்வருத்தமோ வியாபாரிகளைக் காகிதப் பணத்தை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியவில்லை. ரோடு ஐலண்டின் நீதிமன்ற வரலாற்றிலேயே மிகவும் பரபரப்பு ஊட்டக்கூடிய சம்பவம் இப்பிரச்சினை குறித்து நிகழ்ந்தது. ஜான்வீடன் (John Weeden) என்ற ஒரு கசாப்புக் கடைக்காரர் இறைச்சியை விற்றுக் காகிதப் பணத்தை வாங்க மறுத்தார். காகிதப் பண வெளியீட்டுச் சட்டம், அரசியல் சட்டப்படி செல்லாது என்ற தீர்ப்பினை நீதிபதிகள் வழங்கினர். ஆகவே, சட்டமன்றம் நீதிபதிகளை வரவழைத்துக் குற்றம் சாட்டிற்று. எனினும், நீதிபதிகளின் தீர்ப்பு நிலைத்தது.

பொருளாதாரக் கண்கொண்டு நோக்கின், காகிதப் பணப் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் உடையதாகும். இப்பிரச்சினையின் சமூக முக்கியத்துவம் இன்னும் உயர்ந்ததாகும். இப்பிரச்சினை

யைச் சுற்றியே சமூக அதிருப்தி வளர்ந்துள்ளது எனலாம். புரட்சி முடிவுற்ற பின்னர், டோரிகள் வெளியேறியதால், ஆட்சியிலிருந்த பழைய உயர் வர்க்கத்தினரின் பலம் குன்றியது. பழைய மத்தியதர வர்க்கத்தினர் முன்னணிக்கு வந்தனர். சிறிய விவசாயி செல்வாக்கு உடையவனுனுன். இவ்வர்க்கத்தினர் ஜனநாயகக் கோட்பாடுகளைப் பின்பற்றினர். சின்சின்னுட்டி சமூகம் (Society of Cincinnati) அமைவதை எதிர்த்தும், வாழ்க்கை முழுதும் அதிகாரிகளுக்கு அரைச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று காங்கிரஸ் எடுத்த உறுதிமொழியை எதிர்த்தும், இவ்வர்க்கத் தினர் கடுமையாகத் தாக்கினர். இவர்களுக்கு உயர்வர்க்கத் தினரின்மீது அச்சம் ஏற்பட்டிருந்த காரணத்தால், தலை மூப்புரிமையையும், மரபுரிமையில் நிலவுடைமைக் கட்டுப் பாட்டையும் ஒழித்துக்கட்டினர். பென்சில்வேனியா, மேரிலாண்டு பகுதிகளைச் சார்ந்த நிலவுடைமையாளர்களின் உரிமைகளை அபகரித்தனர். மன்னராட்சி ஏற்பட்டுவிடக் கூடாதென்பதற் காகப் புது இராஜ்ஜிய அரசியல் சட்டங்களில் சில காப்புவிதிகள் சேர்க்கப்பட்டன.

எதிர்ப் புரட்சிக்கான (counterrevolution) சூழ்நிலை முன்பே உருவாகிவிட்டது. இராஜ்ஜிய சட்டசபைகளில் பெரும்பா லானவை, ஒரு புதிய ஆளும் வர்க்கத்தின் பிடியிலிருந்தன. ஆளும் வர்க்கத்தினரின் நலன்களுக்கும் சிறு விவசாயிகளின் நலன்களுக்கும் இடையில் நிரம்ப வேற்றுமைகளிருந்தன. கடன் சுமையைத் தாங்க முடியாமையாலும், பொன் நாணயம் கிடைக் காமையாலும், 1785-1786ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின் காரணத்தாலும் சிறு விவசாயிகள் மிகவும் தொல்லைப்பட்டனர். ஏழை மக்கள்மீது இரக்கங் காட்டாத ஆளும் வர்க்கத்தினர் மற்றவர்களின் நலனைப்பற்றிய கவலை சிறிதுமின்றி இருப்பதைக் கண்டு விவசாயிகள் கொதித் தனர். 1786ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சியில், பொருளாதார அமைதியின்மையும் வர்க்கப் பகைமையும் மெஸ்ஸாசுசெட்சில் உச்சநிலையடைந்தன. டேனியல் ஷாயிஸ் தலைமையின்கீழ் போரிட்ட விவசாயிகள், ஒவ்வோர் இராஜ்ஜியத்திலும் உள்ள ஆயிரக்கணக்கான சிறு விவசாயிகளின் வேதனைக் குரல்களையே பிரதிபலித்தனர். உற்சாகம் குன்றிய நிலையில், நூற்றுக்கணக் கான விவசாயிகள் மேல்திசையை நோக்கிச் சென்றனர். அங்கே, மத்திய அரசாங்கத்தின் பலம் குன்றிய நிலைமையைக் கண்கூடாகக் கண்டனர். அமெரிக்கப் பண்டங்கள் உள் நுழை யாதவாறு மெஸ்ஸாசுசெட்சின் நுழைவாயிலை ஸ்பானிஷ் காரர்கள் மூடிவிட்டனர். இத்தகைய சமூக அமைப்பும் சூழ்நிலை களும் நிலவியபொழுதுதான், ஒரு புதிய அரசியல் சட்டத்தையும்

பலம்வாய்ந்த மத்திய அரசாங்கத்தையும் உருவாக்குகின்ற முயற்சிகள் எடுக்கப்பட்டன.

'நெருக்கடியான காலம்' (*Critical Period*) எவ்வளவு நெருக்கடியாக இருந்தது ?

முதலில் குறிப்பிட்டவைகளிலிருந்து ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகின்றது. யார்க்டவுன் நிறுவப்பெற்ற காலத்திற் கும் அரசியல் நிர்ணயச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பெற்ற காலத்திற்கும் இடையில் உருண்டோடிய ஆண்டுகள் தொல்லைகள் நிரம்பியவை. எந்தப் போருக்குப் பின்னரும் சீரமைப்புப் பிரச்சினைகளை எளிதாகத் தீர்த்துவிட முடியாது. ஆரம்பகால வரலாற்றுசிரியர்கள் படம் பிடித்துக் காட்டியதுபோல, இந்த ஆண்டுகள் நெருக்கடிகள் நிறைந்த ஆண்டுகள்தாமா என்று ஆராயவேண்டும்.[20] இந்தக் காலத்தில் வியாபார நடவடிக்கைகள் பெருகின என்று அண்மைக் கால ஆராய்ச்சி வலியுறுத்துகிறது. வர்த்தகம் விரைவில் மீட்சி யுற்றுப் போருக்குமுந்திய உயர்மட்டத்தினை அடைந்துவிட்டது. 1788ஆம் ஆண்டுக் கடற்கடவுச் சட்டத்தின்படி அமெரிக்கக் கப்பல்கள் நுழையாதவாறு பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகளின் துறைமுகங்கள் மூடப்பட்டன என்பது உண்மைதான். என்றாலும், மரத்துண்டுகளும் உணவுப் பண்டங்களும் இத் தீவுகளில் மிகவும் தேவைப்பட்டதால், இச் சட்டத்தினை உடைக்கும் வழிமுறைகள் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டன. ஃபிரெஞ்சு, டச்சு, ஸ்பானிஷ் தீவுகளுக்கு இப் பண்டங்களைக் கப்பலேற்றிப், பின்னர் இத் தீவுகளிலிருந்து மீண்டும் அப் பண்டங்களை பிரிட்டிஷ் தீவுகளுக்கு அனுப்பும் வழிமுறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவில் இருந்து மேற்கிந்தியத் தீவுகளுக்கு அனுப்பப் பட்ட கப்பற் சரக்கில் ஒரு பாதி ஜமைக்காமூலம் சென்றது என்ற உண்மையே இதற்கு எடுத்துக்காட்டாகும். தங்களுடைய காலனிகளின் வர்த்தகம் பெருகவேண்டும் என்பதற்காக ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ், டச்சு அரசாங்கங்களின் கடற்கடவுச் சட்டங்களின் விதிமுறைகள் 1780ஆம் ஆண்டுகளின் இடையில் தளர்த்தப்பட்டன. போருக்கு முந்திய உயர்மட்டங் களையும் மிஞ்சியவகையில் ஃபிரான்சு, ஹாலண்டு ஆகிய நாடுக ளுடன் வர்த்தகம் பெருகி வளர்ந்தது. இதற்குக் காரணம் என்ன

[20] ஜான் ஃபிஸ்க் (John Fiske) எனும் வரலாற்றுசிரியர் (இவர் தத்துவ ஞானியுங்கூட) 1888-ல் 'The Critical Period in American History, 1783–1789, எனும் நூலினை வெளியிட்டார். இவ்வாண்டுகளில் நிலவிய இருளையும் குழப்பத்தினையும் விளக்கி இவருக்குப் பின்னால் இவரைப் பின்பற்றிவந்த ஆசிரியர்கள் விளக்கியுள்ளனர்.

வென்ரூல், காலனி காலத்தில் கிரேட் பிரிட்டனுக்குக் கப்பலேற்றப் பட்ட 'விலக்கப்பட்ட' பண்டங்களில் சிலவற்றை ஃபிரான்சும் ஹாலண்டும் வாங்கின என்பதுதான். 1787-1789ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்துடன் நடைபெற்ற வியாபாரத்தைவிட 50 சதவீதம் மிகுதியாகவே ஹாலண்டுடன் நடைபெற்றது. ஏற்றுமதி இறக்குமதிகளைச் சரிக்கட்டும்பொழுது அமெரிக்காவுக்குச் சாதகமாகவே அமைந்திருந்தது. வர்த்தகத்தில் ஏற்பட்ட மீட்சியானது, மீன்பிடிக்கும் தொழிலிலும் மரச் சாமான்கள் தொழிலிலும் ஒரு மீட்சியை ஏற்படுத்தியது. மேலும், உணவுப் பண்டங்கள், புகையிலை, மற்ற விவசாயப் பண்டங்கள் ஆகியவற்றின் தேவையும் பெருகியது.

புரட்சிக் காலத்தில், அடிமை வியாபாரம் கைமாறியது. மும் முனை வர்த்தகப் பாதையும் மறைந்தொழிந்தது. பால்டிக் நாடுகளிலும் அண்மைக் கிழக்கிலும் (Near East), தூரக்கிழக்கிலும்(Far East) வர்த்தக வாய்ப்புகள் இருப்பதை யாங்கீ (Yankee) கண்டான். 1785ஆம் ஆண்டில்தான் கான்டன் (Canton) துறைமுகத்திலிருந்து எம்ப்ரஸ் ஆஃப் சைனு (Empress of China) எனும் கப்பல் நியூயார்க்கை அடைந்தது. 1787ஆம் ஆண்டில் அதே துறைமுகத்திலிருந்து கிராண்ட் டர்க் (Grand Turk) எனும் கப்பல் சேலத்தை அடைந்தது. கான்டன் துறைமுகத்தை 46 வெளி நாட்டுக் கப்பல்கள் 1789-ல் வந்தடைந்தன; அவற்றில் பதினெட்டுக் கப்பல்கள் அமெரிக்காவைச் சார்ந்தவை ஆகும். இந்த ஆண்டுகளில்தாம், தோல் வகைகளைத்தேடி வடமேற்குக் கடற்கரையை நோக்கி முதன்முதலில் நியூ இங்கிலாந்து மாலுமிகள் சென்றனர். 1787-1790ஆம் ஆண்டுகளில் ஓரிகன் (Oregon) சைனு ஆகிய பகுதிகளை நோக்கி புகழ்வாய்ந்த கடற்பயணத்தை காப்டன் கிரே (Captain Gray) மேற்கொண்டார். இதன் விளைவாக 'நியூ இங்கிலாந்து—வடமேற்கு—சைனு' வர்த்தகம் உருவாகியது. நியூ இங்கிலாந்து வணிகர்கள், தங்களுடைய பொறிவழிப் பண்டங்களை வடமேற்கிந்தியர்களிடம் விற்றுவிட்டு அவர்களுடைய தோல்வகைகளை எடுத்துச் சென்று சைனுவில் விற்றுக் கீழை நாடுகளின் பண்டங்களை வாங்கி வந்தனர்.

வர்த்தகத்தில்மட்டுமே வியாபார முயற்சி தலைதூக்கி நின்றது என்று கூற முடியாது. பிரிட்டிஷ் கட்டுப்பாடுகள் நீங்கியவுடன் 1781-ல் வட அமெரிக்க பாங்கும் (Bank of North America), 1784-ல் நியூயார்க் பாங்கும் (Bank of New York), மெஸ்ஸாசூசெட்சு போஸ்டன் பாங்கும் (Massachusetts Bank of Boston) நிறுவப்பட்டன. பிரிட்டிஷ் மெர்க்கன்டலிசத்தினுல் அழுத்தி வைக்கப்பட்ட வியாபார முதலாளிகள் தங்களுடைய முதலை

முழுதும் பயன்படுத்த முன்வந்தனர்; மேல் திசையை ஊடுருவிச் சுரண்டுவதற்கெனக் கம்பெனிகளைத் தொடங்கினர்; பொறிவழித் தொழிலை வளர்ப்பதற்காகச் சுங்கச் சாவடிகளையும், பாலங்களையும், உப்பங்கழிகளையும் ஏற்படுத்தினர். காலனி காலத்தில் அமெரிக்க வர்த்தகக் கம்பெனிகளுக்குச் சாசனங்களை வழங்குவது என்பதே கிடையாது எனலாம். ஆனால், 1781 முதல் 1785 வரையில் இராஜ்ஜிய சட்ட மன்றங்கள் பதினெரு சாசனங்களை வழங்கினர். 1786 முதல் 1790 வரையில் இன்னும் 22 சாசனங்களை மேற் கொண்டு வழங்கின.

போர்க்காலத்தில் பொறிசெய் தொழில்களில் அடைந்த இலாபங்களை இழப்பதற்கு அமெரிக்கர்கள் தயாராக இல்லை. பெரும்பாலான தொழில்கள் எப்படியோ நடைபெற்றன. இந்தக் காலத்தில்தான் மெஸ்ஸாசுசெட்சைச் சார்ந்த பிவர்லியில் (Beverly) ஐக்கிய அமெரிக்காவிலேயே முதல் பஞ்சாலை (1787) நிறுவப்பட்டது. இரண்டாண்டுகள் கழித்துப் பாடக்கெட்டில் (Pawtucket) சிலேட்டர் (Slater) ஓர் ஆலையைக் கட்டினார். 1788ஆம் ஆண்டில் பங்கொன்றுக்கு £10 வீதம் வசூலித்து, £1,280 முதலீடு செய்து, ஹார்ட்ஃபோர்டில் (Hartford) ஓர் கம்பளி ஆலையை நிறுவினர். இக் காலம் முடிவுறுவதற்கு முன்னரே, நியூ இங்கிலாந்தின் பெரிய நகரங்கள் பலவற்றில் பொறிவழித் தொழில்கள் தொடங்கப்பெற்றன. ஃபிலடெல்பியா வில் ஜான் ஃபிட்ச் (John Fitch) அவர்களும் மற்றவர்களும் சேர்ந்து நாளொன்றுக்கு 80 மைல்கள் செல்லக்கூடிய நீராவிக் கப்பலைக் கண்டுபிடித்தனர். அரசியல் மாற்றங்களை ஏற்றுக்கொள்வதுடன் புதிய நாட்டின் பொருளாதார வாய்ப்புகளைப் பயன்படுத்தத் துடிக்கும் சமுதாயம் உருவாகி வாழ்ந்த காலம் அது.

1785, 1786ஆம் ஆண்டுகளில் நாட்டில் பொருளாதார மந்தம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால், அந்த வீழ்ச்சி அத்துமீறிய வர்த்தகத்தினாலும் வளர்ச்சியினாலும், அது போலவே அரசாங்க பலக் குறைவினாலும் ஏற்பட்டது எனலாம், இந்த நிலை நீடிக்கவில்லை. அரசியல் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னர், மேல் குறிப்பிட்ட காலங்களில் பொருளாதார நடவடிக்கை முழு வேகத்தில் இயங்கியது. இந்தப் பொருளாதார நடவடிக்கையைப்பற்றி மேல் குறிப்பிட்ட காலத்தைப்பற்றிய செய்திகளில் அழுத்தமான அறிவு படைத்த ஒரு தலைசிறந்த ஆசிரியர் எழுதுகிறார்:

'உயர்ந்த வாடகை, கட்டட வேலைகள், போக வாழ்க்கை இவையெல்லாம் 1785-ல் அமெரிக்கா திரும்பிய ஃபிராங்க்ளின் அவர்களைக் கவர்ந்தன. பல்வேறு பகுதிகளில் கோச்சுவண்டிப்

பாதைகளும் வசதிகளும் பெருகி வளர்ந்தன. காகிதத் தொழில் வளர்ந்தபடியே இருந்தது. 1786, 1788ஆம் ஆண்டுகளில் இரும்பு, கம்பளி முதலியவற்றை உற்பத்தி செய்யும் தொழில் அதிபர்களுக்காக முக்கியமான கம்பெனிகள் ஏற்பட்டன. இவற் றிற்குமேல், 'நெருக்கடி' ஆண்டுகளில், எல்லா இடங்களிலும் மூலதனம் தேவைப்பட்டது. 1784-ல் வட்டி வீதங்கள் உயர் வாக இருந்தன. தாராளச் சலுகைகள் வழங்குவதாக வாக்குறுதி அளித்து, நியூயார்க்கைச் சார்ந்த வியாபார முதலாளிகளை நியூ ஜெர்ஸிக்கும் கனெக்டிகட்டிற்கும் அழைத்தனர்..... இத்தகைய சூழ்நிலை, முதலீட்டுத் தேவையை வலியுறுத்துவதைவிட முதல் கிடைக்காமையையே மிகுதியாக வலியுறுத்துகிறது என்று யாரேனும் வீவாதித்தால், இந்த விவாதத்திற்கு மறுப்பாக ஃபிலடெல்பியா, போஸ்டன், நியூயார்க் ஆகிய இடங்களில் 1784-ல் பாங்கின் பெருமளவுச் சரக்கிருப்பின்மீது (bank stock) பொன் மதிப்புள்ள முதலைப் பெறுவது கடினமன்று என்று விளக்க லாம்.[21]

அரசியல் சட்டத்தின்மீது போராட்டம்

1780ஆம் நூற்றாண்டுகளில் பொருளாதார, சமூகச் சூழ் நிலைகள்தாம் பலம்பொருந்திய மத்திய அரசாங்கம் தேவை என்பதை வலியுறுத்தும் காரணங்களாயின என்பது தெளிவாகும். ஒன்றுபட்ட பொருளாதாரத் திட்டமும், இராஜ்ஜியங்களிடை வர்த்தகச் சுதந்திரமும், நிலைத்து நிற்கும் நாணயமும், பலம் வாய்ந்த மத்திய அரசாங்கத்தினால் கிடைக்கக்கூடிய நலன்களும் ஒன்றுசேர அமைந்திருந்தால்தான் அமெரிக்கப் பொருளாதாரத் தில் வளர்ச்சியைக் காண முடியும். இருந்தபோதிலும், கான் ஃபெடரேஷனின் விதிகளின்படி அமைந்த வலுவற்ற அரசாங்கத் தினால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி அமெரிக்க வரலாற்று மாண வர்கள் மிகைப்படுத்திவிடாமல் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். காலண்டர் (Callender) அழகுற விளக்குவதுபோல, "கான் ஃபெடரேஷனின் குறைபாடுகள், எந்த வகையிலும் அமெரிக்காவின் 'கொடுமையான காலத்திற்குக்' (hard times) காரணமாக அமையவில்லை. கான்ஃபெடரேஷன் அத்தகைய கொடுமைகளை உண்டாக்கவில்லை. உலகத்தில் மிகச் சிறந்த அர சாங்கத்தினாலும் இத்தகைய கொடுமைகளை அகற்ற முடியாது"[22]

21 ஆர். எ. ஈஸ்ட், op. cit., p. 242.

22 ஜி. எஸ். காலண்டர் (G. S. Callender), 'Selections from the Economic History of the United States' 1765-1860, p. 182.

பொருளாதாரச் சூழ்நிலைகளால்தான் அரசாங்கம் திறமையுடன் பணியாற்ற முடியவில்லையே யன்றித் திறமையற்ற அரசாங்கத்தினால் பொருளாதார மந்தம் ஏற்பட்டுவிடவில்லை.

கான்ஃபெடரேஷனின் விதிகளின்படி அமைந்த மத்திய அரசாங்கம் பலம் குன்றி இருந்தமையால், பொருளாதார நலன்கள் பாதிக்கப்பட்டிருந்தவர்களெல்லாம் அரசியல் சட்டத்தை எதிர் நோக்கி இருந்தனர். ஷாயிஸ்களுடைய கிளர்ச்சிக்குப் பின்னர், சிறு விவசாயிகளின் அமைதியின்மையைக் கண்டு நடுநடுங்கிய புதிய ஆளும் வர்க்கத்தினரில் பலர் அரசியல் சட்டத்திற்காகத் தவங்கிடந்தனர். 1780-89ஆம் ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருந்துங்கூட அயல்நாட்டுப் பேதங்காட்டுகையிலிருந்து (foreign discrimination) தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிப் பொறிவழித் தொழிலிலும் கப்பல் தொழிலிலும் முதலீடு செய்திருந்தவர்கள் ஒரு பலம்வாய்ந்த மத்திய அரசாங்கம் வேண்டும் என்று விரும்பினர். கடனுளி வர்க்கத்தினர் மூலதனத்தைத் தொடர்ந்து தாக்கினர்கள். சட்டசபைகளில் கடன் வசூலிப்பதை நிறுத்திவைக்கும் சட்டங்களையும், காகிதப்பணச் சட்டங்களையும் அவர்கள் கொண்டுவர முயன்றார்கள். மேலும், உள்நாட்டைச் சார்ந்த நீதிமன்றங்களில் அவர்கள் பயனிலா மூலதன உரிமைகளின் (rights of absentee capital) மீது உள்ள குழம்பிய விருப்பமின்மையை வெளிப்படுத்திக்கொண்டார்கள். கப்பல் முதலாளிகளும் தொழிலதிபர்களும் வலுவான மத்திய அரசாங்கத்தின் அரவணைப்பை நாடியபொழுது, உள்நாட்டு வியாபாரிகள் இராஜ்ஜியங்களுக்கிடையில் வர்த்தகச் சுதந்திரத்தையும், ஒரே மாதிரியாய் நிலைத்த நாணயத்தையும் காணத் துடித்தனர்.

கான்ஃபெடரசியை எதிர்த்து நின்றவர்களெல்லாம் புதிய அரசியல் சட்டத்தை வலியுறுத்தி ஆதரித்தனர். கண்டத்துப் பத்திரங்களையும், கடன் பத்திரங்களையும், காகிதப் பணத்தையும் வைத்திருப்பவர்கள் எல்லோருமே புதிய அரசியல் சட்டத்தின் ஆதரவாளர்களாவர். அரசாங்கப் பத்திரங்களைத் திரும்ப மீட்டுக் கொண்டு அவற்றின் மதிப்பை உயர்த்தவும் அரசாங்கம் வெளியிட்ட காகிதப் பணத்தின் மதிப்பை உயர்த்தவும் ஒரு வலுமிக்க மத்திய ஆட்சி தேவை என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். உண்மையில் காகிதப் பணமும் பத்திரங்களும் அவற்றின் சொந்தக்காரர்களின் கைகளிலிருந்து மாறி ஊக வணிகர்களிடம் சென்று தங்கிவிட்டன. அரசியல் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்த பின்னர், புதிய ஆட்சியின் நிதி பற்றிய திட்டங்கள் செவ்வனே அமைந்தமையால், வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலாகக் கண்டத்துப் பத்திரங்களின் மதிப்பில்

ஏற்பட்ட உயர்வு மட்டுமே $4,00,00,000 ஆகும் என்று மிகவும் நிதானமாகவே கணக்கெடுத்திருக்கிறார்கள். இந்தத் தொகை, பதின்மூன்று காலனிகளின் நிலத்தின்மீது போடப்படும் மொத்த வரிவிதிப்பின் மதிப்பில் பத்தில் ஒரு பங்காகும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், சாதாரணமாக விளையாடக்கூடிய பந்தயம் அன்று இஃது என்று உறுதியுடன் குறிப்பிடலாம்.[23] பலம்பொருந்திய ஆட்சியை விரும்பும் வேறொரு வகையான ஊகவணிகர் யாரெனில், மேல்திசையில் உள்ள நிலங்களில் முதலீடு செய்ய விரும்புவோர்களே ஆவர். அந்தக் காலத்தில் பணமும் செல்வாக்கும் படைத்தவர்களில் பெரும்பாலோர் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

புதிய அரசியல் சட்ட இயக்கத்திற்குப் பின்னால், சொத்துரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் வர்த்தகர்களும் நிதியுடையோரும், கடனீவோரும், ஊகவணிகரும் சூழ்ந்திருந்தனர். இவர்கள் சிறுபான்மையினரே; எனினும், இவர்கள் திறமையும், நேர்மையும், பரந்த நோக்கும் உடையவர்கள் ஆவர். மேலும், இவர்கள் அதிகார பலம் உடையவர்களாகவும், சுறுசுறுப்புடையவர்களாகவும், எளிதில் ஒன்றுகூடி ஒழுங்குமுறையைப் பின்பற்றுபவர்களாகவும் இருந்தனர். இவற்றிற்கெல்லாம் காரணம், இவர்கள் நகரங்களில் குவிந்துகிடந்தனர் என்பதும், ஒவ்வோர் இராஜ்ஜியத்திலும் பிரதிநிதித்துவம் உடையவர்களாக இருந்தனர் என்பதும் ஆகும். அரசியல் சட்ட இயக்கத்தில் இத்தகைய கூட்டத்தினர் இருப்பதால், அரசியல் சட்டம் பழைமைக் கொள்கையைப் பின்பற்றித் தனியார் சொத்துரிமைகளையும், ஊன்றிய நலமிகளின் (vested interests) உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் அமையும் என்பது இயற்கையே. அரசியல் சட்ட மாநாட்டில் ஊன்றிய நலமிகளும் மேற்குறிப்பிட்ட மற்றவர்களுமே நிறைந்திருந்தனர். புரட்சி பெற்றெடுத்த இடதுசாரி புதுமைக் கருத்தினர் மாநாட்டில் கிடையாது. மாநாட்டுப் பிரதிநிதிகளில் பாதிப்பேருக்குமேல், அரசியல் சட்டத்தினுல் பாதுகாக்கப்படும் அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்தவர்கள் அல்லது ஊகவணிகர்களாக இருந்தனர். வரலாற்றுசிரியர்கள், மாநாட்டில் நிலவிய கருத்துவேற்றுமைகளைப்பற்றியும், அவற்றைக் களைந்தெறிய மேற்கொண்ட சமரச இணக்கங்களைப்பற்றியும் மட்டுமே விளக்கியிருக்கிறார்கள். ஆனுல், உண்மையில் மாநாட்டில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் அனைவரும் இன்றியமையாத பிரச்சினைகளில் கருத்தொருமித்து இருந்தனர். சமரச இணக்கங்

[23] சி. எ. பியர்டு (C. A. Beard), An Economic Interpretation of the Constitution of the United States, pp. 34 ff.

களுக்கு வந்து ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தமைக்குக் காரணம், அடிப்படைகளில் அவர்கள் ஒன்றுபட்டு நின்றனர் என்பதுதானுகும்.

இத்தகைய சூழ்நிலைகளில் அரசியல் சட்டத்திற்கு எதிர்ப்புக் காரசாரமாக இருந்தது. சட்டத்தை ஏற்றுக்கொள்வார்களா என்பதே ஐயமாக இருந்தது. விவசாய மாவட்டங்களிலிருந்தும் கடனுளிப் பகுதிகளிலிருந்தும் மட்டும் எதிர்ப்புக் கிளம்பியது. 'சுயேச்சைக் குடியானவர்கள் (yeomen) அனைவரும் இச் சட்டத்தைத் திட்டமிட்டு எதிர்த்தனர் என்பது உண்மை என்று நான் கருதுகிறேன்' என்று பெட்ரிக் ஹென்றி குறிப்பிட்டுள்ளார்.[24] மக்கள் அனைவரும் இச் சட்டத்தை ஏற்றுக்கொண்டனரா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். ஏனெனில், மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க, வயதுவந்த ஆண்மக்களில் நான்கில் ஒரு பங்கினரே தேர்தலில் வாக்குரிமையைப் பயன்படுத்தினர். வயதுவந்த ஆண்களில் ஆறில் ஒரு பங்கினரே அரசியல் சட்டத்தை ஆதரித்துக் கையெழுத்திட்டனர். பேராசிரியர் பியர்டு குறிப்பிடுவதுபோல, "ஜூரிஸ்டுகள் (Jurists) கூறியதுபோல, அரசியல் சட்டத்தை 'மக்களனைவரும்' சேர்ந்து படைக்கவில்லை; தென்னுட்டு எதிர்ப்பாளர்கள் குறிப்பிட்டதுபோல, அச் சட்டத்தை 'இராஜ்ஜியங்கள்' உருவாக்கவில்லை. ஆனுல், நாட்டுநலனை முன்னிறுத்தி, இராஜ்ஜிய எல்லைக்கோடுகளைப்பற்றிக் கவலைப்படாமல், இவ் அரசியல் சட்டத்தை ஒன்றுபட்ட ஒரு கூட்டத்தினர் வகுத்தனர்."[25]

அரசியல் சட்டத்தை ஒரு சிறுபான்மையினர் உருவாக்கினர் என்றாலும், தொழிலும் வர்த்தகமும், போர்தொடங்கிய காலத்திலிருந்து, தொல்லையுறுவதற்குக் காரணமாய் அமைந்த பொருளாதாரக் கேடுகள் பல நீங்குவதற்கு இவ்வரசியல் சட்டம் மிகவும் துணைபுரியும். அரசாங்கச் சீரமைப்பு மிகவும் தேவைப்பட்டது. உடனடிப் பொருளாதார விளைவுகள் நன்மையே புரிந்தன. இவ்வரசியல் சட்டத்தின் காரணமாக நிதி, வர்த்தகம் ஆகிய துறைகளில் காங்கிரசின் அதிகாரம் பெருகிற்று. ஃபெடரல் அரசாங்கம் (Federal Government) வரி விதிக்கவும், வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தவும், உலோகக் காசுகளை அச்சிடவும், தொழிலைக் காக்கவும், மேற்கில் குடியேற்றத்திற்குத் திட்டம்

[24] டபிள்யூ. டபிள்யூ. ஹென்றி (W. W. Henry), op. cit., III, 578. யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொள்ளும் பிரச்சினையை ஆய்வதற்கு 1788 ஜூன் மாதம் வர்ஜீனியாவில் கூடிய மாநாட்டில், 24ஆம் தேதியன்று நிகழ்த்திய சொற்பொழிவு.

[25] சி. எ. பியர்டு (C. A. Beard), 'An Economic Interpretation of the Constitution,' p. 325.

தீட்டவும், கடன்முறையை ஏற்படுத்தவும், தன்னுடைய பத்திரங்களை மீட்கவும் வேண்டிய அதிகாரங்களைப் பெற்றது. இளங்குடியரசு முழுதும் சட்டப்படி வர்த்தக உரிமை வழங்கப்பட்டது. சட்டத்தை இயற்றியவர்களுடைய மனத்தில் இத்தகைய நன்மைகள் குடிகொண்டிருந்தன. போதுமான அதிகாரங்கள் மத்திய ஆட்சிக்கு வழங்கப்பட்டன.[26]

பலம் பொருந்திய மத்திய அரசாங்கம், பல நல்ல பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும் என்பது உண்மைதான். அரசியல் சட்டத்தைப் பொறுத்த வரையில் குறைந்தபட்சம் மூன்று உண்மைகளையேனும் நாம் குறித்துக்கொள்ள வேண்டும். முதலில், விவசாயத்தையும் வர்த்தகத்தையும் சார்ந்த ஒரு சமூக அமைப்பிற்கு ஏற்றவாறு அரசியல் சட்டம் வகுக்கப்பட்டது. விவசாயத்தையும் வர்த்தகத்தையும் சார்ந்த தலைவர்களே இச் சட்டத்தை வகுத்தனர். எதிர்காலத்தில் சமூக அமைப்பு மாறினால், மேற்குறிப்பிட்ட பொருளாதாரக் கூட்டத்தினரின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடனும் இச்சட்டம் இயற்றப்பட்டது. இரண்டாவதாக, திருத்தப்படாத ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது சட்டத்தை இயற்றியவர்களுடைய எண்ணமன்று. எனவே, நூருண்டுகளுக்குப் பின்னர், தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறும், புதிய, உயர்ந்த ஜனநாயகச் சூழ் நிலைக்கு ஏற்றவாறும் அரசியல் சட்டத்தைத் திருத்துவது மிகவும் கடினமாக இருந்தது.

இறுதியில், தனியார் சொத்துரிமைகளைப் பாதுகாப்பதையே முக்கியக் குறிக்கோளாக அரசியல் சட்டம் கொண்டிருக்கிறது என்றும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளைப் பற்றி அது மிகவும் கவலை எடுத்துக்கொள்ளவில்லை என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எனவே, முதல் காங்கிரஸ், அரசியல் சட்டத்தில், உரிமைகள் மசோதா (Bill of Rights)என்று வழங்கப் படும் முதல் பத்துத் திருத்தங்களைக் கொண்டுவந்தது. அத் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை, மத சுதந்திரம், ஜூரி வழக்கு, காரண மற்றுத் தேடுதலைத் தவிர்த்தல், அளவு மீறிய பெயில்களையும் (Bails) தண்டனைகளையும் நீக்குதல் ஆகிய அடிப்படை உரிமைகள் கிடைத்தன. மக்களுடைய உரிமைகளையும் இராஜ்ஜியங்களின் உரிமைகளையும் ஃபெடரல் அரசாங்கம் கவராமல் இருப்பதற்காக ஒன்பதாவது திருத்தமும் பத்தாவது திருத்தமும் கொண்டு வரப்பட்டன. இத்தகைய திருத்தங்களை ஏற்றுக்கொண்டதால்,

26 அரசியல் சட்டத்தில் பொருளாதார வாசகங்கள் பலவற்றை, விதி (Article) I, பகுதிகள் (Sections) 8, 9, 10 ஆகியவற்றில் காணலாம்.



அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல்—
வாக்குரிமை வழங்கப்பட்ட விதம்.



அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல்—
வாக்குரிமை வழங்கப்பட்ட விதம்.

இந்த அரசியல் சட்டம் மனித உரிமைகளையும் சொத்துரிமை களையும் பாதுகாக்க முடிந்தது எனலாம். தீவினைப் பயனால், அரசியல் சட்டத்தின் மற்றப் பகுதிகள் காக்கப்பட்டதுபோல், இந்தத் திருத்தங்கள் காக்கப்படவில்லை.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

ஜென்சன், மெர்ரில் (Jensen, Merrill), The New Nation, Chaps. 8-17.

ஜே. எஃப். ஜேம்சன் (Jameson, J. F.), The American Revolution Considered as a Social Movement, Chaps. 1-3.

ஈஸ்ட், ஆர். எ. (East, R. A.), Business Enterprise in the American Revolutionary Era, Chaps. 10-12.

ஹேக்கர், எல். எம். (Hacker, L. M.), Triumph of American Capitalism, Chaps. 13-14.

பில்லிங்டன், ஆர். எ. (Billington, R. A.), Westward Expansion, Chap. 9.

சுல்ட்ஸ், டபிள்யு. ஜே. (Shultz, W. J.), and Caine, M. R.-Financial Development of the United States, Chaps. 3-4.

கிளார்க், வி. எஸ். (Clark, V. S.), History of Manufactures in the United States, Vol. I, Chap. 10.

பியர்டு, சி. எ. (Beard, C. A.), An Economic Interpretation of the Constitution of the United States, Chaps. 2, 3, 6, 10, 11.

காலண்டர், ஜி. எஸ். (Callender, G. S.), Selections from the Economic History of the United States, 1765-1860, pp. 122-177.

ஃபுளுகல், எஃப். and ஃபாக்னர், ஹெச். யு. (Flugel, F., and Faulkner, H. U.), Readings in the Economic and Social History of the United States, pp. 3-38.



1. கையாற்றல் உழைப்பு விவசாயம்—1790-ல் விவசாயக் கருவிகள்



2. அறுவடை இயந்திரம் கண்டுபிடிக்குமுன்னர் கோதுமை அறுவடை முறை.



3. ஸ்டாக்கிங் ஃபிரேம் (Stocking Frame)—நூல் நூற்றலும் துணி நெய்தலும் (18ஆம் நூற்றாண்டு)



4 பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் விவசாயம்.



5. எல்கேப்புறத்தின் நான்கு கட்டங்கள்



6. புகைவண்டிமூலம் முதல் முயற்சி



7. புல்வெளிகளின்மீது மண்வீடு—பெரும் சம வெளியில் அநேக விவசாயிகளின் முதல் இல்லம்.



8. பாகுஷ்கா (Pawhuska), ஒக்லாகோமா (Oklahoma)—
1880-களின் பிற்பகுதியில் ஒரு எல்லைப்புற நகர்



9. வட டெக்கோட்டாவின் மாண்டன் (Mandan) இரயில்வே
நிலையத்திலிருந்து, பண்டங்களை ஏற்றிச் செல்லும்
குடும்ப மனையகத்தினர்.



10. 1860களின் பிற்பகுதியில் மோன்டானை, ஹெலினை ஆகிய இடங்களிலிருந்து வாகன்வண்டி கிளம்புதல்



11. மாற்றுருப்புகளைத் தயாரிக்கும் இயந்திரத்தையும் பருத்தி ஜின்னையும் கண்டுபிடித்த எலி விட்னே அவர்கள்



12. ஐக்கிய அமெரிக்கத் தேசீயக் கண்காட்சிசாலையில் வைக்கப் பட்டுள்ள, விட்னே கண்டுபிடித்த பருத்தி ஜின் மாதிரி ஒன்று.



13. கிராமச் சந்தை.



14. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இயந்திரவழி விவசாயம்.

9. நிதியும் சுங்கமும்

புதிய அரசாங்கத்தின் அரசிறைக் கைக்கோள்

அரசியல் சட்டத்தை மறுத்துப் பரவலான எதிர்ப்புக் கிளம்பியிருந்தபோதிலும், அச் சட்டத்தின் நண்பர்கள், 1789-ல் அது செயல்பட்டபோது புதிய அரசாங்கத்தைத் தங்கள் பிடிப்பிலே வைத்துக்கொண்டனர். முதல் காங்கிரசில் வீற்றிருந்த இருபத்து நான்கு செனட்டர்களில் பதினெரு பேர்கள் அச் சட்டத்தினை வரைவதற்கு உதவினர். சட்டத்தை உண்டாக்கியவர்களும், உடந்தையாக இருந்து கையெழுத்திட்டு ஆதரித்தவர்களும் நிறைந்த ஒரு பலம் வாய்ந்த குழு ஜேம்ஸ் மேடிசன் (James Madison) தலைமையின்கீழ்ச் சட்டமன்றத்தில் வீற்றிருந்தது. முதல் காபினெட் (cabinet) எந்த வகையிலும் கூட்டமைச்சரவை ஆகாது. ஜெஃப்பர்சனைத் தவிர ஏனைய உறுப்பினர்களனைவரும் அரசியல் சட்டத்தை முழுதும் ஆதரித்தனர்; ஜெஃப்பர்சன் மட்டும் பொது ஆதரவைத் தந்தார். முதல் பத்து திருத்தங்களின் மூலமாகச் சில சலுகைகளை எதிரிகளுக்கு வழங்கியபோதிலும், அரசியலை நிர்ணயித்த பழங்கொள்கையினரின் பொருளாதார விருப்பங்களையும் நலன்களையும் பாதுகாக்கும் கருத்தில்தான் புதிய குடியரசின் ஆரம்பகாலச் சட்டங்கள் இயற்றப்பட்டன. ஃபெடரலிஸ்டுக் கைக்கோளின் அடிப்படையில்தான் அச் சட்டங்கள் உருவாயின.

புதிய அரசாங்கத்தைக் குழப்பிய எண்ணற்ற பிரச்சினைகளில் நிதிபற்றிய பிரச்சினை மிகவும் முக்கியமானது. உண்மையில், வாஷிங்டனும் ஆடம்சும் பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்தபொழுது, நிதிபற்றிய பிரச்சினை குறித்துத்தான் சட்டங்கள் இயற்றப்பட்டன. பலம் வாய்ந்த மத்திய ஆட்சியை ஏற்படுத்துவதுதான் ஃபெடரலிஸ்டு தத்துவத்தின் முக்கியக் குறியாகும். எனவே, அத்தகைய வலிமை மிக்க மத்திய

ஆட்சியை ஏற்படுத்திப் பாதுகாக்கப் போதுமான அளவுக்கு வருமானம் தேவை. ஓர் அரசாங்கத்தின் முக்கியச் செலவினங்களில் இராணுவச் செலவும், கப்பற்படைச் செலவும், நாட்டுக் கடனை அடைக்கும் வகையில் அசலையும் வட்டியையும் செலுத்துவதனால் ஏற்படும் செலவும், 'அரசாங்க ஊழியர்களின் பட்டியலில்'ப் (civil list) பாதுகாக்கும் செலவும் அடங்கியுள்ளன என்பது தெளிவு. வாணிபக் கப்பல்களைப் பாதுகாக்கவும், இந்தியர்களின் தாக்குதல்களை எதிர்த்து நிற்கவும், குழந்தைப் பருவத்தில் இருக்கும் குடியரசை வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் ஓர் இராணுவ அமைப்பு மிகவும் தேவையாகும். புது அரசாங்க நாணயத்தின் மதிப்பைக் காக்கவேண்டுமெனில், கடன்களை அடைக்க வேண்டும். சிவில் அரசாங்கத்தின் அன்றுடச் செலவுகளுக்குப் பணம் தேவையாகும். ஃபெடரலிஸ்டு காலத்தில் அரசாங்கத்தின் மொத்தச் செலவில் 50 சதவீதம் இராணுவத்திற்கும் கப்பற்படைக்கும் சென்றது; 30 சதவீதம் நாட்டுக் கடனடைப்பில் செலவழிந்தது; எஞ்சியுள்ள செலவு அரசாங்க ஊழியர் பட்டியலுக்கும் மற்றவைகளுக்கும் சென்றது.

புரட்சிக்கு நிதி வழங்கிப் புகழ்பெற்ற ராபர்ட் மாரிசுக்கு (Robert Morris) நிதித்துறைச் செயலாளர் (Secretary of the Treasury) பதவியை வாஷிங்டன் வழங்கினார். ஆனால், மாரிஸ் அப் பதவியை மறுத்துவிட்டதால், அலெக்சாண்டர் ஹாமில்டனுக்கு (Alexander Hamilton) அப் பதவியை வழங்கினார். ஹாமில்டனின் தலைமையில், புதிய அரசாங்கத்திற்கு உறுதியான நிதி நிலைமையை அடிப்படையாக அமைக்கும் நோக்கத்துடன் ஓர் அரசிறைக் கைக்கோள் (Fiscal policy) உருவாகியது. அரசியல் சட்டத்தின்மூலம் ஏற்றுமதி வரிகள் நீங்கியமையால், வருமானத்தை எளிய முறையில் அடைவதற்காக இறக்குமதி வரிகள் இயல்பாகவே நுழைந்தன. 1789 ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் நாள் புது அரசாங்கம் முதல் சுங்கச் சட்டத்தை இயற்றியது. முக்கியமாக அரசாங்க வருமானத்தை பெருக்குவதற்கே அச் சட்டம் இயற்றப்பெற்றது. தொழில்துறைகளைப் பாதுகாக்கும் கருத்தும் அச் சட்டத்தில் அடங்கி இருந்தது. எண்பதொரு 'விலக்கப்பட்ட' பண்டங்களில் முப்பது பண்டங்கள்மீது தனித்த வரிகள் (specific duties) விதிக்கப்பட்டன; ஏனையவற்றின்மீது 7½ சதவீதம் முதல் 15 சதவீதம் வரையில் பெறுமான விகித வரிகள் (ad valorem duties) விதிக்கப்பட்டன. விலக்கப்படாத, அநேக இறக்குமதிப் பண்டங்கள்மீது 5 சதவீத பெறுமான விகித வரிகள் விதிக்கப்பட்டன. 8½ சதவீதத்திற்குள்ளாகவே வரிகள் குறைந்த அளவில் விதிக்கப்பட்டிருந்தபோதிலும், தொழில்துறைகளுக்கு ஓரளவுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. சுங்க வரிகள்மீது

நடந்த விவாதங்களின் காரணமாக, நாட்டின் பல்வேறு குழுவினர்களின் கருத்து வேற்றுமைகள் வெளியே வந்தன. இறக்குமதி வரிகளின்மூலம் அரசாங்கம் பென்சில்வேனியாவில் உள்ள எஃகு ஆலைகளையும் காகித ஆலைகளையும் பாதுகாத்தது. நியூயார்க், பிலடெல்ஃபியா மாநிலங்களிலுள்ள சாராயம் காய்ச்சுபவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கியது; மேரிலாண்டின் கண்ணுடி உற்பத்தியாளருக்கும், நியூ இங்கிலாந்தின் இரும்பு உற்பத்தியாளருக்கும், 'ரம்'மை வடித்திறக்கும் வேலையில் ஈடுபட்டோருக்கும் பாதுகாப்பு வழங்கியது. ஆணிகள், காலணி வகைகள் உடனடித் தயாரிப்புத் துணிவகைகள் ஆகியவற்றின்மீது போடப்பட்ட வரிகள்மூலம், கால்நடைப் பண்ணைகளின் துணைப்பண்டங்களுக்கும் (by-products) பாதுகாப்புக் கிடைத்தது. தேயிலை, காப்பி, சர்க்கரை, திராட்சை வகைகள் ஆகிய போகப் பொருள்களின்மீது மிகுதியான வரிகள் விதிக்கப்பெற்றன. 1789-ல் போடப்பட்ட வரிகளால் அரசாங்கத்திற்குப் போதுமான அளவுக்கு வருமானம் கிடைக்கவில்லை என்று தெரியவந்ததால், 1790, 1792, 1794ஆம் ஆண்டுகளில் அரசாங்கம் வரிகளை உயர்த்தின.

நிதி நிலைமைபற்றிய அறிக்கை ஒன்றினைத் தயாரிக்குமாறு ஹாமில்டனை காங்கிரசின் முதல் கூட்டம் வேண்டிக்கொண்டது. அவ் வேண்டுகோளுக்கிணங்க, நான்கு அறிக்கைகளை அவர் சமர்ப்பித்தார். நாட்டுக் கடனைப்பற்றிய முதல் அறிக்கையை 1790ஆம் ஆண்டு, ஜனவரி 14ஆம் நாள் சமர்ப்பித்தார். ஆயத்தீர்வை விதிக்க வேண்டும் என்ற கருத்தினை ஆதரிக்கும் இரண்டாவது அறிக்கையை 1790, டிசம்பர் 13-ல் வெளியிட்டார். அதே நாளில் தேசீய பாங்கு (National Bank) ஒன்று உருவாக வேண்டும் என்ற கருத்தமைந்த மூன்றுவது அறிக்கையையும் வெளியிட்டார். தொழில்துறை வளர்ச்சியினை ஆதரிக்கும் புகழ்வாய்ந்த நான்காவது அறிக்கையினை 1791, டிசம்பர் 5-ல் வெளியிட்டார்.

ஃபிரான்சு, ஸ்பெயின், ஹாலந்து முதலிய நாடுகளுக்குத் திருப்பித் தரவேண்டிய மொத்த வெளிநாட்டுக் கடனும் வட்டி நிலுவைகளும் சேர்ந்து $ 1,17,10,378 ஆகும் என்று தமது முதல் அறிக்கையில் ஹாமில்டன் குறிப்பிட்டுள்ளார். உள்நாட்டுக் கடனும், 6 சதவீத வட்டி நிலுவைகளும் சேர்ந்து கிட்டத்தட்ட $ 4,04,14,086 ஆகும்; இராஜ்ஜியக் கடன்கள் சுமார் $ 2,50,00,000 இருக்கும். ஆக, அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டிய மொத்தக்கடன்கள் $7,71,24,464ஆகும். புரட்சிக்கு ஆதரவாக இராஜ்ஜியங்களும் செலவுகள் செய்தமையால் ஏற்

பட்ட இராஜ்ஜியக் கடன்களையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஹாமில்டன் குறிப்பிட்டார். மேலும், இராஜ்ஜியக் கடனையும் தேசீயக் கடனையும் திருப்பிக் கொடுக்கும் பொழுது ஒரே வீதத்தில் சமமாகக் கொடுக்கவேண்டும் என்றும் அவர் தெளிவுறுத்தினர். அரசாங்கத்தின் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இது மிகவும் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார். வெளிநாட்டுக் கடனையும் உள்நாட்டுக் கடனையும் மத்திய ஆட்சியே திருப்பித் தரவேண்டும் என்ற கருத்திற்கு ஓரளவு எதிர்ப்பு இருந்தது. ஆனால், இராஜ்ஜியக் கடன்களை மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற யோசனைமீது பலத்த வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. இந்த யோசனையின்படி தேசபக்தன் ஒதுக்கித் தள்ளப்படுவான்; ஊக வணிகனுக்கு வசதி ஏற்படும்; இன்னும் சில இராஜ்ஜியங்களுக்கு இலாபமும் மற்ற இராஜ்ஜியங்களுக்கு இழப்பும் ஏற்படும். மக்கள் எண்ணிக்கையை கடனுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், சில தென் இராஜ்ஜியங்களில் மக்கள் எண்ணிக்கையைவிடக் கடன்கள் குறைவாக உள்ளன. ஆனால், வட இராஜ்ஜியங்களில் மக்கள் எண்ணிக்கையைவிடக் கடன்களே மிகுதியாகும். எனவே, தென் இராஜ்ஜியங்கள், இராஜ்ஜியக் கடன் பொறுப்புகளை மத்திய அரசு ஏற்றுக்கொள்வதை எதிர்த்தன. ஊகவணிகர் அரசாங்கக் கடன் பத்திரங்களை அரசாங்கத்திடமே திருப்பித் தந்து ஒரே வீதத்தில் தங்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டனர். மதிப்பிறங்கிய காகிதப் பணத்தை இசைக்காக வாரி வழங்கிய பலர் ஊக வாணிகருக்குக் கிடைத்த இலாபத்தைக் கண்டு வெறுப்படைந்தனர்.

பென்சில்வேனியாவைச் சார்ந்த வில்லியம் மாக்லே (William Maclay) நேர்மையும், அதே நேரத்தில் சந்தேகப் பார்வையும் உடைய குடியரசு செனட்டர் ஆவார். அவர் 1790ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தில் தம்முடைய டயரியில் ஊக வணிகத்தைப்பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்; "இன்று 'பட்ஜெட்' என்று சொல்லப்படும் ஒன்றினைப் பிரதிநிதிகளின் சட்ட மன்றத்தில் ஆட்சியினர் சமர்ப்பித்தனர். கடந்த சில நாட்கள் கடன் பத்திரங்களின் மதிப்பு மிகவும் உயர்ந்துள்ளது. ஃபிலடெல்பியாவிலோ வேறு மற்ற இடத்திலோ இதைப்பற்றி விளக்கமாக ஒன்றும் கூறமுடியாது ஆனால், அரசாங்க அறிக்கை இதைப்பற்றிய விளக்கங்களைக் குறிப்பிடுகிறது....." மறுநாள் தம் டயரியில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் : 'எந்தக் கம்பெனிக்கும் பங்குச் சந்தைக்கும் நான் சென்றதில்லை. ஆனால், கடன் பத்திரங்கள்மீது ஊக வணிகம் நடைபெறுவதன் அறிகுறிகள் தென்படுகின்றன. இதனைத்

தொடர்ந்து சில நாட்கள் கழித்து டயரியில் மேலும் பின்வருமாறு எழுதுகிறார் : 'கடன் பத்திரங்களில் ஊக வணிகம் நடத்தும் நோக்கத்துடன் நிறையப் பணத்தை எடுத்துக்கொண்டு வட கரோலினுவை நோக்கி இரண்டு விரைவு ஊர்திகளில் ஊகவணிகர் சென்றனர் என்று வட கரோலினுவைச் சார்ந்த ஹாக்கின்ஸ் (Hawkins) குறிப்பிடுகிறார். கடன் பத்திரங்கள் விலைக்கு வாங்கும் நோக்கத்துடன் வாட்ஸ்வர்த் (Wadsworth) தென் மாநிலங்களுக்கு இரண்டு கப்பல்கள் அனுப்பியுள்ளார். காங்கிரஸ் உறுப்பினர்கள் தாம் மற்றவர்களைவிட அழுத்தமாக இந்த ஊக வாணிபத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று நான் கருதுகிறேன்.'[1]

ஹாமில்டன் இறுதியில் எதிர்ப்பை முறியடித்தார் (1790). கடனைத் திருப்பி அடைக்கும் பொறுப்பினையும் இராஜ்ஜியக் கடன்களை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பினையும் மத்திய ஆட்சி ஏற்றுக்கொண்டால் அதனுடைய நாணய மதிப்பு உயரும்; வர்த்தகர்களும் நிதிபடைத்த பெருமக்களும் ஃபெடரல் ஆட்சியை ஆதரிப்பர்; வியாபார நடவடிக்கைகளுக்குத் தேவையான முதலும் கிடைக்கும். 'ஒரே மாதிரியான குறிக்கோளுடன், எல்லோரையும் சமமாகப் பாவித்து, மத்திய அரசாங்கமே கடன் ஈந்தவர்களின் பணத்தைத் திருப்பித் தந்தால், அரசாங்கத்திற்கு கடன் ஈந்த அனைவரும் அரசாங்கத்தினுடைய அரசிறைத் திட்டங்களை ஒன்றுபட்டு நின்று ஆதரிப்பர்,' என்றும் ஹாமில்டன் விளக்கினர். இராஜ்ஜியப் பத்திரங்களையும் மத்திய ஆட்சிப் பத்திரங்களையும் வைத்திருந்த காங்கிரஸ்காரர்களும் வாஷிங்டன் அவர்களும் ஹாமில்டனின் யோசனையையும் திட்டத்தையும் ஏற்றுக் கொண்டனர். தென்னுட்டு வாக்குரிமைச் சீட்டுகள் ஹாமில்டனின் திட்டத்திற்கு ஆதரவாகப் பெறவேண்டுமெனில், ஆட்சியின் தலைநகரம் பொட்டோமாக் (Potomac) எனும் இடத்தில் அமைக்கவேண்டும் என்ற வாக்குறுதியை ஹாமில்டன் திட்டத்தின் ஆதரவாளர்களிடமிருந்து பெற்ற பின்னரே ஜெஃபர்சன் அத் திட்டத்தை ஆதரித்தார். இரண்டு ஆண்டுகள் கழித்து வாஷிங்

1 E. S. Maclay (ed.), Journal of William Maclay (1890), pp. 177—179. இச் சட்டம் மிகவும் குழப்பமானது; மத்திய அரசாங்கத்திற்கு இதனால் நிதிவகையில் எந்தவித இலாபமும் இல்லை. 1790ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட கடன்கழிவு நிதிச் சட்டத்தில் (Funding Act) உள்ள முக்கியப்பகுதி எதுவெனில், மதிப்பிறங்கிய நாணயத்திற்குத் தீர்வுகாணும் பகுதியே ஆகும். 1780-ல் நாற்பதுக்கு ஒன்று என்ற விகிதத்தில் காகிதப் பணத்தை இராஜ்ஜியங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று காங்கிரசு சிபாரிசு செய்தது. இந்த வகையில், $ 11,94,00,000 மதிப்புள்ள காகிதப்பணம் புழக்கத்திலிருந்து அகற்றப்பட்டது. 1790ஆம் ஆண்டுச் சட்டப்படி, அரசாங்கப் பத்திரங்களைத் திரும்பப்பெறும் வகையில், நூற்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் ஐக்கிய அமெரிக்காவின் கஜானு $ 60,00,000 மதிப்புள்ள பத்திரங்களைப் பெற்றுக்கொண்டது. எஞ்சியவைகளை இழந்தனர், அல்லது அறித்தனர், அல்லது மீட்காது விட்டனர்.

டனுக்கு வரைந்த கடிதத்தில், 'தம்மை நிதியமைச்சர் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு ஏமாற்றிவிட்டதாகவும், நிதிமந்திரியின் திட்டங்களின் உள்நோக்கத்தைப் போதுமான அளவுக்குத் தாம் முதலில் புரிந்து கொள்ளவில்லை என்றும்', வேதனையுடன் ஜெஃபர்சன் குறிப்பிட்டிருந்தார். வர்ஜீனியப் பகுதியைச் சார்ந்த கூர்த்தமதியுடைய அவர் ஏமாறக்கூடியவரா என்பது ஐயப்பாட்டிற்குரியதே. மத்திய ஆட்சி ஏற்றுக்கொண்ட மொத்த இராஜ்ஜியக் கடன் செலவில் ஆறில் ஒரு பகுதி, ஜெஃபர்சனின் தாயக இராஜ்ஜியத்திற்குக் கிடைத்தது. அதனைக் கொண்டு புரட்சியை ஆதரித்துச் செலவு செய்ததையால் ஏற்பட்ட கடனை மட்டுமன்றி மற்றக் கடன்களின் பெரும்பகுதியையும் அந்த இராஜ்ஜியம் அடைத்தது. வாஷிங்டன் இச்சட்டத்தை இயற்றிய போது எத்தகைய சூழ்நிலைகள் இருந்தபோதிலும், அடிப்படையான தத்துவத்தில் அவரது திட்டம் சிறப்புடையதாகும்.

ஆயத் தீர்வையும் (excise tax) விதிக்கவேண்டும் என்ற ஹாமில்டனின் யோசனையை, காங்கிரஸ் பெரும் எதிர்ப்புக்குப் பின்னர் ஏற்றுக்கொண்டது. அரசாங்கத்திற்குத் தேவையான வருமானத்தையும் வழங்கித் தொலைவில் உள்ள எல்லைப்புறவாசிகளையும் ஒரு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரும் வாய்ப்பு ஆயத் தீர்வைக்கு உண்டு என்று ஹாமில்டன் நம்பினார். ஆயத் தீர்வை தம்முடைய குறிக்கோளை நிறைவேற்றியது. ஆனால், பருமனுள்ள பண்டங்களையெல்லாம் சந்தையில் விற்பதற்கு வேண்டி, அவற்றைத் திட்பம் நிறைந்த விஸ்கியாக மாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்த எல்லைப்புற மக்களை இந்த ஆயத்தீர்வை அநியாயமாகக் கசக்கிப் பிழிந்தது எனலாம். 1794-ல் பென்சில்வேனியா எல்லைப்புறவாசிகள் ஆயத் தீர்வையை எதிர்த்து 'விஸ்கிக் கிளர்ச்சி' (Whiskey Rebellion) ஒன்றினைச் செய்துகாட்டினர். ஆயத் தீர்வைமீது எல்லைப்புற வாசிகளுக்கு உள்ள வெறுப்பினையும், அவர்களை அடக்கும் ஆற்றல் புதிய ஆட்சிக்கு உண்டு என்ற உண்மையினையுமே இக் கிளர்ச்சி தெளிவுபடுத்தியது. மற்ற வருவாய் நோக்கு வரிகளையும் (revenue taxes) ஃபெடரலிஸ்டுகள் விதித்தனர். ஆனால், ஜெஃபர்சன் ஆட்சிக்கு வந்தவுடன் விஸ்கி வரி முதற்கொண்டு எல்லா வரிகளையும் நீக்கினர்.

தேசீய பாங்கு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்பதே ஹாமில்டனின் மூன்றாவது சிபாரிசாகும். அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்பட்டாலும் தனிப்பட்டோரின் உடைமையாக உள்ள இங்கிலாந்து பாங்கைப் (Bank of England) போன்றே ஒரு தேசீய பாங்கினை ஐக்கிய அமெரிக்காவில் ஏற்படுத்த ஹாமில்டன் விரும்பினார். பாங்குக்குரிய பங்குகளில் ஐந்தில்

ஒரு பகுதி மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டும் என்று அவர் விழைந்தார். இந்த இடத்தில் ஆங்கில பாங்கு முறையிலிருந்து ஹாமில்டன் சிறிது மாறுபட்டார். மிகவும் தேவையான காகிதப் பணத்தை வழங்கவும், பொது நிதிகளைப் பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கவும், வர்த்தகப் பேரங்களை நிகழ்த்துவதில் அரசாங்கத்திற்கும் வியாபாரிகளுக்கும் வேண்டிய பாங்கு வசதிகளைச் செய்து தரவும், அரசாங்கப் பத்திரங்கள் குறித்து நிகழும் பேரங்களில் ஆட்சியின் அரசிறை ஏஜென்டாகப் பணிபுரியவும் ஒரு தேசீய பாங்கு தேவை என்று ஹாமில்டன் வலியுறுத்தினார். அரசியல் சட்டம் அமலுக்கு வந்த நேரத்தில் ஐக்கிய அமெரிக்காவில் மூன்று பாங்குகளே இருந்தன. அவை, ஃபிலடெல்பியாவில் உள்ள வட அமெரிக்கப் பாங்கும் (Bank of North America), நியூயார்க் பாங்கும் (Bank of New York), போஸ்டனில் மெஸ்ஸாசுசெட்ஸ் பாங்கும் (Bank of Massachusetts) ஆகும். எனவே, தேசீய பாங்கு ஒன்று உண்மையில் தேவைப்பட்டது. மேலும், அரசியல் சட்டப்படி இராஜ்ஜியங்களுக்குக் காசடிக்கும் உரிமை கிடையாது. எனவே, நாட்டினுடைய நாணயத் திட்டத்திலும், மத்திய ஆட்சியின் அரசிறைக் கைக்கோள்களிலும் தேசீய பாங்குக்கு மகத்தான அதிகாரமும் பங்கும் இருக்கும் என்பது உண்மையே. தேசீய அரசாங்கத்தில் ஆதிக்கம் வகித்த ஃபெடரலிஸ்டு முதலாளிகளுக்கு இதனால் தீங்கொன்றுமில்லை என்பதோடு, திட்டமிடப்பட்டுள்ள தேசீய பாங்கின் பெரும் பகுதியை அவர்கள் சொந்தமாக்கிக் கொள்வர் என்பதும் உறுதியாகும்.

ஜெஃபர்சனும் அவருடைய தொண்டர்களும் அரசியல் சட்டத்தின் 'கடு விதிகளுடைய கட்டுமானத்தை' (strict construction)[2] வலியுறுத்தினர். எனவே, அவர்கள் தேசீய பாங்குச் சட்டம் ஆபத்தானது என்று கருதினர். இச் சட்டத்தின் விளைவாகக் கடல்வாணிக முதலாளிகளின் கைகளிலே நிதி பற்றிய சர்வாதீனம் சிக்கிவிடும் என்றும், இச்சர்வாதீனத்தின் காரணமாக இராஜ்ஜிய பாங்குகளுக்குத் தீங்கு விளையும் என்றும்

[2] வாசகத்தில் கண்டுள்ள ஒவ்வோர் எழுத்தின்படியே அரசியல் சட்டம் தேசீய அரசாங்கத்தின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தியுள்ளது என்ற பொருளில் 'கடு விதிகளுடைய கட்டுமானம்' ('strict construction') என்ற சொல் கையாளப்படுகிறது. அரசியல் சட்டத்தின் சில விதிகளைக் குறித்துப் பொதுவாக, மேலெழுந்தவாரியான விளக்கமும், தெளிவாக வரையறுக்கப்படாத மத்திய ஆட்சி அதிகாரங்களை உள்ளடக்கிய 'பொதுநலன்' ('general welfare') எனும் தொடரின் விளக்கமும் 'தளர் விதிகளுடைய கட்டுமானம்' ('loose construction') என்ற சொல்லின் பொருள்மூலம் பெறலாம். [H. S. Commager (ed.), Documents, I, 156—160.] ஹெச். எஸ். கொமாகர் பத்திரங்களிலிருந்து, ஹாமில்டன், ஜெஃபர்சன் ஆகியோடைய வாதப்பிரதிவாதங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

ஜெஃபர்சன் கருதினர். தேசிய பாங்குச் சட்டம் அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்று அவர் விவாதித்துங் கூட, அச் சட்டம் நிறைவேறியது. எனவே, அவர் அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்கி 1800-ல் ஃபெடரலிஸ்டுகளை எதிர்த்துப் பிரசாரம் செய்து அவர்களை ஆட்சிப் பீடத்திலிருந்து இறக்கினர். பலமான எதிர்ப்பு இருந்தபோதும், 1791-ல் தேசிய பாங்கு இருபதாண்டிற்குச் சாசனத்தைப் பெற்று இயங்கத் தொடங்கியது. அதன் முதலீடு, 1,00,00,000 ஆகும்; $ 20,00,000 அரசாங்கத்தைச் சாரும்; முதலீடு செய்யும் தனியார்கள் $80,00,000 மதிப்புள்ள பங்கினைப் பெற்றனர். ஆனால், இந்தத் தொகையில் நான்கில் ஒரு பங்கினைக் காசாகவும் மீதியுள்ள மூன்று பங்கினை அரசாங்கப் பத்திரங்களாகவும் தனியார்கள் பாங்கிலே வைக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. மூல தனத்தின் அளவிற்கே பாங்கு நோட்டுகள் வழங்கவேண்டும் என்ற விதியும் இருந்தது. இந்த நோட்டுகளை பாங்கு ஏற்றுக் கொண்டு உலோக நாணயத்தை வழங்குகின்ற நிலை நீடிக்கும் வரையில் இந்த நோட்டுகளைக் கொண்டே வரி செலுத்தலாம். எந்த நேரத்திலும் பாங்கு நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் அதிகாரத்தினைப் பெற்ற நிதியமைச்சரிடம் அவ்வப்பொழுது தேசிய பாங்கு தன்னுடைய அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டும். இத்தகைய அரசாங்கக் கட்டுப்பாடு இருந்தபோதிலும், தேசிய பாங்கினைத் தனியார்துறை கார்ப்பரேஷனுகளே சாசனம் செய்துள்ளனர், எனவே, அதற்குக் கடுமையான எதிர்ப்பு எழுந்தது.

ஆரம்பகாலக் குடியரசின் நிதி நடவடிக்கைகளைப் பலப் படுத்தும் வகையிலும், ஆதரவாளர்களின் குறிக்கோள்களை நிறை வேற்றுகின்ற வகையிலும் ஐக்கிய அமெரிக்காவின் முதல் தேசிய பாங்கு சிறந்த முறையில் பணியாற்றியது. நிதி இலாக்கா வின் மிகத் திறமையான ஏஜென்டாகப் பணியாற்றி, ஆட்சியின் துணையுடன், நிதானமான முறையில் தேசிய பாங்கு தன்னுடைய பொறுப்புகளை நிறைவேற்றியது. இருபது ஆண்டு களின் ஃபெடரல் அரசாங்கத்திற்கு 1,85,00,000 டாலர்களைக் கடனுக வழங்கியது தன்னுடைய பங்குகளை விற்றபொழுது அரசாங்கத்திற்குக் கிடைத்த இலாபம் 7,00,000 டாலர்களாகும். இவற்றிற்கெல்லாம் மேலாக, நம்பிக்கைக்குப் பாத்திரமான காகித நாணய முறையைத் தேசிய பாங்கு திறமையுடன் நிருவகித்தது. அநேக இராஜ்ஜிய பாங்குகளின் கடனீவோனுக வும் பணியாற்றி, உலோக நாணயங்களை வழங்காமல் வெறும் நோட்டுகளைமட்டும் வழங்கிச் செயல்படும் பாங்குகளின் நோட்டுகளை வாங்க மறுத்துத் தேசிய பாங்கு பணியாற்றியதன்

விகிதமாக ஆணைச் செலாவணி மறைந்தொழிந்தது; காகிதப் பணத்தின் மதிப்பும் சமநிலையில் இருந்தது.

புதிய பாங்கின் நாணயத்தை டாலரில் வெளியிட்டனர். கான்ஃபெடரேஷனின் காங்கிரஸ் இதற்கு முன்னரே டாலரை நாணய அலகாகப் பயன்படுத்தியுள்ளது. ஹாமில்டனுடைய அறிக்கைக்குப் பின்னர், 1792-ல் தனது முதல் நாணயச் சட்டத்தைக் காங்கிரஸ் நிறைவேற்றியது. அச் சட்டத்தின்படி, புதிய அமெரிக்க டாலரின் பொன் மதிப்பு 24.75 கிரெயின்களாகும்; இதுவே ஸ்பானிஷ் டாலரின் மதிப்புமாகும்; மேலும், அச் சட்டத்தின்படி தசாம்ச முறையும் அமலுக்கு வந்தது.[3] ஒரு கிரெயின் பொன், 15 கிரெயின் வெள்ளிக்குச் சமம் என்ற நம்பிக்கையின் விகிதமாக, ஒரு வெள்ளி டாலரில், 15 கிரெயின் தூய வெள்ளி அளவைப்போல 24.75 மடங்குகள் கொண்ட தூய வெள்ளி இருக்கவேண்டும் அல்லது 371·25 கிரெயின்கள் கொண்ட தூய வெள்ளி இருக்கவேண்டும் என்பதாக முடிவுகட்டினர். மேலும், சிறிய வெள்ளி நாணயங்களில் அவற்றின் எடை விகிதாசாரத்திற்குத் தக்கவாறு தூய வெள்ளி இருக்கவேண்டும் என்றும், முடிவுகட்டினர். பொன், வெள்ளி நாணயங்களைச் சுயேச்சையாகவும் அளவற்ற முறையிலும் அச்சடிக்க சட்டம் வழி வகுத்தது. இரு நாணயங்களும் சட்டபூர்வமான நாணயங்களாயின. 1794-ல் ஃபிலடெல்பியாவில் தோன்றிய நாணயச்சாலை (Mint) வெள்ளிக் காசுகள் அடிக்கத் தொடங்கியது; 1795-ல் பொன் காசுகளையும் அடிக்கத் தொடங்கியது. என்றாலும், பொன், வெள்ளி உலோகங்கள் போதுமான அளவுக்குக் கிடைக்காமையால் காசடித்தல் தடைப்பட்டது. நாணயச்சாலை தோன்றிய ஆண்டுகளில் விலையுயர்ந்த உலோகங்கள் கிடைக்காமையாலும், ஒரு கிரெயின் பொன்னுக்கு 15 கிரெயின் வெள்ளி என்ற விகிதத்தில் வெள்ளியின் மதிப்பைச் சிறிது உயர்த்திவிட்டமையாலும் நாணயச்சாலைக்கு உலோகங்கள் கிடைக்கவில்லை. கிரஷாம் சட்டப்படி (Greshamis Law) மதிப்பற்ற நாணயம் மதிப்புள்ள நாணயத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டி வெளியேற்றி விடுவதால், தங்க நாணயம் அச்சிடல் குறையத் தொடங்

[3] கான்ஃபெடரேஷனின் விதிகளின்படி காங்கிரசுக்கு ஜெஃபர்சன் சமர்ப்பித்த அறிக்கையில் அமெரிக்க நாணயத் திட்டத்தின் அடிப்படைக் கருத்துகள் அடங்கியுள்ளன. டாலரிலுள்ள வெள்ளியின் அளவைச் சிறிது குறைத்தால் போதும் என்ற யோசனையைத் தவிர வேறு ஒன்றையும் புதிதாக ஹாமில்டன் வழங்கிவிடவில்லை.

கியது.[4] தங்க நாணயங்களை நாட்டைவிட்டு விரைவில் அப்புறப்படுத்தினர். நாடு, வெள்ளித் திட்டத்தின் பிடியில் சிக்கியது. அமெரிக்க வெள்ளி டாலர்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஏற்றுமதியாயின. அத் தீவுகளில் அதிக மதிப்புள்ள ஸ்பானிஷ் டாலர்களுக்குப் பதிலாக அமெரிக்க வெள்ளி டாலர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனவே, ஐக்கிய அமெரிக்காவில் வெள்ளியின் நிலைமையும் திருப்திகரமாக இல்லை. ஸ்பானிஷ் டாலர்களைக் கொண்டுந்து, பாளங்களாக மாற்றி மீண்டும் ஐக்கிய அமெரிக்காவிலேயே நாணயமாக மாற்றினர். இந்த முறை ஸ்பானிஷ் டாலர்களை ஐக்கிய அமெரிக்காவில் இறக்குமதி செய்வோருக்கு ஆதாயமாக இருந்தது. ஆனால், இந்த முறை நாட்டிற்குத் தேவையான நாணயத்தை வழங்கவில்லை. எனவே, 1806-ல் ஜெஃபர்சன் வெள்ளி டாலர்களை அச்சிடுவதைத் தடைசெய்தார். அன்று முதல் 1836 வரையில் வெள்ளி டாலர்களே அச்சிடப்படவில்லை. உண்மையில் துவக்க காலத்தில் விலைமதிக்கொணாத உலோகங்களைப் பொறுத்தவரையில் நாணய நிலைமை போதுமான அளவுக்குச் சரியாக இல்லை. பிரிட்டனுடன் நடைபெற்ற வர்த்தகத்தில் பாதக வாணிபக் கொடுப்பல் நிலையின் காரணமாகப் பொன் உலோகம் ஐக்கிய அமெரிக்காவைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தது. நாணய நிலைமை வலுவாக அமையாததற்கு இதுவும் ஒரு காரணமாகும். 1834-ல் காசடிக்கும் முறையில் சீர்திருத்தம் ஏற்படும்வரையில், காகிதப் பணமும், சிறு இனக்காசுகளும், வெளிநாட்டுக் காசுகளுமே நாணயமாகப் புழக்கத்தில் இருந்தன.

ஹாமில்டனுடைய சிபாரிசுகளும் அவற்றைத் தொடர்ந்து இயற்றப்பெற்ற சட்டங்களும் நிதிக் குழப்பத்தை நீக்குவதற்கு மட்டுமின்றி ஃபெடரல் அரசாங்கத்தைப் பலப்படுத்துவதற்கும் துணைபுரிந்தன. அரசியல், பொருளாதாரத் தொடர்புடைய குறிக்கோள்களையே அவை கொண்டிருந்தன. அச் சட்டங்களை ஏற்றுக்கொள்வதில் ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களின் விளைவாகச் சட்டங்களை எதிர்த்த குழுவினர் விரைவில் குடியரசுக் கட்சி (Republican Party) நிறுவினர். இக்கட்சிதான் பின்னர் ஜெஃபர்சன் தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றியது. முதலில் குறிப்பிட்டது

[4] ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத மதிப்பினை உடைய இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நாணயங்கள் ஒரே நேரத்தில் புழக்கத்தில் இருப்பின், பணச் செலுத்துகையில் (money payments) ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை வழங்கும் முறை இருக்கும்பொழுது, மதிப்புள்ள நாணயத்தை மதிப்பற்ற நாணயம் புழக்கத்திலிருந்து வெளியேற்றிவிடும். 1792-ல் 15 : 1 என்ற விகிதம் சரியாகவிருந்தது; ஆனால், மெக்சிகோவில் வெள்ளிச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால், வெள்ளியின் மதிப்பு விழுந்து விட்டது.

போல, இத்தகைய சட்டங்களினால் வர்த்தகங்களும் நிதிபடைத்தோரும் பெரிதும் பயனடைந்தனர். இன்னும் அலெகனீஸ் மலைத்தொடருக்கு மேற்கே குடியேறியவர்களும் இச் சட்டங்களின் பயன்களையும், புதிய அரசாங்கத்தின் வலிமையையும் புரிந்து கொண்டனர். இந்த உண்மையை 1795-ல் ஸ்பெயினுடன் செய்துகொண்ட உடன்படிக்கை தெளிவாக விளக்குகிறது. அவ் உடன்படிக்கையின்படி, நியூ ஆர்லியன்சில் (New Orleans) 'டிபாசிட் உரிமை' (Right of Deposit) வழங்கப்பட்டது. பண்டங்களை ஒரு குறிப்பிட்ட துறைமுகத்தில் இறக்கிப் பின்னர் கப்பலில் ஏற்றுவதற்கு எந்தவித வரியையும் செலுத்தாமலிருக்கும் சலுகையை ஐரோப்பியருக்கு வழங்கியதைத்தான் 'டிபாசிட் உரிமை' என்று குறிப்பிடுவர்.

அரசியல் சட்டத்தின் மேன்மையும் ஹாமில்டன் பொருளாதாரத்தின் உயர்வுமே புதிய ஃபெடரல் அரசாங்க வெற்றிக்குக் காரணங்களாகும் என்று நம்புகின்ற வழக்கம் வெகு நாட்களாக இருந்தது. இது இக்கதையின் ஒரு பகுதியேயாகும். ஐரோப்பா போரிலே குதித்து, அமெரிக்கக் கப்பல் முதலாளிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும், விவசாயிகளுக்கும் புதிய சந்தைகள் கிடைக்கும் வரையில் ஃபெடரல் அரசாங்கம் வலிவும் பொலிவும் நிறைந்ததாக அமையவில்லை. வளமும் செழுமையும் கொழுத்த வேளையில் புதிய அரசியல் சட்டம் அமலுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து நாட்டிலே நிலவிய நல்ல காலம், அரசியல் சட்டத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பு சக்திகளை முறியடித்தது.

ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாங்கு

கிரேட் பிரிட்டனின் பாங்கு முறையைப் பின்பற்றித் தனிப்பட்ட பாங்கர்களும் அரசாங்கமும் சேர்ந்து ஆதிக்கம் செலுத்தக் கூடிய ஒரு பெரும் பாங்கு ஏற்பட்டால், நாட்டிற்கேற்ற நல்ல நாணயமுறை அமைவதோடு அரசாங்கத்தினுடைய அரசிறைக் கைக்கோளின் ஏஜென்டாகவும் அப் பாங்கு திறமையுடன் பணியாற்ற முடியும் என்பதே பாங்கு முறையைப் பற்றிய ஹாமில்டனின் கருத்தாகும். ஐக்கிய அமெரிக்காவின் முதல் பாங்கைப் பொறுத்தவரையில் இக் கருத்து நடைமுறையில் வெற்றிபெற்றது. தேசீய பாங்கு மிகவும் பயனுடையதாக இருந்ததால், இருபதாண்டுச் சாசனம் 1811ல் முடிவுற்ற பின்னர், பாங்கை முதலில் எதிர்த்த குடியரசுக் கட்சியினரில் பலர் இதனை ஆதரிக்கத் தொடங்கிவிட்டனர். இப் பாங்கினைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று நிதியமைச்சர் காலடின் (Gallatin) அவர்களே இசைவு தந்தார். பிரதிநிதிகளின் சட்ட மன்றத்தில் பாங்கு

சாசனத்தைப் புதுப்பிப்பதற்கு ஆதரவாக ஒரு வாக்கு அதிக மாகக் கிடைத்தது. ஆனால், செனட்டுக் கூட்டத்தில் இப் பிரச் சினைமீது ஏற்பட்ட வாக்கெடுப்பில் இரு கட்சியினருக்கும் சம வாக்குகள் கிடைத்துச் சிக்கல் ஏற்பட்டமையால், செனட்டின் துணைத்தலைவர் ஜார்ஜ் கிளின்டன் (George Clinton) தமக்கே உரிய முடிவுகட்டும் வாக்கினை சாசனத்தைப் புதுப்பிப்பதற்கு எதி ராக அளித்தார். மேற்குப் பகுதியின் எதிர்ப்பும், இராஜ்ஜிய பங்குகளின் எதிர்ப்பும், பாங்கின் அதிகாரத்தைப்பற்றியும் சர்வா தீனத்தைப் பற்றியும் பழைய குடியரசுக் கட்சியினருக்கு ஏற்பட்ட சந்தேகமும் இறுதியில் அந்த தேசிய பாங்கினை ஆழக் குழிதோண்டிப் புதைத்துவிட்டன.

உலோக நாணயங்களைச் செலுத்துகின்ற தேசிய பாங்கின் கட்டுப்பாடு நீங்கியவுடன், எண்ணற்ற இராஜ்ஜிய பாங்குகள் தோன்றின. ஐந்து ஆண்டுகளில் அவற்றின் எண்ணிக்கை 88-லிருந்து 246 ஆக உயர்ந்தது. புழக்கத்திலிருந்த பணமும் 4,50,00,000 டாலரிலிருந்து 10,00,00,000 டாலராக உயர்ந் தது. இப் பாங்குகளின் பல்வேறு வகையான நோட்டுகள் கழிவு பெற்றுப் புழக்கத்தில் இருந்தன. சில சமயங்களில் இந்நோட்டு களுக்கு 50 சதவீதம் கழிவு தரப்பட்டது. நாணயத்தில் ஏற் பட்ட குழப்ப நிலை 1812-ல் ஏற்பட்ட போரின் காரணமாக இன்னும் மோசமாயிற்று. இப் போரினை நடத்துவதற்குவேண்டிய நிதியினைச் சேகரிக்க அரசாங்கம் மிகவும் தொல்லையுற்றது. போர் தொடங்கி ஓர் ஆண்டிற்கு மேல் கழிந்த பின்னரே, உள்நாட்டு வரிகளைக் கூடுதலாக்க வேண்டும் என்ற துணிவு காங்கிரசுக்கு ஏற்பட்டது. கடன்களின்மூலம் கிடைத்த சுமார் 8,00,00,000 டாலர்களையும் அரசாங்க நோட்டுகள்மூலம் கிடைத்த 3,66,80,794 டாலர்களையும் அரசாங்கம் போரிலே செலவழித் தது. அரசாங்க நோட்டுகளுக்கு (Treasury Notes) வட்டி உண்டு. ஐக்கிய அமெரிக்காவில் எல்லாவித செலுத்துகைகளுக்கும் (pay-ments) அவற்றைப் பயன்படுத்தலாம். ஆனால், அவற்றிற்குச் சட்டபூர்வமான உரிமை கிடையாது. நியூ இங்கிலாந்தில் எதிர்ப்பு ஏற்பட்டதால் இத்தகைய கடன்களை மத்திய அட்லான் டிக் மாநிலங்களில் மட்டுமே எழுப்பினர். முதலில் எழுப்பிய கட னைத் தவிர, மற்றவையெல்லாம் 20 சதவீதத் தள்ளுபடிக்கே விலையாயின.

போர்க் காலத்தில் அரசாங்கத்தின் கொடுமையான நிதி அனு பவமும், நாணய முறையின் குழப்பமான நிலைமையும் ஒரு புதிய ஐக்கிய அமெரிக்க பாங்கு தேவை என்பதை உணர்த்தின. புதிய பாங்கு ஏற்பட வேண்டுமென்று செக்ரட்டரி அலெக்ஸாண்டர்

டல்லஸ் (Secretary Alexander Dallas) வலியுறுத்தினர். போர்க் காலத்துப் படிப்பினைகளை மறக்காமல், ஆரம்ப காலத்தில் எதிர்த்து நின்ற குடியரசுக் கட்சியினர்களே 1816-ல் ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாங்கிற்கு இருபதாண்டுச் சாசனத்தை வழங்கினர். அப் பாங்கிற்குரிய மொத்த முதல் 3,50,00,000 டாலர்களாகும். அம்முதலில் ஐந்தில் ஒரு பங்கினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். இருபத்தைந்து டைரக்டர்களில் ஐந்து பேரை பாங்குத் தலைவர் நியமிப்பார். ஃபெடரல் வரிகளை செலுத்துவதற்குப் புதிய பாங்கின் நோட்டுகளையே பயன்படுத்தலாம். நோட்டுகளைத் தேவையானபொழுது உலோக நாணயங்களாக மாற்றலாம் என்ற சட்டம் இருக்கும்பொழுது, இராஜ்ஜிய பாங்குகளும் அதனையே பின்பற்றியாக வேண்டும்; இல்லையெனில் அவற்றின் நோட்டுகள் புழக்கத்திலிருந்து நீங்கிவிடும் என்றும் எதிர்பார்த்தனர்.

துவக்க காலத்தில் மூன்றாண்டுகளுக்கு அந்த பாங்கின் நடவடிக்கைகள் தவறான வகையில் அமைந்திருந்தன. லாங்டன் சீவஸ் (Langdon Cheves, 1819—1823) தலைமையின்கீழ் அந்த பாங்கு மீண்டும் நல்ல நிலைக்கு வந்தது. பிற்காலத்தில் வர்த்தக பாங்காகவும், அரசாங்கத்தின் அரசிறைத் திட்டத்தின் ஏஜென்டாகவும், மதிப்புள்ள காகிதப் பணத்தை வெளியிடும் அமைப்பாகவும், காகிதப் பணத்தைக் காக்கும் அமைப்பாகவும் நல்ல முறையில் திறமையுடன் பணியாற்றியது. இருந்தபோதிலும், நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அப் பாங்கிற்கு எதிர்ப்பு கிளம்பியது. தம்முடைய நடவடிக்கைகளைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் கிளை பாங்குகளை ஏற்படுத்தியபொழுதெல்லாம், வட்டார இராஜ்ஜிய பாங்குகள் பொறுமை கொண்டன. தன்னுடைய நடவடிக்கைகளைச் சுருக்கிக்கொள்ள முயன்றுலும், இராஜ்ஜிய பாங்குகளே மீண்டும் எதிர்க்கின்றன. ஏனெனில், தேசீய பாங்கின் கிளைகளிடமிருந்து இராஜ்ஜிய பாங்குகள் கடன்வாங்கியுள்ளன; கிளை பாங்குகளை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன் அவற்றின்மீது சில இராஜ்ஜியங்கள் வரிவிதித்தன. ஆனால், பிரதம நீதிபதி மார்ஷல்(Chief Justice Marshall) இரண்டு புகழ்வாய்ந்த தீர்ப்புகளில் [மெக்குல்லாவிற்கும் மேரிலாந்திற்கும் இடையில் நடைபெற்ற வழக்கு (McCulloch v. Maryland. 1819); ஆஸ்பார்ன் ஐக்கிய அமெரிக்க பாங்கு இவற்றிற்கு இடையில் நடைபெற்ற வழக்கு (Osborn v. United States Bank, 1824] இராஜ்ஜியச் சட்டங்கள் அரசியல் சட்டத்திற்குப் புறம்பானவை என்றும், அரசியல் சட்டத்தின் துணையுடன் தேசீய அரசாங்கம் இயற்றும்

சட்டங்களையும், மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் அழித்து விடுவதற்கு இராஜ்ஜியங்களுக்கு அதிகாரம் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1823-ல் சீவசுக்குப் பின்னர் திறமைமிக்க நிக்கோலஸ் பிடில் (Nicholas Biddle) பாங்கின் தலைவரானார். 1825-1828ஆம் ஆண்டுகளிலே ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க அவர் தேசீய பாங்கை நன்கு பயன்படுத்தினார். பின்னர், அப் பாங்கினுடைய பெரும் சக்தியை அரசியலுக்குப் பொல்லாத வழியில் பயன்படுத்தத் தொடங்கினார். பிடில் பெற்றிருந்த சக்தியைப் பற்றியும் அதிகாரத்தைப் பற்றியும் சொல்லத் தேவையில்லை. ஃபெடரல் டைரக்டர்களில் ஒருவரான ஹென்றி டி. கில்பின் (Henry D. Gilpin) கீழ்க் கண்டவாறு எழுதினார்: '...எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. யோசனையைக் கேட்டுக்கொள்வதோ, உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்வதோ கடிதப்போக்குவரத்துகளைக் காட்டி ஒப்புதல் பெறுவதோ ஒன்றும் கிடையாது.....நாங்களெல்லாம் முழு சுன்னங்களே,''

மேற்குத் திக்குப் பகுதியின் உண்மையான பிரஜையாகிய ஆண்ட்ரூ ஜாக்சன் (Andrew Jackson), சாதாரண மக்களுடைய நலன்களுக்குப் புறம்பான சர்வாதீனத்தை உடையதாக தேசீய பாங்கு இருக்கும் என்று அஞ்சினார். உண்மையில் 'அருமைப் பணத்தையே' (hard money) விரும்பும் மனிதர் அவர். காகிதப் பணத்தை வழங்கும் எந்த பாங்கிடத்திலும் அவருக்கு நம்பிக்கை கிடையாது. அரசியல் சட்டத்திற்கே புறம்பான அமைப்பு தேசீய பாங்கு என்றும், இப் பாங்கு புத்திசாலித்தனமான அமைப்பு அன்று என்றும் ஜாக்சன் கூறியுள்ளார். ஆனால், பிரதிநிதிகளின் சட்டமன்றத்திலும் செனட்டிலும் நியமிக்கப்பட்ட கமிட்டிகள் இப் பாங்கிகளை ஆதரித்தே அறிக்கைகளை வெளியிட்டன. நடப்பிலிருந்த சாசனம் முடிவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே, சாசனத்தைப் புதுப்பிக்கவேண்டும் என்பதாக தேசீய பாங்கு மனு தாக்கல் செய்யவேண்டும் என்று ஹென்றி கிளேயின் (Henry Clay) ஆதரவாளர்கள் விரும்பினர்கள். ஹென்றி கிளே 1832-ல் தேசீயக் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் தேர்தலில் நின்றார். பாங்கு சாசனப் பிரச்சினை மீது இவர்கள் எடுத்துக்கொண்ட முடிவு இவர்களுக்குத் தேர்தலில் வெற்றியைத் தேடித் தரும் என்பதாகவும் நினைத்துக் கொண்டார்கள். வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கையில் பிடில் அவர்களும் பாங்கின் சார்பில் மேற்குறிப்பிட்ட முறையில் மனு ஒன்றினைத் தாக்கல் செய்தார். ஜாக்சன் தம்முடைய மறுப்

பாணையைப் (veto) பயன்படுத்தி சாசனத்திற்குரிய சட்டத்தை நிறைவேருதவாறு தடுத்தார். 1832-ல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் பாங்கின் இப் பிரச்சினை முன்னணியில் நின்றது. ஜனநாயகக் கட்சியினரின் (Democrats) வெற்றி பாங்கினுடைய முடிவின் அறிகுறியாயிற்று.

நாட்டைப் பயமுறுத்தி பாங்கிற்கு ஆதரவு தேடும் முயற்சியில் பிடில் ஈடுபட்டார். 1833-ல் கடன்களைச் சுருக்கிக் குறைக்குமாறு உத்தரவிட்டார். 'பிடிலின் பீதி' (Biddle's Panic) என்று கூறப்படும் கடன் முறையை (credit stringency) உண்டாக்கினர். விரும்பிய விளைவினை உண்டாக்குவதற்குப் பதிலாக, ஜாக்சன் சொல்வதுதான் சரியென்றும், பாங்கு பெற்றுள்ள அதிகாரங்களால் நாட்டிற்குத்தான் ஆபத்து என்றும் பழைய கொள்கையினராகிய வியாபாரிகள் பலரிடத்திலும், பொதுமக்களிடத்திலும் பிடில் விளக்கம் தந்துகொண்டிருந்தார். ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாங்கில் அரசாங்க நிதிகளைப் போட்டுவைக்க ஜாக்சன் மறுத்தார். தம்முடைய திட்டத்தை நிறைவேற்றக் கூடிய நிதியமைச்சரை நியமிப்பதற்குள் இரண்டு நிதியமைச்சர்களை ஜாக்சன் வெளியேற்றினர். இறுதியில் பாங்கின் சாசனம் 1836-ல் காலாவதி ஆவதற்குள் அப் பாங்கினை மிகவும் தொல்லைப்படுத்திவிட்டார்.

இப் பிரச்சினை குறித்து எழுந்த வாதப்பிரதிவாதங்களில், சரித்திர ஆசிரியர்களும் பொருளாதார நிபுணர்களும் இத்தகைய பாங்கின் பயனுடைமையைப் பொதுவாக ஏற்றுக்கொண்டனர். பாங்கைப் புத்திசாலித்தனமாக நடத்தினால், அரசாங்கத்தின் ஏஜென்டாகவும், நாணயத்தின் காவலராகவும், ஊகவாணிபத்தையும் அத்துமீறிய பணப்பெருக்கத்தையும் தடுத்து நிறுத்தும் கருவியாகவும், பொருளாதாரப் பின்னிறக்கங்களில் பயன்படும் அமைப்பாகவும் மிளிரும் என்று சரித்திர ஆசிரியர்களும் பொருளாதார நிபுணர்களும் கருதினர்கள். ஆனால், ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாங்கு, பொறுப்பற்ற அதிகாரத்தையும் மிகுந்த பொருளாதாரச் சலுகைகளையும் அனுபவிக்கும் தனியார் பாங்காகும். பங்குதாரர்களுக்கு இலாபம் தேடித்தரும் சாதனமாகவே அப் பாங்கு இயங்கியது. எந்தவகையிலும் அது பொறுப்புவாய்ந்த மத்திய பாங்கு அன்று; மற்ற பாங்குகளைப் போலவே கடன்கள் கொடுத்து இராஜ்ஜிய பாங்குகளுடன் போட்டியிடும் வர்த்தக பாங்குபோலவே நடந்துகொண்டது. [5]

[5] ஜி. ஆர். டெய்லர் (G. R. Taylor), The Transportation Revolution, pp. 305—311.

பாங்குத் தொழிலும் நாணயமும் (1834—1862.)

ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாங்கிற்கு மறு சாசனம் கிடைக்கவில்லை. மேற்குத் திசை பிரதேசத்தினருக்கு இஃது ஒரு மகத்தான வெற்றியாகும். மத்திய பாங்கின்மூலம் நாணயத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சி தோல்வியடைந்தது. ஜாக்சனின் அரசியல் எதிரிகள் வருணிக்கும் 'செல்ல பாங்குகள்' (Pet Banks) எனும் சில குறிப்பிட்ட பாங்குகளில் அரசாங்க நிதிகளைப் போட்டுவைப்பது திருப்திகரமானதாக இல்லை. ஏனெனில், அரசாங்கத்தின் தனிச் சலுகைகளை இத்தகைய செல்ல பாங்குகள் பெற்றுவிடுகின்றன என்றும், இப்பாங்குகள் அத்துமீறி பாங்கு நோட்டுகளை வெளியிடுகின்றன என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். உள்நாட்டுச் செலாவணியையோ அல்லது வெளிநாட்டுச் செலாவணியையோ நிருவகிக்கின்ற பொறுப்பினை அரசாங்கம் எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும், எந்தவகையான பாங்குத் தொழிலையும் அரசாங்கம் ஏற்று நடத்தக்கூடாதென்றும் வான்பியூரன் (Van Buren) தெளிவுறுத்தினர். தன்னுடைய சொந்த நிதிகளையே பாதுகாக்க சுயேச்சையான கஜானா ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் விரும்பினர். தூணை கஜானாக்களை ஏற்படுத்தி, வரிமூலம் கிடைக்கவேண்டிய வருமானத்தையும் மற்றவைகளையும் உலோக நாணயத்தில் பெற்றுப் பிரித்துக் கொடுக்கவேண்டியவைகளையும் உலோக நாணயத்திலேயே கொடுத்து, இவ் வேலைகளையெல்லாம் கவனிக்க அதிகாரிகளை நியமிப்பதே அரசாங்கக் கடனாகும். அரசாங்கத்தை பாங்குத் தொழிலிலிருந்து முழுதும் துண்டித்து விடுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், எல்லாவித செலுத்துகைகளையும் உலோக நாணயத்திலேயே நிகழ்த்தி, உலோகக் காசுகளையே பெரிதும் பயன்படுத்தத் தூண்டி, பாங்கு நோட்டுகளின் தேவைகளைக் குறைப்பதும் அத்திட்டத்தின் குறியாகும். 1840-ல் ஜனநாயகவாதிகளின் எதிர்ப்புக்கு இடையில் சுயேச்சையான கஜானாமுறை நடைமுறைக்கு வந்தது; பின்னர் 1841-ல் விக்ஸ் (Whigs) இக் கஜானாமுறையை நிறுத்திவிட்டனர்; மீண்டும் 1846-ல் ஜனநாயக வாதிகளே முன்னின்று கஜானாமுறையைப் புதுப்பித்தனர். [இக்கஜானா அமைப்பினைப் பின்னர் 1913-ல் ஃபெடரல் காப்புநிதி அமைப்புடன் (Federal Revenue System) ஒன்றுசேர்த்து இணைத்துவிட்டனர்; இறுதியில் 1921-ல் கஜானா அமைப்புமுறை மறைந்து ஒழிந்தது.] இதற்கிடையில் மத்திய பாங்கு ஒன்றினை ஏற்படுத்த விக்ஸ் முயன்று தோற்றனர். எனினும், 1863-ல், ஃபெடரல்

பத்திரங்களை விலைக்கு வாங்கி அவற்றின் அடிப்படையில் காகிதப் பணத்தை வெளியிடும் உரிமை பெற்ற தேசிய பாங்குகளை நியமிக்க ஃபெடரல் அரசாங்கம் முன்வந்து சாசனங்களை வழங்கியது.

அரசாங்க நிதிகளைத் திறமையுடன் நிருவகித்து, பாங்கு நோட்டுகளின் அத்துமீறிய பெருக்கத்தைத் தடுப்பதில் ஓரளவு வெற்றிபெற்று, உலோக நாணயப் புழக்கத்தையும் வளர்த்து, சுயேச்சை கஜானா முறை நல்ல பெயரெடுத்துச் சிறப்புற விளங்கியது. மேலும், ஃபெடரல் நிதிகளில் ஒரு தேக்கம் ஏற்பட்டு நிதித்துறையில் ஏதேனும் நெருக்கடி ஏற்பட்டால், அதனைச் சமாளிக்கும் திறனும் கஜானா முறைக்கு இருந்தது. புழக்கத்திலிருந்து உலோக நாணயங்களின் ஒரு பகுதியை வெளியேற்றி உள்ளிழுத்துக்கொள்ளும் குறைபாடு கஜானா முறைக்கு உண்டு. ஃபெடரல் இருப்புகள் (federal balances) குறைவாக இருக்கும் வரையில், ஒரு தொல்லையும் இல்லை. ஆனால், இருப்புகள் நிறைய இருந்தால், விளைவு பயங்கரமானதாகும். ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாங்கை மூடிவிட்டுச் சுயேச்சை கஜானா முறையை ஏற்படுத்திய காரணத்தினாலேயே, நாணயக் கட்டுப்பாடு குறித்த அடிப்படைப் பிரச்சினையில் தீர்வுகண்டுவிட்டதாகக் கருதிவிடக் கூடாது. நாணயக் கட்டுப்பாடு அரசாங்கத்தின் பொறுப்பா, தனிப்பட்ட பாங்கர்களின் பொறுப்பா அல்லது இருசாராருக்கும் பொதுவான பொறுப்பா என்பதே முடிவுகட்டப்படாத நிலையில் விவாதத்திற்குரிய பிரச்சினையாக உள்ளது.

எல்லைப்புறச் சூழ்நிலையில் வளர்ந்திருந்தபோதிலும், ஜாக்சன் அருமைப் பணத்தில் நம்பிக்கையுள்ளவராவர். எனவே, அமெரிக்க உலோக நாணயத்தைப் புதுப்பிக்க எண்ணி ஒரு சட்டமியற்றினர். 1792ஆம் ஆண்டில் இயற்றிய சட்டப்படி பொன், வெள்ளி நாணயங்களைச் சுயேச்சையாகவும், அளவற்ற முறையிலும் அச்சடிக்கலாம்; பொன் நாணயமும், வெள்ளி நாணயமும் பதினைந்துக்கு ஒன்று என்ற விகிதாசாரத்தில் அமையவேண்டும். ஆக, இச்சட்டத்தின் விளைவால் வெள்ளிக்குக் கூடுதலான மதிப்பு ஏற்பட்டது. கிரஷாம் விதிப்படி, தங்கம் புழக்கத்திலிருந்து வெளியேறி மறைந்தது. 1806-ல் வெள்ளி டாலர் நிறுத்தப்பட்டது. எனவே, பல்வேறு வெளிநாட்டுக் காசுகளே ஐக்கிய அமெரிக்காவின் உலோக நாணயமாகப் புழக்கத்தில் இருந்தது. 1834ஆம் ஆண்டின் சட்டப்படி (1837ல் சிறிது திருத்தப்பட்டது), பதினைந்துக்கு ஒன்று என்ற விகிதத்தை மாற்றி 15·98+க்கு ஒன்று அல்லது ஏறத்தாழ 16-க்கு ஒன்று என்ற விகிதத்தைப் புகுத்தினர். அதே வேளையில், தங்க டாலரின் எடையை 24·75 கிரே

யின் தூய தங்கத்திலிருந்து 23, 22 ஆகக் குறைத்தனர். ஆனால், வெள்ளி டாலரின் எடையில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை. பழைய முறைப்படி ஒரு வெள்ளி டாலரில் 371·25 கிரெயின் தூய வெள்ளியே இருந்தது. இப்புதிய விகிதாசாரத்தினால், தங்கத்தின் மதிப்பு கூடுதலாயிற்று. எனவே, தங்கம் புழக்கத்திற்கு வந்தது. ஆனால், வெள்ளி மறைந்தது. 1848-ல் கலிபோர்னியாவில் தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், தங்கத்தின் விலை குறைந்தது. எனவே, புதிய விகிதாசாரத்தினால் தங்கத்தின் மதிப்பில் செயற்கையாக ஏற்பட்ட அதிகரிப்பு இன்னும் தெளிவாயிற்று. 1853-ல் வெள்ளி டாலரிலுள்ள பின்ன அளவான தூய வெள்ளியை நீக்கியபின்னரே, துணை நாணயமாக வெள்ளி டாலர் புழக்கத்திற்கு வந்தது.

பெடரல் அரசாங்கம் வெளியிட்ட உலோக நாணயங்களோடு மட்டுமல்லாமல், இராஜ்ஜிய பாங்குகள் வெளியிடும் பல்வேறு இனங்களைச் சார்ந்த பாங்கு நோட்டுகளும் புழக்கத்தில் இருந்தன. 1820-ல் 307 இராஜ்ஜிய பாங்குகள் இருந்தன; 1860-ல் 1601 ஆக அவை பெருகின. அப்பாங்குகளின் முதலும் 102,000,000 டாலர்களாக இருந்து 422,000,000 டாலர்களாக உயர்ந்தது. மேலும், அப்பாங்குகளின் நோட்டுப் புழக்கமும் 16,600,000 டாலர்களாக இருந்து 207,000,000 ஆக உயர்ந்தது. இப்பாங்குகளுக்கு இராஜ்ஜியங்களின் அதிகாரபூர்வமான அங்கீகரிப்பு இருப்பதாலும், இவற்றின் தலைவர்களும் டைரக்டர்களும் சட்ட மன்றங்களின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றமையாலும், அரசியல் சட்டப்படி இப்பாங்குகள் செல்லுபடியாகுமா என்ற கேள்வி எழத்தான் செய்யும்.[6] 1824-ல் நீதிமன்றங்களின் பார்வைக்கு இப்பிரச்சினை வந்தது. 1837-ல்தான் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடிந்தது. ஓர் இராஜ்ஜியம்மட்டுமே பங்குதாரராக உள்ள அமைப்பு ஒன்றின் உண்டியல்களுக்கும், இராஜ்ஜிய நாணயத்தின்மீது வழங்கப்படும் உண்டியல்களுக்கும் உள்ள வேற்றுமைகளைத் தலைமை நீதிமன்றம் (Supreme Court) விளக்கிய பின்னர்தான், இப்பிரச்சினைக்கு முடிவு ஏற்பட்டது.[7] ஓர் இராஜ்ஜியம்மட்டும் முழுப் பங்குதாரராக உள்ள அமைப்பின் உண்டியல்கள் அரசியல் சட்டத்திற்குப் புறம்பானவை அல்ல என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இராஜ்ஜிய பாங்குகளின் நோட்டடிக்கும் உரிமையைக் கட்டுப்படுத்த மார்ஷல் முயன்றார். ஆனால், ரோஜர் பி.

[6] அரசியல் சட்ட விதி I, பிரிவு 10, 'எந்த இராஜ்ஜியத்திற்கும் காசடிக்கும் உரிமை கிடையாது; கடன் பத்திரங்களை வெளியிடும் உரிமையும் கிடையாது.

[7] Briscoe, V. 'The Commonwealth of Kentucky', II Peters, 257.

டானீ (Roger B. Taney) அவர்களின் தலைமையின்கீழ் இராஜ்ஜிய உரிமைகள் நீதிமன்றம் (States-rights Court) இராஜ்ஜிய பாங்கு களுக்கு நிறைய உரிமைகளை வழங்கிவிட்டது.

இராஜ்ஜியங்கள் வழங்கிய பாதுகாப்பினைப் பொறுத்துதான் இத்தகைய பாங்குகளின் நோட்டடிக்கும் உரிமை அமைந்தது. தேவை ஏற்படும்பொழுது பாங்கு நோட்டுகளுக்குப் பதிலாக உலோக நாணயங்களை வழங்கத் தவறும் பாங்குகள்மீது மாதம் ஒன்றுக்கு 2 சதவீதம் அபராதம் விதிக்கும் முறை 1839-ல் மெஸ்ஸாசுசெட்ஸில் நிலவியது. 1829ஆம் ஆண்டிற்குப்பின் தோன்றிய பாங்குகளெல்லாம் தங்களுடைய முதலில் நான்கில் ஒரு பகுதி அளவிற்குத்தான் நோட்டடிக்கலாம் என்று வரையறை செய்யப்பட்டது. 'சஃபோக் அமைப்பு முறைப்படி' ('Suffolk System'), நகர பாங்குகள் உலோகக் காசுகளை வழங்கி, நோட்டு களைத் திரும்ப மீட்டுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்; மற்ற பாங்குகள் போஸ்டனில் நோட்டு மீட்சி ஏஜென்சிகளை (Redemption Agencies) ஏற்படுத்த வேண்டும். இவ்வமைப்பு முறையினால் நியூ இங்கிலாந்து பாங்கு நோட்டுகள், மதிப்பைப் பொறுத்தவரையில் சமநிலையில் இருந்தன. நியூயார்க்கு 'காப்பு நிதி' ('Safety Fund') ஒன்றினை ஏற்படுத்தியது. செலுத்தினங் கள் 3 சதவீதம் ஆகும்வரையில் ஒவ்வொரு பாங்கும் தன்னுடைய மொத்த முதலின் ஒரு சதவீதத்தில் அரைப்பங்கினைக் காப்பு நிதிக்கென இராஜ்ஜியக் கருவூலக்காப்பாளரிடம் (Treasurer of the State) வழங்கவேண்டும். நோட்டுகளை மீட்டுக்கொள்ளத் தவறு கின்ற பாங்கின் நோட்டுகளை மீட்க இந்த நிதி பயன்படும். இத்தகைய காப்பு முறைகள் வழக்கத்திற்கு மாறுனவைகளே. சட்டமன்றங்களுக்கு அனுபவமும் கிடையாது. எளிய நாணய முறையின் (easy money) தேவை வளர்ந்தது. நூற்றுக்கணக்கான பாங்குகளின் நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. திறமை மிக்க பாங்கரால்கூட இந்நோட்டுகளின் மதிப்பு எவ்வளவு என்று உறுதியுடன் கூறமுடியாது. மேலும், கள்ள நாணயமும் பெருகி யது. இத்தகைய விளைவுகளினால், வியாபாரம் பல தொல்லை களுக்கிடையில் நடைபெறவேண்டியிருந்தது.

உலோக நாணயச் சுற்றறிக்கையும், 1837, 1857ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பீதிகளும்[8]

ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாங்கு மறைந்த பின்னர், இராஜ்ஜிய பாங்குகளின் எண்ணிக்கையும், முதலும், நோட்டுப் புழக்கமும் விரைவில் பெருகின. 1837-ல் அரசாங்கத்

[8] பீதிகளைப்பற்றிய முழு விளக்கத்தை 29ஆவது அதிகாரத்தில் காண்க.

திடமிருந்த உபரித் தொகையாகிய 28,000,000[9] டாலர்கள் இராஜ்ஜியங்களுக்கிடையில் பகிர்ந்தவிக்கப்பட்டன. எனவே, ஊக வாணிபத்தின் வெறியாட்டம் தலைதூக்கியது. உள்நாட்டு வளர்ச்சியிலும் அக்கறை பிறந்ததால், ஊக வாணிபம் பெருகியது. மேல்திசையிலுள்ள வளமான நிலங்களைக் கைப்பற்றும் ஊக வாணிபமும் வளர்ந்தது. பொது நிலங்களை விற்பதன்மூலம் கிடைத்த வருமானம் 1830-ல் 1,880,000 டாலர்களாக இருந்து 1836-ல் 20,000,000 டாலர்களாக உயர்ந்தது. ஜாக்சன் நிதித்துறையில் நிபுணர் அல்லர் எனினும், உருவாகியுள்ள சூழ்நிலையின் அடிப்படைக் கேடுகளை நன்கு உணர்ந்திருந்தார். எனவே, காங்கிரசுக்கு அனுப்பிய செய்தியில் கீழ்க்கண்ட முறையில் தெளிவாகத்தான் கருத்துகளை விளக்கியுள்ளார்: 'பொது நிலங்களை விற்பதன்மூலம் கிடைக்கும் வருமானம் எல்லை மீறிப் பெருகிக்கொண்டுபோவதாகத் தெரிகிறது. உண்மையில் ஆராய்ந்துபார்த்தால், இத்தகைய வருமானங்கள் பாங்கு நோட்டுகளே தவிர வேருென்றுமில்லை. பாங்குகள் தங்கள் நோட்டுகளை ஊக வணிகரிடம் கடனுகத் தருகின்றன. இந்த நோட்டுகளை ஊக வணிகர் நில ஏஜெண்டுகளாகிய பெறுபவர்களிடம்(receivers) கொடுத்துவிட்டுப் பொது நிலங்களை உடமையாக்கிக்கொள்வர். நில ஏஜெண்டுகளிடமிருந்து இந்த நோட்டுகள் மீண்டும் பாங்குகளுக்கே செல்லும். பாங்குகளும் மீண்டும்மீண்டும் இந்த நோட்டுகளையே ஊக வணிகருக்குக் கடனுக வழங்கிக்கொண்டே யிருக்கும். ஊக வணிகரும் மதிப்புள்ள நிலங்களை உடைமையாக்கிக் கொண்டே யிருப்பர். பாங்குகளின் கணக்குப் புத்தகங்களில் அரசாங்க வருமானம் நோட்டளவில் பெருகிக்கொண்டே யிருக்கும்.....நோட்டுப் பெருக்கமும் ஊக வாணிபமும் டிபாசிட்டு பாங்குகளை மட்டும் பாதிக்கவில்லை; யூனியனிலுள்ள பாங்குகள் அனைத்தையுமே பாதித்தன. இத்தகைய கேடுகள் இன்னும் வளரும் வகையில் புதிய அமைப்புகள் ஏற்படத் தூண்டுகோலாக நோட்டுப் பெருக்கமும் ஊக வாணிபமும் அமைந்தன.'[10] நீர்க்குமிழிபோல ஊக வாணிபம் பொறுப்பற்ற முறையில்

[9] 1835-ல் நாட்டுக் கடன் அடைக்கப்பட்டது. அடுத்த இரண்டாண்டுகளுக்கு ஃபெடரல் அரசாங்கம் எந்தவிதமான கடன் தொல்லையிலும் சிக்காமல் தப்பியது. நமது வரலாற்றிலேயே கடனில்லாமல் ஃபெடரல் அரசாங்கம் இயங்கியது இந்த இரண்டாண்டுகளில்தான். இவ்விரண்டாண்டுக் காலத்தில் மிஞ்சிய உபரித் தொகையை இராஜ்ஜியங்களுக்குக் கடனுகவே ஃபெடரல் அரசாங்கம் பகிர்ந்தளித்தது. எனினும், இராஜ்ஜியங்களுக்கு வழங்கப்பட்ட இக்கடனை ஒரு முழு இனமாகவே எல்லோரும் கருதினர்; இக்கடனிலிருந்து ஒரு டாலரைக்கூட ஃபெடரல் அரசாங்கம் திரும்பப் பெறவில்லை.

[10] Eighth Annual Message, December 5, 1836 in Richardson's 'Messages and Papers of the Presidents,' (1909 ed.) II, 1468.

பெருகி வளர்ந்தது. இதற்குக் காரணம், இராஜ்ஜியங்கள் உள் நாட்டு முன்னேற்றங்களுக்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிறையக் கடன்களை வாங்கி, நிலையற்ற அமைப்புகளுக்கெல்லாம் வாங்கிய கடன்களையே மீண்டும் தாராளமான மனப்பான்மை யுடன் வழங்கியதேயாகும்.

1837-ல் நிகழவிருந்த பீதிக்கு முன்னறிவிப்பாக 1835-ல் தானியப் பஞ்சம் ஏற்பட்டது. இதன் காரணமாக, விவசாயி களால் ஊக வணிகருக்கும் வியாபாரிகளுக்கும் திருப்பித்தரவேண் டிய கடன் தொகையையும் மற்றத் தொகைகளையும் செலுத்த முடியவில்லை. அவ்வாறே நில ஊக வணிகரும் வியாபாரிகளும் பாங்குகளிடமிருந்து தாங்கள் பெற்ற கடன்களைத் திருப்பித்தர வில்லை. தானியப் பஞ்சத்தின் காரணமாக, ஐக்கிய அமெரிக்கா வில் பாதக வாணிபக் கொடுப்பல்நிலை ஏற்பட்டது; வெளி நாட்டுக் கடன்களைத் திரும்ப அடைக்கவேண்டியதாயிற்று; வெளி நாட்டுக் கடனீவோருக்கு உலோக நாணயத்திலேயே கடனைத் திருப்பித்தரவேண்டிய கட்டாயத் தேவையும் ஏற்பட்டது. இவ் வாறு ஒன்றுகூடிய தொல்லைகளுக்கிடையில், உலோக நாணயச் சுற்றறிக்கை (special circular) ஒன்றினை 1836ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் தேதியன்று ஜாக்சன் வெளியிட்டார். அவ் வறிக்கை நிலவிய நெருக்கடியை இன்னும் தீவிரப்படுத்தியது. எதிர்காலத்தில் பொன்னையும் வெள்ளியையும் செலுத்தியே பொது நிலங்களை வாங்கவேண்டும் என்ற உத்தரவைத் தாங்கிய அறிக்கையாக அது வெளிவந்தது. வெப்பத்தைத் தணிக்கும் குளிர்ந்த சமுக்காளம்போல, மேற்குத் திசைப் பகுதியில் பெருகி வளர்ந்திருந்த ஊக வாணிபத்தை அச்சுற்றறிக்கை தடைப்படுத் தியது. பாங்கு நோட்டுப்புழக்கத்தின்மீது ஏற்பட்டிருந்த நம்பிக்கை யையும் அச் சுற்றறிக்கை தளர்த்திவிட்டது. 1836ஆம் ஆண்டு முடிவுறும் தறுவாயில், இங்கிலாந்தில் உள்ள முக்கியமான வர்த் தக நிலையங்கள் மூடப்பட்டமையால், ஆங்கிலேயத் தொழிலதிபர் கள் பலர் பாதிக்கப்பட்டனர். எனவே, அமெரிக்கப் பருத்திக்கு இருந்த தேவையும் குறைந்தது. ஆக, ஐக்கிய அமெரிக்காவில் சூழ்நிலை இன்னும் மோசமாயிற்று.

நாட்டிலே அதுவரையில் அனுபவித்தறியாத பொருளாதாரப் பீதி ஏற்பட்டது. 1837ஆம் ஆண்டு, மே மாத முடிவில் உலோக நாணயங்களின் செலுத்துகைகளை பாங்குகள் அனைத்தும் நிறுத்தி விட்டன. பாங்கு நோட்டுப் புழக்கமும் 1837-ல் 149,000,000 டாலர்களாக இருந்து 1843-ல் 58,000,000 டாலர்களாகக் குறைந்தது. 1836-ல் பொது நிலங்களின் விற்பனைமூலம் கிடைத்த தொகை 20,000,000 ஆகும்; 1841-ல்

1,000,000 ஆகக் குறைந்தது. அதே ஆண்டில், தனி திவாலா சட்டம் (Special Bankruptcy Law) ஒன்றைக் காங்கிரஸ் இயற்றியது. அச் சட்டத்தின்படி, 39,000 பேர்கள் தங்களுக்கு ஏற்பட்டிருந்த 441,000,000 டாலர்கள் மதிப்புள்ள கடன்களிலிருந்து விடுபட்டனர். தொடர்ந்து ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்குப் பொருளாதார மந்தம் கடுமையாகவே இருந்தது. எனவே, தொழில் வளர்ச்சியும் விவசாய வளர்ச்சியும் தடைப்பட்டன.

இறுதியில் பொருளாதார மீட்சி ஏற்பட்டது. வியாபாரம் தழைக்கத் தொடங்கியது. குறிப்பிடத்தக்க வளர்ச்சியும் ஏற்பட்டது. 1848-ல் கலிஃபோர்னியாவில் தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால், விலைவாசிகள் உயரலாயின; இருப்புப் பாதைகளும் நெடுஞ்சாலைகளும் கட்டப்பட்டன; புதிய பொறி வழித் தொழிற்சாலைகள் கிளம்பின; மேற்குத் திசை நோக்கி முன்னேறும் இயக்கம் விரைந்து சென்றது. நமது வரலாற்றில், 1857-ல் எழும்பிய மூன்றுவது பொருளாதாரப் பீதியின் காரணமாக, முன்னேற்றமும் வளர்ச்சியும் தற்காலிகமாகத் தடைப்பட்டன. நாட்டின் எதிர்காலத்தைப்பற்றி எல்லைமீறிய கற்பனையும் நம்பிக்கையும் கொண்டதாலும், எதிர்காலத்தில் போதுமான அளவுக்கு இலாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் ரயில்வேக்களில் அத்துமீறி முதலீடு செய்ததாலும், தாதுப்பொருள் வளங்கள் நிறையக் கிடைக்கும் என்று நம்பியதாலும், நாட்டில் ஒரு தேக்கம் ஏற்பட்டது. அமெரிக்காவில் முதலில் ஏற்பட்ட பீதிகளுக்கு எவையெவை காரணங்களாக அமைந்தனவோ, அவையெல்லாம் மூன்றுவது பீதிக்கும் காரணங்களாக அமைந்தன. ஷோல்டர் (Schoulder) குறிப்பிடுவதுபோல, 'மேற்குப் பகுதிகளில் பக்குவப்படாத நிலையில் இருப்புப் பாதைகள் போடப்பட்டால், நாகரிகம் முதிராத நகரங்களே எழும்பும்; இந்த நகரங்களில் வதியும் பின்தங்கிய மக்கள் கூட்டத்திற்கு வளர்ச்சியுறுத போக்குவரவுச் சாதனங்களே அமையும். கால்வாய்களும் இருப்புப் பாதைகளும் போக்குவரத்திற்குரிய கட்டண வீதத்தைக் குறைத்துவிட்டபோதிலும், அமெரிக்க விவசாயிகள் பிரிந்துகிடந்தமையால் குறைந்த கட்டண வீதத்தின் பயனை அவர்கள் நுகர முடியவில்லை.'[11] 1857, ஆகஸ்டு மாதத்தில், ஓகியோ ஆயுள் இன்சூரன்சு டிரஸ்டு கம்பெனி (Ohio Life Insurance and Trust Company) நொடித்துப்போனதால், பீதி இன்னும் முற்றியது மேற்குப் பகுதியில் இருப்புப்பாதையின் முதலீடும், முக்கியமான

[11] ஜேம்ஸ் ஷோல்டர் (James Schoulder), 'History of the United States of America under the Constitution, V, 384.

நிதித்துறை மையங்களுமே இப் பீதியில் மிகவும் பாதிக்கப்பட்டன. உண்மையில் இப் பீதி நிதிபற்றியதேயாகும். மீட்சி வெகு விரைவில் வந்தது. செழுமையின் புதிய சுழற்சியின் மேற்பகுதி நோக்கி நாடு முன்னேறியது. உள்நாட்டுப் போர் தொடங்குகின்ற கட்டத்தில், நாட்டில் மீட்சி ஏற்பட்டுச் செழிப்பு நிலவியது எனலாம்.

உள்நாட்டுப் போர் ஏற்படும்வரையில் நாட்டின் சுங்கவரிக் கைக்கோள்

வாஷிங்டன் பதவிக்கு வந்து இரண்டு மாதங்கள் முடிவதற்குள்ளாகவே, அமெரிக்க சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டது. 1816ஆம் ஆண்டு வரையில் போடப்பட்ட சுங்க வரிகள் எல்லாம் முக்கியமாக வருமான நோக்கத்தில் போடப்பட்டவைகளேயன்றி உள்நாட்டுத் தொழிற் காப்பிற்காகப் போடப்பட்டவை அல்ல. என்றாலும், அவ் வரிகள் காப்பு வரிகளாகவும் ஓரளவுக்குப் பயன்பட்டன எனலாம். காப்புமுறைக்குத் தேவையான வாதங்களை அலெக்ஸாண்டர் ஹாமில்டன் தன்னுடைய 'பொறிவழித் தொழிலப்பற்றிய அறிக்கை'யில் (Report on Manufactures) தெளிவாக விளக்கியுள்ளார். 1812ஆம் ஆண்டில் ஏற்பட்ட போரின்போதும் அதற்குப் பின்னரும், காப்புமுறைச் சுங்கத் தீர்வைக்குப்(protective tariff) பலத்த ஆதரவு ஏற்பட்டது. 1815—1818-ல் ஏற்பட்ட பணவாட்டத்தின் (deflation) காரணமாக, விவசாயப் பண்டங்களின் விலை இறங்கியது. போர் முடிந்தவுடன், ஐரோப்பியப் பண்டங்கள் அமெரிக்கச் சந்தையில் வந்து குவியும் என்ற அச்சம் எழுந்தது. இவை காரணமாகக் குழந்தைப் பருவத்திலிருக்கும் உள்நாட்டுப் பொறிவழித் தொழில்கள் மிகவும் பாதிக்கப்படும் என்றும் மக்கள் நம்பினர். எனவே, காப்புமுறைக்கு ஆதரவு பெருகியது, 1812ஆம் ஆண்டு நடந்த போர் முடிந்தவுடன், தேசீய உணர்வு கொழுந்துவிட்டு எரியத் தொடங்கவே, இராஜதந்திரிகளும், பொருளாதார நிபுணர்களும், பொறிவழித் தொழிலதிபர்களும் காப்புமுறைக்கு ஆதரவாக விளக்கங்கள் தந்தனர். நாட்டில் உள்ள எல்லாக் குழுவினரும் 1816ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சுங்கத் தீர்வைச் சட்டத்தை ஒன்றுபட்டு முழு மனத்துடன் ஏற்றுக்கொண்டனர். தென்கரோலினாவைச் சார்ந்த வில்லியம் லவுண்ட்ஸ் (William Lowndes) இச் சட்டத்தினைக் கொண்டுவந்து புகுத்தினர். பின்னால் காப்பு முறையை முழு மனத்துடன் எதிர்க்கவிருந்த ஜான் சி. கால்ஹன் (John C. Calhoun) இச் சுங்கவரிச் சட்டத்தை நிறைவேற்ற முனைந்து நின்றார். இச் சட்டத்தின்படி, 7½ முதல் 30

சதவீதம்வரையில் பெறுமான விகித வரிகள் விதிக்கப்பெற்றன; யுருத்திரத்துணி வகைகள், கம்பளி வகைகள், இரும்பு, மற்றப் பொறி வழிப் பண்டங்கள் ஆகியவற்றின்மீதே இவ் வரிகள் விதிக்கப் பெற்றன.

1816 முதல் 1833வரையில் காப்புமுறை செல்வாக்குடன் நிதானமாக வளர்ந்தது. டேனியல் ரேமண்டு (Daniel Raymond) அவர்களுடைய எழுத்துகளிலிருந்து தோன்றியதே காப்புமுறை ஆகும். ஐரோப்பாவில் செல்வாக்குடன் இருந்த தடையிலா வாணிபக் கருத்துகளை ஆடம் ஸ்மித் (Adam Smith) போன்ற வர்கள் வழங்கியிருந்தார்கள். டேனியல் ரேமண்டு ஆடம் ஸ்மித்தின் தடையிலா வாணிபக் கருத்துகளை மறுத்து, அமெரிக்கப் பொருளாதாரச் சூழ்நிலைக்கு அவை ஏற்றவை அல்ல என்று விளக்கினர். மேத்தியூ கரே (Mathew Carey) போன்ற பத்திரிகை எழுத்தாளர்களும், ஹெசிக்கியா நைல்ஸ் (Hezekiah Niles) போன்ற பத்திரிகை ஆசிரியர்களும் காப்புமுறைக்கு வேண்டிய வாதங்களை ஒழுங்குறத் தொகுத்து மக்களிடத்தில் பிரச்சாரம் செய்தார்கள்.[12] புகழ் வாய்ந்த அரசியல் தலைவராகிய ஹென்றி கிளே, காப்புமுறையை ஆதரிக்கும் கூட்டத்தினரின் தலைவரானர். விவசாயப் பண்டங்களுக்கும் மூலப்பொருள் களுக்கும் உள்நாட்டுச் சந்தைகள் ஏற்படவேண்டுமெனில், பொறிவழித் தொழில் உள்நாட்டிலேயே வளரவேண்டும் என்று கிளே விவாதித்துச் 'சிற்றிளந் தொழில்' காப்பு விவாதத்திற்குப் ('Infant industries' argument) புது மெருகேற்றினர். 1824 ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம் நிகழ்த்திய புகழ்மிக்க சொற்பொழி வில், நெப்போலிய யுத்தங்கள் முடிவுற்ற காரணத்தினல் ஐரோப்பியச் சந்தைகள் மூடப்பட்டு அமெரிக்க விவசாயி மிகவும் தொல்லையுற்றுன் என்று கிளே முழங்கினர். ஆகவே, தொழில் நகரங்களை உள்நாட்டிலேயே உருவாக்குவதன்மூலந்தான், அமெரிக்கவிவசாயி உற்பத்திசெய்துதுய்த்ததுபோக எஞ்சியுள்ள உபரிக்குச் சந்தையைக் காணமுடியும் என்றும் வலியுறுத்திக் குறிப்பிட்டார். பின்னர் அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளிலும் உள்நாட்டு வளர்ச்சியையும் சுங்கத் தீர்வையையும் இணைத் திணைத்தே பேசினர். விவசாயிகளும் தொழில்துறை உற்பத்தி யாளர்களும் பண்டங்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் உயர்ந்த

12 மேலே குறிப்பிடப்பட்ட பெரியவர்கள் காப்புமுறையை வலியுறுத்திக் கொண்டிருந்தபொழுது, தென்னுட்டில் மற்றவர்கள் குறைந்த சுங்கவரி முறையினைப் பின்பற்றவேண்டும் என்று வேண்டினர்கள். இக் குழுவினருக்கு வழி காட்டியாக இருந்த அறிவார்ந்த தலைவர்கள் தென்கரோலினு பல்கலைக்கழகத் தைச் சார்ந்த தாமஸ் கூப்பர் (Thomas Cooper), வில்லியம்-மேரியைச் சார்ந்த தாமஸ் ஆர். டியூ (Thomas R. Dew), வர்ஜீனியா பல்கலைக்கழகத்தின் ஜார்ஜ் டக்கர் (George Tucker) ஆகியோர் ஆவர்.

1816-ல் சுங்கத் தீர்வை வாக்கு 1828-ல் சுங்கத் தீர்வை வாக்கு

போக்குவரத்து வசதிகள் தேவை என்பதையும் எடுத்து விளக்கினர். இத்தகைய பொருளாதார வளர்ச்சியே ஐரோப்பியச் சந்தைகளை நம்பிக் கிடக்கும் நிலைமையிலிருந்து அமெரிக்காவை விடுவிக்கும் என்றும் அவர் நம்பினர். தன்னுடைய திட்டத்திற்கு 'அமெரிக்க அமைப்பு முறை' ('American System') என்று பெயரிட்டார்.

'அமெரிக்க அமைப்பு முறை'யைக் கிளே தீவிரமாக வலியுறுத்திக் கொண்டிருந்தபோது, பல்வேறு நலன்களை நாடும் பல்வேறு சக்திகள் தோன்றின. நாட்டின் பல்வேறு பகுதிகளும் ஏதோ ஒரு கட்சியின் பக்கமே சாய்ந்தன. காப்புமுறைக்கு ஆதரவு தந்த பகுதிகள் ஆரம்ப காலத்தில் மத்திய, மேற்கு மாநிலங்களேயாகும். நியூயார்க்கு, நியூஜெர்சி, பென்சில்வேனியா, ஓகியோ, கென்டக்கி ஆகிய பகுதிகள் காப்புமுறையை ஆதரித்து நின்றன. யுத்தத்தினுல் விளைந்த கேடுகளை அப்பகுதிகள் நன்கு உணர்ந்திருந்தன. எனவே, விவசாயப் பண்டங்களை விற்பதற்கு உள்நாட்டுச் சந்தை ஏற்பட்டால் நல்லது என்று அப்பகுதிகள் கருதின. ஆனுல், மலிவான விலையில் ஐரோப்பாவிலிருந்து பொறிவழிப் பண்டங்கள் கிடைத்தமையாலும், ஐரோப்பாவில் முக்கியமான சந்தை ஏற்பட்டிருந்தமையாலும் காப்புமுறையைத் தென்னாடு எதிர்த்தது. தென்னாட்டில் பொறிவழியாக்கம் வெற்றியுடன் நடைபெற்றது என்றாலும், அதன் அளவு குறைவுதான். தென்னாட்டில் செல்வாக்கு மிக்க வர்த்தகத்தினரில் பெரும்பாலோர் தங்களுடைய எதிர்காலம் விவசாயத்தைப் பொறுத்துதான் உள்ளது என்று கருதினர். இப் பிரச்சினை குறித்து நியூ இங்கிலாந்து இரண்டுபட்டது. இன்னும் செல்வாக்குப் பெறுத பொறிவழித் தொழில்துறையினர் காப்புமுறையை ஆதரித்தனர். ஆனுல், கப்பல் தொழிலதிபர்களும் வியாபாரிகளும் தங்களுடைய வியாபாரத்தைச் சுங்கவரி பாதிக்கும் என்று நடுங்கினர். இதன் விளைவாகச் சுங்கவரி குறித்து எடுக்கப்படும் வாக்கெடுப்பிலெல்லாம் 1860 வரையில், நியூ இங்கிலாந்து இரண்டு கட்சிகளாகப் பிளவுண்டு நின்றது. 1830-ல்தான் பொறிவழித் தொழிலதிபர்கள் நியூ இங்கிலாந்து முழுவதையும் வென்று காப்புமுறைக்கு முழு ஆதரவைத் தேடித் தந்தனர். இந்த மாற்றம் ஏற்பட்டதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், 1818-ல் சுங்கவரியை எதிர்த்துப் பின்னர் 1828-ல் சுங்கவரியை ஆதரித்து நின்ற டேனியல் வெப்ஸ்டரின் (Daniel Webster) நிகழ்ச்சியை நோக்கினுலே போதும். ஆனுல், 1816-ல் சுங்கவரியை ஆதரித்த கால்ஹன் பின்னர் அதனை எதிர்க்கத் தொடங்கிவிட்டார்.

1818-ல் இரும்புக்கு இன்னும் அதிகமான காப்பு அளிக்கப்பட்டது. 1826 வரையில் பருத்திக்கும் கம்பளிக்கும் 25 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. 1820-ல் வரிகளை உயர்த்தும் முயற்சி சென்ட்டில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோற்றது. 1824ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பின்னர், வேட்பாளர்கள் அனைவரும் காப்புமுறையை ஏற்றுக்கொண்டமையால், சுங்கவரி விதிப்பதில் சில மாற்றங்களும் திருத்தங்களும் கொண்டுவரப்பட்டன. கம்பளி வகைகள், ஈயம், சுண்ணும்பு, இரும்பு முதலிய பண்டங்களை உற்பத்தி செய்யும் பொறிவழித் தொழிலதிபர்களுக்கும் இன்னும் கூடுதலான காப்பு வழங்கப்பட்டது. சணல் உற்பத்தியாளருக்கு 25 சதவீதக் காப்பு அளிக்கப்பட்டது. கம்பளி உற்பத்தியாளருக்கும் காப்பு அளிக்கப்பட்டது. பென்சில்வேனியாவின் இரும்பு உற்பத்தியாளர்களும், ஓகியோவின் கம்பளி உற்பத்தியாளர்களும், மத்திய மாநிலங்களின் கம்பளி உற்பத்தியாளர்களும், கென்டக்கியின் சணல் உற்பத்தியாளர்களும், மற்ற உற்பத்தியாளர்களனைவரும் இத்தகைய சுங்கவரிக் காப்புமுறையை ஆதரித்தனர். ஆனால், வடபகுதியைச் சார்ந்த கப்பல் தொழில் அதிபர்கள் இதனை எதிர்த்தனர். நீக்கிரோக்களின் உடையாகக் கம்பளி பயன்பட்டதால், தென்னாடு காப்பு முறையை எதிர்த்தது.

அதிகப்படியான காப்பு வேண்டும் என்று கம்பளி உற்பத்தியாளர்கள் கிளர்ச்சி செய்த காரணத்தினால்தான், 1828ஆம் ஆண்டில் காப்புவரிச் சட்டம் இயற்றப்பட்டது. தங்களுடைய வேட்பாளர் வெற்றிபெறுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது என்று கருதிய ஜாக்சனைச் சார்ந்த அரசியல்வாதிகள் கம்பளி உற்பத்தியாளர்களுடைய கிளர்ச்சியை ஆதரித்துத் தவறான வழியிலும் தூண்டிவிட்டனர். வெறுப்பூட்டும் கெடுதலான சுங்கவரிச் சட்டத்தைக் கொண்டுவந்தால், அது நிறைவேறாது; எனினும், ஜாக்சனைச் சார்ந்த உறுப்பினர்கள் அச் சட்டத்திற்கு வாக்களிப்பதுபோல் நடித்துவிட்டு, அடுத்த தேர்தலில் உள்நாட்டுத் தொழிலின் உண்மையான நண்பர்கள்போல் வேடமிட்டு, வாக்குரிமைகளைப் பெற்று வெற்றிபெறலாம் என்பதே ஜாக்சனைச் சார்ந்தவர்களின் உள்நோக்கமாகும். மூலப்பொருள் நிலையிலுள்ள கம்பளம், பாய்மரத் துணி, மொலாசஸ் இவற்றின்மீதுள்ள வரிகளை அதிகரித்தால், காப்புமுறைத் திட்டத்தை எதிர்ப்பதில் தென்னாட்டுடன் நியூ இங்கிலாந்தும் சேரும் என்றும் எதிர்பார்த்தனர். 'இச் சட்டம் எந்தத் தொழில் உற்பத்தியையும் பற்றியதல்ல. ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவரை

உற்பத்தி செய்யும் சட்டமே இது' என்று மிகவும் கிண்டலாக ஜான் ராண்டல்ஃப் (John Randolph) குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுப் போருக்குமுன்னரே, பொதுச் சுங்கவரி வீதங்களும் மிகவும் உயர்த்துகின்ற இச்சட்டம் எதிர்பாராமல் வியப்புக்குரிய வகையில் நிறைவேறியது. செல்வாக்கற்ற இச் சட்டத்தை 'அருவறுப்பு நிறைந்த சுங்கவரி' (Tariff of Abominations) என்று தூற்றினர். சட்டப் புத்தகங்களில் இந்த வரி நான்காண்டுகள் தாம் இருந்தது. அதற்குள், குறிப்பாகத் தென்னட்டிலிருந்து பலத்த எதிர்ப்புப் புயல் கிளம்பியது. கெடுதலான பகுதிகளையெல்லாம் நீக்கிவிட்டு, 1824-ல் சுங்கவரி எவ்வாறு அமைந்திருந்ததோ அவ்வாறே அமைந்திருக்கும் வகையில் 1832-ல் ஒரு புதிய சட்டம் வந்தது. இருந்தபோதிலும், இச் சட்டம் அடிப்படையில் காப்புமுறையை அமலாக்கும் சட்டமே. எனவே, 1832ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புகழ்மிக்க 'தள்ளிவைக்கும் அவசரச் சட்டம்' (Nullification Ordinance) ஒன்றினைத் தென்கரோலினு இயற்றியது. இச் சட்டத்தின்படி, 1828ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டமும், 1832-ல் திருத்தப்பட்ட சட்டமும் செல்லுபடியாகாது என்றும், தென்கரோலினு மக்களை அது கட்டுப்படுத்தாது என்றும் தென்கரோலினு முடிவு கட்டிற்று. நாட்டு ஒற்றுமையைப் பிடிவாதமாகக் குடியரசுத் தலைவர் ஜாக்சன் வலியுறுத்தியமையால், தென்கரோலினு இப் பிரச்சினையில் வெற்றிபெறவில்லை. எனவே, 1833-ல் குடியரசுத் தலைவரும் தென்கரோலினுவும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு சுங்கச் சட்டத்தினை ஹென்றி கிளே நிறைவேற்றினார். இதனால் ஜாக்சனின் தலைமையின்கீழுள்ள தேசியவாதிகளுக்கு வெற்றி ஏற்பட்டது. அதே வேளையில், தென்னட்டுக்கு ஆதரவாகவும் சுங்கவரி குறைக்கப்பட்டது. 1832-ல் 20 சதவீதத்திற்கு அதிகமாகவிருந்த வரிகளெல்லாம் 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின்மூலம் குறைக்கப்பட்டன. 1842 வரையில் இவ் வரிக்குறைப்பு நிதானமாக நிறைவேற்றப்படவேண்டும். 1842-ல்எல்லாப் பண்டங்களின்மீதுள்ள வரிகளும்ஒரேமாதிரியாக 20 சதவீத அளவிலேயே இருக்கவேண்டும். இந்த 20 சதவீத வரிவிதிப்புச் சில வாரங்கள்மட்டுமே அமலில் இருந்தது. பின்னர், 1842, ஆகஸ்டு மாதத்தில் இதைவிட வலுவான காப்புச் சுங்கவரி விதிக்கப்பட்டது.

1832 முதல் உள்நாட்டுப் போர் மூண்ட காலம்வரையில் சுங்கவரி வீதங்கள் குறைந்துகொண்டே சென்றன. எனினும், காப்புமுறை கைவிடப்படவில்லை. 1857-ல் ஏற்பட்ட பீதியின் காரணமாகத் தேசிய அரசாங்கத்தின் வருமானம் குறையத்

தொடங்கியது. ஆகவே, காப்புமுறை ஆதரவாளர்கள் 1832-ல் நிலவிய சுங்கவரி வீதத்தை மீண்டும் 1842ல் புகுத்தினர். இச் சட்டத்தை விக்குகள் இயற்றினர்கள். 1845-ல் ஜனநாயகவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் இச் சட்டத்தை ரத்து செய்தார்கள். 1846-ல் உருவாகிய வாக்கர் சுங்கவரிச் சட்டம் (The Walker Tariff), இறக்குமதியான பண்டங்களை A, B, C, D என்ற முறையில் பாகுபடுத்தியுள்ளது. போகப் பொருள்கள் A வகுப்பைச் சேர்ந்தவை ஆகும்; அவற்றின்மீது 100 சதவீதம் சுங்கவரி விதிக்கப்பட்டது. வசதிப் பொருள்கள் (semiluxuries) B வகுப்பைச் சேர்ந்தவை ஆகும்; அவற்றின்மீது 40 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. வர்த்தகப் பொருள்கள் மற்ற வகுப்புகளைச் சார்ந்தவையாகும். அவற்றின்மீது 5 முதல் 30 சதவீதம் வரையில் வரி விதிக்கப்பட்டது. தனித்த வரிகளுக்குப் பதிலாகப் (specific duties) பெறுமான விகித வரிகளைப் புகுத்திய முறைதான் வாக்கர் சுங்கவரி முறையாகும். மேலும், இச் சுங்கவரி முறையின்படி, வரிகள் செலுத்தப்படும்வரையில் பண்டங்களைக் கிடங்குகளில் பூட்டிவைக்கும் முறை அமலுக்கு வந்தது. இக் கண்டுபிடிப்பினை நிரந்தரமாக ஏற்றுக்கொண்டனர். காப்புமுறை அமலில் இருந்தபோதிலும், இச் சுங்கவரி முறையின்படி வரிகள் குறைந்தன; 1857ஆம் ஆண்டிலும் வரி குறைப்பு நிகழ்ந்த வண்ணம் இருந்தது. 1857-ல் வரியினின்றும் விலக்கு பெற்ற பண்டங்களின் பட்டியல் நீண்டது. வாக்கர் சுங்கவரி வீதமும் குறையலாயிற்று. 1846 முதல் 1857 வரையில் வியாபார நடவடிக்கைகள் பெருகியமையால் வரிகளினின்று கிடைத்த வருமானமும் பெருகத் தொடங்கவே, வரி குறைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர், 1861 வரையில் ஐக்கிய அமெரிக்கா கிட்டத்தட்ட தடையிலா வாணிபமுறையைப் பின்பற்றுவதுபோன்ற ஒரு நிலைமை ஏற்பட்டது. 1815ஆம் ஆண்டிற்குப் பின்னர் தடையிலா வாணிபச் சூழ்நிலை ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

உள்நாட்டுப் போருக்கு முன்னர் சுங்கவரித் திட்டத்தின் விளைவுகள் யாவை என்பதைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகும். சுங்கவரிச் சட்டங்களின் விளைவாக நமது வரலாற்றில் முதல் எழுபது ஆண்டுகளில் பொறிவழித் தொழில்துறைகள் நன்கு வளர்ந்தன என்று அறுதியிட்டுக் கூறலாம். எனவே, தொழில்மயமான நாடாக ஐக்கிய அமெரிக்கா தலையெடுத்தது என்பது தவிர்க்கமுடியாத உண்மையாகும். இயற்கையான வளர்ச்சியைச் செயற்கையான முறையில் சுங்கவரிகள் தூண்டிவிட்டன எனக் கூறலாம். காப்புமுறை ஓரளவுக்குத் தென்னட்

டிற்குப் பாதகம் விளைத்தது என்றும் கூறலாம். தென்னூட்டுத் தலைவர்களும் அவ்வாறே கருதினர்கள். 1830 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சுங்கச் சண்டைகளில் தென்னூடு வெற்றிபெற்றது என்பதையும் நாம் நினைவில் நிறுத்தவேண்டும். அதற்குப் பின்னர் உள்நாட்டுப் போர் ஏற்படும்வரையில், சுங்கவரிகள் குறைந்துகொண்டே வந்தன. கடற்கரையை உடைய தென்னூட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குச் சுங்கவரியையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம். தங்களுடைய பொருளாதார அதிருப்தியை ஒன்றுதிரட்டிச் சுங்கவரி முறையை முழுமூச்சுடன் எதிர்க்கும் வேலையில் தென்னூட்டினர் ஈடுபட்டனர். பிரிவினைக்கு இச் சூழ்நிலையும், தென்னூட்டினரின் மனநிலையும் முக்கியக் காரணங்களாக அமைந்தன. சுங்கமுறையின் ஒரு கூற்றினைப் பற்றிப் பொருளாதார—வரலாற்று மாணவர்கள் தெளிவான கருத்துக் கொண்டிருக்கலாம். இக்காலத்தில் சுங்கத்தின்மூலம் கிடைத்த வருமானத்தைக்கொண்டுதான் ஃபெடரல் அரசாங்கம் இயங்கியது எனலாம். 1836ஆம் ஆண்டைத் தவிர மற்ற ஆண்டுகளில் எல்லாம் வருமானம் உயர்ந்தே இருந்தது. மற்ற வழிவகைகளிலிருந்து கிடைத்த மொத்த வருமானத்தைவிடச் சுங்கத்தின் மூலம் கிடைத்த வருமானம் 5 முதல் 10 மடங்குகள் அதிகமாகவே இருந்தன.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

டெய்லர், ஜி. ஆர். (Taylor, G. R.) 'The Transportation Revolution,' chaps. 14-15, pp. 352-367.

சுல்ட்ஸ், டபள்யூ. ஜே. (Shultz, W. J.), கெய்ன் எம். ஆர். (Caine, M. R.), 'Financial Development of the United States,' chaps.5-11.

டாசிக், எஃப். டபிள்யூ.(Taussig, F. W.), 'Tariff History of the United States,' Part I.

மெக்கிரேன், ஆர். சி. (McGrane, R. C.) 'The Panic of 1837,' chaps. 1-2.

சிலீசிங்கர், ஏ. எம். (Schlesinger, A. M., Jr.) 'The Age of Jackson,' chaps. 7-10.

காலண்டர், ஜி. எஸ். (Callender, G. S.), 'Selections from the Economic History of the United States,' 1765—1860, chaps. 10-11.

போகார்ட், ஈ. எல். (Bogart, E. L.), தாம்ப்சன் சி. எம். (Thompson, C. M.), 'Readings in the Economic History of the United States, chaps. 10, 15.

ஃபுளூகல், எஃப்., ஃபாக்னர், ஹெச். யு. (Flugel, F. and Faulkner, H. U.), 'Readings in the Economic and Social History of the United States,' chaps. 3 and 9.

10. புரட்சிக் காலம்முதல் உள்நாட்டுப் போர்க்காலம்வரையில் மேல்திசையில் வளர்ச்சி

புரட்சி முடியும் தறுவாயில் மேற்குப் பகுதியின் நிலை

1783-ல் பதின்மூன்று பிரிட்டிஷ் காலனிகளும் சுதந்திரம் பெற்றபொழுது, அக் காலனிகள் வடக்கே பிரிட்டிஷ் கனடாவிலிருந்து தெற்கே ஸ்பானிஷ் பிளோரிடாவரையிலும் பரவியிருந்தன; ஸ்பானிஷ் பிளோரிடா பகுதியில் அவை மேற்கே மிசிசிப்பி வரையில் வியாபித்திருந்தன. பிரிட்டிஷ் காலனிகளில் குடியேறியவர்களில் 200 அல்லது 300 பேர்களே 1776-ல் அலெகனிஸ் மலைத்தொடர்களின் கணவாய்களின் வழியே நுழைந்து சென்றனர். சமாதானம் நிலவிய வேளையில், சுமார் 25,000 பேர்கள் கம்பர்லாந்தின் தலைவாயிலிலும், கென்டக்கி நதிமீதும், ஹால்ஸ்டன்மீதும் ஃபிரெஞ்சு பிராடு (French Broad) மீதும் வாழத்தொடங்கினர்; இன்னும், கூட்டங் கூட்டமாக மேற்கே மிசிசிப்பிவரையில் பரவி வாழத் தொடங்கினர். சமாதானத்தின் பயனுக, மக்கள் பல்வேறு பகுதிகளை நோக்கி விரைந்தனர். அடுத்த அரைநூற்றாண்டில் மலைகளின் மேற்குப் பிரதேசங்களில் பெரும்பாலான மக்கள் குடியேற முனைந்தனர்.

ஸ்பானிஷ்காரர்கள், ஃபிரெஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள், இந்தியர்கள் ஆகியவர்களுடைய எதிர்ப்பையும் சதியையும் மிஞ்சி, மக்கள் மேற்குத் திசை நோக்கிச் சென்றவண்ணம் இருந்தனர். கிழக்கில் குடியேறியவர்கள் மேற்கே முன்னேறிவருவதை முளையிலேயே கிள்ளிவிடும் நோக்கத்துடன், தென்மேற்கிலுள்ள இந்தியர்களுடன் ஸ்பானிஷ் ஏஜென்டுகள் சதியாலோசனை செய்தனர்; தொடக்கத்தில் இருந்துள்ள பதின்மூன்று மாநிலங்களுக்கும் மிசிசிப்பிக்கும் இடையில் இடைத்தடுக்கு மாநிலங்களை (buffer states) ஏற்படுத்துவதற்காகப் புதிதாகக் குடியேறியவர்களிடத்தே சுதந்திர இயக்கம் ஏற்படுவதை ஆதரித்தனர். சான் லொரன்சோ (San Lorenzo) உடன்படிக்கை ஏற்படும் வரையிலும்,

1792-ல் கென்டக்கியும் 1796-ல் டென்னசியும் யூனியனுடன் இணைக்கப்படும்வரையிலும், ஸ்பானிஷ் ஏஜென்டுகளின் முயற்சிகள் நீடித்தன. 1795-ல் பிங்னீ (Pinckney) அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சான் லொரன்சோ உடன்படிக்கையின் விளைவாக மிசிசிப்பி நதியின் கிழக்குக் கரையிலுள்ள ஸ்பானிஷ் காவல் நிலையங்கள் அகன்றன; அந்த நதியை இலவசமாகப் பயன்படுத்தும் உரிமையும் கிடைத்தது.

1763-ல் மிசிசிப்பிக்கு மேற்கேயுள்ள பரந்த பகுதிகள் மீதுள்ள உரிமைகளை ஸ்பெயினுக்கு ஃபிரான்சு விட்டுக்கொடுத்தது. ஆனால், 1800-ல் மீண்டும் அப்பகுதிகளை ஃபிரான்சு கவர்ந்தது. தானே உருவாக்கிக்கொண்ட புதிய சாம்ராஜ்ஜியக் கனவுகள் சிதைந்துபோய்க்கொண்டிருப்பதைக் கண்ட நெப்போலியன், உடனடியாக 1803-ல் மிகக் குறைந்த தொகையாகிய 1,50,00,000 டாலர்களுக்கு லூசியானுவை ஐக்கிய அமெரிக்காவிடம் விற்றுவிட்டார். 1812-ல் நிகழ்ந்த போரில் கிரேட் பிரிட்டன் உறுதியாக வெளியேற்றப்பட்டது; 1815-ல் வாட்டர்லூ(Waterloo) போரின் விளைவாக அமெரிக்காவில் ஃபிரெஞ்சுப் பேரரசைப் படைக்கவேண்டும் என்ற கனவுகள் சுக்குநூறாயின; 1812-ல் பிரிட்டன் வெளியேற்றப்படுகின்றவரையில், 1815-ல் அமெரிக்காவில் ஃபிரெஞ்சுப் பேரரசை உருவாக்க வேண்டும் என்ற கனவுகள் சிதைந்துபோகும்வரையில், மிசிசிப்பி பள்ளத்தாக்கின் தலைவிதி முழுதும் நிர்ணயிக்கப்படாமலேயே இருந்தது. 1783ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி, பெரும் ஏரிகளைச் சூழ்ந்துள்ள கோட்டைகளை பிரிட்டன் விட்டுக்கொடுக்க இணங்கியிருந்தபோதிலும், 1,00,000[1] அளவுக்கு ஆண்டு வருமானமுள்ள தோல் வியாபாரம் பெரும் ஏரிகளைச் சுற்றி வளர்ந்திருந்தமையால், அக் கோட்டைகளை பிரிட்டன் இன்னும் விட்டுக்கொடுக்கவில்லை. 1795 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஜே ஒப்பந்தத்தின்படி (Jay treaty) மீண்டும் அக் கோட்டைப் பகுதிகளைவிட்டு வெளியேறுவதாக பிரிட்டன் ஒப்புக்கொண்டது. ஆனால், பிரிட்டனின் தூதுவர்கள் இந்தியர்களை உசுப்பிவிட்டுக்கொண்டேயிருந்ததால், ஒப்பந்தத்தின்படி வெளியேற்றம் எதுவும் நிகழவில்லை. 1812ஆம் ஆண்டுப் போருக்குப் பின்னர்தான் மத்திய மேற்கில் பிரிட்டனின் குறுக்கீடு நின்றது. இரண்டாவது சுதந்திர யுத்தம் மாலுமிகளின் உரிமைகள் குறித்து நிகழ்ந்தது எனலாம். ஆனால், உண்மையில் அதனை மேற்குப் பகுதியினரின் போர்

1. James M'Gill to Lt. Gov. Hamilton, Aug. 1, 1785. R. G. Thwaites (ed.), 'Collection sof the State Historical Society of Wisconsin,' XII, 72.

என்றே குறிப்பிடலாம். கிளே அவர்களும், மேற்கத்தியப் 'போர் வெறியர்களும்' ('War Hawks') இப் பிரச்சினையைக் காங்கிரசில் வலியுறுத்தினர். மிகப்பெரிய சாம்ராஜ்யப் பசிகொண்ட மேற் கத்தியர்களும் கனடாவை சாம்ராஜ்யத்துடன் இணைக்க முயன்று தோற்றனர். தெற்கேயுள்ள எல்லைப்புறவாசிகள், கிரீக் கர்களை (Creeks) தென் அலபாமாவிலிருந்தும், மேற்கு அலபாமா விலிருந்தும் அப்புறப்படுத்தி வெற்றியடைந்தனர். மேலும், நியூ ஆர்லியன்சில் நடந்த போரிலும் வென்றனர். இந்த யுத்தமானது இராணுவத் தேக்க நிலையை உண்டாக்கி இருக்கலாம். எனினும், இந்த யுத்தத்தின் விளைவாகத்தான் மிசிசிப்பி பள்ளத்தாக்கில் உள்ள இந்தியர்களுடன் ஆங்கிலேயர்கள் நடத்திய சதியா லோசனைகள் முடிவுற்று, புளோரிடா இணைப்பு தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாயிற்று. போர் முடிவுகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பாக மேற்கத்தியர்கள்தாம் உணர்ந்து அக்கறை காட்டி னர்கள்.

அவசரச் சட்டம்—1787

மூன்று நூற்றாண்டுகளுக்குக் குடியேற்றமும் நிலத்தைப் புக்கு வப்படுத்துவதுமே அமெரிக்க மக்களின் முக்கியக் கடமைகளாக அமைந்தன. அரசியல் சம்பந்தமும் பொருளாதார சம்பந்தமும் உடைய இத்தகைய பொறுப்புகளை அமெரிக்கர்கள் எவ்வாறு நிறைவேற்றினர் என்ற கதையை முழுதும் ஆராய வேண்டும். 1781 ஆம் ஆண்டில் போர் முடிந்தவுடனேகாங்கிரசைக் குழப்பிய முக்கிய பிரச்சினைகளில் மேற்குப் பிரதேசத்திற்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதும் ஒன்றாகும். தெளிவற்ற, ஆனால், உள்ளடங் கிய வாசகங்களைக் கொண்ட தொடக்க காலத்துச் சாசனங்களின் படி, மேற்கே மிசிசிப்பி வரையில் தங்கள் எல்லைக் கோடுகள் உள்ளன என்று ஜார்ஜியா, தென்கரோலினா, வடகரோலினா, வர்ஜீனியா முதலிய மாநிலங்கள் வாதிட்டன. வடமேற்குப் பிர தேசத்தைப் பொறுத்தவரையில் வர்ஜீனியா, கனெக்டிகட், மெஸ் ஸாசுசெட்ஸ், நியூயார்க் இவற்றின் இடையில் கருத்து வேறு பாடு நிலவியது. மேரிலாந்து, பென்சில்வேனியா, டிலாவேர், நியூ ஜெர்ஸி, நியூஹாம்ஷைர், ரோடு ஐலண்டு ஆகிய ஆறு மாநிலங்களுக்கும் மேற்கத்திய நிலத்தின்மீது உரிமை கிடையாது. மேற்கத்திய நிலங்களின்மீது உரிமை கொண்டாடும் மாநிலங் களின் வளர்ச்சியால் தங்களுடைய சொந்த முக்கியத்துவம் பாதிக் கப்படும் என்ற அச்சத்தின் காரணமாகவும், போர்க்கடன்களை அடைக்க இம்மாநிலங்கள் மேற்கத்திய நிலங்களை எளிதாகப் பயன் படுத்துமே என்ற பொறுமையின் காரணமாகவும் மேற்கத்திய

நிலங்களின்மீது எவ்வித உரிமையுமற்ற ஆறு மாநிலங்களும் அலெகனி மலைத்தொடரின் குறுக்கேயுள்ள பிரதேசங்களைத்தையும் தேசீய அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தின. இப் போராட்டத்தை மேரிலாந்து துவக்கிவைத்து நடத்தியது. 1779ஆம் ஆண்டிலேயே 'போர் துவங்கிய பொழுது,.....ஒழுங்குபடுத்தப்படாத பிரதேசங்களைப் பொது எதிரியிடமிருந்து இரத்தத்தைச் சிந்தியும் பொருளைச் செலவழித்தும் பதின்மூன்று மாநிலங்களும் காப்பாற்றிஞல், அப் பிரதேசங்களைப் பொதுச் சொத்தாகவே கருதவேண்டும். சட்டமன்றத்தின் அறிவார்ந்த விருப்பத்திற்கிணங்கக் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட முறையில் அப்பிரதேசங்களைச் சுதந்திரமான, வசதிக்கேற்ற முறையில் தனித்த அரசாங்கங்களாகப் பிரிக்கும் அதிகாரத்தினைக் காங்கிரசு பெறும்.[2] மேற்கத்திய நிலங்களின் மீதுள்ள உரிமையை அந்த மாநிலங்கள் விட்டுக்கொடுக்கும் வரையில் அவ்வுரிமையைப் பெருத ஆறு மாநிலங்களும் கான்ஃபெடரேஷனின் விதிகள் கொண்ட ஏட்டில் கையெழுத்திட மறுத்துவிட்டன. ஒரு மாநிலத்தைத் தவிர மேற்குறிப்பிட்ட மாநிலங்கள் அனைத்தும் உரிமையை விட்டுக்கொடுத்தன. 1802-ல்தான் ஜார்ஜியா மேற்கத்திய நிலங்களை விட்டுக்கொடுத்தது.

1784-ல் வடமேற்குப் பிரதேசத்தை சில்வேனியா (Sylvania), அசெனிசிப்பியா (Assenisipia), மெட்ரோபொடேமியா (Metropotamia), போலிபொடேமியா (Polypotamia) முதலிய தொன்மைச் சிறப்பான பெயர்களைக் கொண்ட பல்வேறு மாநிலங்களாகப் பிரிக்கும் திட்டத்தினை 1784-ல் தாமஸ் ஜெஃபர்சன் கொண்டு வந்தார். பழைய மாநிலங்களின்பிரஜைகள் அனுபவித்த உரிமைகள் பலவற்றையும் இப் புதிய மாநிலங்களின் பிரஜைகள் அனுபவிக்கலாம். மேலும் ஜெஃபர்சனின் திட்டத்தின்படி, புதிய மாநிலங்களில் போதுமான அளவுக்கு மக்கள் எண்ணிக்கை பெருகிய பின்னர் சரிநிகர் சமமான நிலையில் அம் மாநிலங்களை யூனியனுடன் இணைக்கலாம். 1787-ல் நிறைவேற்றப் பெற்ற மிகவும் புகழ்வாய்ந்த அவசரச் சட்டத்தில் இத் திட்டம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. 1787ஆம் ஆண்டின் அவசரச் சட்டத்தின்படி, (1) வடமேற்குப் பிரதேசத்தில் மூன்றிற்குக் குறையாமல் ஐந்திற்கு மேற்படாமல் மாநிலங்கள் அமைய வேண்டும்; (2) சுதந்திர ஆண் பிரஜைகள் 5,000 பேர்களாகும் வரையில், காங்கிரஸ் அமர்த்தும் ஒரு கவர்னரும் மூன்று நீதிபதிகளுமே

2. Instructions of Maryland to her delegates read in Congress May 21, 1779. Quoted by H. B. Adams, 'Maryland's influence upon Land Cessions to the United States,' (1885) Johns Hopkins Studies, III. 26.

அப் பிரதேசத்தை ஆள்வர். உள்நாட்டு அதிகாரிகளை நியமிக்கவும் சட்டங்கள் இயற்றவும் கவர்னருக்கும் நீதிபதிகளுக்கும் அதிகாரமுண்டு. எனினும், அதிகாரிகள் நியமனத்திலும், சட்டங்கள் இயற்றுதலிலும் காங்கிரசு மறுப்பாணையைப் பயன்படுத்தலாம்; (3) மக்கள் தொகை 5,000-த்தையும் மீறினால், வடமேற்குப் பிரதேசங்களில் இரு சபைகள் கொண்ட சட்டமன்றங்களை அமைக்கலாம். கீழ்சபையை மக்கள் தேர்ந்தெடுப்பர். கீழ்சபை நியமிக்கும் பத்துப் பேர்களிலிருந்து ஐந்துபேர்களை காங்கிரஸ் தேர்ந்தெடுத்து மேல்சபையை அமைக்கும். வாக்களிக்கும் உரிமையற்று, விவாதிக்கும் உரிமையை மட்டும் கொண்டு, சட்டமன்றம் காங்கிரசுக்கு ஒரு பிரதிநிதியைத் தன் சார்பில் அனுப்பலாம். இத்தகைய பிரதேச அமைப்பு நிலையில், மறுப்பாணை செலுத்தும் அதிகாரம் கவர்னருக்குண்டு. படிப்படியான நில உடைமைகள் மீதே (graduated ownership of land) அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டன. 50 ஏக்கர்கள் நிலமுடையவனுக்குப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமையுண்டு. கீழ்சபையில் உறுப்பினராக வேண்டுமெனில் 200 ஏக்கர்கள் கொண்ட நிலத்தின் சொந்தக்காரராக இருந்தால்தான் முடியும்; மேல்சபைக்குச் செல்ல 500 ஏக்கர்கள் கொண்ட நிலத்தின் சொந்தக்காரராக இருக்கவேண்டும்; கவர்னராக 1,000 ஏக்கர்கள் வேண்டும்; (4) இப்பிரதேசங்களில் ஏதேனும் ஒன்றில் 60,090 பேர்கள் இருந்தால், அப் பிரதேசத்தில் நிரந்தர அரசியல் சட்டம் ஒன்றினை வகுத்து இராஜ்ஜிய அரசாங்கத்தையும் ஏற்படுத்திக்கொள்ளலாம். 'முதலாளி ஏற்பட்ட இராஜ்ஜியங்களுக்கு எல்லா வகைகளிலும் உள்ள உரிமைகளை சரிநிகர் சமமாகப் புதிதாக ஏற்பட்ட இராஜ்ஜியம் பெற்றுக் காங்கிரசுக்குத் தன்னுடைய பிரதிநிதியையும் அனுப்பலாம். நடைமுறைக்கு வேண்டிய நெறிகளை இந்த அவை சட்டம் வகுத்துக்கொண்டது. புதிய பிரதேசத்தைப் பொறுத்தவரையில், அந்த நெறிகளையே பொதுவாகப் பின்பற்றினர்.[3]

3 ஸ்விஸ் வரலாற்றுசிரியர் எட்வர்டு பியூட்டர் (Edward Fueter) பின்வருமாறு குறிப்பிடுகிறார்: '1787-ல் ஜூலை 13 ஆம் நாள் வெளிவந்த ஓகியோ அல்லது வடமேற்கு அவசரச் சட்டம் என்று வழங்கப்படும் ஒன்றினை ஐக்கிய அமெரிக்காவில் நிலவும் மிக முக்கியமான சட்டங்களில் ஒன்றுகக் கருதுவர். (உலக வரலாற்றைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான சட்டம் எனலாம்.).....தாயக நலனுக்குக் காலனிகளின் நலனைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கொள்கை கைவிடப்பட்டது. ஒரு குறிப்பிட்ட மக்கள் குடியேறிய காலனிகளைத் தாயகத்தின் தொடர் பிரதேசங்களாகவே கருதி, எல்லாவகையிலும் தாயகத்தின் உரிமைகளை அவற்றிற்கு அளிக்கவேண்டும் என்ற கருத்துச் செல்வாக்கடைந்தது.' 'World History', trans, by S. B. Fay, (1922), p. 105.

புதிய மாநிலங்களை உருவாக்கும் நடைமுறைத் திட்டத்தை வடமேற்குப் பிரதேச அவசரச் சட்டம் வகுத்தமையால், அரசியல் வரலாற்றாசிரியர்கள் அச் சட்டத்திற்கு ஒரு முக்கியத்துவத்தை அளித்தார்கள். முக்கியமான சமூக, பொருளாதார விளைவுகளுக்கும் அச் சட்டம் காரணமாயிற்று. காலனிகள் தாயகத்தின் தொடர் பிரதேசங்களே என்றும், தாயகத்தின் உரிமைகளெல்லாம் அவற்றிற்கும் உண்டு என்றும் அச் சட்டம் வலியுறுத்தியது, வரலாற்றிலேயே முதன் முதலில் இக் கருத்தினை வலியுறுத்திய சட்டம் 1787-ல் இயற்றப்பட்ட அவசரச் சட்டமே. தாயகத்தின் நலனுக்காகவே காலனிகள் வாழ்கின்றன என்ற பழைய மெர்க்கன்டலிசக் கொள்கை கைவிடப்பட்டது. அவசரச் சட்டம் அடிமை முறையை ஒழித்து, நல்வாழ்வையும், சுதந்திரத்தையும், சொத்துரிமையையும், மத உரிமையையும் நல்கிற்று; கல்வியைப் பேணிப் பரப்பிற்று. இலட்சக்கணக்கான மக்கள் மேல்திசை நோக்கி நடைபோடக் காரணமாயிருந்தது.

குடியரசின் ஆரம்பகால நிலத்திட்டம்

புகழ் வாய்ந்த அவசரச் சட்டத்தினை 1787-ல் நிறைவேற்றுவதற்கு முன்னரே, நிலப்பங்கீட்டுப் பிரச்சினையில் கான்ஃபெடரேஷனின் காங்கிரஸ் கவனம் செலுத்தி, அமெரிக்க நிலத்திட்டத்திற்கு வேண்டிய அடிப்படைகளை உருவாக்கிக்கொண்டிருந்தது. ஒன்றரை நூற்றாண்டுகளின் அனுபவம் இருந்தபோதிலும், நிலப் பிரச்சினை கடினமானதே. ஆரம்பத்தில் காங்கிரசு இரண்டு குறிக்கோள்களைக் கொண்டிருந்தது. குடியேற்றத்தைப் பெருக்க வேண்டும் என்ற விருப்பம் காங்கிரசுக்கு உண்டு. ஆனால், அதே வேளையில் பொதுநிலத்தை விற்று அரசாங்க வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டும் என்றும் காங்கிரசு விழைந்தது. குடியேறியவர்களில் பெரும்பாலோர் ஏழை மக்களாதலால், காங்கிரஸினால் அந்த இரண்டு விருப்பங்களையும் ஒரே சமயத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியாது. நிலத்தை விற்க வேண்டுமெனில், பெரும் பகுதிகளாக விற்கவேண்டுமா அல்லது சிறுசிறு துண்டுகளாக விற்கவேண்டுமா ? பெரும் பகுதிகளாக விற்றால் பணம் படைத்த நில ஊக வணிகர்கள் மட்டுமே பயன்பெறுவர்; சிறுசிறு துண்டுகளாக விற்றால் உண்மையாகவே குடியேறுகின்ற ஏழை மக்கள் பயனடைவர். எனினும், அரசாங்க வருமானத்தைப் பொறுத்தவரையில், நிலங்களைத் துண்டு துண்டாக விற்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நிலம் எவ்வளவு மதிப்பு உடையதோ அவ்வளவிற்கு நிலத்தை அளப்பதில் ஏற்படும் செலவும் இருக்கும். குடியேறுபவர்கள்

வளமான நிலங்களைமட்டுமே வாங்குவர். வளம் குறைந்த மற்ற நிலங்களைத்தும் விற்பனையாகாமல் தங்கிவிடும். துண்டு நிலங்களாக விற்கும் முறையினால், குடியேறியவர்கள் சிதறி வாழும் நிலை ஏற்படுவதோடு அமையாது, இந்தியர்களை எதிர்த்து நின்று பாதுகாத்துக்கொள்வதற்குத் தேவையான நெருங்கிய ஒன்றுபட்ட குடியேற்றங்கள் வளராமற்போய்விடும். குடியேற்றத்தைச் சார்ந்த சில தேவைகளைப் பற்றிய பிரச்சினையும் இருக்கிறது. உண்மையாகவே நிலத்தில் வசிக்கவேண்டுமா? நிலத்தில் உண்மையாக வசிக்கவேண்டுமெனில், நிலத்தில் ஊக வாணிபம் குறையும்; நிலம் வாங்க விரும்பும் ஏழை மக்களுக்குப் பயன் அளிக்கும். ஆனால், நிலத்தின் மதிப்புக் குறைந்துவிடும். வேறு சில முக்கியமான பிரச்சினைகளும் இருந்தன. நிலத்தை எந்த விலைக்கு விற்கவேண்டும் என்ற பிரச்சினையும், ரொக்கத்திற்கு விற்கவேண்டுமா, அல்லது கடனுக்கு விற்கவேண்டுமா, அல்லது இரண்டு முறையிலும் விற்கலாமா என்ற பிரச்சினையும், நில விற்பனை அலுவலகங்களை எங்கே அமைக்கவேண்டும் என்ற பிரச்சினையும் முக்கியமாக எழுந்தன.

அமெரிக்கக் கண்டத்தின் பெரும் பகுதியை அரசாங்க உடைமையிலிருந்து தனியார் உடைமைக்கு மாற்றுவதற்குரிய வழிமுறைகளை வகுக்கின்ற பிரச்சினையே நிலப்பிரச்சினையாதலால், இதற்கு ஒரு சிறப்பான முக்கியத்துவம் ஏற்பட்டது. மேற்கு நோக்கி முன்னேறிச் சென்று குடியேறுபவர்களுக்கு அரசாங்கத்தின் நிலத்திட்டம் அடிப்படையில் மிகவும் முக்கியமானதாகும். இப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், கான்ஃபெடரேஷனின் விதிகளின்படி காங்கிரசு 1785-ல் நில அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்தது. இச் சட்டத்தின்படி (1) அரசாங்கம் நீண்ட சதுர நில அளவை (rectangular land survey) எடுக்கவேண்டும்; (2) நிலத்தின் 36 துண்டுகளில் ஒரு துண்டினைக் கல்விக் குறிக்கோளை நிறைவேற்றப் பயன்படுத்தவேண்டும்; (3) பொது நிலங்களைக் குறைந்த விலையில் விற்க நிலவிற்பனை அலுவலகங்களை ஏற்படுத்தவேண்டும். 'சிறப்புத் தீர்க்கரேகை' '(prime meridian)' எனப்படும் தெற்கு வடக்காகச் செல்லும் கோடும் (தற்பொழுது ஓகியோவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் செல்லும் எல்லைக்கோடுதான் முதன்முதலில் வரையப்பட்ட கோடாகும்), கிழக்கு-மேற்காகச் செல்லும் அடிக்கோடும் ஒன்றை ஒன்று நேர்கோணத்தில் வெட்டிக்கொள்ளுமாறு வரையப்பட்டன. சிறப்புத் தீர்க்கரேகையும் அடிக்கோடும் ஒன்றையொன்று நேர்கோணத்தில் வெட்டிக் கொள்ளுமிடத்திலிருந்து, ஒவ்வொரு ஆறு மைல்களுக்கு இடையிலும் ஒரு செங்குத்துக் கோட்டினை நில அளவை

யாளர்கள் வரைந்தனர். இவ்வாறு குறுக்கிலும் நெடுக்கிலுமாக வரையப்பட்ட செங்குத்துக் கோடுகள், நிலத்தினை 36 சதுர மைல்கள் கொண்ட சதுரங்களாகப் பிரித்தன. இவ்வாறு 36 சதுர மைல்கள் கொண்ட ஒவ்வொரு சதுரமும் சுற்றுப்புறம் அமைந்த நகரமைப்பாகக் (township) கருதப்பட்டது. ஒவ்வொரு சதுரத்தையும், பகுப்புகள் (sections) என்று அழைக்கப்படும் ஒரு சதுர மைல் பரப்பளவுள்ள (640 ஏக்கர்கள்) 36 சிறு சதுரங்களாகப் பிரித்தனர். பொதுப் பள்ளிக்கூடங்களை நிறுவி, அவற்றை ஆதரிக்கப் பதினாறும் பகுப்பை ஒதுக்கிவைத்தனர்.

சுற்றுப்புறம் அமைத்த நகர அமைப்புகளாகவும்
பகுப்புகளாகவும் நிலத்தைப் பிரித்தல்



36 சதுரமைல்கள் கொண்டது ஒரு நகரமாகும். அதில் ஒரு சதுர மைல் பரப்புள்ள 36 சதுரங்கள் உள்ளன. பகுப்பு என்பது ஒரு சதுர மைல் பரப்பளவுள்ளது. அதில் 640 ஏக்கர்கள் உள்ளன.

1842ஆம் ஆண்டிற்குப் பின்னர் யூனியனில் சேர்க்கப்பட்ட பெரும்பாலான மாநிலங்களில் 36வது பகுப்பைப் பள்ளிக்கூட காரியங்களுக்கு ஒதுக்கிவைத்தனர். ஆக, அளக்கப்படும் நிலத்தில் பதினெட்டில் ஒரு பகுதியைக் கல்விக்காக ஒதுக்கினர். சுற்றுப்புறம் அமைந்த ஒவ்வொரு நகரமைப்பிலும் 16ஆவது பகுப்பினை மத காரியங்களுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று எடுக்கப்பட்ட முயற்சியானது வாக்கெடுப்பில் தோல்வியுற்றது.

புதிய மேற்கின் அரசியல் வாழ்க்கையில் 1787 ஆம் ஆண்டின் அவசரச் சட்டம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அவ்வளவு முக்கியத்துவம் அமெரிக்க நிலத்திட்ட வரலாற்றில் 1785 ஆம் ஆண்டின் அவசரச் சட்டத்திற்கும் உண்டு. 1785-ல் பின்பற்றப்பட்ட முறை அடுத்த நூற்றாண்டிலும் பயன்பட்டது.

அரசாங்கத் திட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்களெல்லாம் நிலத்தை அளப்பதில் ஏற்பட்டவை அல்ல. நிலத்தை விநியோகிக்கும் வழிமுறைகளில் ஏற்பட்டவையே ஆகும். நகரம் நகரமாக அரசாங்கக் கொடை வழங்குகின்ற நியூ இங்கிலாந்து முறையைப் பின்பற்றுவதா, அல்லது தனிப்பட்ட முறையில் நிலத்தை விற்கின்ற முறை அல்லது தனிப்பட்ட முறையில் நிலக் கொடை வழங்குதல் முறையைப் பின்பற்றிய வர்ஜீனியா முறையை ஏற்பதா என்பதைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திற்குத் தெளிவு ஏற்படவில்லை. 1785-ல் காங்கிரஸ் இரு முறைகளையும் ஏற்றுக்கொண்டது. நகரமைப்புகளில் பாதியை முழுதும் விற்றுவிடவேண்டும்; மீதியுள்ள பாதியை 640 ஏக்கர்கள் கொண்ட பகுப்புகளாக விற்கவேண்டும். ஏக்கர் ஒன்றுக்கு ஒரு டாலர் வீதம் நிலத்தினை ஏலத்திற்கு விற்க வேண்டும். 1796 ஆம் ஆண்டில் நிலத்தின் விலையை ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு டாலர்களாக உயர்த்தும் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால், வாங்கிய நிலத்திற்குச் செலுத்தவேண்டிய பணத்தை ஓர் ஆண்டிற்குள் செலுத்தினால் போதும் என்ற கடன்முறை புகுத்தப்பட்டது. முதல் முயற்சியாளர்களில் ஒருசிலரிடந்தான் 1,280 டாலர்கள் இருந்ததால், நிலப்பரப்புகள் விற்பனையாகவில்லை. எனவே, குடியேறுகின்றவர்களுக்கு ஆதரவாகச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை தலையெடுத்தது. மேற்கத்தியர்களின் அரசியல் பலம் பெருகவே, இக்கோரிக்கைக்கு இன்னும் செல்வாக்கு ஏற்பட்டது. 1800-ல் குறைந்தபட்சம் 320 ஏக்கர்கள் நிலம்தான் வாங்கலாம் என்றிருந்தது; 1804-ல் அது 160 ஏக்கர்களாகக் குறைக்கப்பட்டது. 1804 ஆம் ஆண்டுச் சட்டப்படி, வாங்கிய நிலத்திற்குச் செலுத்தவேண்டிய பணத்தை ஐந்து ஆண்டுகளில் செலுத்தலாம் என்று விதிக்கப்பட்டது. 1820-ல் நிறைவேறிய புதிய சட்டம் 80 ஏக்கர்களாகக் குறைத்து, ஏக்கர் ஒன்றின் விலையையும் 1·25 டாலராகக் குறைத்துவிட்டது. கட்டுப்படுத்தாத நில ஊக்வாணிகம் இறுதியில் 1819-ல் ஒரு பொருளாதாரப் பீதியை ஏற்படுத்தியதால், காங்கிரஸ் கடன் முறையை ஒழித்துக்கட்டியது.

உள்நாட்டுப் போருக்கு முன்னர் மேற்கத்தியர்கள் பெற்ற முக்கியமான சலுகை, 1841-ல் அவர்கள் பெற்ற யாவருக்கும்

முன் வாங்கும் உரிமையாகும் (right of pre-emption). பல்லாண்டு களாகவே குடியேற்றக்காரர்கள் பொது நிலங்களினுள் நுழைந்து, காடுகளைக் கீறி, பண்ணைகளை ஏற்படுத்தி வந்துள்ளனர்; விலை கொடுத்து வாங்காமலேயே தங்கள் விருப்பம்போல் நடந்து கொண்டுள்ளனர்; இறுதியில்தான் அரசாங்க நிலங்களில் சட்டத் திற்குப் புறம்பாகத் தாங்கள் குறுக்கிட்டிருப்பதை உணர்ந்து கொண்டனர். சில வேளைகளில், குடியேற்றக்காரர்கள் பக்குவப் படுத்திப் பயிரிட்ட பண்ணைகள் மற்றவர்களுக்கு விற்கப்பட்டு விடுவதும் உண்டு; அல்லது பெடரல் இராணுவச் சிப்பாய்கள் குடியேற்றக்காரர்களை நிலத்தைவிட்டு விலக்கி விரட்டியடிப்பதும் உண்டு. அளக்கப்பட்டிருந்தாலும் சரி, அளக்கப்படாவிட்டாலும் சரி, தாங்கள் விரும்பிய நிலத்தை எடுத்துக்கொள்ளத் தங்களுக்கு உரிமையுண்டு என்று குடியேற்றக்காரர்கள் கோரிக்கை வெளி யிட்டனர். போட்டி விலையை விலக்கிக் குறைந்தபட்ச விலையில் வாங்கிக்கொள்ளும் உரிமையும் தங்களுக்கு உண்டென்று அவர்கள் கோரினர். 1841 ஆம் ஆண்டுச் சட்டம் இவர்களது கோரிக்கை களைச் சட்டபூர்வமாக அங்கீகரிப்பதற்கு முன்னரே, நடைமுறை யில் சில வேளைகளில் இவர்கள் கோரிக்கைகள் ஓரளவுக்கு வெற்றி யடைந்தன. உண்மையான குடியேற்றக்காரர்கள் நிலத்தினைத் தேர்ந்தெடுத்துப் பக்குவப்படுத்திப் பயிரிட்டுப் பின்னர் அந்நிலத் தினைப் பாதுகாக்கும் நோக்கத்தில் கைப்பற்றினோர் பாதுகாப்புக் கழகங்களை (squatters' protective association) நிறுவினர். நிலங் களை ஏலமிடும்பொழுது தங்களுக்கு வேண்டிய நிலங்களை வேறு யாரும்ஏலம் கேட்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் பாது காப்புக் கழகத்தினர் வந்துசேர்ந்துவிடுவார்கள். தங்களுடைய நிலங்களை மீறி ஏலம்கேட்கும் எவரும் ஆபத்துக்குள்ளாவர் என்று அக்கழகத்தினர் எச்சரிக்கை விடுவர். 1841 ஆம்ஆண்டின் 'யாவருக்கும்முன் வாங்கும் உரிமைச் சட்டம்' ஒரு முக்கியமான சலுகையை எல்லைப்புறவாசிகளுக்கு வழங்கியுள்ளது எனலாம். எனினும், இதுவே எல்லைப்புறவாசிகளின் முடிவான இலட்சியம் என்று கருதிவிடக்கூடாது. உண்மையாகக் குடியேறியவர்களுக்கு இலவச நிலம் என்ற அடுத்த இலட்சியத்தைச் செயற்படுத்து வதற்குப் புகழ் வாய்ந்த குடும்ப மனையகச் சட்டம் (Homestead Act) நிறைவேறிய 1862ஆம் ஆண்டுவரையில் எல்லைப்புற வாசிகள் காத்திருக்கவேண்டியிருந்தது.

மிக முக்கியமான நிலச்சட்டங்களைப் பற்றித் தரப்பட்ட சுருக்க மான விளக்கத்திலிருந்து தெரிவதென்னவென்றால், காலப்போக் கில் பெடரல் அரசாங்கத்தின் நிலக்கொள்கையின் கட்டுப்பாடுகள் தளர்ந்தன என்பதுதான். குறிப்பாக ஏழை மக்களைக் கொண்டே மேற்குத் திசைப் பகுதிகளில் குடியேற்றம் நிகழ்ந்

துள்ளது என்பதும் தெளிவாகும். இருந்தபோதிலும், இத்திட்டம் நியாயமாகவும் ஜனநாயக முறைப்படியும் அமைந்திருப்பதாகத் தோன்றினாலும் உண்மையில் அப்படியல்ல. '1820ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிலச்சட்டங்களின் கட்டுப்பாடுகள் குறைந்த மையை ஒரு சாதாரண விட்டுக்கொடுக்கும் செயலாகவே கருத வேண்டும்; வேறு எந்த முக்கியத்துவமும் தரவேண்டியதில்லை' என்பதாக ஒரு சரித்திர ஆசிரியர் வலியுறுத்துகிறார்.[4] நடைமுறையில் இச்சட்டங்களெல்லாம் குடியேறிய ஏழை மக்களுக்குப் பயன்படுவதைவிடப் பணம் படைத்த ஊக வணிகருக்கே பெரிதும் பயன்பட்டன. 1862-ல் குடும்ப மனையகச் சட்டம் நிறைவேற்றப்படும்வரையில், மேலே குறிப்பிடப்பட்ட குறைபாட்டிற்கு மூன்று காரணங்கள் உள்ளன: (1) சராசரிக் குடியேற்றக்காரனின் சக்திக்கு மீறிய விலையில் நிலத்தை அரசாங்கம் விற்றது; (2) எவ்வளவு நிலங்களை விலைக்கு வாங்கலாம் என்ற உச்ச வரம்பினை அரசாங்கம் நிர்ணயிக்கவில்லை; (3) வாங்கிய நிலத்தைச் சாகுபடி செய்து வளர்க்க வேண்டும் என்றோ, நிலத்தில் குடியேற வேண்டும் என்றோ வலியுறுத்தப்படவில்லை. சிறு விவசாயிகளைக் கொண்ட ஜனநாயக சமூகத்தைப் படைப்பதற்குப் பதிலாக, நில ஊகவணிகரின் கைகளிலே சமூகம் சிக்கும் நிலைமை ஏற்பட்டது. இல்லினாய்ஸ் சென்டிரல் (Illinois Central) போன்ற போக்குவரத்துக் கம்பெனிகளுக்கும், இந்தியப்போர்களில் கலந்துகொண்ட தகைசிறந்த வீரர்களுக்கும், மெக்சிகன் யுத்தத்தில் பணியாற்றிய சிப்பாய்களுக்கும் அரசாங்கம் சில நிலங்களை அரசாங்கக் கொடையாக அளித்தது என்பது உண்மையே. ஆனால், குடியேற்றக்காரர்களிடத்திலோ அல்லது ஊகவணிகரிடத்திலோ தங்கள் நிலங்களை இரயில்வே கம்பெனிகள் விற்றன. தங்களுக்குக் கிடைத்த நிலங்களில் போர்வீரர்கள் சென்று குடியேறவில்லை. மாறுக, அவர்கள் ஊகவணிகரிடத்தில் குறைந்த விலைக்குத் தங்கள் நிலங்களை விற்றனர். ரொக்கத்திற்கு நிலத்தினை அரசாங்கத்திடமிருந்து வாங்கும் பணவசதி சராசரிக் குடியேற்றக்காரர்களுக்கு இல்லையாதலால், கிழக்குப் பகுதி முதலாளிகளிடமிருந்து கூடுதலான வட்டி வீதத்தில் கடன் வாங்கி நிலத்தை வாங்கினர்; அல்லது அரசாங்கத்திடமிருந்து நல்ல நிலங்களை விலைக்கு வாங்கிக் கொண்ட ஊக வணிகரிடமிருந்து நிலத்தை வாங்கினர். முன் வாங்கும் உரிமைப்படி யார் நிலத்தைப் பெற்றிருந்தபோதிலும், அதனை உண்மையாகவே விலைக்கு வாங்கும்பொழுது கடன் வாங்கும் கட்டாயம் அவனுக்கேற்பட்டது. பல வேளைகளில், முதல் முயற்சியாளன் புத்திசாலித்தனத்துடன் தன்னைக் கடனில்

[4] லூயிஸ் ஹேக்கர் (Louis Hacker), 'The triumph of American Capitalism', p. 209.

இருந்து விடுவித்துக்கொண்டான். மற்றச் சந்தர்ப்பங்களில், நிலத்தை நன்கு பக்குவப்படுத்திப்புதிதாகக் குடியேறுபவர்களிடம் அதிக விலையில் விற்றுவிட்டு, இன்னும் மேற்கு நோக்கி முன்னேறி அடைமானம் இல்லாத நிலையில் புதிய வயல்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்வான். அநேக பகுதிகளில் ஜனநாயக உடைமை முறையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, நிலத்திட்டக் குடிவார முறையை (tenancy) ஏற்படுத்தி, முதல் முயற்சியாளரான விவசாயிகளை அம்முறைக்குக் கட்டுப்படுத்தியது.[5]

பழைய தென்மேற்கில் குடியேற்றம்

அலெகனி மலைத்தொடருக்குக் குறுக்கே முதலில் ஏற்பட்ட பெரும் இடப்பெயர்ச்சி, ஓகியோவிற்குத் தெற்கே கென்டக்கியிலும் டென்னசியிலும் நிகழ்ந்ததாகும். புரட்சிக் காலத்தில் இந்த இடப்பெயர்ச்சி மிகவும் நிதானமாகவே சென்றது. 1790-ல் எடுக்கப்பட்ட முதல் சென்சஸ்படி கென்டக்கியில் 70,000 பேர்களும், டென்னசியில் 35,000 பேர்களுமிருந்தனர். தென்னகத்து மேட்டுநிலத்தைச் சார்ந்த சிறு விவசாயிகள் பென்சில்வேனியாவின் பெரும் பள்ளத்தாக்கு வழியே இடம்பெயர்ந்து சென்றனர். அலெகடல் பகுதியைச் சார்ந்த பணம் படைத்த தோட்ட முதலாளிகள் வெளியேற்றிய சிறு விவசாயிகளும் குடிபெயர்ந்து மேற்கே சென்றனர்.

தொழிற் புரட்சியும், குறிப்பாக 1793-ல் கண்டுபிடிக்கப்பட்ட பருத்தி விதையைப் பிரித்தெடுக்கும் ஜின் (gin) எனும் கருவியும் மூலப்பொருள் நிலையிலுள்ள பருத்திக்கு ஏற்ற மிகப் பெரிய சந்தையை உண்டாக்கித்தந்தன. எனவே, தென்னாடு பருத்தி உற்பத்தியில் உடனடியாக நாட்டத்தைச் செலுத்தியது. வர்ஜீனியா, வடகரோலினா, தென்கரோலினா பகுதிகளில் உள்ள கடற்கரை நிலங்கள் தரிசாகிக்கொண்டிருந்தன. இதன் விளைவாகத் தென்னாட்டுத் தோட்ட முதலாளிகள் புதிய, வளமான நிலங்களைத் தேடி மேற்குத் திசையில் கருத்தைச் செலுத்தத் தொடங்கினர். தென்மேற்குக் குடியேற்றத்தின் இரண்டாவது கட்டத்தில் பருத்தித் தேவைதான் மிக முக்கியமான தூண்டுகோலாகும். பருத்தியின் முக்கியத்துவம் பெருகவே, மலைகளின் குறுக்கே முதலில் துணிந்து புகுந்து சென்ற சிறு விவசாயிகளைப் பின்பற்றித் தோட்ட முதலாளிகளும் முன்னேறத் தலைப்பட்டனர்.

டர்னர் பின்வருமாறு கூறுகிறார் : 'ஓகியோவிற்குக் குறுக்கே உள்ள தனது புதிய பூமியை நாடித் தன்னுடைய வீட்டுத் தட்டு

[5] பி. டபிள்யூ. கேட்ஸ், (P. W. Gates), 'Land Policy and Tenancy in the Prairie States,' Journal of Economic History, I, 60—82 (May, 1941).

முட்டுச் சாமான்களையும் பாத்திரங்களையும் கித்தான் மூடிய வண்டியிலே ஏற்றி முதல் முயற்சியில் துணிந்து ஈடுபட்டுள்ள விவசாயியின் முன்னேற்றத்தைக் காட்டும் படத்தினை ஒருபுறத்திலும், அதன் அருகிலேயே தன்னுடைய குடும்ப வண்டியில் வேலையாட்களையும், வேட்டை நாய்களையும், அடிமைப் பட்டாளத்தையும் ஏற்றிக்கொண்டு காடுகளின் பயங்கர இருளினைப் போக்குவதற்கெனக் கூடார நெருப்பினைப் (camp fire) பற்றவைத்து அண்மைக் காலம்வரையில் இந்திய வேட்டையாளர்களின் ஆதிக்கத்தில் இருந்த காட்டுவெளிகளிலெல்லாம் தங்கிச் சுதந்திர இல்லினுய்ஸ் மாநிலத்தைக் கடந்து மிசௌரி பள்ளத்தாக்கை அடைந்தோ, அல்லது மேற்கு ஜார்ஜியா, அலபாமா, மிசிசிப்பி காடுகளைக் கடந்தோ, மேற்கில் முன்னேறுகின்ற தென்னுட்டுத் தோட்ட முதலாளிகளின் படத்தை மறுபுறத்திலும் வைத்துப் பார்க்கவேண்டும்.'[6]

டிமோதி ஃபிளின்ட் (Timothy Flint) பின்வருமாறு விவரிக்கிறார்:

'வண்டிகளையும் கால்நடைகளையும் இழுத்துக்கொண்டு பெருத்த எண்ணிக்கையில் மிசிசிப்பிக்குத் தென்மேற்கேயும், மிசௌரியிலும் குடியேறுகின்ற தென்னுட்டுக் குடியேற்றக்காரர்களின் காட்சி அருமையான காட்சியாகும். அவர்களுடைய எண்ணிக்கையும் அதிகமே. அடிக்கடி பத்துப்பத்து வண்டிகளாக அவர்கள் ஒன்றுசேர்ந்து செல்லும் காட்சியைக் காணலாம். பத்து வண்டிகள் சேர்ந்து ஒரு கூட்டமாகச் செல்லும்பொழுது, நூறு கால்நடைகளும், இன்னும் பன்றிக் கூட்டமும், குதிரைகளும், செம்மறியாடுகளும், ஆறு நீக்ரோக்களும் அவ்வண்டிகளுடன் செல்லும் காட்சியையும் காணலாம். அக்கூட்டம் செல்லும் பொழுது 100 மணிகளின் ஓசை கிளப்பும்; ஓய்வு கிடைத்த மகிழ்ச்சியில் தினைத்தபடியே நீக்ரோக்கள் செல்வர். இது ஒரு குழு; இதனைத்தொடர்ந்து குடும்ப சகிதமாகக் கூட்டம் முன்னேறி விரைந்து வரும். சமவெளிகளில் இப்பெருங் கூட்டம் மேற்கு நோக்கிச் செல்லுவது[7] இன்பமும் உயிர்ப்பும் உடைய காட்சியாகும்.' இது ஒரு புது மாதிரியான இடப்பெயர்ச்சியாகும்.

தென்னுட்டுத் தோட்ட முதலாளி முன்னேறிவருவதால், 18ஆம் நூற்றாண்டின் எல்லைப்புற விவசாயி பாதிக்கப்பட்டதைப் போல, இப்பொழுது தென்மேற்கின் முதல் முயற்சியாளனும் பாதிக்கப்பட்டான். தோட்ட முதலாளிகள் சிறு விவசாயிகளின்

6. எப். ஜே. டர்னர் (F. J Turner 'Rise of the New West', p. 92.

7. டிமோதி ஃபிளின்ட், (Timothy Flint),'The Histoy and the Geography of the Mississippi Valley', I, 191.

மக்கள்தொகை பரவியிருந்தமை - 1790. மக்கள்தொகை பரவியிருந்தமை - 1800

நிலத்தை அதிக விலை கொடுத்து வாங்கினர். நில விற்பனைப் போட்டியில் சிறு விவசாயிகளைப் பெருந் தோட்ட முதலாளிகள் அதிக விலைக்கு ஏலம் எடுப்பதன்மூலம் அமுக்கிவிட்டனர். எனவே, சிறு விவசாயிகள் அடிமை முறையைச் சார்ந்த தோட்டப் பொருளாதாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அல்லது மலையடிவாரங்களின் வளங்குன்றிய பகுதிகளை நாடிச் செல்லவேண்டும்; அல்லது மீண்டும் புதிய நிலம் தேடி மேற்கு நோக்கி ஓடவேண்டும். அடிமை முறையை ஏற்றுக்கொள்வதனின்றும் வறுமையினால் தடுக்கப்பட்டு, தென்மேற்குப் பகுதியின் வளம் மிக்க கருப்பு மண்ணைத் தோட்ட முதலாளிகளிடம் விட்டுவிட்டு, தென்னூட்டின் 'ஏழைமை நிறைந்த வெள்ளைக்காரர்களாக' ('poor whites') மலைப்பகுதிகளுக்குப் பின்வாங்கினர்; அல்லது மிசிசிப்பியைக் கடந்தோ அல்லது ஓகியோவிற்கு வடக்கே சென்றோ புதிய மாநிலங்களை நிறுவ முயன்றனர்.

சிறு விவசாயிகள் மறையவே, தென்மேற்குப் பகுதி, பருத்தி உயர் வர்க்கத்தினரின் (cotton aristocracy) ஆதிக்கத்தில் சிக்குண்டது. உண்மையில் பருத்தி மன்னன் எனும் நிலையைப் பெற்றது. பருத்தி ஜின் கண்டுபிடிக்கப்பட்டதால், தென்கரோலினாவில் பருத்தி உற்பத்தி 1791-ல் 15,00,000 பவுண்டுகளிலிருந்து 1801-ல் 2,00,00,000 பவுண்டுகளாக உயர்ந்தது; ஜார்ஜியாவில் 5,00,000 பவுண்டுகளிலிருந்து 1,00,00,000 பவுண்டுகளாக உயர்ந்தது. புதிய மாநிலங்களிலும் இத்தகைய அதிகரிப்பைக் காணலாம். 1801-ல் 10,00,000 பவுண்டுகள் உற்பத்தி செய்த டென்னசி, 1834-ல் 4,50,00,000 பவுண்டுகள் உற்பத்தி செய்தது. 1801-ல் லூசியானா ஒன்றுமே உற்பத்தி செய்யவில்லை; ஆனால், 1834-ல் 6,20,00,000 பவுண்டுகள் உற்பத்தி செய்தது. மிசிசிப்பி, அலபாமா இவற்றின் உற்பத்தி இன்னும் அதிகமாகும். 1820-ல் பருத்தி உற்பத்தியில் தென்கரோலினாவும், ஜார்ஜியாவும் முன்னணியில் நின்றன. ஆனால், 1834-ல் அலபாமாவும் மிசிசிப்பியும் முன்னுக்கு வந்தன. பருத்திதான் இப்பிரதேசத்தின் முக்கியப் பயிராகும். 1830-ல் ஐக்கிய அமெரிக்காவின் ஏற்றுமதிகளின் மொத்த மதிப்பில் பாதி பருத்தி ஏற்றுமதியால் கிடைத்தது. இந்த உண்மை பருத்தியின் முக்கியத்துவத்தை நன்கு எடுத்துக்காட்டும். அடிமை முறையைக் கிட்டத்தட்ட ஒரு நிரந்தர அமைப்பாக மாற்றிவிடுகின்ற சூழ்நிலை பருத்தியால் விளைந்தது. இந்திய ஆபத்துக் குறைந்தமையால், குடியேற்றம் விரைவுடன் முன்னேறியது. 1812-ல் லூசியானாவும், 1817-ல் மிசிசிப்பியும், 1819-ல் அலபாமாவும், 1821-ல் மிசௌரியும் தனித்த இராஜ்ஜியங்களாயின.

பழைய தென்மேற்கில் குடியேற்றம் முற்றுப்பெறவே, அமெரிக்க வளர்ச்சி ஸ்பெயினுடன் மோதும் நிலை தவிர்க்க முடியாததாயிற்று. 1795-ல் பிங்னீ உடன்படிக்கையின் (Pinckney Treaty) விளைவாக, மிசிசிப்பி நதிமீது போக்குவரத்து உரிமை அமெரிக்கக் கப்பல்களுக்குக் கிடைத்தது; நதியின் வாயிலில் தங்கும் உரிமையும் கிடைத்தது. யாகுவுக்கும் (Yazoo), 31 ஆவது அட்சரேகைக்கும் இடையில் பூசலுக்குக் காரணமான நிலம் ஐக்கிய அமெரிகாவிற்கே சொந்தம் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிரான்சிடமிருந்து லூசியானுவை விலைக்கு வாங்கியபொழுது, ஸ்பெயின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசம் மேற்கே மிசிசிப்பிவரையிலும், வடக்கே ஐபர்வில் பாரிஷ் (Parish of Iberville) வரையிலும் பரவியிருந்தது. இருந்த போதிலும், பல சமயங்களில் ஐக்கிய அமெரிக்காவுடன் மேற்கு புளோரிடாவை இணைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1810-ல் தென்மேற்கில் முன்னேறியதால், அப்பகுதியைத் தங்கள் பிடிப்பிலே வைத்துக்கொள்ளப் போதுமான அளவுக்கு அமெரிக்கர்கள் இருந்தார்கள். அதே ஆண்டில் அரசாங்கத்தை மாற்றவேண்டும் என்று ஸ்பெயினிடம் கோரிக்கை ஒன்றைக் கிளப்பினர்கள். கூடிய விரைவில் சுதந்திரப் பிரகடனம் செய்து விட்டு, ஐக்கிய அமெரிக்காவுடன் இணைய வேண்டுகோளும் விட்டனர். பெர்ல் (Pearl) வரையிலுள்ள மேற்குப் புளோரிடாவை இராணுவ நடவடிக்கைகள்மூலம் கைப்பற்றுமாறு குடியரசுத் தலைவர் மாடிசன் (Madison) உத்தரவிட்டார். 1819-ல் அமெரிக்கப் படையெடுப்பைத் தடுப்பது பயனற்றது என்று உணர்ந்த ஸ்பெயின், கிழக்குப் புளோரிடாவை விட்டுக்கொடுத்தது. 50,00,000 டாலர்களை ஸ்பெயின் கொடுக்கவேண்டுமென்று ஐக்கிய அமெரிக்கா குறிப்பிட்டது. டெக்சாஸ்மீதுள்ள தன் உரிமைகளை ஐக்கிய அமெரிக்கா விட்டுக்கொடுத்தது.

பழைய வடமேற்கில் குடியேற்றம்

ஓகியோவிற்கு வடக்கிலும் மிசிசிப்பிக்குக் கிழக்கிலுமுள்ள பழைய வடமேற்குப் பகுதியில் குடியேற்றம் ஏற்படுவதற்கு 1785 ஆம் ஆண்டின் நில அவசரச் சட்டமும், 1787 ஆம் ஆண்டின் புகழ்வாய்ந்த அவசரச்சட்டமும் காரணங்களாய் அமைந்தன. காங்கிரசின் ஆதிக்கத்தில் இந்த நிலப்பகுதி வந்து சேர்ந்தவுடன், மதத்தையும் கல்வியையும் பரப்புவதற்கும், புரட்சிக் காலத்தில் ஆங்கிலேயர்களின் வெறியாட்டத்தினால் வீடுகள் தீக்கிரையாகி மனையிழந்து தவித்த மக்களுக்குப் புதுவாழ்வு தரவும் வேண்டி, ஈரி ஏரிக்கும் (Lake Erie) 41 ஆவது அட்சரேகைக்கும் இடையில் 120 மைல்கள் அகன்றுள்ள 'கனெக்டிகட் மேற்கு ஒதுக்கம்'

(Connectycut Western Reserve) என்று அழைக்கப்படும் நிலப் பகுதியை கனெக்டிகட் ஒதுக்கிவைத்தது. அதேபோல, ஸ்கியோட்டோவிற்கும் (Scioto) லிட்டில் மியாமிக்குக் (Little Miami) இடையில் 6,000 சதுர மைல்கள் உள்ள வர்ஜீனிய இராணுவ மாவட்டத்திற்கு (Virginia Military District) இராணுவக் கொடைப்பத்திரங்களைத் திருப்பித்தருவதற்காக வர்ஜீனியா ஒதுக்கி வைத்தது. இதே காரணத்திற்காகவே ஸ்கியோடோ நதிக்கும் செவன் ரேன்ஜசுக்கும் (Seven Ranges) இடைப்பட்ட நிலப்பகுதியைக் காங்கிரசு ஒதுக்கிவைத்தது. ஓகியோ கம்பெனிக்கும், ஸ்கியோடோ கம்பெனிக்கும், நீதிபதி சிம்மஸ் (Symmes) அவர்களுக்கும் விற்றதுபோக மீதமுள்ள நிலங்களை அளந்து, நடப்புச் சட்டங்களின் வரம்புக்குட்பட்டுக் குடியேற்றக் காரர்களுக்குக் காங்கிரஸ் விற்றது.

1787-ல் அவசரச்சட்டம் வந்தவுடனேயே மேன்மை தங்கிய மெனஷே கட்லர் (Reverend Manasseh Cutler) அவர் களது தலைமையின்கீழ், முக்கியமாக மெஸ்ஸாசுசெட்ஸ் ஊக வணிகர்களையே கொண்ட ஓகியோ கம்பெனி, ஓகியோவிற்கு வடக்கேயுள்ள 20,00,000 ஏக்கர்கள் கொண்ட நிலத்தை மதிப் பிறங்கிய சிப்பாய்கள் பத்திரங்களைக் கொண்டு விலைக்கு வாங் கியது. அதே ஆண்டில் டிசம்பர் மாதத்தில் கம்பெனியின் முதல் குடியேற்றக்காரர்கள் இப்ஸ்விச் (Ipswich), மெஸ்ஸாசுசெட்ஸ் ஆகிய இடங்களிலிருந்து மஸ்கிங்கம் நதியை (Muskingum River) நோக்கிச்சென்றனர்.[8] 1788ஆம் ஆண்டின் வசந்த காலத் தில், மஸ்கிங்கம் நதி ஓகியோ நதியைக் கலக்குமிடத்தில் குடி யேற்றக்காரர்கள் மேரிட்டாவை (Marietta) நிர்மாணித்தார்கள். அதே கோடைக்காலத்தில் மேரிட்டாவில் குடியேறியவர்களைத் தொடர்ந்து நீதிபதி ஜான் கிலீவ்ஸ் சிம்மஸ் (Judge John Cleves Symmes) அவர்கள் தலைமையில் நியூஜெர்சியிலிருந்து ஒரு கோஷ்டி கிளம்பியது. பெரிய மியாமிக்கும் (Great Miami) சிறிய மியாமிக்கும் (Little Miami) இடையிலுள்ள ஒரு மில்லியன் ஏக்கர் களில் ஒரு பகுதியை விலைக்கு வாங்கி, கொலம்பியா, சின்சின் னட்டி (Cincinnati) ஆகிய பகுதிகளை ஏற்படுத்தி அவர்கள் குடி யேறினர்கள். டெட்ராய்ட் (Detroit), இல்லினாய்ஸ், இந்தியானா ஆகிய பகுதிகளில் சில சிறிய பிரெஞ்சுக் குடியேற்றங்கள் முன்னரே ஏற்பட்டிருந்தன. வடமேற்கில் பெருமளவில்

8. எத்தகைய முறைகளையும் பேரங்களையும் பயன்படுத்தி ஓகியோ கம்பெனி அந்த நிலத்தை வாங்கியது என்பதைப்பற்றிய கதை மிகவும் வியப் பானதாகும். அது அந்தக் காலத்து அரசியல் நாணயத்தை நன்கு விளக்கக் கூடிய கதையுமாகும். ஆர். எ. பில்லிங்டன், (R. A. Billington), Westward Expansion, pp. 212-220 காண்க.

அமெரிக்கர்கள் முதன்முதலில் குடியேறுவதற்கு ஓகியோ கம்பெனியின் முதல் முயற்சியாளர்களும், சிம்மஸ் வாங்கிய பகுதிகளில் குடியேறியவர்களுமே முக்கிய காரணமாகக் அமைந்தனர். 1790-ல் வர்ஜீனியர்கள் வர்ஜீனிய இராணுவ மாவட்டத்தினுள் நுழைந்தனர். கட்லர் குறிப்பிட்டதுபோல, 'அநேக அமெரிக்க நாட்டுப் பெரிய மனிதர்களைக் கொண்ட' ஸ்கியோட்டா கம்பெனி, நில ஊகவணிக அமைப்புகளிலேயே மிகவும் தளுக்கு நிறைந்ததாகும். அக்கம்பெனி அமெரிக்காவைப்பற்றி அளவு மீறிய வகையிலும், ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் கொடுக்கின்ற வருணனைகளையும் உறுதிமொழிகளையும் கண்டு, அவற்றால் தூண்டப்பட்டு ஃபிரெஞ்சுக் கோஷ்டியினரில் பலர் அமெரிக்காவில் குடியேறினர். இந்தியர்களிடமிருந்து ஆபத்து எப்பொழுதும் ஏற்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவும், மேற்குப்புற ஒதுக்கம் மக்கள் புழக்கத்திற்கு ஏற்றவாறு அமையாததாலும் அப் பகுதியில் உள்ள நிலங்களை மக்கள் வாங்கத் தயங்கினர். எனவே, இறுதியில் கனெக்டிகட், மேற்குப்புற ஒதுக்கத்தின் பெரும் பகுதியை கனெக்டிகட் நிலக்கம்பெனியிடம் விற்று விட்டது. 1796-ல் அக் கம்பெனியின் ஏஜென்டு ஜெனரல் மோசஸ் கிலீவ்லாண்டு (General Moses Cleaveland) ஒரு சிறு கூட்டத்தினை அழைத்துக்கொண்டு அப்பகுதிக்குச் சென்று ஒரு நகரத்தை உருவாக்கினர்: அந்நகரம் இப்பொழுது அவரது பெயரைத் தாங்கி நிற்கிறது.

1790-ஐத் தொடர்ந்த முப்பது ஆண்டுகளில், வடமேற்கில் குடியேற்றங்கள் பெருகின. இதற்கிடையில் மேற்கு நியூயார்க்கு விரைவில் உருவாக்கப்பட்டது. மலைகளினூலும், விரோதம் பார்ட்டும் இந்தியர்களினூலும் வெள்ளைக்காரர்கள் கீழ்மொகாக்கு, ஹட்சன் பள்ளத்தாக்குகளை விட்டு நகர முடியவில்லை. புரட்சிக்குப் பின்னர் பென்சில்வேனியாவையும் நியூ ஜெர்சியையும் சார்ந்த முதல் முயற்சியாளர்கள் வடக்கே சஸ்கியுஹன்னு (Susquehanna), டயோகா (Tioga) ஆகியவற்றின் வழியே செனகா ஏரியையும் (Seneca Lake), மாநிலத்தின் மையப் பகுதியையும் சென்று அடைந்தனர். கிழக்கிலிருந்து கிளம்பிய நியூ இங்கிலாந்துக் காரர்கள், மெஸ்ஸாசுசெட்ஸ் வெர்மன்ட் ஆகியவற்றிலிருந்து குறுக்கே நுழைந்து, மிகவும் கஷ்டத்துடன் மொகாக்குமீது ஏறி, மேற்கு நோக்கிச் செல்ல முனைந்தனர். இப் பகுதிகளில் சில மரக்குடிசைகளைக் காணலாம். ஆனால், 1790-ல் எடுக்கப்பட்ட சென்சஸின்படி மேற்கு நியூயார்க்கில் 1,000 பேருக்குமேல் கிடையாது. செனகா ஏரிக்கு மேற்கிலுள்ள நிலத்தை ராபர்ட்டு மாரிஸ் ஹாலண்டு நிலக்கம்பெனிக்கு விற்றுவிட்டார். ஏரிக்குக்

கிழக்கே 17,00,000 ஏக்கர்கள் கொண்ட நிலத்தை அந்த இராஜ்ஜியம் இராணுவ அரசாங்கக் கொடை வழங்குவதற்கென்று ஒதுக்கிவைத்துக்கொண்டது. டயோகா, செனன்கோ (Chenango), ஜெனிசீ (Genesee), மொகாக் ஆகியவற்றின்மீதுள்ள வளமான நிலங்களை முக்கியமாக நியூ இங்கிலாந்திலிருந்து வந்தவர்கள் எடுத்துக்கொண்டனர். அந்த நிலங்கள் கூடிய விரைவில் துண்டுதுண்டாக வெட்டுண்டன. இப் பகுதிகளில் விரைவில் தோன்றிய நகரங்களுக்குப் பண்டைய கிரேக்கப் பெயர்களையும் ரோமப் பெயர்களையும் இட்டார்கள்.

பழைய வடமேற்கில் விரைந்து நிகழ்ந்த குடியேற்றத்திற்குப் பல காரணங்கள் உண்டு. ஐரோப்பாவிலிருந்து வந்து குடியேறியவர்களின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 4,000முதல் 5,000 வரையாகும். 1812ஆம் ஆண்டு நடைபெற்ற போருக்குப் பின்னர், 1815 முதல் 1830 முடிய 15 ஆண்டுகளில் ஐரோப்பாவிலிருந்து குடியேறியவர்களின் எண்ணிக்கை ஐந்து இலட்சமாகும். வாணிகக் கப்பல் தடைச் சட்டங்களும் தொடர்பின்மைச் சட்டங்களும் நிலவிய காலத்தில் வடக்கே பொருளாதார மந்தம் ஏற்பட்டது. இப் பொருளாதார மந்தமும், 1812ஆம் ஆண்டுப் போரும், அப் போரைத் தொடர்ந்த நிலையும் மக்கள் மேற்கு நோக்கிச் செல்லத் தூண்டுகோலாய் அமைந்தன. தெற்கே வர்ஜீனியா, வடகரோலினா ஆகியவற்றின் புகையிலை விளையும் நிலங்கள் வளங்குன்றியமையின், தோட்ட முதலாளிகள் அந் நிலங்களைவிட்டு வெளியேறினர். அவ்வாறு வெளியேறும் பொழுது, தங்களுக்கு முன்னே வடக்கு நோக்கி ஓகியோ பள்ளத்தாக்கிற்குச் செல்லும் வகையில் சிறு விவசாய முதல் முயற்சியாளர்களை அனுப்பிவிட்டு, அவர்களுக்குப் பின்னே இத் தோட்ட முதலாளிகள் கிளம்பித் தென்மேற்கில் ஆற்று வண்டல் மண் நிறைந்த செழிப்பான பூமிகளை நாடிச் சென்றனர். பொருளாதாரக் காரணங்களால்மட்டுமே குடியேற்றம் ஏற்படவில்லை. பழைய மத, அரசியல் குழுவமைப்புகளில் அதிருப்தியடைந்தவர்களும் வெளியேறி வெவ்வேறு பகுதிகளில் குடியேறினர். மேற்குப் பகுதிக் குடியேற்றத் திட்டத்தில் அரசாங்கம் கட்டுகளைத் தளர்த்தியமையாலும், 1812 முதல் 1830 வரையில் இந்திய உரிமைகள் (Indian Titles) அகற்றப்பட்டமையாலும், புதிய நிலங்களில் குடியேற்றம் பெருகிப் புதுப் பிரதேசங்கள் உண்டாயின. வடமேற்கில் வில்லியம் ஹென்றி ஹாரிசன் (William Henry Harrison) இந்தியர்களைத் தோற்கடித்தார்; தென்மேற்கில் ஆன்டிரூ ஜாக்சன் (Andrew Jackson) இந்தியர்களைத் தோற்கடித்தார். எனவே, இப்பகுதிகளிலிருந்து சிவப்பிந்தியர்கள் விரைவில் மறைந்தொழிந்தனர்.

1811-க்குப் பின்னர் ஓகியோமீது பிட்ஸ்பர்க்கில் (Pittsburgh) நியூ ஆர்லியன்ஸ் (New Orleans) எனும் கப்பல் மிதக்க விடப்பட்டது. அந்த நாள்முதல் வடமேற்கில் நீராவிக் கப்பல் போக்குவரத்து வளரத் தொடங்கியது. இருப்புப்பாதைகள் ஏற்படுவதற்கு முன்னர் பயணத்திற்கும் போக்குவரத்திற்கும் நதிகளே பயன்பட்டன. நதிகளின்மூலம் தட்டைப் படகுகளில் (flat boats) பண்டங்கள் கடத்தப்பட்டன; இடம்பெயர்ந்து செல்வோரும் அப் படகுகளிலேயே மிதந்து சென்றனர். 1820-ல் அறுபது நீராவிப் படகுகள் மேற்குப் பிரதேச ஆறுகளில் மிதந்து கொண்டிருந்தன. 1820-ஐத் தொடர்ந்த ஆண்டுகளோ ஆற்றுப் படகின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். லூயிவில்லியிலிருந்து (Louisville) நியூ ஆர்லியன்ஸ்வரையில் செல்வதற்குப் பழைய தட்டைப் படகில் பல மாதகாலம் பயணம் செய்யவேண்டும். ஆனால், அதே தூரத்தை நீராவிப் படகு சில நாட்களில் கடந்து விடும். மேற்கு நோக்கிச் செல்லும் முன்னேற்றத்தைத் துரிதப் படுத்தும் பல்வேறு பொருளாதாரத் தூண்டுதல்களோடு மட்டுமல்லாமல், மேற்குப் பிரதேசத்தைப் பற்றி நல்ல விளம்பரம் ஏற்படும் வகையில் சில சூழ்நிலைகளும் உருவாயின. லூசியானுவை விலைகொடுத்து வாங்கியமையும், லீவிஸ் (Lewis), கிளார்க்கு (Clark) இவர்களுடைய முயற்சிகளும், இவர்கள் வெளியிட்ட பத்திரிகைகளும், ஆரன் பர்ரின் (Aaron Burr) முயற்சிகளும், நியூ மெக்சிகோவைப் பற்றிய பைக் (Pike) புத்தகமும், ஹாரிசன், ஜாக்சன் முதலியவர்கள் இந்தியர்களோ வென்றமையும் மேற்குப் பிரதேசத்திற்கு நல்ல விளம்பரத்தைத் தந்தன. எனவே, புதிதாகக் குடியேறுபவர்களின் கண்களுக்கு மேற்குப் பிரதேசம் வளங் கொழிக்கும் பிரதேசமாகத் தென்பட்டது.

ஆரம்பகாலம் முதற்கொண்டே வடமேற்கு நோக்கி மக்கள் விரைந்து சென்று குடியேறினர். மேரிட்டாவை உருவாக்கிய ஆண்டில் (1788) 10,000 பேர்கள் மேற்கு நோக்கிப் படகில் சென்றனர். 1803-ல் ஓகியோவின் மக்கள்தொகை போதுமான அளவுக்கு இருந்ததால், ஓகியோ ஓர் இராஜ்ஜியமாகும் வாய்ப்பினைப் பெற்றது. நெப்போலியப் போர்களின் ஆரம்பகாலத்தில் கிழக்குப் பிரதேசம் செழிப்பாக இருந்ததால், மேற்குப் பிரதேசக் குடியேற்றம் சற்று பின்தங்கியது. எனினும், கிரேட் பிரிட்டனுடன் நிகழவிருந்த போருக்குமுன்னர் வாணிபத் தடையும், ஏனைய வர்த்தகத் தொழில்களும் ஏற்பட்டமையால், மேற்குப் பிரதேசக் குடியேற்றம் மீண்டும் பெருகத் தொடங்கிற்று பிட்ஸ்பர்க்கிற்குச் செல்லும் பெருஞ்சாலையில் உள்ள கிராமமாகிய ராப்ஸ்டவுனில் [Robbstown—இது பென்சில்வேனியாவின் வெஸ்ட்மோர்லாந்து கவுன்டியைச் (Westmoreland County) சார்ந்ததாகும்] உள்ள

ஒருவர் மேற்குப் பிரதேசத்தை நோக்கி, ஒரே மாதத்தில், 1811 ஆம் ஆண்டின் முடிவில், 236 பார வண்டிகளும், ஆண்களும் பெண்களுமாக குழந்தைகளும், 600 மெரினோ செம்மறியாடுகளும் சென்றன என்று குறிப்பிட்டுள்ளார். மெக்மாஸ்டர் (McMaster) பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'மேற்குப் பிரதேசத்தின் மறுபெயராக அன்று விளங்கிய ஓகியோவை நோக்கி அநேக கோஷ்டிகள் பெண்களோடும், குழந்தைகளோடும், வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களோடும் ஏற்றிக்கொண்டு பனிச்சறுக்கு வண்டிகளில் செல்லும் காட்சியினை இதற்குமுன் கண்டதில்லை என்று மத்திய நியூயார்க்கில் குடியேறியுள்ள பழைய மக்கள் கூறுகின்றனர். மழைக்காலம் முழுதும், 'கிழக்கு மாநிலங்களிலிருந்து பற்ந்துசெல்லும் குடும்பங்கள்' ஆபர்ன் (Auburn) வழியாகச் சாலைகளில் செல்வதை ஒரு குறிப்பு வருணிக்கிறது. ஜூலை மாதத்தில் ஒரு நாள் மெஸ்ஸாசுசெட்ஸிலிருந்து எழுபது பேர்களை ஏற்றிக் கொண்டு ஆறு வண்டிகள் தம்முடைய கிராமத்தின் வழியே ஓகியோவை அடைந்ததாக நியூயார்க்கைச் சார்ந்த நியூபர்கில் இருந்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார். 'இதேபோல், மக்கள் இடம் பெயர்ந்து செல்லும் காட்சியை ஒவ்வொரு வாரமும் நியூபர்கு பிரஜைகள் கண்டபடியே உள்ளனர்'[9].

தேசியச் சுங்கச் சாவடியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த மாரிஸ் பர்க்பெக் (Morris Birkbeck) என்ற ஆங்கில ஆசிரியர் 1817-ல், 'பழைய அமெரிக்கா மறைந்துபோய், மேற்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார். 'இந்த மகத்தான பாதையிலே ஓகியோ நோக்கிச் செல்லும்பொழுது நமக்கு முன்னும் பின்னும் செல்லும் குடும்பக் கூட்டங்களுக்கிடையில் நாம் இரண்டறக் கலந்து மறைந்து விடுகிறோம்.'[10] பழைய வடமேற்கில் (ஓகியோ, இந்தியானா, இல்லினாய்ஸ், மிச்சிகன், விஸ்கான்சின்) புரட்சிக் காலத்தில் இருந்த மக்கள் எண்ணிக்கை சில ஆயிரம் ஃபிரெஞ்சுக்காரர்களே ஆகும்; 1810-ல் 2,72,324 பேர்கள் இருந்தனர்; 1860-ல் 89,26,884 ஆக உயர்ந்தனர். யூனியனில் இந்தியானா 1816 ஆம் ஆண்டிலும், இல்லினாய்ஸ் 1818 ஆம் ஆண்டிலும், மிச்சிகன் 1837 ஆம் ஆண்டிலும் சேர்ந்தன.

1830-ல் மெஸ்ஸாசுசெட்ஸ், கனெக்டிகட் ஆகிய பகுதிகள் இரண்டிலும் இருந்ததைவிடக் கூடுதலான மக்கள் தொகை

[9] பி. மெக்மாஸ்டர் (B. McMaster), 'History of People of the United States,' IV, 383.

[10] மாரிஸ் பர்க்பெக், (Morris Birkbeck), 'Notes on a Journey in America,' p. 31.

மக்கள் தொகை பரவியிருந்தமை - 1820 மக்கள் தொகை பரவியிருந்தமை - 1840

ஓகியோவில் இருந்தது; அதாவது, ஒரு மில்லியனுக்குமேல் வசித்தனர். 1810 முதல் 1820 முடிய உள்ள பத்தாண்டுகளில் இந்தியாவின் மக்கள்தொகை 24,000 முதல் 1,47,000 ஆகப் பெருகியது. மேற்குப் பிரதேசத்தில் மக்கள் எண்ணிக்கை பெருகவே, கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் எண்ணிக்கை பெருகாமல் தேங்கிவிட்டது. உதாரணமாக, வர்ஜீனியாவிலும் மெஸ்ஸாசுசெட்சிலும் 1820 முதல் 1830 முடிய உள்ள பத்தாண்டுகளில் மக்கள் தொகையில் தேக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், மேற்கு மாநிலங்களில் எண்ணிக்கை 100 முதல் 150 சதவீதத்தில் பெருகியது. 1830-ல் வெறும் தோல் வியாபார நிலையமாக இருந்த சிக்காகோவில் 1860-ல் 1,00,000 பேர்கள் வசிக்கத் தொடங்கினர். 1840-ல் கிளீவ்லாந்தில் 6,070 பேர்களே இருந்தனர்; 1860-ல் 43,000 பேர்களாக எண்ணிக்கை வளர்ந்தது. 1830-ல் மேற்குப் பிரதேசத்தில் உருவாகியிருந்த இன்றியமையாத நகரங்கள் பின்வருமாறு: (1) 25,000 பேர்களைக் கொண்டு, வளமான பண்ணை மாநிலத்தில் இறைச்சி அனுப்பும் மையமாகத் திகழும் சின்சின்னாட்டி (Cincinnati) அல்லது போர்க்கோபோலிஸ் ('Porkopolis') என்னும் நகரம்; (2) 1825-க்கு முன்னர் மேற்கு நோக்கிச் செல்லப் பயன்பட்ட மிகப் புகழ்வாய்ந்த கப்பல் போக்குவரவுக்குரிய பாதையின் முகப்பின் மிக அருகில் 12,000 பேர்களைக் கொண்ட இரும்பு நகரமாக அமைந்துள்ள பிட்ஸ்பர்க்;[11] (3) வடக்கிலும் மேற்கிலுமுள்ள தோல் வியாபாரிகளுக்கிடையில் பண்டங்கள் பரிமாற்றப்படுகின்ற பகுதியிலும் மிசிசிப்பியின் நீராவிப் படகு வர்த்தகத் தொழில் நடைபெறும் பகுதியிலும் உள்ள 6,000 பேர்களைக்கொண்ட செயின்ட் லூயிஸ்; (4) உள்நாட்டுப் பண்டங்களைச் சமுத்திரப் படகுகளுக்கு மாற்றுகின்ற முகப்பில் உள்ள நியூ ஆர்லியன்ஸ்.

ஃபிரெஞ்சு, இந்தியப் போர்கள் நடைபெற்ற காலத்தில் பிலடெல்ஃபியாவிலிருந்து பிட்ஸ்பர்க்குவரையில் லங்காஸ்டர் (Lancaster), கார்லில் (Carlisle) வழியாக, ஃபோர்பஸ் (Forbes) வெட்டி அமைத்த பழைய சாலைதான் மேற்கு நோக்கி முன்னேறிய வர்கள் பயன்படுத்திய முக்கியச் சாலையாகும்.[12] பிட்ஸ்பர்க்கை அடைந்தவுடன் தட்டைப் படகில் ஏறி, ஓகியோ நதியில் சென்று, பின்னர் அதன் கிளைநதிகளில் ஒன்றின்மூலம் குறிப்பிட்ட இடத்தை அடைவதே குடியேற்றக்காரரின் வழக்கமாக இருந்தது.

11 கப்பல் போக்குவரத்திற்குரிய உண்மையான முகப்பு பிட்ஸ்பர்க்கிற்கு மேலுள்ள பழைய போர்ட் ரெட்ஸ்டோன் (Old Fort Redstone) ஆகும். அதிலிருந்துதான் பலர் முன்னேறினர்.

12 தற்பொழுது அதனை லிங்கன் பெருஞ்சாலை (Lincoln Highway) என்கின்றனர்.

அல்பனியிலிருந்து மொகாக்கு சென்று, அங்கிருந்து ஜெனிசி (Genesee) சுங்கச்சாவடியை அடைந்து, ஈரி ஏரியையும் ஓகியோ வையும் அடைவது மற்றொரு வழியாகும். 1825-ல் ஈரி கால் வாயை முழுதும் தோண்டி முடித்தபின்னர், அந்தப் பாதை மிகவும் செல்வாக்கடைந்தது; மேலும், ஓகியோ பள்ளத்தாக்கின் குடி யேற்றத்திற்கும், மேற்கு நியூயார்க்கின் குடியேற்றத்திற்கும் அப் பாதை பயன்பட்டது. மற்றொரு நியூயார்க்கு பாதை காட்ஸ்கில் (Catskill) சுங்கச் சாவடி வழியே அலெகனி முகத்துவாரத்தை அடையும் பாதையாகும். பால்டிமோரிலிருந்து சுங்கச் சாவடி வழியே கம்பர்லாந்துக்கு ஒரு பாதை செல்லும்; அங்கிருந்து மலைகளின் குறுக்கே தேசீயப் பாதை ஒன்று ஓகியோவிலுள்ள வீலிங்கிற்குச் (Wheeling) செல்லும்; அதன் கிளைகள் பிட்ஸ்பர்க் கிற்குச் செல்லும். வர்ஜீனியாவிலிருந்து மத்திய கென்டக்கிக்குச் செல்லும் வண்டிப் பாதையே முக்கிய தென்னாட்டுப் பாதையாகும். கென்டக்கியிலிருந்தும் டென்னசியிலிருந்தும் அநேக பாதைகள் சின்சின்னாட்டி அல்லது லூயிவில்லி பகுதியிலுள்ள ஓகியோவிற் குச் செல்கின்றன.

நியூ இங்கிலாந்துக்காரர்களே மேரியட்டாவையும் கிளீவ் லாந்தையும் உருவாக்கினர் என்றபோதிலும், அப்பகுதியிலுள்ள மக்களில் பெரும்பாலோர் வேறு பிரதேசங்களிலிருந்தே வந்த வர்கள் ஆவர். 1820 வரையில் தன்னுடைய வட எல்லைப் பிரச் சினைக்கும், மேற்கு நியூயார்க்கின் எல்லைப் பிரச்சினைக்கும் தீர்வு காணும் முயற்சியிலேயே நியூ இங்கிலாந்து ஈடுபட்டிருந்தது. பென்சில்வேனியாவின் மத்திய மாநிலங்களிலிருந்தும் நியூஜெர்சி யிலிருந்தும் எண்ணற்ற குழுவினர் ஓகியோவிற்கு வந்திருந்தனர். அவர்கள் சின்சின்னாட்டியைத் தங்கள் வர்த்தக மையமாகக் கொண்டிருந்தனர். நியூ இங்கிலாந்துக்காரர்களுக்கும் பிறகு முக்கி யத்துவம் உடையவர்கள் வர்ஜீனியாவிலிருந்து வந்து குடியேறிய வர்கள் ஆவர். மேற்குப்புற ஒதுக்கத்தில் (Western Reserve) உள்ள நியூ இங்கிலாந்துக்காரர்களின் எண்ணிக்கையைவிட அவர்கள் அதிகமானவர்கள் ஆவர். தங்களுடைய வடகவுன்டிகளில் நியூ இங்கிலாந்திலிருந்து வந்தவர்களுக்கு இந்தியானுவும் இல்லி னாய்சும் இடமளித்தன. எனினும், தோட்ட முதலாளிகளால் வெளியேற்றப்பட்ட கென்டக்கி, டென்னசி பகுதிகளைச் சார்ந்த முதல் முயற்சியாளர்களும், வர்ஜீனியா, வடகரோலினு ஆகிய பகுதிகளின் மேட்டுநிலங்களிலிருந்து வந்த சிறு விவசாயிகளுமே மேற்குறிப்பிட்ட கவுன்டிகளில் குடியேறினர். இக்கூட்டத்தி லிருந்துதான் ஏப்ரகாம் லிங்கன் தோன்றினார். தென்னாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களில் பெரும்பாலோர் ஸ்காட்ச்-ஐரிஷ் வகுப்பைச் சார்ந்தவர்கள் ஆவர். இந்தியானுவிலுள்ள 'ஹூசியர்'

('Hoosier') எனும் பிரிவினர் முக்கியமாக வடகரோலினுவி லிருந்து வந்தவர்கள் ஆவர். மிசிசிப்பி பள்ளத்தாக்கில் குடி யேறிய பழங்குடி மக்கள் தென்னுட்டிலிருந்து வந்தவர்கள் ஆவர்.

எனினும், தென்னுட்டு நாகரிகத்தை வடமேற்குப் பிரதேசம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏழைமை நிலையில் உள்ள தென்னுட்டு வெள்ளைக்காரர்கள், பிரிஸ்பிடீரியன் (Presbyterian), குவேக்கர் (Quaker) சூழ்நிலையில் வளர்ந்து, நியூ இங்கிலாந்திலிருந்தும் மத்திய மாநிலங்களிலிருந்தும் வந்துற்ற முதல் முயற்சியாளர் களுடன் கலந்தனர். அவர்கள் பெருந்தோட்டங்களை ஏற்படுத்து வதற்குப் பதிலாகச் சிறு பண்ணைகளையுடைய சமூகங்களை உருவாக்கினர்கள்; அடிமை முறையை ஏற்றுக்கொள்ளாமல் பலர் வாய்ந்த ஜனநாயக அமைப்பை ஏற்றுக்கொண்டனர். பழைய வடமேற்குப் பிரதேசத்திற்கு ஐரோப்பாவிலிருந்து நேரடி யாக வந்த பிரிவினர் ஜெர்மானியர்களே ஆவர். 1830 முதல் 1850 வரையில் வந்தவர்களின் எண்ணிக்கை அரைமில்லிய னுக்கு மேலாகும். அடுத்த பத்தாண்டுகளில் சின்சின்னுட்டி யைச் சுற்றி மத்திய ஓகியோவிலும், மிச்சிகன் ஏரியில் உள்ள விஸ்கான்சின் கவுன்டிகளிலும், மிசிசிப்பி பள்ளத்தாக்கில் உள்ள இந்தியானு, இல்லினுய்ஸ், மிச்சிகன், இன்னும் பிற மாநிலங்களிலும் மேலும் ஒரு மில்லியன் பேர்கள் குடியேறினர்.

எல்லைப்புற வாழ்க்கை

இடம்விட்டு இடம்பெயர்ந்தவர்கள் நடந்து வந்திருக்கலாம்; அல்லது குதிரைமீது ஏறி வந்திருக்கலாம். பாரவண்டிமீதோ அல்லது படகின்மீதோ ஏறியும் வந்திருக்கலாம். இவ்வாறு பல வழிகளிலும் வந்து புதிய இடத்தில் குடியேறுபவர்களின் முதல் வேலை, தங்கி வசிப்பதற்குரிய இடத்தைக்கண்டு தேர்ந்தெடுத்துச் செப்பனிடுவதேயாகும். சட்டத்திற்குப் புறம்பான முறையில் இடத்தைக் கைப்பற்றிப் பதுங்கி வாழ விரும்புபவனுக இருப்பின், குடியேற்றம் ஏற்படக்கூடிய இடத்திற்கு அப்பால் சற்றுத் தொலை வில் உள்ள இடத்தையே நாடுவான். அவன் நாடும் இடம் நீரோட்டம் உள்ள இடமாக இருத்தல் வேண்டும். அப்பொழுது தான் அவன் உற்பத்திசெய்யும் பண்டங்களைச் சந்தைக்குக் கொண்டுசென்று விற்றுவிட்டுத் தனக்கு ஓர் ஆண்டுக்கு வேண் டிய உப்புபோன்ற சில அடிப்படைத் தேவைகளை வாங்கிவர முடியும். புதிதாகக் குடியேற விழைகின்றவன் சட்டப்படி நடந்து கொள்ள விரும்பினால், மேற்கே செல்வதற்குமுன் அல்லது வேறு எங்கும் செல்வதற்குமுன், விரும்புகின்ற நிலத்தை நிலவிற்பனை அலுவலகத்திலிருந்து விலைக்கு வாங்கியபின்னரே செல்ல

வேண்டும். மேற்கத்திய நகரங்களில் உள்ள நில ஊக வணிகரின் பார்வையிலிருந்து தப்பித்துக்கொள்வது அவனுடைய நல்விஞை யாகும். தான் தேர்ந்தெடுத்துக்கொண்ட புதிய நிலத்தை நோக்கி வழக்கமாக மரத்துண்டுகளையும் நீரையும் எடுத்துக்கொண்டு வந்து, அருகிலுள்ளவர்களின் துணையைக் கொண்டு, கரடுமுர டான மரவீட்டை அவன் கட்டினான். பின்னர் புதர்களை அகற்றி முதலாண்டிற்குத் தேவையான தானியத்தைப் பயிரிடப் போது மான நிலத்தைத் தேர்ந்தெடுத்து, அதனைச் சுற்றிலும் மரங்களை வைப்பான். முதலாண்டில் தூய மண்ணின் வளம் 50 முதல் 60 புஷல்கள்வரை தானியத்தைக் கொடுக்கும். பின்னர் இன்னும் நிலத்தைப் பக்குவப்படுத்தினால் 70 முதல் 100 புஷல்கள் கொண்டதானியம் விளையும். கால்நடைகளுக்கும், பன்றிகளுக்கும், குதிரைகளுக்கும் வேண்டிய அளவுக்கு உணவுப் பண்டங்கள் சுலபமாகக் கிடைக்கும். தோட்டத்தில் விளையும் காய்கறிகள் வீட்டிற்குப் போதுமானவையாக இருக்கும். எல்லைமீறிய அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கும். மூன்றாவது அல்லது நான் காவது ஆண்டில் குடியேற்றக்காரர் தம்முடைய வீட்டை இன்னும் ஒழுங்குபடுத்தி, உபரிப் பண்டங்களை விற்க முனைவார். குடியேற்ற இடம் நல்ல இடமாக இருப்பின், இன்னும் பலர் வந்து குடியேறுவர்; பண்டகசாலைகளும் பலசரக்குக் கடைகளும் ஏற் படும்.

நகரம் எவ்வாறு உருவாகியது என்பதை 1818-ல் மாரிஸ் பர்க்பெக் (Morris Birkbeck) என்பவர் பின்வருமாறு குறிப் பிடுகிறார்: 'பண்டையப் பெருமைகள் வாய்ந்த சுற்றுப்புறங் களினால் கவரப்பட்டு அல்லது மண்வளத்தின்மீது ஆசை கொண்டு அல்லது ஆலைக்கு அருகில் வாழலாம் என்ற விருப்பம் கொண்டு அல்லது வேறு காரணத்தினால் சிலர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குடியேறத் தலைப்பட்டார்களேயானால், அந்த இடம் நகரமாவதற்குரிய சூழ்நிலை உருவாகிவிட்டது என்பதை உணர்ந்த நில உடைமையாளர்கள், அங்கு உள்ள தமக்குரிய நிலங்களை அளந்து பகுதிகளாகப் பிரித்து ஏலம் மூலமாகவோ அல்லது வேறு வழியிலோ விற்கத் தொடங்குவர்.'

'புதிய நகரம், அது ஏற்படக் காரணமான ஸ்தாபகரின் பெயரைப் பெறும். தேவையான பண்டங்களை வரவழைத்துப் பலசரக்குக் கடைக்காரன் கடையைத் துவக்குவான். வைத்தி யரும் வழக்கறிஞரும் தங்குவதற்குரிய சத்திரத்தை விடுதியாளர் ஏற்படுத்துவர். கூப்படைந்துவரும் பிரயாணிகள் தங்கு வதற்கும் அச்சத்திரம் பயன்படும். உடனடியாகவே கொல்லர் களும், மற்றச் சிறு தொழிலாளர்களும் நகரில் வந்து வசிக்கத் தொடங்குவர். இவ்வாறு வளருகின்ற சமூகத்தில் மதகுரு

வாகவும் விளங்கும் பள்ளி ஆசிரியர் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுவார். இவ்வாறு அப்புதிய நகரம் வளர்ந்து சுற்றுப்புற வட்டாரங்களின் மையமாக மாறும். நூற்றுக்கணக்கான முயற்சிகள் தோல்வியடைந்திருக்கலாம். ஆனால், நகரங்களை உருவாக்குவதில் நூற்றுக்கணக்கான முயற்சிகள் வெற்றியும் அடைந்திருக்கலாம். சுற்றுப்புறங்களில் மக்கள் எண்ணிக்கை பெருகவே, வியாபாரம் பெருகுகிறது; ஏற்றுமதிகளும் இறக்கு மதிகளும் சமநிலையில் இருக்கின்றன. ஓராண்டிற்கு முன்னர், பிரின்ஸ்டன் (Princeton) நகரத்தைச் சுற்றிலுமுள்ளவர்கள் 'சிறு பிராணிகளின் தோலை'யே (buckskin) உடையாக உடுத்திக் கொண்டனர். ஆனால், இப்பொழுது வழிபாட்டிற்கெனத் தேவாலயத்திற்கு வரும் ஆடவர்கள் நல்ல நீலத்துணியை அணிந்து வருகின்றனர்; அருமையான காலிக்கோ துணியையும், வைக்கோலினுல் செய்யப்பட்ட குல்லாயையும் அணிந்துகொண்டு பெண்களும் வருகின்றனர்.'

'நகரம் உருவாகிவிட்டது. நகரத்தில் மக்கள் வசிக்கத் தொடங்கிவிட்டனர். நகரம் எவ்வளவு சிறிதாக இருப்பினும், உற்பத்திப் பெருக்கத்திற்கு அது தூண்டுகோலாக அமைந்துள்ளது. அளிப்பு பெருகுகிறது. ஆறுகளுக்கு அருகில் நீர்ச்சக்தி ஆலைகளும், நீர்ச்சக்தி கிடைக்காதபோது நீராவி ஆலைகளும் கிளம்புகின்றன. இவ்வாறு பெருகிவரும் உற்பத்திக்கு ஏற்ற நிலையான சந்தையும் உருவாகிறது. ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் பெருகி வர்த்தகம் பெருகுவதால், மிசிசிப்பி உலகத்திலேயே மிகப் பெரிய போக்குவரத்துச் சாதனமாக விளங்கும்.'[13]

சமூகத்தின் வளங்கள் பின்னர்ப் பெருகத் தொடங்கினுல், கால்வாய்களும் நல்ல சாலைகளும் தேவைப்படும். வசிப்பதற்குரிய மனைகள் ஒன்றுக்கொன்று தொலைவில் இருந்தமையால், சமூகத் தொடர்பு மிகவும் மதிப்புடையதாக இருந்தது. மேலும், அன்றாட அலுப்பு ஏற்படுதலைத் தடுக்கவும் மறக்கவும் விருந்துகளும் கேளிக்கைகளும் நடைபெற்றன.

ஆரம்பத்தில் தேர்ந்தெடுத்த நிலத்திலேயே குடியேற்றக் காரர்கள் அனைவரும் தங்கிவிடவில்லை. காலி நிலங்கள் நிறைய இருந்தமையாலும், அவற்றை எளிதாகக் கைப்பற்றிக்கொள்ளும் வாய்ப்பு இருந்தமையாலும் மக்கள் நிலையாக ஓரிடத்தில் தங்காமல் நகர்ந்துகொண்டே யிருந்தனர். சந்தைகள் வெகு தொலைவில் இருந்தன. கால்வாய்களும் இரயில்வேக்களும்

[13] மாரிஸ் பர்க்பெக் (Morris Birkbeck), op. cit., pp. 103-105

ஏற்படுவதற்கு முன்னர், சந்தைகளுக்குச் செல்வது மிகவும் தொல்லையான காரியமாகும். இதன் விளைவாகப் பணம் கிடைப்பதில்லை. காட்டுவாசி பணத்தையே வாழ்க்கை முழுதும் கண்டிருக்கமாட்டான் எனலாம். புதிதாகக் குடியேற வருபவரிடம் ஓரளவு செப்பனிடப்பட்ட நிலத்தை விற்றுல்தான் ஒருவன் பணத்தைப் பார்க்கமுடியும். இது சுலபமான வழியே. பின்னர், 'மீண்டும் மரங்கள் மீண்டு வளர்ந்துள்ள நிலத்தைப் பிடித்துச் செப்பனிடவேண்டும்.' சிலர் இந்த முறையைத் தங்கள் வாழ்க்கையில் ஆறு தடவைகள் பின்பற்றிப் பணம் ஈட்டுவர். இத்தகைய முதல் முயற்சியாளர்கள் பின்னுல் வரும் நிலையான குடியேற்றக்காரர்களுக்கு வழிவகுத்துக் கொடுத்து விட்டு முன்னேறிச் செல்வர். மக்கள் எண்ணிக்கை பெருகத் தொடங்கவே, நிலையான குடியேற்றக்காரர்களைத் தொடர்ந்து முதலாளிகளும் வந்தனர்.

1837-ல் போஸ்டனில் வெளியிடப்பட்ட ஜே. எம். பெக் (J. M. Peck) என்பாரின் 'மேற்கே குடியேறியவர்களுக்கு ஒரு புதிய குறிப்பேடு' (A New Guide for Emigrants to the West) என்ற நூலிலிருந்து அடிக்கடி எடுத்துக் கையாளப்படும் வாசகம் ஒன்றில் எல்லைப்புறக் கட்டங்களைப்பற்றிய தெளிவான விளக்கம் ஒன்று தரப்பட்டுள்ளது.

'பொதுவாகவே, மேற்கத்திய குடியேற்றங்களிலெல்லாம், சமுத்திரத்தின் அலைகளைப்போல அடுத்தடுத்து மூன்று பிரிவினர் முன்னேறி வந்துள்ளனர். வேட்டையாடிய விலங்கினங்களையும் ரேஞ்சு (Range) என்று வழங்கப்படும் இயற்கையாக வளர்ந்துகிடக்கும் புல்பூண்டு, காய்கறிகள், பழவகைகளையும் தன் குடும்பத்தாருடன் உட்கொண்டு மேற்கு நோக்கி முதன் முதலில் முதல் முயற்சியாளன் செல்கின்றான். அவன் தானே செய்த கரடுமுரடான விவசாயக் கருவிகளைப் பயன்படுத்தினன். தானியம் ஒன்றினைப் பயிரிடுவதில்தான் முக்கியமாக ஈடுபட்டான். இறுதியில் கோசுக்கீரை, பீன்ஸ், உருளைக் கிழங்குகள், வெள்ளரி, வேறு பல தானியங்கள் இவற்றையும் தோட்டமிட்டுப் பயிரிட்டான். மரக்குடிசை, குதிரை லாயம், தானியத் தொட்டி, 12 ஏக்கர்கள் கொண்ட வயல், மரம் இவை அவனுடைய வேலைக்குப் போதுமானவையாகும். அவன் எப்பொழுதேனும் நிலத்திற்குச் சொந்தக்காரனுக இருந்தானு என்ற கேள்வி எழவேண்டிய அவசியமே இல்லை. அந்த நேரத்திற்கு அவனே நிலத்திற்குச் சொந்தக்காரனுவான். அவன் யாரிடத்திலும் குத்தகைப் பணம் செலுத்த வேண்டியதில்லை. நிலச்சுவான்தாரைப்போலச் சுதந்திரமாக அவன் வாழ்கிறான். ஒரு குதிரை,

ஒரு பசுமாடு, ஒன்று அல்லது இரண்டு பன்றிகள் இவற்றை அழைத்துக்கொண்டு அவன் குடும்பம் சகிதமாகக் காட்டினுள் நுழைந்து ஒரு கவுண்டியையோ அல்லது ஒரு மாநிலத்தையோ அமைக்கிறான். தன்னுடைய குடிலை அமைத்துக்கொண்டு, தன்னைப்போன்ற விருப்பமும் பழக்கங்களும் உடைய மற்றக் குடும்பங்களையும் வரவழைத்துக் கொண்டு காட்டுப் பகுதிகளில் அவன் வாழ்கிறான். இயற்கை வளங்கள் போதாத நிலைமை ஏற்படும் வரையிலும், வேட்டையாடுதல் ஆபத்து நிரம்பியதாக மாறும் வரையிலும், அவன் அங்கு வாழ்கிறான்; அல்லது கூட்டம் பெருகி, சாலைகளும், பாலங்களும், வயல்களும் பெருகி அவனுக்குத் தொல்லையைக் கொடுக்கும் வரையில் அவன் அங்கு வாழ்கிறான். யாவருக்கும்முன் வாங்கும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தன்னுடைய குடிலையும் வயலையும் பிறருக்கு விற்று விட்டு, மேலும் உயரமான மரங்கள் உள்ள காட்டுப் பகுதியை நோக்கி அவன் முன்னேறுகிறான். மீண்டும் அங்கிருந்து செப்பனிட்ட பகுதிகளை விற்றபடியே மேலும் மேலும் முன்னேறுகிறான். பின்னர் அர்க்கென்சாஸ் (Arkansas) பகுதிக்கோ அல்லது டெக்சாஸ் பகுதிக்கோ செல்கிறான். அங்கும் இதே முறையில் செயற்படுகிறான்.'

குடியேற்றக்காரர்களில் அடுத்த பிரிவினர் நிலங்களை வாங்கி வயல் வயலாகச் சேர்த்து, சாலைகள் அமைத்து, நீரோடைகள் மீது பாலங்கள் கட்டி, மரவீடுகள் கட்டி, கண்ணாடி ஜன்னல்கள் அமைத்து, செங்கல்லால் ஆகிய புகை போக்கியும் அமைத்து வாழ முற்படுகின்றனர். இன்னும், பழத்தோட்டங்களை அவர்கள் அமைக்கின்றனர்; ஆலைகள் கட்டுகின்றனர்; பள்ளிகளையும் நீதிமன்றங்களையும் மற்ற நிலையங்களையும் எழுப்புகின்றனர். இவ்வாறு தெளிவான, ஆனால், தூய நாகரிக வாழ்க்கையை அவர்கள் மேற்கொள்கின்றனர்.

மற்றோர் அலையும் சுருண்டோடி வருகிறது. தொழில் துணிவும் முதலும் உடைய முதலாளிகள் வருகின்றனர். சொத்தின் மதிப்பு உயர்ந்திருப்பதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் 'குடியேற்றக்காரன்' தன்னுடைய நிலத்தை விற்கத் தயாராக இருக்கிறான். விற்றபின்னர், இன்னும் உட்பகுதிக்குச் சென்று தானே தொழில்துணிவும் முதலும் உடைய முதலாளியாகத் தன்னைத் தயார் செய்துகொள்கிறான். சிறு கிராமம் விசாலமான ஊராகவோ, நகரமாகவோ மாறுகிறது. நிலத்த செங்கல் கட்டடமும், பரந்த வயல்களும், பழத்தோட்டங்களும், கல்லூரிகளும், தேவாலயங்களும் தோன்றுகின்றன. அகன்ற துணிகளும், பட்டுத் துணிகளும், தொப்பிக்குத் தேவையான மெல்லிய வைக்கோலும், கிரேப் சில்க்கும், இன்னும் மற்றக்

கூலதயப் பொருள்களும், போகப்பொருள்களும், நேர்த்தியான பண்டங்களும், இன்ப நாட்டத்திற்குரியவைகளும், நாகரிகப் பொருள்களும் கிடைக்கின்றன. இவ்வாறு அலைமேல் அலையாக மக்கள் மேற்கு நோக்கி முன்னேறியபடியே உள்ளனர். ஆனால், உண்மையான தங்கப் புதையல் உள்ள பகுதி இன்னும் வெகு தொலைவில் உள்ளது.

இதற்கிடையில் முதலில் குறிப்பிட்ட இரண்டு பிரிவினரில் ஒரு பகுதியினர் நிலையாக இருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய பழக்கவழக்கங்களையும் அந்தஸ்தையும் உயர்த்திக் கொண்டு சமூகத்தின் மேல் தளத்திற்குச் சென்றுள்ளனர்.[14]

ஒளிவீசும் எதிர்காலத்தை உடைய பிரதேசத்திற்கு பெக் அவர்கள் தந்துள்ள வருணனை மிகவும் பொருத்தமாக இருக்கும். ஆனால், இந்த வருணனை எல்லாப் பிரதேசங்களுக்கும் பொருந்தாது. அநேக பிரதேசங்களில் முதல் முயற்சிக் கட்டமே முற்றுப் பெறவில்லை. பெக் வருணித்துள்ள நிதானமான முன்னேற்றத்தினின்றும் முற்றிலும் மாறுபட்ட நிலையைக் குறிப்பாகப் பழைய தென்மேற்குப் பகுதிகள் சிலவற்றில் காணலாம். முதலில் நிகழ்கின்ற முதல் முயற்சிக் கட்டத்தில் மாறுபாடு ஏதும் கிடையாது. ஆனால், இரண்டாவது கட்டத்தில் நல்ல வீடுகள், நல்ல வயல்கள், சிக்கனத்திற்கும் செழிப்பிற்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ள பொருள்கள் ஆகியவற்றை அழித்துவிட்டு, தென்னுட்டில் பருத்தி உற்பத்தியாளர்கள் புகுந்து, முதல் முயற்சியாளர்கள் செப்பனிட்ட நிலங்களையெல்லாம் விலைக்கு வாங்கி, வயல்களை ஒன்று படுத்திப் பெரும் பண்ணைகளாக்கி, வெள்ளைக்கார விவசாயிகளுக்குப் பதிலாக நீக்கிரோ அடிமைகளை வேலைக்கு அமர்த்தினர். ஆக, இரண்டாவது கட்டத்தில் தென்னுட்டில் மக்கள்தொகை குறைவாகவே இருந்தது. அதிலும் குறிப்பாக வெள்ளைக்காரர்களின் எண்ணிக்கை முதலில் இருந்ததைவிடக் குறைவாகும். அடிக்கடி நிலத்தில் சாகுபடி செய்வதால் நிலத்தின் வளம் குன்றியது; தொழிலாளர்களிடத்தில் திறமையுமில்லை. இந்தச் சூழ்நிலையில் தான் மூன்றாவது கட்டம் வந்தது. மூன்றாவது கட்டத்தில் பொதுவாகவே தரம் குன்றியது; படிப்படியாக வெளியேற்றங்கள் ஏற்பட்டன. 1855-ல் அலபாமாவைச் சார்ந்த செல்வாக்கு மிக்க பிரஜை ஒருவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'1825-ல் மாடிசன் (Madison) கவுன்டியின் வாக்கெடுப்பில் 3,000 வாக்குகள் விழும்; இப்பொழுது 2,300-க்கு மேல் விழாது. ஒருவர் அப் பகுதியில் பிரயாணம் செய்துபார்த்தால்

[14] pp. 119—121

எண்ணற்ற பண்ணைகளையும், சுறுசுறுப்பும் திறமையும் உள்ள சுயேச்சையாளர்களையும், சுதந்திர மக்களையும் கொண்ட பகுதியைக் காணலாம். ஆனால், தற்பொழுது அடிமைகளையும், நிலமற்றோரையும், ஒதுக்கப்பட்டோரையும், சீர்கெட்டோரையும் அங்குக் காணலாம். வளமான வயல்களுக்குப் பதிலாக வேலியிடப்படாது புறக்கணிக்கப்பட்டு, நரிவாலும் கோரைப்புல் வகைகளும் மண்டிக் கிடக்கும் தரிசு நிலங்களைத்தாம் இப்பொழுது காணமுடியும். ஒரு காலத்தில் நல்ல கிராமங்களாக விளங்கியவைகளில் எல்லாம் இப்பொழுது பாசியும் காளானும் பிடித்த வெறும் சுவர்களைத்தாம் காணமுடியும். ஒரு பன்னிரண்டு வெள்ளைக்காரக் குடும்பங்கள் இருந்த இடத்தில் தற்பொழுது ஓர் ஆளைக் கண்டுபிடிப்பது பெரிய காரியமாகும். உண்மையில் 50 ஆண்டுகளுக்குமுன் அப் பகுதியில் முதல் முயற்சியாளன் தனது கோடரியினால் ஒரு மரத்தைக்கூட வெட்டியிருக்க மாட்டான். ஆனால், இப்பொழுது காடுகள் முற்றிலும் அழிந்து விட்டனபோல் தென்படுகிறது; அப் பகுதி முதுமைப் பருவத்தை அடைந்துவிட்டது போலவும் தென்படுகிறது. வர்ஜீனியா, வடகரோலினா, தென்கரோலினா ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இது உண்மையே ஆகும். அதன் விவசாயச் சிறப்பு மங்கிப்போய்விட்டது. அதன் இளமையின் வேகம் தணிந்துவிட்டது. அப் பகுதியில் தனிமை யுணர்வு பரவிவிட்டது.'[15]

1860ஆம் ஆண்டிற்கு முன்னர் மிசிசிப்பியின் குறுக்கே முன்னேறிச் சென்றமை

1800-ல் ஸ்பானிஷ்காரர்களின் நிலச்சட்டங்களாலும், வளமான தோல் வியாபாரத்தினாலும் கவரப்பட்டுக் கிழக்கே வாழ்ந்த வெள்ளைக்காரக் குடியேறிகள் மிசிசிப்பியைக் குறுக்கே கடந்து சென்றனர். மிசௌரி, மிசிசிப்பி நதிகளின்மூலம் கடத்தப்பட்ட தோல், ஈயம் முதலியவற்றிற்குச் சிறந்த சந்தையாக செயின்டு லூயி அமைந்தது. லூசியானாவின் அளவைப் பற்றியும், இயற்கை வளங்களைப் பற்றியும் மெரிவெதர் லீவிஸ் (Meriwether Lewis), வில்லியம் கிளார்க்கு (William Clark) ஆகியவர்களின் (1804—1806) புகழ்வாய்ந்த பயணத்தின்மூலந்தான் தெரிந்துகொள்ள முடிந்தது. அவர்கள் கொலம்பியா நதிமூலம் பசிபிக்கை அடைந்தார்கள். இதைப்பற்றி மேலும் வேண்டிய விவரம், காப்டன் செபுலான் பைக் (Captain Zebulon Pike)

[15] எப். எல். ஓம்ஸ்டெட் (F. L. Olmstead), 'A Journey in the Seaboard Slave States' (1856), P. 577.

என்பவரின் ஆராய்ச்சிப் பயணங்கள்மூலம் கிடைத்தது. இவர் 1805ஆம் ஆண்டிலும், அதற்குப் பின்னரும் மிசிசிப்பியின் மூலம் வரையில் சென்று ஆராய்ந்துபார்த்தார். மேலும், அர்க்கான்சஸ், ரெட் நதிகளிலும் ஆராய்ச்சிப் பயணம் செய்தார். இராக்கி மலைகளினுள்ளும் நுழைந்து பார்த்தார்; ஒரு மலைக்கு இவருடைய பெயரே சூட்டப்பட்டுள்ளது.



எல்லைக்கோட்டின் முன்னேற்றம்

[சென்சஸ் அறிக்கையின்படி, சதுர மைலுக்கு இரண்டு பேருக்கு மேலும், ஆறு பேருக்குக் குறைவாகவும் உள்ள பகுதியைத்தான் எல்லை என்று குறிப்பிடுவர். சென்சஸ் தயாரித்தவர்கள் மிகவும் பொறுப்புடனும் திறமையுடனும் அறிக்கைகளைத் தயாரித்திருப்பதால், 1890ஆம் ஆண்டுவரையில் எல்லைக் கோட்டினை ஒவ்வொரு பத்தாண்டிற்கும் மீண்டும் சரியாக

வரைந்து காட்டலாம். முப்பது ஆண்டுகளுக்குரிய எல்லைக் கோடுகளை மேலே உள்ள தேசப்படத்தில் காணலாம். அவ் வெல்லைக்கோடுகள் உள்நாட்டுப் போர் ஏற்படும்வரையில் எவ்வாறு மக்கள் எண்ணிக்கை முன்னேறியுள்ளது என்பதை விளக்கும். 1850-ல் கலிபோர்னியாவில் தங்கமும் நிவேடாவில் வெள்ளியும் கண்டுபிடிக்கப்பட்டமையாலும், தூரத்து மேற்கில் யுட்டா (Utah), ஓரிகன் (Oregon), இன்னும் மற்றப் பகுதிகளில் குடியேற்றக்காரர்கள் ஊடுருவிச் சென்றமையாலும் இப்படத்தில் காணப்படாத ஓர் எல்லைக்கோடு உண்டாகியது என்பதையும் நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும்.]

புதிய கொள்முதலின் இயற்கை வளங்களும் செழிப்பும் யாவரும் அறிந்தவைகளே. எனவே, முதல் முயற்சியாளர்கள் மிசிசிப்பியைக் குறுக்கே கடந்து, மிசௌரி வழியே மேலே முன்னேறினர். தெற்கில் புதிய நிலப்பசி மிகுந்த பருத்தி உற்பத்தியாளர்கள் நதியைக் கடந்து லூசியானுவை அடைந்தனர். இவர்களுக்கு முன்னரே கால்நடைப் பராமரிப்பாளர்கள் சென்றிருந்தனர். இத்தகைய கால்நடைப் பராமரிப்பாளர்கள் (Cattle rangers) ஜேம்ஸ் டவுனின் (James Town) முதல் குடியேற்றத்திலிருந்து நிரந்தரக் குடியேற்றங்களுக்கும் மேற்கே சென்றனர். ஸ்டீபன் எஃப். ஆஸ்டின் (Stephen F. Austin) தலைமையின்கீழ் வந்த முதல் அமெரிக்கர்களை மெக்சிகன் அதிகாரிகள் வரவேற்றனர். ஆனால், அமெரிக்கக் கால்நடைப் பராமரிப்பாளர்களுக்கும் வடபுறம் செல்லும் ஸ்பானிஷ் எல்லைக் கால்நடைப் பராமரிப்பாளர்களுக்கும் இடையில் தீவிரமான மோதுதல்கள் ஏற்பட்டன. இன, அரசியல், பொருளாதார சம்பந்தமான காரணங்களினால் பகைமை இன்னும் வளர்ந்தது. கிளர்ச்சி உருவாகும் காலமும் நெருங்கி வந்தது. அமெரிக்க வேட்டையாளர்களும் கால்நடைப் பராமரிப்பாளர்களும் மெக்சிகன் குடியரசை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்து 1836-ல் சுதந்திரம் பெற்றனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. மெக்சிகோவைத் தவிர, ஐக்கிய அமெரிக்காவும், மற்ற ஐரோப்பிய நாடுகளும் அவர்கள் சுதந்திரத்தை அங்கீகரித்தன. சுதந்திரம் அடைந்தவுடன் அவர்கள் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைவதற்கு மனுச்செய்துகொண்டனர். 1845-ல் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைப்பு நிகழ்ந்தவுடன் மெக்சிகன் யுத்தம் (1846—1848) தொடங்கியது. ரியோ கிராண்டியிடம் (Rio Grande) டெக்சாஸின் (Texas) சுதந்திரத்தை மெக்சிகோ அங்கீகரித்தது. இன்னும், கலிபோர்னியா மாநிலமும் நியூ மெக்சிகோ மாநிலமும், அரிசோனு. (Arizona), நிவேடா, (Nevada), யுட்டா (Utah) முதலியவற்றின் பெரும் பகுதியும்,

கொலராடோ (Colarado), வியாமிங் (Wyoming) ஆகியவற்றின் பகுதிகளும் அடங்கிய ஒரு பெரிய நிலப்பரப்பை ஐக்கிய அமெரிக்காவிடம் மெச்சிகோ வழங்கியது. இதற்கு 18 மில்லியன் டாலர்கள் கொடுக்கப்பட்டன. ஜீலா நதிக்குத் (Gila River) தெற்கே எல்லைக் கோட்டினை. இன்னும் தள்ளிப்போட்டு, ஐக்கிய அமெரிக்காவின் பகுதியில் தென்னெட்டின் குறுக்கே இருப்புப்பாதை அமைப்பதற்காக 1,00,00,000 டாலர்களைக் கொடுத்து காட்ஸ்டன் கொள்முதல் (Gadsden Purchase) செய்யப்பட்டது. இவ்வாறாக, பர் (Burr) காலத்திலிருந்து விசித்திரமான முறையில் சதித்திட்டமிடப்பட்டு, இறுதியில் டெக்சாஸ், நியூ மெக்சிகோ, கலிபோர்னியா ஆகிய பகுதிகள் கைப்பற்றப்பட்டுவிட்டன.

மேற்கு நோக்கிச் செல்லும் முன்னேற்றத்தில், ஓரிகன் (Oregon) கைப்பற்றப்பட்ட கதை சற்று விறுவிறுப்பு நிறைந்த ஒன்றாகும். ஓரிகனைக் கைப்பற்றியதில், குடியேற்றத்திற்குக் காரணமான ஒவ்வொரு தூண்டுதலும் முக்கியப் பங்கேற்றுள்ளது. 1788-ல் காப்டன் கிரேயும் (Captain Gray), காப்டன் கென்டிரிக்கும் (Captain Kendrick) வடமேற்குப் பகுதிக்குச் சென்று தோல் வியாபாரத்தைத் துவக்கிவைத்தனர். அவர்கள் துவக்கிவைத்ததைத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு நியூ இங்கிலாந்து வியாபாரிகள் அவ் வியாபாரத்தில் ஈடுபட்டனர். 1792-ல் இரண்டாவது தடவை பயணம் செய்தபொழுது காப்டன் கிரே கொலம்பியா நதியைக் கண்டுபிடித்தார். லீவிஸ், கிளார்க்கு ஆகியவர்களுடைய புகழ் வாய்ந்த ஆராய்ச்சிப் பயணத்தின் விளைவாக, 1804—1806-ல் கொலம்பியா பள்ளத்தாக்கின் மீது அவர்களுக்கு ஏற்பட்ட உரிமை வலுப்பெற்றது. இதற்கிடையில், ஹட்சன் பே கம்பெனி (Hudson's Bay Company), வடமேற்குக் கம்பெனி (North-west Company) ஆகிய இரண்டு ஆங்கிலேய தோல் வியாபாரக் கம்பெனிகள் இப் பகுதியினுள் நுழைந்தன. நடவடிக்கைகளின் தளமாக அஸ்டோரியாவை (Astoria) எழுப்பிய ஜான் ஜேகப் ஆஸ்டர் (John Jacob Astor) அவர்களும், அவர்களுடைய அமெரிக்கத் தோல் வியாபாரக் கம்பெனியும் (American Fur Trade) ஆங்கிலேயக் கம்பெனிகளின் ஆதிக்கத்தை எதிர்த்தன. 1812-ல் நடைபெற்ற யுத்தத்தின் போது வடமேற்குக் கம்பெனியிடத்தில் தம்முடைய உரிமைகளையும் உடைமைகளையும் ஆஸ்டர் வழங்கிவிட்டார். பின்னர், வடமேற்குக்கம்பெனியை ஹட்சன் விரிகுடாகம்பெனியுடன் இணைத்துவிட்டனர். டாக்டர் ஜான். மெக்லோலின் (Dr. John Mc Loughlin) தலைமையின் கீழ் ஹட்சன்விரிகுடாக் கம்பெனி அடுத்த கால்நூற்றாண்டில் ஓரிகனை ஆட்சி செலுத்தியது.

கொஞ்சங் கொஞ்சமாக ஓரிகனில் ஒரு புதிய ஊக்கம் ஏற் பட்டது. இந்தத் தடவை தோல் வியாபாரிகளுடன் குடியேற்றக்



தூரமேற்கிற்கு நிலவழித் தடங்கள்

[மேலே உள்ள தேசப்படத்தில், தங்களுடைய ஆராய்ச்சிப் பயணம் 1804—1806-ல், லீவியும் கிளார்க்கும் சென்ற புகழ் மிக்க பாதையையும்; பசிபிக் கரையின் வளமான நிலத்தைத் தேடிச் சென்ற குடியேற்றக்காரர்களும், மலைகளில் கிடைக்கும் தங்கம், வெள்ளி முதலான வற்றை அடையச் சென்றவர்களும் ஓரிகன், கலிஃபோர்னியா விற்குச் செல்லப் பயன்படுத்திய பொதுவான நிலவழித் தடங்களையும் காணலாம். பின்னுல் வரும் போக்குவரத்துப் படங்களைக் கூர்ந்து நோக்கின், கண்டத்தின் குறுக்கே போடப்பட்ட மிகப் பெரும் இருப்புப்பாதைகள் எல்லாம் பழைய நிலவழித் தடங்களையே பின்பற்றியுள்ளதைக் காணலாம்.]

காரர்களிடத்தில்தான் அந்தப் ஊக்கம் காணப்பட்டது. ஓரிகன் குடியேற்றத்தைத் தூண்டிய பெரும் பிரசாரகர் ஹால் ஜே. கெல்லி (Hall J. Kelley) எனும் நியூ இங்கிலாந்து பள்ளி

ஆசிரியர் : ஆவார். அவர் 1829-ல் 'ஓரிகனின் பூகோள வருணனைகள்' (Geographical Sketches of Oregon)[16] எனும் நூலை எழுதினர். அப் பகுதிக்குக் குடிபெயர்ந்து செல்வதை வளர்க்கும் ஓர் அமைப்பை ஏற்படுத்தி, 1830—1839 வரையுள்ள ஆண்டுகளில் அவரே அப் பகுதிக்குச் சென்றார். மெஸ்ஸாசுசெட்சில் கேம்பிரிட்ஜைச் சார்ந்த நதானியல் ஜே. வீயத் (Nathaniel J. Wyeth) போன்ற வியாபாரிகள், வர்த்தகச் சுரண்டலுக்கு ஏதேனும் வழியுண்டா என்று கனவுகண்டுகொண்டிருந்தார்கள். வடமேற்கிலுள்ள இந்தியர்களைத் திருத்துவதற்காக, 1833-ல் பாதிரிமார்களை மெதாடிஸ்டு சர்ச் (Methodist Church) அனுப்பியது. வாஷிங்டன் இர்விங் போன்றவர்களின் இலக்கியப் படைப்புகள் தூரத்து மேற்கைப்பற்றிய செய்திகளைப் பரப்பின. அவர்களுடைய இலக்கியப் பணி தூரத்து மேற்குப் பயணத்திற்கு உதவியது. வடமேற்கிலுள்ள வளங்கொழிக்கும் நிலங்களைப்பற்றிய செய்திகளைப் பாதிரிமார்களின் கடிதங்கள் பரப்பின. 1830—1839-ல் ஒரு சில அமெரிக்கக் குடியேற்றக்காரர்கள்தாம் ஓரிகனுக்குச் சென்றனர். ஆனால், அடுத்த பத்தாண்டுகளின் துவக்கத்தில் குடிபெயர்ச்சி பெருகியது. அப் பகுதியிலுள்ள நிலங்களின்மீது உரிமை கொண்டாடும் இங்கிலாந்துடன் 1846-ல் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி, எல்லைக் கோடாகிய 49ஆவது அக்ஷரேகை பசிபிக் வரையில் செல்வதை ஏற்றுக் கொண்டனர்.

ஓரிகனில் அமெரிக்கர்கள் குடியேறுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தவை, தோல் வியாபாரத்தில் கிடைத்த இலாபமும், செழிப்புள்ள நிலங்களுமேயாகும். ஆனால், அமெரிக்கக் குடியேற்றத்தில் முதல் இரண்டு நூற்றாண்டுகளில் நிலவிய மத உணர்வுதான் யுட்டா ஏற்படுவதற்குக் காரணமாகும். ஒரு சமூகத்திலிருந்து மற்றொரு சமூகத்திற்கு மத அடிப்படையில் மோர்மன்கள் (Mormons) விரட்டப்பட்டனர். பிரிஹாம் யெங் (Brigham Young) என்பவரின் தலைமையின்கீழ் மோர்மன்கள் 1846-ல் இல்லினாய்ஸில் உள்ள நாவூவிலிருந்து (Nauvoo) வெளியேறி, தூரத்து மேற்குப் பகுதிக்குச் சென்றனர். அடுத்த ஆண்டு சால்ட் லேக் பேசினுக்குச் (Salt Lake basin) சென்று குடியேற்றத்தை ஏற்படுத்தினர். அடக்கமும், சிக்கனமும், தகுதி வாய்ந்த தலைமையும், மதத்தின் அடிப்படையில் ஒற்றுமையும் உடைய அவர்கள் செழிப்பையும்

[16] A second edition (1831) of this pamphlet is reprinted in 'Magazine of History with Notes and Querries,' Extra No. 67, Vol. XVII, and Kelley's 'General Circular to all Persons of Good Character who wish to emigrate to the Oregon Territory' is reprinted as Extra 63, in Vol. XVI.

உற்பத்திப் பெருக்கத்தையும் நன்கு அனுபவித்தனர். கிழக்கு மாநிலங்களில் மக்கள் எண்ணிக்கை பெருகும் வாய்ப்பினைப் பாதிரி மார்கள் உருவாக்கினர். குடியேறுபவர்களுக்கு உதவிபுரியும் கருத்தில், ஐரோப்பாவில் 'நிரந்தரக் குடியேற்ற நிதியை' (Perpetual Emigration Fund) ஏற்படுத்தினர். குடியேற்றத்தின் உயர்ந்த தரமும், பாலைவனத்தை மக்கள் வாழும் சோலைவனமாக மாற்றி யமைத்தமையும் மோர்மன் குடியேற்றத்தின் சிறப்பியல்புகள் ஆகும். அமெரிக்க வரலாற்றிலேயே மிகவும் வெற்றிபெற்ற குடியேற்றம் மோர்மன் குடியேற்றம் என்றே கூறலாம்.

யுட்டாவில் மோர்மன்கள் குடியேறியவுடனேயே, மெக்சி கோவிடமிருந்து தென்மேற்குப்பகுதியைக்கைப்பற்றியவுடனேயே, சேக்ரமென்டோவிலிருந்து (Sacramento) சுமார் 40 மைல் தூரத்தில் அமெரிக்க நதியில் உள்ள ஜான் சட்டரின் (John Sutter) ஆலையைச் சுற்றிலுமுள்ள பகுதியில் 1848-ல் தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால், மேற்குக் கரையிலும் குடியேற்றம் பெருகியது. கலிஃபோர்னியாவில் ஒருசில அமெரிக்க விவசாயிகள் முன்பே சென்று வாழ்க்கை நடத்திவந்தனர். ஆனால், இப்பொழுது உலகத்தின் நான்கு மூலைகளிலிருந்தும் தங்கத்தை வெட்டி எடுக்கும் கூட்டத்தினர் புதிய நிலத்தில் வந்து குவிந்தனர். 1848ஆம் ஆண்டின் இறுதியில் 6,000 பேர்கள் வந்து சேர்ந்தனர். அடுத்த ஆண்டு, கடல்வழியாக 35,000 பேர்களும், நிலவழியாக 42,000 பேர்களும் வந்தனர். 1850-ல் மக்கள் எண்ணிக்கை 92,597 ஆகும். இவ்வெண்ணிக்கை டிலாவேர் மாநிலத்தின் மக்கள் எண்ணிக்கையைவிட அதிக மாகும். ஹார்னைச் (Horn) சுற்றிலும் அல்லது பனமா பூசந்தி வழியாகக் கடற்பாதைகள் அமைந்தன. பூசந்தியின் குறுக்கே இருப்புப்பாதை போடமுடியுமா என்பதை ஆராய்வதற்கு 1849-ல் என்ஜினியர்கள் அனுப்பப்பட்டனர். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த இருப்புப்பாதையைப் பல தொல்லைகளுக்கிடையில் போட்டு முடித்தனர். 1869-ல் கண்டத்தின் குறுக்கே முதல் இருப்புப்பாதை போட்டு முடியும்வரையில், பூசந்தியின் குறுக்கே போடப்பட்ட இருப்புப்பாதை வியாபார வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டது.

நிலவழியில் முக்கியமான இரண்டு பாதைகள் ஏற்பட்டன, மிசௌரிக்கு அருகிலுள்ள செயின்டு. ஜோசப் அல்லது இன்டி பெண்டன்ஸிலிருந்து (St. Joseph or Independence) பிளேட் நதி (Platte River) வழியாக ஃபோர்ட் லராமிக்குச் (Fort Laramie) சென்று, தென்கணவாய் (South Pass) வழியாக ஃபோர்ட் பிரிட்ஜ ருக்குச் (Fort Bridger) செல்லும் ஓரிகன் தடம் (Oregon Trail)

என்று வழங்கப்படும் குறுகிய வடக்குப் பாதை ஒன்றாகும். ஃபோர்ட் பிரிட்ஜருக்கு அருகில், கலிஃபோர்னியா தடத்திற்குச் செல்ல அமைந்துள்ள இரண்டு பாதைகளில் ஏதேனும் ஒன்றினைப் பயணி தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். தெற்குப் பாதைக்கு அல்லது சாந்தா ஃபீ தடத்திற்குச் (Santa Fe Trail) செல்ல விழையும் பொன் தேடி (gold seeker), தென்மேற்கில் ஃபோர்ட் லீவன்வர்த்திலிருந்து (Fort Leavenworth) அல்லது இன்டிபென்டன்ஸிலிருந்து (Independence) ஃபோர்ட் டாஜ் (Fort Dodge) வழியாக சாந்தா பீக்குச் செல்லலாம்; அல்லது ஃபோர்ட் ஸ்மித் (Fort Smith), அர்க்கான்சஸ் (Arkansas) ஆகியவற்றிலிருந்து மேற்கே கனடியன் நதி அல்லது ரெட் நதி வழியாக (Canadian or Red River) பீகோஸ் (Pecos) சென்று, அங்கிருந்து சாந்தா ஃபீக்குச் செல்லலாம். சாந்தா ஃபீயிலிருந்து இரண்டு பாதைகள் செல்கின்றன. ஒன்று மோர்மன் தடத்துடன் இணைக்கப் பட்டுள்ள ஸ்பானிஷ் தடம் எனும் வடக்குப் பாதையாகும். மற்றொன்று கொலராடோ நதியின் தலைவாயிலின் குறுக்கே கடந்து, வடபுறமாக சான் டீகோவிற்குச் (San Diego) செல்லும் கியர்னி பாதையாகிய (Kearney's Route) தென்புறப் பாதையாகும். இப் பாதைகளின் வழியே 'புல்வெளி இரட்டைப் பாய்க் கப்பல்கள்' (prairie schooners) ஆயிரக் கணக்கில் ஓலமிட்டுக்கொண்டு சென்றன. பொருள் தேடும் முயற்சியில் ஈடுபட்டுச் சென்ற எண்ணற்றோர் தனிமைத் துயரத்தையும் தொல்லைகளையும் பொறுத்துக்கொண்டனர். இந்தியர்களின் தொல்லைகளிலிருந்து தப்பிப் பாலைவனங்களினூடே துணிந்து சென்று வெற்றிகொண்டவர்களும், சுரங்க நகரங்களில் துப்புரவற்ற சூழ்நிலைகள் நிலவிய காரணத்தால் டைஃபாய்டு, காலரா முதலிய நோய்களையும் எதிர்த்துப் போரிடவேண்டியவர்களானார்கள்.

'நாற்பத்தொன்பதின்மரில்' (forty-niners) பெரும்பாலோருக்குப் பொன்தேடும் முயற்சியானது வலியாகவும் மாயையாகவும் அமைந்தது. உண்மையில், துவக்க காலத்தில் பொன்தேடிகளில் சிலர் பிக்காசையும்* தொட்டிலையும் கொண்டே தங்கப் பாளங்களை வெட்டி எடுத்துப் பொருள் திரட்டினர். ஆனால், செல்வத்தின் பெரும் பகுதி, வியாபாரிகளிடத்திலும், ஓட்டல் முதலாளிகளிடத்திலும், போக்குவரத்துக் கம்பெனிகளிடத்திலும், சூதாட்ட மன்ற நடத்துவோரிடத்திலுமே சென்று குவிந்தன. சில ஆண்டுகளுக்குப் பின்னர், பொன் ஏற்றுமதி குறைந்தது. விவசாயத்தின்மூலமாகவும், தொழில்மூலமாகவும், மற்றச் செல்வ உற்பத்தி

மொழிபெயர்ப்பாளரின் அடிக்குறிப்பு: 'Pickax' என்பதைக் கிராமப் புறங்களில் 'பிக்காசு' என்றே குறிப்பிடுகின்றனர்.



மக்கள்தொகையின் பகுப்பு — 1860

நடவடிக்கைமூலமாகவும்மட்டுமே நாட்டிலே செல்வமும் செழிப்பும் பெறுகின.

1850-ல் கனடியன் எல்லைக்குத் தெற்கே மேற்குப்புற எல்லையைக் குறிக்கும் கோட்டினை வரைய இயலாது. தங்கச் சுரங்கங்களைக் கண்டுபிடித்து இரண்டாண்டுகள் கழிந்தபின்னர், ஆயிரக்கணக்கான பேர்கள் பெரும் புல்வெளிகளைக் கடந்து சென்று, புதிய காமன்வெல்த்துகளை நிறுவினர். 1848ஆம் ஆண்டிலிருந்து, அமெரிக்காவில் மேற்கிலும் கிழக்கிலும் செல்லும் இரண்டு எல்லைக்கோடுகள் ஏற்பட்டன. 1840 முதல் 1850 முடிய உள்ள பத்தாண்டுகளில் டெக்சாஸ் இணைக்கப்பட்டது. அயோவா (Iowa), விஸ்கான்சின், மினிசோட்டா மாநிலங்கள் இராஜ்ஜியங்களாயின. மின்னசோட்டா, ஓரிகன், நியூ மெக்சிகோ ஆகிய பிரதேசங்கள் வரையறுக்கப்பட்டன. 1860-ல் கலிஃபோர்னியா, ஓரிகன், மின்னசோட்டா முதலிய மாநிலங்கள் இராஜ்ஜியங்களாயின. மிசௌரிக்கு மேற்கே கான்சாஸ் (Kansas), நிப்ராஸ்கா (Nebraska) ஆகிய பகுதிகளின் குடியேற்றங்கள் பெருகின. அடிமை முறை ஆதரவாளர்களுக்கும் அடிமை முறை எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் ஆதிக்கப் போர் மூண்டது. முதல் முயற்சியாளர்கள் மிசௌரி வழியே சென்று, தென்டகோட்டா (South Dakota) மாநிலத்தின் தென்கிழக்குப் பகுதியை அடைந்தனர். பின்னர், அவர்கள் மின்னசோட்டா, விஸ்கான்சின், மிச்சிகன் பகுதிகளை நோக்கி வடபுறமாக நிதானமாகச் சென்றனர்.

மேற்குத் திசை முன்னேற்றத்திலுள் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட விளைவு

மேற்குத் திசை முன்னேற்றத்தினுல் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட விளைவைவிட மேற்குப் பகுதியில் ஏற்பட்ட விளைவைப் பற்றி விளக்குவது மிகவும் எளிதாகும். துணிவும் இலட்சியமும் கொண்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள், ஆண்களும் பெண்களுமாக மேற்கு நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தமையால், கடற்கரை மாநிலங்களின் பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளில் நிச்சயமான மாற்றங்கள் ஏற்பட்டன. மேற்கு நோக்கிச் சென்ற முன்னேற்றம் முக்கியமாக விவசாயப் பெருக்கத்தையே நாட்டமாகக்கொண்டிருந்ததால், போக்குவரத்து வசதிகள் பெருகியவுடன், மேற்கத்திய வளமான மண்ணில் உற்பத்தியான பண்டங்களுக்கும் கிழக்குப் பகுதியில் விளைந்த பண்டங்களுக்குமிடையில் போட்டி ஏற்பட்டது. கடற்கரை மாநிலங்களின் வளம் குன்றத் தொடங்கியமையால், கிழக்குப் பகுதியின் விவசாயம் தாழ்ந்து வயல்களின் மதிப்பு இறங்கிவிட்டது. தங்களுடைய பின்சந்ததி-

யினருக்கு நிறைய வரய்ப்புகள் மேற்கே கிடைக்கும் என்ற நம்பிக் கையில் கிழக்குப் பகுதி விவசாயிகள் திளைத்திருந்தனர். எனினும், அவர்களுடைய சொந்த நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டது.

மேற்குத் திசை முன்னேற்றத்தினால் வளர்ந்துவரும் அமெரிக்கத் தொழில்களுக்கு என்ன விளைவு ஏற்படும் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாது. தொழிலாளர்கள் மேற்கு நோக்கிச் சென்றபடியே இருந்தமையால், கிழக்குப் பகுதியில் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து, கூலியுயர்வு ஏற்பட்டுள்ளது என்பதைக் கிழக்குப் பிரதேசத்துத் தொழிலதிபர்கள் உணர்ந்தனர். ஆனால், இந்த நம்பிக்கைக்கு எந்தவித ஆதாரமும் கிடையாது. வளர்ந்துவரும் கிழக்குப்புற நகரங்களை நோக்கியும், மேற்குத் திக்கை நோக்கியும் எப்பொழுதும் இளைஞர்கள் ஆண்களும் பெண்களுமாகச் சென்றவண்ணமே உள்ளனர் எனலாம். ஒவ்வோர் ஆண்டும், ஐரோப்பாவிலிருந்து பத்தாயிரக்கணக்கில் குடிபெயர்ந்து வந்து கிழக்கு நகரங்களில் குழுமினர். எனவே, தொழிலாளர்கள் எண்ணிக்கையில் எந்தவிதத் தட்டுப்பாடும் ஏற்பட்டதாகக் கூறமுடியாது. 1840 ஆம் ஆண்டுகளிலும் 1850 ஆம் ஆண்டுகளிலும் கூலிகள் குறைந்துகொண்டே சென்றன; வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக்கொண்டே யிருந்தது. எனவே, கூலியுயர்வு ஏற்பட்டது என்ற வாதமோ, வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை என்ற வாதமோ உண்மையாக இருக்கமுடியாது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் யார் மேற்கே சென்றவர் என்பதைப் பற்றியும் தெளிவாக விளக்கமுடியாது. அண்மைக் காலத்தில் செய்த மிக முக்கியமான ஆராய்ச்சியின் படி, மேற்கு நோக்கிச் சென்றவர்கள் முக்கியமாக விவசாயிகளும் அவர்களுடைய குழந்தைகளுமேயன்றி, நகரத் தொழிலாளர்கள் அல்லர் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.[17] ஆலைத்தொழிலாளர்கள் தொழிற்சாலைகளைவிட்டு விலகி மேற்கு நோக்கிச் சென்றனர் என்பதை நிரூபிக்க புள்ளிவிவரக் கணக்கு ஒன்றும் கிடையாது. வயல்களில் வேலை செய்த ஆயிரக்கணக்கான இளஞ் சிறுவர்களும் சிறுமிகளும் கிழக்குப் பகுதியிலுள்ள தொழிற் சாலைகளில் வேலைக்கமர்வதற்குப் பதிலாக மேற்கு நோக்கிச் சென்றனர் என்ற உண்மை, எதிர்காலத்தில் ஆலையை நிரப்பக் கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவதற்குக் காரணமாயிருந்தது என்றும், எனவே கூலியுயர்வு ஏற்பட்டது என்றும் குறிப்பிடலாம். கூலிகள் குறைந்துகொண்டே செல்லும் சூழ்நிலை

17 கார்ட்டர் குட்ரிச், சோல் டேவிசன் (Carter Goodrich and Sol Davison), 'The Wage Earner in the Westward Movement', Political Science Quarterly, L, 161-185 (June, 1935) and LI, 61-116 (March, 1936).

யில், தொழில் வளர்ச்சியின்மீது ஏற்படும் நீண்ட கால விளைவு களைப் பொறுத்தவரையில், தொழில் வளர்ச்சி அவ்வளவாகப் பாதிக்கப்படமாட்டாது எனலாம்.

எந்தச் சூழ்நிலையிலும் ஓகியோ, மிசிசிப்பி பள்ளத்தாக்கு களில் கூட்டம் பெருகி நிறைந்தால், கிழக்குப் பகுதித் தொழிலதி பர்கள் தங்களுடைய பண்டங்களுக்கு ஏற்ற சந்தையாக அப் பள்ளத்தாக்குப் பிரதேசங்களை மாற்றி அமைத்துக்கொள்வர். இதனால் பூகோளரீதியான தொழில் உழைப்புப் பகுப்பும், வர்த்தகத் தொடர்பும் ஏற்பட்டன. ஆண்டுகள் செல்லச்செல்ல, கிழக்குப் பகுதி பொறிவழித் தொழிலாக்கப் பிரதேசமாகவும், மேற்குப் பகுதி உணவு உற்பத்திக்குரிய பிரதேசமாகவும், தென்பகுதி பருத்தியை உற்பத்தி செய்யும் பிரதேசமாகவும் மாறின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில், கிழக்கு பொறிவழிப் பண்டங் களை மேற்குப் பிரதேசத்திற்குக் கப்பலில் அனுப்பிவைத்தது. ஆனால், தன்னுடைய உணவுப் பண்டங்களில் பெரும்பாலான வற்றை, மேற்கு தென்பகுதிக்கு விற்றது. மேற்கு தன் உணவுப் பண்டங்களை ஆற்றுப் பாதைகள்மூலமே அனுப்பியது. தன் பண்டங்களில் பெரும்பாலானவற்றைத் தெற்கு, ஐரோப்பாவில் விற்றது, அல்லது வடக்கே அனுப்பியது. ஈரி, பென்சில்வேனியா கால்வாய்கள் முதலியவற்றைத் தோண்டியவுடன், குறிப்பாக இருப்புப்பாதைகளைப் போட்டவுடன், மேற்கத்திய பண்டங்கள் கிழக்கிலும் தெற்கிலும் செல்லத் தொடங்கின. உள்நாட்டுப் போருக்கு முன்னரே, ஓகியோவிற்கு வடக்கே உள்ள பகுதியை வடகிழக்குப் பொருளாதார அமைப்புகளுடன் இணைக்கும் இருப்புப்பாதை போடப்பட்டது.

மேற்கின் துரித வளர்ச்சியைக் கண்டு கடற்கரை மாநிலங் களைச் சார்ந்த விவசாயிகளும், பொறிவழித் தொழிலதிபர்களும், வியாபாரிகளும் பொங்கி எழலாம். ஆனால், நிறைய முதல் உடையமுதலாளி மேற்கே நில ஊக வாணிபத்தில் ஈடுபடவும் போக்குவரத்து வசதிகளில் ஆதிக்கம் செலுத்தவும் விரும்பியதால், மற்றவர்களைப்போல் அவன் ஒன்றும் குறைபட்டுக்கொள்ள வில்லை. 1819, 1837, 1857 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார பீதிகளுக்கு முந்திய ஆண்டுகளில், அமெரிக்க முதலீட்டிற்கு ஏற்ற மிக முக்கியமான இடம் இதுவேயாகும். இல்லினுய்ஸைப்பற்றி எழுதும்பொழுது, பேராசிரியர் கேட்ஸ் (Professor Gates) ஊக வாணிபத்தின் பங்கைப்பற்றி விளக்கு கிறார். அதைப்பற்றி அவர் தரும் வருணனைகள் மத்திய மேற்கி லுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்தும். 'இல்லினுய்ஸின் வரலாற்றில் ஊக வணிகரின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

குடியேறுபவர்களுக்குமுன் தானே சென்று, நில ஊக வணிகன் தல்ல நிலத்தைத் தேர்ந்தெடுத்து, நில உத்தரவாதம்மூலமாகவோ அல்லது ரொக்கப் பணம் கொடுத்தோ நிலத்தை விலைக்கு வாங்கிப் பின்னர் அளந்து மதிப்பிட்டு, தனது பகுதிக்குவேண்டிய மக்களைக் குடியேற்றினான். கால்வாய்கள், இருப்புப்பாதைகள், பலகை ரஸ்தாக்கள் (plank roads), நதிவழிகள் ஆகியவற்றை உருவாக்குவதில் அவன் முன்னணியில் நின்றான். இவ்வளவு வசதிகளையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்த சட்டசபைகளையும், கவுன்டிகளையும், நகரசபைகளையும், காங்கிரசையும் நன்கு பயன்படுத்தினான். அரசியலில் அவன் பெற்ற செல்வாக்கை மிகைப்படுத்திவிட முடியாது.[18]

துவக்ககால அமெரிக்க அரசியலில் மேற்குப் பிரதேசத்தால் ஏற்பட்ட விளைவு

தேசிய உணர்ச்சியும், புரட்சிமிக்க ஜனநாயகக் கருத்துகளையும் உடைய எல்லைப்புறவாசி, நாட்டின் சமநிலையை ஒழித்து ஸ்தாபகரின் வேலையை வீணாக்கிவிடுவான் என்ற அச்சம் கிழக்கில் பரவி யிருந்தது. பேக்கனின் கிளர்ச்சிக் (Bacon's Rebellion) காலத்திலிருந்து இன்றுவரையில், அமெரிக்க அரசியலில் மேற்கத்திய ஜனநாயகத்தைப்பற்றிய கிழக்கத்திய அச்சம் ஒரு நிரந்தரமான இடத்தை வகிக்கிறது. ராஜதந்திரிகளிடத்திலும், அமெரிக்க வரலாற்று மாணவர்களிடத்திலும், அமெரிக்கச் சிந்தனைச் சிற்பிகளிடத்திலும் இந்த அச்சத்தைப் போக்கக்கூடிய ஒரு நம்பிக்கை பரவி யிருந்தது. அரசியல், சமூக அதிருப்தி ஏற்பட்டால் அதனைத் தடுக்கும் 'காப்புக் கருவி'யாக மேற்குப் பிரதேசம் பயன்படும் என்று அவர்கள் நம்பினார்கள். கிழக்கில் அரசியல், சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகளில் கேடு சூழும் பொழுது, காலிநிலங்களை நாடி மக்கள் மேற்கு நோக்கிச் செல்லக் கூடிய வாய்ப்பு இருக்கும்வரையில், புரட்சி வெடிப்பிலிருந்து நாடு காக்கப்படும். டர்னர் குறிப்பிடுவதுபோல, 'கிழக்கில் சமூகச் சூழ்நிலையில் கொந்தளிப்பு ஏற்படும்பொழுது, முதலாளி தொழிலாளியை அழுத்திவைக்க முயற்சிபுரியும்பொழுது, மக்கள் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் அரசியல் தடைக்கற்கள் ஏற்படும்பொழுது, எல்லையிலுள்ள சுதந்திர நிலையை நோக்கித் தப்பிச்செல்லும் வழியாக இதனைக் கொள்ளலாம்.' அரசியல் முறைப்படி மேற்கு ஆபத்தான பிரதேசமாக இருக்கலாம். ஆனால், அதே நேரத்தில் அது ஒரு காப்புக் கருவியாகவே பயன்

[18] பி. டபிள்யூ. கேட்ஸ் (P. W. Gates), 'The Illinois Central Railroad and its Colonization Work,' p. 119.

பட்டது. எல்லைப்புறம் நிலைத்திருந்தவரையில், இந்தக் கருத்தும், செல்வாக்குடன் நிலைத்திருந்தது.

மேற்குப் பிரதேசம் காப்புக் கருவியாகப் பயன்பட்டதா என்பது ஐயத்திற்குரியதே. அதிருப்தியுற்ற கிழக்குப் பகுதித் தொழிலாளர்களில் மேற்கே சென்றவர்கள் மிகவும் குறைவே. ஏழையாக உள்ள கூலியாளுக்கு மேற்குத் திசையில் செல்வதற்குரிய வசதி கிடையாது. அவனுக்கு விவசாயத்தைப்பற்றியும் ஒன்றும் தெரியாது. எனவே, பொருளாதார முறையினால் கிழக்கில் வாழும் தொழிலாளர்கள் தொல்லை அடைந்த போதிலும், அவர்களால் தப்பி மேற்கே செல்ல முடியவில்லை. மந்தகாலத்தைவிடச் செழுமையான காலத்தில்தான் இடம் பெயர்ந்து மேற்கே செல்வது கூடுதலாக உள்ளது என்று மக்கள் எண்ணிக்கைபற்றிய புள்ளிவிவரக் கணக்கு விளக்குகிறது. காலி நிலங்கள் நிறைய இருக்கும்பொழுது, பொருளாதார அதிருப்தி அலைகள் மோதுவதைக் காணலாம். எல்லைப்புறம் மறைந்த காலத்தில் இருந்து, இத்தகைய அதிருப்தியும் அமைதியின்மையும் வலுவுற்று இருப்பதையும் காணலாம். மேலும், கிழக்குப் பகுதி நகரங்களைவிட எல்லைப்புறத்தில்தான் சமுதாய அதிருப்தி மிகுந்திருப்பதைக் காணலாம்.

மேற்கு காப்புக் கருவியாகப் பயன்பட்டதோ இல்லையோ, நிச்சயமாக அமெரிக்க அரசியலில் அதற்கு ஓர் இடம் ஏற்பட்டது. இராஜ்ஜிய அரசியலில், ஜனநாயகத்திற்கு ஆதரவாக இராஜ்ஜிய அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று தீவிர எல்லைப்புற வாசிகள் கோரினர். உதாரணமாக, 1821-ல் நியூயார்க்கிலும், 1830-ல் வர்ஜீனியாவிலும் இக் கோரிக்கை வலியுறுத்தப் பட்டது. வளரும் சமூகங்களின் சக்தியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் தொகுதிகளை மாற்றியமைத்தும், வேறு பல முறைகளைக் கையாண்டும் பார்த்தனர்; ஆனால், நிரந்தர வெற்றி ஏற்படவில்லை. புதிய மேற்குப் பிரதேசத்தின் தீவிரமாகக் கொழுந்து விட்டு எரியும் உணர்ச்சியை யாரும் மறுக்கமுடியாது. தேசிய அரசியலிலும் இதே கதைதான். கிழக்குப் பிரதேசத்திலுள்ள உயர்வகுப்பினருக்கும், ஆலையதிபர்களுக்கும், பெருத்த வியாபாரிகளுக்கும் பிரதிநிதிகளாக உள்ள ஃபெடரலிஸ்டுகள் (Federalists). ஆடம் நிருவாகம் முடிவுற்றபொழுது, ஆட்சியரங்கத்துறைக்குரிய கிளைகள், சட்டமன்றக் கிளைகள் ஆகியவற்றின் ஆதிக்கத்தை இழந்தனர். பீட்மான்டு விவசாயியாகிய ஜெஃபர்சன் ஆட்சிபீடம் ஏறியபொழுது, மேற்கத்திய விவசாயிகளின் செல்வாக்குப் பெருகியது. வயதுவந்த ஆண்களுக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில், புதிய மாநிலங்கள் ஒன்றன்பின் ஒன்றுகத்

தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து வாஷிங்டனுக்கு அனுப்பவே, மேற்கத்திய விவசாயிகளின் செல்வாக்குப் பன்மடங்காகப் பெருகிற்று.

குடியரசுக் கட்சியைச் சார்ந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர்கள் [ஜெஃபர்சன், மாடிசன், மன்ரோ (Monroe), ஜான் குயின்சி ஆடம்ஸ் (John Quincy Adams)] ஆட்சியில் அமர்ந்திருந்த காலத்தில், மேற்குப் பிரதேசத்தின் உணர்வைப் பிரதிபலிக்கும் பலம் வாய்ந்த தேசியத் திட்டங்கள் உருவாயின. 1812-ல் நடைபெற்ற போர், மேற்கத்திய போராகும். புதிய சமூகத்தினரின் வேண்டுகோளை நிறைவேற்றும் நோக்கத்தில், கட்டடக் கலைஞர்களின் எதிர்ப்பையும் நிராகரித்துவிட்டு தேசிய நெடுஞ்சாலையை உருவாக்கினர்கள். விவசாய மேற்குப் பிரதேசத்திற்கு ஏற்ற சந்தையாகப் பொறிவழித் தொழிலாக்கம் உடைய கிழக்குப் பிரதேசம் அமையவேண்டும் என்ற கருத்து நிறைந்த 'அமெரிக்க அமைப்புமுறை'யை வழங்கிய ஹென்றி கிளேயின் விவாதங்களால் குறிப்பாகத் தூண்டப்பட்டு, கென்டக்கி, வட மேற்குப் பிரதேசங்களின் ஆதரவைப் பெற்று, 1816, 1824, 1828-ஆம் ஆண்டுகளில் சுங்கச் சட்டங்கள் இயற்றப்பட்டன. மேற்கத்திய தேசிய உணர்ச்சிக்கு ஏற்ற வகையில், புகழ் வாய்ந்த தீர்ப்புகளை முக்கியமான ஃபெடரலிஸ்டாகக் கருதப்படும் பிரதம நீதிபதி மார்ஷல் வழங்கினார். எனினும், மேற்கத்தியர்கள் அத்தகைய தீர்ப்புகளை அவ்வளவாக விரும்பவில்லை. 1820-ஆம் ஆண்டிற்குப் பின்னர், முந்திய ஆண்டுகளின் தேசிய உணர்ச்சிக்கு வேறான உணர்ச்சியொன்று உருவாகவே, தென்னுடும் மேற்குப் பிரதேசமும் ஒன்றுபட்டு 1828-ல் ஆண்டிரூ ஜேக்சனை (Andrew Jackson) குடியரசுத் தலைவராக்கின. மக்களாட்சியின் திறமையிலும் உரிமையிலும் உண்மையான நம்பிக்கை யுடைய ஜேக்சன், சலுகைகளையும் பணக்காரத் தன்மையையும் உடைய ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாங்கைத் தீவிரமாக எதிர்த்தார். இராஜ்ஜியங்களின் உரிமைகளை அவர் முழுதும் ஏற்றுக்கொண்டபோதிலும், மாருகத் தென்கரோலினு தள்ளுபடி செய்த காரியத்தில், அதனை எதிர்த்து நிற்பதற்குரிய வகையில் அவருக்கு எல்லைப்புறப் பயிற்சி நன்கு ஏற்பட்டிருந்தது. ஒரு வகையில் மறுபிறப்பு எடுத்ததாகக் கருதப்படும் ஃபெடரலிஸ்டு கட்சியாகிய விக்கு கட்சி அவரை எதிர்த்தது; எனினும், அக் கட்சியைத் தலைமை வகித்து நடத்தியவர் ஹென்றி கிளே எனும் மேற்கத்தியரேயாவார்.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

டர்னர், எஃப். ஜே. (Turner, F. J.), 'The Frontier in American History', chaps. 4-7, 13.

டெய்லர், ஜி. ஆர். (Taylor, G. R.) (ed.), 'The Turner Thesis', (Amherst Series).

பாண்டு, பி. டபிள்யூ., (Bond, B. W.,) Jr., 'The Civilization of the Old Northwest', chaps. 1, 2, 10.

பில்லிங்டன், ஆர். ஏ. (Billington, R. A.), 'Westward Expansion', chaps. 11-30.

வெப், டபிள்யூ. பி. (Webb, W. P.), 'The Great Plains', chap. 5.

மேத்தியூஸ், எல். கே. (Mathews, L. K.), 'The Expansion of New England', chaps. 6-10.

கோமன், கே. (Coman, K.), 'Economic Beginnings of the Far West,' Parts III and IV.

ஹேக்கர், எல். எம். (Hacker, L. M.), 'The Triumph of American Capitalism,' chaps. 15, 16.

காலண்டர், ஜி. எஸ். (Callender, G. S.), 'Selections from the Economic History of the United States', 1765-1860, chap. 12.

ஃபுளூகல், எஃப்., ஃபாக்னர், ஹெச். யூ. (Flugel, F. and Faulkner, H. U.), 'Readings in the Economic and Social History of the United States', chaps. 5, 11.

II. விவசாய சகாப்தம்

அமெரிக்க விவசாயத்தின்மீது மேற்கத்திய முன்னேற்றத்தின் விளைவு

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளாக அமெரிக்க விவசாயத்தின் முக்கியச் சிறப்பு என்னவென்றால், ஏராளமாக உள்ள காலி நிலங்களை நோக்கிக் குடியேறுபவர்கள் செல்வதுதான். புரட்சிக்குப் பின்னர் ஒரு நூற்றாண்டிற்குள், மேற்கு நோக்கிச் செல்வது விரைவுபடுத்தப்பட்டது. ஃபெடரல் நிலக்கொள்கையின் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டமையாலும், இடப்பெயர்ச்சி வளர்ந்தமையாலும், போக்குவரத்து வசதிகள் பெருகியமையாலும், மேற்கு நோக்கிய முன்னேற்றம் விரைவில் நிகழத் தொடங்கியது. கொஞ்சமேனும் முதலோ, நிலத்தை உழுது பயிரிடும் அனுபவமோ இல்லாமல் மேற்கு நோக்கிச் செல்லமுடியாது என்பது உறுதி. இருந்தபோதிலும், பலரும் இலட்சியமும் உழைக்க விருப்பமும் உடையவர்களால்கூட நிலத்தைப் பெற்றுப் புது வாழ்வைத் தொடங்க முடியவில்லை. ஒரு புதிய நாட்டில் சாதாரணத் தொழிலாளி ஓர் ஆண்டில் 80 ஏக்கர்கள் நிலம் வாங்கக்கூடிய அளவுக்குப் பணத்தைச் சேமிக்கமுடியும். எல்லைப்புறத்தில் மிகவும் தேவைப்படும் தேர்ச்சிபெற்ற இயந்திரத் தொழிலாளியும் பள்ளி ஆசிரியரும் 80 ஏக்கர்கள் நிலத்தை வாங்க, இன்னும் குறைந்த காலத்திலேயே பணம் சேமிக்கமுடியும். இரண்டு குதிரைகளை அல்லது எட்டுக் கால்நடைகளை விற்று, கால்பகுப்பு நிலம் வாங்கமுடியும். 1788-1860 ஆண்டுகளில், அலெகனீ சுக்கும் மிசிசிப்பிக்கும் இடையிலுள்ள நிலங்களெல்லாம் விலை போயின; முன்னேறிவந்த இடப்பெயர்ச்சி அலை, டெக்சாஸில் பாய்ந்து, மிசௌரியை மூழ்கடித்து, கான்சாஸ், மின்னசோட்டா வழியே ஊடுருவிச் சென்றது. பெரும் சால்ட் லேக்கைச் (Great Salt Lake) சுற்றிலும் விவசாயத்தை மோர்மன்கள் மேற்கொண்டனர். பசிபிக் சரிவில் பண்ணைகள் விரைவில் ஏற்பட்டன.

எளிதில் கிடைத்த நிலத்தில் பழைய காலத்து முறைகளையும், பாழாக்கும் முறைகளையும் பின்பற்றி விவசாயம் செய்யப்பட்டது.

விஞ்ஞான விவசாயமுறையை வலியுறுத்திவந்த ஆர்தர் யங் (Arthur Young)எனும் ஆங்கிலேயருக்கு எழுதிய கடிதமொன்றில், வர்ஜீனியாவில் நிலம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைப்பற்றி வாஷிங்டன் பின்வருமாறு வருணிக்கிறார் :

'நிலச் சொத்துடைய மக்கள் புகையிலையைப் பயிரிடுவதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். தானியங்களோ ஓர் ஒழுங்குமுறைப்படி அடுத்தடுத்துப் பயிரிடவேண்டும் என்ற கருத்தே இல்லை. பொதுவாகப் பழக்கம் என்னவென்றால், முதலில் மக்காச் சோளத்தைப் பயிரிடுவர். பயிரிடும் முறைப்படி சோளத்திற்குப் பின்னர் கோதுமை பயிராவதற்கு நிலம் தயாராக உள்ளது என்று பொருளாகும். பின்னர், கோதுமை பயிரிடப்படும். பின்னர் 18 மாதங்களுக்கு நிலம் தரிசாகப் போடப்படும் (களைகளும் மற்றவைகளும் வளர்ந்து நிலம் பாழாகலாம்). இது போலவே, மாற்றி மாற்றித் தானியங்களைப் பயிரிட்டுக்கொண்டே செல்வர். எரு ஒன்றும் போடாததால், இறுதியில் நிலம் வளத்தை இழந்துவிடும். புல்லோ பூண்டோ பயிரிட்டு நிலத்தை வளமாக்குவதற்குப் பதிலாக அல்லது வேறு முறைகளின்மூலம் நிலத்தை வளமாக்குவதற்குப் பதிலாக, அந்த நிலத்தை விட்டுவிட்டு வேறொரு புதிய நிலத்தை நாடிச் சென்று அதனைக் கெடுப்பர்'[1].

வளங்குன்றிய பழைய நிலத்தைவிட புதிய நிலத்தில் புகையிலையைப் பயிரிடுவது மலிவானது என்று புகையிலை வியாபாரி கண்டுகொண்டான். மேற்கே கென்டக்கியிலும் புகையிலை பயிரிடப்பட்டது. பருத்தியைப் பொறுத்தவரையிலும், இதுவே உண்மையாகும். பருத்தி உற்பத்தியின் விளைவாக அலபாமா, மிசிசிப்பி, கிழக்கு டெக்சாஸ் பகுதியிலும் குடியேற்றம் ஏற்பட்டது. இவ்வாறே விவசாயம் வடபகுதியிலும் பரவியது. மத்திய நியூயார்க்கிலோ அல்லது ஓகியோ பள்ளத்தாக்கிலோ வளங் கொழிக்கும் பூமி நிறைய கிடைக்கும்பொழுது, எதற்காக மெஸ்ஸாசுசெட்சிலோ அல்லது நியூ ஹாம்ஷையரிலோ சிறிய வயலில் செறிந்த வேளாண்மை செய்யவேண்டும் என்பதை விவசாயி அறிந்து கொண்டான்.

புதிய நிலப்பரப்பிற்கு முதல் முயற்சியாளன் சென்றவுடன், நிலத்தின் வளத்தை அப்படியே வழித்து எறிந்துவிட்டு, அதனை விலைக்கு விற்றுவிட்டு, மற்றொரு புதிய நிலத்தை நோக்கி நம்பிக்கையுடன் செல்வதே அவனுடைய விருப்பமாக இருந்தது. 1849-ல் மிசௌரியில் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார் : 'ஒழுங்காகத் தோலைப் பிய்த்து எறியும் முறையில் வேளாண்மை

1. W. C. Ford (ed), 'The Writings of George Washington,' XI, 178 ff.

இங்கு நடைபெற்றது. இப்பகுதியிலுள்ள விவசாயிகளில் பலர் நிலத்தின் மேல்தளத்தில் உள்ள மண்ணைக் கீறி வழித்து எறிந்து விட்டு, உழாது விட்டுவிடுவர்.[2] ஐரோப்பியப் பிரயாணிக்கு இந்த முறை வியப்பாக இருந்தது.' 1818-ல் பர்க்பெக் (Birkbeck) பின்வருமாறு சொன்னார்: 'பயிரிட்டுக்கொண்டே யிருப்பதால் மண்வளம் குன்றிவிடுகிறது; எனவே, ஏரு போடவேண்டும் என்ற எண்ணமே மேற்கத்திய விவசாயிக்கு ஏற்படுவதில்லை. ஏரு நிறைய சேர்ந்தவுடன், அந்தத் தொல்லையைத் தவிர்ப்பதற்காகத் தங்களுடைய கொல்லைகளையும் கட்டடங்களையும் வேறு இடத்திற்கு விவசாயிகள் மாற்றிவிடுவர். நிலத்தின் வளம் குன்றுது குறையாது இருப்பதுபோல் தோன்றுவதால், நிலத்திற்கு ஏருவிடவேண்டும் என்ற கருத்தே அவர்களுக்கு ஏற்படுவதில்லை.'[3] நீர்வழிப் போக்குவரத்தும், நீராவியைப் பயன்படுத்திய போக்குவரத்தும் வளர்ச்சியுறுவதற்கு முன்னால், விவசாய முதல் முயற்சியாளன் சந்தைகள் கிடைக்காமல் தொல்லையுற்றான். எனவே, தன்னுடைய பண்ணைகளை அவன் நன்கு பராமரிக்க வில்லை புதிய பண்ணையின் உள்ளார்ந்த வளங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தாமலேயே தன்னுடைய குடும்பத்திற்கு வேண்டிய அளவுக்கு அவனால் உற்பத்தி செய்துகொள்ள முடியும்.

பழைய நிலத்தை விலைக்கிவிட்டுப் புதிய நிலத்தில் பயிரிடுகின்ற எளிமையைவிட விவசாயத்திற்குக் கேடு பயப்பது எது வெனில், இக் காலத்தில் பத்தாண்டு பத்தாண்டுகளாகத் தொடர்ந்து அமெரிக்க மக்கள் நில ஊக வாணிபத்தால் கவரப் பட்டு இருப்பதுதானே. மிகைப்படுத்தியபோதிலும், ஓர் ஆங்கிலேயர் இதைப்பற்றி வருணித்து இருப்பதில் உண்மை இருக்கத் தான் செய்கிறது. அவர் குறிப்பிடுவதாவது:

'பல ஆண்டுகளுக்கு உண்மையான எஸ்டேட்டில் ஊக வாணிபமே மேற்கத்தியானின் மனத்தில் நிறைந்திருந்த கருத்தாகும். கிளார்க்குகளும், தொழிலாளர்களும், விவசாயிகளும், கடைக்காரர்களும் வாழ்க்கையை நடத்தவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் மேற்கே செல்லுவும், நில ஊக வாணிபத்தின்மூலம் தங்களுடைய செல்வத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்ற எண்ணமும் அவர்களுக்குண்டு. எவ்வளவு யாங்கிகள் (Yankees) மேற்கே சென்று, நிலத்தை வாங்கி, பண்ணை வைத்து,

[2] Cultivator, New Series VI (1849), p. 302, quoted in P. W. Bidwell & J. I. Falconer, 'History of Agriculture in the Northern United States,' 1620—1860, p. 272.

[3] Morris Birkbeck, 'Letters from Illinois' (1818), p. 18.

விடுகட்டி, நிலையாகக் குடியேறி, இறுதியில் அம் மண்ணிலேயே தங்கள் வாழ்க்கையை இறுதிவரையில் நடத்தினர் என்பதற்கு ஆதாரமாக எந்தவிதப் புள்ளிவிவரக் கணக்கும் கிடையாது. இந்த நோக்கத்துடன், கிழக்கிலிருந்து அரை சதவீதத்திற்குமேல் மக்கள் மேற்கு நோக்கிச் சென்றிருக்கமாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன். இவர்களில் பாதிப்பேர்கள்கூட இந்த நோக்கத்திற் காகவே இறுதிவரையில் வாழ்ந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது என்றே கருதுகிறேன். உண்மையில், ஜெர்மனியிலிருந்து வந்தவர்களோ, நிலத்துக் குடியேறியவர்கள் என்று சொல்லலாம். ஆனால், எல்லா வர்க்கத்தினரும் எல்லா வகையான மக்களும் அமைதி இழந்து, எங்கும் நிலையாகக்குடியேறவில்லை. புதிய இருப்புப் பாதைகள், சாலைகள், கிராமங்கள், நகரங்கள், தங்கச் சுரங்கங்கள், நீராற்றல், நிலக்கரிச் சுரங்கங்கள் இவையெல்லாம் தோன்றுவதால் நில ஊக வாணிபங்கள் பெருகவே, அவற்றின்மீது அவர்களுக்கு உள்ள ஆர்வம் மிகுந்தது. இவற்றை வாய்ப்பாகப் பயன்படுத்தி, அதிர்ஷ்டவசமாகச் செல்வம் சேர்க்கலாம் என்று அவர்கள் கருதினர்.....

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள பெரும்பாலான மக்கள் திடீரெனப் பணம் திரட்டிவிடலாம் என்ற கனவுகளில் ஈடுபட்டனர். உழைத்து வாழ்வது என்பதே ஒதுங்கி வாழ்கின்ற, தொழில் முயற்சி இல்லாத, பலவீனமான மக்களுடைய தலைவிதியாகும் என்று நினைத்தனர்; அல்லது ஓயாது உழைக்கும் டச்சுக்காரனுடைய அல்லது ஆங்கிலேயனுடைய தலைவிதியாகும் என்று கருதினர்; இளம் அமெரிக்காவிற்கு உழைத்து வாழ வேண்டிய தலைவிதி கிடையாது என்றும் கருதினர்.....

வசதியான சட்டங்களின்மூலம், மற்றச் சொத்துகளைப் போலவே, நிலத்தையும் எளிதாக ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்கு மாற்றலாம். அறுபது நாட்களில் பன்னிரண்டு பேர்களின் கைகளுக்கு நிலவுடைமை மாறும். ஒவ்வொரு தடவை கைமாறும்பொழுதும், அதன் விலை உயர்ந்தபடியே இருக்கும். இதற்கிடையில், எருமை மாடுகளும் சிவப்பிந்தியர்களும் எண்ணிக்கையில் பெருகுவர். எங்கெங்கே நிலங்கள் இருக்கின்றன என்று தெரியாமலேயே, பல மில்லியன் ஏக்கர்கள் கொண்ட நிலங்களை வாங்குவோரும் விற்போரும் வாங்கியபடியும் விற்றபடியும் இருப்பர். இவர்களுக்கு இந்த நிலங்கள் எங்கேனும் உள்ளனவா என்றுகூடத் தெரியாது. நல்ல இலாபத்திற்குத்தான்

வாங்கிய நிலத்தை விற்கலாம் என்ற நம்பிக்கைமட்டும் வாங்கு வோனுக்கு உண்டு.'[4]

நாட்டு வளர்ச்சியின்மீது ஊக வாணிபம் நடத்துவதுதான் முதல் முயற்சியாளனின் முக்கிய வேலையாகவும், அவன் வாழ்க்கை யின் ஒரு முக்கிய அங்கமாகவும் அமைந்தது.[5] எதிர்காலத்தில் மதிப்பு உயரக்கூடிய நிலமாகப் பார்த்து அவன் தேர்ந்தெடுத்தான். நிலத்தை வாங்கி, குடிசையைக் கட்டி, அங்கு வேலைசெய்து, இலாபம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும்போது நிலத்தை விற்பது தான் எல்லைப்புறவாசியின் வழக்கமாக இருந்தது. இதனால், கிழக்குப் பிரதேச விவசாயி நிலைகுலைந்துபோனான். அவனுக்கும் நில ஊக வாணிபத்தில் நாட்டம் ஏற்பட்டது. அவனும் நிலத்தை விற்றுவிட்டுச் செல்வம் திரட்டும் நோக்குடன் வேறு இடங் களுக்குச் சென்றான். நாட்டின் வளர்ச்சிமீது ஏற்பட்ட இத் தகைய வியாபாரமுறையினால், இடம் பெயர்ந்து செல்லும் உணர்ச்சியே அமெரிக்க விவசாயிக்கு ஏற்பட்டது. பழைய உலகச் சூழ்நிலைகளுக்கு இது ஒத்துவராது; சில குறிப்பிட்ட வேலைகளில் அமர்ந்து மெதுவாகச் செல்லும் பழக்கத்தினை உடை யோருக்கும் இது பொருந்தாது. அடிக்கடி குடிபெயர்ந்து செல்வ தால், அமெரிக்க விவசாயிக்குப் பிராந்திய உணர்வு இல்லை; செறிந்த வேளாண்மையில் ஈடுபாடும் இல்லை. தான் வாங்கிய நிலத்தை விவசாயி பக்குவப்படுத்திக்கொண்டிருப்பது சந்ததி யினரின் பயனுக்காக அன்று; ஆனால், நிலத்தை மீண்டும் உயர்ந்த விலையில் விற்பதற்கேயாகும்.

மேற்கத்திய போட்டியின் காரணமாகக் கீழ்த்திசை விவசாயம் இன்னும் நிலைகுலைந்தது. மேற்கத்திய விவசாயப் பண்டங்களுக்கு வேண்டிய சந்தையினைக் கால்வாய்களும் இருப்புப்பாதைகளும் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டமையால், நியூ இங்கிலாந்திலும் மத்திய மாநிலங்களிலும் உள்ள விவசாயி, தானியங்கள் இறைச்சி ஆகியவற்றில் மேற்கத்திய விவசாயியுடன் போட்டியிட்டுத் தொல்லையுற்றான். எனவே, வாணிபப் பண்டங்களை உற்பத்தி செய்யும் பண்ணை, பழவகைகளின் உற்பத்தி, கால்நடைப் பண்ணை அல்லது புகையிலை உற்பத்தி என்ற முறையில் பொருளாதாரத் தைத் திருத்தியமைக்கவேண்டிய கட்டாயம் கீழ்த்திசை விவசா யிக்கு ஏற்பட்டது. கிழக்குப் பிரதேசத்தில் வசதியான இடத் தில் அமைந்திருக்கின்ற அல்லது வளங் கொழிக்கும் நிலம்தான்

[4] டி. டபிள்யூ. மிட்செல் (D. W. Mitchell), 'Ten Years in the United States (1862), p. 325.

[5] பெக் (Peck) அவர்களின் வாசகத்தைக் காண்க. அதிகாரம் 10, பிரிவு-6, பாரா-5.

மேற்குப் பிரதேச நிலத்துடன் போட்டியிடமுடியும். இவ்வாறு திருத்தியமைப்பதற்கு வெகு நாட்கள் ஆகும்; சில தொல்லைகளும் ஏற்படும். போதுமான அளவுக்குத் தொழிலாளர்கள் கிடைக்காததாலும் கிழக்குப் பகுதி விவசாயம் பாதிக்கப்பட்டது. பண்ணையில் வேலை செய்யக்கூடிய மிகவும் திறமை வாய்ந்தவர்கள் உயர்ந்த கூலியை நாடியும், பெரிய வாய்ப்புகளைத் தேடியும் அருகாமையிலுள்ள நகரங்களுக்கோ அல்லது மேற்குப் பிரதேசத்திற்கோ சென்றனர்.

பருத்தி உற்பத்தி

குடியரசின் முதல் அரைநூற்றாண்டின் விவசாய வரலாற்றில் பருத்தி உற்பத்தியே மிகவும் முக்கியமான அம்சமாகும். காலனிக் காலத்தில் பருத்தி உற்பத்தி வளரவில்லை. சந்தை கிடைக்காததாலும், புகையிலைக்கு அதிக முக்கியத்துவம் இருந்ததாலும் பருத்தி உற்பத்தி பெருகவில்லை. காலனி அரசாங்கங்கள் உதவ முன்வந்தபோதிலும், பருத்தி உற்பத்தி பெருகவில்லை. துணி நெய்வதற்காகக் கொஞ்சம் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டது; ஆனால், அந்தத் துணி ஏழை மக்களுக்கே பயன்பட்டது. புரட்சிக் காலத்தில் கிரேட் பிரிட்டனுடன் நடைபெற்ற வர்த்தகம் தடைப்பட்டதால், வெளிநாட்டுத் துணி வகைகளின் இறக்குமதி தடைப்பட்டது. எனவே, தென்னிட்டினர் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகப் பருத்தி உற்பத்தியில் ஈடுபட்டனர். பருத்தி உற்பத்தியை மேற்கொள்ளுமாறு மேரிலாந்து, வர்ஜீனியா, தென்கரோலினா முதலிய மாநிலங்களின் சட்ட மன்றங்கள் மக்களைத் தூண்டின. பஞ்சிலிருந்து விதையைப் பிரித்தெடுப்பது தான் பருத்தி உற்பத்தியாளனுக்கு மிகவும் தொல்லையான வேலையாகும்; அடிமைத் தொழிலாளிக்குக்கூட இது கடினமான வேலையாகும்.

பருத்தியைப் பொறுத்தவரையில், தென்னிட்டு விவசாயத்தில் ஒரு புரட்சி 1790-1830 ஆண்டுகளில் ஏற்பட்டது. பின்னர், பருத்தி தென்னிட்டின் முக்கியப் பயிர் ஆயிற்று. மேலும், பருத்தி ஒரு முக்கியமான ஏற்றுமதிப் பொருளாகவும் ஆயிற்று. உடனடியாகவே சந்தை ஒன்று ஏற்பட்டதால்தான், பருத்தி உற்பத்தி வளர்ச்சியுற்றது. கையினால் நூல்நூற்பதற்குப் பதிலாக நீராற்றலினாலும் நீராவியினாலும் நூல் நூற்பதற்குரிய கருவிகளை இங்கிலாந்தில் 1767—1780ஆம் ஆண்டுகளில் ஹார்கிரீவ்ஸ் (Hargreaves), ஆர்க்ரைட்டு (Arkwright), கிராம்டன் (Crompton) முதலானோர் கண்டுபிடித்தனர். 1785-ல் துணி நெய்வதிலும் இத்தகைய கண்டுபிடிப்புகளை கார்ட்ரைட்டும் (Cartwright)

கண்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்க காலத்தில் தொழிற் புரட்சி ஏற்பட்டது. இறுதியில், இத்தகைய இயந்திரக் கருவிகள் எல்லாம் அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்டன. அமெரிக்காவில் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. ஆடம் சீபர்ட் (Adam Seybert) குறிப்பிட்டுள்ளதுபோல, '1775-ல் உள் நாட்டுக் கலைகளிலேயே பருத்தி உற்பத்தி மிகவும் சாதாரணமான கலையாகும்; பருத்தி உற்பத்தி முழுவதும் உள்நாட்டுத் துய்ப்பி லேயே செலவழிந்துவிடும்; 1797-ல், மற்றப் பொறிவழித் தொழில்களையெல்லாம் மிஞ்சி, கிரேட் பிரிட்டனின் தலைசிறந்த தொழிலாகத் துணி உற்பத்தி விளங்கியது; 1809-ல் துணி உற்பத்தித் தொழிலில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 8,00,000 பேர்களாகும்.'[7]

விரைவாகவும் மலிவாகவும் துணி உற்பத்தி செய்யப்பட்ட தால், விலையும் குறைந்து தேவையும் பெருகியது. எவ்வளவு வேண்டுமானாலும், துணி உற்பத்தி செய்யமுடியும். ஆனால், வேண்டிய அளவுக்கு மூலப்பொருள் கிடைப்பதுதான் பெரும் பிரச்சினையாக இருந்தது. 1786-ல் எதிர்பாராத முறையில் பகாமாவிலிருந்து (Bahamas) 'கடல் தீவு'ப் (sea-island) பருத்தி கொண்டுவரப்பட்டது. கடற்கரையில் அப்பருத்தி நன்கு செழித்து வளர்ந்தது. கடல் தீவுப் பருத்தி நீண்ட நூலிழையை உடைய தாக இருந்ததால், சக்கரங்களின் எதிரெதிராக நூலிழைகளை ஓட்டிப் பருத்தி விதையைப் பிரித்தெடுக்க முடிந்தது. வெளி நாட்டில் அதன் தேவை உடனடியாகப் பெருகியது. கடற்கரை விவசாயிகளிடத்தில் பருத்தி வேளாண்மை பரவியது. புகையிலை நிலங்கள் வளம் குன்றியமையாலும், கிரேட் பிரிட்டனிடமிருந்து பிரிந்த பிறகு இண்டிகோ, அரிசி முதலானவற்றிற்குச் சந்தை கிடைக்காமையாலும், பருத்தி பயிரிடுதலைத் தோட்ட முதலாளி கள் மேற்கொண்டனர். இங்கிலாந்திலுள்ள தொழிற்சாலைகளின் முதலாளிகள் மூலப்பருத்தி நிறைய வேண்டும் என்று கூக்குர லிட்டுக்கொண்டிருந்தபொழுது, தென்னாடு ஒரு புதிய பயிரைப் பயிரிடும் நிலை ஏற்பட்டது.

பருத்தி வேளாண்மையைத் தூண்டும் சக்திகள் நிறைய இருந்தன. பஞ்சிலிருந்து கொட்டையைப் பிரித்து எடுப்பதில் தொல்லைகள் இருந்தமையால்தான், பருத்தி வளர்ச்சியில் தாமதம் ஏற்பட்டது. தட்பவெப்பச் சூழ்நிலைகளின் காரணமாகக் கடல் தீவுப் பருத்தி கடற்கரையோரங்களில்மட்டுமே பயிரிடப்பட்டன. தென்னாட்டின் பெரும்பகுதியில், சிறு நூலிழையுடைய மேட்டு

7. ஆடம் சீபர்ட் (Adam Seybert), 'Statistical Annals.....of the United States' (1818), p. 92.

நிலப் பருத்தி பயிரிடப்பட்டது. இப் பருத்தியை ஒழுங்குபடுத்துவது மிகவும் கடினமாகும். ஓர் அடிமை ஒரு நாளில் ஒரு பவுண்டு எடையுள்ள பருத்தியை மட்டுமே ஒழுங்குபடுத்த முடியும். 1793-ல் யாங்கியும், இயந்திரத் தேர்ச்சிபெற்ற திறமையாளருமாகிய எலி விட்னே (Eli Whitney) என்பார் இப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டார். யேல் (Yale) பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம்பெற்றபின்னர், அவர் தெற்கே சென்று பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினர்.

விட்னே கண்டுபிடித்த கருவியில் ஓர் உருளை இருக்கும். உருளையின் பல்சக்கரங்கள் உலோகத் தகடுகளின் வழியே வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். பல்சக்கரங்களில் பருத்தி நூலிழை தனியாக வரும்; கொட்டைகள் பின்தங்கிவிடும். இக் கருவியில் மற்றோர் உருளையும் உள்ளது. இவ் உருளையில் உள்ள தூரிகை, பல்சக்கரம் எதிராகச் சுழலும்பொழுது அதில் ஒட்டிக்கொண்டிருக்கும் பஞ்சினை அகற்றும். இக் கருவியைக் கையினால் இயக்குவதால், ஒரு நாளைக்கு ஐம்பது பவுண்டு பருத்தியே சுத்தம் செய்யப்படும்; நீராற்றலைக்கொண்டு 1,000 பவுண்டுகள் சுத்தம் செய்யலாம். தன்னுடைய தந்தைக்கு எழுதிய கடிதத்தில் ஒரு கண்டுபிடிப்பாளர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'நான் வருவதற்குமுன் ஒரு கருவி செய்தேன். அக் கருவியை இயக்குவதற்கு ஓர் ஆள் போதும். பழைய கருவியைக்கொண்டு சுத்தம் செய்யும் பருத்தியைவிடப் பத்து மடங்கு அதிகமான பருத்தியை இந்தக் கருவிமூலம் அவன் சுத்தப்படுத்தமுடியும்; மேலும், இன்னும் நல்ல முறையிலும் சுத்தப்படுத்த முடியும். நீராற்றலைக் கொண்டோ, குதிரையைக் கொண்டோ எளிதில் இக் கருவியை இயக்கலாம். பழைய கருவிகளைக் கொண்டு ஐம்பது ஆட்கள் செய்த வேலையை, ஓர் ஆளும் ஒரு குதிரையும் புதிய கருவியைக் கொண்டு செய்து முடிக்கலாம். இது உழைப்பை ஐம்பது மடங்கு குறைத்துவிடுகிறது. எனினும், யாரையும் வேலையிலிருந்து நீக்கவேண்டியதில்லை.'[8]

பருத்தி ஜின் ஏற்படுத்திய விளைவுகள்

விட்னேயின் பருத்தி ஜின், முக்கியமான முதல் அமெரிக்க விவசாயக் கண்டுபிடிப்பாகும். இது பெரிதும் ஒருவராலேயே கண்டுபிடிக்கப்பட்டுச் செய்யப்பட்டதாகும். அது கண்டுபிடிக்கப்

[8] 'Correspondence of Eli Whitney,' American Historical Review, III, 100.

பட்டதால், உடனடியான நெடுங்காலமிருக்கக்கூடிய விளைவுகள் ஏற்பட்டன. தென்னுட்டின் மிக முக்கியமான வர்த்தகத் தானியம் பருத்தியாகும். நாட்டின் மிகப் பெரிய ஏற்றுமதிப் பண்டமும் பருத்தியேயாகும். வாணிபத் தடைச்சட்டம் நிலவிய 1808ஆம் ஆண்டையும், போர்க்காலமாகிய 1812-1814ஆம் ஆண்டு களையும் தவிர, மற்ற ஆண்டுகளில் பருத்தி உற்பத்தி விரைவாகவும் நிலையாகவும் வளர்ந்தது. 1790-ல் உற்பத்தி, 500 பவுண்டு களைக்கொண்ட 4,000 பேல்கள் (bales) ஆகும்; 1860-ல் 38,41,416 பேல்கள் ஆகும். 1810-ல் மொத்த ஏற்றுமதியில் பருத்தி ஏற்றுமதியின் மதிப்புமட்டும் 22 சதவீதமாகும்; 1860-ல் அது 57 சதவீதமாக உயர்ந்தது. இதே ஆண்டுகளில் பருத்தி ஏற்றுமதிகளின் மதிப்பு $ 6,67,58,000-லிருந்து $ 33,35,76,000 ஆக உயர்ந்தது.[9] தென்னுட்டுச் செல்வத் தின் மூலம் சுங்கத்தைப் பற்றிய தென்னுட்டின் நோக்கும்

[9] ஐந்தைந்தாண்டுகளுக்கு, அமெரிக்கப் பருத்தியின் சராசரி ஆண்டு உற்பத்தியும், ஏற்றுமதிகளும் (1791-1868); நியூயார்க்கிலும் லிவர்பூலிலும் கிடைக்கும் இடைத்தர மேட்டுநிலப் பருத்தியின் சராசரி ஆண்டு விலைகள்.

ஆண்டுகள்.	யூனைடெட் ஸ்டேட்சில் சராசரி ஆண்டு உற்பத்தி (பவுண்டுகளில்).	யூனைடெட் ஸ்டேட்ஸ் சராசரி ஆண்டு ஏற்றுமதி (பவுண்டுகளில்).	ஏற்றுமதிச் சதவீதம்.	இடைத்தர மேட்டுநிலப் பருத்தியின் சராசரி யார்க் விலைகள் (சென்டுகளில்).	இடைத்தர மேட்டுநிலப் பருத்தியின் சராசரி லிவர்பூல் விலைகள் (சென்டுகளில்).
1791–1795	52,00,000	17,38,700,	33·43	31·7	புள்ளி விவரம் கிடையாது.
1801–1805	5,96,00,000	3,36,03,800,	56·38	25·0	15·4
1811–1815	8.00,00,000	4,22,69,400,	52·83	14·8	20·5
1821–1825	20,90,00,000	15,24,20,200,	72·93	16·2	9·2
1831–1835	39,85,21,600	32,90,77,600,	82·57	11·9	8·0
1841–1845	82,29,53,800	69,15,17,200,	84·03	7·7	4·7
1851–1855	1,29,44,22,800	99,03,68,600,	76·51	9·6	5·4
1861–1865	புள்ளி விவரம் கிடையாது.	புள்ளி விவரம் கிடையாது.	புள்ளி விவரம் கிடையாது.	58·9	19·1

மூலம்: The South in the Building of the Nation, V, 211.

போக்கும், போரின் ஆரம்ப காலத்தில் தென்னூட்டிற்கு இருந்த அளவுமீறிய நம்பிக்கை, இறுதியில் அதன் தோல்வி இவையெல்லாம் ஏற்றுமதி வர்த்தகத்தில் பருத்தியின் முக்கியத்துவத்தை நன்கு விளக்குகின்றன.

தென்மேற்குப் பிரதேசம் முன்னேறுவதற்கு பருத்தி ஜின் கண்டுபிடிப்பும், பருத்தி உற்பத்தியுமே காரணங்களாகும். ஜார்ஜியாவிலும் தென்கரோலினுவிலும் தொடங்கி, 1800ஆம் ஆண்டிற்குப் பின்னர் பருத்தி உற்பத்தி வடகரோலினுவிலும் தென்கிழக்கு வர்ஜீனியாவிலும் பரவி, பின்னர் மிஸிஸிப்பி நதியைக் கடந்து டென்னசியிலும் பரவியது. பருத்தி உற்பத்திக்கு மேட்டுநிலங்களைவிட அலபாமா, மிசிசிப்பி ஆகியவற்றின் வண்டல்மண்படிந்த பூமியே ஏற்றது என்பதை மக்கள் உணர்ந்ததால், இந்தியர்களையும் ஸ்பானிஷ்காரர்களையும் கால்நடைப் பராமரிப்பாளர்களையும் முன்னே தள்ளிவிட்டுப் பின்னே சாரைசாரையாகப் பருத்தி உற்பத்தியாளர்கள் அப் பிரதேசங்களினுள் புகுந்தனர். அவர்கள் மிசிசிப்பி நதியைக் கடந்து, கால்நடைப் பராமரிப்பாளர்களை டெக்சாசுக்கு விரட்டினர்; மெக்சிகன் போர் ஏற்படக் காரணமாயிருந்தனர்; அப் போரின் விளைவான பிரதேச இணைப்பிற்கும் காரணமாக இருந்தனர்; பின்னர், 1860-ல் டெக்சாசின் கடற்கரைப் பகுதிகளைப் பெற்றனர். புகையிலை உற்பத்திமுறையைப்போலவே துவக்க காலத்தில் பருத்தி உற்பத்திமுறையும் அமைந்ததால், மண்வளம் குன்றியது; எனவே, புதிய வளமான நிலங்களைத் தேடித் தோட்ட முதலாளிகள் சென்றனர். 1820-ல் நாட்டின்மொத்தப் பருத்தி உற்பத்தியில் பாதிக்குமேல் ஜார்ஜியாவிலும் தென்கரோலினுவிலும் உற்பத்தியாயிற்று. 1850-ல் பருத்தி உற்பத்தியில் அலபாமா முன்னணியில் நின்றது; ஜார்ஜியா இரண்டாவது இடத்தையும், மிசிசிப்பி மூன்றுவது இடத்தையும், தென்கரோலினு நான்காவது இடத்தையும் பெற்றன. 1860-ல் மிசிசிப்பி, அலபாமா, லூயிசியானு ஆகிய மாநிலங்கள் மொத்த உற்பத்தியில் பாதிக்குமேல் உற்பத்தி செய்தன. டெக்சாசின் உற்பத்தி தென்கரோலினுவின் உற்பத்தியைவிட அதிகமாயிற்று. 1837-ல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு முந்திய செழிப்பான ஆண்டுகளும், டெக்சாஸ் இணைப்பை உடனடியாகத் தொடர்ந்த காலமுமே தென்மேற்குப் பிரதேசப் பருத்தி உற்பத்தி வளர்ச்சிக்குரிய முக்கியக் காலங்களாகும். பருத்தி உற்பத்தியின் மையம் மாறியவுடன், வர்த்தகத்தின் மையமும், செல்வக் கொழிப்பின் மையமும், அரசியல் அதிகாரத்தின் மையமும் மாறத் தொடங்கின. சார்லஸ்டன், சாவன்னு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறைந்தது; மெம்பிஸ் (Memphis), மொபைல் (Mobile), நியூ ஆர்லியன்ஸ் ஆகிய பகுதிகள் வர்த்தக மையங்களாக வளர்ந்தன.

1850-1860-ல் பருத்தி உற்பத்தியில் பாதியை உடைய வர்த்தகத்தை நியூ ஆர்லியன்ஸ் மேற்கொண்டது. இதற்குள்ளாகப் பருத்தி ஆட்சியின் மையம் தென்மேற்கை நோக்கி நகர்ந்தது.

பருத்தி ஜின்னைக் கண்டுபிடித்ததால் ஏற்பட்ட விளைவுகள், தென்னூட்டின் சமூகப் பொருளாதார வாழ்க்கையில் ஊடுருவிச் சென்று, அடிமை முறையையும் நிலைபெறச் செய்தன. புரட்சியை உடனடியாகத் தொடர்ந்த ஆண்டுகளில், அடிமை முறையைப் பற்றிய பிரச்சினை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. தென்னூட்டில் நிலவிய அடிமைமுறையின் பொருளாதார மேம்பாட்டைப்பற்றிய பிரச்சினையை அறிவுள்ள தோட்ட முதலாளிகள் கிளப்பினர். 1794-ல் வாஷிங்டன் பின்வருமாறு எழுதினார்: 'சந்தையிலே ஆடுமாடுகளை விற்பதைப்போல நீக்கிரோக்களை விற்கும் முறையை எதிர்ப்பவனாக நான் இல்லாமல் விருந்தால், பன்னிரண்டு மாதங்களில் ஓர் அடிமையைக்கூட நான் பெறமாட்டேன். பல ஆண்டுகள் கழிவதற்கு முன்னரே, தொல்லையைத் தருகின்ற சொத்தின் ஒரு பிரிவாக இந்த அடிமைகள் மாறவில்லையெனில், என் கருத்து தவருகும்.'[10] வாஷிங்டன், ஜெஃபர்சன் போன்றவர்கள் சாகுந்தறுவாயில், தங்கள் அடிமைகளை விடுதலை செய்தனர். மற்றச் செல்வாக்குள்ள தென்னூட்டவருடன் சேர்ந்துகொண்டு இவர்கள் கொடுமையான அடிமைமுறையை ஒழிக்கப் பாடுபட்டனர். வடக்கே அடிமை முறையை ஒழிக்கும் இயக்கம் நன்கு வளர்ந்தது.

பருத்தி ஜின் கண்டுபிடிக்கப்பட்டதால், அடிமைமுறையை ஒழிக்கும் இயக்கத்தின் வேகம் தடையுற்றது. அடிமைத் தொழிலாளர்களைக்கொண்டு வளரவேண்டிய பயிர் பருத்தியாகும். ஓர் ஆண்டின் பெரும்பகுதி முழுதும் நீக்கிரோ குடும்பம் பருத்தி விளையும் நிலத்தில் உழைக்கலாம். பெரும்பாலான அடிமைகளை மேய்க்க ஒரு மேற்பார்வையாளர் போதும். பழைய நிலம் வளங்குன்றியவுடன் புதிய நிலத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பினைப் பெருமளவில் உடைய ஒரு நாட்டில், அறியாமையில் மூழ்கியுள்ள அடிமைகளைக் கொண்டு விஞ்ஞான முறைக்குப் புறம்பான பாழான முறைகளைக் கடைப்பிடித்துப் பயிரிடுவதற்கு ஏற்றதாகவே பருத்தி உற்பத்தி அமைந்துள்ளது. 1790-ல் 6,98,000 அடிமைகளே இருந்தனர்; 1860-ல் அவர்கள் எண்ணிக்கை 40,00,000 ஆகப் பெருகியது. எனினும், தேவைக்கேற்ற அளவுக்கு அடிமைகள் கிடைக்கவில்லை.

[10] Quoted in W. H. Mazyck, 'George Washington and the Negro', (1932).

இன்னும் மிகுதியான நிலங்களைப் பருத்தி வேளாண்மைக்குப் பயன்படுத்தத் தொடங்கவே, அடிமைகள் நிறையத் தேவைப் பட்டனர். பருத்தி ஜின் கண்டுபிடிப்பதற்குமுன்னர், $300 மதிப் புள்ள பருத்தியைத் திறமையுள்ள ஒருவன் உற்பத்தி செய்தான். இருபது ஆண்டுகள் கழிந்தபின்னர், விலை இரட்டிப்பாகியது. சராசரி மதிப்பு 1830-ல் $ 800 ஆகவும், 1850-ல் $ 1,200 ஆகவும், 1860-ல் $ 1,400 முதல் $ 2,000 வரையிலுமாகவும் இருந்தது. தென்னாட்டில் அடிமைமுறை ஒழிப்புணர்வு மறைந்து விட்டது. இவ்வுணர்ச்சி மிகுதியாயிருந்த எல்லைப்புற மாநிலங் களிலும் அது மங்கி மறைந்துவிட்டது. பருத்தி உற்பத்தியின் மையம் மேற்குப் பிரதேசத்திற்கும் தென்னாட்டிற்கும் சென்று விட்டதால், எல்லைப்புற மாநிலங்களில் அடிமைகள் நிறைய இருந்தனர். குறிப்பாக, வர்ஜீனியாவில் அவர்களின் எண்ணிக்கை பெருகியிருந்தது. எனவே, அப் பகுதிகளில் அடிமை வியாபாரமும் பெருகியிருந்தது. அதே வேளையில், கடற்கரைப் பகுதி முழுவதும் உள்ள அடிமை வியாபாரத்தைத் தடுக்கும் சட்டத்தை அவர்கள் மீறினர். அடிமைமுறைக்கு எதிர்ப்பு இருப் பதைக் கண்டு நடுங்கிய அடிமைகளின் சொந்தக்காரர்கள், காங் கிரசிலே உள்ள தங்களுடைய பிரதிநிதித்துவ வலிமையைப் பயன் படுத்திக்கொண்டு அடிமைப் பிரதேசத்தை இன்னும் பரவலாக்க முயன்றனர்.

பருத்தி உற்பத்தியின் விளைவுகள் வடக்குப் பிரதேசத்தில் தெரியலாயின. நியூ இங்கிலாந்தின் சிற்றிள நெசவாலைகள் வளர்க்கப்பெற்றன. ஓகியோவிற்கு வடக்கே பன்றி இறைச்சி, தானியம், மாவு, விஸ்கி முதலியவற்றை விற்கும் சந்தையை விவசாயிகள் கண்டனர். இதனால் விவசாயம் வளர்ந்தது. மத்திய மேற்கில் செழிப்பான நிலை உருவாகியது. ஆனால், அதே நேரத்தில் தென்மேற்கில் அடிமைமுறையும் பெருகியது; தோட்டப் பொருளாதார அமைப்பும் வளர்ச்சியுற்றது.[11]

தென்னாட்டு விவசாயத்தின் பிற கூறுகள்

காலனி காலத்தில், தென்னாட்டில் விளைந்த மிக முக்கியமான பண்டம் புகையிலையாகும். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் புகையிலை மேலோங்கி நின்றது. புகையிலை விளையும் மாநிலங்களில் வாழும் மக்களில் பாதிப்பேருக்குமேல் புகையிலை பயிரிடும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். 1791-ல்

11 பி. டபிள்யூ. பிட்வெல், ஜே. ஐ. ஃபால்கனர் (P. W. Bidwell and J. I. Falconer), op. cit., chap. 18.

ஏற்றுமதிப் பட்டியலில் புகையிலை முதலிடம் பெற்றிருந்தது. அப்பொழுது வெளிநாட்டுக்கு 45,90,000 டாலர்கள் மதிப்புள்ள புகையிலையைக் கப்பல்மூலம் அனுப்பினர். 1800ஆம் ஆண்டிலும் புகையிலை முன்னணியில் உள்ள ஏற்றுமதிப் பண்டமாகவே இருந்தது. ஆனால், கப்பல் வாணிபத் தடைச் சட்டங்களினாலும், கியூபா, கொலம்பியா, சுமத்திரா ஆகிய பகுதிகளின் போட்டியாலும், வெளிநாடுகள் விதித்த அதிக இறக்குமதி வரிகளாலும், நிலத்தின் வளம் படிப்படியாகக் குன்றியமையாலும், பருத்தி உற்பத்தியாலும் புகையிலையின் முக்கியத்துவம் விரைவில் குறையலாயிற்று. புகையிலை உற்பத்திக்குப் பதிலாகப் பருத்தி உற்பத்தியில் நிலத்தையும் அடிமைகளையும் ஈடுபடுத்தியதால் உண்டான விளைவு வெளிப்படையாகத் தெரிந்தது. 1840 வரையில், புகையிலைத் தொழில் நடைமுறையில் தேக்கம் அடைந்திருந்தது. 1840ஆம் ஆண்டில்தான் புகையிலை ஏற்றுமதிகள் 1790-ல் கப்பலில் அனுப்பிய புகையிலையின் அளவுக்குச் சமமாக இருந்தன. புகையிலையைப் பதப்படுத்துவதில் பழைய காலத்துக் கட்டைக் கரி நெருப்புக்குப் பதிலாக வெப்பக் காற்றுக் குழாயைப் பயன்படுத்தியதாலும், புதிய மஞ்சள் இலை வகையினைப் புகுத்தியமையாலும், புகையிலையின் தரம் உயர்ந்து, புகையிலைத் தொழிலும் வளர்ந்தது. மக்கள் எண்ணிக்கை பெருகியதால், உள்நாட்டுச் சந்தையும் விசாலமடைந்தது. 1850 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகளில் உற்பத்தி இரட்டிப்பாகியது. ஆகவே, போர் தொடங்கியபொழுது, புகையிலை உற்பத்தியில் தென்னாடு உலகிலேயே தலைசிறந்து விளங்கியது. அந்த வேளையில், வர்ஜீனியாவும் கென்டக்கியும் பாதியளவுக்குப் புகையிலையை உற்பத்தி செய்தபோதிலும், புகையிலை உற்பத்தியின் மையம் மேற்கு நோக்கி நகர்ந்துகொண்டே யிருந்தது. அந்த வேளையில், உற்பத்தியில் பாதியை இங்கிலாந்திற்கும், ஜெர்மனிக்கும் ஏற்றுமதி செய்தனர்.

துவக்க காலத்தில் கரும்பு இறக்குமதி ஆயிற்று. ஆனால், 1800-ல்தான் அதனைச் சுத்தம் செய்யும் முறை போதுமான அளவுக்கு வளர்ந்தது. அதன்பின்னரே அது ஒரு முக்கியப் பொருளாயிற்று. லூசியானா கரும்பு உற்பத்தியின் மையமாயிற்று. 1860-ல், 1,80,000 அடிமைகளை வேலைக்கு அமர்த்தி, லூசியானா 2,80,000 ஹாக்ஷெட்டுகளை (hogsheads) உற்பத்தி செய்தது.

காலனி காலத்தில், தென்கரோலினா கடற்கரையிலும், ஜார்ஜியாவிலும் அரிசி தலைசிறந்த பயிராகும். 1820 முதல் 1850 வரையில் உள்ள ஆண்டுகளில் அரிசி உற்பத்தி மூன்று மடங்குக்குமேல் பெருகியது. 1850-ல் அது உச்சநிலை அடைந்தது.

பின்னர் அதன் உற்பத்தி குறையத் தொடங்கியது. அந்த ஆண்டுவரையில், தென் கரோலினு பாதிக்குமேல் அரிசியை உற்பத்தி செய்தது; மிகுதியை ஜார்ஜியா பயிரிட்டது. போருக்கு முந்திய தென்னுட்டில், அரிசி உற்பத்தியாளனே விஞ்ஞான முறையில் விவசாயம் செய்யும் விவசாயி ஆவான். தொடர்ந்து ஒரே நிலத்தில் வேளாண்மை செய்யவேண்டிய கட்டாயம் இருந்ததால், சதுப்பு நிலத்தைப் பக்குவப்படுத்தி வேளாண்மைக்கு ஏற்றதாக மாற்றும் வேலையிலும், புதிய வளமான உரத்தைப் பயன்படுத்துவதிலும் விவசாயி கவனம் செலுத்தினான். ஈரக்கசிவு உடைய மண்தான் அரிசி பயிரிடுவதற்கு ஏற்றது என்பதால், பருத்தி, புகையிலை ஆகியவைகள் விளையும் தோட்டங்களுக்கு மாறான பல்வேறு பண்டங்கள் விளையும் தோட்டங்கள் உருவாயின. கரோலினுவில் விளையும் அரிசிதான் உலகில் மிகவும் உயர்ந்ததாகும். அரிசிக்கு நிலையான சந்தையும் உண்டு. எனவே, அரிசி உற்பத்தியாளர்கள் தங்களுடைய முயற்சியில் ஊக்கத்துடன் ஈடுபட்டனர். தென்மேற்கு மாநிலங்களில் வளர்ந்துவரும் பருத்தித் தோட்டங்களிலும் அடிமைத் தொழிலாளிகள் நிறையத் தேவைப்பட்டனர். ஆகவே, அடிமைத்தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதில் போட்டி ஏற்பட்டது. இப்போட்டியைச் சமாளிக்க வேண்டிய அவசியம் அரிசி உற்பத்தியாளனுக்கு நேரிட்டது.

தென்னுட்டின் சில பகுதிகளில் சணல் உற்பத்தியும் முக்கியமானதே. சணல் உற்பத்தியின் தொடக்கமும், கென்டக்கி குடியேற்றமும் ஒரே வேளையில் நிகழ்ந்தன. ஆரம்ப ஆண்டுகளில் வர்ஜீனியாவில் புகையிலை சிறப்படைந்ததைப்போல, கென்டக்கியில் சணல் சிறப்படைந்தது. மூட்டை கட்டுவதற்கும், பருத்தி பேல்களைக் (cotton bales) கட்டுவதற்கும் சணல் உபயோகமாயிற்று. நீக்கிரோக்கள் சணலை ஆடையாகவும் உடுத்திக் கொண்டனர். சணலுக்குரிய சந்தை வடக்கிலும் கிழக்கிலும் உருவாகியது. கென்டக்கியிலிருந்து டென்னசி, அர்க்கான்சாஸ், மிசௌரி முதலிய இடங்களுக்குச் சணல் உற்பத்தி பரவியது. மிசௌரியில் அடிமை முறை ஊன்றுவதற்குச் சணல் உற்பத்தி காரணமாயிற்று. 'அமெரிக்க அமைப்பு முறை'யைப் படைத்த ஹென்றிகிளே. கென்டக்கி சணல் உற்பத்தியாளர்களின் பிரதிநிதியாக இருந்தார். 1850-ல் கென்டக்கி 17,787 டன்கள் சணலையும், மிசௌரி 16,028 டன்கள் சணலையும், டென்னசி 595 டன்கள் சணலையும் உற்பத்தி செய்தன.

மேலே விவரித்த வர்த்தகத் தானியங்களைப் பொறுத்தே தென்னுட்டுப் பொருளாதார வாழ்க்கை அமைந்தது எனினும், மற்றத் தானியங்களும் விளைந்தன. அவை முக்கியமாக உள்

நாட்டின் துய்ப்பிலேயே செலவழிந்தன. தோட்டத்துக் காய்கறி களுடன் அமையாது, 1859-ல் மற்றத் தானிய வகைகளும் உற் பத்தியாயின. 43,30,67,000 புஷல்கள் இந்தியத் தானியமும், 4,91,58,000 புஷல்கள் கோதுமையும், 3,21,63,000 புஷல்கள் ஓட்சும், 40,70,000 ரையும், சிறிய அளவில் பார்லியும் கோதுமை வகையும் உற்பத்தியாகின்றன. எல்லாவிதத் தானியங்களையும் விட மக்காச் சோளத்திற்கே தென்னுட்டு மண் ஏற்றது. மக்காச் சோளம் அடிமைகளின் முக்கிய உணவாகும். ஓகியோவிற்கு வடக்கே உள்ள ஐந்து மாநிலங்களில் உற்பத்தியாகும் மக்காச் சோளத்தில் பாதியளவே தென்னுட்டில் உற்பத்தியாயின. ஆனால், தென்னுட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் அளவுக்கு அது உற்பத்தியாகவில்லை. எண்ணிக்கையில் தோட்ட முதலாளிகளை விட மிகவும் அதிகமாக உள்ள சிறிய விவசாயிகளில் பெரும் பாலோர் இத்தகைய தானியங்களிலேயே கவனம் செலுத்தினர். தென்னுட்டில் கால்நடை வளர்ப்புத் தொழிலில், குறிப்பாகக் கென்டக்கி, விரைந்து செல்லும் குதிரைகளை வளர்ப்பதில் தலை சிறந்து விளங்கியது. சிறிய கொம்புகளை உடைய கால்நடைகள் வளர்ப்பிலும், ஹாம்ஷையர் பன்றி வளர்ப்பிலும் கென்டக்கி புகழ் பெற்றிருந்தது. இவ்வாண்டுகளில் செம்மறியாட்டு வளர்ப்பில் வர்ஜீனியா தலைசிறந்து முன்னணியில் நிற்பதற்கு வாஷிங்டன் ஈடுபாடும், விவசாய சமூகங்களின் முயற்சிகளுமே காரணங்களாய் அமைந்தன. 1860ஆம் ஆண்டின் சென்சஸ் கணக்குப்படி, தென்னுட்டுக் கால்நடைகளின் உத்தேச மதிப்பு 38,17,78,601 டாலர்களாகும்.

பழைய வடமேற்குப் பகுதியில் விவசாய முன்னேற்றம்

மேற்குப்புறமாக உள்ள அயோவா (Iowa), கான்சாஸ் புல் வெளிகளையும் உள்ளடக்கிய பகுதிதான் ஓகியோ நதிக்கும் பெரும் ஏரிகளுக்குமிடையில் உள்ள பகுதியாகும். இப்பகுதியிலும் வேளாண்மை நடைபெற்று வந்தது. அமெரிக்க விவசாய வரலாற்றிலேயே இது மிகவும் முக்கியமானதாகும். மேற்கு நியூயார்க்கு, வடக்கு ஓகியோ பகுதிகளிலுள்ள நிலங்களில் நிறைய நீர் இருந்தது; வளமான மண் இருந்தது; கற்பாறைகள் அந்த நிலங் களில் தட்டுப்படுவதில்லை; நீர்ப்பரப்புடைய பகுதியாக இருந்தமை யின், தட்பவெப்ப நிலை அருமையாக இருந்தது; எனவே, வேளாண்மைக்கு ஏற்றதாகவும் இருந்தது. கிட்டத்தட்ட 1,00,000 சதுர மைல்களுக்கு நீர் பரந்துகிடந்ததால், உலகத்தில் மிகவும் உயர்வான உள்நாட்டு நீர்ப்போக்குவரத்து அப் பகுதியில் சிறந்து விளங்கியது. மொகாக் பள்ளத்தாக்கின்மூலமாகக் கீழ்க்

கடற்கரைக்குச் செல்லக்கூடிய இயற்கையான வழியாகவும் அது பயன்பெற்றது. வடக்கு, மத்திய மாநிலங்களின் பண்டங்களை ஐரோப்பியச் சந்தைக்கும், தென்மாநிலச் சந்தைகளுக்கும் மிசிசிப்பி வழியாக எடுத்துச் செல்ல ஓகியோ, மிசௌரி ஆகியவற்றின் கிளைநதிகள் பெரிதும் உதவின. இத்தகைய இயற்கையான போக்குவரத்துப் பாதைகளுடன், வேறு பாதைகளும் துவக்க காலத்தில் இருந்தன. ஈரி கால்வாய், பென்சில்வேனியா கால்வாய், கம்பர்லாந்து சாலை ஆகியவைகளும் இருந்தன. 1840 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இப் பகுதியில் இருப்புப் பாதைகளும் போடப்பட்டன.

ஓகியோவின் எல்லையிலும், அதன் கிளைநதிகளின் எல்லையிலும் உள்ள காட்டுப் பகுதிகளினுள் நுழைந்த முதல் குடியேற்றக்காரன், அப்பகுதிகளில் உள்ள பிரச்சினைகளுக்கும், நியூ இங்கிலாந்து பண்ணையிலோ அல்லது கென்டக்கி பண்ணையிலோ உள்ள பிரச்சினைகளுக்கும் இடையில் நிறைய ஒற்றுமைகள் இருப்பதைக் கண்டான். காடுகளைக் களைந்து பழைய பயிர்வகைகளை அப்பகுதிகளில் புகுத்தி உற்பத்தி செய்தால் போதும். ஆனால், இந்தியானு, இல்லினாய்ஸ், அயோவா ஆகிய பகுதிகளுக்குச் சென்ற முதல் முயற்சியாளர்கள் இப்பகுதிகளில் முற்றிலும் புதிய பிரச்சினைகளைக் கண்டனர். இப்பகுதிகளில் புல்வெளிகள் நிறைந்திருந்தன; காடுகள் இல்லை; எனவே, கட்டடங்கள் எழுப்புவதற்குரிய செலவினங்கள் பெருகின; அடுப்புக்கு வேண்டிய விறகும் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. அடிக்கடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. மரக்கலப்பைகளைக் கொண்டு கரடுமுரடான புல்வெளி நிலங்களை உழ முடியவில்லை. புல்வெளிப் பிரதேச நிலங்கள் செழிப்பானவை அல்ல என்று ஆரம்பத்தில் ஒரு கருத்து நிலவியது. போக்குவரத்து வசதிகள் இல்லாமையால், சில வேளைகளில் புல்வெளிப் பிரதேசங்களில் குடியேற்றம் நிகழவில்லை. எனவே, கூடுதலாக விளைந்த பண்டங்களை இலாபத்திற்கு விற்பதற்குரிய சந்தையும் அமையவில்லை. இரும்புக் கலப்பைகளும், மற்றப் பண்ணைக்குரிய தளவாடங்களும் கிடைத்துச் செயற்கை முறையில் போக்குவரத்துச் சாதனங்களும்வளர்ந்த பின்னர், புல்வெளிப் பிரதேசத்தின் வளத்தையும் செழிப்பையும் மக்கள் உணர்ந்துகொண்டனர். எனவே, உடனடியாக அவர்கள் பயிர்த்தொழிலை மேற்கொண்டனர். விதை விதைப்பதற்குரிய முன்வேலைகள் இந் நிலத்தில் மிகவும் குறைவாக இருந்தமையால், இப்பகுதியில் மக்கள் விரைந்து குடியேறினர். காடுகளைக் களைந்து, களைகளை நீக்கி, நிலத்தைச் செப்பமிடுவது போன்ற வேலைகள் இங்குக் கிடையா. இங்குள்ள மண்ணை ஒரு கலப்பையினாலோ கோடரியினாலோ வெட்டிக் கொத்தினால்

போதும்; வேளாண்மையைத் துவக்கிவிடலாம். முதல் பயிர் விளையும்பொழுது, புல்லுடன் ஒட்டிக்கொண்டு இறுகியுள்ள மண் நீங்கி, நிலம் பண்படும். இரண்டாவது ஆண்டில் கோதுமை நன்கு விளையும்.

சந்தைகளையும் போக்குவரத்து வசதிகளையும் பொறுத்தே, ஏரிப்பகுதியின் வளர்ச்சியும் புல்வெளிப் பகுதியின் வளர்ச்சியும் அமைந்துள்ளன. தொழிற் புரட்சியின் காரணமாக மேற்கு ஐரோப்பா, நகரத்தைச் சார்ந்த இயந்திரத் தொழில் நாகரிகத்தின் இருப்பிடமாக மாறியது. உணவுப் பண்டங்களின் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக ஐரோப்பா அமெரிக்காவை நாடியது. இது தொழிற் புரட்சியின் விளைவாகும். 1846-ல் தானியச் சட்டங்கள் இரத்தானவுடன், இந்த உண்மை தெளிவாயிற்று. அமெரிக்க உணவுப் பொருள்களுக்கு கிரேட் பிரிட்டன் சந்தையாயிற்று. தென்னூட்டிலும் ஒரு முக்கியமான சந்தை உருவாகியது. உணவுப் பண்டங்களை விலைக்கு வாங்கிக்கொண்டு மற்றத் தானிய வகைகளைப் பயிரிடுவதற்கு அடிமைகளைப் பயன் படுத்திக்கொண்டால் இலாபகரமாக அமையும் என்று தென்னூட்டுத் தோட்ட முதலாளிகள் கருதினர். இதனால் வடக்கு, மத்திய மாநிலங்களில் உணவுப் பண்டங்கள் உற்பத்தியாயின. அம் மாநிலங்களிலிருந்து உணவுப் பண்டங்கள் கால்வாய் வழியாகவும், இருப்புப்பாதைகள் வழியாகவும் கிழக்கு நோக்கிச் சென்றன; நீராவிப் படகின்மூலமாகவும், இருப்புப்பாதை வழியாகவும் தெற்கு நோக்கிச் சென்றன. பழத்தோட்டத்திலும் பால் பண்ணையிலும் மேற்கு நியூயார்க்கும் வடக்கு ஓகியோவும் சிறந்து விளங்கின. மத்திய மேற்கின் எஞ்சிய பகுதிகளில் இறைச்சியும், தானிய வகைகளும் கிடைத்தன.

1825-ஆம் ஆண்டிற்கு முன்னர், மாட்டிறைச்சியும், பன்றி இறைச்சியும், ஆட்டிறைச்சியும் இப் பகுதியிலிருந்து ஓரளவுக்கு ஏற்றுமதியாயின. கால்வாய்கள், இருப்புப்பாதைகள் ஆகிய வற்றின் சகாப்தம் தோன்றுவதற்கு முன்னரும், பொட்டணம் கட்டும் தொழில் வளர்ச்சியுறுவதற்கு முன்னரும் பென்சில் வேனியா, மேரிலாந்து, வர்ஜீனியா, ஓகியோ ஆகிய மாநிலங்களின் மேற்குப்புற கவுன்டிகளைச் சார்ந்த விவசாயிகள் ஒவ்வோர் ஆண்டும் கால்நடைகளின் மந்தைகளையும், பன்றிகளின் மந்தை களையும் நெடுஞ்சாலைகள் வழியே ஃபிலடெல்பியாவிற்கும் பால்டி மோருக்கும் ஓட்டிச்செல்வர். 'முதுவேனிற் காலத்திலும் இலையுதிர் காலத்திலும், இச்சாலைகளின் வழியே, இடையர்கள் ஆடுமாடு களையும் பன்றிகளையும் மந்தைமந்தையாக ஓட்டிச் செல்லும்

காட்சியை, ஒரு மைல் தொலைவிலோ அல்லது அதற்கு மேற்பட்ட தொலைவிலோ உள்ள ஒருவர் கண்டுகொள்ள முடியும்; எவ்வாறெனில், மந்தைகள் ஒன்றுசேர்ந்து செல்லும்பொழுது கிளம்பும் புழுதிப் படலங்கள் அடுக்கடுக்காக வானத்தில் பரவிச் செல்லும் காட்சியைத் தொலைவில் உள்ள ஒருவன் கண்டுகொள்ள முடியும்'.[12] எல்லைப்புறங்களில் கால்நடைகளுக்கு ஆகக்கூடிய செலவு மிகவும் குறைவு என்பதால், எல்லைப்புறங்களில் கால்நடை வளர்ப்பு முக்கியமான தொழிலாயிற்று. மத்திய மேற்குப் பிரதேசத்தில் பன்றி வளர்ப்புக்கு ஏற்ற சூழ்நிலைகள் நிலவின. எல்லைப்புறக் காடுகளில் கிடைக்கும் புல்பூண்டுகளும் பழவகைகளும்[13] பன்றிகளுக்கு முதலில் உணவாயின. பின்னர், அப்பகுதிகளிலுள்ள மண்ணின் இயல்பு மக்காச் சோளத்திற்கு ஏற்றதாக இருந்ததால், அதைப் பயிரிட்டனர். அப்பகுதிகளில் மக்காச் சோளம் முக்கியமான தானியமாயிற்று.

அலெகனிசுக்கு மேற்கே, இறைச்சிப் பொட்டணம் கட்டும் தொழில் 1818-ல் முக்கியத்துவம் அடைந்தது. சந்தைகளும், போக்குவரத்துச் சாதனங்களும், பாங்கு வசதிகளும் வளர்ந்தமையால், சின்சின்னுட்டி (Cincinnati) பகுதியில் இறைச்சிப் பொட்டணம் கட்டும் தொழில் நன்கு வளர்ச்சியுற்றது. இறைச்சியை உண்ணும் மக்கள் கூட்டத்தின் தொகை பெருகியமையாலும், அத்தொழில் சின்சின்னுட்டியில் வளர்ந்தது. தொடக்கத்தில் இறைச்சியை உப்பிட்டுப் பக்குவப்படுத்திப் பாதுகாத்தனர். இந்த முறையைக் கையாண்டு இறைச்சியைப் பாதுகாப்பதில் அதிக முதலீடு ஈடுபடுத்தவேண்டிய அவசியம் இல்லை. எனவே, அநேக பெரிய நகரங்களில் பொட்டணம் கட்டும் தொழில் நிலையங்கள் நிறைய உண்டாயின. இருந்தபோதிலும், 1860 வரையில் இத் தொழிலில் சின்சின்னுட்டியே முன்னணியில் நின்றது. எனினும், இத் தொழிலின் மையம் மேற்கு நோக்கியே நகர்ந்தவண்ணம் இருந்தது. பன்றி வளர்ச்சிக்குரிய மாநிலங்களின் அருகாமையில் அமைந்து, உயர்தரப் போக்குவரத்து வசதிகளைப் பெற்று, அளவில் பெருநகரமாக வளர்ந்த சிக்காகோ, இத் தொழிலில் முன்னணிக்கு வந்தது. சின்சின்னுட்டி, சிக்காகோ ஆகிய பகுதிகளின் வளனும் செழிப்பும் இறைச்சித் தொழிலையும், தோல் சாமான்கள், செயற்கை உரங்கள், பிசின் வகைகள், மெழுகு, சோப்பு, கொழுப்பு, உப்பு, துப்பாக்கிக் குழலில் தடவும் கொழுப்பு

12 I. F. King, 'The Coming and Going of Ohio Droving' Ohio State Archaeological and Historical Society Quarterly, XVII, 249 (1908).

13 பீச் (Beech), ஓக் (Oak) ஆகிய மரங்களின் பழங்களும், மற்ற மரங்களின் பழங்களும் பன்றிகளுக்கு உணவாயின.

ஆகிய துணைப்பொருள்களின் உற்பத்தியையும் பொறுத்திருந்தன. இப்பகுதிகளில் இந்தத் தொழில் இன்னமும் முக்கியமானதாகும்.

கால்நடைகளைப் பேண உணவுப் பண்டங்கள் வேண்டியிருந்தன. விஸ்கி உற்பத்திக்கும் சில அடிப்படையான பொருள்கள் வேண்டியிருந்தன. எனவே, ஆரம்ப ஆண்டுகளில் இப்பகுதிகளில் தானிய வகைகளின் உற்பத்தி தூண்டப்பெற்றது. மக்காச் சோளத்தை ஓர் இடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குக் கடத்திச் செல்வது எளிதன்று. ஆனால், அதனைக் கால்நடைகளுக்குத் தீனியாகப் பயன்படுத்தலாம். பின்னர் அக் கால்நடைகளையும் பல மைல்களுக்கு அப்பால் உள்ள சந்தைகளுக்கு ஓட்டிச் செல்லலாம். மக்காச் சோளத்தையும் ரையையும் பயன்படுத்தி உயர்தர மான பான வகைகளைத் தயார் செய்யலாம். இவ்வாருக விஸ்கி முதலில் உற்பத்தியான பண்டங்களில் மிகவும் முக்கியமானது. எனவேதான் பென்சில்வேனியாவின் எல்லைப்புற விவசாயி ஹாமில்டனின் ஆயத்தீர்வையை எதிர்த்தான்.

மேற்குறிப்பிட்ட காலம் முழுதும் மக்காச்சோளம் முக்கியமான விவசாயப் பண்டமாக இருந்தது. இப்பகுதியிலிருந்து விஸ்கி, இறைச்சி இவற்றைத் தவிர வேறு ஒன்றும் ஏற்றுமதியாகவில்லை.

ஈரி, பென்சில்வேனியா கால்வாய்கள் தோன்றிய பின்னரும், இருப்புப்பாதைகள் ஏற்பட்ட பின்னரும், கிழக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் தானியங்களைக் கப்பல்களில் அனுப்ப முடிந்தது. மற்றத் தானிய வகைகளின் உற்பத்தியும் பெருகியது. உள்நாட்டு மக்களின் தேவையைப் பூர்த்திசெய்யவும், தென்னுட்டு மக்களின் துய்ப்பைப் பூர்த்தி செய்யவும் கோதுமை வேண்டியிருந்தது. அதனை சின்சின்னாட்டி, லூயிவில், செயின்டு லூயி ஆகிய இடங்களிலுள்ள ஆலயதிபர்களுக்கு அனுப்பினர்; அல்லது பஃபலோ (Buffalo), பிட்ஸ்பர்க்கு வழியாகக் கிழக்கே அனுப்பினர். அதன் ஒரு பகுதியை நியூயார்க்கு அல்லது நியூ ஆர்லியன்ஸ் வழியாக ஐரோப்பாவிற்கு அனுப்பினர். 1850-ல் வடக்குப்புற மத்திய மாநிலங்களைவிட மத்திய அட்லான்டிக் மாநிலங்கள் நிறைய, மிகுதியான கோதுமையை உற்பத்தி செய்தன. ஆனால், அடுத்த பத்தாண்டுகளில் மத்திய அட்லான்டிக் மாநிலங்களில் கோதுமை உற்பத்தி 15·5 சதவீதமே அதிகரித்தது எனின், மேற்குப் பிரதேசத்தில் 125 சதவீதம் அதிகரித்தது. மேற்கத்திய கோதுமையின் சிறப்பு வளரவே ஆலைகள் கடற்கரைப் பகுதிகளிலிருந்து ஈரி கால்வாயிலுள்ள ரோசெஸ்டர் (Rochester) பகுதிக்குச் சென்றன; பின்னர் அங்

கிருந்து சிக்காகோ, செயின்டு லூயி பகுதிகளிலும், இறுதியில் வட்மேற்குப் பகுதிகளிலும் அவ்வாலைகள் நிறுவப்பெற்றன.

மிசிசிப்பிக்கு அப்பால்

மிசிசிப்பிக்கு அப்பால் மிசௌரி, மின்னசோட்டா, அயோவா, கான்சாஸ், நிப்ராஸ்கா (Nebraska) ஆகிய பகுதிகளில் மக்கள் விவசாயத்தை மேற்கொண்டனர். ஓகியோவிற்கு வடக்கிலுள்ள மாநிலங்களில் எந்தப் பண்டங்கள் உற்பத்தியாயினவோ, அதே பண்டங்கள்தாம் மிசிசிப்பிக்கு அப்பாலும் உற்பத்தியாயின. அம் மாநிலங்களில் எந்த நாகரிகம் உருவாகியிருந்ததோ, அதே நாகரிகம்தான் மிசிசிப்பிக்கு அப்பாலும் உருவாகியிருந்தது. அம் மாநிலங்களின் எல்லைப்புற அனுபவத்தின் தொடர்ச்சியைத்தான் மிசிசிப்பிக்கு அப்பாலும் காணலாம். கீழ்ப்பகுதியில் குடியேற்றம் முற்றுப்பெறுவதற்கு முன்னரே, தெற்கே செல்லச்செல்ல லூசியானாவிலும், அர்க்கான்சாஸிலும் மிசிசிப்பிக்கு அப்பால் குடியேற்றம் நிகழ்ந்தது. இப் பகுதிகளில் புகையிலை, சர்க்கரை, தானியங்கள் முதலியன விளைந்தன. ஸ்பானிஷ் பிரதேசத்தில் அமெரிக்க முன்னேற்றம் 1821-ல் தொடங்கியது. 1821 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வருபவர்களைக் கொண்டு ஒரு காலனியை அமைக்க ஸ்பானிஷ் அரசாங்கத்திடமிருந்து கனெக்டிகட்டைச் சார்ந்த மோசஸ் ஆஸ்டின் என்பவர் ஒப்புதல் பெற்றார். அடுத்த ஆண்டு பிரேசோஸ் பள்ளத்தாக்கிலும் (BrazosValley), டிரினிட்டி பள்ளத்தாக்கிலும் (Trinity Valley) அவருடைய மகன் ஸ்டீபன் (Stephen) முதல் ஆங்கிலோ—அமெரிக்கக் குடியேற்றத்தை நிலைபெறச் செய்தார். அடுத்த பதினைந்து ஆண்டுகளில் ஆஸ்டின் குழுவைச் சுமார் 30,000 அமெரிக்கர்கள் பின்பற்றினர். சான் அன்டோனியோ (San Antonio), நேகாக் டோச்சஸ் (Nacogdoches) ஆகிய பகுதிகளுக்கும் கடற்கரைக்கும் இடையிலுள்ள நதிகளின் அருகிலேயே உள்ள நிலத்தினை அவர்கள் பெற்றனர். அவர்களில் பெரும் பாலோர் தென்னூட்டினர் ஆவர். அவர்கள் புதிய காலனியை நோக்கிச் செல்லும்பொழுது, தங்களுடைய அடிமைகளையும் அழைத்துச் சென்று பருத்தி உற்பத்தியைத் துவக்கினர்கள்; அல்லது கால்நடைப் பண்ணைகளைத் துவக்கினர்கள்.

ஐக்கிய அமெரிக்காவைவிட மிசிசிப்பிக்கு அப்பால் உள்ள பகுதிகளில் குறைந்த விலையில் உயர்தர நிலங்களை வாங்கலாம் என்பதால், மக்கள் அப்பகுதிகளுக்குக் குடியேறிச் சென்றனர். ஐக்கிய அமெரிக்காவின் தென்பகுதியிலுள்ள உயர்ந்த நிலங்

கூலியெல்லாம் முன்னரே பலர் வாங்கிவிட்டனர். எஞ்சியுள்ள நிலங்களின் மதிப்பு ஏக்கர் ஒன்றுக்கு 1·25 டாலராக இருந்தது. ஸ்பெயினிடமிருந்து மெக்சிகோ சுதந்திரம்பெற்ற சகாப்தத்திலே தான் இத்தகைய குடியேற்றம் நிகழ்ந்தது. இவ்வாறு குடியேறி வந்தவர்களோ ஸ்பானிஷ்காரர்களும் மெக்சிகனச் சார்ந்தவர்களும் ஆரம்பத்தில் நல்ல முறையில் வரவேற்றனர். ஆனால், விரைவில் அவர்களுக்கிடையில் மனத்தாங்கலும் விளைந்தது. குடியேற்றத்தைத் தடுக்கும் முயற்சியிலும், அடிமை முறையை ஒழிக்கும் வேலையிலும், தாய்க ஆட்சியை முறியடிக்கும் வேலையிலும் மெக்சிகன் அரசாங்கம் ஈடுபட்டதால் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். நிலப்பசி மிக்க அமெரிக்கர்கள் மெக்சிகோவிற்கு எதிராக 1836-ல் கிளர்ந்தெழுந்து சுதந்திரம் பெற்றனர். 1845-ல் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்தனர்.[14] 1860-ல் டெக்சாசில் 42,891 பண்ணைகளில் 6,04,000 பேர்கள் வசித்தனர். கால்நடைப் பண்ணைகளோ நடத்தியதோடன்றி, 4,05,100 பேல்கள் உள்ள பருத்தியையும் உற்பத்தி செய்தனர்.

அமெரிக்க விவசாயிகள் 1860-ல் பசிபிக் மகாசமுத்திரக் கரையில் பெரும் விவசாயப் பேரரசை உருவாக்க முயன்றனர் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். கலிபோர்னியாவின் மக்கள் தொகை 1850-ல் 92,000 ஆக இருந்தது; 1860-ல் 3,80,000 ஆக உயர்ந்தது. எனவே, விவசாயப் பண்டங்களின் தேவை பெருகியது. நாற்பத்தொன்பதின்மரில் பலர் கலிபோர்னியா குடியேற்றத்திற்கு முன்னர் விவசாயிகளாக இருந்தனர்; இப்பொழுது புதிய மாநிலத்தில் பெரும் விவசாய வாய்ப்புகளைக் கண்டனர். இதற்கு முன்னரே பசிபிக் பகுதியில் பெருமளவில் ஆடுமாடுகளைக் கொண்ட கால்நடைப் பண்ணைகள் ஏற்பட்டிருந்தன. பார்லியும், கோதுமையும், மற்றத் தானிய வகைகளும் உற்பத்தியாயின.

தொழிற்புரட்சியாலும் மேற்கத்திய விவசாயத்தாலும் கீழக்குப் பிரதேசத்தில் ஏற்பட்ட விளைவு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் கிராமீய நியூ இங்கிலாந்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. எனவே, விவசாயப் புரட்சியும் ஏற்பட்டது. காலனி நாட்களில் இருந்ததைப்போலவே 1800ஆம் ஆண்டிலும் விவசாய வாழ்க்கையில் தன்னிறைவு இருந்தது. தான் உற்பத்தி செய்யும் பண்டத்திற்குச் சில சந்தை

[14] அதிகாரம் 10, பகுதி 7, பாரா 2 காண்க.

களே இருப்பதை விவசாயி உணர்ந்தான். தனக்கு வேண்டிய வற்றை வெளியிலிருந்து வாங்கிக்கொள்ளவும் அவனுல் முடிய வில்லே. தனக்குத் தேவையான உணவுப் பண்டங்களையும், துணிமணிகளையும், கருவிகளையும் பண்ணேயிலிருந்தே அவன் உற்பத்தி செய்துகொண்டான். 1810ஆம் ஆண்டிற்குப் பின்னர்த் தொழிற் புரட்சியின் விளேவாக நியூ இங்கிலாந்து பொறி வழித் தொழிலின் மையமாயிற்று.

1860-ல் தென் நியூ இங்கிலாந்தின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் நகரத்தைச் சார்ந்தவர்க ளாவர். இவர்கள் விவசாயப் பண்டங்களே வாங்கினர். பொது வாகவிருந்த வேளாண்மை சிறப்புத் தேர்ச்சி (specialization) பெற்றது. நகரங்களுக்கருகில் செறிந்த வேளாண்மைமூலம் கிழங்கு வகைகள் பயிரிடப்பெற்றன. மலேப்பிரதேசங்களில் கம்பளி உற்பத்தியாயிற்று. கனெக்டிகட் பள்ளத்தாக்கில் மாட் டிறைச்சிக்கெனக் கால்நடைகள் பராமரிக்கப்பெற்றன. புதுச் சந்தைகள் அமைந்ததன் விளேவாகப் பயிர்த்தொழிலில் புதுத் தெம்பும் ஆர்வமும் ஏற்பட்டன. 1830ஆம் ஆண்டிற்குப் பின்னர் இரும்புக் கலப்பை போன்ற விவசாயக் கருவிகளேப் பயன் படுத்தியமையாலும், விவசாய சங்கங்கள் அமைந்தமையாலும் பயிர்த் தொழில் சிறந்து விளங்கியது.

புதிய சூழ்நிலேகளுக்கு ஏற்றவாறு நியூ இங்கிலாந்து விவசாயி தன்னே மாற்றிக்கொண்டான். இருப்புப்பாதைகள் போடப்பட்ட வுடன் உருவாகிய புதிய சூழ்நிலேக்கு ஏற்றவாறு விவசாயி மீண்டும் ஒருமுறை தன்னே மாற்றிக்கொண்டான். குறைந்த செலவில் போக்குவரத்து வசதிகள் கிடைத்தமையால், மேற்கத் திய கம்பளி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி இவற்றுடன் நியூ இங்கிலாந்து விவசாயி போட்டியிட முடியவில்லே. எனவே, மக்காச்சோளம் போன்ற தானியமே நியூ இங்கிலாந்தின் விவசாய முதுகெலும்புபோல் அமைந்தபோதிலும், மாட்டிறைச்சி உற்பத்தி யும், பன்றி இறைச்சி உற்பத்தியும் குறைந்தன. பால்பண்ணே யிலும், காய்கறித் தோட்டத்திலும் விவசாயிகள் கவனம் செலுத்தி னர். சுருட்டின் தேவை பெருகிச் சந்தைகள் பெருகியமையால், 1840ஆம் ஆண்டிற்குப்பின் 30 ஆண்டுகளில் கனெக்டிகட்டின் வளமிகுந்த அடிநிலங்களில் புகையிலே உற்பத்தி பெருகியது. இத்தகைய விவசாய எழுச்சிகளால் கிராமீய வாழ்க்கையில் தெளிவான மாறுதல்கள் ஏற்பட்டன. தன்னிறைவு இல்லத் தொழில்முறை உடைந்து தொழிற்சாலே முறை உருவாகியது. விவசாயப் பண்டங்களுக்கு நல்ல சந்தைகள் கிடைத்தமை யால் கிராமீய மாவட்டங்களுக்கு நிறையப் பணம் கிடைத்தது;

விவசாயிகள் புதிய வசதிகளைப் பெற்றனர்; அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. பெண்டிர் குடிசைத் தொழிலை விட்டுவிட்டுத் தொழிற்சாலைகளில் வேலைக்கமர்ந்தனர். இந்தக் காலத்தின் நிலையற்ற சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொள்ள விரும்பாத பலர் நகரங்களில் கிடைக்கும் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணினர். அல்லது மேல்திசையிலுள்ள வளமான நிலங்களில் பயிரிட விரும்பினர். நிலத்தின் மதிப்பில் விளைந்த மாறுதல்களினாலும் குழப்பம் ஏற்பட்டது. எனினும் விவசாயி இதனால் பாதிக்கப்படவில்லை.

நியூ இங்கிலாந்தில் நிகழ்ந்தனவெல்லாம் ஓரளவுக்கு மத்திய மாநிலங்களிலும் நிகழ்ந்தன. இம் மாநிலங்களின் வயல்களில் உற்பத்தியாகும் பண்டங்களெல்லாம் மேற்குப் பிரதேசத்துப் பண்டங்களுடன் நெடுநாட்களாகப் போட்டியிட்டன. இம் மாநிலங்கள் முக்கியமான விவசாயப் பகுதிகளாகத் திகழ்ந்தன. இருந்தபோதிலும், ஹட்சன் பள்ளத்தாக்கிலும் டிலேவர் பள்ளத்தாக்கிலும், துறைமுகப் பட்டினங்களிலும் வளர்ந்துவரும் தொழிலினால் உணவுப் பண்டங்களுக்கு வேண்டிய உள்நாட்டுச் சந்தை உருவாகியது. தேவைக்கேற்றவாறு விவசாயத்தில் சில மாற்றங்களும் நிகழ்ந்தன. மேற்குப் பிரதேசத்தில் விளையும் பருத்தி, வேறு பல பண்டங்கள் ஆகியவற்றுடன் உண்டாகும் போட்டியினால் தெற்குக் கடற்கரைப் பகுதிக்கு நன்மை ஏதும் ஏற்படவில்லை. எந்தவிதத் தொழில் முன்னேற்றத்தினாலும் பெரும் நகரங்கள் ஏற்படவில்லை. நியூ ஆர்லியன்சிலும் மற்ற வளைகுடா நகரங்களிலும் பருத்திக்குச் சந்தைகள் ஏற்பட்டன. நியூ இங்கிலாந்தைப் போலவே கடற்கரையுள்ள தென்பகுதியில் காலியான வயல்களும் நிலங்களும் சிதறிக்கிடந்தன. ஆனால், நியூ இங்கிலாந்தைப்போல் புதிய துறைகளில் தன் சக்திகளைப் பயன்படுத்தக் கடற்கரைத் தென் பகுதியால் முடியவில்லை. தானியங்களைப் பல்வகைப்படுத்தும் முறையையும் (diversification of crops), விஞ்ஞான விவசாயத்தின்மூலம் நிலத்தைப் பக்குவப்படுத்திப் பாதுகாக்கும் முறையும் தென்னாட்டுத் தலைவர்களாம் கரோலீனைச் சார்ந்த ஜான் டெய்லரும் (John Taylor of Carolina), எட்மண்டு ரஃபினும் (Edmund Ruffin) எவ்வளவோ வற்புறுத்தி எடுத்துச் சொல்லியும் அவர்களுடைய விளக்கங்களுக்கு மக்கள் கேளாக் காதினர் ஆயினர். தன்னுடைய முதல் நிலத்தில் முடங்கிவிட்டமையாலும், நிலம் வளங்குன்றியமையாலும், தென்மேற்குப் பிரதேசத்தை நோக்கித் தொழிலாளர்கள் சென்றுவிட்டமையாலும் கீழ்த்திசைத் தோட்ட

முதலாளியால் ஒன்றும் செய்ய இயலவில்லை. இச் சூழ்நிலைதான் அதிருப்தியாக மாறி பிரிவினைக்கு வழிகாட்டியாயிற்று.

விவசாயத்தில் தொழில்நுட்பமான முன்னேற்றங்கள்

1830 முதல் உள்நாட்டு யுத்தம் நிகழ்ந்த காலம் வரையில் அமெரிக்க விவசாயத்தில் புரட்சிகரமான மாறுதல்கள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. மக்கள் எண்ணிக்கை பெருகியதால் விவசாயத்திற்கு வேண்டிய தொழிலாளர்கள் நிறையக் கிடைத்தனர், சந்தைகளும் பெருகின. பெரும் குடும்பங்களுக்கேற்ற நாகரிக வாழ்வின் இயற்கையான வளர்ச்சியினாலும், குறிப்பிட்ட ஆண்டுகளில் 45,00,000 பேர்கள் இடம்பெயர்ந்து வந்தமையாலும், நகர மக்கள் தொகை பெருகித் தொழிற்சாலை அமைப்பு முறை பெருகியமையாலும், மொத்த மக்கள் தொகை விரைவில் பெருகி வளர்ந்தது. 1850 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இருப்புப் பாதைகள் கடிதில் வளர்ந்ததால், உலகத்தில் விளையும் பண்டங்களெல்லாம் விவசாயியின் வீட்டை நோக்கி வந்தன. விவசாயிக்கு வேண்டிய சந்தைகளும் எளிதாக அமைந்தன. கலிபோர்னியாவில் தங்கச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டமையாலும், 1846-ல் ஆங்கிலேய தானியச் சட்டங்கள் ரத்தாகி உணவுப் பண்டங்களின் தேவை பெருகியமையாலும் விலைவாசிகள் உயர்ந்தன. விஞ்ஞான விவசாயம் வேகமாக முன்னேறியது. அமெரிக்க விவசாயி தொழிலுழைப்புச் சேமிப்புக் கருவியைக் (labour-saving machinery) கண்டுபிடித்து உபயோகிக்கத் தொடங்கினான். புரட்சிக்குப் பின்னர், முதல் கால் நூற்றாண்டில் இத்தகைய வளர்ச்சியில் தாமதம் ஏற்பட்ட போதிலும், 1810 முதல் 1840 வரையில் வளர்ச்சி விரைவு பெற்றது. இதற்குப் பின்னர் வளர்ச்சி மின்னல் ஒளிபோல் இன்னும் விரைந்தது.

தொழிலாளர்கள் குறைந்து நிலம் நிறையக் கிடைக்கும் ஒரு நாட்டில் நிலச்சேமிப்பு வழிகாட்டத் தொழிலுழைப்புச் சேமிப்பு முறைகளே சிறந்து விளங்கும். ஜெஃபர்சன் கூறியதுபோல, 'தொழிலாளர்கள் நிறையக் கிடைப்பதால் ஐரோப்பாவில் நிலமனைத்தையும் சிக்கனமாக உபயோகிக்க வேண்டும். அமெரிக்காவில் நிலம் நிறையக் கிடைப்பதால் தொழிலாளர்கள் அனைவரையும் நன்கு பயன்படுத்தவேண்டும்.' ஓர் ஏக்கர் நிலத்தின் உற்பத்தியைப் பெருக்குவதைவிட ஆளின் உற்பத்தியைப் பெருக்குவதையே நோக்கமாகக்கொண்டு அமெரிக்க விவசாயக் கருவிகள் செய்யப் பெற்றன. நெருக்கமான மக்கள்தொகை உள்ள நாடுகளில் ஒரு

ஏக்கர் நிலத்தில் உற்பத்தியாகும் தானியத்தைவிடக் குறைவாகவே அமெரிக்காவில் ஓர் ஏக்கர் நிலத்தில் உற்பத்தியாகிறது. 1800ஆம் ஆண்டிற்குப் பின்னர்த் தொடர்ந்து பலவாண்டுகளில் கரடுமுரடான மரக் கலப்பைகளையும், மண்வெட்டிகளையும், மண் கொத்திகளையும், முள்ளுள்ள கருவிகளையும் மண் அள்ளும் கருவிகளையும் மட்டுமே விவசாயிகள் உபயோகித்தனர். இவை யெல்லாம் ஒழுங்குறச் செய்யப்பெற்ற கருவிகள் அல்ல; குடிசையிலேயே செய்யப்பெற்றவைகளாகும். 1825 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதன்முதலில் உலோகக் கலப்பையை விவசாயிகள் பெரிதும் உபயோகித்தனர். காலனி கலப்பைகள் எல்லாம் இரும்புத் தகடுகளால் மூடப்பெற்றவைகளாக இருக்கும். 1790-ல் நியூ ஜெர்சியைச் சேர்ந்த சார்லஸ் நியூபோல்டு (Charles Newbold) வார்ப்பிரும்புக் கலப்பையை உருவாக்கினர். 1797-ல் அக் கலப்பைக்குரிய உரிமைப் பத்திரத்தையும் நியூபோல்டு பெற்றார். ஆனால், அக் கலப்பை அவ்வளவாகப் பயன்படவில்லை. விவசாயிகளும் அதனை உபயோகிக்கவில்லை.

உயர்தரக் கலப்பையை உருவாக்கவேண்டும் என்று யாவரும் விழைந்தனர். ஜெஃபர்சன், வெப்ஸ்டர் (Webster) போன்றவர்கள் அக் கலப்பையைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தினர். இறுதியில் நியூபோல்டின் கலப்பையை ஓரளவுக்குத் திருத்திச் செப்பனிட்டு உபயோகித்தனர். 1819-ல் நியூயார்க்கைச் சேர்ந்த ஜெத்ரோ உட் (Jethro Wood) என்பவர் தாம் செய்த ஒரு கலப்பைக்கு உரிமைப் பத்திரம் பெற்றார். அக் கலப்பையின் பகுதிகள் ஒன்றோடொன்றைச் சேர்த்து இணைக்கப்பெற்றிருந்தமையால், ஏதேனும் ஒரு பகுதி உடைந்துபோனால் அதைப் போன்ற வேறொரு பகுதியை மட்டும் மீண்டும் செய்து பொருத்தி விடலாம். ஜெத்ரோ உட் பெற்ற உரிமையைப் பொறிவழித் தொழிலதிபர்களும் கண்டுபிடிப்பாளர்களும் மீறிய போதிலும், விவசாயிக்கு அவருடைய கலப்பை மிகவும் பயனுடையதாக அமைந்தது. புல்வெளிப் பிரதேசத்தின் புல்லை அகற்ற உதவும் கருவியும் உருவாக்கப்பெற்றது, இறுகிய பூமியின் மேல்தளம் மிருதுவாக அமையவேண்டியது மிகவும் அவசியமாகும். அதற்குரிய எஃகு கலப்பையினை ஜான்டீர் (John Deere) அவர்களும், ஜேம்ஸ் ஆலிவர் (James Oliver) அவர்களும் கண்டுபிடித்தனர். அக் கலப்பைகள் உறுதியாக அமைந்தன. 1830ஆம் ஆண்டுக்குப் பின்னர் விவசாயிகள் பெருவாரியான அளவில் இரும்புக் கலப்பைகளை உபயோகித்தனர். குறிப்பாக உற்பத்திப் பெருக்கத்தினால் விலைவாசிகள் குறைந்தமையால், இரும்புக் கலப்பைகளின் பயன் பெருகியது. தரம் உயர்ந்த கலப்பைகளால் மனித

உழைப்பும் மிருகங்களின் உழைப்பும் நல்லமுறையில் சிக்கன மாகப் பயன்படுத்தப்பட்டன. மேலும், அக் கலப்பைகளைக் கொண்டு ஆழ உழவும் முடிந்தது. நிலத்தின் உற்பத்தியும் பெருகியது.

தரம் உயர்ந்த கலப்பைகளைக் கண்டுபிடித்த அதே நேரத்தில் அக் கலப்பைகளின் துணைகொண்டு உற்பத்தி பெருக்கவே புல் அறுக்கும் இயந்திரமும் அறுவடை இயந்திரமும் கண்டுபிடிக்கப் பட்டன. பொறிவழித் தொழிலாக்கத்தைப் போலவே விவசாய உற்பத்தியிலும் மாறுதல்கள் அடுத்தடுத்து நிகழ்ந்தன. 1800-ல் தானியத் தொட்டி உபயோகத்திற்கு வந்தது. கதிர்களை அறுத்துச் சேகரிப்பதற்குத் தானியத்தொட்டி மிகவும் பயனுடைய தாக இருந்தது. ஆனால், அறுவடை முறையில் துரித வளர்ச்சி இல்லை. எனவே, அறுவடைக் கருவியைக் கண்டுபிடிப்பதில் பல ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டனர். இறுதியில் அறுவடைக் குரிய இயந்திரமும் கண்டுபிடிக்கப்பெற்றது. 1831-ல் நியூஜெர் சியைச் சேர்ந்த வில்லியம் மானிங் (William Manning) கண்டு பிடித்த புல் அறுக்கும் பொறிக்கு உரிமைப் பத்திரம் கிடைத்தது. நடைமுறைக்கு ஒத்துவரக்கூடிய புல் அறுக்கும் பொறியினை உருவாக்கிய ஓபீடு குஸ்ஸே (Obed Hussey) என்பவருக்கும், சைரஸ் மெக்கார்மிக் (Cyrus McCormick) என்பவருக்கும் முறையே 1833, 1834 ஆம் ஆண்டுகளில் விற்பனை உரிமை கிடைத்தது. குஸ்ஸே தயாரித்த புல்வெட்டும் கருவி ஒரு நாளில் பதினைந்து ஏக்கர்களில் உள்ள புல்லைச் செதுக்கித் தூய்மையுறச் செய்யும். இதனால், அறுவடை இயந்திரம் உருவாவதற்குரிய வாய்ப்புக கிடைத்தது. ஒரு பத்தாண்டுக்கு குஸ்ஸே படைத்த புல் அறுக்கும் கருவிக்கு இணையாகநின்று போட்டியிடக்கூடிய வேறு கருவியை யாரும் கண்டுபிடிக்கவில்லை. அவருடைய வறுமையின் காரணமாகவும், அவர் செய்த சில தவறுகளின் காரணமாகவும் இத்தகைய கருவியைப் பெருவாரியான அளவில் செய்ய இயலவில்லை. எனவே, இறுதியில் வேறு தொழிலதிபர்கள் இத்தகைய கருவியைப் பயனுடையதாக்கியும், திருத்தியும் தரத்தை உயர்த்தியும் புகழும் செல்வமும் அடைந்தனர். ஸ்காட்ச்-ஐரிஷ் பரம்பரையைச் சார்ந்த சைரஸ் மெக்கார்மிக் பென்சில்வெனியாவிலிருந்து ஷினன்டோ பள்ளத்தாக்கிற்கு (Shenandoah Valley) வந்து குடியேறினர். அவர் தம் தந்தை யிடமிருந்து இயந்திரங்கள் செய்யும் நுட்பத்திறமையைக் கற்றுக் கொண்டிருந்தார். மேலும், அவருக்கு விவசாயத்திற்குரிய கருவிகளைச் செய்வதில் ஈடுபாடு இருந்தது. இந்தத் துறையில் அவருக்குப் பெரும் வெற்றி கிட்டியது. முதல் உரிமைப்பத்திரம்

பெற்று, வர்ஜீனியா பண்ணையில் தன் சொந்தத் திறமையை உபயோகித்து அறுவடை இயந்திரத்தை நடைமுறைக்கு ஏற்றவாறு செய்தார். மேலும் மேலும் இயந்திரத்தைத் திருத்தித் தரத்தை உயர்த்திச் செப்பனிடும் வேலையில் அவர் ஈடுபட்டார். மேற்குப்பிரதேசத்திலுள்ள சமன்செய்யப்பெற்ற நிலத்திற்குத்தான் தம்முடைய பொறிகள் பயனுடையதாக அமையும் என்றுணர்ந்த அவர் ஈரி கால்வாயிலுள்ள பிராக்போர்ட் (Brockport), நியூயார்க் ஆகிய பகுதிகளுக்குச் சென்றார். மூன்று ஆண்டுகள் கழித்து அவர் சிக்காகோவிற்குச் சென்றார். அங்கு 1860-ல் ஆண்டொன்றுக்கு 4,000 அறுவடை இயந்திரங்களைச் செய்தார்.

இத்தகைய ஆரம்பகால புல் அறுக்கும் பொறியிலும் அறுவடைப் பொறியிலும் உள்ள வழிக்கும் அலகுகளைக்கொண்டு கதிர்களை அறுத்து, வழித்துக் கட்டுக்கட்டாகச் சேர்த்துவிட முடியும். பின்னர் இயந்திரத்தின் பின்னாலேயே செல்லும் தொழிலாளிகள் கதிர்க்கட்டுகளைக் கட்டுவார்கள். இந்த இயந்திரங்கள் கரடுமுரடாக இருந்தபோதிலும், கைவேலையினால் கிடைக்கும் பலனைவிட இவ்வியந்திரங்களால் கிடைக்கும் பலன் மிகுதியாகவே இருந்தது. என்வே, வளர்ச்சி பெருகியது. 1855-ல் கிட்டத்தட்ட 10,000 பொறிகள் உபயோகத்திற்கு வந்தன. பாரிஸில் நடைபெற்ற பன்னாட்டுக் கண்காட்சியில் ஓட்ஸ் விளைந்த ஓர் ஏக்கர் நிலத்தில் 21 நிமிஷங்களில் அமெரிக்க அறுவடை இயந்திரம் ஓட்ஸ் முழுவதையும் அறுத்துக் காட்டியது. இதே வேலையை வெளிநாட்டு இயந்திரமொன்று 7 நிமிஷங்களில் செய்து காட்டியது. வளர்ந்து நிற்கும் பயிரினை அறுவடை செய்யத் தொடங்குவதில் உள்ள குறைபாடுகள், அவ்வப்பொழுது இயந்திரத்தில் ஏற்படும் தடைக் கோளாறுகள் போன்ற வைகள் எல்லாம் களையப்பெற்று அமெரிக்க இயந்திரம் திருத்தப் பெற்றது. இந்தகைய இயந்திரங்களின் பயனுடைமையைப் பெருக்கும் வகையில் ஹெட்டர் (Header) போன்ற புதிய அம்சங்களை யெல்லாம் விஸ்கான்சினைச் சார்ந்த ஜார்ஜ் எஸ்டர்லி (George Esterly) சேர்த்தார். பின்னர் அறுவடை இயந்திரங்கள் பெருவாரியாக உபயோகத்திற்கு வந்தன. உள்நாட்டு யுத்தம் நிகழ்ந்தபோது தொழிலாளர்கள் போதுமான அளவுக்குக் கிடைக்காதபோதிலும் தானிய உற்பத்தி பெருகியமைக்கு இவ் இயந்திரங்களே காரணமாகும்.

விவசாயி பல இயந்திரங்களைப் பயன்படுத்தி வந்தான். போரடிக்கும் இயந்திரம் ஒன்று அவனுக்கு மிகவும் உதவியாக அமைந்தது. பழைய காலத்து முறைப்படி, கோலினைக் கொண்டு போரடிக்கும் முறை மிகவும் கடினமாக இருந்தது.

கோலைக்கொண்டு போரடிப்பதன்மூலம் ஒரு நாளுக்கு எட்டு முதல் பதினைறு புஷல்கள் தானியமே பிரித்தெடுக்க முடியும். போரடிப்பதற்குரிய கோல உருளைகளுடன் பொருத்தி, குதிரையைக்கொண்டோ, நீர்சக்தியைக்கொண்டோ இயந்திரத்தை இயக்கும் முறை குறித்து ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சோதனைகள் நடைபெற்றன. 1850ஆம் ஆண்டில்தான் போரடிக்கும் இயந்திரத்துடன் பிரிக்கும் கருவி (separator) ஒன்று இணைக்கப்பெற்று, போரடித்துக் கதிரைத் தூற்றும் முறையை ஒரே இயந்திரத்தின்மூலம் நிறைவேற்றிக்கொள்ளும் வழியைக் கண்டுபிடித்தனர். அமெரிக்காவில் ஹிராம் (Hiram) அவர்களும், ஜான் பிட்ஸ் (John Pitts) அவர்களும் நல்ல தரமுடைய போரடிக்கும் கருவியை உருவாக்கினர்; அதற்குரிய விற்பனை உரிமையையும் 1837-ல் பெற்றனர்.

இத்தகைய மகத்தான கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து விவசாயத்திற்குரிய வேறு பல கருவிகளும் கண்டுபிடிக்கப் பெற்றுத் திருத்திச் செப்பனிடப்பெற்றன. 1820-ல் எட்டு முதல் பத்துப் பேர் செய்யக்கூடிய வேலையைச் செய்யும் குதிரை இயக்கும் 'ஹேரேக்' (horse hayrake) உபயோகத்திற்கு வந்தது. பல ஆண்டுகள் கழிந்தபின்னர் 'டெட்டர்' (tedder) கண்டுபிடிக்கப் பெற்றதால் புல் உலர்த்துதல் எளிமையாயிற்று. 1840 முதல் 1849 வரையுள்ள ஆண்டுகளில், கோதுமை விதையை விதைக்கின்ற கருவியும் உபயோகத்திற்கு வந்தது. 1840 ஆம் ஆண்டிலிருந்து 1860ஆம் ஆண்டு வரையில் தானியம் நடுவதற்குரிய கருவியும் வேறு பல கருவிகளும் உபயோகத்திற்கு வந்தன.

விவசாய முறைகளில் பெரும் புரட்சி நிகழ்ந்துவருவதை விழிப்புற்ற விவசாயிகள் உணர்ந்திருந்தனர். 1839-ல் விஞ்ஞான முறையில் பயிர்த் தொழிலை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகப் போரிட்ட ஜெஸ்ஸி பியூவெல் (Jesse Buel) பின்வருமாறு எழுதினார்:

'விவசாயத்திற்குரிய பழைய கருவிகளுக்கும் புதுக் கருவிகளுக்குமிடையில் நிரம்ப வேற்றுமை உண்டு. அக் கருவிகளைப் பயன்பெறச் செய்த காலத்தைப் பொறுத்துமட்டுமன்றி, அக் கருவிகள் செய்யும் வேலையைப் பொறுத்தும், வேலையில் ஈடுபடுத்துவதற்கு வேண்டிய ஆற்றலைப் பொறுத்தும் பழங்காலக் கருவிகளுக்கும் புதுக் கருவிகளுக்கும் இடையில் வேறுபாடுகள் தென்படலாயின. பழைய கலப்பையை இயக்கிப் பயன்பெறச் செய்வதற்கு நான்கு கால்நடைகளும், இரண்டு தொழிலாளிகளும் வேண்டும். ஆனால், அக் கலப்பையினால் விளையும் பயன்

பாதியளவே இருக்கும். திருத்தப்பட்ட புதிய கலப்பையை இயக்க இரண்டு கால்நடைகளும் ஓர் ஆளும் போதும். புதுக் கலப்பையால் விளையும் பயனே நிறைவுபெற்றதாக இருக்கும். உழுத நிலத்தைச் சமன்படுத்து கருவிகளும், மற்றத் தரம் உயர்ந்த கருவிகளும் இவ்வாறே பயன்விளைத்தன. உழைப்பை விரயம் செய்யாமல் சிக்கனமாகப் பயன்பெறச் செய்யும் புதிய இயந்திரங்களும் உபயோகத்திற்கு வந்தன. ரோலர் (roller), கல்ட்டிவேட்டர் (cultivator), டிரில்-பேரோ (drill-barrow) போன்ற பல விதப் பொறிகள் உபயோகத்திற்கு வந்தன. நாற்பதாண்டுகளுக்கு முன்னர் தேவையான தொழிலாளர்களில் பாதிப்பேர் களைக்கொண்டு வேளாண்மையைச் செய்யலாம்; மேலும், வேளாண்மையைத் திறமையுடன் செய்யலாம்.'[15]

1839-ல் பியூவெல் அவர்கள் விளக்கிய இயந்திர வளர்ச்சி துவக்கநிலையில் இருந்த ஒன்றாகும். அடுத்த இருபதாண்டுகளில் விவசாயத்துறையில் பெருத்த மாற்றங்கள் விளைந்தன; விதையை விதைக்கின்ற டிரில்களும், தானியப் பிளான்டர்களும், கல்ட்டிவேட்டர்களும் (cultivators), குறிப்பாகப் புல் வெட்டும் மோவர்களும் (mowers), அறுவடை செய்யும் ரீப்பர்களும் (reapers) விவசாயத் துறையில் நுழைந்தன. 1860ஆம் ஆண்டின் சென்சஸ் குறிப்பிடுவதுபோல, 'தரம் உயர்ந்த கலப்பைகளைப் பயன்படுத்துவதால், மூன்றில் ஒரு குதிரைக்குச் சமமான உழைப்புக் குறைந்தது. மூன்று புஷல்கள் விதைகளைத் தெளித்த அதே நிலப்பரப்பில் டிரில்களைக் கொண்டு இரண்டு புஷல்கள் விதைகளைத் தெளித்தால் போதும். டிரில்களைப் பயன்படுத்தி விதைகளை நடுவதால், ஓர் ஏக்கர் நிலத்தில் விளைச்சல் ஆறு முதல் எட்டு புஷல்கள்வரையில் அதிகரித்தது. பயிர்கள் வரிசை வரிசையாகக் கிளம்பின. எனவே, ஹார்ஸ்-ஹோக்களை (horse-hoes) எளிதாகப் பயன்படுத்தலாம்.....கதிர்களை அறுத்துப் போரடிப்பதில் அறுவடை செய்யும் ரீப்பரைப் பயன்படுத்தினால், மூன்றில் ஒரு பங்கு உழைப்புக் குறையும்.....போரடிக்கும் இயந்திரம், பழைய முறைப்படி கோல் கொண்டு போரடிக்கும் உழைப்பில் மூன்றில் இரண்டு பங்கைக் குறைக்கும்;.....ஹார்ஸ் ரேக்குகளையும் ஹார்ஸ் ஹேஃபோர்க்குகளையும் (horse-rakes and horse-hayforks) பயன்படுத்துவதால் உழைப்பில் பாதி குறைகிறது.'

உழைப்பைக் குறைக்கப் புதிய விவசாயக் கருவிகள் பயன்பட்டபோதிலும், இக் கருவிகளை உபயோகிப்பதில் ஏற்படும் செலவு பெருகியது.

15 'The Farmer's Companion' (ed. of 1839), p. 123, quoted by P. W Bidwell and J. I. Falconer, op. cit., p. 281. Harry Carman (ed.), Jesse Buel, contains many excerpts from 'The Farmer's Companion'.

விஞ்ஞான முறைப்படி வேளாண்மை செய்தல்

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் விஞ்ஞான ரீதியான வேளாண்மை செய்வதன் சிறப்பை ஆங்கிலேயர்களுக்கு ஆர்தர் யங்கும் (Arthur Young), ஜெத்ரோ டல்லும் (Jethro Tull) விஸ்கவுன்டு டவுன்ஷெண்டும் (Viscount Townshend), ராபர்ட் பேக்வெல்லும் (Robert Bakewell), மற்றவர்களும் நன்கு விளக்கி நிரூபித்துக் காட்டினர். காலனிகளில் விவசாய வளர்ச்சியில் மக்களுக்கு ஆர்வம் ஏற்படவில்லை. புரட்சிக்குப் பின்னரே பணம் படைத்த அமெரிக்க விவசாயிகள் வேளாண்மையைச் சிறப்பாக உயர்ந்த விஞ்ஞான முறைகளைக் கையாண்டு செய்யவேண்டும் என்று உணர்ந்தனர். வாஷிங்டன், ஜெஃபர்சன் போன்ற பெருந் தோட்ட முதலாளிகள் இந்தத் துறையில் முன்னணியில் நின்றனர். இவர்கள் பெருமளவில் நிலங்களையுடைய விவசாயிகள் ஆவர். இவர்களுக்கு விவசாயப் பரிசோதனைகளில் மிகுந்த ஈடுபாடும் உண்டு. 'மிகவும் சிறந்த மனிதராக மாத்திரமன்றி, மிக உயர்ந்த விவசாயியாகவும் அவரது காலத்திலே' வாஷிங்டன் கருதப்பெற்றார். அவர் புகையிலை பயிரிடுவதை நிறுத்திவிட்டு வேறு பொருள்களை உற்பத்தி செய்ய முனைந்தார். கோவேறு கழுதைகள் வளர்ப்புத் தொழிலின் ஸ்தாபகர் இவரே. ஸ்பெயின் நாட்டு மன்னனும், லாஃபயட்டு (Lafayette) அவர்களும் முறையே ஸ்பெயினிலிருந்தும் பிரான்சிலிருந்தும்வாஷிங்டனுக்குப் பரிசாக உயர்ந்த ரகக் கழுதைகளை அனுப்பினர். அக் கழுதைகளின் சந்ததியாகவே பின்னர் கென்டக்கியைச் சார்ந்த இனம் அமைந்தது. செம்மறியாடுகளை வளர்ப்பதிலும் வாஷிங்டன் நாட்டங்கொண்டார். செம்மறியாடுகள் வளர்ப்பை ஜார்ஜ் வாஷிங்டன் பார்க் கஸ்டிஸ் (Georqe Washington Parke Custis) தொடர்ந்து மேற்கொண்டார். எனவே, தென்னூட்டில் நல்ல இனத்தைச் சார்ந்த செம்மறியாடுகள் பெருகின. ஸ்பெயினிலிருந்து உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த மெரினே செம்மறியாடுகள் (Merino sheep) கள்ளக் கடத்தல் செய்யப் பெற்றன. நெப்போலியப் யுத்தங்களுக்குப் பின்னர்தான் மெரினே செம்மறியாடுகளை நிறையக் கொண்டுவர முடிந்தது. ஜெஃபர்சனும், ராபர்ட் லிவிங்ஸ்டனும் மெரினே செம்மறியாடுகளை நாடு முழுதும் கொண்டுவந்து நிரப்ப முயன்றனர். 1810—1816ஆம் ஆண்டுகளிலே நாடு முழுதும் இச் செம்மறியாடுகளே நிறைந்திருந்தன. 'அருமையான கம்பளி நிறைந்த செம்மறியாட்டுக் கூட்டத்தினை நான் பிரயாணம் செய்த ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வோர் இடத்திலும் கண்டேன். இது ஒரு புதிய, விளங்காத மயக்கமாகும். இவ்வாடுகள் நிறைந்திருந்த எந்த மாவட்டத்திலும்

அவை வசதியோடிருந்தன என்று கூறமுடியாது. இறந்துபோன் ஆடுகளுக்கும் சந்தைகள் இருந்தால்தான் அவ்வாறு கூறமுடியும். மெரினே வகையைச் சேர்ந்த ஆடுகள் மெலிந்திருத்தலே நோக்கின், ஆட்டு வளர்ப்பு ஒரு பொதுவான முறையிலேயே இருந்திருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன்.' இவ்வாறு பர்க்பெக் (Birkbeck) குறிப்பிட்டுள்ளார். மெரினே இனங்களையும் வேறினங்களையும் இறக்குமதி செய்தமையால் ஆட்டு வளர்ப்பு சிறப்புற்றது.

கால்நடை வளர்ப்பிலும் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. குறுகிய கொம்புகளையுடைய ஆங்கிலக் கால்நடையையோ, அல்லது டர்ஹாம் கால்நடையையோ (Durham cattle) 1817-ல் கென்டக்கியில் இறக்குமதி செய்தனர். தங்களுடைய கால்நடை இனங்களின் தரத்தை உயர்த்திக்கொள்வதற்காக, ஆங்கில நாட்டுக் கால்நடைகளையும், டர்ஹாம் கால்நடைகளையும் விவசாயிகள் விலைக்கு வாங்கினர். 1817-ல் ஹென்றி கிளே அவர்கள் முதன்முதலில் ஹெர்போர்ட்ஸ் (Herefords) இன்தை இறக்குமதி செய்தார். ஆனால், இந்த இனம் விரைவில் பெருகவில்லை. 1870 முதல் 1879 வரையுள்ள ஆண்டுகளில் இந்த இனத்துக் கால்நடைகள் டெக்சாசுக்குப் பொருத்தமாக அமைந்தன. மற்றத் தரமுள்ள கால்நடை இனங்களும் இறக்குமதியாயின. தங்கள் கால்நடைகளை நன்குபேணி, அவற்றின் தரத்தை உயர்த்திக்கொள்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர். குறைந்தபட்சம் 1840ஆம் ஆண்டு வரையிலேனும் குதிரைச் சவாரி செய்து பிரயாணம் செய்வது வழக்கமாக இருந்தமையால், அருமையான குதிரைகளும் இறக்குமதியாயின. குதிரை வளர்ப்பில் கென்டக்கி தலைசிறந்து விளங்கியது. சவாரிக்கேற்ற நல்ல ரகக் குதிரைகளை வளர்ப்பதில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற குதிரை வளர்ப்பாளர்களும் கென்டக்கியில் இருந்தனர்.

உயர்ந்த ரக மிருகங்களின் வளர்ப்பு, புதிய கண்டுபிடிப்புகள், பயிர்த்தொழிலுக்கேற்ற சிறந்த விஞ்ஞான முறைகள் ஆகியவற்றைப்பற்றிய அறிவு ஐந்து வழிகளில் நாட்டில் பரவியது. விவசாய சங்கங்களும், விவசாய சந்தைகளும், பண்ணைகளைப்பற்றிய செய்தித் தாள்களும், இலக்கியமும், விவசாயப் பள்ளிக்கூடங்களும், அரசாங்க உதவியும் மேற்குறிப்பிட்டவைகளைப்பற்றிய அறிவினை நாட்டிலே பரப்பின. விலங்கின வளர்ப்புகளும், கண்டுபிடிப்புகளும், வேளாண்மை முன்னேற்றமும் துவக்க நிலையில்தான் இன்னும் இருந்தன. ஃபிலடெல்பிய விவசாய முன்னேற்ற சங்கம் (Philadelphia Society for Promoting Agriculture) 1785-ல் ஸ்தாபிக்கப்பெற்றது. வாஷிங்டனும்பிராங்கிலினும் அச்சங்கத்தில்

உறுப்பினர்களாக இருந்தனர். 1800ஆம் ஆண்டிற்கு முன்னர் இத்தகைய சங்கங்கள் வேறு ஐந்து மாநிலங்களில் ஸ்தாபிக்கப்பெற்றன.[17] பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் நாடெங்கும் புதுப்புது சங்கங்கள் தோன்றின. இச் சங்கங்கள் நாடெங்கும் சந்தைகளை நடத்திப் பரிசுகள் வழங்கி, விஞ்ஞான முறைகளைப் பரப்பி, ஒன்றுக்கொன்று துணையாக நின்று உதவி புரிந்து, தேவையான செய்திகளை மக்களிடத்திலே பரப்பிவந்தன. இச் சங்கங்கள்தாம் விவசாய முயற்சியில் முதலில் ஈடுபட்டவைகளாகும்.

அமெரிக்க விவசாய வாழ்க்கையிலேயே மிகவும் முக்கியமான அம்சம் எதுவெனில், கவுன்டியில் நடைபெறும் சந்தையாகும். 1804-ல் முதல் விவசாய சந்தை வாஷிங்டனில் நடைபெற்றது. விவசாய சந்தை நடத்துகின்ற எண்ணமே எல்கானா வாட்சன் (Elkanah Watson) மூலம்தான் மற்றவர்களுக்குப் பரவியது. பிட்ஸ்பீல்டிலும் (Pitts field), மெஸ்ஸாசுசெட்ஸிலும் 1807-ல் வாட்சன் அவர்கள் இரண்டு மெரினோ செம்மறியாடுகளைக் காட்சிப் பொருளாகப் பொது இடத்தில் வைத்தார். மூன்று ஆண்டுகள் சென்றபின்னர், தன் அருகில் வாழ்ந்தவர்களையும் உற்சாகப்படுத்திக் கிராமாந்திரப் பசுமையான புல்வெளிகளிலே கால்நடைச் சந்தையொன்றை வாட்சன் நடத்திக்காட்டினார். இக் கால்நடைக் கண்காட்சியின் விளைவாக பர்க்ஷைர் விவசாயக் கழகம் (Berkshire Agricultural Society) ஏற்பட்டது. அமெரிக்காவிலேயே இக் கழகம்தான் முதன்முதலில் நிரந்தரமாக ஏற்பட்டமைந்த சந்தைக் கழகமாகும். மற்ற மாநிலங்களிலும் இத்தகைய சங்கங்கள் ஏற்படவேண்டி வாட்சன் தூண்டினார். மற்ற மாநிலங்களிலும் இத்தகைய விவசாய சங்கங்கள் விரைவில் தோன்றலாயின. விவசாய சங்கங்கள் நடத்த 1819-ல் நியூயார்க்கில் முதன் முதலில் அரசாங்கக் கொடை கிடைத்தது. இரண்டாண்டுகளுக்கு 20,000 டாலர்கள் சந்தை நடத்துவதற்கென வழங்கப்பெற்றன. 1858-ல் ஐக்கிய அமெரிக்க நாட்டின் உரிமைப்பத்திர அலுவலகம் (United States Patent Office) 900 விவசாய சங்கங்களுக்கு

[17] பிலடெல்பிய கலைவளர்ப்புச் சங்கம் (Philadelphia Society for Promoting Arts) "முக்கியமாக விவசாய வளர்ச்சிக்காகவே" ஏற்பட்டது. இச்சங்கம் இருபதாண்டுகளுக்கு முன்னரே ஏற்பட்டது. இதுபோலவே, பென்சில்வேனியாவிலும் ஒரு சங்கம் கிளம்பியது. இத்தகைய சங்கங்களின் நடவடிக்கைகளைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. 1781-ல் நியூஜெர்ஸி விவசாய—வர்த்தக—கலை வளர்ச்சி சங்கம் (New Jersey Society for Promoting Agriculture, Commerce and Arts) ஸ்தாபிக்கப்பெற்றது. (See Care Raymond Woodward, The Development of Agriculture in New Jersey, 1640-1880. (1927), pp. 51—52.

மேலாக உள்ள பட்டியலே வெளியிட்டது. இச்சங்கங்களில் பெரும் பாலானவை மாநில அல்லது கவுன்டி சங்கங்களாகும். சந்தைகளை நடத்துவதற்கென்றே இச்சங்கங்கள் அமைக்கப்பெற்றன. இச்சங்கங்கள் சந்தைகளை நடத்துவதன் விளைவாகக் கருத்துப் பரிமாற்றம் ஏற்பட்டது; புதிய செய்திகள் கிடைத்தன; இத்தகைய சந்தைகளுக்கிடையில் ஏற்படும் போட்டியினால், இவைகளுக்கு ஒரு சிறப்பு ஏற்பட்டது. எனவே, புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் இயந்திரங்களின் பயனைப்பற்றிய தெளிவும் ஏற்பட்டது.

இத்தகைய சங்கங்களையும் சந்தைகளையும் தவிர விவசாயப் பத்திரிகைகளும் தோன்றின. 1810-ல் முதன் முதலில் ஜான் எஸ். ஸ்கின்னர் (John S. Skinner) என்பவர் **அமெரிக்க விவசாயி** (The American Farmer) எனும் பத்திரிகையை பால்டிமோரில் துவக்கினார். அது ஒரு வாரப் பத்திரிகையாகும். 1833 வரையில் அப்பத்திரிகை தொடர்ந்து வெளியிடப்பெற்றது. நாட்டின் மற்றப் பகுதிகளிலும் இத்தகைய இதழ்கள் தோன்றின. இத்தகைய இதழ்களில் கிழக்குப் பிரதேசத்தில் மிகவும் சிறந்து விளங்கியது உழவன் (The Cultivator) என்பதாகும். இதனை ஆல்பெனியில் ஜெஸ்ஸி பியூவெல் துவக்கினார் (1834—1853). மேற்குப் பிரதேசத்தில் 1840-ல் **புல்வெளி விவசாயி** (The Prairie Farmer) எனும் பத்திரிகை தொடங்கப்பெற்று மிகவும் சிறந்து விளங்கியது.

அமெரிக்கப் பள்ளிக்கூடங்களில் விவசாயக் கல்விக்குச் சிறந்தஇடம் தந்தனர். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 1792-ல் முதன்முதலில் இயற்கை வரலாறு, வேதிப் பொது அறிவு (chemistry), விவசாயம் ஆகிய பாடங்களை நடத்த ஒரு பேராசிரியர் நியமிக்கப்பெற்றார். விவசாயத்தைச் சொல்லித்தருவதற்கு மட்டுமே மெயினில் (Maine) உள்ள கார்டினரில் (Gardiner) 1822-ல் கார்டினர் லீசியம் (Gardiner Lyceum) எனும் அமைப்பு தோன்றியது. அடுத்த பத்தாண்டுகளுக்கு அந்த அமைப்பு தனது விவசாயத் தனித்தன்மையை விட்டுக்கொடுக்கவில்லை. இதே நோக்கத்துடன் மற்றப் பள்ளிகளும் தோன்றின. எனினும், விவசாயக் கல்வி அரசாங்கக் கொடையை நம்பியே வாழவேண்டியிருந்தது. விவசாயக்கல்வி கட்டாயத் தேவைகளில் ஒன்று என்ற நிலை ஏற்படும்வரையில் இதே சூழ்நிலையே இருந்தது. 1850-ல் நிறைவேற்றப்பட்ட மிச்சிகன் இராஜ்ஜிய அரசியல் சட்டம் விவசாயக் கல்லூரி ஒன்று அமைய வழிவகுத்தது. அதன்படி, விவசாயக் கல்லூரியைக் கட்டுவதற்கும், விவசாயக் கல்வியைப் போதிப்பதற்கும், கல்லூரியை நிருவகிப்பதற்கும் 40,000 டாலர்களை மிச்சிகன் இராஜ்ஜியம் செலவழிக்க முன்வந்தது. 1857-ல் அரசினர் விவசாயக் கல்லூரி தோன்றியது. அமெரிக்கா

விலேயே முதல் அரசினர் விவசாயக் கல்லூரி இதுவேயாகும். இரண்டாண்டுகள் கழித்து மேரிலாந்து இராஜ்ஜியமும் பென்சில் வேனியா இராஜ்ஜியமும் அரசினர் விவசாயக் கல்லூரிகளை நிறுவின. 1862-ல் மோரில் சட்டம் (Morrill Act) நிறைவேறிய பின்னரே விவசாயக் கல்வி உண்மையில் வளரத் தொடங்கியது.

விவசாயத்தை வளர்க்க ஆராய்ச்சிகள் செய்வதற்கும், புள்ளி விவரங்கள் தயாரிப்பதற்கும் உரிமைக் காப்பு கமிஷனர் ஒருவர் (Commissioner of Patents) நியமிக்கப்பெற்றார். இந்தத் துறையில் செலவழிப்பதற்கென அவரிடத்தில் 1,000 டாலர்களைக் காங்கிரஸ் 1839-ல் தந்தது. இவ்வாறாக 1839-ம் ஆண்டில்தான் விவசாயத்திற்குக் காங்கிரஸ் மூலமாகத் தேசீய உதவி கிடைத்தது. 1842ஆம் ஆண்டிற்குப் பின்னர், ஓராண்டைத் தவிர மற்ற ஆண்டுகளிலெல்லாம் இத்தகைய தேசீய அரசாங்க உதவி விவசாயத்திற்குக் கிடைத்தவண்ணமிருந்தது. 1854ஆம் ஆண்டிற்குப் பின்னர் விவசாய ஆண்டறிக்கைகள் அச்சிடப் பெற்றன. 1862 வரையில் விவசாயத்தைப்பற்றிய பிரச்சினைகளெல்லாம் உரிமைக் காப்புத் துறையினரின் மேற்பார்வைக்கு வந்தது. 1862-ல் தனி விவசாயக் கழகம் ஒன்று தோன்றியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் விவசாயிகளின் பிரச்சினைகளில் ஓரளவுக்குத்தான் ஆர்வம் காட்டின. ஆனால், தற்காலத்தில் விவசாயிகள் பிரச்சினைகளில் அரசாங்கம் தீவிரமாக முழு மனத்துடன் ஈடுபட்டுள்ளது.

விவசாயப் போக்குகள், 1783 - 1860

1783ஆம் ஆண்டுமுதல் உள்நாட்டு யுத்தம் துவங்கியகாலம் வரையில் வளர்ந்துள்ள அமெரிக்க விவசாயத்தைப்பற்றிய சுருக்கமான விளக்கம் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ் விளக்கத்திலிருந்து மூன்று பெரும் வளர்ச்சிகள் தெரிகின்றன. முதலில் பயிர்த்தொழிலுக்கு ஏற்ற வகையில் நிலம் பரந்து கிடந்தது. மிசிசிப்பி பள்ளத்தாக்கின் பெரும் பகுதியிலும் பயிர்த்தொழில் நடைபெற்றது. எனவே, உலகிலேயே தலைசிறந்த விவசாயப் பகுதியாக அமெரிக்கா மாறியது. இரண்டாவதாக, விவசாயத் துறையில் சிறப்புத் தேர்ச்சியும் விரைவில் வளர்ந்தது. எனவே, தன்னிறைவுள்ள பண்ணைகளுக்குப் பதிலாகக் குறிப்பிட்ட பகுதிகளில் சிறப்புப் பயிற்சி பெற்ற வர்த்தக விவசாயம் வளர்ந்தது. கடைசியாக, அமெரிக்காவில் விஞ்ஞான ரீதியில் விவசாயம் வளரத் தொடங்கியது; விவசாயத்துறை இயந்திரமயமாயிற்று.

அமெரிக்க விவசாய வரலாற்றிலேயே இவ்வாண்டுகள்தாம் ஒளிபொருந்திய ஆண்டுகளாகும். இச் சகாப்தத்தில்தான் நம்பத்

தகுந்த முறையில் வளர்ச்சிகள் ஏற்பட்டு, எதிர்காலம் சுபிட்சமாகத் தென்படுகிறது. அமெரிக்காவில் வேளாண்மைக்குரிய நிலங்கள் பெருகப்பெருக, ஐரோப்பாவிலும் சந்தைகள் பெருகின. வெளிநாட்டுத் தொழிற்சாலைகளும் உள்நாட்டுத் தொழிற்சாலைகளும் உற்பத்தியாகும் பருத்தி முழுவதையும் பெற்றுக்கொண்டன. தொழில்துறைகள் நிறைந்த பிரதேசங்கள் உணவுப் பண்டங்களை விலைக்கு வாங்கின. பீதி காலங்களைத்தவிர மற்றக் காலங்களில் எல்லாம் விலைவாசிகள் உயர்ந்தே இருந்தன. உலைக்களப் பண்டங்களையும் தொழிற்சாலைப் பண்டங்களையும் விலைக்கு வாங்கினர். தென்னாட்டில் தோட்டமுதலாளிகளின் முக்கியச் சொத்தாகிய அடிமைகளின் மதிப்பு மிகவும் உயர்ந்தது. பழைய வடமேற்குப் பிரதேசத்தில் குடியேற்றம் கடிதில் நிகழ்ந்தமையாலும், விலைவாசிகள் உயர்ந்திருந்தமையாலும் நிலத்தின் மதிப்பும் கூடியது. இச்சூழ்நிலையில் விஞ்ஞான வளர்ச்சிக்கும், விவசாயப் பொறிகளைக் கண்டுபிடிப்பதற்கும், விவசாயக் கல்வியை அளிப்பதற்கும் நாட்டின் இயற்கையான திறமை முழுவதையும் பயன்பெறச் செய்யவேண்டும். விவசாயமே நாட்டின் முக்கியமான தேவையாகும். போக்குவரத்து வசதிகள் பெருகின. விவசாயத்தின் தேவைகளை நிறைவேற்றும் தொழில் துறைகள் அமைந்தன. இதுவே அமெரிக்க விவசாய சகாப்தமாகும்.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

பிட்வெல், பி. எஸ். (Bidwell, P. S.), and Falconer, J. I., History of Agriculture in the Northern United States, 1620-1860, chaps. 11-25.

கிரே, எல். சி. (Gray, L. C.), History of Agriculture in the Southern United States to 1860, chaps. 27, 39.

ஹட்சின்சன், டபிள்யூ. டி., சைரஸ் ஹால் மெக்கார்மிக். (Hutchinson, W. T. Cyrus Hall McCormick.), chaps. 3, 4, 7, 8.

எட்வர்ட்ஸ், ஈ. ஈ. (Edwards. E. E.), 'Agriculture—The First Hundred Years', Yearbook of Agriculture, 1940, pp. 190-232.

ஹேமண்டு, எம். பி., (Hammond, M. B.), The Cotton Industry, chaps. 1-3.

புளூகல். எப்., பாக்னர். ஹெச். யு. (Flugel, F. and H. U. Faulkner.) Readings in the Economic and Social History of the United States, pp. 153-187.

12. வாணிபக் கடற்படையும் அயல்நாட்டு வர்த்தகமும்

போருக்குப் பின்னர் விரைந்த மறுமலர்ச்சி

காலனி காலத்தைச் சார்ந்த அயல்நாட்டு வர்த்தகத்தின் முக்கியத்துவத்தைப்பற்றியும் கப்பல்கட்டும் தொழில்களின் சிறப்பைப்பற்றியும் முன்னரே நாம் வலியுறுத்தினோம். அவ்வாறே புரட்சிக் காலத்தில் சொந்தப் போர்க்கப்பல்களையுடையவர்களின் நடவடிக்கைகளைப்பற்றியும் முன்னரே கண்டோம். 1780 முதல் 1789 வரை சைனுவுடன் மும்முரமான வர்த்தகம் நடைபெற்றதைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளோம்.[1] தூரக்கிழக்கு நாடுகளுடன் வர்த்தகம் நிகழ்ந்தமையால், அமெரிக்கக் கப்பல்கட்டும் தொழிலின் பொற்காலம் ஏற்பட்டது எனலாம். 1790 ஆம் ஆண்டைத் தொடர்ந்த பலவாண்டுகளில் முயற்சியும் துணிவும் உடைய கப்பற்படைத் தலைவர்கள் கான்டன் சந்தையினால் (Conton Market) மட்டுமே கவரப்பெற்றனர் என்று சொல்ல முடியாது. யாங்கி (Yankee) திறமையுடன் நுழையக்கூடிய வாய்ப்புள்ள ஒவ்வொரு துறைமுகத்தினுள்ளும் அமெரிக்கக் கொடியை கடற்கரைப் பட்டினங்களிலிருந்து சென்ற வியாபாரிகள் நிலைநாட்டினர். வியாபாரத் திறமையை உபயோகித்து இலாபம் அடையக்கூடிய வாய்ப்பினையுடைய ஒவ்வொரு துறைமுகத்தினுள்ளும் அவர்கள் நுழைந்து அமெரிக்கக் கொடியைப் பறக்கவிட்டனர். இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலம் அயல்நாட்டு வாணிபத்தில் சிக்கல்கள் நிறைந்த அமைப்பு உருவாவதற்கு முந்திய காலமாகும். கடற்கரையைச் சார்ந்த வாணிபமும் அயல்நாட்டு வாணிபமும் வர்த்தக முதலாளிகளின் பிடியிலே சிக்கியிருந்தன. விற்கவேண்டிய பண்டங்களை அவர்கள் விலைகொடுத்து வாங்கினர்கள்; அவர்கள் கப்பல்களைக் கட்டி, அவற்றின் சொந்தக்காரர்களானார்கள்; தங்களுடைய சொந்தக் கப்பல்களுக்குத் தலைமை மாலுமியை

[1] அதிகாரம் 8, பிரிவு 11, பாரா 2 காண்க.

நியமித்தனர். எங்கெங்கே இலாபம் பெறும் வசதிகள் இருந்தனவோ அங்கெல்லாம் கொண்டுவந்த பண்டங்களை இத் தலைமை மாலுமிகள் விற்றனர். இவ்வாருகப் பண்டங்களை ஏற்றிக்கொண்டு வாணிப நோக்குடன் செல்லும் கப்பற் பயணங்கள் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் நடைபெறும்.

வெளிப்புறத் தூண்டுதல்கள் வர்த்தகக் கப்பல்களைப் பாதித்தன. அரசியல் சட்டம் அமலுக்கு வந்தமையாலும், அயல்நாட்டுக் கப்பல்கள்மீது எடைவரி விதிக்கப்பட்டமையாலும், பொதுக் கடன் முறையை அமைத்தமையாலும், ஐரோப்பிய யுத்தங்களின் விளைவாக அமெரிக்கப் பண்டங்களின் தேவை அதிகரித்தமையாலும் வர்த்தகக் கப்பல்களுக்கு நன்மையே விளைந்தது. இருந்தபோதிலும், இந்த விளைவு வியப்பிற்குரியதேயாகும். அயல்நாட்டு வர்த்தகத்தில், கப்பலில் ஏற்றிய பார அளவு 1789-ல் 1,23,893 டன்களாக இருந்து, 1810-ல் 98,71,000டன்களாக உயர்ந்தது. அதே காலத்தில் அமெரிக்கக் கப்பல்கள்மூலம் நடைபெற்ற இறக்குமதிகள் 17·5 சதவீதத்திலிருந்து 93 சதவீதமாக உயர்ந்தன; ஏற்றுமதிகளும் 30 சதவீதத்திலிருந்து 90 சதவீதமாக உயர்ந்தன.

கப்பல் தொழிலைச் சார்ந்த சக்திகள் புதிய அரசியல் சட்டத்தை முழு மனத்துடன் ஆதரித்தன. எனவே, அச்சக்திகளுக்குப் பாதுகாப்புத் தருவதற்கு முதல் காங்கிரஸ் முனைந்தது. முதல் காங்கிரஸ் நிறைவேற்றிய முதல் சட்டம் (உறுதிமொழிபற்றிய ஒரு வழக்கமான சட்டத்தைத் தவிர்த்து), 1789 ஆம் ஆண்டு, ஜூலை 4 ஆம் நாள் இயற்றப்பெற்ற சட்டமாகும். அரசாங்கத்துக்கு வருமானம் தேடித் தருதற்கும், 'தொழிலதிபர்களுக்கு ஆதரவும் பாதுகாப்பும்' அளிப்பதற்கும் வேண்டியே இச் சட்டத்தினைக் காங்கிரஸ் இயற்றியது. எனினும், இச் சட்டம் கப்பல் கட்டும் தொழிலுக்கும் உண்மையான பாதுகாப்பு அளித்தது. அமெரிக்க பிரஜைகளால் கட்டப்பெற்று, அவர்களுக்கே சொந்தமாக உள்ள கப்பல்களில் கொண்டுவரும் இறக்குமதிகள்மீது விதிக்கப்படும் சுங்கவரிகளில் பத்து சதவீதம் கழிவு கிடைத்தது. தூரக்கிழக்கு நாடுகளுடன் புதிதாக உருவாகியுள்ள வர்த்தகத்தை மேலும் பெருக்கி வளர்க்கும் நோக்கத்துடன் இச் சட்டம் கிழக்கிலிருந்து இறக்குமதியாகும் தேயிலைமீதுள்ள வரியைக் குறைத்தது. இதன் விளைவாக அயல்நாட்டுக் கப்பல் செலுத்தும் வரியில் பாதிக்கும் குறைவாகவே அமெரிக்கக் கப்பல் செலுத்தியது. ஆனால், அதே வேளையில் ஐரோப்பாவில் விலைகொடுத்து வாங்கிய தேயிலையை அமெரிக்கக் கப்பல்களில் இறக்குமதி செய்தபோதிலும், அத் தேயிலைமீது உயர்ந்த வரிகள் விதிப்பதன்மூலமாக அச் சட்டம் கிழக்கிந்தியக்

கம்பெனிக்குப் பலத்த அடி கொடுத்தது. அதே காங்கிரஸ் 1789ஆம் ஆண்டு, ஜூலை 20ஆம் நாளில் மற்றொரு சட்டத்தை நிறைவேற்றியது. இச் சட்டத்தின்படி அமெரிக்கர்களால் கட்டப்பெற்று அமெரிக்கர்களுக்கே சொந்தமாக உள்ள கப்பல்கள் அமெரிக்கத் துறைமுகங்களினுள் நுழையும்பொழுது, டன் ஒன்றுக்கு 6 சென்டுகள் வரி செலுத்தினால் போதும்; அமெரிக்கர்களால் கட்டப்பெற்று அயல் நாட்டினருக்கே சொந்தமாக உள்ள கப்பல்கள் அமெரிக்கத் துறைமுகங்களினுள் நுழையும்பொழுது, டன் ஒன்றுக்கு 30 சென்டுகள் வரி செலுத்தவேண்டும். ஆனால், அயல்நாட்டினரால் கட்டப் பெற்று, அயல்நாட்டினருக்கே சொந்தமாக உள்ள கப்பல்கள் அமெரிக்கத் துறைமுகங்களினுள் நுழையும்பொழுது, டன் ஒன்றுக்கு 50 சென்டுகள் வரி செலுத்தவேண்டும். கடற்கரையைச் சார்ந்த வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அமெரிக்கக் கப்பல்கள் ஆண்டொன்றுக்கு ஒரே ஒரு தடவை மட்டும் எடைவரி (tonnage duty) செலுத்தினால் போதும். ஆனால், வெளிநாட்டுக் கப்பல்கள் துறைமுகத்தினுள் நுழையும் ஒவ்வொரு தடவையும் எடைவரி செலுத்தவேண்டும். கடற்கரை வர்த்தகத்தில் அமெரிக்கக் கப்பல்கள் முழு ஆதிக்கம் செலுத்தப் போவதை அச்சட்டம் முன்கூட்டியே அறிவித்தது.

கப்பலோட்டிகளைக் கட்டுப்படுத்தி ஆட்சி செலுத்தும் நோக்கத்துடன் 1790-ல் ஒரு சட்டம் இயற்றப்பெற்றது. இச் சட்டம் வெளிவரவேண்டிய பொருத்தமான காலத்திற்கு முன்னரே ஒரு விதித்தொகுப்பாக (code of law) வெளிவந்தது. கடற் பயணம் குறித்தும், கூலிவீதம் குறித்தும் கப்பல் முதலாளிக்கும் கப்பலோட்டிகளுக்குமிடையில் எழுத்துமூலம் ஒப்பந்தம் நிறைவேறுவதற்கு இச் சட்டம் வழிவகுத்தது. இவ்வாறு ஒப்பந்தம் செய்துகொள்ளாமல் கப்பல் முதலாளியினுல் தம்முடைய மாலுமிகளைக் கட்டுப்படுத்த முடியாது. கப்பல் முதலாளி தம்முடைய கப்பலைப் பிணையமாக வைத்துக் கப்பலில் வேலை செய்பவர்களுக்கெல்லாம் நிறையக் கூலி கொடுக்கவேண்டும். மேலும், இச் சட்டத்தின்படி வெளிநாட்டில் அமெரிக்க மாலுமிகளைக் கைவிட்டுவிட்டுத் திரும்பிவரும் கப்பல் முதலாளிகள் கடுந்தண்டனைக்கு உள்ளாவார்கள். அவ்வாறே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபின்னர், கப்பலைவிட்டு வெளியேறும் கப்பலோட்டிகள் தங்களுடைய கூலியை இழப்பதோடு மட்டுமன்றி, வன்முறையில் திரும்ப அமெரிக்காவிற்கு இழுத்துவரப்படுவர். 1915ஆம் ஆண்டில்லா போலட் சட்டத்தின்படி (La Follette Act) நன்மை பயக்கும் சில மாற்றங்கள் ஏற்படும் வரையில், கப்பலோட்டிகளைப்பற்றிய சட்டத்தின் அடிப்படை மேலே குறிப்பிட்ட

முறையிலேயே அமைந்திருந்தது. 1798-ல் அமெரிக்கக் கப்பற் படை ஏற்படவே, வர்த்தகக் கப்பற்படையும் வலுப்பெற்றது. 1798ஆம் ஆண்டிற்குப் பின்னர் தொடர்ந்து அமெரிக்கக் கப்பற் படை நல்ல முறையில் பணியாற்றியது.

துவக்க காலத்தில் கப்பல் தொழிலின் வளர்ச்சி தூரக்கிழக்கு வர்த்தகத்துடன் இணைந்திருந்தது. ஆனால், ஐரோப்பிய நாடுகள் நெப்போலிய யுத்தங்களில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தபோது, எங்கெங்கு வியாபாரம் தழைத்திருந்ததோ அங்கெல்லாம் அமெரிக்க வியாபாரிகள் சென்றனர். மார்வின் (Marvin) பின் வருமாறு குறிப்பிடுகிறார்: "மேல்திசைப் பிரதேசத்தில் இன்னும் மக்கள் நடமாட்டம் ஏற்படவில்லை.....சமுத்திரத்தின் அருகாமையிலேயே மக்கள் வாழ்ந்தனர். எங்கு பார்த்தாலும் சமுத்திரம் மிகவும் அருகாமையிலும், மிகவும் இயற்கையாகவும், துணிகரச் செயல்கள் புரிவதற்கு ஏற்ற வகையில் அமைந்திருப் பதுபோலவும் தோன்றியது. 'ஒவ்வொரு தெருவும் கடலை நோக் கியே செல்கிறது' என்ற உண்மை, அலைசூழ்ந்த போஸ்டனுக்குப் பொருந்துவதைவிட அநேக அமெரிக்க நகரங்களுக்கே முற்றி லும் பொருந்தும். இத் தெருக்களின் வழியே பெரும்பாலான இளைஞர்கள் கனவுகள் கண்டபடியே நெஞ்சுறுதியுடன் கடலை நோக்கிச் செல்வர். கடற்கரையில் இவர்களை வரவேற்கக் கப்பல்கள் காத்துக்கிடந்தன."[2] 'மேற்கு அமெரிக்காவின் காடு களும் மற்றவைகளும் தரும் காட்சிகளைவிட லண்டன் மாநகரத் தெருக்களும், லிஸ்பனின் துறைமுக மேடைகளும், ஹாங் ஆஃப் கான்டனும் (Hong of Canton) தருகின்ற காட்சிகளையே கடற்கரை வணிகர்கள் பெரிதும் கண்டனர்.[3] 'இங்கிலாந்து நீங்கலாக, மற்ற நாடுகளின் பண்டங்களின் எடையைவிட அதிகமான எடையுள்ள பண்டங்களே ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து 1793ஆம் ஆண்டின் இறுதியில் மிகுதியாகக் கப்பல்களில் சென் றன. இங்கிலாந்திற்கு அடுத்தபடியாக அமெரிக்க வெளிநாட்டு வர்த்தகத்தின் மதிப்பு உயர்ந்திருந்தது. மக்கள் எண்ணிக்கையின் வீதாச்சாரத்திற்கு ஏற்றவாறு ஐக்கிய அமெரிக்க நாடுகளின்[4] வர்த்தகம் உலகிலேயே தலைசிறந்து விளங்கியது' என்று யூகோ

[2] டபிள்யூ. எல். மார்வின் (W. L. Marvin), 'The American Merchant Marine', p. 43.

[3] சி. பியர்டு, எம். பியர்டு (C. and M. Beard), 'Rise of American Civilisation', I, 400.

[4] யூகோ ராபன்னே (Ugo Rabbeno), 'The American Colonial Policy', p. 141.

ராபன்னே (Ugo Rabbeno) குறிப்பிட்டுள்ளார். 1795 ஆம் ஆண்டிற்கும் 1801 ஆம் ஆண்டிற்கும் இடையில் அமெரிக்க வர்த்தகக் கப்பல் தொழிலில் கிடைத்த ஆண்டுச் சராசரி வருமானம் 3,20,00,000 டாலர்களுக்கு மேலிருக்கும் என்று நம்பப்படுகிறது.

1789 ஐத் தொடர்ந்த இருபது ஆண்டுகளில், வளர்ச்சியில் தடைகள் அவ்வப்பொழுது எழுந்தன; குழப்பங்களும் நிலவின. காலமுழுதும் நம்முடைய முக்கிய எதிரிகளாகிய இங்கிலாந்துடனும் ஃபிரான்சுடனும் நாம் மோதவேண்டியிருந்தது. 1801 முதல் 1805 வரையில் நம்முடைய வர்த்தகக் கப்பல்களைப் பாதுகாக்கவேண்டி நமது சிறிய கப்பற்படை திரிபோலியைச் சார்ந்த கடற்கொள்ளைக்காரர்களுடன் (Tripolitan pirates) போரிட வேண்டியிருந்தது. 1792-ல் ஃபிரான்சிற்கும் ஆஸ்டிரியாவிற்கும் இடையில் போர் மூண்டது. இப்போரில் ஐரோப்பா முழுவதும் பங்கேற்க நேர்ந்தது. இடையில் நேர்ந்த இரண்டு குறுக்கீடுகளைத் தவிர, இப்போர் 1815 வரையில் தொடர்ந்து நடைபெற்றது. இப்போரில் ஆங்கிலக் கப்பற்படையின் மேன்மை நன்கு விளங்கியது. ஃபிரான்சினுடைய வர்த்தகர்களும் மற்ற நேச நாட்டினரின் வர்த்தகர்களும் கடல் வாணிபத்திலிருந்து மறைந்த பின்னர், ஆங்கிலக் கப்பற்படையின் மேன்மை உயர்ந்து விளங்கியது. இதன் விளைவாக சமுத்திரத்தில் நடுநிலை வகிக்கும் நாட்டின் கொடியைப் பறக்கவிட்டுச் செல்லும் அமெரிக்க வர்த்தகர்களிடத்தில் ஃபிரான்சு நாட்டினுடைய கடல்வர்த்தகம் ஒப்படைக்கப்பெற்றது. ஐரோப்பா முழுவதும் வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் இறங்கியிருக்கும்பொழுது, ஃபிரெஞ்சு, டச்சு, ஸ்பானிஷ் காலனிகளின் பண்டங்களைக் கடத்திச் சென்று வியாபாரம் செய்வதன்மூலமாகவும், பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடுகளுடன் வியாபாரம் செய்வதன்மூலமாகவும் யாங்கி வியாபாரிகளும் கப்பல் முதலாளிகளும் நிறைய இலாபம் ஈட்டினர்.

தன்னுடைய எதிரிகளுடன் நடைபெறும் வியாபாரத்தைத் தகர்த்தெறியவும், தனக்கு எதிராகக் கடல் வாணிபத்தில் கிளம்பிய புதிய எதிரியை முறியடிக்கவும் வேண்டி, பிரிட்டன் தன்னுடைய எதிரிகளுடைய காலனிகளுடன் நடைபெறும் வர்த்தகத்தைத் தடைசெய்தது. மேலும், அமெரிக்கக் கப்பல்களில் வேலை செய்யும் பிரிட்டிஷ் மாலுமிகளை பலவந்தமாக அகற்றி பிரிட்டிஷ் கப்பல்களில் வேலைக்கமர்த்தும் உரிமையும் கடமையும் தனக்கு உண்டு என்று பிரிட்டன் கருதியது. பிரிட்டனின் இந்தக் கருத்து அருவருப்பாக இருந்தது. போர்க்காலத்தின் பிற்பகுதியில் கப்பலோட்டிகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கவே, பிரிட்

டன் இந்த உரிமையை வலிந்து, எல்லைமீறிய முறையில் உபயோகிக்கத் தொடங்கிற்று. 1806, 1807 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயக் கப்பற்படையில் வன்முறையைப் பிரயோகித்ததன் விளைவாக 6,000 அமெரிக்கக் கப்பலோட்டிகள் வேலைசெய்கின்றனர் என்பதை அரசாங்கத் துறையினர் நம்பினர். அமெரிக்கர் களேயே பெற்றோர்களாகக்கொண்ட கப்பலோட்டிகளில் எவ்வளவு பேர் பலாத்கார முறையில் ஆங்கிலக் கப்பல்களில் வேலைக் கமர்த்தப்பட்டனர் என்பதைப்பற்றிய கணக்குத் தெளிவாகக் கொடுக்கப்படவில்லை. உயர்ந்த சம்பளமும் நல்ல வசதிகளும் அமெரிக்கக் கப்பல்களிலே கிடைக்கும் என்பதைக் கண்ட ஆங்கிலேய மாலுமிகள், ஆயிரக்கணக்கில் தங்கள் நாட்டுக் கப்பல்களை விட்டு வெளியேறினர். ஹென்றி ஆடம்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார் : 'வர்ஜீனியாத் துறைமுகத்தை அடையும் ஒவ்வோர் ஆங்கிலக் கப்பலிலிருந்தும் கப்பலோட்டிகளனைவரும் வெளியேறி, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசாங்கக் கப்பல்களிலோ அல்லது தனிப்பட்ட முதலாளிகளின் கப்பல்களிலோ வேலைக் கமர்வர். பிரிட்டிஷ் போர்க்கப்பல் நியூயார்க்கு துறைமுகத்தை அடைந்தபின்னர், கப்பலின் தலைவன் வெளியில் வந்து சுற்றிவிட்டுத் திரும்ப நாவாய்க் குறட்டினை அடையும்பொழுது, அங்குத் தன்னுடன் வேலைசெய்துவரும் கப்பலோட்டிகளனைவரும் கப்பலில் தங்காமல் பட்டினத்து வீதிகளிலே சுற்றிக்கொண்டிருப்பதைக் காண்பான். அக் கப்பலோட்டிகளின் கைகளிலே அமெரிக்க பிரஜா உரிமைப் பத்திரங்கள் இருப்பதை அவன் காண்பான்'[5] தாயகத்துப் பிரஜா உரிமையை இழந்துவிட்டு, வேறொரு நாட்டின் பிரஜா உரிமையை ஆங்கிலேயர்கள் பெறுவதை நடைமுறையிலும், சட்ட பூர்வமான முறையிலும் இங்கிலாந்து ஏற்றுக் கொள்ளவில்லை.

அமெரிக்க வர்த்தகக் கப்பல்களுக்கு பிரிட்டனுடன்தான் முக்கியமான தகராறு நிகழ்ந்தபோதிலும், ஃபிரான்சுடனேயே முதலில் சண்டை தொடங்கியது. கிரேட் பிரிட்டனுடன் நடைபெறும் போர்களிலெல்லாம், 1778 ஆம் ஆண்டின் உடன்படிக்கையின்படி, தன்னை அமெரிக்கா ஆதரிக்கவேண்டும் என்று ஃபிரான்சு கருதியது. ஆனால், இத்தகைய போர்களில் வாஷிங்டன் நடுநிலைமைக் கொள்கையைப் பிரகடனம் செய்தமையால், ஃபிரான்சுக்கு அமெரிக்காமீது சினம் மூண்டது. எனவே, நம் முடைய நடுநிலைமை வகிக்கும் பொறுப்பினை மீறி நமது அரசாங்கத்தை ஃபிரான்சு பழித்துரைத்தது. இதன் விளைவாக ஐக்கிய

[5] ஹென்றி ஆடம்ஸ் (Henry Adams), 'History of the United States of America', II, 334-335.

அமெரிக்க நாடுகளுக்கும் பிரான்சுக்கும் இடையில் பறைசாற்றப் பெருத யுத்தம் (undeclared war—1798-1800) துவங்கியது. இரு நாடுகளின் கப்பற்படைகளும் மோதின. பிரான்சைச் சேர்ந்த தனிப்பட்டோரின் போர்க்கப்பல்கள் அமெரிக்கரிடம் சிக்கின. பிரிட்டிஷ் போர்க்கப்பல்களின் தாக்குதல்கள் ஏற்பட்டபோதிலும், ஃபிரான்சு நாட்டின் தனிப்பட்ட முதலாளிகளின் போர்க் கப்பல்கள் மோதியபோதிலும், திரிபோலியைச் சார்ந்த கடற் கொள்ளைக்காரர்களின் அட்டூழியங்களுக்குப் பலியான போதிலும் 1792 ஆம் ஆண்டுமுதல் 1807 ஆம் ஆண்டுவரையில் வர்த் தகக் கப்பல் தொழிலில் மட்டுமன்றி நாடு முழுவதுமே சீரும், சிறப்பும், செழிப்பும் கொழித்தன. உணவுப் பண்டங்களின் ஏற்று மதிகள் கடிதில் பெருகும் வகையில் சந்தைகள் உருவாகின. உருவாகிய சந்தைகளெல்லாம் போரினால் தூண்டப்பெற்றவை களேயாகும். போரிலே தீவிரமாக மூழ்கியிருந்த ஐரோப்பா, தனக்குத் தேவையான தானிய வகைகள், இறைச்சிபோன்ற உணவுப் பண்டங்களுக்காகவும், பருத்தி, கம்பளி, தோல் போன்ற மூலப்பொருள்களுக்காகவும், அமெரிக்காவையே நம்பியிருந்தது. உணவுப் பண்டங்களின் விலைகளும், மூலப்பொருள்களின் விலை களும் உயர்ந்தன. விவசாயிகளுக்கு நல்ல அறுவடை கிடைத் தது. உணவுப் பண்டங்களைக் கப்பல்மூலம் ஏற்றிச்செல்லும் கப்பல் முதலாளிகளுக்கும் நல்ல இலாபம் கிடைத்தது. இத் தகைய வளம் கொழிக்கும் ஆண்டுகளில் இறக்குமதியாகும் பண்டங்களை விற்பனை செய்வதன்மூலமாக வியாபாரிகளும் நிறையப் பணம் திரட்டினர். மாலுமிகளின் சம்பளமும் மாதமொன் றுக்கு எட்டிலிருந்து முப்பது டாலர்களாக உயர்ந்தது. அமெரிக் கக் கப்பல் முதலாளிகள் அடைந்த பெருத்த இலாபத்தில் பங்கு பெறுவதற்கு அயல்நாட்டினர் முனைந்தனர். முதல் உலகப் போரின் (1914-1917) துவக்க காலத்தில், அமெரிக்க ஐக்கிய நாடுகள் நடுநிலைமை வகித்து, உணவுப் பண்டங்களையும் மற்றப் பண்டங்களையும் போரில் மூழ்கியுள்ள நாடுகளுக்கு வழங்கிப் பெருத்த இலாபம் அடைந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் ஐக்கிய அமெரிக்காவின் நிலைமை இதுவே யாகும்.

வளனும் செழிப்பும் கொழித்த காலம் 1807-ல் முடிவுற்றது. ஐரோப்பியப் போரில் ஃபிரான்சு ஐரோப்பாக் கண்டத்தின் புவி யரசன் எனின், பிரிட்டன் பரந்த கடலரசியாவாள். 1804 முதல் 1807 வரையில் எல்பிலிருந்து (Elbe) பிரஸ்டு (Brest) வரையில் உள்ள வட ஐரோப்பாவைச் சுற்றிலும் வாணிபத் தடை எழுப்பியிருப்பதாக பிரிட்டன் அறிவித்தது. ஆங்கிலத் துறை

முகத்திற்கு வந்து நின்று சுங்கவரிகள் செலுத்தாமல் பிரான்சு நாட்டுத் துறைமுகங்களையோ அல்லது அதன் நேசநாடுகளின் துறைமுகங்களையோ நடுநிலைமை வகிக்கும் நாட்டின் கப்பல்கள் அடையமுடியாது என்றும் பிரிட்டன் அறிவித்தது. பிரிட்டிஷ் தீவுகளைச் சுற்றிலும் வாணிபத் தடையை எழுப்பியிருப்பதாகவும், இதனை மீறும் கப்பல்களைக் கைப்பற்ற நேரிடும் என்பதாகவும் தன்னுடைய கட்டளைகள்மூலம் நெப்போலியன் பதிலளித்தார். பிரான்ஸ் இந்த வாணிபத் தடையைச் செயற்படுத்தவில்லை. இங்கிலாந்தினுள் தான் எழுப்பிய வாணிபத் தடையை முழுதும் அமலுக்குக் கொண்டுவர இயலவில்லை. இருந்தபோதிலும், இதனால் அமெரிக்கர்களுக்குப் பெருத்த இழப்பு ஏற்பட்டது. அமெரிக்காவின் நடுநிலைமை வகிப்பதற்குரிய உரிமைகள் செல்வாக்கிழந்தன. செசாபீக் (Chesapeake) என்ற அமெரிக்க விரைபோர்க்கப்பல் (frigate) மீது ஆங்கிலக் கப்பல் குண்டுவீசியது. இதன் விளைவாக வெகுண்டெழுந்த ஜெஃபர்சன், பிரிட்டனைப் பணியவைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

அமைதியை நிலைநாட்ட விரும்பிய ஜெஃபர்சன், வாணிபத் தடையின்மூலம் ஐரோப்பாவை வழிக்குக் கொண்டுவரலாம் என்று நம்பினார். அவருடைய வேண்டுகோளுக்கிணங்க, காங்கிரஸ் 1807ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் வாணிபத் தடைச் சட்டம் (embargo act) ஒன்றினை இயற்றியது. வெளிநாட்டுத் துறைமுகங்களுக்கு அமெரிக்கக் கப்பல்கள் செல்வதை இச்சட்டம் தடைசெய்தது. எனினும், வாணிபத்திற்கெனச் செல்லும் அமெரிக்கக் கப்பல்கள் திரும்பவும் ஐக்கிய அமெரிக்காவிற்கே வந்துவிடும் என்று வாக்குறுதியளித்து, கப்பல்களில் ஏற்றியுள்ள சரக்குகளின் மதிப்பைப்போல் இருமடங்கு மதிப்புள்ள பத்திரங்களைக் கப்பல் முதலாளிகள் வழங்கினால், கடற்கரையோர வர்த்தகத்தை அச்சட்டம் அனுமதிக்கும். கிரேட் பிரிட்டனை வழிக்குக் கொண்டுவருவதற்குப் பதிலாக இச் சட்டம் நம்முடைய நாட்டுக் கப்பல் வாணிபத் தொழிலையே அழித்துவிடும்போல் இருந்தது. 1807-ல் 10,83,43,150 டாலர்கள் மதிப்புள்ள அமெரிக்க ஏற்றுமதிகள், 1808-ல் 2,24,30,860 டாலர்கள் மதிப்புள்ள அளவிற்குக் குறைந்தன. இவ்வாறே இறக்குமதிகளின் மதிப்பும் 13,85,00,000 டாலர்களிலிருந்து 5,69,90,000 டாலர்களாகக் குறைந்தது. அக்காலத்தைச் சார்ந்த ஆங்கிலேய வழிப்போக்கர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'நியூயார்க்கில் முன்பெல்லாம் நிறையக் கப்பல்கள் இருந்தன. அவையெல்லாம் இப்பொழுது அக்குவேறு ஆணிவேருகப் பிரிக்கப்பட்டு, பயன்றற்றுக்

கிடக்கின்றன. அக் கப்பல்களின் மேல்தளங்கள் காலியாகக் கிடக்கின்றன. கப்பலேணி வாயில்களின் கட்டுகள் தளர்த்தப்பட்டுள்ளன. மேல்தளத்தில் ஒரு மாலுமியைக்கூடக் காண்பது அரிதாகும். நாவாய்க் குறடுகளில் கப்பல்களில் ஏற்றுவதற்கென பெட்டியோ படுக்கையோ, மூட்டையோ முடிச்சோ, பீப்பாயோ பொட்டணமோ ஒன்றும் கிடையாது. வணிகக் கணக்குமனைகளில் பல மூடப்பட்டுக் கிடந்தன; அல்லது அம் மனைகள் வாடகைக்கு விடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தன. துறைமுகங்களில் ஒருசில வணிகரும், கிளார்க்குகளும், கூலியாட்களும், தொழிலாளர்களுமே நடமாடினர். அவர்களும் தங்களுடைய சட்டைப்பைகளிலே கைகளைச் செருகிக்கொண்டு அங்குமிங்கும் அலைந்தபடியே இருந்தனர்.....காப்பி ஓட்டல்களும் காலியாகவே இருந்தன;.....கடற்கரையோர முள்ள வீதிகளில் மக்கள் நடமாட்டம் இல்லை; நாவாய்க் குறடுகளில் புல்பூண்டுகள் முளைக்கத் தொடங்கின.....''[6] இவ் வழிப்போக்கரின் அந்தாட்சி ஒருதலைப்பட்சமானதாக இருக்கலாம். எனினும், 55,000 மாலுமிகளும் 1,00,000 நூட்பத்தொழிலாளர்களும் மற்றத் தொழிலாளர்களும் வேலை இழந்து தவித்தனர் என்றும், வாணிபத் தடைச்சட்டத்தின் காரணமாக 1,25,00,000 டாலர்கள் மதிப்புள்ள வருமானத்தைக் கப்பல்கள் இழந்தன என்றும் மெக்மாஸ்டர் (McMaster) மதிப்பிட்டுள்ளார். சுங்கத் தீர்வைகளின்மூலம் கிடைத்த வருமானம் 1,60,00,000 டாலர்களாகும். பின்னர் இத்தடைச் சட்டத்தின் விளைவாக வருமானம் ஒருசில ஆயிரம் டாலர்களாகக் குறைந்தது.

வாணிபத் தடைச்சட்டத்தின் காரணமாகக் கப்பல்துறை முதலாளிகளுக்கு விளைந்த நஷ்டங்கள் ஏராளமாகும். குறிப்பாக நியூ இங்கிலாந்து மாநிலத்தில் இச் சட்டத்தை எதிர்த்து 100 மெஸ்ஸாசுசெட்ஸ் நகரங்கள் தீர்மானங்கள் போட்டன. கள்ளக் கடத்தல்கள் மிகுந்திருந்தன. நியூ இங்கிலாந்தின் சில துறைமுகங்களிலிருந்து சரக்கேற்றப்பட்ட கப்பல்கள் கடலினுள் துணிந்து நுழைந்தன. வசதிக்குறைவுகள் எவ்வளவு இருந்த போதிலும் இலாபம் தரும் வர்த்தகத்தை நடத்த இயலும் என்று நியூ இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள் கருதினர்கள். பரவலான எதிர்ப்பு இருந்தபோதிலும், ஜெஃபர்சனின் பொருளாதாரப் பகிஷ்காரத் திட்டம் சிறப்புடையதாகும். அத் திட்டத்தைக் குறிப்பிட்ட கால அளவிற்கேனும் செயற்படுத்தியிருந்தால், ஜெஃபர்சன்

[6] ஜான் லாம்பர்ட் (John Lambert), 'Travels Through Canada and the United States of North America in the Years 1806, 1807 and 1808 (1810), II, 65.

அவர்கள் விரும்பிய விளைவுகள் ஏற்பட்டிருக்கும். பின்னர் புகுத்திய தொடர்பின்மைத் திட்டமும், வாணிபத் தடைத் திட்டமும் வெற்றியடைந்தன. சில நாட்களுக்கு முன்னரே அமெரிக்கா போர் துவங்கிவிட்டது என்பதையுணராத பிரிட்டன் 1812-ல் கவுன்சில் ஆர்டர்களை (Orders in Council) ரத்துசெய்துவிட்டது.[7]

கப்பல்துறை முதலாளிகளின் நிர்ப்பந்தத்திற்கிணங்கி, 1809ஆம் ஆண்டு, மார்ச்சு மாதத்தில் அமெரிக்க அரசாங்கம் வர்த்தகத் தடைச்சட்டத்தை நீக்கிவிட்டுத் தொடர்பின்மைச் சட்டத்தை இயற்றியது. கிரேட் பிரிட்டனுடனும், பிரான்சுடனும், இவற்றின் ஆதிக்கத்திலுள்ள நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது என இச்சட்டம் குறிப்பிட்டுள்ளது. இச் சட்டமும் 1810-ல் ரத்தாகியது. மேக்கன் சட்டம் (Macon Bill) என்ற புதிய சட்டமொன்று நிறைவேறியது. இச் சட்டத்தின்படி நம்முடைய கப்பல்களுக்கு எதிராக நிறைவேறியுள்ள ஆணைகளை இங்கிலாந்தோ பிரான்சோ திரும்பப் பெற்றுக்கொண்டால், அமெரிக்காவின் தொடர்பின்மைத் திட்டத்தைத் திரும்பப்பெற்றுக்கொள்ளாத நாட்டிற்கு எதிராக அரசாங்கம் பயன்படுத்தும். இந்தச் சட்டம் நிறைவேறியவுடனேயே, நெப்போலியன் தன் ஆணைகளனைத்தும் ரத்தாயின என்று அறிவித்தான் (ஆகஸ்டு 5, 1810). எனவே, 1811ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாம் நாளுக்கு முன்னர் கவுன்சில் ஆர்டர்களை இங்கிலாந்து நீக்காவிடின், தொடர்பின்மைச் சட்டத்தை இங்கிலாந்திற்கு எதிராகத் தான் பிரயோகிக்கப்போவதாக மாடிசன் (Madison) அறிவித்தார். இங்கிலாந்து மாடிசனின் அறிவிப்பைப்பற்றிச் சிறிதும் கவலைகொள்ளவில்லை. தன்னுடைய ஆணைகளை ரத்துசெய்துவிட்டதாக நெப்போலியன் அறிவித்திருந்தபோதிலும், வழக்கம்போலவே கையிலே சிக்கிய அமெரிக்கக் கப்பல்களைச் சூறையாடும் வேலையில் அவன் தொடர்ந்து ஈடுபட்டிருந்தான் இருந்தபோதிலும், 1809, 1810ஆம் ஆண்டுகளில் இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் பெருகின. அயல்நாட்டு வர்த்தகத்தில் கணக்கிடப்பட்ட சரக்கின் எடை 1810-ல் 9,81,019 டன்களாக இருந்தன. 1847 வரையில் இந்த உச்ச நிலையை அடையவே முடியவில்லை. இவ்வளவு தடைகளும் சோர்வு ஊட்டும் நிலைமைகளும் நிலவியபோதிலும், நமது சொந்த அரசாங்கம் விதித்த வாணிபத் தடைச்சட்டத்தினால் வர்த்தகக்

[7] டபிள்யூ. டபிள்யூ. ஜென்னிங்ஸ் (W. W. Jennings), 'The American Embargo' (1921), and L. M. Sears, 'Jefferson and the Embargo'. இது பற்றிய முழு விவரத்தை இந் நூல்களில் காண்க.

கப்பல்துறைக்குப் பலத்த அடி விழுந்தபோதிலும், இக்காலத்தில் தான் நாட்டில் வளர்ச்சியும் செழிப்பும் நிலவின.

1812ஆம் ஆண்டின் போர்

1811-ல் ஐக்கிய அமெரிக்கா இங்கிலாந்துடன் போரிடத் தயாராகிக்கொண்டிருந்தது. நமது அரசாங்கத்தைப் பழித்துரைப்பதிலும், நமது கப்பல் தொழிலில் நஷ்டம் ஏற்படச் செய்வதிலும் பிரான்சும் இங்கிலாந்தும் ஒன்றுக்கொன்று போட்டியிட்டவண்ணம் முனைந்து நின்றன. இருந்தபோதிலும், ஐக்கிய அமெரிக்காமீது தன்னுடைய திட்டத்தைப் புகுத்தித் தொல்லை கொடுத்த நாடு இங்கிலாந்து ஆகும். பாதுகாப்பான துறைமுகத்தை வணிகர்கள் அடைய வேண்டும் என்ற கருத்தில் 1812ஆம் ஆண்டின் இளவேனிற் காலத்தில் காங்கிரஸ் மூன்றும் முறையாக வாணிபத் தடையை எழுப்பியது; ஜூன் 18ஆம் நாளில் போர்க்குரல் எழுப்பியது. ஜூன் முதல் நாள் வெளிவந்த செய்தியில் மாடிசன் விளக்கியுள்ளதுபோல, கடலில் நமது கொடியை ஆங்கிலேயக் கப்பல்கள் அவமதித்தமையாலும், நமது கப்பல்கள் கைப்பற்றப்பட்டமையாலும், சட்டத்திற்கு மாறுன வகையில் நமது கப்பலோட்டிகளை ஆங்கிலக் கப்பற்படையினர் கைதுசெய்தமையாலும், நமது துறைமுகங்களைச் சுற்றிலும் வாணிபத் தடைச் சுவர்களை அவர்கள் எழுப்பியமையாலும், வெறுப்பூட்டும் கவுன்சில் ஆர்டர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்தமையாலும், நமது எல்லைகளில் இந்தியர்களை அவர்கள் உசுப்பிவிட்டமையாலுமே போர் மூண்டது. மேலே விளக்கியுள்ள காரணங்களில் ஒன்றைத் தவிர மற்றவையாவும் அமெரிக்க வணிகர்களின் உரிமைகளை மிகவும் பாதித்தன. தென்னூட்டிலிருந்தும், மேற்கத்தியப் பகுதிகளிலிருந்தும் ஹென்றி கிளேயின் தலைமையின்கீழ்த் திரண்டெழுந்த,போரில் நாட்டமுள்ள இளைஞர்கள்தாம் காங்கிரசில் போர்த்தேவை என்ற கருத்தை வலியுறுத்தினர். மேற்கத்திய விவசாயிகளின் பிரதிநிதிகளும், தோட்ட முதலாளிகளின் பிரதிநிதிகளுமே யுத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்து, யுத்தம் நிகழ வழிவகுத்தனர். வர்த்தகத்தில் ஏற்படும் தடைகளால் கப்பல் தொழிலைப்போலவே விவசாயமும் பாதிக்கப்பட்டது. ஏனெனில், நம்து ஏற்றுமதிகளின் பெரும்பகுதி விவசாயப் பண்டங்களாகவும், தோட்டத்துப் பண்டங்களாகவும் இருந்தன. விவசாயப் பண்டங்களின் விலைகள் இறங்கியமைக்கு கிரேட் பிரிட்டனே பொறுப்பாகும் என்பதை விவசாயிகளும்,

தோட்ட முதலாளிகளும் நன்குணர்ந்திருந்தனர்.[8] எல்லைப்புறம் முழுதும் போர்த்தீ மூண்டதற்கு இந்தியர்கள் கொடுத்த தொல்லையும், ஃபிளோரிடாவையும் கனடாவையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் இணைக்க விரும்பியமையும்கூடக் காரணங்களாக அமையும்.

"போருக்குத் தூண்டுகோலாக அமைந்தது விவசாயத்திலேயுள்ள ஈடுபாடேயன்றிக் கடல் வாணிப உரிமையன்று. சட்ட மன்றத்திலே அயல்நாட்டுத் தொடர்புகள்பற்றிய கமிட்டியின் அறிக்கை விவாதத்திற்கு வந்ததிலிருந்து, அவ்விவாதத்திலே ஒரே ஒரு சொல்தான் அடிபட்டது. சலிப்புத்தட்டும் அளவுக்கு நிகழ்த்த குரலில் ஒலி எழுப்பும் 'விப்பூர் – வில்' (whip - poor – will) எனும் அமெரிக்கப் பறவை போல விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களனைவரும் கனடா! கனடா! கனடா! என்றே பேசித் தீர்த்தனர்" என்று ஜான் ரேன்டல்ப் (John Randolph) குரலெழுப்பினர்.[9]

ஆனால், மறுபக்கத்தில் பிரிட்டிஷ் நடவடிக்கைகளால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நியூ இங்கிலாந்து இப் போரினைப் பலமாக எதிர்த்தது. ஏனெனில், 'வர்த்தகத்திற்கு எதிராகவும், நியூ இங்கிலாந்தின் மீதுள்ள காழ்ப்பினாலும், பிரான்சின் கொடுங் கோலனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அடங்கியமையாலுமே'[10]

[8] ஜே. டபிள்யு. பிராட் (J. W. Pratt) அவர்களின், 'Expansionists of 1812, (1925) எனும் நூலில்' 1812ஆம் ஆண்டில் போர் ஏற்பட்டதற்குரிய காரணங்களைக் காண்க. கனடாவைக் கைப்பற்றவேண்டும் என்ற எண்ணம் போருக்குக் காரணமாக அமைந்தது என்பதை அவர் நிரூபிக்கிறார். ஆனால், இந்தியர்கள் கொடுத்த தொல்லையை நீக்குவதற்கே முக்கியமாகப் போர் ஏற்பட்டது என்றும், 'நிலப்பசி' மட்டும் போருக்குரிய காரணமாகாது என்றும் அவர் குறிப்பிடுகிறார். போர் ஏற்படுவதற்கு விவசாய மந்தமும் ஒரு காரணமாகப் போதுமான அளவுக்கு அமையும் என்பதை அவர் சிந்திக்க வில்லை. விவசாய மந்தமும் ஒரு காரணமாக அமையும் என்று ஜார்ஜ் ஆர். டெய்லர் (George R. Taylor) தம்முடைய 'Agrarian Discontent in the Mississippi Valley Preceding the War of 1812', Journal of Political Economy, XXXIX, 471-505 (Aug. 1931) எனும் கட்டுரையில் விளக்கியுள்ளார். 'The Origins of the War of 1812: A Survey of Changing Interpretations', Mississippi Valley Historical Review, XXVIII, 171-186 (Sept., 1941) எனும் கட்டுரையில் டபிள்யு. ஹெச். குட்மேன் (W. H. Goodman) போரின் காரணங்களைப்பற்றிய பல்வேறு கருத்துகளை விளக்கியுள்ளார்.

[9] Annals of Congress, 12th Cong., I, 533.

[10] Declaration of a Barnstable County Peace Convention, quoted by S. E. Morison, 'The Maritime History of Massachusettes', p. 198.

ஐக்கிய அமெரிக்கா இப்போரினைத் துவக்கியுள்ளது என்பதாக நியூ இங்கிலாந்தில் பலர் நம்பினார்கள். போரின் விளைவால் மேற்குப் பிரதேசத்தில் புதிய விவசாயப் பேரரசுகள் எழும்பி, அவை கடற்கரை மாநிலங்களின் மங்கிவரும் செல்வாக்கை மேலும் சிதைக்கும் என பெடரலிஸ்டு ராஜதந்திரிகள் நம்பினர். சண்டையில் இறங்கவோ அல்லது போர்ச் செலவுக்கெனப் பணம் கடன் தரவோ நியூ இங்கிலாந்து சில வேளைகளில் மறுத்ததோடு நில்லாமல், பிரிட்டனுக்கு உதவிபுரியவும், பிரிவினைக்கு ஆயத்தம் செய்யவும் முனைந்தது. வாணிபத் தடைகள் எழுந்தமையால், இங்கிலாந்தில் உணவுப் பண்டங்களின் விலை கூடியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் போர்முழக்கம் கேட்டு ஐந்து நாட்களுக்குப் பின்னரே இங்கிலாந்து கவுன்சில் ஆர்டர்களைத் திரும்பப்பெற்றுக் கொண்டது. தற்காலத்துக் கடலடித் தந்தி முறைகள் (cables) அன்றுஇருந்திருப்பின், உடன் தானே போர் நிறுத்தப்பட்டிருக்கும்.

1812-ல் நடைபெற்ற யுத்தம் கடலில் நடைபெற்ற யுத்தமாகும். சமாதான உடன்படிக்கைக்குப் பின்னர் நடைபெற்ற நியூ ஆர்லியன்ஸ் போரைத் தவிர, நிலத்தின்மீது நடைபெற்ற போர்கள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையல்ல. அமெரிக்கப் படைகளுக்கும் இப்போர்களில் வெற்றி ஏற்படவில்லை. கனடாவை எளிதில் கைப்பற்றிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் கிளேயும் கால்ஹனும் (Calhoun) போர் துவங்குவதற்கு முன்னர் மிகவும் சாதாரணமாகப் பேசிக்கொண்டனர். எனினும், கனடா மீது படையெடுக்க அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளனைத்தும் படுதோல்வியடைந்தன. மறுபுறத்தில் இருபத்து மூன்று கப்பல்களை மட்டுமுடைய அமெரிக்கக் கப்பற்படை திறமையுடன் செயலில் இறங்கியது. அக் கப்பற்படை எதிரிக்குச் சொந்தமான 254 போர்க்கப்பல்களையும், வாணிபக்கப்பல்களையும் கைப்பற்றியது. எனினும், இறுதியில் பிரிட்டிஷ் கப்பற்படை அமெரிக்கக் கப்பற்படையை அமெரிக்கத் துறைமுகங்களைவிட்டு நகரமுடியாமல் தடுத்துவிட்டது; அல்லது அக் கப்பற்படையை அழித்துவிட்டது. போர் முடியுந் தறுவாயில், 1,000 கப்பல்களைக்கொண்ட பிரிட்டிஷ் கப்பற்படை அமெரிக்கக் கடற்கரை முழுவதையும் சுற்றி முற்றுகையிட்டு, 1,400 வாணிகக் கப்பல்களையும் மீன்பிடிக்கும் படகுகளையும் கைப்பற்றியது. 1811-ல் ஏற்றுமதிகளின் மதிப்பு 6,13,17,000 டாலர்களாக இருந்தது. 1814-ல் ஏற்றுமதிகளின் மதிப்பு 69,27,000 டாலர்களாகக் குறைந்தது. அதே காலத்தில் இறக்குமதிகளின் மதிப்பு 5,84,00,000 டாலர்களிலிருந்து 1,29,65,000 டாலர்களாகக் குறைந்தது. அமெரிக்காவின் சார்பில் தனிப்பட்டோரின் போர்க்

கப்பற்படைதான் கணிசமான அளவிற்கு வெற்றிபெற்றது. அப் படை 3,90,00,000 டாலர்கள் மதிப்புள்ள 1,300 பொருள்களைச் சூறையாடியது. சொந்த நாட்டிற்காகப் போரிடுவதை உணர்ந்த, தன்னம்பிக்கையுள்ள அமெரிக்கக் கப்பலோட்டி, தனிப்பட்டோ ரின் ஆதிக்கத்திலுள்ள போர்க்கப்பல் வீரனைப்போலவே கப்பல் தளத்திலே நின்று வீரப்போர் புரிந்தான்.

நெப்போலிய யுத்தங்களின் இறுதி நடவடிக்கைகளில் முக்கி யக் கவனம் செலுத்திய பிரிட்டனுக்கு, அமெரிக்கப் போர் ஒரு பக்கப் பிரச்சினையாகும் (side issue). எனினும், அமெரிக்கப் போரி லேயே பிரிட்டிஷ் கப்பற்படையின் பெரும்பகுதி ஈடுபட நேர்ந்தது. அமெரிக்காவைச் சார்ந்த தனிப்பட்டோரின் போர்க்கப்பற் படையினால் பிரிட்டனுக்கு விளைந்த இழப்புகள் ஏராளமாகும். அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு உணவுப் பண்டங்கள் வரா மையால், இங்கிலாந்தில் அப்பண்டங்களின்விலைகள் உச்சநிலையை அடைந்தன. உண்மையில் இந்தப் போரின் விளைவினால் திக்கு முக்காடும் நிலையே ஏற்பட்டது. 1814ஆம் ஆண்டு டிசம்பர் 27-ல் சமாதானம் ஏற்பட்டது. கப்பலோட்டிகளைச் சிறைப்படுத் திய செயல், தேடும் உரிமை, வாணிபத் தடைகள் போன்ற போருக்குரிய காரணங்களைப்பற்றிய விளக்கங்கள் சமாதான உடன்படிக்கையில் இடம்பெறவில்லை. இவ்வுடன்படிக்கையில் நம்முடைய கப்பற்படையினர் தங்களுடைய உரிமைகளை வலி யுறுத்தியுள்ளனர். இப் பிரச்சினைகுறித்து மீண்டும் கருத்து வேற் றுமை ஏற்படாது என்றே தோன்றியது. மேற்குப் பிரதேசம் போரின் உடனடி இலாபங்களை அனுபவித்தது. வடமேற்கு, தென்மேற்குப் பிரதேசங்களிலுள்ள இந்தியர்களின் செல்வாக்குத் தகர்ந்தது. மேலும், இப் போர் ஃபிளோரிடாவின் இணைப்பிற்கு வழிகோலியது. எல்லைப்புறமும் விரைவில் விரிந்து சென்றது.

போரினால் விளைந்த இயல்பான எதிரொலி உடனடியாக உணரப்பெற்றது. சமாதான உடன்படிக்கை ஏற்பட்டதால், கப்பல் வாணிபத்தின் தடைகளகன்றன. அயல்நாட்டு வர்த்த கத்தில் ஈடுபட்டுள்ள கப்பல் சரக்கின் எடை 1814-ல் 6,74,600 டன்களாக இருந்து, 1815-ல் 8,24,300 டன்களாக உயர்ந்தது. 1814-ல் ஏற்றுமதிகளின் மதிப்பு 69,27,400 டாலர்களாக இருந் தது. 1818-ல் அவற்றின் மதிப்பு 9,32,81,100 டாலர்களாக உயர்ந்தது. 1814-ல் இறக்குமதிகளின் மதிப்பு 1,29,65,000 டாலர்களாக இருந்தது. ஆனால், 1816-ல் அவற்றின் மதிப்பு 14,71,03,000 டாலர்களாக உயர்ந்தது. இந்தத் திடீர் வளப் பம் நாட்டிற்கு உகந்ததன்று; இறக்குமதிப் பண்டங்கள் வெள்ளம் போல் வந்து குவிந்ததால், போர்க்காலத்தில் அமைக்கப்பெற்ற

அநேக பொறிவழித் தொழில்கள் மந்தமடைந்தன. மேலும், நாட்டின் நிதிநிலைமையிலும் குழப்பம் ஏற்பட்டது. எனவே, 1818-ல் அயல்நாட்டு வர்த்தகத்தில் கப்பல் சரக்கின் எடை குறையத் தொடங்கியது. 1819-ல் ஏற்றுமதிகளிலும் இறக்குமதி களிலும் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டது.

போர்க்காலத்தைத் தொடர்ந்த ஆண்டுகளில் பரிமாற்றக் கொள்கையின் (principle of reciprocity) அடிப்படையில் வியாபா ரத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் சட்டம் இயற்ற முயற்சி எடுக்கப்பட்டது. 1815 ஆம் ஆண்டு, மார்ச்சு 8-ல் இயற்றப் பெற்ற சட்டத்தின்படி, வெளிநாட்டுக் கப்பல்கள்மூலம் வரும் சரக்குகள்மீதும் இறக்குமதியாகும் சரக்குகள்மீதும் முந்திய சட்டங்களின்படி விதிக்கப்பட்ட பேதங்காட்டும் வரிகளை (discriminating duties) நாம் அகற்றவேண்டுமெனில், குறிப்பிட்ட வெளிநாடு, நம் பொருள்களின்மீது விதித்துள்ள பேதங்காட்டும் வரிகளையும், ஈடுசெய் வரிகளையும் (countervailing duties) ரத்து செய்யவேண்டும். மறுபுறத்தில், 1817-ல் ஒரு சட்டம் நிறை வேறியது. இச் சட்டம் ஐரோப்பியக் கடற்கடவுச் சட்டங்களைப் போல் அமைந்துள்ளது. அமெரிக்கக் கப்பலைத் தவிர வேறு எந்தக் கப்பலின்மூலமும் வெளிநாட்டுத் துறைமுகத்திலிருந்து இறக்கு மதியாகும் பண்டங்களை இச் சட்டம் தடைசெய்தது. அவ்வாறே எந்த நாட்டிலிருந்து பண்டங்கள் வருகின்றனவோ அந்த நாட்டிலிருந்து வரும் கப்பலைத் தவிர, வேறு எந்தக் கப்பலின் மூலமும் வெளிநாட்டுத் துறைமுகத்திலிருந்து இறக்குமதியாகும் பண்டங்களையும் இச்சட்டம் அனுமதிக்கவில்லை. அதே நேரத் தில் இச் சட்டத்தின்படி கடற்கரை வர்த்தகத்தில் (coasting trade) வெளிநாட்டுக் கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால், நமது கப்பல்கள்மீது விதித்துள்ள இத்தகைய தடைகளை மற்ற நாடுகள் நீக்கினால், நாமும் நீக்குவோம். மறைமுகக் கப்பல் சரக்கேற்று வியாபாரத்தில் அயல் நாடுகளுடன் பரிமாற்ற வாணிப முறையை நாம் வகுத்துக்கொள்ளலாம் என்ற நோக்கத் தில் 1828-ல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இம் மூன்று சட்டங்களின் விளைவாக, அயல் நாடுகளுடன் பரிமாற்ற வாணிப உடன்படிக்கைகள் அடுத்தடுத்து ஏற்பட்டன. இரு நாடுகளுக் கும் இடையிலுள்ள நேரடி வர்த்தகத்தில் வேறுபாடு காட்டும் வரிகளை (differential duties) கிரேட் பிரிட்டன் 1815 ஆம் ஆண்டு ஜூலை மூன்றாம் நாள், ஓர் உடன்படிக்கை மூலம் நீக்கி யது. இவ்வுடன்படிக்கையைத் தொடர்ந்து 1822-ல் பிரான்சுட னும், 1828-ல் பிரஷியாவுடனும் (Prussia) உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பெற்றன. இத்தகைய உடன்படிக்கைகள்

வர்த்தகத்தில் பரிமாற்ற சுதந்திரத்தை வழங்கின. இவ்வாறே பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளுடனும், மத்திய அமெரிக்காவுடனும், தென் அமெரிக்காவுடனும் ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. 1830 ஆம் ஆண்டுவரையில் மேற்கிந்தியத் துறைமுகங்களை ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தகத்திற்கு இங்கிலாந்து திறந்து விடவில்லை; அமெரிக்காவிற்கு எதிராகப் பிரயோகிக்கப்பெற்ற, 1817 ஆம் ஆண்டுச் சட்டத்தின் கட்டுப்பாட்டு விதிகளையும் இங்கிலாந்து ரத்து செய்யவில்லை.

மறுமலர்ச்சியும் சரிவும்

1820 முதல் 1830 வரையில் மீண்டும் நாட்டில் வளர்ச்சியும் செழிப்பும் ஏற்பட்டன. கப்பல் சரக்கின் எடையளவு, அயல் நாட்டு வர்த்தகத்தைப் பொறுத்தவரையில், 1815-1817 ஆண்டுகளில் நிலவிய எடையளவுக்குச் சமமாக இல்லை; அல்லது அடுத்த இருபதாண்டுகளில் நிலவிய கப்பல் சரக்கின் எடையளவுக்குச் சமமாகவும் இல்லை. எனினும், அயல்நாட்டு வர்த்தகத்தைப் பொறுத்தவரையில், அமெரிக்கக் கப்பல்களில் ஏற்றிச் சென்ற சரக்குகளின் எடையளவின் விகிதாச்சாரம் மட்டும் 1826-ல் 92·5 சதவீதத்தைத் தொட்டு நின்றது. இவ்வாண்டிற்கு முன்னரோ, பின்னரோ இந்த அளவுக்குக் கப்பல் சரக்கின் எடையளவு உயர்ந்திருந்ததில்லை 'எந்த வகையில் பார்த்தாலும், கப்பல் வாணிபத் தொழில் சிறந்து விளங்கிய காலம் இதுவேயாகும்' என ஜே. ஆர். சோலி (J. R. Soley) குறிப்பிட்டுள்ளார்.[11] நம்முடைய பண்டங்களனைத்தையும் நடைமுறையில் நம் கப்பல்களேமுலமே கொண்டும் கொடுத்துமிருக்கிறோம். மேலும், வேகத்திலும், கட்டுமானத்திலும், நீட்டித்த உழைப்பிலும் அயல்நாட்டில் செய்யப்படும் கப்பல்களைவிட மேலான கப்பல்களைக் கட்டும் திறனுடைய யாங்கிகளை நாம் பெற்றுள்ளோம். அவர்களுக்கிருக்கும் புகழின் காரணமாக 1815 ஆம் ஆண்டிலிருந்து 1840 ஆம் ஆண்டிற்குள்ளாக 5,40,000 டன்கள் எடையுள்ள கப்பல்கள் வெளிநாட்டினருக்கு விற்கப்பட்டுள்ளன. 500 டன்கள் எடையுள்ள சிறந்த கப்பலை அமெரிக்காவிலே செய்வதற்கு ஆகும் செலவு 37,500 டாலர்களாகும். அதே கப்பலை இங்கிலாந்தில் செய்தால், 48,000 டாலர்களாகும். பல தலைமுறைகளுக்குக் கப்பல்கட்டும் தொழிலில் நிபுணத்துவம் இங்கிலாந்து மக்கள் ஈடுபட்டிருந்தமையால், உலகிலேயே மிகவும் தேர்ச்சி பெற்ற கப்பல் கட்டும் கலைஞர்கள் அங்குத் தோன்றியிருந்தனர்.

[11] In N. S. Shaler (ed.), 'The United States of America', chapter, 'The Maritime Industries of America,' I, 539.

வட ஐரோப்பாவிலிருந்து கப்பல் கட்டும் கலைஞர்கள் பலர் உயர்ந்த கூலி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அமெரிக்காவில் வந்து குடியேறினர்கள். கப்பல்களைக் கடலில் திறமையுடன் செலுத்தும் துணிவும் அறிவும் நிரம்பிய யாங்கி மாலுமிகளும் இருந்தனர். காட் (cod) மீன் வகைகள் நிரம்பியுள்ள கரையோரப் பகுதிகளில் கலத்தினைச் செலுத்துவதாயினும் சரி, திமிங்கில வேட்டைக் கப்பல்களைச் செலுத்துவதாயினும் சரி, அட்லான்டிக் மகாசமுத்திரத்தின் குறுக்கே செல்லும்பொழுது பாய்மரத்தைக் கட்டுவதாயினும் சரி, யாங்கி மாலுமிகள் மிகவும் திறமையுடனேயே காரியமாற்றினர். உயர்ந்த கூலிகள் கொடுக்கப்பட்டபோதிலும், ஓர் அமெரிக்கக் கப்பலைச் செலுத்துவதற்கு ஆகும் செலவு மிகவும் குறைவாகும். ஏனெனில், அக் கப்பலில் வேலை செய்யும் கப்பலோட்டிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும்.



(Data from Statistical Abstract, 1952 : அதிகாரம்-25, பிரிவு-3, பாரா 1 (இரண்டாம் பாகம்)

அமெரிக்கக் கப்பல்களின்மூலம் ஏற்றிச் செல்லப்படும் ஏற்று மதிகள், இறக்குமதிகள் ஆகியவற்றின் விகிதாசாரங்கள்.

சொந்த நாட்டின் கப்பல்களிலேயே ஏற்றிச் செல்லும் சரக்கின் எடையளவுதான் அந்த நாட்டின் வர்த்தகக் கப்பல் வாணிபத்தின் செழிப்பின் அறிகுறியாகும். உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கு முந்திய காலமே நமது கப்பல் வாணிபத்தின் பொற்காலமாகும். அக்காலத்திற்குப் பின்னர் சரிவே ஏற்பட்டது. முதலாவது, இரண்டாவது உலகப் போர்களின் விளைவால் ஏற்பட்ட பற்றுக்குறைகளின் காரணமாக ஒரு புதிய மலர்ச்சி ஏற்பட்டது.

அமெரிக்காவில் அஞ்சல் கப்பலும் முக்கியத்துவம் அடைந்தது. நியூயார்க்கிற்கும் லிவர்பூலுக்கு மிடையில் 1816-ல் பிளாக் பால் லைன் (Black Ball Line) எனும் அஞ்சல் படகுகளின் முதல் பாதை ஏற்பட்டது. லிவர்பூலுக்குச் செல்வதற்குரிய இரண்டாவது பாதை 1822-ல் ஏற்பட்டது. லண்டனுக்கும் லீ ஹாவருக்கும் (Le Havre) செல்லும் வழிகளும் உடனே ஏற்பட்டன. வாணிபக் கப்பல்களைவிடப் பெரியனவாகவும் சிறந்தவைகளாகவும் இருந்த இத்தகைய அஞ்சல் கப்பல்கள் உயர்தர சரக்கேற்றத்திலும் பிரயாணிகளின் பயணத்திலுமே பெரிதும் ஈடுபட்டுத் தேர்ச்சியடைந்தன. இக் கப்பல்கள் காலவரையறையின்படி பிரயாணிகளை ஒழுங்காக நடத்தின. சில வேளைகளில் அவை பதினெட்டு அல்லது இருபது நாட்களுக்குப் பயணம் செய்ய நேரிடும். மேலும், அக் கப்பல்கள் அட்லான்டிக் சமுத்திரத்தின் குறுக்கே சென்று பயணம் செய்வதற்கு ஏற்றவாறு கட்டப்பெற்றுள்ளன. அஞ்சல் கப்பல்களைப் பயன்படுத்திய காலம் கழிந்த பின்னர் நீராவிக் கப்பல்கள் தோன்றின. எனினும், நீராவிக் கப்பல்கள் கடலிலே பெரும் எண்ணிக்கையில் மிதந்த காலத்திலேயே அஞ்சல் கப்பல்களும் செல்வாக்குடன் இருந்தன.

எவ்வளவு செழிப்பு நிலவியபோதிலும், அயல்நாட்டு வர்த்தகத்தைப் பொறுத்தவரையில், கப்பல் சரக்கேற்ற எடையளவு (tonnage) 1820-ல் இருந்ததைவிட 1830-ல் குறைவாகவே இருந்தது. மேலும், மக்கள் எண்ணிக்கை பெருகப்பெருக, தலா கப்பல் சரக்கேற்ற எடையளவுகள் (per capita tonnage) 1807-ல் 12·54 கன அடிகளாகவும், 1810-ல் 13·43 கன அடிகளாகவும் இருந்தன. ஆனால், அந்த எடையளவு 1839-ல் 4·25 கன அடிகளாகவும், 1855-ல் 8·63 கன அடிகளாகவும் குறைந்தன. இக்காலமே விரைந்து செல்லும் கப்பல்களின் சகாப்தம் என்று அழைக்கப்படும். இத் துறையில் பின்னர் நிகழ விருந்த சரிவுக்கான காரணங்கள் உடனடியாகத் தென்படலாயின.

சமுத்திரப் போக்குவரத்து வரலாற்றில் 1830 ஆம் ஆண்டிலிருந்து 1860 ஆம் ஆண்டு வரையில், உலகம் கண்டிராத மிக முக்கியமான முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. இக் காலத்தில் தொழிற் புரட்சியின் விளைவுகள் தெளிவாகத் தென்பட்டன. உலகமுழுதும் கப்பல் சரக்கேற்றத்தின் மொத்த எடையளவு கடிதில் பெருகியது. இக்காலத்திலேயே கப்பல்களின் பருமனும் பெருகின. 1820 முதல் 1829 வரையில் உள்ள ஆண்டுகளில் கட்டப்பட்ட கப்பல்களின் பருமனைப்போல் மூன்று மடங்கு கூடுதலான பருமனையுடைய வாணிபக் கப்பல்கள் 1850

முதல் 1859 வரையில் உள்ள ஆண்டுகளில் கட்டப்பட்டன. எதிர்காலத்தின் போக்கு எப்படி அமையும் என்பதைப்பற்றி நன்கு உணர்ந்திருந்த கப்பல் கட்டும் கலைஞர்கள் மரக்கப்பல்களுக்குப் பதிலாக இரும்புக்கப்பல்களைக் கட்டினர்; அக் கப்பல்களில் பாய் மரத்தை நீக்கிவிட்டு நீராவி சக்தியைப் பயன்படுத்தினர். இவ் வாண்டுகளும் அமெரிக்க வர்த்தகக் கப்பல் வாணிபத்தில் சிறப்பு டையவைகளாகும். அயல்நாட்டு வர்த்தகத்தில் கப்பல் சரக் கேற்ற எடையளவு அதிகரித்தபோதிலும், அமெரிக்கக் கப்பல்கள் மூலம் நடைபெற்ற வர்த்தகத்தின் சதவீதம் குறைந்துவிட்டது.[12] ஆக, அமெரிக்க வர்த்தகக் கப்பல் வாணிபம் நிச்சயமாக மங்கத் தொடங்கியது.

கப்பல்களைச் செலுத்துவதற்கு நீராவியை நன்கு பயன்படுத்த லாம் என்று நிரூபித்துக்காட்டுவதற்காக ஹட்சன் நதிமீது 1807-ல் நீராவாற்றல் வேண்டிய சிறப்பான பயணத்தை ராபர்ட் புல்டன் (Robert Fulton) நடத்திக் காட்டினார். ஆகவே, 1812 ஆம் ஆண்டிலேயே மிசிசிப்பிநதி மீது நீராவிப்படகுகள் செல்லத் தொடங்கின.[13] நியூயார்க்கில் கட்டிய 300 டன் எடையுள்ள சாவன்னு (Savannah) எனும் கப்பலுக்குப் பாய் மரமும் உண்டு, நீராவி சக்தியும் உண்டு. அக்கப்பல் 1819-ல் அட்லான்டிக் மகாசமுத்திரத்திற்குக் குறுக்கே இருபத்தேழு நாட்கள் பயணம் செய்தது. அப்பயணத்தில் பதினெட்டு மணி நேரத்திற்கு நீராவியிலேயே கப்பல் சென்றது. எனினும், நீராவிப்படகுகள் நதிகள் மீது செல்வதற்கும், கடற்கரை யோரங்களில் செல்வதற்கும் மட்டிலுமே பொருந்தும் என்ற கருத்தே பொதுவாக நிலவியது. கப்பலில் கரி வைத்துக்கொள் வதற்குரிய இடம் இல்லாமையேதான் பெரும் தொல்லையாக இருந்தது. 1930 முதல் 1939 வரையுள்ள ஆண்டுகளில் ஆந்திரசைட் நிலக்கரியைப் (anthracite coal) பயன்படுத்தியதா லும், கப்பலுக்கு வேண்டிய திருகு இயக்கியைக் (screw propeller) கண்டுபிடித்ததாலும் தவிர்க்க முடியாத வளர்ச்சி இத்துறையில் விரைவில் ஏற்பட்டது.

சிரியஸ் (Sirius) எனும் நீராவிக் கப்பலும், கிரேட் வெஸ்டர்ன் (Great Western) எனும் நீராவிக்கப்பலும் 1838-ல் நியூயார்க் கிற்கு முறையே 17½ நாட்களிலும் 15 நாட்களிலும் சென்றன. இக் கப்பல்கள் செல்வதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே

[12] முதலில் வரும் வரைபடத்தைக் காண்க.

[13] அதிகாரம் – 14ஐக் காண்க.

ஆங்கிலேயர்கள் ராட்டர்டாம் (Rotterdam), ஹாம்பர்க் (Hamburg), ஜிப்ரால்டர் (Gibraltar) முதலிய இடங்களுக்கு நீராவி அஞ்சல் படகுகளைச் செலுத்திப்பரீத்தனர். மிகவும் விரைந்து செல்லும் அஞ்சல் படகுகளைவிடப் பக்கவாட்டில் மரச்சக்கரங்களை உடைய நீராவிப் படகுகள் விரைந்து சென்று இன்னும் குறுகிய காலத்தில் பயணத்தை முடிக்கும் என்ற உண்மையை ஆங்கிலேயர்களின் பரிசோதனை முயற்சிகள் தெற்றென விளக்கின. எதிர்காலத்தில் நீராவி சக்தியே கப்பல்களை இயக்குவதில் மிகவும் பயன்படும் என்பதைத் தீர்க்கதரிசனமுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்தது. இவ்வரசாங்கம் கியூனர்டு கம்பெனிக்கு (Cunard Company) 1839-ல் நிறைய உதவித் தொகை வழங்கியது. நான்கு பக்கங்களிலும் சக்கரங்களையுடைய மரக்கப்பல்களைச் செய்து 1840-ல் அக்கம்பெனி தன்னுடைய தொழிலைத் துவக்கியது. உதவித் தொகை வழங்கி இத்துறையை முன்னேற்றுவதில் இன்றுவரையில் கிரேட் பிரிட்டன் ஈடுபட்டிருந்தது. எனவே, புதிய முறையில் செய்த கப்பல்களைக் கொண்டு பிரிட்டன் தன்னுடைய கடல் வாணிபத்தைச் செவ்வையாக நடத்தியது. மேலும், சமுத்திரத்தில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டும் செயலிலும் பிரிட்டன் வெற்றி பெற்றது.

பாய்மரக் கப்பல்களை நீக்கிவிட்டு நீராவிக் கப்பல்களைப் புகுத்திய புரட்சியைப் போலவே, மரக்கலங்களை அகற்றிவிட்டு இரும்புக் கப்பல்களையும், பின்னர் எஃகு கப்பல்களையும் புகுத்தும் புரட்சி ஏற்பட்டது. கடலுக்கு அருகாமையிலேயே நிலக்கரியும் இரும்பும் நிறையக் கிடைத்தமையாலும், தேர்ச்சிபெற்ற இயந்திரத் தொழிலாளர்களும் குறைந்த கூலியில் தொழிலாளர்களும் நிறையக் கிடைத்தமையாலும், நம்முடைய உலோகத் தொழில்களை விட மிகவும் முன்னேறிய உலோகத் தொழில்களைப் பெற்றிருந்தமையாலும் துவக்கத்திலிருந்து கிரேட்பிரிட்டன் விரைந்து முன்னேறியது. கப்பல் எடையின் மொத்தத்தில் நான்கில் ஒரு பகுதியளவிற்கு நீராவிக் கப்பல்களே பிரிட்டனில் 1853-ல் நிரம்பியிருந்தன. நான்கில் ஒரு பகுதிக்குமேல் இரும்பால் செய்யப்பட்ட கப்பல்களாகும். அதே ஆண்டில், நம்முடைய நாட்டில் மொத்தக் கப்பல் எடையில் 22 சதவீதம் நீராவிக் கப்பல்கள் செய்தோம். ஆனால், நாம் இரும்பாலான கப்பல்களே செய்யவில்லை. தங்களுடைய விரைவுக்கப்பல்களைப்போல் அயல்நாட்டினரால் செய்ய முடியாது என்று அளவுக்கு மீறிய நம்பிக்கையில் யாங்கீ கப்பல் கட்டும்கலைஞர்கள் திளைத்திருந்தனர். எதிர்காலத்தில் கடலாதிக்கம் மலிவான, உயர்தர இரும்புக் கப்பல்களைக் கட்டும் நாட்டின் கையில் தான் இருக்கும் என்பதை யாங்கீ கப்பல் தொழிற் கலைஞர்கள்

உணரவில்லை. விரைவுக் கப்பல் குறுகிய காலத்தில் கடிதில் ஓடிப் பிரயாணத்தை முடிக்கும் என்றாலும், அக் கப்பலைக் கட்டுவதால் செலவே அதிகரிக்கும். மரத்தால் அக் கப்பலைக் கட்டவேண்டியிருப்பதால், அதனை ஓரளவுக்குமேல் விசாலப்படுத்த முடியாது. மேலும், நீண்ட காலக் கண்ணோட்டத்தில் நோக்கின், நீராவிக் கப்பல்களில் பாதுகாப்பு உண்டு; அழகான மரத்தாலாகிய விரைவுக் கப்பலைவிட வேகமாகச் செல்லக்கூடிய ஆற்றலும் அவற்றிற்கு உண்டு.

1830 முதல் 1860 வரையில் கப்பல் கட்டும் தொழில் மிகவும் விரைவில் வளர்ந்தது. வெளிநாட்டு வர்த்தகத்தில் கப்பல் சரக்கேற்ற எடையளவு 1831-ல் 5,38,136 டன்களாக இருந்தது; 1862-ல் 24,96,894 டன்களாக உயர்ந்தது. கப்பல் தொழிலில் ஏற்பட்ட இந்த உச்ச நிலை முதல் உலகப் போர்க்காலம் வரையில் நிலைத்திருந்தது. போர்க்காலத்தில் சரக்கேற்ற எடையளவு இன்னும் அதிகரித்தது. 1848 முதல் 1858 வரையில் ஆண்டொன்றுக்கு 4,00,000 டன்கள் எடையுள்ள அளவிற்கே கப்பல்கள் கட்டப்பெற்றன. 1845ஆம் ஆண்டிற்குப் பின்னர் நியாயமான வகையில் புகழ் அடைந்த விரைந்தோடும் கிளிப்பர் கப்பல்கள் (Clipper Ships) அமெரிக்காவில் கட்டப்பட்டன. பலவாண்டுகளுக்குப் பின்னரே கப்பல் கட்டுந்தொழில் கிளிப்பர் கப்பல்கள் கட்டுவதில் ஈடுபட்டது. இதனால் நீராவி சக்திக்கும் பாய்மரத்திற்கு மிடையில் பெருத்த போட்டி ஏற்பட்டது. ஆகவே, கப்பல் கட்டும் தொழிலின் வளர்ச்சிக்குக் காரணமே 1845ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்பட்ட கிளிப்பர் கப்பல்களின் செல்வாக்கும் வளர்ச்சியுமேயாகும். விரைந்து செல்லவேண்டும் என்பதற்காகவே அமெரிக்க கிளிப்பர் கப்பல்களைக் கூரிய முனைகளுடனும் பாய்மரத்திற்குவேண்டிய கித்தான்களுடனும் கட்டினர். குறிப்பாக நெடும் பயணங்களுக்காகவே கிளிப்பர்கள் கட்டப்பட்டன. இத்தகைய கிளிப்பர்களை கலிபோர்னியா வர்த்தகத்திலும் தூரக்கிழக்கு நாடுகளின் வர்த்தகத்திலும் ஈடுபடுத்தினர். தக்க முறையில் காற்று வீசினால், கிளிப்பர்கள் நீராவிக்கப்பல்களைவிட அதிகத் தொலைவிற்குச் செல்லும். சாதாரணமாக நாளொன்றுக்கு 300 மைல்களுக்குமேல் கிளிப்பர் கடலில் செல்லும். சான் பிரான்சிஸ்கோவை (San Francisco) நோக்கி தொண்ணூறு நாள் பயணத்தில் ஈடுபட்ட பிளையிங் கிளவுடு (Flying Cloud) எனும் கிளிப்பர் ஒரு குறிப்பிட்ட நாளில் 374 மைல்கள் சென்றது. சான் பிரான்சிஸ்கோவிலிருந்து நியூயார்க்கிற்கு எண்பது நாள் பயணத்தில் ஈடுபட்ட காமட் (Comet) நாளொன்றுக்குச் சராசரி 210 மைல்கள் சென்றது. 1851 முதல் 1857 வரையில் உள்ள ஆண்டுகளில்

சிங்கப்பூரிலிருந்து நியூயார்க்கிற்கு 86 நாட்களிலும், கான்டனிலிருந்து நியூயார்க்கிற்கு 84 நாட்களிலும் கிளிப்பர்கள் சென்றன. தன்னுடைய செல்வாக்குக் குலைந்துபோவதற்கு முன், எந்த அளவுக்கு ஒரு பாய்மரக் கப்பல் விரைந்து செல்லமுடியும் என்பதையும், திறமையின் உச்சநிலையை அடையமுடியும் என்பதையும் அமெரிக்காவின் கப்பல் கட்டும் கலைஞன் செயல்படுத்திக் காட்ட விரும்பினன் என்றே நாம் எண்ணுகிறோம். [14]

இரண்டாவதாக, கப்பல் வர்த்தகத்தின் அவசியம் மிகவும் உயர்ந்தது. 1848-ல் கலிபோர்னியாவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. கப்பல் வாணிபத் தேவை உயர்ந்ததற்கு இது மிகவும் முக்கியமான காரணமாகும். நிலவழிப்பாதைகள் ஆபத்து நிரம்பியவைகளாக இருந்தன. அப்பாதைகளில் விரைந்து செல்ல முடியாது. கோல்டன் கேட்டிற்குச் செல்ல (golden gate) யாவரும் முனைந்து நின்றதால், கப்பல்களில் இடம் கிடைப்பது பெரும் பாடாக இருந்தது. யாங்கீ அஞ்சல் படகு (packet) ஹார்னைச் (Horn) சுற்றிப் பயணம் செய்ய மூன்று மாதங்களாகும். அதற்குள் பாய்மரக் கப்பல்கள் கட்டுவதற்குரிய நீண்ட இடைவேளை கிடைக்கும். 1840—1842, 1856—1860 ஆகிய ஆண்டுகளில் கிரேட் பிரிட்டனுக்கும் சைனாவுக்கும் இடையில் போர்கள் ஏற்பட்டமையால், சைனா வர்த்தகத்தின் ஒரு பகுதி அமெரிக்காவிற்குக் கிடைத்தது.

1848-ல் ஐரோப்பாக் கண்டத்தில் கிளம்பிய புரட்சிகரமான கிளர்ச்சிகளின் காரணமாக ஐரோப்பிய வர்த்தகம் தடைபட்டது. எனவே, அந்த வினைவு அமெரிக்கர்களுக்கு இலாபமாகிவிட்டது. கிருமியப் போரில் (Crimean war), இராணுவத்தை ஏற்றிச் செல்லவும், பண்டங்களை ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்கு எடுத்துச் செல்லவும் வேண்டி அநேக ஐரோப்பியப் படகுகள் அவ்

[14] 'சிங்கப்பூர் விரைபடகு' என்று கூறப்படும் சீனக் கடற்கரைக் கப்பலிலிருந்தே கிளிப்பர் படகின் முனைகள் அமைப்பதைத் தெரிந்துகொண்டனர் என்று நம்பப்படுகிறது. சிங்கப்பூர் விரைபடகின் மாதிரி ஒன்றினை சைனாவிலிருந்து காப்டன் ஆர். ஹெச். வாட்டர்மேன் (Captain R. H. Waterman) என்பவர் கொணர்ந்தார். அது இப்பொழுது Massachusettes Institute of Technology-ல் உள்ள Clark Collection-ல் இருக்கிறது. ரெயின்போ (Rainbow) எனும் முதல் கிளிப்பர் கப்பலை நியூயார்க்கில் ஜான். டபிள்யூ. கிரிப்த்ஸ் (John W. Griffiths) என்பவர் கட்டிமுடித்தார். கிளிப்பர் கப்பல்களிலேயே மிகவும் உயர்ந்த பிளையிங் கிளவுட் (Flying Cloud) போன்ற கப்பல்களெல்லாம் டொனல்டு மெக்கே (Donald Mckay) என்பவரால் மெஸ்ஸாசுசெட்சில் கட்டப்பெறுகின்றன. நியூயார்க்கிலுள்ள ஐசக் வெப்பின் (Isaac Webb) கப்பல் தொழிற்சாலைகளில் அவர் தேர்ச்சி அடைந்தவராவார். அவர் நோவாஸ்கோஷியாவைச் (Nova Scotia) சார்ந்தவராவார்.

வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டன. எனவே, அமெரிக்கக் கப்பல்களுக்குவாய்ப்புகளும் பெருகின. மேலும், மக்கள்தொகையும், செல்வமும், உற்பத்தியும் பெருகியமையால் வர்த்தகம் இயல்பாகவே பெருகியது. எனவே, கப்பல்தொழிலும் வளரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1791-ல் நமது ஏற்றுமதிகள் 1,90,12,000 டாலர்கள் கொண்ட மதிப்பினைப் பெற்றிருந்தன; 1860-ல் அவை 33,35,76,000 டாலர்களாக உயர்ந்தன. இவ்வேற்றுமதிகளில் மூன்றில் இரண்டு பங்கு பருத்தி ஏற்றுமதியாகும். அதே காலத்தில் இறக்குமதிகளின் மதிப்பு 2,92,00,000 டாலர்களிலிருந்து 35,36,16,000 டாலர்களாக உயர்ந்தது. குடியேற்றப் பெருக்கத்தின் காரணமாகவும் கப்பல் வாணிப வசதிகளின் தேவை வளர்ந்தது.

இத்தகைய வளர்ச்சிகளுக்கிடையிலும் கப்பல்கட்டும் தொழிலில் சில குறைகளுமிருந்தன. கிருமியப்போரின் காரணமாக ஐரோப்பாவின் தேவைகள் அளவுக்குமீறிப் பெருகியிருந்தன. 1854 முதல் 1859 வரையிலுள்ள ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகள் 50,000 டன்கள் கொண்ட கப்பல்களை விலைக்கு வாங்கின. ஆனால், சாதாரண காலங்களில் அந்நாடுகள் 10,000 டன்களுடைய கப்பல்களையே விலைக்கு வாங்கிவந்தன. மேலும், தீவினைப்பயனுக பாய்மரக் கப்பல்களின் செல்வாக்குத் தேய்ந்து மங்கிவரும் காலத்தில்தான் பாய்மரக் கப்பல்கள் நிறையக் கட்டப்பட்டன. ஏனெனில், 1850 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகளில் நீராவிக்கப்பல்களின் சரக்கேற்ற எடையளவு 14 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாக உயர்ந்தது. 1858ஆம் ஆண்டில் நிகழ்ந்ததுபோல பாய்மரக்கலத்திற்கு ஏற்பட்டிருந்த எல்லையற்ற தேவை குறையத் தொடங்கவே, மரக்கலங்களை உற்பத்தி செய்யும் கப்பல் கட்டும் தொழிற்சாலைக்கு வேலை குறைந்தது; கப்பல் கட்டுவதில் தேர்ச்சிபெற்ற கலைஞர்களுக்கும் வேலை இல்லாமல் போயிற்று. ஆக, நீராவிக்கப்பல்களைக் கட்டும் தொழிற்சாலைகள் மேன்மையுற்றன. 1857ஆம் ஆண்டில் உருவான பொருளாதார பீதி, ஒரு பெரும் சீரழிவிற்குக் காரணமாயிற்று. கடந்த பத்தாண்டுகளில் ஆண்டொன்றுக்கு சராசரி 4,00,000 டன்கள் கொண்ட கப்பல்கள் உருவாக்கப்பட்டன. 1858-ல் 2,44,000 டன்களாகவும், 1859-ல் 1,56,000 டன்களாகவும் கப்பல் உற்பத்தி குறைந்தது. அதே வேளையில், அமெரிக்கக் கப்பல்கள்மூலம் நடைபெற்ற ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து 1826-ல் 92·5 சதவீதமாக இருந்து 1861-ல் 65·2 சதவீதமாகக் குறைந்தது.

பிரிட்டனில் கப்பல்கட்டும் தொழிலுக்கு உதவித்தொகைகளை அரசாங்கம் அளித்தது. இரும்புக் கப்பல்களில் தொழில் நுணுக்க மேன்மை இருந்தது. இக் காரணங்களால் மட்டுமே அமெரிக்க வர்த்தகக் கப்பல் வாணிபம் சீர்குலைந்துவிடவில்லை. அந்த நாட்டு வர்த்தகக் கப்பல் வாணிபத்தில் ஏற்பட்ட தாழ்விற்கு வேறு பல காரணங்கள் உண்டு. முதலில், பழைய பாதைகள் சிலவற்றின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது, சீன வர்த்தகம் ஏற்பட்டதன் காரணமாகவும், நெப்போலிய யுத்தங்களின் காரண மாகவும் புரட்சிக்குப் பின்னர் சரக்குகளைக் கப்பலில் ஏற்றிச் செல்லும் வர்த்தகம் புத்துயிர் பெற்றது. போர்கள் 1815-ல் முடிவுற்றன. கடல் நாய்கள் மறைந்தொழிந்த பின்னர், சீன வர்த்தகமும் குன்றியது. சீனப் பீங்கானுக்குப் பதிலாக ஐரோப் பியப் பீங்கானையே அமெரிக்கர்கள் நாடினர். மனித உடை நாகரி கத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்தமையால் பட்டாடைகளின் தேவை குன்றியது. தூரக்கிழக்கு நாடுகளின் வர்த்தகத்தில் தேயிலையே முக்கியமான இடம் பெற்றிருந்தது. பிரேசில் (Brazil) நாட்டுக்காஃபி தேசீயக் குடிவகையாக மாறிய பின்னர், தூரக்கிழக்கின் தேயிலை யின் சிறப்பு மங்கியது. காலனி வர்த்தகத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்த மேற்கிந்திய வர்த்தகமுங்கூட மந்தமடைந்தது. 1830 ஆம் ஆண்டின் உடன்படிக்கையின்படி பிரிட்டிஷ் மேற்கிந்தியத் துறைமுகங்களை அமெரிக்கக் கப்பல்களுக்குத் திறந்துவிட்ட போதிலும் மேற்கிந்திய வர்த்தகம் புத்துயிர் பெறவில்லை. வாய்ப் புகள் குறையத் தொடங்கவே இலாபங்கள் குறைந்தன; நிலை யான இலாபங்கள் கிடைக்கவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண் டின் துவக்கத்தில் தூரக்கிழக்கின் வர்த்தகத்தின்மூலம் பெருத்த அளவில் இலாபம் ஈட்டினர். அரை நூற்றாண்டு கழிந்தபின்னர் கலிபோர்னியா வர்த்தகத்திலும் இலாபம் கிடைத்தது. எனினும், பொதுவாக நோக்கின், வர்த்தகத்திலும் கப்பல் தொழிலிலும் பெரும் வாய்ப்புகள் ஏற்படும் வழிவகைகள் குறைந்தன.

கப்பல் தொழிலில் இலாப வேட்டையாடும் வாய்ப்புகள் குன்றவே, முதலாளிகள் தங்களுடைய மூலதனத்தை இலாபங் கருதி வேறு துறைகளில் நுழைக்க முனைந்தனர். 1812 ஆம் ஆண்டுப் போருக்குப் பின்னர் விரைவில் வளர்ந்து வரும் பொறி வழித் தொழிலில் முதலின் ஒரு பகுதி முடக்கப்பெற்றது. உள் நாட்டு வசதிகளைப் பெருக்க உதவும் கால்வாய்கள், இருப்புப் பாதைகள் ஆகியவற்றில் கணிசமான அளவுக்கு முதலீடு செய்யப் பட்டது. துணிவும் இலட்சியமும் உடையவர்கள் கடல் வாணி பத்தைக் கைவிட்டு மேற்குப் பகுதியை நோக்கிச் சென்றனர். கப்பல் தொழிலிலும், சரக்கேற்றிச்செல்லும் கப்பல் வாணிபத்திலும்

முடங்கிக்கிடந்த முதல் இயற்கை வளங்களைத் தோண்டி எடுத்துப் பயன்படுத்தும் செயலில் ஈடுபடுத்தப்பெற்றது. உள்நாட்டுப் போர் நிகழ்வதற்கு முன்னரே வியாபாரக் கப்பல் வாணிபம் மங்கி மறைந்தொழிந்து வருவதற்குரிய காரணங்கள் ஓரளவுக்குத் தென்படலாயின. உள்நாட்டுப் போர் துவங்காமல் இருந்திருப்பினும், விளைவு இதுபோலவே இருக்கும் என்பது உறுதியாகும். எனினும், உள்நாட்டுப் போரினால் வர்த்தகக் கப்பல் வாணிபம் மிகவும் சிதைந்துவிட்டது. இச் சிதைவிலிருந்து கப்பல் வாணிபம் தலை தூக்க முடியவில்லை. முதல் உலகப்போரின்போதுதான் ஓரளவுக்குச் செயற்கை முறையில் கப்பல் வாணிபத்திற்கு உயிரூட்டப் பெற்றது. 1861-ல் வெளிநாட்டு வாணிபத்தில் அமெரிக்கக் கப்பல் சரக்கேற்ற எடையளவு 24,96,894 டன்களாகவிருத்தது; 1865-ல் 15,18,350 டன்களாகக் குறைந்தது. அதே ஆண்டுகளில் அமெரிக்கக் கப்பல்கள்மூலம் நடைபெற்ற ஏற்று மதி இறக்குமதிகளின் சதவீதம் 66·2-லிருந்து 27·7 ஆகக் குறைந்தது. போர்க்காலத்தில் எடையளவில் 9,00,000 டன்கள் குறைவதற்கு இரு காரணங்களுண்டு. முதலில், போர்ச் சட்டங்களுக்குப் புறம்பான வகையில் அலபாமா (Alabama) போன்ற கூட்டாட்சி விரை கப்பல்களை (Confederate Cruisers) இங்கிலாந்திலே செய்ததில் நஷ்டமேற்பட்டது. இரண்டாவதாக, நம்பிக்கையின்மையின் காரணமாக 1862-1865 ஆண்டுகளில் 7,51,595 டன்கள் எடையுள்ள கப்பல்கள் வெளிநாட்டில் விற்பனைக்குச் சென்றன. இன்சூரன்ஸ் வீதங்கள் உயர்ந்து இருந்தமையாலும், தொடர்ந்து கூட்டாட்சிப் படையினர் கப்பல்களைக் கவர்ந்தமையாலும் இலாபங்கள் குறைந்தன. வெளிநாடுகளுக்குப் பருத்தி ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்தமையால் ஏற்றுமதி வாணிபமும் குன்றியது.

திமிங்கில வேட்டையும் மீன் பிடித்தலும்

புரட்சிக் காலத்திலும் ஐரோப்பியக் கண்ட யுத்த காலத்திலும் (1775-1815) திமிங்கில வேட்டைத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது. ஆனால், நெப்போலியனின் இறுதித் தோல்விக்குப் பின்னர் அத்தொழில் மீண்டும் முன்னேறத் தொடங்கியது. வேட்டையாடிய திமிங்கிலங்களின் எடையளவு 1814-ல் ஒரு டன்கூட இல்லை. ஆனால், 1820-ல் பிடிபட்ட திமிங்கில எடையளவு 85,000 டன்களாகும். பின்னர் அது கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்து, திமிங்கில வேட்டைத் தொழிலின் பொற்காலத்திலே 1858-ல் 1,98,000 டன்களாகப் பெருகியது. அவ்வாண்டிற்குப் பின்னர் அத்தொழிலில் தேக்கம் ஏற்பட்டது.

1791 ஆம் ஆண்டிற்கு முன்னர் திமிங்கில வேட்டை அட்லான்டிக் சமுத்திரத்தில் மட்டுமே நடைபெற்றது. ஆனல், பையப் பைய வேட்டைக் கப்பல்கள் மற்ற சமுத்திரங்களுக்கும் சென்றன. 1835 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அத்தொழில் பசிபிக் மகா சமுத்திரத்தில் மட்டுமே பெரும்பாலும் நடைபெற்றது. அநேக மாகத் திமிங்கில வேட்டைக் கப்பல்களின் தொகுதி முழுதும் நியூ இங்கிலாந்து, நியூயார்க்கு மாநிலங்களிலிருந்தே கிளம்பின. நியூ பெட்போர்டு (New Bedford), மெஸ்ஸாசூசெட்ஸ், மற்றும் அருகா மையிலுள்ள சிறிய நகரங்கள் முதலியன முக்கியமான மையங் களாக இருந்தபோதிலும், 1846-ல் சாக் ஹார்பர் (Sag Harbour . நியூயார்க்கு ஆகிய பகுதிகளில் 63 வேட்டைக் கப்பல்கள் இருந்தன. அப்பகுதிகளில் 1857-ல் 200 வேட்டைக் கப்பல் களும் 10,000 கப்பலோட்டிகளும் இருந்தனர். அக்காலத்தில் திமிங்கில வேட்டைக்கேற்ற துறைமுகங்களில் நான்டக்கெட் (Nantucket) இரண்டாவது இடத்தையும், நியூலண்டன் மூன்றா வது இடத்தையும் வகித்தன. பெரும் கப்பல்கள் நுழைய முடியாதவாறு ஆழமற்ற துறைமுகத்தை நான்டக்கெட் பெற்றி ருந்தமையால் அதற்கு காலனி காலத்தில் ஏற்பட்டிருந்த சிறப்புக் குன்றியது. திமிங்கில வேட்டையில் சிறிய அளவில் ஈடுபட்டிருந்த கடற்கரைப் பட்டினங்களில் பல நிறைய இலாபம் ஈட்டின. போஸ் டனும் நியூயார்க்கும் முக்கிய ஏற்றுமதி மையங்களாகும். திமிங் கிலக் கருமூல நெய்க்குரிய வெளிநாட்டுச் சந்தைகளாக மேற்கிந் தியத் தீவுகளும், தென்னமெரிக்காவும், வட ஐரோப்பாவும் அமைந்தன. பிரான்ஸ், இங்கிலாந்து, பால்டிக் பகுதிகள் முதலியன திமிங்கில எலும்புக்குரிய சந்தைகளாகும். திமிங்கில நெய் பெரு மளவுக்கு உள்நாட்டுச் சந்தையிலேயே செலவழிந்துவிடு கின்றது. திமிங்கில வேட்டைத் தொழில் செழிப்புற்று மகத்தான உச்சநிலையில் இருந்தபொழுது, மற்ற மீன்பிடிக்குந் தொழில் களனைத்திலிருந்தும் கிடைக்கும் மீன்களின் மதிப்பைவிட அதிக மான மதிப்புள்ள திமிங்கிலங்கள் திமிங்கில வேட்டைத் தொழில் மூலம் கிடைத்தன. துணிமணிகள், காலணிகளின் வகைகள் ஆகியவற்றின் உற்பத்திக்கு அடுத்தபடியாகத் திமிங்கில வேட்டை நியூ இங்கிலாந்தில் முக்கியத்துவம் அடைந்தது. 1835 முதல் 1860 முடியவுள்ள ஆண்டுகளில் 1,18,000 பீப்பாய்கள் கொண்ட கருமூல நெய்யும், 2,16,000 பீப்பாய்கள் கொண்ட திமிங்கில நெய்யும், 23,24,000 பவுண்டுகள் கொண்ட திமிங்கில எலும்பும் ஆண்டொன்றுக்கு சராசரியாக உற்பத்தியாயின. இவற்றின் ஆண்டுச் சராசரி மதிப்பு சுமார் 80,00,000 டாலர் களாகும். 1850 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இத்துறையில் மந்த மேற்பட்டது. ஏனெனில், சமுத்திரங்களில் திமிங்கிலங்கள் நிறையக்

கிடைக்கவில்லை. மேலும், விளக்கேற்றுவதற்கு மண்ணெண்ணெய் வகைகளும் வாயுவும் கிடைத்தமையால் திமிங்கில வேட்டைத் தொழிலில் மந்தம் ஏற்பட்டது.

இரண்டு சுதந்திரப் போர்களிலும் திமிங்கில வேட்டைத் தொழிலில் ஏற்பட்ட ஆரம்பத் தடைகளைப் போலவே காட் (cod) வகையைச் சார்ந்த மீன்பிடிக்கும் தொழிலிலும் தடைகள் எழுந்தன. உபயோகத்திலிருந்த உப்பின் இறக்குமதிமீது விதிக்கும் சட்டங்கள் இயற்றிய பின்னர் காட் மீன்பிடிக்குந் தொழில் மீண்டும் உயிர்பெற்றது. காட் மீன் வகையைப் பிடிப்பதில் ஈடுபட்ட கப்பல்களின் பார அளவு 1790-ல் 25,000 டன்களாகவிருந்தது 1860-ல் 1,86,700 டன்களாக உயர்ந்தது. அந்த ஆண்டில் கிட்டத்தட்ட 2,500 மீன்பிடிக்கும் கப்பல்களும், 18,000 கப்பலோட்டிகளும் செம்படவர்களும் காட் வகையைப் பிடிப்பதில் ஈடுபட்டிருந்தனர். பிடிபட்ட காட் வகையின் ஆண்டு மதிப்பு 80,00,000 டாலர்களாகும். 1818 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மாக்கீரல் (Mackerel) மீன்முகையைப்பிடிப்பதில் நிறையக் கப்பல்கள் முனைந்து சென்றன. 1860ஆம் ஆண்டிற்கு முன்னர் பிடிபட்ட மாக்கீரல் மீன் வகையின் உச்ச ஏடையளவு 1849-ல் 73,800 டன்களாகும். அக்காலத்திலேயே ஹெர்ரிங் (Herring), ஹாலிபட் (Halibut), கிளிஞ்சில், சிப்பிவகைகள் ஆகியவற்றை வாணிப நோக்கத்துடன் மீனவர்கள் பிடித்தனர். காட் மீன் பிடித்தலில் மெயினும் மெஸ்ஸாசுசெட்சும் முன்னணியில் நின்றன. இரு பகுதிகளும் சமமான எண்ணிக்கையிலேயே காட் மீன் வகையைப் பிடித்தன. மெயினிலுள்ள போர்ட்லண்டு (Portland), காஸ்டின் (Castine) பகுதிகளும், மெஸ்ஸாசுசெட்சிலுள்ள கிளாஸ்டர் (Gloucester), மார்பிள்ஹெட் (Marblehead) பகுதிகளுமே முக்கிய மையங்களாகும். மாக்கீரல் வேட்டைக் கப்பல் தொகுதியின் பெரும் பகுதியை மெஸ்ஸாசுசெட்ஸ் நீக்கி விட்டது. மீன்பிடிக்கும் கப்பல் தொகுதிகள் பெருகி வளர்ந்த போதிலும், நிறைய மீன்கள் பிடிபட்டபோதிலும் காலனி காலத்தில் மீன்பிடிக்குந் தொழிலுக்கிருந்த பொருளாதார முக்கியத்துவம் இப்பொழுது கிடையாது.

பண்டங்களும் செலுத்தினங்களும்

புரட்சிக்குப் பின்னர் பத்தாண்டுகளில் அயல்நாட்டு வர்த்தகம் மீண்டும் வலுப்பெற்றது. 1760 முதல் 1769 வரையுள்ள ஆண்டுகளில் அதனால் விளைந்த மதிப்பைப் போல, மூன்று மடங்குள்ள மதிப்பினை உடைய அயல்நாட்டு வர்த்தகம்

1790-ல் ஏற்பட்டது. நெப்போலியப் போர்களின் போது உணவுப் பண்டங்களும் மூலப்பொருள்களும் ஐரோப்பாவில் நிறையத் தேவைப்பட்டமையால், அமெரிக்காவின் அயல்நாட்டு வர்த்தகம் 1800-ல் இன்னும் மூன்று மடங்காகப் பெருகியது; அதற்கு மேலும் பெருகியது. வாணிபத்தடை, 1812 ஆம் ஆண்டின் போர், போருக்குப் பின்னர் ஏற்பட்ட மாறுதல்கள், வேறு சில காரணங்கள் ஆகியவற்றின் குறுக்கீட்டின் காரணமாக 1807-ல் உச்சகட்டத்தில் இருந்த வெளிநாட்டு வர்த்தகத்தின் பண மதிப்புக் குறைந்தது. 1835 ஆம் ஆண்டுவரையில் பழைய உச்ச நிலையை அது அடையவில்லை. பின்னர் அதன் போக்கு பொது வாக உயர்ந்துகொண்டே சென்றது. ஏற்றுமதிகள், இறக்கு மதிகள் ஆகியவற்றின் மதிப்பட்டவணையை ஆராயும் மாணவன், 1819 ஆம் ஆண்டின் பொருளாதாரப் பீதிக்குப் பின்னர், உள் நாட்டு விலைகளில் ஏற்பட்ட பெரும் சரிவினைக் கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட பண்டங்களின் மதிப்பு 1820 முதல் 1829 வரையுள்ள ஆண்டு களில் குறைந்தபோதிலும், அப் பண்டங்களின் அளவு குறையாது பெருகியது.[15]

ஒவ்வொரு பத்தாண்டுகளில் இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும்

ஆண்டு	மொத்த ஏற்றுமதிகள் (டாலர்கள்)	மொத்த இறக்குமதிகள் (டாலர்கள்)
1790	20,200,000	23,000,000
1800	70,972,000	91,253,000
1810	66,758,000	85,400,000
1820	69,692,000	74,450,000
1830	71,671,000	62,721,000
1840	123,609,000	98,259,000
1850	144,376,000	172,510,000
1860	333,576,000	353,616,000

Compiled form Statistical Abstract, 1921, Table 482, p. 836.

அக்காலத்தில் இறக்குமதிகளில் சுமார் 50 சதவீதம் துய்ப்புக் குரிய பொறிவழிப் பண்டங்களேயாகும். துணிவகைகளும், உலோகங்களும், மட்பாண்டங்களும் இங்கிலாந்திலிருந்தும் ஐரோப்பாக் கண்டத்திலிருந்தும் இறக்குமதியாயின. பிரான்சி

[15] ஜி. ஆர். டெய்லர் (G. R. Taylor), The Transportation Revolution, pp. 192-193.

லிருந்து திராட்சைச் சாறுவகைகள் இறக்குமதியாயின. மேற்கிந்திய தீவுகளிலிருந்து மொலாசஸ், சர்க்கரை, ரம், காஃபி முதலிய பண்டங்கள் இறக்குமதியாயின. மெக்சிகோவிலிருந்து உலோக நாணயங்களும், பொன்கட்டிகளும், வெள்ளிக் கட்டிகளும் இறக்குமதியாயின. தோல் வகைகள், இண்டிகோ, காஃபி முதலியன தென் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாயின. கீழ்த்திசை நாடுகளிலிருந்து தேயிலை, பட்டுவகைகள், சீனத்துப் பீங்கான் வகைகள், வாசனைத் திரவியங்கள் முதலியன இறக்குமதியாயின. இறக்குமதிகளில் பெரும் பகுதி இங்கிலாந்திலிருந்து வந்துற்றன. ஆனால், ஆண்டுகள் செல்லச் செல்ல ஐரோப்பாக் கண்டத்துடன் வர்த்தகம் பெருகியது. குறிப்பாக, பிரான்சுடன் வர்த்தகத் தொடர்பு வலுப்பெற்றது. பின்வரும் அட்டவணை விளக்கிக் காட்டுவதைப் போல, இறக்குமதிகளுக்குப்பதிலாக உணவுப் பண்டங்களையும் பொறிவழியாக்கத்திற்கு வேண்டிய மூலப் பொருள்களையும் நாம் ஏற்றுமதி செய்தோம்.

ஏற்றுமதியான பண்டங்களின் தொகுதிகள் :
மொத்தங்களின் சதவீதங்கள்.

ஆண்டு	முதிரா முதல் நிலைப் பண்டங்கள்	பொறிவழித் தொழிலில் ஈடுபடுத்த வேண்டிய பொறிவழிப் பண்டங்கள்.	துய்ப்புக்குத் தயாராயுள்ள பொறிசெய் பண்டங்கள்.	முதிரா முதல் நிலையிலுள்ள உணவுப் பண்டங்கள்; உணவிற்குரிய விலங்கினங்கள்.	முழுதுமோ அல்லது ஓரளவிற்கோ பொறிவழிப் படுத்தப் பெற்ற உணவுப் பண்டங்கள்.
1820	60·46	9·42	5·66	4·79	19·51
1830	62·34	7·04	9·34	4·65	16·32
1840	67·61	4·34	9·47	4·09	14·27
1850	62·26	4·49	12·72	5·59	14·84
1860	68·31	3·99	11·33	3·85	12·21

(Compiled from Statistical Abstract, 1921
Table 482, pp. 848—849.)

தென் பிரதேசத்தில் புகையிலைக்கும் அரிசிக்கும் பதிலாகப் பருத்தி பயிரிடப்பெற்றது. ஜின் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், பருத்தி நம் நாட்டில் மிகப்பெரிய ஒற்றை ஏற்றுமதியாக மாறியது. 1860-ல் நமது ஏற்றுமதிகளில் 60 சதவீதம் பருத்தியைப் பொறுத்ததாகும். அரிசி, புகையிலை, சுத்தம் பெற்ற சர்க்கரை,

ஆகியவற்றுடன், நம்முடைய ஏற்றுமதிகளில் ஏறத்தாழ நான்கில் மூன்று பகுதி தென் மாநிலங்களிலேயே உற்பத்தியாயின. அமெரிக்காவின் உணவுப் பண்டங்களுக்குக் குறிப்பாகக் கோதுமை, பொட்டணமாகக் கட்டிய இறைச்சி ஆகியவற்றிற்கு ஐரோப்பிய சந்தை மிகவும் சிறிதாகவே இருந்தது. தானிய விளைச்சலில் பெரும் சரிவு ஏற்படும் காலங்களில் மட்டும் ஐரோப்பியச் சந்தை பெரிதாக இருந்தது. தானியச் சட்டங்கள் ரத்தான பின்னரும் கூட இதுவே உண்மையான நிலையாகும். மேற்கிந்தியத் தீவுகளிலும் தென் அமெரிக்காவிலும் உணவுப் பண்டங்களில் போட்டி நிலைமைகள் நன்கு அமைந்திருந்தன. எனவே, இப் பகுதிகளே நம்முடைய முக்கியச் சந்தைகளாகும். 1850 முதல் 1859 வரையுள்ள ஆண்டுகளின் இறுதிக் காலத்தில் மொத்த ஏற்றுமதிகளில் சுமார் 12 சதவீதமே பொறிவழிப் பண்டங்களின் ஏற்றுமதியாகும். இவற்றில் 1830 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பருத்திப் பொருள்களின் ஏற்றுமதி மிகவும் முக்கியமானதாகும். பருத்தியின் முக்கியச் சந்தைகள் சைனு, மெக்சிகோ, மேற்கிந்தியத் தீவுகளாகும். மற்ற முக்கிய ஏற்றுமதிகள் பாஸ், முத்துத் துகள்கள் (pearl ashes)-இத்துகள்களிலிருந்து பொட்டாஷ் கிடைக்கிறது) மரவகைகள், இரும்பு, எஃகு வகைகள், சுத்தம்பெற்ற சாராவி, பொறிவழிப்படுத்தப்பெற்ற புகையிலை ஆகியவைகளாகும். 1820 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நமது ஏற்றுமதிகளில் சுமார் பாதியளவு கிரேட் பிரிட்டனுக்குச் சென்றது. நமது ஏற்றுமதிகளில் மூன்றில் இரண்டு பகுதிகளிலிருந்து நான்கில் மூன்று பகுதிகள் வரையிலும் ஐரோப்பாவிற்குச் சென்றது. ஐரோப்பியக் கொள்முதல்கள் முழுவதும் மூலப்பண்டங்களேயாகும். நமது பொறிவழிப் பண்டங்களின் ஏற்றுமதிகள் உலகின் மற்றப் பகுதிகளுக்குக் குறிப்பாக, கனடா, மெக்சிகோ, மேற்கிந்தியத் தீவுகள், தென் அமெரிக்கா, கீழை நாடுகள் முதலிய பகுதிகளுக்குச் சென்றன.

மறு ஏற்றுமதிகளைப் பற்றியும் (re-exports) ஒரு சொல் சொல்ல வேண்டும். நெப்போலிய யுத்தங்கள் நடைபெற்ற காலத்தில் உள்நாட்டுப் பண்டங்களின் ஏற்றுமதிகளைவிட அதிகமான மதிப்பு உடையதாக மறு ஏற்றுமதிகள் அமைந்திருந்தன. 1820 முதல் 1829 வரையுள்ள ஆண்டுகளில் மறு ஏற்றுமதிகளின் அளவு நமது மொத்த ஏற்றுமதிகளில் நான்கில் ஒரு பங்காகக் குறைந்தது. 1860 முதல் 1869 வரையுள்ள ஆண்டுகளில் பன்னிரண்டில் ஒரு பங்காகக் குறைந்தது. பிரிட்டனிலிருந்து வந்த பண்டங்களில் குறிப்பாகப் பருத்திப் பொருள்களை ஆசியாவிற்கும் மேற்கத்திய பிரதேசத்திற்கும் நாம் மறு ஏற்றுமதி செய்தோம்.

லத்தீன் அமெரிக்காவின் வெப்பநிலைப் பண்டங்களாகிய சர்க்கரை, மொலாசஸ், காஃபி ஆகியவற்றையும் சீனத்துத் தேயிலையையும் நாம் ஐரோப்பாவிற்குக் குறிப்பாக, கிரேட் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்தோம். 1850 முதல் 1859 வரையுள்ள ஆண்டுகளில் நமது முக்கிய மறு ஏற்றுமதிச் சந்தை பிரிட்டிஷ் வடஅமெரிக்காவாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குறுக்கே அருமையான போக்குவரவு வசதிகள் அமைந்திருந்தமையால், பிரிட்டிஷ் பண்டங்களையும், கனடாவின் மாவு வகைகளையும் நாம் பிரிட்டிஷ் வட அமெரிக்காவிற்கும், கடலோர மாநிலங்களுக்கும் மறு ஏற்றுமதி செய்தோம். இறுதியில் நமது மறு ஏற்றுமதி வாணிபம் சிதைந்து கிரேட் பிரிட்டனின் ஆதிக்கம் இத் துறையில் வளர்ந்தது. அதற்குக் காரணம் நம்முடைய கப்பல் வாணிபம் சிதைவுற்று அழிந்துபோனதுதானுகும்.

ஆரம்ப காலங்களில் சேலம், நியூபரிபோர்ட் (Newbury port), பிலடெல்பியா, வேறு பல கடல் துறைமுகப் பட்டினங்கள் முதலியவைகள் முக்கியமான வியாபார மையங்களாக இருந்தபோதிலும், முக்கியமாக நியூயார்க், பிலடெல்பியா, பால்டிமோர், போஸ்டன், நியூ ஆர்லியன்ஸ் ஆகியவற்றின் வழியாகவே வர்த்தகம் நடைபெற்றது. உள்நாட்டுப் பகுதிகளுடன் ஏற்படுகின்ற போக்குவரத்துத் தொடர்புகளைப் பொறுத்தே அயல்நாட்டு வர்த்தகத்தின் செல்வாக்கு அமையும். ஈரிக்கால்வாய் தோண்டப்பெற்றதால் அட்லான்டிக் சமுத்திரத் தளத்தில் முன்னணியில் நிற்கும் வர்த்தக நகரமாக நியூயார்க்கு திகழ்ந்தது. மேற்கத்தியப் பண்டங்களை ஐரோப்பாவிற்குக் கப்பலேற்றும் நோக்கத்துடன் கால்வாய்களையும் இருப்புப் பாதைகளையும் அமைப்பதில் பிலடெல்பியா, பால்டிமோர், போஸ்டன், இன்னும் மற்றக் கடல் துறைமுகப் பட்டினங்கள் முதலியன முழு மூச்சுடன் ஈடுபட்டன. உள்நாட்டுப் போர் துவங்குவதற்குள்ளாகவே நியூயார்க்கு மேலோங்கி வளர்ந்துவிடவே, மறு ஏற்றுமதி வர்த்தகத்தில் நான்கில் மூன்று பகுதி நியூயார்க்கின் ஆதிக்கத்தில் இருந்தது, கூடிய விரைவில் நியூயார்க் 'பருத்தி முக்கோணத்தின்' (cotton triangle) மையமாயிற்று.

1840 முதல் 1849 வரையுள்ள ஆண்டுகளைத் தவிர, 1815 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகளில் நமது ஏற்றுமதிகளைவிட ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியாகும் பண்டங்களின் மதிப்பு அதிகமாகும். பன்னாட்டு வாணிபக் கணக்கு வழக்குகளைத் தீர்ப்பதில் அமெரிக்காவிற்கு ஏற்படும் பெரும் கடன்களைச் சரிக்கட்டுவதற்கு வாணிபக் கப்பல்களின் சரக்கேற்றக் கூலியிலிருந்து கிடைக்கும் இலாபத்தையும்,

மறு ஏற்றுமதி வர்த்தகத்தில் வியாபாரிகளுக்குக் கிடைக்கும் கழிவு களையும், ஐக்கிய அமெரிக்காவில் முடங்கியுள்ள ஐரோப்பிய முதலீட்டையும், உலோக நாணயங்களையும், வெள்ளிக் கட்டிகளையும், பொன்கட்டிகளையும் பெரிதும் பயன்படுத்துவர். கப்பல் விற்பனையிலிருந்தும், குடியேறுபவர்களின் பணத்திலிருந்தும் ஓரளவுக்கு அமெரிக்காவிற்கு வரவு கிடைத்தது. லத்தீன் அமெரிக்க வர்த்தகத்திலிருந்து கிடைக்கும் பொற்காசுகளைக் கொண்டும், வெள்ளிக் காசுகளைக் கொண்டும், உலோகப் பாளங் களைக் கொண்டுமே 1849 வரையில் பன்னாட்டு வாணிபக் கணக்கு வழக்கினை அமெரிக்கா தீர்த்துவந்தது. உள்நாட்டுத் தேவைக்குமேல் மிகுதியாகக் கிடைக்கும் பணத்தை ஐக்கிய அமெரிக்கா கணக்கு வழக்கைத்தீர்ப்பதற்கு என ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்துவந்தது. 1849ஆம் ஆண்டிற்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாடுகள் உலகிலேயே மிகப்பெரிய பொன் உற்பத்திப் பகுதியாக மாறின. எனவே, பன்னாட்டு வாணிபக் கணக்கைத் தீர்ப்பதில் ஐக்கிய அமெரிக்கா பொன்னைத் தாராள மாகப் பயன்படுத்தியது. இருந்தபோதிலும், அக் காலமுழுதும் ஐக்கிய அமெரிக்காவிற்குப் பாதக வாணிபக் கொடுப்பல் நிலையே நிலவியது. பெடரல், இராஜ்ஜிய, இரயில்வே பத்திரங்களில் முடங்கியுள்ள வெளிநாட்டு மூலதனம் 1860-ல் 40,00,00,000 டாலர்களாகும் என மதிப்பிட்டுள்ளனர்.

கடற்கரையோர வர்த்தகத்தைப்பற்றிக் குறிப்பிடாத வரை யில், வர்த்தகத்தைப் பற்றிய விளக்கமோ, கப்பல் வாணிபத்தைப் பற்றிய விளக்கமோ முற்றுப்பெறாது எனலாம். 1789-ல் இயற்றிய சட்டத்தின்படி, கடற்கரையோர வர்த்தகத்தில் வெளிநாட்டுக் கப்பல்களை நெருங்கவிடாமல் தடுக்கும் வரையில் அமெரிக்கக் கப்பல் வாணிபம் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.[16] வடபிரதேசப் பண்டங்களையோ, ஐரோப்பியப் பண்டங்களையோ தென்கடற்கரைப் பட்டினங்களில் வழங்குவதே தென்னாட்டின் கடற்கரையோர வர்த்தகமாகும். மேற்கத்திய உணவுப் பண்டங் களை நியூ ஆர்லியன்சில் ஏற்றிக்கொண்டு, அல்லது பருத்தி, சர்க்கரை, புகையிலை முதலிய பண்டங்களையும் வேறு பண்டங் களையும் நியூ ஆர்லியன்ஸ், மொபைல், சார்லஸ்டன் ஆகிய பகுதி களிலிருந்தும் வேறு பகுதிகளிலிருந்தும் ஏற்றிக்கொண்டு, துய்ப் பிற்காகவோ, அல்லது ஏற்றுமதிக்காகவோ இருக்கும் வடநாட்டு நகரங்களுக்கு வந்து, அப் பகுதிகளில் அவற்றை வழங்குவதே வடநாட்டின் கடற்கரையோர வர்த்தகமாகும். இத்தகைய

[16] அதிகாரம் 12, பிரிவு 1, பாரா 9 காண்க.

வர்த்தகத்தின் மிகவும் முக்கியமான அம்சமெதுவெனில், 'பருத்தி முக்கோணமே'யாகும். தென்னகத் துறைமுகத்திலிருந்து பருத்தியை ஏற்றிக்கொண்டு ஐரோப்பாவிற்குக் கப்பல்கள் செல்லும்; அங்கிருந்து சரக்கேற்றிக் கொண்டோ, அல்லது குடியேற்றக்காரர்களோ ஏற்றிக்கொண்டோ அக் கப்பல்கள் நியூயார்க்கிற்கு வந்தடையும்; நியூயார்க்கிலிருந்து அவை சரக்குகளை ஏற்றிக் கொண்டோ, அல்லது வெறும் அடிச்சுமையுடனே கரையோரமாகத் தென்னுட்டை நோக்கிச்செல்லும். இப்பருத்தி முக்கோணத்தின் இரண்டு வழிகளை மட்டும் பயன்படுத்தும் வேறெரு மார்க்கமும் உண்டு. கடற்கரையோர வாணிபக் கப்பல்கள் தென்னகத்துப் பருத்தியை ஏற்றிக்கொண்டு நியூயார்க்கிற்கு வந்து, ஐரோப்பாவிற்குச் செல்லும். அவ்வாறே, ஐரோப்பியப் பண்டங்களை முதலில் நியூயார்க்கிற்குக் கொண்டுவந்து பின்னர்த் தென்பிரதேசத்தில் அவற்றை இறக்கி அங்கு அவை வழங்கப்படும். தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டபின்னர்க் கடற்கரையோர வர்த்தகம் எளர்ச்சியுற்று முக்கியத்துவம் அடைந்தது. ஒவ்வோர் ஆண்டும் கலிபோர்னியாவிற்கும் கீழ்க்கரைப் பகுதிக்கும் இடையில் நூற்றுக்கணக்கான கப்பல்கள் மிதந்தன. அயல்நாட்டு வர்த்தக மதிப்பு 87,44 25.000 டாலர்களாக இருந்தபொழுது 1852-ல் 2,60,00.00.000 டாலர்கள் மதிப்பு கொண்டதாகக் கடற்கரையோர வர்த்தகம் அமைந்திருந்தது. இதில்தான் கடற்கரையோர வர்த்தகத்தின் முக்கியத்துவம் அடங்கிற்று. கால்வாய்கள் மூலமும், இருப்புப்பாதைகள் மூலமும் நடைபெற்ற வர்த்தகத்தின் மதிப்பைவிட இரண்டு மடங்கிற்கும் மேலான மதிப்பையுடைய பண்டங்கள் கடற்கரையோர வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தன.[17]

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

ஜான்சன், ஈ. ஆர். (Johnson, E. R.) et al. History of Domestic and Foreign Commerce of the United States, Vol. I, Chaps. 12-14 and 19 (by T. W. Van Metre)

மார்வின், டபிள்யூ. எல். (Marvin, W. L.) The American Merchant Marine, Chaps. 4-14.

டெய்லர், ஜி. ஆர். (Taylor, G. R.) The Transportation Revolution, Chaps. 6, 9.

மாரிசன், எஸ். ஈ. (Morison, S. E.) The Maritime History of Messachusetts, 1783-1860, Chaps. 3 ff.

ஆல்பியன், ஆர். ஜி. (Albion, R. G.) The Rise of New York Port. Chap. 6.

ஹட்சின்ஸ், ஜே. ஜி. பி. (Hutchins, J. G. B.) The American Maritime Industries and Public Policy, 1789-1914, Chaps. 8-11.

புளுகல், எப்., ஃபாக்னர், ஹெச். யூ. (Flugal, F. and Faulkner, H. U.) Readings in the Economic and Social History of the United States, pp. 194-206, 208-219, 680-682.

17 ஈ. ஆர். ஜான்சன், (E. R. Johnson) et al., History of Domestic and Foreign Commerce of the United States, I, 344.

பகுதி 3 – தொழிற்சாலை அமைப்பின் தோற்றம்

13. தொழிற்சாலை அமைப்பு தோன்றுதல்

புதிய பொருளாதாரத்தின் வளர்ச்சி

முந்திய அதிகாரத்தில் விளக்கிய விவசாயத் தொழில் நுணுக்க வளர்ச்சி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு புதிய சமுதாயம் உருவாகி வருவதன் அறிகுறியாகும். குறிப்பாக, வடகிழக்குப் பகுதியில் சிறு தொழிற்சாலை வளர்ச்சியடைந்து வருவதற்கும், உள்நாட்டுப் போருக்குப் பின்னர் முழுமை நிறைந்த தொழிற்புரட்சி ஏற்படுவதற்கும் பொதுவாகவே வளர்ந்துவரும் தொழில்நுணுக்கத் துறையே காரணமாகும். பெரும் பண்ணைக்குப் (farm) பதிலாக சிறு வயலில்தான் (unit) விவசாயம் நடைபெற்று வந்தது. புதிய பாறைகளைப் புகுத்தியதால் விவசாயம் தொடர்ந்து நிலையாக வளர்ச்சியடைந்து வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விவசாய ஆராய்ச்சிக்கும் விவசாயக் கல்விக்கும் அரசாங்க உதவி கிடைத்தது. சில ஆண்டுகள் கழிந்தபின்னர், சந்தையில் விவசாயப் பண்டங்களை விற்பனை செய்வதற்கும் சலுகைகள் கிடைத்தன. விவசாயம் இலாபகரமான தொழிலாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில், அரசாங்கம் விலைக் கட்டுமானத்திலும் (price structure) கட்டுப்பாடான ஒரு நிலையை உருவாக்கியது.

மறு பக்கத்தில் தொழில்துறையில் அடிப்படையான புரட்சி ஏற்பட்டது. வளர்ந்துவரும் இயந்திரங்கள் தொழிற்சாலை அமைப்பை உருவாக்கின. தொழிற்சாலை அமைப்பில் கூலி பெறும் பாட்டாளிகளின் கூட்டம் பெருகியது. இயந்திரங்களின்

அதிபர்களுக்கும் இயந்திரங்களை இயக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் பிளவும் பிரிவும் ஏற்பட்டன. இவ்வளவும் நீர்ச்சக்தி, நீராவிச்சக்தி, மின்சாரம், நிலையாக வளர்ந்துவரும் உள்நாட்டுப் போக்குவரத்து சாதனங்கள் ஆகிய செயற்கையான ஆற்றலின் வளர்ச்சியின் அடிப்படையில் ஏற்பட்டவைகளேயாகும். தொழிற் சாலை அமைப்பும், போக்குவரத்து வசதிகளும், பெருமளவு வர்த்தகமும் பெருகி வளர்ந்ததன் காரணமாக மூலதனம் நிறையக் கிடைத்ததுமாத்திரமன்றி, அதனைத் திறமையுடன் நிருவகிக்கும் நிதித்துவ கட்டுமானமும் ஒழுங்குற அமைந்தது. தொழிலும் முதலாளித்துவமும் கைகோத்துக்கொண்டு முன்னேறி வளர்ந்தன. ஆகவே, மிகவும் சிக்கல்கள் நிறைந்த சமூக அமைப்பு உருவாகியது. உள்நாட்டுப் போருக்குப் பின்னர் மாற்றங்கள் நிறைய ஏற்பட்டன; பழைய தொடர்புகள் அறுந்தன; பழைய சமூகத்தின் பல அம்சங்கள் புரட்சிகரமான மாற்றங்கள் அடைந்தன. மேலும், தொழிற்புரட்சியின் காரணமாக மேற்கு ஐரோப்பாவில் எத்தகைய நெருக்கடிகளும் அழுத்தங்களும் ஏற்பட்டனவோ அவையெல்லாம் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஏற்பட்டன.

1790 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகளில் தொழிற் சாலை அமைப்பு பையப் பையத் தலைதூக்கியது. அமெரிக்காவில் தொழிற்புரட்சி ஏற்படும் சூழ்நிலைகள் அடிப்படையில் உருவாகின. இதே காலத்தில்தான் பொருளாதார ரீதியில் ஐரோப்பாவிற்கு அடிபணிந்துகிடந்த ஐக்கிய அமெரிக்கா உள்நாட்டுத் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ளும் வகையில் பொறிசெய் பண்டங்களைத் தானே உற்பத்தி செய்தது. இவ்வாண்டுகளை மூன்று காலங்களாகப் பிரிக்கலாம்.[1] 1790 முதல் 1815 வரையிலுள்ள ஆண்டுகள் முதல்காலப் பிரிவில் அடங்கும். இக்காலத்தில் அமெரிக்கா ஐரோப்பாவிலிருந்து கிடைக்கும் பொறிவழிப் பண்டங்களை நம்பி வாழ்ந்தது. உலகெங்கும் நிலவிய குழப்பங்களின் காரணமாக நம்முடைய பொருளாதார வாழ்வில் தொடர்ந்து நெருக்கடிகள் ஏற்பட்டன; பன்னூட்டு வாணிபத்திலும் குறுக்கீடுகள் ஏற்பட்டன; தொழிற்சாலை அமைப்பு தோன்றியது. 1815 முதல் 1840 முடிய உள்ள ஆண்டுகள் இரண்டாவது காலப்பிரிவில் அடங்கும். இக்காலத்தில் சிறு தொழிற்சாலை உற்பத்தி கொஞ்சங்கொஞ்சமாக வளர்ந்துவந்தது. பொறிவழித் தொழிலாக்கம் அரசியல் உலகின் வாத எதிர்வாதத்தில்

1 விக்டர் எஸ். கிளார்க் (Victor S. Clark) அவர்களின் History of Manufactures in the United States, 1607-1860, chap. II-ல் உள்ளதைப் போலவே இக் காலப் பகுப்புகள் செய்யப்பட்டுள்ளன.

பிரச்சினையாக அடிபட்டது. இவ்வாண்டுகளில் பண்டங்களைப் பல பகுதிகளில் பிரித்து வழங்க உதவும் நீர்ப் போக்குவரத்தைப் பொறுத்தே பொறிவழித் தொழில் அமைந்திருந்தது.

1840 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகள் மூன்றாவது காலப் பிரிவில் அடங்கும். இக் காலத்தில், நிலக்கரியைப் பயன் படுத்தி இரும்பை உருக்கவும், நீராவி ஆற்றலை உற்பத்தி செய்ய வும் முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டது. போக்குவரத்து வசதிகள் பெருகும் வகையில் இருப்புப்பாதைகள் எழுந்தன. அநேக புது இயந்திர வளர்ச்சிகளினால் பொறிவழித்தொழில் விரைவில் வளர்ந்தது; அத் தொழில் பல்வேறு துறைகளில் வளர்ந்தது; மேலும் அது பல்வகைப்படுத்தப்பெற்றது. இவ்வாண்டுகளில்தாம் பொறிவழித் தொழிலாக்கம் கடிதில் வளர்ச்சியுற்றது. சிறு ஆலைகளெல்லாம் வளர்ந்து பெருகித் தற்காலத் தொழிற்சாலை அமைப்பின் சில அம்சங்களையும் பெற்றன. வேறுவகையில் சொல்லவேண்டுமெனில், இத் தொழிற்சாலைகள் வர்த்தக முதலாளித்துவத்தின் சார்பில் துணை அமைப்புகளாக இருந்த நிலைமை மாறி, நிலையாகவே ஒன்று சேர்த்து இணைக்கப்பெற்ற தொகுதிகளாக மாறின. இல்லத் திலோ, சிறிய கடையிலோ அடைந்து கிடக்காமல் இத்தகைய தொழிற்சாலைத் தொகுதிகளில் தொழிலாளர்கள் வேலை செய்தனர். அவர்கள் இயந்திரங்கள்மூலம் ஒரேவகைத்தான பண்டங்களை உற்பத்தி செய்வதைத் தேர்ச்சியுள்ள மேலாளர் மேற்பார்வை யிட்டனர். தொழிற்சாலை அதிபர்கள் வெறும் வியாபாரிகளோ, கழிவுபெறும் தரகர்களோ அல்ல; தொழிற்சாலை உற்பத்தியையே தங்களுடைய முக்கிய நோக்கமாகக் கொண்ட பொறிவழித் தொழில் முதலாளிகளாயினர்.

1790 முதல் 1860 ஈறுக உள்ள ஆண்டுகளில் மக்களின் இன்றியமையாத தொழில் விவசாயமாகவே இருந்தது. எனினும், இல்லத்துத் தொழில் உற்பத்தி 1815 ஆம் ஆண்டிற் குப் பின்னர் குன்றத் தொடங்கியது. அடுத்த 20 ஆண்டு களில் கிழக்குப் பிரதேசத்தில் இல்லத்துத் தொழில் உற்பத்தி குன்றியபோதிலும் எல்லைப்புறத்தில் அது வளர்ந்து பெருகியது. பின்னர் அத் தொழில் பொதுவாகவே விரைவில் குன்றத் தொடங்கியது. அதற்குக் காரணம் போக்குவரத்து வசதிகளின் பெருக்கமேயாகும். சிறு கடை உற்பத்தி இன்னும் முக்கியத் துவம் உடையதாக இருந்தது. ஆனால், இல்லத்துப் பொறிவழித் தொழில் 1860-ல் மறைந்தொழிந்தது. விவசாயத்தைச் சார்ந்துள்ள நெல், மாவு முதலியன அரைக்கும் ஆலைகளும், இறைச்சியைப் பக்குவமாகப் பொட்டணம் கட்டும் தொழில்

களும் முதலில் தோன்றின. அடுத்து, துணி ஆலைகள் தோன்றின. பின்னர் உலோகத் தொழில்கள் கிளைத்தன. விவசாயத்தைப் போலவே, பொறிவழித் தொழிலின் வரலாற்றிலும் எல்லைக் கோடானது காலியாகவுள்ள பொது நிலங்களை நோக்கி நகர்ந்தவண்ணம் உள்ளது. இவ்வாறு எல்லைக்கோடு மாறியவண்ணம் இருக்கும் நிலையே உற்பத்தியாகவேண்டிய பொருள் வகைகளை நிர்ணயித்தது.

ஐரோப்பாமீது பொருளாதாரச் சார்பு

நாம் முன்னர்க் கண்ட புரட்சியினால் அரசியல் சுதந்திரம் கிடைத்ததேயன்றிப் பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்கவில்லை. காலனி காலத்தில் அமெரிக்கப் பண்டங்களுக்கு ஐரோப்பா சந்தையாக அமைந்ததைப்போலவே, புரட்சிக்குப் பின்னரும் ஐரோப்பாவே சந்தையாக அமைந்தது. அவ்வாறே ஐரோப்பியப் பொறிசெய் பண்டங்களைத் தொடர்ந்து புரட்சிக்குப் பின்னரும் நாம் இறக்குமதி செய்துவருகிறோம். சமாதான காலத்தில் மலிவான பிரிட்டிஷ் பண்டங்கள் அமெரிக்கச் சந்தையில் பெருமளவுக்கு விற்பனையாயின. எனவே, புரட்சிக் காலத்தில் வளர்ச்சியுற்ற பொழிவழித்தொழில், புரட்சிக்குப் பின்னர் மலிவான பிரிட்டிஷ் பண்டங்களுடன் போட்டியிட முடியாமல் தோல்வியுற்று நசித்துவிட்டது. மேலும், பழைய 'மும்முனைப் போக்கு வரத்தினால்' (three-cornered traffic) சில தொழில்கள் நிலைத்து நின்றன. பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகளுடன் ஏற்பட்ட வாணிபத் தொடர்பு தடையாகவே, அவை அழிந்து போயின. ஐரோப்பாவிற்கு வேண்டிய மூலப்பொருள்களை உற்பத்திசெய்து வழங்கி, அங்கிருந்து பொறிசெய் பண்டங்களை இறக்குமதி செய்து, ஐரோப்பாவைச் சார்ந்து வாழும் நிலை அமெரிக்காவிற்கு ஏற்படும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட லாயின. பொறிசெய் பண்டங்களை உற்பத்தி செய்து விற்பதில் இங்கிலாந்துடன் அமெரிக்கா போட்டியிடும் பிரச்சினையே எழவில்லை.

ஐரோப்பாவுடன் போட்டியிடுவதில் ஏற்படும் தொல்லையினால் மட்டுமே அமெரிக்கப் பொறிவழித் தொழில் தடைப்பட்டதாகக் கூற முடியாது. வேறு சில முக்கியமான உள்நாட்டுக் காரணங்களும் உண்டு. இருநூறு ஆண்டுகளாகக் குடியேற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், வெற்று நிலங்கள் நிறைய உபயோகப் படுத்தப்படாமல் இருந்தன. விவசாயத்தின்மூலமாகவும், நிலத்தின் விலையை உயர்த்துவதன்மூலமாகவும் நிறைய இலாபம் திரட்டிச் சுதந்திர வாழ்க்கை நடத்தலாம் என்ற நம்பிக்கையுடைய ஒரு

சராசரி மனிதன் தொழிலாளியாக மாறுவதற்குப் பதிலாக விவசாயியாக வாழ்க்கை நடத்துவதையே மிகவும் விரும்பினான். விவசாயமே இன்னும் முக்கியத் தொழிலாக விளங்கியது. அதன் மூலமாக நிறைய பொருளீட்டலாம் என்று பலர் நம்பினார்கள். மேற்கத்திய வெற்று நிலங்களை நாடித் தொழிலாளர்கள் சென்று விட்டமையால், பொறிவழித் தொழிலுக்குப் போதுமான அளவுக்கு வேண்டிய தொழிலாளர்கள் கிடைக்கவில்லை. தொழிலாளர்களும் உயர்ந்த கூலி கேட்டனர். எனவே, பொறிவழித் தொழில் வளர்வதற்குரிய வாய்ப்புகள் குறைந்தன. விவசாயப் பண்டங்களைச் சந்தையில் விற்பது முக்கியமான பிரச்சினை ஆகி விட்டது. அப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. விவசாயத்திலிருந்து கிடைத்த ரொக்க முதலைக் கொண்டு சுங்கச் சாவடிகளும், கால்வாய்களும், இருப்புப்பாதைகளும் கட்டப்பெற்றன. குறிப்பாக, கப்பல் வாணிபத்தின் பொற்காலத்தில் நதி, சமுத்திரம் ஆகியவற்றைச் சார்ந்த கப்பல் வாணிபத்துடன் மூலதனத்தைப் பெறுவதற்காக வேண்டி சிற்றினம் பொறிவழித் தொழில்கள் போட்டியிடவேண்டிய கட்டாயம் இருந்தது. 1795 முதல் 1801 முடிய உள்ள ஆண்டுகளில், கப்பல் வாணிபத்தின் மொத்த வருமானம் ஆண்டொன்றுக்கு 3,20,00,000 டாலர்களாகும் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. அவ்வாண்டுகளிலேயே இந்த வருமானம் விவசாய ஏற்றுமதிகளின் மொத்த மதிப்பில் நான்கில் மூன்று பகுதிகளாகும். அமெரிக்கக் கப்பல்கட்டும் துறைகளில் கட்டப்படும் கப்பல்களின் எடையளவு 1789-ல் 2,02,000 டன்களாக இருந்தது; 1810-ல் 14,25,000 டன்களாக உயர்ந்தது. தங்கள் நாட்டின் சொந்தப் பண்டங்களை ஏற்றிச் செல்வதோடு மட்டும் அமெரிக்க நாவாய்கள் அமையவில்லை. வாணிப நோக்கத்துடன் அவை கடல்களிலே மிதந்த வண்ணம் இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கப் பத்தாண்டுகளில், அமெரிக்க நாவாய்களில் ஏற்றிச் செல்லப்பட்ட வெளிநாட்டுப் பண்டங்களின் மதிப்பு உள்நாட்டுப் பண்டங்களின் மதிப்பைவிட உயர்ந்ததாகும். மறு ஏற்றுமதி வர்த்தகமும் சிறந்து விளங்கியது. மூலதனத்தில் ஏற்பட்ட போட்டியின் விளைவால், வட்டி வீதங்கள் அதிகரித்தன. எனவே, தொழிலை நடத்துவதற்கான செலவை ஏற்கவும், தொழிலைப் பெருக்குவதில் ஏற்படும் செலவை ஏற்கவும் கடன் வாங்கவேண்டிய நிலை தொழிலதிபர்களுக்கு இருந்த போதிலும், வட்டி வீதங்கள் கூடியிருந்தமையால் அவர்களால் கடன் வாங்க இயலவில்லை. அது, வர்த்தக முதலாளித்துவக் காலமாகும். கடன் வசதிகளும் போக்குவரத்து வசதிகளும்

வியாபாரியினுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கே பயன் பட்டன. இவ் வசதிகளினால் பொறிவழித் தொழில் முதலாளிகளுக்கு எவ்விதப் பயனும் விளையவில்லை.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதல் பாங்கும், இரண்டாம் பாங்கும் நிலவிய காலங்களைத் தவிர மற்றக் காலங்களில் வளர்ந்து வரும் பொறிவழித் தொழிலுக்குத் தேவையான பாங்கு வசதிகளும் கிடைக்கவில்லை; நாணய நிலையும் சரியாக அமையவில்லை. மேலும், 1830 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பொறிவழித் தொழில் ஃபெடரல் அரசாங்கத்தின் மேற்பார்வைக்கு வந்தது. தொழில் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தாத தென்னகத்துத் தோட்ட முதலாளிகள் ஃபெடரல் அரசாங்கத்தைத் தங்கள்பிடிப்பிலும் ஆதிக்கத்திலும் வைத்திருந்தமையால், ஃபெடரல் அரசாங்கம் தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்த முடியவில்லை. காப்புச் சுங்கத்தையும், செல்வாக்கு மிக்க மத்திய பாங்கு அமைப்பு முறையையும், வடக்கே கண்டத்தின் குறுக்கே போடப்பட்ட இருப்புப் பாதையையும், குடியிருப்போருக்கு இனாம் நிலம் வழங்குதலையும், அரசாங்கக் குடியேற்றத் திட்டத்தையும் தென்னாட்டுத் தோட்ட முதலாளிகள் முழுமூச்சுடன் எதிர்த்தனர். இம் முதலாளிகளின் ஆதிக்கத்தில் தலைமை நீதிமன்றம் இருந்தமையால், தொழிற் சாலை அமைப்பின் வளர்ச்சிக்குத் தேவையான முதலாளித்துவ முறைக்கு எதிராக நீதிமன்றம் சட்டபூர்வமான தீர்ப்புகளை வழங்கியது.

இத்தகைய சூழ்நிலைகளிலும் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது வியப்பிற்குரியதே. தொழில் வளர்ச்சிக்குப் பாதகமான ஆண்டுகளில்தாம் தொழிற்சாலை அமைப்பு தோன்றியது; அமெரிக்கத் தொழில்கள் நிலைபெற்றன. இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவையாவன: (1) புரட்சிக் காலத்தில் (1775-1783) ஐரோப்பிய இறக்குமதிகள் தடைப்பட்டன. வாணிபத் தடைச் சட்டமும் தொடர்பின்மைச் சட்டங்களும் நிறைவேறின. 1812-1814-ல் போர் மூண்டது. இவையெல்லாம் அமெரிக்கத் தொழில் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தன. (2) குறிப்பாகப் பருத்தி, இரும்பு, கட்டைக்கரி, நீராற்றல் போன்ற மூலப்பொருள்கள் நிறையக் கிடைத்தன. (3) தேர்ச்சி பெற்ற ஐரோப்பியத் தொழிலாளர்களும் தேர்ச்சி பெறுத ஐரோப்பியத் தொழிலாளர்களும் பெரும் எண்ணிக்கையில் குடிபெயர்ந்து அமெரிக்காவிற்கு வந்தனர். அவர்களில் பெரும்பாலோருக்கு விவசாயப் பயிற்சி இல்லாததால், தொழிற்சாலைகளில் பணிபுரிய அவர்கள் விழைந்தனர். (4) காப்புச் சுங்கங்களின்மூலமாக

அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவியது. (5) வண்திறமுடைய அமெரிக்கர்கள் பலதிறப் பயிற்சியுள்ளவர்களாகவும், கூர்த்த மதியுடையவர்களாகவும் விளங்கினர். (6) ஓரளவுக்குச் சேமித்துவைக்கப்பட்ட மூலதனமும் கிடைத்தது. இத்தகைய சிறு அளவு மூலதனத்தைப் பயன்படுத்தவேண்டி, இராச்சியங்கள் உரிமைப் பத்திரம் வழங்கி கார்ப்பொரேஷன்களைத் துவக்கின.

தொழில் வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்த வேறு சில காரணங்களையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். தொழிலுழைப்பின் கூலி உயர்வையும் மிஞ்சும் முறையில், கப்பல் சரக்கேற்ற கூலிமூலமாக நிறைய வருமானம் கிடைத்தது. கலிஃபோர்னியாவில் தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால், பாதக வாணிபக் கொடுப்பல்நிலை ஏற்படுவதைப்பற்றி அமெரிக்க ஐக்கிய நாடுகள் கவலைப்படவில்லை. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான இரும்பு, இயந்திரங்கள், இன்னும் மற்றப் பண்டங்கள் ஆகியவற்றை ஐக்கிய அமெரிக்கா விலைக்கு வாங்கியது. போக்குவரத்து வசதிகள் பெருகப் பெருக, உள்நாட்டுச் சந்தையொன்று உருவாகி வளரத் தொடங்கியது.

உபரி மூலதனத்தின் ஒரு சிறு பகுதியை வேறு பல துறைகளில் முடக்கியபோதிலும், 1815ஆம் ஆண்டிற்குப் பின்னர் பொறிவழித் தொழிலைத் துவக்குவதற்கு வேண்டிய முதல் கிடைத்தது. 1812ஆம் ஆண்டில் நடைபெற்ற போருக்கு முன்னரும் பின்னரும் குழம்பிய நிலை இருந்ததால், வர்த்தக நிலையங்கள் வர்த்தகத்தில் முடங்கியிருந்த முதலினைத் திரும்பப் பெற்றுக் கணிசமான அளவுக்குத் தொழிலில் ஈடுபடுத்தின. அவ்வாறே, கப்பல் முதலாளிகளும் கடல் வாணிபத் தலைவர்களும் கப்பல் வாணிபத்தைக் கைவிட்டுப் பருத்தி உற்பத்தியில் ஈடுபட்டனர். கிழக்கிந்திய வாணிபம் குன்றத் தொடங்கவே, சேலம், பிராவிடன்ஸ் (Providence) பகுதிகளில் முடங்கிக் கிடந்த மூலதனத்தைப் பொறிவழித் தொழிலில் ஈடுபடுத்தினர். அவ்வாறே திமிங்கில வேட்டைத் தொழில் குன்றவே, நியூ பெட்ஃபோர்டு (New Bedford) கொண்டிருந்த மூலதனமும் தொழில் வளர்ச்சியில் ஈடுபடுத்தப்பெற்றது. உபரி மூலதனத்தையுடைய வியாபாரிகள், முற்றுப்பெற்ற பண்டங்களைப் பெறவேண்டித் தங்கள் முதலைத் தொழில் வளர்ச்சியில் ஈடுபடுத்தினர்.

ஒருவகையில் பார்த்தால், இவ் வியாபாரிகளில் பலர் முன்னரே தொழிலதிபர்களாக இருந்துள்ளனர். தொழில் புரட்சிக்கு முன்னர்

இங்கிலாந்தில் நிகழ்ந்ததைப் போலவே, அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் அவ் வியாபாரிகள் மூலப்பொருள்களைச் சேகரித்துத் தொழில் நடைபெறும் பண்ணை இல்லங்களிலும் சிறு கடைகளிலும் அவற்றைப் பகிர்ந்தளித்து, அவ்வில்லங்களும் கடைகளும் மூலப் பொருள்களைப் பொறிசெய் பண்டங்களாக மாற்றியவுடன் அவற்றைத் திரும்பச் சேகரித்துப் பின்னர் சந்தைகளில் அவற்றை விற்பர். சிறு கடைகளிலிருந்தும் நீராலைகளிலிருந்துமே மிகப் பெரும் தொழிற்சாலைகள் உருவாகின என்பது உறுதியாகும். அவற்றின் அதிபர்கள் தாங்கள் சேகரித்து வைத்துள்ள மூலதனம் அனைத்தையும் மீண்டும் தொழில்துறைகளிலேயே ஈடுபடுத்தினர். பொறிவழித் தொழிலிலிருந்து கிடைத்த இலாபம் பொதுவாகவே மிகுந்து இருந்தமையால் புதிய மூலதனமும் பெருகியது; மற்றவர்கள் முதலீடு செய்யவும் முன்வந்தனர். தொழில் வளர்ச்சியில் முடங்கிய முதலீடு 1820-ல் 5,00,00,000 டாலர்களாகும் என்றும், 1860-ல் 1,00,00,00,000 டாலர்களாகும் என்றும், குறைகளுடைய சென்சஸ் அறிக்கை மதிப்பிட்டுள்ளது.

ஐரோப்பியப் பின்னணி —இங்கிலாந்தில் தொழில் புரட்சி

அமெரிக்காவில் தொழில் புரட்சி ஏற்படுவதற்கு முன்னரே இங்கிலாந்தில் இதுபோன்ற மாற்றம் ஏற்பட்டது. இங்கிலாந்தில் ஏற்பட்ட மாறுதல்களின் விளைவாக அமெரிக்காவில் தொழிற் புரட்சி ஏற்பட்டது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகவே ஒரேவகையில் பொருளாதார முறைகள் பின்பற்றப்பட்டன. கையினுலேயே நூல்நூற்றுத் துணி நெய்யப்பெற்றது. மற்றப் பண்டங்களின் உற்பத்தியைப் பொறுத்தவரையிலுங்கூட இது உண்மையே. பொதுவாகவே பயிர்த்தொழிலுக்குத் துணைத் தொழிலாகக் கைத்தொழில்களை விவசாயிகள் மேற்கொண்டனர். இக் கைத்தொழில்களை விவசாயிகள் தத்தம் இல்லங்களிலேயே மேற்கொண்டனர்; அல்லது இல்லத்துடன் இணைந்துள்ள சிறு கடைகளில், கூலி பெற்று பயிற்சிபெறும் தொழிலாளர்களையும், வெறும் பயிற்சிமட்டும் பெறும் தொழிலாளர்களையும் வேலைக் கமர்த்தித் தலைமைத் தொழிலாளி மிகவும் பாடுபட்டுப் பண்டங்களை உற்பத்தி செய்தான். பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் இருபத்தைந்து ஆண்டுகளிலும் உலகத்தில் புரட்சிகரமான திருப்பத்தை உண்டாக்கும் கண்டுபிடிப்புகள் உபயோகத்திற்கு வந்தன. இக் கண்டுபிடிப்புகளால் வேறு எக்காலத்திலும் ஏற்படாத மாற்றங்கள் இப் பொழுது மனித சமூகத்தின் அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்டன. கில்டு கட்டுப்பாடுகளின் (Guild regulations) தடைகளிலிருந்து

தங்களை விடுவித்துக்கொண்ட ஐரோப்பிய நாடுகளிலேயே முதலிடம் வகிக்கும் முதல் நாடு இங்கிலாந்தாகும். நிலபெற்ற வாணிபத்தையும், சேர்த்துவைக்கப்பெற்ற மூலதனத்தையும் இங்கிலாந்து பெற்றிருந்தது. ஐரோப்பிய யுத்தங்களினால் விளையும் உள்நாட்டுக் குழப்பங்களிலிருந்து இங்கிலாந்து எப்பொழுதும் தப்பித்துக்கொள்ளும் நிலையிலேயே இருந்தது. நிலக்கரியும் இரும்பும் நிறையக் கிடைத்தன. ஆகவே, மேலே முன்னேறிச் செல்லக்கூடிய வாய்ப்புடைய நாடாக இங்கிலாந்து திகழ்ந்தது.

ஆயிரக்கணக்கான பரிசோதகர்களின் முயற்சியில் விளைந்த தொழில் புரட்சி நெசவுத் தொழிலிலேயே முதலில் தொடங்கியது. ஜான் கே (John Kay) என்பவர் 1733-ல் 'பறக்கும் தறி ஓடக் கருவியைக்' (fly-shuttle) கண்டுபிடித்தார். இக் கருவியைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர், ஒரு நெசவாளி தறியின் ஓடத்தை ஓட்டவேண்டுமெனில் தறியின் நெடுக்கிலும் குறுக்கிலுமாக அவர் போய்வந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால், இக் கருவியைக் கண்டுபிடித்த பின்னர், அதே வேலையைச் செய்யத் தறியிலுள்ள குறிப்பிட்ட ஒரு கம்பியைக் குலுக்கி அசைத்தால் போதும். இந்த எளிய கருவியைக் கொண்டு நெசவாளி அகலமான துணிகளை விரைவாக நெய்துவிடுவான். நெசவுத் தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியாலும் வேகத்தாலும் நூலின் தேவை பெருகியது. 1770ஆம் ஆண்டில்தான் ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ் (James Hargreaves) எனும் லங்காஷைர் நெசவாளி பழமையான நூற்கும் சக்கரத்தைத் (spinning wheel) திருத்தியமைத்தார். திருத்தியமைக்கப்பட்ட நூற்கும் சக்கரக் கருவியில், எட்டு நூற்கும் கதிர்கள் ஒரு பட்டையினால் கிடைநிலையிலுள்ள சக்கரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். இக் கதிர்களைச் 'சுழற்சிமுறை மாற்றுப்பொறி' (crank) இயக்கும். ஆக, ஒரே வேளையில் எட்டு நூல்களை எட்டுக் கதிர்களும் நூற்கும். 'நூற்கும் ஜென்னி'யை (spinning jenny) ஹார்கிரீவ்ஸ் செப்பனிட்டுக் கொண்டிருந்த சமயத்தில். பிரஸ்டனைச் (Preston) சார்ந்த முடிதிருத்தும் தொழிலாளராகிய ரிச்சர்ட் ஆர்க்ரைட் (Richard Arkwright) என்பார் 1769-ல் ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்தார். அக் கருவியிலுள்ள உருளைகளின் வழியாகச் சிக்கலெடுக்கப்பட்ட பஞ்சினைச் செலுத்தி நூல் நூற்கலாம். முந்தியக் கருவியைவிட இந்தக் கருவி விரைந்து சுழலும். இக் கருவி நூற்கும் நூல் கெட்டியாக இருப்பதால் பாவு நூலாகப் (warp) பயன்படும். ஆர்க்ரைட் துவக்கத்தில் செய்த இக் கருவியைக் குதிரைகளே இயக்கும். 1771-ல், இக் கருவியை நீராற்றலே ஓட்டியமையால் இலாபம் கிடைக்கக்கூடிய அளவுக்கு நிறைய நூல்

உற்பத்தியாகியது. 'நீராற்றல் இயக்கு கருவி'யைப் (water frame) பயன்படுத்தி ஆர்க்ரைட் பெரும் பணக்காரர் ஆனர். ஹார்கிரீவ்ஸின் ஜென்னியையும் ஆர்க்ரைட்டின் 'நீரியக்குக் கருவி'யையும் (water frame) ஒன்றுக இணைத்து 'மியூல்' (mule) என்ற கருவியை 1779-ல் சாமுவேல் கிராம்டன் (Samuel Crompton) செய்தார். உயர்ந்த தரமுடைய நூலினை விரைவாக நூற்கும் ஆற்றலை மியூல் பெற்றிருந்ததால், இங்கிலாந்து இந்தியாவுடன் இத்துறையில் போட்டியிட முடிந்தது.

நெசவாளர்களைவிட நூல்நூற்பவர்கள் முன்னேறிவிட்டமையால், இயற்கையாகவே நெசவுத் துறையில்தான் அடுத்த முன்னேற்றம் நிகழவேண்டும். எட்மண்டு கார்ட்ரைட் (Edmund Cartwright) எனும் கென்டிஷ் மத குரு (Kentish clergyman) நெசவுத் துறையின் பிரச்சினைகளில் கவனம் செலுத்திய வேளையில், அவருக்கு இயந்திரங்களைப்பற்றிய அறிவு கிடையாது. எனினும், அவர் அத் துறையில் உழைத்து ஒரு கருவியைக் கண்டுபிடித்தார் எனில் அது வியப்பிற்குரியதாகும். 1785-ல் நெசவுக்கு வேண்டிய விசைத்தறியை (power loom) அவர் கண்டுபிடித்தார். அவ் விசைத்தறியை முதலில் குதிரைகளும், பின்னர் நீராவியும் இயக்கின. பருத்தியின் தேவை மிகவும் பெருகியது. தென்னுட்டுத் தோட்ட முதலாளிகளில் பலர் புகையிலை உற்பத்தியை நிறுத்திவிட்டுப் பருத்தி உற்பத்தியில் ஊக்கம் செலுத்தினர். இம் மாற்றத்திற்கு எலி விட்னேயின் (Eli Whitney) பருத்தி ஜின்னும் ஒரு காரணமாக அமைந்தது. பருத்தி இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால் நெசவுத் துறையில் புரட்சி ஏற்படும் ஆரம்பச் சூழ்நிலை உருவாகியது. மற்றத் துணிவகைகளுக்கு வேண்டிய இயந்திரங்களை ஏனைய கண்டுபிடிப்பாளர்கள் கண்டுபிடித்தனர்.

நெசவுத்தொழிலுக்குரிய இயந்திரங்களில் திருத்தங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்ட வேகையிலேயே நீராவி என்ஜின் (Steam Engine) கண்டுபிடிக்கப்பட்டது. பண்டைய எகிப்தியர்களுக்கு நீராவியின் உபயோகங்களைப்பற்றி நன்கு தெரியும். பதினேழாம் நூற்றுண்டின் முடிவில் நீராவி என்ஜினைப்பற்றிய பரிசோதனைகள் நிறையச் செய்யப்பெற்றன. சுரங்கங்களில் நிரம்பி வழியும் தண்ணீரை இறைக்க 1705-ல் தாமஸ் நியூகோமன் (Thomas Newcomen) ஓர் என்ஜினைக் கண்டுபிடித்தார். ஐம்பது ஆட்கள் செய்யும் வேலையை இந்த என்ஜின் செய்தது. ஆனால், இந்த என்ஜினை இயக்குவதற்கு அதிக நேரம் பிடிக்கும்; செலவும் அதிகமாகும். 1763-ல் ஜேம்ஸ் வாட் (James Watt) எனும் ஸ்காட்டிஷ் என்ஜினியர், நியூகோமனின் என்ஜின்களில்

ஒன்றைத் திருத்திச் செப்பனிட முனைந்தார். 1769-ல் ஜேம்ஸ் வாட் புதிய திருத்தி அமைக்கப்பெற்ற என்ஜின் ஒன்றைச் செய்து முடித்தார். ஆவியை நீராக மாற்றும் ஒரு தனி அமைவில் (condenser) நீராவியைச் செலுத்துவதன்மூலமாக அந்த என்ஜினில் விரயமாகும் நேரமும் குறைக்கப்பட்டது; நிலக்கரியைச் செலவழிப்பதிலும் சிக்கனம் ஏற்பட்டது. ஆக, உருளை எப்பொழுதும் சூடாகவே இருந்தது. இதனால், தம்மைத்தாமே இயக்கிக் கொள்ளும் சக்திகளின்மூலமாகக் கிடைக்கும் நீராவியைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்திக்கொண்டு உருளை முன்னும் பின்னும் சுழலும். மாத்தியு போல்டனைக் (Mathew Boulton) கூட்டாகச் சேர்த்துக்கொண்டு, இலாப நோக்குடன் நீராவி இயந்திரங்களை வாட் (Watt) செய்ய முனைந்தார். வாட் அவர்களைப் போன்ற கூர்த்த மதியினருக்குச் சக்கரங்களைச் சுற்றவோ அல்லது நீராவிச் சம்மட்டியை இயக்கவோ பயன்படும் வகையில் முன்னும் பின்னும் இயங்கும் உந்து தண்டினைச் (piston) செய்வது அவ்வளவு கடினமன்று. நீர் சக்தியிலிருந்து தொழில் விடுவிக்கப் பெற்றுள்ளது. பெரும் நகரங்களில் தொழிற்சாலைகள் தோன்றின. இந்த என்ஜின்களைக்கொண்டு சுரங்கங்களிலிருந்து நிலக்கரியும் இரும்பும் தோண்டி எடுக்கப்பெற்று சந்தைகளில் விற்கப்பட்டன.

பொறிவழித் தொழிலில் ஏற்பட்ட மாறுதல்களினாலும் வளர்ச்சிகளினாலும் உற்பத்தி பெருகியது. அவ்வாறே பகிர்ந்து கொள்ளும் முறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. தொழிற் புரட்சிக் காலத்தில் டெல்ஃபோர்டு (Telford), மெக்காடம் (McAdam) போன்ற அறிஞர்களின் மேற்பார்வையில் சாலைகள் போடும் வேலையில் பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டது. உர்சிலியிலிருந்து (Worsley) மாஞ்செஸ்டருக்கு (Manchester) நிலக்கரியைக் கடத்திச் செல்ல வேண்டி, 1761-ல் பிரிட்ஜ்வாட்டர் கால்வாயை (Bridgewater Canal) ஜேம்ஸ் பிரிண்டிலி (James Brindley) தோண்டினார். இக் கால்வாயில் ஏற்பட்ட வெற்றியின் விளைவால் அடுத்த பத்தாண்டுகளில், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1825-க்குப் பின்னர் நிகழ்ந்ததுபோல, இங்கிலாந்திலும் நிறையக் கால்வாய்கள் தோண்டப்பட்டன. இக் கால்வாய்கள் இங்கிலாந்திலுள்ள முக்கியமான நதிகளையும் மையங்களையும் இணைத்தன. இயந்திர நிபுணர்கள் 1780 முதல் 1789 வரையுள்ள ஆண்டுகளில், நீரில் சுழலும் சக்கரத்துடன் நீராவி என்ஜினின் உந்து தண்டினை இணைக்க முடியும் என்பதை உணர்ந்தனர். 1807 ஆம் ஆண்டில்தான் கிளாடுமீது (Clyde) நீராவிப் படகினைச் செலுத்த முடியும் என்பதை வில்லியம் சிம்மிங்டன்

(William Symmington) மெய்ப்பித்துக் காட்டினர். ராபர்ட் புல்டன் (Robert Fulton) இதனை 1807-ல் அமெரிக்கர்களுக்கு நிரூபித்துக் காட்டினர். அதே ஆண்டில் முப்பத்திரண்டு மணி நேரத்தில் நியூயார்க்கிலிருந்து 150 மைல்கள் தொலைவிலுள்ள ஆல்பனிக்கு கிளர்மென்டை (Clermont) வாட் அவர்களின் என்ஜின் செலுத்திச் சென்றது. பலவாண்டுகளுக்கு முன்னர் சமுத்திரப் பிரயாணத்திலும் இத்தகைய பரிசோதனைகள் செய்யப் பட்டன. நீர்ப்போக்குவரத்தில் புல்டன் எதைச் சாதித்தாரோ அதனையே நிலப்போக்குவரத்தில் டிரிவிதிக் (Trevithick) அவர்களும் மற்றவர்களும் செய்தவற்றைப் பயன்படுத்திக் கொண்டு ஜார்ஜ் ஸ்டீபன்சன் (George Stephenson) எனும் ஆங்கிலேயர் சாதித்தார். 'ராக்கெட்' (The Rocket) எனும் ஸ்டீபன்சனின் என்ஜின், தோர்வு ஒன்றில் லிவர்பூலுக்கும் மாஞ் செஸ்டருக்கும் இடையில் மணியொன்றுக்கு 29 மைல்கள் வேகத்தில் ஓடியது. நீராவி இருப்புப் பாதைகளின் பயனுடைமை இதனால் நிலைநிறுத்தப்பெற்றது.

கைத்தொழிலுக்குப் பதிலாக விசைப்பொறிகள் ஆதிக் கத்திற்கு வந்தன. தொழிற்சாலைகளிலும் போக்குவரத்துத் துறைகளிலும் நீராவியின் பயனுடைமை பெருகியது. தொழில் புரட்சி நாடெங்கும் பரவியது. நாம் இன்று வாழ்ந்து நுகரும் நாகரிகம், தொழிற் புரட்சியின் விளைவாகும். இயந்திரத்தைத் தொழிலில் புகுத்தியதால் உற்பத்தி பெருகியது; உற்பத்தி பெருகிய அளவிற்குச் செல்வமும் பெருகியது; பெருகிய உற்பத் தியையும் செல்வத்தையும் நன்கு பயன்படுத்திக்கொள்ளும் வகையில், வியாபார முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. வளர்ந்துவரும் மத்தியதர வர்க்கத்தினரின் எண்ணிக்கையும், அதிகாரமும், செல்வமும் உயர்ந்தன. அதே வேளையில், கூலி பெறும் பாட்டாளி வர்க்கம் ஒன்று புதிதாக உருவாகியது. தொழில் புரட்சியில் விளைந்த செல்வத்தின் பெரும் பகுதி மத்தியதரவர்க்கத் தினரின் கைக்குச் சென்றது. ஆனால், மறுபக்கத்தில் நிலத்தை விட்டுவிட்டு வந்து, தொழிற்சாலைகளைச் சுற்றிலுமுள்ள புதிய நகரங்களின் சேரிகளிலேயே கூலி பெறும் பாட்டாளிகள் ஆட்டு மந்தையைப்போல அடைந்து கிடந்தனர்; வறுமையிலும் இழிவான நிலையிலும் உழன்றனர்.

புதிய சகாப்தத்தில் செல்வம், வாய்ப்பு இவற்றில் விளைந்த ஏற்றத்தாழ்வுகள் அரசியலிலும் தலையெடுத்தன. ஆடம் ஸ்மித் தும் (Adam Smith), ரிக்கார்டோவும் (Ricardo), இன்னும் மற்றப் பொருளாதார நிபுணர்களும் கண்ட தலையிடாமைப் பொருளா தாரக் (laissez-faire) கோட்பாட்டினை மத்தியதரவர்க்கம் ஏற்றுக்

கொண்டது. இவ் வர்க்கத்தினர் அரசாங்கத்தில் செல்வாக்கையும் அந்தஸ்தையும் போரிட்டுப் பெற்றனர். நிலப்பிரபுத்துவம் முறிந்து மத்தியதரவர்க்கத்தின் ஆட்சி ஏற்பட்டதால் ஆலைத் தொழிலாளிக்கு உடனடிப் பயன் ஏதும் விளையவில்லை. முதலாளிகள் போராடியதுபோலவே தங்கள் நலன்களுக்குப் பாதகமாகக் கொண்டுவந்த சட்டத்தினை எதிர்த்து அரசியல் உரிமைகள் பெறுவதற்காகத் தொழிலாளர்களும் போராடினர். தொழிலாளர்களின் கிளர்ச்சி சார்டிஸ்டு இயக்கத்திலிருந்து(Chartist Movement, 1838-1848) தொடங்கியது. இன்றுவரையில் அக் கிளர்ச்சி நடைபெற்றது. இக் கிளர்ச்சியின் விளைவாக அரசியல் ஜனநாயகம் ஏற்பட்டது; சமூக முன்னேற்றத்திற்குரிய சட்டங்கள் நிறைவேறின. இயந்திர முன்னேற்றம் அச்சுத்தொழிலை எளிதாக்கிற்று. அச்சுத்தொழிலும் எளிதாகி நகரத்தில் மக்கள் எண்ணிக்கையும் பெருகவே, அறிவுசெறிந்த வாழ்வும் முன்னேற்ற எண்ணமும் நாட்டு மக்களிடத்தில் தவழ்ந்தன. பன்னூட்டுத் தொடர்புகளுக்கும் தொழிற்புரட்சி தூண்டுகோலாக அமைந்தது. தொழிற்புரட்சி ஏற்பட்ட நாடுகள் மூலப்பண்டங்கள் எங்கே கிடைக்கும் என்று தேடி அலைந்தன; புதிய சந்தைகளை நாடின; இயந்திரங்கள் உண்டாக்கித் தந்த உபரி மூலதனத்தை முதலீடு செய்ய வாய்ப்புடைய துறைகளைத் தேடி அலைந்தன. எனவே, ஒரு புதிய ஏகாதிபத்தியமும், ஒரு புதிய இராணுவத்துவமும் (Militarism) எழுந்தன. பொருளாதார வளர்ச்சியில் பின் தங்கிய மக்களை அவ் வேகாதிபத்தியமும் இராவணுவத்துவமும் வென்றன.

அமெரிக்கத் தொழிற்சாலை அமைப்பின் துவக்க நிலைகள்

இங்கிலாந்தைப்போலவே அமெரிக்காவிலும் தொழில் ஒரே மாதிரியாகவே வளர்ந்தது. ஆனால், அமெரிக்கத் தொழில் வளர்ச்சியில் வேகம் இருந்தது. வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தன்னிறைவுத் தொழில் உற்பத்தி கைத்தொழில் கட்டத்தை அடைந்தது; அல்லது இல்லத்தொழில் கட்டத்தை அடைந்தது எனலாம். உற்பத்தியான பண்டங்களைச் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்றனர். இச் சூழ்நிலை நிலவிய பிந்திய ஆண்டுகளில் சில வேளைகளில் கழிவு அடிப்படையில் வீட்டிலே தொழில் நடைபெற்றது. மூலப்பண்டங்களை முழுப்பண்டங்களாக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள இல்லங்கள் அனைத்திலும் வாணிப முதலாளி மூலப்பொருள்களை விநியோகம் செய்தான். தோட்டங்களுள்ள சில மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களிலெல்லாம் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வீட்டுத்

தேவைகளைப் பூர்த்தி செய்யும் இல்லத்துப் பொறிவழித் தொழில் எங்கும் நீக்கமற நிறைந்திருந்தது. கடற்கரைப் பகுதிகளில் மறைந்து பல ஆண்டுகள் கழிந்த பின்னர், எல்லைப்புறப் பிரதேசங்களில் இம்மாதிரியான இல்லத்துப் பொறிவழித் தொழில் தொடர்ந்து நிலவியது. பொதுச் சந்தையின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் வாணிப முதலாளி வழங்கும் மூலப் பண்டங்களைக் கொண்டு இல்லத்துப் பொறிவழித் தொழில் சில இடங்களில் நடைபெற்றது. வாடிக்கைக்காரர்கள் விருப்பத்தையே நிறைவேற்றிவந்த பொறிவழிக் கலைத்தொழிலாளி பொதுச் சந்தையின் தேவைகளையும் நிறைவேற்ற முனைந்தான். தொழிற்சாலைமுறையே உருவாகும் வகையில் சில ஆலைகளும உருக்கு உலைகளும் பெருமளவில் இயங்கின. அதே வேளையில், கலைத்தொழிலாளி வீடு வீடாக நாடோடிபோல் அலைந்து திரிந்து, செருப்புகள் செய்யும் வேலையிலும், மற்றப் பயிற்சிக்குரிய வேலைகளிலும் ஈடுபட்டான். இத்தகைய வேலைகள் குடும்பத் திறமைக்கு அப்பாற்பட்டவைகளாகும். வீட்டுத் தொழில், இல்லத்துப் பொறிவழித்தொழில், சிறு ஆலைத் தொழில், சிறு கடைத்தொழில் இவற்றில் பல்வேறு மாதிரிகள் கொண்ட பல கட்டங்கள் அமெரிக்கப் புரட்சி ஏற்படும்தறுவாயில் தொழில்துறையில் இருந்தன. எழுபது ஆண்டுகள் கொண்ட ஒரு குறுகிய காலத்தில் அமெரிக்காவில் தாயும் பெண்ணும் சேர்ந்துழைத்த இல்லத்துப் பொறிவழித் தொழில் மறைந்து, நீர் சக்தியும் நீராவி சக்தியும் இயக்கும் தொழில் உருவாகியது. என்றபோதிலும், இவ்வாண்டுகளில் இல்லத்துத் தொழிலின் பல்வேறு கட்டங்களும் அமெரிக்காவில் தொடர்ந்து நிலவின. இத்தகைய மாறுதல்கள் கடிதில் நிகழ்ந்தன என்றாலும், எல்லைப்புறத்தின் தொலைவும் வறுமையும் இல்லாதிருப்பின், இம் மாறுதல்களில் இன்னும் கூடுதலான வேகமும் விரைவும் இருந்திருக்கும்.

இங்கிலாந்திலே தொழிற் புரட்சி தொடங்கியதிலிருந்து, அந்த நாடு உலகத்தின் தொழிற்சாலையெனப் பெயரெடுத்தது. இந்த வாய்ப்பினையும் வசதியையும் இங்கிலாந்து இழக்க விரும்பவில்லை. எனவே, தான் புதிதாகக் கண்டுபிடித்துள்ள இயந்திரங்களின் இரகசியங்களை மறைத்துவைக்கும் முயற்சிகளிலே இங்கிலாந்து ஈடுபட்டது. 1765 முதல் 1789 வரையில் உள்ள ஆண்டுகளில் நெசவாலைகளிலும், இயந்திரங்களை இயக்குவதிலும் ஈடுபட்டுள்ள தேர்ச்சிபெற்ற ஆங்கிலேயத் தொழிலாளர்கள் அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்து செல்லக்கூடாதென இங்கிலாந்து தடை விதித்தது. அவ்வாறே நெசவாலைக்குரிய இயந்திரங்களையோ அல்லது திட்டங்களையோ அல்லது மாதிரிகளையோ அமெரிக்காவுக்கு அனுப்பக்கூடாதெனவும் தடைவிதித்தது.

இருந்தபோதிலும் இத்தகைய தடைகளினுல் அமெரிக்காவில் தொழில்துறையில் இயந்திரத்தைப் புகுத்துவதில் எவ்விதத் தாமதமும் ஏற்படவில்லை. தொழில் வளர்ச்சியில் அமெரிக்கா விற்கு ஆர்வம் உண்டாகிவிட்டது.

புரட்சி முடிவுற்ற ஆண்டிலிருந்து 1800 முடிய உள்ள காலத் தைப் பரிசோதனைக் காலமெனலாம். ஜென்னியை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் 1787-ல் பிலடெல்பியாவிலும், பீவர்லியிலும், மெஸ்ஸாசுசெட்சிலும் எழுந்தன. 1787ஐத் தொடர்ந்த ஆண்டு களில் நியூ இங்கிலாந்து, நியூயார்க்கு ஆகிய மாநிலங்களின் மற்றப்பகுதிகளிலும் அத் தொழிற்சாலைகள் எழுந்தன. நிச்சயமாக, அமெரிக்காவில் எழுப்பிய முதல் பஞ்சாலைகள் இவைகளேயாகும். ஆனல், இவ்வாலைகளில் எதுவும் நிலைத்து நிற்கவில்லை. சாமுவேல் சிலேட்டர் (Samuel Slater) என்பவர் பெல்பரில் (Belper) உள்ள ஆர்க்ரைட்டின் தொழிற்சாலைகளில் ஒன்றில் பயிற்சிபெறும் தொழி லாளியாகப் பணிபுரிந்தவராவார். திருத்திச் செப்பனிடப்படும் இயந்திரத்திற்கு அமெரிக்காவில் அரசாங்க உதவித்தொகை கிடைக்கும் எனக் கேள்வியுற்ற சிலேட்டர் இங்கிலாந்தைவிட்டு அமெரிக்காவிற்குச் சென்ருர். அங்கு 1789-ல் அவர் முதல் ஆர்க்ரைட் ஆலையை எழுப்பினர். பிராவிடென்சைச் சார்ந்த வரும், குவேக்கர் (Quaker) குழுவில் உறுப்பினராக இருந்தவரும் ஆகிய மோசஸ் பிரௌன் (Moses Brown) எனும் வணிகரின் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு சிலேட்டர் ரோட் ஐலண் டிற்கு வந்து 1790-ல் பாடக்கட் (Pawtucket) எனுமிடத்தில் தமது ஆலையைக் கட்டினர். அமெரிக்காவில் முதன்முதலில் அவ்வாலையில் இருந்தே பாவுநூல் நூற்கப்பட்டது. அமெரிக்கத் தொழிற்சாலை அமைப்பின் துவக்க நிலைகளுக்கு சிலேட்டரும் அவர்தம் பாடக்கட் ஆலையும் அடிகோலின. 'பொறிவழித் தொழிலாக்க வேலைகளுக்குப் பொதுவாகத் தேவைப்படும் நீர் சக்தியை ஒழுங்காகப் பெருமளவில் உபயோகிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சிக்கு அலெக்சாண்டர் ஹாமில் டனின் கருத்தே காரணமாகும்,' என கிளார்க் குறிப்பிட்டுள்ளார். ஹாமில்டனின் முயற்சியில், பாசாசியிக் (Passaic)[2] நீர்வீழ்ச்சியில் நெசவாலை ஒன்றினை உருவாக்கும் உரிமைபெற்ற கம்பெனி யொன்று நியூஜெர்சியில் நிறுவப்பட்டது. அக் கம்பெனி நெடு நாட்கள் வாழவில்லை. எனினும், பாட்டர்சன் (Paterson) எனும் முக்கியமான நெசவாலை நகரம் ஒன்று எழும்புவதற்கு அக் கம்பெனி தூண்டுகோலாக அமைந்தது.

[2] Ibid., I, 404.

நேரடியாகவோ அல்லது குதிரையாற்றல் மூலமாகவோ நூல் நூற்கும் பொறிகளே முதலில் இயக்கினர். பின்னர், நீர் சக்தியைப் பயன்படுத்தினர். நூல் நூற்கவும், துணி நெய்யவும், மற்ற உற்பத்தி வகைகளிலும் நீர் சக்தியையே பயன்படுத்தினர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், நியூஜெர்சியிலும், ரோடு ஐலண்டிலும் சுரங்கங்களிலிருந்து நீரை இறைத்து வெளியேற்ற நீராவியை அமெரிக்காவிலேயே முதன்முதலில் உபயோகித்தனர். நியூயார்க்கிலுள்ள அறுவை ஆலையில்தான் நீராவியை முதன்முதலில் 1803-ல் உபயோகித்ததாகப் பலர் நம்பினர். பின்னர், நீர்சக்தி போதுமானதாகக் கிடைக்காமையால், போல்டன்-வாட் மாதிரியைச் சார்ந்த குறை அழுத்தம் உள்ள என்ஜின்களை (low-pressure engines of the Boulton-Watt type) இறக்குமதி செய்து பயன்படுத்தினர்; அல்லது, ஈவான்ஸ் உயர் அழுத்த என்ஜின்களைப் (high-pressure engines of Evans) பயன்படுத்தினர். ஓகியோ பள்ளத்தாக்கில்தான் உயர்அழுத்த என்ஜின்களை மிகவும் பயன்படுத்தினர். இப் பகுதியில்தான் பொறிவழித் தொழிலில் நீராவி ஆற்றல் மிகவும் உபயோகமாகியது. மேற்குப் பென்சில்வேனியாவிலும், ஓகியோவிலும் உள்ள கண்ணுடித் தொழிலுக்கும் இரும்புத் தொழிலுக்கும் நிறைய வெப்பம் தேவைப்படுவதால், நீராவி ஆற்றல் பெரிதும் பயன்படுத்தப்பெற்றது. நியூ இங்கிலாந்தில் நல்ல நீர்சக்திப் பகுதிகள் இல்லாமையாலும், நகரங்களில் பொறிவழித் தொழில் குவிந்தமையாலும் நீராவி என்ஜின்களின் தேவை பெருகியது. 1840ஆம் ஆண்டிற்குப் பின்னர் நீராவி சக்தி கடிதில் பெருகியபோதிலும், 1860ஆம் ஆண்டுவரையில் நீர்சக்தியே பெரிதும் பயன்பட்டது.

பொறிவழித் தொழில் அமெரிக்காவில் நன்கு நிலைத்து நின்றவுடன், ஐரோப்பிய என்ஜினியர்களின் கருத்துகளை அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர்கள் ஏற்றுக்கொண்டனர்; அக் கருத்துகளை அமெரிக்க சூழ்நிலைக்கேற்ப மாற்றி அமைத்துப் பயன்படுத்தினர்; புதிய வளர்ச்சிகளுக்கும் அவற்றைப் பயன்படுத்தினர். தொழில் உழைப்பில் ஏற்பட்ட கிடைப்பருமையின் காரணமாகப் புதிய கண்டுபிடிப்புகள் தேவைப்பட்டன. இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பெற்ற பொருள்களைப்பற்றிய செய்தியைப் பற்றி அமெரிக்கர்களுக்குத் தெரியாதாகையால், அதே கண்டுபிடிப்புகளை அமெரிக்காவிலும் திருப்பிக் கண்டுபிடித்தனர். எலி விட்னேயின் கண்டுபிடிப்புதான் அமெரிக்கக் கண்டுபிடிப்புகளிலேயே மிகவும் உயர்ந்ததாகும். எலி விட்னே பருத்தி ஜின்னைக் கண்டுபிடித்ததோடு அமையாது, 1795 முதல் 1798 வரையுள்ள ஆண்டுகளில் துப்பாக்கி-பீரங்கி உற்பத்தியில்

ஒரே மாதிரியான பாகங்களைச் செய்யும் முறையையும், ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றைப் போடும் வகையில் ஒரே வகைத்தான உறுப்புகளைச் செய்யும் இயந்திர நுட்ப முறையையும் அவர் புகுத்தினர். அமெரிக்க முன்னேற்றத்தில் கோல்டிங் அமைவு (Goulding Condenser) முக்கிய இடம் வகிக்கிறது. இந்த அமைவு கம்பளியைக் கோதிச் சிக்கலெடுக்கும் முறையை எளிமையாக்கிற்று; அம்முறையில் ஒரு வேகமும் ஏற்பட்டது. பிரான்சிஸ் கேபட்லோவல் (Francis Cabot Lowell) எனும் போஸ்டன் வியாபாரி 1810-1812-ல் இங்கிலாந்திற்குச் சென்று நெசவாலைப் பொறிகளை நன்கு ஆராய்ச்சி செய்துவிட்டு அமெரிக்காவுக்குத் திரும்பி நெசவிற்கு வேண்டிய முதல் விசைத் தறியை வெற்றிகரமாகச் செய்து முடித்தார். இயந்திர நுட்பத்தில் தேர்ச்சியடைந்த பால்மூடி (Paul Moody) என்பவரின் துணை கொண்டு லோவல் புதிய நூற்கும்பொறியையும் விசைத்தறியையும் செய்துமுடித்தார். இப் பொறிகளை 1814-ல் வால்தாமில் (Waltham) அவர் நிறுவினர். உலகிலேயே முதன்முதலாக வால்தாமில்தான் நூல் நூற்பதில் தொடர்ந்து இணைந்துள்ள பல்வேறு படிமுறைகளும் (processes), அவ்வாறே துணி நெய்வதிலுள்ள பல்வேறு படிமுறைகளும் ஒரே தொழிற்சாலையில் அமைக்கப்பெற்றிருந்தன. எல்லாவித படிமுறைகளையும் ஒரே தொழிற்சாலையில் ஒருமுகப் படுத்திய 'வால்தாம் அமைப்பு' (Waltham System) தற்காலத்துத் தொழிற்சாலை அமைப்பு முறையை நோக்கி முன்னேறியது. 1814ஐத் தொடர்ந்த ஆண்டுகளில் ஜான் தோர்ப் (John Thorp), சாமுவேல் பாச்சல்டேர் (Samuel Batchelder), வில்லியம் மேசன் (William Mason) போன்ற புகழ்வாய்ந்த அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர்கள் 'ரிங் ஸ்பின்னர்' (Ring Spinner) எனும் நூற்கும் பொறியைக் கண்டுபிடித்தனர். ஆர்க்ரைட் கதிரைவிட மூன்று மடங்கு கூடுதலான வேகத்தில் ரிங் ஸ்பின்னரிலுள்ள கதிர் சுழன்றது. மேலும், அக் கண்டுபிடிப்பாளர்கள் பின்னல் வேலைகளைச் செய்யும் பொறிகளையும், பொம்மைகள் அச்சிடப்பெற்ற லினன், பருத்தித் துணிகளை உற்பத்தி செய்யும் பொறிகளையும் சீர்திருத்திச் செப்பனிட்டனர்.

நெசவுத்துறையில் மட்டுமே அமெரிக்க இயந்திர நிபுணர்கள் முன்னேறினர் என்று கருதக்கூடாது. நல்ல முறையில் பயன்பட்ட உயர் அழுத்த நீராவி என்ஜின் பிலடெல்பியாவின் ஆலிவர் ஈவான்ஸ் (Oliver Evans) கண்டுபிடித்தார். நீர்வழிப் போக்குவரத்தில் நீராவியைப் பயன்படுத்திச் சிறந்த பரிசோதனைகளை ரம்சே (Rumsay), ஃபிட்ச் (Fitch), ஃபுல்டன் (Fulton) ஆகியோர் செய்து முடித்தனர். ஹோபோக்கனைச் சார்ந்த ஜான் ஸ்டீவன்ஸ்

(John Stevens of Hoboken) இரயில்வே என்ஜினைப் பயன்படுத்த முனைந்தார். கீசன்கெயினர் (Geissenhainer) என்பார் 1830-ல் ஆந்திரசைட் நிலக்கரியை உபயோகித்து இரும்புக் கனிப்பொருளை உருக்கினர். 1851-ல் கென்டக்கியைச் சேர்ந்த வில்லியம் கெல்லி (William Kelly) என்பவர் காற்றினைச் செலுத்தி உருகிய உலோகத்திலுள்ள கரியை அகற்றும் பெசிமர் முறையைக் (Bessemer Method) கண்டுபிடித்தார். இல்லத் தொழிலுக்கும் தொழிற் சாலை அமைப்பிற்கும் மிகவும் பொருத்தமான அறுவைப்பொறியினை 1846-ல் எலியஸ் ஹோவே (Elias Howe) என்பவர் கண்டுபிடித்தார். அப்பொறியானது பெண் தொழிலாளர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருந்தது. மேலும், நெசவுத் தொழிலையும் செருப்புத் தொழிலையும் நல்ல முறையில் புரட்சிகரமாக மாற்றியமைக்கவும் அப்பொறி பயன்பட்டது. மோர்ஸ் (Morse) புகுத்திய காந்த முறைத் தந்தி (magnetic telegraph) செய்திப் போக்குவரத்து முறைகளில் பெருத்த புரட்சியை உண்டுபண்ணியது. அமெரிக்கப் பொறிவழித் தொழில் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்த நூற்றுக்கணக்கான கண்டுபிடிப்பாளர்களுக்கு நாடு கடமைப்பட்டுள்ளது. உரிமைப் பத்திரம் வழங்கும் அலுவலகத்தின் (Patent Office) அறிக்கையின்படி, 1790 முதல் 1811 முடிய, ஆண்டொன்றுக்குச் சராசரி எழுபத்தேழு கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ளன; 1830-ல் 544 உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1841 முதல் 1850 முடிய, 6,460 உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன; அடுத்த பத்தாண்டுகளில் 25,250 பத்திரங்கள் வழங்கப்பட்டன.

கண்டுபிடிப்பாளர்களின் முயற்சிகளைப் பாராட்டுவது போலவே, தொழில்நுட்பத் தேர்ச்சியாளர்களின் உழைப்பைப் பயன்படுத்தித் தொழில் துறையை ஊக்குவித்த வணிகர்களையும் முதலாளிகளையும் பாராட்டவேண்டும். வசதியற்ற இடங்களில் சிறு தொழிற்சாலைகளைக் கட்டி, முக்கியத் தொழில்களுக்கும் வளரும் நகரங்களுக்கும் அடிப்படைத் தூண்டுகோலாக அமைந்த முயற்சியாளர்களையும் பாராட்டவேண்டும். லோவல், லாரன்ஸ் பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்குக் காரணமான ஒரு குழுவின் தலைவர்களாகிய நாதன் ஆப்பிள்டன் (Nathan Appleton), அப்பாட் லாரன்ஸ் (Abbott Lawrence) போன்ற சிலர் நம் நினைவில் எப்பொழுதும் நிலைத்துள்ளனர். சிக்கோபி (Chicopee), ஹோலியோக் (Holyoke) ஆகிய இடங்களில் தொழில் வளர்ச்சிக்குப் பாடுபட்ட எட்மண்டு டுவைட் (Edmund Dwight) என்பாரும் தென் கரோலினாவிலுள்ள கிராண்ட்வில்லைச் சார்ந்த வில்லியம் கிரக் (William Gregg) என்பாரும் நம் நினைவில் இடம்பெற்றுள்ளனர். மிகவும்

திறமைவாய்ந்த வணிகராக பாட்ரிக் டிரேசி ஜாக்சன் (Patrick Tracy Jackson—1780-1847) என்பவர் திகழ்ந்தார். பாட்ரிக் டிரேசி ஜாக்சன் அவர்கள் தம்முடைய பதினேந்தாவது வயதில் நியூபரிபோர்ட்டைச் (Newburyport) சார்ந்த வணிகரிடத்தில் பயிற்சியாளராக வேலைக்கமர்ந்து பின்னர் தமது ஆரம்ப இருபது களில் (eary twenties) கப்பல் தலைவராகப் பொறுப்பேற்றார். பின் னர் தமது இருபத்தெட்டாவது வயதில் கடல் வாழ்க்கையைத் துறந்து, இறக்குமதி-ஏற்றுமதி வாணிபத்தில் ஈடுபட்டார். 1812-ல் நடைபெற்ற போரின் விளைவால் தமது கப்பல் வாணிபத் தொழில் நசித்துப்போகவே பருத்தி உற்பத்தியில் தமது முழுத் திறனை அவர் காட்டினார். புகழ்வாய்ந்த வால்தாம் தொழிற் சாலையை நிறுவுவதில் ஃபிரான்சிஸ் சி. லோவல் (Francis C. Lowell) எனும் தமது உறவினருக்குத் துணையாக நின்று, துவக்க ஆண்டு களில் அத் தொழிற்சாலையின் நிருவாகத்தையும் அவர் மேற் கொண்டார். நீரின்மூலம் கிடைக்கும் சக்தி வளங்கள் குறைந்து போகவே, ஜாக்சனும் அவருடைய நண்பர்களும் மெர்ரிமாக் கிற்குச் (Merrimac) சென்று ஆலைகளை அமைத்தனர். அந்த ஆலை களைச் சுற்றிலும் லோவல் நகரம் வளர்ந்து, 'அமெரிக்காவின் மான்செஸ்டர்' எனும் பெயரினையும் பெற்றது. தமது புதிய ஆலைகளிலிருந்து போஸ்டனுக்குப் பண்டங்களை அனுப்புவதற்கு ஏற்ற முறையில் போக்குவரத்து வசதிகள் அமையாமையால், ஜாக்சன் நீராவி சக்தி இருப்புப்பாதைகளில் கவனம் செலுத் தினார். நியூ இங்கிலாந்தில் ஏற்பட்ட முதல் நீராவிசக்தி இருப்புப் பாதைக்கு ஜாக்சன் அவர்களே காரணமாவார். மாலுமியாகவும், வணிகராகவும், பொறிவழி உற்பத்தியாளராகவும், இருப்புப்பாதை அமைப்பாளராகவும் பணியாற்றிய ஜாக்சனின் வாழ்க்கை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற் பகுதியைச் சார்ந்த நியூ இங்கிலாந்தின் பொருளாதார வாழ்க்கையின் சுருக்கமான பொழிப் பாகும்.[3]

[3] குறிப்பிட்ட இக் காலத்தில் உயர்திறமையுடைய இத்தகைய வியாபாரி களின் எண்ணிக்கை வியப்பைத் தருவதாகும். ஆப்பிள்டன், லாரன்ஸ், லோவல், டுவைட், ஜாக்சன் முதலியவர்களைத் தவிர, 'அமெரிக்கப் பெரியோர் களின் வாழ்க்கை வரலாற்று அகராதி'யில் (Dictionary of American Biography) இடம் பெற்றுள்ள நாதன் பி. ஏமஸ் (Nathan P. Ames), பென்ஜமின் டால்போட் பாபிட் (Benjamin Talbot Babbitt), ரிச்சர்டு போர்டன் (Richard Borden), சார்லஸ் குட்இயர் (Charles Goodyear), வார்டு சேனி (Ward Cheney), ஜோனஸ் சிக்கரிங் (Jonas Chickereing), ஆல்வா குரோக்கர் (Alvah Crocker), சாமுவேல் டவுனர் (Samuel Downer), ஆர்தர் எம். ஈஸ்ட் மேன் (Arthur M. Eastman), சார்லஸ் டில்லிங்காஸ்டு ஜேம்ஸ் (Charles Tillinghast James) போன்ற அநேகப் பெரியோர்களின் வாழ்க்கைக்குறிப்பு களையும் மாணவன் பயிலவேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல்

தொழிற்புரட்சி, வரம்புக்கு உட்பட்ட எந்தவிதமான நியதிக்கும் கட்டுப்பட்டு ஏற்படவில்லை. முன்னரே நிலைபெற்றிருந்த மிகச் சிறிய ஆலைகளின் வளர்ச்சியே சில தொழிற்சாலைகளாக மாறின. லோவலைப் போன்ற சில கண்டுபிடிப்பாளர்கள் அல்லது தொழில்நுட்பத் தேர்ச்சியாளர்கள் தங்களுடைய மூலதனத்தை ஈடுபடுத்தித் தொழில் முயற்சிகள் செய்தமையால் தொழிற்சாலைகள் தோன்றின. தொழில் நுட்ப அறிவு பெறுத வியாபாரிகள் முதலீடு செய்தமையாலும், தொழிற்சாலைகள் உருவாயின. சில தொழிற்சாலைகளை அவற்றின் சொந்தக்காரர்களே நடத்தினர்; அல்லது அவர்களுடைய நண்பர்கள் நடத்தினர். நியூ இங்கிலாந்தின் முக்கிய பகுதிகளிலுள்ள அநேகத் தொழிற்சாலைகளின் ஆதிக்கம் இடத்திலில்லா அதிபர்களின் (absentee owners) கைகளில் இருந்தது; எனினும், அத் தொழிற்சாலைகளின் நிருவாகத்தை அலுவலக மேலாளர்களின் பொறுப்பில் விட்டுவைத்தனர். ஒவ்வொரு தொழிலும் தனக்கே உரிய வகையில் உற்பத்தி முறையையும் பங்கீட்டு முறையையும் உருவாக்கிக் கொள்ளவேண்டியதாயிற்று. தொழிற் புரட்சியினால் வளர்ந்துள்ள சந்தையின் பெருகிய தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் குறிப்பிட்ட ஒரு தொழிலில் புதிய இயந்திரம் எதனையும் பயன்படுத்தாது, பழைய முறைகளையே புதுப்பித்துப் பெருக்கி உற்பத்தி செய்தனர். எடுத்துக்காட்டாக, 1860 வரையில் செருப்புத் தொழிலில் எந்தவிதமான புதிய இயந்திரமும் உபயோகிக்கப்படவில்லை. இதற்கிடையில் மிகவும் துல்லியமான தொழிற்பகுப்பு ஏற்பட வேண்டிய கட்டாய நிலை உருவாகும்வரையில் சிறு கைத் தொழில் கடை தனது அளவில் பெருகி வளர்ந்துவந்தது. நியூ இங்கிலாந்தில் செருப்புத் தொழில் பரவியுள்ள முக்கிய இடங்களில் ஒரு பெரும் 'தொழிற்சாலை' ஏற்பட்டது. அங்கே தோல் நறுக்கப்பெற்று, கட்டுகளாகக் கட்டப்பெற்று, கப்பல்களில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. பிணைத்தல், தைத்தல், செருப்பின் அடித்தோல் பொருத்துதல் போன்ற பல்வேறு வேலை முறைகள், தனித்தனி இல்லங்களிலோ அல்லது சிறு கடைகளிலோ செய்யப்பட்டன. புதிய இயந்திரங்களைப் பயன்படுத்தாமல், மாறிய சூழ்நிலைகளுக்கேற்ப உற்பத்தியைப் பெருக்குவதில்

பகுதில், நியூ இங்கிலாந்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட்ட தொழில் அதிபர்கள், நிதித்துவ வணிகர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு சிறிய, கட்டுப்பாடான கூட்டத்தினரைப்பற்றிய விளக்கங்களை வீரா ஸ்லாக்மேன் (Vera Shlakman) எழுதிய 'தொழிற்சாலை நகர் ஒன்றின் பொருளாதார வரலாறு' (Economic History of a Factory Town) எனும் நூலில் காணலாம். அந்நூலில் நியூ இங்கிலாந்து பாங்குகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், இருப்புப் பாதைகள் ஆகியவற்றின் டைரக்டர்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது.

பழைய முறைகளையே விரிவான வகையில் ஒரு பூர்வீகத் தொழிற் சாலை கையாண்டுள்ளது என்பதற்கு அருமையான உதாரணம் மேலே குறிப்பிட்டுள்ள செருப்புத் தொழிற்சாலையாகும். செருப் புத் தொழிலின் இயந்திரத்தை இயக்க நீர், நீராவி சக்திகளைப் பயன்படுத்தத் தொடங்கிய பின்னரே அது பொறிவழித் தொழி லாக மாறியது.

நெசவாலைத் தொழில்

தொழிற் புரட்சியும், தொழிற்சாலை வளர்ச்சியும் நமது நாட் டில் முதன்முதலில் பருத்தி நெசவாலைத் தொழிலில்தான் துவங் கின. பாடக்கட்டில் சிலேட்டரின் வெற்றியைத் தொடர்ந்து, தென் நியூ இங்கிலாந்தில் பல பகுதிகளில் நூற்கும் ஆலைகள் தோன்றின. இவ்வாலைகளுக்கு வாணிபத் தடைச் சட்டமும் 1812-ல் நிகழ்ந்த போரும் தூண்டுகோலாக அமைந்தன. இத்தகைய சிறு ஆலைகளைப் பெண்களும் சிறுர்களுமே இயக் கினர். 'கொடுத்துச் சேகரிப்பு' முறையின்படி இல்லங்களிலேயே துணி நெய்யப்பெற்றது. போர்க்காலத்தில் லோவலும் அவருடைய நண்பர்களும் வால்தாமில் போஸ்டன் பொறிவழித் தொழிற் கம்பெனியைத் துவக்கவே, தொழிற்சாலை உற்பத்திமுறை நடை முறைக்கு வந்தது. துணி நெய்தலையும் சேர்த்தே எல்லாவித படிமுறைகளும் (processes) ஒரே தொழிற்சாலையிலேயே நடை பெறும் காட்சியை வால்தாமில் காணலாம்.

போருக்குப் பின்னர் சமாதானம் நிலவத் தொடங்கவே, ஆங்கிலேயப் பண்டங்கள் அமெரிக்கச் சந்தையில் வெள்ளம் போல் பெருகி வழிந்தன. ஆகவே, சிறு ஆலைகள் பல நசித்துப் போயின. எனினும், வால்தாமிலுள்ள ஆலைகள் துவண்டு போகாமல் நிலைத்து நின்றன. 1816-ல் அரசினர் புகுத்திய சுங்க வரிவிதிப்பாலும், உடல் உழைப்பைக் குறைத்திடும் புது முறைகள் ஏற்பட்டமையாலும், உலக வாணிபத்தைப் புதுப்பித் தமையாலும், பழைய ஆலைகளுக்கு ஏற்பட்ட அழிவின்மீது புது ஆலைகள் தோன்றின. போஸ்டனைச் சேர்ந்த முதலீடு செய் வோர், போஸ்டனுக்கு வடக்கேயுள்ள நகரங்களிலும், மேற்கு மெஸ்ஸாசுசெட்சிலும், நியூ ஹாம்ஷையரிலும், மெயினிலும் வால்தாம் அமைப்பைப் பரப்பினர். பிராவிடென்சில் வாழ்ந்த வேறொரு குழுவினர், ரோடு ஐலண்டிலும் தென் மெஸ்ஸாசு செட்சிலும் அவ்வமைப்பைப் பரப்பினர். நெசவாலைப் பொறிகளை உற்பத்தி செய்வதில் தேர்ச்சிபெற்ற கம்பெனிகள் எழும்பின. நாட்டின் மற்றப் பகுதிகளிலும் துணி நெய்தல் பரவியது; எனினும், நியூ இங்கிலாந்தில் மட்டும் 69 சதவீத அளவிற்கு ஆலைகள்

குவிந்தன. 1840ஆம் ஆண்டில் நெசவாலைகள் சிறந்த முறையில் அமைந்தன. அடுத்த இருபதாண்டுகளில் அவற்றின் மொத்த மதிப்பு 150 சதவீதம் அதிகரித்தது. 1860-ல் அவற்றின் மதிப்பு 11,56,82,000 டாலர்களாகும். இத் தொழிலில் 1,22,000 தொழிலாளர்கள் வேலை செய்தனர்.

நிலத்துள்ள பருத்தித் தொழிலின் முழு அளவின் மதிப்பில் பாதிக்குமேல் கம்பளித் தொழிலில் உற்பத்தியாகும் சரக்கின் மதிப்பும் அதில் முடங்கியுள்ள மூலதனத்தின் மதிப்பும் உள்ளது என்பதாக 1860ஆம் ஆண்டின் சென்சஸ் குறிப்பிடுகிறது. எனினும், தனக்கு வேண்டிய மூலப்பொருள் நிலையிலுள்ள கம்பளியையும், பொறிவழிப்படுத்தப்பெற்ற கம்பளிப் பொருள்களையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரிட்டனிடமிருந்து பெறுகின்றன. ஆரம்பக் குடியேற்றங்களின் துவக்க காலத்திலிருந்தே மக்கள் கம்பளி ஆடைகளை அணிந்தனர். செம்மறியாட்டு வளர்ப்பிலும் நாட்டின் பெரும்பகுதி ஈடுபட்டு வந்தது. எனினும், பருத்தித் தொழிலைவிடக் கம்பளித் தொழில் மிகவும் மெதுவாகவே வளர்ந்தது. இந்த நிலைக்குப் பல காரணங்களுண்டு, மெர்க்கண்டலிசத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்த ஆங்கிலேய ராஜதந்திரிகள் அமெரிக்காவில் கம்பளித் தொழில் வளர்ச்சியைத் தடை செய்தே வந்தனர். கம்பளி ஆடை உற்பத்தியில் கிரேட் பிரிட்டன் காலனி காலத்தில் தலைசிறந்து விளங்கியது; இன்றும் அதே நிலையில்தான் பிரிட்டன் விளங்குகிறது. 1812ஆம் ஆண்டில் நடைபெற்ற போரைத் தொடர்ந்து, அமெரிக்காவில் சுங்கவரிகள் விதிக்கப்பட்டன. எனினும், கம்பளித் தொழிலில் பிரிட்டனை மிஞ்ச முடியவில்லை. மேலும், பருத்தி உற்பத்தியைவிடக் கம்பளி உற்பத்தியில்தான் கூடுதலான பண்ணைகள் ஈடுபட்டிருந்தன. ஆகவே, கம்பளி ஆடை உற்பத்தியில் இல்லத் தொழில் தனது பெரும்பாலான நேரத்தைச் செலவழித்தது.

கம்பளி ஆடை உற்பத்தி இல்லத்தொழில் நிலையிலிருந்து தொழிற்சாலை நிலைக்குக் கொஞ்சங்கொஞ்சமாக மாறியது. காலனி காலத்தில், செம்மறியாடுகளிலிருந்து கிடைத்த கம்பளியைக் கொண்டு முரட்டுத் துணியையே செய்தனர். 1790ஆம் ஆண்டிற்குப் பின்னர், ஸ்பெயின், அயர்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து உயர்தரமுள்ள செம்மறியாடுகளைக் கொண்டுவந்தனர். இவ்வாடுகளையும் உள்நாட்டு ஆடுகளையும் ஒன்றுசேர வைத்து வளர்த்தனர். இதன் விளைவாக, உள்நாட்டுச் செம்மறியாடுகளிலிருந்து அருமையான கம்பளி உற்பத்தியாகியது. உயர்தரக் கம்பளி உற்பத்தி பெருகிய அதே வேளையில், இல்லத்தொழில் முறை மாறித் தொழிற்சாலை உற்பத்தி

முறை முன்னுக்கு வந்தது. புரட்சிக்கு முன்னர் நெசவுத்தொழில் இல்லங்களிலேயே நடைபெற்றது. பிரிட்டனுடன் போர் செய்து கொண்டிருந்த காலமுழுதும் நெசவுத்தொழில் இல்லங்களிலேயே வளர்ந்தது. ஆங்கிலேயச் சட்டத்தை மீறி, பருத்தி இயந்திர அறிவை அமெரிக்காவிற்குக் கொண்டுவந்த சாமுவேல் சிலேட்டரைப் போலவே, 1792-ல் குடிபெயர்ந்த யார்க்ஷையரின் இரு சகோதரர்களாகிய ஜான் ஸ்கோல் ஃபீல்டும் ஆர்தர் ஸ்கோல் ஃபீல்டும் (John and Arthur Scholfield) 1793-ல் மெஸ்ஸாசுசெட்சிலும், பின்னர் கனக்டிகட்டிலும் சிறு ஆலைகள் ஏற்பட உதவி செய்து, நன்கு வளர்ச்சியுற்ற கம்பளி இயந்திரங்களையும் புகுத்தினர். ஆலை உற்பத்தி முறையில் கோதிச் சிக்கெடுக்கும் வேலையும், நூல் நூற்றலும், இறுதிநிலை வேலையும் (finishing) மட்டிலுமே செய்யப்பட்டன. 1812-ல் நிகழ்ந்த யுத்தத்தின் காரணமாகக் கம்பளி உற்பத்தி நிலைத்துநிற்கும் வாய்ப்பைப் பெற்றது. புதிய கம்பளித் தொழிற்சாலைகளில் இராணுவ உடுப்புகள் தயாரிக்கப்பட்டன. நீக்ரோக்களுக்கு வேண்டிய துணிவகைகளும் நெய்யப்பெற்றன. நேர்த்தியான கம்பளி ஆடைகள்கூட அத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாயின. முழுக்கால்சட்டைகளை அணிந்து செல்லும் வழக்கு முறை மாறியமையால், கம்பளி ஆடைகளின் தேவை பெருகியது. சமாதான காலத்தில் எடுக்கப்பெற்ற கணக்கின்படி கம்பளி ஆலைகளில் முடங்கியுள்ள முதலீடு 1,20,00,000 டாலர்களாகும்; உற்பத்தியாகும் கம்பளியின் மதிப்பு 1,90,00,000 டாலர்களாகும்.

போர் முடிந்தமையாலும், ஐரோப்பியப் பண்டங்கள் பெருமளவில் இறக்குமதியானமையாலும் அநேக ஆலைகள் நசித்துப் போயின. 1816-ல் சுங்கவரிகள் விதிக்கப்பட்டன. கம்பளிப் பொருள்கள் பலவற்றின்மீது 25 சதவிகிதம் மதிப்புசார் வரி (ad valorem) விதிக்கப்பட்டது. போருக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தால் விவசாயிகள் மிகவும் துன்புற்றனர். எனவே, இல்லத்தொழிலை அவர்கள் கைவிட முடியவில்லை. 1830-ல் நியூ இங்கிலாந்திலுள்ள தலைசிறந்த நெசவாலை மாநிலங்களில்கூட, தொழிற்சாலைகளைவிட இல்லத்தில் கூடுதலான கம்பளி ஆடைகள் நெய்யப்பெற்றன. 1820 முதல் 1829 வரையுள்ள ஆண்டுகளில் நெசவுக்குரிய விசைத்தறிகளை உபயோகித்தமையால் ஓரளவுக்கு இத்துறையில் முன்னேற்றம் காணமுடிந்தது. என்றாலும், கம்பளித் தொழிலுக்கு இதுவே கேடு பயக்கும் காலமாகும், 1830-க்குப் பின்னர் செழிப்பு ஏற்பட்டது. கம்பளித் தொழில் நிலையான அந்தஸ்தைப் பெற்றது. உள்நாட்டுச் சந்தையின் சில பகுதிகளிலும் இத் தொழிலுக்குப்

பிடிப்பு ஏற்பட்டது. 1840 முதல் 1849 வரையுள்ள ஆண்டுகளில் இத்தொழிலில் தொழிற்சாலை உற்பத்தியின் கை ஓங்கவே, இல்லத்தொழில் உற்பத்தி நசித்து மங்கத் தொடங்கியது. முறுக்கிய கம்பளி நூலின் உற்பத்தி குறைவாக இருந்தபோதிலும். அகலமான துணி உற்பத்தியும் குன்றிய போதிலும், அடுத்த இருபதாண்டுகளில் காசிமீர்களையும் (cassimeres), சாட்டினெட்டுகளையும் (satinets), மென் கம்பளங்களையும் (flannels), வேறு கம்பள வகைகளையும் (blankets), சமுக்காளங்களையும் (carpets), ஃபெல்ட் கம்பள வகையையும் (felts) உற்பத்தி செய்து அத் தொழில் பையப் பைய முன்னேறியது.

பருத்தி உற்பத்தியுடனும் கம்பளி உற்பத்தியுடனும் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது மற்றத் துணிவகைகளின் உற்பத்தி மிகவும் குறைவேயாகும். தொழிற்சாலை அமைப்பு ஏற்படுவதற்கு முன்னர், இல்லத்தொழில்மூலம் நூல் நூற்பதில் ஃபிளாக்ஸ் (flax) முன்னணியில் நின்றது. பருத்தி, கம்பளி முதலியவற்றின் உற்பத்திக்குரிய இயந்திரம் உபயோகத்திற்கு வரவே, அவற்றின் விலை குறைந்து, ஃபிளாக்ஸின் மதிப்பு குறையத் தொடங்கியது. பாய்மரத்துணி, மற்றத் துணி வகைகள், உயர்தர ஃபிளாக்ஸ் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருந்தன. ஆனால், அத்தகைய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். அவை நீண்ட நாட்களாக நிலைத்துநிற்க முடியவில்லை. உற்பத்தி உயர்ந்த தரத்தைச் சேர்ந்ததெனினும், அதன் அளவு குறைவாகவே இருந்தது. கென்டக்கியிலும் மிசௌரியிலும் பை செய்வதற்கும் மூட்டை கட்டப் பயனுகும் துணி செய்வதற்கும் சணலை உபயோகித்தனர். 1860-ல் அப் பகுதிகளில் 95,40,000 கெஜமுள்ள சணல் உற்பத்தியாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கனக்டிகம், வில்லிமான்டிக் (Willimantic) பள்ளத்தாக்குகளில் பட்டு உற்பத்திக்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. தொழிலாளர்கள் குறைந்த கூலிக்குக் கிடைக்காமையாலும், மல்பெர்ரி மரங்கள் வளர்ப்பில் பலன் கிட்டாமையாலும் 1840 வரையில் பட்டு உற்பத்தியில் முன்னேற்றம் ஏதும் காண இயலவில்லை. இதே நேரத்தில் மாஞ்செஸ்டரிலும் கனெக்டிகட்டிலும் சீனே சகோதரர்கள் (Cheney brothers) பட்டுத் தொழிற்சாலை ஒன்றைத் துவக்கினர். நியூ ஜெர்சியிலுள்ள பாட்டர்சன்னில் சிறு பட்டாலை ஒன்றை ஜான் ரைல் (John Ryle) நிறுவினர். கீழை நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற மூலப்பொருள்நிலையிலுள்ள பட்டினை அவர்கள் நூற்றனர். 1860-ல்கூடப் பட்டு உற்பத்தி ஆரம்பநிலையிலேயே இருந்தது. 1860ஆம் ஆண்டின் சென்சஸ்படி, வட

கிழக்கில் 42 ஆலைகளே இருந்தன. ஒரே ஒரு ஆலைமட்டும் பட்டு நூல் நெய்து ஆடையாக்கியது.

கனரகத் தொழில்கள்

தற்காலத்தியத் தொழில் வளர்ச்சி இரும்பின் கதையுடன் நெருங்கிய தொடர்பு உடையதாகும். இரும்பு சகாப்தத்தில் பொறிகள், கட்டடங்கள், கப்பல்கள் முதலானவற்றைச் செய்வதற்கும், வேறு எண்ணற்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் இரும்பு மிகவும் பயன்படும். பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில், இரும்புருக்கு வேலைகளுக்குக் கட்டைக்கரி பயனுகி வந்த வேளையில், அமெரிக்காவின் காடுகளில் ஏராளமான கட்டைக்கரி கிடைத்தது. அதே நேரத்தில், இங்கிலாந்தில் கட்டைக்கரி அளிப்பு மிகவும் குறைந்துபோய்விட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரும்பை உருக்கு ஆந்திரசைட் நிலக்கரியைப் பயன்படுத்தலாம் எனத் தெரிந்தவுடன், இரும்பும் நிலக்கரியும் ஒரே இடத்தில் கிடைப்பது அமெரிக்காவிலுள்ள இரும்புருக்குத் தொழிலாளருக்கு மிகவும் பயனுடையதாகிவிட்டது. வேகமாக வளர்ந்து வரும் பொறிவழித் தொழிலாலும் பெருகிவரும் மக்கள் எண்ணிக்கையாலும் சந்தையும் பெருகி வளர்ந்தது. சுங்கவரிகள்மூலம் அச் சந்தைக்கு ஓரளவு பாதுகாப்பும் ஏற்பட்டது.

புரட்சி முடிவுறுவதற்கு முன்னர், ஜார்ஜியாவைத் தவிர மற்ற 13 காலனிகளிலும் பாக் இரும்பிலிருந்து (bog iron)எஃகு உருக்கி எடுக்கப்பெற்றது. மெஸ்ஸாசுசெட்சிலுள்ள பர்க்ஷையர்ஸி லிருந்தும் (Berkshires), கனெக்டிகட்டிலுள்ள சாலிஸ்பரி மாவட்டத்திலிருந்தும் (Salisbury district) தொடங்கி ஹட்சன் நதியின் குறுக்கே சென்று, நியூயார்க்கிலுள்ள ஆரஞ்சு கவுன்டி வழியாகவும் சென்று, நியூ ஜெர்சியிலுள்ள மோரிஸ் கவுன்டியில் சென்று முடிகின்ற பகுதிகளனைத்தினும் காந்தக் கனிப்பொருள் நிறையக் கிடைக்கின்றது. பாக் இரும்பு கிடைப்பதோடன்றிக் காந்தக் கனிப்பொருளிலிருந்தும் இரும்பு கிடைக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக் இரும்பு உருக்குத் தொழில் மேற்கு நோக்கி நகர்ந்தது. 1810-ல சஸ்கியூஹன்னாவிலும் (Susquehanna), ஜூனியாடா பள்ளத்தாக்கினுள்ளும் (Juniata Valley), லேஹை யிலும் (Lehigh) இரும்புத் தொழில் வளர்ந்தோங்கியது. தெற்கே மலைகளைக் கடந்து டென்னசியிலும் கென்டக்கியிலும் இரும்புத் தொழில் பரவியது. விவசாய அடிமைப் பொருளாதாரம் நிலவும் இப் பகுதிகளில், உயர்தர இரும்புக் கனிப்பொருள் கணிசமான அளவுக்குக் கிடைத்தது. 1810 ஆம் ஆண்டின் சென்சஸ்படி, 53,908 டன்கள் உள்ள இரும்பினை 153 உருக்கு உலைகள்

உற்பத்தி செய்துள்ளன. வாணிபத் தடைச்சட்டத்தினாலும், 1812 ஆம் ஆண்டில் நிகழ்ந்த போரினாலும் இரும்பு உற்பத்தி பெருகியது. ஆனால், 1812 ஆம் ஆண்டிற்குப் பின்னர் உடனடியாக இரும்புத் தொழில் மிகவும் பாதிக்கப்பெற்றது. 1820 ஆம் ஆண்டின் சென்சஸில் தேவையான செய்தி ஒன்றுமில்லை. அவ்வாண்டிற்குப் பின்னர், மேற்கு பென்சில்வேனியாவிலும் ஓகியோ பள்ளத்தாக்கிலும் இரும்புத் தொழில் வளர்ச்சியுற்றது. லேக் சுப்பீரியர் பகுதி வரையில் 1860-ல் அத் தொழில் வளர்ச்சியுற்றிருந்தது. அப் பகுதியிலுள்ள வட மிச்சிகனிலும், டெட்ராய்ட் (Detroit) அருகிலும் இரும்புருக்கு வேலை நடைபெற்றது. 1840-ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிலக்கரி பயன்படுத்தப்பெற்றது. ஆகவே, அலெகனீஸ் மலைத்தொடர்களுக்குக் கிழக்கே, குறிப்பாக பென்சில்வேனியாவிலும், நியூ ஜெர்சியிலும் நியூயார்க்கிலும் கால்வாய்மூலம் அடையக்கூடிய பகுதிகளிலும் இரும்புருக்கு வேலை மீண்டும் புதுப்பிக்கப்பெற்றது.

காலனி காலத்திலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்க காலத்திலும் மூலப்பொருளைத் தயாரிக்கும் இரும்பு உருக்கு ஆலையிலேயே இரும்புச் சாமான்கள் தயாரிக்கப் பெற்றிருக்கலாம்; அல்லது உருக்கிய இரும்பினை அருகாமையில் வேலை செய்யும் கொல்லர்களிடம் விற்றிருக்கலாம். வீட்டிற்கு வேண்டிய பாத்திரங்களும் ஒருசில உலோகக் கருவிகளும் வாடிக்கைக்காரர்களின் விருப்பத்திற்கிணங்க உருவாக்கப்பெற்றன; அல்லது அவை குறைந்த எண்ணிக்கையில் செய்யப்பட்டன. 1820 முதல் 1829 வரையுள்ள ஆண்டுகளில்தான் உலோகப் பொருள்களின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி (specialization) ஏற்பட்டது. எனினும், தொழிற்சாலைகளுக்கு வேண்டிய அளவுக்கு மூலப்பொருள் கிடைக்கவில்லை. 1808 – ஆம் ஆண்டிற்குப் பின்னர் நீர்வழிப் போக்குவரத்தில் நீராவி என்ஜினைப் பயன்படச் செய்தமையால், இத்தகைய இரும்புத் தொழிலில் சிறப்புத்தேர்ச்சி ஊக்குவிக்கப்பெற்றது. பலவாண்டுகளாகத் தேவையான அளவிற்குமட்டுமே என்ஜின்கள் செய்யப்பட்டபோதிலும், போக்குவரத்துச் சிறப்புடைய ஹட்சன், டிலாவேர், ஓகியோ நதிகளில் நீராவி என்ஜின்கள் பெரிதும் உபயோகிக்கப்பெற்றன. இருப்புப் பாதைகள் போடப்படவே, அநேக இயந்திரத் தொழிற்சாலைகளில் இரயில்வே என்ஜின்கள் செய்யப்பட்டன. 1860-ல் பால்டுவின் தொழிற்சாலை இயந்திரத் தொகுதி (Baldwin plant), நாரிஸ் இயந்திரத் தொகுதி (Norris plant) ஆகியவற்றின் இருப்பிடமான ஃபிலடெல்ஃபியாவில் இரயில்வே என்ஜின்கள் செய்யப்பெற்றன. (பால்டுவின் இயந்திரத் தொகுதியும் நாரிஸ் இயந்திரத் தொகுதியும் முறையே

1832, 1834 ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்டன.) நியூஜெர்சியிலுள்ள பாட்டர்சன்னிலும் (Paterson) இரயில்வே என்ஜின்கள் கட்டப்பெற்றன. புதுவகையான உலோகச் சாமான்களின் தேவை பெருகியமையால், ஆணித் தகடுகளைப் பிளந்து சுருள் சுருளாகச் சுருட்டுகின்ற வேலையில் முக்கிய கவனம் செலுத்தி வந்த ரோலிங் ஆலைகள் (rolling mills) இருப்புப் பாதைகள் (iron rails), சக்கரப் பட்டைகள் (tires) போன்ற உலோகச் சாமான்களைச் செய்வதில் நாட்டம் செலுத்தின. 1850 முதல் 1859 வரையுள்ள ஆண்டுகளில் இருப்புப் பாதைகளை அமைப்பதில் மிகவும் பயன்பட்ட இரும்புப் பட்டைகளை விட்டுவிட்டு, கனமும் உறுதியும் உடைய இரும்புத் தண்டவாளங்களை உபயோகித்தனர். இம்மாற்றத்தினால் சிறப்புத் தேர்ச்சியுடைய இரும்புத் தொழிற்சாலையொன்று கிழக்கு பென்சில்வேனியாவில் எழுந்தது.

சிறப்புத்தேர்ச்சி அடைந்த உலோகத் தொழில்களிலேயே 'ஸ்டவ்' அடுப்புகளைச் செய்யும் தொழில்தான் முதன்முதலில் ஏற்பட்டது. முதலில் உருக்கு உலைகளில் தட்டுகளை வார்த்தெடுத்துப் பின்னர் அவற்றை வியாபாரிகள் ஒன்றுசேர்த்தனர். இறுதியில் ஸ்டவ் அடுப்புகளைச் செய்யும் படிமுறைகள் அனைத்தும் ஒரே தொழிற்சாலையில் செய்யப்பெற்றன. ஆந்திரசைட் நிலக்கரியைப் பயன்படுத்தியமையால், இரும்பு ரேஞ்சின் (iron range) தேவை பெருகியது. 1850 ஆம் ஆண்டில் 60,00,000 டாலர்கள் மதிப்புள்ள 3,00,000 ஸ்டவ் அடுப்புகள் உற்பத்தியாயின. இந்த அடுப்புகளை முக்கியமாக ஃபிலடெல்ஃபியாவிலும், நியூயார்க்கிலும், அல்பேனியிலும், சின்சின்னாட்டியிலும், பிராவிடென்சிலும், பிட்ஸ்பர்க்கிலும் உற்பத்தி செய்தனர்.

சிறு உலோகச் சாமான்களின் உற்பத்தி மையமாக நியூ இங்கிலாந்து விளங்கியது, இச் சாமான்களில் சிலவற்றை உற்பத்தி செய்ய இரும்பையும் எஃகையும் உபயோகித்தனர். இரும்புக் கோடரிகள், ஸ்பிரிங்குகள் (springs), பூட்டுகள், கம்பிகள், துப்பாக்கிகள், பீரங்கிகள், கடிகாரங்கள் ஆகியவற்றை நியூ இங்கிலாந்து உற்பத்தி செய்தது. நெசவாலை இயந்திர உற்பத்திக்குக் காரணமாகத் தொழிற்சாலை அமைப்பு இருந்தது. நெசவாலை இயந்திர உற்பத்தியில் பாதியளவிற்கு 1860-ல் மெஸ்ஸாசுசெட்சில் உற்பத்தியாகியது. அவ்வாறே, அதே ஆண்டில் நியூ இங்கிலாந்தில் குறிப்பாக கனெக்டிகட்டில் கூர்மைவாய்ந்த கருவிகளில் பாதியையும், இரும்புத் தொழிற்கருவிகளில் நான்கில் மூன்று பகுதியையும் உற்பத்தி செய்தனர். வெள்ளீயச் சாமான்களின் உற்பத்தி மையமாக பெர்லின் விளங்கியது. பித்தளைச் சாமான்களின் உற்பத்தி மையமாக நாகாடக் பள்ளத்தாக்கு

(Naugatuck Valley) அமைந்தது. 1860 ஆம் ஆண்டில் 1,10,000 தையல் பொறிகளைச் செய்தனர். நியூயார்க்கிலுள்ள சிங்கர் தொழிற்சாலையிலும் (Singer factory), பிரிட்ஜ் போர்ட்டிலுள்ள வீலர்-வில்சன் கம்பெனியிலும் (Wheeler and Wilson Company of Bridgeport), போஸ்டனிலுள்ள குரோவர்-பேக்கர் கம்பெனியிலும் (Grover and Baker Company of Boston) இத் தையல் பொறிகளைச் செய்தனர்.

தொழிற்புரட்சியின் காரணமாகப் புதிய சந்தைகள் உருவாயின; இரும்புத் தொழிலின் தேவை பெருகியது; அத் தொழிலிலேயே புரட்சிகரமான திருப்பம் ஏற்பட்டது. இரும்புத்தொழில் கனரகத் தொழிலாக மாறும் வகையில் சில இன்றியமையாத மாற்றங்கள் ஏற்பட்டன. சுருட்டுதல், வார்ப்பிரும்பைத் தூய்மைப் படுத்துதல், உருக்குலைகளில் நிலக்கரியைப் பயன்படுத்துதல் போன்ற புது முறைகளனைத்தும் புகுத்தப்பெற்றன. இரும்புக் கனிப்பொருள்களையும், முதிரா முதல்நிலையிலுள்ள இரும்பையும் நகரப் பகுதிகளில் கொண்டுவந்து சேர்த்து பொறிவழி உற்பத்தியில் பயன்படுத்தினர். விவசாயத் தேவைகளுக்கு இரும்பு பயனுகிய நிலைமாறி, பொறிவழித் தொழில்மயமாக்குதலிலும், போக்கு வரத்துச் சாதனத் தேவைகளைப் பூர்த்திசெய்தலிலும் இரும்பு மிகவும் பயன்பெற்றது. துவக்க காலத்து விவசாயப் புரட்சியின் விளைவாக இரும்புச் சாமான்களுக்குரிய முக்கியமான முதல் சந்தை உருவாகியது. இரும்புக் கலப்பைகளையும், மற்ற விவசாயக் கருவிகளையும் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் உற்பத்தி செய்தமையால், தொழில்துறை விரைந்து வளர்வதற்குரிய அடிப்படைச் சூழ்நிலை உருவாகியது. 1859 ஆம் ஆண்டுவரையில் பேராசிரியர் ஹன்டர் (Hunter) குறிப்பிட்டுள்ளதுபோல,

"..... முன்னெடிகளாகத் திகழும் விவசாயப் பெருங்குடி மக்களின் தேவைகளையும் வசதிகளையும் பொறுத்தே இரும்பு உற்பத்தி அமைகிறது. முற்றுப்பெற்ற இரும்புச் சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நாடாமல், உலைக்களங்களையும், ரோலிங் ஆலைகளையுமே பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய தேவையை நிறைவேற்றிக்கொண்டனர். தேனிரும்பை உற்பத்தி செய்வதன் முக்கிய நோக்கம் இரும்புத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய தொழிலாளர்களையும் கொல்லர்களையும் வழங்குவதேயாகும். விவசாயி, சுமையேற்றுபவர், ஆலையதிபர் ஆகியவர்களுடைய தேவையை நிறைவேற்றும் முறையில் இரும்புக் கம்பிகளை அத் தொழிலாளர்கள் செய்துமுடித்தனர்... பின்னர், விவசாயப் பெருங்குடி மக்களின் தேவைகளை நேரடியாக நிறைவேற்றுவதை இரும்பு உற்பத்தியாளர்கள் கொஞ்சங்

கொஞ்சமாகக் குறைத்துவந்து, இறுதியில் நிறுத்தியும்விட்டனர். முற்றுப்பெற்ற இரும்புச் சாமான்களைச் செய்யும் தொழில்களாலும், தொழில், வாணிபம் ஆகியவற்றில் தேவைப்படும் இயந்திரங்களாலும் இரும்பின் தேவை பெருகியது.....விவசாய சகாப்தம் மறைந்து தொழில் சகாப்தம் தோன்றியது"[4]

விவசாயப் பண்டங்களின் படிப்படியான செய்முறைகள்

உணவுப் பண்டங்களின் படிப்படியான செய்முறைகளைக் குறிப்பாக, மாவரைத்தலையும் இறைச்சியைப் பீப்பாய்களில் அடைத்தலையும் இல்லத் தொழிலிலேயே செய்துவந்தனர். காலனி காலத்திலிருந்தே இத்தகைய செய்முறைகள் இல்லத் தொழிலாக நடைபெற்றுவந்தன. எல்லைப்புறச் சமூகத்தினரிடமும் இத்தகைய செய்முறைகள் நிலவிவந்தன. கிளார்க்கு குறிப்பிட்டுள்ளதுபோல, "அறுவை ஆலைகளையும் இரும்புருக்கு உலைகளையும்விட மாவரைக்கும் ஆலைகளில் சிறு முதலாளிகளே ஆதிக்கம் செலுத்தியபோதிலும், அம்முதலாளிகள் தொழில்துறைத் தலைவர்களாகத் திகழாவிடினும், அவர்கள் கணிசமான அளவுக்குத் தங்கள் மூலதனத்தைத் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளனர். மொத்தத்தில் சமூகத்தின் பொருளாதார வாழ்க்கையில் முக்கியமான பங்கினையும் பெற்றுள்ளனர்.'[5] வேலைக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்குக் காரணம் துவக்கத்தில் ஏற்பட்ட இயந்திர வளர்ச்சியேயாகும். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தூய்மையாக்குவதிலிருந்து இறைச்சியைப் பீப்பாய்களில் அடைப்பது வரையில் ஒவ்வொரு வேலையையும் செய்து முடிக்கும் கருவிகளை ஆலிவர் ஈவான்ஸ் (Oliver Evans) கண்டுபிடித்துத் திருத்தியமைத்தார். மூலப்பண்டத்திலிருந்து முற்றுப் பெற்ற பண்டத்தை உற்பத்தி செய்து முடிக்கும் வரையில் இயந்திரத்தையே தொடர்ந்து உபயோகிப்பது தொழில் வரலாற்றிலேயே முதல் நிகழ்ச்சியாகும் என ஒருவர் குறிப்பிட்டுள்ளார். 1800-ல் 1,00,000 புஷல்கள் உள்ள தானியத்தை ஓராண்டில் மாவாக அரைக்கக்கூடிய ஆலைகள் ஏற்பட்டன. மக்கள்தொகை பெருகியதாலும், உணவுப் பண்டங்களின் ஏற்றுமதி பெருகியதாலும், அறுவடை இயந்திரம் (reaper) கண்டுபிடிக்கப்பட்டதாலும், மற்ற விவசாயப் பொறிகளும் கண்டுபிடிக்கப்பட்டதாலும் மாவரைக்கும் ஆலைகளின் சிறப்பு ஓங்கியது. அதே வேளையில் கோதுமை விளையும் பகுதிகள் அலெகனீஸ் மலைத்தொடர்களைக் கடந்து அப்பால் சென்றன. படிப்படியான செய்முறைகளின்மூலம்

[4] எல். சி. ஹன்டர் (L. C. Hunter) The influence of the Market upon Tequechis in Iron Industry in Western Pennsylvenia to 1860, 'Journal of Economic History, I, 241-281 (1929).

[5] Victor S. Clark, op. cit., I, 180.

கோதுமையைப் பல வகைப்படுத்துவோரும் அம் மலைத் தொடர்களைக் கடந்து கோதுமை விளையும் பகுதிகளை நோக்கிச் சென்றனர். பால்டிமோர், ரிச்மாண்ட், ரோசெஸ்டர் ஆகிய பகுதிகள் கோதுமை விளையும் பகுதிகளாகத் துவக்கத்தில் திகழ்ந்தன. பின்னர், சிக்காகோ, செயிண்ட், லூயிஸ், ஓகியோ பள்ளத்தாக்கின் முக்கிய நகரங்கள் ஆகியவற்றை நோக்கி மேற்குப் புறமாக ஆலைகள் நகர்ந்துசென்றன.

தாங்கள் உற்பத்தி செய்யும் உபரி இறைச்சிக்கு வேண்டிய சந்தைகளை காலனி விவசாயிகள் கடற்கரைப் பட்டினங்களிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும், மற்ற வெளிநாடுகளிலும் கண்டு அமைத்தனர். காலப்போக்கில், வளர்ந்துவரும் நகரங்களாலும் தென்னகத்துத் தோட்டங்களாலும் சந்தைகள் இன்னும் பெருகின. ஆரம்ப காலங்களில் இறைச்சியைப் பீப்பாய்களில் நிரப்பி அடைத்தல் குறித்த பருவகாலத்தில் நிகழ்கின்ற தொழிலாகும். சில காலங்களில் இவ்வேலையைச் செய்வதற்குக் கணிசமான அளவுக்குத் தொழிலாளர்கள் தேவைப்படுவர்; மேலும், பாங்கு வசதிகளும் கப்பல் வசதிகளும் தேவைப்படும். ஆக, இத்தகைய வசதிகள் அமைந்துள்ள பெரும் மையங்களிலேயே இந்தத் தொழில் நிலைபெற்றது. முதலில் துறைமுகப்பட்டினங்களிலேயே இந்தத் தொழில் செல்வாக்கடைந்தது, ஆனால், இத் தொழிலில் ஈடுபட்டோர் எல்லைப்புறம் நோக்கிச் செல்ல முனைந்தனர். எனவே, 1850-ல் மேற்கத்தியப் பகுதியில் கிடைக்கும் இறைச்சியில் 27 சதவீதத்தைப் பீப்பாய்களில் நிரப்பி அடைத்து அனுப்பும் தொழிலின் முக்கிய மையமாக சின்சின்னாட்டி திகழ்ந்தது. லூயிவில், சிக்காகோ, செயின்ட் லூயி ஆகிய பகுதிகளும் சிறப்புற்றன. துவக்க ஆண்டுகளில் இறைச்சியைப் பக்குவமாகப் பாதுகாக்க உப்பையே பயன்படுத்திவந்தனர். பின்னர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், இறைச்சியில் உருவாகும் கிருமிகளைக் கொல்ல வெப்பமூட்டும் முறையினையும் காற்று நுழையாதபாத்திரங்களில் அதனை இறுக மூடிவைக்கும் முறையினையும் பயன்படுத்தினர். குளம்படிகளிலிருந்து பசையும், கொழுப்பிலிருந்து எண்ணெய், மெழுகு, சோப்பு முதலியனவும், மயிரிலிருந்து முள்மயிரும், மற்ற உறுப்புகளிலிருந்து உரங்களும் கிடைக்கின்றன. ஆக, எண்ணற்ற துணைப்பொருள்கள் கிடைப்பதால், இறைச்சியைப் பீப்பாய்களில் அடைக்குந் தொழிலின் சிறப்பு மிகுந்துள்ளது. உள்நாட்டுப் போர் ஏற்படும் காலம் வரையில், இறைச்சியைப் பீப்பாய்களில் அடைக்கும் தொழில் இல்லத் தொழிலாகவே நடைபெற்றுவந்தது. எனினும், தொழிற்சாலைகளிலேயே

இறைச்சியைப் பீப்பாய்களில் அடைக்கும் தொழில் முக்கியத் துவம் அடைந்தது. யுத்தத்தின் தூண்டுதலின் காரணமாக அத்தொழில் அமெரிக்காவிலேயே சிறப்புற்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இறைச்சியையும் மற்ற உணவுப் பண்ட வகைகளையும் தகரக் குவளைகளில் அடைக்கும் முறை செல் வாக்கடைந்தது. 1850 முதல் 1859 வரையுள்ள ஆண்டுகளில், 'காற்று நுழையாத பாத்திரத்தில் பாலை ஆவியாக்கும் செய் முறை' யினை கெயில் போர்டன் (Gail Borden) கண்டுபிடித்த பின்னர், தகரக் குவளைகளில் உணவுப் பண்டங்களை அடைக்கும் முறையின் சிறப்பு உச்சநிலையடைந்தது.

தோல், புகையிலை போன்ற பண்டங்களைப் பண்ணைகளிலேயே திருத்தம் பெறுத முறைகளின்மூலம் பதப்படுத்தலாம். ஆனால், உயர்தரத் தோலும், புகையிலையும் வேண்டுமெனில், தோல் பத னிடும் தொழிற்சாலைகளும், புகையிலைத் தொழிற்சாலைகளும் தேவையாகும். மேற்குப் பிரதேசத்தில் விவசாயிகளின் எண் ணிக்கை பெருகவே, தேசீயக் குடிவகையாகக் கருதப்பெற்ற ரம் மதிப்பிழந்தது. தானியம் அல்லது 'ரை'யிலிருந்து வடித் தெடுக்கப்பெற்ற விஸ்கியே தேசீயக் குடிவகை எனும் அந்தஸ் தைப் பெற்றது. மது வடிக்கும் தொழிலின் முக்கிய மையமாக 1810-ல் பென்சில்வேனியா விளங்கியது. பின்னர் நியூயார்க்கு, ஓகியோ, கென்டக்கி முதலிய பகுதிகள் குடிவகைகளின் மையங் களாகத் திகழ்ந்தன. 1850-ல் உலகிலேயே மிகப்பெரிய விஸ்கி சந்தையாக சின்சின்னாட்டி விளங்கியது. அங்குள்ள தொழிற் சாலைகள் ஆண்டொன்றுக்கு 20,00,000 காலன்கள் கொண்ட விஸ்கியைத் தயாரித்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியிலும் விஸ்கியின் சிறப்பு ஓங்கியிருந்தபோதிலும், ஊற வைத்து அரைத்த மாவின் சாற்றினை உற்பத்தி செய்து பயன் படுத்தும் முறை வளர்ந்து வந்தது.

1860-ல் பொறிவழித் தொழிலின்மூலம் மதிப்படைந்த பண் டங்கள் பருத்திப் பொருள்களும், பூட்சுகளும், மற்றச் செருப்பு வகைகளும், மரத்துண்டுகளும், மாவும், ஆடவரின் துணிவகை களும், வார்ப்பிரும்பும், உருக்கு உலை இரும்பும், சுருள்சுருளாக மடிக்கப்பெற்றுள்ள இரும்புத் தகடும், தேனிரும்பும், இயந்திரமும், கம்பளி ஆடைவகைகளும், வண்டிகளும், பார வண்டிகளும், தோலும் ஆகும். மிக உயர்ந்த மதிப்புள்ள மூன்று பண்டங்கள் மாவு, பருத்திப் பொருள்கள், மரத்துண்டுகள் ஆகியவைகள் ஆகும். மிகுதியான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள மூன்று பெரும் தொழிற்சாலைகள் பூட்ஸ், செருப்புகள் முதலியன செய்யும் தொழிற்சாலை, பருத்திப் பொருள்களை ஆக்கும் தொழிற்

சரகூ. ஆடைவரின் ஆடைவகைகளை உற்பத்திசெய்யும் தொழிற் சாலை ஆகியவைகள் ஆகும்.

நாடெங்கும் தொழில் பரவிக்கிடத்தல்

சில வேளைகளில் வாய்ப்பைப் பொறுத்தும், ஆனால், பொது வாகப் பொருளாதாரக் காரணங்களைப் பொறுத்தும் அமெரிக்கத் தொழில்கள் சிலவிடங்களில் நிலைத்துள்ளன. காலனி காலத்தில் வடகிழக்குப் பிரதேசமே தொழில்துறையில் தலைமை வகித்தது. மேலும், அப் பிரதேசமே தொடர்ந்து முதலிடம் பெற்று முன்னணி யில் நின்றது. வளமான விவசாய பூமி நியூ இங்கிலாந்தில் கிடை யாது; எனினும், அங்கு நீர்சக்தி நிறைய உண்டு; மற்றும் விறு விறுப்பான வாணிபமும், சிக்கனமும், முயற்சியும் உள்ள நிலையான மக்கள் கூட்டமும், நியூ இங்கிலாந்தில் உண்டு. ஆகவே, இன்றியமையாத மூலப்பண்டங்கள் கிடைக்கவில்லை. எனினும், நியூ இங்கிலாந்து பொறிவழித் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற பிரதேச மாக விளங்கியது. மத்திய அட்லான்டிக் மாநிலங்களில் பல்வேறு கனிப்பொருள்கள் கிடைத்தன. உட்பகுதிகளுக்குச் செல்வதற் கேற்ற நேரடியான பாதைகள் அமைந்திருந்தன; தொழிலாளர்கள் பலர் கிடைத்தனர்; மூலதனமும் நிறையக் கிடைத்தது. எனினும், விவசாயப் போட்டியினாலும், மேற்கு நோக்கி மக்கள் கூட்டம் செல்லத் தொடங்கியமையாலும் அம் மாநிலங்கள் மிகவும் பாதிக் கப்பட்டன. இருந்தபோதிலும், மொகாக், ஹட்சன், டிலாவேர் ஆகிய நதிகளிலிருந்து கிடைக்கும் நீர்சக்தியைப் பயன்படுத்தி, அந்த நதிகளின் அருகாமையிலேயே நெசவாலைகளும், ஏனைய தொழில்களும் உருவாயின. பிரயாணத்திற்குரிய பாதைகளின் அருகாமையிலோ, அல்லது இரும்பும் நிலக்கரியும் அருகருகே கிடைக்கும் பகுதிகளுக்குச் சமீபத்திலோ உள்ள நியூயார்க்கு, நீவார்க்கு(Newark), பாட்டர்சன், ஃபிலடெல்ஃபியா, ரோசெஸ்டர், பிட்ஸ்பர்க் போன்ற நகரங்களிலும் இத் தொழில்கள் ஏற்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் வர்ஜீனியா, கரோலினாக்கள் முதலியவற்றிலுள்ள பீட்மன்ட் பகுதிகளில் கணிச மான அளவிற்கு தொழில் வாய்ப்பு இருந்தது. தென் கரோலினாவி லுள்ள கிரானைட்வில்லியில் அமைந்துள்ள கிரக்கின் பஞ்சாலை களும் (Gregg's cotton mills), ரிச்மான்டிலுள்ள டிரடிகார் இரும்புத் தொழிற்சாலைகளும் (Tredegar ironworks) வெற்றிபெற்ற போதிலும், உள்நாட்டுப்போர் முடிவுறும்வரையில் அப் பிரதேசங் களில் மக்களுக்கு விவசாயத்தில் தீவிரமான ஈடுபாடு இருந்தமை யால் தொழில் வளர்ச்சியில் தடையேற்பட்டது.

தென்னகத்தைவிட மிக முக்கியமான ஓகியோ நதிப்பிரதேசத்தில் 1860ஆம் ஆண்டிற்கு முன்னர் கணிசமான அளவிற்குப் பொறிவழித் தொழில் நிலைத்திருந்தது. பல்வேறு வகையான இரும்புச் சாமான்களின் உற்பத்தியில் பிட்ஸ்பர்க் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தது. 1850 வரையில், அலெகனீசுக்கு மேற்கேயுள்ள ஒரே நகரம் சின்சின்னாட்டியாகும். ஒரு லட்சம்பேரைக்கொண்ட அந்த நகரம் இறைச்சியைப் பீப்பாய்களில் அடைக்கும் தொழில், இயந்திர உற்பத்தி, துணி உற்பத்தி, விஸ்கி உற்பத்தி, ஏனைய பண்டங்களின் உற்பத்தி ஆகியவற்றில் தலைசிறந்து விளங்கியது.

பொறிவழித் தொழிலாக்கத்தில் பல பிரிவுகள், 1860

பிரிவுகள்	நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை	முதலீடு	தொழிலாளர்களின் சராசரி எண்ணிக்கை	பண்டங்களின் ஆண்டு மதிப்பு
நியூ இங்கிலாந்து	20,671	$257,477,783	391,836	$468,599,287
மத்திய மாநிலங்கள்	53,387	435,061,964	546,243	802,338,392
மேற்கு மாநிலங்கள்	36,785	194,212,543	209,909	384,606,530
தென் மாநிலங்கள்	20,631	95,975,185	110,721	155,531,281
பசிஃபிக் மாநிலங்கள்	8,777	23,380,334	50,204	71,229,989
மற்ற வட்டாரங்கள்	282	3,747,906	2,333	3,556,197
மொத்தம்	140,533	$1,009,855,715	1,311,246	$1,885,861,676

எட்டாவது சென்சஸ், பொறிவழித் தொழில்கள் (Manufacture, III, 725).

லூயிவில்லில் கயிறு, துணி, பை முதலியன செய்தொழிலாயின. சிக்காக்கோ மாவரைக்கும் தொழிலையும் சிப்பம் கட்டுதலையும் வளர்த்தது. பொதுவாகவே, நியூஇங்கிலாந்திலும் மத்திய மாநிலங்களிலும் உற்பத்தியான பண்டங்களின் தரம் உயர்ந்திருந்தன. நேர்த்தியான கருவிகளைக்கொண்டு சிறந்த முறையில் நுணுக்கமாகப் பொறிவழிப்படுத்தப்பட்டமையால்தான் அப் பண்டங்களின் தரம் உயர்ந்திருந்தது. மேலும், தொழில் உழைப்புக் கூலிச் செலவும் அதிகமாகவே இருந்தது. ஆக, இப் பிரதேசங்களில்

நெசவுத் தொழிலும், பூட்ஸ், செருப்புகள் செய்யும் தொழிலும், ரப்பர் வகைகளும், ஆடை வகைகளின் உற்பத்தியும், கண்ணாடிச் சாமான்களின் தொழிலும், பாணவகைகளைச் செய்யும் தொழிலும், இரும்புக் கருவித் தொழிலும் செழித்தோங்கி வளர்ந்தன. 1860ஆம் ஆண்டின் சென்சஸ்மூலம் கிடைத்துள்ள புள்ளிவிவரத்தைக் கொண்டு பொறிவழித் தொழிலைச் சார்ந்த பல பிரிவுகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம். அதை முன் பக்கத்தில் பார்க்கவும்.

பொறிவழித் தொழில்மீது போக்குவரத்தினால் ஏற்பட்ட விளைவு

ஆரம்பகாலத்துப் பொறிவழித் தொழிலின் இயந்திரத் தொகுதிகள் (plants) நீர்சக்தி கிடைக்கும் பகுதியில் மட்டுமன்றிப் போக்குவரத்து வசதிகள் உள்ள பகுதிகளிலும் அமைந்தன. பொறிவழித் தொழிலின் வளர்ச்சியும், போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று தொடர்புபெற்று இணைந்திருந்தன. நிலவழிப் பாதைகள் நன்கு அமையும்வரையில், கடற்கரைப்பகுதியிலும் வடக்கு அல்லது வடமேற்குத் திக்கில் உள்நுழைந்து ஊடுருவிச்செல்லும் எண்ணற்ற ஆறுகளின் ஓரப் பகுதிகளிலும் மக்கள் குடியேறினர். இக் கடற்கரைப் பகுதிகளிலோ அல்லது ஆற்றோரங்களிலோ முதன்முதலில் சிறு தொழில்களின் இயந்திரத் தொகுதிகள் ஏற்பட்டன. ஆரம்பகாலத்துத் தொழில்கள் பல கப்பல்கட்டும் தொழில்களுடன் தொடர்பு பெற்றிருந்தமையும் தொழில் இட அமைப்பிற்குக் (location) காரணமாகும். மேற்கு நோக்கிச் சென்று மக்கள் குடியேறிக்கொண்டிருந்தமையாலும், அலெக்னி மலைத்தொடருக்குக் குறுக்கே பல்வேறு பாதைகள் உபயோகத்திற்கு வந்தமையாலும் நதிகள் அருகாமையில் அமைந்துள்ள பிட்ஸ்பர்க், சின்சின்னாட்டி, லூயிவில்லி, செயின்ட் லூயி போன்ற முக்கிய நகரங்களில் தொழில்துறை வாழ்க்கை அமைந்தது. அப் பிரதேசங்களில் கப்பல்கள், என்ஜின்கள் கட்டும் தொழிற்சாலைகளும், கடற் கடவுக்குத் தேவையான கயிறுகளையும் ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்யும் தொழில்களும், ஆணிகள், அடுப்பங்கரைக்குத் தேவையான பாத்திரங்கள், குடியேறச் செல்வோருக்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்கள் முதலியவற்றைச் செய்யும் தொழில்களும் அமைந்தன. அப் பிரதேசங்களைச் சுற்றிலும் புதிதாகக் குடியேறியவர்கள் சூழ்ந்துகொள்ளவே, தொழிற்சாலைகளில் சிப்பம்கட்டும் இயந்திரத் தொகுதிகளும், ஆலைகளும், சாராய ஆலைகளும், சாராயம் வடிகட்டும் ஆலைகளும் ஏற்பட்டன. அப் பகுதிகளில் குடியேறியவர்களின் பண்டங்களைக் கப்பலில் ஏற்றுமளவுக்கு

வசதியான முறையில் ஆலைகளின்மூலம் பக்குவப்படுத்தித் தந்தனர். கம்பர்லாந்துப் பாதையிலுள்ள வீலிங் (Wheeling) போன்ற பகுதிகளில் தொழில்துறை வாழ்கைக்கான ஆரம்பத் தூண்டுதல்கள் ஏற்பட்டன. முக்கியப் பயணப் பாதைக்கு அருகாமையிலுள்ள லெக்சிங்டன் (Lexington) போன்ற நகரங்களிலும் தொழில்துறை வாழ்க்கை தூண்டப்பெற்றது. கால்வாய்களும், இருப்புப் பாதைகளும் ஏற்படும்வரையில், நிலவழி மிகுந்த பயணத் தரவில்லை என்றாலும், பாரவண்டிப் பாதைகளில் ஏற்பட்ட முன்னேற்றமும், சுங்கச் சாவடிகளின் மேன்மையும் தொழிலுக்கும் வாணிபத்திற்கும் தூண்டுகோலாக அமைந்தன.

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வில்லியம், எட்கர் பாட்டிசன் (William and Edgar Pattison) எனும் ஐரிஷ் தகரவேலை செய்யும் தொழிலாளர்களிருவர் கனெக்டிகட்டிலுள்ள பெர்லினில் குடியேறித் தங்களுடைய தகரச் சாமான்களை வீடு வீடாகச் சென்று விற்பனை செய்தனர். இவ் வியாபாரத்தின்மூலம் நல்ல வருமானம் கிடைத்து அவர்கள் வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்படவே, மற்றவர்களும் அதே வியாபாரத்தை அப்பகுதியில் துவக்கினர். இறுதியில், தகர உற்பத்தியில் மாத்திரமல்லாமல் பித்தளைப் பாண்டங்கள், கடிகாரங்கள், மற்ற சாமான்கள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் கனெக்டிகட் சிறந்து விளங்கியது. நியூ இங்கிலாந்து ஊர்களில் மலிவான நகைகளைச் செய்தனர்; தகர வியாபாரிகளுக்குப் பிடித்தமான புதுமை நிறைந்த பண்டங்களையும் செய்தனர். இளவேனிற்காலத்தில் நியூ இங்கிலாந்தைச் சார்ந்த முதலாளிகளும் தொழிலதிபர்களும் தாங்கள் உற்பத்தி செய்த பண்டங்களைத் தங்களுடைய ஏஜென்டுகளின்மூலம் விற்பனைக்கு அனுப்புவர். இலையுதிர் காலத்தில் பண்டங்களை விற்று இலாபத்தைப்பெற்று ஏஜென்டுகள் திரும்பிவருவர். சுங்கச் சாவடிகள் நன்கு அமைந்த பின்னர் பண்டங்களை விற்கும் வியாபாரிகள் தங்களுடைய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி வளர்த்துக் கொண்டனர். கடைகள் அமைத்தனர்; தொலைவிலுள்ள பகுதிகளுடனெல்லாம் தொடர்பேற்படுத்திக்கொண்டனர்; அவ்வப்பொழுது தேவையான பண்டங்களைத் தேவையான பகுதிகளுக்கனுப்பும் வசதியையும் பெருக்கிக்கொண்டனர். இவ்வாறு ஒவ்வொரு குடியேற்றப் பகுதியுடனும் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டனர். 'கேப் காட் (Cape Cod) தீபகற்பத்திலும், ஈரி ஏரிக்கரையின் அருகாமையிலும் நான் அவர்களைப் பார்த்திருக்கிறேன். ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் இடையில் 600 மைல்கள் தூரம் உள்ளன. 400 மைல்களுக்கப்பாலுள்ள டெட்ராய்டிற்கு அவர்கள் செல்கிறார்கள். கனடாவிற்கும் கென்

டக்கிக்கும் அவர்கள் செல்கிறார்கள்; நான் அவர்களைத் தவருகப் புரிந்துகொள்ளவில்லையெனில், அவர்கள் நியூ ஆர்லியன்ஸுக்கும் செயின்ட் லூயிக்கும் சென்றார்கள் என்றுகூடக் கூறுவேன்,' என திமோதி டுவைட் (Timothy Dwight) குறிப்பிட்டுள்ளார்.[6]

ஹட்சன் கால்வாயும் சாம்லெயின் ஏரிக் கால்வாயும் (Lake Champlain Canal) 1828-ல் தோண்டி முடிக்கப்பெற்றன. இரண்டாண்டுகள் கழித்து ஈரிக் கால்வாயும் தோண்டி முடிக்கப் பெற்றது. ஆக, கால்வாய் தோண்டுவதில் ஆர்வம் பெருக்கெடுத்தோடியது. கிழக்கிலிருந்து மேற்கே செல்லக்கூடிய புதிய, விரைந்து செல்லக்கூடிய பாதைகள் ஏற்பட்டன. இவ்வாறு புதுப்புதுப் பாதைகள் ஏற்பட்டதால், தொழில் வளர்ச்சியிலும் ஊக்கம் ஏற்பட்டது. சரக்கேற்றுக் கூலி வீதங்கள் குறைந்தமையால், கிழக்குப் பகுதியிலுள்ள உற்பத்தியாளர்கள் தங்கள் பண்டங்களை நியாய விலைக்கு எல்லைப்புற வாசிகளிடம் விற்றனர். மேற்கத்தியர்களும் தாங்கள் உற்பத்தி செய்த இரும்பு, ஈயம், கம்பளி, தோல், மாவு, இறைச்சி முதலிய பண்டங்களைக் கிழக்குப் புறவாசிகளிடம் மலிந்த விலைக்கு விற்றனர். கால்வாய்மூலம் சரக்கேற்றி அனுப்புவதற்குத் தரவேண்டிய கூலி வீதங்கள் குறைவாக இருந்தமையால், (1) எல்லைப்புறத்தில் நேர்த்தியான பொறிவழித் தொழில் வளரவில்லை; ஆனால், இத்தகைய தொழில்கள் வடகிழக்குப் பகுதியில் வளரத் தூண்டுகோலாக அக் கூலிவீதங்கள் அமைந்தன; (2) மேற்குப் பிரதேசங்களில் உற்பத்தி பெருகின; ஆனால், பொறிவழித் தொழிலுக்கு ஊக்கம் தரப்படவில்லை; சரக்கினைக் கடத்திச் செல்வதற்கு ஏற்றவகையில் எல்லைப்புறப் பண்டங்களாகிய இறைச்சி, தோல், மக்காச்சோளம், இரும்பு முதலியவற்றைத் திருத்தி ஒழுங்குபடுத்தும் வேலை மட்டும் தூண்டப்பெற்றது. பண்டங்களைக் குறிப்பிட்ட இடங்களில் ஒழுங்காகவும் பத்திரமாகவும் சேர்ப்பித்தமையாலும், சந்தைகளின் நிலவரத்தைப்பற்றி தகுந்த செய்திகளை வழங்கியமையாலும், வியாபாரம் நல்ல அடிப்படையிலும் பெருமளவிற்கும் நடைபெற்றது. நதியோரங்களில் பொறிவழித் தொழில் நிறைந்த ஊர்கள் அமைந்தன போலவே, கால்வாய்கள் தோண்டிய தாலும் ரோசெஸ்டர் போன்ற பெரும் நகரங்கள் தோன்றின; அல்லது கால்வாய்கள் வெட்டியமையால் நியூயார்க்கு, பஃபலோ, ஃபிலடெல்பியா, ஃபிட்ஸ்பர்க்கு போன்ற முனை நகரங்களில் தொழில் வாழ்வு தூண்டப்பெற்றது. இருப்புப் பாதைகள்

[6] திமோதி டுவைட், (Timothy Dwight), 'Travels in New England and New York (1823)', II, 54.

ஏற்படுவதற்கு முன்னரே, நதிப்போக்குவரத்துக்கு உறுதுணையாகக் கால்வாய்கள்மூலம் நீர்ப்பாதைகள் ஏற்பட்டமையால், குடியேற்றப் பகுதிகளிலுள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் ஏற்பட்டன.

கால்வாய்கள் தொழில் வளர்ச்சியைத் தூண்டியது போலவே, 1840 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கட்டப்பட்ட இருப்புப் பாதைகளும் தொழில்துறையை இன்னும் தூண்டின. கால்வாய்கள் தோன்றிய காலத்தில் உள்பகுதிப் போக்குவரத்தில் சரக்கேற்றக் கூலிவீதங்கள் குறைந்தன. இருப்புப்பாதைகளையும் கட்டியவுடன் கூலிவீதங்கள் மேலும் குறைந்தன. வடக்கிலிருந்து தெற்கே பண்டங்களைக் கடத்திச் செல்வது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளிதாகக் கிழக்கிலும் மேற்கிலும் பண்டங்களைக் கடத்திச் செல்வது அமைந்தது. பருவகாலங்களைப் பார்த்துத் தொழில் இயங்கவேண்டிய கட்டாயம் இனிக்கிடையாது. மழைக்காலங்களில்கூடப் பண்டங்களை இடம்விட்டு இடம் கடத்திச் செல்லலாம். எனவே, ஆலைகளை இனி மூடவேண்டியதில்லை; தொழிலாளர்கள் வேலையில்லாமல் சோம்பித் திரிய வேண்டியதில்லை; முதலீட்டில் இழப்பு ஏற்படத் தேவையில்லை. கால்வாய்களைவிட இருப்புப் பாதைகளை குறைந்த செலவில் கட்டலாம். அநேக இடங்களுக்குச் செல்லக் கால்வாய்கள் கட்டுவதைவிட இருப்புப் பாதைகள் போடுவதே எளிதாகும். இவ்வாறு போக்குவரத்துச் சாதனங்கள் பெருகத்தொடங்கவே, பொறிவழிப் பண்டங்களின் இறுதிச் செலவுகள் குறைந்தன. இருப்புப் பாதைகள் போட்டமையால், எல்லைப்புறங்களில் குடியேற்றங்கள் கடிதில் ஏற்பட்டன; மக்கள்தொகை பெருகியது; புதிய, பெரிய சந்தைகள் உருவாயின; ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான தொழிலில் சிறப்புப் பயிற்சி ஏற்பட்டது. சிலஆண்டுகளுக்குக் கிடைத்த மூலதனம் முழுதும் இருப்புப் பாதைகள் போடுவதிலேயே செலவழிந்ததால், இருப்புப்பாதைகளுக்கு வேண்டிய சாமான்களைத் தவிர மற்றப் பண்டங்களின் உற்பத்திக்கு வேண்டிய மூலதனம் கிடைக்கவில்லை. ஆனால், இந்தச் சூழ்நிலை தற்காலிகமானதேயாகும்.[7]

[7] தொழிலாளர் அமைப்பின்மீது போக்குவரத்துச் சாதனங்களின் விளைவைப்பற்றிப் பொருளாதார அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். சந்தைகள் வளரவே, முதலாளிகளிடையே கடும் போட்டி எழுந்தது. எனவே, கூலிக் குறைப்பு (wage cut) ஏற்பட்டது. கூலிக்குறைப்பைத் தவிர்க்கவேண்டித் தொழிலாளர்கள் ஒன்றுகூடிச் சங்கங்களை அமைத்தனர்.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

கிளார்க், வி. எஸ். (Clark, V. S.), 'History of Manufactures in the United States, 1607 - 1860', Vol. I, chaps. 11-12.

டிரயன், ஆர். எம். (Tryon, R. M.), 'Household Manufacture in the United States, 1640 - 1860', chaps. 7, 8.

கீர், மால்கம் (Keir, Malcolm), 'Manufacturing', chaps. 3-7.

டெய்லர், ஜி. ஆர். (Taylor, G. R.), The 'Transportation Revolution', chaps. 10, 11.

கால்லண்டர், ஜி. எஸ். (Callender, G. S.) 'Selections from the Economic History of the United States, 1765 - 1860', chap. 9.

போகார்ட், ஈ. எல்., தாம்ப்சன் (Bogart, E.L., and Thompson, C. M.), 'Readings in the Economic History of the United States' chaps. 8, 9.

ஃபுளுகல், எஃப்; ஃபாக்னர், ஹெச். யூ. (Flugel, F., and Faulkner, H. U.), 'Readings in the Economic and Social History of the United States', chaps. 2, 8.

14. 1860 வரையில் உள்நாட்டுச் சரக்குக் கடத்தலும் செய்திப் போக்குவரத்தும்

அமெரிக்காவில் சரக்குக் கடத்தலின் பிரச்சினைகளும் அதன் முக்கியத்துவமும்

நமது வரலாறு தொடங்கிய காலத்திலிருந்தே மக்கள் மேற்கு நோக்கி முன்னேறியதாலும், அமெரிக்கக் கண்டத்தினுள் நுழைந்து ஊடுருவிச் சென்று அதனை வென்று ஆட்கொண்ட தாலும் நமது அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் போக்குவரத்துத் தொடர்பு மிகமுக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாகத் தென் பட்டது. கடற்கரையோரப் பகுதிகளில் முதலில் குடியேறி யவர்கள் தங்களுடைய மூலப்பொருள்களை ஐரோப்பாவில் விற்று, மாற்றாக அங்கிருந்து பொறிவழிப் பண்டங்களை வாங்கிக்கொள் வதற்குச் சமுத்திரப் போக்குவரத்துத் தொடர்பையே நம்பி இருந்தனர். பிற்காலத்தில் புதிதாகச் சென்று குடியேறிய வர்கள் தங்களுடைய பண்டங்களை விற்பதற்கு நதிகளையும், சாலைகளையும், கால்வாய்களையும், இருப்புப் பாதைகளையுமே நம்பி வாழ்ந்தனர். உள்நாட்டுப்போர் ஏற்படுவதற்கு முன்னர் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சிறப்பாக விவசாய சமூகமே செழித்திருந்தது. அத்தகைய சமூகத்தில் இடம் விட்டு இடம் கடத்திச் செல்லும் பண்டங்கள் பெரும்பாலும் பருமனுடையவே இருக்கும். சில வேளை களில் அப் பண்டங்கள் அழுகிப்போகக் கூடியனவாகவும் இருக் கும். ஆகவே, விவசாய சமூக அமைப்புள்ள ஒரு நாட்டில் போக்குவரத்துத் தொடர்பு குறித்த பிரச்சினை சற்றுக் கடுமையான தாகவே இருக்கும்.

புதிய குடியேற்றங்களின் பொருளாதார வாழ்க்கையை மட்டு மன்றி, அக் குடியேற்றங்களின் இட அமைப்பையும் (location), உள்நாம் தன்மையையும் (existence) போக்குவரத்துத் தொடர்பே நிர்ணயிக்கின்றது. சாதாரணமாகவே முதல் குடியேற்றங்கள்

நதிகளின் அருகாமையிலாவது அல்லது துறைமுகப்பகுதிகளிலாவது நிகழும். அட்லான்டிக் சமுத்திரத்தில் கலந்து, போக்குவரத்து வசதிகளோ எளிய முறையில் நல்கும் எண்ணற்ற நதிகளோத் தொடர்ந்தே உட்பகுதியில் குடியேற்றங்கள் ஏற்படுகின்றன. முதலில் குடியேறப் புகுந்தவர்கள் ஆற்றங்கரைகளில் உள்ள வளமான நிலங்களைப் பிடித்துக்கொண்டமையால், புதிதாகக் குடியேறப் புகுந்தவர்கள் உட்பகுதிகளுக்கே செல்லவேண்டியிருந்தது. மேலும், அவர்கள் கரடுமுரடான பாதைகளைக் கடந்தே நதிகளை அடையவேண்டும். இத்தகைய பாதைகள் முன்பே இருந்த சுவடுகளைப் பின்பற்றியே செல்வனவாகும். மான்களும் எருமைமாடுகளும் தாகத்தையும் வறட்சியையும் தீர்த்துக்கொள்ள வேண்டி நதிகளை நோக்கிச் செல்வதால் உண்டாகும் சுவடுகளைப் பின்பற்றி இந்திய வேட்டைக்காரர்கள் செல்வர். அவர்களால் ஏற்படும் சுவட்டினைப் பின்பற்றி வெள்ளைக்காரர்களின் பாரவண்டிப் பாதைகளும் இருப்புப் பாதைகளும் அமையும்.[1]

சமுத்திரத்தில் நதிகள் கலக்கும் இடங்களிலும், நல்ல துறைமுகங்கள் ஏற்படும் இடங்களிலும், ஒரு நதி மற்றொரு நதியுடன் கலக்குமிடத்திலும், அல்லது நதிகளுடன், குறிப்பாக நதிப்போக்குவரத்தின் முகப்பில் சுவடுகள் வந்து சேர்கின்ற இடங்களிலும் ஊர்களும் நகரங்களும் உருவாயின. 1850ஆம் ஆண்டிற்குப் பின்னர் தண்டவாளங்கள் கடிதில் போடப்பட்டமையால், குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னரே இருப்புப் பாதைகள் போடப்பட்டன. ஆரம்ப ஆண்டுகளில் ஆறுகளைப் பொறுத்தே நீர்வழிகள் அமைந்தன. அதுபோலவே, இருப்புப் பாதைகளும் தவிர்க்கமுடியாத இடங்களைப் பொறுத்தே அமைந்தன. போக்குவரத்துத் தொடர்பில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றங்

1 "பழைய லேக் ஷோர் (Lake Shore) தடத்தினைப் பின்பற்றி நியூயார்க் சென்ட்ரலும் (New York Central) லேக் ஷோரும் அமைந்துள்ளன ; பழைய மகோனிங் சுவட்டைப் (Mahoning Trail) பின்பற்றி பென்சில்வேனியா பாதை அமைந்துள்ளது ; மோனன்கேகிலா (Monongahela) தடத்தைப் பின்பற்றி டோலிடோ (Toledo), ஓகியோ சென்ட்ரல் பாதைகள் ஏற்பட்டுள்ளன ; உயர்ந்த அல்லது பெரிய சுவட்டினைப் (Great or Big Trail) பின்பற்றி பால்டிமோர், ஓகியோ பாதைகள் செல்கின்றன ; மற்றொரு பென்சில்வேனியா பாதை மொரேவியா – ஸ்கியோடோ – பீவர் சுவட்டைப் (Moravia - Scioto - Beaver Trail) பின்பற்றிச் செல்கிறது ; ஹாக்கிங் பள்ளத்தாக்குப்பாதை சாண்டஸ்கி – ரிச்மாண்ட் சுவட்டினையும், நார்போக்பாதையும், மேற்குப்புறப்பாதையும், ஸ்கியோடோ சுவட்டையும், சின்சின்னாட்டி, ஹாமில்டன், டேடன் (Dayton) பாதைகள் மியாமி (Miami) சுவட்டையும், லேக் ஈரியும் வீலிங்கும் மஸ்கிங்கம் (Muskingum) சுவட்டினையும் பின்பற்றிச் செல்கின்றன." B. H. Meyer (ed.), Transportation in the United States, 1860, p. 6.

களின் காரணமாகப் பொருளாதாரப் பாகுபாடுகளும் அரசியல் பாகுபாடுகளும் மறையத்தொடங்கின. நமது தேசீய அரசாங்கம் ஏற்பட்டவுடன், மிகவும் விரைந்துசெல்லும் வண்டியில் சென்ருல் போஸ்டனிலிருந்து நியூயார்க்கை ஒரே வாரத்தில் சென்று அடையலாம். இன்று நியூயார்க்கிலிருந்து லாஸ்ஏஞ்ஜல்சுக்கு ஜெட் விமானத்தின்மூலம் நான்கு அல்லது ஐந்துமணி நேரத்தில் பறந்து செல்லலாம். உள்நாட்டுப் போர் நடந்தபொழுது கிழக்கையும் மேற்கையும் இருப்புப் பாதைகள் இணைத்தன. சில பகுதிகளில் சில தொழில்கள் ஏற்பட்டு சிறப்புத் தேர்ச்சியடையவும், பொருளாதாரக் குழுக்கள் ஒன்றுக்கொன்று தழுவி நிற்கவும், பூகோளரீதியில் பிரிந்துள்ள பிரதேசங்கள் ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருக்கவும் இருப்புப்பாதைகளே காரணமாகும்.

அமெரிக்க மக்கள் இருபெரும் போக்குவரத்துப் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. பருமனுள்ள விவசாயப் பண்டங்களை எவ்வாறு சந்தைகளுக்குக் கொண்டுவந்து இறக்குவது என்பதே முதல் பிரச்சினையாகும். சரக்குப் போக்குவரத்திற்கு ஏற்ற நதிகளின் கரையோரங்களில் வாழ்ந்துவந்த விவசாயிகளுக்கு இது ஒரு பெரும் பிரச்சினையாகத் தெரியவில்லை. ஆனல், நதிகளிலிருந்து தொலைவில் வாழ்ந்துவந்த விவசாயிகளுக்கு இது பெரும் பிரச்சினையாகத் தோன்றியது. இருப்புப் பாதைகள் போடும் வரையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண இயலவில்லை. மேலும், தங்களுடைய தானியவகைகளையோ அல்லது பருத்தியையோ விவசாயிகள் நதியிலே மிதக்கவிட்டுக் கடத்திச் செல்லலாம் என்றபோதிலும், திரும்பவரும்பொழுது பொறிவழிப் பண்டங்களைப் படகுகளில் ஏற்றிவருவதில் பல தொல்லைகள் இருந்தன. ஆற்றிலே செல்லக்கூடிய நீராவிப்படகுகள் உபயோகத்திற்கு வரும்வரையில் இத்தொல்லைகள் அகற்ற வேறு வழி இல்லை.

நதிவழி வர்த்தகத்தை நீராவிப்படகு பெருக்கி வளர்த்த பின்னருங்கூட, நீர்வழிப் போக்குவரத்துடன் எவ்விதத் தொடர்பு மின்றித் தொலைவில் வாழ்ந்துவந்த மக்களின் பிரச்சினையைத் தீர்க்க நீராவிப்படகுகள் உபயோகமாகவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சிறந்த முறையில் நீர்வழிகள் நிறைய அமைந்திருந்தபோதிலும், பொதுவாக வடக்கிலிருந்து தெற்கேதான் அமெரிக்காவின் பெரும்பாலான நதிகள் செல்கின்றன என்பதைத் தேசப்படத்தின் மூலம் காணலாம். ஆனல், மக்கள் கூட்டமோ கிழக்கிலிருந்து மேற்கே முன்னேறியது. ஏனவே, போக்குவரத்துத் தொடர்புகளைப் பொறுத்தவரையில், அவை வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்வதற்குப் பதிலாக கிழக்கிலிருந்து மேற்கு

நோக்கிச் செல்வதாக அமையவேண்டும். அமெரிக்க உள்நாட்டுப் போக்குவரத்துத் தொடர்பின் வரலாற்றை நோக்கின் இந்த உண்மை தெற்றென விளங்கும். கடற்கரையிலிருந்தோ அல்லது நதிகளிலிருந்தோ மேற்குத் திசையில் உள்பகுதிகளுக்குச் செல்லும் சாலைகளே முதலில் ஏற்பட்ட முக்கியமான செயற்கைச் சாலைகளாகும். அட்லான்டிக் சமுத்திரத்திலோ அல்லது மிசிசிப்பியிலோ கலக்கும் நதிகள் போக்குவரத்துத் தொடர்புக்கு ஏற்றவைகளாக இருப்பின், அவற்றின் தலைவாயில்களை இணைக்கும் சாலைகள் போடப்பட்டன. இவ்வாறு, மேற்குத் திசைக்குச் செல்ல உதவும் பாதை அமைக்கப்பெற்றது. பெரும்பாலான கால்வாய்களைப் பொறுத்தவரையிலும் இதுவே உண்மையாகும். இருப்புப்பாதைகள் ஏற்பட்டவுடன், இந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டது. ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் இருப்புப் பாதை போடவேண்டியதில்லை. மேற்குத் திசையில் விருப்பம் போல் தண்டவாளத்தைப் போட்டுக்கொள்ளலாம். மலைகளின் குறுக்கே தண்டவாளம் போடுவதற்குக் கணவாய்களைப் பயன்படுத்திக்கொண்டால் போதும், பின்னால் வரும் இருப்புப்பாதைப் படத்தை நோக்கின்,[1] சில தலைமை இருப்புப்பாதைகளைத் தவிர, முக்கியமான தலைமை இருப்புப் பாதைகளனைத்தும் கிழக்கிலிருந்து மேற்கே செல்கின்றன. இதே உண்மையை நெடுஞ்சாலையைக் குறிக்கும் வரைபடத்திலிருந்தோ அல்லது ஆகாய மார்க்கங்களைக் குறிக்கும் வரைபடத்திலிருந்தோ தெரிந்துகொள்ளலாம்.

உள்நாட்டுப் போருக்கு முன்னர் போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன: (1) சுங்கச் சாவடியும் திருந்திய சாலைகளும்; (2) கால்வாய்களும் பக்குவப்படுத்தப்பெற்ற நதிகளும்; (3) இருப்புப்பாதைகள்; அதே வேளையில், நதிகளில் செல்லக்கூடிய நீராவிப்படகுகள் உபயோகத்திற்கு வந்தன. இவ்வாண்டுகளின் போக்குவரத்துத் தொடர்பைக் குறிக்கும் வரலாற்றில் நீராவிப் படகுகளின் பயனுடைமை ஒரு சிறந்த அம்சமாகும். இக்காலமுழுவதும் சில அடிப்படையான உள்நோக்கங்களின் காரணமாகப் போக்குவரத்துத் தொடர்பு வசதிகள் தூண்டப்பெற்றன. தங்களுடைய பண்டங்களை விற்பனை செய்ய உதவும் போக்குவரத்துச் சாதனங்கள் அமைய வேண்டும் என்று விவசாயிகள் கோரினர். குறைந்த விலையில் உணவுப் பண்டங்களை விரும்பிய கடற்கரைப் பட்டினவாசிகள் விவசாயிகளின் கோரிக்கையை

[1] மொழிபெயர்ப்பாளரின் அடிக்குறிப்பு:— இதே அதிகாரத்தில் "1860-ல் இருப்புப் பாதைகள்" என்ற தலைப்புடன் இறுதியில் உள்ள படம் அது.

ஆதரித்தனர். குறைந்தவிலையில் நிறையப் பண்டங்களை விரும்பிய ஏற்றுமதியாளர்களும் விவசாயிகளின் கோரிக்கையை ஆதரித்தனர். அதே நேரத்தில், இறக்குமதியாளர்களும் கிழக்குப் பகுதியைச் சார்ந்த உற்பத்தியாளர்களும் தங்களுடைய சந்தைகளைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று கருதினர். தனியார் துறையினர் போக்குவரத்துச் சாதனங்களை அமைத்தவுடன் ஊதியப் பங்குகள் (dividends) கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது; ஊகவாணிபத்திற்கும் வாய்ப்பு உண்டு என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. ஏனெனில், ஒரு சுங்கச்சாவடியோ, கால்வாயோ, இருப்புப் பாதையோ ஏற்பட்டால் அருகாமையிலுள்ள நிலத்தின் மதிப்பு உயரும். ஆக, போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சியும் நிலஊகவாணிபமும் தவிர்க்க முடியாத வகையில் ஒன்று சேர்ந்து முன்னேறின.

சுங்கச்சாவடியின் சகாப்தம்

விஞ்ஞான ரீதியில் சாலை அமைக்கும் தற்காலத்து முறை ஏற்படுவதற்கு முன்னர், தேசீய காலத்தின் துவக்கத்தில் கடற்கரையோரப் பட்டினங்களை மிகவும் கரடுமுரடான சாலைகளால் இணைத்தனர். இத்தகைய சாலைகளில் வசந்த காலத்தில் சேறும் சகதியும் நிறைந்திருக்கும்; கோடைக்காலத்தில் புழுதிமண் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும்; மழைக்காலத்தில் பனிக்கட்டிகள் உறைந்திருக்கும். எனவே, நிலவழிப்பாதைகள் போடுவதில் கடின உழைப்புத் தேவையாகும்; பெரும் தொல்லைகளும் குறுக்கிடும். இத்தகைய வளர்ச்சியுறுத பாதைகளில் தீமைகளும் பெருகியிருக்கும். புரட்சி முடிவுற்று வெகுகாலத்திற்குப் பின்னரும் முக்கியமான நதிகளைக் கடக்கும் பாலங்கள் போடவில்லை. எனவே, தீமைகள் இன்னும் பெருகின. இத்துடன் மேற்குத் திசையில் செல்லக்கூடிய தடங்களும் இருந்தன. பிரெஞ்சு, இந்திய யுத்தத்தின்போது பிட்ஸ்பர்க் நோக்கி இரண்டு சுவடுகள் அமைந்திருந்தன. மற்றொன்று, கம்பர்லாந்து இடைவழி (Cumber land gap) வழியாகத் தெற்கே வெகு தொலைவிற்குச் செல்லும் சுவடு ஆகும். ஜெனிசி (Genesee) பள்ளத்தாக்கிற்கும் ஈரி ஏரிக்கும் செல்லும் மொகாக் சுவட்டினை நியூயார்க்கிலுள்ள வர்த்தகர்கள் பயன்படுத்தினர். இருந்தபோதிலும், மேற்கே குடியேறிச் செல்வோருக்கும் தோல் வியாபாரிகளுக்கும் அப்பாதைகளே தடங்களாக அமைந்தன.

1790 முதல் 1799 வரையுள்ள ஆண்டுகளில் சாலைகள் அமைப்பதில் ஆர்வம் பெருக்கெடுத்தோடியது. சிறப்பாகச் சாலைகளை உபயோகிப்பதில் சுங்கவரி வசூலிக்கும் சுங்கச்சாவடிகள்

கட்டுவதில் ஆர்வம் மிகுந்திருந்தது. விரைந்து மேற்கு நோக்கி முன்னேறிச் செல்கின்றமையாலும், செழிப்பு கொழித்தமையாலும், ஐரோப்பியப் போர்களின் காரணமாக அயல்நாட்டு வாணிபம் பெருகியமையாலும், சாலைகள் போடுவதிலும் சுங்கச் சாவடிகள் அமைப்பதிலும் ஆர்வம் கொழுந்துவிட்டு எரிந்தது. ஏற்பட்டுள்ள சாலைகள் போதவில்லை. அச் சாலைகளும் பெரும்பாலும் உள்நாட்டுத் தேவைகளுக்கே பயன்பட்டன. நெடுந்தொலை விற்குப் பயணம் செய்ய உதவும் நெடுஞ்சாலைகளின் தேவையை மக்கள் உணர்ந்தனர். 1812 ஆம் ஆண்டில் நடைபெற்ற யுத்தத்தின்போது படைகளையும் பண்டங்களையும் ஒரு பகுதியிலிருந்து பிறிதொரு பகுதிக்குக் கொண்டுசெல்வதில் விளைந்த பெரும் தொல்லைகளின் காரணமாகச் சாலை அமைப்பு வேலையில் ஊக்கம் ஏற்பட்டது.

சுங்கச் சாவடிகளைக் கட்டத் தனியார் துறையினர் முன்வந்தனர். அவர்கள் கம்பெனிகளை ஏற்படுத்திச் சிறந்த சாலைகள் அமைக்கும் வேலையில் முன்னணியில் நின்றனர். 4,65,000 டாலர்களைச் செலவழித்து பிலடெல்பியாவிலிருந்து லங்காஸ்டர் செல்லும் பாதையை 1792-லிருந்து 1794-வரையில் உள்ள ஆண்டுகளில் கட்டிமுடித்தனர். இதுவே அமெரிக்காவில் ஏற்பட்ட முதல் சுங்கச் சாவடியாகும். மக்கள் தொகை மிகுந்துள்ள இடத்தில் இச் சாவடி கட்டப்பெற்றிருந்தது. துவக்கத்திலிருந்தே இச் சாவடியானது நிறைய இலாபம் ஈட்டி வெற்றிபெற்றிருந்தது. ஃபிரான்சிஸ் பெயிலி (Framcis Baily) 1797-ல் பின்வருமாறு எழுதுகிறார்: 'இப்பொழுது அமெரிக்காவில் ஒரே ஒரு சுங்கச் சாவடிப் பாதையுள்ளது. லங்காஸ்டருக்கும் பிலடெல்பியாவிற்கும் இடையில் 60 மைல்கள் தொலைவிற்கு அந்தச் சாலை அமைந்துள்ளது. அது மிகவும் சிறந்த முறையில் போடப்பட்ட சாலையாகும். அந்தச் சாலை முழுவதும் கற்களால் மூடப்பெற்று, அதன் மீது சரளைக் கற்கள் போடப்பட்டுக் கெட்டியாக அமைந்துள்ளது. எனவே, எவ்வளவு மோசமான பருவகாலங்களில்கூட அந்தச் சாலையை நல்ல முறையில் பயன்படுத்தலாம்.'[2]

லங்காஸ்டர் சுங்கச்சாவடி சிறப்புற அமைந்து வெற்றிபெற்றதால் நாடு முழுவதும் சுங்கச்சாவடிகள் கட்டவேண்டும் என்ற வேணவா எழுந்தது. அடுத்த முப்பது ஆண்டுகளில் மாநில அரசுகள் நூற்றுக்கணக்கான உரிமைப் பத்திரங்களை வழங்கிச் சுங்கச் சாவடிகள் கட்டத் தூண்டின. ஆயிரக்கணக்கான மைல்களுக்குச் சாலைகள் போடப்பட்டன. மாநில அரசுகள் பல இத்

[2] ஃபிரான்சிஸ் பெயிலி, (Francis Baily), 'Journal of a Tour in Unsettled Parts of North America in 1796 and 1797', p. 107.

தகைய கம்பெனிகளின் பங்குகளை விலைக்கு வாங்கின. மேலும், சுங்கவரிச்சாலைகள் (Toll Roads) போடப்பட்டமையால், அநேக சுங்கவரிப் பாலங்கள் (toll bridges) அமைப்பதிலும் ஊக்கமேற் பட்டது. பல மில்லியன்கள் கொண்ட டாலர்களைச் செலவழித்து நெடுஞ்சாலைகள் போட்டதால் அமெரிக்கப் போக்குவரத்துத் தொடர்பில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால், லங்காஸ்டர் சுங்கச்சாவடிக்குக் கிடைத்த மேன்மை ஒருசில சுங்கச் சாவடிகளுக்கே கிடைத்தது. சுங்கச்சாவடிகள் கட்டுவதில் ஏற்பட்ட ஆர்வமும் இறுதியில் மங்கத் தொடங்கியது. கால்வாய் களாலும் இருப்புப் பாதைகளாலும் விளைந்த போட்டியினால் அந்த ஆர்வம் குன்றிப்போகவில்லை. மாறாக, சுங்கச்சாவடிகள் கட்டுவ தில் அத்துமீறிய பணச்செலவு ஏற்பட்டதால் மட்டுமே ஆர்வம் குன்றியது. சாவடியைப் பாதுகாக்கும் வேலைக்காகும் செலவும் வழிச்சுங்க வசூலிப்பில் ஏற்படும் செலவும் வருமானத்தை விட அதிகமாக இருந்தன. மிகவும் சிறந்த முறையில் கட்டிக்காக்கப் பெற்ற சில சுங்கச்சாவடிகள்தாம் மிகவும் இலாபம் கிடைத்த ஆண்டுகளில் ஊதியப்பங்கினை (divindend) பங்குதாரர்களுக்கு வழங்கிவந்தன. எண்ணிக்கையில் மிகவும் குறைவான கம்பெனி கள்தாம் ஓரளவுக்கு இலாபம் அடைந்தன.

சுங்கச்சாவடிகளால் போக்குவரத்துத் தொடர்புகள் நன்கு வளர்ந்தபோதிலும், அவை பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை. செலவு மிகுந்திருந்தது. பிலடெல்பியாவிலிருந்து பிட்ஸ்பர்க்கிற்கு ஒரு டன் எடையுள்ள சரக்கினை நிலவழிமூலம் கடத்திச் செல் வதற்குத் தரவேண்டிய கூலி 125 டாலர்களாகும். மெக்மாஸ் டரின் (McMaster) கருத்துப்படி, வாணிபப் பொருள்களை நூறு மைல்கள் தொலைவிற்குக் கடத்திச் செல்ல டன் ஒன்றுக்கு ஆகும் சராசரிச் செலவு 10 டாலர்களாகும்; எனவே, மக்காச்சோளம், மாவு போன்ற பருமனுள்ள பண்டங்களை 150 மைல்களுக்கு மேல் கடத்திச்செல்வது இலாபகரமான செயல் ஆகாது. (இதே வேளையில் ஐரோப்பியப் பண்டங்களைக் கடத்திச்செல்வதற்காகும் செலவு டன் ஒன்றுக்கு 40 ஷில்லிங்குகளே ஆகும்.) சரக்குகளைக் கடத்திச் செல்வதற்காகும் இத்தகைய போக்குவரத்துச் செலவுகள் அதிகமாக இருப்பதற்குக் காரணம் வளர்ச்சியுறுத சாலைகள் மட்டுமல்ல; வழிச்சுங்கம் அதிகமாக இருப்பதும் காரணமாகும். ஒவ்வோர் இரண்டு மைல்கள் தொலைவிற்கும் பாரவண்டி (wagon) ஒன்றுக்கு நியூ இங்கிலாந்தில் சராசரி வழிச் சுங்கம் 12½ சென்டுகள் (cents) ஆகும். நியூ ஜெர்சியில் ஒவ் வொரு குதிரை வண்டிக்கும் மைல் ஒன்றுக்கு ஒரு சென்டு ஆகும். பென்சில்வேனியாவில் குதிரை வண்டிச் சக்கரப் பட்டையின்

அகலத்தையும் குதிரைகளின் எண்ணிக்கையையும் பொறுத்தே சரக்கேற்றக் கூலி வீதங்கள் வேறுபட்டன. திருந்திய சாலைகளாலுங்கூடப் பிரயாணிகளின் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. புதிய சுங்கச்சாவடிகளைச் சார்ந்த பாதைகளில் பயணம் செய்வதில் வேகமும் வசதியும் உண்டு. ஆனால், இவ்வாறு பயணம் செய்வதில் நேரம் விரயமாகியது; ஒரு மைலுக்குச் சராசரி ஆறு சென்டுகள் செலவழிந்தன.

பெடரல் அரசாங்கம் தொடர்பு கொண்டமை

போக்குவரத்துத் தொடர்பின் வளர்ச்சியில், மாநில அரசுகள் பங்கேற்றது போலவே மத்திய அரசின் உதவியும் தேவைப்பட்டது. காலனி காலத்தில் அரசாங்க உதவியும் மேற்பார்வையும் இருந்தன. அரசியல் சட்டத்தின் 'பொது நலன் விழைவு' விதி (General Welfare Clause) இத்தகைய அதிகாரத்தை பெடரல் அரசுக்கு வழங்குகிறது என அரசியல் சட்டக் கட்டுமானம் விழைவோரும், தீவிரத் தேசீயவாதிகளும், இலாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உடையோரும் வலியுறுத்தினர். அஞ்சல் நிலையங்களையும் அஞ்சல் சாலைகளையும் அமைக்கவும், மாநிலங்களுக்கிடையே வாணிபத் தொடர்பினை ஒழுங்குறச் செய்யவும் தேசீய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்பதை நிலைநிறுத்தும் அரசியல் சட்டத்தின் முதல் விதியிலுள்ள ஏழாவது பிரிவினை அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். அரசியல் சட்டத்திற்கு அவர்கள் தரும் விளக்கம் எல்லை மீறியதாக இருப்பதாகக் 'கடு விதிகளுடைய கட்டுமானத்தை' விழைபவர்கள் (Strict Constructionists) கருதுகிறார்கள். இவர்களுடைய கருத்தை ஆதரிக்கும் வகையில், வேறு ஒரு சாரார் குறிப்பிட்ட சில குழுவினர்களின் நன்மைக்காக எல்லா மக்கள்மீதும் வரி விதிப்பது சரியன்று என்று குறிப்பிட்டுள்ளனர்.

காங்கிரசின் வேண்டுகோளுக்கிணங்கி, ஆல்பர்ட் காலடின் அவர்கள் (Albert Gallatin) 1808 ஆம் ஆண்டு, ஏப்ரல் நான்காம் தினத்தில் உள்நாட்டுப் போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சியைப் பற்றிய புகழ்வாய்ந்த அறிக்கை ஒன்றினைத் தயாரித்தார். மூலதனம் மிகுந்துள்ள பொருளாதார வளர்ச்சியுற்ற நாடுகளில் அரசாங்க உதவியை நாடாமல் தனியார் துறையினரின் முயற்சியினாலேயே போக்குவரத்து வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியும் என காலடின் குறிப்பிட்டுள்ளார். எனினும், அமெரிக்காவில் தொழிலுழைப்புக் கூலி மிகுந்திருந்தமையாலும், மூலதனத் தேவையும் வழக்கத்திற்கு மாறுகப் பெருகி இருந்தமை

யாலும் தனியார் துறையினர் சாலைகள் அமைக்கும் தொழிலில் ஈடுபட முடியவில்லை. பெடரல் நிதி உதவி கிடைத்தால் போக்கு வரத்து வசதிகள் பெருகி நாடு ஒன்றுபடும் என்றும், இராணுவப் பாதுகாப்பு மேலும் வலிவுறும் என்றும், மேற்கத்திய நிலத்தின் மதிப்பு உயரும் என்றும், பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்றும் அவர் விவாதித்தார். அட்லான்டிக் சமுத்திரத்தினுள் துருத்திக்கொண்டுள்ள தீபகற்பங்களில், கேப் காட் (Cape Cod) குறுக்கிலும், நியூ ஜெர்சியின் குறுக்கிலும், டிலாவேருக்கும் சிசாபீக் கிற்கும் (Chesapeake) இடையிலும் கால்வாய்கள் வெட்ட வேண் டும் என்றும் அவர் வலியுறுத்தினர். மெயினுக்கும் ஜார்ஜியா விற்கும் இடையிலே சுங்கச் சாவடிகள் அமைத்து வடக்கு தெற் காகப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வேண்டும். சில கீழ்த்திசை நதிகளின் தலைவாயில்களையும் (head waters), ஓகியோ நதியில் கலக்கும் மற்றக் கிளைநதிகளின் தலைவாயில்களையும் இணைத்துப் பாதைகள் போட்டால், கிழக்கு மேற்காகப் போக்குவரத்து வசதிகள் மிகுந்து சிறப்புறும். இவ்வாறு பாதைகள் போடுவதற்கு ஆகும் செலவினை ஈடுகட்டுவதற்கு பொது நிலங்களை விற்கவேண்டும் என்ற கருத்தினை அவர் தெரிவித்தார்.

தனியார் துறையினரின் முயற்சிகளினாலோ, அல்லது மாநில அரசுகளின் முயற்சிகளினாலோ காலடின் திட்டம் நிறைவேறியது. ஆரம்ப ஆண்டுகளில் தேசீய அரசாங்கத்தின் செலவில் உள் நாட்டுப் போக்குவரத்து வசதிகள் பெருகவேண்டும் என்ற கோரிக்கையின் முக்கிய விளைவாக கம்பர்லாந்து சாலை அமைந் ததே ஆகும். தன்னுடைய எல்லைகளுக்குள்ளாக அமைந்துள்ள பெடரல் நிலங்களை விற்றல், அந் நிலங்களின்மீது ஐந்தாண்டு களுக்கு வரிவிதிக்கக்கூடாது என்ற நிபந்தனையின்மீதுதான் 1808-ல் ஓகியோ மாநிலம் யூனியனில் சேர்ந்தது. இந்த நிபந் தனைக்கு ஈடாக, இத்தகைய நிலங்களை விற்பதில் கிடைக்கும் வருமானத்தில் 5 சதவீதத்தை பெடரல் அரசாங்கம் பெற்று, அதனைச் சாலைகள் போட உபயோகிக்கும். இவ்வாறு பெடரல் அரசாங்கம் பெறும் தொகையில் ஐந்தில் மூன்று பங்கினைக் குறிப் பிட்ட அதே மாநிலத்தில் மாநிலப் பாதைகள் போடுவதில் செல வழிக்கும்; மீதியுள்ள ஐந்தில் இரண்டு பங்கினை அம் மாநிலத்தை நோக்கியும், அதன் வழியாகவும் செல்லும் பாதைகளைப் போடு வதில் காங்கிரஸ் செலவழிக்கும். பின்னர் மத்திய ஆட்சி இந்தி யானா, இல்லினாய், மிசௌரி முதலிய மாநில அரசுகளுடன் இத் தகைய ஒப்பந்தங்களைச் செய்துகொண்டன. இத்தகைய சூழ் நிலையின் காரணமாகக் 'கடுவிதிகள் நிறைந்த கட்டுமானத்தை'க்

கோரும் குடியரசுக் கட்சியினர்கூட அரசியல் சட்டத்திலுள்ள வழுவிணைப் (loophole) பயன்படுத்திக்கொள்ள முயன்றனர். ஜெஃபர்சன் ஆட்சியில் 1806, மார்ச் 29-ல் இத்தகைய சாலை ஒன்றினைப்போட காங்கிரஸ் ஒப்புதல் தந்தது. எனினும், சாலை போடுவதற்கென வகுக்கப்பட்ட முதல் ஒப்பந்தம் 1811 வரையில் கையெழுத்துப் பெறவில்லை. மேற்கு வர்ஜீனியாவில் உள்ள வீலிங் வரையிலுள்ள 130 மைல்கள் கொண்ட தொலைவிற்குப் போடத் துவக்கிய சாலை 1818 வரையில் முடிவுபெறவில்லை.

அப் பாதையானது வீலிங்கிலிருந்து ஓகியோ மாநிலத்திலுள்ள சேனஸ்வில் (Zanesville), கொலம்பஸ், ஸ்பிரிங்பீல்டு (Spring field) வழியே கிட்டத்தட்ட மேற்குத் திக்கில் சென்றது. இந்தியானாவில் உள்ள ரிச்மாண்ட், இந்தியன் போலிஸ் (Indianpolise), டெர்ரி ஹாட் (Terre Haute) வழியாகவும் சென்றது. இல்லினாயில் உள்ள வன்டாலியா (Vandalia) வழியாகவும் சென்றது; 1838-ல் கொலம்பஸ் வரையிலும், 1852-ல் வன்டாலியா வரையிலும் அப் பாதை போட்டு முடிக்கப்பெற்றது. வீலிங்வரையில் போடப்பெற்ற பாதை சிறப்பான முறையில் அமைந்துள்ளது. 'வீலிங் வரையில் செல்லும் பாதையில் எண்ணற்ற கற்பாலங்கள் கவர்ச்சியுடன் விளங்குகின்றன. அப் பாலங்களின் மீது அழகான வளைவுகள் கற்களால் அமைக்கப்பட்டுள்ளன. மைல்கற்களும் இரும்பில் செதுக்கப்பட்டுள்ளன. பாதையில் பழைய இரும்புக் கதவுகளும் உள்ளன. இவையனைத்தும் தொழிலாளிகளின் திறமைக்கு எடுத்துக்காட்டாக உள்ளன. இன்றுவரையில் அவை நிலைத்து நின்று சிறப்பிற்கும் திண்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.'[3] மேற்கத்திய காங்கிரஸ்காரர்கள் அந்தப் பாதையை ஆதரித்தனர். அவர்களுடைய செல்வாக்கினால் காங்கிரசில் 1806 முதல் 1838 முடிய உள்ள ஆண்டுகளில் அப் பாதையினைக் கட்டி முடித்துச் சிறந்த முறையில் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் முப்பதுக்கும் மேலான சட்டங்களை இயற்றினர். பெடரல் அரசாங்கத்திற்கு இதனால் ஏற்பட்ட செலவு 68,21,200 டாலர்களாகும்.

இருப்புப்பாதைகள் ஏற்படும்வரையில் மேற்கே செல்வதற்குரிய முக்கிய வழிகளில் 834 மைல்கள் நீளமுள்ள 'தேசீய சுங்கச்சாவடிச் சாலை' (National Pike) ஒன்றாகும். 'ஒரே நேரத்தில் தேசீயச் சுங்கச்சாவடிச் சாலையில் சுமார் 24 குதிரை வண்டிகள் வரிசையாகச் செல்வதைக் காணலாம். அச் சாலையின் ஒவ்வோர் இடத்திலும் ஆறு கோனிஸ்டோகா குதிரைகள்

[3] டி. பி. சீரைட் (T. B. Searight), 'The Old Pike', p. 16.

(Conestoga horses) பூட்டிய வண்டிகளையும் காணலாம். பெரிய வாகவும் அகலமாகவும் உள்ள சக்கரங்களையுடைய அக் குதிரை வண்டிகளில் வர்த்தகச் சரக்குகள் மூட்டைமூட்டையாக ஏற்றப் பெற்று, வெள்ளைக் கித்தான்களினால் மூடப்பெற்றிருக்கும். அவ் வண்டிகள் சாரைசாரையாக அந்தி வேளையிலும் அச் சாலையில் ஊர்ந்துகொண்டிருக்கும் காட்சியைக் காணலாம். இன்னும் குதிரைகளையும், பன்றிகளையும், கோவேறு கழுதைகளையும், கால் நடைகளையும், செம்மறியாடுகளையும் அழைத்துக்கொண்டு வழிப் போக்கர் கூட்டமும், வணிகர் குழுக்களும் சென்றவண்ணம் இருக்கும் காட்சியையும் காணலாம். அந்தச் சாலையானது ஒரு பெரிய நகரத்தின் தலைசிறந்த சாலையாகத் தோன்றியதே தவிர, கிராமப்புற மாவட்டங்களின் வழியே செல்லும் சாலையாகத் தோன்றவில்லை.'[4]



(From H. U. Faulkner, 'Ecoromic History of the United States,' by permission of The Macmillan Company)

தேசீய சுங்கச் சாவடிச்சாலை

கம்பர்லாந்து சாலை குடியேற்றத்திற்கு மிகவும் பயன்பட்டது. அச் சாலை போடப்பட்டதால், பால்டிமோருக்கும் ஓகியோவிற்கும் இடையில் போக்குவரத்துச் செலவுகள் குறைந்தன. அந்தச் சாலை சென்ற பகுதிகளில் செழுமை ஏற்பட்டது. கிரேட் வெஸ்டர்ன் மெயில் (The Great Western Mail), போட்டியிடும் போக்குவரத்துக் கம்பெனிகளின் எக்ஸ்பிரஸ் கோச்சுகள் (Express Coaches) ஆகிய வற்றால் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையில் போக்குவரத்துத் துரிதப்படுத்தப்பெற்றது. சாலை போடுதல் பயனுடையதாக இருந்தமையால், எண்ணற்ற சுங்கச் சாவடிகள் உண்டாக்கப்பெற் றன. தேசீய அரசு இச் சாவடிகளை ஆதரிக்கும் என்ற நம்பிக்கை உண்டாகியது. கென்டக்கி மாநிலத்தில் 60 மைல் நீளத்திற்கு மேஸ்வில்லிலிருந்து (Maysville) லெக்சிங்டன் (Lexington) வரை யில் சுங்கச் சாவடி ஒன்றினை அமைக்கும் மேஸ்வில் ரோடு சட்டத்தை (Maysville Road Bill) ஜாக்சன் தம்முடைய மறுப்பா ணையைப் பிரயோகித்துத் தடைசெய்தார். அதே வேளையில்

4 Ibid.

(1830) சாலைகள், கால்வாய்கள், இருப்புப்பாதைகள், நதிகளைச் செப்பனிடுதல் முதலியவற்றிற்கான திட்டங்களும் அளவைகளும் 11.1 -க்கு மேலான எண்ணிக்கையில் காங்கிரசின் மேற்பார்வையில் இருந்தது. மாநிலங்களுமட்டுமே சார்ந்த பிரச்சினைகளுக்குப் பணத்தை மத்திய அரசாங்கம் செலவிடுதல் என்பது அரசியல் சட்டத்திற்குப் புறம்பாகும் என ஜாக்சன் முடிவுகட்டினார்.

கால்வாய்கள் தோண்டும் முயற்சி தலையெடுக்கத் தொடங்கியவுடன், சுங்கச் சாவடிகளைப்பற்றிய ஆர்வம் மங்கி மறையத் தொடங்கியது. நாடு வளர்ச்சியடையத் தொடங்கவே, நமது வரலாற்றில் சாலை அமைத்தல் எந்தக் காலத்திலும் தடையாகவில்லை. எடுத்துக்காட்டாக, 1850 முதல் 1859 வரையுள்ள ஆண்டுகளில் பலகைச் சாலைகள் (plank roads) அமைப்பதில் மக்களுக்கு ஆர்வம் கொழுந்துவிட்டு எரிந்தது. ஆயிரக்கணக்கான மைல்கள் நீளத்திற்குப் பலகைச் சாலைகளைப் போட்டனர். நான்கு அடிகளுக்கு இடையிடையே தரையில் இணைவரையாகக் கம்பிகளை அமைத்து, அவற்றின் குறுக்கே எட்டு அடிகள் நீளமும் மூன்று அல்லது நான்கு அங்குலங்கள் கனமும் உள்ள பலகைகளை ஆணிவைத்து அறைந்து, பலகைச் சாலைகளை அமைப்பர். பலகைச்சாலைகளைப் போடுவதற்காகும் செலவு மைல் ஒன்றுக்கு 1,200 முதல் 1,500 டாலர்களேயாகும். எனவே, இச் சாலைகளுக்கு நிறையச் செலவழிக்கவேண்டியதில்லை. ஆனால், இவை கூடிய விரைவில் வீணுகிவிடுகின்றன. 1850 முதல் 1859 வரையுள்ள ஆண்டுகளில் இருப்புப்பாதைகள் நிறையப் போடப்பட்டமையால், பலகைச் சாலைகள் மக்கள் விரைவில் மறந்தனர்.

நதிகளில் செல்லும் நீராவிப் படகு

சுங்கச் சாவடிகள் அமைப்பதில் மக்கள் ஆர்வத்துடன் இருந்தபோது, சாலைப் போக்குவரத்துக்கு நீடித்த வாழ்வும் சிறப்பும் உண்டாகத் தூண்டுகோலாக அமையும் நீராவி என்ஜினைக் கண்டுபிடித்து, அதனை இயக்கிப் பரிசோதனைகளும் செய்து பார்த்தவண்ணம் இருந்தனர். ஆதலின், ஈவான்ஸ், ஜான் ஃபிச் (John Fitch), ஜேம்ஸ் ரம்சே (James Rumsey), ஜான் ஸ்டீவன்ஸ் (John Stevens) போன்ற அமெரிக்க என்ஜினியர்கள் நீர்வழிப் போக்குவரத்தில் நீராவி என்ஜினைப் பரிசோதித்துப் பார்த்தும், நீராவிப் படகுகளை நதிகளில் செலுத்திப் பார்த்தும் வெற்றியடைந்தனர். வர்த்தகத்தில் இலாபம் ஏற்படும் வகையில் நீராவிப் படகுகளை நதிகளில் செலுத்திய பெருமை ராபர்ட் ஃபுல்டனையே (Robert Fulton) சாரும். பலவிதத் தடைகளுக்கும் தொல்லைகளுக்கும் இடையில் ராபர்ட் ஆர். லிவிங்ஸ்டன் அவர்களுடைய ஆதரவைப்

பெற்று, 32 மணிநேரத்தில் 150 மைல்களைக் கடந்து அல்பேனியை அடையக்கூடிய கிளர்மான்ட் (Clermont) எனும் படகினை 1807-ல் ஃபுல்டன் கட்டி முடித்தார். பக்கவாட்டில் சக்கரத்தினையுடைய அப் படகு 160 டன் எடையுள்ளதாகும். 'ஆல்பனிக்குச் சென்று திரும்பும் பயணத்தில் நான் நினைத்ததைவிடத் திறமையாகவே என்னுடைய நீராவிப் படகு இயங்கியுள்ளது. நியூயார்க்கிலிருந்து ஆல்பனி செல்ல 150 மைல்களைக் கடக்க வேண்டும். முப்பத்திரண்டு மணி நேரத்தில் ஆல்பனிக்குச் சென்று, முப்பது மணிநேரத்தில் நியூயார்க்கிற்குத் திரும்பினேன். இவ்வாறு பயணம் செய்யும்பொழுது, வழிநெடுகிலும் மெல்லிய காற்று என்னைத் தழுவியவண்ணம் இருந்தது. இந்தப் பயணத்தில் நீராவி என்ஜினையே முழுதும் உபயோகித்தேன். காற்றடிக்கும் திசையில் செல்லும் ஒற்றைப் பாய்மரக் கப்பல்கள் பலவற்றையும், இரட்டைப் பாய்மரக் கப்பல்கள் பலவற்றையும் முந்திக்கொண்டு சென்றேன். அவற்றைக் கடந்து வெகுதூரத்திற்கும் பிரிந்து சென்றேன். நீராவி சக்தியினால் படகுகளைத் திறமையுடன் இயக்க முடியும் என்ற உண்மை நிரூபிக்கப்பட்டது.'

ஃபுல்டன் 1807 ஆம் ஆண்டில் செய்த சிறப்புமிக்க பயணத்தின் காரணமாக, நதிவழிப் போக்குவரத்திலும், சமுத்திர வர்த்தகத்திலும் ஒரு புரட்சி உண்டாயிற்று. நியூயார்க்கு மாநிலத்திலுள்ள நதிகளில் போக்குவரத்துத் தொடர்பினை அமைக்கும் சர்வாதீனத்தை ஃபுல்டனும் லிவிங்ஸ்டனும் இருபதாண்டுகளுக்கு உடனடியாகப் பெற்றனர். பின்னர் அவர்கள் நியூ ஆர்லியன்ஸ் பிரதேசத்திலுள்ள கீழ்மிசிசிப்பியின் சர்வாதீனத்தையும் பெற்றனர். அவ்விருவரும் கப்பல் தளம் ஒன்றினை 1811-ல் பிட்ஸ்பர்க்கில் கட்டுவதற்கு முன்னரே ஹட்சன்நதிமீது அநேக நீராவிப் படகுகள் மிதந்தோடிக்கொண்டிருந்தன. அவ்விருவரும் ஆர்லியன்ஸ் (Orleans) எனும் முதல் நீராவிப் படகினை ஓகியோ நதியில் மிதக்கவிட்டனர். ஓகியோவில் மிதந்த முதல் நீராவிப் படகு ஆர்லியன்ஸ்சேயாகும். ஆர்லியன்ஸ் எனும் இப்படகு 1812-ல் மழைக்காலத்தில் ஓகியோ நதியும், மிசிசிப்பி நதியும் ஓடும் திக்கிலேயே மிதந்து சென்றது. ஆனால், திரும்பி மேலேறி வரும்பொழுது அப் படகினால் வேகமான நீரோட்டத்தை எதிர்த்து நிற்கமுடியவில்லை. மூன்று ஆண்டுகள் கழிந்து 1815 ஆம் ஆண்டு, மே மாதத்தில் மேற்கத்திய மாலுமிகளில் தலைசிறந்து விளங்கிய ஹென்றி ஷிரீவ் (Henry Shreve) என்பார் இருபத்தைந்தே நாட்களில் நியூ ஆர்லியன்சிலிருந்து லூயிவில்விற்குச் செல்லும் நதிகளின் நீரோட்டத்தை எதிர்த்து நீராவிப் படகினை மேலேற்றி இயக்கி வெற்றிபெற்றார்.

கிப்பன்ஸ்—ஓக்டன் வழக்கில் (Gibbons vs Ogden, 1824) தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பினால் நியூயார்க்கிலும் லூயிசியானாவிலும் உள்ள சர்வாதீனங்கள் முறியடிக்கப்படுகின்ற வரையில், நீராவிப் படகுகளின் நதிவழிப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பெற்றது. நதிவழிப் போக்குவரத்தினை எந்த மாநிலமும் சர்வாதீனமாக்கிக் கொள்ளக்கூடாது என்று தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதியுடன் கூறியது. மாநிலங்களுக்கு இடையில் நிகழும் போக்குவரத்தினை ஒழுங்குறச் செய்யும் அதிகாரம் காங்கிரசுக்குத்தான் உண்டு என்றும் அத் தீர்ப்பு குறிப்பிட்டுள்ளது. நீராவிப் படகில் பயணம் செய்தால், 100 நாட்களுக்குப் பதிலாக 30 நாட்களில் நியூ ஆர்லியன்சிலிருந்து பிட்ஸ்பர்க்கை அடையலாம் என்பது உண்மையாகும். இந்த உண்மையினால் நீராவிப் படகின் மேன்மையும் திறனும் தெளிவாக விளங்குகின்றன. மிகவும் கடினமில் செல்லும் நீராவிப் படகுகள் நியூ ஆர்லியன்ஸிலிருந்து லூயிவில்லிற்கு நதிகளின் நீரோட்டத்தை எதிர்த்துச் செல்லும் பயணத்தை 1850 முதல் 1859 வரையுள்ள ஆண்டுகளில் ஐந்து நாட்களுக்கும் குறைவான காலத்தில் முடித்துவிடும் ஆற்றலைப் பெற்றிருந்தன. சரக்கேற்றக் கட்டணமும், பிரயாணிகளின் கட்டணமும் மிகவும் குறைந்துவிட்டன. இருந்தபோதிலும், இலாபம் நிறையக் கிடைத்தது. நதிகளில் செல்லும் நீராவிப் படகுகளை விரைவாகக் கட்டிய வண்ணமிருந்தனர். 1840 முதல் 1849 வரையுள்ள ஆண்டுகளின் பிற்பகுதியில் மேற்கத்திய நதிகளில் மிதந்தோடிய நீராவிப் படகுகளின் எடையளவு பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் முழுதும் உள்ள படகுகளின் எடையளவைவிட மிகுதியாகும் என்ற கருத்து நிலவியது. நீராவிப் படகுகளின் போக்குவரத்தில் கொள்ளை இலாபமடித்து, 1830 முதல் 1839 வரையிலுள்ள ஆண்டுகளில் நியூ ஆர்லியன்ஸ் மற்ற நகரங்களைவிடச் செல்வப் பெருக்குடைய நாடாகவும், மக்கள்தொகை பெருகிய நாடாகவும் விளங்கியது.

ஆரம்பகாலப் பரிசோதனைகள் கிழக்குப் பிரதேசத்தில் நிகழ்ந்தன. ஆனால், மேற்கத்திய நதிகளில்தாம் நீராவிக் கப்பல் பெரும் பங்கு ஏற்றது. முன்மாதிரிகளையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு, தட்டையான அடிக்கட்டையைக் கொண்ட படகினை ஷிரீவ் அவர்கள் 1816-ல் மாதிரியாக உபயோகித்தார். அப் படகின் தளத்தின்மீது உருளைகள் படுநிலையில் கிடந்தன; அவ்வுருளைகள் மீது என்ஜின் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அப் படகின் முதல் தளத்திற்குமேல் இரண்டாவது தளமும் உண்டு. ஷிரீவும் மற்றவர்களும் நதிப்போக்குவரத்தின் அபாயங்களைத் தவிர்க்கும் திறனுடைய, தட்டையான அடிக்கட்டையை உடைய பட-

கினையே செய்திருந்தனர். நதிவழிப் போக்குவரத்தின் பொற் காலத்தில், மேற்குத் துறைமுகங்களுக்கிடையே விரைந்து மிதந் தோடிக்கொண்டிருந்த பகட்டும் படாடோபமும் உள்ள அரண் மனைகள்போன்ற படகுகளின் முன்னோடியாக ஷிரீவ் அவர்களின் தட்டையான அடிக்கட்டையை உடைய படகு விளங்கியது. கிழக்கு நதிகளில் மிதந்த நீராவிப் படகுகள் பிரயாணிகளின் போக்குவரத்தில் கருத்தைச் செலுத்தின. மேற்கு நதிகளில் உலாவிய படகுகள் சரக்கேற்றிச் செல்வதில் ஈடுபட்டன.

பல்வேறு வகையான தடைகளினால் அநேக நீராவிக் கப்பல்கள் அழித்துபோனமையால், மிசிசிப்பி, ஓகியோ, மிசௌரி, அர்க்கன்சாஸ் நதிகளின் போக்குவரத்தினைச் செப்பனிட்டுத் திருத்தும் காரியத்திற்கெனத் தேசிய அரசாங்கம் 1822 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகளில் 30,00,000 டாலர்களுக்கு மேல் நிதி ஒதுக்கம் செய்தது. மிசிசிப்பி பள்ளத்தாக்கின் வாணி பத்தின்மூலம் 1852-ல் கிடைத்த வருமானம் 65,40,00,000 டாலர்களாகும். இத்தகைய வருமானத்திற்கு நீராவிப் படகே காரணமாகும். பருமனுள்ள உணவுப் பண்டங்களையும், பருத்தி யையும் விற்பனை செய்வதற்கெனச் சந்தைக்கு ஏற்றிச் செல்வதில் நீராவிப் படகுகள் மிகவும் உதவியாக இருந்தன. மேலும், அப்பிர தேசத்தில் மக்கள் குடியேறுவதற்கு நீராவிப் படகுகள் தூண்டு கோலாகவும் அமைந்தன.

கால்வாய் வெட்டுதலின் சகாப்தம்—ஈரி கால்வாய்

ஆற்றோரக் கரையிலுள்ள ஊர்கள் நீராவிப் படகினால் நல்ல பயன்களை அடைந்தன. ஆனால், கிழக்கு-மேற்குப் போக்கு வரத்துப் பிரச்சினைக்கு நீராவிப் படகினால் தீர்வுகாண முடிய வில்லை. 'தேசிய சுங்கச் சாவடிச்சாலை' இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முனைந்தது, என்றாலும், செலவுகள் அதிகமாக இருந்தன. அலெகனிக்குக் குறுக்கேயுள்ள மேற்குப் பிரதேசத்தில் மக்கள் தொகை பெருகிவந்ததால், வசதிகளும் பெருகவேண்டிய கட்டாய நிலை வந்தது. தற்காலத்து மேற்கு வர்ஜீனியாவின் மேற்குப் பகுதி யில் செல்லும் ஓகியோ நதிப்பகுதிகளை நோக்கி 1850-ல் மக்கள் கூட்டம் முன்னேறியது. தென்மேற்குப் பகுதியைச் சார்ந்த பருத்தி உற்பத்தியாளர்களின் தேவையை நதிவழிப் போக்கு வரத்து ஓரளவிற்குப் பூர்த்திசெய்தது. ஆனால், ஓகியோவிற்கு வடக்கேயுள்ள விவசாயிகளின் தேவையை அது பூர்த்திசெய்ய வில்லை.

வேறுசாலைகள் போடுவதற்குரியவாய்ப்பும் வசதியும் குறைந்து விட்டமையாலும், கிழக்குப்பிரதேசத்தில் போக்குவரத்துத்

தொடர்புகள் பெருகவேண்டிய அவசியம் இருந்தமையாலும் செயற்கை முறையில் நீர்வழிகளை உண்டாக்குவதில் கவனம் செலுத்தினர். கிழக்குக் கடற்கரையில், உள்நிலப் பகுதிகளிலிருந்து அலைகடலோரப் பகுதிகளுக்குச் செல்வதற்குக் கால்வாய்கள் வெட்டி வசதிகளைப் பெருக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர். அதே முறையில், அலெகனி மேற்கிலிருந்து குறுக்கே சென்று கிழக்குக் கடற்கரைப் பகுதியை இணைக்கும் கால்வாய்களைத் தோண்டுவதற்கு மக்கள் கனவுகண்டனர். இங்கிலாந்தில், பிரிட்ஜ்வாட்டர் கால்வாயை (1761-ல் இக்கால்வாய் உபயோகத்திற்கு வந்தது.) வெட்டியும், வேறு பல கால்வாய்களைத் தோண்டியும் ஜேம்ஸ் பிரிண்லே (James Brindley) வெற்றி கண்டார். பிரிண்லே இங்கிலாந்தில் அடைந்த வெற்றி அமெரிக்காவில் கால்வாய்கள் வெட்டுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. மேலும், இதனால் அமெரிக்காவில் கால்வாய் தோண்டுவதில் தொடர்ந்து ஆர்வம் பெருகியிருந்தது. இந்த நாட்டில் தோண்டிய செயற்கையான நீர்வழிகளில் குறிப்பிடத்தக்கது ஈரி கால்வாயாகும். ஆனால், ஈரி அமெரிக்காவில் முதலில் கட்டப்பெற்ற கால்வாயன்று. வர்ஜீனியாவிலும், வடகரோலினாவிலும், மெஸ்ஸாசுசெட்சிலும் சிறு கால்வாய்களையே தோண்டியிருந்தனர். இவற்றில் மிகவும் வெற்றிபெற்ற கால்வாய் மிடில்செக்ஸ் கால்வாயாகும். (Middlesex Canal) இக் கால்வாயானது இருபத்தேழு மைல் நீளத்திற்கு மெர்ரிமாக் ஆற்றிலிருந்து மெஸ்ஸாசுசெட்சிலுள்ள சார்லசுக்குச் செல்லும். ஈரி கால்வாயைத் தோண்டுவதற்கு முன்னரே, சுங்கச் சாவடிச் சாலைகளைவிடக் கால்வாய்களே சிறந்தவை என்ற கருத்து நிலவியது. நிலவழியைவிட நீர்வழியில் ஐம்பதுமடங்கு அதிகமான எடையுள்ள சுமையைக் குதிரை கட்டி இழுத்துச் செல்லும் என்ற உண்மையே கால்வாயின் தனிச் சிறப்பாகும். எனினும், கால்வாய்களைத் தோண்டுவதில் செலவு அதிகமாயிற்று. ஒவ்வொரு பகுதியிலும் நிலமட்டம் மாறிக்கொண்டேயிருப்பதால், கால்வாய்கள் வெட்டுவதில் தொல்லைகள் விளைந்தன. வடக்கே பனிக்கட்டிகள் உறைந்துபோகும் அளவுக்கு வானிலை அனுமதித்திருந்ததால், கால்வாய்களில் தற்காலிகமாகப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. நாடு முழுவதும் கால்வாய்களிலிருந்து நீர் வழிந்தோடிச் சென்று வீணாகியமையால், அவற்றின் பயன் மிகவும் குறைந்துவிட்டது.

மேற்கு அலெகனியின் குறுக்கே போக்குவரத்து வசதிகளை உருவாக்கவேண்டுமெனில், ஹட்சனையும் ஈரி ஏரியையும் இணைக்கக்கூடிய மிகவும் சிறப்பான கால்வாயை அமைத்தல்வேண்டும். ஈரி ஏரியில் நீர்மட்டம் 630 அடிக்கே உயர்ந்திருக்கும். இக்கால்

வாயைக் கட்டவேண்டும் என்ற கிளர்ச்சி 1780 முதல் 1789 வரையுள்ள ஆண்டுகளிலேயே எழுந்தது. வெளியுதவி ஏதுமின்றி இக் கால்வாயைக் கட்டிமுடிக்க வேண்டும் என 1817-ல் நியூயார்க் மாநிலத்தின் கவர்னர் கிலின்டன் (Governor Clinton) தூண்டினார். ஈரி கால்வாயைக் கட்ட முனைந்திருந்த பிரதம என்ஜினியர் பென்ஜமின் ரைட் (Benjamin Wright) என்பவராவார். இக் கால்வாயைத் தோண்டுவதில் விளைந்த அநேக தொல்லைகளைச் சமாளித்து வெற்றி கண்ட இயந்திர நுட்பத் தேர்ச்சியாளர் கான்வாஸ் ஒயிட் (Canvass White) எனும் இளைஞராவார். ஒயிட் அவர்கள் இங்கிலாந்தில் ஒற்றையடிப் பாதைகள் வழியாகவே கால்நடையாக 2,000 மைல்கள் நடந்து, கால்வாய் தோண்டுவதிலுள்ள நுட்ப முறைகளனைத்தையும் நன்கு ஆராய்ந்தார். அமெரிக்காவில் கால்வாய் தோண்டுதலின் ஆரம்ப நாட்களில் ஒயிட் அவர்களைத் தவிர வேறு எந்த என்ஜினியருக்கும் கால்வாயைத் தோண்டுவதற்கு முன் அது எவ்வாறு இருக்கும் என்பதைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஏனெனில், அவர்கள் கால்வாயையே பார்த்ததில்லை. யுட்டிகாவிற்கும் (Utica) ரோமுக்கும் இடையில் பதினைந்து மைல் நீளத்திற்கு 1819-ல் கால்வாய் ஒன்று தோண்டப் பெற்றது. அக் கால்வாயின் கரையோரங்களில் இடையிடையே பஃபலோவிலிருந்து ஆல்பெனிவரையில் பீரங்கிகளை நிறுத்தியிருந்தனர். 1825, அக்டோபர் 26-ல் அப் பீரங்கிகள் முழங்கவே, படகுகள் அனைத்தும் அக் கால்வாயில் வரிசையாக மிதந்தோடின. இப்படகுகளின் ஊர்வலத்திற்கு செனிகா சீஃப் (Seneca Chief) எனும் படகே தலைமை வகித்து முன்சென்றது. சில வாரங்கள் கழிந்து இப் படகுகள் சாரைசாரையாக நியூயார்க் துறைமுகத்தைச் சென்றடைந்தன. ஈரி ஏரியின் நீரைப் பேழையில் நிரப்பி கவர்னர் கிலின்டன் அவர்கள் கொண்டுவந்திருந்தார். அந்த நீரினை நியூயார்க் துறைமுகத்தில் கடலில் கொட்டி, ஈரி ஏரியின் நீரும் சமுத்திர நீரும் ஒன்றுகலந்து திருமணம் செய்து கொண்டதாகக் கவர்னர் தெரிவித்தார்.

முதன்முதலில் கட்டிய நிலையில், ஈரி கால்வாயின் நீளம் 363 மைல்களாகும். இந்தக் கால்வாயைக் கட்டுவதற்கான சராசரிச் செலவு மைலுக்கு 20,000 டாலர்களாகும். ஆக, கட்டி முடிப்பதற்கான மொத்தச் செலவு 70,00,000 டாலர்களாகும். அக் காலத்திலிருந்த கால்வாய்களில் ஈரி கால்வாயே சிறந்ததாகும். அது அகலத்தில் நாற்பது அடிகளும், ஆழத்தில் நான்கு அடிகளும் கொண்டிருந்தது. பின்னர் அக் கால்வாயை எழுபது அடி அகலத்திற்கும், ஏழு அடி ஆழத்திற்கும் தோண்டினர். முப்பது

டன் எடையுள்ள தெப்பங்களை அக் கால்வாயில் மிதக்கவிடலாம். மொகாக்கிலிருந்து ரோமிற்குச் சென்று, 'பின்னர்' மேற்குத் திசையில் சிராகியூஸ் (Syracuse), ரோசெஸ்டர், லாக்போர்ட் (Lockport) நகரங்கள் வழியாக டொனவாண்டா (Tonawanda), நயாகரா நதிகள் வழியே பஃபலோவை அக்கால்வாய் சென்றடைகிறது. துணைக்கால்வாய்கள் ஈரி கால்வாயை அன்டாரியோ, சாம்ப்லெயின், செனிகா ஆகிய ஏரிகளுடன் இணைத்துள்ளன. இறுதியில், நியூயார்க்கில் 906 மைல் நீளத்திற்கு நீர்வழிகள் உள்ளன.

ஈரி கால்வாய்க்கு உடனடி வெற்றி கிட்டியது. கால்வாயைக் கட்டி முடிப்பதற்கு முன்னரே, அவ் வேலையில் முடக்கியுள்ள மூலதனத்திற்குத் தரவேண்டிய வட்டிக்கும் அதிகமாகவே வழிச் சுங்கங்கள் வசூலிக்கப்பெற்றன. முதல் ஒன்பதாண்டுகளில், அக் கால்வாயிலிருந்து கிடைத்த வழிச்சுங்க வருமானம் 85,00,000 டாலர்களாகும். அக்கால்வாயை வெட்டுவதற்கு ஆன செலவை விட அதிகமான வருமானமே வழிச்சுங்கத்தின்மூலம் கிடைத்தது. மேற்கு டிராயில் (West Troy) 1826-ல் ஈரி, சாம்ப்லெயின் கால்வாய்கள் வழியாக 19,000 படகுகளும் கட்டுமரங்களும் மிதந்து சென்றன. உட்பகுதிகளில் விளையும் பருமன் மிகுந்த பண்டங்களைக் கடத்திச் செல்வதற்கு ஏற்ற வகையில், மேற்கே முழு நீர்ப்பாதை அமைந்ததே 'கிலின்டனுடைய பள்ளத்தின்' (Clintoni's ditch) மிகப் பெரிய முதல் விளைவாகும். பஃபலோவிலிருந்து நியூயார்க்கிற்குச் சரக்கேற்றிச் செல்வதற்காகும் கூலி டன் ஒன்றுக்கு 100 டாலர்களிலிருந்து 15 டாலர்களாகக் குறைந்தது; அவ்வாறே பிரயாணம் செய்வதற்காகும் காலமும் இருபது நாட்களிலிருந்து எட்டு நாட்களாகக் குறைந்தது. மேற்கு நியூயார்க்கின் பண்ணை உற்பத்தியின் மதிப்பு இரட்டிப்பாகியது. ஓகியோவிற்கு வடக்கேயுள்ள மாநிலங்களில் உற்பத்தியாகும் பண்டங்களின் மதிப்பும் பெருகியது. பண்டங்களின் மதிப்பேற்றத்தைப்போலவே, அதே விகிதத்தில் நிலத்தின் மதிப்பும் ஏறியது. பழைய வடமேற்குப் பகுதி அக் கால்வாயினால் சிறந்த முறையில் தூண்டப்பெற்றது. 'மாநில இரத்தக்குழாய்' (great blood vessel of the state) எனக் கருதப்படும் வடமேற்கின் அருகிலுள்ள பகுதிகளிலெல்லாம் செழிப்பேற்பட்டது. யுட்டிகா, சிராகியூஸ், ரோசெஸ்டர்போன்ற ஊர்களெல்லாம் நிலைத்து நிற்கத் தொடங்கின. பஃபலோ, ஆல்பெனி, நியூயார்க் போன்ற முன்னை நகரங்களில் புதுவாழ்வு ஏற்பட்டது. இறுதியில் குறித்துள்ள நியூயார்க் நகரத்தில் 1820 முதல் 1830 முடிய உள்ள ஆண்டுகளில் மக்கள்தொகை இருமடங்காகப் பெருகியது. முதல் அமெரிக்கக்

கடல் துறைமுகம் என்ற அந்தஸ்தினை பிலடெல்பியாவிடமிருந்து நியூயார்க் கைப்பற்றிக் கொண்டது. பஃபலோ, கிலீவ்லாண்டு, டெட்ராய்ட், சிக்காகோ போன்ற ஏரிக்கரை நகரங்களனைத்தும் விரைந்து வளர்ச்சியுறத் தொடங்கின. மேற்கத்திய விவசாயிகளின் பண்டங்களை வடதிசை வழியே கடத்திச் செல்லவேண்டியிருத்தலால், மேலே குறிப்பிட்ட ஏரிக்கரை நகரங்கள் பிட்ஸ்பர்க, சின்கின்னட்டி, செயின்ட் லூயி ஆகிய நகரங்களுடன் போட்டியிட்டன. ஈரி கால்வாய் தோண்டப்பட்டு உபயோகத்திற்கு வந்த பின்னர், இது வரையில் காணுத செழிப்பும் கொழிப்பும் முக்கியத்துவமுடைய ஒரு பெரும் பகுதியில் ஏற்பட்டன. ஆல்பெனிக்கும் பஃபலோவிற்கும் இடையிலுள்ள நீர் வழியைப் பிரயாணிகளின்



(From H. V. Faulkner, 'Economic History of the United States,' by permission of the Macmillan Company).

ஈரி கால்வாய்

அஞ்சல் படகு 4½ நாட்களில் கடந்துவிடும், மேற்கத்திய குடியேற்றக்காரர்கள் சாரை சாரையாகத் தொடர்ந்து இந்த நீர் வழியாகவே செல்வர். பழைய வடமேற்கிலிருந்து நியூயார்க்கிற்கு, மிசிசிப்பி வழியாகவோ, அல்லது செயின்ட் லாரன்சு பள்ளத்தாக்கு வழியாகவோ செல்வதைவிட, ஈரி கால்வாய் வழியாகச் சென்றால், கடலை நோக்கிச் செல்லும் தூரம் மிகவும் குறையும்.

கிழக்குப் பிரதேசத்திலுள்ள மற்றக் கால்வாய்கள்

ஈரி கால்வாய் வெற்றியடைந்து நியூயார்க்கில் செழிப்பு ஏற்படவே, கிழக்கு மாநிலங்களிலும் இத்தகைய கால்வாய்களைக் கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அம் மாநிலங்களில் மூன்று வகையான கால்வாய்களைக் கட்டினர். முதலில், ஓகியோ நதிப் பள்ளத்தாக்கையும், அட்லான்டிக் மாநிலங்களையும் கால்வாய்கள்மூலம் இணைக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர். இரண்டாவதாக, மேட்டு நிலப்பகுதிக்கும் அலைகடலோரப் பகுதிக்கும் இடையில் போக்குவரத்துத் தொடர்பினை வளர்க்கும் நோக்கத்துடன் கால்வாய்களை வெட்டினர். மூன்றுவதாக, கடற்கரைப்

பகுதியில் வடக்கிலும் தெற்கிலுமாகப் போக்குவரத்தைப் பெருக்கும் நோக்குடனும் கால்வாய்களை வெட்டினர்.

முதல் வகையைச் சார்ந்த கால்வாய்களில் பென்சில்வேனியா கால்வாய்மட்டுமே சிறப்புடையதாகும். தன் ஆதிக்கத்திலுள்ள மேற்கத்திய வாணிபம் நியூயார்க்கிடம் பறிபோய்விடும் என்ற அச்சத்தின் விளைவாக, பென்சில்வேனியா மாநிலம் கால்வாய்கள் தோண்டும் முயற்சியில் முழு மூச்சுடன் இறங்கியது. சஸ்கியூஹன்னு, ஜூனியாட்டா, கோனிமா (Conemaugh), அலெகனி நதிகளைத் தொடர்ந்து பிலடெல்பியாவிலிருந்து பிட்ஸ்பர்க் முடிய கால்வாய்களையும் மற்றவற்றையும் அம்மாநிலம் மிகவும் விரைவாக 1826-லிருந்து 1834-க்குள்ளாகக் கட்டி முடித்தது. கால்வாய் துவங்குகின்ற பகுதியாகிய சஸ்கியூஹன்னுவில், பிலடெல்பியாவிலிருந்து கொலம்பியா செல்லக் குதிரை இழுக்கும் ரயில் வண்டிகள் செல்லக்கூடிய இருப்புப்பாதை போடப்பட்டிருந்தது. இங்கிருந்து சஸ்கியூஹன்னுவின் கிழக்குக் கரை வழியாகவும், ஜூனியாட்டாவின் மேற்குக் கரை வழியாகவும் ஹாலிடேஸ்பர்க்கிற்குக் (Hollidaysburg) கால்வாய் செல்கிறது. ஹாலிடேஸ்பர்க்கிற்கும் ஜான்ஸ்டவுனுக்கும் இடையிலுள்ள மலைத்தொடர்களில் 33½ மைல் நீளத்திற்கு சரக்கேற்றிச் செல்வதற்குரிய இருப்புப் பாதை குறுக்கே போடப்பட்டுள்ளது. சாய்தளங்களின் (inclined planes) மீது அந்த இருப்புப்பாதை அமைந்துள்ளது. படகு செல்லும்பொழுது, 1399 அடிகள் கொண்ட உயரத்திற்கு அத் தளங்கள் பத்து மைல் தொலைவிற்குள்ளாக மேலெழும்பி, பின்னர் 1171 அடிகளுக்குக் கீழே இறங்கும். பென்சில்வேனியா கால்வாய் இரயில்வேக்களுடன் இணையப்பெற்றுள்ளது. அக் கால்வாய் 394 மைல் நீளமுடையதாகும். அதைத் தோண்டி முடிக்க 1,00,00,000 டாலர்கள் செலவாயிற்று. அக்கால்வாயும் இரயில்வேக்களும் அரசாங்கத்திற்குச் சொந்தமெனினும், அரசாங்கம் ரயில் வண்டிகளையோ அல்லது படகுகளையோ அவற்றில் செலுத்தவில்லை. கால்வாயையும் இரயில்வேக்களையும் உபயோகிப்போரிடமிருந்து வழிச்சுங்கத்தைமட்டும் அரசாங்கம் வசூலித்தது. ஈரி கால்வாய் அமைப்பதில் 690 அடி உயரத்தைச் சமாளிக்க வேண்டியிருந்தது. ஆனால், மேற்கே கால்வாய் அமைப்பதில் ஏறத்தாழ 2,300 அடி உயரத்தைச் சமாளிக்க வேண்டியிருந்தது. ஈரி கால்வாயைப்போல் அவ்வளவு திருப்திகரமானதாக பென்சில்வேனியா கால்வாய் இல்லாதபோதிலும், அது தன்னுடைய நோக்கத்திலே வெற்றியடைந்தது. அக் கால்வாயின்மூலமாக மேற்கத்திய வர்த்தகத்தின் ஒரு பங்கு பிலடெல்பியாவை அடைந்தது.

வடபிரதேசத்தில் வாழ்வோரிடம் தோற்றுவிடாமல் இருப்பதை நோக்கமாகக் கொண்டு, மேரிலாந்து குடிமக்களும் வர்ஜீனியாக் குடிமக்களும் போட்டோமாக் வழியாகச் செல்லும் கால்வாயைக் கட்டிக் கீழ்க்கடற்கரையையும், ஓகியோ நதியையும் இணைக்கும் பழைய திட்டம் ஒன்றினைப் புதுப்பிக்கும் ஊக்கத்தை மேற்கொண்டனர்.

வாஷிங்டனை முதல் தலைவராகக்கொண்ட போட்டோமாக் கம்பெனி 1785-ல் நிறுவப்பெற்றது. சிசாபீக்-ஓகியோ கால்வாய் 1828 வரையில் ஆரம்பிக்கப்படவில்லை. ஜார்ஜ் டவுனைக் கிழக்கு முனையாகக் கொண்டு, அங்கிருந்து கம்பர்லாந்துக்கும், பின்னர் மலைத்தொடரைக் குடைந்து குகைப்பாதை அமைத்து யூகியோ கெனியை (Youghiogheny) அடையும் நோக்கத்துடனேயே சிசாபீக்-ஓகியோ கால்வாய் கட்டப்படவேண்டும் என்று முதலில் தீர்மானிக்கப்பெற்றிருந்தது. ஆனால், அக் கால்வாய் கம்பர்லாந்துக்கு அப்பால் செல்லவில்லை. பல தொல்லைகளைச் சமாளித்த பின்னர், 1,10,00,000 டாலர்களைச் செலவழித்து 1850-ல் அக் கால்வாயை வெட்டி முடித்தனர். இச் செலவில், மேரிலாந்து மாநிலம் 70,00,000 டாலர்களையும், மூன்று நகரங்கள் 15,00,000 டாலர்களையும், ஐக்கிய அமெரிக்க அரசு 10,00,000 டாலர்களையும் ஏற்றுக்கொண்டன. மலைத்தொடர்களைக் குடைந்து குகைப்பாதை அமைத்துக் கடக்கர்ததாலும், பால்டிமோர் - ஓகியோ இருப்புப்பாதையினால் கடும் போட்டியும் எதிர்ப்பும் ஏற்பட்டதாலும், சிசாபீக்-ஓகியோ கால்வாய் நல்ல முறையில் வெற்றியடையவில்லை.

மேட்டுப் பிரதேசத்தைக் கடற்கரைப் பிரதேசத்துடன் இணைக்க எண்ணற்ற கால்வாய்கள் தோண்டப்பெற்றன. நியூ இங்கிலாந்தின் மெயின் பகுதியில், கம்பர்லாந்து-ஆக்ஸ்ஃபோர்டு கால்வாய் [சிபாகோ குட்டையிலிருந்து (Sebago Pond) போர்ட்லாந்து வரையில்] 1870 வரையில் இருப்புப் பாதையுடன் போட்டியிட்டுச் சமாளித்தது. ஊர்ஸ்டரிலிருந்து நாரகன்செட் விரிகுடா (Narragansett Bay) முடிய உள்ள பிளாக்ஸ்டோன் (Blakstone) கால்வாய் இருபதாண்டுகளுக்கு நிலைத்து நின்றது. நியூ ஹாவான்-நார்த்தாம்டன் கால்வாய் (The New Haven and Northampton) 1835-ல் துவக்கப்பெற்றது. அன்றைய நடைமுறைச் செலவுகளைக்கூட ஈடுகட்ட முடியாமல் அக் கால்வாய் திணறியது. மத்திய மாநிலங்களில் ஈரி கால்வாயுடனும், பென்சில்வேனியா கால்வாயுடனும் தொடர்புடைய அநேக துணைக்கால்வாய்கள் தோன்றின. ஆந்திரசைட் நிலக்கரியைக் கடற்கரைக்குக்

கடத்திவரப் பயனுகும் வகையில் அக் கால்வாய்கள் தோண்டப் பெற்றன. இவற்றில் முக்கியமான கால்வாய்கள், டிலாவேர் – ஹட்சன் கால்வாயும், லீகை (Lehigh) கால்வாயும், மாரிஸ் கால் வாயும் ஆகும். ஹோனஸ்டேல் (Honesdale), பென்சில்வேனியாவி லிருந்து டிலாவேர், ஹட்சன் நதிகளுக்குச் செல்லும் கால்வாய் டிலவேர் – ஹட்சன் கால்வாயாகும். லீகை கால்வாய், ஓயிட் ஹாவன், மாக் சங் (Mauch Chunk) பகுதிகளிலிருந்து டிலாவேரின் மீதுள்ள ஈஸ்டனுக்குச் (Easton) செல்லும். அக் கால்வாய் டிலாவேர் டிவிஷன் கால்வாயுடன் இணைந்து பிலடெல்பியாவிற்குச் செல்லும். மாரிஸ் கால்வாய் ஜெர்சி நகருக்குச் செல்லும். நூற்றிரண்டு மைல்கள் நீளமுள்ள மாரிஸ் கால்வாய் வட நியூ ஜெர்சிக்குக் குறுக்கே புகுந்து சென்று, நியூயார்க் சந்தைக்கு நிலக்கரியை எடுத்துச் செல்லும்.

வடக்கு-தெற்குப் போக்குவரத்தில் மிகவும் பயனுறும் கால் வாய்கள் -டிலாவேர்-ரேரிட்டன் (Delaware and Raritan) கால்வா யும், சிசாபீக்-டிலாவேர் கால்வாயும் ஆகும். முதலில் குறிப்பிட்ட கால்வாய், ரேரிட்டன் மீதுள்ள நியூ பிரின்ஸ்விக்கிலிருந்து டிலாவேர் மீதுள்ள போர்ட்டன்டவுன்வரையில் செல்கிறது. அது 1838-ல் முடிவுற்றது. அக்கால்வாயினுல் நியூயார்க்கிலிருந்து பிலடெல்பியா முடியப் போக்குவரத்து செவ்வனே அமைந்தது. டிலாவேரிலிருந்து சிசாபீக் விரிகுடா செல்லும் சிசாபீக் கால்வாய் 13½ மைல் நீள முடையதாகும். அது 1829-ல் கட்டிமுடிக்கப்பெற்றது.

மத்திய மேற்கிலுள்ள கால்வாய்கள்

ஈரி கால்வாயில் கிடைத்த வெற்றியின் காரணமாக, மத்திய மேற்கில் கால்வாய்கள் கட்டும் ஆர்வம் பெருகியது. ஓகியோவை ஈரி ஏரியுடன் கால்வாய்மூலம் இணைத்து, நியூயார்க்கிலிருந்து நியூ ஆர்லியன் சுக்குத் தொடர்ந்துள்ள நீர் வழியை உருவாக்கு கின்ற திட்டங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பெற்றன. இரண்டு கால்வாய்களை அமைப்பதற்கு ஓகியோ அதிகாரபூர்வமான ஒப்புதலை 1825-ல் தெரிவித்தது. ஓகியோமீதுள்ள போர்ட்ஸ் மவுத்திலிருந்து ஸ்கியோடோ, மஸ்கிங்கம், டஸ்காரவாஸ் (Tuscarawas), கியூயாஹோகா (Cuyahoqa)) வழியாக கிலீவ்லாந் தைச் சென்றடையும் ஓகியோ—ஈரி கால்வாய் ஒன்றாகும். மற் றொன்று, மியாமி—ஈரி கால்வாயாகும். இக் கால்வாய், மியாமி, மாமீ (Maumee) நதிகள் வழியாகச் சின்சின்னுட்டியிலிருந்து மிடில் டவுன், டேடன் (Dayton), டிபயன்ஸ் (Defiance) ஆகியவற்றைக் கடந்து டொலிடோவைச் (Toledo) சென்றடையும். 'ஈரி கால்

வாயின் தந்தை' எனக் கருதப்படும் கவர்னர் கிலின்டன் ஓகியோ—ஈரி கால்வாய் அமைப்பதில் மண்வெட்டி கொண்டு முதல் மண் தோண்டி வெளியில் போட்டார். அக்கால்வாய் 1833-ல் முடிவுற்றது. ஓகியோவில் அப்பொழுது 400 மைல்கள் நீளத்திற்குக் கால்வாய்களிருந்தன. 1850-ல் 1,000 மைல்கள் நீளத்திற்கு அக் கால்வாய்கள் நீண்டன. ஓகியோ கால்வாய்களில் நெடுந்தொலைவிற்குரிய நீண்ட போக்குவரத்துத் தொடர்புகள் தோன்றவில்லையெனினும், அக் கால்வாய்களில் உட்பகுதிப் போக்குவரத்தும், உள்நாட்டுப்' பண்டங்களை மாநிலத்திற்கு வெளியேயுள்ள சந்தைகளுக்குக் கடத்திச் செல்லும் போக்குவரத்தும் வளர்ச்சியுற்றன. 1850 முதல் 1859 வரையுள்ள ஆண்டுகளில் இத்தகைய போக்குவரத்து வசதிகள் உச்ச கட்டத்தை அடைந்தன. இருப்புப்பாதைகள் தோன்றியவுடன் இத்தகைய கால்வாய்ப் போக்குவரத்துகளின் சிறப்பு மறைந்து விட்டது.

உள்துறை வளர்ச்சிகளில் ஆர்வம் மிகுந்த இந்தியானு, 1832-ல் வாபாஷ்—ஈரி (Wabash and Erie) கால்வாயைக் கட்டத் தொடங்கி 1843-ல் முடித்தது. அக் கால்வாய் ஈரி ஏரியை ஓகியோ நதியுடன் இணைத்தது. அந்தக் கால்வாய்ப் பாதை யானது, மியாமி, ஈரிவழியாக டிபன்சையும், ஆலன்கவுன்டியி லுள்ள (Allen County) இந்தியானுவையும் அடைந்து, பின்னர் வாபாஷ் வழியாகத் தென்மேற்கில் சென்று டெர்ரி ஹாட்டியையும் (Terre Haute), தெற்கே சென்று ஓகியோமீதுள்ள ஈவான்ஸ்வில் லையும் (Evansville) அடையும். அக் கால்வாய் 450 மைல் நீள முடையது. அமெரிக்காவில் தோண்டிய கால்வாய்களில் அதுவே மிகவும் நீளமுடையதாகும். டெர்ரி ஹாட்டியின் வடபகுதியில் அக் கால்வாய்க்கு 1872 வரையில் எவ்விதப் போட்டியும் கிடை யாது. பின்னர், ஓகியோ கால்வாய்களைப் போலவே, அக்கால் வாயும் இருப்புப்பாதையின் போட்டிக்குப் பலியாயிற்று. ஹேகர்ஸ் டவுன் (Hagerstown) வேயின் கவுன்டியிலிருந்து (Wayne County) ஒயிட் வாட்டர் நதியின் (White Water River) வழியாக ஓகியோமீதுள்ள லாரன்ஸ்பர்க்கிற்குச் செல்லும் ஒயிட்வாட்டர் கால்வாயை இந்தியானு கட்டிமுடித்தது. பரவலான குடியேற்றத் தைக்கொண்ட இல்லினுய், இல்லினுய்—மிச்சிகன் கால்வாயைக் (1836—1848) கட்டிமுடித்தது. இக் கால்வாயானது, சிக்காக் கோவிலிருந்து இல்லினுய்மீது போக்குவரத்திற்குரிய தலைவாயி லாகத் திகழும் ல்சாலி (La Salle) வரையில் செயற்கையான நீர் வழி அமைத்து, மிச்சிகன் ஏரியை மிசிசிப்பியுடன் இணைத்துள்ளது. ஃபாக்ஸ் (Fox), விஸ்கான்சின் நதிகளுக்கிடையே கால்வாய் ஒன்றிணைத் தோண்டி, மிச்சிகன் ஏரியின் கரமாகத் திகழும் கிரீன்

விரிகுடாவை (Green Bay) மிசிசிப்பியுடன் இணைக்க விஸ்கான்சின் முயன்றது. அந்தத் திட்டம் 1856 வரையில் முடிவுறவில்லை. ஹியூரன் ஏரியையும் (Lake Huron), சுப்பீரியர் ஏரியையும் 1855-ல் செயின்டு மேரீஸ் நீர்வீழ்ச்சியைச் சுற்றிலுமுள்ள கால்வாய்மூலம் இணைத்தனர். அக் கால்வாயை ஆரம்பத்தில் மிச்சிகனே கட்டிய போதிலும், ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் ஆதிக்கத்தின்கீழ் அக்கால்வாய் கொண்டுவரப்பட்டது. உலகிலேயே மிக முக்கியமான செயற்கை நீர்வழியாக அக் கால்வாய் விளங்கியது. லூயிவில்லியிலுள்ள நீர்வீழ்ச்சிகளைச் சுற்றிலும் ஒரு சிறு கால்வாயைத் தோண்டியபின்னர், ஓகியோவின் நீர்வழிப் போக்குவரத்து இன்னும் மேன்மையுற்றது. ஐக்கிய அமெரிக்காவில் 1830-ல் கால்வாய்களின் மொத்த நீளம் 1,270 மைல்களாகும்; 1840-ல் 3320 மைல்களாகும்; 1850-ல் 3,700 மைல்களாகும்.

1837-ல் ஏற்பட்ட பீதியின் விளைவு

கால்வாய்களை மாநிலங்களே தோண்டின. மத்திய அரசாங்கம் 40,00,000 ஏக்கர்கள்கொண்ட பொது நிலங்களை வீற்றுக் கால்வாய்கள் வெட்டின. சிசாபீக் - ஓகியோ கால்வாயைப் பொறுத்தவரையில், அதன் பங்குகளையும் தேசீய அரசாங்கம் வாங்கியது. எனினும், தேசீய அரசாங்கத்திற்குக் கால்வாய்கள் தோண்டும் உரிமை கிடையாது என அரசியல் சட்டம் குறிப்பிட்டுள்ளது. தனியார் துறையினரின் மூலதனம் போதவில்லை. 1825-க்கும் 1835-க்கும் இடைப்பட்ட செழிப்பான நாட்களில் மாநிலங்களின் செல்வ வசதி பெருகியே இருந்தது. மாநிலங்களின் மக்கள்தொகையையும் செல்வத்தையும் மிஞ்சும் வகையில் அவற்றின் விகிதாசாரத்திற்கு மேலாகச் செலவழிக்கவேண்டும் என்று நில ஊக வணிகரும், உண்மையான குடியேற்றக்காரர்களும் வலியுறுத்தினர். 'மாநிலங்களின் உட்பகுதிகளில் கால்வாய்கள் அமைத்து முன்னேற்றம் காணவேண்டுமென மாநில அரசியல் சட்டங்களில் அவர்கள் எழுதிவைத்தார்கள். மாநிலங்களுக்கும் நகரங்களுக்குமிடையில் எழுந்த போட்டியினால் கால்வாய்கள் தோண்டுவதில் ஆர்வம் பெருகியது. 1820-ல் 1,27,90,728 டாலர்களாக இருந்த மாநிலக் கடன்கள் 1840-ல் 20,00,00,000 டாலர்களாக உயர்ந்தன. பாங்குகள், சாலைகள், கால்வாய்கள், இருப்புப்பாதைகள் ஆகியவற்றை அமைப்பதற்கு இக் கடன்கள் பயன்பட்டன. கால்வாய் தோண்டுவதற்கு ஆகும் பணத்தில் கணிசமான ஒரு பகுதி இங்கிலாந்திடமிருந்து கடன்வாங்கப்பெற்றது. ஐக்கிய அமெரிக்க பாங்கின்மீதுள்ள நம்பிக்கை, நமது நாட்டின் உயர்ந்த வருமான



(From George Rogers Taylor, 'The Transportation Revolution', 1815—1860, p. 35, vol. IV, 'The Economic History of the United States,' Rinehart & Company.)

1860-ல் தோண்டப்பெற்ற முக்கியக் கால்வாய்கள்

நிலை, அமெரிக்கப் பங்குகளின்மீதுள்ள உயர்ந்த வட்டிவீதங்கள், நமது நாட்டு நிலைமைகளைப்பற்றிய செய்திகள் வெளிநாட்டினருக்குத் தெரியாதிருத்தல் ஆகிய காரணங்களால் ஐரோப்பியர்கள் அமெரிக்கப் பங்குகளையும், பத்திரங்களையும் விலைக்கு வாங்கினர்.[5] கனெக்டிகட், டிலாவேர், ஜார்ஜியா, நியூஹாம்ஷயர், வடகரோலினு, ரோடு ஐலண்டு, வெர்மான்டு ஆகிய ஏழு மாநிலங்கள்மட்டுமே இக் காரியங்களுக்கென கடன்வாங்கவில்லை. தொல்லைகளைப்பற்றியும் செலவுகளைப்பற்றியும் போதுமான அளவுக்குச் சிந்தித்துப் பார்க்காமல் ஆர்வமிகுதியினால் இக் காரியங்களில் பலர் ஈடுபட்டனர். இத் திட்டங்கள் ஊகத்தின் அடிப்படையில் உருவாயின. சில வேளைகளில் இத் திட்டங்கள் தேவையற்றவைகளாகவும் தோன்றின. மேலும், கால்வாய்களின் பயனுடைமையில் மிகவும் நம்பிக்கையுடையவர்களாகப் பலர் இருந்தபோதிலும், அவற்றின் வர்த்தகச் சிறப்பு உள்நாட்டளவிலேயே கட்டுண்டது. 1840-ல் நியூயார்க் கால்வாய்கள்மூலம் கடத்திச்செல்லப்பட்ட சரக்குகளில் ஏழில் ஒரு பங்குமட்டுமே வெளி மாநிலத்தைச் சேர்ந்ததாகும். இருந்தபோதிலும், கால்வாய்கள் ஏதோ ஒரு காலத்தில் செழித்து விளங்கின. இருப்புப்பாதைப் போட்டியினால்தான் கால்வாய்கள் அழிந்தன.

உள்நாட்டுப் போக்குவரத்துகளில், குறிப்பாகக் கால்வாய்கள் தோண்டுவதில் மூலதனத்தை விரைந்து முடக்கியமையினால்தான், 1837-ல் பொருளாதாரப் பீதி ஏற்பட்டது. எனவே, அவ்வாண்டில் பெரும்பாலான இராச்சியங்களினால் வட்டியையும் செலுத்தமுடியவில்லை; கால்வாய்கள் வெட்டும் முயற்சியிலும் ஈடுபடமுடியவில்லை. மிசிசிப்பி, லூயிசியானு, மேரிலாந்து, பென்சில்வேனியா, இந்தியானு, மிச்சிகன் போன்ற இராஜ்ஜியங்கள் தங்களுடைய கடன்களை மறுத்துவிட்டன. தனியார் துறையினரிடத்தில் கால்வாய்கள் அனைத்தையும் பெரும்பாலான மாநிலங்கள் விற்றுவிட்டன. பொதுநலன்களுக்கும் முன்னேற்ற வேலைகளுக்கும் உதவுவதையும் அம் மாநிலங்கள் நிறுத்திவிட்டன. இத்தகைய காரியங்களுக்கு மாநில அரசாங்கங்கள் நிதி ஒதுக்கவோ, உதவவோ கூடாது எனப் புதிய மாநில அரசியல் சட்டங்கள்மூலம் மக்கள் வலியுறுத்தினர். எனவே, இருப்புப்பாதைகள் போடும் காலம் வந்தவுடன், தனிப்பட்ட

[5] காண்க. ஆர். சி. மெக்கிரேன் (R. C. McGrane), 'Some Aspects of American State Debts in the Forties', American Historical Review, XXXVIII, 673-686 (July, 1933), and his 'Foreign Bondholders and American State Debts (1935).

முதலாளிகளும் கார்ப்பரேஷன்களும் இத்தகைய காரியங்களை மேற்கொண்டனர்.

இருப்புப்பாதைகளின் சிறப்பு

கால்வாய்களின் முக்கியத்துவம் பெருகி வளர்ந்து மதிப்பு உயர்ந்துவரும் அதேவேளையில் ஒரு புதிய போக்குவரத்துச் சாதனம் முன்னணிக்கு வந்தது. நீராவி இயக்கும் படகுகள் பெருவாரியான அளவில் பயன்பட்டுவந்த அதேவேளையில், சக்கரங்கள் உடைய வண்டிகளை நீராவி என்ஜினைக்கொண்டு இயக்கலாம் என்ற கருத்து பொறியியல் வல்லுநர்களின் எண்ணத்தில் உதித்தது. நீராவிப் படகில் சக்கரங்களைக் கோத்து, பிலடெல்பியாவின் தெருக்களில் அதனை 1804-ல் ஆலிவர் ஈவான்ஸ் என்பவர் ஓட்டிக்காட்டினார். நியூ ஜெர்சியில் ஹொபோக்கனிலுள்ள (Hoboken) தன்னுடைய சமஸ்தானத்தில் குறுகிய அளவுள்ள இருப்புப்பாதை ஒன்றினை அமைத்து, அதன் மீது 1820-ல் ஜான் ஸ்டீவன்ஸ் என்பவர் நீராவி வண்டியைச் செலுத்திக் காட்டினார். அந்த இருப்புப்பாதைமீது காரைகளையும் அவர் ஓட்டிக் காட்டினார். லிவர்பூல்-மான்செஸ்டர் இருப்புப்பாதைமீது பதின்மூன்று டன்கள் எடையுள்ள ரயில் வண்டியை ஸ்டீபன்சன் செய்த ராக்கெட் (Rocket) எனும் நீராவி என்ஜின் 1829 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், மணிக்குச் சராசரி பதினைந்து மைல் வேகத்தில் இழுத்துச் சென்றது. நீராவி இருப்புப்பாதைகளின் உயர்வும் பயனுடைமையும் இந்த நிகழ்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டது. கால்வாய்களைவிட இருப்புப் பாதைகளால் ஏற்படக்கூடிய பயன்களைப்பற்றியும், வசதிகளைப் பற்றியும் அனைவரும் உணரத் தலைப்பட்டனர்.

இருப்புப்பாதைகள் அமைப்பதில் செலவு அதிகமாகாது. ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு விரைந்து செல்வதற்கு இருப்புப்பாதைகள் மிகவும் பயன்படும். மேலும், நீர் வசதியின் காரணமாகவோ அல்லது அதன அடைப்பில் ஏற்படும் காலதாமதத்திற்கும் செலவிற்கும் கட்டுப்பட்டோ அந்த இருப்புப் பாதைகள் தாழ் மாவட்டங்களில்மட்டும் போடப்படவில்லை. நாட்டின் எந்தப் பகுதியையும் சென்று அடையும் வகையில், தொழிற்சாலையின் கொல்லைப்புறத்தைக்கூடச் சென்று அடையும் வகையில் இருப்புப்பாதைகளைப் போடலாம். பருவகாலங்களில் ஏற்படும் மாறுதல்கள், மழையின்மையால் ஏற்படும் வறட்சி, வெள்ளம், பனிக்கட்டி உறைந்து இறுகும் நிலை ஆகியவற்றால் கால்வாய்கள் பாதிக்கப்படுவதுபோல இருப்புப்பாதைகள் பாதிக்கப்படுவதில்லை. நாட்டின் ஒவ்வொரு பகுதியும் இருப்புப்பாதைகள் மூலம் எல்லாக் காலங்களிலும் பயன் அடைந்தது. வடக்கு,

தெற்காகவே நதிகள் ஓடின. ஆனால், புதிய இருப்புப்பாதைகள் மேற்குத் திசை நோக்கிச் சென்றன. பொதுவாகவே, நதிகள் செல்லும் போக்கிலேயே இருப்புப்பாதைகளும் போடப்பட்டன. எனினும், குறுக்குப் பாதையில் செல்லும் இருப்புப்பாதைகள் தூரத்தைக் கணிசமான அளவுக்குக் குறைத்தன. இருப்புப் பாதைகள் ஏற்பட்டதன் விளைவாக மேற்குப் பிரதேசத்தில் போக்குவரத்துப் பெருகியது; மேற்குப் பிரதேசத்தைச் சார்ந்த பண்டங்களை இடம்விட்டு இடம் கடத்திச்செல்ல முடிந்தது; கிழக்குப் பிரதேசத்தில் தொழில் வளமடைந்தது; தொழிலாளர் சங்கங்கள் துரிதமாக வளர்ந்தன; பல்வேறு பிரதேசங்களுக்கிடையே ஒருமைப்பாடு ஏற்பட்டது; தூரத்திலுள்ள பகுதிகளிலெல்லாம் கல்வியும் செய்தியும் பரவின. நமது பொருளாதார, சமூக, அரசியல் வாழ்க்கை வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டமும் இருப்புப் பாதைகளால் ஏற்பட்ட விளைவுகளுடன் ஒன்றிப் பிணைந்திருந்தது.

நீராவி இருப்புப்பாதைகள் முதன்முதலில் பிரிட்டனில் ஏற்பட்டிருந்தபோதிலும், அமெரிக்காவில்தான் அவை விரைந்து வளர்ந்தன. ஒரு பத்தாண்டுகளில் ஐரோப்பாவைவிட மிகுதியான தொலைவிற்கு இருப்புப்பாதைகள் அமெரிக்காவில் போடப்பட்டன. குறைந்த செலவில் விரைந்து செல்லக்கூடியதும் நிலைமைக்கு ஏற்றவாறு மாறும் தன்மை உடையதுமாகிய போக்குவரத்தே ஒரு பெரிய நாட்டிற்குத் தேவையாகும், எனவே, அமெரிக்காவில் பெருமளவில் இருப்புப்பாதைகள் அமைவதற்கு அதுவே காரணமாகும். மேலும், அரசியல் தடைகளோ அல்லது சுங்கச் சாவடித் தடைகளோ இல்லாமையால், அமெரிக்காவில் இருப்புப்பாதைகள் விரைந்து போடப்பட்டன. இன்னும் இரயில்வேக்களுக்குத் தேவைப்படும் நிலமும் மலிவாகக் கிடைத்தது. பின்னர், இருப்புப்பாதைகளுக்குத் தேவையான நிலத்தை மத்திய, மாநில அரசாங்கங்களே வழங்கின. இருப்புப்பாதைகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்பும் தீவிரமாக இல்லை. ஆனால், கால்வாய்களின் கடும் எதிர்ப்பை இரயில்வேக்கள் சமாளித்தன.

அமெரிக்காவின் ஆரம்பகால இருப்புப்பாதைகள்

டன்பார் (Dunbar) பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளாக இங்கிலாந்து இருப்புப்பாதைகளைப் போட்டவண்ணம் உள்ளது; 1738 முதல் இரும்பாலாகிய தண்டவாளங்களைப் போட்டுள்ளது; 1804 முதல் நீராவி என்ஜின்களைப் பயன்படுத்திவருகிறது'.[8] 1829 வரையில் இவை

[8] Seymour Dunbar, 'History of Travel America', III, 906.

யணத்தையும் நீராவி இருப்புப்பாதைமீது இணைத்துப் பயன் படுத்தவில்லை. துவக்ககாலத்தில் அமெரிக்காவின் பல பகுதி களில் இரும்பையும் கல்லையும் கடத்திச் செல்வதற்கு மரத்தா லாகிய தண்டவாளங்களைப் பயன்படுத்தினர். மெஸ்ஸாசூ செட்சைச் சார்ந்த குயின்சியிலிருந்து (Quincy) நீப்பன்செட் (Neponset) வரையில் மூன்றுமைல் தூரத்திற்குச் செல்லும் பாதையே தண்டவாளப் பாதைகளில் மிகவும் சிறந்ததாகும். இத் தண்டவாளப் பாதையை 1826-ல் திறந்தனர். பென்சில் வேனியாவிலுள்ள மாச் சங் இரயில்வேயை (Mauch Chunk Railway) 1827-ல் போட்டு முடித்தனர். கால்வாய்ப் போக்கு வரத்துக்குத் துணைபுரியும் முறையிலேயே, இருப்புப்பாதையும் வண்டிப் பாதையும் ஒன்றுகக் கலந்த ஈரிணைப் பாதைகள் முதன் முதலில் போட்டனர். பிலடெல்பியாவிலிருந்து கொலம்பியா விற்குச் செல்லும் பாதையும், ஹாலிடேஸ்பர்க்கிலிருந்து ஜான்ஸ் டவுனுக்குச் செல்லும் பாதையும் முதன்முதலில் பிரயாணி களின் போக்குவரத்துக்கெனப் போடப்பட்டவைகளாகும்.

காரல்டன்னைச் சார்ந்த (Carrollton) சார்லஸ் காரல் (Charles Carroll) சுதந்திரப் பிரகடனத்தில் கையெழுத்து இட்டவர்களில் ஒருவர் ஆவார். அவர் 1828ஆம் ஆண்டு, ஜூலை நான்காம் நாளில் பால்டிமோர்-ஓகியோ இருப்புப்பாதையை அமைப்பதற் கென முதன்முதலில் ஒரு பிடி மண்ணை வெட்டிப் போட்டார். இன்றைய கருத்துப்படி அமெரிக்காவில் போடப்பட்ட முதல் இருப்புப்பாதை அதுவே. அவ் இருப்புப்பாதையின் பதின்மூன்று மைல்கள் நீளமுள்ள முதல் பகுதியை 1830-ல் திறந்து விட்டனர். இப் பாதையை அமைத்தவர்கள்கூட நீராவியின் சிறப்பை உணரவில்லை. ரயில்வண்டிகளை இழுக்க குதிரை யாற்றலையே முதன்முதலில் பயன்படுத்தினர். 1830ஆம் ஆண்டில் நிகழ்ந்த சோதனைப் பயணத்தில், டாம் தம் (Tom Thumb) எனும் பீட்டர் கூப்பரின் என்ஜின் (Peter Cooper's Engine) பால்டிமோரிலிருந்து எல்லிகாட்ஸ் மில்கள் (Ellicott's Mills) முடிய உள்ள பதின்மூன்று மைல்களை ஒருமணி நேரத்தில் கடந்தது. எனவே, நீராவியின்மீது இரயில்வே நிருவாகம் கருத்தைச் செலுத்தியது.

ஸ்டீவன்ஸ் நீராவி என்ஜினைச் செலுத்திக் காட்டிய நிகழ்ச்சி யைத் தவிர்த்து, டிலாவேர், ஹட்சன் பகுதியைச் சார்ந்த கார்பண்டேல்-ஹொனஸ்டேல் இருப்புப்பாதைமீது (Carbondale and Honesdale Railroad) 1829-ல் முதன்முதலாக நீராவி என்ஜின இயக்கிக்காட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற, ஒன்பது

குதிரையாற்றலைக் கொண்ட ஸ்டூர்பிரிஜ் லயன் (Stourbridge Lion) எனும் என்ஜின் மிகவும் பாரமாக இருந்ததால் அமெரிக்காவிலுள்ள தண்டவாளங்களும் மற்றச் சாலைகளும் அந்த என்ஜினைத் தாங்கும் வலிமை உடையனவாக இல்லை. எனவே, அந்த என்ஜின் அமெரிக்காவிற்கு ஏற்றதாக இல்லை. இதற்கிடையில், சார்லஸ்டன்னிலிருந்து தென் கரோலினுவிலுள்ள ஹாம்பர்க்கிற்குச் செல்லும் சாலை ஒன்றுக்கு உரிமைப் பத்திரத்தை அரசாங்கம் வழங்கியது. இச் சாலையில், 1830-ல், அமெரிக்காவில் செய்யப்பட்ட பெஸ்ட் பிரண்ட் ஆப் சார்லஸ்டன் (Best Friend of Charleston) எனும் நீராவி என்ஜின் ஓடியது. இந்த என்ஜின் காலியாக ஓடியபொழுது, மணிக்கு முப்பதுமைல் வேகத்தில் சென்றது. பாரமுள்ள நான்கு பெட்டிகளை இழுத்துச் சென்றபொழுது, பதினைறு முதல் இருபத்தோருமைல் வேகத்தில் சென்றது. 1833-ல் ஹாம்பர்க் முடிய அமைந்த அந்த இருப்புப்பாதையின் நீளம் 136 மைல்களாகும். அந்தக் காலத்தில் உலகத்திலேயே மிகவும் நீளமான இருப்புப்பாதை அதுவே. நியூயார்க் சட்ட மன்றம், மொகாக்-ஹட்சன் இருப்புப்பாதைக் கம்பெனிக்கு 1826-ல் உரிமைப் பத்திரம் ஒன்றினை வழங்கியது: அக் கம்பெனி, நியூயார்க் சென்ட்ரலின் முன்னோடியாகும். 1830-ல் இருப்புப்பாதை அமைக்கும் வேலை துவங்கியது, 1831-ல் சோதனைப் பயணம் ஒன்றில் டீவிட் கிளின்டன் (De Witt Clinton) அல்பேனியிலிருந்து ஷினெக்டாடி (Schenectady) முடிய உள்ள பதினேழுமைல் தூரத்தை ஒரேமணியில் கடந்தது. பிலடெல்பியாவையும் சஸ்கியூஹன்னுவையும் இணைக்கும் பாதை, பென்சில்வேனியா பாதை அமைப்பில் முதல் தொடராகும். இப் பாதை 1834-ல் கட்டி முடிக்கப்பெற்றது.

இருப்புப்பாதைப் போக்குவரத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்து கொண்டனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் கால்வாய்கள் தோண்டுவதில் காட்டிய ஆர்வத்தை இப்பொழுது போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முறையில், இருப்புப்பாதைகள் அமைப்பதில் காட்டினர். கடற்கரைக்குக் குறிப்பிட்ட சில பண்டங்களை ஏற்றிச் செல்லும் நோக்கத்துடன் கால்வாய்கள் வெட்டியதுபோலவே, சில இருப்புப்பாதைகளையும் போட்டனர். போக்குவரத்து வளர்ச்சியில் பொதுவான ஈடுபாடு இருந்தமையால், மற்ற இருப்புப்பாதைகளும் போடப்பட்டன. எந்தக் கிராமத்தின் வழியாகவேனும் இருப்புப்பாதை கடந்து சென்றால், அந்தக் கிராமத்தில் ஒரு சிராகியூசின் (Syracuse) திகைப்பூட்டும் வளர்ச்சியையோ அல்லது பஃபேலோவின் (Buffalo) திடீரென

பூட்டும் வளர்ச்சியையோ காண இயலும் என்று ஒவ்வொரு பகுதியிலும் உள்ளவர்கள் நம்பினார்கள். 1860 ஆம் ஆண்டிற் குள்ளாக 30,000 மைல்கள் நீளமுள்ள இருப்புப்பாதைகள் போடப்பட்டன.

மேற்கத்திய பிரதேசங்களைச் சுரண்டும் நம்பிக்கை உடைய கடற்கரைப் பட்டினங்களிடையே மீண்டும் போட்டி உணர்ச்சி எழுந்தது. கால்வாய்கள் வெட்டும் காலத்தில் விலகி இருந்த போஸ்டன், சார்லஸ்டன், சாவன்னு, பால்டிமோர் போன்ற நகரங்களனைத்தும், உட்பகுதிகளுக்குச் செல்லும் பாதைகளை அமைத்து ஆதிக்கம் செலுத்தும் பெரும் திட்டங்களைப் போடும் மற்ற நகரங்களுடன் ஒன்று சேர்ந்தன. சில ஆண்டுகள் கழிந்த பின்னர் கால்வாய்களின்மூலம் நடைபெறும் போக்குவரத்திற்குத் துணையாகவும், நதிகளையும் செயற்கை நீர்வழிகளையும் இணைக்கும் தொடராகவும் இருந்த நிலை மாறி, அப் பாதைகள் தலைமை இருப்புப்பாதைகளாக (great trunk lines) வளர்ந்து விளங்கின. கடற்கரைப் பிரதேசத்திற்கும் நாட்டின் உட்பகுதித் தளங்களுக்கு மிடையில் 1850 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஒரே ஓர் இருப்புப் பாதையே போடப்பட்டிருந்தது. ஆனால், அப் பாதையில் செல்லும் பிரயாணி, நியூயார்க்கைக் கடந்தவுடன், பதினாறு கம்பெனிகளின் ஆதிக்கத்திலுள்ள இருப்புப்பாதைப் பகுதிகளில் செல்லவேண்டும். வழிச் சுங்கங்கள் செலுத்தவேண்டியிருந்தாலும், வெவ்வேறு குறுக்களவுள்ள பாதைகளில் அடிக்கடி மாற்றவேண்டியிருந்தாலும், சரக்கேற்றம் கட்டுப்படுத்தப்பெற்றது. இப் பாதையின் முதல் இணைப்பாகிய நியூயார்க் சென்ட்ரல் 1853-ல் நிறைவேறியது. உட்பகுதிக்குச் செல்லும் இரு பெரும் இருப்புப்பாதைகளின் அமைப்புகளில் ஒன்றாக அது திகழ்ந்தது. 1858 ஆம் ஆண்டிலேயே நியூயார்க்கிலிருந்து சிக்காகோவிற்குச் செல்லும் முதல் இருப்புப்பாதை ஏற்பட்டது. 1850 ஆம் ஆண்டிற்கும் உள்நாட்டுப்போர் தோன்றிய காலத்திற்கும் இடையில், கடற்கரையோரப் பகுதிக்கும், ஏரிகளும் ஆறுகளும் நிறைந்த மேற்கத்திய பிரதேசத்திற்கும் இடையில் எட்டு இருப்புப்பாதைகள் தோன்றின. அந்த எட்டு இருப்புப்பாதைகளில் தற்காலத்திலுள்ள ஈரீ (Erie) பாதையும், பென்சில்வேனியா பாதையும், பால்டிமோர்-ஓகியோ பாதையும் குறிப்பிடத்தக்கவைகளாகும். நியூயார்க் சென்ட்ரலுக்குப் போட்டியாகக் கிளம்பிய ஈரீ பாதை, 1851-ல் ஈரீ ஏரியின்மீதுள்ள டன்கிர்க்குடன் (Dunkirk) முடிவடைந்தது. பென்சில்வேனியா பாதை 1852-ல் பிட்ஸ்பார்க் வரையில் சென்றது. பால்டிமோர்-ஓகியோ பாதை 1853-ல் வீலிங் முடிய சென்றது.

தென்னெட்டிலும். இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றன. 1850-ல் ஜார்ஜியாவிலுள்ள மேற்கத்திய அட்லான்டிக் இருப்புப்பாதை டென்னசி நதியைச் சென்று அடைந்தது. 1854-ல் நாஷ்வில்-சட்டனூகா (Nashville and Chattanooga) பாதை திறந்தவுடனேயே, மேற்கத்திய அட்லான்டிக் இருப்புப்பாதை, வடமேற்குப் பிரதேசத்தைச் சார்ந்த ஆற்றுப் பாதையுடனும் இருப்புப்பாதையுடனும் அட்லான்டாவை (Atlanta) இணைத்து வைத்தது. மேற்குப் பிரதேசத் தானிய வகைகளைக் கிழக்கிலுள்ள பருத்திப் பிரதேசத்தில் விநியோகம் செய்யவும் மேற்கத்திய அட்லான்டிக் இருப்புப்பாதை பெரிதும் உதவியாக இருந்தது. ரிச்மாண்டிலிருந்து மேற்கே செல்லும் சென்ட்ரல் வர்ஜீனியா இருப்புப்பாதையும், பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து மேற்கே செல்லும் சவுத்சைடு ரெயில் ரோடும் (Southside Railroad), 1858-ல் தென்மேற்குப் பிரதேசத்துடன் தொடர்புகள் உண்டாக்கிக்கொண்டன. 1859-ல் மிசிசிப்பி நதியுடனும் இணைந்தன. மிசிசிப்பி பள்ளத்தாக்கைப் பயன்படுத்திக்கொள்ள தென்கிழக்குக் கடற்கரைப் பட்டினங்கள் முயன்றபோதிலும், பூகோள முறைப்படி வசதியான இடத்தில் அமைந்திருந்த சட்டனூகா (Chattanooga) அப் பள்ளத்தாக்கினை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றது. இப் பிரதேசத்திலிருந்து இருப்புப்பாதைகள் தெற்கே கிளைகிளையாகப் பிரிந்து சென்று மொபைல் வளைகுடாவைத் தொட்டுநின்றன; மேற்கே மெம்பிஸிலுள்ள மிசிசிப்பி வரையில் சென்றன; வடக்கே பழைய வடமேற்குப் பகுதிவரையில் சென்றன.

துவக்கத்தில் நியூ ஆர்லியன்ஸ், மொபைல் வழியாக ஏற்றிச் செல்லப்பட்ட தென்மேற்குப் பிரதேசப் பண்டங்கள் இப்பொழுது கிழக்குத் திசை வழியாகக் கடத்திச் செல்லப்பட்டமையால், மிசிசிப்பி வியாபாரிகளும் வளைகுடா துறைமுகங்களைச் சார்ந்த வர்த்தகர்களும் விழிப்புற்றனர். மொபைல் பகுதியைச் சார்ந்த குடிமக்கள் மொபைல்-ஓகியோ பாதையை அமைத்தனர். இல்லினுயில் உள்ள கெய்ரோ வரையில் அப் பாதை சென்றது. அப் பாதையை உருவாக்கும் முயற்சிக்கு 1859-ல் மத்திய ஆட்சியின் நிலமான்யமும் கிடைத்தது. அதே ஆண்டில், நியூ ஆர்லியன்ஸ், ஜாக்சன், கிரேட் நார்த்தர்ன் (Great Northern) ஆகிய பாதைகளை உருவாக்கிப் பின்னர் ஜாக்சன், டென்னசி ஆகியவற்றுடன் நியூ ஆர்லியன்ஸ் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது. மத்திய அரசாங்கத்திடமிருந்து நிலமான்யங்களைப் பெற்ற இல்லினுய் சென்ட்ரல், கெய்ரோவுக்கும் சிக்காகோவுக்கும்

இடையில் பாதை அமைத்தது. தென்மேற்குப் பிரதேசத்தில் 1850 முதல் 1860 முடிய உள்ள பத்தாண்டுகளில் ஏறக்குறைய 8,000 மைல்கள் நீளமுள்ள இருப்புப்பாதைகள் போடப்பட்டிருந்தன. அப் பிரதேசத்திலிருந்து அட்லான்டிக் கடற்கரைக்கு மாத்திரமல்லாமல் ஓகியோ பள்ளத்தாக்கிற்கும் இருப்புப்பாதைகள் சென்றன. ஆரம்ப காலத்தில் வகோகுடா துறைமுகங்களுடன் ஏற்பட்டிருந்த போக்குவரத்துகள் இத்தகைய முயற்சிகளின் காரணமாகக் குறைந்துபோயின. அத் துறைமுகங்களின் முக்கியத்துவமும் குன்றியது. நியூயார்க், பிலடெல்பியா, பால்டிமோர், இன்னும் மற்ற வடபிரதேசத் துறைமுகங்கள் ஆகியவற்றின் இடையில் உருவாகியிருந்த புதிய இருப்புப்பாதைகள் ஓகியோ பள்ளத்தாக்கின் பொருளாதார வாழ்வைப் பெரிதும் தூண்டின. மேலும், மேற்கத்திய பண்டங்களைக் கிழக்கே கடத்திச் செல்வதற்கும் அப் பாதைகள் பெரிதும் உதவின. இவ்விரு பகுதிகளையும் ஒன்றுக இணைத்துவைக்கப் பெரிதும் உதவியாகவிருந்த எஃகுப் பொருள்களே, உள்நாட்டுப் போர் ஏற்பட்ட காலத்தில் வடமேற்குப் பிரதேசம் யூனியனுடன் சேர்ந்திருக்கவும் பெரிதும் துணைபுரிந்தன.

உள்நாட்டுப்போர் துவங்கிய காலத்தில், அலெகனிஸ் மலைத் தொடரின் கிழக்கேயுள்ள பிரதேசத்தில் மிகவும் குறைந்த அளவில் இருப்புப்பாதை அமைப்பு ஏற்பட்டிருந்தது. ஆனால், காலப்போக்கில் அப் பகுதியில் இருப்புப்பாதைகள் பெருகின. அலெகனிஸ் மலைத் தொடரின் கணவாய்களின் வழியே போக்குவரவு பெருகத் தொடங்கிய காரணத்தாலும், மிசிசிப்பிக்குக் கிழக்கே பெரும் இருப்புப்பாதைகள் போடப்பட்டமையாலும், முக்கியமான கடற்கரைப் பட்டினங்கள் மேற்குப் பிரதேசத்துடன் நெருங்கிய தொடர்புகளை உண்டாக்கிக்கொண்டன. மேலும், இவ்விரு பிரதேசங்களுக்கிடையிலும் வர்த்தகம் விரைந்து பெருகியது.

துவக்ககாலத்தில் இருப்புப்பாதைகள் போடுவதில் உண்டாகும் பிரச்சினைகள்

நீராவி என்ஜின் வளர்ச்சியுறுது துவக்ககட்டத்தில் இருந்தமையால், ஆரம்ப காலத்தில் கால்வாய் தோண்டியவர்கள் எண்ணற்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் பல தொல்லைகளைச் சமாளித்ததுபோலவே, இருப்புப்பாதை அமைப்பாளர்களும் பல தொல்லைகளைச் சமாளிக்க முன்வந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் 1740 முதல் 1759 வரையுள்ள காலம் பரிசோதனைகள் நிறைந்த காலமாகும். தண்டவாளங்கள் போடுவதில் இங்கி

லாந்தின் அனுபவங்கள் சில அமெரிக்காவுக்குப் பயனுடையன வாக இருந்தபோதிலும், அமெரிக்காவின் சூழ்நிலை வேறு விதமாக இருந்தது. நெடுந்தொலைவுப் பிரயாணிகள் போக்கு வரவுப் பிரச்சினையும், பாரம் மிகுதியாக உள்ள பண்டங்களின் போக்குவரவுப் பிரச்சினையும் அமெரிக்காவிற்கே உரிய பிரச்சினைகள் ஆகும். எனவே, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இரு நாடுகளின் இருப்புப்பாதை வளர்ச்சி ஒரேமாதிரியாக இருக்க முடியாது என்பது தெளிவாகும்.



பாதை போடுதல், கேஜ் (gauge), தண்டவாளங்கள்மீது சக்கரங்கள் உராய்தல், பாலங்கள், முட்டுக்கட்டைகள், இடையிணைப்புக் கருவி (coupling apparatus), காப்பு முறைகள் (safety devices), ஒளி முறைகள், வெப்பம் உண்டாக்குதல் முதலிய பிரச்சினைகள் குறித்து தெளிவான முடிவுகள் எடுத்துச் செயல்படுத்த

வேண்டும். இப் பிரச்சினைகள் குறித்து முடிவு எடுக்கப் பல ஆண்டுகள் செலவழிந்தபோதிலும், துவக்கத்திலிருந்தே வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டது. இரும்புக் கீற்றுகளாலாகிய முதல் தண்டவாளம் மரவிட்டங்கள்மீது போடப்பட்டன. அத் தண்டவாளம் மரவிட்டங்களுடன் நன்கு பிணைக்கப்பட்டது. ஆனால், தீவினையின் காரணமாக, இத்தகைய இரும்புத் தண்டவாளக் கீற்றுகள் தளர்ந்துபோய் சுருண்டுவிடும் தன்மை உடையனவாய் இருந்தன. சிலவேளைகளில், அத் தண்டவாள இரும்புக் கீற்றுகள் ரயில் வண்டியின் அடித்தளத்தின் வழியே நுழைந்து பெட்டியினுள் வந்து நீட்டிக்கொள்வதும் உண்டு. எனவே, அவ்வப்பொழுது ரயில் வண்டியை நிறுத்திவிட்டு, ரயில்பாதையைச் செப்பனிட்டு, தண்டவாளத்தைச் சரிசெய்யும் வேலையையும் மேற்கொள்ளவேண்டிய அவசியம் என்ஜினியருக்கு ஏற்படுவதுண்டு. பதினெட்டாம் நூற்றாண்டின் ஐம்பதுகளுக்கு (1850-1859) பின்னரே, இருப்புப்பாதைகளைப் பெருமளவில் மக்கள் உபயோகிக்கத் தொடங்கினர். ஆரம்பத்தில் ஒரேமாதிரியான கேஜ் கிடையாது. தண்டவாளங்களுக்கிடையிலுள்ள அகலம் டிலாவேர், ஹட்சன் பகுதிகளில் நான்கு அடி மூன்று அங்குலங்களாகவும், டிலாவேர், லேக்காவன்னா (Lackawanna), வெஸ்டர்ன் (Western) ஆகிய பகுதிகளில் ஆறு அடிகளாகவும் இருந்தது. ஒரேமாதிரியான கேஜ் உள்ள தண்டவாளங்களைப் போடாததால் சரக்கேற்றத்திற்காகும் செலவு மிகுதியாயிற்று. எனவே, இறுதியில் பாதைகளின் பெரும்பகுதியைத் திருத்தி அமைக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆரம்பகால என்ஜின்களுக்குப் பெட்டிகள் (cabs) கிடையாது. 1842ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் என்ஜின்களுடன் பெட்டிகள் இணைக்கப்பெற்றன. வெப்பம் உண்டாக்குவதற்கும், என்ஜின்களை இயக்குவதற்கும் எரிபொருளாக மரத்தினைப் பயன்படுத்தினர். அப்பொழுது நிலக்கரி உபயோகத்திற்கு வரவில்லை. மரத்தையே எரிபொருளாகப் பயன்படுத்தியமையால், மரத்திலிருந்து கிளம்பும் தீப்பொறிகள் காடுகளிலே தீ பரவவும், மரத்தாலாகிய ரயில் வண்டிகளில் தீ பரவவும், பிரயாணிகளின் உடைகளில் தீப்பற்றவும் காரணமாய் அமைந்தன. இஃது ஒரு பெரும் பிரச்சினையாக மாறியது. இருப்புப் பாதை வரலாற்றில், முதல் இருப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிரயாணிகள் ஏறிச் செல்லும் ரயில்வண்டிப் பெட்டிகளில் எவ்வித வசதிகளும் கிடையா. எனினும், பொதுவாகவே, ரயில் வண்டிப் பெட்டிகளையும் என்ஜின்களையும் சிறந்த முறையில் ஒப்பணை செய்து, சாயம் பூசி, கவர்ச்சியான பெயர்களிட்டுத் தண்டவாளத்தில் ஓடவிட்டனர். துவக்ககாலத்தில் ரயில்வண்டிகள்

மணிக்குச் சராசரி பதினேந்துமைல் வேகத்திலேயே ஓடின. எனினும், ரயில்வண்டிகள்தாம் விரைந்து செல்லும் போக்குவரவின் சகாப்தத்திற்குக் காரணமாய் அமைந்தன. தண்டவாளங்களுக்கு ஏற்ற சக்கரங்களைக் கோத்து, பழைய ஸ்டேஜ்கோச்சுகளின் (stagecoaches) பெட்டிகளையும் கோத்து, பிரயாணிகள் செல்லும் கோச்சுகளை முதன்முதலில் இருப்புப்பாதையில் செலுத்தினர். காலப்போக்கில், தற்காலத்து ரயில்வண்டிகளைப் போலவே நீண்ட பெட்டிகளைக் கோச்சுகளில் கோத்துவிட்டனர்; இத்தகைய பெட்டிகளின் இரு பக்கங்களிலும் இரண்டு வரிசைகளாக இருக்கைகளைப் போட்டனர்; இவ்விரு வரிசைகளுக்குமிடையில் தடுப்புகளையும் அமைத்தனர்; பெட்டிகளின் இரு பக்கங்களிலும் ஜன்னல்களையும் கதவுகளையும் அமைத்தனர். ஸ்டேஜ் கோச்சுவண்டிகளில் இருந்த முட்டுக்கட்டைகளைப் போலவே, ரயில்வண்டிகளிலும் முட்டுக்கட்டைகளை ஆரம்ப காலத்தில் அமைத்திருந்தனர். காலின் சக்தியைப் பிரயோகித்து நெம்புகோல்களை அழுத்தினால், அம் முட்டுக்கட்டைகள் சக்கரங்களின் முன்னே நகர்ந்துசென்று, அவற்றின் ஓட்டத்தைத் தடுக்கும்.

உள்நாட்டுப்போர் துவங்குவதற்கு முன்னர், அமெரிக்க இருப்புப்பாதைகள் போதுமான அளவுக்குப் போடப்படவில்லை. சிறந்த முறையிலும் அமைக்கப்படவில்லை. பாதைகள் கொஞ்சம் கொஞ்சமாகச் சீரழிந்துகொண்டிருந்தமையாலும், பாரம் நிறைந்த வண்டிகளும் என்ஜின்களும் அப்பாதைகள்மீது சென்று அழுந்தியமையாலும் விபத்துகள் அடிக்கடி ஏற்பட்டன. தண்டவாளப் பாதையைச் சுற்றிலும் வேலியிட்டுப் பாதுகாக்காததால், சில குழப்பங்களும் உண்டாயின. 1850-1859 வரையிலும் அதற்குப் பின்னரும், ரயில்வண்டிப் பிரயாணிகள் உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டே பயணம் செய்தனர். காற்றியக்கு முட்டுக்கட்டை(air brake), தானே இயங்கும் இடையிணைப்புக் கருவி, கைகாட்டிகளின் கூட்டுமுறை (block system of signals), விஞ்ஞான முறைப்படி கட்டப்படும் இருப்புப்பாதைகள் ஆகிய சாதனங்கள் இன்னும் உபயோகத்திற்கு வரவில்லை. ஒரு விபத்து ஏற்பட்டால் அது தெய்வத்தின் செயல் என்று மக்கள் கருதினார்களேயன்றி, இருப்புப்பாதை சரியான முறையில் அமைக்கப்படாததால் ஏற்பட்டது என்று கருதுவது இல்லை. ரயில்வண்டிகள் வசதிக்கும் வாய்ப்பிற்கும் தக்கவாறு வருவதும் போவதுமாக இருந்தன. 1840-1849 வரையில், இரயில்வே கால அட்டவணையை யாரும் ஒரு பொருளாக மதிப்பதில்லை. சரக்கேற்றும் கூலியும் பிரயாணிகள் கட்டணமும் ஒரேமாதிரியாக

அமையவில்லை. 1840-1849 ஆண்டுகளில், பிரயாணிகளின் கட்டணம் நியூயார்க்கில் மைல் ஒன்றுக்கு 1.5 சென்டுகளாகவும், மிசிசிப்பியில் 5-55 சென்டுகளாகவும் இருந்தது; வெர்மான்டில் சரக்கேற்றும் கூலி மைல் ஒன்றுக்கு, டன் ஒன்றுக்கு 4 சென்டுகளாகும்; மிசிசிப்பியில் 24.89 சென்டுகளாகும். இருப்புப்பாதைகளுக்கிடையில் நிலவும் போட்டியைப்பொறுத்தே, அவ்வப் பொழுது கட்டணங்களும் சரக்குக் கூலிகளும் மாறின.

துவக்ககால இருப்புப்பாதைகள்மீது செலவழிந்த நிதியளவு

இருப்புப்பாதைகள் போடுவதில் பொறியியல் பிரச்சினைகளுக்கு உள்ள முக்கியத்துவம், நிதி திரட்டிச் செலவழிக்கும் திட்டத்திற்கும் உண்டு. உள்நாட்டுப் போருக்கு முன்னர், 30,000 மைல்கள் நீளமுள்ள இருப்புப்பாதைகள் அமைக்கப் பெரும் நிதி திரட்டவேண்டியிருந்தது. துவக்கத்திலிருந்தே, இருப்புப்பாதை போடும் முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு நிதித் தொல்லை இருந்தது. இருப்புப்பாதைகளுக்கும், சுங்கச் சாவடிகளுக்கும், மரப் பலகையாலான சாலைகளுக்கும், கால்வாய்களுக்கும், இவற்றில் பிழைப்பு நடத்தியவர்களுக்கும் இடையில் போட்டிகள் எழுந்தபோதிலும், இருப்புப்பாதைகளைப்பொறுத்த வரையில் தொல்லை குறையவில்லை.[7] குடியேற்றம் நிகழாத, புதிய நாட்டில் இருப்புப்பாதைகள் போடுவதற்கென பணத்தைச் செலவழிப்பதில் ஓர் அடிப்படையான தொல்லை இருந்தது. இருப்புப்பாதைகள் போடுவதில் செலவழியும் தொகைமீது கிடைக்கும் இலாபம், இத்தகைய நாட்டின் எதிர்கால வளர்ச்சியைப்பொறுத்தே அமையும். இந்தச் சூழ்நிலை நிலவும் வரையில் முதலீடு செய்பவர்களுக்கு உடனடி இலாபம் கிடைப்பதில்லை. பாதைகள் போடப்பட்ட பகுதிகளுக்குச் சென்று மக்கள் குடியேறினால்தான், முதலீடு செய்தவர்களுக்கு எதிர்காலத்தில் ஏதேனும் இலாபம் கிடைக்கும் என்று ஊகிக்க முடியும். மிகவும் நெருக்கமாக மக்கள் வாசம் செய்யும் கிழக்குப்

[7] சுங்கச் சாவடிகளைவிட அல்லது கால்வாய்களைவிட சர்வாதீனம் நிறைந்ததாகவே ஆரம்ப ஆண்டுகளில் இருப்புப்பாதைகள் அமைந்திருந்தன என்று விவாதித்தனர். ஈரி கால்வாயின் என்ஜினியராகிய பென்ஜமின் ரைட் (Benjamin Wright) என்பவர் காங்கிரசின் பத்திரம் ஒன்றுடன் இணைக்கப்பெற்ற கடிதமொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'நீள்மான இருப்புப்பாதை, இந்த நாட்டிற்கு ஏற்பட்ட பழியாக அமைந்துள்ளது என்று நான் கருதுகிறேன். சரக்கேற்றிச் செல்லும் சர்வாதீனம் அத்தகைய இருப்புப்பாதைக்கே உண்டு. ஆனால், இதற்குமாறாக, படகைக் கட்டுகின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் கால்வாய் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி பயன்படும்.' House Ex. Doc. No. 18, 1831-32, 22nd Cong., 1st Sess., I, 174.

பிரதேசத்தில் இருப்புப்பாதைகள்மீது முதலீடு செய்வதில் பெரு மளவில் ஊதியப் பங்கு அடிக்கடி கிடைத்தது. ஆனால், மக்கள் நெருக்கமாக வாசம் செய்யாத மேற்குப் பிரதேசத்திலும் தென் பிரதேசத்திலும் இருப்புப்பாதைகள் போடுவதில் ஈடுபடுத்தப் பட்ட மூலதனத்தின்மீது கிடைக்கக்கூடிய இலாபத்தைப்பற்றி தெளிவாக ஏதும் கூறவியலாது. எந்த வேகையிலும், ஊதியப் பங்குகள் கிடைப்பதற்கு முன்னர், முதலீடு செய்பவர்கள் பல ஆண்டுகளுக்குக் காத்திருக்கலாம். இவ்வளவு தொல்லைகள் இருந்தபோதிலும், 1830 முதல் 1860 முடிய உள்ள ஆண்டு களில், இருப்புப்பாதைகள் போடுவதில் 1,25,00,00,000 டாலர்களுக்கு மேல் முதலீடு செய்யப்பட்டது. மூலதனத்தின் பெரும்பகுதி வெளிநாடுகளிலிருந்து கிடைத்தது. தீவினைப் பயன் காரணமாக, 1837-ல் ஏற்பட்ட பொருளாதார பீதியில் விளைந்த அனுபவங்களையும், பீதியின் காரணமாக அமெரிக்க அரசாங்கம் வாங்கிய கடன்களைத் திருப்பித் தர மறுத்துவிட்டதால் விளைந்த அனுபவங்களையும் நிதி படைத்த வெளிநாட்டுக்காரர்கள் முற்றி லும் மறந்துவிட்டு, மீண்டும் புதிய உலகம் வழங்கும் பொருளாதார வாய்ப்புகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பதுபற்றி ஊகிக்கத் தொடங்கினர். நியூ இங்கிலாந்தில் திமிங்கில வேட் டைத் தொழில் மங்கத் தொடங்கவே, அத் தொழிலில் முடங்கிக் கிடந்த மூலதனம் விடுபட்டு, இருப்புப்பாதை அமைப்பதற்குப் பயனுகியது. அவ்வாறே, காலப்போக்கில் கப்பல் தொழிலும் குன்றத் தொடங்கவே, அத் தொழிலில் முடங்கிக் கிடந்த மூல தனமும் வெளியேறி இருப்புப்பாதை போடுவதற்குப் பயன் பட்டது. முனை நகரங்களிலும், இருப்புப்பாதை அமைந்த பகுதி களிலும் வாழ்ந்துவந்த வியாபாரிகளும் விவசாயிகளும் இருப்புப் பாதை போடுகின்ற காரியத்தில் முதலீடு செய்தனர். அவர்கள் ஊதியப் பங்குகள் பெறவேண்டும் என்ற ஆசையினால் தூண்டப் பெற்று முதலீடு செய்யவில்லை; இருப்புப்பாதைகள் போடுவதால் வியாபாரம் செழித்தோங்கியும், நிலத்தின் மதிப்பு உயர்ந்தும் இலாபம் பெருகும் என்ற நம்பிக்கையின் காரணமாகவே அவர்கள் முதலீடு செய்தனர்.

தனியார் முதல் வேண்டுமளவுக்குக் கிடைக்காதபொழுது, நகரமும், மாநிலமும், கவுன்டியும், மத்திய அரசும் முதல் வழங்கின. சில இருப்புப்பாதைகளைப் போடுவதற்கு மெஸ்ஸாசுசெட்ஸ் கடன் தந்தது. மெஸ்ஸாசுசெட்சைத் தவிர நியூ இங்கிலாந்தில் வேறு எந்தப் பகுதியிலும் அரசாங்கக் கடனுதவி கிட்டவில்லை. மற்றப் பகுதிகளில் வேறு நிலைமை இருந்தது. பென்சில்வேனியா, மிச்சிகன், தென் கரோலினா, ஜார்ஜியா ஆகிய மாநில அரசுகள்

தத்தம் பகுதிகளில் முதன்முதலில் இருப்புப்பாதைகளை அமைக்க நிதி உதவியளித்தன. ஜார்ஜியா மாநில அரசு, அட்லான்டாவி லிருந்து சட்டனூகா முடிய இருப்புப்பாதையைக் கட்டி, அதனை 1870 வரையில் நல்ல முறையில் பயன்படுத்தி வந்தது. நியூயார்க் மாநில அரசு 60,00,000 டாலர்களை நியூயார்க், ஈரி முதலிய பகுதிகளுக்குக் கடனாக அளித்து, மாநிலத்தின் தென் பகுதியில் இருப்புப்பாதையைக் கட்டப் பெரிதும் உதவிபுரிந்தது. பால்டிமோர் - ஓகியோ இருப்புப் பாதைக்குரிய பங்குகளில் 30,00,000 டாலர்கள் மதிப்புள்ள வற்றை மேரிலாந்து விலைக்கு வாங்கிற்று. அநேக இருப்புப் பாதைகளுக்குரிய பங்குகளில் ஐந்தில் மூன்று பாகத்தை வர்ஜீனியா பெற்றது. 1860ஆம் ஆண்டிற்குள்ளாக வர்ஜீனியா 2,10,00,000 டாலர்களை இருப்புப்பாதைகளுக் கென ஒதுக்கிவைத்தது. மிச்சிகன், இல்லினாய், இந்தியானா ஆகிய மாநிலங்கள் இருப்புப்பாதைகளை அமைக்கும் முதல் முயற்சி யில் ஈடுபட்டன. 1840ஆம் ஆண்டிற்கு முன்னர் உள்ள பதினைந்தாண்டுகளில் இருப்புப்பாதைகள் அமைப்பதற்கென 9,00,00,000 டாலர்களை அமெரிக்க மாநில அரசுகள் கடன்வாங் கின என்று ஓர் ஆராய்ச்சியாளர் கணக்கிட்டுள்ளார். மாநில அரசுகளைவிட கவுன்டிகளும் நகராட்சி மன்றங்களும் இருப்புப் பாதைகளை அமைப்பதில் நிறைய செலவழித்துள்ளன என்று வேறு சில ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். அவர்க ளுடைய கணக்கின்படி, கவுன்டிகளும் நகராட்சி மன்றங்களும் மொத்த செலவில் ஐந்தில் ஒரு பங்கினை ஏற்றுக்கொண்டன. இவ்வாறு செலவழிக்கப்பெற்ற தொகையினால் எவ்வளவு மைல்கள் நீளத்திற்கு இருப்புப்பாதைகள் போடமுடியும் என்பதை உணர இருப்புப்பாதைகள் போடுவதற்காகும் செலவினைக் கணக் கிடவேண்டும். 1850 முதல் 1859 வரை ஒரு மைல் நீளத்திற்கு இருப்புப்பாதை போடுவதற்கு 25,000 முதல் 50,000 டாலர்கள் வரை செலவழிந்தது.

மத்திய அரசாங்கத்தின் நேரடியான உதவித் தொகையைப் பெற்று இருப்புப்பாதையை அமைக்க அரசியல் சட்டம் இடம் தர வில்லை. எனினும், 1848 வரையில், தண்டவாளம் போடுவதற்கு வேண்டிய இரும்புமீது விதிக்கப்பட்டிருந்த வரியை மத்திய அரசு குறைத்தது; நில அளவைக்கு வேண்டிய உதவியையும் மத்திய ஆட்சி வழங்கியது. மேலும், இருப்புப்பாதைப் போக்குவரத்தின் தேவை பெருகியதாலும், மேற்கத்திய மாநிலங்களால் பணம் செலவழிக்க இயலவில்லை என்ற காரணத்தாலும், மத்திய அரசு இத் துறையில் நேரடியாக ஈடுபட்டுப் பணம் செலவழிக்க

முன்வந்தது. இல்லினாய் சென்ட்ரல் (Illinois Central) இருப்புப் பாதை ஏற்பட்டுள்ள பகுதியில், 25,00,000 ஏக்கர்கள் கொண்ட பொதுநிலத்தை 1850-ல் மத்திய அரசு நன்கொடையாக வழங்கியது. இரயில்வே கம்பெனியின் மொத்த வருமானத்தில் ஏழு சதவீதத்தை மாநிலத்திற்கு ஒதுக்கவேண்டும் என்ற நிபந்தனையின்மீது, மத்திய ஆட்சி உதவிய நன்கொடையை மாநில அரசு, இரயில்வே கம்பெனிகளுக்கு வழங்கியது. இதேமுறையில் மிசிசிப்பி, மிசௌரி, மிச்சிகன், விஸ்கான்சின், மின்னசோட்டா, அயோவா, அர்க்கன்சாஸ், அலபாமா, ஃபிளோரிடா, லூயிசியானா ஆகிய மாநிலங்களுக்கு, 1861ஆம் ஆண்டிற்குள்ளாக, மத்திய அரசு ஏறத்தாழ 3,10,00,000 டாலர்களை வழங்கியது.

பொது நிலங்களை விற்று, ரொக்கமாகக் கையில் வைத்துக் கொள்வது இரயில்வே கம்பெனிகளுக்கு ஏற்றதாகும். தண்டவாளங்கள் செல்லும் பகுதிகளில் மக்களைக் குடியேறச் செய்வதும் நல்லமுறையாகும். எனவே, மத்திய அரசாங்கம் வழங்கும் மானியங்களை, குடியேற்றத்தைப் பெருக்கவும் தண்டவாளங்களைக் கட்டவும் கம்பெனிகள் பயன்படுத்தின. எடுத்துக்காட்டாக, மக்களைக் குடியேற்றுகின்ற முயற்சியில் இல்லினாய் சென்ட்ரல் தீவிரமாக ஈடுபட்டது. 1865 முதல் 1869 வரையில் இரயில்வேக்களின்மீது அரசாங்கக் கட்டுப்பாடும் ஆதிக்கமும் ஏற்படவில்லை என்றபோதிலும், ஆரம்ப ஆண்டுகளில் மாநில அரசுகள் இரயில்வேக்களுக்கு வேண்டிய உதவியைச் செய்ய முன்வந்தன. இரயில்வே கட்டணங்களைக் கட்டுப்படுத்தவும், ஊதியப் பங்குகளைக் கட்டுப்படுத்தவும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் தண்டவாளத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளும் உரிமையைப் பயன்படுத்திக்கொள்ளவும் சில மாநில அரசுகள் முனைந்தன. ஆனால், இத்தகைய முயற்சிகளினால் ஒன்றும் புதிதாக ஏற்படவில்லை.

தெரு இரயில்வேக்கள்

நகரங்களில் மக்கள் எண்ணிக்கைப் பெருகத் தொடங்கவே, நகரப் பிரயாணிகளின் பிரச்சினை எழுந்தது. இரயில்வேக்களின் துவக்க காலத்திலிருந்து, நகரத் தெருக்களின்மீதே தண்டவாளங்கள் சிலவற்றை அமைக்கவேண்டியிருந்தது. ஆனால், அவை தெரு இரயில்வேக்கள் ஆக மாட்டா. அத்தகைய சாலைகள் உபயோகத்திற்கு வருவதற்கு முன், சக்கரங்களுடைய வண்டிகளின் போக்குவரத்துக்குத் தடையாக அமையாத வகையில் அழுந்திய தண்டவாளம் போடும் முறை வளரவேண்டும்.

நகர்வாழ் மக்களின் போக்குவரத்துக்கேற்ற முதல் வண்டி ஆம்னிபஸ் (Omnibus) ஆகும். வேறு முறையில் திருத்தமாகச் செய்யப்பட்ட ஸ்டேஜ்கோச்சுதான் ஆம்னிபஸ் ஆகும். நியூ யார்க் நகரத்தில், வால் தெருவிற்கும் (Wall Street) கிரீன்விச் (Greenwich) கிராமத்திற்கும் இடையில், 1828ஆம் ஆண்டிற்கு முன்னர் ஓர் ஆம்னிபஸ் ஓடிக்கொண்டிருந்தது. ஃபிலடெல்பியா வில் முதல் ஆம்னிபஸ் 1831-ல் தோன்றியது. 1850-1859 ஆண்டுகளில் அழுந்திய தண்டவாளம் (sunken rail) உபயோகத் திற்கு வந்தது. அதற்குப் பின்னர் மின்சார டிராம்வண்டிகள் தோன்றும் வரையில் பல்வேறு வகையான குதிரைவண்டிகளும் இரண்டு மாடிகள் உள்ள சில குதிரைவண்டிகளும் நகரப் போக்கு வரத்தின் தேவைகளைக் கூடுமானவரையில் பூர்த்திசெய்ய முனைந்தன.

மேற்கு மிசிசிப்பி பிரதேசத்தின் குறுக்கே போக்குவரத்து

மிசிசிப்பிக்குக் கிழக்கே உள்ள பிரதேசத்தில்மட்டுமே 1860-க்கு முன்னர் தண்டவாளம் போடப்பட்டது என்பதை இருப்புப்பாதை வரைபடத்திலிருந்து* தெரிந்துகொள்ளலாம். செயின்ட் லூயியிலிருந்து மேற்கே செல்லும் ஒருசில இருப்புப் பாதைகளையும், கலிஃபோர்னியாவில் நதிக்கரையோரமாக உள்ள சில தண்டவாளங்களையும், சில சிறு அளவுள்ள இருப்புப்பாதை களையும் தவிர மேற்கு மிசிசிப்பி பிரதேசத்தின் குறுக்கே உள்ள போக்குவரத்து நதிகளையும் தூசிபடிந்த சாலைகளையும்மட்டுமே நம்பி இருந்தது. வசதிகள் போதுமான அளவுக்கு இல்லாதிருந்த போதிலும், இப் பெரும் பிரதேசத்தில் சிறந்த முறையில் வர்த்தகம் தழைத்திருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டு களிலிருந்து, தோல் வியாபாரிகள் செயின்ட் லூயியிலிருந்து துவங்கி, மேல் மிசிசிப்பி, மிசௌரி பள்ளத்தாக்குகளிலும் தொழி ல்மைத்து, இடம் விட்டு இடம் கடத்திச் செல்வதற்கெனத் தோல் வகைகளை ஆற்றிலே மிதக்கவிட்டு, நாட்டின் தோல் வியாபாரத் தின் மையமாக செயின்ட் லூயியை மாற்றியமைத்தனர். மேலும், இத் தோல் வியாபாரிகள் கண்டுபிடித்த தடங்களையே பின்னர்க் குடியேறியவர்கள் பயன்படுத்தினர். ஓரிகன், கலிஃபோர் னியா, சாந்தா ஃபீ தடங்களைப் பின்பற்றியே குடியேறியவர்கள் முன்னேறிச் சென்றனர். பிற்காலத்தில் கண்டத்தின் குறுக்கே முதல் இருப்புப்பாதைகளும் அத் தடங்களையே பின்பற்றின.

* '1860-ல் இருப்புப்பாதைகள்' என்ற தலைப்பில் உள்ள வரைபடத்தைக் காண்க.

1840-1845 வரையுள்ள ஆண்டுகளில் ஓரிகனோ, கலிபோர்னியாவையோ நோக்கி முதன்முதலில் மூடிய வண்டிகள் செல்வதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே 'சாந்தா ஃபீ' தடத்தின்வழியே வாணிபம் சிறந்த முறையில் தழைத்து வளர்ந்தது. அச்சிசன் (Atchison), டோபிகா (Topeka) வழியாக சாந்தா ஃபீ செல்லும் பாதையில், 1821-ல் வர்த்தகக் குழு ஒன்று மிசௌரியிலிருந்து சென்று சாந்தா ஃபீயை அடைந்தது. அவ் வர்த்தகக் குழுவின் பண்டங்கள் உடனடியாக விற்பனையாவதற்குரிய சந்தையும் சாந்தா ஃபீயில் ஏற்பட்டது. வீரா கிரஸ்ஸிலிருந்து (Vera Cruz) மெக்சிகோ வழியாகச் சரக்குகளை ஏற்றிச் செல்வதைவிட, மிசௌரி வழியாக இண்டிபென்டன்சுக்குப் பண்டங்களை ஏற்றிச் சென்று, அங்கிருந்து சரக்கேற்றிச் செல்லும் வண்டியின்மூலமாக சாந்தா ஃபீக்கு அப் பண்டங்களைக் கடத்திச் செல்வதில் அதிக செலவு ஏற்படாது என்று அனைவரும் உணர்ந்தனர். அமெரிக்க வர்த்தகர்கள் ஸ்பானிஷ் தென்மேற்குப் பிரதேசத்திலும் நுழைந்தனர். பின்னர் அவ் வர்த்தகர்கள் துணிவகைகளையும், இரும்புத்தொழிற் கருவிகளையும் மற்றப் பண்டங்களையும் சாந்தா ஃபீக்கு ஏற்றிச் சென்று விற்றனர். அப் பண்டங்களுக்கு மாற்றாகத் தோல்வகைகளையும், கோவேறு கழுதைகளையும், பொன் கட்டிகளையும், வெள்ளிக்கட்டிகளையும் பெற்றனர். தற்காலத்திய வாணிபத் தரத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், சாந்தா ஃபீயில் நடைபெற்ற வாணிபம் அவ்வளவு பெரியதன்று. 1848ஆம் ஆண்டில்மட்டுமே, தென்பிரதேசத்திற்கு அனுப்பப்பெற்ற கிழக்கத்திய பண்டங்களின் மதிப்பு 4,50,000 டாலர்களாக விருந்தபொழுது, சாந்தா ஃபீயின் பண்டங்களின் மதிப்பு 2,50,000 டாலர்களுக்கும் மிகுதியாக இருந்தது. ஆனால், பண்டங்களின் மதிப்பு எவ்வாறு இருந்த போதிலும், வாணிபத்தின் முக்கியத்துவம் உயர்ந்தே இருந்தது. டெக்சாஸ் இணைப்பிற்கு முன்னரே, தென்மேற்குப் பிரதேச வர்த்தகத்தில் நாட்டு மக்களுக்கு ஆர்வம் உண்டாயிற்று. பாக்சன் (Paxson) குறிப்பிட்டுள்ளதுபோல, 'மேற்கத்திய எல்லைப்புறத்தை நோக்கி ஏற்பட்ட முதல் தடம் சாந்தா ஃபீ தடமே.'

கலிஃபோர்னியாவில் 1848-ல் பொன் கண்டுபிடிக்கப்பட்டவுடன், மிசிசிப்பிக்குக் குறுக்கே உருவான போக்குவரத்தின் வரலாற்றில் ஒரு புதிய சிறப்பு ஏற்பட்டது. இண்டிபென்டன்சிலிருந்து சாந்தா ஃபீக்குச் செல்லும் ஸ்டேஜ் போக்குவரவு (stage traffic) 1849-ல் துவங்கியது. அதே ஆண்டில், சால்ட் லேக் நகருக்கு (Salt Lake city) மாதம் ஒருமுறை அஞ்சல் வண்டி சென்றது. ஹார்ன் (Horn) பகுதியைச் சுற்றிலுமோ அல்லது பனமா வழியாகவோ, கிழக்குக் கடற்கரைப் பகுதிக்கும்

கலிஃபோர்னியாவுக்கும் இடையில் 1850 முதல் 1859 வரையுள்ள ஆண்டுகளில் நீராவிக் கப்பல்களும் கிளிப்பர் படகுகளும் (clippers) நிறைய ஓடிக்கொண்டிருந்தன. எனினும், 1858 ஆம் ஆண்டில் தான் மெம்ஃபிஸ் (Memphis), செயின்ட் லூயி ஆகிய பகுதிகளிலிருந்து கலிஃபோர்னியாவுக்கு நிலவழிமூலம் அஞ்சல் போக்குவரத்துக்கான ஒப்பந்தத்தை ஃபெடரல் அரசாங்கம் ஜான் பட்டர்ஃபீல்டுக்கு (John Butterfield) வழங்கியது. அதே ஆண்டின் இலையுதிர் காலத்தில், பிரஸ்டன், எல் பாசோ (El Paso), ஃபோர்ட் யூமா (Fort Yuma) முதலிய பகுதிகள் வழியாக பசிஃபிக் கடற்கரைக்கு ஏறத்தாழ இருபத்தைந்து நாட்களில் செல்லக்கூடிய வகையில், வாரம் இருமுறை பிரயாணிகள் போக்குவரத்துக்கும் அஞ்சல் போக்குவரத்துக்கும் உரிய ஏற்பாட்டினை பட்டர்ஃபீல்டு செய்தார்.

மற்றவர்களும் பட்டர்ஃபீல்டின் முயற்சிகளைப் பாராட்டிப் பின் பற்றினர். ரஸ்ஸல் (Russell), மேஜர்ஸ் (Majors), வாடல் (Waddell) ஆகியோரின் புகழ்வாய்ந்த நிறுவனமும் மற்றப் பாதைகளைச் செப்பனிட்டுப் பிரயாணிகளின் போக்குவரவுக்கும் பண்டங்களைக் கடத்திச் செல்வதற்கும் அவற்றைப் பயன்படுத்திற்று. 1860-1865-ல் சரக்கேற்றிச் செல்லும் தொழில் நன்கு பெருகி வளர்ந்திருந்தது. மேலே குறிப்பிட்ட நிறுவனம், 6,250 வண்டிகளையும், 75,000 எருதுகளையும் சரக்கேற்றிச் செல்லும் வியாபாரத்தில் ஈடுபடுத்திப் புகழ்பெற்றிருந்தது. செயின்ட் ஜோசப், மிசௌரி ஆகிய பகுதிகளிலிருந்து சேக்கரமென்டோ (Sacramento) கலிஃபோர்னியாவிற்குத் தபால்களைக் கொண்டுசெல்வதற்குபோனி மட்டக் குதிரைகளையும், குதிரையில் சவாரிசெய்பவர்களையும் 1860-ல் வில்லியம் ஹெச். ரஸ்ஸல் (William H. Russell) ஏற்பாடு செய்தார். சுமார் பத்து நாட்களில் தபால்களை எடுத்துச் செல்ல ரஸ்ஸல் ஏற்பாடு செய்தார். மிகவும் விரைந்து செல்லக்கூடிய அஞ்சல் போக்குவரத்து அதுவேயாகும். ஆனால், அப்போக்குவரத்தில் ரசல், மேஜர்ஸ், வாடல் ஆகிய மூவருக்கும் பெருத்த நிதி இழப்பே ஏற்பட்டது. திவாலான அந்த நிறுவனத்தை 1862-ல் பென் ஹொல்லாடே (Ben Holladay) விலைக்கு வாங்கினார். பின்னர் அவர் அதனை வெல்ஸ், ஃபார்கோ அண்டு கம்பெனியிடம் (Wells, Fargo and Company) விற்றார். கண்டத்தின் குறுக்கே முதல் இருப்புப்பாதை போடப்படும்வரையில் இப் போக்குவரத்தின் பெரும்பகுதியை அக் கம்பெனியே ஏற்று நடத்தி வந்தது. தந்திப் போக்குவரவு முதன்முதலில், 1861-ல் தோன்றும் வரையில், போனிமட்டக் குதிரையின் விரைவுப் போக்குவரவே நிலவியது.

விரைவுப் போக்குவரத்தின் வளர்ச்சி

மேற்கத்திய போக்குவரவில் வெல்ஸ், ஃபார்கோ அண்டு கம்பெனியின் நுழைவு போக்குவரவின் ஆரம்பகால வளர்ச்சியைக் குறிக்கிறது. போஸ்டன்—உர்செஸ்டர் போக்குவரவில் கண்டக்டராகவும், பயணச்சீட்டின் ஏஜென்டாகவும் பணியாற்றிய வில்லியம் ஃபிரான்சிஸ் ஹார்ன்டன் என்பவர் (William Francis Harnden) விரைவுப் போக்குவரத்தையே துவக்கியவராவார். பொன்னையும் வெள்ளியையும் மிகவும் பத்திரமாக ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குக் கடத்திச் செல்லும் முறைகளை நன்கு தெரிந்து வைத்திருந்த அவர், சிறு மூட்டைகளையும் மதிப்பு மிகுந்த பத்திரங்களையும் விரைவாகவும் பாதுகாப்புடனும் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லும் போக்குவரவினை அமைத்து, சிறந்த வியாபாரத்தினைத் துவக்கலாம் என 1838-ல் கருதினார். நியூயார்க்கிற்கும் போஸ்டனுக்குமிடையில் கம்பளப் பையினை எடுத்துச் செல்லும் விரைவுப் போக்குவரவிற்கு ஹார்ன்டன் காரணமானார். இப் போக்குவரவுத் தொழில் வளரத் தொடங்கவே, ஹார்ன்டன் ஒரு கூட்டாளியைச் சேர்த்துக் கொண்டார். ஹார்ன்டன் அண்டு கம்பெனி எக்ஸ்பிரஸ் நிறுவனம் 1840-ல் தோன்றியது. அக் கம்பெனி ஏஜென்டுகளை வேலைக் கமர்த்தியது. ஃபிலடெல்பியா, அல்பனி முதலிய பகுதிகளையும் இணைத்து 1841-ல் அக் கம்பெனியின் தொழில் வளர்ந்தது. குடியேற்றக்காரர்களின் இடப்பெயர்ச்சியைக் கண்காணிக்க ஐரோப்பிய ஏஜென்சிகள் தோன்றின.

ஹார்ன்டன் அடைந்த வெற்றியைக் கண்ட ஆல்வின் ஆடம்சும் (Alvin Adams) அத்துறையில் ஈடுபட்டார். நியூயார்க்கிற்கும் போஸ்டனுக்குமிடையில் ஒரு போட்டி விரைவுப் போக்குவரத்துத் தொழில் உருவாகியது. இஃப்ரேய்ம் ஃபார்ன்ஸ்வர்த்தை (Ephraim Farnsworth) கூட்டாளியாகச் சேர்த்துக்கொண்டு ஆடம்ஸ் அண்டு கம்பெனி துவக்கப்பெற்றது. 1848-ல் அக் கம்பெனியின் தொழில் மேற்கே செயின்ட் லூயிஸ், நியூ ஆர்லியன்ஸ் வரையில் பரவியது. 1854-ல், ஹார்ன்டன் அண்டு கம்பெனியும் புதிய ஆடம்ஸ் எக்ஸ்பிரஸ் கம்பெனியும் ஒன்று சேர்ந்தன. இந்த இணைப்பிற்குப் பின்னர், ஆடம்ஸ் எக்ஸ்பிரஸ் கம்பெனியே வட கிழக்குப் பிரதேசத்தில் தலைசிறந்து விளங்கியது. இதற்கிடையில், அல்பேனியில் ஹார்ன்டனுடைய ஏஜென்டாகப் பணியாற்றிய ஹென்றி வெல்ஸ் ஹார்ன்டனை விட்டு விலகி வெல்ஸ், ஃபார்கோ அண்டு கம்பெனியை (Wells, Fargo and Company) ஸ்தாபித்தார். 1845-ல் அக் கம்பெனி கிழக்குப் பகுதியை சிக்காகோ, சின்சின்னாட்டி, செயின்ட் லூயி முதலிய

பகுதிகளுடன் இணைத்தது. அதே ஆண்டில், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வெல்ஸ், ஃபார்கோ அண்டு கம்பெனியை விலைக்கு வாங்கியது. பின்னர் அக் கம்பெனி பசிஃபிக் கடற்கரைப் பகுதியை நோக்கி நகர்ந்தது. இப் பகுதியில்தான் வெல்ஸ், ஃபார்கோ அண்டு கம்பெனி நாற்பத்தொன்பதின்மரின் அஞ்சல் போக்கு வரவையும், பொன் போக்குவரவையும் ஏற்று நடத்தியது. எனவே, இப் பகுதியில் துவக்கிப் பத்தாண்டுகளில் விரைவுப் போக்குவரவு வெற்றி பெற்றது. இது மிகவும் வியப்பைத் தரும் செய்தியாகும். சாமுவேல் பவல்ஸ் (Samuel Bowles) குறிப்பிட்டுள்ளதுபோல, 'இப் பகுதியிலுள்ள சுரங்க நகரில் (mining town) முதன்முதல் ஒரு சிற்றுண்டிச் சாலை, ஒரு பில்லியார்டு சலூன் (Billiard Saloon) ஒரு வெல்ஸ் அண்டு ஃபார்கோ அலுவலகம் ஆகிய மூன்று ஸ்தாபனங்கள் ஏற்பட்டன.[8]

தந்திமூலம் செய்திப் போக்குவரத்து

கலைஞராகப் பயிற்சி பெற்றவரும் நியூயார்க் பல்கலைக் கழகத்தில் வரைவுப்படக் கலைகளில் தேர்ந்த பேராசிரியருமாகிய சாமுவேல் எஃப். பீ. மோர்ஸ் (Samuel F. B. Morse) என்பவர் (1791 - 1872), 1830 - 1835-ல் மின்காந்தத் தந்தி முறையை (electromagnetic telegraph) உருவாக்க முனைந்தார். ஆல்ஃப்ரெட் வெயில் (Alfred Vail) அவர்களுடைய உதவியுடன் 1837-ல் நடைமுறைக்கு ஏற்ற மின்காந்த தந்திக் கருவி ஒன்றைச் செய்து முடித்தார். எதிர்காலத்தில் பெரும் இலாபத்தைத் தரக்கூடிய முறையில் அவருடைய கண்டுபிடிப்பு சிறந்திருந்தபோதிலும், தனியார் துறையினருக்கு அதில் ஈடுபாடு ஏற்படவில்லை. அரசாங்க உதவியைப் பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டதால், மோர்ஸ் அவர்களும், அவர்களுடைய நண்பர்களும் ஆறு ஆண்டுகளுக்கு காங்கிரசை முற்றுகையிட்டனர். இறுதியில் 1843-ல் பால்டிமோரிலிருந்து வாஷிங்டனுக்குச் செல்லும் தந்திக் கம்பியைப் போடுவதற்கென காங்கிரஸ் 30,000 டாலர்களை ஒதுக்கியது. 1844ஆம் ஆண்டு, மே மாதம் அத் தந்திக் கம்பி போடப்பட்டது. அவ்வாண்டின் வசந்தகாலத்தில் பால்டிமோரில் கூடிய விக் (Whig) மாநாட்டின் செய்திகளையும், ஜனநாயக மாநாட்டின் செய்திகளையும் தலைநகருக்கு அனுப்ப அத் தந்திப் போக்குவரத்து மிகவும் பயன்பட்டது. தனியார் துறையில் கம்பெனி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. ஃபிலடெல்ஃபியாவிலிருந்து நீவார்க்கிற்குச் (Newark) செல்லும் தந்திக் கம்பி ஒன்றுக்கு வேண்டிய நிதியைத் தொலைகளுக்கிடையே

[8] சாமுவேல் பவல்ஸ். (Samuel Bowles). 'Our New West', p. 347.

திரட்டினர். பின்னர் 1546-ல் அத் தந்திக் கம்பி உபயோகத்திற்கு வந்தது. அத் தந்திக் கம்பியை ஜெர்சி நகர்வரையில் இழுத்துவிட்டனர். அந் நகரிலிருந்து செய்திக்கோப் படகுகளின் மூலம் நியூயார்க்கிற்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

தந்திப் போக்குவரத்து நடைமுறைக்கு ஏற்றது என்பது தெளிவாயிற்று. எனவே, அது விரைவில் நாடெங்கும் பரவியது. முதல் தந்திக் கம்பியை அமைப்பதில் மோர்சுடன் சேர்ந்து உழைத்த எஸ்ரா கார்னெல் (Ezra Cornell) தகுக்குமேல் தந்திக் கம்பியை அமைத்து, நடைமுறையில் வெற்றி கண்டார். இத்துறையில் எஸ்ரா கார்னெல் தகுந்த வெற்றி பெற்றார். இருப்புப்பாதை அமைப்பதைவிடத் தந்திப் போக்குவரத்தை அமைப்பதில் மைல் ஒன்றுக்கு ஆகும் செலவு மிகவும் குறைவாகும்; தீர்வுகாண வேண்டிய பிரச்சினைகளும் மிகவும் குறைவாகும். 1846-1847-ல் போஸ்டன், அல்பேனி, பஃப்பலோ ஆகியவற்றுடன் நியூயார்க் இணைக்கப்பெற்றது. அடுத்த ஆண்டு கிவீவ்லாந்து, டோலிடோ (Toledo), டெட்ராய்ட், சிக்காகோ ஆகியவற்றுடன் நியூயார்க் இணைக்கப்பெற்றது. சமவெளியிலும் மலைப்பிரதேசத்திலும் வீசும் புயல் காற்றினாலும், வெறுப்பு மிகுந்த இந்தியர்களாலும் தொல்லைகள் நிறைந்த புதிய சூழ்நிலைகள் ஏற்பட்டபோதிலும், அரசாங்க உதவித்தொகைகளைப் பெற்ற வெஸ்டர்ன் யூனியன் (Western Union) 1861-ல் பசிஃபிக் வரையில் தந்திக் கம்பிகளை அமைத்தது. அந்த ஆண்டில் 50,000 மைல்கள் நீளத்திற்குத் தந்திக் கம்பிகள் உபயோகத்தில் இருந்தன.

இருப்புப்பாதைகளுக்கும் புதிய கண்டுபிடிப்பிற்கும் இடையில் ஏற்பட்ட நெருங்கிய தொடர்புகளின் காரணமாக ஓரளவுக்கு தந்திப் போக்குவரவு விரைவாக வளர்ந்தது. இருப்புப்பாதைகள் திறமையுடன் இயங்கத் தந்திப் போக்குவரவு தேவைப்பட்டது. தந்திக் கம்பெனிகள் தந்திக் கம்பிகளைப் போடுவதற்கு இருப்புப் பாதைகளைப் பயன்படுத்திக்கொண்டன. தந்தி நடைமுறைக்கு மிகவும் பயன்பட்டதால், கடலடிச் செய்திப் போக்குவரத்திற்கும் தந்தி முறையைப் பயன்படுத்தலாம் என்று அனைவரும் உணர்ந்தனர். சைரஸ் ஃபீல்டு என்பவர் (Cyrus Field), 1858-ல் அட்லான்டிக் சமுத்திரத்தின் குறுக்கே முதல் கடலடித் தந்தி முறையைக் கையாண்டார். ஆனால், அது வெற்றியடைய வில்லை. 1866-ல் கடலடித் தந்தியை மீண்டும் செப்பனிட்டு அமைத்த பின்னரே வெற்றியடைந்தது.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

MacGill, C. E. (மாக்கில், சி. ஈ.),et al., 'History of Transportation in the United States Before 1860', chaps. 2—II, 17.

Taylor, G. R. (டெய்லர், ஜி. ஆர்.), 'The Transportation Revolution', chaps. 2—5, 7, 13).

Harlow, A. F. (ஹார்லோ, ஏ. எஃப்.), Old Towpaths', chaps. 6 ff.

Gates, P. W. (கேட்ஸ், பி. டபிள்யு.), 'The Illinois Central Railroad and Its Colonization Work', chaps. 2, 5, 6.

Callender, G. S. (காலண்டர், ஜி. எஸ்.), 'Selections from the Economic History of the United States', chaps. 7, 8.

Flugel, F. (ஃப்ளுகல், எஃப்.), and Faulkner, H. U. (ஃபாக்னர், ஹெச். யூ.), 'Readings in the Economic and Social History of the United States', chap. 10.

15. மக்கள்தொகையும் தொழிலாளரும்

மக்கள்தொகைப் பெருக்கமும் பல்வேறு பகுதிகளில் பிரிந்துகிடத்தலும்

தமது நாட்டின் வரலாற்றின் முதல் எழுபது ஆண்டுகளுக்குரிய மக்கள் தொகையின் புள்ளிவிவரக் கணக்கை நோக்கின் மூன்று சிறப்பான போக்குகளைக் காணலாம். சூழ்நிலைகளுக்கு ஏற்ற போக்குகளே அவையாகும். அவையாவன : (1) மக்கள் எண்ணிக்கை விரைந்து பெருகுதல், (2) மேல் திசையில் மக்கள் குடியேறுதல், (3) நகர்ப்புறங்களில் மக்கள் எண்ணிக்கையின் செறிவு. நாட்டின் மொத்த ஜனத்தொகை 1790-ல் நான்கு மில்லியன்களுக்கும் குறைவாகும். 1860 ஆம் ஆண்டின் சென்சஸ் அறிக்கைப்படி நாட்டின் ஜனத்தொகை 3 14,48,321 ஆகும்.

1860 முடிய அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனத்தொகை

ஆண்டு	வெள்ளையர்கள்	கறுப்பர்கள்	மொத்தம்
1790	31,72,006	7,57,208	39,29,214
1800	43,06,446	10,02,037	53,08,483
1810	58,62,073	13,77,808	72,39,881
1820	78,66,797	17,71,656	96,38,453
1830	1,05,37,378	23,28,642	1,28,66,020
1840	1,41,95,805	28,73,648	1,70,69,453
1850	1,95,53,068	36,38,808	2,31,91,876
1860	2,69,22,537	44,41,830	3,14,43,321*

*இந்தியர்கள், ஜப்பானியர்கள், சீனர்கள், ஏஜியோர் எண்ணிக்கை 78,954 ஆகும்; இவ்வெண்ணிக்கையும் இதில் சேர்ந்துள்ளது.

—யு. எஸ். சென்சஸ், 1910, I, 127.

1820ஆம் ஆண்டிற்குப் பின்னர்வரையில் புதிய நிலங்கள் நிறையக் கிடைத்தமையால்தான் மக்கள்தொகையும் பெருகியது; புதிய நிலங்கள் கிடைத்தமையால்தான் பெருங் குடும்பங்களைப் பொருளாதார ரீதியில் கட்டிக்காப்பதில் தொல்லையோ, நஷ்டமோ ஏற்படவில்லை. பீட்டர் காம் (Peter Kalm) எனும் ஸ்வீடன் தேசத்துப் பிரயாணி 1750-ல் அமெரிக்காவில் பயணம் செய்துவரும்பொழுது பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: 'ஐரோப்பாவைவிட இங்கு மக்கள்தொகை கடிதில் பெருகி வருவதற்குரிய காரணங்களைக் கண்டறிவது கடினமன்று. இம் மாநிலங்களிலுள்ள வயது வந்த ஆடவர்கள் வறுமையைப் பற்றிய அச்சமின்றித் திருமணம் செய்துகொள்ளலாம். சாகுபடி செய்யப்படாத, ஆனால், சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள் இப் பகுதிகளில் உள்ளன. எனவே, எவ்விதத் தொல்லையுமின்றித்திருமணம் செய்துகொண்ட ஆடவனெருவன் தன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் வசதியான முறையில் காப்பாற்றுவதற்குப் போதுமான அளவுக்கு வேண்டிய நிலத்தைப் பெறமுடியும். வரிகளும் குறைவாகவிருப்பதால், அவற்றைப் பொறுத்தவரையில் அவன் கவலைப்படத் தேவையில்லை.'[1]

காலனி காலத்தின் பிற்பகுதியில், பெருங் குடும்பங்கள் அமைவதற்கு ஏற்ற சூழ்நிலைகள் நிலவின என்று காம் (Kalm) குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கா விவசாய நாடாகத் திகழும் வரையில் அச் சூழ்நிலைகள் தொடர்ந்து நிலவின. மக்கள் தொகை பெருகியதோடு மட்டும் அமையாது, 1820 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகளில் 50,00,000 மக்கள் அமெரிக்காவில் புதிதாகக் குடியேறினர். சாதாரணமாக இறப்பு களைவிடப் பிறப்புகள் அதிகமாக இருந்த காரணத்தினாலும், குடியேற்றத்தினாலும் அமெரிக்காவில் ஜனத்தொகை விரைந்து பெருகியது. மேலும், தொழிற்புரட்சியின் விளைவுகளும் வர்த்தக வளர்ச்சியும் அமெரிக்காவில் புதிய செல்வமும், வியாபாரத்திலும் தொழிலிலும் புதிய வேலைவாய்ப்புகளும் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தன. வளர்ந்துவரும் ஜனத்தொகைக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகளை அவை வழங்கின. ஒவ்வொரு பத்தாண்டுக் காலத்திலும் ஜனத்தொகை சராசரி 34 சதவீதத்தில் பெருகிவந்தது. இருபதாண்டுகள் காலத்திற்கு ஒருமுறை ஜனத்தொகை இரு மடங்காகப் பெருகியது.

[1] ஏ. பி. பீனன் (ed.). [A. B. Benson (ed.)]. 'Peter Kalm's Travels in North America' (2 vols., 1937), p. 211.

ஜனத்தொகையின் பெருக்கத்தைவிட மக்கள் பல்வேறு பகுதிகளில் பிரிந்து வாழ்ந்தமையே மிகவும் முக்கியமாகும். பதின்மூன்று காலனிகளின் அட்லான்டிக் சரிவில் 1790-ல் 94 சதவீதத்திற்குமேல் மக்கள் வாழ்ந்தனர். அலெகனிஸ் மலைத்தொடர்ப் பகுதிக்கு மேற்கே கால் மில்லியனுக்கும் குறைவான மக்களே வாழ்ந்தனர், 1820-ல் இந்த வீதாச்சாரம் குறிப்பிட்ட அளவுக்கு மாறிவிட்டது. அந்த ஆண்டின் சென்சஸ் விளக்கத்தின்படி, சுமார் 73 சதவீத மக்கள் அட்லான்டிக் சரிவில் வாழ்ந்துவந்தனர்; 27 சதவீதத்தினர் அலெகனிஸ் மலைத்தொடருக்கு மேற்கேயுள்ள பகுதியில் வாழ்ந்துவந்தனர். தென் மாநிலங்களில் ஜனநெருக்கடி மிகுந்திருந்தது. ஒரு மாநிலத்தில் உள்ள ஜனத்தொகை அளவுக்கு நியூயார்க்கில் மக்கள் எண்ணிக்கை இருந்தது. நியூ இங்கிலாந்தில் உள்ள மக்களைவிடக் கூடுதலான எண்ணிக்கையுள்ள மக்கள் மலைத்தொடருக்கு அப்பாலுள்ள பகுதிகளில் வசித்துவந்தனர். 1810 முதல் 1820 முடிய உள்ள பத்தாண்டுகளில் நியூயார்க்கின் ஜனத்தொகையில் 4,13,000 பேர்கள் கூடுதலாயினர்; ஓகியோவின் ஜனத்தொகையில் 3,51,000 பேர்கள் அதிகமாயினர். புதிய மேற்கத்திய மாநிலங்களில் ஜனத்தொகைப் பெருக்கத்தின் விகிதம் உயர்ந்திருந்தது. கிழக்கத்திய மாநிலமாகிய டிலாவேர் பகுதியில் ஜனத்தொகை நிலையாக இருந்தது. 1790 முதல் 1820 முடிய உள்ள முப்பது ஆண்டுகளில், கடற்கரை மாநிலங்கள் 2½ மில்லியன் பேர்களை மேற்குப் பிரதேச ஜனத்தொகைக்கு வழங்கியுள்ளது.

அலெகனிசுக்கு மேற்கே, மொத்த ஜனத்தொகையில் பாதிப் பேர்கள் (45 சதவீதம்) வசித்து வந்தனர் என 1850ஆம் ஆண்டின் சென்சஸ் குறிப்பிடுகிறது. 1820 முதல் 1850 முடிய உள்ள முப்பது ஆண்டுகளில், அப்பலாச்சியன் மலைத்தொடருக்கு மேற்கே உள்ள பிரதேசத்தின் ஜனத்தொகை இரு மடங்காகப் பெருகி, அதற்கு மேலும் ஐந்து மில்லியன் பேர்கள் பெருகினர். ஐரோப்பாவிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வந்தபோதிலும், கடற்கரையோர மாநிலங்களின் ஜனத்தொகை இரண்டு மடங்காகப் பெருகுவதற்கு இரண்டு மில்லியன்கள் குறைவாக இருந்தது. இத்தகவல்களைப் பேராசிரியர் சானிங் (Professor Channing) குறிப்பிட்டுள்ளார்.[2] பேராசிரியரின் கருத்துப்படி, முப்பது ஆண்டுகளில் மக்களின் இயற்கை வழி உற்பத்தியின் காரணமாக, ஜனத்தொகை இரட்டிப்பாகப் பெருகவேண்டும் என எடுகோள் ஒன்றினை மேற்கொண்டால், இந்த முப்பது ஆண்டுகளில் மேற்குப் பிர

[2] Edward Channing(எட்வர்டு சானிங்), 'History of the United States', V, 49.

தேச ஜனத்தொகையில் நான்கு மில்லியன் பேர்கள் அதிகமாவ தற்கு கிழக்குப் பிரதேசம் காரணமாகவிருந்தது என்க் கருத இட முண்டு.[3]

மிகப்பெரும் வீதாச்சாரத்தில் தென்னாட்டு மக்கள் மேற்குப் பிர தேசத்தில் குடியேறினர். தென் கரோலினாவில் வசிப்பவர்களில் ஐந்தில் இரண்டு மடங்கினரும், வர்ஜீனியாவிலிருந்தும் வடகரோ லினாவிலிருந்தும் மூன்றில் ஒரு பங்கினரும், ஜார்ஜியாவிலிருந்து நான்கில் ஒரு பங்கினரும் மலைத்தொடர்களுக்கு மேற்கே சென்று குடியேறினர். பழைய தென்மேற்குப் பிரதேசத்தில் முழுதும் குடி யேறியவர்கள் இவர்களேயாவர், பழைய வடமேற்குப் பிரதேசத் தில் குடியேறியவர்களில் முக்கியமானவர்களும் இவர்களேயாவர். நியூ இங்கிலாந்துவாசிகள் சாரைசாரையாக மேற்குத் திக்கு நோக்கித் தொடர்ந்து சென்றனர். சில வேளைகளில், மேற்கே முன் னேறிச் செல்லும்பொழுது, வெர்மான்டிலோ அல்லது மேற்கு நியூ யார்க்கிலோ ஒரு தலைமுறைக்குத் தங்கிச் சென்றனர். எனினும், அவர்கள் புதிய நிலத்தை இறுதியில் சென்று அடையவே பெரும் பாலும் முனைந்தனர். ஓகியோவிலும் இந்தியானாவிலும், வட திசை யில் வரிசையாக அமைந்துள்ள கவுன்டிகளில் நியூ இங்கிலாந்தின் சாயல் தெளிவாகப் படியும் வகையில் அவர்கள் அப் பகுதிகளில் குடியேறி நிலைத்து நின்றனர். நியூ இங்கிலாந்திலிருந்து சென்ற வர்களைவிட அதிகமான எண்ணிக்கையில் மக்கள் மத்திய மாநிலங்களிலிருந்தும் வடமேற்கே சென்று குடியேறினர்.

மலைகளைக் கடந்து சென்று மேற்குப் பிரதேசத்தில் மக்கள் குடி யேறியதுடன் அமையாது, நியூ இங்கிலாந்தில் மக்கள் விவ சாயத்தை விட்டுவிட்டு நகரங்களை நோக்கிச் சென்றனர். உண் மையில், அமெரிக்க வரலாற்றில் விரைந்து நகர்மயமாகும் (urbanization) காலம் அது. பெருவாரியான மக்கள் மேற்கு நோக்கிச் சென்றமையாலும், நிலங்களைத் துறந்து நகரங்களுக்குச் சென்று குடியேறியமையாலும் கிராமப் புறங்களின் ஜனத்தொகை குறைந்துவிட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதி யில் கடற்கரை மாநிலங்களில் வசிக்கும் மக்களுடைய சமூக, பொருளாதார வாழ்க்கையின் குறுக்கோட்டங்களைப் (Cross-Currents) புரிந்துகொள்ள அவை பெரிதும் பயன்படும். நகரங் களுக்குச் சென்று மக்கள் குடியேறியமைக்குப் பல காரணங்கள் உண்டு. அக் காரணங்கள் அனைத்தும் தொழிற்புரட்சியைச்

[3] 1820 முதல் 1880 முடிய உள்ள ஆண்டுகளில் ஜனத்தொகை 32·5 சதவீதம் அதிகரித்தது. குடியேறிய நிலப்பகுதி 24·4 சதவீதம் அதிகரித்தது. 1880 முதல் 1840 முடிய உள்ள ஆண்டுகளில் அவை முறையே 32·5 சத வீதமாகவும்; 27·6 சதவீதமாகவும் அதிகரித்தன.

சார்ந்தவைகளேயாகும். தொழிற்சாலை அமைப்பின் வளர்ச்சி, உள்நாட்டுப் போக்குவரவின் வளர்ச்சி, பொருளாதாரப் படிமுறைகளின் காரணமாக மக்கள் நிலங்களைத் துறந்து பொறிவழித் தொழிலிலும், வாணிபத்திலும், வியாபாரத்திலும், நிதித்துவத்திலும் ஈடுபட்டமை ஆகிய மாற்றங்களே தொழிற்புரட்சியைக் குறிப்பனவாகும். 1820ஆம் ஆண்டிற்குப் பின்னர், வெளிநாடுகளிலிருந்து புதிதாக வந்து குடியேறியவர்களால் கடற்கரை நகரங்களின் ஜனத்தொகை பெருமளவில் வளர்ந்தது. இவ்வாறு புதிதாகக் குடியேறியவர்கள் விவசாய வாழ்க்கைக்கு ஏற்றவர்கள் அல்லர் எனினும், விவசாயத்துறையிலேயே அவர்கள் ஈடுபட்டனர்; அத்துறையைவிட்டு அவர்கள் அப்பால் செல்லவுமில்லை. கால்வாய்களின்மூலமும் இருப்புப்பாதைகளின்மூலமும் போக்குவரவு வசதிகள் பெருகத் தொடங்கவே, விவசாயப் பண்டங்கள் பல்வேறு பகுதிகளுக்கிடையில் மிகவும் சிறந்த முறையில் விநியோகமாயின; அயல் நாட்டு வர்த்தகமும் வளர்ந்தது; உற்பத்தியான பண்டங்களைச் சேகரிக்கும் இடங்களைச் சுற்றிலும், அவற்றைக் கடத்திச் செல்லும் இடங்களைச் சுற்றிலும் நகரங்கள் உருவாயின.

விவசாயப் பண்டங்களுக்குச் சந்தைகள் ஏற்பட்டதால், மேற்குப் பிரதேசக் குடியேற்றம் விரைவாக வளர்ந்தது. எனவே, மேற்கே முன்னேறிச் செல்லும் பிரயாணப் பாதைகளின் முக்கிய இடங்களிலெல்லாம் ஜனத்தொகை பெருகியது. மேற்கத்திய விவசாயத்தின் போட்டி கடுமையாக இருந்ததால், வளங்குன்றிய பகுதிகளில் வசித்த கிழக்கத்திய விவசாயிகளுக்குத் தங்கள் நிலங்களின் சாகுபடியில் ஆர்வம் குன்றியது. பொறிவழித் தொழிலின் வளர்ச்சியினால் ஊக்குவிக்கப்பெற்று அவர்கள் நகரங்களை நோக்கி முன்னேறினர். 1780-ல், 8,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகையை உடைய நகரங்கள் ஐந்துமட்டுமே இருந்தன. ஃபிலடெல்ஃபியா, நியூயார்க், போஸ்டன், சார்லஸ்டன், பால்டிமோர் ஆகிய நகரங்களே அவை. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 2·7 சதவீதத்தினர் இவ்வைந்து நகரங்களிலும் வசித்தனர். ஃபிலடெல்ஃபியாவில்மட்டுமே 20,000 பேர்களுக்கு மேல் வசித்துவந்தனர். 1840ஆம் ஆண்டின் சென்சஸ் அறிக்கையின்படி, 8,000-க்கு மேற்பட்ட மக்கள்தொகையை உடைய நகரங்கள் 44 இருந்தன. நியூயார்க் நகரம்தான் 3,12,710 பேர்களைக்கொண்ட பெரிய நகரமாகும். 1860-ல் 8000-க்கு மேற்பட்ட ஜனத்தொகையை உடைய 141 நகரங்கள் இருந்தன. இந்த நகரங்களில், மொத்த ஜனத்தொகையில் 16·1 சதவீதம்கொண்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். அதே

ஆண்டில், தற்பொழுது உருவாகி அமைந்துள்ள [4] நியூயார்க் நகரில் 11,75,000 பேர்களும், ஃபிலடெல்ஃபியாவில் 5,66,000 பேர்களும், பால்டிமோரில் 2,12,000 பேர்களும் வசித்து வந்தனர்.

1810ஆம் ஆண்டில் நியூயார்க் நகரம் முன்னணிக்கு வந்தது. ஈரி கால்வாய் கட்டி முடிந்தவுடன், நியூயார்க் தலைசிறந்த அமெரிக்கப் பெருநகராகத் திகழ்ந்தது. மேற்கத்திய பண்டங்களின் பெரும்பகுதியைக் கப்பலேற்றுகின்ற முக்கிய நகராகவும் அது விளங்கியது. பெரும் ஏரிகளின் தானியப் பகுதிகளில் விளையும் பண்டங்களை அடைவதில் நியூ ஆர்லியன்சுடனும், மற்றக் கடற்கரைப் பட்டினங்களுடனும் நியூயார்க் போட்டியிட வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது; எனினும், அருமையான துறைமுகத்தையும், பயனுடைய பூகோள நிலையையும், கால்வாய்களையும், இருப்புப்பாதைகளையும், கடற்கரையோர வாணிபத்திற்குக் காரணமாயுள்ள திறமையும் சுறுசுறுப்புமுடைய தொழிலதிபர்களையும் நியூயார்க் பெற்றிருந்தமையால், அது தலைசிறந்து விளங்கியது. கடற்கரையோரங்களில் வளம் கொழிக்கும் விவசாய பூமிகளையும், தாதுப்பொருள்கள் நிறைந்த நிலப்பகுதிகளையும் ஃபிலடெல்ஃபியாவும் பால்டிமோரும் பெற்றுத் தலைசிறந்த காலனி நகரங்களாகத் திகழ்ந்தன, சுங்கச் சாவடிகளையும், போட்டியிடத்தக்க கால்வாய்களையும் அமைத்து, அந்த நகரங்கள் மேற்குப் பிரதேசத்தைச் சுரண்டிப் பொருள்களின் ஒரு பகுதியைக் கைக்கொள்ள முனைந்தன. எனினும், இருப்புப்பாதைகள் உண்டாகும் வரையில், அந்த நகரங்கள் முழு வெற்றி அடையவில்லை. கனெக்டிகட் நதிக்குக் கிழக்கே வியாபார ஸ்தலமாகத் திகழ்ந்த போஸ்டன் நகரம், சிக்கன வாழ்க்கையையும், திறமையும் சுறுசுறுப்பும் நிறைந்த வாழ்க்கையையும் உடைய மக்களைப் பெற்றிருந்தது. கடல் வாணிபம் சிறந்தோங்கி வளர்ந்திருந்த குடியரசு நாட்களில் போஸ்டன் நகரம் முக்கியப் பங்கு பெற்றிருந்தது. ஆனால், கடல் வாணிபத்தைக் கைவிட்டு மேற்குப் பிரதேச முன்னேற்றத்திலும் அமெரிக்கர்கள் நாட்டம் செலுத்தத் தொடங்கியதால், போஸ்டன் பூகோள ரீதியான முக்கியத்துவத்தைப் பெருமல், செல்வாக்கிழந்தது. நியூயார்க் முன்னணிக்கு வரவே, போஸ்டன் தன்னுடைய வர்த்தக முக்கியத்துவத்தை இழந்தது. எனினும், போஸ்டன் வர்த்தக ஸ்தலமாகத் தொடர்ந்து முன்னேறுவதற்குத் தொழிற்புரட்சி ஓரளவு காரணமாகும். போஸ்டனுக்குப் பின்னால் வளங்கொழிக்கும் சகாப்தத்தை உருவாக்குகின்ற முறையில்-

[4] அன்று உருவாகி அமைந்த நியூயார்க்கின் ஜனத்தொகை 8,13,669 ஆகும் (பரோ ஆஃப் மன்ஹாட்டன்– Borough of Manhattan).

நாசுவா (Nashua), லோவல் (Lowell), வால்தாம் (Waltham), லின் (Lynn), வொர்செஸ்டர் (Worcester), நியூ பெட்ஃபோர்டு (New Bedford), ஃபால் ரிவர் (Fall River) ஆகிய நகரங்களும், ஆடை வகைகள், தோல்வகைகள், உலோகங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் நகரங்களும் தலையெடுத்தன.

நகர மக்கள் எண்ணிக்கையின் பெருக்கம், 1780–1860

ஆண்டு	கீழ்க்கண்டவாறு ஜனத்தொகையைப் பெற்றுள்ள நகரங்களின் எண்ணிக்கை					மொத்த ஜனத் தொகையில் நகரங்களில் சதவீதம்
	8,000 அல்லது அதற்கு மேல்	8,000 முதல் 20,000 முடிய	20,000 முதல் 75,000 முடிய	75,000 முதல் 2,50,000 முடிய	2,50,000 அல்லது அதற்கு மேல்	
1780	5	4	1	...	...	2.7
1790	6	4	2	...	...	3.3
1800	6	1	5	...	...	4.0
1810	11	6	3	2	...	4.9
1820	13	7	4	2	...	4.9
1830	26	19	4	3	...	6.7
1840	44	28	11	4	1	8.5
1850	85	56	21	6	2	12.5
1860	141	96	35	7	3	16.1

நியூ இங்கிலாந்தில் பொறிவழித் தொழில்கள் தோன்றியவுடன், காலனி நகரங்களாகிய பிராவிடன்ஸ், நியூ லண்டன், ஹார்ட் ஃபோர்டு, நியூ ஹேவன் ஆகியவை சிறப்புமிக்க நகரங்களாக மாறின. நூற்றுக்கணக்கான சாதாரணக்கிராமங்களைனத்தும் வளரக்கூடிய ஊர்களாகவோ அல்லது சிறிய நகரங்களாகவோ மாறின. பிட்வெல் (Bidwell) பின்வருமாறு கூறுகிறார்: '1840-ல் மூன்று மாநிலங்களின் ஒவ்வொரு பகுதியிலும் தற்செயலாக வளர்ந்து வந்துள்ள நூற்றுக்கணக்கான தொழில்துறைகளின் பல்வேறு கிளைகளின் சார்புடைய தொழிற்சாலையையோ அல்லது நாற்காலி செய்யும் தொழிற்சாலையையோ அல்லது கம்பளி ஆலையையோ அல்லது பஞ்சாலையையோ கொண்டுள்ள பொறிவழித் தொழில் நிறைந்த ஒரு கிராமத்தைக்கூடப் பெற்றிராத நகரங்கள், 479 நகரங்களைக் கொண்ட தென் நியூ இங்கிலாந்தில் 50 ஐக்கூடக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகும்'[5] ஆரம்பகாலத் தொழிற்சாலைகள் மிகவும் சிறியனவாக

[5] பி. டபிள்யூ. பிட்வெல் (P. W. Bidwell), 'The Agricultural Revolution in New England,' 'American Historical Review', XXVI. 686 (1921).

இருந்தபோதிலும், அவை பல்வேறு பகுதிகளில் பரவிநின்றன. தொழிற்சாலை அமைப்பின் வளர்ச்சியும், நகர ஜனத்தொகையின் வளர்ச்சியும் இணைந்தே சென்றன; நியூ இங்கிலாந்தில் மூன்று நகரங்கள்மட்டுமே 1810-ல் 10,000-க்கு மேற்பட்ட பேர்களைக் கொண்டிருந்ததாகப் பெருமைகொண்டிருந்தன. போஸ்டன், பிராவிடென்ஸ், நியூ ஹேவன் ஆகிய மூன்று நகரங்களே அவையாகும். அம் மூன்று நகரங்களிலும் 56,000 பேர்கள் வசித்து வந்தனர். 1860-ல் 8,62,000 பேர்களைக்கொண்ட இருபத்தாறு நகரங்கள் இருந்தன.

கிழக்கும் மேற்கும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள ஓகியோ நதியின் தோற்றுவாயில் பிட்ஸ்பர்க் இருந்தது. பெரும் பிரதேசங்களை உபயோகித்துக்கொள்ளும் வாய்ப்பினை பிட்ஸ்பர்க் பெற்றிருந்தது. வளங்கொழிக்கும் நிலக்கரி—இரும்பு மாவட்டத்திற்கிடையில் பிட்ஸ்பர்க் நிலைத்திருந்தது; எனவே, 1810-ல் பிட்ஸ்பர்க் முக்கியமான நகரமாக விளங்கியது. ஓகியோ நதி மீது உள்ள சின்சின்னாட்டி, லூயிவில் ஆகிய நகரங்களுக்கு நல்ல எதிர்காலமிருந்தது. மிசௌரி, மேல்மிசிசிப்பி நதிகளின்மூலம் நடைபெற்ற வர்த்தகம் செயின்ட் லூயியின் ஆதிக்கத்தில் இருந்தது. வளைகுடாப் பகுதியில் மொபைல், நியூ ஆர்லியன்ஸ் ஆகிய இடங்களில் கப்பல் தொழில் சிறந்து விளங்கியது. பெரும் ஏரிகளில் கப்பல் சரக்கேற்றும் துறைமுகங்களாகிய சிக்காகோ, டெட்ராயிட், கிளீவ்லாந்து, பஃபலோ முதலியன 1860-ல் நன்கு வளர்ச்சியுற்று எதிர்காலத்தில் நம்பிக்கையுடையனவாகத் தோன்றின. ஓகியோ நதியைச் சார்ந்த நகரங்களின் சிறப்பு குன்றிவிடும் என்பதை அத் துறைமுகங்கள் விளக்கின. எண்ணற்ற வேறு பகுதிகளிலும், இயற்கை வளங்களின் காரணமாகவோ அல்லது தற்செயலாகவோ நகரங்கள் உருவாயின.

தென்னாட்டில் வில்லியம்ஸ்பர்க், சார்லஸ்டன், சாவன்னா போன்ற அநேக நகரங்கள் முழுவதுமாகவோ அல்லது ஓரளவுக்கோ குன்றத் தொடங்கின. பெருவாரியான மக்கள் மேற்கே செல்லத் தொடங்கினர். பருத்தி உற்பத்தியின் மையம் மாறியது. பருத்தி உற்பத்தி மலைகளைக் கடந்து மேற்கே பரவியது. மேற்கத்திய பண்டங்கள் தென் கடற்கரைத் துறைமுகங்களுக்குச் செல்வதற்குப் பதிலாக பால்டிமோருக்கும், ஃபிலடெல்ஃபியாவுக்கும் சென்றன. பொறிவழித் தொழில் வளர்ச்சி குன்றியது. இத்தகைய காரணங்களினால் தென் அட்லான்டிக் மாநிலங்களில் நகர வாழ்க்கை நன்கு வளரவில்லை. மேசான்—டிக்ஷன் கோட்டிற்குத் (Mason and Dixon's line) தெற்கே, 1860-ல் 4,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட 27 பேரூர்களோ நகரங்களோ இருந்தன.

1860ஆம் ஆண்டிற்கு முன்னர் நிகழ்ந்த குடியேற்றம்

1790 முதல் 1800 முடிய உள்ள ஆண்டுகளில் சுமார் 50,000 ஐரோப்பியர்கள் வந்தார்கள் என்றும், 1800 முதல் 1810 முடிய உள்ள அடுத்த பத்தாண்டுகளில் சுமார் 70,000 ஐரோப்பியர்களும், 1810 முதல் 1820 முடிய உள்ள அடுத்த பத்தாண்டுகளில் 1,14,000 ஐரோப்பியர்களும் வந்தனர் என்றும் எட்டாவது சென்சஸின் முதல் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. '1819ஆம் ஆண்டிற்கு முன்னர் தயாரிக்கப்பெற்ற ஒழுங்குமுறையற்ற புள்ளிவிவர மதிப்பீட்டிலிருந்தே' எட்டாவது சென்சஸ் தயாரிக்கப்பெற்றது. உண்மையில் குடியேறியவர்களுடைய எண்ணிக்கையைக் கண்டுபிடிப்பதற்குக் குடியேறி நிலத்து வசிக்காதவர்களுடைய எண்ணிக்கையைக் கழிக்கவேண்டும்; அவ்வாறு கழிப்பதற்கு மொத்த எண்ணிக்கையில் 14·5 சதவீதத்தைக் குறைக்கவேண்டும். 1819ஆம் ஆண்டிற்குப் பின்னர், அதிகாரபூர்வமான அறிக்கைகளும் பத்திரங்களும் நல்ல முறையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. அவற்றில் காணப்பெற்ற புள்ளிவிவரங்கள் ஓரளவுக்குச் சரியாகவே இருந்தன. 1825ஆம் ஆண்டுவரையில் அமெரிக்காவில் குடியேறியவர்களின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 10,000-க்கும் குறைவாகவே இருந்தது. 1825ஆம் ஆண்டிற்குப் பின்னர் குடியேறியவர்களின் எண்ணிக்கை கொஞ்சங்கொஞ்சமாகப் பெருகத்தொடங்கியது. 1832ஆம் ஆண்டிலிருந்து ஆண்டொன்றுக்கு சுமார் 60,000 பேர்கள் குடியேறினர். அமெரிக்காவில் குடியேற்றம் பெருகியதற்குக் காரணம் அமெரிக்காவில் வளமும் செழிப்பும் நிறைந்திருந்தமையே ஆகும்; அவ்வாறே ஐரோப்பாவில் அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டதன் காரணமாகவும் அமெரிக்காவில் குடியேற்றம் பெருகியது. எனவே, 1837-ல் 79,000 பேர்கள் அமெரிக்காவில் குடியேறினர். அடுத்த ஆண்டில் பொருளாதார பீதியின் காரணமாக அவ்வெண்ணிக்கை பாதியாகக் குறைந்தது; மீண்டும் 1842-ல் குடியேற்றம் வளர்ந்தது. 1,00,000 பேர்களுக்குமேல் அமெரிக்காவில் குடியேறினர். மீண்டும் அடுத்த ஆண்டே நிதித் துறையைச் சார்ந்த மந்தத்தின் காரணமாகக் குடியேறியவர்களின் எண்ணிக்கை குறைந்தது. 1845 முதல் 1850 முடிய உள்ள ஆண்டுகளில் அமெரிக்காவில் குடியேற்றம் வளர்ந்தது. 1845ஆம் ஆண்டிலும், 1846ஆம் ஆண்டிலும் ஐரோப்பாவில் கடு மழை பெய்தது. பின்னர் அங்கு உண்டான வசந்த கால வெள்ளத்தின் காரணமாகவும் விவசாயம் மிகவும் பாதிக்கப்பெற்றது. இன்னும் 1845, 1846ஆம் ஆண்டுகளில்

உருளைக்கிழங்கு பஞ்சம் அயர்லாந்தில் ஏற்பட்டது. 1848, 1849ஆம் ஆண்டுகளில் ஐரோப்பாவில் புரட்சிகள் ஏற்பட்டன. இத்தகைய காரணங்களினாலேயே அமெரிக்காவில் குடியேறியவர்களின் தொகை பெருகியது. இங்குக் குறிப்பிட்டுள்ள காலத்திற்கு முன்பும், பின்பும் அமெரிக்க ஜனத்தொகையில் குடியேறியவர்களின் விகிதாச்சாரம் இவ்வளவு அதிகமாக இருந்ததில்லை.



எட்டாவது சென்சஸ் (1860) தரும் புள்ளிவிவரம், முதல் அறிக்கைபக்கம் 12ff.)

ஐக்கிய அமெரிக்காவில் குடியேற்றம் (1820–1860)

புதிய உலகில் ஆயிரக்கணக்கான ஐரோப்பியர்கள் சென்று குடியேறுவதற்குப் பொருளாதார, அரசியல் சூழ்நிலைகள்மட்டும் காரணங்களாக அமையவில்லை. கலிஃபோர்னியாவில் பொன் கண்டுபிடிக்கப்பட்டவுடன், பல ஐரோப்பியர்கள் புதிய உலகில் சென்று குடியேறினர்கள். 1854-ல் குடியேறியவர்களின் தொகை 4,27,833 ஆகும். ஆனால், அடுத்த ஆண்டு அத் தொகையில் பாதிக்கும் குறைவானவர்களே புதிய உலகில் குடியேறினர்கள். 1860-ல் குடியேறியவர்களின் தொகை 1,53,640 ஆகும். கிரிமிய யுத்தத்தினாலேயே (Crimean War) குடியேறியவர்களின் தொகை குறைந்ததாகக் கருதப்பெற்றது. இந்தியாவில் ஏற்பட்ட குழப்பங்களின் காரணமாகவும் குடியேற்றம் தடைப்பட்டது என்றும் சிலர் எண்ணினர். ஏனெனில், ஐரோப்பியர்களில்

பெரும்பாலோர் கிரிமிய யுத்தத்தில் ஈடுபட்டனர்; இந்தியாவில் ஏற்பட்ட குழப்பங்களிலும் அவர்கள் நாட்டம் சென்றது. இவற்றின் காரணமாக விவசாயப் பண்டங்களுக்கும், பொறிவழித் தொழிலில் உற்பத்தியான பொருள்களுக்கும் தேவைப்பாடு (demand) ஏற்பட்டது. உள்நாட்டுப் போரின் விளைவாக முதலில் குடியேற்றம் பெரிதும் தடைப்பட்டது. யுத்த காலத்தில் ஏற்பட்ட செழிப்பாலும், குடும்ப மனையகச் சட்டத்தின் கவர்ச்சி யாலும் ஈர்க்கப்பெற்றுப் பலர் அயல் நாடுகளிலிருந்து வந்து புதிய உலகில் குடியேறினர். 1860 ஆம் ஆண்டிற்கு முன்னர் குடியேறியவர்களில் பாதிப் பேருக்குமேல் பிரிட்டிஷ் தீவுகளைச் சேர்ந்தவர்களாவர்; குறிப்பாக அவர்கள் அயர்லாந்தைச் சேர்ந்தவர்களே. மூன்றில் ஒரு பகுதியினர் ஜெர்மனியைச் சேர்ந்தவர் களாவர். இவ்வாண்டுகளில் குடியேறிய ஆண்கள் தகுசிறந்த ஐந்து தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். குடியேறியவர்களில் தொழிலாளர்கள் 8,72,317 பேர்களாவர்; விவசாயிகள் 7,64,837; நுட்பத் தொழிலாளர்கள் 4,07,524; வியாபாரிகள் 2,31,852; சுரங்கத் தொழிலாளிகள் 39,967. ஐக்கிய அமெரிக்காவில் 1860-ல் அயல் நாட்டில் பிறந்து, பின்னர் வந்து குடியேறியவர்களின் எண்ணிக்கை சுமார் 40,00,000 ஆகும்.

பல்வேறு பிரதேசங்களில் மக்கள் பிரிந்து வசித்தமைபற்றிப் பொதுவாகவே குறிப்பிட முடியும். அயர்லாந்திலிருந்து வந்து குடியேறியவர்களில் குறைந்தபட்சம் ஆறில் ஐந்து பகுதியினர் அப்பலாச்சியன் மலைத்தொடருக்குக் கிழக்கே தங்கினர். அவர் களில் பலர் நகரங்களில் வசித்தனர். நகரங்களில் வாழ்ந்த பயிற்சி பெறுத தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் அயர்லாந்திலிருந்து வந்து அமெரிக்க நகரங்களில் குடியேறியவர் களேயாவர். ஆனால், அதே வேளையில் அக் காலத்தில் ஜெர்மனியி லிருந்து வந்து குடியேறியவர்கள் விவசாயிகளாக வாழ்க்கையைத் தொடங்கி நடத்தினர். குடியேறிய ஜெர்மானியர்களில் பாதிப் பேர்களாவது அப்பலாச்சியன் மலைத்தொடருக்கு மேற்கே உள்ள நிலங்களில் விவசாயம் செய்தனர். ஜெர்மானியர்கள் பலர் விஸ்கான்சின், டெக்சாஸ் எல்லைப்புறங்களில் விவசாயத்தை மேற்கொண்டனர். ஸ்காண்டினேவியர்களில் பெரும்பாலோர் மேற்கே சென்று இல்லினாய், விஸ்கான்சின் அல்லது மின்ன சோட்டா பகுதிகளில் தங்கி வசிக்கத் தொடங்கினர். புதிதாகச் சென்று குடியேறிய இங்கிலிஷ், ஸ்காட்ச், வெல்ஷ் (The English, Scotch, and Welsh) மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் வட

கிழக்கில் தங்கினர்; எஞ்சியுள்ளவர்கள்மட்டுமே மேற்கே சென்றனர்.

இவ்வாறு கூட்டங்கூட்டமாகச் சென்று மக்கள் அமெரிக்காவில் குடியேறியதன் காரணமாக அக் காலத்துச் சமூகப் பொருளாதார வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டது. பழைய நகரங்கள் 1840 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகளில் அளவில் இரு மடங்காகப் பெருகியதாலும், பலப்பல புதிய நகரங்கள் உருவாகியதாலும் முக்கியமான பகுதிகளில்கூடச் சேரிகளும், சேரிகளுக்கான சூழ்நிலைகளும் ஏற்பட்டன. பசியும் பட்டினியும் வாட்டின; உண்மைக் கூலி குறைந்தமையால் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரமும் குறைந்தது.[6] 'சிறப்பு வாய்ந்த பழைய நாட்க'ளைப்பற்றிப் பேசவும் எழுதவும் தூண்டப்பெற்றாலும், உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கு முன் உள்ள இருபது ஆண்டுகளில் கூலிபெறும் அமெரிக்கத் தொழிலாளி மிகவும் தொல்லையுற்றான் என்பது உண்மையாகும். இவ்வாண்டுகளில் அவன் அடைந்த தொல்லைகளுக்கெல்லாம் பெருகி வளர்ந்துவந்த குடியேற்றமே காரணம் என்று சொல்லமுடியாதெனினும், அது ஒரு முக்கியக் காரணமேயாகும்.

நகரத்து வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது கால் பகுதியை உள்ளடக்கிய காலத்தில் மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படத் துவங்கின. அதே காலத்தில் தொழிற்புரட்சி போதுமான அளவுக்கு வளர்ந்திருந்தது. எனவே, இல்லத்தில் உற்பத்தி செய்யப்பெற்ற பண்டங்களைத் தொழிற்புரட்சியின் காரணமாக இப்பொழுது மிகவும் மலிவான விலைக்கு வாங்கலாம். நெருக்கமாகக் குடியேறிய மக்கள் நிறைந்த வடகிழக்குப் பிரதேசங்களில் இல்லத்தொழில் உற்பத்திமுறை மறைந்து, தொழிற்சாலை உற்பத்தி முறை பெரிதும் செல்வாக்கடைந்தது. தொழிற்சாலை உற்பத்தி முறையின் இத்தகைய போக்கினால் ஆண் தொழிலாளர்கள் தத்தம் துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றனர்; பெண் தொழிலாளர்கள் மிகுதியான ஓய்வு பெற்றனர். இறுதியில் அநேக ஆண்களும் பெண்களும் விவசாயத்தைத் துறந்துவிட்டுத் தொழிற்சாலைகளில் நுழைந்தனர். திருத்தப்பெற்றனவும், தொழிற்சாலையில் ஆக்கப்பெற்றனவுமாகிய இயந்திரங்களினால் விவசாயத் தொழிலுழைப்பு மிகவும் சுலபமாயிற்று. என்றாலும், வாழ்க்கைத்தரத்தில்

[6] என். ஜே. வேர் (N. J. Ware), 'The Industrial Worker' 1840-1860, pp. 27 ff. இந்த நூலில் உள்ள அட்டவணையைக் காண்க.

ஏற்பட்ட பெரும்பாலான மாற்றங்களை அவசியத்தின் காரணமாக நகரவாசிகளே முதன்முதலில் நுகர்ந்தனர். 1829—ஆம் ஆண்டுக்குப் பின்னர் மெழுகுத்திரி விளக்குகள் படிப்படியாக மறைந்து எண்ணெய் விளக்குகள் வழக்கிற்கு வந்தன. பெருநகரங்களில் வாயு விளக்குகள் பயன்பாட்டுக்கு வந்தன. போஸ்டன் நகரம் 1822-ல் வாயுமூலம் தெரு விளக்குகள் எரிக்கும் முறையைக் கையாண்டது. வாயுமூலம் தெருவிளக்கிடுதலை 1823-ல் நியூயார்க்கும், 1837-ல் ஃபிலடெல்ஃபியாவும் பின்பற்றின. வியோமிங் (Wyoming), லீஹை (Leigh) பள்ளத்தாக்குகளில் 1700-1709ன் பிற்பகுதியிலிருந்து, ஆந்திரசைட் நிலக்கரி கிடைக்கும் என்று தெரியவந்தது. அந்த நிலக்கரியைக் கப்பல்கள் மூலம் ஃபிலடெல்ஃபியாவிற்கு 1805 ஆம் ஆண்டிலேயே ஏற்றி அனுப்பினர். எனினும், 1815 வரையில் வீட்டில் அதனைச் சமையல் வேலைக்கும் மற்றக் காரியங்களுக்கும் யாரும் பயன்படுத்தவில்லை. போக்குவரத்திலுள்ள தொல்லைகளின் காரணமாகவும், ஸ்டவ்வுகள், இரும்பு அடுப்புத் தட்டங்கள் (grates) அமைப்பதில் ஆகும் செலவுகளின் காரணமாகவும் ஆந்திரசைட் நிலக்கரியின் பயன் பெரிதும் பரவவில்லை. கால்வாய்களும் இருப்புப்பாதைகளும் ஏற்பட்ட பின்னர் போக்குவரவின் தொல்லைகள் நீங்கின. பெரு நகரங்களில் மரத்தின் விலை அதிகரித்ததால் ஸ்டவ்வுகளின் பயனும், இரும்பு அடுப்புத் தட்டங்களின் பயனும் குறைந்த செலவில் கிடைக்கும் என்பது தெளிவாயிற்று. நியூயார்க்கிலும் ஃபிலடெல்ஃபியாவிலும் உள்ள எண்ணற்ற குடும்பங்களில் 1825-ல் மரத்திற்குப் பதிலாக நிலக்கரியை உபயோகிக்கத் தொடங்கினர். பின்னர், வடகிழக்குப் பிரதேசங்களில் அடுப்புகள் மறைந்து, இரும்பு வரிசைகள் (iron ranges) உபயோகத்திற்கு வந்தன. வீட்டின் மற்றப் பகுதிகளில் இரும்பு ஸ்டவ்வுகள் பயன்படுத்தப் பெற்றன. இரும்பு, செம்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட மிகப் பழைய, கனம் நிறைந்த பாத்திரங்களுக்குப் பதிலாக வெள்ளீயப் பாத்திரங்கள் உபயோகிக்கப்பெற்றமையால் வீட்டுவேலையிலுள்ள சலிப்பும் அலுப்பும் நீங்கின. பாத்திர வியாபாரி ஊர்சுற்றி விற்கும் இத்தகைய பாத்திரங்கள் இல்லத்துத் தலைவிக்கு மிகவும் பயன்பட்டு, அவளுடைய வேலைச்சுமையைக் குறைத்து இன்பம் அளித்தன.

வளர்ந்துவரும் நகரங்களில், இயற்கையாகவே தண்ணீர்ப் பிரச்சினையே முக்கியப் பிரச்சினையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரும்வரையில், நகரவாசிகளுக்குத் தேவைப்படும் தண்ணீரின் பெரும்பகுதி தொட்டிகளிலிருந்தும், வீட்டுக் குழாய்களிலிருந்தும் அல்லது நகரம் முழுதும் சிதறிக் கிடக்கும் பல்வேறு

பொதுக் குழாய்களிலிருந்தும் கிடைத்தது. 1799 ஆம் ஆண்டிற்குப் பின்னர், சுயில்கில் நதியிலிருந்து (Schuylkill River) நீரினை நீராவிக் குழாய்களின்மூலம் மேலேற்றிப் பெரும் நீர்த்தேக்கத் தொட்டியில் நிரப்பி, பின்னர் மரக்குழாய்களின் வழியாக ஃபிலடெல்ஃபியாவின் ஒரு சிறு பகுதிக்கு நீரினை வழங்கினர். ஃபேர்மவுன்டு நீர்த்தேக்கம் (Fairmount Waterworks) தோன்றிய பின்னர், நீர்வழங்கும் இம் முறையினை இன்னும் திருத்தி 1822-ல் பெருமளவில் பயன்படுத்தத் தொடங்கினர். ஃபேர்மவுன்டு நீர்த்தேக்கம் நீரினை இரும்புக் குழாய்கள்மூலம் நகரம் முழுவதற்கும் வழங்கியது. மரக்குழாய்கள் நீரினைக் கீழ் நியூயார்க்கிற்கு 1842 ஆம் ஆண்டுவரையில்[7] எடுத்துச் சென்றன. உயர் தளத்தின் ஊடாகச் செல்லும் நீர்க்குழாய்கள் அப்பொழுதுதான் முடிவுற்றன; குரோடன் நீரும் (Groton water) அப்பொழுதுதான் நகரத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதே ஆண்டில் மிகப் பெரு நகரங்களனைத்திலும் செயற்கைமுறைகள்மூலம் நீர் கொண்டுவரப்பெற்று, வழங்கப்பெற்றன.

வாழ்க்கை வசதிகள் பெருகியவுடனேயே பொதுமக்களின் பாதுகாப்புக்கெனச் சில வசதிகள் உண்டாக்கப்பட்டன. விளக்கு களைக் கொளுத்திவிட்டு, இரவுவேளையில் எச்சரிக்கைக் குரல் கொடுத்து, தீ விபத்துகளிலும் எச்சரிக்கைக் குரல் எழுப்பித் தன் கடமையைக் காவலாளி செய்துவந்தான். இத்தகைய பழைய காவலாளிமுறை திறமைக் குறைவானதாக இருந்த காரணத்தால் அம் முறையை நீக்கிவிட்டு, 1845-ல் அதற்குப் பதிலாகக் கிட்டத்தட்ட இன்றைய போலீஸ் படைக்குச் சமமான, இரவும் பகலும் காவல்புரியும் காவலாளி அமைப்பினை உண்டாக்கினர். உண்மையில் கடந்த 90 ஆண்டுகளாகத்தான் தற்காலத்துப் போலீஸ்முறை வழக்கத்திற்கு வந்துள்ளது. 1859 ஆம் ஆண்டு வரையில் தீ அணைக்கும் வேலையினைத்

[7] ஒரு மத்திய நீர்த்தேக்கத்திலிருந்து நியூயார்க்கிற்கு நீரினை வழங்க மான்ஹாட்டன் தண்ணீர்க் கம்பெனி முதல் முயற்சி எடுத்துக்கொண்டது. சட்டமன்றத்தில் 1799-ல் ஆரன் பர் (Aaron Burr) என்பவரால் இயற்றப் பெற்ற சட்டத்தின்படியே இக் கம்பெனி உருவாக்கப்பெற்றது. உண்மையில் தண்ணீர்க் கம்பெனி என்ற போலி உருவத்தில் இருக்கும் பாங்கு கார்ப்பரேஷனே இக் கம்பெனியாகும். நியூயார்க்கிலுள்ள ஹாமில்டன் பாங்குடன் போட்டியிடுவதற்கென்றே இக் கம்பெனியை ஏற்படுத்தினர். இக் கம்பெனி ஒரு நீர்த்தேக்க அமைப்பை ஏற்படுத்தி நீரினை வழங்கும் முறையை வளர்த்து வந்தது என்பது உண்மையே. பின்னர் 1808-ல் அக் கம்பெனி அந்த நீர்த்தேக்க அமைப்பினை நகரமன்றத்திடமே விற்றுவிட்டது. மான்ஹாட்டன் கம்பெனி பாங்காகவே அது தொடர்ந்து இயங்கிவந்தது. இறுதியில் 1955-ல் அக் கம்பெனி சேஸ் நேஷனல் பாங்குடன் (Chase National Bank) இணைந்தது.

தொண்டர்படையினரே மேற்கொண்டனர். தொண்டர்படையினர் ஆர்வமும் திறமையும் உடையவர்களாக இருந்தனர். அதே நேரத்தில் அத் தொண்டர்கள் தீயினை அணைப்பதில் காட்டும் ஆர்வத்தைவிட மிகுதியான ஆர்வத்தை மாறுபட்ட கோஷ்டியிடம் சண்டையிடுவதில் காட்டினர். 1850 முதல் 1860 முடிய உள்ள பத்தாண்டுகளில் மிகப்பெரு நகரங்களில் தீயணைக்கும் தொண்டர்படைகளை நீக்கும் முயற்சி எடுக்கப் பட்டது.

மக்களுடைய பொருளாதார, சமூக வாழ்க்கையைத் தூண்டி விடும் வகையில் 1845ஆம் ஆண்டில் ஒரு சட்டமியற்றப் பட்டது. அச் சட்டத்தின்மூலம் மலிவான அஞ்சல்முறை ஏற் பட்டது. அரை அவுன்சிற்குள்ளாக எடையுள்ள கடிதங்கள் 300 மைல்களுக்குள்ளாக உள்ள இடங்களுக்குச் செல்ல ஆகும் கட்டணம் ஐந்து சென்டுகளாகும். முன்னூறு மைல்களுக்கும் மேலாக உள்ள இடங்களுக்குச் செல்வதற்கு ஆகும் கட்டணம் பத்து சென்டுகளாகும். கூடுதலான எடை இருப்பின் கட்டண உயர்வும் உண்டு. 1851-ல் கட்டணக் குறைப்புகள் ஏற் பட்டன. முன்கூட்டியே கட்டணம் செலுத்தப்பெற்ற, அரை அவுன்ஸ் கடிதத்தை 3,000 மைல்கள் தொலைவிற்கு எடுத்துச் செல்வதற்கு ஆகும் கட்டணம் மூன்று சென்டுகளேயாம்; முன் கூட்டியே கட்டணம் செலுத்தப்படவில்லையெனில், ஐந்து சென்டு களாகும். மூவாயிரம் மைல்களில் உள்ள இடங்களுக்கும், அதற் கப்பால் உள்ள இடங்களுக்கும் கடிதங்களைக் கொண்டுசெல்ல ஆகும் கட்டணச் செலவு முறையே ஆறு சென்டுகள், பன் னிரண்டு சென்டுகளாகும். வீதிகளில் 1840-ல் ஒரு பென்னி விலையுள்ள செய்தித்தாள்கள் தோன்றின. செய்திகளைச் சேக ரித்து வெளியிடுவதில் செய்தித் தாள்கள் தீவிரமாகப் போட்டி யிட்டன. தேர்ச்சிபெறுத தொழிலாளியிலிருந்து ஆற்றல் மிகுந்த முதலாளிவரையில் உள்ள அமெரிக்க மக்கள் அனைவரும் செய்தித் தாள்களின் அடிமைகளாயினர். செய்திகளைப் பரப்புவதற்கென ஏற்பட்ட பத்திரிகை உலகம் அரசியல் அல்லது பொருளாதாரக் கொள்கைகளைப் பிரசாரம் செய்யும் இயந்திரமாகவும் இயங் கியது. தந்திப் போக்குவரவு கண்டுபிடிக்கப்பெற்று, 1844 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அது அமுலுக்கு வந்த காரணத்தால், செய்தித்தாள்கள் செய்திகளைச் சேகரித்துக் குறித்த காலத்தில் வெளியிட்டன; உலகத்தில் அவ்வப்பொழுது நிகழும் முக்கிய நடவடிக்கைகளை உடனுக்குடன் மக்கள் தெரிந்துகொள்ளும் வாய்ப்பினைத் திறனுடன் செய்தித்தாள்கள் உண்டாக்கித்தந்தன. நீராவிப் படகும், நீராவி ரயிலும் கண்டுபிடிக்கப்பட்டமை

யால், பிரயாண வாய்ப்புகள் பெருகின; அறிவுத்துறையிலே தம்மைத் தாமே துண்டித்துக்கொண்டு தனித்து வாழும் உணர்ச்சி (intellectual isolation) மங்கி மறையத் தொடங்கியது; அறிவுத் துறையைச் சார்ந்த மாகாண உணர்ச்சியும் (intellectual provincialism) ஓரளவுக்குத் திருத்தம் பெற்றது.

தொழிலாளர் நிலை

சாதாரண காலத்தில்கூட ஒரு புதிய நாட்டில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பது அருமையாகும். எனவே, மேற்கு ஐரோப்பாவின் தொழில்வளம் நிறைந்த நாடுகளில் வாழும் தொழிலாளர்களின் நிலையைவிடக் கூலிபெறும் அமெரிக்கத் தொழிலாளர்களின் நிலை உயர்ந்தே இருந்தது. 1849 வரையில் அமெரிக்கத் தொழிலாளர் நிலை உயர்ந்தே இருந்தது. பயிற்சிபெறுத அமெரிக்கத் தொழிலாளரின் கூலி, கிரேட் பிரிட்டனில் உள்ள தொழிலாளர்களின் கூலியைவிட மூன்றில் ஒரு பங்கிலிருந்து இரண்டில் ஒரு பங்குவரை கூடுதலாகவே இருந்தது என்றும், பயிற்சி பெற்ற அமெரிக்கத் தொழிலாளரின் கூலி பிரிட்டிஷ் தொழிலாளரின் கூலியைவிட (முந்திய விகிதத்திலும் குறைந்த விகிதத்தில்) கூடுதலாகவே இருந்தது என்றும் விக்டர் கிளார்க் (Victor Clark) மதிப்பிட்டுள்ளார். பயிற்சி பெற்ற தொழிலாளரின் வாழ்க்கைநிலை பொறுத்துக்கொள்ளக்கூடியதே. ஐரோப்பாவில் கிடைக்கும் கூலியைவிட அதிகமான கூலியைப் பயிற்சி பெறுத அமெரிக்கத் தொழிலாளர் பெற்றபோதிலும், அவர்கள் வாழ்க்கைநிலை மோசமாகவே இருந்தது. பயிற்சி பெற்ற தொழிலாளியின் சம்பளத்தில் பாதியளவைப் பயிற்சி பெறுத தொழிலாளி தனது சம்பளமாகப் பெற்றான். புரட்சிக் காலத்தில் ஒரு நாளில் கிடைக்கும் கூலி இரண்டு ஷில்லிங்குகள் ஆகும். தினக்கூலி 1800-ல் சுமார் 90 சென்டுகளாகவும், 1825-ல் ஒரு டாலராகவும் உயர்ந்தது. கால்வாயும் இருப்புப்பாதையும் கட்டப்பெற்ற காலத்தில்கூட, பல ஆண்டுகளுக்கு அதே கூலியைத் தொழிலாளர்கள் பெற்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் நிலவிய தொழிலாளர்களின் வருந்தத்தக்க நிலையை மெக்மாஸ்டர் (McMaster) என்பவர் உருக்கமாகப் பின்வருமாறு படம்பிடித்துக் காட்டுகிறார்: "குடிசையின் மண்தரையே சமுக்காளமாக விளங்கியது. உணவு மேசைமீது கண்ணாடிப் பலகையும் இல்லை. அவனுடைய அடுக்குப் பலகைப் பெட்டியில் பீங்கான் பாத்திரங்களும் இல்லை. அவன் வீட்டுச் சுவரில் ஒப்பனை ஏதும் செய்யப்படவில்லை. அவனுக்கு ஸ்டவ் என்றால் என்னவென்று தெரியாது. நிலக்கரியை அவன்

பார்த்ததுகூட இல்லை. தீக்குச்சியைப்பற்றி அவன் கேள்விப் பட்டதில்லை... புதிய இறைச்சியை அவன் அடிக்கடி தின்று சுவைத்ததில்லை; வாரத்திற்கு ஒரு தடவை மாமிசத்தை அவன் சுவைத்திருப்பான். தான் உண்ணும் இறைச்சிக்குப் பின் சந்ததி யினர் கொடுக்கும் விலையைவிடக் கூடுதலான விலையையே அத் தொழிலாளி கொடுத்தான்.

தொழிலாளி அருந்திய உணவு பக்குவம் பெருதது எனின், அவன் உடுத்திய ஆடைகள் வெறுப்பை ஊட்டுவனவாக இருந்தன. மஞ்சள் நிறமான மான் தோலினாலோ அல்லது வேறு தோலினாலோ ஆகிய கால்சட்டைகளில் ஒரு ஜதையும், கட்டம்போட்ட சட்டைஒன்றும், சிவப்பு நிறமான மென்கம்பளச் சிறு சட்டை ஒன்றும், முனைகளில் கசங்கியிருந்த ஃபெட்டு தொப்பி ஒன்றும், பித்தளையினால் ஆகிய பெரும் பக்கிள்கள் (buckles) மாட்டப்பெற்று மாட்டுத் தோலினாலாகிய செருப்பு களும், தோலினாலாகிய மேலாடை ஒன்றும் மட்டுமே தொழிலாளி யின் மிகச் சிறிய துணிப்பெட்டியில் அடைத்துவைக்கப்பட்டிருக் கும். மென்மையும் நெகிழும் தன்மையும் உடையதாகச் செய்வ தற்குத் தோல்சட்டையின் மீது கொழுப்பினைத் தொழிலாளி பூசி வைத்தான்.'[8]

பண்ணையில் வேலை செய்பவர்கள் மாதமொன்றுக்கு ஏழு டாலர்கள்முதல் பதினைந்து டாலர்கள்வரையில் கூலியாகப் பெற் றனர்; மேலும், பருவகாலத்தையும், வசிக்கும் இடத்தையும் பொறுத்தே அவர்களுக்கு உணவு வசதி கிடைத்தது. காலப் போக்கில் கூலியும் உயர்ந்துகொண்டே சென்றது. உணவைத் தவிர்த்து விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைத்த கூலி, பத் தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் நாளொன்றுக்கு 50 சென்டுகளாகும்; பின்னர் 1·50 டாலராகவும், 1860-ல் 2 டாலராகவும் உயர்ந்தது.[9] விவசாயத்துறையையும் தொழில்துறையையும் சார்ந்த பயிற்சி பெற்ற தொழிலாளரின் கூலி நாளொன்றுக்கு ஒரு டாலர்முதல் இரண்டு டாலர்வரையில் அதிகரிக்கும்.

தொழிற்சாலைகளில் வேலைக்கமர்ந்திருந்த தொழிலாளர்களும் ஐரோப்பியத் தொழிலாளர்களைவிட மிகுதியான கூலியையே

[8] ஜெ. பி. மெக்மாஸ்டர் (J B. McMaster), 'History of the People of the United States', I, 96-97.

[9] பி. டபிள்யூ. பிட்வெல் (P. W. Bidwell) அவர்களும் ஜே. ஐ. ஃபாக்னர் (J. I. Faulkner) அவர்களும் எழுதிய நூல்; 'History of Agriculture in the Northern United State,' 1620-1860, pp. 275-277, 495.

பெற்றனர். கூலி உயர்ந்துள்ள மெஸ்ஸாசுசெட்சில் 1830 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகளில் ஆண் தொழிலாளர்கள் வாரம் ஒன்றுக்கு ஐந்து டாலர்களையும், குழந்தைகள் ஒரு டாலர்முதல் இரண்டு டாலர்கள்வரையிலும், பெண்தொழிலாளர்கள் வார மொன்றுக்கு 1·75 டாலர்முதல் 2 டாலர் வரையிலும் கூலி யாகப் பெற்றனர். பின்னல் குறிக்கப்பட்டுள்ள கூலிகளில் உண வுக்காகும் செலவும் சேர்க்கப்பட்டுள்ளது. பென்சில்வேனியா, நியூ ஜெர்சி, தென்மாநிலங்கள் ஆகிய பகுதிகளில் கூலிகள் குறை வாகவே இருந்தன. இவ்வாண்டுகளில் உண்மைக் கூலிகளின் பொதுப் பிரச்சினையைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர்களின் கருத் துப்படி, தொழிலாளர் பெறும் கூலி 1820, 1830, 1840-களில் படிப்படியாக உயர்ந்துகொண்டே சென்று, பின்னர் 1850-களில் குறையத் தொடங்கியது.[10] சுமார் பத்து சதவீதத்திற்கு அதிக மாகவே கூலி உயர்ந்தது.

தற்காலத்துக் கூலி அளவுடன் ஒத்திட்டுப் பார்த்தால், அக் காலத்தில் வழங்கப்பெற்ற கூலியின் அளவு குறைவேயாகும். ஆனால், விலைவாசிகளுடன் தொடர்புபடுத்திப் பார்த்தாலன்றிக் கூலியின் முழுப் பொருள் விளங்காது. 1830 முதல் 1839 வரை யுள்ள ஆண்டுகளில் வாரம் ஒன்றுக்கு சரப்பாட்டுச் செலவுக்கும், அறை வாடகைக்கும் சேர்த்து ஆண்கள் 1·75 டாலர்முதல் 2 டாலர் வரையிலும், பெண்கள் 1.25 டாலர்முதல் 1·50 டாலர் வரையிலும் கொடுத்தனர். இதைப்போல இரண்டு மடங்கு பணம் அவர்கள் இருசாராரும் சம்பாதித்ததால், அவர்கள் சம்பளத்தில் பாதியை மற்றச் செலவினங்களுக்கு ஒதுக்கினர். திருமணம் ஆகாத ஆண் தொழிலாளருக்கும், பெண் தொழிலாளருக்கும் அந்தச் சம்பளம் போதுமானதே. அச் சம்பளத்திலிருந்து அவர்கள் கொஞ்சம் சேமித்துவைக்கவும் முடியும். ஆனால், ஒரு குடும் பத்தை நடத்துவதற்கு அச் சம்பளம் போதாது. ஒன்றுக்கு மேற் பட்டவர்கள் வேலைக்கமர்ந்து சம்பாதித்தால்தான் குடும்பத்தை நடத்தமுடியும். பிற்காலத்தில் கூலிபெறும் சராசரித் தொழிலாளி யின் நிலைக்கு மாறுபட்ட நிலையன்று இது.

வறுமையில் வாடாத அமெரிக்கத் தொழிலாளிக்கு இருந்த வாய்ப்புகளைக் கண்ட வெளிநாட்டுப் பிரயாணிகள் மிகவும் வியப் பெய்தினர். ஐரிஷ்காரராகிய தாமஸ் மூனி (Thomas Mooney) 1850-ல் பின்வருமாறு கூறுகிறார்:

[10] ஜி. ஆர். டெய்லர் (G. R. Taylor), 'The Transportation Revolution,' pp. 294-295.

'ஐக்கிய அமெரிக்காவில் தொழிலாளியின் தினக்கூலி குறைந்தபட்சம் எழுபது சென்டுகள் அல்லது பிரிட்டிஷ் நாணயத்தின் கணக்குப்படி சுமார் மூன்று ஷில்லிங்குகள் ஆகும். வாரத்திற்குப் பத்து பிரிட்டிஷ் ஷில்லிங்குகளுக்கும் கொஞ்சம் குறைவாகவோ அல்லது இரண்டரை டாலர்களோ செலவு செய்தால், அமெரிக்காவில் உங்களுக்கு நல்லுணவும், வசதியான தங்குமிடமும், சிறந்த சலவையும் கிடைக்கும். எனவே, வாரம் ஒன்றுக்கு நீங்கள் ஏழு அல்லது எட்டு ஷில்லிங்குகள் சேமித்து நிலமும் விலைக்கு வாங்கலாம். ஓர் ஏக்கர் நிலத்தை வாங்க நீங்கள் ஐந்து ஷில்லிங்குகள் கொடுத்தால் போதும்..... உங்களுக்கு அமெரிக்காவில் ஒழுங்கான வேலை கிடைத்தவுடன், ஒவ்வொரு வாரமும் உலகத்திலேயே மிகவும் சிறந்த நிலத்தில் 1½ ஏக்கர் வாங்கக் கூடிய அளவுக்கு நீங்கள் பணத்தைச் சேமிக்கமுடியும். ஓர் ஆண்டிற்குள்ளாகவே மேற்கே கிளம்பிச்சென்று, எண்பது ஏக்கர் கொண்ட நிலத்தைப் பெற்று, அதனைச் சொந்தமாக்கிக்கொள்ளும் அளவுக்கு உங்களிடம் பணம் மிஞ்சும். நீங்கள் விரும்பினால் இவையெல்லாம் கைகூடும் என்பதை நெஞ்சில் நிறுத்துங்கள்.'[11]

வழக்கம்போல மூனியினுடைய கண்டுபிடிப்புகளில் முழு உண்மை இல்லை. உண்மையில் எல்லைப்புறத்திற்குச் சென்ற தொழிலாளர்களின் தொகை மிகவும் குறைவாகும் பலர் வறுமைக்குப் பலியானார்கள். 1840—'49-லும், 1850—'59-லும் நகரங்களில் வறுமை பரவியிருந்தது. இங்கிலாந்தைப்போல அமெரிக்காவில் தொழிற்சாலை முறையைப் புகுத்தியதால் அஞ்சத்தக்க கோரங்களும் கொடுமைகளும் ஏற்பட்டுவிடவில்லை என்பது முற்றிலும் தெளிவான உண்மையாகும். அமெரிக்காவுக்குத் தேவையான ஆடைவகைகளின் பெரும்பகுதி ஐரோப்பாவிலிருந்தே இறக்குமதியாயிற்று, அல்லது வீட்டு வேலைகளுக்கிடையில் துணிவகைகளின் பெரும் பகுதியை அமெரிக்கப் பெண்டிரே பண்ணைகளில் நெய்தனர். எனவே, தொழிலாளர்களை வெளியேற்றும் நிலையில் தொழிற்சாலை முறை அமையவில்லை. எல்லைப்புறப் பண்ணைகளில் சுதந்திரமாக வாழலாம் என்ற கவர்ச்சியில் தொழிலாளர்கள் மயங்கியிருந்தமையால், பல ஆண்டுகளாகத் தொழிற்சாலைகள் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதில் எல்லைப்புறப் பண்ணைகளுடன் போட்டியிட வேண்டியிருந்தது. மேலும், நியூ இங்கிலாந்தில் ஆரம்ப காலத்தில் ஏற்பட்டிருந்த நெசவாலைகள் பெரும்பாலும் பருத்தியாலைகளேயாகும். அதுவரையில் பருத்தி உற்பத்தி

11 தாமஸ் மூனி (Thomas Moony), 'Nine years in America' (1850), p. 37.

இல்லங்களில் பெருமளவிற்கு ஏற்படவில்லை. எனவே, கைத்தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் தொல்லையுறவில்லை.

இத்தகைய ஆலைகளில் துவக்க காலத்தில் வேலைக்கமர்ந்த கைத்தொழிலாளர்கள் சாதாரணமாகச் சிறுமிகளாகவோ அல்லது திருமணம் ஆகாத பெண்டிராகவோ இருப்பர். சலிப்பூட்டும் பண்ணை வாழ்க்கையிலிருந்து தப்பி, குறைந்தபட்சம் சில ஆண்டுகளுக்கேனும் பண வருவாய்க்குரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளவே இப் பெண்டிர் உலகம் விரும்பிற்று. ஆலைகளில் பெண்கள் வேலைக்கமர்வதால் சமூக மதிப்பு குறைந்து விடாது என்பதால் இப் பெண்கள் ஆலைகளில் வேலைக்கமர்வதைத் தீவினையாகக் கருதாமல் நல்வாய்ப்பாகவே ஏற்றுக்கொண்டனர். ஆரம்பகால ஆலையதிபர்களில் அநேகர் மனிதாபிமான உணர்வு கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். ஆர்வத்தினாலும் கட்டாயத்தினாலும் தூண்டப்பெற்ற ஆலையதிபர்கள் உணவு விடுதிகளை ஏற்படுத்தவும், தொழிலாளர்களுடைய ஒழுக்கத்தைப் பாதுகாக்கவும் முயற்சிகள் எடுத்தனர். மேலும், மத ஆலயங்களுக்கும், நூல்நிலையங்களுக்கும் நன்கொடைகள் அளிப்பதன்மூலமாக அவ் ஆலையதிபர்கள் தொழிலாளர்களுடைய அறிவையும், ஆன்மீக உணர்வையும் தூண்டிவிட முயன்றனர். தொழிற்சாலைப் பெண்களின் உயர்ந்த திறமையையும், அவர்களுடைய வசதி மிகுந்த வாழ்க்கைநிலையையும் கண்ட ஐரோப்பியர்கள் அதிசயமுற்றனர். அந்தோணி டுரோலப் (Anthony Trollope) அவர்களின் பார்வைக்கு லோவல் (Lowell) ஒரு 'வர்த்தக உத்தோப்பியாவாகத்' (Commercial Utopia) தோன்றியது. 'தொழிலாளர்களின் உழைப்பைக்கொண்டு மூலதனத்திலிருந்து இலாபத்தை ஈட்டுகின்ற அமைப்பில் வேலைசெய்யும் தொழிலாளர்களே இப் பெண்களும் ஆண்களுமாவர் என்ற நிலைமைக்குப் பதிலாக, அன்புப் பண்பு நிறைந்த உற்பத்திக் கல்லூரிகளில் சேர்க்கப் பெற்று, பெருங் கல்விக்கூடத்தினால் அறிவும் பண்பும் போதிக்கப் பட்டுப் பண்படுத்தப்பெற்ற ஆண்களும் பெண்களும்போல வாழும் நிலைமையை அத் தொழிலாளர்கள் பெறும் வாய்ப்பினைக்கொண்டதாக' லோவல், அந்தோணி டிரோலப் அவர்களின் கண்களுக்குத் தோன்றியது. [12]

வால்தாமில் 1837-ல் தாம் நேரில் கண்ட நிலைமைகளைப் பற்றி ஹாரியட் மார்டினியு அம்மையார் (Harriet Martineau)

[12] அந்தோணி டுரோலப் (Anthony Trollope), 'North America'(1864), pp. 245, 247.

எழுதும்பொழுது தொழிற்சாலையில் வேலைசெய்பவர்களுடைய வாழ்க்கையைப்பற்றிப் பின்வருமாறு விளக்குகிறார் :

'போஸ்டனிலிருந்து சில மைல்கள் தொலைவிலுள்ள வால் தாமில் அமைந்திருக்கும் கூட்டாண்மைக்குரிய தொழிற்சாலை ஒன்றை நான் பார்வையிட்டேன். லோவல் ஆலைகள் ஏற்படுவதற்கு முன்னரே வால்தாம் ஆலைகள் இயங்கிவந்தன. பருத்தியைமட்டும் நூல் நூற்றுத் துணி நெய்வதற்கும், தேவையான இயந்திரத்தைச் செய்வதற்கும் அவ்வாலைகள் ஏற்பட்டிருந்தன. நான் சென்றிருந்தபொழுது ஐந்நூறு பேர்கள் வேலையில் அமர்ந்திருந்தனர். வேலைக்கமர்ந்திருந்த பெண்களுக்கு உணவும் கிடைத்தது; வாரம் ஒன்றுக்கு இரண்டு டாலர்களும், சில பேர் மூன்று டாலர்களும் சம்பாதித்தனர். இளஞ்சிறார்கள் வாரத்தோறும் ஒரு டாலர் சம்பாதித்தனர். கார்ப்டரேஷன் தந்துதவிய வீடுகளிலேயே இளம் பெண்களில் பெரும்பாலோர் வசித்தனர். அத்தகைய வீடுகள் ஒவ்வொன்றிலும் ஆறுமுதல் எட்டு பேர்கள் குடியிருக்கலாம். உடன்பிறந்த சகோதரிகள் ஆலைகளில் வேலைக்கமர்ந்தவுடன், குடும்பத்தை நடத்தி வீட்டைக் கவனித்துக்கொள்ளத் தங்களுடைய தாய்மாரை அழைத்துவந்தனர். அவர்களுடைய தோழிகளில் சிலர் சொந்த வருமானத்திலிருந்தே வசிக்க வீடு கட்டிக் கொண்டனர். உணவுக்காகும் செலவைக் குறைத்து ஆடைகள் வைத்து அணிந்துகொண்டனர். இவற்றிற்கெல்லாம் வாரம் இரண்டு அல்லது மூன்று டாலர்கள் சேமித்து வந்தனர். சிலர் தங்களுடைய தந்தையரின் சொந்தப் பண்ணைகள் மீதிருந்த அடைமானத்தைப் பணம் கொடுத்து மீட்டனர். மற்றவர்கள் குடும்பத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய இளஞ்சிறார்களுக்குக் கல்லூரிப் படிப்பு வசதி செய்துதந்தனர். பலர் சுதந்திரமாக வாழத் தலைப்பட்டனர். பெண்கள் தங்கள் சொந்த வருமானத்தைக்கொண்டே ஒரு தெரு முழுதும் வீடுகள் கட்டியிருப்பதை நான் கண்டேன். தூண்களையும், வெனிஸ் நகரத்துப் பாணியில் அமைந்த பச்சை நிற ஜன்னல் திரையினையும் உடைய வீடுகள் சிலவற்றையும் நான் கண்டேன். வீடுகளனைத்தும் தூய்மையாகவும், போதுமான அளவுக்கு அகலமாகவும் இருந்தன.

தொழிலாளர்கள் மத ஆலயத்தை எழுப்பினர். அவ்வாலயம் பசுமையான இடத்தில் கம்பீரமாக நிற்கிறது. ஆலய இருக்கை மீது விதிக்கும் வரியைக்கொண்டு மதகுருவின் சம்பளம் (சென்ற ஆண்டு 800 டாலர்களாகும்) வழங்கப்படும். கார்ப்பரேஷன், தொழிலாளருக்கு ஒரு சொற்பொழிவு மன்றத்தை வழங்கியது. அம் மன்றத்தில் அருமையான நூல்நிலையம் ஒன்று எழும்பியது. மழைக்காலங்களில் அம் மன்றத்தில் சொற்பொழிவுகள்

நிகழ்ந்தன. பணத்தின்மூலம் கிடைத்த சிறப்பான அம்சங்கள் இவையாகும். பெண் தொழிலாளர்கள் மதிப்பும் சிறப்பும் உடைய சொந்த நூல்நிலையங்களை வைத்திருந்தனர்.

பல்வேறு தொழிற்சாலைகளின் மானேஜர்கள், கூலிகளில் கூடுமான அளவுக்கு ஏற்றத்தாழ்வு இல்லாமல் பார்த்துக்கொண்டனர். பெண் தொழிலாளர்கள் தங்கள் விருப்பம்போல் ஒரு தொழிற் சாலையைவிட்டு, பிறிதொன்றில் வேலைக்கமரும் உரிமையைப் பெற்றனர். ஆலையில் விரும்பி வேலைக்கமரும் பெண்ணைக் கண் காணிப்பாளர் அன்புடன் வரவேற்று எவ்வளவு காலம் அப் பெண் வேலையில் இருப்பாள் என்பதை அவர் தெரிந்துகொள்ள முனைவார். அப் பெண் ஆறுமாதத்திற்கோ, ஓர் ஆண்டிற்கோ ஐந்து ஆண்டுகளுக்கோ அல்லது வாழ்க்கை முழுவதுமோ அவ் வேலையில் அமர்ந்திருக்க விருப்பம் தெரிவிக்கலாம். தான் திறமை யுடன் செய்யக்கூடிய வேலையையே அந்தப் பெண்மணி ஏற்றுக் கொள்வாள். உடன் வேலைசெய்யும் பெண் தொழிலாளியுடன் ஒத்துப்போக முடியவில்லை என்றாலோ, அல்லது தனக்கு வேலை கொடுத்த முதலாளியை மகிழ்விக்க முடியவில்லை என்றாலோ, அல்லது தனக்கு வேலையில் மனநிறைவு ஏற்படவில்லை என்றாலோ அப்பெண் ஆலையின் கண்காணிப்பாளரை அணுகிப் பருத்தி விதை யிலிருந்து பஞ்சைப் பிரித்தெடுக்கும் வேலையையோ, அல்லது ஆலையிலுள்ள அறைகளைக் கூட்டித் துப்புரவாக்கும் வேலை யையோ, அல்லது வேறு ஏதேனும் தானே செய்யக்கூடிய வேலையைச் செய்வதற்கு அவரிடம் அனுமதிபெறுவாள்.

சராசரியாகத் தொழிலாளர்கள் வாரமொன்றுக்கு எழுபது மணி நேரம் வேலைசெய்கிறார்கள். கூலிகளில் மாற்றமில்லை எனினும், வேலைநேரம் நாளின் கால அளவைப் பொறுத்ததாகும். அனைவரும் அழகாக உடையணிந்து இளம்பெண்களைப்போல் தோன்றினர். அனைவரும் உடல்நலம் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்; அல்லது (ஐக்கிய அமெரிக்காவில் உடல்நலம் பேணுதலைக் குறித்துச் சொல்லப்படுவது மிகையாகத் தென்படுமெனில்) உலகின் மற்றப் பாகங்களில் நிலவுவதைவிட அமெரிக்காவில் உடல்நலம் பேணல் மோசமாக இல்லை எனலாம்.

இந்த உண்மைகள் தெளிவாக உள்ளன. ஐக்கிய அமெரிக்கா வில் உள்ள தொழிலாளர் வர்க்கங்களுடன் பழகித் தெரிந்து கொள்வதிலுள்ள இன்பத்தைப் பற்றி விரிவாகக் குறிப்பிட வேண்டிய தேவையில்லை.'[13]

[13] ஹாரியட் மார்ட்டினியூ (Harriet Martineau), 'Society in America' (1837), II, 57-59.

குமாரி மார்ட்டினியூ அவர்கள் தந்துள்ள இன்பம் பயக்கும் வருணனை ஓவியம் முழு உண்மையை வெளிப்படுத்துவதாக அமையவில்லை. தொழிற் புரட்சி ஏற்பட்ட காலத்தில் அமெரிக்கத் தொழிலாளரின் நிலை ஐரோப்பியத் தொழிலாளரின் நிலையைவிட நிச்சயமாக உயர்ந்தது என்றாலும், மற்றவர்கள் பார்த்துப் பொறுமையடையும் அளவுக்கு உயர்ந்ததல்ல. கம்பெனியைச் சார்ந்த விடுதிகளில் வசித்து, கம்பெனி நடத்தும் கடைகளில் தங்களுடைய வருமானத்தை அடிக்கடி செலவழித்து, கம்பெனியினால் உருவாக்கப்பெற்ற ஆலயங்களிலே தொழுகை நடத்தி, தங்களுடைய தனி வாழ்வை அளவுக்கு மீறி மேலதிகாரிகள் மேற்பார்வையிடுவதற்குப் பணிந்திருந்து, தந்தைபோல் பழகும் ஆலையதிபர்களிடம் கட்டுப்பட்டு வாழ்வதைத் தற்காலத்துப் பெண் தொழிலாளர்கள் ஏற்றுப்பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். பண்ணையில் கடினமாக உழைக்கும் பெண்ணால்கூடத் தொழிற்சாலையில் நெடுநேரம் வேலைசெய்ய முடியாது. தொழிற்புரட்சி துவங்கியபொழுது பெயரளவு கூலிகள் படிப்படியாக உயர்ந்தன. இங்கிலாந்தைப்போலவே, ஐக்கிய அமெரிக்காவிலும் இயந்திரத்தின்மூலம் கிடைக்கும் செல்வப் பெருக்கம் முதலாளி வர்க்கத்திற்கே சென்றது. ஆரம்ப காலத்தில் எழும்பிய ஆலைகளில் சுகாதார வசதிகளும் கிடையா; உடல் நலத்திற்கான வசதிகளும் கிடையா. இத்தகைய சூழ்நிலையில் தான் தொழிலாளர்கள் வேலைசெய்தனர்.

வேலை நேரம் அளவுமீறி நீடிக்கப்பெற்றிருந்தது. பேராசிரியர் எலீ (Ely) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: '1832-ல் உழைப்பு நேரம் 12 முதல் 15 மணி வரையில் நீடித்தது. பொதுவாக நியூ இங்கிலாந்து ஆலைகள் 13 மணி நேரம் வேலை செய்தன. கனெக்டிகட்டில் ஓர் ஆலை 14 மணி நேரம் இயங்கியது. அதே மாநிலத்தில் கிரிஸ்வோல்டில் (Griswold) உள்ள ஈகிள் ஆலையில் (Eagle Mill) உழைப்பு நேரம் 15 மணிகளும் 10 நிமிடங்களும் ஆகும். நியூ ஜெர்சியிலுள்ள பாட்டர்சன் நகரத்து விதிகளின்படி, பெண்களும் குழந்தைகளும் விடியற்காலையில் 4½ மணிக்கே எழுந்து வேலைக்கு வரவேண்டும்.'[14] தொழிற்சாலைகளில் உழைக்கும் குழந்தைகளின் வேலை நேரம் எந்த அளவுக்கு அவர்களுடைய கல்வியைப் பாதிக்கிறது என்பதை ஆய்வதற்கென மெஸ்ஸாசுசெட்ஸ் சட்டமன்றக் குழு ஒன்று 1825-ல் அமைக்கப்பெற்றது. அக் குழு தனது அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: 'ஓய்வு நாட்களைத் தவிர, மற்ற நாட்களில்

[14] ஆர். டி. எலீ (R. T. Ely) 'Labour Movement in America,' P. 49.

12 அல்லது 13 மணிநேரம் வேலை செய்யவேண்டும் என்று தெரியவருகிறது. ஆக, நாள்தோறும் குழந்தைகள் கல்வி பயில வாய்ப்புக் கிடைப்பது அரிது.'[15] லோவல் ஆலைகளில் 1845-ல் சராசரி வேலைநேரம் ஜனவரி மாதத்தில் 11 மணிகளும் 24 நிமிடங்களுமாகும்; ஏப்ரல் மாதத்தில் பதின் மூன்று மணிகளும் 31 நிமிடங்களுமாகும். லோவல் ஆலைகளில், நடைமுறையில் கதிரவனின் உதயத்திலிருந்து மறைவுவரையில் குழந்தைகளும் பெண்களும் வேலை செய்யவேண்டும். பிற்காலத்துத் தொழிற்சாலைகளைப் போலல்லாமல் ஆரம்பகாலத் தொழிற்சாலைகளில் வேலை செய்வதில் துன்பமும் சோர்வும் ஏற்படவில்லை. ஆனால், அத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் எல்லா வயதினரும் நெடுநேரம் உழைக்கவேண்டியிருந்தது.

இங்கிலாந்தில் பயன்படுத்தியதுபோல மெஸ்ஸாசுசெட்ஸ் ஆலைகளில் குழந்தைகளைப் பயன்படுத்தவில்லை. கிராமப் புறங்களிலிருந்தும் பல்வேறு விடுதிகளிலிருந்தும் தொழிலாளர்களைக் கொணர்ந்து தொழிற்சாலைகளில் குவிக்கும்பொழுது, குழந்தைகள் பற்றிய பிரச்சினை எழுகிறது. காலப்போக்கில் குழந்தைகள் பிரச்சினை வளர்ந்தது. அப் பிரச்சினையில் விளைந்த கொடுமையைச் சட்டத்தினால் தடுக்க முடியவில்லை. இத்தகைய சூழ்நிலை, ரோட் ஐலண்டிலும் தென் நியூ இங்கிலாந்திலும் மற்றப் பகுதியிலும் நிலவியது. இப் பகுதிகளில் ஆலை முதலாளிகள் தனிப்பட்ட, வயதுவந்த ஆண் தொழிலாளர்களை மட்டும் வேலைக்கமர்த்தி ஒப்பந்தம் செய்துகொள்ளாமல், தொழிலாளர் குடும்பங்களையே விலைபேசி, வேலைக்கமர்த்தி, ஒப்பந்தம் செய்துகொண்டனர். மெஸ்ஸாசுசெட்ஸ் பஞ்சாலைகளில் 1820-ல் வேலைக்கமர்ந்திருந்த குழந்தைத் தொழிலாளர்களின் வீதாச்சாரம் 45 சதவீதமாகும்; ரோட் ஐலண்டில் 55 சதவீதமாகும். இந்த சதவீதங்கள் 1832-ல் முறையே 21 சதவீதமாகவும், 41 சதவீதமாகவும் குறைந்தன. கம்பளி ஆலைகளில் குழந்தைத் தொழிலாளர்களின் வீதாச்சாரம் இன்னும் குறைவாகும். போஸ்டனில் 1832-ல், நியூ இங்கிலாந்து மாநிலத்தைச் சார்ந்த நுட்பத் தொழில்முறை பயின்றோரும் வேறு தொழிலாளரும் கூட்டிய மாநாடு, தன்னுடைய அறிக்கையில், தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் மொத்தத் தொழிலாளர்களில் ஐந்தில் இரண்டு பங்கினர் குழந்தைகளே யாவர் என்று குறிப்பிட்டுள்ளது. ஃபிலடெல்ஃபியா தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் குழந்தைகள்பற்றிய அறிக்கை

[15] ஜே. ஆர். காமன்ஸ் (J. R. Commons) et al. (eds.), 'Documentary History of American Industrial Society', V, 59.

ஒன்றினை 1830 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 21 ஆம் நாளில் மெக்கானிக்ஸ் ஃப்ரீ பிரஸ் (The Mechanics Free Press) எனும் இதழ் அச்சிட்டுள்ளது. அவ்வறிக்கை பின்வருமாறு :

'பஞ்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களில் பெரும் பாலோர் இளஞ் சிறுவர்களும் சிறுமியர்களுமாவர். அவர்கள் ஆறு வயது முதல் பதினேழு வயது நிரம்பியவர்களாக இருந்தனர். காலைப்பொழுது முதல் மாலை அந்தி மயங்கும் வேளைவரையில் அவர்கள் தொடர்ந்து வேலையில் அமர்ந்திருந்தனர். உணவு அருந்துவதற்கென 1½ மணிநேரம் இடைவேளையும் அவர் களுக்குக் கிடைத்தது.....என்றாலும், அவர்களுக்குக் கிடைத்த கூலியோ மிகவும் குறைவாகும். அத்தகைய குறைந்த வருமா னத்தைக் கொண்டு அவர்களால் வாழமுடியாது. நாள்தோறும் இவ்வேழைக் குழந்தைகளின் உழைப்பை உறிஞ்சி, முதலாளிகள் செல்வத்திலே புரண்டனர். தொழிற்சாலைகளில் வதியும் குழந்தை களின் மன வேதனையைப்பற்றி நம்முடைய பாடக்கட் (Pawtucket) நண்பர் 1830 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 19ஆம் தேதியன்று தங்களுடைய இதழில் உருக்கத்துடன் வெளியிட்டிருந்த கருத்துகளை நாம் ஊன்றிக் கவனித்தோம். அறியாமையில் அமிழ்ந்து கிடந்த பாலைவனத்து அராபியர்களைப் போலவே தொழிற்சாலையில் உள்ள குழந்தைகளும் அறியாமையில் மூழ்கி இருந்தனர் என்ற உண்மையைப்பற்றிய அவரு டைய கண்டுரைகள் (observations) முற்றிலும் சரியே. வேலையில் அமர்ந்திருந்த சிறுவர்கள், சிறுமிகளில் ஆறில் ஒரு பங்கினருக்கு மேற்படாமல் உள்ளவர்கள் மட்டுமே தங்களுடைய சொந்தப் பெயர்களை எழுதவோ அல்லது படிக்கவோ தெரிந்து கொண்டிருந்தனர். மற்றவர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியாது என்பது உறுதியாகும்.[16]

தொழிற்சாலைகளில் வதியும் தொழிலாளர்களைப்பற்றி மிகுதி யான அக்கரையும் கவனமும் காட்டப்பட்டிருக்கலாம். தொழிற் சாலைகளில் வேலை செய்வோரின் எண்ணிக்கையைவிட அதிக எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் வேறு துறைகளில் ஈடு பட்டிருக்கலாம் என்பதை உணரவேண்டும். நியூ இங்கிலாந் திலும் இதே நிலைமை நிலவியது என்பது உண்மையாகும். நியூ இங்கிலாந்தின் கிராமப்புறங்களில் இல்லத் தொழில் முறையே நிலவியது. அப் பகுதிகளில் இல்லங்களிலேயே செருப்புகளும் தொப்பிகளும் மற்றப் பண்டங்களும் செய்யப்பட்டன. அப்பண்டங் களை வெளிச் சந்தைகளில் விற்பனை செய்தனர். கட்டட வேலை

[16] Ibid., V. 61-62.

யிலும் அச்சுத் தொழிலிலும் பயிற்சிபெற்ற தொழிலாளர்களே ஈடுபட்டிருந்தனர். இத் தொழிலாளர்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்வோரைவிட எளிதாகத் தங்களுடைய கூலியளவை நிலைநிறுத்திக்கொண்டனர். கால்வாய்களையும் இருப்புப்பாதைகளையும் தேர்ச்சிபெறுத தொழிலாளர்களே கட்டினர். தேர்ச்சி பெறுத தொழிலாளர்களில் பலர், குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களேயாவர். தேர்ச்சிபெறுத இத்தொழிலாளர்கள் நல்வினைப் பயனுய் மாதமொன்றுக்கு எட்டு டாலர்கள் முதல் பத்து டாலர்கள் வரை கூலியாகப் பெற்றனர். அவர்களுக்குக் கூலியுடன் இலவச உணவும் கிடைத்தது. உடல்நலத்தை பாதிக்கக்கூடிய கெட்ட சூழ்நிலைகளில்தாம் அவர்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது.

தொழிற்புரட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் பெரும்பாலான தொழிலாளர்கள் வசதியான சூழ்நிலைகளிலேயே வாழ்ந்தபோதிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நாற்பதுகளில் (1840-49) சூழ்நிலைகள் மாறிவிட்டன. அப் பத்தாண்டுகளில் குடியேற்றம் பெருகியது. நகரங்களின் பல பகுதிகளில் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று குடியேறினர். எனவே, தொழிலாளர்க்கிடையில் போட்டி ஏற்பட்டு, கூலிக் குறைப்புகள் ஏற்பட்டன. 1837-ல் பொருளாதார பீதி துவங்கியதிலிருந்து ஒவ்வொரு தொழிலிலும் கூலிக் குறைப்பு ஏற்பட்டது முக்கியமாக நகரங்களில் வாழ்க்கைச் செலவு உயர்ந்துகொண்டே சென்றது. நியூயார்க் நகரில் 1843 முதல் 1850 முடிய உள்ள ஆண்டுகளில் வீட்டுக்குத் தேவையான பல்வேறு பண்டங்களின் விலை 50 சதவீதம் உயர்ந்தது என்றும், 1851-ல் ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்தின் குறைந்தபட்ச வார பட்ஜெட் 10·87 டாலர்களாகும் என்றும் ஹொரேஸ் கிரீலி (Horace Greely) கணக்கிட்டுள்ளார். எனினும், அந்த வேளையில் தச்சர்களும், காரைபூசி ஓட்டுபவர்களும், செங்கல் அமைப்போரும் வாரமொன்றுக்குச் சராசரியாக 10 டாலர்கள் சம்பாதித்து வந்தனர். பெரும்பாலான ஓவியர்களும், தொப்பி செய்வோரும், பெட்டி செய்வோரும், மற்றும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களும் வாரமொன்றுக்கு நான்கு, ஐந்து, ஆறு டாலர்களைப் பெற்றனர். நியூயார்க் நகரில் ஏழில் ஒருவர் வக்கில்லாதவர் என்று 1845-ல் நேரில் கண்ட ஒருவர் குறிப்பிட்டுள்ளார். நகரங்களில் வீட்டுப் பிரச்சினை மோசமான நிலையில் இருந்தபொழுதுதான் மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளும் நிலவின. வீடுகள் கட்டப்படுவதைவிட விரைவாக நகரங்களில் மக்கள் வெள்ளம்போல் சென்று புதிதாகக் குடியேறினர். இருள் சூழ்ந்த நிலையிலும் ஒளிக்கதிர்

துலங்குவது போல, கிளர்ச்சியின் காரணமாகச் சில ஆலைகளில் வேலை நேரம் 11 மணியாகக் குறைந்தது.

1840—'59-ல் நியூ இங்கிலாந்தின் நெசவாலைகளிலும், மற்ற இடங்களிலும் நிலைமை இன்னும் சீர்கேடடைந்தது. கூலிகள், வேலை நேரம், குற்றவாளிப் பட்டியல் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் முதலாளிகள் ஒன்றுசேர்ந்து கட்டுப்பாடான ஒப்பந்தங்கள் செய்துகொண்டனர். தொழிலாளர்களின் கூலியை அவர்கள் குறைத்தனர். தந்தைக் கொள்கை வழி (paternalism) முதலாளிகள் நடந்து கொள்வதைத் தொழிலாளர்களால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. பண்ணையில் வேலை செய்யும் பெண்களைக் கடத்திச் செல்வதற்காக, நியூ இங்கிலாந்தின் உட்பகுதியில் நெசவாலை முதலாளிகளின் ஏஜெண்டுகள் அலைந்து திரிந்தனர். ஆக, பெண் தொழிலாளரின் பொற்காலம் மறைந்து விட்டது; 'வெண்ணிற கவுன்களை அணிந்து ஜனாதிபதிகளை வரவேற்க அணிவகுத்துச் செல்லும் பெண்களும், வெளிநாட்டு விருந்தினர்களிடத்தில் அறிவுக் கூர்மையுடன் பேசித் தர்க்கம் செய்யும் பெண்களும், கவிதைகளையும் பழம் பெரும் இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டிக் கதைகளை எழுதும் பெண்களும் பஞ்சாலைகளிலே இன்று காணப்படவில்லை' என்பதாக 1850-ல் வேர் (Ware) குறிப்பிடுகிறார். 'தங்களுடைய வாழ்க்கைத்தரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கென நீண்ட காலத்திற்குப் பயனற்ற கிளர்ச்சியில் ஈடுபட்டு, ஆலைகளை விட்டு அப் பெண்கள் வெளியேறினர்' என்றும் வேர் குறிப்பிடுகிறார்.[17] அயர்லாந்திலிருந்து வந்து புதிதாகக் குடியேறியவர்களாலும் ஏற்பட்ட விளைவே அப் பெண்கள் வெளியேறியமை ஆகும். புதிதாகக் குடியேறிய ஐரிஷ்காரர்கள் நியூ இங்கிலாந்து ஆலைகளில் புகுந்தனர். அவர்கள் ஒரு புதிய தொழிலாளர் சக்தியாக மாறினர். தொழிலாளர் நிலைமை சீர்கெட்டு வருவதைப்பற்றித் தொழிலாளர் பத்திரிகைகளும் சீர்திருத்தக்காரர்களும் தொடர்ந்து சரியான முறையில் விளக்கி வந்தனர். வெளிநாடுகளிலிருந்து வரும் பிரயாணிகள் அமெரிக்கத் தொழிலாளரின் நிலைமையைக் குறித்து நன்னம்பிக்கை கொண்டு, பாராட்டுத் தெரிவிப்பதைத் தொழிலாளர் பத்திரிகைகளும் சீர்திருத்தக்காரர்களும் விரும்பவில்லை.

[17] இக் காலத்தில் தொழிலாளர்கள் எவ்வாறு தாழ்ச்சியுற்றனர் என்பதைத் தெளிவாக என். ஜே. வேர் அவர்கள் நான்காவது அதிகாரத்திலும், ஏழாவது அதிகாரத்திலும் விளக்கியுள்ளார். வீரா ஷலாக்மேன் (Vera Shlakman), 'Economic History of a Factory Town', chaps. 5 and 6. காண்க.

தொடக்ககாலத் தொழிற்சங்கங்கள்

தொழிற் புரட்சியின் தோற்றமும், நகரங்களுக்குச் சென்று தொழிலாளர்கள் குவிந்தமையும், தொழிலாளரின் பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றமும் ஆகிய மூன்று காரணங்களாலேயே அமெரிக்காவில் தொழிற் சங்கங்கள் வளர்ச்சியுற்றன. தொழிற் சாலைமுறை தோன்றுவதற்கு முன்னர், பெரும்பாலான பொறிவழிப் பண்டங்களை இல்லத்திலேயோ அல்லது சிறு கடையிலேயோ உற்பத்தி செய்தனர். நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற தொழிலாளர்களே இப் பண்டங்களை உற்பத்தி செய்தனர். ஒரு சராசரி வேலையாள், பயிற்சி பெறுவோனுக்குப் பணியாற்றியே தனக்குரிய தொழிலைக் கற்றுக்கொண்டான். பின்னர் சிலவாண்டுகளுக்குக் கூலி பெற்றுக்கொண்டே தொழிலைக் கற்றுக்கொள்ளும் தொழிலாளியாக அவன் வேலை செய்தான். இறுதியில் அவன் தகுமைத் தொழிலாளியாக மாறினான். காலனிகாலத்தில் கூலி பெறும் தொழிலாளிவர்க்கம் என்ற கூட்டம் உண்டாகவில்லை. இயந்திர சாதனங்களும் தொழிற்சாலைமுறையும் ஏற்படவே, இந்தச் சூழ்நிலை மாறத் தொடங்கியது. கைத்தொழில் கருவிகளுக்குப் பதிலாக இயந்திர சாதனங்கள் வழக்கத்திற்கு வரவே, தேர்ச்சி பெற்ற தொழிலாளிக்கு நீண்டகாலப் பயிற்சி தர வேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று. கைத்தொழில் முறையில் உற்பத்தி செய்வதைவிட இயந்திரத்தை இயக்கி உற்பத்தி செய்யும் முறையைத் தொழிலாளி கற்றுக்கொண்டான். அது மாத்திரமன்று ; ஒரேவகையான இயந்திரத்தை மட்டுமே அவன் இயக்குவதற்குப் பழகி இருந்தான் ; புதுமுறை உற்பத்தியில் முக்கிய அம்சமாக சிறப்புத்தேர்ச்சி விளங்கியதுதான் இதற்குக் காரணமாகும். மேலும், புது இயந்திரம் மிகவும் விலையுயர்ந்ததாகும். பணம் படைத்த முதலாளியே புதிய இயந்திரங்களை வாங்க முடியும். எனவே, வேலை தேடி அலையும் தொழிலாளி இயந்திரங்களின் சொந்தக்காரர்களாகிய முதலாளியையே அணுகவேண்டும். இயந்திரக் கண்டுபிடிப்பிற்குப் பின்னரும் பலவாண்டுகளுக்குக் கைத்தொழில் உற்பத்தியே தொடர்ந்து நிலவியது. எனினும், மிகவும் குறைந்த செலவில் இயந்திரத்தின்மூலம் உற்பத்தி செய்ய முடிந்ததால் கைத்தொழில் உற்பத்தி காலப்போக்கில் நசித்துவிட்டது.

இயந்திரத்தை நாடிச் சென்று தன்னுடைய உழைப்பைக் கூலிக்கு விற்கவேண்டிய கட்டாயம் தொழிலாளிக்கு இந்த நாட்டில் முதன்முதலில் ஏற்பட்டதால், கூலி பெறும் தொழிலாளி வர்க்கம் ஒன்று உருவாகியது. பதினெட்டாம் நூற்றாண்டின்

பிற்பகுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மேலே குறிப்பிட்ட போக்கினைத் துரிதப்படுத்தும் வகையில் வணிக முதலாளியின் ஆதிக்கம் ஏற்பட்டது. இவ்வாண்டுகளில் நாட்டின் பொருளாதார வாழ்வில் வணிக முதலாளி முக்கிய பங்கு ஏற்றான். மலிவாகக் கிடைக்கும் இடத்தில் வாங்கியும், விலையுயர்ந்த இடத்தில் பண்டங்களை விற்றும், மொத்த வியாபாரி யாகவும், பொருள்களை இறக்குமதி செய்யும் வர்த்தகனாகவும், ஏற்றுமதி செய்யும் வர்த்தகனாகவும், வணிக முதலாளி திகழ்ந்தான். சில வேளைகளில், தனிப்பட்ட தொழிலாளிக்கும் சிறு கடைக் காரனுக்கும் அவ் வணிக முதலாளி கடன் தந்து உதவினான். தன்னுடைய வியாபாரத்தை மிகவும் சிறந்த பொறிசெய் தொழிலாகவும் அவன் பெருக்கினான். எந்தச் சமயத்திலும் அவன் பொறிசெய் தொழிலதிபர்களிடையே போட்டியை உண்டாக்கி னான்; விலைகளைக் குறைத்தான்; தகுமைத் தொழிலாளர்களை அவர்களுடைய வேலையாட்களிடமிருந்து பிரித்துவைத்தலைத் துரிதப்படுத்தினான். சந்தைகளுக்கு ஏற்பட்ட கடும் போட்டி யில் சிக்கி, வணிக முதலாளியின் தாற்றுக்கோலினால் தூண்டப் பெற்று, வேறு வழியின்றி வேலைதரும் முதலாளிகள் கூலியைக் குறைப்பதன்மூலமாகவும் வேலை நேரத்தை அதிகரிப்பதன் மூலமாகவும் பண்டங்களின் விலையைக் குறைக்க முயன்றனர்.

கூலி பெருமல் பயிற்சி பெறுவோரை ஊக்குவிப்பதற்காகவும், உயர்ந்த வேலைத்தரத்தைக் காக்கவும், பண்டங்களின் தரத்தைப் பாதுகாக்கவும் வேலை தரும் முதலாளிகள் சங்கங்கள் அமைத்த னர். மேலே குறிப்பிட்ட, தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளின் காரணமாக அம் முதலாளிகள் உற்பத்தி செலவைக் குறைக்கவும் இலாபத்தைப் பெருக்கவும் தங்களது சங்கங்களைப் பயன்படுத்த முனைந்தனர். தங்களுடைய நலன்களைப் பாதுகாத்துக்கொள்வ தற்காக வேலையாட்களும் பையப்பைய சங்கங்களை அமைக்க முற் பட்டனர். குறுகிய காலத்திய வட்டாரக் கைத்தொழில் சங்கங்கள் 1780-1789 ஆண்டுகளில் ஏற்பட்டன. (ஓரளவுக்கு நிரந்தரமான சங்கங்கள் 1790-1800 ஆண்டுகளில் ஏற்பட்டன.) எடுத்துக் காட்டாக, பிலடெல்ஃபியா செருப்புத் தொழிலாளர்கள் சங்கம் 1792 ஆம் ஆண்டிலும் நியூயார்க் அச்சுத் தொழிலாளர்கள் சங்கம் 1794 ஆம் ஆண்டிலும் தோன்றின. இத்தகைய அமைப் புகள் வட்டாரச் சார்புடையவைகளாகும். எனினும், மற்ற நகரங்களிலும் ஒரேமாதிரியான தொழிலில் இத்தகைய சங்கங்கள் ஏற்பட்டிருந்தன. இச் சங்கங்களுக்கிடையே தொடர்பு இருந்தது. பிற்காலத்துச் சங்கங்களைப்போலவே ஆரம்ப காலத்திய சங்கங்கள், கூலி உயர்வுக்காகவும் வேலை நேரக்

குறைப்பிற்காகவும் (வேலை நிலைமைகளை உயர்த்துவதற்காகவும்) கூட்டுப்பேர முறையைப் பயன்படுத்தின. மேலும், தொழிலாளர்கள் நோயுற்ற காலத்தில் சலுகைகள் பெறவும் ஈமச்சடங்குகளுக்கு வேண்டிய சலுகைகள் பெறவும் இச் சங்கங்கள் பாடுபட்டன.

துவக்க காலத்தில் தொழிலாளர் இயக்கம் கொஞ்சங்கொஞ்சமாக வளர்ந்து குறிப்பிட்ட சில பெரும் நகரங்களில்மட்டும் வேரூன்றியபோதிலும், பிற்காலத்திய தொழிலாளர் போராட்டங்களில் கண்டுபிடித்துப் பயன்படுத்திய வழிமுறைகள் அனைத்தையும் துவக்ககாலத் தொழிலாளர் இயக்கம் பயன்படுத்தியுள்ளது. கூலித்தகராறு ஒன்றில் சமாதானத்தை ஏற்படுத்த பிலடெல்பியா செருப்புத் தொழிலாளர்கள் 1799-ல் கூட்டுப்பேர முறையைப் பயன்படுத்தினர். அதற்குப் பின்னர் பல்வேறு சங்கங்கள் அந்த வழிமுறையைத் தொடர்ந்து பயன்படுத்தின. வேலை நிறுத்தங்கள் சாதாரணமாக நிகழ்வதில்லை. எனினும், முதலாளிகளை எதிர்த்து பிலடெல்பியா அச்சுத் தொழிலாளர்கள் 1786 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம் செய்தனர். நடந்து செல்லும் தூதுவர்கள் (walking delegates) அல்லது வாணிப ஏஜெண்டுகள் (business agents) என்த் தற்காலத்தில் அழைக்கப்படும் அதிகாரிகள் செய்துகொண்ட ஒப்பந்தங்களின்படி முதலாளிகளும் தொழிலாளர்களும் நடந்துகொள்கின்றனரா வெனக் கண்காணித்து வந்தனர். வேலைதரும் ஒவ்வொரு முதலாளியும் தொழிலாளர் சங்கத்திலுள்ள உறுப்பினர்களை மட்டுமே வேலைக்கமர்த்தவேண்டும் என பிலடெல்பியா செருப்புத் தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தியமையால், 1794-ல் முதலாளிகள் கடையடைப்பு (closed shop) செய்தனர். வேலை நிறுத்தக்காரர்கள் தொழிலகங்களைப் பகிஷ்காரம் (boycott) செய்யும்படியும் தொழிலாளர்களைத் தூண்டினர். தங்கள் கூலியையும் வேலைத் தரத்தையும் காத்துக்கொள்ளும் வகையில் அவர்கள், கூலி பெருமல் பயிற்சி பெறுவோரைக் கட்டுப்படுத்தி வைத்தனர். 'தொழிலைக் கற்றுக்கொள்வோரும், அடிக்கடி வெளியேறும் பயிற்சி பெறுவோரும், கூலியும் பயிற்சியும் பெறுவோரும், ஏனைய இளந்தொழிலாளர்களும் அரைவேலை நேரத்திற்கும் குறைவாக உழைத்து முழுத்தொழிலாளரின் கூலிக்குக் குந்தகம் விளைவிக்கின்றனர்' என நியூயார்க் அச்சுத் தொழிலாளர் சங்கம் 1809-ல் புகார் செய்துள்ளது. தங்களுடைய நலன்களைப் பாதுகாக்கவும் தொழிலாளர் சங்கங்களை எதிர்க்கவும் முதலாளிகளின் சங்கங்கள் ஏற்பட்டன.

தொழிலாளர் சங்கம் படிப்படியாக முன்னேறி வந்தது என்பதை ஆராய்ச்சியாளர்கள் உணரவேண்டும். தொழிலாளர்

சங்கம், தேசிய சங்கமாகத் திகழ்வதற்கு முழுதேர அதிகாரிகளும், செலவழிக்க பணமும் (வேலை நிறுத்தத்திற்கான நிதியும்), வேலைநிறுத்தம்மூலம் அடையக் கூடிய தேவைகளைப்பற்றி முழுக்கமிடுதலும் தேவைப்பட்டன. தேசிய அமைப்பை உருவாக்குவதில் ஏற்படும் குழப்பத்தின் காரணமாக தொழிலாளர் சங்க வளர்ச்சி தடைப்பட்டது. ஓவன்(Owen), கிரீலி (Greeley), பிரிஸ்பேன் (Brisbane), ஈவான்ஸ் (Evans) ஆகியோரைப் போலவே தொழிலாளர்களும் பல்வேறு சீர்திருத்தங்களில் அக்கறை காட்டினர். இதனைப்பற்றிப் பின்னர் எழுதுவோம். ஓவன், கிரீலி, பிரிஸ்பேன், ஈவான்ஸ் போன்ற பெரியார்கள், தொழிலாளர்களை முக்கிய இலட்சியத்தை விட்டுவிட்டு வேறு தவருன பாதையில் திருப்பிவிட்டார்கள் என்று குற்றம் சாட்டப் பெற்றனர். உண்மையில் சொல்லப்போனால், உள்நாட்டு யுத்தம் ஏற்படும்வரை தொழிலாளர் அமைப்பு பெரும்பாலும் சீர்திருத்த இயக்கமாகவே விளங்கியது. தொழிற்சங்கங்கள் இன்னும் கரு நிலையிலேயே இருந்தன.

சட்டபூர்வமாகத் தங்கள் நிலை என்ன என்பதை வரையறுத்துக்கொள்வதே தொழிற்சங்கங்களுக்குள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒன்றுகும். இங்கிலிஷ் பொதுச்சட்டவிதியின் (English common law) முன், கூலி உயர்வுக்காகத் தொழிலாளர் ஒன்று கூடுதல் பொதுநல விரோதமான சதிச்செயலாகும். அமெரிக்காவில் இத்தகைய சட்டம் கிடையாது. ஆகவே இங்கிலிஷ் பொதுச்சட்ட விதி அமெரிக்காவில் செல்லுமா என்ற பிரச்சினை எழுந்தது. 1806 முதல் 1815 முடிய ஆறு சதிவழக்குகள் நடைபெற்றன. அவற்றில் நான்கு வழக்குகளில் தொழிலாளர்கள் தோல்வியுற்றனர். சில வழக்குகளில் வழங்கப்பெற்ற தீர்ப்பு இங்கிலிஷ் பொதுச்சட்ட விதிக்குச் சாதகமாக அமைந்தது. பெடரலிஸ்டுகள், குடியரசுக் கட்சியினர் ஆகியோரது அரசியல் தத்துவங்களைப்பற்றிய சர்ச்சைகள் இத்தகைய வழக்குகளில் எழுந்தன. இங்கிலிஷ் பொதுச்சட்ட விதி அமெரிக்காவில் செல்லும் என்று பெடரலிஸ்டுகளும், அமெரிக்காவில் செல்லாது என்று குடியரசுவாதிகளும் விவாதித்தனர். இத்தகைய பொருளாதார, அரசியல், வர்க்கப் போராட்டத்தில் நீதிமன்றங்கள் ஒதுங்கி நின்று நடுநிலைமை வகிக்காமல், தத்தமக்குப் பிடித்தமான அரசியல் தத்துவங்களை ஆதரிக்கத் தொடங்கின. முதல் வழக்கில் பெடரலிஸ்டு நீதிபதி பின்வருமாறு தீர்ப்பு வழங்கினர்: 'எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், இந்த நடவடிக்கை (வேலை நிறுத்தம்) பொதுமக்களுக்குத் தொல்லை தரக்கூடியதாகவும் தனிப்பட்டோருக்கு இன்னல் விளைவிப்பதாகவும் உள்ளது.....

தொழிலாளருக்குக் கேடு பயப்பதற்கவும் உள்ளது.....நகர வர்த்தகத்தைக் குலைத்து, சமூக முழுதும் தொழிலாளர் ஆதிக்கத்தில் இருக்கும்படிச் செய்துவிட்டது.....கூலி உயர்வுக்காக ஒன்று சேரும் தொழிலாளர்கள் இரண்டு நோக்கங்களைக் கொண்டுள்ளனர். முதல் நோக்கம், தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதாகும்..... மற்றொன்று, தொழிற்சங்கங்களைச் சாராதவர்களைத் துன்புறுத்துவதாகும். தொழிலாளர்களின் இவ்விரு நோக்கங்களையும் சட்டம் கண்டிக்கிறது.'[18] காலப்போக்கில், தொழிலாளர்கள் சங்கங்களை அமைப்பது சதிச்செயல்தானே என்ற ஆராய்ச்சியை விட்டுவிட்டு, தொழிலாளர்கள் தங்களுடைய இலட்சியங்களை நிறைவேற்றிக்கொள்ள கடைபிடிக்கும் வழிமுறைகள் சதித்தன்மை உடையனவா என்ற ஆராய்ச்சியை நீதி மன்றங்கள் மேற்கொண்டன. சங்கங்களில் சேர்வதற்குத் தொழிலாளர்களுக்கு உரிமையுண்டு என்ற புகழ்வாய்ந்த முடிவை 1842-ல்[19] எடுத்தனர். இருந்தபோதிலும், பலவாண்டுகளுக்கு வேலை நிறுத்தங்கள், பகிஷ்காரங்கள், இன்னும் ஏனைய தொழிலாளர் போர்க் கருவிகள் முதலியனவற்றிற்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் தருவதுகுறித்து வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்தவண்ணம் இருந்தன.

பத்துமணிநேர வேலையைக் கோரி, 1827-ல் பிலடெல்பியா தச்சுத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். அதே ஆண்டில்தான் அமெரிக்கத் தொழிலாளர் இயக்கம் தோன்றியது எனலாம். வர்ணம் பூசும் தொழிலாளர்களும், கண்ணுடித் தொழிலாளர்களும், செங்கல் தொழிலாளர்களும் பிலடெல்பியா தச்சுத் தொழிலாளர்களுடன் உடனடியாகச் சேர்ந்துகொண்டனர். மெக்கானிக்ஸ் யூனியன் ஆஃப் டிரேடு அசோசியேஷன்ஸ் (Mechanics' Union of Trade Associations) ஒன்று உருவாகியது. இதில் பதினைந்து சிறு யூனியன்கள் அங்கம் வகித்தன. பிலடெல்பியாவின் தலைமையைப் பின்பற்றி, கிழக்குக் கடற்கரையிலும் மத்திய மேற்கிலும் முன்னணியில் உள்ள நகரங்களில் வட்டார யூனியன்கள் எழுந்தன. ஒரு டஜனுக்கு மேற்பட்ட நகர வணிக சங்கங்கள் ஏற்பட்டன. தொழிற்சங்கங்கள் நகரங்களிலும் பரவியதோடு அமையாமல், செருப்புத் தொழிலாளர்கள், சீப்புத் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள், அச்சுத் தொழிலாளர்கள் ஆகியவர்களுடைய ஐந்து யூனியன்கள் தேசிய சங்கங்களாகவும் முகிழ்த்தன. தொழிலாளர்

[18] ஜே. ஆர். காமன்ஸ் (J. R. Commons) et al. (eds.), op. cit., III 230-233.

[19] Commonwealth v. Hunt, 4 Metcalf III (1842).

களுடைய பிரதிநிதிகளின் முதல் மாநாடு 1834-ல் கூடியது. தொழிற்சங்கங்கள் வளர்ந்து தேசிய அந்தஸ்தை அடைவதற்கு ஜனத்தொகைப் பெருக்கமும், நகரமயமாதலும் (urbanization), போக்குவரவு வசதிகளின் வளர்ச்சியும், தொழிற்றுறையில் ஏற்பட்ட விரிவான போட்டியும் காரணங்களாக அமைந்தன.

சீர்திருத்த இயக்கத்தில் தொழிலாளரும் தொழிற்சங்கங்களும்

அமெரிக்கத் தொழிற்சங்கங்கள் தொழிற்சாலைகளில் உருவாகவில்லை என்றும், பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த பயிற்சி பெற்ற தொழிலாளர்களிடையே உருவாகின என்றும் நாம் அறிவோம். இத் தொழிலாளர்கள் முழுப்பயிற்சி பெறுவதில் பல ஆண்டுகளைச் செலவழித்தனர். மிக உயர்ந்த பயிற்சியும் சுறுசுறுப்பும் உடையவர்களாக அத் தொழிலாளர்கள் திகழ்ந்தனர். அவர்களுடைய கோரிக்கைகளில் வேலைநேரக் குறைப்பும் சிறந்த வேலை நிலைமைகளும் இடம்பெற்றன. இவைகளுடன் அமையாது, தொழிலாளர்கள் இலவசக் கல்விவசதி வேண்டும் என்று கோரினர்; கடனடைக்க இயலாதவர்களுக்குச் சிறைத்தண்டனை வழங்கக்கூடாது என்றும் கோரினர்; அளவுமீறி குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தக்கூடாது என்றும் போரிட்டனர்; நுட்பத்தொழிலாளரின் மீள்வுரிமைச் சட்டங்கள் (mechanics' lien laws), சரிசமமான வரிவிதிப்பு, பொதுநல அதிகாரிகளை நேரடியாகத் தேர்ந்தெடுத்தல், மற்றும் பல்வேறு அரசியல் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றையும் கோரினர்.[20]

இத்தகைய சீர்திருத்தங்களைக் கோரிநின்ற தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் பல்வேறு துறைகளில் பணியாற்றும் சீர்திருத்தக்காரர்களும், தொழிற்சங்கங்களைச் சாராத தொழிலாளர்களும், மத்தியதரவர்க்கத்தினரும் முன்வந்தனர். இத்தகைய ஆரம்பகால சங்கங்களின் சீர்திருத்தத் திட்டம் விரிவாக அமைந்திருந்தமையால் அரசியல் நடவடிக்கைமூலமே அத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பது தெளிவு. அரசியல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில், புதிய அல்லது திருத்தப்பெற்ற இராஜ்ஜிய அரசியல் சட்டங்களின்மூலம் வாக்குரிமை எல்லோருக்கும் வழங்கப்பெற்று விரிவுபடுத்தப்பெற்றது. பிலடெல்பியாவிலுள்ள வர்த்தக அமைப்புகளின் நுட்பத்தொழிலாளர் யூனியன்

[20] அளவோடு குடிக்கும் உரிமை, கூதாட்ட ஒழிப்பு, மரணதண்டனை ஒழிப்பு, சர்வாதீனங்களை ஒழித்தல், தனிப்பட்டோர் நடத்தும் பாங்குகளைத் தடுத்தல், வலுக்கட்டாய இராணுவப் பயிற்சி ஒழிப்பு, பெண்களுக்கு வாக்குரிமை ஆகிய சீர்திருத்தங்களையும் தொழிலாளர்கள் கோரினர்.

(Mechanics' Union of Trade Associations), 'தொழிலாளர் நலனுக்காகப் பாடுபடும்' பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க நகரிலுள்ள யூனியன்களனைத்தும் ஒன்றுசேர வேண்டும் என்று 1828-ல் கருத்து தெரிவித்தது. அவ்வாறே யூனியன்களனைத்தும் ஒன்று சேர்ந்தன. ஜாக்சனின் கட்சியும் மற்றக் கட்சிகளும் பல்வேறு யூனியன்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தன. மற்ற நகரங்களும் ஃபிலடெல்பியாவின் உதாரணத்தைப் பின்பற்றின. குறைந்தபட்சம் பதினைந்து மாநிலங்களில், பல்வேறு வட்டாரங்களில் தொழிற்கட்சிகள் தோன்றின. ஐம்பது தொழிலாளர் பத்திரிக்கைகள் தோன்றின. தொழிலாளர்களின் முதல் அரசியல் முயற்சி, வடகிழக்குப் பிரதேசத்தில் கால் ஊன்றி பலம் பெற்றது.

தொழிலாளர்கள் அரசியல் விவகாரங்களில் தலையிட்டுக் கொஞ்ச நாட்களே ஆயின. அவர்கள் அரசியலில் புகுந்தமையால் ஏற்பட்ட விளைவுகள் வட்டாரத்தைச் சார்ந்த விளைவுகளேயாம்; அவை நிரந்தர விளைவுகளும் அல்ல. தொழிலாளர்கள் அரசியல் விளையாட்டிற்குப் புதியவர்கள் ஆவர். எனவே, அவர்களால் பழைய கட்சிகளின் திறமையான தாக்குதல்களைச் சமாளிக்க இயலவில்லை. எனவே, தொழிலாளரின் அரசியல் இயக்கம் 1832-ல் மறைந்துவிட்டது. இவ்வாறே, 1837-ல் ஏற்பட்ட பொருளாதார பீதியின் விளைவாக தொழிற்சங்கங்கள் சிதறுண்டன. தொழிற்சங்கத்தின் தற்காலிக சீர்குலைவின் விளைவாக, அரசியல்வாதிகளும் பல்வேறு சீர்திருத்தக்காரர்களும் தங்களுடைய சீர்திருத்த திட்டங்களுக்கு ஆதரவாகத் தொழிலாளர்களைத் திரட்டுவதற்கு வழி ஏற்பட்டது. 1820-29 ஆண்டுகளில் விளக்கிய சீர்திருத்த திட்டங்களை 1840-49 ஆண்டுகளில் புதுப்பித்தனர்; புதிய திட்டங்களையும் வகுத்தனர். இவ்வாண்டுகளில் கூட்டுறவு வாழ்க்கை முறைக்கு வேண்டிய திட்டங்களை ஆதரித்துப் பலர் பிரசாரம் செய்தனர். தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் இத் திட்டங்களில் ஆர்வம் ஏற்பட்டிருந்தது. ராபர்ட் ஓவன் அவர்கள் 1820-29 ஆண்டுகளில் யுத்தோதரப்பிய சோஷலிசத்தை அமெரிக்காவில் இறக்குமதி செய்தார். இந்தியானாவில் உள்ள நியூ ஹார்மனியில் ஓவன் தனது கூட்டுறவுச் சோதனையை முயற்சித்துப் பார்த்தார். அவருடைய திட்டம் வெற்றியடையவில்லை. சார்லஸ் ஃபூரியர் (Charles Fourier) எனும் பிரெஞ்சுக்காரர் விளக்கிய கூட்டுறவுச் சங்கத்தை ஆதரித்து ஹொரேஸ் கிரீலி அவர்களும் ஆல்பர்ட் பிரிஸ்பேன் அவர்களும் விரிவான பிரசாரம் செய்து விளம்பரப்படுத்திய பின்னரே, 1835 முதல் 1844 வரையுள்ள ஆண்டுகளில் கூட்டுறவு இயக்கத்தின் மீது புதிய உற்சாகம்

அனைவருக்கும் ஏற்பட்டது. மனிதனைச் சூழ்நிலையே உருவாக்குகிறது என்று ஓவன் கருதினார். ஓவனின் கருத்திற்கு மாறுக, ஃபூரியர் அவர்கள் வேறோர் கருத்தினை வழங்கினார். மனித சமூகம், 300 முதல் 1800 முடிய எண் உள்ள மக்களைக் கொண்ட, பொருளாதாரத் தன்னிறைவு உடைய குழுக்களாகப் பிரிந்து, பொதுக் கட்டடங்களில் தனித் தனிக் குழுக்களாகக் கூட்டு வாழ்க்கை நடத்தினால் மக்களிடையே சிக்கன வாழ்வும் திறமையும் உண்டாகும் என்ற கருத்தை ஃபூரியர் வழங்கினார். 1820 முதல் 1850 முடிய உள்ள காலத்தில், இத்தகைய பல்வேறு வகையான 'குழுக்கள்' (communities) ஏற்பட்டன. இக்குழுக்களில் போஸ்டனுக்கருகில் ஏற்பட்ட புரூக் பண்ணையே (Brook Farm) மிகவும் புகழ்வாய்ந்தது ஆகும்.

ஜார்ஜ் ஹென்றி ஈவான்ஸ் அவர்கள் நியூயார்க் தொழிற் சங்கத்தின்மூலம் புகழ் அடைந்தவர் ஆவார். அவருடைய தூண்டுதலினால் தொழிலாளர்கள் அனைவரும் 'விவசாய லீக்' கின் (Agrarian League) நடவடிக்கைகளிலும் நிலச் சீர்திருத்த இயக்கத்தின் செயல்முறைகளிலும் கலந்துகொண்டனர். பொது நிலத்தைக் கம்பெனிகளுக்கும் ஊகவணிகருக்கும் விற்கக்கூடாது என்றும் உண்மையாகவே குடியேறுபவர்களுக்குமட்டுமே நிலத்தை இலவசமாகப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்றும் ஈவான்ஸ் திட்டம் குறிப்பிட்டுள்ளது. 1837-ல் ஏற்பட்ட பொருளாதார பீதியைத் தொடர்ந்து உண்டான இருண்ட நாட்களில் ஈவான்ஸ் அவர்களுடைய கிளர்ச்சி மக்கள் கவனத்தைக் கவர்ந்தது. இதன் விளைவாக, 1862ஆம் ஆண்டின் குடும்ப மனையகச் சட்டம் அமலுக்கு வந்தது. ஈவான்ஸ் திட்டத்தைவிடத் தொழிலாளருக்கு மிகவும் பயனளிக்கக்கூடியது, பத்துமணி நேர வேலை நாளாகும். பொருளாதார பீதியினால் பாதிக்கப்பட்டபின்னர், எஞ்சியுள்ள தொழிலாளர் இயக்கம் பத்துமணிநேர வேலைநாளை முக்கிய கோரிக்கையாகக் கொண்டது. அரசாங்க ஊழியர்கள் 1840-ல் பத்துமணி நேர வேலைநாளைப் பெற்றனர். 1845 முதல் 1854 வரையுள்ள ஆண்டுகளில் மாநில அரசுகள் 10 மணிநேர வேலைநாள் சட்டங்களை இயற்றின. சில மாநில அரசுகள் அச் சட்டங்களைப் பெண்களுக்காகவும் குழந்தைகளுக்காகவும் மட்டுமே இயற்றிப் பயன்படுத்தின.

இவ்வாண்டுகளில், தொழிலாளரின் அரசியல் பொருளாதார வாழ்க்கையை முன்னேற்ற, தொழிற்சங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் குறைவுதான் என்றாலும், பயனுடையவைகளேயாகும். சங்கம் மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகள் அனைத்தும் இறுதியில் நிறைவேறின. இக் காரியங்கள் வெற்றி

பெறுவதற்குத் தொழிலாளர்கள் நல்ல முறையில் ஒத்துழைத்தனர். எடுத்துக்காட்டாக, உள்நாட்டுப்போர் துவங்கியவேளையில் 10 மணிநேர வேலைநாள் செல்வாக்கடைந்தது. தொழிலாளர்கள் விரும்பிய சீர்திருத்தங்களில் வேலைநேரக் குறைப்புபற்றிய சட்டமும் ஒன்று ஆகும். இலவசக் கல்வி வசதிக்காகத் தொழிலாளர் செய்த கிளர்ச்சி ஓரளவுக்கே பயன்தருவதாக இருந்தது. இந்தச் சீர்திருத்த சகாப்தத்தில் பிரசாரம் செய்யப்பெற்ற தேவையான மாற்றங்கள் அனைத்தும் தொழிலாளர்த் திட்டத்திலே இடம்பெற்றிருந்தன.

1850-59 ஆண்டுகளில் சீர்திருத்த திட்டத்தை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாகப் 'பழைய யூனியனி'சத்தை (old-line unionism) தொழிற்சங்கம் பின்பற்றத் தொடங்கியது. 'சீர்திருத்தக்காரர்'களின் செல்வாக்கு குன்றத் தொடங்கவே, புதிய போக்கினை வலுப்படுத்த புதிய தலைவர்கள் தோன்றினர். கலிஃபோர்னியாவில் பொன் கண்டுபிடிப்பு, இருப்புப் பாதைகளைக் கடிதில் அமைத்தல், ஏனைய முன்னேற்ற வேலைகள் ஆகியவற்றின் காரணமாகப் பொருளாதார வளம் ஏற்பட்டது. விலைவாசிகள் உயர்ந்தன. தொழிலாளர்களும் புதிய வாழ்வை மேற்கொண்டனர்; புதிய வட்டாரச் சங்கங்களையும் அமைத்தனர். குறைந்தபட்சம் பத்து தேசிய யூனியன்களையேனும் அமைத்தனர். அச்சுத் தொழிலாளர் யூனியன் (1850), தொப்பி செய்வோர் யூனியன் (1854), கல் உடைப்போர் யூனியன் (1855), இயந்திரத் தொழிலாளரும் கொல்லர்களும் கொண்ட தேசிய யூனியன் (1859), வார்ப்படம் செய்வோரின் தேசிய யூனியன் (1859) ஆகிய தேசிய யூனியன்கள் ஏற்பட்டன. யூனியன் மயமாக்குதல் (unionization) விரைந்து பரவியது. நடைமுறைக்கு ஏற்ற அடிப்படையிலும், செயல்படுவதற்கு ஏற்ற அடிப்படையிலும், வலுவான அடிப்படையிலும் யூனியன்மயமாக்கும் வேலை நடைபெற்றது. 1857-ல் ஏற்பட்ட பொருளாதார பீதியின் விளைவால், தொழிற்சங்கம் மிகவும் பாதிக்கப்பட்டது. மூன்று தேசிய சங்கங்கள்மட்டுமே உயிர்பிழைத்தன. ஆனால், பொருளாதார மந்த காலத்திலும் இயங்கக்கூடிய பலம் உடையனவாகத் தற்காலத்துச் சங்கங்கள் திகழ்ந்தன. தொழிற்சங்கம் புதியவேகத்தையும் வளர்ச்சியையும் பெற்றது.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

Channing, E., (சானிங், ஈ.), 'A History of the United States' Vol. V, chap. 2.

Stephenson, G. M. (ஸ்டீபன்சன், ஜீ. எம்.), 'History of American Immigration', chaps. 1-12.

Hansen, M. L. (ஹேன்சன், எம். எல்.), 'The Atlantic Migration' chaps. 11-13.

Taylor, G. R. (டெய்லர், ஜீ. ஆர்.), 'The Transportation Revolution', chaps. 12, 13.

Commons, J. R. (காமன்ஸ். ஜே. ஆர்.), et al. (eds.), 'History of Labour in the United States', Vol. I, pp. 169-230.

Beard, Mary, (பியர்டு, மேரி), 'A Short History of the American Labour Movement', chaps. 1-6.

Ware, N. J. (வேர், என். ஜே.), 'The Industrial Worker, 1840—1860', chaps. 10-15.

Bogart, E. L. (போகார்ட், இ. எல்.), and Thompson, C. M. (தாம்சன், சி. எம்.), 'Readings, in the Economic History of the United States' chap., 16.

Flugel, F. (புளுகல், எஃப்.), and Faulkner, H. U. (ஃபாக்னர், ஹெச். யூ.), 'Readings in the Economic and Social History of the United States', pp. 251-259,, 397-412.



1. குதிரையாற்றல் காலத்தில் கதிரடித்தல்



2. ஆரம்பகாலத்து மெக்காரிமிக் அறுவடை இயந்திரம்—அவரால் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது வகை.



3. கையுழைப்பு மூலமும் குதிரையாற்றல் மூலமும் போரடித்தல்



4. உலைக்களனிடுதல் (Forging the Shaft)



5. கலிஃபோர்னியாவில் ஆரம்பகாலப் பொன் சுரங்கத் தொழில்



6. வடமேற்கு பென்சில்வேனியாவில் ஆரம்பகால எண்ணெய்க் கிணறுகள்



7. ஆற்றில் செல்லும் நீராவிப் படகு



8. ஜான் ஃபிச் (John Fitch) அவர்களுடைய முதல் நீராவிப் படகின் மாதிரியொன்று.



9. 1855-ல் நியூயார்க்கிலுள்ள தென் தெரு.



10. யு. எஸ். எம். நீராவிக்கப்பல் 'அட்லான்டிக்'



11. புதிதாகக் குடியேற வருவோர்



12. நியூ இங்கிலாந்து தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் பாட்டாளிகள்—'மணியோசை கேட்கும் நேரம்'.



13. கூவித் திரிந்து விற்பனை செய்யும் யாங்கீ—துவக்கால அமெரிக்க வியாபாரத்தின் முக்கிய கட்டம்



14. லாக்போர்ட்டில் (Lockport) எரீ கால்வாயில் ஒன்றிணைந்த அணை அடைப்புகள்



15. கால்வாய் போக்குவரத்து

16. உள்நாட்டுப் போரின் பொருளாதாரக் காரணங்கள்

பிராந்திய மனப்பான்மையின் வளர்ச்சி

தென்னாட்டுப் பிரிவினைக்கு முன்னர் எழுந்த அரசியல் வாதப் பிரதிவாதங்கள் அடிமை முறைப் பிரச்சினை குறித்தே எழுந்தன. உள்நாட்டுப் போரின் விளைவாக அடிமைமுறை ஒழிந்தது. எனவே, வரலாற்றுசிரியர்கள் அடிமை முறையைப்பற்றி மிகைப் படுத்தி எழுதிவிட்டார்கள். இராணுவரீதியான போர் ஏற்பட முக்கியக் காரணங்களாக அமைந்தவைகளில் அடிமை முறையும் ஒன்றுகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அமெரிக்காவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை ஆய்ந்து பார்த்தால், உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கு அடிமைமுறைமட்டுமே காரணம் என்று ரோட்ஸ்[1] (Rhodes) தரும் விளக்கம் சரியன்று என்பது புலனுகும். பிராந் தியங்களுக்கிடையே பொருளாதாரரீதியில் ஏற்படும் மோதுதலே உள்நாட்டுப் போராகும். பிராந்தியங்களுக்கிடையில் ஏற்படும் பிரிவும் பிளவும் நமது வரலாற்றில் ஏற்பட்ட முதல் நிகழ்ச்சியு மன்று; இறுதி நிகழ்ச்சியுமன்று. 1812-ல் நிகழ்ந்த யுத்தத் தின்போது, நியூ இங்கிலாந்துத் தலைவர்கள் பிரிவினைகுறித்து ஹார்ட்ஃபோர்டு மாநாட்டில் (Hartford Convention) பேசினர். 1828ஆம் ஆண்டிலும், 1832 ஆம் ஆண்டிலும் நிறைவேறிய சுங்கவரிச்சட்டங்கள் மாநில மக்களைக் கட்டுப்படுத்தமாட்டா என உறுதி கூறும் வகையில், செல்லாதென்றத்தள்ளிவிடும் அவசரச் சட்டம் ஒன்றினை (Ordinance of Nullification) இருபது ஆண்டுகள் கழித்துத் தென்கரோலினு சட்டமன்றம் நிறைவேற்றிவைத்தது. வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இடையில் பொருளாதார நலன் குறித்து எழுந்த எதிரெதிரான குறிக்கோள்களின்

1. ஜே. எஃப். ரோட்ஸ் (J. F. Rhodes), 'Lectures on the Civil War', p. 24

விகிவாகப் போட்டி ஏற்பட்டது. அடிமைமுறைப் பிரச்சினையைக் கருவியாகப் பயன்படுத்தாமலேயே, பிரிவினையை அடையக் கூடிய அளவுக்கு வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இடையில் எழுந்த பொருளாதார நலன்குறித்த போட்டி 1860-ல் மிகவும் தீவிரமாகியது.

தென்னாடு முக்கியமாக விவசாய நாடாக இருந்தது. வடநாட்டில் தொழில் வளம் பெருகிவந்தது. இவ் வேற்றுமையே இவ்விரு நாடுகளுக்குமிடையில் அடிப்படையில் சச்சரவு மூள்வதற்குக் காரணமாகும். தோட்டப் பொருளாதாரத்திற்கும் வளர்ந்துவரும் தொழில் முதலாளித்துவத்திற்கும் இடையில் ஏற்படும் உராய்தலே அப் போட்டியாகும். காலனிகாலத்தில் தென்னாடு தோட்டப் பொருளாதாரத்தின் அடிப்படையில் விவசாய வாழ்க்கையை மேற்கொண்டது. பருத்தி உற்பத்தியின் காரணமாகத் தென்னாட்டின் விவசாய வாழ்க்கை மேலும் நீட்டிக்கப்பெற்றது. ஆக, எவ்விதத் தொழில் வளமுமின்றி விவசாய நாடாகவும், விவசாயப் பண்டங்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவும்மட்டுமே தென்னாடு விளங்கியது. வடநாடோ வெனில், படிப்படியாக வர்த்தக வாழ்க்கையையும் தொழில்துறை வாழ்க்கையையும் மேற்கொண்டு, அவற்றை வளர்த்துப் பெருக்கி வந்தது. இரு பிராந்தியங்களுக்குமிடையில் எழுந்த பொருளாதாரப் போட்டி, சுங்கவரி விதிப்புப் பிரச்சினையில் வெளிப்படையாகத் தெரிந்தது. 1812ஆம் ஆண்டில் நிகழ்ந்த போரினைத் தொடர்ந்து தேசிய உணர்ச்சி அலைவீசிய வேளையில், தென் பிராந்தியத் தலைவர்கள் வடபிராந்தியத் தலைவர்களுடன் ஒன்று சேர்ந்து 1816-ல் காப்புச் சுங்கவரிச் சட்டத்தை இயற்றினர். ஆனால், தென்பிராந்தியத் தலைவர்களின் போக்கு 1824-ல் மாறியது. அவர்கள் 1816-ல் நிறைவேற்றிய காப்புச் சுங்கவரிச் சட்டத்தையும் பின்னர் நிறைவேறிய சுங்கவரிச் சட்டங்களையும் தீவிரமாக எதிர்த்தனர். உள்நாட்டுச் சந்தையை வளர்க்கவும் பெருக்கவும் விரும்பிய மேற்கத்திய மாநிலங்கள், 1816, 1824, 1828, 1832 ஆகிய ஆண்டுகளில் நிறைவேறிய சுங்கவரிச் சட்டங்களை ஆதரித்தனர். ஆனால், அம் மாநிலங்களின் பண்டங்கள் விற்பனையாவதற்கு ஏற்ற சந்தையாகத் தென்பிராந்தியம் வளரத் தொடங்கியதால், சுங்கவரிச் சட்டங்களைப் பொறுத்த வரையில் அம் மாநிலங்களின் போக்கு மாறியது. ஏலியன், செடிஷன் சட்டங்களை (Alien and Sedition Acts) எதிர்ப்பதற்கு கென்டக்கி மாநிலம், செல்லாதெனத் தள்ளிவிடும் கோட்பாட்டினையோ, அல்லது மாநில அரசின் இறைமையையோ (state sovereignty) வலியுறுத்தியது. அவ்வாறே நியூ இங்கிலாந்தும் அக் கோட்பாட்டினை வலியுறுத்தி, 1812-ல் நிகழ்ந்த

யுத்தத்தை எதிர்த்தது. அவ்வாறே மாநில அரசின் இறைமையையோ, அல்லது செல்லாதெனத் தள்ளிவிடும் கோட்பாட்டினையோ வலியுறுத்தி தென்கரோலினு 1828-ல் நிறைவேறிய வெறுக்கத்தக்க சுங்கவரி விதிப்பையும், 1832-ல் நிறைவேறிய சுங்கவரி விதிப்பையும் எதிர்த்தது. அக் கோட்பாடு என்றும் நிலை பெற்று நின்று, இறுதியில் பிரிவினைக்கு வழிகோலியது. அனைவரும் ஒப்புக்கொள்ளும் வகையில் 1833-ல் நிறைவேறிய சுங்கவரி விதிப்புச் சட்டம் தென்னகத்திற்கு ஒரு பெரும் வெற்றியாகும். 1861-ல் மோரில் சட்டம் (Morrill Bill) நிறைவேறும்வரையில், மேற்கத்தியப் பிரதிநிதிகளின் துணைகொண்டு, தென்னகத்துப் பிரதிநிதிகள், சுங்கவரிமூலம் காப்புக்கொள்கை பெருமளவில் நிறைவேறுத வண்ணம் பார்த்துக்கொண்டனர்.

பாங்குமுறை, நாணயமுறை ஆகியவற்றைப் பொறுத்தவரையிலும் பிராந்தியங்களுக்கிடையே மோதுதல் ஏற்பட்டது. ரொக்க முதல் ஏதுமில்லாத கடனுளிப் பிரதேசமாகவிருந்த தென்னகம், பொதுவாகவே, குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கும் பாங்குச் சட்டங்களையும் பெருகிய நாணயப் புழக்கத்தையும் ஆதரித்தது. எல்லைப்புற மேற்குப் பிரதேசத்தைத் துணையாகக்கொண்டு, தென்னகம் ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாங்கை முறியடித்தது; 1836 முதல் பிரிவினை ஏற்படும் வரையில், பாங்குமுறை எவ்வாறு அமையவேண்டும் என்பதை நிர்ணயித்துத் தன் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டது.

சுங்கவரி விதிப்பு, நாணயமுறை, பாங்குமுறை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் மட்டுமன்றி, பொதுநிலத்திட்டம், மேற்குத் திசை நோக்கி முன்னேறுதல் ஆகியவற்றைப் பொறுத்தவரையிலுங்கூட, தென்பிராந்தியம் வடபிராந்தியத்தை வெற்றி கொண்டது. பருத்தி உற்பத்தியுடனும் அடிமை முறையுடனும் இணைக்கப்பெற்ற தென்பிராந்திய விவசாயம், விரைந்து வளர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒரே பிரதேசத்தில் நிலைத்து நிற்கக்கூடிய ஜனத்தொகையை விரும்பிய வடபிராந்தியத் தொழில் அதிபர்கள், மேற்குப் பிரதேசக் குடியேற்றத்தைத் தூண்டும் நடவடிக்கைகளை எதிர்த்தனர். மேற்கத்திய நிலங்களைப் பெரும் பெரும் துண்டுகளாக்கிக் குறைந்த விலையில் விரைந்து விற்கவேண்டும் என்ற திட்டத்தைத் தென்னகம் ஆதரித்தது. ஆனால், அந்த நிலங்களைச் சிறு சிறு துண்டுகளாக்கி அதிக விலைக்கு மிகுந்த கட்டுப்பாட்டுடன் கொஞ்சம் கொஞ்சமாக விற்கவேண்டும் என வடபிராந்தியம் கோரியது. பிராந்தியங்களுக்கிடையே நிலவிய அபிப்பிராய பேதங்களின் விளைவாக 1841-ல் சமரசம் ஏற்பட்டது. அச் சமரசத்தின்படி 1841-ல் யாவருக்கும்

முன்வாங்கும் உரிமைச் சட்டம் (Pre-emption Bill) நிறை வேறியது. அச் சட்டத்தின்படி, உண்மையாகக் குடியேறிய வர்கள் குறைந்த விலைக்கு நிலத்தை வாங்கமுடியும். அச் சட்டம் நடைமுறையில் தன் சொந்தத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய தாக அமைந்திருப்பதைத் தென்னகத்துத் தோட்ட முதலாளி உணர்ந்திருந்தான். நிலச் சட்டங்களின் கட்டுப்பாடு மேலும் தளர்வதை 1850-59 வரையுள்ள ஆண்டுகளில் தென்னகத்துத் தோட்ட முதலாளி கடுமையாக எதிர்த்தான். ஏனெனில், அத் தகைய திட்டம் சிறு வெள்ளைக்கார விவசாயிக்கு நலன் பயப்ப தாகவும், காலி நிலத்தை விரைவாகப் பெருக்குவதாகவும் அமையும்.

வேறு பிரதேசங்களைத் தங்கள் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வருவது குறித்தும் வட பிராந்தியத் தலைவர்களுக்கும் தென்பிராந் தியத் தலைவர்களுக்குமிடையில் கருத்து வேற்றுமைகள் எழுந்தன. அடிமைகளின் உழைப்பைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பருத்தித் தொழிலுக்குப் புதிய நிலங்கள் எப்பொழுதும் தேவைப் பட்டன. புதிய அடிமைப் பிரதேசமும் தேவைப்பட்டது. மேலும், தென்பிராந்தியத்தைவிட வடபிராந்தியத்தில் ஜனத்தொகைப் பெருக்கமும் செல்வக்கொழிப்பும் மிகுந்திருந்தமையால், சென்ட் டைத் (senate)தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொணர்ந்து, தன்னுடைய பொருளாதார நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளப் போதுமான அளவுக்கு சென்ட்டர்களைத் (senators) தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டிய அவசியம் தென்பிராந்தியத்திற்கு ஏற்பட்டது. லூயிசி யானு, ஃபிளோரிடா, டெக்சாஸ் மாநிலங்களைக் கைப்பற்று வதையும், மெக்சிகோவிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய் வதையும், கியூபாவை இணைப்பதற்கு எடுத்துக்கொள்ளப் பெற்ற சதிவேலைகளையும் தென்பிராந்தியத் தலைமை பெரிதும் ஆதரித்தது. பிரதேச ஆதிக்கம் ஏற்படுவதைவிட அடிமைமுறை ஆதிக்கத்தையே மெக்சிகன் யுத்தத்தின் எதிரிகள் எதிர்த்தனர்.[2]

வடமேற்கு மாநிலங்களின் விவசாயப் பண்டங்களுக்குத் தென்னகச் சந்தை கிடைத்த வரையில், அம் மாநிலங்கள் தென் பிராந்தியத்தையே ஆதரிக்க விழைந்தன. ஓகியோவிற்கு வடக்கேயும், அப்பளாச்சியன் மலைத்தொடருக்குக் குறுக்கேயும் உள்ள மாநிலங்களில் கால்வாய்களும் இருப்புப்பாதைகளும்

[2] ஜே. டி. பி. புல்லர் (J. D. P. Fuller), 'The Slavery Question and the Movement to Acquire Mexico, 1846-1848', Mississippi Valley Historical Review, XXI, 31-48 (June, 1934) காண்க. மெக்சிகோ அடிமை முறைக்கு ஏற்றதன்று என்பதால் அதனைத் தென்பிராந்தியத்துடன் இணைப்பதைத் தென் னூட்டினர் பலர் எதிர்த்தனர் என்று புல்லர் விவாதிக்கிறார்.

போடப்பட்ட பின்னர், அம் மாநிலங்களுக்குக் கிழக்குப் பிரதேசச் சந்தையும் ஐரோப்பியச் சந்தையும் கிடைத்தன. பழைய வட்மேற்குப் பிரதேசத்துடன் தென்பிராந்தியத்தை இணைக்காமல் கீழ்க்கடற்கரை மாநிலங்களோ இணைத்ததைப் போலவே, குடும்பமனையகங்களோ (homesteads) இலவசமாக வழங்குவதாகக் குடியரசுக் கட்சி தந்த வாக்குறுதியும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உயர்ந்த சுங்கவரிகளை ஆதரிக்கும் கிழக்குப் பிரதேசத் தொழிலதிபர்களும், இலவச நிலங்களைக் கோரும் மேற்கத்திய விவசாயிகளும் 1860-ல் குடியரசுக் கட்சியில் சேர்ந்தனர். அவர்கள் குடியரசுக் கட்சியில் சேர்ந்ததைக் கேடும் வன்மமும் கொண்ட சதிச் செயலாகவே தென் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள் கருதினர்கள். அச் சதிச்செயல் தென்பிராந்தியத்திற்குத் தோல்வியை விளைவிக்கும் என்றும் புலனுகியது. தென்பிராந்தியத் தலைவர்கள் பிரச்சினையை நன்கு புரிந்துகொண்டனர். அடிமைமுறையை ஒழித்துச் சுதந்திர பூமிக்காகப் போராடுபவர்கள், மனிதாபிமான உணர்ச்சியினுல் தூண்டப்பெற்று, அடிமைகளைப் பாதுகாக்கக் கிளம்பியவர்கள் அல்லர் என்று ஜெஃபர்சன் டேவிஸ் (Jefferson Davis) குறிப்பிட்டுள்ளார். பின்வருமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்:

'அடிமைமுறை நிலவும் பிரதேசத்தை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுப்படுத்தி, நீங்கள் எங்களை ஏமாற்றும் வாய்ப்பினைப் பெறலாம். நீங்கள் ஐக்கிய அமெரிக்காவின் காங்கிரசில் பெரும்பான்மையினராக இருந்துகொண்டு, வட பிராந்தியத்தின் அந்தஸ்தை உயர்த்திக் காட்டுவதற்கு அரசாங்க இயந்திரத்தைப் பயன்படுத்தலாம். இரத்தத்தை உறிஞ்சும் வௌவால் இனத்தைப் போலவே, வட பகுதியைச் சார்ந்த நீங்களும் தென் பகுதியின் செல்வத்தைக் கவர்ந்து சென்று கொழிக்கிறீர்கள்.....தென் மாநிலங்களின் அரசியல் அதிகாரத்தையும் குறைக்க நீங்கள் விரும்புகிறீர்கள். ஏன்? ஏனெனில், தென்னக மக்களையும், அவர்களுடைய தொழிலையும் அழித்தொழித்துவிட்டு, நியூ இங்கிலாந்து மாநிலங்களின் தொழிலை வளர்ப்பதற்காக நீதிக்குப் புறம்பான வகையில் சட்டத்தைப் பயன்படுத்த விரும்புகிறீர்கள்.'[3]

தென் பிராந்தியப் பொருளாதாரம்

தென் பிராந்தியத்தில் பருத்தி, புகையிலை, அரிசி, சர்க்கரை முதலியவற்றை உற்பத்தி செய்யும் பெரும்பாலான தோட்ட

[3] சி. பியர்டு, எம். பியர்டு மேற்கோளாக எடுத்துக்காட்டியது. 'Rise of American Civilization', II, 5-6.

முதலாளிகளின் எண்ணப் போக்கை ஜெஃபர்சன் டேவிஸ் அவர்களின் கருத்துகள் நன்கு பிரதிபலிக்கின்றன. நாம் முன்னரே குறிப்பிட்டதுபோல,[4] தென்னகத்து வெள்ளைக்காரர்களே சிறு விவசாயிகளாக இருந்தபோதிலும், தென்னகத்தின் பொருளாதார, சமூக, அரசியல் வாழ்க்கையைப் பெருந் தோட்ட முதலாளிகளே ஆட்டிப் படைத்தனர். 'ஜெஃபர்சன் டேவிஸ், அலெக்சாண்டர் ஸ்டீபன்ஸ் ஆகியோருடைய காலத்தில் வியாபாரிகளுடைய சிறு குழுவாட்சி (oligarchy) சிறந்து விளங்கியதுபோல வேறு எக்காலத்திலும் விளங்கியதில்லை' என டாட் (Dodd) அவர்கள் குறிப்பிடுகின்றார்.'[5] இச் சிறு குழுவாட்சியைச் சேர்ந்தவர்களுடைய கருத்துகளே தென்னகத்தில் செல்வாக்குடன் விளங்கின. தாங்கள் வாழும் தென் பிராந்தியத்தின் பொருளாதாரச் சீர்கேடுகளுக்கு வட பிராந்தியத்தின் ஆதிக்கமே காரணம் என்றும், அரசியல் விடுதலையின்மூலமே தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இயலும் என்றும் அவர்கள் நம்பினர்கள். இதே நம்பிக்கையுடனேயே 1776-ல், கிரேட் பிரிட்டனிடமிருந்து விடுதலை பெறும் முயற்சியைத் தோட்ட முதலாளிகள் ஆதரித்தார்கள். வட பிராந்திய முதலாளித்துவ ஆதிக்கம் அவர்களை மிகவும் அழுத்திவைத்து ஆட்டிப் படைத்தது என்பது உண்மையே ஆகும். என்றபோதிலும், அவர்களுடைய பிரச்சினையை விடுதலைமூலம் தீர்த்துவைக்க முடியுமா என்பது ஐயப்பாட்டிற்குரியதே.

முதலாளித்துவ உலகில் தோட்டப் பொருளாதாரம் கீழடங்கிய நிலையையே பெற்றுள்ளது. அதற்குக் காரணம், தோட்டப் பொருளாதாரத்தில் ஏதோ ஒரு குறைபாடு இருக்கிறது. 1920-1929-ல் கோதுமை விவசாயி தேசிய உற்பத்தியையோ, விலையையோ கட்டுப்படுத்தக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கவில்லை. அதுபோலவே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென் பிராந்திய தோட்ட முதலாளிகள், தேசிய உற்பத்தியையோ அல்லது விலையையோ கட்டுப்படுத்தும் சக்தியைப் பெறவில்லை. மத்திய ஆட்சியின் கட்டுப்பாட்டு முறை இருந்திருப்பின், தேசிய உற்பத்தியையோ விலையையோ கட்டுப்பாடு செய்திருக்க முடியும். ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில் மத்திய ஆட்சியின் கட்டுப்பாடு முறையைப்பற்றி அநேகமாக யாருக்கும் தெரியாது. உலகச் சந்தை பருத்தியின் விலையை நிர்ணயித்தது. உலகச் சந்தையில் பருத்தியின் விலை உயர்ந்திருப்பின், இலாபம் பெருகும்; உற்பத்தியும் பெருகும். இதன் விளைவாகத் தென்

4 மேலே குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 67-69.

5 டபிள்யூ. ஈ. டாட் (W. E. Dodd), 'The Cotton Kingdom', p. 121.

பிராந்தியத்தில் நிலத்தையும் அடிமைகளையும் விலைக்கு வாங்குவதில் இலாபங்களை முதலீடு செய்வர். விலையும் குறைந்து, குறிப்பிட்ட ஆண்டில் விளைந்த கோதுமையை நஷ்டத்திற்கு விற்கும்படி நேரிட்டால், தோட்ட முதலாளி அடுத்த ஆண்டு வரையிலும் தேவைப்படும் பணத்தைக் கடனுக வாங்கவேண்டும். தான் வாங்கும் கடனுக்குப் பிணையாக (security) அடுத்த ஆண்டு விளையக்கூடிய கோதுமையை அடகு வைக்கவேண்டும். எந்த நிலையாக இருப்பினும் தோட்ட முதலாளியின் கையில் ரொக்க முதலே இருப்பதில்லை. இதுபோன்ற சூழ்நிலையில் தோட்ட முதலாளிகள் கடனுளிகளாயினர்; கடன் கொடுத்த பாங்கர்களுக்கு மிகுதியான வட்டி கொடுத்தனர்; கோதுமையை விற்றுத் தரும் தரகர்களுக்கு மிகுதியான கழிவு கொடுத்தனர். இத்தகைய தோட்ட முதலாளிகளால் கோதுமை விலையையோ மொத்த உற்பத்தியையோ கட்டுப்படுத்த முடியவில்லை; இறுதியில் கடன் கொடுக்கும் நிதி மிகுந்தோரிடத்தில் அடங்கி இருக்க வேண்டிய நிலையே ஏற்பட்டது.

போர் மூள்வதற்குமுன் தென் பிராந்தியத்தில் இஃது எவ்வாறு இயங்கியது என்பதை விளக்குவது கடினமன்று. கோதுமை உற்பத்திக்கு ஆகும் செலவினை ஈடுகட்டுவதற்குத் தோட்ட முதலாளி தன்னுடைய தரகரிடமிருந்து[6] 8 முதல் 12 சதவீதம் வரையில் வட்டி கொடுத்துக் கடன் வாங்கவேண்டும்; இதற்கென உற்பத்தியாகும் கோதுமையையும் அடகுவைக்கவேண்டும். உற்பத்தி மிகுந்திருந்தால், உற்பத்திமிகுதியைத் தரகன் சந்தையில் நிலவும் விலைக்கே விற்பான். அவ்வாறு விற்பதற்கு அரை சதவீதம் முதல் 2·5 சதவீதம் வரையில் கழிவும் அவன் பெறுவான். தானியத்தை வண்டியில் ஏற்றிச் செல்லுதல், கிடங்கில் சேகரித்து வைத்தல், கப்பலில் ஏற்றுதல், நிறுத்தல், இன்சூரன்ஸ் ஆகியவற்றில் ஆகும் செலவு, மேலும் 2·5 முதல் 4 சதவீதம் ஆகும். தனக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தைத் தவிர்த்துக்கொள்ளும் எண்ணத்தில், குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்த எண்ணுள்ள மூட்டைகளையேனும் தனக்கு வழங்கவேண்டும் என்றும், அவ்வாறு வழங்கத் தவறினுல் தண்டவரி செலுத்தவேண்டும் என்றும் தரகன் ஒரு வழக்கத்தை ஏற்படுத்தினன். இத்தகைய பல்வேறு விதிகளின் காரணமாக அமித உற்பத்தியும் விலை குறைப்புமே ஏற்பட்டன.

[6] இந்த இடத்தில் தரகர் என்ற சொல்லின்மூலம் (factor) பாங்கர் பிரதிநிதியையும் தரகு வியாபாரியையுமே குறிப்பிடுகிறோம்.

தானிய உற்பத்திக்குத் தேவையான நிதி பெரும்பாலும் பிரிட்டிஷ் பாங்குகளிலிருந்தும், வட பிராந்திய பாங்குகளிலிருந்துமே கிடைத்தன. செலுத்துகைகளை நிறைவேற்றுவதற்கு 120-நாட்கள் கொண்ட நியூயார்க் உண்டியல்களையோ (120-day New York drafts) அல்லது 60-நாட்கள் கொண்ட ஸ்டர்லிங் மாற்று உண்டியல்களையோ (60-day sterling bills of exchange) பயன்படுத்தினர். தென் மண்டல பாங்குகள், தள்ளுபடி செய்தே அவ்வுண்டியல்களை மாற்றின. இந்த உண்டியல்களுக்கோ அல்லது ஸ்டர்லிங் மாற்று உண்டியல்களுக்கோ நியூயார்க்கில் தேவை ஏற்பட்டால், தோட்ட முதலாளிக்கு உகந்த முறையில் கழிவு வீதங்களில் மாற்றம் ஏற்படும். அந்த உண்டியல்களுக்கு நியூயார்க்கில் தேவை இல்லையெனில், தோட்ட முதலாளிக்கு இழப்பே ஏற்படும். மேலும், நாணய மாற்று வீதங்களும் (exchange rates) பருத்தி விலையைப் பாதிக்கின்றன. பொருளாதார பீதி 1857-ல் ஏற்பட்டபொழுது, தொல்லைகள் மிகுந்தன; நாணயமாற்று வீதங்கள் குறைந்தன; பருத்தி விற்பனை குன்றியது; பருத்தி விலையும் கீழே விழுந்தது. குறிப்பிட்ட அந்த ஆண்டில் உருவாகியுள்ள சூழ்நிலையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் தென் மண்டலம் பெருத்த நஷ்டமடைந்தது. தென்மண்டல நிதிபேரங்கள் நியூயார்க் மூலமே நடைபெற்றது என்ற உண்மையும், நியூயார்க்கின் பணச் சந்தையைப்பொறுத்தே தென் மண்டல வளம் அமைந்திருந்தது என்ற உண்மையும் பொருளாதார பீதியின்மூலம் தெளிவாக வெளியாயின.

தென்பிராந்தியத் தோட்ட முதலாளிகள் தங்களுடைய முதலின் பெரும் பகுதியைக்கொண்டு அடிமைகளையும் நிலத்தையும் விலைக்கு வாங்கி வர்த்தக தானியத்தை உற்பத்தி செய்தனர். இதன் விளைவாகத் தென்பகுதியில் ஒருதலைப்பட்ட பொருளாதார வாழ்க்கையே உருவாகியது. அடிமைகளில் பலர் நுட்பத் தொழிலாளராகத் தேர்ச்சிபெற்றபோதிலும், அவர்கள் பெருமளவுத் தொழில்வளர்ச்சிக்கு ஏற்றவர்களாக இல்லை. தொழில்துறைக்கு அடிமைகள் ஏற்றவர்களோ அல்லரோ, அவர்கள் விவசாயத்திற்கு ஏற்றவர்கள் என்றும், தொழில்துறையைவிட விவசாயத் துறையிலேயே அவர்கள் உழைப்பு இலாபகரமானது என்றும் அடிமை முதலாளிகள் நம்பினர். தேர்ச்சிபெற்ற வெள்ளைக்கார நுட்பத் தொழிலாளர்கள் பொதுவாகவே தென்பிரதேசத்தில் நாட்டம் செலுத்துவதில்லை. தென்மண்டலத்தில் நீராற்றலும் பருத்தியும் கிடைத்தபோதிலும், பொறிவழித்தொழிலில் முதலீடு செய்வதற்கேற்ற ரொக்க முதல் கிடைக்கவில்லை. நியூ இங்கிலாந்திலுள்ள

ஆலைகளுக்கோ ஐரோப்பாவிலுள்ள ஆலைகளுக்கோ தோட்ட முதலாளி தனது பண்டங்களை அனுப்ப விரும்பினான். உள்நாட்டுப் போருக்கு முன்னர் இருபது ஆண்டுகளில் வடபிரதேசத்தில் பெரும் தொழில் முன்னேற்றம் ஏற்பட்டது. நெசவாலைத் தொழிலையும் இரும்பு வார்ப்படத் தொழிலையும் தவிர்த்து மற்றத் துறைகளில் முன்னேற்றம் மிகக் குறைவாகவே இருந்தது.

நியூ இங்கிலாந்திலும் தென்மண்டலத்திலும் நெசவாலைத் தொழில், 1840—1850

	சென்சஸ் ஆண்டு	ஆலைகள்	முதல் (டாலர்கள்)	வேலையில் இருந்தோர்
தென்மாநிலங்கள்	1840	248	4,331,078	6,642
	1850	166	7,256,056	10,043
நியூ இங்கிலாந்து	1840	674	34,931,899	46,894
	1850	564	53,832,430	61,893

தென்மாநிலங்களில் தொழில் வளர்ச்சி அருகி இருந்தது என்ற உண்மை — உள்நாட்டுப்போர் துவங்கிய பின்னரே தெளிவாயிற்று. போர் துவங்கிய பின்னரே மிகச் சாதாரணப் பொறிசெய் பண்டங்களுக்குக் கூட வெளி நாட்டை நம்பியிருக்கவேண்டியுள்ளது என்ற உண்மையை தென்மண்டல கான்ஃபெடரசி (Confederacy) உணர்ந்தது. தென் மேற்குப் பகுதியைச் சார்ந்த தோட்ட முதலாளிகள் ஓகியோவிற்கு வடக்கே இருந்து கோதுமையையும் பன்றி இறைச்சியையும் இறக்குமதி செய்துவிட்டுத் தங்களுடைய முழுநேரத்தையும் பருத்தி உற்பத்தியிலேயே செலவழித்தனர். ஹெல்பர் அவர்கள் (Helper) தென்மண்டலப் பொருளாதார வாழ்க்கையின் ஒருதலைப் பட்ட நிலையைப்பற்றி வேதனையுடன் விளக்கியுள்ளார். ஹெல்பருடைய விளக்கத்திற்கு மாறுக, அவரைப் புண்படுத்துகின்ற முறையில் தென்மண்டலத்தைச் சார்ந்த ஒருவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

'நாங்கள் வாழ்நாள் முழுதும் ஏதோ ஒருவகையில் வடமண்டலத்திற்குப் பணிந்தே கிடந்தோம். நாங்கள் எங்களுடைய குழந்தைப் பருவத்தில் வடநாட்டு மஸ்லின் துணியையே உடுத்தினோம்; பின்னர் வடநாட்டுப் பகட்டாடைகளை அணிந்தோம்; இளமைப் பருவத்தில் வடநாட்டுப் புத்தகங்களின்மூலம் பயிற்சி பெற்றோம்; விஞ்ஞானம் தெரியும் வயதை அடைந்த பின்னர், வடநாட்டு மண்ணில் நமது ஓட்ஸ் விதையை விதைத்தோம்; நடுத்தர வயதை நெருங்கியவுடன் நமது செல்வத்தையும், சக்தியையும்,

திறமையையும் முழுதும் செலவழித்து, நம்முடைய குழந்தைகளுக்கும், குழந்தைகளின் குழந்தைகளுக்கும் பிறருக்கு அடங்கி வாழும் நிலையினை மரபுரிமையாக்கும் வேலையில் நாம் ஈடுபட்டுள்ளோம்; நம்முடைய நலன்களையும், நம்மைச் சுற்றியுள்ளோரின் நலன்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, வடநாட்டு அதிகாரத் துறைகள் ஒவ்வொன்றுக்கும் நம்முடைய உதவியையும் ஆதரவையும் நாம் வழங்கிவருகிறோம்; முதுமைப் பருவம் அடைந்தவுடன் கண்பார்வையைச் சரிசெய்துகொள்வதற்காக வடநாட்டு மூக்குக் கண்ணாடியை நாம் அணிந்துகொள்கிறோம்; முதுமைப் பருவத்தில் உடல் தளர்ச்சியுற்ற நிலையிலும் நிதானமாக நடந்து செல்வதற்கு ஊன்றுகோலாக வடபிராந்தியத்தில் செய்யப்பட்ட கைப்பிரம்புகளை நாம் பயன்படுத்துகிறோம்; இறுதியில், நாம் இறந்த பின்னர் நமது பிணங்களை வடநாட்டில் நெய்யப்பட்ட வெள்ளைத் துணியினால் போர்த்தி, பாடையில் ஏற்றி, வடநாட்டு வண்டியில் வைத்து, இடுகாட்டிற்குச் சென்று, வடநாட்டில் செய்யப்பட்ட மண்வெட்டியின் துணைகொண்டு அடக்கம் செய்து, வடநாட்டுச் சலவைக் கல்லில் நினைவுச் சின்னமும் எழுப்பிவிடுவர்'.[7]

குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு தொழிலை மட்டும் வளர்த்துச் சிறப்புத் தேர்ச்சி அடைந்தால் போதுமா, அல்லது அப் பிரதேசத்தில் சுயதேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் முழுமையான பொருளாதார வாழ்க்கையை வளர்க்க வேண்டுமா என்பது குறித்து, வாத எதிர்வாதங்களைப் பொருளாதார நூல்கள் வழங்கட்டும். அவைகளைப்பற்றி எழுத இந்த நூலில் இடமில்லை. தென்பிராந்தியம், மித வெப்பத்தில் விளையக்கூடிய சில பண்டங்களைப் பயிரிட ஏற்ற இடமாகும். தென்பிராந்தியம் அத்தகைய முக்கியப் பண்டங்களையே பயிரிட்டது, அதே வேளையில் அப்பகுதி, ஐரோப்பாவிலிருந்தும் வட பிராந்தியத்திலிருந்தும் பொறிவழிப் பண்டங்களை விலைக்கு வாங்கியது; கணிசமான அளவுக்குப் பழைய வடமேற்கிலிருந்து உணவுப் பண்டங்களையும் விலைக்கு வாங்கியது. அப்பொழுது நிலவிய சூழ்நிலையில் தென் மண்டலம் வேறு எந்த முறையிலும் நடந்துகொண்டிருக்க முடியாது.

[7] ஹெச். ஆர். ஹெல்பர் (H. R. Helper), 'The Impending Crisis of the South' pp. 22-23. ஹெல்பர் அவர்கள் வட கரோலினாவைச் சார்ந்தவராவார்; மத்தியதர வகுப்பில் தோன்றிய தென்னாட்டவரும் ஆவார். பொருளாதார, சமூக ரீதியில் அடிமை முறையினால் தென்னாடு சீரழிகிறது என ஹெல்பர் நம்பினார். 1850ஆம் ஆண்டின் சென்சசை அடிப்படையாகக்கொண்டு ஹெல்பர் எழுதிய, புகழ்வாய்ந்த அப் புத்தகம் ஒருதலைப்பட்சமானது எனத் தென்னாட்டினர் உறுதியுடன் நம்பினர். Dictionary of American Biography-யில் அவரது வாழ்க்கை வரலாற்றைக் காண்க.

இருந்தபோதிலும், அன்று நிலவிய அந்தச் சூழ்நிலை, தென் பகுதிக்குக் கேடு பயப்பதாகவே இருந்தது. தென்னாட்டினர் தங்களுடைய இன்றியமையாத பண்டங்களை உயர்ந்த விலையிலும் விற்றிருப்பார்கள்; குறைந்த விலையிலும் விற்றிருப்பார்கள். ஆனால், அவர்கள் வடநாட்டின் பொறிவழிப் பண்டங்களைப் பொதுவாகவே அதிக விலை கொடுத்தே வாங்கினர். இதற்காக அவர்கள் சுங்க வரியை எதிர்த்தார்கள். தென் மண்டலம் சுங்கவரி விதிப்பினால் எதிர்பார்த்த அளவுக்குப் பாதிக்கப்படவில்லை. தென்மண்டலம் சுங்கவரி விதிப்பை எதிர்த்து 1833-ல் கிளர்ந்தெழுந்து வெற்றியடைந்தது. குறிப்பிட்ட சில காலங்களைத் தவிர, உள் நாட்டு யுத்தம் ஏற்படும் வரையில் சுங்கவரி வீதங்கள் குறைந்து கொண்டே சென்றன. சுங்கவரி வீதங்கள் 1857-க்குப் பின்னர் உறுதியாகக் குறைந்துவிட்டன.[8] பண்டங்களை இறக்குமதி செய்யும் பகுதியைச் சார்ந்த தென்னாட்டினர் தங்களுடைய விகிதாசாரத்திற்குக் கூடுதலான வரியை பெடரல் அரசாங்கத்திற்குக் காட்டினர். எனவே, அவர்களுக்கு பெடரல் ஆட்சிமீது அதிருப்தி ஏற்பட்டது நியாயமே ஆகும். மறைமுகவரி விதிப்பதற்குப் பதிலாக நேர்முக வரி விதிப்பை மேற்கொண்டால் வட பிரதேசத்திலிருந்து வரிப்பணம் அதிகமாகக் கிடைக்கும் என்றும், நாட்டின் பகுதிகளனைத்தும் வரியை ஒரே அளவில் சமமாகச் செலுத்துவன என்றும் தென்னாட்டினர் நன்கு விவாதித்தனர்.

தென்னாடு பணவிரயமும் மிகுந்த செலவும் கொண்ட முறையின்மூலம் பொறிவழிப் பண்டங்களை விலைக்கு வாங்கியது. சுங்கவரி விதிப்பைவிட இந்த வழிமுறை தென்னாட்டிற்கு மிகுதியான தீங்கினை விளைவித்தது. தென்னாடு வடநாட்டு பாங்கர்களிடமிருந்து கடன் வாங்கி, அக் கடன் பணத்தைக்கொண்டு வடநாட்டுப் பொறிவழிப் பண்டங்களை விலைக்கு வாங்கி, வடநாட்டுக் கப்பல்களில் ஏற்றி வந்து, வடநாட்டுத் தரகர்கள்மூலம் பிரித்தளித்தது. தென்னாட்டிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் நேரடியான வர்த்தகத் தொடர்பு கிடையாது. தென்னாட்டுப் பருத்தியின் பெரும்பகுதியை நியூயார்க்கிற்குக் கப்பலில் ஏற்றிச் சென்று, அங்கிருந்து பருத்தியை ஐரோப்பாவிற்கு அனுப்பினர். ஐரோப்பாவிலிருந்து கப்பலில் வரும் பொறிவழிப் பண்டங்களை வடநாட்டுத் துறைமுகங்களில் இறக்கிப் பின்னர் தென்னாடு முழுதும் அவற்றைப் பிரித்து வழங்குவர். இத்தகைய 'பருத்தி முக்கோணத்தின்' (cotton triangle) வினைவால், போக்குவரத்துச்

[8] ரிச்சர்டு ஹாஃப்ஸ்டட்டர் (Richard Hofstadter), 'The Tariff Issue and the Civil War' American Historical Review, XLIV, 50-55 (Oct, 1938).

செலவும் தரகர் அடையும் கழிவும் அதிகரித்தன. ஐரோப்பாவுடன் நேரடி வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டால் தென்னாடு நிறைந்த பயனைப் பெற்றிருக்கும் என்பது வெள்ளிடைமலையாகும். ஆனால், சுங்கவரி விதிப்பை நீக்கிவிட்டால் வழக்கிலுள்ள வர்த்தகப் பாதைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிடும் என்றோ, அல்லது இறக்குமதியாகும் பண்டங்களைப் பிரித்து அனுப்பும் முறையில் பெருமாற்றம் ஏற்பட்டுவிடும் என்றோ கருதிவிட முடியாது. எனினும், தென்னாட்டினர் சுங்கவரிகளை நீக்கிவிட்டால் பெரு மாற்றங்கள் ஏற்படும் என்றே நம்பினர். தென்னாட்டினரின் அதிருப்திக்குக் காரணம் யாது என்பதை ஆராயும்போது, அவர்கள் கொண்டுள்ள எண்ணத்தைப் புரிந்துகொள்ளவேண்டும்; அவர்கள் நெஞ்சில் எழுந்துள்ள நம்பிக்கை முக்கியமானதாகும். துரதிர்ஷ்டமாகச் சரித்திரத்தில் உண்மையைவிட நம்பிக்கையே முக்கியமானதாகும்.

அடிமைமுறை வளர்த்தல்

உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கு அடிப்படையில் பிராந்தியங்களுக்கிடையே பொருளாதார நலன்களைப்பொறுத்து எழும் மோதுதல்களே காரணமெனினும், அடிமை முறை நிலவியதாலும் உள்நாட்டுப் போர் மூண்டது என்ற உண்மையை மறைக்க முடியாது. முதலாவதாக, தென்னாட்டிற்கும் வடநாடு, வடமேற்குப் பிரதேசம் ஆகியவற்றிற்கும் இடையில் பொருளாதார நலன்களைப் பெறுவதில் வேற்றுமைகள் பெருகித் துரிதப்படுவதற்குக் காரணமாக அடிமைமுறை அமைந்தது. இரண்டாவதாக, பொருளாதார நீதியில் தனக்கு எதிராகக் கிளம்பியுள்ள எதிரிகளின் வளர்ந்துவரும் ஆதிக்கத்தினின்றும் தன்னை மீட்டுக்கொள்ள தென்மண்டலம் மேற்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகளுக்கும் அதனுடைய அடிமை முறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாயிருந்தது. இத்தகைய காரணங்களாலும், அடிமை முறையே தென்னாட்டின் பொருளாதார வாழ்க்கைக்கு அடிப்படையில் முழுக் காரணமாக இருந்தது என்ற உண்மையாலும், அடிமை முறையின் வளர்ச்சியைப்பற்றியும் விளைவுகளைப்பற்றியும் கூர்ந்து ஆராயவேண்டும்.

தென் மண்டலத்தில் காலனி காலத்தில் செழித்தோங்கி வளர்ந்திருந்த அடிமைமுறை, புரட்சி முடிவுற்ற நேரத்தில் சற்றுத் தளர்வடைந்தது. சுதந்திரப் போரில் தோட்ட முதலாளிக்கு விளைந்த இழப்புகள், கடற்கரை மாநிலங்களில் மண் வளம் குன்றியமை, வடநாட்டிலிருந்து வெள்ளைக்காரர்கள் இத்தகைய பிரதேசங்களுக்கு வந்து குடியேறியமை ஆகிய காரணங்களினால்

அடிமை முறையினால் கிடைத்து வந்த பயன்கள் குறைந்தன. இத்தகைய அனுபவங்களினாலும் அடிமை முறையைக் கண்டிக்கும் புரட்சிகரமான கொள்கைகளின் தூண்டுதலினாலும் உந்தப் பெற்ற தென்னாட்டினர், அந்த அடிமை முறையின் பொருளாதார அடிப்படையையும் நீதித்தன்மையையுமே சந்தேகித்தனர். எனினும், கரோலினாக்களிலும் ஜார்ஜியாவிலும் உள்ள நெல், இண்டிகோ முதலியன விளையும் நிலங்களில் 1781-ல் அடிமை முறை நிலைநிறுத்தப்பட்டது. என்றாலும், புகையிலைத் தோட்டங்களில் அடிமை முறையின் பிடி தளர்ந்தது. தொழிற்புரட்சி ஏற்பட்ட அதே வேளையிலேயே பருத்தி ஜின் (1793) கண்டுபிடிக்கப் பெற்றது. கடல் தீவுப் பகுதிகளில் பருத்தி விளைந்தது. கொஞ்சங் கொஞ்சமாக மறைந்துவந்த அடிமை முறை, பருத்தி ஜின் கண்டு பிடிப்பினாலும், கடல்தீவுப் பகுதிகளில் பருத்தி விளைந்தமையாலும் மீண்டும் தலையெடுக்கத் துவங்கியது. கடற்கரைப் பகுதிகளைச் சார்ந்த தோட்ட முதலாளிகள் பருத்தி பயிரிடுவதன்மூலம் தாங்கள் இழந்துவந்த செல்வங்களை மீண்டும் திரட்டினர். பருத்தி ஜின் குறுகிய நூலிழையுள்ள துணிவகைகளைச் சிறந்த முறையில் செய்வதற்குப் பயன்பட்டது. இவற்றின் காரணமாகவே பருத்தி பயிரிடும் தொழில் மேட்டு நிலங்களிலும் மேற்குப் பிரதேசத்திலும் விரைவாகப் பரவியது.

தென்னாடு அடிமைகளுக்கேற்ற தொழிலாகப் பருத்தி உற்பத்தி அமைந்திருப்பதைக் கண்டது. ஏனென்றால், அத் தொழிலை இலாபகரமானதாக்கும் சூழ்நிலைகள் ஒன்றுசேர்ந்திருப்பதைத் தென்னாடு உணர்ந்திருந்தது; பருத்தி பயிரிடும் தொழிலை எளிய முறையில் செய்யலாம். ஒரு பயிர் விவசாய முறையே (one-crop system of agriculture) அடிமை முறைக்கு ஏற்றது. ஒரு பயிர் விவசாய முறையை எளிதில் பயின்று, ஆண்டுதோறும் அதனையே திரும்பத் திரும்ப இயந்திரம்போல் செய்ய முடியும். மற்றப் பயிர்களைவிடப் பருத்தியைச் சுலபமாகப் பயிரிடலாம். பருத்தியைப் பயிரிடுவதில் நீக்ரோக்களை ஈடுபடுத்தலாம். இத் தொழிலுக்குக் குறைந்த எண்ணிக்கையுள்ள கருவிகளும் சாதனங்களுமே போதும். இத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், திறமைக்குறைவானவர்களாக இருந்தபோதிலும் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிடாது. ஓர் ஆண்டில் ஒன்பது மாதங்களுக்குப் பருத்திப் பயிர்த்தொழில் நடைபெறும். மற்றப் பயிர்களின் உற்பத்தியைவிடப் பருத்தி உற்பத்தியில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வேலைதர இயலும். ஒரு தொழிலாளர் குடும்பத்திலிருந்து மிக உயர்ந்த அளவுக்குப் பெரும் பயனை இத்தொழில் அடையும்.

மற்றப் பண்டங்களை உற்பத்தி செய்வதைவிடப் பருத்தி உற்பத்தியில் அடிமைகளை ஒன்று திரட்டி ஈடுபடுத்த முடியும். பருத்தி உற்பத்தியில் உள்ள மற்றொரு நன்மை இதுவேயாகும் ஒற்றைத் தொழிலாளி மூன்று ஏக்கர் நிலத்தில்மட்டுமே நெல் பயிரிடுவான். ஐந்து ஏக்கர் முதல் பத்து ஏக்கர் முடிய உள்ள நிலத்தில்மட்டுமே பருத்தியைப் பயிரிடுவான்; ஆனால், அத் தொழிலாளி முப்பது அல்லது நாற்பது ஏக்கர் நிலத்தில் சோளம் பயிரிடும் சக்தியைப் பெற்றுள். சாதாரணமாகவே வலுக்கட்டாயத்தின்மூலம்தான் அடிமைகளை வேலைவாங்க இயலும் என்பதும். அடிமைகளை நிரந்தரமாகக் கண்காணிக்கவேண்டும் என்பதும் நன்கு உணரப்பட்டால் மேலே குறிப்பிட்ட உண்மையின் முக்கியத்துவம் நன்கு புலனாகும். மேலும், அடிமைகளைக் கண்காணிப்பதற்கு ஆகும் செலவு அதிகமாகும். பேராசிரியர் பிலிப்ஸ் (Professor Phillips) பின்வருமாறு கூறுகிறார்: 'காலனி காலத்தில் பொதுவாகவே அடிமைகளை அத்துமீறி வீரட்டி வேலைவாங்கிவரும் கண்காணிப்பாளருக்குத் தூண்டுகோலாக இருக்கட்டும் என்ற கருத்தில், உற்பத்தியாகும் பயிர்களிலிருந்தே பங்குகள் வழங்கப்பெற்றன. அடிமைகளை எல்லைமீறி விரட்டி வேலைவாங்கும் முறையைத் தூண்டுவதைக் குறைப்பதற்காகவேண்டிக் கண்காணிப்பாளருக்குப் பயிர்களிலிருந்து பங்குகள் தருவதற்குப் பதிலாக, பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலையான, குறிப்பிட்ட சம்பளம் வழங்கும் முறை புகுத்தப்பட்டது.'[9] கண்காணிப்பாளரின் சம்பளம், 1868-ல் சற்றேறக்குறைய $ 1,800 ஆகும். அக் காலத்தில் அது கணிசமான தொகையே ஆகும். வெள்ளைக்காரக் கண்காணிப்பாளருக்கு மிக உயர்ந்த சம்பளம் வழங்கப்பெற்றமையால் அடிமைத் தொழிலாளர்களைப் பெரும் பருத்தித் தோட்டங்களில் ஈடுபடுத்த முடிந்தது.

அடிமைகளுக்கு ஆகும் செலவு குறைவாக இருந்தது. அவர்கள் உயிர் பிழைத்திருப்பதற்காகும் பிழைப்பூதியமும் குறைவே. ஆக, அடிமைகளைப் பயனுள்ள முறையிலும் இலாபம் பெறும் முறையிலும் வேலைக்கமர்த்துவதற்குத் தேவையான சூழ்நிலை இருந்தது எனலாம். பருத்தி விளையும் பிரதேசத்தின் வெதுவெதுப்பான தட்ப வெப்ப நிலையில் வாழும் அடிமைகளுக்குத் தேவையான வீடு, விறகு, ஆடை ஆகியவற்றிற்கு ஆகும் செலவு இயற்கையாகவே மிகவும் குறைவாகும். பன்றி இறைச்சியும் மக்காச் சோளமுமே

[9] யுல்ரிச் பி. ஃபிலிப்ஸ் (Ulrich B. Phillips, 'American Negro Slavery', (1918), p. 281.

அடிமையின் முக்கிய உணவாகும். எனவே, அடிமைகளுக்கும் பன்றிகளுக்கும் தேவையான உணவு, சாதாரணமாகத் தோட்டங்களில் விளையும் பயிர்களிலிருந்தே கிடைத்தது. பின்னர், ஓகியோவிற்கு வடக்கிலுள்ள மாநிலங்களிலிருந்து கணிசமான அளவுக்கு மக்காச்சோளமும் பன்றி இறைச்சியும் கொண்டுவரப்பட்டன. வசதியான சூழ்நிலையில் அடிமை ஒருவனை வைத்துக் காப்பாற்றுவதற்கு, 15 டாலர்களிலிருந்து, எல்லைப்புற மாநிலங்களில் 30 டாலர்கள் முதல் 40 டாலர்கள் வரையில் செலவாகும். ஓர் அடிமையை வைத்துக் காப்பாற்றுவதற்கு ஆண்டொன்றுக்குச் சராசரி 20 டாலர்கள் செலவாகும்.

மேற்கத்திய பிரதேசத்தில் சாகுபடி செய்யப்படாத நிலம் நிறைய இருந்ததால் தென்னூட்டில் அடிமைமுறை நன்கு வேரூன்றியது. பருத்தித் தோட்ட முதலாளி ஒருபயிர் விவசாய முறையைமட்டுமே வலுக்கட்டாயமாகப் பின்பற்றுவதற்குக் காரணம், அப் பயிர்த்தொழிலில் ஈடுபடுத்தப்பெற்ற அடிமைகள் திறமை குறைந்தவர்களாகவும், அறியாமையில் மூழ்கியவர்களாகவும் இருந்தமையேதான். மற்ற முக்கியமான பயிர்களை விட, குறிப்பாகப் புகையிலையைவிடப் பருத்தி உற்பத்தி மண் வளத்தை மிகவும் குறைவாகவே பாதிக்கும் என்றபோதிலும், செயற்கை உரம் உபயோகிக்காமலேயே தொடர்ந்து தடையேதுமின்றிப் பருத்தியை விடாமல் பயிரிட்டால் மண்வளம் குன்றிவிடும் என்பது கருதற்பாலது. அடிமைகளைவிட நிலம் மலிவாகக் கிடைத்தமையால், நிலம் தன் வளத்தை முழுதும் இழக்கும்வரையில் பருத்திவகைகளைப் பயிரிட்டு நிலத்தை அறவே வீணாக்கிவிட்டுப் பின்னர் புதிய செழிப்பான நிலங்களை நாடிச்சென்று, அதே வேலையை அந்த நிலங்களிலும் திரும்பச் செய்வதே போக்காக இருந்தது. நிலம் பருத்தியைப் பயிரிடுவதற்கு ஏற்றதாக இருந்ததால், மேற்குறிப்பிட்ட முறையிலேயே காரியங்கள் நடைபெற்றன. ஆக, அடிமைமுறை ஒருபயிர் விவசாய முறையைச் சார்ந்திருந்தது. அப்பொழுது வழக்கத்திலிருந்த விவசாய வழிமுறைகளின் காரணமாக, ஒருபயிர் விவசாயமுறை புதிய நிலங்களைக் கண்டு பயன்படுத்துவதைச் சார்ந்திருந்தது. பருத்தி உற்பத்தியாளர்கள் மேற்கே நோக்கி விரைந்து செல்வதற்குரிய காரணத்தையும், அடிமைகளைச் சொந்தமாக்கிக்கொண்ட முதலாளிகள் நிறைவுபெறுத புதிய நிலப்பசியை உடையவர்களாக இருந்த காரணத்தையும் அந்த உண்மைகள் நன்கு விளக்கும். பருத்தி விலைகள் குறைந்தபோதிலும், அடிமைகள் திறமையற்றவர்களாக இருந்தபோதிலும், பருத்தி உற்பத்தியில் இலாபம் கிடைப்பதற்

குரிய காரணங்களையும் அவை நன்கு விளக்குகின்றன. குறைந்த விலைக்குப் புதிய நிலங்கள் கிடைக்கும்வரையில், உரிமைபெற்ற தொழிலாளர்களின் போட்டிக்கு எதிராகவும் அடிமைமுறை நிலைத்து நின்றே தீரும் என்றே தோன்றியது.

முதல் அரை நூற்றாண்டில் தென்மாநிலங்கள் உலக மொத்தப் பருத்தி உற்பத்தியில் எட்டில் ஏழு பங்கினை உற்பத்தி செய்தன. பருத்தியின் தேவை நிலையானதாகவும் இருந்தது; வளர்ந்த வண்ணமும் இருந்தது. அடிமைகளின் சொந்தக்காரர்களும். அவர்களை விலைக்கு வாங்கக்கூடிய முதலாளிகளும் மேன்மேலும் பருத்தி உற்பத்தியிலேயே நாட்டம் செலுத்தினர். விவசாயத்தில் 1850-ல், 32,04,313 அடிமைகளில் 25,00,000 பேர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும், அவர்களில் 72·6 சதவீதம் கொண்ட பேர்கள் (18,15,000) பருத்தி உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளனர் என்றும் டூபோ (DeBow) கணக்கிட்டுள்ளார்.[10] பருத்தித் தோட்ட முதலாளி அலபாமா, மிசிசிப்பி ஆகியவற்றின் செழிப்பான தாழ் நிலங்களை நோக்கி மேற்குத் திக்கில் நுழைந்துசென்று, பருத்தி உற்பத்தியில் பெருவாரியான நிலங்களை ஈடுபடுத்தியபொழுது. அடிமைகளின் தேவை பெருகியது.[11] பணம் படைத்த தோட்ட முதலாளிகள் மிகச் சிறந்த நிலங்களைப் பெற்றனர். எனவே, ஏழைமையில் வாழ்ந்த வெள்ளையர்கள் மிகச் சிறிய, வளம் குறைந்த பண்ணைகளுக்கு விரட்டப்பட்டனர். அவர்கள் அப் பண்ணைகளில் உணவுப் பண்டங்களைப் பயிரிட்டனர். பெரும் தோட்டங்களில் வேலைபார்த்துவந்த அடிமைகளுடன் இந்தச் சிறு விவசாயிகள் போட்டியிட இயலாது. ஏழைமையில் வாழ்ந்த வெள்ளைக்காரர்கள் பருத்தி பயிரிடும் தொழிலைப் பெரும்பாலும் கைவிட்டனர் தென்னாட்டின் தொழிலாளர் நிலை, குடியேறுவோருக்கு ஏற்றதாகவும் இல்லை. அடிமைகளையுடைய மாநிலங்களில் 1850-ல் அயல்நாட்டில் பிறந்து குடியேறியோரின் எண்ணிக்கை 3,78,205

10 ஜே. டி. பி. டூபோ (J. D. B. DeBow), 'Statistical View of the United States..... Being a compendium of the Seventh Census.' (1854), p. 94. காண்க.

11 1740—1860-ல் நீக்ரோக்களின் ஜனத்தொகை பின்வருமாறு. 'The South in the Building of the Nation,' V, III, note' எனும் நூலிலிருந்து இப் புள்ளிவிவரம் எடுக்கப்பட்டுள்ளது.

1740..... 1,40,000	1820.....17,77,000
1776..... 3,00,000	1830.....23,28,000
1790..... 7,50,000	1840.....28,73,000
1800.....10,02,000	1850.....36,38,000
1810.....13,80,000	1860.....44,41,000

ஆகும். அடிமைகளைப் பெருத மாநிலங்களில் 18,66,397 பேர்கள் அயல்நாட்டில் பிறந்து குடியேறியவர்களாவர்; பல்வேறு பிராந்தியங்களின் மொத்த மக்கள் தொகையில் இவை முறையே 9·91 சதவீதமும், 13·89 சதவீதமும் ஆகும்.

அடிமைக் குழந்தைகளின் பிறப்பை அதிகரிப்பதன்மூலமும் ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளை இறக்குமதி செய்வதன் மூலமும் வேண்டிய அளவுக்கு அடிமைகளின் எண்ணிக்கை பெருக்கிக்கொள்ளப்பட்டது. ஆனால், 1808ஆம் ஆண்டிற்குப் பின்னர், ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகள் இறக்குமதி செய்யப் படுவது தடை செய்யப்பட்டது. கணிசமான அளவுக்கு உள்நாட்டு அடிமை வியாபாரமும் நடைபெற்றது. எல்லைப்புற மாநிலங்களிலும், கிழக்குக் கரோலினாக்களிலும் மிகுதியாக இருந்த நீக்ரோக்களைக் கப்பல்களில் ஏற்றிச்சென்று, தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள புதிய மாநிலங்களைச் சார்ந்த பருத்தித் தோட்ட முதலாளிகளிடம் அந்த நீக்ரோக்களை விற்றனர். பருத்தித் தோட்டங்களில் அடிமைக் குழந்தைகளின் பிறப்பு மிகவும் குறைவே...எல்லைப்புற மாநிலங்களில் உருவான நீக்ரோக்கள் நீண்ட நாட்கள் வாழக்கூடியவராகவும் நிறையக் குழந்தைகளைப் பெற்று இனப்பெருக்கவளமுடையவராகவும் இருந்தனர். எனவே, வர்ஜீனியாப் பண்ணைகளில் ஜனத்தொகைப் பெருக்கம் எப்பொழுதும் 20 சதவீதமாக இருந்தது. நிறைய நீக்ரோக்கள் தேவைப்பட்டதுபோலவே நீக்ரோக்களின் விலையும் உயர்ந்தது. அடிமைகளின் சராசரி மதிப்பு 1798-ல் சுமார் 200 டாலர்களாக இருந்தது எனக் கணக்கிடப்பட்டுள்ளது; 1815-ல் 250 டாலர்களாகவும், 1840-ல் 500 டாலர்களாகவும் 1860-ல் 700 டாலர்களாகவும் இருந்தன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. முக்கியமாகப் பண்ணைகளில் வேலை செய்வோரின் மதிப்பு, 1780-ல் 200 டாலர்களாகும். அவர்களுடைய மதிப்பு 1800-ல் 350 முதல் 500 டாலர்கள் வரையிலும், 1818-ல் 700 முதல் 1,000 டாலர்கள் வரையிலும், 1860-ல் 1,400 முதல் 1,800 அல்லது 2,000 டாலர்கள் வரையிலும் இருந்தன.[12] அடிமைகளின் விலை நிலையானதாக இல்லை; செழிப்புக் காலத்தையும் மந்த காலத்தையும்பொறுத்து மாறிக் கொண்டே இருந்தது; செழிப்பும் மந்தமும் பருத்தி விலையைச் சார்ந்திருந்தன.

வர்ஜீனியா, மேரிலாந்து, கென்டக்கி ஆகிய எல்லைப்புற மாநிலங்கள், மிகுதியாக உள்ள தொழிலாளர்களை விற்பனை

[12] Ibid., V, 127.

செய்வதற்கு வாய்ப்புப் பெற்றதோடன்றி, அம் மாநிலங்களிலுள்ள அடிமை வியாபாரிகள் நீக்ரோக்களை ஒன்றுதிரட்டித் தென்னெட்டில் இலாபத்திற்கு விற்கவும் முனைந்தனர். 'மற்ற மாநிலங்களுக்குத் தேவையான நீக்ரோக்களை ஒன்றுதிரட்டும் வசதியுள்ள வர்ஜீனியா தன் சொந்த உபயோகத்திற்குத் தேவையான நீக்ரோக்களையும் வெளி மாகாணங்களில் விற்பதற்குத் தேவைப்படும் ஆருயிரம் நீக்ரோக்களையும் உண்டாக்குகிறது' என 1832-ல் பேராசிரியர் டியூ ஆப் வில்லியம் அவர்களும் (Professor Dew of William), மேரி கலீஜ் அவர்களும் (Mary College) வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளனர்.[13] ஆல்ம்ஸ்டெட் (Olmsted) மதிப்பிட்டுள்ளதுபோல, 1860-க்கு முந்திய பத்து ஆண்டுகளில், எல்லைப்புற மாநிலங்களிலிருந்து ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்படும் நீக்ரோக்களின் எண்ணிக்கை சுமார் 25,000 ஆகும். வர்ஜீனியாவின் ஜனத்தொகையில் நீக்ரோக்கள் 1782-ல் 50 சதவீதமும் 1860-ல் 37 சதவீதமும் இருந்தனர். அடிமை வியாபாரத்தை வளர்ப்பதற்கென்று அடிமைக் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் காரியம் அவ்வளவாகப் போற்றப்படவும் இல்லை; தூண்டப்படவும் இல்லை. சில பிரதேசங்களில் நிலம் வளம் குன்றியமையாலும், அடிமைமுறை இலாபகரமானதாக இல்லாமையாலும் அப் பிரதேசங்களில் நீக்ரோக்கள் மிகுதியாக இருந்தனர். பொருளாதார வசதி குன்றிய முதலாளி தங்களுடைய சொந்த விருப்பத்திற்கு மாறுக அடிமைகளைத் தென்னகத்துச் சந்தையிலே விற்றனர். எல்லைப்புற மாநிலங்களில் உள்துறை வர்த்தகத்தில் அடிமை வியாபாரம் நிலையாகக் குறைந்துவருதல் குறித்தும், அடிமை முறையே செல்வாக்கிழந்து வருதல் குறித்தும் கெய்னஸ் அவர்கள் (Cairnes) தரும் புள்ளிவிவரங்களிலிருந்து உணரலாம். அவர் தரும் புள்ளிவிவரம் பின்வருமாறு :

1850ஆம் ஆண்டுடன் முடிவடைகின்ற பத்தாண்டுகளில் ஜனத்தொகையின் சதவித அதிகரிப்பு

மாநிலம்	வெள்ளையர்கள்	அடிமைகள்
வர்ஜீனியா ...	... 20·77	5·21
மேரிலாந்து ...	... 31·84	0·70
கென்டக்கி ...	... 28·99	15·75
அர்க்கான்சஸ் ...	... 110·16	136·26
மிசிசிப்பி ...	... 65·13	58·74
லூயிசியானா ...	... 61·29	45·32

ஜான் எஃப். கெய்னஸ் (John F. Cairnes), 'The Slave Power' (2nd ed., enlarged, 1863), p. 130.

[13] தாமஸ் ஆர். டியூ (Thomas R. Dew), 'The Pro-Slavery Argument' (1852), p. 359.

தென்னுட்டுத் தலைவர்கள் அடிமை முறைக்குத் தந்துள்ள முக்கியத்துவத்தை விளக்குவற்கு மேலும் ஓர் ஆதாரத்தை வலியுறுத்தவேண்டும். தென்னுட்டுச் செல்வம் முக்கியமாகப் பருத்தி, நிலம், அடிமைகள் ஆகியவற்றிலேயே முதலீடு செய்யப்பட்டுள்ளது. பருத்தி பெருமளவுக்குச் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டமையால், 1840–49 வரையுள்ள ஆண்டுகளில் பருத்தியின் மதிப்புக் குறைந்தது.* அதே வேளையில், பயிர்த்தொழிலில் பிற்போக்கான வீண் முறைகளைப் பின்பற்றியமையால் நிலத்தின் மதிப்பும் குன்றியது. தென் மேற்குப் பிரதேசத்திலுள்ள வட்டாரங்கள், ஐம்பது ஆண்டுகளுக்குள்ளாகப் பயனற்ற பாலைவன நிலையிலிருந்து மாறி, பயனுள்ள விவசாயப் பொருளாதார நிலைக்கு முன்னேறின; அதற்குப் பின்னர் யாரும் வசிப்பதற்குப் பிரயோசனம் இல்லாத வகையில் தரிசு நிலைக்கு மாறின.[14] பருத்தியின் மதிப்பும் நிலத்தின் மதிப்பும் குறைந்தபோதிலும் அடிமைகளின் விலை உயர்ந்தவண்ணம் இருந்தது. ஆண்டுகள் கழியக்கழிய மதிப்பு உயர்ந்தவண்ணமிருந்த தென்னுட்டுச் செல்வத்தின் ஒருவகை எதுவெனில், அடிமைகளை வாங்குவதில் முடக்கிய முதலீடேயாகும். இத்தகைய சூழ்நிலைகளில் இதுபோன்ற சொத்தின் மதிப்பைத் தென்னுட்டு அடிமை முதலாளி மிகைப்படுத்துவதில் வியப்பு ஒன்றுமில்லை. அவ்வாறே தென்னுட்டுச் செழிப்பிற்கும் அடிமை முறை நிலைபெற்றிருப்பது அவசியம் என்பதும் வியப்படைதற்குரிய செய்தியன்று.

பழைய மாநிலங்களில் நிலத்தின் மதிப்பு அடிமை முறையையே சார்ந்துள்ளது என்றுகூடச் சில தென்னுட்டுப் பொருளாதார வல்லுநர்கள் அழுத்தந்திருத்தமாகக் கூறிப்போந்தனர். பேராசிரியர் டியூ பின்வருமாறு கூறுகிறார்: 'உண்மையில், வர்ஜீனியாவிலுள்ள நிலத்தின் மதிப்பும் அங்கு வசிப்பதற்குரிய வசதியும் அங்கு நிலவும் அடிமை முறையைச் சார்ந்துள்ளன. அடிமைகளை அந்த மாநிலத்திலிருந்து விரட்டிய அன்றிலிருந்து அம் மாநிலத்திலுள்ள நிலத்தின் விலை, மேற்குப் பிரதேசத்திலுள்ள அரசாங்க நிலத்தின் விலையளவுகூட

*அதிகாரம் 17-ல், 'பருத்தி மன்னன்' என்ற தலைப்பின் கீழ்க் காண்க.

[14] அதிகாரம் 10-ல் 'எல்லைப்புற வாழ்க்கை' என்ற தலைப்பின்கீழ்க் காண்க; எஃப். எல். பாக்சன் ((F. L. Paxson), 'History of the American Frontier', p. 206 காண்க; ஜி. எஸ். காலண்டர் (G. S. Callender)', 'Selections from the Economic History of the United States,' pp. 765–767 காண்க.

இருக்காது. அந்தப் பழைய மண்டலம் வெறும் பயனற்ற பாலை வனமாகவே இருக்கும்.'[15]

போருக்கு முந்திய பத்தாண்டுகளில் அடிமை முறை பெருமள வுக்கு வளர்ந்தது; அடிமை முறை வீழ்ச்சியடைவதற்குரிய அறிகுறிகளும் துவக்கத்தில் தென்பட்டன. பதினைந்து அடிமை மாநிலங்களில் வாழ்ந்த 1,20,00,000 பேர்களில் (முழு எண் களாகத் தரப்பட்டுள்ளது.) சுமார் மூன்றில் ஒரு பங்கினர் அடிமை களாவர். தென்னாட்டின் முக்கிய உற்பத்தியாகிய பருத்தி உற்பத்தி அடிமை முறையுடன் மிகவும் நெருக்கமாக இணைக்கப் பெற்றுள்ளது. எல்லைப்புற மாநிலங்களில் உள்ள நிலங்கள் அனைத்தும் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன; அல்லது அம் மாநிலங்களில் உள்ள நிலங்கள் பருத்தி உற்பத்திக்கு ஏற்றவைகளாக இல்லை. இருந்தபோதிலும், எல்லைப்புற மாநிலங்கள் தன்னறிவில்லாமல் அடிமைகளை ஒன்றுதிரட்டி உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தன. அதேவேளையில் தென் மண்டலத்தின் பெரும்பகுதியில் அடிமைமுறை வளர்ச்சி யடையாமல் தடைபட்டுக் கிடந்தது. அட்லான்டிக் சமுத்திரக் கரையோரப் பிரதேசங்களிலும் எல்லைப்புற மாநிலங்களிலும் அடிமை முறை செல்வாக்கிழந்து குன்றத் தொடங்கியது. தென் மண்டலம் முழுதும், வெள்ளைக்கார விவசாயிகளும் உரிமைபெற்ற தொழிலாளர்களும் எண்ணிக்கையில் அடிமைகளைவிட வேக மாகப் பெருகினர். வெள்ளைக்காரர்களின் எண்ணிக்கையில் விரைந்து ஏற்பட்ட பெருக்கம், தென்னாட்டிலுங்கூட, வெள்ளைய ருக்கும் அடிமைகளுக்குமிடையில் பெருங் கொந்தளிப்பு ஏற்பட விருக்கிறது என்பதனையே முன்னறிவிப்பாக எடுத்துக்காட்டியது. அத்தகைய கொந்தளிப்பில் அடிமை முறைக்கே ஆபத்து ஏற்படும் என்பது தெளிவாகும்.

தென்மண்டலத்தில் அடிமை முறை

அடிமை மாநிலங்களில் வெள்ளைக்காரர்கள் 80,99,760 பேர் களும், அடிமைகள் 39,58,580 பேர்களும் வசித்தனர் என 1860 ஆம் ஆண்டின் சென்சஸ் குறிப்பிட்டுள்ளது. அடிமைகளை விலைக்கு வாங்கிச் சொந்தமாக்கிக்கொண்ட வெள்ளையர்கள் 8,84,000 பேர்களே இருந்தனர். பத்து அடிமைகளுக்குமேல் சொந்தமாக்கிக் கொண்ட வெள்ளையர்கள் 1,07,957 பேர்களே ஆவர். ஐம்பதும், ஐம்பதுக்கு மேற்பட்ட அடிமைகளையும் உடைய வெள்ளையர்கள் 10,781 பேர்களே ஆவர். நூறும், நூற்றுக்கு

[15] தாமஸ் ஆர். டியூ (Thomas R. Dew), op. cit., p. 358.

மேற்பட்ட அடிமைகளையும் உடைய வெள்ளையர்கள் 1,733 பேர்களே ஆவர். ஆறு மில்லியனுக்கு மேற்பட்ட தென்னாட்டு வெள்ளையர்கள் அடிமைகளை விலைக்கு வாங்குவதில் நேரடியான ஆர்வம் காட்டவில்லை. இருந்தபோதிலும், தென்னாட்டின் செல்வத்திற்கும் செழிப்பிற்கும் காரணமாக அமைந்துள்ள முக்கியப் பயிராகிய பருத்தி உற்பத்தி பெரும்பாலும் அடிமைகளையே பொறுத்திருந்தது. இந்த உண்மை தோட்டப் பொருளாதார அமைப்பில் அடிமை முறைக்கு உள்ள முக்கியத்துவத்தையே காட்டுகிறது. ஆனால், அடிமை முதலாளிகளின் குறைந்த எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது அடிமை முறைக்கு அத்தகைய முக்கியத்துவம் ஏற்படவேண்டியதில்லை என்றே தோன்றுகிறது. அடிமை முதலாளிகள் இனத்திலிருந்து திறமை மிகுந்த அரசியல்வாதிகள் கிளம்பித் தென்னாட்டில் அடிமை முறைக்கு ஆதரவாக மக்களை ஒன்றுதிரட்டினர். எனவே, 1860-ல் நாடு துண்டாகும் நிலை ஏற்பட்டபொழுது, வெள்ளைக்காரகளில் பெரும்பாலோர் பிரிவினை இயக்கத்தை ஆதரித்தனர். தங்களுடைய நலனைமட்டுமே பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ள அமைப்பினைக் கட்டிக்காப்பதற்காக மக்கள் சக்தியையும் ஆதரவையும் ஒன்றுதிரட்டிப் போரில் ஈடுபடுத்திய அதிகாரவர்க்கத்தின் ஒருசிலரைப்பற்றிய செய்தி தற்கால வரலாற்றில் இரண்டு ஒன்றேயாகும்.

அடிமைகளில் நான்கில் மூன்று பங்கினர் நேரடியாக விவசாயத்திலும், அவர்களில் பலர் பருத்தி உற்பத்தியிலும் ஈடுபட்டிருந்தமையால், அடிமை வாழ்க்கை என்பது தோட்டத்திலும் பண்ணையிலும் வாழும் வாழ்க்கையாகவே இருந்தது. புத்திசாலித்தனமும் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் உள்ள நீக்ரோக்கள் குறிப்பாக வெள்ளையரின் குருதி உறவு கொண்ட நீக்ரோக்கள், வீட்டு வேலைக்காரர்களாக அமர்த்தப் பட்டனர். பெருந் தோட்டங்களில் பெரும்பாலும் தச்சர்களாகவும், கொல்லர்களாகவும், செலுத்துவோர்களாகவும் நீக்ரோக்கள் வேலைபார்த்து வந்தனர். பெரும்பாலான அடிமைகள், ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக வயல்களில் வேலைபார்த்துவந்தனர். மிகச் சிறிய தோட்டங்களில் தோட்ட முதலாளியே கண்காணிப்பாளனாக வேலைபார்த்து வந்தான். ஆனால், பெருந் தோட்டங்களில் தோட்ட முதலாளிகளே கண்காணிப்பாளராக இல்லாமல் அவர்கள் வேறு வெள்ளைக்காரக் கண்காணிப்பாளரைச் சம்பளத்திற்கு அமர்த்தினர். சம்பளத்திற்கு வேலைக்கமர்ந்த வெள்ளைக்காரக் கண்காணிப்பாளர்கள், நம்பிக்கைக்குப் பாத்திரமான நீக்ரோக்களைத் தங்களுக்குத் துணையான

வகையில் செலுத்துவோர்களாக (drivers) அமர்த்திக்கொண்டனர். அந்த நீக்ரோக்கள் சிறு குழுக்களை மேற்பார்வையிடுவர்; அல்லது வேலையை முதலில் துவக்கிப் பின்னர் அச் சிறு குழுக்களைச் சார்ந்த அடிமைத் தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்துவர். தோட்டத்தில் வேலைசெய்வதற்கு மூன்று முறைகள் உள்ளன. திறமைக்குத் தக்கவாறு ஒவ்வோர் அடிமைக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வேலையைத் தரும் வேலை முறை (task system) ஒன்றினைப் பின்பற்றலாம். செலுத்துவோனைப் பின்பற்றிக் குழுவிலுள்ள அடிமைகள் வேலைசெய்யும் குழுமுறை (gang system) ஒன்றினைப் பின்பற்றலாம்; அல்லது எந்தத் தூண்டுதலுமின்றிக் கசையடிமூலமே அச்சுறுத்தி அடிமைகளை வேலை வாங்கலாம்.

தலத்திலில்லா அடிமை முதலாளித்துவம் தென்னாடு முழுதும் பரவலாக வியாபித்திருக்கவில்லை. ஆனால், பரவியிருந்த பகுதிகளில் அனைத்தும், அது சாபக்கேடாகவே இருந்தது. ஏனெனில், தலத்திலில்லா அடிமை முதலாளித்துவத்தில் வேறு கண்காணிப்பாளரைச் சம்பளத்திற்கு அமர்த்தவேண்டியிருந்தது. அன்பு நெஞ்சம் படைத்த கண்காணிப்பாளர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். ஏழைமையில் வாழ்ந்துவந்த வெள்ளையர்களே கண்காணிப்பாளராக நியமிக்கப்பெற்றமையால், அவர்கள் சமூக அந்தஸ்தில் வேலை தரும் முதலாளிகளுக்குச் சமமானவர்களல்லர். பணம் சம்பாதித்து அடிமை முதலாளிகளாக வேண்டும் என்பதற்காகவே அவர்கள் தற்காலிகமாகக் கண்காணிப்பாளராக வேலைக்கமர்ந்தனர். அவர்கள் அடிமை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தரகர்களுக்கு ஒரு படி மாறுபட்டவர்களே; சமூக அந்தஸ்திலும் தரகர்களுக்கு ஒரு படி குறைந்தவர்களே. உற்பத்தியாகும் பருத்தியின் அளவைப்பொறுத்தே கண்காணிப்பாளரின் திறமை கணக்கிடப்படுவதால், கண்காணிப்பாளர்கள் அடிமைகளைக் கொடுமைப்படுத்தி வேலைவாங்கினர். நேரடியாக மேற்பார்வை செய்துவரும் தோட்ட முதலாளி நிலத்தை வீணுக்கு வதைவிடக் கண்காணிப்பாளர் நிலத்தை மிகவும் அதிகமாக வீணுக்கினர். சொந்தக்காரர்களே நேரடியாக மேற்பார்வை செய்யும் தோட்டங்களில், முக்கியமாகச் சிறிய தோட்டங்களில் வேலைபார்க்கும் அடிமைகள் நன்றாகவே வாழ்ந்தனர் எனலாம்.

பொதுவாகக் கூறப்புகின், ஓர் அடிமையினுடைய பொருளாதார நிலை தற்காலத்தில் திறமையுடன் நிர்வகிக்கப்படும் பண்ணையிலுள்ள கால்நடை ஒன்றின் நிலையைவிட உயர்ந்ததாக இருக்கவில்லை. அதுபோலவே, அடிமைகளின் நிலை வட பிரதேசத்தில் மிகவும் ஏழைமை நிலையில் வாழ்ந்த தொழிலாளர்களின் நிலைக்கு

மாறுபட்டதுமன்று. வீட்டு வேலைக்காரர்கள்[1] முதலாளிகளின் குடும்பத்தினர் வேண்டாமெனத் தூக்கி எறிந்த ஆடைகளையே அணிந்துகொண்டனர்; போதுமான அளவுக்குக் கிடைத்த உணவை அருந்தினர். ஆனால், அவர்களுக்கு வசதிகள் கிடைக்கவில்லை. பண்ணைகளில் வேலைசெய்வோர் சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரையில் உழைத்தனர்; தங்களுக்கு வேண்டிய உணவைத் தாங்களே சமைத்துக்கொண்டனர். தோட்டத்திற்குப் பின்புறமுள்ள குடிசைகளில் அவர்கள் வாழ்ந்தனர்; தூய்மையற்ற அக்குடிசைகளில் தட்டுமுட்டுச் சாமான்கள் ஒன்றுகூட இல்லை. மக்காச் சோளத்தில் செய்த ரொட்டித் துண்டையும் பன்றி இறைச்சியையுமே அவர்கள் சாதாரணமாக உட்கொண்டனர். ஓரளவுக்கு மனிதாபிமானம் உள்ள முதலாளி சில வேளைகளில் சிறிய நிலங்களில் பயிரிடவும், கோழிகளையோ அல்லது பன்றிகளையோ வளர்க்கவும் அடிமைகளை அனுமதித்தனர். மேலும், முதலாளிகள் அடிமைகளுக்கு அவ்வப்பொழுது வெவ்வேறு உணவு வகைகளை வழங்கினர்; ஓய்வு நாட்களும் சன்மானங்களும் தந்தனர். புத்திசாலித்தனம் உள்ள முதலாளிகளும், விஞ்ஞான ரீதியாகத் தோட்டங்களைப் பயிரிட்டு வந்த முதலாளிகளும் அடிமைகளுக்கு வேண்டிய சுகாதார வசதி, அவர்களுடைய உடல்நலம் ஆகியவற்றைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்தனர். அம் முதலாளிகள், அடிமைகளின் கேளிக்கைகளுக்கும் ஆத்மீக வளர்ச்சிக்கும் வேண்டிய வசதிகளைச் செய்துதந்தனர். நீக்ரோக்களுக்குப் படிக்கவும் எழுதவும் சொல்லித்தந்தால் அவர்கள் எதையெடுத்தாலும் அதிருப்தியடைவார்கள் என்ற பயத்தின் காரணமாக ஐந்து மாநிலங்கள் அவர்களுக்குப் படிப்பும் எழுத்தும் சொல்லித்தருவதைத் தடை செய்தன. என்றாலும், அவர்களுக்கு மதபோதனை அடிக்கடி வழங்கப்பெற்றது. மதபோதனை நீக்ரோக்களை நிச்சயமாகக் கவர்ந்தது. என்றபோதிலும், மதபோதனைமூலம் நீக்ரோ இனத்தைச் சார்ந்த ஆண்களிடமும் பெண்களிடமும் நேர்மை, ஒழுக்கம், கற்பு ஆகியவற்றை வளர்க்க எடுத்துக்கொண்ட முயற்சி சுலபமானதாக இருக்கவில்லை. ஏனெனில், அவர்களுடைய உடல்களோ அல்லது அவர்களுடைய உழைப்பில் விளைந்த பயன்களோ அவர்களுக்குச் சொந்தமல்ல. அடிமைகளின் திருமணத்தை எந்த மாநிலமும் சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை; எனினும், அவர்களின் திருமண விழா நடந்தவண்ணமே இருந்தது.

அடிமையொழிப்பு இலக்கியத்தில் அடிமைகள் கொடுமைகளுக்குப் பலியான செய்திகளே நிறைந்துள்ளன. சில மக்கள்மீது

மற்றவர்கள் முழு ஆதிக்கம் செலுத்துவதற்கு ஏற்ற ஓர் அமைப்பில், கசையடி கிடைக்குமோ என்ற அச்சத்தில் உழைக்கும் தொழிலாளர்களுக்குக் கசையடி இயற்கையாகவே நடைபெறும். வேண்டுமென்றே அடிமைகள் கொடுமைக்குப் பலியாவார்கள். எனினும், அதுவே பொதுவான செயலாக இருக்கவில்லை. நிச்சயமாக வீட்டு வேலைக்காரர்கள் கசையடிபோன்றவற்றிற்குப் பலியாகவில்லை. லூயிசியானாவிலுள்ள சர்க்கரைத் தோட்டங்களிலும், ஜார்ஜியா, தென் கரோலினு ஆகிய பிரதேசங்களில் உள்ள நெல்வயல்களிலும், தென்னகத்துக் கீழ்ப்பகுதியிலுள்ள பருத்தித் தோட்டங்களிலும் நிலைமைகள் இன்னும் மோசமாக இருந்தன. அத் தோட்டங்களிலெல்லாம், 'மிகவும் இழிந்த, மதிப் பிழந்த, கொள்கையற்ற இனம்' என பாட்ரிக் ஹென்றி (Patrick Henry) அவர்களால் வருணிக்கப்பெற்ற வெள்ளைக்காரக் கண் காணிப்பாளரின்கீழ் அடிமைகள் கூட்டங்கூட்டமாக உழைத் தனர். அடிமை முறையில் வேறு வகையான கொடுமைகளும் நிலவின. அடிமைக் குடும்பங்கள் பிரிக்கப்பெற்று, குடும்ப உறுப் பினர்கள் ஏலத்திற்கு விடப்படுவர். அடிமைகளைத் தென்னகத்துச் சந்தையில் விற்கும் எல்லைப்புற மாநிலங்களில் இத்தகைய கொடுமைகளே நிலவின.

அடிமைகள் மகிழ்ச்சியுடனும் நிறைவுட்னும் வாழ்ந்துவந்த எஸ்டேட்டுகளும் பல இருந்தன. அந்த எஸ்டேட்டுகளில் முதலாளிக்கும் அடிமைக்கும் இடையில் நல்லுறவு நிலவியது. அடிமை முறையினின்றும் விடுதலை அடைவதற்கு முன்னர் நீக்ரோ அனுபவித்த பொருளாதார வசதியை விடுதலை அடைந்த பின்னருங்கூட அவன் அனுபவிக்கவில்லை. ஆபத்தெனக் கருதப் பட்டதால், அடிமைகளை விடுதலைசெய்தல் கட்டுப்படுத்தப் பெற்றது. ஆனால், முதலாளிகளில் பலர் தத்தம் அடிமைகளை விடுதலை செய்தனர். விடுவிக்கப்பெற்ற அடிமைகளின் எண்ணிக்கை 1860-ல் 3,018 என அந்த ஆண்டில் முற்றுப் பெறுத புள்ளிவிவரமுடைய சென்சஸ் குறிப்பிட்டுள்ளது; 1809 அடிமைக்ளுக்கு ஓர் அடிமை வீதம் விடுவிக்கப்பட்டனர். அதே ஆண்டில் அடிமை மாநிலங்களில் ஏறக்குறைய 2,62,000 விடுவிக்கப்பெற்ற நீக்ரோக்கள் இருந்தனர். அடிமைகளை நடத்தியதைப்பற்றிய பிரச்சினையில், பேராசிரியர் பிலிப்ஸ் அவர் களின் கருத்து நியாயமானதாக உள்ளது. அவர் பின்வருமாறு கூறுகிறார்: 'அடிமை முறை நிலவும் ஓர் ஆட்சியில் அடிமை களின் நல்வாழ்வுக்கேற்ற சூழ்நிலை நிலவும் என்ற கருத்தையும் கொள்கையையும் அயல் நாட்டினர் தங்கள் மனக்கண்முன்

கொண்டுவந்து நிறுத்திப் பார்த்தால், அவர்கள் எத்தகைய வியப்பினை அடைவார்களோ, அத்தகைய வியப்பினையே வலுக்கட்டாயத்தின்மூலமும், முழுச் சுரண்டலின்மூலமும் அடிமைகள் வாட்டி வதைக்கப்பெற்றனர் என்ற கருத்தையும் கொள்கையையும் கேள்விப்படும் தோட்ட முதலாளிகளில் பலரும் அடைவர்.'[16]

அடிமைமுறையின் பொருளாதார நன்மைகளும் தீமைகளும்

பருத்திப் பயிர்த்தொழில் துவங்குவதற்கு முன்னர், அடிமை உழைப்பின் நன்மைகள் ஐயப்பாட்டிற்குரியனவாக இருந்தன. காலப்போக்கில் அந்த நூற்றாண்டில் அடிமை உழைப்பின் நன்மைகள் நன்கு தெளிவாயின. அடிமைத் தொழிலாளிகள்மீது முதலாளி முழு ஆதிக்கம் செலுத்தினால், முதலாளிக்கு நன்மையே என்று கருதப்பட்டது. ஏனெனில், முதலாளி தன்னுடைய அடிமைத் தொழிலாளியின் உழைப்பின் முழுப் பலனையும் அனுபவிக்க முடியும்; தான் விரும்பியவண்ணம் தன்னுடைய தொழிலாளர் சக்தியை ஒன்றுசேர்க்க முடியும்; குறிப்பிட்ட ஓர் இலட்சியத்தை அடைவதற்குத் தன்னிஷ்டப்படி தொழிலாளர்களைக் கட்டுப்படுத்த முடியும். ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரின் நேரத்தையும் உழைப்பையும் கட்டுப்படுத்தி, அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தி விரயமாகும் சக்தியினைப் பாதுகாக்கும் முயற்சி எடுக்கப்பட்டது. அடிமைகளைத் தொடக்கத்தில் விலைக்கு வாங்கிய பின்னர், அவர்களை உடல்நலம் உள்ளவர்களாகவும் பலம் உடையவர்களாகவும் மாற்றுவதற்கு ஆகும் செலவினை மட்டுமே முதலாளிகள் மேற்கொள்ளவேண்டும். நெல் விளையும் பூமிகளில், உடல்நலத்தைப் பாதிக்கும் வேலையைச் செய்வதற்கு அடிமை முறையில் நீக்ரோக்களே ஏற்றவர்கள் என்று முதலாளிகள் உண்மையாகவே நம்பினர்.

உரிமை பெற்ற தொழிலாளர்களைக்கொண்டே பருத்தியைப் பயிரிட முடியும் என அறிவார்ந்த தென்னாட்டினர் சிலர் நம்பினார்கள். ஆனால், பெருமளவு பருத்தி உற்பத்தியைச் செய்வதற்கு அடிமைகளால் மட்டுமே இயலும் எனப் பெரும்பான்மையான மக்கள் கருதினர். உண்மையில் பருத்தி உற்பத்தி அடிமைத் தொழிலாளர்களினால் கிடைக்கும் நன்மைகளை உயர்த்திக் காட்டிற்று. ஐரோப்பாவிலோ, அல்லது வடமாநிலங்களிலோ உரிமை பெற்று வாழும் தேர்ச்சிபெறுத தொழிலாளி ஒருவனைவிடத் தென்னகத்து அடிமை ஒருவன் சிறந்த வீட்டிலே வசிக்கின்றான்; நல்ல உணவை அருந்துகின்றான்;

[16] யுல்ரிச் பி. பிலிப்ஸ் (Ulrich B. Phillips), op. cit., ப. 293-294.

மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். தென்னாட்டின் சில பகுதிகளிலேனும் அடிமைகள் நல்ல முறையில் வாழ்கின்றனர் எனத் தென்னாட்டு எழுத்தாளர்கள் விவாதித்தனர். அடிமைக்கு நல்வாழ்வு கிடைத்தோடு அமையாது, அடிமை முதலாளிக்கும் அவனுடைய குடும்பத்தினருக்கும் உடலுழைப்பிலிருந்து விடுதலை கிடைத்தது; அவர்கள் வாழ்க்கை வசதிகளைப் பெறுவதற்கும், அறிவை வளர்த்துக்கொள்ளவும் தங்களுடைய திறமைகளைப் பயன்படுத்த முடியும். இவ்வாறெல்லாம் தென்னாட்டு எழுத்தாளர்கள் கருதினர்கள். நீக்ரோக்களின் உழைப்பைச் சுரண்டியே பத்தாயிரம் குடும்பங்கள் போகபோக்கியங்களில் வாழ்ந்தன என்ற உண்மையின் அடிப்படையிலேயே அக் கருத்து எழுந்தது. அடிமை முறைக்கு மிகவும் பலமான எதிர்ப்புக் கிளம்பவே, அம் முறையினைப் பாதுகாக்கும் நோக்கத்தில் வேதத்தின் ஆதரவைத் தேடினர். கறுப்பர்கள் எப்பொழுதும் திறமை குறைவானவர்களாக இருப்பதால்தான் அவர்கள் பொருளாதார ரீதியாகப் பிறரைச் சார்ந்திருக்கவேண்டியுள்ளது என்ற இனவெறிக் கருத்தின்மூலம் அடிமை முறையை நிலைநிறுத்தப் பார்த்தனர். இறுதியில், வெள்ளைக்காரர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமெனில், அடிமைமுறை இருந்தே தீரவேண்டும் என்றும் தென்னாட்டினர் விளக்கம் தந்தனர். ஏனெனில், அடிமைகளுக்கு விடுதலை வழங்கப்பட்டால் தென்னாட்டின் எதிர்கால நாகரிகம் என்னவாகும் என்பதை விளக்குகின்ற முறையில் ஹெய்ட்டியில் (Haiti) ஏற்பட்ட கிளர்ச்சியும், அங்கங்கே உருவாகிய் தொல்லைகளும் அமைந்திருந்தன என்று தென்னாட்டினர் முழங்கினர்.[17]

அடிமை முறையினால் நன்மைகளே கிட்டும் என்று தோன்றியபோதிலும், உண்மையில் அவ்வாறு இல்லை. முதலில் அடிமைத் தொழிலாளிக்கு வேலையில் நாட்டமில்லை; வேண்டா வெறுப்புடனேயே வேலைசெய்கிறான். உற்பத்தியைப் பெருக்குவதில் குறைந்த ஊக்கமே செலுத்தப்பட்டது. உற்பத்தி பெருக வேண்டுமெனில், முதலாளி உற்பத்திப் பெருக்கத்தில் அதிகமான கவனம் செலுத்தியிருக்க வேண்டும்; ஆனால், அவன் பிரமாதமாக எதுவும் எதிர்பார்க்கவில்லை. எனவே, அடிமைத் தொழிலாளி தனது உண்மையான திறமையை மறைத்துவிட்டுத் தனது ஆற்றலுக்கு மிகவும் குறைவான வேலையையே செய்தான். கண்காணிப்பாளரின் தொடர்ந்த மேற்பார்வையும் கசையடிபற்றிய அச்சமுமே அடிமைகளை வேலையிலே ஈடுபடுத்தின. சம்பளத்தை

17 சி. எப். மெக்கே (C. F. McCay) அவர்கள் 'Eighty Year's Progress,' ப. 119 ff. எனும் நூலிலும், தாமஸ் ஆர். டியூ (Thomas R. Dew) அவர்கள் அதே நூலிலும் வழங்கியுள்ள விவாதங்களைக் காண்க.

யும் வழிமுறைகளையும் பொறுத்தவரையில், வேலைக்கமர்த்தப்பட்டுள்ள கண்காணிப்பாளனுக்கு ஆகும் செலவு மிகுதியாகவே இருந்தது. ஏனெனில், கண்காணிப்பாளனுடைய முக்கிய வேலை உற்பத்தியைப் பெருக்குவதாகும். உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபடும் கண்காணிப்பாளன் நிலத்தையும் பாழ்படுத்தி, அடிமைகளையும் தொல்லைகளுக்கு ஆளாக்கிவிடுகின்றான். அடிமை நீக்ரோ அடிப்படையில் தேர்ச்சியும் பயிற்சியும் பெறுத தொழிலாளியே. ஆப்பிரிக்கக் காட்டுமிராண்டித்தனத்திலிருந்து நீக்ரோ அடிமை இன்னும் மாறவில்லை. அவனுக்கு அறிவு வளர்ச்சியிலும் அதிக நாட்டமில்லை. தான் வாழ்ந்த அடிமை முறையின் காரணமாக அவனுக்கு முரட்டுத்தனம் ஏற்பட்டுள்ளது. எனவே, அவனுக்குப் பலதிறப் பயிற்சியும் ஏற்படவில்லை; பெரிய வேலைகளுக்கும் ஏற்றவனாக இல்லை. இதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை. நீக்ரோ அடிமை எளிய கருவிகளையே பயன்படுத்துவான்; சாதாரணமாக, பெரும் இயந்திரங்களை இயக்கும் பயிற்சியை அவனுக்கு அளிப்பது மிகவும் கடினமாகும். திரும்பத்திரும்ப நிரந்தரமாகச் செய்யவேண்டிய வேலையில் மட்டுமே ஒரு சராசரி அடிமையை ஈடுபடுத்த முடியும். இன்னும், அடிமை ஒருவனுடைய உணவுக்கும் உடைக்கும் ஆகும் செலவு குறைவாக இருந்த போதிலும், இந்தச் செலவுடன் முதல்மீது தரவேண்டிய வட்டி, தேய்மானம், வரி, அடிமை நோயுற்றபொழுது ஆகும் செலவு, அவன் தப்பி ஓடினாலோ அல்லது இறந்துவிட்டாலோ ஆகும் செலவு ஆகியவையனைத்தையும் கூட்டிப்பார்த்தால், வேலைசெய்யக்கூடிய அடிமை ஒருவனை வைத்திருப்பதற்கு ஆகும் செலவு ஆண்டொன்றுக்கு சுமார் 185 டாலர்களாகும். போருக்கு முன்னர், ஜார்ஜியாவில் அடிமைகளை ஆண்டொன்றுக்கு 140 முதல் 150 டாலர்கள்வரையிலும் கொடுத்து வேலைக்கு அமர்த்திக் கொண்டனர். பின்னர் விடுவிக்கப்பெற்ற தொழிலாளர் முறை ஏற்பட்டவுடன், ஆண்டொன்றுக்கு 120 டாலர்களும் உணவும் கொடுத்து நீக்ரோக்களைப் பெறமுடியும்.

கிடைத்துள்ள ஆதாரத்தைக்கொண்டு பார்த்தால், உள்நாட்டுப் போர் துவங்குவற்குமுன் நிலவிய சூழ்நிலையில் இயங்கிவந்த அடிமை முறையில், சிறப்பான பொருளாதார அம்சம் எதுவும் கிடையாது. உயர்ந்த நிலத்தில் அமைந்து, திறமையுடன் நிர்வகிக்கப்பெற்ற சில தோட்டங்களுக்கு நல்ல இலாபம் கிடைத்தது. அடிமை உழைப்பும், உயர்ந்த வட்டிவீதங்களும், தரகர்களுடைய கழிவுகளும், பொதுவாகவே நன்மை பயக்காத பொருளாதார அமைப்பும் நிலவியபோதிலும், அத்தோட்டங்களுக்கு நல்ல இலாபம் கிடைத்தேவந்தது. நன்மை பயக்கும்

வகையில் சூழ்நிலைகள் அமைந்திருப்பின், நியாயமான இலாபங்கள் கிடைத்திருக்கும். ஆனால், சூழ்நிலைகளனைத்தும் நலன் விளைப்பனவாக அமையவில்லை. ஒரு சராசரித் தோட்டம் இழுத்துப் பறித்துக்கொண்டுதான் இயங்கவேண்டும். எனவே, ஓரளவுக்கேனும் இலாபம் ஈட்டும் வாய்ப்பினைப் பெற்றால், அதுவே அத் தோட்டத்தின் நல்விளையாகும்.[18] போருக்கு முந்திய ஆண்டுகளில் தோட்டப் பொருளாதாரத்தில் பருத்தி உற்பத்தியின் செழிப்புக் குன்றியவண்ணம் இருந்தது. அடிமைத் தொழிலாளர்கள் திறமையற்றவர்களாக இருந்ததோடு மட்டுமல்லாமல் அவர்களுக்காகும் செலவும் அதிகமானதால், பருத்தி உற்பத்தியின் செழிப்புக் குன்றுவதற்கு அடிமை உழைப்பும் காரணமாக அமைந்தது. இது தெளிவான உண்மையாகும்.

எண்ணற்ற குறைகளுக்கிடையில் செயற்பட்டுவந்த பருத்தித் தோட்ட முதலாளி, அக் குறைகளைச் சமாளிக்கும் வகையில் அளவில்லாமல் கிடைத்த வளமான நிலங்களை உபயோகிக்க முனைந்தான். முன்னரே குறிப்பிட்டுள்ளது போல,[19] தோட்ட முதலாளி தென்னாட்டின் செல்வத்தைப் பயன்படுத்தி, வளம் மிகுந்த நிலங்கள் அனைத்தையும் கைப்பற்றி, முழுதும் பயன்படுத்தி, வேறு நிலம் கிடைக்காமையால் புதிய பூமியை நோக்கி அவன் முன்னேறினான். இந்த முறையினால் துவக்கத்தில் எத்தகைய இலாபம் கிடைத்தபோதிலும், முடிவில் பெரும் இழப்பே ஏற்படும். கடற்கரை மாநிலங்களில் தரிசாகவும் வளம் குன்றியும் ஏராளமான நிலங்கள் கேட்பாரற்றுக் கிடந்தன. அவை படையெடுத்துவரும் பட்டாளத்தினால் அழிக்கப்பெற்று அலங்கோலமாகக் கிடக்கும் பூமிபோல் வெறிச்சென்று கிடந்தன. 'நிலத்திற்கு வளம் ஊட்டாமல் ஏராளமான அடிமைகளை அந்த நிலத்தில் உழைக்கச்செய்து பருத்தி உற்பத்திசெய்ய முனைந்ததால்தான்' பிரடரிக்ஸ்பர்க்கிற்கும்(Fredericksburg)ரிச்மாண்டிற்கும்(Richmond) இடையிலுள்ள நிலங்களனைத்தும் வீணாயின என்று 1842-ல் அடிமை முறையை எதிர்த்து நின்ற டிக்கன்ஸ் (Dickens) குறிப்பிட்டார். 'ஏராளமான மரங்கள் வளர்ந்து, மணல் நிறைந்த பாலைநிலமாக அது காட்சி யளிக்கிறது' என்றும் டிக்கன்ஸ்

[18] பொருத்தமான சில எடுத்துக்காட்டுகளைத் தனது நூலில் லூயி ஹேக்கர் (Louis Hacker,) தருகிறார். 'The Triumph of American Capitalism', ப. 318–320. ஆர். பி. ஃபிளாண்டர்ஸ் (R. B. Flanders) அவர்களுடைய 'Slavery in Georgia', ப. 221—223 எனும் நூலிலும், சி. எஸ். சிட்னர் (C. S. Sydnor) அவர்களுடைய 'Slavery in Mississippi', ப. 196—197 எனும் நூலிலும் காண்க.

[19] அதிகாரம்—10, 'பழைய தென்மேற்குப் பகுதியில் குடியேற்றம்' என்ற உட்பிரிவில் காண்க.

குறிப்பிட்டுள்ளார். அவர் மிகைப்படுத்தி மேலும் கீழ்க்கண்ட வாறு கூறுகிறார்: 'இந்த மாவட்டத்திலும், அடிமை முறை நிலவும் மற்ற மாவட்டங்களைப் போலவே,...அடிமை முறையில் முன்னேற்றமும், அதனின்றும் பிரித்தறியமுடியாத வகையில் அழிவும் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளன.'[20] வளம் கொழிக்கும் நிலம் ஒன்றே பயனுடையதாக இருக்கமுடியும்; ஆதலால், தென்னாட்டில் வளர்ச்சியுறுத நிலத்தின் வீதாசாரம் மிகுந்தே இருந்தது.

இத்தகைய சூழ்நிலைகளில் தென்னாட்டுப் பொருளாதாரம் திருத்தியமைக்கப்படுவதற்கும், அடிமை முறை அழிந்தொழிவதற்கும் காரணமாக வளங் குன்றும் புதிய நிலமே இருக்கும் என்பது உண்மையே.[21] இத்தகைய சூழ்நிலை 1860 ஆம் ஆண்டிலும் பெரும் பிரச்சினையாக முற்றிவிடவில்லை. வேளாண்மைக்குக் கொண்டுவரப்படாத நிலையில் ஏராளமான புது நிலங்கள் இன்னும் இருந்தன. இருப்புப்பாதைகளின் வளர்ச்சி மேலும் புதுநிலங்களை உபயோகிக்கும் வாய்ப்பினை உருவாக்கித்தந்தது. தூய்மையான புது நிலங்களில் பருத்தியைப் பயிரிடுவதால் அடிமை முறையையும் உள்ளடக்கிய குறைபாடுகள் அனைத்தும் ஒழிந்துவிடுமோ என்பதே பெரும் பிரச்சினையாக இருந்தது. லூயி ஹேக்கர் (Louis Hacker) தெளிவாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'வேறு புதிய நிலத்திற்குச் செல்லும்பொழுது குத்தகை வாரக் குறைப்பு போதுமானதாக இல்லாததால், தொல்லை விளைந்தது. ஏனெனில், பண்ணைக்கும் வீட்டிற்கும் வேண்டிய அத்தியாவசியத் தேவைகளின் விலை உயர்ந்தவண்ணம் இருந்தது. பருத்தி விலை ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தது; பண்ணையாள்களின் கூலியும் உயர்தவண்ணம் இருந்தது. இவ்வாறெல்லாம் ஏன் நிகழ்ந்தன? புதிய தோட்டப் பகுதிகளில் உயர்ந்த உற்பத்தி வழிமுறைகளை நிறுவியதால், உட்பிரதேசங்களிலிருந்தும், எல்லைப்புற மாநிலங்களிலிருந்தும், கடலோரப் பிரதேசங்களிலிருந்தும் அடிமைகளைக் கீழ்த்தென்னாட்டு விவசாயிகள் கவர்வதற்கு வழி ஏற்பட்டது; அதாவது, 1850-1859-ன் பிற்பகுதியில் விடுவிக்கப்பெறுத தொழிலாளர்கள் நிறையக் கிடைக்காத சூழ்நிலையில், அடிமைகளை வாங்குவதற்குத் தர

[20] சார்லஸ் டிக்கன்ஸ் (Charles Dickens), 'American Notes' (1842), அதிகாரம், 9 ப. 51.

[21] சி. டபிள்யு. ராம்ஸ்டெல் (C. W. Ramsdell), 'The Natural Limits of Slave Expansion,' Mississippi Valley Historical Review, XVI, 151-171 (செப். 1929).

வேண்டிய விலை, நல்ல சூழ்நிலையில் அவர்களுடைய உற்பத்தித் திறனைப் பொறுத்ததாகும். எனவே, இத்தகைய முதலுக்கு ஆகும் செலவினைக் குறைக்கவேண்டியது தென்னாட்டுத் தோட்ட முதலாளிக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இத்தகைய செலவுக் குறைப்பினைச் செய்வதற்கு வெளிநாட்டு அடிமை வியாபாரத்தைச் சட்டபூர்வமாகத் துவக்கவேண்டியதேயாகும். தென்னாட்டுத் திட்டத்தின் நெஞ்சமே இப் பிரச்சினை ஒன்றில்தான் உள்ளது.'[22]

தென்னாட்டின் குழப்பம்

அடிமைத் தொழிலாளர்களைக்கொண்டு ஒரே தானியம் பயிரிடப்பெற்ற தோட்டப் பொருளாதாரத்தின் முழு விளைவு 1850-1859-ல் தெரியவந்தது. உயர்ந்த பணவருமானத்தை வலியுறுத்துவதும், காட்டுத் துணிச்சலுடன் தோட்டப் பொருளாதாரத்தை வளர்ப்பதும், வருமானம் உயர்ந்திருக்கும்பொழுது போகவாழ்வு வாழ்வதுமே வர்த்தகத் தோட்டப் பகுதிகளில் நிலவும் போக்கும் சூழ்நிலையுமாகும். ரொக்க முதல் திரட்சிபெருது இருப்பதும், தென்னாடு தாழ்ச்சியுற்ற பொருளாதார நிலையைப் பெற்றிருப்பதும் இத்தகைய போக்கினாலும் சூழ்நிலையினாலும் விளைந்தவைகளேயாகும். லீவீஸ் சி. கிரே(Leevis C. Gray) பின்வருமாறு கூறுகிறார்: 'பொதுவாகத் தென்னாடும், குறிப்பாகக் கீழ்த்தென்னாடும் தொடர்ந்து கடனாளிப் பிரதேசமாக இருப்பதற்குக் காரணம், வளர்ச்சியின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு வேண்டிய புது முதல் கிடைக்காததே ஆகும். தென்னாட்டில் உற்பத்தியிலும் துய்ப்பிலும் ஊதாரித்தனமே நிலவிய கிராமீயப் பொருளாதார அமைப்பு இடம்பெற்றிருந்தது. இத்தகைய கிராமீயப் பொருளாதார அமைப்பில், பணவருவாயின் பெரும் பகுதி ஒருசிலரிடமே குவிந்திருந்தது. எனவே, வடநாட்டைவிடத் தென்னாடு வறுமையில் மிகுதியாக வாடியது.'[23]

சுருங்கச் சொல்லின், ஒரு பிரதேசத்தின் வர்த்தக, நிதித்துவ வாழ்க்கையைப் பிறிதொரு பிரதேசம் இயக்கிக் கட்டுப்படுத்தும் சூழ்நிலை உருவாகியது. வர்த்தகத் தொழில்களில் கட்டணங்கள் உயர்ந்தன. வட்டி வீதங்கள் அத்துமீறி உயர்ந்திருந்தன. அதே வேளையில் அடிமைகளுக்காகும் செலவு அதிகரித்தமையால்,

[22] லூயி ஹேக்கர் (Louis M. Hacker), op. cit., ப. 281—282.

[23] எல். சி. கிரே (L. C. Gray), 'History of Agriculture in the Southern United States to 1850', I, 460.

பருத்தி உற்பத்தியிலேயே முக்கியச் செலவாகிய உழைப்புச் செலவு உயர்ந்தது. மேலும், 1850-ல் பருத்தியின் விலை பவுண்டு ஒன்றுக்கு 10 முதல் 11 சென்டுகள்வரையில் உயர்ந்திருந்திருந்தது. வளங்கொழிக்கும் நிலத்தில் நன்கு நிருவகிக்கப் பெற்ற தோட்டத்தில் பருத்தியின் இந்த விலை நல்ல இலாபத்தையே ஈட்டித்தரும். ஆனால், பெருவாரியான தோட்ட முதலாளிகளுக்கு இடையூறுடைய வாழ்க்கையும் கடனாளி அந்தஸ்தும் மட்டுமே கிடைத்தன.

பெருந் தோட்ட முதலாளிகளின் கையிலே செல்வம் குவிந்தமையால், சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் கேடு சூழும் விளைவுகளே ஏற்பட்டன என்பதையும் குறிப்பிட்டே தீரவேண்டும். குறிப்பாகச் சிறு விவசாயியே பாதிக்கப்பட்டான் என்பதைக் குறிப்பிட்டே தீரவேண்டும். வளம் மிகுந்த தாழ் நிலங்களில் அடிமைகளைக்கொண்டு பருத்தி உற்பத்திசெய்வதில் போட்டியிட முடியாததாலும், செல்வம் படைத்த தோட்ட முதலாளிகள் தம்முடைய நிலத்திற்கு அதிக விலை கொடுக்க முன்வருவதைத் தடுக்க இயலாததாலும், அந்தச் சிறு விவசாயி விரும்பத்தகாத பகுதிகளுக்குக்கொஞ்சங்கொஞ்சமாக விரட்டப் பட்டான். தென்னாடு முழுதும் நிகழ்ந்துவந்த நிகழ்ச்சிகளைத் தென்னாட்டுப் பார்வையாளர் ஒருவர் உள்நாட்டுச் செய்தித் தாள் ஒன்றில் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

'யூனியனின் தோட்டம் என வருணிக்கப்படும் மிசிசிப்பி பள்ளத்தாக்கின் பருத்தி விளையும் பூமியினை ஆண்டுதோறும் சிறு விவசாயியின் கைகளினின்றும் பறித்துப் பெருமுதலாளிகளிடம் கொடுத்தனர். நாட்டில் நிலவும் சூழ்நிலையை உருவாக்க உதவிய நல்ல உணர்வையும் விடாமுயற்சியையும் பெற்றுக் குருதியையும் உழைப்பையும் வழங்கிய வர்க்கமாகிய வெள்ளைக்கார ஈமன் (Yeoman) என்று வழங்கப்பெறும் சிறு விவசாயிகள் மணற்பாங்கான பைன்-குன்றுகளுக்கோ (pine-hills) அல்லது மேற்குப் பிரதேசத்திற்கோ விரட்டப் பட்டனர். தொழிலை இலாபமற்றதாகவும், வாழ்க்கையைச் சலிப்பு நிரம்பியதாகவும் ஆக்குவதற்கென்றே கிளம்பிய நீக்ரோக்கள், நீக்ரோக்களைச் செலுத்துவோர் ஆகியோருடைய படைக்கு ஏற்ற வகையில் மேற்குப் பிரதேசத்தின் நிலங்களைச் செப்பனிடுவதற்கென்றே சிறு விவசாயிகள் மேற்கே துரத்தப்பட்டனர்.'[24]

[24] Quoted by F. L. Olmsted (எப். எல். ஆம்ஸ்டெட்), 'A Journey in the Back Country' (1860, மறுபதிப்பு 1907), அதிகாரம் 8, ப. 329–330 (1860 பதிப்பு) and also in G. S. Callender (ஜி.எஸ். காலண்டர்), op. cit., ப—767.

தென்னுட்டுப் பொருளாதாரம் சீரழிந்த நிலையில் உள்ளது என அறிவார்ந்த தென்னுட்டினர் உணர்ந்திருந்தனர். சீரழிந்துள்ள பொருளாதாரத்தைத் திருத்தியமைக்கும் வழிமுறைகளை வழங்குவதற்குக் குறைவில்லை. விவசாயத்துறையைச் சார்ந்த நிபுணர்கள், தென்னுட்டில் நிலவும் தோட்டப் பொருளாதார அமைப்பின் ஊதாரித்தனத்தையும் பாழ்நிலையையும் வன்மையாகக் கண்டித்தனர். தோட்டப் பொருளாதார வளர்ச்சியில் தன்னிறைவே குறிக்கோளாக அமையவேண்டும் என விழைந்தனர். தோட்டப் பொருளாதாரத் தன்னிறைவு ஏற்பட்டால், விவசாயி உணவுப் பண்டங்களையும் மற்றக் கருவிகளையும் வெளிப்பகுதிகளிலிருந்து வாங்கவேண்டுவதில்லை. கடன் வாங்கவேண்டிய அவசியமும் குறைந்துவிடும்; நிறையப் பருத்தியைப் பயிரிடவுங்கூடும். சிறந்த வழிமுறைகளைப் பின்வருமாறு ஒருவர் கூறுகிறார்:

'அலபாமா, மிசிசிப்பி மாநிலங்களின் தோட்ட முதலாளிகளுடன் நாம் போட்டியிட முடியாது. வளமான பூமியும், நல்ல தட்பவெப்ப நிலையும் நிலவியபோதிலும், கொடுமையும் அழிவும் நிரம்பிய முறையினைப் பின்பற்றி அத் தோட்ட முதலாளிகள் நாசமடைந்தனர். வளம் குறைந்த பூமியையும் நலன் குறைந்த தட்பவெப்ப நிலையையும் உடைய நாம் உயர்தர உழவு முறையையே கடைப்பிடிக்க வேண்டும். அத் தோட்ட முதலாளிகள் பொறுப்பற்ற முறையில் அடிமைகளை வேலை வாங்கியும் வெளியேற்றியும் வந்தமையால், அடிமைகள் தங்களுடைய சந்ததியை இயற்கையாகப் பெருக்கிக்கொள்வது தடையாயிற்று. அம் முதலாளிகள் நிலவளத்தையும் பாழாக்கினர். ஆனால், நாம் நிலத்திற்கு ஓய்வு கொடுத்தும் உரமிட்டும் நன்கு பாதுகாக்க வேண்டும். அடிமைகளின் சந்ததி பெருகவும் நாம் வழிசெய்ய வேண்டும். அடிமைகளுடைய உடல்நலத்திற்கும் வசதிக்கும் தேவையானவற்றை வழங்கியும், அவர்களை அளவோடு உழைக்கச் செய்தும் நாம் அவர்களுடைய சந்ததிப் பெருக்கத்திற்கு வழிகோல வேண்டும்.'[25]

தென்னுட்டில் பொறிவழித் தொழில்களை வளர்ப்பதன்மூலம் பொருளாதார அடிமைத்தனத்தைப் போக்கிக்கொள்ள முடியும் என்று சீர்திருத்தக்காரர்கள் சிலர் கருதினர். மூலப்பொருள்கள் நிறைய உள்ளன என்றும், அடிமைகளையோ அல்லது ஏழை வெள்ளையர்களையோ உழைப்பாளிகளாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். 'உணவிற்

[25] தென்கரோலினுவின் மாநில விவசாய சங்கத்தின் சார்பில் ஜெனரல் ஜார்ஜ் மெக்டஃபி (General George McDuffie) நிகழ்த்திய உரை. எல். சி. கிரே அவர்களும் இதனை எடுத்துக்காட்டுகிறார்; op. cit., I, 460.

காகவும், உடைக்காகவும், வாழ்க்கையின் எண்ணற்ற அத்தியாவசியத் தேவைகளுக்காகவும் வெளிநாட்டுத் தொழிலாளர்களையும், அவர்களுடைய திறமையையும் சார்ந்திருக்கும் வரையில். நாம் அடிமைத்தனத்தில் உழன்றவண்ணம் இருப்போம்'[26] என சார்லஸ்டன் மெர்க்குரியில் (Charleston Mercury) ஓர் ஆசிரியர் எழுதியுள்ளார்.[26] 1840-'49-லும் 1850-'59-லும் பரவலான பிரசாரத்தின்மூலம் பொறிவழித் தொழில் முன்னேற்றம் ஓரளவுக்கு ஏற்பட்டுள்ளது. எனினும், ரொக்க முதலும், ஏற்புடைய நிர்வாகிகளும், பயிற்சிபெற்ற தொழிலாளர்களும் கிடைக்காமையாலும், மற்றக் குறைபாடுகளின் காரணமாகவும் தொழில் வளர்ச்சியில் வேகமில்லை. நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பாகிய 1,88,6000,000 டாலர்களில் 8 சதவீதத்தையே 1860-ல் தென்னாடு வழங்கியது.

ஐரோப்பாவுடன் நேரடி வாணிபம் தேவை என்பதை 1857-ல் நிகழ்ந்த பொருளாதார பீதியின் கொடுமையான விளைவுகள் வலியுறுத்தின. தென் மாநிலங்களில் தூண்டுதலும் ஆதரவும் இருந்தபோதிலும், தென்னாட்டுக்குச் சொந்தமான கப்பல் வர்த்தகத்தையும், மற்ற நாடுகளுடன் நேரடி வர்த்தகத்தையும் வளர்த்துக்கொள்ள. எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றியடையவில்லை. உள்நாட்டிற்குரிய வளர்ச்சித் திட்டங்களில் தகுந்த வெற்றி ஏற்பட்டது. வடநாட்டைப்போலவே தென் மாநிலங்களும், கவுன்டிகளும், ஊர்களும், நகரங்களும் இருப்புப் பாதைகள் போடுவதற்கு நிறைய செலவழித்தன. உதாரணமாக, ஜார்ஜியா மாநிலம், அட்லான்டாவிலிருந்து சாட்டனூகா (Chattanooga) அருகிலுள்ள எல்லைவரையில் இருப்புப்பாதை அமைத்து நன்கு இயக்கிவந்தது. தென்மண்டலத்திலிருந்தே முழுதும் வசூலிக்கப்பெற்ற சுமார் 23,70,00,000 டாலர்களைச் செலவழித்து 9500 மைல்களுக்கு மேற்கொண்ட நீளமுள்ள இருப்புப்பாதையை (நாட்டில் போடப்பட்ட இருப்புப்பாதையின் மொத்த நீளத்தில் சுமார் மூன்றில் ஒரு பங்கு) 1860-ல் தென்னாடு போட்டு முடித்தது.

தென்மண்டலப் பொருளாதாரத்தைத் திருத்தி வளர்ப்பதற்கு வேண்டிய பல்வேறு திட்டங்களை விவாதித்து விளம்பரம் செய்யும் நோக்குடன் 1830 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகளில் தென் மாநிலங்களில் பன்னிரண்டுக்கு மேற்பட்ட வர்த்தக மாநாடுகளைக் கூட்டினர். தங்களுடைய சொந்த நலன்களை மட்டும்

[26] Niles Weekly Register, ஏப்ரல் 19, 1845.

வளர்த்துக்கொள்ள விழையும் சில நகரங்களின் இலட்சியங்களையும், வட நாட்டுச் சுரண்டலை எதிர்க்கும் நோக்குடன் நெருப்பை உமிழும் அரசியல் வாதிகளின் போக்கையும் சில மாநாடுகள் பிரதிபலித்தன. எனினும், மொத்தத்தில் பார்க்கப் போனால், தென்னாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் முயற்சிகளிலேயே அம் மாநாடுகள் கருத்தைச் செலுத்தின. பொறிவழித் தொழில் வளர்ச்சியையும், ஐரோப்பாவுடன் நேரடி வர்த்தகத்தை ஏற்படுத்துவதையும், சுங்கவரி விதித்தலை ஒழிப்பதையும், தென்னகத்து முதலைக்கொண்டு பசிபிக் இருப்புப்பாதை போடுவதையும், மத்திய அரசாங்க உதவியைக்கொண்டு பிரதேச உட்பகுதிகளை வளர்த்துக்கொள்வதையும் திரும்பத்திரும்பத் தென்னாட்டின் சொற்பொழிவாளர்கள் வலியுறுத்தினர். தோட்ட வேலைக்குத் தேவைப்படும் தொழில் உழைப்பின் செலவைக் குறைப்பதற்கென ஆப்பிரிக்க அடிமை வியாபாரத்தை மீண்டும் புதுப்பித்துத் துவங்கவேண்டும் என்ற கோரிக்கைகள் அவ்வப் பொழுது வெளியிடப்பட்டன என்றபோதிலும், தென்னாடு முழுதும் இக்கோரிக்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களிடம் மிகுதியாக உள்ள நீக்ரோக்களைத் தென்னாட்டில் விற்பனை செய்யும் எல்லைப்புற மாநில அடிமை வியாபாரிகளும், அப்பொழுது நிலவிய அமைப்பிலிருந்து நிறைய இலாபம் திரட்டிய பெருந் தோட்டமுதலாளிகளும் மீண்டும் அடிமை வியாபாரத்தைப் புதுப்பித்துத் துவக்குவதில் அக்கறை செலுத்தவில்லை. குறைந்த கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர்களையே நாடிய மத்திய தர வர்க்கத்தைச் சார்ந்த சிறு தோட்ட முதலாளிகள், அடிமை வியாபாரத்தைப் புதுப்பிக்க வேண்டுமெனக் கோரினர். உண்மையில் வடநாட்டுச் சுரண்டல் என்று நம்பிய ஒன்றினை முழுமூச்சுடன் எதிர்த்து நின்ற கூட்டம், மேலே குறிப்பிட்ட மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த சிறு தோட்ட முதலாளிகள் கூட்டமேயாகும்.

உள்நாட்டுப் போர் துவங்குவதற்குமுன் உள்ள ஆண்டுகளில், தன்னுடைய பொருளாதார அந்தஸ்தை வளர்த்துக்கொள்ளவோ அல்லது செப்பனிட்டுத் திருத்திக்கொள்ளவோ எடுத்துக் கொண்ட முயற்சிகளில் தென்னாடு வெற்றிபெற்றிருக்காது. ஆனால், தன்னுடைய அரசியல் நலன்களைப் பாதுகாத்துக்கொள்வதில் தென்னாடு சிறப்புமிக்க வெற்றி பெற்றது. தென்னாட்டின் பொருளாதார, அரசியல், சமூக வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தி வந்த தென்னகத்துச் சிறு குழுவாட்சி, மத்திய அரசாங்கத்திலும் ஆதிக்கம் செலுத்திவந்தது. ஜாக்சன் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் லிங்கன் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் இடையில் உள்ள முப்

பத்திரண்டு ஆண்டுகளில், தென்னகத்துச் சிறு குழுவாட்சியினர் பிரசிடென்சியையும் (Presidency), செனட்டையும் (Senate) 24 ஆண்டுகளுக்கும், தலைமை நீதிமன்றத்தை (Supreme Court) 26 ஆண்டுகளுக்கும், பிரதிநிதிகள் மன்றத்தை (House of Reprsentatives) 22 ஆண்டுகளுக்கும் ஆட்கொண்டு ஆட்சி செலுத்தினர். இவ்வாண்டுகளில் தென்னாட்டுச் சிறு குழுவாட்சி சுங்கவரியின் பெருஞ் சுமை மிகவும் குறையும் அளவுக்கு அவ்வரியைக் குறைத்தது. கிரேட் பிரிட்டனின் கடும் போட்டியிலிருந்து வட நாட்டுக் கப்பல் முதலாளிகளைக் காப்பாற்றுவதற்கெனக் கப்பல் வாணிபத்திற்கு வழங்கப்பட்டு வந்த மானியத் தொகைகளைச் சிறு குழுவாட்சி நீக்கிவிட்டது; உள்நாட்டு வளர்ச்சியில் நேரடியாகத் தென்னாட்டுக்குப் பலனளிக்கும் பெடரல் மானியத் தொகைகளைத் தவிர, மற்ற மானியத் தொகைகளனைத்தையும் நீக்கிவிட்டது. மெக்சிகோவுடன் போர்மூளவும், அப் போரின் விளைவாகத் தோட்டப் பகுதிக்கு வேண்டிய ஏராள மான நிலம் கிடைக்கவும் முக்கியக் காரணமாக அத் தென்னகத்துச் சிறு குழுவாட்சி விளங்கியது.

அடிமை எதிர்ப்பியக்கத்திற்கு எதிராகத் தென்னாட்டு அரசியல் வாதிகள் 1850 ஆம் ஆண்டின் சமரசத்தைப் பயன்படுத்தி, கலிபோர்னியாவைத் தவிர மெக்சிகோவிடமிருந்து கிடைத்த பகுதிகளனைத்திலும் அடிமை முறையினைப் புகுத்தினர். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், கான்சாஸ்—நெப்ராஸ்கா சட்டத்திலுள்ள (Kansas—Nebraska bill), மிசௌரி சமரச விதியை நீக்கினர்; கான்சாஸ், நெப்ராஸ்கா ஆகிய பிரதேசங்களுக்கு அரசியல் இறைமையை வழங்கினர். முடிவில் டிரட் ஸ்காட் வழக்கில் (Dred Scott case, 1857), ஜனநாயக மாநில அரசுகளின் உரிமைகளைப் போற்றும் தலைமை நீதிமன்றம் மிசௌரி சமரச விதி அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்றும், அப் பிரதேசங்களின் அடிமைச் சொத்துகளைப்பற்றி காங்கிரஸ் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெறமுடியாது என்றும் தீர்ப்பு வழங்கியது. சிறு விவசாயிகள் மேற்கு நோக்கிச் சென்ற்ல் அடிமை முறைக்கு வெடிவைத்ததாகும் என்று அஞ்சிய தென்னாடு, பிரிவினை நிகழும்வரையில் குடும்ப மனையகச் சட்டம் இயற்றப்படாமல் பார்த்துக்கொண்டது.

'சட்டமன்றத்திலும், நிருவாகத் துறையிலும், நீதித்துறையிலும் 1850 முதல் 1860 முடிய உள்ள ஆண்டுகளில் மத்திய அரசு அதிசயிக்கத்தக்க முறையில் தலைமைத் திறமையுடன் நடந்துகொண்டு, அமெரிக்காவின் அரசியல் சூழ்நிலையையே மாற்றிவிட்டது' என பியர்ட்ஸ் (Beards) வருணித்

துள்ளார். தென்னுட்டின் சிறு ஆட்சிக் குழுவினர் மட்டும் அல்லாமல், தென்னுட்டு ஜனநாயக வாதிகளும் வடக்கு, வட மேற்குப் பிரதேசங்களின் ஜனநாயக வாதிகளும் மேற்குறித் துள்ள செயல்கள் நிறைவேறுவதற்குக் காரணமாக அமைந்துள்ள னர். 1855—'59-ல் ஜனநாயக வாதிகளின் இத்தகைய கூட்டினை முறியடிக்கப் பல்வேறு சக்திகள் திரண்டெழுந் தன. முதன்முதலில் வடநாட்டில் அடிமை எதிர்ப்பியக்கம் தலைதூக்கியது. அவ்வியக்கம், தன்னுடைய முக்கியச் சக்தியை அடிமைகளின் விடுதலைக்குப் பயன்படுத்தாமல், அடிமை முறை மற்றப் பிரதேசங்களுக்குப் பரப்பப்படுவதை எதிர்ப்ப தற்கே பயன்படுத்தியது. வடக்கு, வடமேற்குப் பிரதேசத்தைச் சார்ந்த சிறு விவசாயிகள் இவ்வியக்கத்திற்கு ஆதரவு நல்கினர். இச் சிறு விவசாயிகள் தோட்டப் பொருளாதார அமைப்பிலிருந்து சிறு பண்ணைகள் விடுவிக்கப்பெற்று வளர்க்கப்பெறும் என்று எதிர் பார்த்தார்கள். இல்லினுய் மத்திய இருப்புப்பாதை போடப்பட்டுப் புதிய நிலங்கள் தோன்றும் வாய்ப்பு ஏற்பட்டதாலும், போக்கு வரத்து வசதிகள் பெருகியமையாலும் பழைய வடமேற்குப் பிர தேசத்தில் குடியேற்றம் பெருகவே, 1850—1859-ல் இவ் வெதிர்ப்பு வலுவடைந்தது.

இரண்டாவதாக, ஜனநாயகவாதிகள் ஆட்சியில் அமர்ந் திருக்கக் காரணமான பழைய வடமேற்குப் பிரதேசத்திற்கும் தென்னுட்டிற்கும் இடையில் நிலவிய பொருளாதார, அரசியல் ஐக்கியம் 1860-ல் மறையும் நிலையில் இருந்தது. தென்மிசிசிப்பி பள்ளத்தாக்கின் தோட்டங்களுக்குப் பல ஆண்டு களாகவே ஓகியோவின் வட பிரதேச விவசாயப் பண்டங்கள் பயன்பட்டுவந்தன. அலெக்னி மலைத்தொடருக்குக் குறுக்கே போடப்பட்ட இருப்புப்பாதைகள் வடமேற்குப் பிரதேசத்தை ஊடுரு விச் சென்றமையால், அப் பண்டங்கள் அட்லான்டிக் கடற்கரைத் துறைமுகங்களை நோக்கி நகர்ந்தன. பழைய வர்த்தகப் பாதை களைப் பாதுகாப்பதற்கென, இல்லினுய் மத்திய இருப்புப்பாதைக்கு நிறைய நிலக்கொடை வழங்கும் கடைசி முயற்சியும் எடுக்கப் பட்டது. எனினும், முயற்சி தோல்வியே கண்டது. வடமேற்குப் பிரதேச விவசாயப் பண்டங்கள் வடகிழக்குப் பிரதேசத்திற்குச் செல்லாமல் ஐரோப்பாவிற்குச் செல்லத் தொடங்கியமையால், தொழில் வளம் நிறைந்த நகரங்களை வளர்க்கவும், கிழக்குச் சந்தையை விரிவாக்கவும் உதவியாகவுள்ள சுங்கவரி விதிப்பு முறையை வடமேற்குப் பிரதேசம் ஆதரிக்கத் தொடங்கியது. இச் சூழ்நிலையைக் கண்ணுற்ற தென்னுட்டு ஆசிரியர் ஒருவர் 1847 ஆம் ஆண்டிலேயே டிபோ ரிவியூ (De Bow's Review) எனும்

இதழில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்: 'வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இடையில் போராட்டம் ஒன்று நடந்தவண்ணம் உள்ளது. அடிமை முறையை ஏற்றுக்கொள்வதா வேண்டாமா என்பதுபற்றிய போராட்டமன்று; விக்குகளுடைய (Whigs) அரசியலைப் பற்றியோ, அல்லது ஜனநாயக வாதிகளுடைய அரசியலைப் பற்றியோ குறித்தெழுந்த போராட்டமன்று. ஆனால், மிசிசிப்பியின் பெரும் பள்ளத்தாக்கில் கிடைக்கும் செல்வத்தையும் வர்த்தகத்தையும் கவர்வதற்காக நடைபெறும் போராட்டம் அது. பெரும் மேற்குப் பிரதேசத்தில் வளரும் வர்த்தகத்தை நியூ ஆர்லியன்சின் ஆதிக்கத்தில் விட்டுவிடுவதா, அல்லது அட்லான்டிக் நகரங்களின் ஆதிக்கத்தில் விட்டுவிடுவதா என்பது குறித்து வடநாட்டுச் சகோதரர்கள் துவக்கிய போராட்டமாகும்.'

இப் புதிய பொருளாதாரக் கட்சி வரிசை அரசியலிலும் எதிரொலித்தது. 1855-ல், புதிய குடியரசுக் கட்சி நிலவும் அதிருப்தியைப் பயன்படுத்திக்கொண்டு, தென்னாட்டுத் தோட்ட முதலாளிகளால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஜனநாயகக் கட்சியை எதிர்த்தது. அடிமை முறை பரவுவதை எதிர்த்து நின்ற குடியரசுக் கட்சி, கொள்கை ரீதியாக அடிமை முறையை எதிர்க்கும் கருத்துக் கொள்கையினரையும் (idealists), தன்னிச்சையாக உரிமையுடன் வளரும் விவசாயத்தை ஆதரிக்கும் சிறு விவசாயிகளையும் தன் பக்கம் இழுத்துக்கொண்டது. பொது நிலங்களைக் கொடையாக வழங்குவதை ஆதரித்தும், கண்டத்தின் குறுக்கே இருப்புப்பாதை போடுவதை ஆதரித்தும் குடியரசுக் கட்சி மேற்குப் பிரதேசத்தில் குடியேறியவர்களின் ஆதரவையும் பெற்றது. உயர்ந்த சுங்கவரி விதிப்பை வலியுறுத்துவதன்மூலம் கிழக்குப் பிரதேசத்தில் உயர்ந்தெழும்பும் தொழில்துறைகளின் ஆதரவையும் பெற்றது. குடியரசுக் கட்சிக்கு அசைக்கமுடியாத மேடை 1856ஆம் ஆண்டிலும், பின்னர் 1860 ஆம் ஆண்டிலும் கிடைத்துவிட்டது. ஜனநாயகக் கட்சியில் 1850-ல் பிளவு ஏற்படவே, அரசியல் மேடை குடியரசுக் கட்சியினருக்கு வெற்றி மாலை சூட்டியது. எனினும், முழு வெற்றி கிட்டவில்லை. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் தலைமைப் பதவிமட்டுமே குடியரசுக் கட்சியினருக்குக் கிடைத்தது. ஆனால், ஜனநாயகக் கட்சியினர் காங்கிரசின் ஆதிக்கத்தைப் பெற்றனர். என்றபோதிலும், 1860ஆம் ஆண்டின் தேர்தல் முடிவுகள் தன்னுடைய ஆதிக்கம் மங்கப்போவதையே எச்சரிக்கின்றன என்று அடிமை முறையை வளர்க்கும் தென்னாடு கருதியது. அரசியல், பொருளாதார அடிமைத்தனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும், அல்லது பிரிவினை கோரவேண்டும். தென்னாடு பிரிவினையை ஏற்றுக்

கொண்டது. வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் நோக்கினால் இது தவருன முடிவாகும். சீவார்டு (Seward) குறிப்பிட்டுள்ளது போல, இப் பிரச்சினைகள் 'அடக்கிவைக்கமுடியாத சச்சரவை' உள்ளடக்கிக்கொண்டுள்ளன என்பதில் ஐயமில்லை. தொழிற் புரட்சியினால் விடுவிக்கப்பெற்ற பொருளாதார சக்திகள் செயற் படத் தொடங்கின. தென்னுட்டின் ஒரு சார்பானதும் தேங்கி நிலைத்து உள்ளதுமான நாகரிகத்தின்மீது அவிழ்த்துவிடப்பெற்ற பொருளாதார சக்திகள் மோதின. இதுபோன்ற தேரங்களில், உலக வரலாற்றில் ஒரே ஒரு விளைவுதான் ஏற்படும்: உரிமை பெற்ற தொழிலாளருக்கும், தலையிடாக் கொள்கைக்கும், தொழில் மயமாதலுக்கும் முழு வெற்றி கிட்டும்.

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

Phillips. U. B. (பிலிப்ஸ், யு. பி.), 'Life and Labour in the Old South', அதிகாரங்கள் 11-15.

Nevins, A. (நெவின்ஸ், ஏ.), 'Ordeal of the Union', Vol. I, அதிகாரங்கள் 13-15.

Channing, E. (சானிங், ஈ.), 'History of the United States', Vol. V, அதிகாரம் 5.

Dodd, W. E. (டாட், டபிள்யு. ஈ.), 'The Cotton Kingdom', Hacker, L.M. (ஹேக்கர், எல். எம்), The 'Triumph of American Capitalism', அதிகாரங்கள் 21—23.

Gray, L.C. (கிரே, எல். சி.), 'History of Agriculture in the Southern United States to 1860,' Vol. I, அதிகாரங்கள் 20-24.

Calender, G.S. (காலண்டர். ஜி. எஸ்.), 'Selections from the Economic History of the United States', 1765-1860, அதிகாரம் 15.

Flugel, F.(புளுகல், எப்.) and Faulkner, H. U.(பாக்னர் ஹெச். யு.), 'Readings in the Economic and Social History of the United States', பக். 413-447.

17. உள்நாட்டுப் போர்

உள்நாட்டுப் போரின் முக்கியத்துவம்

பொருளாதார, அரசியல் அல்லது சமூக வரலாற்றின் கண்ணோட்டத்துடன் உள்நாட்டுப் போரிணைப்பற்றி ஆராய்ச்சி செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, அப் போரின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தாமலே அறியலாம். நாட்டு முன்னேற்றத்தில் அப் போர் ஒரு திருப்புமையமாகும். நமது தொழில், நிதித்துவ, வர்த்தக வரலாற்றில் அப் போரின் பங்கும், அதனால் ஏற்பட்ட விளைவுகளும் மிகவும் ஆழமாகப் பதிந்தன. அவற்றைப்பற்றி விரிவாகப் பின்வரும் அதிகாரங்களில் குறிப்பிடுவோம். அமெரிக்கத் தொழிலாளியின் நீண்ட சரித்திரத்தில் உள்நாட்டுப் போரானது அடிமை முறையின் அழிவைக் குறிப்பதோடு அமையாமல், ஒன்று திரட்டி நிருவகிக்கப்பெற்ற தொழிலாளர் இயக்கத்தின் தேசிய ஒருமைப்பாட்டைத் துரிதப்படுத்துதலையும் குறித்துக்காட்டியது. உள்நாட்டுப் போர் நிகழ்ந்தபொழுதுதான், ஒன்றுக்கொன்று நேர்மாறான பொருளாதார நலன்களின் அடிப்படையில் உருவாகிய பிராந்தியப் போராட்டம் உச்ச நிலை அடைந்தது. பொருளாதார ரீதியான பிராந்திய மனப்பான்மை வேரூன்றி விட்டது. எனினும், நாட்டின் எப் பகுதியும் ஆயுதம் தாங்கிப் போரிடும் ஆற்றலைப் பெறவில்லை. அரசியல் கண்ணோட்டத்துடன் நோக்கினால், தென்னாட்டின் விடுதலைப் போர் மத்திய ஆட்சியின் முடிவான வலிமையையும் தலைமையையும் நிலை நிறுத்தியது. அஃது அமெரிக்க சமூக வரலாற்றில் ஒரு திருப்பத்தையும் குறித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் 1830—1859 வரையுள்ள ஆண்டுகளில் ஓங்கி வளர்ந்திருந்த பெருஞ் சீர்திருத்த இயக்கம் இறுதியில் அடிமைப் பிரச்சினையில் தன்னுடைய சக்தி முழுவதையும் செலவழித்துவிட்டது. அரை நூற்றாண்டுக்குப் பின்னர்தான் நாடு சமூக நீதிபற்றி சிந்திக்கத் தொடங்கியது.

இயற்கை வளங்களையும் ஏனைய வளங்களையும் கணக்கெடுத்து ஒத்திட்டுப் பார்த்தால், நீண்ட காலப் போரில் தென்னாடு தோற்றே போகும் என்பது விளங்கும். பிரிந்து செல்லும் பதினொரு மாநிலங்களின் மொத்த ஜனத்தொகை 90,00,000 பேர்களுக்கும் குறைவாகும்; அவர்களில் 35,00,000 பேர்கள் அடிமைகளாவர். யூனியனிலேயே தங்கிய மாநிலங்களின் மக்கள்தொகை 2,20,00,000-க்கு மேலாகும். போர்க்காலத்தில் அம் மாநிலங்களுக்கு வேண்டிய தொழிலாளர்கள் தொடர்ந்து வெளியிலிருந்து வந்து குடியேறினர்கள். நாட்டின் உண்மையான சொத்தின் மதிப்பு சுமார் 16,00,00,00,000 டாலர்களாகும் என்று 1860-ல் கணக்கிடப்பட்டுள்ளது. தென்னாட்டில் உள்ள அடிமைகளின் மதிப்பு 2,00,00,00,000 டாலர்களுக்கும் மேலாகும். அடிமைகளின் மதிப்பையும் சேர்த்துத் தென்னாட்டுச் சொத்தின் உண்மை மதிப்பு நாட்டுச் சொத்தின் மொத்த மதிப்பில் சுமார் மூன்றில் ஒரு பங்காகும். நாடு முழுவதும் 1859-ல் உற்பத்தியான செல்வத்தின் மதிப்பு 3,73,60,00,000 டாலர்களாகும். அவற்றில் சுமார் நான்கில் ஒரு பங்கு மதிப்புள்ள பண்டங்களைப் பிரிந்து செல்லும் மாநிலங்கள் உற்பத்தி செய்தன. நீண்டகாலப் போரினைத் திறனுடன் நடத்தும் வசதிகள் வடநாடு பெற்றிருக்கிறது என்பதை நிரூபிக்கும் வகையில், பொறிவழித் தொழில்களில் 90 சதவீதம் வடநாடு பெற்றிருந்தது. இத்தகைய வசதிகள் போதவில்லை எனில், கப்பல் வாணிபத்தையும் கப்பற் படையையும் பயன்படுத்தி வேண்டுமளவுக்குத் தேவையான வற்றை வடநாடு கொண்டுவந்து இறக்கமுடியும். தென்னாடு இரண்டு சக்திகளையே நம்பிப் போரில் ஈடுபட்டது. முதலில், தென்னாடு தன்னுடைய பகுதியிலிருந்தே தற்காப்புப் போரினை நடத்துவதால், சிப்பாய்களின் எண்ணிக்கை, வளங்களின் அளவு இவற்றிலுள்ள வேற்றுமைகளைச் சரிக்கட்டிவிடலாம் என்று நம்பியது. இரண்டாவதாக, போருக்கு வேண்டிய பணத்தைப் பருத்தி உற்பத்திமூலம் பெறலாம் என்றும், தனக்கு ஆதரவாக வெளிநாட்டினர் தலையிடுகின்ற அளவுக்குப் பருத்தி உற்பத்தி முக்கியத்துவம் உடையது என்றும் தென்னாடு நம்பியது. வடநாட்டின் மகத்தான வலிமை தென்னாட்டின் முதல் நம்பிக்கையைத் தகர்த்தெறிந்தது. தென்னாட்டுத் துறைமுகங்களை வடநாடு முற்றுகையிட்டுப் போக்குவரத்தைத் தடை செய்ததாலும், ஐரோப்பா தலையிடாமல் ஒதுங்கியிருந்ததாலும் தென்னாட்டின் இரண்டாவது நம்பிக்கையும் தோல்வியே கண்டது. மத்திய அரசின் விசித்திரமான திறமைக் குறைவாலும், தவறான நிருவாகத்தினாலுமே போர் விரைவில் முடிவுறவில்லை.

1861ஆம் ஆண்டின் பொருளாதார் மந்தம்

போர் மூண்டவுடன் வடக்கும் மேற்கும் கடும் பொருளாதாரப் பீதிக்குப் பலியானதுதான் முதல் பொருளாதார விளைவாகும். போர் தொடங்கியபொழுது, விவசாயத் தென்னகம் வடநாட்டு வியாபாரிகளுக்கு 30,00,00,000 டாலர்கள் தரவேண்டியிருந்தது. வடநாட்டிற்கு இஃது ஒரு பெரும் இழப்பாகும். எதிர்காலம் நிலையற்றதாயிற்று. போர் துவங்கியபொழுது கெட்ட குறிகள் தோன்றலாயின. வடநாட்டில் செலவுக் குறைப்பும், ஆட் குறைப்பும், சிக்கனமும் தலையெடுத்தன. நெருக்கடியைச் சமாளிப்பதற்குத் தேவையான அளவுக்கு காப்பு ரொக்கம் (cash reserve) பாங்குகளிடம் இல்லை. இச் சூழ்நிலைகளனைத்தும் 1861-ல் மந்தம் ஏற்படக் காரணமாயின. கிட்டத்தட்ட ஆறு யிரம் வடநாட்டு நிறுவனங்கள் 5,000 டாலர்களும், அதற்கு மேலும் கிடைக்காமையால் 1861-ல் தோல்வியுற்று நசித்துப் போயின என்று டன் அறிக்கைகள் (Dun reports) கணக்கிட்டுள்ளன. (1857ஆம் ஆண்டின் பீதியின்போது நசித்துப்போன நிறுவனங்களின் எண்ணிக்கையைவிட இஃது அதிகமாகும்.) மேலே குறிப்பிட்ட தொகைக்குக் குறைவான தொகை இல்லாமையால், நசித்துப்போன நிறுவனங்களின் எண்ணிக்கை மிகுதியாக இருந்தது.[1] பொதுவாக வடநாட்டு பாங்குகள் 1861ஆம் ஆண்டு டிசம்பர் மாதப் பிற்பகுதி வரையில், பொன் நாணயச் செலுத்துகையை மேற்கொண்டிருந்தன. அதற்குப் பின்னர் வடநாட்டு பாங்குகளால் பொன் செலுத்துகையை மேற்கொள்ள இயலவில்லை. மத்திய அரசும் அந்த பாங்குகளின் முறையைப் பின்பற்றியது. நியூ ஆர்லியன்சைத் தவிர்த்துத் தென்னாடு முழுவதும், போர் துவங்கியதிலிருந்து முடியும்வரையில் பொன் செலுத்துகை மேற்கொள்ளப்படவில்லை. ஓயில்டுகேட் பாங்குகள் (Wildcat Banks) மேற்குப் பிரதேசத்தில் இருந்தன. அந்த பாங்குகள் மேற்கொண்டிருந்த பாங்கு முறைகளின் காரணமாகவும், அவை தென்னாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தமையாலும், அவை நசிக்கத் தொடங்கின. இல்லினாயில் 110 பாங்குகளில் 89 பாங்குகள் நசித்துப்போயின. விஸ்கான்சின் பகுதியில் 39 பாங்குகளும், இந்தியானாவில் 27 பாங்குகளும் தொலைந்தன.

1 எமர்சன் டி. ஃபைட் (Emerson D. Fite). 'Social and Industrial Conditions in the North During the Civil War', பக்கங்கள். 105—106.

மீண்டும் விவசாயச் செழிப்பு புத்துயிர்பெறுதல்

1861ஆம் ஆண்டின் பீதியைத் தொடர்ந்து, வசந்த காலத்தில், வடபகுதியிலும் மேற்குப் பகுதியிலும் செழிப்பு புத்துயிர் பெற்றது. ஆயிரக்கணக்கான விவசாயிகள் யூனியன் படையில் சேர்ந்தனர்; மேலும் ஆயிரக்கணக்கான உழவர்கள் விவசாயத்தை விட்டுவிட்டுத் தூரத்து மேற்கிலுள்ள சுரங்கங்களில் வேலைக்கமர்ந்தனர். எனினும், பெண்கள் வயல்களில் இறங்கி வேலைசெய்யத் தொடங்கியமையாலும், ஐரோப்பாவிலிருந்து மக்கள் புதிதாக வந்து குடியேறியமையாலும், உழைப்பைக் குறைக்கும் பொறிகள் (labour-saving machinery) உபயோகத்திற்கு வந்தமையாலும் விவசாயம் பாதிக்கப்படவில்லை. மேற்கத்தியாளுடன் சில தானியங்களின் உற்பத்தியில் போட்டியிட முடியாது என்பதை உணர்ந்த கிழக்குப் பிரதேச விவசாயிகளில் பலர், மேற்கு நோக்கிக் குடிபெயர்ந்து அங்குள்ள நிலங்களில் சாகுபடி செய்ய முற்பட்டனர். இத்தகைய குடிப்பெயர்ச்சி இயக்கம் 1862-க்குப் பின்னர் செல்வாக்கடைந்தது.[2] மேற்குப் பிரதேசத்திற்குச் சென்று ஐந்து ஆண்டுகளுக்கு வாழ விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு, அங்கே 160 ஏக்கர் கொண்ட நிலம் இலவசமாக வழங்குவதற்குக் குடும்ப மனையகச் சட்டம் வழிவகுத்தது. இக் குடும்ப மனையகச் சட்டமே குடிப்பெயர்ச்சியைத் தூண்டியது. போர்க்காலத்தில் இச் சட்டத்தின் நற்பலனை நுகர வெளிநாடுகளிலிருந்து பலர் அமெரிக்காவிற்கு வந்து குடியேறினர்; அல்லது இருப்புப்பாதைக் கொடைகளின்மூலம் கிடைக்கும் பகுதிகளில் குடியேற விரும்பினர். நியூயார்க்கிற்கு வந்து சேர்ந்தவுடன் அவர்களில் 45,000 பேர்கள் இல்லினாய்க்குச் சென்று குடியேறுவதாகவும், 23,000 பேர்கள் விஸ்கான்சின் பகுதிக்குச் சென்று குடியேறுவதாகவும் அறிவித்தனர்.[3] தொல்லைகளுக்காளானஎல்லைப்புறமாநிலங்களிலிருந்து மக்கள் கணிசமான அளவுக்கு மேற்குப் பிரதேசத்தின் பண்ணைகளுக்குச் சென்றனர். இதே அளவுக்கு, உழைப்பு, சேமிப்புக் கருவிகளை விவசாயத்தில் ஈடுபடுத்துவதில் ஆர்வம் எழவில்லை. இப்பொழுது அக் கருவிகள் கவுன்டி சந்தைகளில் முக்கிய இடம் பெற்றன. உற்பத்தி செய்யப்பெற்ற மோவர் (mouer) எனும் புல்லறுக்கும் கருவிகள் 1861-ல் 20,000 ஆகும்; 1865-ல் 70,000 ஆக உயர்ந்தது. இவ்வாறே, ஹார்ஸ் ரேக்ஸ் (horse rakes), விதையிடும் கருவிகள் (grain drills), கதிரடிக்கும் பொறிகள் (threshers), இன்னும்

[2] அதிகாரம் 18ஐக் காண்க.

[3] எமர்சன் டி. ஃபைட் (Emerson D. Fite), op. cit., ப. 11.



(மூலம்: Statistical Atlas of the United States, 1924)

ஒவ்வோர் இராஜ்யத்திலும் பண்ணைச் சொத்தின் சதவீத அதிகரிப்பு, 1860 - 1870.

மற்ற வளர்ச்சியுற்ற கருவிகள் முதலியனவும் உற்பத்தி செய்யப் பட்டன.

பயிர்கள் பாதுகாக்கப்பெற்றன. விவசாய உற்பத்தி கணிச மான அளவுக்குப் பெருகியது. முந்திய காலத்தைவிடப் போர்க் காலத்தில் கோதுமை அதிகமாக விளைந்தது. நாடு முழுதும் தானிய உற்பத்தி ஓரளவுக்குக் குறைந்தபோதிலும், மேற்கத்திய மாநிலங்களில் குறிப்பிட்ட அளவுக்கு உற்பத்தி பெருகியது. போருக்கு முன்னர் சந்தைக்குக் கொண்டுவரப்பட்ட பன்றிகளை விட மிகுதியான பன்றிகள் தற்பொழுது சந்தைக்குக் கொண்டு வரப்பட்டன. கம்பளி உற்பத்தி 4,00,00,000 பவுண்டுகளி லிருந்து 14,00,00,000 பவுண்டுகளாக உயர்ந்தது. பண்ணை களிலிருந்த செம்மறியாடுகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகியது.

விவசாயச் செழிப்பு ஏற்படக் காரணமாக அமைந்தவை பின் வருமாறு: (1) போர் முடியுந் தறுவாயில் ஒரு மில்லியன் போர் வீரர்களுக்கு உணவும் உடையும் வழங்கவேண்டிய அவசிய நிலை; (2) நாட்டில் ஜனத்தொகைப் பெருக்கம்; (3) வடநாட்டில் நில வியச் செழிப்பால் பண்ணைப் பயிர்கள்மீது செலவிடும் தொகை யின் அதிகரிப்பு; (4) விரைந்து வளரும் தொழிலின் காரணமாக, விவசாயமல்லாத துறைகளில் பலர் வேலைக்கமர்த்தப்படுதல்; (5) காகிதப் பணப்பெருக்கத்தால் விலைவாசிகள் உயர்தல்; (6) வெளிநாடுகளில் தேவை பெருகியமை; குறிப்பாக இங்கி லாந்தில் 1860, 1861, 1862ஆம் ஆண்டுகளில் விளைச்சல் மிகவும் குறைவாக இருந்ததால், அங்கு விவசாயப் பயிர்களின் தேவை அதிகரித்தது. வடக்கு, மேற்குப் பிரதேசங்களின் உண வுப் பண்டங்கள் கிரேட் பிரிட்டனுக்கு மிகவும் தேவைப்பட்ட மையால், அமெரிக்காவில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போது பிரிட்டன் நடுநிலைமை வகிக்க நேர்ந்தது என்று மிகுந்த ஆதாரத்துடன் போர்க்காலத்திலேயே வலியுறுத்திக் கூறப் பட்டது.[4] பருத்தி, கோதுமை இவை இரண்டிற்குள் ஒன்றிலை மட்டுமே இங்கிலாந்து தேர்ந்தெடுக்க வேண்டுமெனில், ஒரு முடிவுக்குத்தான் வரமுடியும்.

வடநாட்டில் பொறிவழித் தொழில் உற்பத்தி

காங்கிரசின் ஒவ்வொரு கூட்டத்திலும் நிறைவேறிய சுங்கச் சட்டங்களினால் தாராளமாகப் பாதுகாக்கப்பெற்று, போர்க் காலத் தேவைகளினால் தூண்டப்பெற்ற பொறிவழித் தொழில்

[4] இதே அதிகாரத்தில், 'தென்னாட்டின்மீது வாணிகத் தடை' என்ற துணைத்தலைப்பை நோக்குக.

உற்பத்தி, போரின் இறுதிக் கட்டத்தின் மூன்று ஆண்டுகளில் தன்கு செழித்து வளர்ந்தது. போர்க்காலத்தில் தரக்குறைவான பண்டங்களை அதிக விலையில் அரசாங்கத்திற்கு விற்றனர் என்றும், ஊகவாணிகம் நிலவியது என்றும், சட்டமன்றத்தினரின் ஆதரவைத் தேடினர் என்றும், சிப்பாய்களின் தேவைகளையும் போர்க்கால நெருக்கடியையும் பயன்படுத்திக்கொண்டு 'போலி உயர்வர்க்கத்தினர்' எனப்படுவோர் இலாபத்தைக் குவித்தனர் என்றும் கறைபடிந்த செய்திகள் உலவின. எனினும், அப் போர்க் காலத்தில்தான் சில வகைகளைச் சார்ந்த பொறிவழித் தொழில்கள் வளர்ச்சியுற்றன என்பது உண்மையாகும்; அதாவது, யுத்தத் திற்குத் தேவையான பண்டங்கள் உற்பத்தியாயின. முந்திய அரை நூற்றாண்டில் வடமேற்குப் பிரதேசத்தில் தொழிற்சாலைமுறை வளர்ந்திருந்தது. ஆனால், 1850—1859-ல் பொது உற்பத்தி பெருகியதுபோல, யுத்தகாலத்தில் உற்பத்தி அவ்வளவாகப் பெருகவில்லை. இராணுவத் தளவாடங்களில் கண்ட முன் னேற்றத்தைத் தவிர, நுட்பத் தொழில் முன்னேற்றமும் மங்கியது. எனினும், போரின் தேவைகள் அமெரிக்கப் பொருளாதாரத்தைத் தூண்டிவிட்டதால், செழிப்பும் கொழிப்பும் ஏற்பட்டன. முக்கிய மான தொழிலாகிய பருத்தித் தொழிலில் உற்பத்தி குறைந்தது. வடநாட்டுப் பருத்தி அளிப்பைத் துண்டித்துவிட்டால் வெற்றி தமக்கே எனத் தென்னாடு நம்பியது. போர் தொடங்கிய நேரத்தில் உபரி இருப்புச் சரக்கு, ஒழுங்கற்ற வர்த்தகம் தென்னாட்டின் சில பகுதிகளைக் கவர்ந்தமை ஆகிய காரணங்களால் வட நாட்டின் பருத்தி உற்பத்தியாளர்கள் தங்களுடைய ஆலைகளை ஒருவேளைமட்டும் இயக்கி, உற்பத்தி செய்து, உயர் இலாபம் அடைந்தனர்.

கம்பளி ஆடை உற்பத்திக்குப் போரினால் கிடைத்த தூண்டு தல்போல வேறு எந்த உற்பத்திக்கும் கிடைக்கவில்லை எனலாம். படைவீரர்களுக்கு வேண்டிய ஒரே மாதிரியான உடையைத் தயாரிப்பதற்காக அரசாங்கம் கம்பளியை விலைக்கு வாங்கியது. சமாதான காலத்தில் 8,50,00,000 பவுண்டுகள் கொண்ட கம்பளியை ஆண்டுதோறும் நெய்தனர். ஆனால், போரின் உச்ச கட்டத்தில் 20,00,00,000 பவுண்டுகளுக்குமேலாகக் கம்பளியை ஆண்டுதோறும் நெய்தனர். ஒவ்வோர் ஆண்டிலும் 25 முதல் 40 சதவீதம்வரையிலும் ஊதியப் பங்குகள் அடிக்கடி கிடைத்தன. அதே வேளையில் எலியஸ் ஹோவ் (Elias Howe) அவர்கள் கண்டு பிடித்த தையற் பொறிக்கு 1841-ல் உரிமைப் பத்திரம் கிடைத் தமையால், உடனடித் துணி தயாரிப்புத் தொழில் விரைவில் வளர்ச்சியுற்றது. போர்த்தேவைகள் தோல் தொழிலைத் தூண்டி

வளரச் செய்தன. தோலைத் தைப்பதில் தையற் பொறியைப் பயன்படுத்துவதற்கு, லூமேன் ஆர். பிளேக் (Lyman R. Blake) அவர்களும் கார்டன் மெக்கே (Garden Mckay) அவர்களும் பெற்ற உரிமைப் பத்திரங்கள் உதவியாய் இருந்தன. போர்க் காலத்தில்தான் சிக்காகோ பன்றி இறைச்சி பொட்டணம் கட்டும் முறையில் தலைசிறந்து விளங்கியது; பிட்ஸ்பர்க்கும் இரும்பு உற்பத்தியைப் பெருக்கியது.

பல்வேறு வகையான இயந்திரங்களின் உற்பத்தி பெருகி வளர்ந்திருக்க வேண்டும். ஏனெனில், இவ்வாண்டுகளில் பொறி வழி உற்பத்திப் பெருக்கத்திற்கும் போக்குவரத்து வசதிகளின் பெருக்கத்திற்கும் இணை கிடையாது. நாட்டில் மிகப் பெரிய பொறிவழிஉற்பத்தி மையமாக விளங்கிய ஃபிலடெல்பியா 1862-ல் 58 புதுத் தொழிற்சாலைகளையும், 1863-ல் 57 புதுத் தொழிற் சாலைகளையும், 1864-ல் 65 புதுத் தொழிற்சாலைகளையும் தொடங் கியதாகப் பெருமையடித்துக்கொண்டது. மற்றப் பெரு நகரங் களிலும் இதுபோன்ற முன்னேற்றமே ஏற்பட்டது. அரசாங்கம் கப்பல் கட்டும் தொழிலிலும், போர்க்கருவிகள் உற்பத்தி செய் வதிலும் ஈடுபட்டது. அரசாங்கம் ஸ்பிரிங்ஃபீல்டில் (Springfield) 1860-ல் செய்த துப்பாக்கிக்கு ஆன செலவு 9 டாலர்கள் ஆகும். தனியார் துறையினர் அதே துப்பாக்கியைச் செய்வதற்கு ஆன செலவு 20 டாலர்களாகும். அரசாங்கம் நேரடியாக ஈடுபடும் தொழில் வெற்றியடையும் என்பதையும், போர்த்தளவாடங்கள் செய்யும் தனியார் துறையினர் நிறைய இலாபம் ஈட்டுவர் என்பதையுமே அவ்வுண்மை நன்கு விளக்குகிறது. நாட்டின் கண்டுபிடிப்புத்திறன் வளர்வதற்குப் போர் காரணமாக இருந்தது; எவ்வாறெனில், ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பெற்ற உரிமைப் பத்திரங்களின் எண்ணிக்கை 1860 முதல் 1866 வரையில் உள்ள ஆண்டுகளில் இரண்டு மடங்குகளுக்கு மேலாகப் பெருகியது.

போர் நிகழ்ந்த ஆண்டுகளில், அடிப்படைக் கனிப்பொருள் களாகிய நிலக்கரி, இரும்பு ஆகியவற்றின் உற்பத்தி நிலைத்திருந்தது. ஆண்டொன்றுக்கு சுமார் 6,000 டன் செம்பு உற்பத்தி செய்த மிச்சிகன் (Michigan) 'உலகில் செம்பு உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டமாக' முகிழ்த்தது. பென்சில்வேனியாவைச் சார்ந்த வினுங்கோ கவுன்டியிலுள்ள (Venango County) டிட்டஸ்வில் (Titusville) எனுமிடத்தில் அமைந்துள்ள டிரேக் பண்ணையில் (Drake Farm) 1859-ல் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப் பெற்றன. ஒரு பெருந் தொழிலுக்கு அது தொடக்கமாயிற்று. போர்க்காலத்தில் அத் தொழில் வளர்ச்சியின் முதல் கட்டங்களைக்

கடந்து சென்றது. ஆயிரக்கணக்கான எண்ணெய்க் கிணறுகள், வடமேற்கு பென்சில்வேனியாவிலுள்ள ஆயில் கிரீக் (Oil Creek) வழியாகவும், வீலிங் (Wheeling) அருகிலும், மேற்கு வர்ஜீனியாவிலும், ஓகியோவிலும் தோண்டப்பெற்றன. எண்ணெய் உற்பத்தி 1862-ல் 12,80,00,000 காலன்கள் ஆகும். எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவதில் பரபரப்பு ஏற்பட்டது போலவே, நகரங்களில் ஊகவாணிகத்திலும் பரபரப்பு ஏற்பட்டது. நகரங்களில், 60,00,00,000 டாலர்கள் முதலீடு செய்துள்ள 1,100 எண்ணெய்க் கம்பெனிகள் 9,00,00,000 டாலர் மதிப்புள்ள பத்திரங்களை விற்றன. போர் நிகழ்ந்தபொழுது வளர்ச்சியுற்ற புதுத் தொழில்களில் பெட்ரோலியம் உற்பத்தி மிகவும் முக்கியமாகும். மேலும், நம்முடைய அயல்நாட்டு வர்த்தகத்தில் 1865-ல் எண்ணெய் மிகவும் முக்கியமான பண்டமாயிற்று. வெளிநாட்டிற்கு பெட்ரோலியம் 1860-ல் ஏற்றுமதி செய்யப்படவில்லை எனலாம். வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்த பெட்ரோலியத்தின் மதிப்பு, 1865-ல் 1,60,00,000 டாலர்களாகும். எண்ணெய் ஏற்றுமதி நமது ஏற்றுமதிகளில் ஆறுவது இடம் வகிக்கிறது.

நிவேதாவில் (Nevada) புகழ்வாய்ந்த காம்ஸ்டாக் லோடு (Comstock Lode) எனும் பொன், வெள்ளிச் சுரங்கங்களும், கொலராடோவில் (Colorado) உள்ள கிரிகரி லோடு (Gregory Lode) எனும் பொன்சுரங்கமும் 1859-ல் கண்டுபிடிக்கப்பட்டன. இச் சுரங்கங்களும் மற்றவைகளும் போர்க்காலத்தில் குறைந்த பட்சம் 80,00,000 டாலர்கள் மதிப்புள்ள விலையுயர்ந்த உலோகங்களை உற்பத்தி செய்தன. கனிப்பொருள்களின் புதிய வண்டல்கள் கண்டுபிடிக்கப்பட்டவுடன், சுரங்கநகர்களை நோக்கி மக்கள் 1859-ல் செல்லத் தொடங்கினர். இதே நிலை யுத்த ஆண்டுகளிலும் நிலவியது. கொலராடோவின் ஜனத்தொகை 1860-ல் 32,227 பேர்களாக இருந்து, 1864-ல் சுமார் 1,00,000 பேர்களாக உயர்ந்தது. 1863ஆம் ஆண்டில் மட்டும் இடாகோவில் (Idaho) 30,000 பேர்களுக்குமேல் இருந்தனர். நிவேதாவில் உள்ள வர்ஜீனியா நகரத்தில் குறுகிய காலத்தில் 18,000 பேர்கள் சேர்ந்தனர். அந்த மாநிலத்தின் ஜனத்தொகை 1760-ல் 6,857 ஆகும்; 1870-ல் 42,491 ஆக உயர்ந்தது. கோடைக்கால மாதங்களில் நிலவழியில் பெரும் புல்வெளிக்குரிய இரட்டைப் பாய்க்கப்பல்கள் தொடர்ச்சியாகச் சென்றன. கான்சாஸ் பாதையில் சென்ற ஒரு பிரயாணி 1863-ல் பதினைறு நாட்கள் செய்த பயணத்தில் நாளொன்றுக்குச் சராசரி 500 வண்டிகளைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். வெளியேறிச் செல்லும் பகுதியாகிய ஓமாகா (Omaha) வழியாக 75,000 பேர்கள் பொன்னை மேற்குப் பிரதேசத்தை நோக்கிச் சென்றனர்.

தொழிலாளரும் வாழ்க்கைச் செலவும்

மத்திய ஆட்சி போர்ச் செலவை எவ்வாறு சமாளித்தது என்பதைப் பின்னர் ஆராய்வோம்.[5] பாட்டாளியை எவ்வாறு வாழ்க்கைச் செலவு பாதித்தது என்பதை இங்கு விளக்குவோம். சட்ட முறைக் காகிதப் பணங்களும் [legal-tender notes (greenbackes)] குறுங்கால கஜானா நோட்டுகளும் தொடர்ந்து வெளியிடப்பட்டமையால், மதிப்பில் ஏற்ற இறக்கம் உள்ள காகிதப் பணம் நாட்டில் நிரம்பி வழிந்தது. இத்துடன் பண்டங்களின் தேவையும் அதிகரித்தது. எனவே, விலைவாசிகள் உயர்ந்தன. அல்டிரிச் அறிக்கையின்படி (Aldrich Report)[6] நாணயத்திலும் பொன்னிலும் அளவிடப்பெற்ற மொத்த விற்பனை விலையும் (wholesale price) பணக் கூலியும் (money wage) எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டுள்ளன என்பது பற்றிய அட்டவணை பின்வருமாறு :

ஆண்டு	நாணய மதிப்பு	பொன் மதிப்பு	பணக்கூலி (நாணயத்தில்)	பணக்கூலி (பொன்னில்)
1860	100·0	100·0	100·0	100·0
1861	100·6	100·6	100·8	100·8
1862	117·8	114·9	102·9	100·4
1863	148·6	102·4	110·5	76·2
1864	190·5	122·5	125·6	80·8
1865	216·8	100·3	143·1	66·2

போருக்கு முந்திய ஆண்டுகளில் நியாயமான கூலியைப் பெற்றுவந்த தொழிலாளர்கள் வாழ்க்கைச் செலவு விரைந்து உயரத் தொடங்கியமையால், வாழ்க்கையை நடத்த முடியாமல் தவித்தனர். துய்க்கப் பெறும் பண்டங்களின் அடிப்படையில் முக்கியத் தேவையுள்ள அறுபது பண்டங்கள் கணக்குக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றன. போர் நடைபெற்ற நான்கு ஆண்டுகளில் அப் பண்டங்களுக்கு ஆகும் செலவு 125 சதவீதமாகி உயர்ந்தது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

போர்க்காலத்தில் நிலவிய கூலியுடன் போருக்கு முன்னர் நிலவிய கூலியை ஒப்பிட்டுப் பார்த்தல் கடினமாக

[5] அதிகாரம்-24-ல் காண்க.

[6] Senate Reports, 52nd Cong., 2nd Sess., 1892-1893. (Special Session, March 4, 1893,) Vol. III, Part I, pp. 9, 13, 14, 99.

இருந்தது போலவே, உள்நாட்டு யுத்தம் நிகழ்ந்தபோது நிலவிய உண்மைக் கூலியை நிர்ணயிப்பது மிகவும் கடினமாக இருந்தது. பொன் செலுத்துகைகள் தடையுற்றவுடன் சாதாரண வர்த்தகத்திலிருந்தும் பொன் விலக்கப்பட்டது. பச்சை நோட்டுகளின் (greenbacks) அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்பெற்றன. வெளியிடப்பெற்ற தொகையைப் பொறுத்தோ, அல்லது வடநாட்டின் செழிப்பைபொறுத்தோ பச்சை நோட்டின் மதிப்பில் ஏற்ற இறக்கம் ஏற்படுவதில்லை. ஆனால், அந்த நோட்டின் மதிப்பில் ஏற்ற இறக்கம், வடநாடு மேற்கொண்டுள்ள பெரும் பொறுப்பின் வெற்றியில் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையைப் பொறுத்ததாகும். வடநாட்டின் வெற்றி பச்சை நோட்டுகளின் மதிப்பை உயர்த்தியது; அதன் தோல்வி மதிப்பை இறக்கியது. இத்துடன் தங்கத்தின் மதிப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கம் சேர்த்துக்கொள்ளப்படின், விலை நிர்ணயம் நம்பக்கூடியதன்று.

காகிதப் பணத்தினால் மதிப்பு அளக்கப்பெற்ற பண்டங்களின் விலை இருமடங்காகப் பெருகியபொழுது, கூலிகள் உயராமல் பின்தங்கின. போரின் முதலிரண்டு ஆண்டுகளில் காகிதப் பணத்தில் வழங்கப்பெற்ற கூலி, 1860ஆம் ஆண்டின் சராசரி கூலியைவிட சுமார் 10 சதவீதம் அதிகமாகவே இருந்தது. ஆனால், விலைவாசிகள் (நாணயத்தில்) கிட்டத்தட்ட 50 சதவீதம் உயர்ந்தது. விலைவாசிகளில் பெரும் ஏற்றம் 1863-ல் நிகழ்ந்தது. மேலும், 1863, 1864ஆம் ஆண்டுகளில் மழைக்காலத்தில் தொழிற்சங்கம் பெருமளவில் துவங்கியது; எண்ணற்ற வேலை நிறுத்தங்களில் தொழிலாளர்கள் விரக்தியுடன் ஈடுபட்டனர். இதுவரையில் தொழில் உழைப்பு, சேமிப்புக் கருவியைப் பயன்படுத்தியும், பெண்களையும் குழந்தைகளையும் வேலைக்கமர்த்தியும், மலிவான ஐரோப்பியத் தொழிலாளர்களைத் திட்டமிட்டு இறக்குமதி செய்தும் கூலிவிகித உயர்வைத் தவிர்த்தனர். எனினும், முதலாளி விட்டுக்கொடுக்க நேர்ந்ததால், பொதுவாகவே கூலி உயர்ந்தது. போர்க்காலத்தில் 8,00,000 பேர்கள் ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினர். போரின் காரணமாக நாட்டின் தொழிலாளர் சக்தியில் ஏற்பட்டிருந்த இடைவெளியின் பெரும் பகுதியைப் புதிதாகக் குடியேறியவர்களைக்கொண்டு நிரப்பினர். தொழிலாளர் சந்தையில் ஏற்பட்ட சிறு குழப்பத்திற்கும், 1863 வரையில் கூலிகள் உயராமல் இருந்ததற்கும் அக் குடியேற்றமே காரணமாகும். போர்க்காலத்தில் சராசரிக் கூலி உயர்வு 60 சதவீதம் என்றும், 1860-ல் இருந்ததைவிடப் போர் முடிவுற்ற வேளையில் தொழிலாளரின்

நிலை மிகவும் மோசமான இருந்ததென்றும் பேராசிரியர் ஃபைட் (Professor Fite) கருதுகிறார்.[7]

வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் வழக்கம்போல உத்தியோக வர்க்கத்தினரும், குறிப்பாகப் பாதிரிமார்களும், ஆசிரியர்களும், அரசாங்க ஊழியர்களும், பெண்களுமே ஆவர். சிப்பாய்களின் சம்பளம் 1864, ஜூலை 20ஆம் தேதி வரையில் 13 டாலர்களே ஆகும். அந்த நாளுக்குப் பின்னர்தான் அவர்கள் சம்பளம் 16 டாலர்களாக உயர்ந்தது. சிவில் துறையில் வேலைபார்த்துவந்த திறமை மிக்க அரசாங்க ஊழியர்கள் பலர், குறைந்த சம்பளத்தின் காரணமாக அரசாங்கத்துடன் தமக்கிருந்த தொடர்பினை அறுத்துக்கொண்டனர். பெண்கள், குறிப்பாகத் தையற்காரிகள் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பைச் சமாளிக்கமுடியாமல் தவித்தனர். பட்டாளத்து உடைகளைத் தைத்துக் குத்தகையாளரிடம் (contractors) வழங்குவதில் ஈடுபட்டிருந்த பெண்கள் 1865-ல் சம்பாதித்த சராசரிக் கூலி வாரமொன்றுக்கு 1·54 டாலர்களாகும். தொழில்துறை உலகில் பெண்களின் குறைந்த கூலியுடன் சில வேலைகளில் சிப்பாய்களின் சம்பளமும் சேர்க்கப்பெறறது. இராணுவ உதவித் தொகையையும் சிப்பாய்களின் குடும்பங்களுக்கு அற உதவியையும் வழங்குவதன்மூலம், சிப்பாய்களின் சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை அவர்கள் குடும்பங்களுக்கு அனுப்பிவைத்தனர். ஆனால், போரின் இறுதியாண்டுகளில் நாட்டின் வாங்கும் சக்தியில் ஏற்பட்ட உயர்வும், போகப்பொருள்களின் விற்பனையும், செல்வாக்கு மிகுந்த கேளிக்கை நடவடிக்கைகளின் செழிப்பும் வளங் கொழிக்கும் நாட்களில் தொழிலாளர்களும் பயனடைகின்றனர் என்பதையே விளக்குகின்றன.[8] தொழில் வளர்ச்சியைப் பற்றியும் தொழில் உழைப்புத் தேவையைப்பற்றியும் 1869ஆம் ஆண்டின் சென்சஸ் விளக்கியுள்ளது. அந்த சென்சஸ் அறிக்கையின்படி, 1869ஆம் ஆண்டில் 2,52,148 தொழில் அமைப்புகள் இருந்தன. இந்த எண்ணிக்கை 79·6 சதவீத அதிகரிப்பைக் குறிப்பதுடன், எந்தப் பத்தாண்டுக் காலத்திலும் நமது வரலாற்றில் இத்தகைய அதிகரிப்பு ஏற்பட்டதில்லை என்பதையும் குறிக்கிறது. இத்தகைய தொழில் அமைப்புகளில் வேலைபார்த்துவந்த கூலி பெறும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 13,11,246 ஆக இருந்து, பின்னர் 20,53,996 ஆக உயர்ந்தது. இந்த எண்ணிக்கை 56·6 சதவீத உயர்வைக் குறிப்பதாகும். தொழிலாளர்

[7] எமர்சன் டி. ஃபைட் (Emerson D. Fite), op. cit., p. 185 காண்க.

[8] போர்க் காலத்தில் தொழிலாளர் வரலாற்றைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள அதிகாரம் 22 ஐக் காண்க.

எண்ணிக்கையில் ஏற்பட்ட இத்தகைய உயர்வுக்கு இணையாக முதல் உலக யுத்தம் நிகழ்ந்த காலத்தை உள்ளடக்கிய பத்தாண்டுகளில்கூட ஏற்படவில்லை.

வடநாட்டு மூலதனம்

தொழில் உழைப்பாளிப்பு நிலை திருப்திகரமாக இல்லையெனினும் மூலதனத்திற்கு நல்ல வரவேற்பும் சூழ்நிலையும் இருந்தன. போருக்கு முன்னர் வாழ்ந்த கோடீஸ்வரர்களின் எண்ணிக்கையைக் கைவிரல்களினுல் எண்ணிவிடலாம். போரின் இறுதியில் கோடீஸ்வரர்கள் நிறைய இருந்தனர். போர்க்காலத்து வரிவிதிப்பு பெரும் தொழில்களுக்குச் சாதகமாய் இருந்தது. போர்க்காலத்திலேயே தந்தி, போக்குவரத்துச் சாதனங்கள்கொண்ட பல்வேறு கம்பெனிகள் ஒன்றுக இணையத் தொடங்கின. போருக்குப் பிந்திய ஆண்டுகளிலுங்கூட இந்த இணைப்பு வேகம் தொடர்ந்தது. அமெரிக்கத் தந்திக் கம்பெனியையும், ஐக்கிய அமெரிக்கத் தந்திக் கம்பெனியையும் முக்கிய எதிரிகளாகக் கொண்ட வெஸ்டர்ன் யூனியன் அவ்விரு கம்பெனிகளையும் 1866-ல் கைப்பற்றியது. இதன் விளைவாக 75,000 மைல் நீளமுள்ள தந்தி வெஸ்டர்ன் யூனியனுக்குச் சொந்தமாகியது. இதே வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்த எண்ணற்ற, சிறு இருப்புப்பாதைகள் ஒரே அமைப்பில் கொண்டுவரப்பெற்றன. போக்குவரத்து வசதிகளின் தேவை போர் நடைபெற்றதன் விளைவாகப் பெருகியமையாலும், உற்பத்தியாகும் பண்டங்களைச் சேகரிக்கும் மையங்களாக அமைந்த பல்வேறு நகரங்களுக்கிடையே போட்டி ஏற்பட்டமையாலும் இருப்புப்பாதைகளை ஒரே ஆதிக்கத்தின் அடிப்படையில் கட்டுப்படுத்தவேண்டியது வலியுறுத்தப்பெற்றது. பல்வேறு கேஜ் பாதைகளையும், பல்வேறு இரயில் வண்டிகளையுங் கொண்ட தனித்தனியான சிறு இருப்புப்பாதை அமைப்புகள் சரக்குகளை அடிக்கடி ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றிக்கொண்டே இருக்கக் காரணமாக அமைந்தன. எனவே, போர் நடவடிக்கைகள் தடையுற்றன. பென்சில்வேனியா, லீஹை, ஈரி, இன்னும் மற்ற முக்கியச் சாலைகளின் கம்பெனிகள், போருக்கு முன்னரும், போர் நடந்துகொண்டிருந்தபோதும், போர் முடிந்தபின்னரும் சிறு சிறு கம்பெனிகளையெல்லாம் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தன. தற்காலத்துப் பெரும் இருப்புப்பாதை அமைப்புகள் ஏற்பட அப் பெருங் கம்பெனிகள் காரணமாக இருந்தன. பென்சில்வேனியா அமைப்பு கைப்பற்றியவற்றுள் மிகவும் முக்கியமான அமைப்பு, பிட்ஸ்பர்க், போர்ட்வெயின்,

சிக்காகோ அமைப்பாகும். இந்த அமைப்பு ஒரே ஆதிக்கத் தின்கீழ் இயங்கி, மிச்சிகன் ஏரிக்கும் கடற்கரைக்கும் இடையில் ஒரே நெடும்பாதையை உருவாக்கியது. இதே ஆண்டுகளில் நியூயார்க்குக்கும் பஃபலோவுக்கும் இடையில் உள்ள பல்வேறு சிறு பாதைகளுடன் கம்மோடோர் வேண்டர்பில்ட் (Commodore Vanderbilt) பாதையும் ஒன்று சேர்ந்து நியூயார்க் சென்ட்ரல் எனும் பெரும் பாதை ஏற்படத் துணைபுரிந்தது.

பல்வேறு இருப்புப்பாதைகளின் இணைப்பு நிகழ்ந்தது போலவே, போர்க்காலத்தில் புதிய இருப்புப்பாதைகளும் போடப்பட்டன. போர்க்காலத்தில் மிகவும் நீளமாகக் கட்டப் பெற்ற இருப்புப்பாதை அட்லான்டிக் அண்டு கிரேட் வெஸ்டர்ன் எனும் பாதையாகும். ஈரி அமைப்பின் ஒரு பகுதியாகிய இப் பாதை சாலமான்கா (Salamanca), நியூயார்க் வழியாகச் சென்று டேடன் (Dayton), ஓகியோ முதலியவற்றை அடைகிறது. கிழக்கில் ஈரி, மேற்கில் ஓகியோ, மிசிசிப்பிமூலம் நியூயார்க்கும் செயின்ட் லூயியும் ஒரே கேஜ் உள்ள இருப்புப்பாதையால் இணைக்கப் பெற்றன. ஆங்கில மூலதனத்தையும் இறக்குமதி செய்யப்பெற்ற தொழிலாளரையும் கொண்டு நாள் ஒன்றுக்கு ஒரு மைல் நீளம் உள்ள வீதத்தில் அந்த இருப்புப்பாதை போடப்பட்டது. போரின் முடிவு எப்படி இருப்பினும், இத்தகைய இருப்புப்பாதை போடுவதில் வியாபார ஊக்கம் சிறந்த முறையில் விளங்கியது. மேலும், வடநாட்டின் நிதி படைத்தோரும், ஐரோப்பியக் கண்டத் தின் நிதிபடைத்தோரும் எதிர்காலத்தில் நம்பிக்கை உடைய வர்களாக இருந்தனர். மேற்கே மிசிசிப்பிவரையில் செல்லக்கூடிய ஒரே கேஜ் பாதையை முதன்முதலில் நியூயார்க்கிற்கு வழங்கிய தால், நியூயார்க்குக்குப் போட்டியிடும் கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களைவிடச் சிறப்பான ஒரு வாய்ப்பும் வசதியும் கிடைத் தன. முக்கியத்துவம் உடைய ஃபிலடெல்பியா—ஈரி பாதை 1864-ல் நிறைவேறியது. அப் பாதை புதிய எண்ணெய்க் கிணறுகளை ஃபிலடெல்பியாவுடன் இணைத்தது. மேற்கத்திய வர்த்தகத்தின் ஒரு பகுதியையேனும் பாதுகாத்துக்கொள்ளக் கருதிய மெஸ்ஸாசுசெட்ஸ், 1863-ல் முற்றுப்பெறாமலிருந்த கிரீன்ஃபீல்டு (Greenfield), டிராய் (Troy) ஆகியவற்றின் ஹூசக் குடைவரைப் பாதையை (hoosac tunnel) முழுதும் அமைக்கும் வேலையில் ஈடுபட்டது. மேலும், ஆல்பனி, போஸ்டன் ஆகிய வற்றை இணைக்கும் பாதையையும் மேற்கொண்டது. மற்ற இருப் புப்பாதைகளையும் அமைக்க முனைந்தனர். சிலவற்றிற்கான திட்டங்களையும் தீட்டினர். யூனியன் பசிஃபிக்கைச் சார்ந்த முதல் இருப்புப்பாதைகளையும் 1865-ல் போட்டனர். கண்டத் தின் குறுக்கே போடப்பட்ட முதல் இருப்புப்பாதைகள் அவையே.

இருப்புப்பாதைகள் இல்லாமலாக இருந்ததே இல்லை. ஊதியப் பங்கினையே வழங்காத ஈரீ, ஹட்சன் நதி, கிலீவ்லாந்து-பிட்ஸ்பர்க், இல்லினாய்ஸ் சென்ட்ரல் ஆகிய பாதைகள் போர் முடியும்பொழுது, எட்டும் எட்டுக்கு மேற்பட்ட சதவீதமும் கொண்ட ஊதியப் பங்கினை வழங்கின. இருப்புப்பாதைகள் பல தங்களுடைய உண்மையான வருமானத்தை இருப்பு ஊதியப் பங்கின்மூலம் (stock dividends) மறைக்க முயன்றன. தன்னுடைய ஆற்றலையும், தனக்குரிய வாய்ப்புகளையும் மூலதனம் நன்கு உணர்ந்திருந்தது. சர்வாதீனத்தின் மதிப்பும் நன்கு விளங்கியது. ஆந்திரசைட் கிடைக்கும் பகுதியிலுள்ள நிலக்கரி உற்பத்தியாளர் மீதுள்ள தங்கள் ஆதிக்கத்தை இருப்புப்பாதைகள் பலப்படுத்திக் கொள்ள முனைந்தன. நகரங்களிலுள்ள முதலாளிகள் தெரு இருப்புப்பாதை சர்வாதீனங்களைத் திட்டமிட்டு முனைந்து நின்றனர். சட்டமன்றங்களில் நிலையான, நீண்டகால வாக்குரிமைகளைக் கோரினர். இருபத்தேழு நகரங்களில் தெரு கார்கள் முதன்முதலில் தோன்றின.

இருப்புப்பாதைகள் அமைப்பதற்காகும் செலவு இரு மடங்காகப் பெருகியபோதிலும், பாதைகள் அமைக்கும் வேலை மிகவும் பாதிக்கப்படவில்லை. முதல், இரண்டாம் உலக யுத்தங்களின் போது நிலவிய நிலைமைகளுக்கு இது மாறுபட்ட நிலையாகும். ஜனத்தொகை விரைந்து பெருகிய ஃபிலடெல்பியா, சிக்காகோ, சான்ஃபிரான்சிஸ்கோ போன்ற நகரங்களிலும், போர்த் தேவைகளின் காரணமாகத் தொழில் பெருகிய லின், ஸ்பிரிங்ஃபீல்டு, மெஸ்ஸாசுசெட்ஸ் போன்ற நகரங்களிலும் பரந்த அளவில் பாதைகள் அமைக்கப்பெற்றன. போர் நிகழ்ந்தபோது வாஷிங்டனில் தலைநகர் அமைப்புவேலை முற்றுப்பெற்றது. இரா்ஜ்ஜியக் கட்டடங்களும் முனிசிபல் கட்டடங்களும் கட்டப்பெற்றன. சிக்காகோ டிரிபியூன் (Chicago Tribune) 1868-ஆம் ஆண்டு அக்டோபர் 8-ல் பின்வருமாறு எழுதுகிறது: 'ஒவ்வொரு வீதியிலும் சாலையிலும் கட்டடங்கள் எழும்புவதையும், பெருங் கல், செங்கல், இரும்புத் தூண்கள், சலவைக் கல்லால் ஆகிய அரண்மனைகள், புதிய இருப்பிடங்கள் முதலியன உருவாகுவதையும் யாரும் காணலாம். ஒவ்வோர் இடத்திலும் ஒரே வேகையில் தெருக்களைப் படிப்படியாக அமைப்பதையும், சாக்கடைகள் கட்டுவதையும், நீர்க்குழாய்கள், காஸ் குழாய்கள் (gas pipes) அமைப்பதையும் காணலாம்.'

வடநாட்டின் சமூக நடவடிக்கைகள்

எதிர்பாராத யுத்தகாலச் செழிப்பின் காரணமாகப் பயன் அடைந்த பலர் ஊதாரிச் செலவிலும் இன்பவேட்டையிலும் ஈடுபட்டனர். போரினால் விளைந்த பயங்கரங்களை மறக்கும் நோக்கத்துடனும், தாங்கள் துணிவுடன் உள்ளோம் என்பதைக் காட்டிக்கொள்ளவும் அவர்கள் கேளிக்கைகளில் ஈடுபட்டனர் எனப் பொறுப்புவாய்ந்தவர்கள் விளக்கம் தரலாம். ஆனால், உண்மை எதுவெனில், செல்வத்தைக் கண்டறியாதவர்களிடம் செல்வம் திரண்டதால்தான் ஊதாரிச்செலவும் இன்பவேட்டையும் பெருகின. அவர்கள் குதிரைப்பந்தயத்திலும் சூதாட்டத்திலும் ஈடுபட்டனர். ஓட்டப்பந்தயக்காரர்களுக்கு அப் புதுப் பணக்காரர்கள் பெருத்த ஆதரவினை நல்கினர். தலைசிறந்த நடிகர்கள் நடிக்கும் காட்சிகளைக் காண அவர்கள் திரண்டு சென்றனர். மிகவும் விலையுயர்ந்த நகைகளும் உடைகளும் தட்டுமுட்டுச் சாமான்களும் உடனுக்குடன் விற்பனையாயின.

நீல்நிற உடையுடன் சிப்பாய்கள் யூனியனைப் பாதுகாக்கப் போரிட்டு வீர மரணம் எய்திய அதே வேளையில் வடநாட்டில் போரிலே ஈடுபடாது வீட்டிலேயே தங்கி, செல்வத்தைத் திரட்டிக் கேளிக்கைகளில் சிலர் ஈடுபட்டனர் என்று வருணிப்பது சரியன்று. சில வர்க்கத்தினருக்கும் நகரவாசிகளுக்கும் உயர்ந்த வாழ்க்கை கிடைத்தது என்பது உண்மையே. மேலும், செலவழிப்பதில் முழுவிருப்பத்துடன் ஈடுபட்ட அதே வடநாட்டுக்காரன் பிறருக்கு வாரிவழங்குவதிலும் முழு விருப்பத்துடன் ஈடுபட்டான். 1860—'69-ல் குறைந்தபட்சம் பதினைந்து கல்லூரிகளேனும் தோன்றின. பெண்களுக்குத் தனிக் கல்லூரியாகிய வாசரும் (Vossar), மெஸ்ஸாசுசெட்ஸ் நுட்பத்தொழில் கல்லூரியும், கார்னல், லீஹை, ஸ்வார்த்மோர், பேட்ஸ் ஆகிய கல்லூரிகளும் ஏற்பட்டன. மேலும், கான்சஸ், மின்னசோட்டா எனும் மாநிலப் பல்கலைக்கழகங்களும் ஏற்பட்டன. தனிப்பட்ட அன்புப் பணியினர் நிறைய நன்கொடைகளை நிதியாக வாரி வழங்கினர். முன்னரே ஏற்பட்டு நிலைத்துள்ள கல்வி நிலையங்களுக்கு வேண்டிய புதுக் கட்டடங்களை எழுப்புவதற்கும் அவர்கள் பணத்தை அள்ளித் தந்தனர். கல்விக்கெனத் தரப்பட்ட நன்கொடை குறைந்தபட்சம் 50,00,000 டாலர்கள் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. போர் மும்முரமாக நடைபெற்ற வேளையிலும் தேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முனைந்து நின்றனர் என்பதற்கு எடுத்துக்காட்டு, 1862 ஆம் ஆண்டு, ஜூலை இரண்டாம் நாள் நிறைவேற்றப்பெற்ற மோரில் சட்டமே (Morril Act) தக்க சான்றாகும். அச் சட்டத்தின்படி

தேசிய அரசு ஒவ்வொரு மாநிலத்தின் செனட்டர்கள், காங்கிரஸ் காரர்கள் ஒவ்வொருவருக்கும் 30,000 ஏக்கர்கள் கொண்ட பொது நிலத்தை வழங்கியது. அந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைத் தொழிற்பள்ளிகளுக்கும் விவசாயப் பள்ளிகளுக்கும் செலவிட வேண்டும். அப் பள்ளிகளின் பாடத் திட்டத்தில் இராணுவப் பயிற்சியும் இடம் பெறவேண்டும்.

ஐக்கிய அமெரிக்க சுகாதாரக் கமிஷன், ஐக்கிய அமெரிக்க கிறித்துவக் கமிஷன் ஆகியவற்றின்மூலம் சிப்பாய்களுக்கு சுகாதார வசதியும், க்ஷேமநல வசதியும் செய்து தரப்பெற்றன. பின்னர் நிகழ்ந்த போர்களின்போது, இத்தகைய பொறுப்பினைச் செஞ்சிலுவைச் சங்கத்தினரும், மற்ற இயக்கத்தினரும் மேற் கொண்டனர். ஐக்கிய அமெரிக்க சுகாதாரக் கமிஷன் இராணுவ மருத்துவத் துறையுடன் சேர்ந்து வேலை செய்வதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. மேலும், சிப்பாய்களின் க்ஷேமநல வேலைகளில் ஈடுபட்டு வந்த வட்டாரக் கழகங்களும் அந்தக் கமிஷனுடன் இணைந்து ஒத்துழைத்தன. இத்தகைய சங்கங்கள், சிப்பாய்களுக்கு 2,50,00,000 டாலர்கள் மதிப்புள்ள தூணிமணிகள், கட்டுகள் (bandages), மருந்து வகைகள், உணவு, புகையிலை ஆகியவற்றை வழங்கின. அந்தக் கமிஷன் போர்க்களத்திலும், சண்டை நடைபெற்ற இடத்திலும் நல்ல தொண்டுபுரிந்தது. அதனுடைய மற்ற வேலைகளும் போற்றத்தக்கன. முக்கிய நகரங்களில் 25 சிப்பாய் விடுதிகளை ஏற்படுத்தி, அப் பகுதிகளின் வழியே செல்லும் சிப்பாய்களுக்கு உண்ண உணவும் உறங்க உறையுளும் வழங்கியது. சம்பள நிலுவைகளையும், உதவித் தொகைகளையும், ஓய்வூதியத்தையும், சிப்பாய்கள் பெறுவதற்கு வழி செய்யும் செயலாண்மை நிலையங்களையும் அந்தக் கமிஷன் நிறுவியது. நோய் தீர்க்கும் மருத்துவ மனைகளையும் ஏற்படுத்தியது. மருத்துவ மனைகளின் அறிக்கைகளையும் வெளியிட்டது. இவைபோல், பல்வேறு திட்டங்களின்மூலம் சிப்பாய்களின் நலிவினைப் போக்க அந்தக் கமிஷன் முனைந்து வேலை செய்தது. கமிஷனுக்கு வேண்டிய நிதியினைச் செய்தித்தாள்கள் திரட்டித் தந்தன. பெரு நகரங்களில் சுகாதாரக் கண்காட்சிகள் நடத்தப்பெற்றன. பொதுநல நிறுவனங்களைப் போலவே நாடகக் கொட்டகைகளும் பணம் திரட்டித் தந்தன. பள்ளிக்கூடச் சிறுவர்கள்கூடப் பொழுதுபோக்கு விழாக்கள் நடத்திப் பணம் வசூல் செய்து வழங்கினர். மதகுருக்களின் சேவையுடன் அமையாது, ஐக்கிய அமெரிக்க கிறித்துவக் கமிஷன் சிப்பாய்களின் ஆத்மீக நலனில் அக்கறை காட்டியது. அந்தக் கமிஷன் போர்வீரர்களுக்கென பாதிரிமார்களையும் பைபிள்களையும் அனுப்பிவைத்தது.

சிப்பாய்களின் க்ஷேமநலனுக்கு வழங்கப்பெற்ற தொகையை விட மிகுதியாக மாநில அரசு, கவுன்டி நிருவாகம், வட்டார நிருவாகம், தனிப்பட்ட அன்புப் பணியினர் முதலானோர் சிப்பாய்களின் குடும்பங்களுக்கு வேண்டிய நன்கொடைகளையும் உதவித் தொகைகளையும் வழங்கினர். மத்திய, மாநில, வட்டார நிருவாகங்கள் 60,00,00,000 டாலர்களை உதவித்தொகைகளாக வழங்கின என்றும், தனியார் துறையினர் 10,00,00,000 டாலர்களை நன்கொடைகளாக வழங்கினர் என்றும் ஐக்கிய அமெரிக்காவின் புரோவோஸ்ட் மார்ஷல் ஜெனரல் (Provost Marshall General) மதிப்பிட்டுள்ளார். இந்தத் தொகையில் பாதி சிப்பாய்களின் குடும்பங்களுக்குப் பயன்பட்டிருக்கலாம். சிப்பாய்களின் தேவை மிகுந்த உறவினர்களுக்கு முனிசிபாலிட்டிகள் தாராளமாக உதவித்தொகை அளித்தன. ஃபிலடெல்பியா மட்டும் ஒரே வேளையில் 9,000 பேர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 6,00,000 டாலர்கள் செலவழித்துள்ளது. நீக்ரோக்களையும் தென்னுட்டிலிருந்து வந்த அகதிகளையும் பராமரிக்க வடநாடு கணிசமான தொகையைச் செலவழித்தது. அவ்வாறே, லங்காஷயரில் வறுமையில் வாடிய பருத்தித் தொழிலில் ஈடுபட்டோருக்கும் வடநாடு பணம் கொடுத்து உதவியது. போர்க் காலத்தில் நிகழ்ந்த ஊகவாணிகம், இலாப வேட்டை, ஊதாரித் தனம் ஆகியவற்றையெல்லாம் மங்கச் செய்யும் வகையில், பல் வேறு நிறுவனங்களும், அரசியலாரும், அன்புப் பணியினரும் சிப்பாய்களின் நலனைப் பாதுகாக்க நிதியுதவி செய்தனர்.

'பருத்தி மன்னன்'

பருத்திக்கு உலகத் தேவை இருப்பதால்தான் வெற்றி யடைய முடியும் எனத் தென்னுடு நம்பியது. தென் கரோலினு வின் சென்ட்டர் ஜேம்ஸ் ஹெச். ஹேமண்டு (James H. Hammond) 1858-ல் நிகழ்த்திய சொற்பொழிவில் பின்வருமாறு குறிப்பிட் டார் : 'எங்கள்மீது அவர்கள் போர் துவக்கினால் துப்பாக்கி யும் கத்தியும் இன்றி உலகத்தையே எங்களுடைய காலடியில் வீழ்த்த முடியும்.....மூன்று ஆண்டுகளுக்கு நாங்கள் பருத்தி வழங்காவிடின் என்ன நேரிடும்? ஒவ்வொருவரும் எவ் வாறு கற்பனை செய்து பார்ப்பார்கள் என்பதை நான் விளக்காமல் இருக்க முடியாது. ஆனால், ஒன்று உறுதி. இங்கிலாந்து தலை குப்புற வீழ்ந்துவிடும். தென்னுட்டைக் காக்கவேண்டி வளர்ச்சி யுற்ற உலகமனைத்தையும் இங்கிலாந்து தன் பக்கம் இழுத்துக் கொள்ளும். பருத்திமீது நீங்கள் நிச்சயமாகப் போரிட முடியாது. பூமியிலுள்ள எந்த அரசும் பருத்திமீது போர் தொடுக்க இயலாது.

பருத்தி மன்னனுக்குச் சமம்''[9] இந்த முழக்கமே தென்னுட்டின் பொருளாதாரச் சிந்தனையை மிகவும் பாதித்தது.

உறுதி நிறைந்த இந்த நம்பிக்கைகளைப் பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பொய்யாக்கிவிட்டன என்பதற்கு இரு காரணங்கள் உண்டு. முதலாவதாக, எல்லை மீறிய உற்பத்தியின் காரணமாகப் பருத்தி மிஞ்சிவிட்டது. இரண்டாவதாக, வட நாட்டுக் கோதுமை ஐரோப்பியர்களுக்குத் தேவைப்பட்டதுடன், ஐரோப்பியர்களும் தங்கள் பண்டங்களை வடநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய விழைந்தனர். 1840 முதல் 1850 வரையில் உற்பத்தி எல்லைமீறி இருந்தது. ஆனால், அடுத்த பத்தாண்டுகளில் தோட்ட முதலாளிகளும் பொறிவழி உற்பத்தியாளர்களும் 'அது வரையில் அனுபவித்தறியாத செழிப்பினை' நுகர்ந்தனர்.[10] பருத்தி விளைச்சல் 1860-ல் மிகவும் உயர்ந்திருந்தது. 'போர் பீதியின் காரணமாகத் தென்னுட்டுத் தோட்ட முதலாளி வழக்கத்திற்கு மாறான அவசரத்துடன் பருத்தியை விற்பனைக்குச் சந்தைக்கு அனுப்பிவிட்டான். போர் துவங்குவதற்கு முன்னரே 16,50,000 பேல்கள் கொண்ட பருத்தியை இங்கிலாந்து வாங்கிவிட்டது. பிரிட்டிஷ் சந்தையில் பருத்தி வெள்ளம்போல் பெருகி வழிந்தமையால் பல ஆலைகள் 1861-ல் மூடப்பெற்றன. பருத்தி விலையும் மாறுமல் நிலைத்து விட்டது. வாணிபத் தடை அமலுக்கு வந்தவுடன், அதனை வெற்றுத்தாளில் எழுதப்பெற்ற வாணிபத் தடையெனக் கேலி செய்தனர். உண்மையில் தாளில் எழுதிய தடையாகவே அது இருந்தது. ஏனெனில், 1861 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 31 முடிய 31,27,568 பேல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. சந்தையில் பருத்தி வெள்ளம்போல் பெருகிவிடக்கூடாது என்பதற்காக ஆலை முதலாளிகள் வாணிபத் தடையை வரவேற்றனர் என்றும் கூறப்பட்டது.'[11] ஆங்கிலத் தரகர்கள் திவால் ஆவதை வாணிபத் தடை தடுத்து விட்டது. வடநாட்டிலும் பருத்தி கையிருப்பு இருந்தது. 'முதல் ஆண்டில் அமெரிக்க ஆலைகள் முழு வேலை நேரத்தில் மூன்றில் இரண்டு பங்கு இயங்கின. அடுத்த ஆண்டில் நான்கில் ஒரு பங்கு நேரமும் அரை நேரமும் இயங்கின. 1860-ல் நிறைய

9 ஜேம்ஸ் ஏ. பி. ஸ்கீரர் (James A. B. Scherer) எடுத்துக்காட்டியது; 'Cotton as a World Power,' ப. 239.

10 ஜேம்ஸ் எல். வாட்கின்ஸ் (James L. Watkins) 'Production and Price of Cotton for One Hundred Years', U. S. Dept. of Agriculture Bulletin No. 9, Miscellaneous Series (1895).

11 ஜேம்ஸ் ஏ. பி. ஸ்கீரர், op. cit., ப. 266.

வாங்கிய பருத்தியை முழுதும் பயன்படுத்தின.'[12] ஆக, வாணிபத் தடைமூலம் பருத்தி அளிப்பைத் தடுத்தது பருத்திப் பொறிவழி உற்பத்தியாளருக்கு நன்மையாயிற்று. எவ்வாறெனில், அவர்கள் தங்களிடமிருந்த உபரிப் பருத்திக் கையிருப்பை முழுதும் பயன்படுத்தி விலையேற்றத்தைக் காத்துக்கொண்டனர். வட நாட்டு ஆலைகள் உற்பத்தியைக் குறைத்தவுடன் உழைப்பாளிகள் போர்த்தொழில்களில் வேலைக்கமர்ந்தனர்.



(Data from M. B. Hammond, 'The Cotton Industry', Appendix I, 'Statistical Abstract' 1921, p. 878; ibid., 1940, p. 729; ibid., 1952, p. 289. 1921ஆம் ஆண்டுவரையில் உள்ள விலைவாசிகள், நியூயார்க்கு சந்தையிலிருந்து சேகரிக்கப்பெற்றவை. அந்த ஆண்டுக்குப் பின்னர் நாடு முழுதும் உள்ள முக்கியப் பருத்திச் சந்தைகளிலிருந்து பொதுச் சராசரி விலைகள் சேகரிக்கப்பெற்றன.

மிட்லிங் அப்லண்ட்ஸ்—சராசரி ஆண்டு விலை, 1790–1950

இங்கிலாந்தில் வேலையில்லாத் திண்டாட்டமும், தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்தோரிடம் வேதனையும் நிலவின. உரிமை பெற்ற தொழிலாளருக்கு ஆதரவாக அமெரிக்காவில் பயங்கரப் போர் நடைபெறுவதைக் கண்டு இங்கிலாந்தின் தொழிலாளர்கள் வடநாட்டிற்கு ஆதரவாக நின்றனர். பிரிட்டிஷ் அரசாங்கம் கான்பெடரசியை ஆதரிப்பதையும் அவர்கள் எதிர்த்தார்கள். ஆங்கிலத் தொழிலாளரின் நல்லுணர்ச்சியைப் பாராட்டிய வடநாட்டினர் லங்காஷயர்த் தொழிலாளர் துயர் துடைக்க மூன்று கப்பல்களில் நிவாரண வேலைகளுக்கு ஆகும் சரக்குகளை அனுப்பிவைத்தனர். போரின் இறுதிக் கட்டத்தில் வடநாட்டு

[12] ஏமர்சன் டி. பைட், op. cit., ப. 86.

இராணுவத்தின் ஆதிக்கத்தின்கீழ்த் தென்னுட்டின் பெரும் பகுதி வரவே, வடநாட்டு ஆலைகளுக்கு வேண்டிய அளவுக்குத் தென்னுட்டுப் பருத்தி கிடைத்தது. (பின்னர் வரும் அட்ட வணையைக் காண்க.) உலகின் மற்றப் பகுதிகளில் உள்ள மூலப் பருத்திப் பிரதேசங்களை கிரேட் பிரிட்டன் வளர்க்கத் தொடங் கியது.

உள்நாட்டில் 1860 முதல் 1862 முடியக் கோதுமை உற்பத்தி மிகவும் குறைவாக இருந்தமையால், இங்கிலாந்து வட அமெரிக்காவில் விளையும் கோதுமையை எதிர்பார்த்திருந்தது. எனவே, கான்பெடரசிக்கு இங்கிலாந்து ஆதரவு தர முடியவில்லை. எஸ். ஜே. சாப்மேன் (S. J. Chapman) குறிப்பிட்டுள்ளது போல, 'பருத்தி உற்பத்தியில் இங்கிலாந்து ஒன்றும் செய்ய இயல வில்லை. குறுக்கிடுதல் பயனற்றுப் போகலாம். ஏனெனில், அமெரிக்கா வெகு தொலைவில் உள்ளது. பருத்தியைக் கொண்டு வர மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும் கோதுமை வருதலைத் தடுத்துவிடும்.'[13] அப்பொழுது இந்த உண்மை பாராளு மன்றத்தில் தெளிவுறுத்தப்பெற்றது. உள்நாட்டுப் போர் நிகழ்ந்தபோது கோதுமை, பருத்தி ஆகிய பண்டங்களைப் பொறுத்தவரையில் பிரிட்டனுடைய நலன்கள் சமநிலையில் பாதுகாக்கப்பட்டதைப்பற்றிச் சுருக்கமாக விளக்கும்போது பேராசிரியர் பைட் பின்வருமாறு வரைகிறார்: 'இங்கிலாந்துக்கு அமெரிக்கக் கோதுமை தேவைப்பட்டபோதிலும், ஐக்கிய அமெரிக்கா போர் துவங்கினால் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள இங்கிலாந்து தயங்காது. ஆனால், ஐக்கிய அமெரிக்கா வுக்கு எதிராகவும் கான்பெடரசிக்கு ஆதரவாகவும் இங்கிலாந்து போரில் ஈடுபடாமைக்குப் பல்வேறு காரணங்களில் இங்கிலாந் தில் ஏற்பட்ட கோதுமைத் தட்டுப்பாடு ஒரு முக்கியக் காரண மாகும். இக் கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதே.'[14]

அமெரிக்கக் கோதுமை தேவைப்பட்டமையால், இங்கிலாந்து உண்மையாகவே நடுநிலைமை மேற்கொள்ளும்படி ஏற்பட்டதா என்பதை ஆராய்வது சிக்கல் நிறைந்த ஒன்றாகும். உள்நாட்டுப் போரின் தூதாண்மைத் திறத்தை (Civil war Diplomacy) நன்கு பயின்ற ஒருவர் கருத்து ஒன்றினைத் தெரிவித்துள்ளார். இங்கி லாந்து நடுநிலைமை வகித்ததற்குக் கோதுமையன்று காரணம்.

[13] எஸ். ஜே. சாப்மேன், 'The Cotton Industry and Trade' (London, 1905), ப. 66.

[14] எமர்சன் டி. பைட், op. cit., ப. 21. எல். பி. ஸ்கிமிட் (L. B. Schmidt), 'The Influence of Wheat and Cotton on Anglo-American Relations during the War', Iowa Journal of History and Politics (July, 1918).

போர்க்காலத்தில் இலாபவேட்டை ஆடலாம் என்ற விருப்பமே காரணமென அவர் கருதுகிறார்.[15] உலகின் மற்ற நாடுகளிலிருந்து வேண்டுமளவுக்குக் கோதுமையை இங்கிலாந்து பெற முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து பிரிட்டன் கோதுமை வாங்கக் காரணம், அமெரிக்கக் கோதுமை மலிவானது என்பதுதான். மேலும், அமெரிக்காவிடமிருந்து கோதுமை வாங்குவது எளிதாக இருந்தது. இரண்டாவதாக, கோதுமைக்கு ஈடாகப் போர்க்கருவிகளையும் இராணுவத் தள வாடங்களையும் இங்கிலாந்து அமெரிக்காவுக்கு அளிக்கமுடியும். போர் நடைபெற்ற வேளையில் பிரிட்டனின் பொருளாதார நலன்கள் வடஅமெரிக்காவுடன் மிகவும் நெருக்கமாகப் பிணைந்திருந்தன; தென் அமெரிக்காவுடன் அன்று.

தென்னுட்டின் மீது வாணிகத்தடை

போரின் விளைவால் வடநாட்டில் பொருளாதார முன்னேற்றம் விரைவாக ஏற்பட்டது. தென்னுட்டில் பொருளாதார வாழ்க்கையே தலைகீழாக மாறிவிட்டது. ஆன்டி-பெல்லம் (ante-bellum) நாட்களில் புகையிலையும் பருத்தியும் விளையும் விவசாயப் பிரதேசமாகத் தென்னுடு விளங்கியது. தென்னுடு இவ்விரு பண்டங்களையும் வடநாட்டிற்கும் ஐரோப்பாவிற்கும் விற்று, அவற்றிற்கு ஈடாகப் பொறிவழிப் பண்டங்களை வாங்கிக்கொண்டன. செல்வ மூழுதும் பருத்தியிலும் அடிமைகளிலும் முடங்கிவிட்டமையால், தென்னுட்டுத் தோட்ட முதலாளி தனக்கு வேண்டிய உணவுப் பண்டங்களை ஓகியோவிற்கு வடக்கேயுள்ள இராஜ்ஜியங்களிலிருந்து வரவழைத்துக்கொண்டார். தென்னுட்டின் வாழ்க்கையே வெளிநாட்டு வர்த்தகத்தைச் சார்ந்திருந்தது. போரின் விளைவால் தென்னுட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தொடர்பு அறுந்தது. வடநாட்டின் இராஜதந்திரிகளும் தென்னுட்டின் இராஜதந்திரிகளும் 'பருத்தியே மன்னன்' என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். போர் துவங்கிய வேளையில் தென்னுட்டைச் சுற்றிலும் இரும்பு வளையம் வளைத்துக்கொண்டது. மத்திய அரசின் இராணுவப் படைகள் தென் திசையிலும் கீழ்த்திசையிலும் முன்னேற முன்னேற, ஒவ்வோர் ஆண்டிலும் அந்த இரும்பு வளையம் தென்னுட்டை மிகவும் இறுக்கியது. வடநாட்டின் கப்பற்படையும் வலிமை பெறவே, அந்த இரும்பு வளையம் கான்பெடரசியின் குரல்வளையை வலிவுடன் இறுக்கி, அதனைப் பணிய வைத்தது. வாணிபத்தடை தென்னுட்டை மூன்று

[15] எப். டபிள்யூ. ஓஸ்லீ (F. W. Ousley), 'King Cotton Diplomacy' ப. 587 ff.

வழிகளில் மிகவும் பாதித்தது. முதலாவதாக, வாணிபத்தடையின் காரணமாகப் பருத்தியும் புகையிலையும் தென்னுட்டைவிட்டு வெளியேற முடியவில்லை. எனவே, தென்னுடு அயல்நாட்டுச் சந்தையை இழந்தது. அதனுடைய வர்த்தக நாணயம் வெளி நாட்டில் பாதிக்கப்பட்டது. எனவே, தேவையான போர்க் கருவிகளை தென்னுடு வாங்கமுடியவில்லை. சந்தைகளையும் நாணயத்தையும் இழந்தமையால் தென்னுட்டின் பொருளாதார அமைப்பே மிகவும் சீர்கேடுற்றது. இரண்டாவதாக, வாணிபத் தடையின் காரணமாக விவசாயத் தென்னுடு தனக்கு வேண்டிய பல்வேறு வகையான பொறிவழிப் பண்டங்களை இறக்குமதி செய்ய இயலவில்லை. மூன்றுவதாக, பழக்கமில்லாத தொழில் களில் அடிமைகளைத் தென்னுடு ஈடுபடுத்தியதால் நிலத்தின் மதிப்பும் அடிமைகளின் மதிப்பும் பொன்றத் தொடங்கின.

வாணிபத்தடையின் விளைவுகளை வீரத்துடன் தென்னுடு எதிர்த்து நின்றது. படைக்கலன்கள் வெடிமருந்துகள், செருப் புகள், சமுக்காளங்கள், மருந்துவகைகள், வேறுபல போகப் பொருள்கள் முதலியவற்றைத் தென்னுடு ஐரோப்பாவிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள பல்வேறு துறைமுகங்களில் இறக்கு மதி செய்தது. அத் தீவுகளிலிருந்து அப் பண்டங்களை, தாழ்த் திக் கட்டப்பெற்றதும், காரிய நிறமுள்ளதும், பக்கவாட்டில் சக் கரங்களை உடையதும் ஆகிய நீராவிப் படகுகளில் ஏற்றி, வில்மிங்டன் (Wilmington), சார்லஸ்டன், சாவன்னு, மொபைல், கால்வ்ஸ்டன் (Galveston) ஆகிய துறைமுகங்களில் கொண்டு வந்து இறக்கினர், பெருத்த இலாபம் கிடைத்தமையால், இந்தத் துறையில் பேரளவுக்கு மூலதனம் கிடைத்தது. சரக் கேற்றி ஒரு தடவை கப்பல் வந்தால் கிடைக்கும் இலாபம் 30,000 டாலர்களாகும். சரக்கேற்றி வரும் கப்பல்கள் அடிக்கடி கைப்பற்றப்பட்டன. போர் முடியும் தறுவாயில் தென்னுடு வெற்றி பெற முடியாது என்பது தெளிவாயிற்று. என்றபோதி லும், ஒரு தடவை சரக்கேற்றி வரும் கப்பல் கவரப்பட்டமையால் ஏற்பட்ட நஷ்டத்தை முதலிரண்டு தடவை கப்பல்மூலம் பெற்ற சரக்கு ஈடுகட்டியது என்பதனால் வாணிபத்தடையிலிருந்து தப் பித்துச் செல்லுதல் ஒரு நல்ல சூதாட்டமாயிற்று. வாணிபத் தடையையும் மீறி வெற்றியுடன் சரக்குகளைக் கொண்டுவரும் கம்பெனிகளில் மாநில அரசுகள்கூட முதலீடு செய்தன. சரக் கேற்றிச் செல்லும் ஐம்பது கப்பல்களை 1863 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் தேதியிலிருந்து 1864 ஆம் ஆண்டு செப்டம்பர் முப்பதாம் தேதிக்குள்ளாகப் பிடித்துவிட்டதாக வட அட்லான் டிக் போர்க்கப்பல் தொகுதியினர் அறிவித்தனர். தென்னுட்டினர்

தரும் செய்திகளை நோக்கின், போர்க்காலத்தில் தென்னுட்டின் வர்த்தகம் உயர்ந்து விளங்கியது என்று தெரிகிறது. கான்பெடரேட் மாநிலங்களின் கருவூலச் செயலாளரின் தகவலின்படி, 1864 ஆம் ஆண்டு, மே, ஜூன் மாதங்களில் வில்மிங்டன், சார்லஸ்டன் ஆகிய துறைமுகங்களுக்குச் சரக்கேற்றி 48 கப்பல்கள் வந்து சேர்ந்தன.

தேசபக்தியைவிடச் சிலவகையான இறக்குமதிகளிலிருந்து மிகுதியான இலாபத்தையே அடையலாம் என்ற பணபக்தியே மிகுந்திருந்தது. கான்பெடரேட் அரசாங்கம் 1864 ஆம் ஆண்டு, பிப்ரவரி ஆரும்நாள் ஒரு சட்டத்தை நிறைவேற்றி, அதன்மூலம் போகப் பொருள்களாகிய திராட்சை ரச வகைகள், சாராய வகைகள், சரிகை வகைகள், கம்பள வகைகள், விளையாட்டுக் கருவிகள், தட்டுமுட்டுச் சாமான்கள், நகைகள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதைத் தடைசெய்தது. அரசாங்கம் பின்னர்ச் சில சட்டங்களை இயற்றி, அவற்றின்மூலம் துறைமுகங்களினுள் நுழையும் படகுகளிலும் வெளியேறும் படகுகளிலும் ஒரு பகுதியைப் பயன்படுத்திக்கொள்ளும் சலுகையைப் பெற்றது. வாணிபத்தடையையும் மீறிப் பண்டங்கள் எந்த அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்றும், இறக்குமதி செய்யப்பட்டன என்றும் சரியாக அளவிட்டுக் கூற முடியாது. ஐரோப்பாவிற்கு 1862, 1863, 1864 ஆம் ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட பருத்தியின் அளவு, அவ்வாண்டுகளுக்கு முந்திய ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்டதைவிடப் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவாகும். தென்னுட்டிலிருந்து மிகவும் குறைந்த அளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களை வாணிபத்தடை ரன்னர்கள் (blockade runners) மூலம் ஐரோப்பாவிற்கு அனுப்பிவைத்தனர்; அல்லது பருத்தி டெக்சாஸ் வழியாக மெட்டமோரஸ் (Matamoras), மெக்சிகோ ஆகிய பகுதிகளுக்குக் கொண்டுவந்து, பின்னர் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டது.

தென்னுட்டுப் பருத்தி வேறு மார்க்கங்களின்மூலம் வடநாட்டை அடைந்தது. வடநாட்டிற்குப் பருத்தி போகாமல் தடுப்பதே கான்பெடரேட் அரசின் முதல் நடவடிக்கையாகும். வடநாட்டிற்குப் பருத்தி செல்லாமல் தடுக்கப்படின், போர் விரைவில் முடிவுறும் என்று கான்பெடரேட் அரசாங்கம் எதிர்பார்த்தது. கடல் துறைமுகங்களைத் தவிர வேறு மார்க்கங்களின்மூலம் பருத்தியை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று கான்பெடரேட் ஆட்சி 1861, மே 21-ல் ஒரு சட்டம் இயற்றியது. தக்க சூழ்நிலை நிலவாததால், இத் திட்டம் தோல்வி கண்டது. போர் நிகழ்ந்த

காலம் முழுதும், பருத்தியில் கள்ள வாணிபம் நடைபெற்றது. பத்துதிக்கு மாருக உணவுப் பண்டங்களைப் பெற்று கான் பெடரசியின் இராணுவத்தைப் பராமரித்த வேளைகளும் உண்டு. நாடு முழுதும் பரவிய இத்தகைய கள்ள வாணிபம் வடநாடு, தென்னாடு மக்களிடையேயும் அதிகாரிகளிடையேயும் நேர்மை குன்றக் காரணமாயிற்று. போர்க்களத்தில் ஈடுபட்டிருந்த இராணுவ அதிகாரிகள் தத்தம் அரசாங்கங்களைக் கண்டித்தனர். நிலவழியாக வடநாட்டுடன் 1862 முதல் 1865[16] வரையில் நடைபெற்ற பருத்தி வர்த்தகம் சுமார் 11,08,000 பேல்கள் மதிப்புக்கொண்டதாகும். வாணிபத்தடை ரன்னர்கள் மூலம் பிரிட்டன் பெற்ற பருத்தியைவிட வடநாடு அதிகமாகவே பெற்றது. வடநாட்டைவிடத் தென்னாட்டிற்கே பருத்தி வர்த்தகம் முக்கியமாகும். போரை நீட்டிக்கொண்டே போனதற்குப் பருத்தி வர்த்தகமே காரணமாகும். பின்வரும் அட்டவணையில் கான்பெடரசியின் முக்கியத் துறைமுகமாகிய நியூ ஆர்லியன்சில் பருத்தி வர்த்தகத்தின் நிலையைப்பற்றிய விளக்கத்தைக் காணலாம்.

போர்க்காலத்தில் நியூ ஆர்லியன்சிலிருந்து பருத்தி ஏற்றுமதி
(பேல்களில்)

ஆண்டு	கிடைக்கப் பெற்றவை	மொத்த ஏற்றுமதிகள்	லிவர்ப்பூலுக்கு ஏற்றுமதி	ஹேவருக்கு ஏற்றுமதி	நியூயார்க்குக்கு ஏற்றுமதி	போஸ்டனுக்கு ஏற்றுமதி
1859—60	22,35,448	22,14,296	13,48,163	3,03,157	62,936	1,31,648
1860—61	18,49,312	10,15,852	10,74,131	3,84,938	29,539	94,307
1861—62	38,880	27,678	1,312	472	4,116	109
1862—63	22,078	23,750	2,070	1,849	17,859	1,418
1863—64	1,31,044	1,28,130	1,155	4,023	1,09,149	12,793
1864—65	2, 71,015	1,92,315	31,326	5,952	1,44,190	15,993

எம். பி. ஹேமண்டு (M. B. Hammond), 'The Cotton Industry', ப. 968.

[16] வர்த்தகச் சுதந்திரம் 1865, மே மாதம் புதுப்பிக்கப்பெற்றது.

தென்னுட்டில் பொறிவழித் தொழில்

வாணிபத்தடையையும் மீறிப் பருத்தி கடத்திச்செல்லப் பட்டது. அவ்வாறே கள்ள வாணிபத்தின்மூலமும் பருத்திக் கடத்தல் நிகழ்ந்தது. பருத்திக்கு மாற்றுகப் பொறிவழிப் பண்டங் களையும் பொன்னையும் தென்னாடு பெற்றது. இந்த நிலை இரும்பு வலையத்தின் இறுக்கத்தை ஓரளவுக்குத் தளர்த்திவிட்டது. தென்னாட்டின் ஒருதலையான நாகரிகம், கான்பெடரேட் மாநிலங் களுக்கு நன்மை பயக்கவில்லை. பொறிவழித் தொழிலகங்கள் தென்னாட்டில் மிகவும் குறைவு. இருந்த தொழில்துறைகளையும் மத்திய அரசின் படைகள் அழித்துவிட்டன. போர் துவங்கும் வரையில் இயந்திரங்களனைத்தும் இறக்குமதி செய்யப்பட்டன. தென்னாட்டின் வளங்கொழிக்கும் நிலக்கரி, இரும்புச் சுரங்கங்கள் பயன்படுத்தப்பெருமல் வீணுகக் கிடந்தன. தென்னாட்டில் 1860-ல் 70,00,000 டாலர்கள் மதிப்புள்ள பருத்தி, நூலாக நூற்கப்பெற்றது உண்மைதான். இயந்திரங்கள் தேய்வுற்ற நிலையிலும், பருத்திப் பொறிவழித் தொழிலதிபர்கள் போர்க்காலத் திலும் உற்பத்திசெய்து மிகுந்த இலாபம் திரட்டினர். எனினும், பேரளவுத்தொழில்கள் பலவற்றைக் கான்பெடரேட் அரசாங் க்மே பொறுப்பேற்று நடத்திவந்தது. விஸ்கி, உப்பு, துப்பாக்கிகள், சிறு போர்க்கருவிகள், துப்பாக்கி மருந்து, போருக்கு வேண்டிய வெடிமருந்துகள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைக் கான்பெடரேட் அரசாங்கம் ஏற்று நடத்தியது. போர் துவங்கி இரண்டு ஆண்டுகளில் மேற்குறிப் பிட்ட தொழிற்சாலைகள் செயற்படத் தொடங்கிய பின்னர், இராணுவத் தளவாடங்களில் தட்டுப்பாடு ஏற்படவில்லை. எனவே, கான்பெடரேட் படையினருக்குப் போர்க்கருவிகளைப் பொறுத்த வரையில் பிரச்சினை எழவில்லை. உடனடிப் போர்த்தேவைகளைத் தவிர்த்து, மற்றப் பொறிவழிப் பண்டங்களின் உற்பத்தி குறையத் தொடங்கின.

பொதுவாகவே கைத்தொழில் மீண்டும் புதுப்பிக்கப் பெற்றது. கைத்தறிகளும் நூல் நூற்கும் கதிர்களும் உபயோகத்திற்கு வந்தன. தோட்டப் பொருளாதார முறையிலேயே சிப்பாய்களுக்கும் படைசாராத பிரஜைகளுக்கும் வேண்டிய செருப்புகளும் உடைகளும் செய்யப்பட்டன. பழக்கமில்லாத வேலைகளில் ஈடு பட்ட தென்னாட்டுப் பெண்களின் தியாகமும் கடின உழைப்பும் மிகவும் உயர்ந்தவை. அவ்வாறே அடிமைகளும் விசுவாசத் துடன் உழைத்தனர். இப் பெண்டிரின் தியாகமும் உழைப்பும் அடிமைகளின் விசுவாசமும் சார்லஸ்டன், மொபைல், ரிச்மாண்ட்

போன்ற நகரங்களில் தலைவிரித்தாடிய ஊக வாணிபத்திற்கும் ஊதாரித்தனத்திற்கும் மாறுபட்டவைகளாகும். இல்லத் தொழில் உற்பத்தி முறைக்கு விரைந்து திரும்பிச் செல்லுதல் நாகரிகத்தின் கைகளைப் பின்நோக்கி முறுக்கிவிடுதல் போன்றதாகும். தொழிற் புரட்சியின் விளைவுகளைப் பயனற்றதாக்குதல் போன்றதாகும். உபரி மூலதனம் கிடைக்காமையால், போருக்குத் தேவையான வற்றைப் பொறிவழி உற்பத்தி செய்தல் மிகவும் பாதிக்கப்பெற்றது. இதற்கு முன்னர், மிகுந்திருந்த செல்வத்தை நிலத்திலும் அடிமைகளை வாங்குவதிலும் முடக்கிவந்தனர். போர் நடைபெற்ற ஆண்டுகளில் கையிலிருந்த ரொக்க முதலைக் கொண்டு, வாணிகத் தடையை மீறிச் சரக்குகளைக் கப்பலில் ஏற்றிவரும் தொழிலை நடத்தினர். வாணிபத்தடையை மீறுவதில் பெருத்த இலாபம் கிடைத்தது. 'வாணிபத்தடை மீறலில் ஐம்பது அல்லது அறுபது மில்லியன் டாலர்கள் முடக்கப்பெற்றுள்ளன' என்றும், 'பொறிவழித் தொழிலில் ஒரு டாலர்கூடப் புதிதாகச் செலவழிக்கவில்லை' என்றும் 1864 ஆம் ஆண்டு, ஆக்ஸ்டு மாதம் பொறிவழித் தொழிலதிபர் மாநாட்டின் தலைவர் புகார்செய்துள்ளார்.[17] உண்மையில், வடநாட்டைப்போலவே தென்னாட்டிலும் ஊக வாணிபம் பரவியிருந்தது. அது தென்னாட்டின் இலட்சியத்திற்கே தீங்காக அமைந்தது. எல்லா வர்க்கங்களையும் சார்ந்த மக்கள் ஊக வாணிப உணர்ச்சியினால் உந்தப்பட்டுப் போரை நடத்துவதில் கவனம் செலுத்தாது, பணம் திரட்டுவதில் முனைந்தனர்' என்று 1863-ல் குடியரசுத் தலைவர் டேவிஸ் குறிப்பிட்டுள்ளார்.[18]

விவசாய உற்பத்தியும் வாழ்க்கைச் செலவும்

தோட்ட முதலாளிகள் பருத்திக்குப் பதிலாக உணவுப் பண்டங்களையும் இறைச்சியையும் உற்பத்திசெய்ய விரும்பவில்லை. ஆனால், போர் முற்முரம் அடையவே, உணவுப் பயிர் வகைகளையும் இறைச்சியையும் உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமாயிற்று. போரின் விளைவாகத் தற்காலிகமாக விவசாயப்புரட்சி ஏற்பட்டது. பருத்தி உற்பத்தி 1861 ஆம் ஆண்டைவிட 1862-ல் கால் பங்குதான் மிகுதியாயிற்று; 1864-ல் எட்டில் ஒரு பகுதியே கூடுதலாயிற்று. ஆனால், ஒவ்வோர் ஆண்டிலும் உணவிற்குரிய பயிர்வகைகளின் விளைச்சல் பெருகியவண்ண

[17] Quoted by J. F. Rhodes, 'History of the United States', V, 396, from the Augusta Chronicle, May 26, 1864.

[18] Ibid, V, 424, from Official Records, Vol. XXX, Part I, p. 212.

மிருந்தது. எனினும், ரொட்டித் துண்டு, இறைச்சி ஆகியவற்றின் விலை படிப்படியாக ஏறியது. அப் பண்டங்களின் விலை பொன்னுல் அளக்கப்பெற்றது. தென்னுட்டின் பல்வேறு பகுதிகளில், பல் வேறு காலங்களில் 'உணவுப் பண்டம்' கிடைக்கவில்லை. உணவுப் பண்டங்களில் ஏற்பட்ட தட்டுப்பாடு 1864-ல் கடுமை யாக இருந்தது. நகரங்களில் நிலவிய நிலைமை பேதனையைத் தந்தது. 'பணமுடையோருக்கு மட்டும் பால் கிடைத்தது' என்று 1864, பிப்ரவரி 23-ல் ரிச்மாண்டில் ஒருவர் குறிப் பிட்டுள்ளார். 'செழிப்பான ஆண்டினை எதிர்நோக்கியுள்ளோம்; கிடைத்தவற்றை வீணுக்காமல் தின்றுவிட்டமையால், குப்பையோ, கழிவுப் பொருளோ சேர்வதில்லை' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[19] 1864 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் ஒரு டாலர் பொன் நாணயத்தின் மதிப்பு, கான்பெடரேட் பணத்தில் 22 டாலர்களுக்குச் சமமாகும். ஒரு பீப்பாய் மாவு கான்பெடரேட் பணத்தில் ரிச்மாண்டில் 300 டாலர்களுக்கு விற்கப்படும். ஒரு ஜோடி செருப்புகளின் விலை 150 டாலர் களாகும். அட்லாண்டா, மொபைல் போன்ற பல இடங்களில் ரொட்டித் துண்டுக்காகக் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

இல்லாமையால் உணவுப் பண்டங்களில் கிடைப்பருமை ஏற்படவில்லை. சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படாமை யாலேயே உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஏனெனில், போர்க்காலத்தில் விளைச்சல் எந்த வகையிலும் பாதிக்கப் படவில்லை. பிரிந்துபோகும் மாநிலங்களில் 6,000 மைல்கள் நீளமுள்ள இருப்புப்பாதைகள் இருந்தன. அந்த வேளையில் உணவைப் பகிர்ந்தளிப்பதற்குப் போதுமான அளவுக்கு இருப்புப்பாதைகள் இருந்தன. போர்த் தேவைகளின் காரண மாக இரயில்வேக்களின் உருள்கலங்களும் (rolling stock) தண்டவாளங்களும் உருமாறித் தேய்ந்து வீணுயின. அவற்றை நீக்கி வேறு தண்டவாளங்களையும் உருள்கலங்களையும் அமைப் பது இயலாது. அரசாங்கம் இரும்புத் தொழிற்சாலைகளை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தியது. இராணுவ வேலைகளுக்கு உருள்கலங்களைப் பயன்படுத்தின. முக்கிய இருப்புப்பாதை களைத் தவிர்த்து மற்றப் பாதைகளைக் கட்டாயத்தின்பேரில் அரசாங்கம் நீக்கியது. அதன் விளைவாக, கோதுமையின் விலை ஜார்ஜியாவில் இருந்ததைவிடப் பதினைந்து மடங்கு அதிகமாக வர்ஜீனியாவில் இருந்தது. தென்னுட்டின் இரயில்வேக்களின் பெரும் பகுதியை யூனியன் படையினர் கைப்பற்றியமையால்

19 ஜே. பி. ஜோன்ஸ் (J. B. Jones), A Rebel War Clerk's Diary at the Confederate Capital, II, 186.

உணவுப் பண்டங்களின் அளிப்பு மேலும் குறைந்தது. ஜார்ஜியாவில் அறுபது மைல் தொலைவிற்கு ஷெர்மன் (Sherman) அழித்து விட்டமையாலும், ஷெனன்டோவா பள்ளத்தாக்கில் (Shenandoah Valley) ஷெரிடான் (Sheridan) பாழ்நிலையை உண்டாக்கி விட்டமையாலும் தென்னாட்டில் துயரம் பெருகியது; உணவுப் பண்டங்களில் கிடைப்பருமையும் ஏற்பட்டது.

கான்பெடரசிக்கு வேண்டிய நிதி

போர் துவங்கிய வேளையில் தென் மாநில அரசுகள் வட நாட்டிற்கும் ஐரோப்பாவிற்கும் கடன்பட்டிருந்தன. ஆக, வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்குவது என்பது தென்னாட்டிற்கு இயலாத செயலாகும். மூலதனம் மிகுதியாக இல்லை; ஏதேனி கொஞ்சம் உலோக நாணயங்களிருந்தன. ஆனால், அரசாங்கம் அவற்றைக் கைப்பற்றுவது கடினமாயிற்று. போர் துவங்கிய உடனேயே நாணயச் செலுத்துகைகள் தடை செய்யப் பெற்றன. வரிவிதிப்பதோடு அமையாது, கான்பெடரேட் அரசாங்கம் 1863 வரையில் பத்திரங்களை வழங்கியும், கருவூல நோட்டுகளின்மூலம் ஆணைச் செலாவணிகள் (fiat money) வழங்கியும் தன்னை நிலைப்படுத்திக்கொண்டது. ஒரு பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள ஆணைச் செலாவணிகள் கருவூல நோட்டுகளின் மூலம் புழக்கத்திற்கு வந்தன. கிளர்ச்சி அரசாங்கத்தின் ஆதரவில் வெளிவந்த ஆணைச் செலாவணிகள் 1864, பிப்ரவரி 17 வரையில் மதிப்புக் குறைந்துகொண்டே வந்தன. அந்த ஆண்டில் கான்பெடரேட் காங்கிரஸ் ஒரு சட்டமியற்றியது. அச் சட்டத்தின் படி, கருவூல நோட்டுகளை நான்கு சதவீதம் வட்டியுள்ள பத்திரங்களாகக் கட்டாயமாக நிதிப்படுத்திக் கொள்ளவேண்டும்; அல்லது, நூறு டாலர் மதிப்பிற்குக் குறைவாயுள்ள நோட்டுகள் அனைத்தையும் மூன்று டாலர் மதிப்புள்ள பழைய நோட்டுகளுக்கு இரண்டு டாலர் மதிப்புள்ள புதிய நோட்டுகள் என்ற வீதத்தில் மாற்றிக்கொள்ள வேண்டும்.[20] இந்நிலை நாணயத்

[20] ஒரு நண்பர் குறிப்பிடுவதாக, 'A Rebel's Recollections' (ப. 84)-ல் ஜி. சி. எகிள்ஸ்டன் (G. C. Eggleston) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: 'போருக்கு முன்னர் என்னுடைய பையில் பணத்துடன் சந்தைக்குச் சென்று கூடை நிறைய வேண்டிய பண்டங்களை வாங்கி வந்தேன். இப்பொழுது கூடையில் பணத்தை எடுத்துச் சென்று, வீட்டிற்கு வேண்டிய பண்டங்களை என்னுடைய பையில் வாங்கி வருகிறேன்.' ஒரு பில்லியன் டாலர்களுக்குமேல் கருவூல நோட்டுகள் 1864-ன் முடிவில் புழக்கத்தில் இருந்தன. ரோட்ஸ் (Rhodes) [op. cit., V, ப. 844] குறிப்பிட்டுள்ளது போல், 'கருவூல நோட்டுகள் அத்துமீறி வெளியிடப்பெற்றமையால் அவற்றின் சரியான கணக்கு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட

தையே கைவிடுதலுக்கு ஒப்பாகும். போரின் இறுதி மாதங்களில் மக்கள் பூர்வீக முறையாகிய பண்டமாற்று முறையைப் பின்பற்றத் தலைப்பட்டனர். மாநில அரசும், நகராட்சியினரும், மாநகராட்சியினரும் காகிதத்தையே நாணயமாக வெளியிடத் தொடங்கவே நிலைமை இன்னும் சீரழிந்தது.

எர்லாங்கர் அண்ட் கம்பெனி (Erlanger & Company) எனும் ஃபிரெஞ்சு நிறுவனம் 1868-ல் ஐரோப்பாவில் 1,50,00,000 டாலர்கள் கடன் எழுப்பியது. தான் வாங்கிய பருத்தியைக் கொடுத்து கான்பெடரேட் அரசாங்கம் அக் கடனைப் பெற்றது. அதனைக்கொண்டு ஐரோப்பாவில் கப்பற்படைக்கும் இராணுவத் திற்கும் வேண்டிய தளவாடங்களைக் கான்பெடரேட் அரசு விலைக்கு வாங்கியது. பத்திரங்களின் மதிப்பு வியப்பூட்டும் அளவுக்கு உயர்ந்திருந்தபோதிலும், தென்னுட்டிற்குக் கிடைத்த பலன் குறைவே. கப்பல்கள் வாங்குவதற்கென 50,00,000 டாலர்கள் செலவழிந்தன; ஆனால், கப்பல்கள் தென்னுட்டிற்குக் கிடைக்கவே இல்லை. பத்திரங்களின் சந்தை மதிப்பு உயர்ந்திருக்க வேண்டும் என்பதற்காக 60,00,000 டாலர்கள் பயன்படுத்தப் பெற்றன. பத்திரங்களின் மீட்சிக்காக ஒரு மில்லியன் டாலர்களை, மூன்று ஆண்டுகளில், ஆண்டொன்றுக்கு இரு முறை வீதம் ஆறு தவணைகளில் செலவழித்தனர். இத்தகைய பணவிரயங்களைக் கண்ணுற்ற பேராசிரியர் இஷ்வாப் பின்வருமாறு கூறுகிறார்: 'அரசாங்கம் உள்நாட்டில் பெருங் கடனாளியாக மாறி யது. வெளிநாட்டுக் கடனைப் பெறுவதற்கெனப் பருத்தியை விலைபேசி வாங்கி நாணயத்தின் மதிப்பைக் குறைத்து அழித்துவிட்டது. வெளிநாட்டுக் கடன்மூலம் கிடைத்த பலனும் மிகவும் குறைவே'.[21] ஐரோப்பாவிலிருந்து திரும்பிய கான்பெடரேட் ஏஜென்டுகள், வருவாய் (revenue) என்ற அளவில் வெளிநாட்டுக் கடன் திருப்திகரமாக இல்லை எனினும், அது அரசியல் வெற்றியையே வழங்கியுள்ளது' என்று ரிச் மாண்டு அரசாங்கத்திற்குத் தெரிவித்தனர். 'பெடரல் பத்திரங்கள் வைத்திருப்பவர்களைவிடப் பருத்திப் பத்திரங்கள் வைத்திருப்

விலை; கருவூலத் துறையினருக்கே அவற்றின் அளவைப்பற்றியும் புழக்கத் தைப்பற்றியும் தெரிந்திருக்காது எனலாம்.' இஷ்வாப் (Schwab) தந்துள்ள அட்டவணையின்படி (ப. 167), ஒரு பொன் டாலருக்கு 61 கான்பெடரேட் காகித டாலர்கள் சமமாகும். ஆனால், முதல் உலக யுத்தம் முடிந்தவுடன் மத்திய ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் நிலவிய விலையேற்றத்தைப் போல் மேற்குறிப்பிட்டவை கடினமானவை அல்ல. காண்க. ஜே. சி. இஷ்வாப், 'The Confederate Foreign Loan: An Episode in the Financial History of the Civil War,' Yale Review, I (1893).

21 Ibid. ப. 185.

பவர்கள் நல்ல நிலையில் உள்ளனர் என்று 'லண்டன் டைம்ஸ்' எனும் இதழ் கருத்துத் தெரிவித்துள்ளது' எனப் பேராசிரியர் இஷ்வாப் குறிப்பிடுகிறார்.[22]

திருத்த முடியாத அளவுக்கு நிதித்துவ அமைப்பு சீரழிந்து விட்டது என்பதையுணர்ந்த கான்பெடரேட் காங்கிரஸ் 1863-ல் ஒரு சட்டமியற்றி, விவசாயப் பண்டங்களின் பத்தில் ஒரு பகுதியை வரியாக வசூலித்தது; மேலும், சில விதிகளுக்குட் பட்ட சொத்தினைக் கைப்பற்றுமாறு இராணுவ அதிகாரிகளுக்குத் தாக்கீது பிறப்பித்தது. உலோக நாணயம் கையகம் இல்லாமையாலும், வெளிநாட்டில் நாணயம் கிடைக்காமையாலும், வெளி நாட்டு வர்த்தகம் சீரழிந்தமையாலும், காகிதப்பணம் மதிப்பிழந் தமையாலும் தென்னாடு விவசாயப் பண்டங்கள்மீது வரிவிதிக்கும் கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டது. மக்கள் தாங்களே விரும்பி அளித்த விவசாயப் பண்டங்களைக் கொண்டும், அரசாங்கமே வன்முறையில் கைப்பற்றிய பண்டங்களைக் கொண்டும் தென்னாடு போரின் கடைசி இரண்டாண்டுகளில் தன்னுடைய பொருளாதார பலத்தைப் பெருக்கிக்கொண்டு போரிட்டது.

உள்நாட்டுப் போரின் பொருளாதார விளைவுகள்

வடநாட்டில் ஏற்பட்ட விளைவுக்கு நேர்மாறான விளைவு, உள்நாட்டுப் போரினால் தென்னாட்டில் ஏற்பட்டது. போரின் விளைவால் தென்னாட்டில் நிதித்துவச் செழிப்போ வியாபாரப் பெருக்கமோ ஏற்படவில்லை. புதிய வளர்ச்சியின் சகாப்தமும் ஏற்படவில்லை, ஆனால், பழைய பொருளாதார வாழ்க்கை சின்னா பின்னமுற்றது. ஆணைச் செலாவணியின் புழக்கத்தினால் ஊக வணிகர் நன்மையடைந்தனர் என்பது உண்மையே. வாணிபத் தடையை மீறிக் கப்பல் சரக்கேற்றி வந்தோர் தக்கபலன் அடைந் தனர் என்பதும் உண்மையே, நகரவாசிகளும் வியாபாரிகளும் இலாபம் ஈட்டினர் என்பதும் உண்மையே; பொன் வைத்திருந் தோர், உயர்ந்த தரமுள்ள பண்டங்களை வேண்டுமளவுக்குப் பெற் றனர். போரின் துவக்க ஆண்டுகளில் மேற்குறிப்பிட்டோர் நல்ல வசதிகளையும் பலன்களையும் பெற்றனர் என்பது உண்மையே. சரா சரித் தென்னாட்டுப் பிரஜையைப் பொறுத்தவரையில், போரின் முடிவு மோசமாக இருப்பின், வேதனையும் விரக்தியும் ஏற்படுவ துடன் போர் என்பதே போகவாழ்வையும் அடிப்படைத் தேவைகள்

22 Ibid, p. 189. தன்னுடைய நன்னம்பிக்கைக்கு உரிய காரணங்களை அவர் விளக்குகிறார். பத்திரங்களை மீட்சி செய்வதற்குப் பருத்தி இடைக்கும் என்றும், கடன் மறுக்கப்படமாட்டாது என்றும் முதலீடு செய்தோர் கருதினர்.

பலவற்றையும் தியாகம் செய்வதன் அறிகுறியாகும். தென்னுட்டுப் பொருளாதார அமைப்பைப் பொறுத்தவரையில், போர் அழிவையும் குழப்பத்தையும் குறிப்பதுடன், முதலிலிருந்தே புதிதாகத் துவங்க வேண்டிய நிலையையும் குறிப்பதாகும். போரைப்பற்றிய சுருக்க விளக்கம் தரும்பொழுது, உட்ரோ வில்சன் (Woodrow Wilson) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

'இப் போரில் வடநாடு தன்னுடைய ஆற்றலையும் வியத்தகு உணர்ச்சி வேகத்தையும் தக்க முறையில் வெளிப்படுத்தியுள்ளது. தேசிய வலிமையையும் ஒருமைப்பாட்டையும் கவர்ச்சியான முறையில் வெளிப்படுத்தியுள்ளது. மாபெரும் ஜனநாயக அரசியல் அமைப்பு முழுவதும் விரைந்து இயங்கும் உயிர் சக்தியைப் பெற்றுள்ளது என்பதற்கு ஆதாரமாக வடநாடு திகழ்ந்தது என்ற உண்மையும் வெள்ளிடை மலையாயிற்று..... மாபெரு வேலைகளுக்குத் தேவையான பொருள்கள் குன்றவில்லை; அவற்றைப் பற்றி ஐயமே எழவில்லை; செலவழிக்கச் செலவழிக்க அப் பொருள்கள் வடநாட்டில் பெருகின; ஆனால், நம்பிக்கை குறைந்தபோதிலும், வளங்கள் பொன்றியபோதிலும், தென்னாடு முழுஉணர்ச்சி வேகத்துடனும் பற்றுறுதியுடனும் போரிட்டது. தன்னுடைய முழு வலிமையையும் பிரயோகித்துத் தன்னுடைய வளங்களைச் செலவழித்து, வீணாக்கி, அழித்துத் தென்னாடு போரிட்டது. மூன்றாண்டுகளுக்குமேலாகத் தன்னுடைய ஆற்றல்களையெல்லாம் ஒன்றுதிரட்டி ஒருமுகமாகப் போரிட்டமையால் தென்னாடு வடநாட்டிற்கு நிகராகக் களத்தில் நின்றது. ஆனால், இவ்வளவும் கவைக்குதவாத பொருளாதாரத்தையும், காலந் தாழ்த்தி ஏற்றமடைந்த அரசாங்கக் கோட்பாட்டையும், நிறைவேற்றி அடைய முடியாத கொள்கையையும் பேணுவதற்கே பயன்பட்டன.'[23]

ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார வரலாற்றில் உள்நாட்டுப் போருக்கு உயர்ந்த முக்கியத்துவம் உண்டு. தென்னாட்டில் அப் போரினால் நீக்ரோ அடிமை முறை மடிந்தொழிந்தது; மேலும் பேரளவுக்குத் தோட்டப் பொருளாதாரமும் அழிந்தது. வடநாட்டில் போரின் காரணமாகத் தொழிற்புரட்சி விரைவில் நிகழ்ந்தது. தொழிற் செழிப்பின் காரணமாக முதலாளித்துவமும் வளர்ச்சியுற்றது. தென்னாட்டின் இராஜ்ஜிய உரிமைகளைக் கோரிய விவசாயப் பிரதிநிதிகளின் பிரிவினைத் திட்டம், காப்புச் சுங்கவரிச் சட்டத்திற்கு வழிவகுத்தது. மேலும், குடும்ப மனையகச் சட்டத்தின்மூலம் மேற்குப் பிரதேசம் வளரவும், பெரிய இருப்புப்

[23] உட்ரோ வில்சன், 'Division and Reunion' (rev. ed., 1898), ப. 239.

பாதைகள் அமைப்பதற்கு வேண்டிய உதவித் தொகைகளைப் பெறவும் பிரிவினைக் கொள்கை வழிவகுத்தது. போர்த்தேவைகள் விலையேற்றத்தையும் புதுப்புது வகைகளைக் கொண்ட காகிதப் பணத்தையும் உண்டாக்கித் தந்தன. தேசிய பாங்குச் சட்டத்தின் மூலம் பெடரல் அரசாங்கம் நாட்டின் பாங்கு நடவடிக்கைகளைப் பெருக்கின. கண்டத்தின் குறுக்கே இருப்புப்பாதைகள் அமைக்கும் முயற்சியிலும் மத்திய அரசு தீவிரமாக இறங்கியது. இவையனைத்தும் நாட்டின் பிற்கால வரலாற்றில் முக்கிய இடம் வகிக்க இருந்தன. இந்த விளைவுகளுக்கெல்லாம் மேலாகத் தென்னாட்டின் அடிமை முதலாளிகளின் ஆதிக்கத்தில் இருந்த மத்திய ஆட்சி, வட நாட்டின் தொழில் முதலாளிகளின் கைகளுக்கு மாறியது.[24]

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

ஜே சி. இஷ்வாப், 'The Confederate States of America' அதிகாரங்கள். 9-12.

டி. ஆர். டிவே (D. R. Deway), 'Financial History of the United States,' அதி. 12, 13.

ஈ. டி. ஃபைட் (E. D. Fite), 'Social and Industrial Conditions in the North During the Civil War'.

ஜே. எப். ரோட்ஸ் (J. F. Rhodes), 'History of the United States', Vol. V. அதி. 27, 28.

ராண்டல், ஜேம்ஸ் ஜி. (Randall, James G.), 'The Civil War and Reconstrurction', அதி, 27, 28.

எ. சி. கோல் (A. C. Cole), 'The Irrepressible Conflict', அதி. 14, 15.

எப். எல். ஆஸ்லி (F. L. Owsley), 'King Cotton Diplomacy' அதி. 5, 19.

ஜே. பி. ஜோன்ஸ் (J. B. Jones), 'A Rebel War Clerk's Diary', அதி. 29, 30.

எப். ஃபுளுகல், ஹெச். யூ. ஃபாக்னர் (F. Flugel and H. U. Faulkner), 'Readings in the Economic and Social History of the United States,' ப. 447—483.

[24] பின்வரும் அதிகாரங்களில் இந்த விளைவுகளைப்பற்றி விரிவாக விளக்குவோம்.

18. இறுதி எல்லைப்பிரதேசம்

மிசிசிப்பிக்குக் குறுக்கே முன்னேற்றம்

1860ஆம் ஆண்டின் சென்சஸ்படி ஐக்கிய அமெரிக்காவின் மக்கள்தொகை ஏறத்தாழ 3,14,43,000 பேர்களாகும். அதே ஆண்டில் மிசிசிப்பியின் மேற்குக் கரையிலுள்ள பிரதேசம் இராஜ்ஜிய அந்தஸ்தைப் பெற்றது; மின்னசோட்டா (1858), அயோவா (1846), மிசௌரி (1821), அர்கான்சாஸ் (1836), லூசியானா (1812). வரிசையாக அமைந்துள்ள அம் மாநிலங்களுக்கு மேற்கே, போதுமான அளவுக்கு ஜனத்தொகையுடைய மூன்று பிரதேசங்கள் இராஜ்ஜிய அந்தஸ்தைப் பெறலாம்; அவை முறையே 1860-ல் 6,02,000 பேர்களைக் கொண்ட டெக்சாஸ் எனும் பிரதேசமும், 52,000 பேர்களைக் கொண்ட ஓரிகன் எனும் பிரதேசமும், 3,80,000 பேர்களைக் கொண்ட கலிஃபோர்னியா எனும் பிரதேசமும் ஆகும். 1860-1869-ல் இரண்டு எல்லைப் பிரதேசங்கள் உருவாயின; அவை பசிபிக் கடற்கரை வழியாகக் கீழ்த்திசை நோக்கிச் செல்லும் எல்லைப் பிரதேசமும், 97ஆவது தீர்க்கரேகையில் ஏறியும் இறங்கியும் மேல்திசையில் செல்லும் எல்லைப்புறப் பிரதேசமும் ஆகும். பிந்திய குடியேற்றப் பகுதி, தென் திசையில் மத்திய மின்னசோட்டா, அயோவா வழியாகவும், கிழக்குப்புற கான்சாஸ் வழியாகவும், அர்கான்சாசின் மேற்குப்புற எல்லை வழியாகவும் சென்று, கிழக்கு டெக்சாசின் பெரும் பகுதியை அரவணைத்துக்கொண்டு, மேற்குத் திசையில் புடைத்துக்கொண்டு நின்றது. (தேசப்படங்கள் காண்க: அதிகாரம் 10-ல் 'எல்லைப்புறக் கோட்டின் முன்னேற்றம்' என்ற தலைப்பிலும், 'ஜனத்தொகையின் பகிர்வு—1860' என்ற தலைப்பிலும் உள்ள தேசப் படங்களைக் காண்க.) இந்த எல்லைக்கும், மேற்குக் கடற்கரையிலுள்ள குடியேற்றப் பகுதிக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பகுதி இருந்தது. ஆனால், 1860-ல் இப் பிரதேசத்தில் ஜனத்

தொகையில் ஒரு சதவீதமே வசித்து வந்தனர். இடையிலுள்ள இப் பிரதேசமே அமெரிக்காவின் 'இறுதி எல்லைப் பிரதேச' மாகும்.

தற்பொழுதுள்ள ஐக்கிய அமெரிக்காவின் எல்லைக்குள் முதன் முதலில் நிரந்தர வெள்ளைக்காரக் குடியேற்றத்தை ஏற்படுத்து வதற்கும், எல்லைப்புறக் கோட்டினை 97 ஆவது தீர்க்க ரேகைக்கு மேற்கே விரிவுபடுத்துவதற்கும் இடையில் இரண்டு நூற்றாண்டு களுக்குமேல் கழிந்துவிட்டன. நாட்டின் மற்றப் பகுதிகளில் 1870 முதல் 1890 முடிய உள்ள ஆண்டுகளில் குடியேற்றம் ஏற்பட்டது. சுரங்கத்தில் வேலை செய்வோரும், கால்நடைகளின் பண்ணைகள் வைத்து பராமரிப்போரும், விவசாயிகளுமே நாட்டில் குடியேறி வசித்து வந்தனர். அவர்கள் தாதுப்பொருள்களின் வளமான வண்டல்களின் கண்டுபிடிப்பையும், பரவிக்கிடந்த புல்வெளியையும், செழிப்புள்ள விவசாய பூமிகளையும் பயன் படுத்தும் கருத்தில் வந்து குடியேறினர். நன்மை பயக்கும் நிலச் சட்டங்களின்மூலமும், விரைந்து வளரும் குடியேற்றத்தின் மூலமும், குறிப்பாகக் கண்டத்தின் தறுக்கே இருப்புப்பாதைகள் போடப்படுவதாலும், முட்கம்பி கண்டுபிடிக்கப்பெற்றமையாலும், காற்றடி இயந்திரங்களின் (windmills) உற்பத்தியினாலும் மேற் குறிப்பிட்ட முன்னேற்றம் துரிதப்படுத்தப்பட்டது.

சுரங்கத்தொழிலாளரின் எல்லைப்புறம்

அமெரிக்கக் கண்டத்தின் ஆரம்பக் குடியேற்றத்திற்குக் கனிப் பொருள்களே காரணமாயிருந்தன. இறுதி எல்லைப்பிரதேசக் குடியேற்றத்திற்கும் கனிப்பொருள்களே காரணமாக அமைந்தன. கலிஃபோர்னியாவில் முதல் நிரந்தர வெள்ளைக்காரக் குடியேற்றத் திற்குச் சமயப்பரப்புக் குழுவினரின் நடவடிக்கையும் கால்நடைப் பண்ணையும் காரணமாய் அமைந்தன. ஆனால், கைவிரல்களால் எண்ணக்கூடிய மெக்சிகன்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அப் பிரதேசத்தில் 1849-ல் பொன்தேடிகள் வெள்ளம்போல் வந்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். அவர்கள் அப் பிர தேசத்தில் அமெரிக்க மாநில இராஜ்ஜியம் ஒன்றினையும் 1850-ல் ஏற்படுத்தினர். 'நாற்பத்தொன்பதின்மரில்' ஒரு சிறு சதவீதத் தினரே பொன் உலோகத்திலிருந்து உண்மையாகவே செல்வம் சேர்த்தனர். ஆனால், பெரும்பாலானோர் வர்த்தகம், விவசாயம், மரத்தொழில் முதலியன தரும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி வந்தனர். கலிஃபோர்னியாவில் ஆயிரக்கணக்கான வெள்ளைக் காரர்கள் குடியேறியமையாலும், ஓரிகனில் விவசாயிகள் பரவ லாகச் சிதறிக் கிடந்தமையாலும், அவ்வாறே கண்ணி வைப்

போரும் ஓரிகனில் பரவிக்கிடந்தமையாலும் பசிபிக் கடற்கரையில் அமெரிக்காவின் ஆதிக்கம் சச்சரவுக்கு இடமளிக்காமல் இருந்தது.

சால்ட் லேக் (Salt Lake) பள்ளத்தாக்கைச் சுற்றி மோர்மன்களும் (Mormons), மெக்சிகோவிலிருந்து வடபுறமாக முன்னேறி வரும் ஸ்பானிஷ் கால்நடைப் பண்ணைக்காரர்களும் சயராஸ் (Siarras) பகுதிக்குக் கிழக்கே உண்மையான குடியேற்றத்திற்கு வேண்டி சில துவக்க வேலைகளைச் செய்துவிட்டனர். கலிஃபோர்னியாவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ராக்கிகளின் பல்வேறு பகுதிகளில் வளப்பம் மிகுந்த கோஷ்டியினர் பலர் இந்த வேலையில் ஈடுபட்டனர். பைக்ஸ் பீக் (Pikes Peak) பகுதியில் தங்கம் கிடைக்கிறது என்ற வதந்தி பரவியது. வதந்தி உண்மையென 1859-ல் நிரூபிக்கப்படவே, அதே ஆண்டில் பெரும்பாலோர் அப் பகுதியை நோக்கி விரைந்தனர், ஆக, கொலராடோ மாநிலமும் பின்னர் உருவாகியது. மேற்கத்திய சுரங்கத் தொழிலாளர்கள் அப் பகுதிக்கு விரைந்து ஏகினர். அவர்களைத் தொடர்ந்து கிழக்குப் பிரதேசத்திலிருந்தும் பலர் வந்து சேர்ந்தனர். கிழக்கிலிருந்து வந்தவர்கள் 1857-ல் உண்டான பொருளாதாரப் பீதியைத் தொடந்து ஏற்பட்ட பொருளாதார மந்தத்தினுல் பாதிக்கப்பட்டவர்களாவர். 'பைக்ஸ் பீக்கை அடைய வேண்டும் அல்லது அழிக்கவேண்டும்' என்பதே 'ஐம்பத்தொன்பதின்மரின்' முழக்கமாயிற்று. முதல் ஆண்டிலேயே 1,00,000 பேர்கள் கொலராடோவைச் சென்றடைந்தனர். அவர்களில் பாதிப்பேர்கள் திரும்பி வந்து விட்டனர். ஆயினும், பைக்ஸ் பீக்கில் தங்கியவர்கள் ஒரு புதிய இராஜ்ஜியம் அமைவதற்குரிய அஸ்திவாரம் போட்டனர். அப் புதிய இராஜ்ஜியம் 1876-ல் ஏற்றுக்கொள்ளப் பெற்றது. கொலராடோவில் கிடைத்த பொன்வண்டல்கள் பாறைப்படிகத்துடன் கலந்து, தாதுப்படுகையாகக் கிடந்தமையால், பொன்னைப் பிரித்தெடுப்பதற்குப் பெரிய இயந்திரங்களும் மூலதனமும் தேவைப்பட்டன. எனவே, பொன்தேடிகளுக்கு அந்த நிலை ஒரு கெட்ட வாய்ப்பாயிற்று. ஆக, பொன்னைப் பிரித்தெடுக்கும் வேலையில் விரைவில்லாமற் போய்விட்டது. இப் பொழுது கனிப்பொருள்களைவிட விவசாயமே முக்கியத்துவம் நிரம்பியதாக இருந்தபோதிலும், பல ஆண்டுகளுக்கு அந்த மாநிலத்தின் வளர்ச்சி கனிப்பொருள்களையே பொறுத்திருந்தது. லெட்வில் (Leadville) சுரங்கங்கள் 30,00,00,000 டாலர்களுக்குமேல் மதிப்புள்ள வெள்ளியையும், கிரிப்பிள்

கிரீக்கில் (Cripple Creek) உள்ள சுரங்கங்கள் வெள்ளியின் அளவுக்கு மேல் பொன்னையும் வாரி வழங்கி வந்தன.

கொலராடோவின் குடியேற்றத்தைத் தொடர்ந்து பொருளாதாரச் செழிப்பு அடுத்தடுத்து ஏற்பட்டது. எனவே, தனித்துள்ள பல்வேறு சிறு ஓடைகள் மீதும், ராக்கிகள் மீதுள்ள குன்றுகள் மீதும் சுரங்கக் கூடாரங்கள் அமைந்தன. கலிஃபோர்னியா எல்லைக் கோட்டிற்கு அருகிலும், சால்ட் லேக் நகரிலிருந்து சான் ஃபிரான்சிஸ்கோவரையில் செல்லும் பழைய நிலப் பாதைக்கு அருகிலும் உள்ள யுட்டா பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் பொன்வண்டல்கள் கிடைத்தமையால், 1858-ல் கார்சன் நகரம் (Carson City) எழுந்தது. அடுத்த ஆண்டில் மவுன்ட் டேவிட்சனின் (Mount Davidson) கிழக்குச் சரிவில் புகழ்வாய்ந்த காம்ஸ்டாக் தாதுப்படுகை (Comstock Lode) கண்டுபிடிக்கப் பெற்றது. இத் தாதுப்படுகை லேக் டாகோவிற்கு (Lake Tahoe) வெகு தொலைவில் இல்லை. இத் தாதுப்படுகையில் பலர் குடியேறினர். இப் பகுதியை அவர்கள் நிவேதா பிரதேசமாக (முன்னர் யுட்டா பிரதேசத்தின் ஒரு பகுதியாக இருந்தது) 1861-ல் மாற்றினர். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், அதனை ஒரு மாநில இராஜ்ஜியமாகவும் மாற்றினர். கலிஃபோர்னியாவிற்குச் செல்லும் பிரதான பாதையிலேயே இருந்த வெள்ளி வண்டல்களை எளிதாக அடைய முடியும். மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் கார்சன் பள்ளத்தாக்கை எளிதில் அடையமுடியும். காம்ஸ்டாக் தாதுப்படுகை 1860 முதல் 1890 முடிய உள்ள ஆண்டுகளில், 84,00,00,000 டாலர்கள் மதிப்புள்ள வெள்ளியை வழங்கியது. அவ்வாண்டுகளில் அப் படுகை அப் பிரதேசத்தின் முதுகெலும்பாக விளங்கியது. உற்பத்தி 1890-க்குப் பின்னர் குன்றத் தொடங்கியது. எனினும், டொனோபா (Tonopah), கோல்டு ஃபீல்டு (gold field) போன்ற பகுதிகளில் 1906 ஆம் ஆண்டிலும், அதனைத் தொடர்ந்த ஆண்டுகளிலும் பொன், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அப் பகுதிகளில் சுரங்கத்தொழில் பெருகி, ஜனத்தொகையும் வளர வாய்ப்பு ஏற்பட்டது. செம்பு 1908 வரையில் பேரளவில் தோண்டி எடுக்கப்படவில்லை. ஆனால், இன்று அந்த மாநிலத்தில் செம்பு உலோகத்தின் ஆண்டு உற்பத்தி மற்றத் தாதுப்பொருள்களின் உற்பத்தியைவிட ஏறத்தாழ இரண்டு மடங்காகும்.[1]

1 நல் வாய்ப்பாக 1861-ல் சாமுவேல் எல். கிளமன்ஸ் எனும் மார்க் டுவெயின் [Samuel L. Clemens (Mark Twain)] நிவேதாவிற்குச் சென்றார். ரஃபிங்கில் (Roughin—1871) வர்ஜீனியா நகரின் வளமான நாட்களைப்பற்றிய மறக்க முடியாத வர்ணனைகளைப் பின்சந்ததியினர் காணலாம்.

தட்பவெப்ப நிலை சரியில்லாததாலும், எளிதில் அடையக் கூடியதாக இல்லாததாலும் புது மெக்சிகோவின் மேற்குப் பகுதி [தற்பொழுது அரிசோனு (Arizona) என வழங்கப்பெறுவது] கொஞ்சங் கொஞ்சமாகவே வளரத் தொடங்கியது. மேலும், தனிப் பட்ட சுரங்கத் தொழிலாளர்கள் அங்கு வெற்றி பெறுவது கடின மாகவே இருந்தது. காட்ஸ்டன் கொள்முதல்(Gadsden Purchase) நிறைவேறியவுடன் டக்சன் (Tucson) எனும் பழைய ஸ்பானிஷ் நகரின் அருகில் ஒதுக்கப்பட்ட சில சுரங்க வழிகளை அமைப்பதற் கென, கலிஃபோர்னியாவிலிருந்து தேர்ந்தெடுத்த தொழிலாளர் களைச் சுரங்கக் கம்பெனிகள் பயன்படுத்தின. உள்நாட்டுப்போரின் காரணமாகத் தற்காலிகமாக டக்சன் சுரங்கங்கள் செயற்பட வில்லை. பில் வில்லியம்ஸ் ஃபோர்க் (Bill Williams Fork) அருகில் கொலராடோவின் கிழக்குக்கரை வழியாக 1862, 1863ஆம் ஆண்டுகளில் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பெற்றமையால் புதிய பொன் கவர்ச்சி மீண்டும் தலையெடுத்தது. அரிசோனு 1863-ல் ஒரு பிரதேசம் என்ற அந்தஸ்தையும் 1912-ல் ஒரு மாநிலம் என்ற அந்தஸ்தையும் பெற்றது. பிரதேச அரசாங்கம் நிறுவிய பின்னர் பத்தாண்டுகளில் அபேசெஸ் (Apaches) உடன் தொல்லைகள் ஏற்பட்டமையால், சுரங்கத்தொழில்தீமைபயப்பதாக மாறியது. அரிசோனுவில் புதிதாகக் குடியேறுபவர்களை முதன் முதலில் கவர்ந்தபொன்னும் வெள்ளியும் அரிசோனுவின் மொத்தக் கனிப்பொருள் உற்பத்தியில் ஒரு சிறு பகுதியேயாகும். தற்பொழுது செம்பு உற்பத்தியில் யூனியனிலேயே முன்னணியில் நிற்கிறது.

கொலராடோ, நிவேதா, அரிசோனு போன்ற புதிய பிரதே சங்கள் தோன்றத் தேவைப்படும் ஜனத்தொகைக்குக் காரண மாகப் பொன்தேடிகள் அமைந்தது போலவே, விரைவுயர்ந்த உலோகக் கண்டுபிடிப்புகள் 1863-ல் இடாகோ (Idaho) பிர தேசம் அமையவும் காரணமாக அமைந்தன. பியூகெட் சவுண் டில் (Puget Sound) தொலைவாக அமைந்துள்ள குடியேற்றங்களை நிருவகிப்பது தொல்லையாக இருந்தமையால், 1853-ல் ஓரிகன் பிரதேசத்திலிருந்து வாஷிங்டன் பிரதேசம் பிரிந்து நின்றது. வாஷிங்டன் 1859-ல்தான் மாநில இராஜ்ஜியமாக ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

கிளியர் வாட்டர் (Clearwatter), ஸ்நேக் (Snake) நதிகளின் சந்திப்பில் 1860-ல் பொன் கண்டுபிடிக்கப்பட்டது. நெஸ் பர்சி இந்தியர்களைக் (Nez Perce Indians) கட்டுப்படுத்தியே தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. 'இத்தகைய சுரங்கத் தொழிலா ளர்களைக் கட்டுப்படுத்துதல் என்பது சுழற்காற்றினைக் கட்டுப் படுத்துதலுக்குச் சமமாகும்', என இந்தியப் பிரச்சினைகளின் கண்

காணிப்பாளர் கருத்துத்தெரிவித்துள்ளார். அறிந்த ஆண்டிலேயே ஆயிரக்கணக்கான பேர்கள் இத்தகைய ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் வந்து குவிந்தனர். லீவிஸ்டன் (Lewiston) நகர் மையமாக எழுந்தது. இக் கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து சால்மன் நதி (Salmon River) மீதும், பாய்ஸ் (Boise) மீதும், ஓகி மாவட்டத்திலும் (Owyhee district) கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன. இந்த மாவட்டம் ஸ்நேக் நதியின் பெரிய வளைவுக்குத் தேற்கே உள்ளது. இப் பிரதேசத்தில் முதன்முதலாக ஹட்சன் விரிகுடாவைச் சார்ந்த வேட்டைக்காரர்களும் அமெரிக்கத் தோல் கம்பெனிகளின் கண்ணிவைப்போரும் சுற்றித்திரிந்தனர். மெக்லோலின் (McLoughlin), விட்மன் (Whitman) ஆகியோரைப் பின்பற்றிச் சென்ற விவசாயிகளே முதன்முதலில் பொறுப்புணர்ச்சியுடன் குடியேறினர்கள். ஆனால், 1861, 1862 ஆம் ஆண்டுகளில் கிளம்பிய பொன் தேடிகள் தாம் வாஷிங்டனுக்குப் புது வாழ்வு அளித்து, இடாகோவை ஸ்தாபித்தனர், தற்பொழுதுள்ள மேற்கு இடாகோவின் முன்னேற்றத்திற்கு 1861-ல் பொன் காரணமாக இருந்தது போலவே, 1863-ல் நிகழ்ந்த புதிய கண்டுபிடிப்புகள் ஆல்டர் குல்ச் (Alder Gulch), வர்ஜீனியா நகர் முதலியன முன்னேறவும் கிழக்கு இடாகோவில் புதிய சுரங்கத் தொழிலாளர் குழு தோன்றவும் காரணமாயின. பத்தாயிரம் பேர்கள் வர்ஜீனியா நகருக்கு 1864-ல் வந்து சேர்ந்தனர். அதே ஆண்டில், 'அக்காலத்தில் தோன்றிய செழிப்பு நகரங்களில் கடைசி நகரென்னக் கருதப்படும் ஹெலினு தோன்றியது. இப் பகுதிகளினுள் சுரங்கத் தொழிலாளர்கள் நூழைந்தமையால், வடகிழக்கு இடாகோ 1864-ல் மோன்டானு (Montona) பிரதேசமாகவும், 1868-ல் வியோமிங் பிரதேசமாகவும் துண்டாக்கப்பெற்றன. கோயர் டி அலென் (Coeur d' Alene) பகுதியில் 1882-ல் பொன் கண்டுபிடிக்கப்படவே, இடாகோவில் தொழிலாளர் பலர் மேலும் நுழைந்தனர். மற்ற உலோகங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, தங்க உற்பத்தி அவ்வளவாகப் பெருகவில்லை. இடாகோ அருகில் உள்ள மோன்டானு புட்டே (Butte) பகுதியில் செம்பு உலோகத்தை உற்பத்தி செய்கிறது. மோன்டானுவில் உற்பத்தியாகும் செம்பைவிட அதிகமாக அரிசோனு, யுட்டாப் பகுதிகளில் மட்டும் உற்பத்தியாகின்றன (1956).

1860 முதல் 1869வரை யுள்ள ஆண்டுகளில் மெக்சிகோவிலிருந்து கனடா எல்லைக்கோடு வரையில் ராக்கிகளில் மக்கள் குடியேறினர். புதிதாகத் தோன்றிய நகரங்களிலும், சுரங்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ள குன்றுப் பிரதேசங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் மக்கள் பரவலாகக் குடியேறினர். சுரங்கங்கள் நிறைந்த

எல்லைப்புறத்தில் நிலவிய ஒழுக்கக்கேடான வாழ்க்கையின் உண்மைவைப் புரிந்துகொண்ட எல்லைப்புறங்களைப் பற்றி எழுதும் வரலாற்றாசிரியர் பிரடெரிக் எல். பாக்சன் (Frederick L. Paxon) பின்வருமாறு எழுதுகிறார் :

'புதிய பிரதேசங்களில் குடியேறியுள்ள, ஆனால், மாறிக் கொண்டேயிருக்கும் மக்கள் கூட்டத்தைப்பற்றி வருணிக்க விருப்பம் இருந்தபோதிலும் வருணிக்க இயலவில்லை, அது வருணனைக்கு அப்பாற்பட்ட செய்தியாகும். இளைஞர்களை பெருவாரியாகக் கொண்ட மக்கள் கூட்டமது. மதிப்பு நிறைந்த பெண்கள் இருந்தனர். ஆனால், அவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு. எனவே, அவர்கள் சமூக வாழ்வைச் செப்பனிட முடிய வில்லை. பல நகரங்களில் அவர்கள் சிறுபான்மையினரே. அப் பகுதிகளில் எளிதில் செல்வத்தினைத் திரட்ட வாய்ப்பிருந்த தரல் ஏழைப் பெண்களே வந்து சேர்ந்தனர். அத்தகைய பெண் மணிகள் எத்தனை பேர் என்று எண்ண முடியாது; அவர்களைக் கற்பனை செய்துபார்க்கலாம். பல்வேறு குழுக்களின் சமூக உணர்வு, அக் குழுக்களில் நிலவும் ஆண்களின் ஆதிக்கத்தையும், வரையறை செய்யப்பட்ட தொழிலாளர்கள் கிடைக்காமையையும் தாங்கள் நிலைத்திருக்கவேண்டி அவர்கள் கொண்டுள்ள ஊக வணிக உணர்வையும் பொறுத்ததாகும். அதுபோலவே, அரசியல் உணர்வும் மக்கள் இயல்பையும் தொழிலின் தன்மையையும் அரசாங்கக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட நிலையையும் பொறுத்ததாகும். இத்தகைய சூழ்நிலைகள் இணைந்துநிற்கும்பொழுது அமெரிக்கா அதுவரையில் கண்டறியாத ஒரு வகையான வாழ்க்கை உருவாகியது. சிந்தனையற்ற மக்களும் இத்தகைய வாழ்கையை இன்ப வாழ்க்கையென நம்பினர். பகட்டு நிறைந்த சூதாட்டம், கேளிக்கை ஆகியவற்றால் கட்டுண்ட இருள் நிரம்பிய இடங்கள் நிறைந்திருந்தன. தொல்லையும் விரக்தியும் நிரம்பிய போராட்டமே நடைபெற்றது.

பள்ளத்தாக்கில் செல்லும் ஒரே தெருவில் முன்னும் பின்னும் வரிசை குலைந்து நிற்கும் குடிசைகளின் காட்சியே சுரங்கம் உள்ள ஒரு பகுதியின் காட்சியாகும். அப் பகுதியில் வரவேற்பு அறையாகவும், பண்டங்கள் விற்கும் கடையாகவும் ஒரே வேளையில் இயங்கும் இடங்களைக் காணலாம். பெருஞ்சுமை ஏற்றிச் செல்லும் வண்டிகளின் வலுவான சக்கரங்கள் சாலையில் ஆழமாகப் பதிந்து பள்ளங்களை உண்டாக்கியிருப்பதைக் காணலாம். தெருக் கம்பங்களிலெல்லாம் குதிரைகள் சாதாரணமாகக் கட்டப்பட்டிருக்கும். வண்டிகளை இழுப்பதற்குக் குதிரைகளே பெரும்பாலும் பயன்படுகின்றன என்பதும் விளங்கும். குதிரை

களின் சொந்தக்காரர்கள் பொறுப்பில்லாமல் அவற்றைக் கட்டியிருப்பதை நோக்கின், குதிரைகளை யாரும் திருடுவதில்லை என்பது புலனாகும். அப் பகுதியில் வாழும் சுரங்கத் தொழிலாளர்கள் எதிரெதிரான வாழ்க்கை வாழ்கிறார்கள். ஒரு புறத்தில் தொழிலாளர்களின் தனிமையும் வேதனையும் வெளிப்பட்டுள்ளன. மறுபுறத்தில் நகரத்திற்கு வரவேண்டும் என்ற ஆர்வம் மேலெழுந்து நின்றது. பண்பாடுள்ள சிலர் நகரங்களில் வசித்தனர். நிலையாகத் தங்கி வாழ்வோர் வியாபாரத்தையோ, அல்லது அதைவிட மோசமான ஒரு தொழிலையோ மேற்கொண்டு, சுரங்கத் தொழிலாளிகள் வசிக்கும் இடத்திலிருந்து தள்ளித் தொலைவில் வசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் பெற்றது. தேறல் விலையகம், சூதாட்டம் நடைபெறும் விடுதி, நாட்டிய அரங்கம் ஆகியவைகளைப்பற்றி விவரிக்கத் தேவையில்லை. இத்தகைய கேளிக்கைக் கூடங்களில் தனிமை வெறுத்தொதுக்கப்பெற்றது. குடி பேர்தையும், தீயொழுக்கமும், கொலையும் அடிக்கடி நிகழ்ந்தன.'[2]

எனினும், இத்தகைய வருந்தத்தக்க அடிப்படைகளின் மீதே நமது தூரத்து மேற்கு மாநிலங்கள் எழுந்தன. கனிப்பொருள் களைத் தேடிவந்த முக்கிய வெள்ளையர்கள் தற்காலத்து கலிஃபோர்னியா, நிவேதா, அரிசோனா, நியூமெக்சிகோ, கொலராடோ, இடாகோ, மோன்டானா ஆகிய இடங்களில் குடியேறினர்.

கால்நடைப் பண்ணைக்காரர்களின் எல்லைப்புறம்

கிழக்கு எல்லைக் கோட்டிற்கும் மேற்குப் பிரதேசச் சுரங்கக் குடியேற்றங்களுக்கும் இடையில், டெக்சாசிலிருந்து மானிடோபா (Manitoba) வரையிலும் ஒரு பெரும் புல் நிறைந்த பிரதேசம் அமைந்திருந்தது. அப் பிரதேசத்தில் புல் மண்டிக்கிடந்த போதிலும் மழை இல்லை. அது பயிர்த் தொழிலுக்கும் ஏற்றதன்று, வசிப்பதற்கும் ஏற்றதன்று என்று பலர் கருதினர். வடநிப்ராஸ்காவில் (northern Nebraska) நிலவும் கடுங்குளிரையும் தாங்கி, மண்டிக் கிடக்கும் வறண்ட புல்லினையும் மேய்ந்து கால்நடைகள் உயிர்வாழும் சக்திவாய்ந்தன என்பது 1860-1869-ல் தான் தெளிவாயிற்று. இந்த உண்மை தெரிந்தவுடன் கால்நடைகளை மேய்ப்பவர்களும், பண்ணை வைத்து நடத்துவோரும் அப் பிரதேசத்தில் வந்து குவிந்தனர். விவசாயிகள் முன்னேறி வந்து வெளியேற்றும் வரையில், இருபது ஆண்டுகளுக்குக் கால்நடை

[2] எப். எல். பாக்சன், 'The Last American Frontier' (1910), ப. 170—172.

மேய்ப்போரும் பண்ணைக்காரர்களும் அப் பிரதேசத்தில் தங்கியிருந்தனர்.

ஸ்பானிஷ்காரர்கள் காலந்திலிருந்தே டெக்சாஸ் சமவெளியில் கால்நடைகள் வளர்க்கப்பெற்றன. அக் கால்நடைகள் வானிலையில் அடிபட்டுப் பரந்து கிடந்த பண்ணைகளில் சுதந்திரமாக ஓடித் திரிந்து முரட்டுத்தனமாக வளர்ந்திருந்தன. மிசிசிப்பி பள்ளத்தாக்கிலும் அட்லாண்டிக் கடற்கரையிலும் உள்ள விவசாயி தேவையான கால்நடைகளை வட்டாரச் சந்தைகளிலே விற்றுவந்ததால், கால்நடைப் பண்ணைக்காரர்கள் தங்களுடைய கால்நடைகளை விற்க முன்பாவில்லை. மேலும், உள்நாட்டுப் போர் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்துவரும் தென்னுட்டுச் சந்தையைத் துண்டித்துவிட்டது. அதன் விளைவாகப் போர் முடிவில் டெக்சாஸ் பண்ணையில் கால்நடைகள் மிகுதியாகப் பெருகியிருந்தன. ஆனால், கிழக்கில் மக்கள்தொகை விரைவில் பெருகிவிட்டமையாலும், கால்நடைப் பண்ணைகள் உள்ள பகுதி வரையில் இருப்புப்பாதைகள் போடப்பட்டமையாலும் கால்நடைகளுக்கு வேண்டிய சந்தையும் உருவாகியது; போக்குவரத்து வசதிகளும் ஏற்பட்டன. டெக்சாஸ் பண்ணைக்காரர்கள் இவ் வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக்கொண்டனர். உணவாகப் பயன்படும் எருமைகள் கிடைக்கவில்லையெனில், சமவெளியில் வாழும் இந்தியர்களால் ஒன்றுஞ் செய்யமுடியாது. கால்நடைகள் மேய்வதற்குக்கூடப் பிரயோசனமில்லாத பாதுகாக்கப்பட்ட நிலப் பகுதிகளில் அவர்கள் சென்று வாழ நேரிட்டது.

தென்னுட்டுப் பண்ணைகளில் கால்நடைகளை இரு தடவைகள் சுற்றிவளைப்பர். மே மாதம் முதல் சுற்றிவளைப்பு நிகழும். நிலவும் பழக்கவழக்கங்களையும் சட்டங்களையும் அனுசரித்து இளங் கால்நடைகளுக்கு அவற்றின் சொந்தக்காரர்கள் குறிபோடுவார்கள். இரண்டாவது சுற்றிவளைப்பாகிய மாட்டிறைச்சி வளைப்பு ஜூலை அல்லது ஆகஸ்டு மாதத்தில் நிகழும். வளர்ச்சி அடைந்துள்ள மாடுகளை, குறிப்பாக, ஒரு வயது நிரம்பிய இளங்காளைமாடுகளைத் தனியாகப் பிரித்து வடக்கேயுள்ள கான்சாஸ், நிப்ராஸ்கா அல்லது வியோமிங் பகுதிக்கு ஓட்டிச் சென்று, தீனி கொடுத்து நன்கு வளர்த்து விற்றுவிடுவார்கள். எஞ்சிபவைகளைப் பண்ணைகளுக்கு ஓட்டிவந்து இனப்பெருக்கம் செய்வர். அபிலீன் (Abilene), கான்சாஸ், புதிதாகக் கட்டப்பெற்ற கான்சாஸ் பசிபிக், அட்சிசனில் (Atchison) உள்ள டாஜ் நகர் Dodge city), டொபேக்கா (Topeka), சாந்தாபீ ஆகிய பகுதிகளில் 1870-1879-ல் பெருங் கால்நடைப் பண்ணைகள் நிறைந்த நகரங்கள் எழும்பின. நிப்ராஸ்காவில் ஓகல்லாலா

எனுமிடத்தில் மற்றொரு கால்நடைப்பண்ணை நகர் எழும்பியது. வடமேற்கே 400 மைல் தொலைவில் மோன்டானாவில் மைல்ஸ் நகரில் மற்றொரு கால்நடைப்பண்ணைமையம் ஏற்பட்டது. வட மேற்குப் பகுதிக்கென அந்த மையம் எழுந்தது.

இப் பகுதிகளுக்கு வந்தவுடன் கால்நடைகளுக்கு நல்ல ஊட்டங் கொடுத்து, கொழுப்பேற்றி, அவற்றைச் சந்தையில் விற்று விடுவார்கள். அல்லது கான்சாஸ்நகர், மில்வாக்கி (Milwaukee), சிக்காகோ முதலிய நகரங்களில் உள்ள பண்ணைகளுக்கு அனுப்பி விடுவர். காலப்போக்கில் போட்டிகள் பெருகவே, பரிசோதனைகள் மூலம் நல்ல ஜாதி கால்நடைகளைப் பெருக்கிச் சந்தைக்கு அனுப்பி வைக்கும் வேலையில் ஈடுபட்டனர். சட்டத்தை மீறுபவர்களிட மிருந்தும் திருடர்களிடமிருந்தும் தற்காத்துக்கொள்வதற்காகக் கால்நடைப் பராமரிப்பாளர்களின் சங்கங்கள் ஏற்பட்டன. மேலும், டெக்சாஸ் நோய், குளம்பு, வாய் முதலியவற்றில் ஏற்படும் புண் முதலியவற்றிலிருந்தும், மற்ற நோய்களிலிருந்தும் கால்நடைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் இத்தகைய சங்கங்கள் தலை யெடுத்தன.

கால்நடைப்பண்ணைக்காரர்களின் எல்லைப்புறம் 1860-1880 வரையிலும் சுமார் இருபது ஆண்டுகளுக்கு நின்று நிலவியது. அப்பொழுது டெக்சாசைச் சார்ந்த 40,00,000 கால்நடைகள் வடதிக்கில் ஓட்டிச் செல்லப்பெற்று வெட்டப்பட்டன. வட திசையில் உள்ள பண்ணைகளிலும் கால்நடைகள் கொண்டுவந்து விடப்பட்டன. வேலியிடப்படாத அரசாங்க நிலத்தின் பெரும் பகுதியில் பண்ணைகள் கடிதில் நிருமாணிக்கப்பெற்றன. இத் தகைய பண்ணைகளுக்குப் பெருஞ்சந்தைகள் ஏற்பட்டுப் பேரிலாபம் கிடைத்தது; பொதுச்செலவும் (over head costs) குறை வாகவே இருந்தது. அரசாங்க நிலத்தில் கால்நடைகள் புல் மேய்வதற்கு எந்தச் செலவும் இல்லை என்பதாலேயே பொதுச் செலவுகள் குறைந்தன. 1880-1889 ல் பண்ணைகள் எல்லை மீறி வளர்ந்தமையால், இலாபங்கள் குன்றின. பண்ணைகளின் எல்லைப்புறமும் வேறு நிலையான தொழிலை நாடியது. மேலும், முன்னிருந்ததைப்போல் இப்பொழுது பெருமந்தைகள் ஓட்டிச் செல்லப்படுவதில்லை. பசுக்கள் நிறைந்த பிரதேசத்திலிருந்து தியோடர் ரூஸ்வெல்ட் தோன்றியமையாலும், ஓவன் விஸ்டரின் (Own Wister) நாவல்களினாலும், மற்ற நாவலாசிரியர்களின் எழுத் தோவியங்களாலும், பிரடரிக் ரெமிங்டன் (Frederic Remington) அவர்களுடைய ஓவியப் படைப்புகளினாலும் நம்முடைய சரித் திரத்தில் இடையர்களின் கேளிக்கை நிறைந்த வாழ்க்கை என்றும் மறையாத அளவுக்குப் பதிந்துவிட்டது. திரைப்படம், 'மேற்குப்

பிரதேசம்'பற்றிய டெலிவிஷன், 'டைம்* மதிப்புள்ள நாவல்' ஆகிய சாதனங்களின்மூலம் இடையர்களின் கேளிக்கை நிறைந்த வாழ்க்கை படம்பிடித்துக் காட்டப்பட்டது.

சந்தையில் விற்பதற்கெனக் கால்நடைகளைப் பெருக்குவது பெருஞ் சமவெளிப் பிரதேசத்தின் தொழிலாயிற்று. ஆனால், பண்ணைக்காரர்களின் இறுதி எல்லைப்புறத்தின் அம்சங்கள் மறைந்துவிட்டன. விவசாயிகள் தங்கள் எல்லையை முன்நகர்த்திக் கொண்டு வந்தமையால், வெளிப்படையான பண்ணையும், பெரு மந்தையை மேயவிடுதலும் பொன்றத் தொடங்கின. கண்டத்தின் குறுக்கே இருப்புப்பாதைகள் போடப்பட்டமையாலும் பண்ணைகள் பாதிக்கப்பட்டன. பண்ணைக்காரர்களின் எல்லைப்புறத்திற்குக் காரணமாக அமைந்த இரயில்வேக்களே அவற்றின் அழிவுக்குங் காரணமாயின. எல்லைப்புறத்திற்கு விவசாயிகள் வருவதற்கு இருப்புப்பாதைகள் காரணமாக இருக்கலாம்; எனினும், மூட்கம்பி கண்டுபிடிக்கப்பெற்றமையால்தான் விவசாயி கால்நடைப் பண்ணைகளுக்கு எதிராக நிலத்தினைப் பெற்றுப் பயிரிட முனைந்தான். இறுதியில் அந்த நிலை கால்நடை மேய்ப்போருக்கும் பயனளித்தது. போட்டி கடுமையாக இருந்ததால் மோசமான நிலையில் இருந்த கால்நடைகள் ஒதுக்கப்பெற்று, நல்ல ஜாதி கால்நடைகள் பொறுப்புடன் வளர்க்கப்பெற்றன. புதிய ஜாதி கால்நடைகளைத் தனிப்படுத்திப் பாதுகாப்புடன் வளர்க்கவேண்டும். முன்னேறிவரும் விவசாயிகள், திறந்து கிடக்கும் கால்நடைப் பண்ணைகளினுள்ளும் நுழைந்தமையால், எதிர்காலக் கண்ணோட்டமுள்ள கால்நடைப் பராமரிப்பாளர்கள் நிலத்திற்கு வேலியிட முனைந்தனர். இவ்வாறு வேலியிடுதல் சட்டப்படி செல்லாது. வேலியிடப்பெற்ற நிலத்தின் அளவு 1888-ல் 80,00,000 ஏக்கர்களாகும். விவசாயிகளும் கால் நடைப் பராமரிப்பாளர்களும் பொதுநிலத்தில் தலையிடவே, மேற்குப் பிரதேசப் பொருளாதாரப் படம் மாறத் தொடங்கியது. கால்நடைத்தொழிலைத் திறந்துகிடக்கும் பண்ணையிலிருந்து மேய்ச்சல் தரைக்கு மாற்றியவுடன் கால்நடைகளுக்கு நோய்கள் பரவின. எனவே, தொற்றுத் தடுப்புச்சட்டங்களியற்றி (quarantine laws) தென்னூட்டுக் கால்நடைகள் வடமாநிலங்கள் வரவொட்டாமல் தடுத்தன. கால்நடைத்தொழில் புதிய சூழ்நிலையில் இரண்டு காரணங்களால் நிலைத்துநின்றது. 1880-1885 வரை கடுங்குளிரினால் கால்நடைகள் பல அழிந்துபோயின. இக்

*(அமெரிக்க) வெள்ளியில் பத்திலொன்று மதிப்புள்ள காசு.

காலத்தில் எல்லைமீறிய வளர்ச்சியினாலும் அநேக கால்நடை மேய்ப்பவர்களுக்குத் தீமை ஏற்பட்டது.

கால்நடைப் பராமரிப்பாளரின் எல்லைப்புற வாழ்க்கை குறுகிய காலத்தது எனினும், நமது வரலாற்றில் அது நன்கு பதிந்து விட்டது. மேலும், 100 ஆவது தீர்க்க ரேகைக்கும் ராக்கிகளுக்கும் இடையில் உள்ள பெரும்பகுதியில் குடியேற்றம் ஏற்பட அது உதவியது. பண்ணைக்காரர்களும் விவசாயிகளும் மேலும் மேலும் நிலம் வேண்டும் என்று கூச்சலிடவே, ஒக்லாஹோமாவிலும் (Oklahoma) குடியேற்றம் ஏற்பட்டது. பண்ணைக்காரர்களின் எல்லைப்புறம் வளர்ச்சியுறவே, கட்டுக்கட்டும் தொழில் மேற்கே பரவி, சிக்காகோ, செயின்ட் லூயிஸ், கான்சாஸ் நகர், ஓமாஹா முதலிய இடங்களில் சென்று நிலைத்தது. ஆர்மர் (Armour), ஹேமண்ட் (Hammond), மோரிஸ், ஸ்விப்ட் (Swift) ஆகியோரின் ஆதிக்கத்தில் அத்தொழில் இருந்தது. போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டமையால் கட்டுக் கட்டுதலும் (Packing), குளிர்ப் படுத்தும் முறைகளும் அத் தொழிலில் பரவின. இப் பிரச்சிகைகள் தீர்ந்தவுடன் இறைச்சி ஏற்றுமதி முக்கியத்துவம் அடைந்தது. பண்ணைத் தொழிலின் இலாபத்தை அடைவதில் கால்நடைப் பராமரிப்பாளருக்கும், கட்டுக்கட்டுவோருக்கும், இரயில்வேக் களுக்கும் இடையில் சச்சரவு முற்றியது. அக்காலத்தில் அந்தச் சச்சரவு அரசியல், பொருளாதாரச் சிக்கல்களை ஏற்படுத்தியதுடன், விவசாய அமைதியின்மைக்குங் காரணமாக இருந்தது.

விவசாயிகளின் எல்லைப்புறம்

கால்நடைப் பராமரிப்பாளர்களைத் தொடர்ந்து அமெரிக்க எல்லைப்புறத்திற்கு 1890-ல் விவசாயிகள் வந்தனர். அப் பெரு நிலப்பகுதியில் குடியேற்றம் கடிதில் ஏற்படப் பல காரணங் களுண்டு. முதலில் நிலச்சட்டங்கள் காரணமாக இருந்தன; நிலத்தை இனாமாகவே தரவேண்டும் என்பதற்காக நடைபெற்ற நீண்ட காலக் கிளர்ச்சி வெற்றி பெற்றது முதற் சட்டம் 1860-ல் இயற்றப்பட்டது. புச்சனன் (Buchanan) அதனை மறுப்பாணை செய்துவிட்டார். அந்த ஆண்டுத் தேர்தலில் குடியரசுக் கட்சியினரால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற இரண்டா வது சட்டத்திற்கு லிங்கன் அவர்கள் 1862, மே 20-ல் ஒப்புதல் தெரிவித்துக் கையெழுத்தும் இட்டார். ஒரு குடும்பத் தலை வனுக்கோ, அல்லது 21 வயது முடிந்த அமெரிக்க பிரஜைக்கோ, அல்லது அமெரிக்க பிரஜையாக விழைந்த ஒருவனுக்கோ,

அல்லது அமெரிக்காவிற்கு எதிராகக் கலகம் செய்யாதிருந்த வனுக்கோ கால்பகுதி நிலத்தை (160 ஏக்கர்கள்) இனமாக அளிக்கலாம் என்று குடும்பமனையகச் சட்டம் குறிப்பிட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு அப் பகுதியில் தங்கி வசித்திருக்கவேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. நல்லமுறையில் வேளாண்மை செய்து நம்பிக்கையுள்ளவரென நிரூபிக்க வேண்டும். ஆறு மாதங் களுக்குப் பின்னர்,[3] ஓர் ஏக்கர் நிலத்திற்கு 1·25 டாலர் வீதம் கொடுத்த பின்னரே உள்ளே நுழையவேண்டும். பின்னர் பல திருத்தங்கள் கொணர்ந்து அச் சட்டத்தைப் உள்நாட்டுப்போரில் கலந்துகொண்டு பணியாற்றிய சிப்பாய்களுக்கும், தொடர்ந்து நடை பெற்ற போர்களில் பணியாற்றிய சிப்பாய்களுக்கும் சாதக மாக மாற்றினர். அதன்படி நிலத்தைப் பெற ஐந்து ஆண்டுகள் அப் பகுதியில் வாசஞ்செய்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையில் சிப்பாய்கள் போர்க்களத்தில் கழித்த ஆண்டுகளைக் கழித்துக் கொள்ளவேண்டும்.

குடும்பமனையகச் சட்டத்தை மேலும் எளிமைப்படுத்துவ தற்கும், குறைந்த விலையில் மற்ற நிலங்கள் கிடைக்கச் செய்யவும் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பெற்றன. குடும்பமனையகம் உடையோன் (homesteader) 160 ஏக்கர் கொண்ட நிலப்பரப் பினைக் கோரிப்பெறலாம் என்றும், அந்த நிலத்தில் நான்கு ஆண்டு களில் நான்கில் ஒரு பகுதியில் மரங்களை நட்டு வளர்த்தால் அந் நிலப்பரப்பு முழுதும் அவனுக்கே சொந்தமாகும் என்றும் 1873-ல் இயற்றப்பெற்ற மரவளர்ச்சிச் சட்டம் (Timber Culture Act) குறிப் பிட்டுள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு 25 சென்டுகள் முதலில் கொடுத்து, மூன்று ஆண்டுகளில் நீர்ப்பாசன வசதியையும் செய்து முடித்துப் பின்னர் ஏக்கர் ஒன்றுககு ஒரு டாலர் கொடுத்தால் பெருஞ்சமவெளிப் பிரதேசத்தில் தற்காலிகமாக 640 ஏக்கர்கள் கொண்ட நிலத்தை வழங்க 1877-ல் இயற்றப்பெற்ற பாலைநிலச் சட்டம் குறிப்பிட்டுள்ளது. இச் சட்டம் பண்ணைக்காரர்களின் தூண்டுதலாலேயே உருவாகியது. மரம்—கல் சட்டத்தின்படி (1878) (The Timber & Stone Act), நிலம் அதற்குரிய மதிப் பீட்டைப் பொறுத்தே வழங்கப்பெற்றது. ஆனால், ஏக்கர் ஒன்றுக்கு 2·50 டாலருக்குக் குறையாமல் பணம் தரவேண்டும். விற்பனை நாளில் குறிப்பிட்ட 160 ஏக்கர்கள் கொண்ட பொதுநிலம், மரத் தையும் கல்லையும் பொறுத்தவரையில் நல்ல மதிப்புடையதாகும். ஆனால், அது வேளாண்மைக்கு ஏற்றதன்று. இந்தியர்கள் நிலத் தைத் துண்டு துண்டாகக் கூறிட்டு உடைமையாக்கிக்கொள்ளும்

[3] 1891-ல் 14 மாதங்களாக உயர்த்தப் பெற்றது.

மலை ஜாதியினர் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். ஆனால், 1887-ல் இயற்றப்பெற்ற டாவ்ஸ் சட்டம் (Dawes Act) அப் பழக்கத்தைப் புறக்கணித்துவிட்டுத் தனிப்பட்டோரே நிலத்தை உடைமை யாக்கிக் கொள்ளலாம் என்று விளக்கியது. ஆக, புதிதாகக் குடியேறுபவர்களுக்கு நிறைய நிலம் ஒதுக்கி வைக்கப் பெற்றது. உலர்ந்த பண்ணைமுறை தேவைப்பட்ட நீர்ப்பாசன மற்ற 320 ஏக்கர்கள் கொண்ட குடும்பமனையகத்தை விரிவுபடுத் தவும், இரண்டாண்டுகளில் நான்கில் ஒரு பங்கு நிலத்தினைச் சாகுபடி செய்யவேண்டும் என்று விதி விதிக்கவும் 1909-ல் ஒரு சட்டமியற்றப்பெற்றது. ஐந்து ஆண்டு வாசம் எனும் விதியை 1912-ல் மூன்று ஆண்டுகளுக்குக் குறைத்தனர். மற்றொரு சட்டத்தின் மூலம் 1916-ல் கால்நடை வளர்ப்புக்கு 640 ஏக்கர்களை அனுமதித்ததன்மூலம் நிலைமையில் நல்ல மாற்றம் ஏற்பட்டது.

நமது தேசீய நிலத்திட்ட வரலாற்றில் 1862-ல் இயற்றப் பெற்ற குடும்பமனையகச்சட்டம் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத் தியது என்று வருணிக்கப்படுகிறது. காலனி காலத்திலும்[4] பின்னரும் குறிப்பிட்ட சில சட்டங்களின்மூலம் நிலங்கள் இல வாகக் கிடைத்தன என்றாலும், ஒருவகையில் முதலில் குறிப்பிடப் பெற்றது உண்மையேயாம். எனினும், ஆழ்ந்து நோக்கின், அச் சட்டத்தின் முக்கியத்துவம் சிறிய அளவிலேயே தோன்றும். முதலில், குடும்பமனையகச் சட்டம் பழைய சட்டங்களின்மீது எழுந்ததாகும்; பின்னர்ப் புதிய சட்டங்களினால் அது கட்டுப் படுத்தப்பெற்றது. தான் விரும்பும் நிலத்தினை ஒருவன் யாருக்கும் முன்வாங்கும் உரிமையை வழங்குச் சட்டம் 1841-ல் இயற்றப் பெற்று, 1891 வரையில் நிலைத்திருந்தது. ரொக்கப் பணத்தைப் பெற்று ஏலத்திற்கு நிலத்தை விற்கும் பழைய முறை தொடர்ந்து நிலைத்திருந்தது என்பதற்கு மரம்-கல் சட்டமே எடுத்துக்காட்டாகும். மேலும், வளங்கொழிக்கும் நிலங் களனைத்தும் முதலிலேயே விற்பனையாகிவிட்டன. எனவே, நல்ல நிலங்கள் குடும்பமனையக முறைக்குக் கிடைக்கவில்லை. விவசாயக் கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கென மோரில் உதவித் தொகைமூலமும், கல்வியைப் பரப்பும் மற்றச் சட்டங்களின்மூலமும் 1930-ல் 20,00,00,000 ஏக்கர்கள்கொண்ட நிலம் ஒதுக்கப் பெற்றது. இருப்புப்பாதைகள் கட்டுவதற்கென 1850 முதல் 1871 முடிய உள்ள ஆண்டுகளில் மேலும் 20,00,00,000 ஏக்கர்கள் ஒதுக்கப்பெற்றன. சட்டத்தின் தேவைகளை

[4] அதிகாரம் 9-ல் 'காலனிகளில் நில உரிமைமுறை' எனும் உள்தலைப் பைக் காண்க.

இருப்புப்பாதைகள் பூர்த்தி செய்யாததால் ஒதுக்கப் பெற்ற நிலத்தினை 13.70,00,000 ஏக்கர்களாகக் குறைத்தனர். இந்தியர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளின்படி கிடைத்த நிலத்தின் பெரும்பகுதியை இனமாகப் பகிர்ந்தளிக்காமல் விற்பனைக்காக ஒதுக்கிவைத்தனர். இரயில்வே உதவித் தொகைகளைக் கொண்டு ஒதுக்கி வைத்திருந்த நிலத்தினை அரசாங்கம் விற்க முனைந்தது. இருப்புப்பாதைகளுக்காகவும் கல்விக்காகவும் வழங்கப்பெற்ற நிலத்தினையும், அரசாங்கமே சொந்தமாக்கிக்கொண்ட நிலத்தினையும் விலை கொடுத்தே கொள்முதல் செய்யவேண்டியிருந்ததால், குடும்பமனையகத்தினர் இரண்டாந்தர நிலங்களையும், போக்குவரத்து வசதிகள் குறைந்த பகுதியில் உள்ள நிலங்களையுமே பெற்றனர். எனவே, 1890 வரையில் குடும்பமனையகச் சட்டத்தின்படி 4,82,25,736 ஏக்கர்கள் கொண்ட நிலம் 3,72,659 குடும்பங்களுக்கு வழங்கப் பெற்றது. இவற்றில் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே இறுதியில் நிரூபிக்கப்பெற்றது. இதில் ஒன்றும் வியப்பில்லை. 1860 முதல் 1890 வரையில் ஜனத்தொகைப் பெருக்கம் 3,00,00,000 பேர்கள் எனில், ஒரு மில்லியன் பேர்களாவது இச் சட்டத்தின் மூலம் பயனடைந்திருப்பார்களா என்பது ஐயமே.[5] வியப்பிற்குரிய செய்தி எதுவெனில், 1890-க்குப் பின்னர்தான் குடும்பமனையகச் சட்டத்தின்கீழ் மிகப்பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. அரசாங்கம், 1862 முதல் 1926 வரையில் சுமார் 22,61,59,000 ஏக்கர்களுக்கு 13,91,128 உரிமைப் பத்திரங்கள் வழங்கியது.

குடும்பமனையகச் சட்டங்களின்மூலம் பெரு நன்மைகள் விளையவில்லை.- தட்டிக்கழிப்பினாலும், தவருன பிரயோகத்தினாலும் அச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறவில்லை. புதிதாகக் குடியேறுபவர்களுக்கு நிலக்கொடை வழங்குவதும், மேற்குப் பிரதேசம் முழுவதும் சிறு இறையிலி நிலங்களை (freeholds) உண்டாக்குவதும் அச் சட்டத்தின் குறிக்கோளாக இருந்திருக்க வேண்டும். ஆனால், விளைவுகள் முற்றிலும் மாறுகவே இருந்தன. குடியேறும் ஒருவர் ஒரே வேளையில் 1,120 ஏக்கர் நிலத்தைப் பெறலாம். குடும்பமனையகச் சட்டத்தின்படி 160 ஏக்கர்களையும், யாவருக்கும் முன் வாங்கும் சட்டத்தின்படி 160 ஏக்கர்களையும், மரம்—கல் சட்டத்தின்படி 160 ஏக்கர்களையும், தரிசு

[5] குடும்பமனையகச் சட்டத்தின் குறைபாடுகளை பி. டபிள்யூ. கேட்ஸ் (P. w. Gates) தமது நூலில் நன்கு விளக்குகிறார். 'The Homestead Act in an Incongruous Land System', American Historical Review, XLI, 652-681 (ஜூலை, 1936). எப்.-ஏ. ஷானன் (F. A. Shannon), 'The Homestead Act anh the Labour Surplus', ibid. ப. 637-651 காண்க.

நிலமாக 640 ஏக்கர்களையும் குடியேறுபவர் பெறமுடியும். தனிப்பட்டோரின் துணைகொண்டு சுரங்கக் கம்பெனிகளும் மரத்துண்டு வியாபாரக் கம்பெனிகளும் சட்டத்தை மீறிப் பேரளவுக்கு நிலங்களைக் கைக்கொள்ள முடியும். பண ஈடு மாற்றத்தின் (commutation) மூலம் இது நடைபெற்றது. இது குடும்ப மனையகச் சட்டத்தின் ஓர் அம்சமாகும். இதன்படி தனது உரிமையை நிலைநாட்டி ஆறு மாதத்திற்குப் பின்னர் குடும்பமனையகத்தினன் ஒருவன் 1·25 அல்லது 2·50 டாலரினைக் கொடுத்துத் தனது நிலத்தினை வாங்கிக்கொள்ளலாம். இவ்வாறு ஆறு மாதங்களில் ஏஜென்டுகள்மூலம் இயங்கும் பெருங் கார்ப்பரேஷன்கள் குறைந்த செலவில், கொடுத்த விலைக்குமேல் பன்மடங்கு மதிப்புள்ள நிலங்களைக் கைக்கொண்டன. குடும்பமனையகச் சட்டங்களின்மூலம் அரசாங்கத்திடமிருந்து தனிப்பட்டோரின் உடைமையாக மாற்றப்பெற்ற நிலத்தில் 23 சதவீதத்தினை, 1881 முதல் 1904 முடிய உள்ள ஆண்டுகளில் பணஈடு மாற்றத்தின்மூலம் கார்ப்பரேஷன்கள் கைப்பற்றின. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் வடடெக்கோட்டாவில் (North Dakota) ஐந்தாண்டுகள் வாசத்தின்மூலம் பெற்ற ஏக்கர்களைவிட அதிகமான ஏக்கர்களைப் பண ஈடு மாற்றத்தைப் பயன்படுத்திக் கார்ப்பரேஷன்கள் கைப்பற்றின.[6] 'பணஈடுமாற்றத்தின்மூலம் கைப்பற்றிய நூற்றுக்கணக்கான மனையகங்களை மேற்பார்வை செய்துபார்த்ததில் நூற்றில் ஒரு மனையகத்தைக் கூடக் குடும்பமனையாக யாரும் பயன்படுத்தவில்லை' என நில அலுவலகத்தின் ஏஜென்டு ஒருவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.[7]

பொதுநிலங்களின் பிரச்சினையில் ஊழல் நிறைந்துவிட்டமையால், நில முறையைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை வெளியிடக் கருதிய காங்கிரஸ் 1879-ல் ஓர் ஆய்வுக் குழுவினை ஏற்படுத்தியது. ஆனால், குழுவின் சிபார்சுகளை காங்கிரஸ் புறக்கணித்துவிட்டது. 1900-த்திற்குப் பின்னர் சேர்ப்பு இயக்கம் (Conservation movement) தலையெடுத்த காலம் வரையில், இயற்றப்பெற்ற சட்டங்களை அமுலாக்கும் தேசிய விருப்பத்திற்கு உண்மையான எடுத்துக்காட்டாக ஆர்தர், கிலீவ்லாண்டு ஆகியோரின் துணிகரச் செயலைக் குறிப்பிடலாம். ரூஸ்வெல்ட் ஏற்படுத்திய புதிய பொதுநிலக் குழு விரிவான அறிக்கைகளைச் சமர்ப்பித்தது. முந்திய குழுவைப் போலவே இக் குழுவும் நல்ல

[6] பி. ஹெச். ஹிப்பார்டு (B. H. Hibbard), 'A History of the Public Land Policies' (1924), ப. 387.

[7] Quoted in ibid., ப. 389.

சிபார்சுகளையே வழங்கியது. என்றாலும், இரண்டாவது குழுவின் சிபார்சுகளும் உதாசீனம் செய்யப்பட்டன. பொதுநிலம்பற்றிய அரசாங்கத் திட்டம் முன்பிருந்தது போலவே இருந்தது. தேசீய சேர்ப்புக் குழுவின் (1909) கருத்துப்படி, அரசாங்கத் திட்டம் தேசத்தின் பிரதான நலத்தைப் பேணுவதாக அமையவில்லை.

சட்டங்களிலிருந்து பலர் தப்பித்துக்கொண்டனர் என்றும், அவற்றைத் திறமையுடன் செயற்படுத்தவில்லை என்றும் குறிப்பிட்டு, நிலத்திட்டத்தைக் கண்டித்தனர். மேலும், அத் திட்டத்தின் புத்திசாலித்தனத்தையே சந்தேகித்தனர். கிழக்குப் பிரதேசத்தில் விவசாய நிலங்களின் மதிப்பைக் குறைக்கும் அளவிற்கும், உணவுப்பண்டங்களைக்கொண்டு சந்தைகளை நிரப்பும் அளவிற்கும், தவறான சாகுபடிமுறைகளைத் தூண்டும் அளவிற்கும் நில மரபுரிமையைக் கடிதில் விட்டுக்கொடுப்பது நாட்டிற்கு நன்மை பயக்குமா? இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு மாறாக, கிழக்கிலிருந்து வந்து குடியேறிய பலருக்கும் ஐரோப்பாவிலிருந்து வந்தோருக்கும் காலி நிலத்தை வழங்கினர் என்பது உண்மை யாகும். மிசிசிப்பிக்குக் குறுக்கே உள்ள நிலப்பரப்பில் மக்கள் குடியேறுவதற்கும், புதிய காமன்வெல்த்துகளை ஏற்படுத்தவும் இத்திட்டம் பெருந்தூண்டுகோலாக அமைந்தது. குடும்ப மனையகச் சட்டத்தின் குறிக்கோளே அதுதான். ஜனநாயக முறைப்படி குடியேற்றம் நிகழவேண்டும் என்பதே நோக்கு. இச் சட்டத்தைப்பற்றிப் பொது நிலக் குழு பின்வருமாறு குறிப் பிட்டுள்ளது:

'இச் சட்டம் அரசாங்கத்திற்குப் பாதுகாப்பாக உள்ளது; இராஜ்ஜியம் முழுதும் மனைகள் ஏற்பட்டுள்ளன; சமூகங் களையும் இச் சட்டம் உருவாக்கியுள்ளது; சிறுசிறு துண்டுகளாக நிலங்களைப் பல்லோர்க்கு உடைமையாக்கியதால், சமூக, சிவில் குழப்பங்கள் தவிர்க்கப் பெற்றுள்ளன.' இத்தகைய நம்பிக்கைகள் ஓரளவுக்கே செயற்படுத்தப்பெற்றன. இச் சட்டங்களைத் தவறான முறையில் பிரயோகித்துத் தட்டிக்கழித்தமையால், நிலத்தைச் சிறுசிறு கூறுகளாக்கிப் பிறருக்கு உடைமையாக்கும் திட்டம் முழு வெற்றியடையவில்லை. எனினும், விளைவு என்னவெனில். பெரும் பண்ணைகள் ஏற்பட்டன; நிலமற்ற தொழிலாளர்கள் தோன்றினர். மேலும், குடும்பமனையகச் சட்டத்தின்மூலம் பகிர்ந்தளிக்கப்பெற்ற காலி நிலம் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அரணைப் பயன்பட்டதா என்பது சந்தேகத்திற் குரியதே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி முப்பது ஆண்டு களில் கீழ்ப்பிரதேசத்துத் தொழிலாளர்களிடையே கலவரமும் அதிருப்தியும் நிலவி இருந்தன; அவ்வாறே விவசாய மேற்கில்

கடும் பொருளாதாரக் குழப்பமும், கொடுமையான அரசியல் அமைதியின்மையும் நிலவின.

விவசாய எல்லைப்புற முன்னேற்றத்திற்குக் குடும்பமனையகச் சட்டம் பயன்பட்டதுபோல்வே கண்டத்தின் குறுக்கே அமைக்கப் பெற்ற இரயில்வேக்களும் பயன்பட்டன. விரிவான அரசாங்க அளவையெடுப்பு (survey), இருபதாண்டுகள் கிளர்ச்சி, கடுமையான உழைப்பு ஆகியவற்றிற்குப் பின்னர், யுட்டாவில் உள்ள ஓக்டன் (Ogden) பகுதியில் 1869, மே 10-ல் யூனியன் பசிபிக் பகுதியையும், மத்திய பசிபிக் பகுதியையும் இணைப்பதற்கான இரயில்வே அமைக்கப்பெற்றது. கண்டத்திற்கும் குறுக்கே முதல் இருப்புப்பாதை இவ்வாறு அமைக்கப்பெற்றது. கண்டத்தின் குறுக்கே மற்ற இருப்புப்பாதைகள் 1860-1869-ல் போடப் பட்டன. போர் முடிவுற்ற காலத்திலிருந்து 1873 ஆம் ஆண்டின் பொருளாதார பீதி ஏற்பட்ட காலம் வரையில் நிறைய இருப்புப் பாதைகள் போடப்பட்டன. 1878-க்குப் பின்னர் வியாபார மறுமலர்ச்சி ஏற்பட்டவுடன் மீண்டும் இருப்புப்பாதை அமைக்கும் வேலை துவங்கியது. ஹென்றி வில்லார்டு (Henry Villard) அவர்களின் மேற்பார்வையில் வடபசிபிக் இருப்புப்பாதை உருவாகியது; 1883-ல் அது முடிவுற்றது. அதே ஆண்டில் அச்சிசன், டோப்பிகா, சாந்தா பீ முதலியன இருப்புப்பாதையால் இணைக்கப் பெற்றன. மேலும், தென்திசை நோக்கித் தென்பசிபிக்கும் கலிஃபோர்னியாவும் இணைக்கப்பெற்றன. டெக்சாஸ் பசிபிக்கும் தென்பசிபிக்கும் எல் பாசோவில் (El Paso) 1882-ல் சந்தித்தன. இவ்வாறு பசிபிக்கிற்கும் நியூ ஆர்லியன்சு அல்லது செயின்ட் லூயிக்கும் இடையில் இருப்புப்பாதைத் தொடர்புகள் எழுந்தன. 1885-ல் மத்தியில் பசிபிக்கிற்குச் செல்லும் பாதைகள் குறைந்த பட்சம் நான்கு இருந்தன. டென்வர் (Denver) வரையிலும் 1870-ல் முடிவுற்ற கான்சாஸ் பசிபிக் பாதையும் அதே டென்வர் வரையில் 1882-ல் முடிவுற்ற சிக்காகோ பர்லிங்டன்—குவின்சி பாதையும் புதிதாகக் குடியேறுவோர்க்கு மேலும் கூடுதலான நிலம் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தன.

யூனியன் பசிபிக்கை ஒரு தேசீயத் திட்டமாகக் கொண்டனர். அரசாங்கம் அதற்கு நிறையச் செலவழித்தது. அதே தேசீயத் திட்டத்தை 1871 வரையில் மேற்குப் பிரதேசப் பாதையை அமைப்பதிலும் அரசாங்கம் பின்பற்றியது. உள்நாட்டு அபிவிருத்திகளுக்கெனத் தனியார் துறையைச் சார்ந்த கார்ப்பரேஷன்களுக்கும் மாநில இராஜ்ஜியங்களுக்கும் மத்திய அரசாங்கம் சுமார் 18,70,00,000 ஏக்கர்களைக் கொடுத்து உதவியது. இவற்றில் பெரும்பகுதி கண்டத்தின் குறுக்கே

இருப்புப்பாதைகள் போடப் பயன்பட்டன. உண்மையில், மேலே குறிப்பிட்டுள்ள மேற்கத்திய இருப்புப்பாதைகளனைத்தும் பெரும் பொதுநிலக் கொடைகளைப் பெற்றவைகளே. ஆனால், சிக்காகோ, பர்லிங்டன், குவின்சி முதலியவற்றை இணைக்கும் இருப்புப் பாதைக்கு மட்டும் பொதுநிலக்கொடை கிடையாது. சுவட்டின் ஒவ்வொரு பகுதியிலும் வழி உரிமையும், ஒன்றுவிட்ட பகுதி களின் உரிமையும் வழங்கப்பெற்றே இத்தகைய நிலக்கொடைகள் அளிக்கப்பெற்றன. மைல் ஒன்றுக்கு ஒன்றுவிட்ட பகுதிகள் ஐந்து இருக்கும்; வட பசிபிக்கில் நாற்பது இருக்கும். எஞ்சிய பகுதிகளை அரசாங்கம் பின்னர் விற்கும்.

நிலம் இரயில்வேக்களுக்குச் சொந்தமாக இருப்பினும் சரி, அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருப்பினும்சரி மக்களைக் குடியேற்றவேண்டிய பொறுப்பும் அவசியமும் இரயில்வேக் களையே சாரும். இரயில்வேக்களின் வெளியீடுகளையும் விளம்பரங் களையும் பல மொழிகளில் எழுதி, கிழக்கு மாநிலங்களிலும் ஐரோப் பாவிலும் பரப்பினர். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இரயில் வேக்கள் ஏஜென்சிகளை ஏற்படுத்தின. வசதியுள்ள பகுதிகளி லெல்லாம் பிரதிநிதிகளை அனுப்பிப் பிரச்சாரம் செய்தன. தேர்ச்சி மிக்கோரின் சங்கங்களை கிழக்குப் பிரதேசத்தில் நியமித்து, குடியேறுபவர்களைத் தூண்டின. ஸ்கேண்டினேவியர்களை வட மேற்கில் குடியேறச் செய்யும் பணியில் செல்வாக்கு மிக்கோரை ஈடுபடுத்தின. போக்குவரவுக் கட்டணம் குறைக்கப்பெற்றது. வரவேற்பு மனைகள் ஏற்படுத்தப்பெற்றன. நிலத்தைக் கொள் முதல் செய்யத் தாராளக் கடன் வசதிகள் செய்து தரப்பட்டன. இப் பணியில் ஈடுபட்ட வட பசிபிக் போன்ற இரயில்வேக்கள், குடியேற்றத்தைப் பெருக்கும் பணிக்குரிய செல்வாக்கான முறை களைப் புறக்கணித்துவிட்டன. டெக்கோட்டாஸ் (Dakotas) பகுதி யைச் சேர்ப்பது குறித்து 1884-ல் நடைபெற்ற விவாதத்தில் பென்ஜமின் ஹாரிசன் (Benjamin Harrison) பின்வருமாறு தெளி வாகக் குறிப்பிடுகிறார்: 'குடியேற்றத்தின் நிலைமைகள் மாறி விட்டன. மேற்கே மனை தேடிவரும் ஒருவன், பொதி வண்டியையோ, கொனஸ்டோகா வண்டியையோ (Conestoga wagon) அல்லது, அகன்ற கொம்பு வண்டியையோ இப்பொழுது பயன்படுத்துவதில்லை. டெக்கோடாவிற்குச் சென்ற பெரும் பாலான மக்கள் நீராவி வண்டியிலேயே சென்றனர். மனைகளுக்கு அருகாமையிலேயே அவ் வண்டிகளில் பல தட்டுப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவின் குடும்பமனையகச் சட்டங்களின்மூலம் குடியேறியவர்கள் பெற்ற மனைகளே அவை.....இந்தியானா மாநிலத்தை யூனியனில் சேர்த்து 30 ஆண்டுகள் கழிந்த



(Statistical Abstract-லிருந்து எடுக்கப்பெற்றது, 1952, ப. 9.)

ஜனத்தொகையின் மையம் மேற்கே நகருதல்

ஐக்கிய அமெரிக்காவின் 'ஜனத்தொகை ஈர்ப்பு மையத்தை'யே (center of population gravity) ஜனத்தொகை மையமாகக் கொள்வதுண்டு. ஐக்கிய அமெரிக்கா தன்னைச் சமநிலைப்படுத்திக்கொள்ளும் மையமே ஜனத்தொகை மையமாகும். உறுதியான அடித்தளம் கனமில்லாமல் இருப்பதாகக் கொள்வோம்; அதன்மீது பரவியுள்ள மக்கள் அனைவரும் சமமாகப் பரவியவர்கள் என்றும் கொள்வோம்; ஒவ்வொருவரும் மையத்திலிருந்து தான் வாழும் தொலைவிற்குத் தக்கவாறு, ஜனத்தொகை மையத்தின்மீது ஆதிக்கம் செலுத்துவதாகக் கொள்வோம். இந்த நிலையில் ஜனத்தொகை மையத்தின்மூலம் ஐக்கிய அமெரிக்கா தன்னைச் சமநிலைப்படுத்திக்கொள்கிறது.

பின்னரே, அம் மாநிலத்தில் முதல் இருப்புப்பாதை ஏற் பட்டது.[8]

கார்ருடி இயந்திரங்களும் முட்கம்பியும்

குடும்பமனையகச் சட்டங்களைப் போலவும் இருப்புப்பாதை களைப் போலவும் பெருஞ் சமவெளிகளின் குடியேற்றத்திற்கு மற்றக் காரணங்களும் இருந்தன. ராக்கிகளுக்கும் 98ஆவது தீர்க்க ரேகைக்கும் இடையில் உள்ள பகுதியில் குடியேறும் விவசாயி சமாளிக்க வேண்டிய பெரும் பிரச்சினை மழை போதாமையே ஆகும். இப் பகுதியில், 'ஈரக் கசிவு போதுமான அளவுக்கு இல்லாததைப் பற்றியே சிந்தனையும் பேச்சும் உள்ளன' என்றும், 'பெரும் சமவெளியை உபயோகத்திற்குக் கொண்டு வருவதில், ஈரக் கசிவு பற்றிய பிரச்சினையே பெரும் பிரச்சினை யாக உள்ளது' என்றும் மிகப் பெரும் சரித்திர ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுகிறார்.[9] நீரைத் தேடியலைந்த வரலாறே அப் பகுதியின் வரலாறு ஆகும். நீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன் முதல் முயற்சியாளர்கள் கிணறுகளைத் தோண் டினர். பின்னர் மத்திய அரசாங்கம் ஹூவர் அணைக்கட்டு (Hoover Dam), கிராண்ட் கூலி (Grand Coulee) அணைக்கட்டு ஆகியவற்றைக் கட்டிப் பெரும் நீர்ப்பாசன வசதிகளுக்கு வழி வகுத்தது. உலர்ந்த பண்ணை முறை மூலமும், வறட்சியையும் மீறி வளரக்கூடிய கோதுமை, மக்காச்சோளம் போன்ற தானிய வகைகளை இறக்குமதி செய்து பயன்படுத்தியும் நீர்ப் பிரச்சினை யைத் தீர்க்க முனைந்தனர். எனினும், சராசரிப் புல்வெளி விவசாயி, காற்றுடி இயந்திரத்தை இயக்கி பூமிக்கடியிலிருந்து நீரினைக் குழாய்மூலம் மேலே கொண்டுவர முயன்றான். எனவே பெருஞ் சமவெளியினுள் எல்லைப்புற முன்னேற்றம் ஏற்படுமள வுக்கு உலோகத்தினாலாகிய சிறிய காற்றுடிப் பொறிகளும் உற்பத்தி செய்யப்பட்டன. பூமிக்கடியிலிருந்து நீரினைக் கொஞ் சம் கொஞ்சமாகத் தொடர்ந்து மேலே கொண்டுவரும் காற்றுடி இயந்திரம் அப் பகுதியில் மிக முக்கியமான இயந்திர சாதன மாகும்.

காற்றுடி இயந்திரம் இல்லையேல் புல்வெளிக் குடியேற்றம் மிக்கும் பின் தங்கி இருக்கும். முட்கம்பி வேலியிடாமல் இருந்

[8] 48ஆவது காங்கிரஸ், இரண்டாவது கூட்டம் (Congressional Record, Vol. XVI, Part I, ப. 109 (டிசம்பர் 9, 1884).

[9] டபிள்யூ. பி. வெப் (W. P. Webb), 'The Great Plains' (1931), 22. ப. 3

திருப்பின் சமவெளிப் பிரதேசம் கால்நடை மேய்க்கும் இடையர்களின் ஆதிக்கத்திலேயே தங்கியிருக்கும். 1860-1869 வரையில் மரத்தாலாகிய கம்புகளைக் கொண்டும், பாறைகளைக் கொண்டும், புதர்களைக் கொண்டும் வேலியிடப்பட்டது. முதல் முயற்சியாளர்கள் மரங்கள் நிறைந்த பகுதியைவிட்டுப் பிரிந்து புல்வெளிப் பிரதேசத்திற்குச் சென்றது வரையில், மேற்குறிப்பிட்ட முறையில் வேலியிடுதல் போதுமானதாகவிருந்தது. வளம் பெருகி இருந்தபோதிலும் திறந்த வெளி நிலத்தை முதல்முயற்சியாளன் பயன்படுத்தவில்லை. முடிவில் அப்பகுதிகளிலேயே அவன் நிலையாகத் தங்குவதற்குத் திட்டமிட்டபொழுது, வேலியிடுதலுக்கு வேண்டிய சிறந்த சாதனங்கள் கிடைக்குமா என்று ஆராய முனைந்தான். 1870-1879-ல் இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பெற்றது. ஜோசப் எஃப். கிளிட்டன் (Joseph F. Glidden), ஜேக்கப் ஹெயிஷ் (Jacob Haish) எனும் இல்லினாய் விவசாயிகள் இருவர் முட்கம்பி செய்யும் உரிமைப் பத்திரம் பெற்று, வேலி எழுப்புதல் குறித்த பிரச்சினைக்குத் தீர்வு கண்டனர். முட்கம்பிக்குக் கிடைத்த சந்தையைப் போல வேறு கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புகளுக்குச் சந்தை இது வரையில் கிடைத்ததில்லை. முட்கம்பியின் உற்பத்தியும் விற்பனையும் 1874-ல் 10,000 பவுண்டுகளாகும். ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் 8,05,00,000 பவுண்டுகளாயின. உற்பத்திப் பெருக்கத்தினால் விலை குறைந்தது. 1874-ல் நூறு பவுண்டுகள் 20 டாலர்களுக்கு விற்கப்பட்டன; 1897-ல் 1·80 டாலர்களுக்கு விற்கப்பட்டன.

இப்பொழுது பெரு முன்னேற்றம் ஏற்படுவதற்குரிய சூழ்நிலை உருவாகியது. டெக்சாசில் குடியேறிய பழைமையான ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: 'விவசாய நோக்கங்களுக்காகக் கறுப்புநிலங்கள் 1875 வரையில் கிடைக்கவில்லை. குறைந்த செலவில் வேலியிடுவதற்கு வழியில்லாததால், அந்த நிலங்கள் வளர்ச்சியுறவில்லை. மரங்களைக் கொண்டு வேலியிடும் பிரச்சினையே எழவில்லை. கிளிட்டன் செய்த முட்கம்பிகள் 1875ஆம் ஆண்டிலிருந்து இரயில் வண்டிகள்மூலம் அம் மாநிலத்தில் இறக்குமதி செய்யப்பட்டன. அதற்குப் பின்னர்க் குடியேறியவர்கள் கிழக்கு டெக்சாசுடன் நின்றுவிட்டனர்; கறுப்பு நிலங்களும் உபயோகத்திற்கு வந்தன.'[10] கால்நடைப் பண்ணைக்காரர்கள் வெளிப்புறங்களிலும் முனைகளிலும் உள்ள வயல்களில்

[10] Ibid., ப. 817.

நுழைந்து முட்கம்பிகளை நறுக்கி எறிந்தனர். எனினும், அவர்கள் முயற்சி வெற்றியடையவில்லை. விவசாயிகளின் வெற்றிக்கு முட்கம்பி வேலிகளே காரணம். கால்நடைப் பண்ணைக்காரர்கள் தங்கள் தொழில் முறையை மாற்றிக்கொள்ளவும் முட்கம்பி வேலிகளே காரணமாகும்.[11] 'விவசாயிகள் புல்வெளிகளைக் கடந்து சென்று சமவெளிப் பகுதியில் நுழைவதற்குக் காரணம் இருப்புப் பாதைகளும் அல்ல, குடும்பமனையகச் சட்டங்களுமல்ல, முட்கம்பி வேலியே', என்று வெப் கூறுகிறார். 'முட்கம்பி வேலி முறை அழுலுக்கு வந்த பின்னரே வளங்கொழிக்கும் புல்வெளிச் சமவெளிகளிலும் குடியேற்றம் பெருகத் தொடங்கியது,' என்றும் வெப் கூறுகிறார்.[12]

முழுதும் விரிவாகச் சொல்லத் தேவையில்லை எனினும், இறுதி எல்லைப்புறக் குடியேற்றம் இந்தியர்களை விரட்டுவதில் போய் முடிந்தது. அளவையெடுப்பு அதிகாரிகளும் சுரங்க முதலாளிகளும் தொடர்ந்து இந்தியர்கள் வாழும் பகுதிகளில் தலையிட்டனர். என்றாலும், மீசிசிப்பிக்குக் குறுக்கே வசித்த இந்தியர்கள் ஐக்கிய அமெரிக்காவுடன் பொதுவாகவே நட்புறவு கொண்டிருந்தனர். முடிவு நெருங்கிவிட்டது என்றுணர்ந்த இந்தியர்கள் முன்னேறித் தலையிடும் நாகரிகத்தை முழுமூச்சுடன் எதிர்த்துநின்றனர். சயக்ஸ் (Sioux) கலவரம், 1862-ல் துவங்கியது. அதைத் தொடர்ந்து 1860-1869-ல் சேயன்னி (Cheyenne) கலவரமும், மற்றப் பழங்குடி மக்களின் கிளர்ச்சிகளும் நடைபெற்றன. இந்தியர்களின் போராட்டத்தின் இறுதிக் கட்டம் 1876-ல் நடந்த சயக்ஸ் போர் ஆகும். அப்போரில் சிட்டிங் புல் (Sitting Bull) எனும் இந்தியர்களின் தலைவர் தோல்வியுற்றார். மேற்கத்திய இந்தியர்களை விரட்டும் காரியத்தில் சிவப்பிந்தியர்களின் துரோகத்தைவிட ஒழுங்குடன் அமைந்த இராணுவத்தையும் அறுகுழல் துப்பாக்கியையும் பயன்படுத்திய வெள்ளைக்காரப் படையெடுப்பாளனின் கொடும் பேராசையே வெளிப்படையாகத் தெரிந்தது. இத்தகைய பெரும் துன்பவினை 1887-ல் டாவ்ஸ் சட்டத்தின்மூலம் வெளியாயிற்று. அச் சட்டத்தின்மூலம் வெள்ளைக்காரனின் நாகரிகத்தை இந்தியர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் வலியுறுத்தியது. மேலும், நிலம் பழங்குடி மக்களுக்குச் சொந்தமாக இருக்கும் சம்பிரதாயமுறை ஒழிக்கப்பெற்று, ஒவ்வொரு பழங்குடிக் குடும்பத்

[11] இதே அதிகாரத்தில் 'கால்நடைப் பண்ணைக்காரர்களின் எல்லைப் புறம்' என்ற தலைப்பைப் பார்க்க.

[12] டபிள்யூ. பி. வெப், op. cit., ப. 817.

தலைவனுக்கும் 160 ஏக்கர்களில் கால் பகுதியும், தனிப்பட்ட ஆடவர்களுக்கும் அனுதைகளுக்கும் எட்டில் ஒரு பகுதியும், ஒவ்வொரு குழந்தைக்கும் பதினைந்தில் ஒரு பகுதியும் பிரித்துக் கொடுக்கப்பெற்றன. புதிதாக நிலத்தைச் சொந்தமாக்கிக்கொண்டவனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், 25 ஆண்டுகளுக்கு நிலத்தை விற்கவோ, அடைமானத்திற்கு வைக்கவோ கூடாதென்றும், அப்பொழுது அந்த நிலத்தின்மீது வரிவிதிக்கக் கூடாதென்றும் விதிசெய்யப்பட்டது. தங்களுடைய பழங்குடி மக்களினத்தைவிட்டு விலகிக் குடும்பமனையகங்களை ஏற்றுக்கொண்ட இந்தியர்களுக்கு டாவ்ஸ் சட்டம் பிரஜா உரிமை வழங்கியது. இந்தியர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியவில்லை எனினும், அச் சட்டம் குடியேறும் வெள்ளையர்களுக்கு வேண்டிய நிலத்தினைப் பிரித்துக் கொடுத்தது.

எல்லைப்புறத்தின் முடிவு

ஒரு சதுர மைலுக்கு இரண்டு முதல் ஆறு பேர்களை மட்டும் கொண்ட பகுதியாகவே எல்லைப்புறம் இருந்தது. எல்லைப்புறம் 1890-ல் மறைந்தது. மிகவும் வளமான நிலமனைத்தும் பயிர்த் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டன. விவசாயிகளின் எல்லைப்புறம் கால்நடைப் பண்ணைக்காரர்களின் பகுதிகளையும்கூட விழுங்கி விட்டது; மேலும், ராக்கிகளிலுள்ள சுரங்கப்பகுதிகளிலும் விவசாயி எல்லைப்புறம் பரவியது. பசிபிக் கடற்கரைமீது சயராசுக்கு மேற்கில் உள்ள வளமான நிலத்தில் விளைச்சல் உயர்ந்திருந்தது. விலையுயர்ந்த உலோகத்தால் கிடைத்த இலாபத்தைவிட மிகுதியான இலாபமே பயிர்த்தொழிலால் கிடைத்தது. 1904-ல் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள் 70,00,00,000 ஏக்கர்கள் ஆகும். உலர்பண்ணைமுறை, நீர்ப்பாசனம், வடிகால் திட்டங்கள் முதலியவற்றிற்கே அராசங்க நிலத்தின் பெரும்பகுதி பயனுயிற்று; மற்றக் காரியங்களுக்கு அவை பயனில்லை. மிசிசிப்பிக்கும் மலைகளுக்கும் இடையிலுள்ள பெரும் பிரதேசம், பொருளாதார ரீதியாகச் சொல்ல வேண்டுமெனில், விவசாயப் பிரதேசமே ஆகும். புதிதாகக் குடியேறிய பிரதேசங்கள் பல்வேறு பிரதேசங்களாகப் பிரிந்தன. மோன்டானா, டெக்கோட்டாஸ் பகுதிகளில் கோதுமை விளைந்தது. கான்சாஸ், அயோவா, நெப்ராஸ்கா பகுதிகளில் மக்காச்சோளமும், மற்றத் தானிய வகைகளும் விளைந்தன. அர்க்கான்சாஸ், டெக்சாஸ் பகுதிகளில் பருத்தி விளைந்தது; மேய்ச்சல் பூமிகளும் அங்கிருந்தன. அப் பிரதேசங்களனைத்தும் மாநில இராஜ்ஜிய அந்தஸ்தைப் பெற்றவுடன், குடியேற்றமும் பொருளாதார முன்னேற்றமும் துரிதமடைந்தன,

வட டெக்கோட்டா, தென் டெக்கோட்டா, மோண்டானா, வாஷிங்டன் ஆகிய மாநில அரசுகள் 1889-ல் முகிழ்த்தன. ஐடாகோ, வியோமிங் மாநில அரசுகள் 1890-ல் உருவாகின. மோர்மன் சர்ச் 1890-ல் பலதார மணத்தைத் தடைசெய்த பின்னர், யுட்டா மாநில அரசு 1896-ல் ஏற்பட்டது. ஒக்லாஹோமா மாநில அரசு 1907 ஆம் ஆண்டிலும், நியூமெக்சிகோ, அரிசோனா மாநிலங்கள் 1912 ஆம் ஆண்டிலும் ஏற்பட்டன.

எல்லைப்புற அமைப்பு மறைந்ததுடன் அமெரிக்க வரலாற்றில் ஒரு சகாப்தம் முடிவுற்றது. பெரும்பகுதி காலிநிலமும், தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கும் எல்லைப்புறமும் மேற்கு ஐரோப்பியப் பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு மாறுன சூழ்நிலைகளை ஐக்கிய அமெரிக்காவில் ஏற்படுத்தின. கிழக்குப் பிரதேசத்தில் அமைதி இழந்து தவித்த மக்களுக்கு எல்லைப்புறம் வழிவகுத்துத் தந்தது. ஐரோப்பாவிலிருந்து வந்து குடியேறிய இலட்சக்கணக்கான வெள்ளையர்களுக்கும் எல்லைப்புறம் வழி வகுத்துத் தந்தது. எல்லைப்புறம் வெளிநாட்டு வர்த்தகத்தின் அளவையும் போக்கையும் மாற்றியமைத்ததுடன், உள்நாட்டுத் தொழிலின் இயல்பையும் இருப்பையும் (Location) உருவாக்கியது. நம்முடைய நாணய முறையையும் இருப்புப்பாதை வரலாற்றையும் எல்லைப் புறம் உருவாக்கித் தந்தது. பொருளாதார வரலாற்றைச் செப்பணிட்டதுடன் அமையாது, நம்முடைய சமூக, அரசியல் வளர்ச்சியையும் எல்லைப்புறம் செப்பனிட்டது. மேலும், அமெரிக்க உளநூலையும் அமெரிக்கத் தத்துவ சாஸ்திரத்தையும் ஒழுங்குறச் செய்து மிளிரச்செய்தது.

எல்லைப்புறத்தினுல் ஏற்பட்ட விளைவுகளைப்பற்றியும், எல்லைப் புறம் மறைந்தால் ஏற்படக்கூடிய மாற்றங்களைப் பற்றியும் தற்காலத்து வரலாற்றுசிரியர்களும் பொருளாதார வல்லுநர்களும் மிகவும் சுவைபட எழுதியுள்ளனர். எனினும், ஓர் எச்சரிக்கை தேவை. அருமையான காலிநிலம் தீர்ந்துபோய் இருக்கலாம். ஆனுல், 1890-க்குப் பின்னரும் வளம் குன்றிய நிலங்கள் ஏராளமாக இருந்தன. தற்காலத்து விஞ்ஞான முறைகளைப் பயன் படுத்தி அந்நிலங்களில் உற்பத்தியைப் பெருக்க இயலும். மலிவான விலைக்கு நிலங்கள் நிறையக் கிடைத்தன.[13] உயர்தர காலிநிலம் தேடியோர் ஆயிரக்கணக்கில் இருந்தனர்; அவர்களனைவரும் கனடாவுக்குச் செல்ல முடியும். இருபதாம் நூற்

[13] முன்னரே குறிப்பிட்டுள்ளதுபோல 1890-க்குப் பின்னர் குடும்ப மனையச் சட்டத்தின்மூலம் மூன்று பங்கு நிலங்கள் அதிகமாக உரிமை பெற்றன.

ரூண்டின் குடியேறிகள் தாம் வாங்கும் நிலத்திற்குப் பணம் தந்தே ஆகவேண்டும். ஆனால், ஆரம்பகாலக் குடியேறிகள் அனுபவித்த தொல்லைகளை அவர்கள் அனுபவிக்கத் தேவையில்லை.

என்றாலும், இருபதாம் நூற்றாண்டில் ஐம்பது ஆண்டுகள் கடந்தவுடன், எல்லைப்புற மறைவின் விளைவுகள் தென்படலாயின. நிலச் சேர்ப்பு (conservation), நிலத்தைச் சாகுபடிக்குக் கொணர்தல், விஞ்ஞான விவசாய முறை முதலியவற்றிற்கு ஊக்கமளிக்கப்பெற்றது. விளைவுபறித் தொழில்களுக்கு (extractive industries) பொறிவழித்தொழில் வெறும் பின்னேட்டாக (supplement) இருந்த நிலை குறைந்து, முந்திய தொழில்களுக்குரிய படிமுறைகளை மேலும் செப்பனிட்டு முன்னேற்றும் அளவுக்கு உயர்ந்த இயந்திரங்கள் உபயோகத்திற்கு வந்தன. துவக்க காலத்தில் வர்த்தகம் என்பது, விவசாயப் பண்டங்களையும் மூலப்பொருள்களையும் அரைகுறையான பொறிசெய் பொருள்களையும் ஏற்றுமதி செய்யும் தொழிலாகவும், பொறிசெய் (முற்றுப்பெற்ற) பண்டங்களை இறக்குமதி செய்யும் தொழிலாகவுமே கருதப்பட்டு வந்தது. ஆனால், பின்னர் காலப்போக்கில் வர்த்தகம் என்பது விவசாயப் பண்டங்களையும் மூலப்பொருள்களையும் இறக்குமதி செய்து, பொறிசெய் பண்டங்களை ஏற்றுமதி செய்யும் தொழிலாகக் கருதப்பட்டது. இவ்வாறு மேற்கு ஐரோப்பாவைப் போல ஐக்கிய அமெரிக்காவில் பொருளாதார வளர்ச்சிக்கு வேருன்றப்பெற்றது. காலிநிலம் தீர்ந்த பின்னர், எந்த அளவுக்குக் குத்தகை நிலமுறையும், தொழிற்சங்க வளர்ச்சியும், வர்க்க உணர்ச்சிப் பெருக்கமும் பாதிக்கப்படும் என்பதுபற்றி இப்பொழுது கருத்துத் தெரிவிக்க இயலாது. ஆயினும், புதிய பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் தலையெடுத்தன. அடுத்த நூற்றாண்டில் இப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் பெருஞ் சிந்தனையாளர்கள் கடுமையாக உழைக்க நேரிடும்.[14]

மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

பில்லிங்டன், ஆர். ஏ. (Billington, R. A.), 'Westward Expansion', அதி. 30-36.

[14] சி. டபிள்யூ. ரைட் (C. W. Wright), "The Disappearance of Free Land in our Economic Development", American Economic Review, XVI, 265-271. (Supplement, March, 1926), reprinted in F. Flugel and H. U. Faulhner, "Readings in the Economic & Social History of The United States. ப. 758-764.

ஓஸ்குட், ஈ. எஸ். (Osgood, E. S.). 'The Day of the Cattlemen', அதி. 4, 5.

வெப், டபிள்யூ. பி. (Webb, W. P.), 'The Great Plains' அதி. 5-8.

ஷானன், எப். ஏ. (Shannon, F. A.), 'The Farmer's Last Frontier', அதி. 9.

கேட்ஸ், பி. டபிள்யூ. (Gates, P. W.) 'The Homestead Law in Incongruous Land System', American Historical Review' XVI, 652-611, (ஜூலை. 1936).

ஹெட்ஜஸ், ஜே. பி. (Hedges, J. P.), "The Colonisation Work of The Northern Pacific", Missisippi Valley Historical Review, XIII, 311-342, (டிசம்பர், 1926).

புளுகல், எப். & பாக்னர், ஹெச். யூ. (Flugel, F., and Faulhner, H. U.), 'Readings in the Economic and Social History of the United States', ப. 741-764,

கலைச்சொல் அகராதி

(ஆங்கிலம்—தமிழ்)

A

Absentee landlordism	—	தலத்திலில்லா நிலக்கிழார் முறை.
Abstract measure	—	கருத்தளவை.
Advance	—	முன்பணம்.
Agricultural heart of North America	—	வட அமெரிக்காவின் விவசாய நெஞ்சம்.
Air-brake	—	காற்றியக்கு முட்டுக்கட்டை.
American System	—	அமெரிக்க அமைப்புமுறை.
Anti-rent wars	—	குத்தகைவார எதிர்ப்புப் போர்கள்.
Arrears of Interest	—	வட்டி நிலுவைகள்.
Artrolable	—	உயரம் கணக்கிடும் கருவி.

B

Bank of England	—	இங்கிலாந்து பாங்கு.
Barometer	—	பாரமானி.
Bill of Rights	—	உரிமை மசோதா.
Bills of Credit	—	கடன் உண்டியல்.
Block System of Signals	—	கைகாட்டிகளின் கூட்டுமுறை.
Boats, Packet	—	அஞ்சல் படகுகள்.
Boom	—	பொருளாதார வீக்கம்.
Boston Tea Party	—	போஸ்டன் தேநீர் விருந்து.
Bourgeoisie	—	பூர்ஷுவாக்கள்.
Bounty	—	அரசாங்கக் கொடை.
Boycott	—	பகிஷ்காரம்.
Buffer State	—	இடைப்படு நாடு.
By-products	—	துணைப்பண்டங்கள்.

C

Cables	—	கடலடித் தந்தி முறைக்கள்.
Camp fire	—	கூடார நெருப்பு.
Cape of Good Hope	—	நன்னம்பிக்கை முனை.
Cape of Storm	—	புயல்முனை.
Capitalization	—	மூலதன ஆக்கம்.
Capital, liquid	—	ரொக்க முதல்.
Carrying trade	—	கப்பல் சரக்கேற்று வியாபாரம்.
Casting Furnaces	—	வார்ப்பு உலைகள்.
Cattle rangers	—	கால்நடைப்பராமரிப்பாளர்கள்
Center of Population Gravity	—	ஜனத்தொகை ஈர்ப்பு மையம்.
Cereals	—	கூலவகைகள்.
Certificate of Indebtedness	—	கடன் பத்திரங்கள்.
Charter	—	உரிமைப் பத்திரம்.
Charts	—	விளக்கக் குறியீட்டுப் படங்கள்.
Chemicals	—	இரசாயனப் பொருள்கள்.
Cited	—	எடுத்துக்காட்டப்பெற்றது.
Climate	—	தட்பவெப்ப நிலை.
Closed shop	—	கலடையடைப்பு; மூடிய கடை.
Clove	—	மணப்புல்.
Coins of small denominations	—	சிறிய இனக் காசுகள்.
Cold-storage	—	குளிர்முறைப் பாதுகாப்பு.
Collective Bargaining	—	கூட்டுப் பேரம்.
Colony	—	காலனி, குடியேற்ற நாடு.
Colonization	—	குடியேற்றம்.
Colony Empires	—	காலனி சாம்ராச்சியங்கள்.
Commercial crops	—	வர்த்தகப் பயிர்.
Commission	—	கழிவு.
Commutation	—	பண ஈடுமாற்றம்.
Compass	—	திசைகாட்டு கருவி.
Condenser	—	அமைவு.
Conductor	—	மின் ஊடுகடத்தி.
Conservative	—	பழைமைப் பற்றுளர்.
Contour	—	சம உயரக் கோடு.
Counter Revolution	—	எதிர்ப் புரட்சி.
Counting House	—	கணக்ககம்.
Coupling apparatus	—	இடையிணைப்புக் கருவி.
Crane	—	சுழற்சிமுறை மாற்றுபொறி.

Crop rotation — மாற்றுப் பயிர்முறை.
Cross currents — குறுக்கோட்டங்கள்.
Crude materials — முதிராமுதல்நிலைப் பண்டங்கள்.
Crusades — சிலுவைப் போர்கள்.
Currency — நாணயம்.
Cutlery — இரும்புத் தொழிற் கருவிகள்.
Cyclical fluctuations — பெருஞ்சுழல் ஏற்ற இறக்கங்கள்

D

Decimal system — தசாம்ச முறை.
Declaratory Act — பிரகடனச் சட்டம்.
Decline — சரிவு
Deflation — பணவாட்டம்.
Democratic Party — ஜனநாயகக் கட்சி.
Depression, economic — பொருளாதார மந்தம்.
Despotic Government — தன்முனைப்பாட்சி.
Diplomacy — தூதாண்மைத்திறம்.
Discriminating, foreign — அயல்நாட்டுப்பேதங்காட்டுகை
Dislocation, economic — பொருளாதரச் சுளுக்கு.
Dominions — குடியேற்ற உரிமை நாடுகள்.
Drainage — வடிகால்கள்.
Dry Farming — உலர் பண்ணைமுறை.
Duties, ad valorem — பெறுமான விகித வரிகள்.
Duties, countervailing — ஈடுசெய் வரிகள்.
Duties, diferential — வேறுபாடு காட்டும் வரிகள்.
Duties, discriminating — பேதங் காட்டும் வரிகள்.
Duties, specific — தனித்த வரிகள்.
Dyestuffs — வண்ண மை வகைகள்.

E

Easy Money — எளிய நாணயமுறை.
Emigration — குடியேற்றம்.
Engines, high-power — உயர் அழுத்தம் உள்ள இயந்திரங்கள்.
Engines, low-power — குறை அழுத்தம் உள்ள இயந்திரங்கள்.
Entails — மரபுரிமையில் கட்டுப்பட்ட நிலவுடைமை; நிலவுடைமைக் கட்டுப்பாடு.
Enterprise — தொழில் துணிவு.

Enumarated articles — விலக்கப்பட்ட பண்டங்கள்.
Estates — எஸ்டேட்டுகள்.
Exchange rate — நாணயமாற்று வீதங்கள்.
Excise — ஆயத்தீர்வை.
Exemption — விலக்குரிமை.
Expedition — நிலந்தேடும் ஆராய்ச்சிப் பயணம்.
Extractive industries — விளைவு பறித் தொழில்கள்.

F

Far East — தூரக்கிழக்கு.
Farm-land — விளைச்சல் நிலம்.
Father of Water — நீர்வளத்தின் தந்தை.
Federal Reserve System — பெடரல் காப்பு நிதி அமைப்பு.
Feudalism — படைமானிய முறை; நிலப்பிரபுத்துவ முறை; நிலச்சுவான்தார் முறை.
Fiat money — ஆணைச் செலாவணி.
Fine — தண்டம்; தண்ட வரி.
Fiscal policy — அரசிறைக் கைக்கோள்.
Fly shuttle — பறக்கும் தறியோட்டக் கருவி.
Food animals — உணவிற்குரிய விலங்கினங்கள்
Forge — உலைக்களம்.
Forty-niners — நாற்பத்தொன்பதின்மர்.
Four profits — நான்கு இலாபங்கள்.
Freight rate — கப்பல் சரக்கேற்றுக் கூலிவீதம்
Funding Act — கடன் கழிவு நிதிச் சட்டம்.

G

Gang System — குழு முறை.
Garrisons — கோட்டைப் பாதுகாப்புப் படை
General welfare — பொது நலன்.
Geological history — நிலவமைப்புச் சரித்திரம்.
Geologists — மண்ணூல் அறிஞர்கள்.
Gold-seeker — பொன் தேடி.
Grants-in-aid — உதவி மானியங்கள்.
Gresham's Law — கிரஷாம் சட்டம்.
Guild system — கில்டு முறை.
Gulf states — வளைகுடா மாநிலங்கள்.
Gulf stream — வளைகுடா நீரோட்டம்.

H

Hard currency — அருமைப் பணம்.
Harrow — பரம்பு.
Head right — தலை உரிமை.
Headwaters — நதித் தலைவாயில்.
Heavy industries — கனரகத் தொழில்கள்.
Home Government — தாயக அரசாங்கம்.
Homestead Act — குடும்ப மனையகச் சட்டம்.
Hookworm — கொக்கிப் புழு.
High Court — உயர் நீதிமன்றம்.
Highwaymen — ஆறலைகள்வர்.
Human-use regions — மனித இனப் பயன் பிரதேசங்கள்.
Humidity — ஈரக்கசிவு.
Hundred Associates, the — நூற்றுறுப்பினர் குழு.
Hydro-electric Power — நீர் மின் சக்தி.

I

Immigration — குடியேற்றம்; குடிநுழைவு.
Impulses — தூண்டுதல்கள்.
Inclined planes — சாய்தளங்கள்.
Indentations — வெட்டப்பெற்ற கடற்கரை ஓரங்கள்.
Indentured servant — ஒப்பத்தக் கூலியாள்.
Infant industries argument — சிற்றிளந் தொழிற் காப்பு விவாதம்.
Inheritance — மரபுரிமைச் சொத்துப்பேறு.
Initiative — முதற்படி.
Intensive methods of cultivation — வேளாண்மையின் தீவிர வகைகள்.
Island ports — தீவுத் துறைமுகங்கள்.
Isthmus — பூசந்தி.

J

Jenny, spinning — நூற்கும் ஜென்னி.
Joint-stock companies — கூட்டுப் பங்கு கம்பெனிகள்.

K

Knight — வீரன்.
Knighthood — வீரவிருது.

L

Labour-saving machinery	—	உழைப்புச் சேமிப்புப் பொறி.
Land warrants	—	நில உத்தரவாதங்கள்.
Land tenure	—	நிலவுரிமை முறை.
Legal tender	—	சட்டமுறைப் பணம்.
Loan Banks	—	கடன் பாங்குகள்.
Loan-office certificates	—	கடன் அலுவலகப் பத்திரங்கள்.
Localization of Industries	—	தொழிற் குவிப்பு.
Loophole	—	வழு.
Loose construction	—	தளர்வித்திகளுடைய கட்டுமானம்.
Lien Laws	—	மீள்வுரிமைச் சட்டங்கள்.
Light industries	—	எளிய தொழில்கள்.
Luxuries	—	போகப்பொருள்கள்.

M

Machines, mowing	—	புல் அறுக்கும் பொறிகள்.
Machines, reaping	—	அறுவடைப் பொறிகள்.
Mainland colonies	—	நிலப் பெரும்பகுதி காலனிகள்.
Man-hour	—	ஆள் உழைப்பு மணிநேரம்.
Man-hour output	—	ஆள் உழைப்பு மணிநேர உற்பத்தி.
Manorial Courts	—	நிலச்சுவான்தார் நீதிமன்றங்கள்
Manorial system	—	மேனர் பண்ணை முறை.
Manufacturing	—	பொறிவழிப்படுத்தல்.
Maps	—	நிலவரைபடங்கள்.
Mechanization	—	இயந்திரமயமாக்குதல்.
Merchandise	—	வாணிகச் சரக்கு.
Merchant capitalism	—	வர்த்தக முதலாளித்துவம்.
Merchant Marine	—	வர்த்தகக் கப்பற்படை.
Middle Ages	—	இடைக்காலம்.
Middle classes, lower	—	கீழ்மட்ட மத்தியதர வர்க்கத்தினர்.
Middle classes, upper	—	மேல்மட்ட மத்தியதர வர்க்கத்தினர்.
Middlemen	—	தரகர்கள்.
Militarism	—	இராணுவத்துவம்.
Minerals	—	கனிப்பொருள்கள்; தாதுப் பொருள்கள்.
Mint	—	நாணயசாலை.

Miscellaneous receipts — சில்லறையான வரவுகள்.
Monarchy — கோனுட்சி; முடியாட்சி.
Monopoly — சர்வாதீனம்.
Mortgages — அடைமானங்கள்.
Mother countries — ஏகாதிபத்தியத் தாய்நாடுகள்.
Motive power — இயக்கு சக்தி.
Mule — மியூல்.

N

Natural gas — இயற்கை வாயு.
Natural resources — இயற்கை வளங்கள்.
Naval stores — கப்பல்துறைச் சரக்குகள்.
Navigation Acts — கடற்கடவுச் சட்டங்கள்.
New deal — புதுத்தீர்வு.
Nobility — பிரபுத்துவம்.
Non-enumerated articles — விலக்கப்படாத பண்டங்கள்.
Non-importation Movement — இறக்குமதி மறுப்பியக்கம்; இறக்குமதி தவிர்ப்பியக்கம்.
No n-intercourse Agreements — தொடர்பின்மை ஒப்பந்தங்கள்.
Nullification Ordinance — தள்ளிவைக்கும் அவசரச் சட்டம்.

O

Observations — காட்சி அறிவு; கண்டுரைகள்.
Oligarchy — சிறு குழுவாட்சி.
One-crop system of Agriculture — ஒருபயிர் விவசாய முறை.
Opening gun of the Revolution — புரட்சியின் முதல் துப்பாக்கி.
Order of Nobility — பெருமக்கள் குடிமுறை.
Ordinance of Nullification — செல்லாதெனத் தள்ளிவைக்கும் அவசரச் சட்டம்.
Outposts — எல்லைப்புறத் தளங்கள்.
Overland Trails — நிலவழித் தடங்கள்.

P

Panic, economic — பொருளாதார பீதி.
Paper money — காகிதப் பணம்.
Parasite — ஒட்டுவார் ஒட்டி.
Par value — மாற்று மதிப்பு.

Pastures — மேய்ச்சல் நிலங்கள்.
Patents — உரிமைக் காப்பு.
Paternalism — தந்தையம்; தந்தை சார்புக் கொள்கை.
Patroon system — நிலப்பிரபுத்துவ முறை.
Per capita value — ஒவ்வொருவர்க்குரிய மதிப்பு.
Petition — மனு.
Physiographic conditions — நிலவுருவச் சூழ்நிலைகள்.
Physiographic factors — நிலவுருவக் கூறுகள்.
Physiographic influences — நிலவுருவத் தூண்டுதல்கள்.
Physiography — நிலவுருவ இயல்.
Pig iron — வார்ப்பு இரும்பு.
Pioneers — முதல் முயற்சியாளர்கள்; முன்னோடிகள்.
Piston — உந்துதண்டு; பிஸ்டன்.
Plains — சமவெளிகள்.
Prairie schooners — புல்வெளி இரட்டைப் பாய்க் கப்பல்கள்.
Price structure — விலைக் கட்டுமானம்.
Primogeniture — தலைமூப்புரிமை.
Privateering — தனியார் கப்பற்படை.
Process — படிமுறை.
Products, finished — முற்றுப்பெற்ற பண்டங்கள்.
Products, manufactured — பொறிவழிப் பண்டங்கள்.
Proprietors, landed — நிலவுடைமையாளர்கள்.
Proprietory rights — நிலவுடைமை உரிமைகள்.
Ports of Entry — நுழைவுரிமைத் துறைமுகங்கள்.
Power-loom — விசைத்தறி.
Purchase, new — புதிய கொள் முதல்.
Puritans — மதத் தூய்மையாளர்கள்.
'Putting out' system — 'கொடுத்துச் சேகரிப்பு' முறை.

Q

Quarantine laws — தொற்றுத் தடுப்புச் சட்டங்கள்
Quit rent — வரி.
Quoted — மேற்கோள் காட்டியது.

R

Rarities — அருமைகள்.
Raw materials — கச்சாப் பொருள்கள்.

Ready-made clothing	—	உடனடித் தயாரிப்புத் துணி வகைகள்.
Recall	—	திரும்பப்பெறுதல்.
Receipts	—	இரசீதுகள்.
Recession, economic	—	பொருளாதாரப் பின்னிறக்கம்.
Reciprocal trade privileges	—	பரிமாற்ற வர்த்தகச்சலுகைகள்.
Reciprocal trade provisions	—	பரிமாற்ற வர்த்தகக் காப்பு வாசகங்கள்.
Reclamation	—	நிலச் சாகுபடிச் சீரமைப்பு.
Reconstruction, economic	—	பொருளாதாரச் சீரமைப்பு.
Recovery, economic	—	பொருளாதார மீட்சி.
Re-exports	—	மறு ஏற்றுமதிகள்.
Referendum	—	குடி ஒப்பம்.
Regulators	—	ஒழுங்காளர்கள்.
Renaissance	—	மறுமலர்ச்சி.
Rent	—	குத்தகை வாரம்.
Republican party	—	குடியரசுக் கட்சி.
Retaliation	—	எதிர்த்தாக்கு முறை.
Revenue taxes	—	வருவாய் நோக்கு வரிகள்.
Rolling-stock	—	உருள்கலங்கள்.
Royalty	—	ஆதாயப் பங்கு.

S

Safety fund	—	காப்பு நிதி.
Safety valve	—	காப்புக் கருவி.
Salutary neglect	—	நலன் பயக்கும் புறக்கணிப்பு.
Scarcity of labour	—	தொழிலின் கிடைப்பருமை.
Scare-crow	—	புள்ளோட்டி உருவம்.
Screw propeller	—	திருகு இயக்கி.
Sectionalism	—	வகுப்புணர்ச்சி.
Sections	—	பகுப்புகள்.
Security	—	பிணையம்.
Seigniories	—	பெருநிலக் கிழமை.
Separatists	—	மதப் பிரிவினையாளர்கள்.
Separator	—	பிரிக்கும் கருவி.
Settlement	—	குடியேற்றம்; குடியேற்றப்பகுதி.
Shares	—	பங்குகள்.
Slave coast	—	அடிமைக் கரை.
Slave economy	—	அடிமைமுறைப் பொருளாதாரம்.

Smelting furnace — உருக்கு உலை.
Sovereignty — இறைமை.
Specialisation, sectional — வகுப்புவழி சிறப்புப் பயிற்சி.
Specie circular — உலோக நாணயச் சுற்றறிக்கை.
Speculators — ஊகவணிகர்.
Spinning wheel — நூற்கும் சக்கரம்.
Squatters' Protective Associations — கைப்பற்றினோர் பாதுகாப்புக் கழகங்கள்.
Stamp Act — முத்திரைச் சட்டம்.
Stamps — முத்திரைத் தகடுகள்.
Standardization — தரப்படுத்தல்.
Store, common — பொதுக் கிடங்கு.
Strict construction — கடுவிதிகளுடைய கட்டுமானம்.
Subordinate jurisdiction — கீழடங்கிய அதிகாரவரம்பு.
Subsidy — உதவிக்கொடை.
Sugar Lords — சர்க்கரைப் பிரபுக்கள்.
Sunken rail — அழுந்திய தண்டவாளம்.
Supplement — பின்னெட்டு.
Supreme Court — தகுமை நீதிமன்றம்.
Synthetic products — கலப்புமுறைப் பண்டங்கள்.
Syphilis — மேக்நோய்.
System of yearly fleets — ஆண்டுக் கப்பல்முறை.

T

Tablelands — மேட்டுச் சமவெளிகள்.
Tariffs, discriminating — பேதங்காட்டும் சுங்கவரிகள்.
Tariffs, protective — காப்புமுறைச் சுங்கத் தீர்வைகள்.
Task system — வேலை முறைமை.
Technology — தொழில்நுண்ணியல்.
Telegraph, electro-magnetic — மின்காந்தத் தந்திமுறை.
Tenancy — நிலவார உரிமை.
Tenants — குத்தகைக்காரர்கள்.
Tenements — குடியிருப்பு மனைகள்.
Thresher — கதிரடிக்கும் பொறி.
Tidewater sections — கடலலைப் பகுதிகள்
Tonnage duty — எடைவரி.
Topography — இடவிவர இயல்.
Township —

Trading post — வர்த்தக நிலையம்.
Treasurer of the State — இராச்சியக் கருவூலக் காப்பாளர்.
Treasury Notes — கருவூல நோட்டுகள்.
Triangular trade — முக்கோண வர்த்தகம்.
Tributaries — கிளைநதிகள்.
Trustees — தர்மகர்த்தாக்கள்.

U

Unionism, new-line — புதிய வழி யூனியனிசம்.
Unionism, old-line — பழைய வழி யூனியனிசம்.
Unionization — யூனியன்மயமாக்குதல்.
United States of America — ஐக்கிய அமெரிக்கா.
Unmixed blessing — கலப்பற்ற அருட்பேறு.
Urbanization — நகர்மயமாதல்.
Utopia — யுத்தோப்பியா.

V

Vested interests — ஊன்றிய நிலமிகள்.
Veto — மறுப்பாணை.
Vigilance Committees — கண்காணிப்புக் கமிட்டிகள்.
Virgin soil — கலப்பை படாத பூமி

W

Warp — பாவு நூல்; நீட்டிழை
Water-frame — நீராற்றல் இயக்கு கருவி.
Water-power — நீராற்றல்; நீர்ச்சக்தி.
Whiskey Rebellion — விஸ்கி கிளர்ச்சி.
Windmills — காற்றடி இயந்திரங்கள்.
Workshop — பட்டறை.
World, new — புதிய உலகம்.
World, old — பழைய உலகம்.

Y

Yeomen — சுயேச்சைக் குடியானவர்கள்.

பொருளடக்க அகரவரிசை அட்டவணை

அ

அலபாமா, 3, 5.

அலமான்ஸ் போர், 161.

அலாஸ்கா, 3.

அலெகனி மலைகள், 4.

அல்சப், ஜார்ஜ், (மேற்கோள்), 114.

அலுமினியம், 39.

அல்வார்டு, சி. டபிள்யூ. (எடுத்துக்காட்டு), 146.

அமெரிக்கா, கண்டுபிடிப்பு, 50, 59.

அமெரிக்கன், எக்ஸ்பிரஸ் கம்பெனி, 466.

அமெரிக்கத் தோல் கம்பெனி, 304.

அமெரிக்க உழவுத் தொழில், (எடுத்துக்காட்டு), 95, 101, 105, 126.

அமெரிக்க முறை, 266, 315, 330.

அடிமை முறை எதிர்ப்பியக்கம், புரட்சிக் காலத்தில், 207; புரட்சிக்குப் பின்னர், 295, 327, 328, 518, 519, 532, 533, 542, 543.

அப்பலாச்சீஸ், (அபேசெஸ்), 97, 582.

அப்பாச்சியன் மலைகள், 3, 5, 8.

அரிசோனா, 88, 583, 602.

அர்க்கன்சாஸ் நதி, 3.

அஸ்டோரியா, ஓரிகன், 304.

அச்சிசன், டோப்பிகா-சாந்தா பீ இருப்புப்பாதை, 595.

அட்லான்டிக் கடற்கரை நகரங்கள், 4. (துறைமுகங்கள், 4, 9, 118.)

அட்லான்டிக் கடற்கரைச் சமவெளி, 3, 4.

அட்லான்டிக் மகாசமுத்திரம், 2, 9. (வர்த்தகப் பாதைகளில் மாற்றம், 57.)

அரசாங்கக் கொடை, (காலனி காலத்தைச் சார்ந்த, 123, 131, 134, 138, 139, 179, 197, 213; இராஜ்ஜியத்தைச் சார்ந்த, 214; நிலம், 280.)

அரசியல் சட்டம், (ஐக்கிய அமெரிக்கா, 430; ஏற்றுக் கொள்ள நடைபெற்ற போர், 233-240; பொருளாதாரத் தூண்டுகைகள், 233-240; திருத்தங்கள், 236, 237, 240.)

அரசியல் சட்ட வமைப்பு மாநாடு, 235.

அணைக்கட்டுகள், நீர்ச்சக்தி, 43, 44.

அதிருப்தி, விவசாய, 'விவசாய குமுப்பம்,' காண்க.

அரசாங்க உதவித் தொகை, 'உதவிக் கொடை' காண்க.

அரசாங்கக் கட்டுப்பாடு, இருப்புப் பாதைகள், 462.

அறுவடை இயந்திரம், 342, 343.

அவசரச் சட்டம் (1787), 'வடமேற்கு அவசரச் சட்டம்' காண்க.

அஞ்சல் படகுகளின் பாதைகள், 369.

அஞ்சல் பணி, 484.

அறுவடைக் கருவிகள், 342, 343.

அரிசி, உற்பத்தி, 29, 329, 330; முதலில் பயிரிட்டது, 107; புரட்சியின்போது உற்பத்தி, 212.

அறுக்கும் ஆலைகள், 'மரத் துண்டுத் தொழில்' காண்க.

அடிமைகள், ஸ்பானிஷ் அமெரிக்காவில், 72.

அடிமைக் கரை, 116.

அடிமை ஜனத்தொகை, காலனி காலத்தில், 116; புரட்சிக் காலத்திலிருந்து உள்நாட்டுப் போர்க்காலம் வரையில், 522, 523, 546.

அடிமை வர்த்தகம், ஏசியன் டோ, 70; சர்வாதீனம், 116; காலனி காலத்தில், 127, 128; பின்னர், 522, 523, 540; உள்நாட்டில், 522, 523.

அடிமை முறை, காலனி காலத்தில், 106, 113–117; புகுத்துதல், 115–117; பருத்தி ஜின் விளைவு, 327, 328; மேற்குப் பிரதேச நிலத்தின் விளைவு, 328, 521; உள்நாட்டுப் போரின் காரணம், 507–544; வளர்ச்சி, 518–526; தென்னுட்டிற்கு ஏற்பட்ட முக்கியத்துவம், 525, 526; தென்னுட்டு நிலத்தின்மீது ஏற்பட்ட விளைவு, 531–535; தென்னுட்டுப் பொருளாதார வாழ்க்கையின்மீது ஏற்பட்ட விளைவு, 531–535.

ஆ

ஆடம்ஸ், ஆல்வின், 466.

ஆடம்ஸ், ஹென்றி, (எடுத்துக் காட்டு), 357.

ஆடம்ஸ், ஜான், (எடுத்துக் காட்டு), 183; 200, 224.

ஆடம்ஸ், சாமுவேல், 187.

ஆல்பனி காங்கிரஸ், 154.

ஆல்பனி தோற்றம், (போர்ட் ஆரஞ்சு), 76, 145, 147.

ஆல்டிரிச் அறிக்கை, (1893), 554.

ஆலன், ஈத்தன், 210.

ஆனகொண்டா, 38.

ஆந்திரசைட் நிலக்கரி, வண்டல் படிதல், 35.

ஆப்பிள்டன், நாதன், 402.

ஆர்டிக் சமுத்திரம், 2.

ஆர்க்ரைட் ரிச்சர்டு, 322, 393.

ஆர்தர், சி. ஏ., 593.

ஆஷ்பர்ன், பி. எம். (எடுத்துக் காட்டு), 13.

ஆசியர், அமெரிக்கப் பூர்வீகக் குடிகளுடன் தொடர்பு, 52–54; (இடைக்கால வர்த்தகப் பாதைகள், 54–56).

ஆஸ்டர், ஜான் ஜேக்கப், 304.

ஆஸ்டின், மோசஸ், 336

ஆஸ்டின், ஸ்டீபன், எஃப்., 309, 336.

ஆடைத் தொழில், (காலனிகளில், 129; நெசவாலைகள், 405–409; உடனடித் துணி தயாரிப்பு வளர்ச்சியுறுதல், 551).

ஆயத்தீர்வை, 246, 335.

ஆலைத் தொழில், 335, 336, 413.

ஆணிகள், காய்ச்சாத இரும்பிலிருந்து வெட்டப்பெறும், 215.

ஆலிவர், ஜேம்ஸ், 341.

ஆட்டமான் துருக்கியர்கள், 57.

இ

இலாக்கா (கழகம்), விவசாய, 350.

இஷ்வாப், ஜே. சி. (மேற்கோள்), 574.

இங்கிலாந்து, காலனி ஆட்சி, 79-88; அமெரிக்கப் பண்டங்களுக்குரிய சந்தை, 118, 123; காலனித் திட்டம், 122 - 124, 170 - 173; விலக்கப்பட்ட பண்டங்கள், 125, 172, 173, 179, 180, 184; அமெரிக்காவைக் கைப்பற்றுவதில் பிரான்சுடன் போட்டி, 135, 162, 163, 182; 1763-க்குப் பின்னர் புத்துயிர் பெற்ற ஏகாதிபத்தியம், 182; அமெரிக்கப் புரட்சி, 201-240; நெருக்கடி காலத்தில் தொடர்புகள், 222 - 225; நெப்போலியப் போர்களின் போது ஐக்கிய அமெரிக்காவுடன் தொடர்புகள், 356-361; 1812-ல் போர், 362-367; கப்பல் வர்த்தகம், 372; உள்நாட்டுப் போரின்போது ஐக்கிய அமெரிக்காவுடன் தொடர்பு, 375, 550; தொழிற் புரட்சி, 392-398.

இல்லத் தொழில்கள் (குடிசை), 138-140, 397, 398, 405.

இடாகோ, 553, 582, 602.

இல்லினுய்(ஸ்), விவசாயம், 28, 332.

இல்லினுய்—மிச்சிகன் கால்வாய், 445.

இல்லினுய் மத்திய இருப்புப் பாதை, 281, 454, 462, 542, 559.

இறக்குமதிகள், காலனிகாலத்து 125 - 129, 182 - 192, 196-200; புரட்சிக் காலத்தில், 216; 1789 முதல் 1860 முடிய, 358-361, 363 - 367, 372 - 376, 378-384.

இந்தியப் போர்கள், 135, 154, 166, 271, 272, 600.

இந்தியானு, 28.

இந்தியர்கள், ஸ்பானிஷ் நடத்திய முறை, 72; விவசாயம், 96-99; தோல் வியாபாரம், 134-135; மேற்கு நோக்கி முன்னேறுதல், 152-154, 167; தூரத்து மேற்கில் குடியேற்றம், 600; டாவ்ஸ் சட்டம், 600.

இண்டிகோ, இடைக்கால வர்த்தகத்தில், 53; முதன்முதலில் புகுத்துதல், 107, 179; அரசாங்கக் கொடை, 107; தொழிலின் வீழ்ச்சி, 213.

இப்ஸ்விச், மெஸ்ஸாசுசெட்ஸ், 287.

இரும்பு, வண்டல் படிதல், 5, 139; மூலவளங்கள், 37, 38; பொறிவழி உற்பத்தி, 409-412, 552.

இரும்பு-எஃகு தொழில், 37; காலனி காலத்தில், 133, 139, 176: புரட்சிக் காலத்தில், 215; உள்நாட்டுப் போருக்கு முன்னர், 409-413.

இரோகோயிஸ், இந்தியர்கள், 73, 96, 148, 155, 167.

இர்விங், வாஷிங்டன், 306.

இத்தாலி, இடைக்கால வர்த்தகம், 55, 56.

இயந்திரம், நீராற்றல், 21, 48 394; அமெரிக்க இயந்திரம்

களின் அம்சங்கள், 341; விவசாய, 341-345, 548; நெசவுக்குரிய தொழிற் புரட்சியின்மீது ஏற்பட்ட விளைவு, 393; நீராவி, 393, 394; இங்கிலாந்திலிருந்து வரும் ஏற்றுமதிகள் தடை, 398; ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றைப் பயன்படுத்துவதற்கேற்ற உறுப்புகள், 400, 401; தரப்படுத்துதல், 401; 'கண்டுபிடிப்புகள்,' காண்க.

இறைச்சிகட்டும் தொழில், 23, 334, 414, 589.

இடைக்கால வர்த்தகம், 42-56.

இயற்கை மூலவளங்கள், முக்கியத்துவம், 5, 14, 15; அளவு, 23-27.

இயற்கை வாயு, 36.

இறக்குமதி தவிர்ப்பு ஒப்பந்தங்கள், 184, 185, 213, 214, 216.

இருப்புப்பாதைகள், முன்னரே நிலவிய தடங்களில் போடப்பட்டன, 424; முக்கியத்துவம், 449, 450; ஆரம்ப கால, 450-455; துவக்க காலத்தில் இருப்புப்பாதைகள் அமைப்பதில் ஏற்பட்ட பிரச்சினைகள், 455-459; மூலதன ஆக்கம், 459-462; நிதி உருவாக்குதல், 459-462; தெரு இரயில்வேக்கள் 462, 463, 559; உள்நாட்டுப் போரின்போது, 558, 572; கண்டத்தின் குறுக்கே, 595; அரசாங்க உதவி, 596.

இரண்டாவது நூற்றாண்டுப் போர், 122, 162.

இரண்டாவது ஐக்கிய அமெரிக்க பாங்கு, 251-255.

இராஜ்ஜியம், புரட்சிக்குப் பின்னர் எழுந்த போட்டிகள், 225-227; கடன்கள், 243-246, 446, 448; உள் உள்நாட்டு வளர்ச்சிகளுக்கு உதவி, 441-444, 539, 540.

இராஜ்ஜிய பாங்குகள், 252, 253.

ஈ

ஈஸ்ட், ஆர். ஏ. (மேற்கோள்), 227, 233.

ஈவான்ஸ், ஜார்ஜ் ஹென்றி, 504.

ஈவான்ஸ், ஆலிவர், 413, 434, 449.

ஈய உற்பத்தி, 39.

ஈரி கால்வாய், 294, 439 440.

ஈரி இருப்புப்பாதை, 453, 557.

உ

உருவாக்குதல், (உள்நாட்டுப் போர்க்காலத்தில், 558).

உள்நாட்டுப் போர், — கப்பல் வர்த்தகம், 375; பொருளாதாரக் காரணங்கள், 507-544; பொருளாதார சூழ்நிலைகள், 545-577; 1861-ல் மந்தம், 547; குடியேற்றத்தில் விளைவு, 548, 555; இலாபம் ஈட்டுதல், 550, 562; வடநாட்டில் பொறிவழிப்பண்டங்களின் உற்பத்தி, 550, 551; வடநாட்டில் பொருளாதார விளைவுகள், 550, 551; நிதி வழங்குதல், 553, 573, 574; வாழ்க்கைச் செலவு, 554-557, 571, 572; நாணய முறைச் சட்டம், 554; இருப்புப்பாதைகள் அமைத்தல், 558; சமூகப் பின்னணி, 560-562; பருத்தியின் பங்கு, 562-566; தென்னாட்டில் இருப்புப்பாதைகள், 572; தென்னாட்டில் பொருளாதார விளைவுகள், 575-577.

உள்நாட்டு வர்த்தகம், 'வர்த்தகம், உள்நாட்டு' காண்க.

உலர் பண்ணைமுறை, 6, 591, 598.

உண்ணத்தக்க செடி கொடி வகைகள், அமெரிக்காவில் விளைபவை, 16, 17.

உணவு, இறக்குமதியைப் பொறுத்தவரையில் இங்கிலிஷ் திட்டம், 118; உள்நாட்டுப் போர்க்காலத்தில், 548, 550, 571, 572.

உணவு மூலவளங்கள், அமெரிக்காவில், 17-19.

உணவுப் பண்டங்கள், படிமுறைப்படுத்துதல், 413-415.

உலர்புல், உற்பத்தி, 28.

உள்நாட்டுத் தொழில்கள், காலனிகளில், 101, 102, 129, 131, 138-140; புரட்சிக் காலத்தில், 214, 215.

உள்நாட்டு நீர்வழிகள், 'கால்வாய்கள்,'

'உள்நாட்டு வளர்ச்சிகள்' காண்க.

உள்நாட்டு வளர்ச்சிகள் காலனி காலத்தில், 119, 120; உள்நாட்டுப் போருக்கு முன்னர், 332-335, 375, 376, 382, 383, 425-427, 539, 540; காலட்டின் திட்டம், 430; 'கால்வாய்கள்,' 'துறைமுகங்கள்', 'நதிகள்', 'சாலைகள்' காண்க.

உலோகங்கள், பல்வேறு உலோகங்களின் பெயர்களைக் காண்க.

உரிமைக் காப்பு அலுவலகம், 402; விவசாயம், 350.

உரிமைக் காப்புகள், 402, 552.

உலோக நாணயச் சுற்றறிக்கை (1836), 259-261.

உலோக நாணயச் செலுத்துகை, 555, 572.

உதவிக் கொடை, இங்கிலிஷ் காலனித் தொழிலில், 123, 131, 137, 139, 179, 197; புரட்சியின் போது பிரெஞ்சு, 220; வர்த்தகக் கப்பற்படை, 353, 354; கால்வாய்கள், 442-446; இருப்புப்பாதைகள், 460, 461; 'நிலக்கொடைகள்' காண்க.

உடன்படிக்கை, ஏசியன்டோ, 70; பாரிஸ், 163, 223, 272; இந்தியர்களுடன், 167; துவக்கத்தில் வர்த்தகம், 222, 223; 1783-ல், 223, 272; ஜே (1795), 272; சான் லொரன்சோ (1795), 271 272, 286; 1830-ல் 375.

உடலுருக்கி நோய், 14.

உட், ஜெத்ரோ, 341.

எ

எளியமுறைப் பணமும் கிரஷாம் விதியும், ('இரட்டை உலோக நாணய முறை' 'கிரீன் பேக் இயக்கம்' காண்க).

எக்கிள்ஸ்டன், ஜி. சி. (மேற்கோள்), 573, 574.

எலிசபெத் I, இங்கிலாந்து, 79-81, 111.

எலி, ஆர். டி. (மேற்கோள்), 492.

எம்பரஸ் ஆஃப் சைனு, 231.

என்கோமியண்டா, 71.

எஸ்டர்லி, ஜார்ஜ், 943.

எக்ஸ்பிரஸ், 466.

எல்லைப்புறம், அமெரிக்கப் பண்பாட்டில் ஏற்பட்ட விளைவு, 143-145; முதல் எல்லை, 148-152; நகரங்கள், 149 155, 156; அமெரிக்கப்

புரட்சி, 181, 182, 208-210; வாழ்க்கை 295-301; சுரங்கத்தொழில், 579-585; கால்நடைப் பராமரிப்பாளர், 585-589; விவசாயிகள், 589-598; முடிவு, 601-603; 'மேற்கு நோக்கி முன்னேற்றம்' காண்க.

எண்ணெய், 'பெட்ரோலியம்' காண்க.

எண்ணெய்க் கிணறுகள், 34.

எஃகு, நிலக்கரி, இரும்பு ஆகியவற்றின் தொடர்பு, 5; பெசிமர் படிமுறை, 402; உற்பத்திப் பெருக்கம், 412, 413.

ஏ

ஏற்றுமதிகள், காலனியைச் சார்ந்த, 124-129, 131, 141, 142, 171-173, 197; தவிர்க்கப்பெற்ற ஏற்றுமதிகளின்மீது வரிவிதிப்பு, 242; உள்நாட்டுப் போர்க் காலப் வரையில், 358-361, 363-367, 371-376, 378, 380; உள்நாட்டுப் போரின்மீது, 553, 562-566, 568; 'காலனி கட்டுப்பாடுகள்,' 'வர்த்தகம், காலனியைச் சார்ந்த,' 'மெர்க் கண்டலிசம்,' 'கச்சாப் பொருள்கள்' காண்க.

ஏனழ வெள்ளையர்கள், 285, 295, 522.

ஏசியன்டோ உடன்படிக்கை, 70.

ஐ

ஐரிஷ் காலனிகளில், 98, 152, 155-159, 198, 480, 495, 496.

ஐக்கிய அமெரிக்கா, பூகோளப் பிரிவுகள், 2-7; மனிதன் வசிப்பதற்குரிய, 9, 10; தற்பொழுது கிடைக்கக்கூடிய பல்வேறு மூலங்கள், 23, 24.

ஐக்கிய அமெரிக்க பாங்கு, முதல், 248, 249; இரண்டாவது, 251-255.

ஐக்கிய அமெரிக்க கிறிஸ்துவக் கமிஷன், 561.

ஐக்கிய அமெரிக்க சுகாதாரக் கமிஷன், 561.

ஒ

ஒப்பந்தக் கூலியாட்கள், 111-115.

ஒக்லாஹோமா, 589, 602.

ஒமாகா, 553, 589.

ஒழுங்காளர்கள், 161.

ஒயிட் கான்வாஸ், 439.

ஒயிட் வாட்டர் கால்வாய், 445.

ஓ

ஓட்ஸ், உற்பத்தி, 28, 29, 104, 331.

ஓகியோ, பொறிவழி உற்பத்தி, 21-23; யூனியனில் சேர்க்கப் பெற்றமை, 431; விவசாயம், 28, 331, 333; குடியேற்றம், 287.

ஓகியோ-ஈரி கால்வாய், 444, 445.

ஓகியோ கம்பெனி, 287.

ஓகியோ நதி, 6.

ஓகியோ பள்ளத்தாக்கு, குடியேற்றம், 287-295.

ஓரிகன், கவர்தல், 304.

ஓடிஸ், ஜேம்ஸ், 183.

ஓவன், ராபர்ட், 503.

ஓஸ்லீ, எஃப். டபிள்யூ. (எடுத்துக்காட்டு), 566.

ஓம்ஸ்டெட், ஃபிரடெரிக் சட்டம் (மேற்கோள்), 301; (எடுத்துக்காட்டு), 524.

க

கலிபோர்னியா, பண்டங்கள், 6,7; துவக்க காலக் குடியேற்றங்கள், 164; கைப்பற்றுதல், 303; பொன் கண்டுபிடிப்பு, 307, 340; விவசாயம், 337.

கனடா, புதுநிலம் காணும் முயற்சி, 59, 60, 73; காலனிநிலை, பிரெஞ்சு ஆதிக்கத்தில், 72-75, 135; 162; 163; பிரிட்டிஷ் ஆதிக்கத்தில்; 182, 189; டோரி அகதிகள், 203.

கரே, மேத்தியூ, 264.

கரோலினஸ், (குடியேற்றம், 88; விவசாயம்; 107).

கத்தோலிக்க மத ஆலயம்; 189.

கவெலியர்கள், 64.

கப்பல் சரக்கேற்று வர்த்தகம், பிரிட்டிஷ் சர்வாதீனம், 170.

கடற்கரை, ஐக்கிய அமெரிக்காவின், 8, 9.

கடற்கரைச் சமவெளி, அட்லான்டிக், 2-4, 12; பசிபிக்; 6, 7, 10, 12.

கடற்கரை வர்த்தகம், 353-355, 383, 384.

கல்லூரிகள், உள்நாட்டுப் போர்க்காலத்தில், 560.

கமிட்டி, தொழில் அமைப்பு, 'தொழில் அமைப்புகளின் காங்கிரஸ்' காண்க.

கனெக்டிகட் குடியேற்றம், 86.

கனெக்டிகட் நிலக் கம்பெனி, 288.

கனெக்டிகட் நதி, 8, 44.

கனெக்டிகட் பள்ளத்தாக்கு, 15, 338.

கண்டத்துப் படை, 204.

கண்டத்துக் காங்கிரஸ், முதலாவது, 189, 204, 353; இரண்டாவது, 204, 214, 219, 220.

கம்பர்லாந்து ரோடு, 431, 432.

கம்பர்லாந்து பள்ளத்தாக்கு, 4.

கட்லர், மெனுஷே, 287.

கடன், புரட்சிக் காலத்து, 219-221; கடன் கழிவு நிதி, 242-245; தேசீய, 260, 261.

கடன்பட்டோர், 178, 220, 221, 234.

கல்வி, துவக்க காலத்தில், 276; விவசாய, 349, 350. மோரில் சட்டம், 350, 509, 560, 591; கல்லூரிகள், 560; உயர்நிலைப் பள்ளிகள்.

கண்காட்சிகள், அமெரிக்கப் பண்ணை இயந்திரங்களைப் பாரிஸில் 1855-ல் காட்டி விளக்குதல், 343.

கப்பல் சரக்கேற்று கூலிவீதம், 429, 457.

கடன் கழிவுச் சட்டம் (1790), 245.

கண்ணுடி, காலனித் தொழில், 140.

கடின நாட்கள், 'மந்தங்கள்', 'பீதிகள்' காண்க.

கண்டுபிடிப்புகள், பருத்தியின், 282, 324-328, 394; விவசாயப் பொறி, 340-345; நெசவாலைக் கருவி, 393, 394; நீராவி என்ஜின், 394; உரிமைக் காப்பு பெற்றன, 402; தையல் மெஷின், செருப்பு தைக்கும் பொறி, 402; இரும்பு, எஃகு உற்பத்தி, 402; போக்குவரத்துத் துறையில், 449, 450; தந்தி, 467, 468; முட்கம்பி, 588.

கடத்திச் செல்லுதல், தொழிலாளரைக் காலனிகளுக்கு, 111, 112.

கப்பல்துறைச் சரக்குகள், காலனித் தொழிலில், 125, 131, 133, 134, 172; அரசாங்கக்

கொடைகள், 131, 179.

கடற்கடவுச் சட்டங்கள், ஸ்பானிஷ், 69; இங்கிலிஷ், 171, 172, 181, 215; புரட்சிக்குப் பின்னர், 222, 230; 'வர்த்தகம்', மெர்க்கண்டலிசம்' காண்க.

கவுன்சில் ஆர்டர்கள், 361, 364.

கடற்கொள்ளை, காலனி காலத்தில், 122.

கலப்பைகள், காலனி காலத்தில், 100; உள்நாட்டுப் போர் முடிய, 341.

கச்சாப் பொருள்கள், அமெரிக்காவே மூலம், 65, 388; இடம், வாணிப முறை, 171, 179.

கடனைத் திருப்பித்தர மறுப்பு, 448.

கப்பல் கட்டுதல், காலனி காலத்தில், 21, 77, 133, 134; புரட்சிக் காலத்தில், 216; 1830 முதல் 1860 வரையில், 372-376.

கப்பல்கட்டும் தொழில், காலனி காலத்தில், 21, 134, 170; புரட்சிக் காலத்தில், 352-362; வளர்ச்சி, செழிப்பு ஆகியவற்றின் முதல் காலம், 352-362; 1812-ல் போர், 362-367; பொருளாதார விளைவு, 365, 366; வளர்ச்சி, செழிப்பு ஆகியவற்றின் இரண்டாவது காலம், 367-372; அமித உற்பத்தியும் படிப்படியான வீழ்ச்சியும், 373-376; உள்நாட்டுப் போரின் விளைவு, 375, 376.

கள்ளக் கடத்தல், 70; காலனி காலத்தில், 124, 185; புரட்சிக் காலத்தில், 216-218.

கட்டிக்கும் பொறி, 343.

கண்டத்தின் குறுக்கே இருப்புப் பாதைகள், 595.

கம்பி வேலி (முட்கம்பி), 588.

கம்பளி, முக்கியக் கம்பளி மாநிலங்கள், 31; காலனி உற்பத்தி, 138, 213, 214.

கம்பளி உற்பத்தி, காலனி காலத்தில், 129, 132, புரட்சிக் காலம் முதல் 1860 முடிய, 406; உள்நாட்டுப் போரின்போது, 551.

கறுப்பு மலைகள், 4.

கடையடைப்பு, 499.

கான்பெடரேஷன் விதிகள், 225, 226, 274, 277.

காலண்டர், ஜி. எஸ். (எடுத்துக்காட்டு, 195, 233).

கால்வர்ட், செசில், ஜார்ஜ், 87.

கால்வாய்கள், 420, 421 (ஆரம்பகால அமெரிக்கன், 435; கால்வாய்களைத் தோண்டும் சகாப்தம், 435-437.)

கார்பினி, 57.

கார்டெரட், சர் ஜார்ஜ், 87.

கார்ட்டியர், ஜேக்கஸ், 60, 65, 96.

கார்ட்ரைட், எட்மண்ட், 322, 394.

காட்டாபா நதி, 44.

கால்நடைகள், 31; (காலனி காலத்தைச் சார்ந்த. 18, 19, 101, 104, 105, 107; கால்நடைப் பண்ணைகள், 107, 585-589; மேற்கு நோக்கி முன்னேற்றம், 145, 303, 585-589; தரத்தில் முன்னேற்றம், 347; மேய்த்தல், 586, 587; நகரங்கள், 586.)

கால்நடை வளர்ப்பு, —சீதோஷ்ண நிலைக்கு ஏற்ற வாறு மாறிக்கொள்தல், 18, 19; காலனிகளில், 18, 19, 101, 104, 105, 107, 145; மையங்கள், 31; மேற்குப் பிரதேசத்தில், 585-589.

காட்மீன் பிடிக்கும் தொழில், நியூ இங்கிலாந்தில், 136, 137, 378.

கால்பர்ட்டிசம், 'மெர்க்கன்டலிசம்,' காண்க,

காலனி கட்டுப்பாட்டு விதிமுறைகள், 75, 82, 83, 109, 122-124, 169, 173, 214, 215; 'கடற் கடவுச் சட்டங்கள்,' காண்க,

காலனி முறை, (ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த, 69-72; பிரான்சு நாட்டைச் சார்ந்த, 72-75; நெதர்லாந்தைச் சார்ந்த, 76-79; இங்கிலாந்தைச் சார்ந்த, 79-88, 123, 169-173).

காலனி மயமாதல்,— பூகோள ரீதியான தூண்டுதல், 7, 9; உள்நோக்கங்கள், 16, 63-68; ஸ்பானிஷ், 69-72; பிரெஞ்சு, 72-75; சாசனம் பெற்ற கம்பெனிகள், 74, 80-87; டச்சு, 76-78; இங்கிலிஷ், 78, 79; தனியார் துறையின்மூலம், 80.

காமட், 372.

காமன்ஸ், ஜான் ஆர். (மேற்கோள்), 493, 501.

காம்ஸ்டாக் லோடு, 42, 553, 581.

காங்கிரஸ், (கண்டத்தைச் சார்ந்த, 189, 214, 219, 353; கான்பெடரேஷன் விதிகளின்படி, 224, 277, 278).

கான்ஸ்டான்டிநோபிள், துருக்கியர்கள் கைப்பற்றினர், 57.

கார்டில்லரா மலைகள், 3, 6, 8.

கார்டில்லரா பிரதேசம், 6.

கான்பரி, லார்டு, (மேற்கோள்), 174.

கார்னெல் எஸ்ரா, 468.

கார்டெஸ், ஹெர்னன்டோ, 65.

காடு, மூலவளங்கள், 25-27; காலனி காலத்தில் பண்டங்களின் ஏற்றுமதி, 133-135.

காட்ஸ்டன் கொள்முதல், 304.

காலடின், ஆல்பர்ட், 251; உள்நாட்டு வளர்ச்சி குறித்து அறிக்கை, 430.

கார்ஜஸ், சர் பெர்னன்டோ, 87.

காலனிகளுக்கிடையே வர்த்தகம், 'உள்நாட்டு வர்த்தகம்,' காண்க.

காம், பீட்டர், (மேற்கோள்), 104, 120, 471,

கான்சாஸ், 29, 587, 601.

கான்சாஸ்—நெப்ராஸ்கா சட்டம், 541.

கால்நடைகள், 31, 335, 338; காலனிகளில், 18, 19, 101, 105-107, 138, 145; போஷாக்கு, 101, 107, மதிப்பு தென்மாநிலங்களில், 331; வளர்ச்சிகள் 347.

காகிதப் பணம், காலனி காலத்தில், 121, 177, 178; புரட்சிக் காலத்தில், 220, 221; நெருக்கடி காலத்தில், 227, 228; உள்நாட்டுப் போரின் போது, 554, 574; 'நாணயம்', காண்க.

கால்நடைப் பராமரிப்பு, ஸ்பானிஷ் அமெரிக்காவில், 72; தூரத்து மேற்கில், 107, 585-589.

காய்கறிப் பண்டங்கள், ஆரம்பத்தில் குடியேறியவர்கள், 16-18.

கால்ஹன், ஜான். சி., 364; (சுங்க வரிவிதிப்புபற்றிய 263, 266).

கிளார்க், ஜார்ஜ் ரோஜர்ஸ், 209.

கிளார்க், விக்டர், எஸ்., (எடுத்துக்காட்டு) 141, 485; (மேற்கோள்) 386, 413.

கிளார்க், விலியம், 'லீவிஸ், கிளார்க் ஆராய்ச்சிப் பயணம்' காண்க.

கிலீவ்லாண்டு, மோசஸ், 288.

கீளர்மென்ட், 396, 435.

கிலீவ்லாண்ட், ஸ்தாபிதம், 288, 293.

கிலீவ்லாண்ட், குரோவர், பொதுநிலங்கள், 593.

கிலின்டன், டீவிட், 439, 445.

கிலின்டன், ஜார்ஜ், 252.

கிரீக்கர்கள், 273.

கிருமியப் போர், 374.

கிராம்டன், சாமுவேல், 322, 394.

கிராம்வெல், ஆலிவர், 171, 181.

கியூனர்டு நீராவிக் கப்பல் பாதை, 371.

கிழக்கிந்தியக் கம்பெனி, 187, 353.

கிப்பன்ஸ்—ஓக்டன் மோதுதல் (1824), 436.

கில்பர்ட், சர் ஹம்ப்ரே, 81.

கிளிட்டன், ஜோசப், எம்.பி., 599; கிராண்ட் கூலி, 6, 44, 598; கிராண்ட் டர்க், 231.

கிரே, லூயி, சி., (எடுத்துக் காட்டு), 536, 538.

கிரே, ராபர்ட், 304.

கிரேட் பிரிட்டன், 'இங்கிலாந்து' காண்க.

கிரேட் வெஸ்டர்ன், 370.

கிரீலி, ஹொரேஸ், (எடுத்துக் காட்டு) 495.

கிரக், வில்லியம், 402, 416.

கிரிகரி லோடு, 553.

கிரன்வில், ஜார்ஜ், 183, 199.

கிரஷாம் சட்டம், 249, 257.

கில்டு முறை, இடைக்காலத்தில் 60, 67.

கியூபெக், தோற்றம், 73; நிலவாராய்ச்சிப் பயணம், 177.

கிராம வாழ்க்கை, 332, 338.

கிராமத் தொழில்கள், 129, 131.

கிராம அமைப்பு, நியூ இங்கிலாந்தில், 90, 102, 103, 149.

கிங், டபிள்யூ. ஐ., (மேற்கோள்) 47.

கிளே, ஹென்றி, 273, 315, 362; (இரண்டாவது ஐக்கிய அமெரிக்க பாங்கு, 254; அவரது அமெரிக்க அமைப்பு முறை, 264, 266, 315, 330; சமரச சுங்க முறை, 264, 266; ஹெரிஃபோர்ட்ஸ் கால் நடை இறக்குமதி, 347).

கீழ்த்திசை வர்த்தகம், இடைக்கால வர்த்தகத்தில், 52-54.

கீழ்த்திசை நாட்டு வர்த்தகம், இடைக்காலம், 52-56.

குழந்தைத் தொழிலாளர், 489-494.

குரோப், 24, 37.

குளிர்முறைப் பாதுகாப்பு, 589

குடிவெளியேற்றம், 'குடிவந்தேற்றம்', காண்க.

குளோப், அரிசோனு, 38.

குடும்பமனையகச் சட்டம், 280, 281, 480, 504, 548, 589-596.

குதிரைகள், 19, 32, 100, 107, 331, 347.

குடிவந்தேறியவர்கள், அமெரிக்கத் தட்பவெப்ப நிலையின் விளைவு, 1, 2, 10, 12-14.

குடிவந்தேற்றப், 12, 13, 113; காலனி காலத்தில், 150, 152, 154-159; ஸ்காட்ச்-ஐரிஷ், 150; ஐரிஷ், 152, 480, 498; 1820 முதல் 1860 வரைய, 287-289, 294, 295, 478-481; தொழிலாளர், 311, 555; காரணங்கள், 478; உள் நாட்டுப் போர்க்காலத்தில், 479, 480, 545, 546; ஜெர்மன், 480; ஸ்காண்டினேவியன், 480; நிலக் கொடை இருப்புப்பாதைகள், 596.

குலுக்குச் சீட்டு, அரசாங்கம், புரட்சிக் காலத்தில், 221.

குவேக்கர்கள், 64, 159.

குவார்ட்டரிங் சட்டம், 185-189.

குவின்சி, எட்மண்ட், (மேற்கோள்), 119.

குவின்சி இருப்புப்பாதை, 451.

குளிர்முறை பாதுகாப்புப் பெட்டி, 589.

குஸ்ஸே, ஓபீடு, 342.

கூட்டு பேரம், 499.

கூப்பர், அந்தோணி ஆஷ்லே, 88.

கூப்பர், பீட்டர், 451.

கூட்டுறவு, காலனிகளில், 102 103, 110. (அமைப்புகள், 502, 503.)

கூலி, ஆரம்ப காலத் தொழிற் சாலைகளில், 486-488; உள் நாட்டுப் போரின்போது, 554-556.

கெயின்ஸ், ஜே, ஈ., (அட்டவணை எடுத்துக் காட்டப் பெற்றது, 524).

கெல்லி, ஹால், ஜே., (எடுத்துக் காட்டு), 305.

கெல்லாச், ராயல், எஸ்., (மேற்கோள்), 27.

கெல்லி, வில்லியம், 402.

கென்ட்ரிக், ஜான், 304

கென்டக்கி, குடியேற்றம், 209; யூனியனில் சேர்தல், 272; புகையிலை பயிரிடுதல், 329; சணல் பயிரிடுதல், 330; கால்நடை வளர்ப்பு, 331; குதிரை வளர்த்தல், 331, 347.

கேளிக்கைகள், 560.

கேபட், ஜான் 59, 80.

கேரியர், லிமான், (எடுத்துக் காட்டு), 18.

கேரல், சார்லஸ், கேரல் கூட்டுச் சார்ந்த, 451.

கேட்ஸ், ஜி. டபிள்யூ., (எடுத்துக்காட்டு), 313.

கே. ஜான், 393.

கைப்பற்றுதல், புரட்சிக்காலத்தில், 204-206.

கொலம்பியா நதி, 6.

கொலம்பஸ், கிருஸ்தபர், 59, 71; (மேற்கோள்), 59, 63.

கொரனடோ, பிரான்சிஸ்கோ, 96.

கொக்கிப் புழு, 13.

கொடிய மிருகங்கள், 18, 19.

கோனிஸ்டோகா குதிரைகள், 432.

கோல்டன் கேட், 6.

கோல்ஞல்டு, பார்த்தலோமியூ, 19.

கோழிப்பண்ணை, உற்பத்தி, 19; பண்ணையின் மையம், 32.

கோதுமை, 3, 12, 99; உற்பத்தி, 28, 29, 104, 331, 333, 337, 413, 550.

கோவேறு கழுதைகள், 32, 346.

ச

சமரசம், 1850-ல், 541.

சந்தைகள், 348, 550.

சணல்வகை, 138, 408.

சணல், 138, 330, 408.

சட்டமுறைப் பணம், காலனிகளில், 177, 178; நோட்டுகள், 'நாணயம்' காண்க.

சந்தை, காலனிகளே சந்தைகள், தாயக நாட்டிற்கு, 65, 66, 123, 124, 179-181, (பருத்திக்கு, 322-324).

சர்வாதீனங்கள், காலனி காலத்தில், வர்த்தகக் கம்பெனிகளுக்கு வழங்கியமை, 71, 75; பிரெஞ்சு அரசாங்கம், 75; டச்சு, 76; அடிமை வர்த்தகம் சார்ந்த, 116; தேயிலையைச் சார்ந்த, 187, 188; நதிப் போக்குவரத்தினைச் சார்ந்த, 438; இருப்புப் பாதையைச் சார்ந்த, 558.

சமுத்திர கப்பல் சரக்கேற்று கட்டணம், 352-384.

சமுத்திர கப்பல் தொழில், 119, 216-218, 352-362, 367-376.

சமாதானம், 'உடன்படிக்கை', காண்க.

சமூக நடவடிக்கைகள், வடநாட்டில், உள்நாட்டுப் போரில், 560-562.

சமூக வாழ்க்கை, 482, 483.

சர்க்கரை, கரும்பு உற்பத்தி, 29 329; சர்க்கரை பீட், 29; காலனிவர்த்தகம், 125, 126; சர்க்கரை பிரபுக்கள், 182; சர்க்கரைச் சட்டம் (1764), 183; லூசியானாவில் முதலில் பயிர்ச்சியது, 329.

சட்டர், ஜான், 307.

'சார்லஸ்டன்னுடைய மிகச் சிறந்த நண்பன்', 452.

சாராய வகைகள், காலனிகளில், 140.

சானிங், எட்வர்ட், (எடுத்துக் காட்டு) 472.

சாட்மேன், எஸ். ஜே. (எடுத்துக் காட்டு) 565.

சார்லஸ், முதலாம், இங்கிலாந்தைச் சேர்ந்த, 80, 85.

சார்லஸ், இரண்டாம், இங்கிலாந்தைச் சேர்ந்த, 88.

சார்லஸ்டன், தென் கரோலினா, வீழ்ச்சி, 477.

சாசனம் பெற்ற கம்பெனிகள், 74, 80-87.

சாசனங்கள், வர்ஜீனியா, 81, 82.

சாடிஸ்ட் இயக்கம், 397.

சாத்தாம், எர்ல், 'பிட், வில்லியம்' காண்க.

சாஹேகள், காலனியைச் சார்ந்த 427-430; சுங்கச் சாவடியும் வழிச் சுங்கவரி விழிப்பும், 427-430; காலட்டின் திட்டம், 430. 'கம்பர்லாந்து சாஹே', 'உள்நாட்டு வளர்ச்சிகள்,' காண்க.

சாண்டிஸ், சர் எட்வின், 84.

சான் ஃபிரான்சிஸ்கோ, கலிஃபோர்னியா, தோற்றம், 166.

சாந்தா ஃபீதடம், 308, 463.

சாவன்னு, 370.

சாவன்னு, வீழ்ச்சி, 477.

சிக்காகோ, 145; (வளர்ச்சி, 293; 1860-க்கு முன்னர் இறைச்சி கட்டி அனுப்புதல், 334, 414; மர்வு அரைத்தல், 335, 415, 417; கால்வாய் போக்குவரத்து, 441, 445;

இருப்புப்பாதைகள், 454, 455.)
சின்சின்னாட்டி, (சங்கப், 229; இறைச்சி கட்டி அனுப்புதல், 293, 334, 414, 415; மாவு உற்பத்தி 335, 336; ஸ்டவ் உற்பத்தி, 411; சாராயம் வடித்தல், 415; கால்வாய் போக்குவரத்து, 441, 444).
சிலுவைப் போர்கள், இடைக்கால வர்த்தகத்தின்மீது ஏற்பட்ட விளைவு, 54.
சிகப்பு நதி, 3.
சிரியஸ், 370.
சிலேட்டர், சாமுவேல், 232, 399.
சிப்ஸ், நீதிபதி ஜான் கிலீவ்ஸ், 287.
சிம்மிங்டன், வில்லியம், 395.
சீனே சகோதரர்கள், பட்டு உற்பத்தியாளர்கள், 408.
சீவஸ், லாங்டன், 253.
சீர்திருத்தம், 63.
சீர்திருத்தங்கள், தொழிலாளர்களால் தூண்டப்பெற்றவை, 502-505.
சீரைட், டி. பி., (மேற்கோள்), 432.
சீபர்ட், ஆடம், (மேற்கோள்), 323.
சுதந்திரம், புரட்சிக்காலத்தில், 207.
சுயேச்சை கஜானா, 256, 257.
சுரங்கத் தொழில், மேற்குப் பிரதேசத்தில் குடியேற்றம், 579-585.
சுடோஃப், கார்ல், (எடுத்துக் காட்டு), 13.
சுட்டர், ஜெனரல், 210.
சுங்க வரி, 1789-ல், 242; காப்பியக்கம், 263-267; 1816-ல், 263, 264, 508; 1824-ல், 267, 508; 1828-ல், 267, 269, 508; 1832-ல், 268, 508, 1833-ல், 268, 509; 1842-ல், 268, 269; 1846-ல் 269; 1857-ல், 269.
சுங்கச் சாவடிகள், 427-430.
செரிப்பள்ளத்தாக்குப் படுகொலை, 203.
செஸ்ஸாபீக், 359.
செஸ்ஸாபீக்கும் ஓகியோ கால்வாயும், 443.
செம்பு, (வளங்கள், 6, 38; உற்பத்தி, 38, 552, 581, 582).
செய்தித்தாட்கள், 484.
செயின்ட் அகஸ்டின், பிளோரிடா, 163.
செயின்ட் லாரன்ஸ் நதி, 3.
செயின்ட் லூயி, 293; தோற்றம், 145; ஆலைத்தொழில், 335, 336, 417; இறைச்சியைக் கட்டுதல், 414; வர்த்தக முக்கியத்துவம், 477.
செயின்ட் மேரி நீர்வீழ்ச்சிக் கால்வாய், 446.
செம்பிள், ஈ. சி. (மேற்கோள்), 119.
செனிகா, சீஃப், 439.
செவியர், ஜான், 208.
செம்மறியாடுகள், இறக்குமதி, 19, 31, 110; வளர்த்தல், 19, 331; அரசாங்கக் கொடைகள், 100; பென்சில்வேனியாவில், 105; ஆடு வளர்த்தலில் வளர்ச்சி, 345, 551; மெரினோ, 346.
செருப்புத் தொழில், 404, 405.
சேம்பிளான், சாமுவேல், 96.
சேர்த்து வைத்தல், 592, 593,

சேலம், மெஸ்ஸாசுசெட்ஸ், 217, 382, 391.
சைனை, ஆரம்பகால வர்த்தகம், 231, 355.
சைமன்ஸ், ஏ. எம். (மேற்கோள்), 202.
சொத்துப்பேறு சட்டங்கள், 207.
சோப்பர், ஈ. கே., 35.

ட

டல்லஸ், ஏ. ஜே. 253.
டர்பி, எலியஸ் ஹாஸ்கட், 218.
டயஸ், பார்த்தலோமியூ, 58.
டன்பார், சேமர், (மேற்கோள்), 450.
டச்சுக் காலனிகள், 76-79.
டச்சுக் கிழக்கிந்தியக்கம்பெனி, 76.
டச்சுக் குடியேற்றவாதிகள், 105, 198.
டச்சு மேற்கிந்தியக் கம்பெனி, 76-78.
டவுன்ஷெண்ட், விஸ்கவுண்ட் சார்லஸ், 95, 183, 185, 346.
டவுன்ஷெண்ட் சட்டங்கள், 183, 185, 197.
டவ், ஜெத்ரோ, 95, 346.
டார்க்கி, கொடிய, 19.
டர்னர், எப். ஜே. (எடுத்துக் காட்டு) 7; (மேற்கோள்), 143, 147, 166, 210, 283, 313.
டா காமா, வாஸ்கோ, 58; (மேற்கோள்), 63.
டா வெரசேனை, ஜி. 60.
டாவ்ஸ் சட்டம், 591, 601.
டாட், டபிள்யூ. ஈ., (மேற்கோள்), 108, 502.
டானி, ரோஜர், பி. 259.
டான்டன், மெஸ்ஸாசுசெட்ஸ், 139.
டாம் தம், 451.
டிரம்புல், ஜோனதன், 180.
டிலாவேர் விரிகுடா, டச்சுக் காரர்கள் குடியேறினர், 76.
டிலாவேர்-ஹட்சன் இருப்புப் பாதை, 451, 457.
டிலாவேர்-ரேரிடன் கால்வாய், 444.
டிலாவேர்-லேக்காவன்னா - மேற்கு இருப்புப்பாதை, 457.
டிலாவேர் நதி, 8.
டியூ, தாமஸ் ஆர். (மேற்கோள்), 524, 526.
டிவே, டேவிஸ் ஆர். (மேற்கோள், 121, 178.
டிக்கன்ஸ், சார்லஸ், (மேற்கோள்), 535.
டிரேக், சர் பிரான்சிஸ், 63, 79.
டிரட் ஸ்காட் முடிவு 541.
டியூஸ்னே, (மேற்கோள்), 166.
டியூரன்ட், (மேற்கோள்), 119.
டிக்னர், எப். டபிள்யூ. (எடுத்துக்காட்டு), 68.
டிரெயில், ஹெக். டி. (எடுத்துக் காட்டு), 68.
டிரான்சில்வேனியா, கம்பெனி, 209.
டிரடிகார் இரும்புத் தொழில், 416.
டிரையான், கவர்னர், 161, 203.
டூஓனெட், ஜூவான், 164
டூன், சைலாஸ், (மேற்கோள்)' 218.
டூபோ, ஜே. டி. பி, (எடுத்துக் காட்டு), 522.
டூபோ ரெவியூ, 342.
டூர், ஜான், 341.

டீ சோட்டா, பெர்டினண்ட், 96.

டீவிட் கிளின்டன், 452.

டுவைட், எட்மண்ட், 402.

டுவைட், திமோதி, (மேற் கோள்), 420.

டுரோலப், அந்தோணி, (மேற் கோள்), 489.

டெக்கோட்டா, 593, 596, 602.

டெய்லர், ஜீ. ஆர். (மேற் கோள்), 379, 487.

டெய்லர், ஜான், 339.

டெல்போர்டு, தாமஸ், 395.

டென்னசி, குடியேற்றம், 209; யூனியனில் சேர்தல், 272.

டென்னசி பள்ளத்தாக்கு, 4.

டெக்சாஸ் குடியேற்றம், 164; மெக்சிகோவிலிருந்து விடு தலை, 303, 337.

டேவிஸ், ஜெஃபர்சன், (மேற் கோள்), 512, 571,

டேவிஸ், ஜான், 60, 65.

டோரிகள், 203, 204, 207, 220, 229.

த

தலத்திலில்லா நிலக்கிழார் முறை, துவக்க காலத்தில், மேற்கில், 159; தெற்கில், 528.

தட்பவெப்பநிலை, ஐக்கிய அமெரிக்காவில், 9-15, 20.

தட்டுமுட்டுச் சாமான்களின் தொழில், காலனி காலத்தில், 139, 140.

தலா உரிமைகள், 89, 106.

தறிகள், கை, 392; விசை, 393.

தள்ளிவைக்கும் அவசரச் சட்டம், 268, 507.

தந்தையம், 75. 'அரசாங்கக் கட்டுப்பாடு,' 'உதவிக் கொடை,' காண்க.

தலைமூப்புரிமை. 91, 207, 229.

தனியார் கப்பற்படை, காலனி காலத்தில், 122; புரட்சியின் போது, 203, 216-219; 1812ஆம் ஆண்டின் யுத்தத்தில், 364.

தரப்படுத்துதல், உறுப்புகளை, 401.

தலைமை நீதிமன்றம், பாங்கு நோட்டு வெளியீடுபற்றிய முடிவு, 258; நீர்வழிப்போக்கு வரத்து, 436; மிசௌரி சமரசம்; 541.

தந்தி, 402, 467, 468, 484.

தட்பவெப்பநிலை, 9.

தகரம் (வெள்ளீயம்), கலங்கள், 419, 482.

தானியச் சட்டங்கள், 333, 340, 381.

தானியம், ஏற்றுமதிகள், 358,

தாதுப்பொருள்கள், 33-43.

தாதுப் பொருள்களின் பல்வேறு பெயர்களைக் காண்க.

தானியப் பங்கீடு, 520.

திரிந்து விற்பவர்கள், 419.

திமிங்கில வேட்டை, காலனி காலத்தில், 137; பின்னர், 376-378.

துறைமுகங்கள். ஐக்கிய அமெரிக்காவின் 4, 9, 118

தூரக் கிழக்கு வர்த்தகம், 52-54, 231, 373.

தென் கரோலினா, குடியேற்றம், 88, 107; தள்ளிவைத்தல், 268, 507; விவசாயம், 326, 329.

தென் காலனிகள், விவசாயம், 105-108; தொழிலாளர், 106, 115-117.

தெரு இரயில்வேக்கள், 462, 463, 559.

தென்னோடும், சுங்கவரியும், 263-268, 539,540; உள்நாட்டுப் போருக்கு முன்னர் விவசாயம், 322-324, 565, 566; பருத்தி பயிரிடுதல், 322-324; 507-544; இருப்புப்பாதைகள், உள்நாட்டுப் போருக்கு முன்னர், 454, 455; பொருளாதாரம், 507, 511; அரசியல் சக்தி, 539-544; உள்நாட்டுப் போரின்போது, 545-577; உள்நாட்டுப் போருக்கு முன்னும் பின்னும் பொறிவழித் தொழில், 570; உள்நாட்டுப் போரின்போது இருப்புப் பாதைகள், 572; 'உள்நாட்டுப் போர்,' 'பருத்தி,' 'மரத்துண்டு தொழில்,' 'அடிமை முறை,' காண்க.

தேய்மானம், புரட்சியின்போது 219, 220.

தையல் இயந்திரம், 402, 412, 551.

தொழிற்றுணிவுடையோர், 402, 403.

தொழிற்சாலைமுறை, காலனி காலத்தில் துவங்கியமை, 138, 139, 194; தோற்றம், 338, 339, 385-388, 397-405, 489, 490; வளர்ச்சி, 385-388, 397-405.

தொப்பித் தொழில், காலனி கட்டுப்பாடுகள், 175.

தொழில் ஜனநாயகமும் தொழிலாளர் பிரச்சினையும், 485-496.

தொழில் புரட்சி, அமெரிக்கப் புரட்சிக்கு முந்திய மந்தங்கள், 189, 190, 194-200; விவசாயம், 283, 322-324; இங்கிலாந்தில், 333, 392-397; அமெரிக்காவில், 385-421; ஏகாதிபத்தியம், 397.

தொழில் காலனி காலத்தில், 129, 131; அரசாங்க உதவி, 99, 100, 107-109, 123, 131, 137, 138, 179, 180, 195, 196, 213; அரசாங்கக் கட்டுப்பாடு, 132, 133; துவக்கங்கள், 133, 134, 137-140; பரவியது, 140-142; புரட்சிக் காலத்தில், 214, 215; 1789 முதல் 1860 முடிய, 385-421.

தொழிலாளர், தென் காலனிகளில், 106, 107, 113, 114; காலனி காலத்தில், 110-115; வட காலனிகளில், 110; புரட்சிக் காலத்தில், 215, 485; நெருக்கடி காலத்தில், 222, 311; நிலைமைகள், 485-496; தொழில் புரட்சி, 485-496; பெண்கள், 489-496, 556; கூலிக் குறைப்பு, 495; குடிவந்தேற்றம், 496, 555; நகரங்களில் குடியேற்றம், 496; அரசியல், 500, 501; உள்நாட்டுப் போரின்போது, 554-556; பொது நிலங்கள், 594; 'குழந்தைத் தொழிலாளர்,' காண்க.

தொழிலாளர் சட்டம், தொழிலாளர் சங்கங்கள், 503, 504; தொழிலாளர் இயக்கங்கள், 1860-க்கு முன்னர், 497-502; சட்ட பூர்வமான அந்தஸ்து, 500, 501; உள்நாட்டுப் போரின்போது, 556.

தொழில் குவிப்பு, 417.

தொடர்பின்மைச் சட்டங்கள் 289, 361, 390,

தொழிலைக் கட்டுப்படுத்துதல் 'அரசாங்கக் கட்டுப்பாடு' காண்க.

தோல் வியாபாரம், (உரோம வியாபாரம்), 8, 19; காலனி முயமாக்குதலுக்குத் தூண்டுகோல், 65, 66; பிரெஞ்சு, 73, 74, 135; டச்சு, 77, 135; பிலடெல்பியாவில், 85; காலனிஸ்டுகளுக்கு இதன் முக்கியத்துவம், 133-135; பிராண்சுடன் இங்கிலீஷ் போட்டி, 135; மேற்கு நோக்கிய முன்னேற்றத்திற்குத் தூண்டுகோல், 135.

தோட்டப் (குடியேற்றப்) பொருளாதார முறை, 84, 85, 103, 105, 106, 183, 329-331, 512, 526, 527.

தோர்ப், ஜான், 401.

ந

நகரங்கள், (நீர்வீழ்ச்சிக்கோடு, 3, 4; கடற்கரை, 4; போக்குவரத்தின் விளைவு, 425, 440; தெரு இயில் வேக்கள், 462. 463, 559; 1860-க்கு முன்னர், 473-477; குடிபெயர்ச்சியின் விளைவு. 480. 481, 496; நகர் வாழ்க்கை, 481-485).

நயாகரா நதி. 44.

நதி, துறைமுக வளர்ச்சிகள், 436.

நதிகள், கப்பல் செலுத்துதற்கேற்ற, ஐக்கிய அமெரிக்காவில். 8, 9; போக்குவரவு 418, 424, 425, 434-437.

நலன் பயக்கும் புறக்கணிப்பு' 179, 183.

நகர ஜனத்தொகை, 481-485.

நடந்து செல்லும் பிரதிநிதிகள், 499.

நாணயச் சட்டம், (1792-ல்' 249, 257; வெள்ளி 249, 257; 1834-ல் சட்டம் 257.)

நாணயம், (காலனி காலத்தில், 120, 121, 177, 178; புரட்சிக் காலத்தில், 219-221; கான்டெடரேஷன் விதிகளின்படி, 225-229; அரசியல் சட்டம், 236, 237; தேசிய பாங்கு முறையை அமைத்தல், 246-250; 1834-ல் நாணயச் சட்டம், 257; இராஜ்ஜிய பாங்குகள் வெளியிட்ட நோட்டுகள். 257-259; கள்ள நாணயம் அச்சடித்தல், 259; உள் நாட்டுப் போரின்போது, 554)

நாற்பத்தொன்பதின்மர், 308, 337, 579.

நான்டக்கட், மெஸ்ஸாசுசெட்ஸ், 138, 377.

நார்வாக், கனெக்டிகட், 203,

நிலக்கரி, (எஃகுத் தொழிற் சாலையுடன் தொடர்பு, 5, 35, 36; ஐக்கிய அமெரிக்க ஈரவில் வண்டலாகப் படிதல், 5, 35; உற்பத்தி).

'ஆந்திரசைட் நிலக்கரி', 'பைட்டுமினஸ் நிலக்கரி', காண்க.

நில உடைமைக் கட்டுப்பாடு, 91, 206, 228.

நிலவாராய்ச்சிப் பயணம், கண்டுபிடிப்புகளின் துணை கொண்டு, 50, 51; உள் நோக்கங்கள், 56-60.

நிலவாராய்ச்சிப் பயணம், போர்ச்சுகீசிய, 57, 58; ஸ்பானிஷ், 58, 163, 164, 166; இங்கிலீஷ், 59, 60, 62, 79; பிரெஞ்சு, 60, 62, 73; டச்சு, 60, 62, 76.

நில பிரபுத்துவம், 50; ஸ்பானிஷ் அமெரிக்காவில், 71, 72; பிரெஞ்சுக்காலனிகளில், 74, 75; நியூ நெதர்லாண்ட்

சில், 77, 78; இங்கிலிஷ் காலனிகளில்; 88-91; ரான் ஸ்டூகல், 140; அமெரிக்கப் புரட்சி, 202, 203.

நிதித்துவம், ஹாமில்டன் திட்டம், 242-245.

நிதித்துவ நெருக்கடிகள், 'மந்தங்கள்', 'பீதிகள்' காண்க.

நிதிமுறை, புரட்சிக்காலத்தில், 219-221; உள்நாட்டுப் போரின்போது, 554, 573.

நிலக்கொலை, 95, 101, 104-106; உள்நாட்டுப் போர் வரையில், 317, 318, 326 521.

நிலக்கொடைகள்; இருப்புப் பாதைகளுக்கு; 279, 280, 454, 461, 462, 543, 596.

நிலச் சீர்திருத்த இயக்கம், 504.

நில ஊக வாணிகம், காலனிகளில், 154, 192; உள்நாட்டுப் போர்க்காலம் வரையில், 279, 280, 319, 326, 446; உள்நாட்டுப் போர்க் காலம் முதல், 592.

நிலவுரிமை முறை, காலனிகளில், 75, 77, 88-91, 102, 103, 106, 'பொது நிலங்கள்', 'நில வார உரிமை' காண்க.

நிவேதா, 38, 553.

நியூ ஆம்ஸ்டர்டாம், 76, 78.

நியூ பெத்போர்டு, மெஸ்ஸாசூ செட்ஸ், 133, 377, 391, 473.

நியூ இங்கிலாந்து, பொறிவழித் தொழில் உற்பத்தி, 5, 338, 399, 400, 416, 417, 476, 477; நில உருவ இயல் 21, 118, 119; காலனி முறைகள், 83-86, 90; 91; காலனி விவசாயம், 99-103; காலனி வர்த்தகம், 125, 126; காலனித் தொழில், 129-133, 140-142; புரட்சிக் காலத்தில், 212; உள்நாட்டுப் போர்க் காலம் வரையில் விவசாயம், 338, 339; 1812 ஆம் ஆண்டின் போரைப்பற்றிய நோக்கு, 419.

நியூ இங்கிலாந்து கான்ஃபெடரேஷன், 154.

நியூ ஹாம்ஷைர், 86.

நியூ ஹார்மனி, இந்தியானா, 503.

நியூ ஹேவன், கனெக்டிகட், 476, 477.

நியூ ஜெர்ஸி, குடியேற்றம், 87, 88; 150; நில உரிமை முறை, 89-91.

நியூ மெக்சிகோ, 164, 585, 602.

நியூ நெதர்லாண்ட்ஸ், 76-79.

நியூ ஆர்லியன்ஸ், தோற்றம், 73; வர்த்தக முக்கியத்துவம், 298, 327; வர்த்தகம், 327.

நியூ ஆர்லியன்ஸ், 290, 435

நியூயார்க் மத்திய இருப்புப் பாதை, 424, 453, 558.

நியூயார்க் நகரம், வளர்ச்சி, 440, 475; நீர் அளிப்பு, 483.

நியூயார்க் மாநிலம், காலனி வரலாறு, 77; குடியேற்றம், 77; மேற்கு நோக்கிச் செல்லல், 155, 156, 288, 294; புரட்சிக் காலத்தில், 205-208; ஈரி கால்வாய், 438, 439.

நியூ போல்டு, சார்லஸ், 341.

நியூ பரிபோர்ட், மெஸ்ஸாசூ செட்ஸ், 217.

நியூ கோமன், தாமஸ், 394.
நியூ பவுண்ட்லாந்து, 3.
நியூபோர்ட், ஆர். ஐ., 210.
நிக்கல், 37.
நில பிரபுத்துவம், 77, 78, 102, 103, 150.
நிரந்தர குடியேற்ற நிதி, 307.
நில உடைமைக் காலனிகள், 87, 88.
நில வார உரிமை, ஆரம்பகால மேற்குப் பிரதேசத்தில், 159, 282.
நீர் நாய்த் தோல், 134, (தொப்பிகள், 175.)
நீர்வீழ்ச்சிக் கோடு, நகரங்கள், 4.
நீர் மின்சார வளர்ச்சி, 43-45.
நீர்ப்பாசனம், காலனி காலத்துப் பென்சில்வேனியாவில், 104.
நீக்ரோக்கள், உள்நாட்டுப் போரில், உரிமைபெறுதல், 530.
'அடிமை முறை,' காண்க.
நீராவி என்ஜின்கள், 394, 395, 449.
நீராவி இயந்திரங்கள், 410.
நீராவிப் படகுகள், மேற்குப் பிரதேச நதிகளில், 290. 434-437; கண்டுபிடிப்பு, 370, 396, 434, 435, 484; சமூத்திரத்தின்மீது, 371, 372; தட்டையான அடிப்பாகம் உடைய, 435, 436; கடற் கடவின் தேசீயக் கட்டுப்பாடு, 436.
நீராற்றல், 4-6; முக்கியத்துவம், 43-45.
நீர் அளிப்பு, 488.
நீர் வழிகள், முக்கியத்துவம், 5, 6, 331, 332; எல்லை, 5, 6, 419-421, 423, 424; 'போக்குவரவு,' காண்க.
நூற்றுப்பினர்கள், 74.
நூற்கும் கண்டுபிடிப்புகள், 322, 393, 394, 402, 403.
நெருக்கடிகள், 'பீதிகள்,' காண்க.
நெருக்கடி காலம், (பொருளாதாரச் சீரமைப்பு, 222-225; மத்திய அரசின் பலவீனம், 225-227; நாணயக் குழப்பம், 227-229; மீண்டும் செழிப்பு, 230-233; அரசியல் சட்டப் போர், 223-250; விவசாயம், 317).
நெடுஞ்சாலைகள், 'உள்நாட்டு வளர்ச்சிகள்,' 'சாலைகள்', காண்க.
நெப்போலியன், 331; லூசியானுவை வாங்குதல், 272.
நெப்போலிய யுத்தங்கள்' அமெரிக்க வர்த்தகத்தின் மீது கண்டத்தின் முறையால் ஏற்பட்ட விளைவு' 264, 354-359.
நெப்ராஸ்கா, 585, 601.
நெயில், ஈ. டி., (மேற்கோள்). 66.
நெதர்லாண்ட்ஸ், வர்த்தகப் புரட்சியின் விளைவு, 62; காலனி ஆட்சி, 76-79; வர்த்தக முறை, 76-79; நிலவாராய்ச்சிப் பயணங்கள், 76-79; உடன்படிக்கை, 223; ஹாலண்டின் காலனி முறை,' காண்க.

நெட்டில்ஸ், கர்டிஸ், (மேற் கோள்), 178, 206.

நெசவாலைத் தொழில்கள், அவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள், 132, 133; காலனிகளில், 138; உள் நாட்டுப் போருக்கு முன்னர் வளர்ச்சி, 326, 327, 405-408.

நைல்ஸ், ஹெசிகியா, 264.

நைல்ஸ், நதானியல், 214.

நோவா பிரிட்டானியா, (மேற் கோள்), 67.

நோய்கள், 13, 14.

ப

பண்டமாற்று, காலனிகளில், 120, 121.

பர்க்ளி, சர் வில்லியம், 161.

பர்க்பெக், மாரிஸ் (எடுத்துக் காட்டு), 291, 296, 319, 347.

பர்மிங்ஹாம், அலபாமா, 37.

படகுகள், 'கப்பல் தொழில்,' நோக்குக.

பத்திரங்கள், தொடங்குதல்' உள்நாட்டுப் போர்க் காலத் தில், கான்பெடரேட் அர சாங்கத்தால், 573.

பவல்ஸ், சாமுவேல், (எடுத்துக் காட்டு), 467.

பகிஷ்காரம், (காலனி காலத் தில், 184, 187, 188, 213; தொழிலாளர் இயக்கத் தில், 499).

பப்பிள் சட்டம் (1720), 177.

பக்கிள், ஹென்றி (எடுத்துக் காட்டு), 1.

பர்ஆரன், 290, 483.

பட்டர்ஃபீல்டு, ஜான், 465.

பருத்தி ஜின், 282, 285, 324-328, 394, 400.

பருத்தி உற்பத்தி, 322, 405, 515, 551.

பருத்தி, தென்னூட்டிற்கு ஏற்ற வாறு அமைத்தல், 20; விலைச்சலின் மதிப்பு, 28, 30, 325; கடல் தீவு, 30, 322-324; காலனி உற்பத்தி, 138, 213; தொழிற் புரட்சி யின் விளைவு, 282, 322-324; பருத்தி ஜின் கண்டு பிடித்ததன் விளைவு, 282, 285, 324-328, 380, 394; மேற்கத்திய முன்னேற்றம், 282, 326, 521; உற்பத்தியாளன், 300, 534; அடிமை முறை யின் கீழ் உற்பத்தி, 507-544; உள்நாட்டுப் போர்க் காலத்தில் உற்பத்தி, 562-566.

பருத்தி முக்கோணம், 382, 517.

பண்ணைக் கருவிகள், இந்தியன், 98; காலனி, 100; உள்நாட்டுப் போர் வரையில், 340-342.

பண்ணை இயந்திரம், 340-345, 548.

பண்ணைத் தொழில், 'விவசாயம்,' காண்க; விஞ்ஞான முறை, காலனிகளில் தெரியாது, 95, 100, 101; முதலில் தோன்றுதல், 346-349.

பார்ன்ஸ்வர்த், எபிராய்ம், 66.

பழங்கள், அமெரிக்காவில் விளையும், 18, 99; இறக்குமதி செய்யப்பெற்ற, 99; பயிரிடுதல், 104.

பனிக்கட்டிக்குரிய செயல், 15, 16.

பன்றிகள், வளர்ச்சி, 19, 31, 100, 105, 107, 333, 550.

பரிவர்த்தனைச் சாதனங்கள், காலனி காலத்தில். 120, 121, 126, 127, 177, 178; 'காசடித்தல்,' 'நாணயம்,'' காண்க.

பணத்தைக் கடனாக வழங்குதல், 51.

பணம், 'நாணயம்,' காண்க.

பழைய காலனி முறை, 178-181,

பழைய தென்மேற்கு, 282-286.

பசிபிக் மகாசமுத்திரம், 2.

பசிபிக் மாநிலங்கள், 6, 7.

பட்டுத் தொழில், பரிசோதனைகள், 96; உருவாக்கம், 408.

பனாமா கால்வாய், 6,

பனாமா பூசந்தி, 2.

பன்றி இறைச்சி கட்டிவைத்தல், 334, 552.

பயணம், 'உள்நாட்டு வளர்ச்சிகள்,' 'போக்குவரவு,' காண்க.

பவுல்டர் அணைக்கட்டு, 6, 44.

பால்போ, வாஸ்கோடி, 60.

பால்டுவின் என்ஜின் வேலைகள், 410.

பால்டிமோர், வளர்ச்சி, 475.

பால்டிமோர்-ஓகியோ இருப்புப் பாதை, 424, 443, 451, 453.

பாங்கு, நியூயார்க், 231, 247. (வட அமெரிக்கா, 231, 247; மெஸ்ஸாசுசெட்ஸ், 231, 247; முதல் ஐக்கிய அமெரிக்க, 248, 249; இரண்டாவது ஐக்கிய அமெரிக்க, 251-255, 315.)

பாங்கு முறை, காலனி காலத்தில், 177. (முதல், இரண்டாவது ஐக்கிய அமெரிக்க பாங்குகளின் காலத்தில், 248-255; சுயேச்சையான கருவூலமுறை, 256, 257). (விவசாயக் கடன்; பாங்கு; பாங்குகள்; நாணயம்; மந்தம்; பொருளாதார பீதிகள் முதலியவற்றைக் காண்க.

பாங்கு காகித நாணயப் புழக்கம், 'நாணயம்,' காண்க.

பாங்குகள், காலனி காலத்தைச் சார்ந்த, 177. (மாநில, 252, 253; ஓயில்டு கேட், 547; 1861-ல் தோல்விகள், 547).

பார்பரி கடற் கொள்ளைக்காரர்கள், 226.

பார்லி, உற்பத்தி, 29, 104.

பாச்சல்டேர், சாமுவேல் 401.

பாக்சைட், 40.

பால் பண்ணைப் பண்டங்கள், மையங்கள் 31; நியூ இங்கிலாந்தில், 338.

பாலை நிலச் சட்டம், 590.

பாக்னர், ஜே. ஐ. (மேற்கோள்), 486.

பால் உற்பத்தி, 31.

பாட்டர்சன், என். ஜே. 399, 408, 492.

பாட்டிசன், வில்லியம், எட்கர், 419.

பாடக்கெட், 232, 399.

பாக்சன், எஃப். எல். (மேற்கோள்), 464, 525, 584.

பாய்மரக் கப்பல்கள், 352-384.

பாழ், 'சேர்த்துக் காத்தல்' காண்க.

பியர்டு, சார்லஸ், ஏ. (எடுத்துக்காட்டு), 235, 236

பியர்டு, சார்லஸ்-மேரி, (எடுத்துக் காட்டு), 133, 176,

190, 206, 355, 511, 541.
பிவர்லி, மெஸ்ஸாசுசெட்ஸ், 232, 399.
பிடில், நிக்கோலஸ், 254.
பிடில் பீதி, 255.
பிட்வெல், பி. டபிள்யூ. (எடுத்காட்டு), 476, 486.
பிங்கம், யுட்டா, 38.
பிஸ்பீ, அரிசோனு, 38.
பிடுமினஸ் நிலக்கரி, வண்டல் படிதல், 35.
பிளாக் பால் லூன், 369.
பிளேக், லூமேன், ஆர்., 552.
பிராட்போர்டு, கவர்னர் வில்லியம், (எடுத்துக்காட்டு) 84.
பித்தளை, 411.
பிரிட்ஜ்வாட்டர் கால்வாய், 395, 438:
பிரிண்டிலி; ஜேம்ஸ், 395, 438.
பிரிஸ்பேன், ஆல்பர்ட், 503.
பிரிட்டன், 'இங்கிலாந்து,' காண்க.
பிராட்ஹெட், ஜே. ஆர். (எடுத்காட்டு), 76.
பிரவுன் அலெக்ஸாண்டர், (எடுத்துக்காட்டு), 64.
பிரௌன், மோசஸ், 399.
பியூவெல், ஜெஸ்ஸி, (எடுத்துக்காட்டு), 344, 345.
பிரகடனச் சட்டம், 184.
பிட்ச், ஜான், 232, 434.
பிளிண்ட், டிமோதி, (எடுத்துக்காட்டு), 283.
பிரான்ஸ், காலனி முறை, 72-75; அமெரிக்காவைக் கவர்வதில் இங்கிலாந்துடன் போட்டி, 135; 162, 163; உடன்படிக்கை, 223, நெப்போலிய யுத்தங்களின்போது வாதப் பிரதிவாதம், 358, 359, 362.
பிரங்கிலின் பென்ஜமின், 142. 199, 347; (எடுத்துக் காட்டு), 127.
பிராங்கிலின், முன் நின்ற மாநிலம், 160.
பிரெஞ்சு-இந்திய யுத்தம், 166, 182, 195.
பிரெஞ்சுப் புரட்சி, 204, 205.
பிரோபிஷர், சர் மார்ட்டின், 60, 65.
பியூட்டர், எட்வர்ட், (மேற்கோள்), 275.
பிலடெல்பியா, 138, 552; வளர்ச்சியும் முக்கியத்துவமும், 474; நீர் அளிப்பு, 482.
பிலிப்ஸ், நிலப் பிரபுத்துவ அமைப்பு கைப்பற்றப்பெற்றமை, 205.
பிலிப்ஸ், உல்ரிச், பி. (மேற்கோள்), 531.
பிங்னீ, சி. சி., 272, 286.
பிட், வில்லியம், 183, 223.
பிட்ஸ், ஹீரா, ஜான், 344.
பிட்ஸ்பர்க், 5, 145, 294, 416, 477, 552.
பிசாரோ, பிரான்சிஸ்கோ, 65
பிஸ்மவுத், மெஸ்ஸாசுசெட்ஸ், தோற்றம், 84, 85; விவசாயம், 99-101.
பிஸ்மவுத் கம்பெனி, 82, 84, 85.
பிரஸ்டர் ஜான், 63.
பிரகடனம், 1763-ல், 166, 192, 193, 208.
பிராவிடன்ஸ், ஆர். ஐ., 391, 399, 477.
பிராவின்ஸ்டவுன், மெஸ்ஸாசுசெட்ஸ், 138.
பிரஷ்யா, உடன்படிக்கை, 223.
பியூப்லோ இந்தியர்கள், 96.
பியூகெட் சவுண்ட், 6.

பிரதேச வளர்ச்சி, 510, 511; லூசியானு, 272, 286; ஃபிளோரிடா, 286; மெக்சிகன் யுத்தம் மூலம், 303; இருப்புப் பாதைகளின் தூண்டுதல் 304.

பீச்சர், கார்ல், (எடுத்துக் காட்டு), 198.

பீல்டு, சைரஸ், 468.

பீட்மண்ட் பகுதி, விளக்கம் 153; நுழைதல், 154-161.

புளூ ரிட்ஜ் மலைகள், 4.

புரூக் பண்ணை, 504.

புட்டே, மான்டானு, 38.

புல்லர், ஜே. டி. பி. (எடுத்துக் காட்டு), 510.

புல்டன், ராபர்ட், 370, 396, 434.

புரப்பல்லர், திருகு, 370.

புரோதீரோ, ஜார்ஜ், டபிள்யூ., (மேற்கோள்), 67.

புரட்சிகரமான யுத்தம், பொருளாதார காரணங்கள், 169-200; பின்னணி, 194-200; வர்க்கப் பிரிவுகள், 201-204; பொருளாதார நிலைமை, 205-208; நிதி சேர்த்தல், 204, 205, 219-221; எல்லைப்புற முன்னேற்றம், 208-210; விவசாயத்தின்மீது ஏற்பட்ட விளைவு, 210-213; தொழிற்துறை வாழ்க்கையில் ஏற்பட்ட விளைவு, 213-215; வர்த்தகமும் தனியார் கப்பற் படையும், 216-219; பின்னர் பொருளாதார சீரமைப்பு, 222-225.

புகையிலை, 3, 8, 105, 106; காலனி முக்கியத்துவம், 20; பயிரின் மதிப்பு, 31; இந்தியர்கள் பயிரிட்டனர், 97; உற்பத்தி (1790), 212; புரட்சிக்குப் பின்னர் குன்றுதல், 318; ஏற்றுமதிகள், 329; மேற்கு நோக்கிய முன்னேற்றம், 329.

பூன், டேனியல், 145, 208.

பூர்ஷுவாக்கள், (வர்த்தகப் புரட்சியில் அதன் தூண்டுதல், 62.)

பூரியர், சார்லஸ், 503.

பூகோளரீதியான விளைவு, தொழில்களில், 16, 17, 20-22.

பூகோளரீதியான கண்டுபிடிப்புகள், 'நிலவாரய்ச்சிப் பயணங்கள்,' காண்க.

பெய்லி, பிரான்சிஸ், (எடுத்துக் காட்டு), 428.

பெர்க்லி, சர் ஜான், 87.

பெர்லின்-பாக்தாத் இரயில்வே 56.

பெர்னர்டு, கவர்னர் (எடுத்துக் காட்டு), 141.

பெர்ரிஸ், அமெரிக்காவைச் சார்ந்த, 18, 99.

டெஸ்ஸிமர் முறை, 402.

பெரும் வியாபாரம், 'இணைப்பு,' காண்க.

பெர்டினண்டும் இசபெல்லாவும், ஸ்பெயின், 59.

பெரும் ஏரிகள், 3-7, 15.

பெரும் சமவெளி, 3-6, 10, 12.

பெக், ஜே. எம். (மேற்கோள்), 298, 299.

பெக்கப், சர் ஜார்ஜ், (மேற்கோள்), 66.

பென், வில்லியம், 87, 154, 155.

பென்சில்வேனியா, மூல வளங்கள், 5; குடியேற்றம், 87; காலனி விவசாயம், 104; காலனித் தொழில், 139, 141, 214, 215; புரட்சியின் போது, 205-210, 214, 215, 217; புரட்சியின்போது காலனி வர்த்தகம், 217.

பென்சில்வேனியா கால்வாய், 442.

பென்சில்வேனியா இருப்புப் பாதை, 424, 452, 557.

பெப்பெரல் எஸ்டேட் கவரப் பெற்றமை, 205.

பெரு, 65.

பெட்ரோலியம், மூலவளங்கள், 34; தொழில் வளர்ச்சி, 552, 553.

பெருநிலக் கிழமை, 74.

பெண்டிர், ஆரம்பகால பொறி வழித் தொழிலில், 489-495.

பேக்கன், நதேனியல், 161.

பேக்வெல், ராபர்ட், 95, 346,

பேர்ஃபீல்டு, கனெக்டிகட், 203.

பைட், எமர்சன், டி. (எடுத்துக் காட்டு), 547, 548, 556; (மேற்கோள்), 564, 565.

பைக், செபுலான், 301, 302.

பொன்னிவில் அணைக்கட்டு' 44.

பொருளாதாரப் பின்னணி, காலனிமயமாக்குதலின், 50-68.

பொருளாதார மந்தங்கள், 'மந்தங்கள்,' 'பீதிகள்,' காண்க.

பொருளாதார ஏகாதிபத்தியம், 60.

பொன், 6, 53; உற்பத்தி, 40, 42; தேடி அலைதல், காலனி மயமாக்குதலின் உள்நோக்கம், 63, 64; ஸ்பானிஷ் காலனிகளில், 63, 64; கண்டுபிடிப்பு; கலிபோர்னியாவில், 258, 262, 308, 340; நிவேதா, கொலராடோ ஆகியவற்றில் கண்டுபிடிப்பு, 'நாணயம்,' காண்க.

பொறுக்கமுடியாத சட்டங்கள், (தாங்கொணாச் சட்டங்கள்), 188.

பொறிவழித் தொழில், காலனி உதவியும் கட்டுப்பாடும், 123, 129, 131, 134, 138, 139, 172, 173; காலனி காலத்தில், 138-140, 174, 175; கப்பல் கட்டுதல், 21, 77, 134; கப்பற்றுறைச் சரக்குகள், 125, 131, 133, 134, 172; இரும்பு, 133, 139, 175, 176; மரத்துண்டுத் தொழில், 133; நெசவு, 405-408; கனரகத் தொழில், 409-412; விநியோகம், 416, 417; உள்நாட்டுப் போர்க் காலத்தில் 550-553, 570, 571.

பொட்டாஷ், காலனி உற்பத்தி, 133.

பொதுநில கமிஷன், 593.

பொதுநிலங்கள், திட்டம், 1862 முடிய, 276-282, 290, 317, 509; விவசாயத்தின்மீது விளைவு, 317-322; தொழில்மீது ஏற்பட்ட விளைவு, 389; இருப்புப் பாதைகள், 462, 595; 1862 முதல் திட்டம், 589-593, குடிவந்தேற்றத்தின் மீது ஏற்பட்ட விளைவு, 596, 'ஹோரில் சட்டம்,' காண்க.

பொதுநலப் பொதுத் துறைகள், 'அரசாங்க உடைமை,' 'அரசாங்கக் கட்டுப்பாடுகள்,' 'இருப்புப் பாதைகள்,' 'தெரு இரயில் வேக்கள்,' காண்க.

போயஸ், பிரான்ஸ், 2.

போஸ்டன் தேநீர் விருந்து, 188.

போல்டன், மாத்தியு, 395.

போக்குவரத்து, உள்நாட்டுப் போரில், 423-468.

போர்ட் லோச்சபார், 167.

போர்ட் ஆரஞ்சு, 76.

போர்ட் ஸ்டான்விக்ஸ், 167.
போலோ, மார்க்கோ, மேஃபியோ, நிக்கோலோ, 57.
போன்டியாக், 166, 191.
போர்ட் ராயல், 121.
போர்ச்சுகீய ஆராய்ச்சிப் பயணங்கள், 57, 58.
போட்டோமாக் கம்பெனி, 443.
போக்குவரவு, நதிகளின் மூலம், 118, 119, 423, 424, 434-447; காலனிகளில், 118, 119, 423-427; பொறிவழித் தொழில், 418-421; சுங்கச் சாவடிகள் மூலம், 427-430; கால்வாய்கள் மூலம், 437-441; ஆரம்பகால இருப்புப்பாதைகள் மூலம் 449-450; தெரு இரயில்வேக்கள் மூலம், 462, 463; 'உள்நாட்டு முன்னேற்றங்கள்,' காண்க.
போர், 1812-ல், 252, 263, 272, 289; காரணங்கள், 356-367; நியூ இங்கிலாந்தின் நோக்கு, 359-361; வரலாறு, 362-367; விளைவுகள், 366, 367; பொறிவழித் தொழிலின் விளைவுகள், 407.
பௌதாயின், கவர்னர், 228.

ம

மத்திய பசிபிக் இருப்புப் பாதை, 595.
மக்காச் சோளம், 3, 4. (காலனிகளில் அதன் முக்கியத்துவம், 20; உற்பத்தி, 28; இந்தியர்கள் பயிரிட்டது, 98; தென் ஞட்டில், 331; மத்திய மேற்கில், 334; நியூ இங்கிலாந்தில், 338; உள்நாட்டுப் போர்க் காலத்தில் உற்பத்தி, 550.)
மத்தம், பொருளாதார, புரட்சிக்கு முன்னர், 182, 183, 194-196; 1837-ல், 259-261; 1857-ல், 262. 1815-19-ல், 263.; விவசாய, 317-322; 1861-ல், 328.
மருந்துகள், இடைக்கால வர்த்தகத்தில், 52.
மனித இனப்பயன் பிரதேசங்கள், முக்கியத்துவம், பொருளாதார வரலாற்றிற்கு, 7.
மன்னர், ஜார்ஜ் யுத்தம், 163,
மன்னர் ஜான் II, போர்ச்சுகல், 58.
மன்னர் ஃபிலிப் யுத்தம், 154;
மதுவகை. ஆப்பிரிக்க வர்த்தகம், 128; பொறிவழித் தொழில், காலனி காலத்து நியூ இங்கிலாந்தில், 137, 140; மேற்கிந்திய வர்த்தகம், 140, 141; துய்ப்பு, 335, 415; ஆய்த் தீர்வைகள், 335.
மரத்துண்டுத் தொழில், 28, 29; காலனிகளில், 133, 134.
மலேரியா, 13.
மத்தியதரைக் கடல், இடைக்கால வர்த்தகத்தில், 54-56.
மத்திய அட்லான்டிக் மாநிலங்கள், நில உருவ இயல், 21,
மத்திய கால்னிகள், விவசாயம் 334, 339; காலனி காலத்தில், 103-105.
மத்திய பாதை, 117.
மழை, ஐக்கிய அமெரிக்காவில், 10, 12, 598.
மதம், காலனி முறையின் உள் நோக்கம், 63, 64; புரட்சியின் போது, 208.
மதத் தகுதிகள். 208.
மறுமலர்ச்சி, 50.
மரக்கப்பல்கள், 369-374. 'கப்பல் தொழில்,' காண்க;
மஞ்சள் காய்ச்சல், 13.

மாரிஸ், ராபர்ட், 202, 242, 288.
மாரிஸ் கால்வாய், 444.
மாநிலக் கடன்களை ஏற்றுக் கொள்ளுதல், 243-245.
மாவு அரைத்தல், 413, 415; மேற்குநோக்கி முன்னேற்றம், 335.
மாக்கென்சீ நதி, 3.
மாக்லே, வில்லியம், (மேற் கோள்) 245.
மாடிசன், ஜேம்ஸ், 241, 286, 315, 361.
மாங்கனிஸ், 37.
மானிங், வில்லியம், 342.
மார்பின்ஹெட், மெஸ்ஸாசுசெட்ஸ், 138, 378.
மார்க்குஹெட், பாதிரி, 145.
மார்ஷல், தலைமை நீதிபதி, 253, 258, 315.
மார்டினியூ, ஹாரியட், (மேற் கோள்) 489-492.
மார்வின், டபிள்யூ. எல்., (மேற் கோள்), 355
மாக்-சங், 444, 451.
மாற்றுப் பயிர்முறை, 94, 101, 318.
மாலுமிகள், 354, 368.
மின்சார சக்தி, மூலவளங்கள், 43-45.
மிசாமி-ஈரி கால்வாய், 445.
மிடில்செக்ஸ் கால்வாய், 438
மின்னசோட்டா, விவசாயம், 336.
மிசிசிப்பி, குடியேற்றம், 283; பருத்தி பயிரிடுதல், 326.
மிசிசிப்பி நதி, 3, 5, 6, 8, 301-310; உள்நாட்டுப் போருக்கு முன்னர் போக்கு வரவு, 435.
மிசிசிப்பி பள்ளத்தாக்கு, 5; அதனைத் தேடிச் செல்லும் ஆராய்ச்சிப் பயணம், 301-310; ஒன்றுக்கொன்று மாறுபட்ட அனுகூலங்கள், 271-273.
மிசௌரி, 28; குடியேற்றம், 283; சணல் உற்பத்தி; 330.
மிசௌரி சமரசம், 541.
மிசௌரி நதி, 3, 6, 303.
மிட்செல் டி. டபிள்யூ. (மேற் கோள்). 319-321.
மினகு, இடைக்கால வர்த்தகத்தில், 52.
மீன்பிடிக்குந் தொழில் துறை, ஐக்கிய அமெரிக்கக் குடியேற்றத்திற்கு முன்னர், 19, 20, 65; காலனி காலத்தில், 20, 87, 136, 137; தற்பொழுது அதன் முக்கியத்துவம், 38. 43; புரட்சியின் விளைவு, 222, 376-378; வளர்ச்சி, 371-378.
முறிவுகள், 1861-ல், 547.
முட்கம்பி, 588, 598.
முதலாளித்துவமும் அமெரிக்கப் புரட்சியும், 202.
முதலாக்குதல், இருப்புப்பாதைகளில், 459-462.
மூலிவுகள், இருப்புப்பாதை, 202; கால்வாய், 443-448; பாங்கு 547; 1861-ல், 547.
முதல் ஐக்கிய அமெரிக்க பாங்கு, 248, 249.
முதல் முயற்சியாளர்கள், 'மேற்கு நோக்கி முன்னேற்றம்,' காண்க.
முத்திரைச் சட்டம், 184.
முக்கோண வர்த்தகம், 126-128, 388.
முற்றுத நிலக்கரி. 35.
மூலதனம், 312, 391, 402, (உள்நாட்டுப் போரின்போது, 558).

மூடி. பால், 401
மூனி தாமஸ், (மேற்கோள்), 487, 488.
மூலவளங்கள். 'இயற்கை வளங்கள்,' காண்க.
மெக்காடம், ஜான், எல், 395.
மெக்கார்மிக் சைரஸ், 342.
மெக்டஃபி, ஜெனரல் ஜார்ஜ், (மேற்கோள்), 538.
மெக்கிரேன், ஆர். சி., (மேற்கோள்) 448.
மெக்கே. கார்டன், 552.
மெக்லோலின், டாக்டர் ஜான், 304.
மெக்மாஸ்டர், ஜே.பி., (மேற்கோள்), 291, 486; எடுத்துக்காட்டு, 360, 429.
மெகல்லன், பெர்டினண்ட், 60.
மெயின், வெற்றி பெறுத குடியேற்றம், 82; குடியேற்றம் நிகழ்ந்த, 87.
மெய்ஸ், 'மக்காச் சோளம்,' காண்க.
மெஸ்ஸாசுசெட்ஸ், குடியேற்றம், 85, 86; காலனி விவசாயம், 100, 101; காலனித் தொழில், 137-139; புரட்சியின்போது 205, 214, 215, 217.
மெஸ்ஸாசுசெட்ஸ் பாங்கு, 231, 247
மெஸ்ஸாசுசெட்ஸ் விரிகுடா கம்பெனி, 85.
மெக்கானிக்ஸ்ஃபீ பிரஸ் (மேற்கோள்), 494,
மென்ஞேஷோட்டுகள், 64
மெர்க்கண்டலிசம், 109, 122-124, 132, 133, 169-173, 190, 276, 406; நன்மைகளும் தீமைகளும், 178-181, 213.
மெர்ரிமாக் நதி, 44.
மெத்தாடிஸ்ட் சர்ச், 306.
மெக்சிகன் போர், 303, 510, 541.
மெக்சிகோ, 65.
மேக்கன் சட்டம், 361.
மேன் ஹாட்டன் தீவு, வர்த்தக நிலையம், 76, குடியேற்றம் நிகழ்ந்த, 76.
மேரிட்டா, தோற்றம், 287, 290, 294.
மேரியன் பிரான்சிஸ், 210.
மேரிலாண்டு, 273; குடியேற்றப், 87; காலனி விவசாயம், 103, 107,
மேசன், காப்டன் ஜான், 87.
மேசன், வில்லியம், 401.
மேயர் பி. ஹெச். (மேற்கோள்) 424.
மேகநோய், 13.
மேற்குப் பிரதேச நிலங்கள். 'பொது நிலங்கள்,' காண்க.
மேற்கிந்தியத் தீவுகள், 377-378; மும்மூன (முக்கோண) வர்த்தகம், 117, 126-128, 231; காலனி வர்த்தகம், 124, 125, 131, 134, 135, 140, 141, 179; பிரிட்டிஷ் விலக்குச் சட்டங்கள், 180, 189, 190; வர்த்தக மீட்சி, 231.
மேற்கு ஒதுக்கம், 286, 287.
மேற்கு யூனியன், 468.
மேற்கு நோக்கி முன்னேற்றம்; முக்கியத்துவம், 143-145; கட்டங்கள், 145-147, 298, 299; முதல் எல்லை, 148-152; கீழ்விழும்கோட்டிற்கு, 148, 152; காரணங்கள் 153, 154, 291 293-295, 307, 308; இந்தியர்கள், 152-154, 166, 167, 271; பிட்மண்ட், 154-161; கிழக்கத்தியர்களுக்கு

எதிர்ப்பு, 158, 159; தலத் திவில்லா நிலச்சுவான்தார் கள், 159; இங்கிலாந்து திட்டம், 167, 190-192, 272, 273; புரட்சிக் காலத் தில், 208-210, 271; பழைய வடமேற்கினுள், 209, 286-295; புரட்சி முடிவுற்ற பின்னர், 273-276; அரசாங்கத்தின் நிலக் கொள்கை, 276-282; பழைய தென் மேற்கினுள், 282-286; மிசிசிப்பிக்கு அப்பால், 301-310, 578, 579; கிழக்கின்மீது ஏற்பட்ட விளைவு, 310-313; விவ சாயத்தின்மீது ஏற்பட்ட விளைவு, 317-322; சுரங் கத்தின் தூண்டுகோல், 578 585; கால்நடைப் பராமரிப் பின் தூண்டுதல், 585-589.

மொபைல், 326, 454, 477,

மொகாக பள்ளத்தாக்கு, டச் சுகுகார்கள் குடியேற்றமை, 76; விவசாயம், 104.

மொலாசஸ் சட்டம், 180, 183, 196.

மொரன்சி, அரிசோனு, 38.

மோரிசன், எஸ். ஈ., (மேற் கோள்) 217, 363.

மோர்மன்கள், 307, 317, 580.

மோரில் சட்டம், 350, 509, 560, 591.

மோர்ஸ், சாமுவேல், எஃப்.பி., 402, 467.

மோன்டானு, 38, 583, 585, 602.

ய

யங், ஆர்தர், 346.

யாத்திரிகர், 84, 86.

யாவருக்கு முன் வாங்கும் உரிமை, 283; 510, 592.

யுட்டா, 37, 303, 583, 602.

யூனியன் பசிபிக் இருப்புப் பாதை, 558, 595.

யூனியனிசம், 'தொழிலாளர்', 'தொழிலாளர் அமைப்பு,' 'தொழிலாளர் சட்டம்' காண்க.

யெங், பிரிகாம், 306.

ர

ரஃப்பின், எட்மண்ட், 339.

ரம், ஆப்பிரிக்க அடிமை வியா பாரம், 127-129; காலனி பொறிவழி உற்பத்தி, 187.

ரம்சே, ஜேம்ஸ், 401, 434.

ரசல், மேஜர்ஸ், வாடல், 465.

ரஷ்யா, 1917-ல் புரட்சி, 204.

ராபன்ஜே, யூகோ (மேற்கோள்) 355.

ராலே, சர் வால்டர், 81.

ராம்சே, டேவிட், (மேற்கோள்) 198 202.

ராம்ஸ்டெல், சி. டபிள்யூ. (எடுத்துக்காட்டு), 535.

ராப்ஸ்டவுன், 290.

ராபர்ட்சன், ஜேம்ஸ், 208, 209.

ராக்கெட், 396, 449.

ராக்கி மலைகள், 5.

ராயல் ஆப்பிரிக்கன் கம்பெனி, 116.

ரேன்டால்ப், ஜான், (மேற் கோள்) 268, 363.

ரை உற்பத்தி, 29 104, 331, 335.

ரைல் ஜான், 408.

ரைட், பென்ஜமின், 439, 459.

ரோடு ஐலண்டு, குடியேற்றம், 86; பொறிவழி உற்பத்தி, 400, 405.

ரோட்ஸ், ஜே. எஃப்., (மேற் கோள்) 507, 571, 573.

ல

லங்காஸ்டர், 138 . 140,428.
லங்காஸ்டர் பைக், 428.
லண்டன் கம்பெனி, 80-83.
லவுண்ட்ஸ், வில்லியம், 263.
லாஃபோலட் மாலுமிகள் சட்டம், 354.
லாம்பர்ட் ஜான், (மேற்கோள்) 360.
லாரன்ஸ், அப்பாட், 402.
லாரன்ஸ், மெஸ்ஸாசுசெட்ஸ்; 402.
லாங் ஐலண்ட், டச்சுக்காரர்கள் குடியேறியமை, 76.
லாயலிஸ்டுகள், 'டோரிகள்,' காண்க.
லாக்ஜான், 88, 150.
லிங்கன், ஆப்ரகாம், 294, 589.
லினன், காலனி காலத்தில், 138.
லிவ்விங்ஸ்டன், ராபர்ட், 346. 434.
லிபியர், ஏ. ஹெச். (மேற்கோள்) 57.
லின், மெஸ்ஸாசுசெட்ஸ், 476;
காலனி இருப்புச் சாமான் வேலைகள், 139, 176.
லீயூப், எஃப். ஈ., (எடுத்துக் காட்டு) 152.
லீவிஸ். கிளார்க் முதலானோர் நிலவராய்ச்சிப் பயணம், 290, 301, 304,
லூயி XIV, பிரான்ஸ், 169.
லூசியானு, கொள்முதல். 272, 290, 301.
லூயவில், 335, 414, 417 446, 477.
லெவாண்டு வர்த்தகம், இடைக்கால வர்த்தகம், 55.
லோகன், ஜேம்ஸ் (மேற்கோள்) 157.
லோவெல் மெஸ்ஸாசுசெட்ஸ் 403, 475, 489, 483,

வ

வணிகக் குழு, 55, 56.
வர்த்தகம், நில ஒருவப் பின்னணி, 118, 119; காலனியைச் சார்ந்து, 118 119; மாற்றுச் சாதனம், 120, 121; வர்த்தகத் திட்டம், 122-124; பதினெட்டாம்நூற்றாண்டில், 126; உள்நாட்டு வர்த்தகமும், கடற்கரை வர்த்தகமும். 125, 126; புரட்சிக் காலத்தில், 216-219 நெருக்கடி காலத்தில், 230, 353; கட்டுப்பாட்டினை நிர்ணயிக்கும் அரசியல் சட்ட விதிமுறைகள், 236, 237 அமெரிக்கக் கப்பல்களில் 352-384; நெப்போலிய போர்களில் 355; உள்நாட்டுப் போரில் 379-381. 'கடற்கரை வர்த்தகம்' உள்நாட்டு வர்த்தகம்' 'ஏற்றுமதிகள்' (வெளிநாட்டுச் சந்தைகள்' 'இறக்குமதிகள்' காண்க; உள்நாட்டு வர்த்தகம், காலனிகளில் 125, 126; உள்நாட்டுப் போரில் 428 435, 440, 449) (வெளிநாட்டு வர்த்தகம்) 352, 362, 367-376.
வர்த்தக மந்தங்கள் 'மந்தங்கள்' 'பீதிகள்' காண்க.
வர்த்தகப் புரட்சி 56-58 62.
வர்த்தகப் போட்டி மாநிலங்களுக்கிடையில் 226.
வர்த்தக உடன்படிக்கைகள், (பிரான்சுடன் 223; பிரஷ்யாவுடன் 224; ஸ்வீடனுடன், 223.)
வலுப்படுத்துதல், வாணிபம் 557.

வடிகட்டுதல் 140, 335 415.
வர்ணவகைகள், இடைக்கால வர்த்தகத்தில் அவற்றின் முக்கியத்துவம், 53.
வஸ்குடா, மெக்சிகோ, 3, 9.
வஸ்குடா மாநிலங்கள், 2, 5, 9.
வஸ்குடா நீரோட்டம், 2.
வர்த்தகக் கப்பற்படை, காலனி காலத்தில், 133, 134; புரட்சிக் காலத்தில், 216-219; புரட்சிக் காலம் முதல் உள்நாட்டுப் போர்க்காலம் வரையில், 352-362; உள்நாட்டுப் போர்க்காலம் முதல், 375, 376.
வர்த்தக முதலாளித்துவம் 50-52, 60, 191-193, 352, 389.
வட கரோலினு காலனி விவசாயம், 107; பருத்தி உற்பத்தி, 322, 323.
வடக்கு மத்திய மாநிலங்கள் விவசாயம் 331-336.
வடடெக்கோட்டா, 29, 593, 602.
வட பசிபிக் இருப்புப்பாதை, 595.
வடமேற்கு கம்பெனி, 304.
வடமேற்கு அவசரச் சட்டம், 273-276.
வடமேற்குப் பிரதேசம், 1763-ல் பிரகடனம், 166, 192, 209; பிரிட்டிஷார் கியூபெக்குடன் இணைத்தமை, 189; குடியேற்றம், 209, 273, 274, 286-295.
வகுப்புணர்ச்சி, 144, 145, 507.
வரிவிதிப்பு, காலனி காலத்தில், 182-189, 194, 195; புரட்சிக் காலத்தில், 219-221; கான்பெடரேஷன் விதிகளின்படி 225, 226, அரசியல் சட்டத்தில் 236, 237.
வழிச்சுங்க பாலங்கள், 429.
வழிச் சுங்க சாலைகள், 427-430.
வர்த்தகப் பாதைகள், இடைக்காலத்தில், 54-56.
வனுடியம், 37.
வன்டாலியா III, 432.
வர்ஜீனியா, குடியேற்றம், 81, 83-85; விவசாயம், 105, 322 326, 329; அடிமைமுறை, 524.
வாணிபக் கொடுப்பல் நிலை 120, 127-129, 135, 382, 383; (மெர்க்கண்டலிசம் 170, 176).
வாணிபத் தடை, 1812-ல் நடைபெற்ற யுத்தத்தில் அமெரிக்கக் கடற்கரையில் தடை 364. (உள்நாட்டுப் போரில் தென்னுட்டில் 566-569).
வாணிபத் தடையை மீறுதல் புரட்சிக் காலத்தில் 212.
வாழ்க்கைச் செலவு 495; (சர்வாதீனத்தில் இலாபங்கள் 76; உள்நாட்டுப் போரின்போது 554-557, 571-573).
வாணிகச் சுழல் 'மந்தங்கள்' 'பீதிகள்' காண்க.
வாணிபத் தடை 329, 361, 390.
வாணிபத் தடைச் சட்டம், 360, 361.
வாயு பிரகாசிக்கும் 482.
வாசஞைத் திரவியங்கள் இடைக்கால வர்த்தகத்தில் அவற்றின் முக்கியத்துவம் 52, 63; நிலவாராய்ச்சிப் பயணத்தில் உள் நோக்கமாக, 63.

வான் பியூரன், மார்ட்டின், 256.
வான்ரென்சுலேயர் கில்லியன், 77.
வாகனங்கள், காலனி காலத்தில், 119.
வாபாஷ்-ஈரீ கால்வாய் 414.
வாக்கர் சுங்கம், 269.
வால் போல், ராபர்ட் 179.
வால்தாம் மெஸ்ஸாசுசெட்ஸ், 401, 476, 489-491.
வால்தாம் அமைப்பு, 401, 405.
வாஷிங்டன் ஜார்ஜ், 202, 242, 246, 346; (மேற்கோள்), 212, 226, 318, 327.
வாடகா, 208, 209.
வாட்டர்மேன், காப்டன், ஆர். ஹெச்., 373.
வாட்கின்ஸ், ஜேம்ஸ் எல்., (மேற்கோள்), 563.
வாட்சன், எல்காஸ், கிராமச் சந்தைகள் 348.
வாட், ஜேம்ஸ், 394, 395.
விவசாயச் சங்கம், 504.
விவசாயக் கல்வி, சந்தைகள், 343, 348; (சங்கங்கள், 347, 348; கல்லூரிகளும், பள்ளிகளும், 349, 350; பத்திரிகைகள், 349, அரசாங்க உதவி, 348-350; மோரில் சட்டம் 350, 591.
விவசாய ஏற்றுமதிகள், காலனியைச் சார்ந்த, 125-129, 172, 173; (புரட்சிக் காலத்திலிருந்து உள்நாட்டுப்போர்க் காலம் முடிய, 325; உள்நாட்டுப் போர்க்காலத்தில், 550; 562-565).
விவசாயக் கருவிகள்; இந்தியன், 98 (காலனி காலத்துக் கருவிகளும் இயந்திரங்களும், 100; புரட்சிக் காலத்திலிருந்து உள்நாட்டுப் போர்க் காலம் முடிய, 340-345; உள்நாட்டுப் போர்க் காலத்தில், 548.)
விவசாயத் தொழிலாளர், காலனிகளில், 106, 107, 110-115; (புரட்சிக் காலத்திலிருந்து உள்நாட்டுப் போர்க்காலம் முடிய, 332, 340; உள்நாட்டுப் போர்க் காலத்தில் 548.) 'அடிமை முறை,' காண்க.
விவசாய வளங்கள், 18-21
விவசாயப் புரட்சி, அமெரிக்கப் புரட்சிக்கு முந்திய மந்தம், 195-197; (அமெரிக்காவில் துவக்கம், 346-350; இங்கிலாந்தில் துவக்கம், 346.) முதன் முதலில் நிறுவியது, 347, 348.)
விவசாய அமைதியின்மை, நெருக்கடி காலத்தில், 228, 229; (அரசியல் சட்டம், 235; மேற்கு நோக்கிய முன்னேற்றத்தின் விளைவு 317-322, 593, 594.)
விவசாயம், 12; (இந்தியன், சாதனங்கள், 96-99; உற்பத்தி செய்த பயிர் வகைகள், 93-99; கருவிகள், 97-99; வழங்கியவை, 98, 99; பற்றுக்குறை, 99.) (காலனி சார்புடைய, ஸ்பானிஷ் காலனிகளில், 71; பிரெஞ்சுக் காலனிகளில், 73, 74; நியூ நெதர்லாண்ட்சில், 77, 78; காலனிகளில் நிலவார உரிமை, 75, 78, 88-91, 102, 103; ஐரோப்பிய பின்னணி, 94-96.
விஞ்ஞான முறை விவசாயம் பற்றிய அறியாமை, 95, 101; காலனிகளில் நிலக்கொலை, 95, 101, 104-106; பிராந்திய செடி கொடி வகைகள், 97-99; நியூ

இங்கிலாந்து காலனிகளில், 99-103; காலனிகளில் இறக்குமதியாகிய செடி, கொடி வகைகள், 99, 100; காலனிகளில் கால்நடைகள், 100, 104, 107; கருவிகளும் இயந்திரங்களும், 100; மத்திய காலனிகளில், 103-105; தென் காலனிகளில், 105-103; கூறுகள், 108, 109.) (புரட்சிக் காலத்திலிருந்து உள்நாட்டுப் போர்க்காலம் வரையில், புரட்சியின் விளைவு, 210-213; மேற்கு நோக்கிய முன்னேற்றத்தின் விளைவு, 317-322; பருத்தி ஜின் கண்டு பிடித்ததன் விளைவு, 324-328; தென் ஞட்டில், 328-331; மத்திய மேற்கில், 331-335. மிசிசிப்பிக்கு மேற்கில், 336, 337; நியூ இங்கிலாந்தில், 338; தொழில் உழைப்புச் சேமிப்பு இயந்திரத்தின் விளைவு, 340-345; விஞ்ஞானமுறை விவசாயம், 346-350; (உள்நாட்டுப் போர்க்காலத்தில், 548, 550, 571-573.) (உள்நாட்டுப் போர்க் காலம் முதல், 589-595; விவசாய அதிருப்தி, 593, 594.) (உலர்ப்பண்ணைமுறை கால்கூ. விவசாயிகளின்; நீர்ப்பாசனம்; நிலக் கொகூ; நில ஊகவாணிபம்; நில உடைமை; பொதுநிலங்கள்; கால்நடைப் பண்ணை முறை: நில வார உரிமை முதலானவற்றை நோக்குக.)

விவசாய இலாக்கா, அந்த இலாக்கா ஏற்படுவதற்கு முன் அரசாங்க உதவி, 348-350.

விலங்கினங்களின் வாழ்க்கை (வட அமெரிக்காவில்), 17-19, 31.

விலங்கின்ப் பண்டங்கள், 31; 32.

வியாபார மந்தங்கள், ('மந்தங்கள்', 'பீதிகள்', காண்க.)

வியாபார நிர்வாக அமைப்பு ('இணைப்புகள்', 'சேர்ப்புகள்', காண்க).

விரைவுக் கப்பல்கள்; 372.

விவசாயிகளின் இயக்கங்கள், 'விவசாய அமைதியின்மை,. காண்க

விலையுயர்ந்த கற்கள், இடைக்கால வர்த்தகத்தில், 53.

விலைகள்; காலனி காலத்தில், 134; வீழ்ச்சி புரட்சிக்குப் பின்னர், 222; உள்நாட்டுப் போரின்போது, 554-557,

விடுவரிகள் (மஹவரிகள்), 91, 192, 206.

விக்டோரியா, மெகல்லன் கப்பல், 60.

வில்லார்டு, ஹென்றி, 595.

விக்குகள், 202.

விஸ்கி, 335, 415.

விஸ்கி கிளர்ச்சி, 246, 335.

விட்மன், மார்க்கஸ், 145.

விட்னே, எலி., பருத்தி ஜின் கண்டுபிடித்தார், 324, 400; (மேற்கோள்), 324; ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை மாற்றிக் கொள்ளும் இயந்திர முறையைப் புகுத்திய முதல் முயற்சியாளர், 400, 401.

வில்கின்சன், ஜெரிமியா, 215

வில்லியம்ஸ், ரோஜர், 64, 67.

வியோமிங், 583, 602.

வியோமிங் பள்ளத்தாக்கு, ஆந்திரசைட் நிலக்கரி, 35; படுகொலை, 203; கனெக்

டிகட்டில் குடியேறியவர்கள் தாக்கப்பட்டனர், 226.

வீடுகட்டும் பிரச்சினை. 495.

வீடன், ஜான், 228.

வீலிங், டபிள்யூ. வா., 419; 432.

வீயத், நதானியல், ஜே., 306.

வெளிநாட்டு வர்த்தகம், 'வர்த்தகம்', காண்க.

வெளிநாட்டினர், 'குடிவந்தேற்றம்'; காண்க.

வெள்ளி, 6, 53; காம்ஸ்டாக் லோடு, 40, 553, 581; உற்பத்தி, 40, 42, 43; மதிப்பிறக்கம், 61; 'நாணயம்' காண்க.

வெயில்; ஆல்பிரட், 467.

வெர்மன்ட், 160; அது குறித்து விவாதம், 226.

வெப், டபிள்யூ. பி., (எடுத்துக் காட்டு), 61, 598, 599.

வெப்ஸ்டர், டேனியல், 266, 341.

வெல்ஸ், டேவிட் ஏ., (மேற்கோள்), 180.

வெல்ஸ், ஃபார்கோ அண்ட் கம்பெனி, 466.

வெல்ஷ், பிட்மன்டில், 210.

வென்ட்வர்த் கவர்னர், 205.

வெஸ்ட் சில்வேனியா, முன்நிற்கும் மாநிலம், 209.

வேலை தருவோர் (முதலாளிகளின்) சங்கங்கள், 499.

வேலைநிறுத்தங்கள், 499; தச்சர்கள் வேலைநிறுத்தம் (1827), 501.

வேனி, ஜெனரல் அந்தோணி (மேற்கோள்) 96.

ஜ

ஜனநாயகம், டச்சுக் காலனிகளில், 78; புரட்சியின் போது, 205-208; இங்கிலாந்தில், 396, 397.

ஜனத்தொகை, காலனி காலத்தில், 113, 152, 198, 210; 1830-ல் மையம், 143; 1950-ல் இந்தியன், 152; பழைய தென்மேற்கில், 282, 473; பழைய வடமேற்கில், 473; துவக்க காலத்தில், 470-477, 526, 546, 578; நகரங்களில் குவிதல், 470, 471, 473-477; 'அடிமை', 'அடிமை மக்கட்டொகை', காண்க.

ஜார்ஜ் III, இங்கிலாந்து, 183, 199.

ஜார்ஜியா, குடியேற்றம், 88; மேற்கு நிலங்கள் குறித்து உரிமை கொண்டாடுதல், 273.

ஜாக்சன், ஆண்ட்ரூ, ஐக்கிய அமெரிக்க பாங்கு, 254, 255, 315; பணக் கோட்பாடு, 256, 257; நாணயச் சுற்றறிக்கை, 259, 260; தள்ளிவைத்தல், 268; இந்தியர்களைத் தோற்கடித்தல், 290.

ஜாக்சன், பாட்ரிக் டிரேசி, 403.

ஜான்சன், காப்டன் எட்வர்டு, (மேற்கோள்), 99.

ஜான்சன், சர் ஜான், எஸ்டேட் கவரப்பெற்றது, 205.

ஜாப்லின் பகுதி, துத்தநாகம், 39.

ஜினேவா, 55.

ஜிரோமி, அரிசோனு, 38.

ஜெர்மன், காலனிகளில், 105, 111, 152, 156, 158, 198; மேற்கு நோக்கி முன்னேற்றம், 156, 210, 295.

ஜெஃப்பர்சன், தாமஸ், 187, 207, 245, 247, 250, 274, 314, 327, 341, 346; (மேற்கோள்), 207, 341; அரசியல் சட்டம் பற்றிய கருத்து, 241, 247; பகிஷ்காரக் கொள்கை, 360.

ஜென்னிங்ஸ், டபிள்யூ. டபிள்யூ., (மேற்கோள்), 361.

ஜென்னீகன், எம். டபிள்யூ., (மேற்கோள்), 122.

ஜேம்ஸ் I, இங்கிலாந்து, 80.

ஜேம்சன், ஜே. எஃப்., (மேற்கோள்), 202, 218.

ஜேம்ஸ் டவுன், குடியேறியது 82.

ஜே. ஜான், 220, 223.

ஜே உடன்படிக்கை (1795), 272.

ஜோன்ஸ், ஹியூ. (மேற்கோள்), 111, 112.

ஜோன்ஸ், ஜே. பி. (மேற்கோள்), 572.

ஜோர்சிலின், ஜான், 19.

ஸ

ஸஃப்போக் முறை, 249.

ஸ்கோல்ஃபீல்டு, ஜான், ஆர்தர், 407.

ஸ்கியோடா கம்பெனி, 288.

ஸ்காட்ச்-ஐரிஷ் காலனிகளில், 150; மேற்குநோக்கி முன்னேற்றம், 155-158, 210, 294, 295.

ஸ்கின்னர், ஜான் எஸ்., 349.

ஸ்மித், ஆடம், 396; (மேற்கோள்), 61, 179.

ஸ்மித், ஜெடிடியா, 145.

ஸ்பெயின், காலனி முறை, 69-72; புரட்சிக்குமுன்னர் கைப்பற்றி வைத்திருந்தது, 163-166; புரட்சிகுப் பின்னர் கைப்பற்றி வைத்திருந்தது, 271, 286; சான் லோரன்சோ, 271; பிளோரிடாவை வாங்கியது, 286.

ஸ்பானிஷ் மெயின், 63, 69.

ஸ்டேஜ் கோச் வண்டிப் பயணம், 119, 464,

ஸ்டீபன்சன், ஜார்ஜ், 396, 439.

ஸ்டீவன்ஸ், ஜான், 401, 434, 449.

ஸ்டீகல், பேரன், 140.

ஸ்டூர் பிரீட்ஜ் லயன், 452.

ஸ்டவ்கள், 411.

ஸ்டுய் வெசன்ட் பீட்டர், 79.

ஸ்வீடன் உடன்படிக்கை 223.

ஸ்விட்ஸ் 105; குடிவந்தேற்றம் 198.

ஸ்கீரர் ஜேம்ஸ் ஏ. பி. (எடுத்துக்காட்டு), 563; (மேற்கோள்), 563.

ஷா

ஷாப்ட்ஸபரி, பிரபு, 'கூப்பர்,' 'அந்தோணி ஆஷ்லே,' காண்க,

ஷாய்ஸ் கிளர்ச்சி, 210, 228, 229, 234.

ஷிலாக்மேன், வீரா, (எடுத்துக்காட்டு) 496.

ஷிஞன்டோவா பள்ளத்தாக்கு 4.

ஷிரீவ், ஹென்றி, 435.

ஷெஃப்பீல்டு, பிரபு, (மேற்கோள்), 123, 224.

ஷெல்டன், ஜார்ஜ், (மேற்கோள்), 159.

ஷேலர், என். எஸ், (மேற் கோள்), 367.

ஷோல்டர், (ஜேம்ஸ்), மேற் கோள்), 262.

ஹ

ஹட்சன், ஹென்றி, 60, 76.

ஹட்சன் விரிகுடா, 3.

ஹட்சன் நதி, 8, 44; ஆரம்ப கால நீராவிப் படகுகள், 434, 435.

ஹட்சன் பள்ளத்தாக்கு, டச் சுக்காரர்கள் குடியேறியமை, 76, 77; விவசாயம், 103, 104.

ஹட்சன் விரிகுடா கம்பெனி, 135, 304.

ஹண்டர், எல். சி., (மேற் கோள்), 413.

ஹண்டிங்டன், எ ல் ஸ் வ ர் த், (எடுத்துக்காட்டு), 9, 10; (மேற்கோள்) 9,

ஹட்சின்சன், ஆன், தடை, 64.

ஹாக் லூயிட், வில்லியம், 79.

ஹாமில்டன், அலெக்சாண்டர், 180, 195, 399; (மேற் கோள்), 213; தேசீயக் கடன், 243-245; மாநிலக் கடன்களை ஏற்றுக் கொள்ளுதல், 243-245; நாணயத் தைப்பற்றிய அறிக்கை, 243, 263; சுங்கவரி, 242, ஐக்கிய அமெரிக்க பாங்கு, 246, 247

ஹாமண்ட், எம், பி., அட்ட வணையை மேற்கோளாகக் காட்டுதல், 564.

ஹான்காக், ஜான், 180, 188, 202,

ஹார்கிரீவ்ஸ், ஜேம்ஸ், 322, 393.

ஹார்ன்டன், வில்லியம் பிரான் சிஸ், 466.

ஹாரிசன், பென்ஜமின், (மேற் கோள்), 596.

ஹாரிசன், வில்லியம் ஹென்றி, 289.

ஹாக்கின்ஸ், சர் ஜான், 63, 79.

ஹாப்ஸ்டட்டர், ரிச்சர்டு, 517.

ஹாலண்டு, 'நெதர்லாண்ட்ஸ்' காண்க.

ஹாலிடேஸ்பர்க், 442, 451.

ஹியூஜினோக்கள், 150.

ஹெசியர், 294.

ஹெபிஷ், ஜேக்கப், 599,

ஹெல்பர், ஹெச். ஆர்., (மேற் கோள்), 515, 516.

ஹெண்டர்சன், ரிச்சர்டு, 208

ஹென்றி, பெட்ரிக், 187, 202; (மேற்கோள்), 236, 530.

ஹென்றி VII, இங்கிலாந்து, 5, 8, 67, 80.

ஹெர்க்கிமெர், ஜெனரல், 210

ஹென்றி, அரசிளங்குமரர், கடல் வீரர், 58, 63.

ஹேமண்ட், ஜேம்ஸ், ஹெச். (மேற்கோள்), 562.

ஹேக்கர், லூயி, (எடுத்துக் காட்டு), 199, 534; மேற் கோள், 281, 535.

ஹொல்லாடே, பென், 465.

ஹொவே, எலியஸ், 402, 551.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	13	என்று	எனும்
3	27	ஐரோப்பாவைவிட மூன்றில் இரண்டு பங்கு	ஐரோப்பாவின் மூன்றில் இரண்டு பங்கிற்கும்
5	28	பிசிசிப்பி	மிசிசிப்பி
31	8	தேன் கரோலினு	தென் கரோலினு
70	31	சர்வாதீன உரிமைகளை	ஏசியன்டோமூலம், (1713) சர்வாதீன உரிமைகளை
104	34	வயிலில்	வயலில்
131	34	பெரிய அளவில். இச் சமூகங்கள் அமைந்திருப்பின்	பெரிய அளவில் அமைந்த சமூகங்கள்
131	37	தொழிலாளர்களையும் இச் சமூகங்கள் ஆதரிக்கும்.	தொழிலாளர்களையும் ஆதரித்தன.
199	33	உருவாக்குவதுதான்.	உருவாகுவதாகும்.
203	35	11,000	1,100
210	23	ஷாயீஸ்களின்	ஷாயீஸ்
215	7	ஜெர்மினியா	ஜெர்மியா
216	27	அகியவற்றின்	ஆகியவற்றின்
218	5	ஹேஸ்பட்	ஹேஸ்கட்
218	6	Haspet	Hasket
219	31	இரஜ்ஜியமும்	இராஜ்ஜியமும்
229	38	நூழைவாயிலை	நுழைவாயிலை
234	7	ஷாயிஸ்களுடைய	ஷாயிஸ

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
261	18	(Special Circular)	(Specie Circular)
275	21	60,090	60,000
275	24	முதலாளி	முதலில்
290	36	தொழில்களும்	தடைகளும்
293	3	இந்தியாவின்	இந்தியாஞவின்
339	33	Carolina	Caroline
370	14	நிணைவாற்றல்	நிணைவில் நிறுத்த
385	9	பாறிகளைப்	பொறிகளைப்
401	39	முடிந்தனர்.	முடித்தனர்.
408	27	கனக்டிகம்	கனெக்டிகட்,
409	12	உருக்கு	உருக்க
434	29	ஆதலின்,	ஆலிவர்
457	14	பதினெட்டாம்	பத்தொன்பதாம்
486	12	ஃபெட்டு	ஃபெல்ட்
493	30	கம்பனி	கம்பளி
569	2	பத்ருதிக்கு	பருத்திக்கு
572	17	மொமைல்	மொபைல்
588	35	1880-1835	1880-1885
589	20-21	அந்தச்ச்சரவு	அச்சச்சரவு
609	20	முதற்படி	துவக்க உரிமை
615		நிலையான உரிமைகள்	ஊன்றிய நலமிகள்